The Hon. Sri M. BHAKTAVATSALAM: டிஸம்பர் 23-லிருந்து நிறைவேற்றப்பட்டு வருகிறதென்று சொன்னேன். அப்பொழுது தண்ணீர் அவசியமாக வேண்டியிருந்தது. தண்ணீர் கொடுக்கப் பட்டிருக்கிறது. இப்பொழுது அது போதவில்லையென்ற தகவல் என்னிடம் இல்லை. இது நடைபெறும்போது ஏற்பட்ட அனுபவங்களைக் கொண்டு வேறு என்ன விஸ்தரிப்பு செய்யவேண்டுமோ அவை கவனிக்கப்படும்.

Sri A. VEDARATHNAM: இந்த காவேரி தண்ணீர் கடைமடையில்தான் வீணாகப்போவது அதிகமாகயிருக்கிறது. இதை மராமத்து இலாகா எடுத்துக் கொண்டிருக்கிறது. பம்பிங் ஸ்கீமினால் மட்டும் போதிய அளவில் அதை பூர்த்தி செய்யமுடியவில்லை. எனவே விவசாய இலாகாவும் சில இடங்களை எடுத்துக் கொண்டு அதன் மூலம் வீணாகும் தண்ணீரை விவசாயத்திற்குப் பயன்படுத்த விவசாய இலாகா முன்வருமா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: சில திட்டங்களை இதுவரை விவசாய இலாகா எடுத்துக் கொண்டு நிறைவேற்றிக் கொண்டு வருகிறது. மற்றவையெல்லாம் மராமத்து இலாகா மேற்பார்வையில் இருக்கிறது. அவர்கள் கவனம் செலுத்துகிறார்கள். ஆகவே இதற்கு மேலும் புதிய திட்டங்களை விவசாய இலாகா எடுத்துக்கொள்வதற்கு இப்பொழுது உத்தேசமில்லை.

[10th March 1961

**Sri K. R. NALLASIVAM:** *காவேரி கடைக்கோடியில் தண்ணீர் வீணுகப் போவதாக கனம் அங்கத்தினர் குறிப்பிட்டார். காவேரிக்கு மேல் பகுதிகள், சேலம் ஜில்லா போன்ற பகுதிகளில் உள்ள விவசாயிகள் பம்ப்செட்கள் மூலம் அதிகப்படி தண்ணீரை எடுத்துக் கொள்வதற்கு வேண்டிய வசதி செய்து கொடுப்பது பற்றி சர்க்கார் யோசனை செய்யுமா?*

**The Hon. Sri M. BHAKTAVATSALAM:** *அதுபற்றி என்னிடம் தகவல் இல்லை.*

**Sri V. SUBBIAH:** *ரிவர் பம்பிங் ஸிஸ்டம் எந்தெந்த ஜில்லாக்களில் எவ்வளவு பம்புகள் இப்பொழுது ஓடிக்கொண்டிருக்கிறது? எந்தளவு அவை வெற்றிகரமான முறையில் நடந்து கொண்டிருக்கின்றன?*

**The Hon. Sri M. BHAKTAVATSALAM:** *ராமநாதபுரம் ஜில்லாவில் இளையான்குடி, பெட்டுச்செட்டிப்பட்டி, சொர்ணம் பட்டி கோவிந்தநல்லூர், கிராமங்களில் இப்பொழுது எடுத்துக் கொள்வதாக உத்தேசம். திருநெல்வேலி ஜில்லாவில், மேல் ஆத்தூர், கல்லிக்குளம் இவைகளில் எடுத்துக் கொள்வதாக உத்தேசம். இவை விவசாய இலாகாவால் நிறைவேற்றப்படும்.*

**Mr. SPEAKER:** *அடுத்த இரண்டு கேள்விகளையும் ஒன்ருக எடுத்துக்கொள்ளலாம்.*

*Beedi Factories Act*

* 738 *Q.*—**Sri V. K. KOTHANDARAMAN:** *கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

*பீடித் தொழிற்சாலை சட்டத்தின் 2* (g) [i] *பிரிவு செல்லத்தக்கதல்ல என்று சென்னை ஐகோர்ட்டு தீர்ப்பளித்துள்ளதால் பீடித் தொழிலின் ட்ரேட் மார்க் முதலாளிகள் சட்டத்திலிருந்து தப்பிக்க வழி ஏற்பட்டுள்ளதால் அச்சட்டத்தின் 2* (g) *பிரிவுக்கு திருத்தம் கொண்டுவர உத்தேசமுண்டா?*

**The Hon. Sri R. VENKATARAMAN:** The matter is under consideration.

* 739 *Q.*—**Sri V. K. KOTHANDARAMAN:** *கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

*(அ) வடஆற்காடு ஜில்லா பீடித் தொழிலாளர் சங்கத்திலிருந்து மாதிரி திருத்தங்களைப் பற்றி 1960-ம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ம் தேதி, 1960-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 7-ம் தேதிகளில் சர்க்காருக்கு விண்ணப்பங்கள் ஏதேனும் வந்துள்ளனவா?*

*(இ) அவைகளின் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?*



10th March 1961]

**The Hon. Sri R. VENKATARAMAN:** (*a*) Yes, Sir.

(*b*) The matter is under consideration.

**Sri V. K. KOTHANDARAMAN:** *1944-ம் ஆண்டு மத்திய சர்க்கார் எக்ஸைஸ் சட்ட விதிப்படி புகையிலைக்கு கொடுக்கக்கூடிய எல் 2, எல் 5, லைசென்ஸ் வாங்கி ட்ரேட்மார்க் முதலாளிகள் நம் சர்க்கார் பீடித்தொழிலாளர்களுக்காக வேண்டி வகுத்திருக்கக்கூடிய சட்டத்தை தகர்த்தெறியக்கூடிய நிலைமையிருக்கிறபடியால், நம் சர்க்காரை அனுசரியாமல் புகையிலை லைசென்ஸ் கொடுக்கக்கூடாது என்று மத்திய சர்க்காரை வற்புறுத்தியிருக்கிருர்களா? அதற்கு என்ன பதில் வந்துள்ளது?*

**The Hon. Sri R. VENKATARAMAN:** *இதுப்பற்றி மத்திய சர்க்காருக்கு எழுதியதில் அவர்கள் ஒத்துக் கொள்ளவில்லை. எல் 2 லைசென்ஸ் கொடுப்பது வேறு, லேபர் சட்டங்களை நிறைவேற்றுவது வேறு என்று சொல்லி விட்டார்கள்.*

**Sri V. K. KOTHANDARAMAN:** *குறைந்தபட்ச கூலி 1-11 அணு, 1–12 அணு என்று அமுலில் இருந்துங்கூட இன்று 1–6, 1–8-க்கு மேலே பலயிடங்களில் கொடுக்காத ஒரு நிலை இருப்பதாக அமைச்சர் அவர்களிடம் புகார் செய்யப்பட்டிருக்கிறதா? அது விஷயமாக என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது?*

**The Hon. Sri R. VENKATARAMAN:** *லேபர் கமிஷனர் இருக்கிருர்கள், லேபர் ஆபீஸர்கள் இருக்கிருர்கள். ஆகவே இதை சட்டசபையில் வந்து சொல்லவேண்டிய அவசியமேயில்லை.*

*Polytechnic (Guindy)*

* 740 *Q.*—**Sri A. VEDARATHNAM:** *கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

*(அ) கிண்டியில் உள்ள பாலிடெக்னிக்கிற்கு புதுக்கட்டிடம் அமைக்கத் திட்டமுண்டா?*

*(இ) அப்படியானுல், அதன் விவரமென்ன?*

**The Hon. Sri C. SUBRAMANIAM:** (*a*) Yes Sir.

(*b*) As there is no scope for putting up additional buildings to provide for workshops, laboratories, hostels, main instructional buildings, playgrounds, etc., at Guindy, it has been decided to hand over the existing building to the Industries Department and to acquire about 100 acres of land in Kalikundram and Pallipattu villages, adjacent to the Indian Institute of Technology, Guindy and to construct buildings in the newly acquired site for the Polytechnic, hostels etc.

**Sri A. VEDARATHNAM:** *இப்பொழுது இந்த பாலிடெக்னிக்கில் எவ்வளவு மாணவர்கள் படிக்கிருர்கள். அந்த மாணவர்களுக்கு இடம் பற்றுக்குறை இருக்கிறதா? அல்லது புதிய தொழில் துறை போதனு முறையை ஆரம்பித்திருக்கிருர்களா?*

[10th March 1961

THE HON. SRI C. SUBRAMANIAM : எத்தனை மாணவர்கள் இருக்கிறார்கள் என்ற புள்ளிவிவரம் என்னிடம் இப்பொழுது இல்லை. இங்கே *ஆரம்பித்தபோது நிறைய இடம் இருந்தது என்று ஆரம்பித்தோம். இப்போது இன்டஸ்ட்ரியல் எஸ்டேட் வந்த காரணத்தினால் இடம் மிகவும் குறைவாகயிருக்கிறது. ஆகையால் இன்டஸ்ட்ரீஸ் டிப்பார்ட்மென்ட்டுக்கு இந்தக் கட்டிடத்தை கொடுத்து விட்டு விசாலமாக வேறு இடத்தில் கட்டுவதாக தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

## II.—PRESENTATION OF THE REPORT OF THE COMMITTEE OF PRIVILEGES.

SRI S. LAZAR : Mr. Speaker, I beg to present to this House the Report of the Committee of Privileges on the "Madras Corporation Case".

Sir, the Committee was of the view that the Resolution of the Madras Corporation and the speeches of two of its Members amounted to breach of privilege. But, in view of the fact that the original resolution was rescinded by a subsequent resolution and also in view of the fact that those two Members were present at the subsequent meeting and participated in the actual passing of this subsequent resolution, the Committee has recommended that no further action need be taken. I commend its decision of the Committee for the kind acceptance of this House.

SRI M. KALYANASUNDARAM : Mr. Speaker, Sir.

MR. SPEAKER : I would like to know on what subject the hon. Member is going to speak.

SRI M. KALYANASUNDARAM : The Report of the Committee has been presented, and I want to speak on it.

MR. SPEAKER : I am sorry. We are now concerned with only the presentation of the Report. If the hon. Member wants to speak on the Report, he can do so only on a separate Motion relating to the same.

## III.—ANNOUNCEMENTS.

### (1) THE INDIAN STAMP (MADRAS AMENDMENT) BILL, 1961.

MR. SPEAKER : I have to announce that the Governor has given his recommendation for the introduction in the Legislative Assembly of the Indian Stamp (Madras Amendment) Bill, 1961

### (2) BILLS PASSED BY THE COUNCIL.

MR. SPEAKER : I have also to announce to the House that the following Bills have been passed by the Legislative Council without any amendments :—

(1) The Madras Estates Land (Reduction of Rent) Amendment Bill, 1961.



10th March 1961] [Mr. Speaker]

(2) The Travancore-Cochin Agricultural Income Tax (Madras Amendment) Bill, 1961.

(3) The Madras Inams (Assessment) Amendment Bill, 1961.

(4) The Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1961.

### (3) NOMINATION OF MEMBERS TO THE COMMITTEE ON GOVERNMENT ASSURANCES.

MR. SPEAKER : I have to announce to the House that under Rule 214 (1) of the Madrs Legislative Assembly Rules, I have nominated the following Members to serve on the Committee on Government Assurances :—

(1) Sri S. M. Annamalai.

(2) Sri A. Vedarathnam.

(3) Sri K. Sattanatha Karayalar.

(4) Sri A. A. Rasheed.

(5) Sri S. Nagaraja Monigar.

(6) Sri C. Muthiah.

(7) Sri M. Jagannathan.

Under Rule 215 (1) of the Madras Legislative Assembly Rules, I nominate Sri S. M. Annamalai to be the Chairman of the Committee.

## IV.—GOVERNMENT BILL.

### THE INDIAN STAMP (MADRAS AMENDMENT) BILL, 1961.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move—

"That leave be granted for the introduction of the Indian Stamp (Madras Amendment) Bill, 1961."

MR. SPEAKER : The question is—

"That leave be granted for the introduction of the Indian Stamp (Madras Amendment) Bill, 1961."

The motion was put and carried.

THE HON. SRI M. A. MANICKAVELU : I introduce the Bill, Sir.

MR. SPEAKER : The Bill is introduced.

## V.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1961-62—*cont.*

### DEMAND XXII—INDUSTRIES AND CINCHONA. DEMAND XLI—CAPITAL OUTLAY ON INDUSTRIAL DEVELOPMENT.

* THE HON. SRI R. VENKATARAMAN : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,97,45,400 under Demand XXII—Industries and Cinchona."

Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 5,59,44,800 under Demand XLI—Capital Outlay on Industrial Development."

கனம் சபாநாயகர் அவர்களே, இந்த தொழில்துறை சம்பந்தமாக என்ன செய்யப்பட்டிருக்கிறது என்பதை இரண்டு புத்தகங்கள் போட்டு அங்கத்தினர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. அதில் ஒன்றில் "பாலிஸி" சம்பந்தமான விஷயங்கள் கூறப்பட்டிருக்கின்றன. இன்னொன்றில் ஜில்லாவாரியாக என்னென்ன வேலைகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று கூறப்பட்டிருக்கிறது. நான் பொதுவாக இந்த விவாதத்திற்கு கடைசியிலே பதில் சொல்லலாம் என்று நினைக்கிறேன். சட்டத்திலே ஒன்று சொல்வார்கள். resuc Ipso Loquitor என்று. அதாவது விளக்கமாக இருப்பதை விளக்கத் தேவையில்லை என்று சொல்வார்கள். ஆக, அச்சிட்ட புத்தகங்கள் கொடுத்திருக்கிற காரணத்தினால் முன்னுரையாக ஒன்றும் சொல்லாமல், பதில் சொல்லும் முறையில் எனது காலத்தை வைத்துக் கொள்கிறேன் என்று கூறிக்கொள்கிறேன்.

MR. SPEAKER : Motion moved—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,97,45,400 under Demand XXII—Industries and Cinchona."

"That the Government be granted a sum not exceeding Rs. 5,59,44,800 under Demand XLI—Capital Outlay on Industrial Development."

எதிர்க்கட்சிகளின் சார்பில் 22-வது மான்யக் கோரிக்கைக்கு திரு. பி. எஸ். சின்னதுரை அவர்கள் தன்னுடைய 36-வது வெட்டுப் பிரேரணையைப் பிரேரேபிக்கப்போவதாக அறிகிறேன். அவர் அதை இப்போது பிரேரேபிக்கலாம். 41-வது மான்யக் கோரிக்கைக்கு திரு. எஸ். எம். அண்ணாமலை அவர்கள் தன்னுடைய 62-வது வெட்டுப் பிரேரணையைப் பிரேரேபிக்கப் போவதாக அறிகின்றேன். அவர் அதைப் பிரேரேபிக்கலாம்.

SRI P. S. CHINNADURAI : Sir, I move—

"That the allotment of Rs. 2,97,45,400 under Demand XXII—Industries and Cinchona be reduced by Rs. 100."

SRI S. M. ANNAMALAI : Sir, I move—

"That the allotment of Rs. 5,59,44,800 under Demand XLI—Capital Outlay on Industrial Development be reduced by Rs. 100."







MR. SPEAKER : Cut Motions moved—

"That the allotment of Rs. 2,97,45,400 under Demand XXII—Industries and Cinchona be reduced by Rs. 100."

"That the allotment of Rs. 5,59,44,800 under Demand XLI—Capital Outlay on Industrial Development be reduced by Rs. 100."

The movers of the cut motions may speak for fifteen minutes each. How long will the Hon. Minister take to reply?

THE HON. SRI R. VENKATARAMAN : Thirty minutes, Sir.

MR. SPEAKER : All right. Hon. Member Sri Chinnadurai may now speak.

SRI P. S. CHINNADURAI : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, நம்முடைய ராஜ்யத்தின் தொழில்துறை வளர்ச்சியைக் குறித்த அறிக்கையை சர்க்கார் இரண்டு பகுதிகளாகப் பிரித்து புத்தக ரூபத்திலே கொடுத்திருக்கிறார்கள். ஒன்று சிறிய தொழில்களைப் பற்றியது. மற்றொன்று தொழில் சம்பந்தமான கொள்கையைக் குறித்தும், பெரிய தொழில்கள் சம்பந்தமான விவரங்கள் அடங்கியதும் ஆன புத்தகம். இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிவடைந்து விட்டன. இரண்டு ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே நாம் அடைந்திருக்கின்ற தொழில் வளர்ச்சியைக் குறித்து இந்தப் புத்தகங்களிலிருந்து ஓரளவுக்குத் தெரிந்து கொள்ள முடிகிறது. நம்முடைய ராஜ்ய அரசாங்கத்தின் தொழில் கொள்கையைக் குறித்து பன்முறை இந்த மன்றத்திலே என்னுடைய கருத்துக்களை விளக்கிக் கூறியிருக்கிறேன். ராஜ்ய அரசாங்கம் அனுசரித்துக் கொண்டிருக்கிற கொள்கை ஒரு சோஷலிஸ அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிற தொழில் கொள்கையாக இல்லை. முதலாளித்துவ சக்திகளுக்கு ஆக்கம் அளிக்கும் கொள்கையாகத்தான் ராஜ்ய சர்க்காரின் தொழில் கொள்கை இருந்து வந்திருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலத்திலும் இருக்கப் போகிறது என்பதைத்தான் நாம் காண முடிகிறது. கடந்த 10 ஆண்டுகளில் இரண்டு திட்டங்களை நிறைவேற்றிய பிற்பாடும் கூட நம் ராஜ்யத்திலே பல வகையான தொழில்கள் தோன்றி வளம் பெறுவதற்குரிய ஆதார பூர்வமான தொழில்கள் போதிய அளவில் வளர்ச்சி அடையவில்லை என்பதைத்தான் நாம் காண்கிறோம். குறிப்பாக பல்வேறு தொழில்களும் பரவுவதற்கு ஆதாரமாக விளங்குவது இரும்பு, நிலக்கரி, மின்சாரம். இந்த மூன்று வகையான ஆதார சக்திகளை நாம் எந்த அளவில் நம் ராஜ்யத்தில் நிறைவேற்றி வைத்திருக்கிறோம் என்பதைத்தான் முதன்முதலாக எடுத்து ஆராய வேண்டும். மின்சாரம் சம்பந்தப்பட்ட வரையில் நாம் வெகுவாக முன்னேறி இருக்கிறோம் என்று நம்பிட்டத்திலே எடுத்துக் கூறப்படுகிறது. உண்மையிலேயே 10 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த நமக்கும், இன்று இருக்கிற நமக்கும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மின்சார உற்பத்தியானது கணிசமாக அபிவிருத்தி அடைந்திருக்கிறது

என்பதில் சந்தேகமில்லை. ஆனால் நம் ராஜ்யத்தில் எந்த அளவுக்கு தேவை இருக்கிறதோ, இன்றைய தேவையை எடுத்துக்கொண்டாலும்கூட, அந்தத் தேவையை பூர்த்தி செய்யக்கூடிய அளவாவது மின்சார சக்தியைப் பெற்றிருக்கிறோமா என்று பார்த்தால் இல்லை. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியிலே கூட மின்சார சக்தி 9·30 a.m. யானது தொழில்களின் தேவைக்குப் போதுமானதாக இருக்காது என்று தான் நினைக்கிறோம்.

நான் நினைக்கிறேன்., தொழில் துறையிலே நாம் முன்னேற்றம் அடையாமல் இருப்பதற்குக் காரணம், தொழில் துறையிலே இன்னும் அதிகமான விஸ்தரிப்புக்கு நம்முடைய கருத்தை நாம் செலுத்தாமல் இருப்பதற்குக் காரணம், போதுமான மின்சாரச் சக்தியை நாம் பெறமாட்டோம் என்ற பயமோ என்னவோ என்று நான் கருதுகிறேன். எந்த அளவுக்கு மின்சாரம் கிடைக்கிறதோ, அதனை அனுசரித்தே தொழில் கொள்கையையும், தொழில் விஸ்தரிப்பையும், அமுல் நடத்தக் கூடியவர்களாக இருக்கிறார்கள் என்ற அளவிலேதான் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது.

மின்சார உற்பத்தியிலே நாம் அடைந்திருக்கிற முன்னேற்றம் பஞ்சாப் ராஜ்யத்திலே ஓரிரண்டு ஆண்டுகளுக்குள் அடைந்திருக்கக்கூடிய முன்னேற்றத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால், கடந்த 10 ஆண்டுகளிலே நம்முடைய ராஜ்யத்திலே அடைந்திருக்கக்கூடிய முன்னேற்றத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால் குறைவாகத்தான் இருக்குமென்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். பக்ரா நங்கல் பகுதியிலே அவர்கள் உற்பத்திச் செய்கின்ற மின்சாரத்தில், அங்கு ஓரிரண்டு ஆண்டுகளில் உற்பத்திச் செய்யக்கூடிய மின்சாரத்தை நம்முடைய மாகாணத்தில் 25 அல்லது 30 ஆண்டுகள் பாடுபட்டால் கூட உற்பத்தி செய்ய முடியுமா என்ற பயம் ஏற்படுகிறது.

**THE HON. SRI V. RAMAIAH:** பக்ரா நங்கல் இங்கே இல்லை.

**SRI P. S. CHINNADURAI:** வேறு வகையிலே மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான மார்க்கம் இருக்கிறது.

**THE HON. SRI V. RAMAIAH:** என்ன மார்க்கம் இருக்கிறது என்பதைச் சொல்லுங்கள். அதை இப்போதே இங்கு குறிப்பிட வேண்டும்.

**SRI P. S. CHINNADURAI:** என்ன மார்க்கம் என்பது எனக்குத் தெரியும். நான் பேசும்போது தயவுசெய்து குறுக்கிட வேண்டாம். நிபுணர்களைக் கேட்டால் தெரிந்துகொள்ளலாம். மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய மார்க்கங்கள் பல இருக்கின்றன. நாம் சரிவர முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை என்பதைத்தான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இன்னும் அதிகமான அளவிலே மின்சாரத்தை உற்பத்தி செய்து, நல்ல நல்ல தொழில் திட்டங்களையெல்லாம் நாம் எப்படி வெற்றிகரமாக முடிக்க முடியும் என்பதற்கான முயற்சிகள் எடுக்கவில்லை என்பதைத்தான் இங்கு குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.





அடுத்தபடியாக, இரும்பு உற்பத்தியிலே கடந்த 10 ஆண்டு காலத்திலே நாம் எத்தகைய ஆராய்ச்சியும் சரிவர எடுத்து நிறை வேற்றி வைக்கவில்லை. நம்முடைய இரும்பு உற்பத்தி பற்றிய ஆராய்ச்சி இன்னும் அதன் முதல் கட்டத்திலேயே இருந்து கொண் டிருக்கிறது என்பதையும் நாம் பார்க்கின்றோம். முடிவு கட்டத்தை இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதி காலத்திற்குள் ளாவது அடைந்துவிடுவோம் என்பதைக் குறித்து இந்தப் புத்த கத்திலே நாம் எதையும் உறுதியாக காண முடியவில்லை. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள்ளே நம்முடைய மாகாணத்திலே இரும்பு உருக்குத் தொழிற்சாலை நிறுவப்படும் என்பதற்கு உத்திரவாதம் இங்கே நம்முடைய அரசாங்கத்தினால் தரப்படவில்லை என்பதையும் நாம் பார்க்கிறோம்.

தேனிரும்பு ஆலை ஆரம்பிப்பதற்காக, 2, 3 தனிப்பட்ட கம்பெனிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. அவை எந்த நிலைமையிலே இருந்து வருகின்றன என்பதைக் குறித்தும் இந்தப் புத்தகத்திலே விவரமாகக் குறிப்பிடப்படவில்லை. ஒரு கம்பெனி மட்டும் தேனிரும்பு உற்பத்தி செய்தது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதுவும் வெற்றிகரமாக செய்து முடித்தது என்று குறிப்பிடப்படவில்லை. ஏனைய இரண்டு கம்பெனிகள் எந்த அளவுக்கு இத்திட்டத்தை நடத்தியது, எப்படி நிறைவேற்ற இருக்கிறது என்பதைக் குறித்தும் இந்தப் புத்தகத்திலே தெளிவுரை எதுவும் குறிப்பிடவில்லை. இவைகளை ஏன் தனிப்பட்ட கம்பெனிகளுக்கு கொடுக்கவேண்டும், ஏன் அரசாங்கம் எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதற்கும் காரணம் தெரியவில்லை. இப்படிப்பட்ட மிக முக்கியமான தொழிற்சாலைகளையெல்லாம் அரசாங்கமே நேரடியாக எடுத்துக் கொள்வதன் மூலமாகத்தான் நாம் நல்ல முன்னேற்றம் காண்பதற்கு முடியும். இருந்தபோதிலும், அதிலே சுய நம்பிக்கை இல்லாமல் வேறு தனிபட்ட கம்பெனிகளுக்கு அதை விட்டிருப்பது போதுமான முன்னேற்றம் ஆகிவிடுமா என்று சிந்திக்கவேண்டிய நிலைமையில்தான் இந்தத் திட்டத்தை நாம் வைத்திருக்கிறோம். இது மிகவும் ஆபத்தானது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இரும்புத் தொழில், தேனிரும்புத் தொழிற்சாலை போன்ற தொழில்களை பெரிய அளவில் செய்தால்தான் முடியுமென்று நம்முடைய ராஜ்ய சர்க்கார் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இது ஏன் என்று தெரியவில்லை. ஜப்பான், ஜெர்மனி போன்ற நாடுகளில் எப்படி இந்த இரும்பு உருக்குத் தொழிற்சாலைகள் சிறிய அளவிலேகூட நிலைநாட்டப்பட்டிருக்கின்றன என்பதைக் குறித்து நம்முடைய ராஜ்ய சர்க்கார் ஆராய்ந்தறிந்து கொள்வது அவசியமென்று கருதுகிறேன். இந்த நாடுகளினுடைய இரும்பு உருக்குத் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையிலும், அவர்கள் சிறிய அளவிலே ஆரம்பித்து நல்ல முன்னேற்றம் கண்டிருக்கும்போது, நம் ராஜ்யத்திலே மட்டும் ஏன் அதைப்போன்று ஆரம்பிக்காமல் இன்னும் யோசித்துக் கொண்டிருக்க வேண்டும். ஜப்பான்

நாட்டிலே இரும்புத் தாதுக்களே இல்லை. அவர்கள் தங்களுக்கு வேண்டிய தாதுக்களை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து கொள்கிறார்கள். அதுவும் இந்தியா நாட்டிலே இருந்துதான் இரும்பு தாதுக்கள் இறக்குமதி செய்யப்படுகிறது. நம்முடைய ராஜ்யத்திலிருந்துகூட அவர்களுக்கு இரும்புத் தாதுக்கள் அனுப்பப்படுகின்றனவோ என்னவோ, தெரியாது.

THE HON. SRI R. VENKATARAMAN: பிற ராஜ்யங்களிலிருந்துதான் போகிறது. ஆனால் நம் ராஜ்யத்தின் வழியாகப் போகிறது.

SRI P. S. CHINNADURAI: நம்முடைய ராஜ்யத்திலிருந்து போகவில்லை என்று கூறினார்கள். ஆனால் நம் ராஜ்யத்தின் வழியாக அனுப்பப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. அது எப்படியிருந்தாலும், பல ஆயிரம் மைல்கள் தூரத்திலுள்ள இந்தியாவிலிருந்து தங்களுடைய நாட்டிற்கு இரும்புத் தாதுக்களை இறக்குமதி செய்து, அந்த இரும்பை நன்கு உருக்கி, நல்ல இயந்திரங்களைத் தயாரித்து, அந்த இயந்திரங்களை மீண்டும் நம்முடைய நாட்டிற்கு அனுப்ப முடிகிறது என்றால், நம்முடைய குறைபாடுதான் என்ன என்பதைக் குறித்து நம்முடைய சர்க்கார் ஆராயவேண்டும். இவைகளைக் குறித்து நான் சொல்கிறபோது, யாரோ எதிர்க்கட்சிக்காரர் குறை கூறுவதற்காக சொல்கிறார் என்று எண்ண வேண்டாம். நாட்டின் பொது நலனைக் குறித்து, இதை நான் கூறுகிறேனே அல்லாமல், வேறு காரணம் அல்ல.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் நான் ஜப்பானுக்குப் போயிருந்தபோதுதான் எனக்கு இந்த விவரங்கள் தெரியும். அவர்கள் வெளியே இருந்து இரும்புத் தாதுக்களை இறக்குமதி செய்து, நல்ல நல்ல இயந்திரங்கள் செய்யப்படுவதாகக் கூறியதைக் கேட்டபோது நான் மிகுந்த ஆச்சரியம் அடைந்தேன். நான் அங்கே ஒரு பெரிய தொழிற்சாலைக்குச் சென்றிருந்தேன். அப்போதுதான் அவர்கள் தங்களுக்கு வேண்டிய மூலப் பொருள்களை எங்கிருந்து பெறுகிறார்கள் என்பதைக் குறித்து விவரமாக அறிய முடிந்தது. அவர்கள் அவ்வாறு தயார் செய்து 4,000, 5,000 மைல்களுக்கு அப்பாலுள்ள நம்முடைய நாட்டிற்கு கொண்டுவந்து விற்பனை செய்கிறார்கள். நம்முடைய நாட்டிலே இருந்துதான் அவர்களுக்கு இரும்புத் தாதுக்கள் அனுப்பப்படுகிறது என்று சொல்லப்படுகிறதே, அப்போது ஏன் அத்தாதுக்களை நம் ராஜ்ய சர்க்கார் எடுத்துக் கொண்டு, இங்கு அம்மாதிரியான ஒரு இரும்புத் தொழிற்சாலையை ஆரம்பிக்கக்கூடாது? அப்படி ஆரம்பிப்பதற்கு வெளிநாட்டு நிபுணர்கள் தேவைப்பட்டாலும், அவர்களை தருவித்துக் கொள்ள முடியாதா? கடந்த 10 ஆண்டு காலத்திலே அதாவது 1951 முதல் 1961 வரையிலே நம்முடைய நாட்டிலே போதுமான இயந்திரங்களைத் தயார் செய்து கொள்வதற்காக என்னென்ன முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று பார்த்தால், நம்முடைய மாகாணத்திலே ஒன்றுமே செய்யவில்லை. அப்போது எப்படி நாம் தொழில்களை வளப்படுத்த முடியும்? ஜப்பான் நாட்டிலே பண்ணிக்கொண்டிருக்கும்போது, நம்முடைய, தமிழ் நாட்டிலே மட்டும் ஏன் செய்ய முடியாது? முடியும். ஆனால் இங்கு முயற்சி செய்யவில்லை. கவனம் எல்லாம் அப்படிப்பட்ட பெரிய தொழிற்சாலைகளை வளப்படுத்துவதற்குப் பதிலாக, வேறு துறைகளிலே கவனம் செலுத்தப்பட்டு, கூடை முடைதல், பாய் பின்னுதல், அப்பளம் தயாரித்தல், செருப்பு தயாரிப்பது போன்ற அப்படிப்பட்ட தொழில்களிலே நம்முடைய கவனம் ஈடுபட்டது என்று கருத வேண்டியிருக்கிறது. இதை குறையாக நான் சொல்லவில்லை. அப்படிப்பட்ட தொழில்களும் தேவைதான். அவைகளை கவனித்துக் கொள்வதற்கு தனியார் இடத்திலே விட்டு விடுங்கள். அவர்களுக்கு வேண்டிய ஒத்தாசையை சர்க்கார் செய்யட்டும். ஆனால் அதே சமயத்தில் மின்சாரத் துறை, இரும்பு உற்பத்தி, நிலக்கரி உற்பத்தி போன்ற நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு உதவக்கூடிய திட்டங்களிலே அரசாங்கம் முக்கியமாக கவனம் செலுத்துவதை மறந்துவிடக் கூடாது. மின்சாரத் துறையைப் பொறுத்த வரையில் நம்முடைய அரசாங்கம் கடந்த 10 ஆண்டுகளாக சரிவர கவனம் செலுத்தவில்லை என்றுதான் சொல்லவேண்டும். அந்த அளவிலேதான் இன்று நம் நாட்டிலே மின்சார வளர்ச்சியானது இருந்து வருகிறது. மின்சார வளர்ச்சிக்கு உதவக்கூடிய உபகரணங்களைக்கூட நம்மால் இங்கு தயாரிக்க முடியவில்லை. மீட்டர் தயாரிப்பது மிகவும் அவசியமானது, முக்கியமானது என்று அரசாங்க நிபுணர்களால் சொல்லப்பட்டு வந்திருக்கிறது. சுமார் ஒரு லட்சம் மீட்டர்கள் நம்முடைய மாநிலத்திற்கு தேவை என்று சொன்னார்கள். பல்வேறு வகையான மீட்டர்களை நம் ராஜ்யத்திலே தயாரிப்பதற்கு கடந்த 10 ஆண்டு காலத்தில் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்களா என்றால் எடுத்துக் கொள்ளவில்லை. அதற்காக மற்ற மாநிலங்களை எதிர் நோக்கி காத்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே, இப்படிப்பட்ட பெரிய தொழில்கள், மின்சார சாதனங்கள் தயாரிப்பது மாத்திரமல்ல, பல்வேறு வகையான ஆதாரபூர்வமான தொழில்களை நாம் வளர்ப்பதற்கு போதிய அக்கரை காட்டவில்லை என்பதை நாம் காண்கிறோம்.

அடுத்து முக்கியமாக குறிப்பிடவேண்டிய விஷயம், சர்க்காருடைய கொள்கையைப் பற்றியது ஆகும். எந்தத் தொழிலை சர்க்கார் தரப்பிலே எடுத்துக் கொள்ளவேண்டுமோ, அதனைக்கூட தனியார் தரப்பிலே விடுகிற அளவிற்குத்தான் சர்க்கார் கொள்கை கடந்த 10 ஆண்டு காலத்தில் இருந்து வந்திருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். உதாரணமாக செயற்கை பட்டுத் தொழிற்சாலை, அலுமினியம் தொழிற்சாலை, தேனிரும்பு தயாரிக்கின்ற தொழிற்சாலை, இவைகளையெல்லாம் தனிப்பட்ட நபர்களிடம் விட்டிருப்பதைத்தான் நான் இங்கே குறிப்பாக எடுத்துக்காட்ட விரும்புகிறேன். சுமார் 5 லட்சம் ரூபாய்க்கு மேல் மூலதனம் போட்டுச் செய்யவேண்டிய தொழில்களையெல்லாம் அரசாங்கத் தரப்பிலே செய்வதுதான் நல்லது என்று நான் கருதுகிறேன்.

அரசாங்கத் தரப்பிலே செய்வதற்கு அதற்குரிய ஆதரவு நிச்சயமாக மக்களிடத்திலே கிடைக்கும் என்றுகூட நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். புதிய பஞ்சாலைகள், புதிய ரசாயன உரத் தொழிற்சாலைகள், ரப்பர் மூலம் ட்யூப்கள், டயர்கள் தயாரிக்கின்ற தொழிற்சாலைகள் இவைகளெல்லாம் அரசாங்கத் தரப்பிலே, அரசாங்க ஆதரவு பெற்ற கார்பரேஷன்களாலே ஆரம்பிக்கப்பட்டு, அந்தத் தொழில்களிலே கிடைக்கக்கூடிய லாபமெல்லாம் அரசாங்கம் மக்களுக்கு பயன்படுத்தக்கூடிய முறையிலே அரசாங்கம் ஏற்பாடு செய்து, இந்தக் கம்பெனிகளை தோற்றுவித்து, அதன் மூலம் நடத்துவதுதான் நல்லது. அதுதான் சோஷலிஸ சர்க்கார் கொள்கைக்கு ஒத்ததாக இருக்க முடியும். ஆகவே, நம்முடைய ராஜ்ய அரசாங்கம் இதுவரையில் அந்தக் கொள்கையை நிறைவேற்றிவைக்கவில்லை என்பதையும் நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

கைத்தறிக்கு தேவையான விழுதுகளை நம்முடைய ராஜ்ய அரசாங்கம் சொந்தமாக நமது நாட்டிலே உற்பத்தி செய்வதற்கு வேண்டிய திட்டத்தை பூராவுமாக நிறைவேற்றிவைக்க முடியவில்லை. விழுதுகளுக்கு இன்று வெளி நாடுகளை எதிர்பார்த்து நிற்கவேண்டிய நிலைமையைத்தான் நாம் இங்கே காண்கிறோம். ஆகவே, போதுமான அளவிலே தொழில் துறையில் முன்னேற்றத்தை நம்முடைய மாநிலத்தில் ஏற்படுத்துவதற்கு இது வரையில் அரசாங்கம் எடுத்துக்கொண்ட முயற்சிகள் உருப்படியான அளவிலே பலன் அளிக்கவில்லை. எதுவும் முன்னேறவே இல்லை என்று நான் சொல்லவில்லை. பத்து ஆண்டுகளுக்கு முன்பாக இருந்ததைக் காட்டிலும் இன்றைக்கு நாம் பின்னுக்குப் போயிருக்கிறோம் என்று நான் சொல்லுவதற்குத் தயாராக இல்லை. ஓரளவிற்கு 10 ஆண்டு காலத்தில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால், எந்த அளவிற்கு புதிய தொழிற்சாலைகள் ஏற்படுத்தியிருக்கவேண்டுமோ, அந்த அளவிற்கு இந்த ராஜ்யத்தில் புதிய தொழிற்சாலைகள் ஏற்படவில்லை. மேலும் எந்த அளவிற்கு தொழில் துறையில் முன்னேற்றம் ஏற்பட்டதினால், மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகிற அளவிலே சமதர்ம பொருளாதாரத் திட்டத்தில் அவை மக்களுக்கு உதவுபடியாக இருந்திருக்க வேண்டுமோ, அந்த அளவிற்கு உதவுபடியாக இருக்கவில்லை. அதற்குக் காரணம் முதலாளித்துவத்திற்கு ஆதரவான ஒரு கொள்கையை சர்க்கார் விரும்பியோ, விரும்பாமலோ கடைப்பிடிப்பதுதான் என்று சொல்ல விரும்புகிறேன். எப்படியாவது தொழில் துறையில் முன்னேற்றம் ஏற்படவேண்டும் என்ற கொள்கை சரிதானா என்பதை அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இப்படித்தான் தொழில்கள் முன்னேறவேண்டும் என்று திட்டமிட்டுக் கொண்டிருக்கிற ஒரு சர்க்காருடைய கொள்கை அளவிலே வைத்துப் பார்க்கும்பொழுது, எப்படி வேண்டுமானாலும் முன்னேறலாம், எப்படி வேண்டுமானாலும் தொழில்களை ஏற்படுத்தலாம் என்று நினைப்பது சரியானது அல்ல. அதன் மூலம் நாம் விரும்புகின்ற சமதர்ம பொருளாதார லட்சியத்தை நாம் அடைய



முடியாது. ஆகையால் நம்முடைய நாட்டு மக்கள் இன்றைய சர்க்கார் தொழில் கொள்கையை ஏற்றுக்கொள்ள இயலாது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். வருகிற மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலாவது அடிப்படையான ஆதார சக்திகளை பெருக்குவதற்காக புதிய தொழில்களை ஆரம்பிக்கவும், சமுதாயத்திற்கு அவைகளை உடமையாகச் செய்து, அதிலிருந்து கிடைக்கும் வருமான ஊற்றுகள் சமுதாயத்தில் வளம் ஏற்படுத்துவதற்கு வழி செய்வதற்கும், திட்டமிட்டு நம்முடைய ராஜ்ய சர்க்கார் இனியாவது ஏற்பாடு செய்யவேண்டும் என்று எடுத்துக் கூறி, என்னுடைய வார்த்தைகளை இத்தோடு முடித்துக்கொள்ளுகிறேன்.

**Sri A. VEDARATHNAM:** கனம் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் இன்று இயங்கி வருகிற இலாகாக்களுக்குள் எல்லாவற்றிலும் நம்முடைய கைத்தொழில் இலாகா போற்ற வேண்டிய இலாகா. எனினும் அதைப்பற்றித்தான் வெகுவாக நம்முடைய எதிர்க்கட்சிகளிலே குறை கூறப்படுகிறது என்பதை நான் இங்கே வருத்தத்தோடு குறிப்பிட விரும்புகிறேன். அதனாலே தான் வடக்கு, தெற்கு என்ற ஒரு பல்லவியே நம்முடைய மாநிலத்திலே இப்பொழுது தோன்றியிருக்கிறது என்று நான் சொன்னால், அது தவறாகாது. உதாரணமாக, அன்றையதினம் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்; இது வரையில் வங்காளம் முதல் ஸ்தானத்தை வகித்தது, அதைக்கூட நம்முடைய தமிழகம் இப்பொழுது முந்திவிட்டது என்ற விஷயத்தை குறிப்பிட்டு பல தொழில்களின் எண்ணிக்கையை மாத்திரம் குறிப்பிட்டார்கள். ரூபாய் 50 லட்சத்திற்கு மேற்பட்ட மூலதனத்தில் நடைபெறுகின்ற 18 கம்பெனிகள் இந்தக் கடைசி ஆண்டில் மாத்திரம் ஏற்பட்டிருக்கிறது என்ற விஷயத்தைக் குறிப்பிட்டார்கள். ஆனால், அதன் விவரத்தை அவர்கள் குறிப்பிடவில்லை. அதாவது, நமது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்ப காலத்தில் 4,200 பாக்டரியாக இருந்தது, மூன்றாவது திட்ட ஆரம்பத்திற்குள், இந்த 5 ஆண்டுகளில் 5,880-ஆக உயர்ந்திருக்கிறது என்று சொல்லிச் சொன்னால், தொழில் அபிவிருத்தி இங்கே இல்லை என்று கூறுவது முறையா என்பதை அவர்கள் சிந்திக்க வேண்டும் என்று அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சமீபத்தில் மத்திய சர்க்காரின் கம்பெனிச் சட்ட காரியதரிசி அவர்கள் வந்து குறிப்பிடுகிற வரையிலே நமக்கு நம்முடைய பெருமை விளங்காமல் இருந்தது. மற்ற எல்லா தென் மண்டல ராஜ்யங்களையும் சேர்த்து 1,150 கம்பெனிகள்தான் ரிஜிஸ்டர் ஆகியிருக்கின்றன. அதில் நம்முடைய தமிழகத்தில் மாத்திரம் 788 கம்பெனிகள் என்று அவர்கள் குறிப்பிட்டதிலிருந்து, அவர்கள் கூறித்தான் இந்த விஷயத்தை, நாம் நம்முடைய பெருமையைப் பற்றி உணர்ந்து கொள்ளவேண்டியிருக்கிறது. மற்ற 3 ராஜ்யங்களும் சேர்ந்து இந்தக் கம்பெனிகள் ஏற்படுத்தும்

விஷயத்திலே நம்முடைய ராஜ்யத்தைவிட பாதிக்குக்கூட குறைவாகத்தான் இருக்கிறது என்ற விஷயத்தை அவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

இப்பொழுது கடந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் 41 புதிய பெரிய பாக்டரிகள் நம்முடைய மாநிலத்தில் ஏற்பட்டிருக்கிறது. ஷீட்கள் செய்கின்ற பாக்டரி ரூ. 50 லட்சம் மூலதனத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. நெய்வேலி களி மண்ணைக்கொண்டு அலுமினியம் செய்வதற்கு ஒரு கோடி ரூபாய் மூலதனத்தில் ஒரு பாக்டரி, சர்க்கரம் செய்கின்ற பாக்டரி ஒரு கோடி ரூபாய் மூலதனத்தில், 10 கோடி ரூபாய் மூலதனத்தில் காகிதம் செய்ய பாக்டரி, வார்ப்படத் தொழில்களை விஸ்தரிப்பதற்காக ஒரு பாக்டரி ஒரு கோடி ரூபாய் மூலதனத்தில், 10 கோடி ரூபாய் மூலதனத்தில் அலுமினியம் பாக்டரி, அருணா சர்க்கரை பாக்டரி 10 கோடி ரூபாய் மூலதனத்தில், 'டயமண்டு சைன்ஸ்', அதாவது சங்கிலிகள் செய்கின்ற பாக்டரி 70 லட்சம் ரூபாய் மூலதனத்தில், டிராக்டர்கள் செய்வதற்கு ஒரு பாக்டரி சென்னைக்கு அருகாமையில் ரூ. 2 கோடி மூலதனத்தில், கேபிள்கள் செய்ய ஒரு பாக்டரி ரூபாய் 2 கோடி மூலதனத்தில் அத்தனையும் தனியார் துறையிலே ஆரம்பிக்கப்பட்டிருக்கிற தொழில்கள். சர்க்கார் துறையிலே 'டெலிபிரிண்டர்ஸ்' செய்வதற்காக ரூ. 3 கோடி மூலதனத்தில் ஒரு பாக்டரி, கச்சா பிலிம் உற்பத்தி செய்வதற்கு ரூ. 3 கோடி மூலதனத்தில் ஒரு பாக்டரி, 'ஸர்ஜிகல் இன்ஸ்ட்ருமெண்டு' செய்வதற்காக 8 கோடி ரூபாய் மூலதனத்தில் ஒரு பாக்டரி, இது அல்லாமல் 'ஹெவ்வி எலெக்டிரிகல் இன்ஸ்ட்ருமெண்டுஸ்' செய்வதற்காக ரூ. 50 கோடி மூலதனத்தில் ஒரு பாக்டரி ஏற்படுத்துவதற்கு அவர்கள் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவை அனைத்தையும் இன்றைக்கு நம்முடைய நிதி அமைச்சர் கூறுவதற்கு முன்னதாக நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர்களேகூட இதை உணர்ந்துகொள்ளாமல், நம்முடைய நாடு பின்தங்கியிருக்கிறது என்ற குற்றச்சாட்டை கூறினார்கள். நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறிய பிறகுதான் அவர்களே உணர்ந்துகொள்ள முடிந்தது. அன்று நான் பட்ஜெட் விவாத காலத்தில் பேசுகிறபோது, தொழில் வளம் அத்தனைக்கும் காரணம் தாங்கள்தான் என்று திராவிட முன்னேற்றக் கழக கட்சியினர் கூறினார்கள். நான் அதை ஆட்சேபிக்கவில்லை. இந்த உலகம் நடப்பதற்கே அவர்கள்தான் காரணம் என்று கூறுவார்களேயானால் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றுதான் சொன்னேன். அதோடு அவர்கள் விட்டிருக்க வேண்டும். அதை மீண்டும் மீண்டும் வற்புறுத்தி, நாங்கள் எடுத்துக்காட்டாமல் போனால் இவ்வளவு தூரம் தொழில்கள் வளர்ந்திருக்குமா என்று கேட்டார்கள். என்னென்ன தொழில்கள் வளர்ந்திருக்கின்றன என்று அவர்களுடைய தலைவர் உள்பட ஒருவரும் தெரிந்து கொள்ளாமல், நாங்கள்தான் காரணம் என்று கூறினால் அது கோழி கூவிதான் பொழுது விடிகிறது என்று நினைப்பதுபோல் இருக்கிறது, எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை



என்று சொன்னேன். உதாரணங்கள் கூறுவதற்கு எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளாக சிங்கம், புலி, கரடி போன்ற மிருகங்கள் எல்லாம் உபயோகப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. எதிர்க் கட்சித் தலைவர் எத்தனையோ புத்தகங்களை எழுதியிருக்கிறார்கள். அதிலே சான்று கூறியிருக்கிற இடங்களிலெல்லாம் அந்த மிருகங்களின் பாஷையைத் தெரிந்துக்கொண்டுதான் உபயோகப்படுத்தியிருக்கிறார்களா என்று கேட்கிறேன். இதற்கு அவர்கள் வருத்தப்படவேண்டிய காரணம் இல்லை. அவர்களை மரியாதைக் குறைவாக பொதுக்கூட்டத்திலோ அல்லது இந்த அவையிலேயோ நான் ஒரு வார்த்தைகூட பேசினது கிடையாது. அகில இந்தியாவிலேயே முதன்மையான ஸ்தானத்தை நம்முடைய மாநிலம் அடைந்திருந்தும், அதை உணராமல் குற்றச்சாட்டு கூறுகிறார்கள், அது நியாயமல்ல. அகில இந்தியாவில் இருக்கிற எல்லா மாநிலங்களைக் காட்டிலும், நம்முடைய மாநிலம் இன்றைக்கு முன்னணிக்கு வந்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. நமது தொழில் அமைச்சர் கூட, தொழில் வளர்ந்திருக்கிறது என்பதை ஒப்புக்கொண்டால் போதும், யாரால் இருந்தாலும் பாதகமில்லை என்று சொன்னார்கள். அந்த அளவோடு நிறுத்திக்கொண்டிருந்தால், இந்த உதாரணத்தைச் சொல்லுவதற்கு அவசியம் ஏற்பட்டிராது. கோழி பாஷை, மிருகங்களின் பாஷையை எல்லாம் தெரிந்துகொண்டு இங்கே சட்டசபை அங்கத்தினர்கள் பயன்படுத்துகிறார்கள் என்று சொல்லுவார்களேயானால், அது நியாயமற்ற குற்றச்சாட்டு.

சென்ற ஆண்டிலேகூட குடிசைக் கைத்தொழில்களைப்பற்றி எல்லாம் எதிர்க்கட்சியினர் கேலியாகப் பேசினார்கள். இப்பொழுது கூட கனம் அங்கத்தினர் சின்னதுரை அவர்கள், அப்பளமிடுதல், கூடை பின்னுதல், பாய் முடைதல், இந்தத் தொழில்களைப் பற்றி எல்லாம் கேலியாகப் பேசினார்கள். அதேசமயத்தில் இன்னொன்றையும் குறிப்பிட்டார்கள். அகில இந்தியாவிலேயே பஞ்சாப்தான் முன்னணியில் இருக்கிற மாகாணம் என்று குறிப்பிட்டார்கள். அவர்களை நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். பஞ்சாப் மாகாணத்திலே, நம்முடைய மாகாணத்தில் இருப்பதுபோல், நான் இப்பொழுது படித்த ஜாபிதாவில் உள்ள ஏதாவது ஒரு கனரகத் தொழிலாவது இருக்கிறதா? இந்தக் குடிசைக் கைத்தொழில்கள் காரணமாகத்தான் பஞ்சாப் இந்த அளவுக்கு முன்னணிக்கு வந்திருக்கிறது என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். அதே மாதிரி இந்த குடிசைக் கைத்தொழில்களைக் கேலி செய்யும் ஒவ்வொரு எதிர்க்கட்சி அங்கத்தினருக்கும் நினைவூட்ட விரும்புகிறேன். பஞ்சாப் மாகாணத்திலே வீடு தோறும் ராட்டை சுற்றுகிறார்கள். அகில இந்தியாவிலேயே கதர் இயக்கத்திற்குப் பெயர் போன மாகாணம் எது என்று சொன்னால், அது பஞ்சாப் மாகாணம்தான் என்று அவர்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அப்பளம் இடுதல், கூடை முடைதல், பாய் பின்னுதல் போன்ற தொழில்களை விட்டுவிட்டால், இந்தமாதிரி கல்வித்

திறன், தொழில் திறன் இல்லாதவர்களுடைய வாழ்க்கையை வளர்ப்பதற்கு, வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குவதற்கு, இவர்கள் வேறு என்ன யோசனையைக் கூறுகிறார்கள் என்று கேட்கிறேன். அப்பளம் இடுதல், ராட்டை சுற்றுதல் போன்ற கைத்தொழில்கள் மூலமாகத்தான் விதவை போன்றவர்கள் வீட்டிலே உட்கார்ந்துகொண்டு, அவர்களுடைய வாழ்க்கையை கௌரவமாக நடத்த முடியும். இவற்றைக் கேலி செய்தால், வேறு என்ன யோசனைகளை வைத்திருக்கிறார்கள் என்று அவர்களைக் கேட்கிறேன்.

**SRI P. S. CHINNADURAI:** நான் ஒன்றும் சிறு கைத்தொழில்களை கேலியாகச் சொல்லவில்லை. சர்க்கார் இதிலே புகுந்து நடத்த வேண்டிய அவசியமில்லை, இதை எல்லாம் தனியாருக்கே விட்டுவிடலாமென்றுதான் சொன்னேன்.

**SRI A. VEDARATHNAM:** இப்பொழுது இந்தத் தொழில்கள் எல்லாம் க்ஷீணமாய் இருக்கின்றன. கொல்லர்கள் பிள்ளைகள் அந்த வேலையைச் செய்வதில்லை. தச்சர் பிள்ளைகள் 7-வது அல்லது 8-வது வகுப்பு வரை படித்துவிட்டு, உபாத்தியாயர், கிராம சேவகர்கள் போன்ற நல்ல வேலைக்குச் செல்லுகின்றனர் அவர்கள் எல்லாம் இந்த வேலையைக் கைவிட்டுவிட்டார்கள்.

**SRI K. ANBAZHAGAN:** உபாத்தியாயர் வேலை நல்ல வேலை இல்லை.

**SRI A. VEDARATHNAM:** உபாத்தியாயர் வேலை நல்ல வேலைதான். இல்லையென்றால் கனம் அங்கத்தினரே உபாத்தியாயராக இருப்பாரா? (சிரிப்பு.)

**SRI K. ANBAZHAGAN:** உபாத்தியாயர் வேலையைவிட தொழில் செய்வதுதான் நல்லது.

**SRI A. VEDARATHNAM:** இந்த கனரகத் தொழில்கள் எவ்வளவு அத்தியாவசியமோ, அதைக் காட்டிலும் மிக அத்தியாவசியம், இந்தக் குடிசைக் கைத்தொழில்கள். ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ், காட்டேஜ் இண்டஸ்ட்ரீஸ் இவைகள் மிகவும் அவசியம் என்று நான் சொல்லுவதை யாரும் தவறு என்று சொல்ல முடியாது.

இதுபோன்று, நம்முடைய நாட்டிலே இந்தமாதிரி தொழில்களை வளர்ப்பதற்கு அரசாங்கம் நல்ல பல முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. தொழில் துறையிலே கடந்த 150 ஆண்டுகளாகப் பின்தங்கிய ஒரு நாட்டை, அந்தத் துறையிலே ஊக்கம் அளித்து, கூட்டுறவு முறையில் பல தொழில்களை ஆரம்பிப்பதற்கு நல்ல சாதனங்களை நமது சர்க்கார் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இருபது சதவிகிதம் மூலதனத்தை தனியார் கூட்டுறவு சங்கத்தின் மூலமாகப் போட முன்வருவார்களேயானால், அரசாங்கம் 80 சதவிகிதம் அவர்களுக்கு உதவி, அதன்மூலமாக தொழில் வளத்தை விருத்தி செய்வதற்கு, ஏராளமாக எவ்வளவு நிதி கேட்டாலும், அதைக் கொடுப்பதற்குத்



தயாராயிருக்கிறது. இதைத் தாராளமாக அவர்கள் பயன்படுத்திக்கொண்டு இந்த மாதிரி தொழில் வளத்தைப் பெருக்க முன்வரவேண்டும். இருபது சதவிகிதம் என்று இருப்பதைக் கூட இன்னும் கொஞ்சம் குறைக்கலாமென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் தனியார் துறையிலே கைத்தொழில்கள் வளரவேண்டும். சோஷலிஸ்டு கொள்கை என்பது என்ன? தனியார் துறையே கூடாது என்று நினைக்கிறவர்களுக்கும், காங்கிரஸ் சர்க்காருடைய கொள்கைக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் இருப்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். காந்தி அடிகளின் கொள்கை என்ன? தனவந்தர்கள் என்று சொன்னால், அந்த தனத்தை வளர்ப்பதற்கு அவர்களிடத்திலே ஒரு ஆற்றல் இருக்கிறது, அந்த ஆற்றலை அழித்துவிடக்கூடாது என்பதுதான். எவ்வளவு தனம் இருந்தாலும்கூட, அவர்கள் எளிய வாழ்க்கை நடத்தி, இல்லாதவர்களுக்கு அத்தியாவசியமான தேவைகளை உதவும்படியாகச் செய்கிறார்கள் என்பது காந்தி அடிகளின் அடிப்படையான தத்துவம். அதற்கு ஒரு உதாரணம் கொடுக்கவேண்டுமென்றால், இன்றைக்கு உலகத்திலே நோபல் பிரைஸ் வாங்கின அறிவாளிகளை எடுத்துக்கொண்டால், எல்லா இனத்தைக் காட்டிலும், அதிகமான நோபல் பிரைஸ்கள் வாங்கினவர்கள் ஜூஸ்-கள்தான் என்று தெரியவரும். ஜூஸ் என்று சொன்னால், அதற்கு விளக்கம் கூறத்தேவையில்லை என்று நினைக்கிறேன். உலகத்திலேயே அவர்கள்தான் பணக்காரர்கள். பணம் சேர்க்கிறவர்களுக்கு இந்த ஆற்றல் இருக்கிறது என்பதை இந்த நோபல் பிரைஸ்கள் நிரூபித்துக் காட்டுகின்றன. தனியார் துறையை அழித்துவிடவேண்டுமென்று பல கட்சிகள் இருந்தாலும் இன்று நம்முடைய கொள்கை அது அல்ல. தனியார் துறையிலே தொழில்களை வளர்க்க வேண்டியதுதான் முறை என்று நாம் கருதுகிற காரணத்தினாலே, இந்த மாதிரி உதவிகளைக் கொடுத்து வருகிறோம். தனியார் நடத்தும் தொழில்கள் இன்னும் சிக்கனமாக, நல்ல முறையில் கண்காணிப்போடு, சர்க்கார் நடத்துவதைக் காட்டிலும் சிக்கனமான முறையில் நடத்தலாமென்ற காரணத்தினாலே இதைக் கொன்றுவிடக் கூடாது. தனியார் துறையிலுள்ள திறனை அழித்துவிடக் கூடாது. அவர்களுக்கு இந்தத் தொழில்கள் ஆரம்பிப்பதற்கு 50 சதவிகிதத்திற்கு அதிகமாக இன்றைக்கு அரசாங்கம் உதவி அளிக்கத் தயாராயிருக்கிறது. கூட்டுறவுத் துறைமூலமாகச் செய்தால் 80 சதவிகிதத்திற்கு உதவி அளிக்கப்படுகிறது. இன்னும் அதிகமாக உதவி வேண்டுமென்று சொன்னாலும்கூட, அரசாங்கம் அதைப் புறக்கணிக்கத் தயாராயில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு இந்தத் தொழிலில் 10 a.m.
ஈடுபட்டவர்களுக்கு மாத்திரமல்லாமல், தொழில் துறையில் திறமையை வளர்க்க, ஜில்லாவிற்கு ஒரு தொழில் பள்ளிக்கூடம், அதுகூடப் போதாது என்று ஜில்லாவுக்கு இரண்டு பள்ளிக்கூடம் வீதம், 24 பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்த முன்வந்திருக்கிறார்கள். இந்த 24 பள்ளிகளும்கூடப் போதாது; ஏராளமான ஹைஸ்கூல்கள் இருக்கின்றன. இவையெல்லாம் அரசாங்கக் குமாஸ்தாக்களை

உண்டாக்கி அந்த வேலைக்குப் பயனுள்ளவர்களாகவே செய்வதாக இருக்கின்றன. இது மெக்காலே வளர்த்த திட்டம், குமாஸ்தாக்களை உண்டாக்கும் பள்ளிகளாகவே இருக்கின்றன. எனவே அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன், இப்பொழுது இருக்கும் ஹைஸ்கூல்களில், ஒரு பாதியையாவது, இல்லாவிட்டால், மூன்றில் ஒரு பாகத்தையாவது, கைத் தொழில் பகுதியாக மாற்ற வேண்டும்; அந்த விதத்தில் தொழில் துறையில் கவனம் செலுத்த வேண்டும்; தொழில் கல்வியைக் கவர்ச்சியுள்ளதாகச் செய்ய வேண்டும். எங்கள் தஞ்சை ஜில்லாவில் உள்ள இண்டஸ்ட்ரியல் ஸ்கூலை இப்பொழுது அரசாங்கம் எடுத்துக் கொண்டு அதைத் தொழில் பள்ளியாக மாற்ற முன்வந்திருப்பதற்காக அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இருபத்திநான்கு தொழில் பள்ளிகளை நம் மாநிலத்தில் ஏற்படுத்த முன்வந்ததற்காகவும் அவர்களைப் பாராட்டுகிறேன். பல ஹைஸ்கூல்கள் இப்பொழுது இருப்பது தேவைக்கு அதிகமாக இருக்கிறது, பயனற்றவைகளாக இருக்கின்றன. அங்கு படித்த மாணவர்களெல்லாம், இங்கே ஒவ்வொரு எம்.எல்.ஏ.-களுக்கு முன்னால் வந்திருந்து, வேலை தேடித்தரவேண்டுமென்று முற்றுகை இடுகிறார்கள். அப்படிப்பட்ட அவல நிலையிலிருந்து அவர்களைக் காப்பாற்ற, முற்றிலும் இல்லாவிட்டாலும், இயன்ற அளவாவது, ஆண்டுக்கு இத்தனை பள்ளிகளை மாற்றுவது என்ற ஒரு திட்டப் படியாவது, அவைகளைத் தொழில் பள்ளிகளாக மாற்றவேண்டும். அப்படிபல ஹைஸ்கூல்களை கைத் தொழில் பள்ளிகளாக மாற்ற முன்வந்தால், மாநிலத்திற்கு தொழில் வளர்ச்சி மட்டுமல்ல, பொருளாதார வளர்ச்சியையும் தேடித்தா முடியும்; இந்த வேலையில்லாத் திண்டாட்டமும் குறையும். இன்றைக்கு விலைவாசி அதிகரித்திருக்கிறது. அதைக் குறைக்க இந்தத் தொழில் உற்பத்தி பெரிதும் துணை செய்யும் என்று தெரிவித்திருக்கிறார்கள் தொழில் நிபுணர்கள். இன்னும் புதிதாக பல தொழில்கள் மாகாணத்தில் ஆரம்பிக்க வேண்டிய அவசியம் இருக்கின்றன. அவற்றையும் அரசாங்கம் சிந்தனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கொள்ளேகாலம் நம்மைவிட்டு இப்பொழுது மைசூர் மாநிலத்திற்குப் போய்விட்டது; அதன் காரணமாக பட்டுத் தொழில் நம்மிடமிருந்து, நம் மாநிலத்திலிருந்து போய்விட்டது. பட்டுத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் பட்டு உற்பத்தி செய்ய, மல்பரிச் செடி முக்கியமானதாக இருக்கிறது. இப்பொழுது அது குடியாத்தம் பிரதேசத்தில் எங்கு பார்த்தாலும் பயிர் செய்யப்படுகிறது. இன்னும் ஆமணக்கு செடிகளைப் பட்டுப்பூச்சிகள் தின்று வளர்கின்றன என்று நிபுணர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே, இந்த ஆமணக்கை எந்தப் பகுதியிலும் வளர்க்க முடிகிறது என்ற காரணத்தினால், அதை நிறைய உற்பத்தி செய்து, பட்டுப்பூச்சிகள் வளர்க்க அந்தத் தொழிலை விருத்தி செய்யவேண்டும். அப்படிச் செய்தால் நம் மாநிலத்திற்கு பெரும் தொகை மிச்சமாகும்; கைத்தறி நெசவாளர்களுக்கும் குறைந்த விலையில் [illegible]





வினியோகிக்க வேண்டிய சாத்தியக் கூறுகள் ஏற்படும் என்பதையும் நினைவூட்ட விரும்புகிறேன். இங்கே ஏராளமான ஜிப்ஸம் . . . (மணியடிக்கப்பட்டது.)

இன்னும் கொஞ்ச நேரம். எனக்கு அன் லிமிடட் டைம் என்று நினைத்தேன்.

**MR. SPEAKER:** அது எப்படி? நான் அப்படிச் சொல்லவில்லையே. கனம் சின்னதுரைக்கு 15 நிமிஷம் கொடுக்கப்பட்டது; அதிலிருந்து தாங்கள் தெரிந்து கொண்டு இருக்க வேண்டும் தங்களுக்கு எவ்வளவு டைம் என்று. அது போகட்டும். சீக்கிரம் முடித்து விடுங்கள். நான் மணியடிக்க வில்லை.

**SRI A. VEDARATHNAM:** நம்மிடம் ஏராளமான ஜிப்ஸம் கிடைக்கிறது. அதை ஆராய்ச்சி செய்து எந்தத் தொழில்களுக்குப் பயன் படுத்தலாம் என்ற விஷயத்தை ஆராய்ச்சி செய்ய நம் மாநிலத்தில் அதிகப் பணம் செலவிடவேண்டும். மற்றவர்கள் ஆராய்ந்து அறிந்த விஷயங்களைமட்டும் வைத்துக் கொண்டு காப்பி அடிப்பதைக் காட்டிலும், நம் தொழில்களுக்கு எப்படி அனுகூலமாக இருக்கும் என்று கண்டறியவேண்டும்.

இப்பொழுது மொலாஸஸ் சக்கரை ஆலைகளிலிருந்து ஏராளமாகக் கிடைக்கிறது. அதைக் கொண்டு பவர் ஆயில் உற்பத்தி செய்ய ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தினால் மிக்க வரவேற்கத் தக்கதாக இருக்கும். தஞ்சை ஜில்லா போன்ற ஜில்லாக்களில், எந்தத் தொழில்களுக்கும் வசதியில்லாத இடங்களில், எஞ்ஜினியரிங் இண்டஸ்ட்ரி, டெக்ஸ்டைல் இண்டஸ்ட்ரி, இவைதான் அங்கே ஆரம்பிக்க முடியும். இப்பொழுது டெக்ஸ்டைல் தொழிற்சாலை ஆரம்பிக்க முன்வந்திருப்பதை வரவேற்கிறேன். அது மாத்திரம் போதாது. டெக்ஸ்டைல் இருந்து, மில் லூம்கள் இல்லாவிட்டால் பயனில்லை. குறைந்த பட்சம் 300 லூம்கள் கொண்ட ஒரு நெசவாலையை ஆரம்பிக்க வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன். அங்கே ஒரே ஒரு ரோலிங் மில் நாகைப் பட்டணத்தில் இருக்கிறது. அந்தத் தொழிற்சாலை ஜில்லாவின் தேவை அவ்வளவையும் பூர்த்தி செய்ய உதவியாக இல்லை. அதற்கு வேண்டிய உதவிகள் கொடுத்து விருத்தி செய்ய முன்வரவேண்டும்.

லட்சக் கணக்கான டன் உப்பு வியர்த்தமாகப் போகிறது, வேதாரணியம் பிராந்தியத்தில். அங்கே ஒரு சோடா ஆஷ் பாக்டரிவைத்து, ரசாயனத் தொழிற்சாலை ஒன்று அங்கே ஏற்படுத்த முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்தத் தொழிற்சாலைகளெல்லாம் நடத்த மூலப் பொருளான நிலக்கரி போதிய அளவு உரிய காலத்தில் வராததால், செமண்ட் போன்ற தொழில்கள் நின்று விட்டு இருக்கிறது. மகசூல் காலத்தில் வாகன்களுக்குத் தேவை, டிமாண்ட் இருக்கிறது. ஏராளமான வாகன்கள் பின்னால் தேங்கிக் கிடக்கின்றன. அந்தக் காலங்களில் நிலக்கரியைக் கொண்டுவந்து டம்ப் செய்து தேக்கி வைத்துக் கொண்டு, பயன் படுத்த அரசாங்கம் முன்வரவேண்டும்

என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதற்கு வேண்டிய கோடௌன்களையும் அமைத்துக் கொள்ள வேண்டும். இதைப் பற்றியும் சர்க்கார் யோசனை செய்ய வேண்டும். தலைவர் அவர்கள் மணியடித்திருக்கிறார்கள். அதிகம் பேசுவதற்கில்லை.

இது போன்று பல கைத்தொழில்களை நம் தொழில் இலாகா ஏற்படுத்தி விருத்தி செய்வதில் கவனம் செலுத்தினால்தான், நமக்கு பயனுள்ளதாக இருக்கும். கைத்தொழில்தான் கல்வி அறிவு உள்ள மக்கள் குறைந்துள்ள நம் பகுதிக்கு அத்யாவசியத் தேவைகளைப் பூர்த்திசெய்ய உதவும். இம்மாதிரி பல தொழில்களில் கவனம் செலுத்தியிருப்பதற்காக அந்த இலாகாவைப் பாராட்டுகிறேன்.

இதற்கெல்லாம் முக்கியமாக இந்த ஐக்கியஸ்தாபனத்தின் தொழில் ஸெமினாரை சென்னையில் நடத்த வேண்டும் என்று முடிவு செய்திருப்பதை, அது நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு, முன்னேற்றத்திற்கு உகந்த சாதனமாக இருக்கும் என்ற காரணத்தால் அதைப் பாராட்டுகிறேன். தொழில் இலாகாவை மனமாரப் பாராட்டுகிறேன், அவர்கள் பணிகளை மனமாரப் புகழ்கிறேன், வரவேற்கிறேன். இம்மாதிரிச் செய்து அகில இந்தியாவிலும் மிக்கப் பின்னணியில் இருந்த நம் மாநிலத்தை முன்னணிக்குக் கொண்டு வந்ததற்காகப் பாராட்டுகிறேன். ஆகவே இவர்களைக் குறை கூறுவது கொஞ்சமும் நியாயமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இதை எதிர்கட்சி சகோதரர்களுக்கு எடுத்துச் சொல்லி, இந்த மானியத்தை ஆதரித்து முடிக்கிறேன்.

**Sri S. M. ANNAMALAI :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, மன்றத்தின் முன்னாலிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நம் மாநிலத்தைப் பொறுத்தவரை, சர்க்காரின் கைத்தொழில் கொள்கை மிகமிகத் தவறு என்று சொல்ல ஆசைப்படுகிறேன். முதன் முதலில், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் சமதர்மக் கொள்கையை ஏற்றுக் கொள்ளுகிறோம், என்று சொன்னார்கள். நாளாவட்டத்தில் அவர்கள், சமதர்மக் கொள்கையிலிருந்து மாறி விடுவார்களோ என்ற அச்சம் ஏற்படுகிறது. ஏனெனில், மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும் தனியார் துறைக்கு ஒதுக்கிய பணத்தைப் பார்த்தால், முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கியதைவிட இரண்டாவது திட்டத்தில் அதிகமாகவும்; இரண்டாவது திட்டத்தில் ஒதுக்கியதை விட மூன்றாவது திட்டத்தில் அதிகமாகவும் பணம் ஒதுக்கப்பட்டிருப்பதையும் பார்க்கிறோம். அதைப் பார்க்கும்போது, உண்மையிலேயே அவர்கள் ஏற்றிருக்கக்கூடிய கொள்கை வெற்றி அடையுமா என்பது சந்தேகமாகத்தான் இருக்கிறது.

அவர்களுடைய சமதர்மக் கொள்கையினால், மக்கள் பலன் அடைந்திருக்கிறார்களா என்று பார்க்கவேண்டியதாக இருக்கிறது. அவர்கள் போடக்கூடிய திட்டங்களி





னால் தேசிய வருவாய் வளர்ந்து கொண்டுதான் இருக்கிறது; அந்த வளர்ச்சியினால் பாமர மக்களுக்கு எவ்விதப் பலனும் ஏற்படவில்லை. அந்தப் பணம், யாரிடத்தில் போய் சேர்ந்திருக்கிறது என்று கூட, கண்டுபிடிக்க முடியவில்லை; அந்த நிலையில்தான் சர்க்கார் இருக்கிறது. அந்தப் பலனை அனுபவிக்க முடியாமல்தான் பாமர மக்கள் மேலும் மேலும் கஷ்டத்திற்குள்ளாகக்கூடிய நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

தனியார் துறையில் அதிகப்படியான தொழில்களை ஆரம்பிப்பதன்மூலம் நாட்டில் அதிகப்படியான முதலாளிகளைத் தோற்றுவிப்பதாக இருக்கிறது. நமது மாநில சர்க்கார் பொதுத்துறையை அதிகமாக்காமல் தனியார் துறையைத்தான் அதிகமாக்கிக்கொண்டிருக்கிறார்கள். அந்த முறையில் அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கக்கூடிய கொள்கை வெற்றி அடையுமா என்பதைப் பார்க்கவேண்டியதாக இருக்கிறது. இதை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு என்று கொடுக்கப்பட்டிருக்கிற புள்ளி விவரத்தைப் பார்த்தால் நன்றாகத் தெரியவரும்.

**(Sri K. Sattanatha Karayalar in the Chair.)**

திரு. லோகநாதன் தன்னுடைய அறிக்கையை இப்பொழுதுதான் தாக்கல் செய்திருக்கிறார்; அந்த அறிக்கையில், ரூ. 2,100 கோடி இருந்தால்தான், பிற மாநிலங்களில் தனி நபர் வருவாய் எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறதோ அந்த அளவுக்கு நாம் முன்னேற முடியும் என்று சொல்லியிருக்கிறார். ஆனால், மூன்றாவது திட்டம் சம்பந்தமாகவுள்ள புத்தகத்தில், சுமார் 45 கோடி ரூபாய்க்கு 14 தொழில்கள் பொதுத் துறையில் ஆரம்பிப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சில திட்டங்கள் பொதுத் துறையில் போடப்பட்டிருப்பதாகவும் சில திட்டங்கள் போடப்போவதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது; அப்படித் திட்டம் போட்டு பெரிய கைத்தொழிற்சாலைகளை ஆரம்பிக்கப்போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அளவில், மூன்றாவது திட்ட காலத்தில், பெரிய அளவில் இந்த மாநிலத்தில் பெரிய கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்படும் என்று எதிர்பார்த்தோம்.

ஆனால், வரவு-செலவுத்திட்டம் சம்பந்தமாகக் கொடுக்கப்பட்ட புத்தகத்தில், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ரூ. 335 இலட்சம் ரூபாய் செலவிடப்போவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதில், 1961-62-ம் ஆண்டில் ஒன்பது இலட்சம் ரூபாய் செலவிடப் போவதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அளவில்தான் பெரிய கைத்தொழில்களுக்குச் செலவிடப் போவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், திரு. லோகநாதன் குழுவின் அறிக்கையில், 2,100 கோடி ரூபாய் இருந்தால்தான், தனிநபர் வருவாய் இந்த மாநிலத்தில் உயரும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அமைச்சர் ரூ. 45 கோடி அளவில் சில திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன; சில திட்டங்கள் இன்னும் போடவில்லை; இன்னும் அதிகப்படியான திட்டங்கள் போடுவதற்கு இடம் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்.

அந்த அளவில், மூன்றாவது திட்ட காலத்தில் ரூ. 335 இலட்சம்தான் பெரிய கைத்தொழில் சம்பந்தமாக செலவிடப்போகிறோம் என்று சொல்லுவது எப்படி இருக்கிறது என்றால், உண்மையிலேயே யானையைக் காண்பித்த பிறகு பூனையைக் காண்பித்தது போல் இருக்கிறது.

சமீபத்தில் தேசீய அபிவிருத்திக் குழுக் கூட்டமும், திட்டக் குழுக் கூட்டமும் நடந்தது. அங்கு சென்ற இந்த மாநில அமைச்சர்கள் என்ன பேசினர்—என்ன ஆலோசனைகளைத் தந்தனர்? நம்முடைய மாநிலம் மிகவும் பிற்போக்காக இருக்கிறதே—அதற்காக அதிகப்பணம் ஒதுக்க வேண்டும் என்று கேட்டார்களா என்பது தெரியவில்லை.

இந்த மன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கள் இருக்கிறார்கள்; அவர்கள், 'வடநாடு வாழ்கிறது--தென்னாடு தேய்கிறது' என்று சொல்லி வருகிறார்களே; அப்படி, அங்கு சென்ற அமைச்சர்களும் சொன்னால் ஒருக்கால் திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கள் சொல்வது போன்று இவர்களும் சொல்லுகிறார்கள் என்று கருதி, தங்களைக் கேலி செய்வார்கள் என்று அங்கே சொல்லாமல் விட்டுவிடுவார்களா என்பதும் தெரியவில்லை. கனம் அமைச்சர்கள் இங்கே வேண்டுமானால் பேசாமல் இருக்கலாம்; திட்டக் குழுக்கூட்டத்திற்கு சென்று அப்படிப் பேசினால் வேடிக்கை செய்வார்கள் என்று பேசாமல் இருக்க வேண்டியதில்லை.

எந்த அளவு நமது மாநிலம் பின்தங்கி இருக்கிறது? எந்த அளவுக்கு நமக்குப் பணம் வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள்? ஏன் அதிகப்படியாகக் கேட்டு பணத்தைப் பெற முடியவில்லை? அப்படி உண்மையிலேயே நமது மாநிலத்தின் பிற்போக்குநிலையை எடுத்துக்காட்டி பணத்தைப் பெற முடியவில்லை என்று சொன்னால் அது உண்மையிலேயே மிகமிக வருந்தத்தக்கதாகும்.

நம் மாநிலம் மிகப் பின்தங்கியதாக இருக்கிறது என்று மத்திய சர்க்காரிடம் சொல்லி என் அதிகப்படியான பணத்தை வாங்கி வரவில்லை? வெள்ளைக்காரன் இருந்தது முதற்கொண்டே இந்த நாடு, மிகப் பின் தங்கியதாகவே இருந்துவருகிறது. திட்டம் போட்டு, பிற மாநிலங்கள் முன்னேறிய அளவிற்காவது நம்முடைய மாநிலம் முன்னேறியிருக்கிறதா என்று பார்க்க வேண்டாமா? மற்ற மாநிலத்தின் தனிநபர் வருவாயையும், நமது மாநிலத்தின் தனி நபர் வருவாயையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டாமா? தனி நபர் வருமானம் இங்கு எவ்வளவோ அளவு குறைந்திருக்கிறது. அதை எடுத்துச் சொல்லியிருக்க வேண்டும். மற்ற மாநிலங்களில் வரக்கூடிய வருமானத்தைக் காட்டிலும், நமது மாகாணத்தில் வரும் வருமானம் மிகவும் குறைவாகத்தான் இருக்கிறது என்பதை உண்மையிலேயே அமைச்சர் அவர்களே ஒத்துக்கொள்ளுவார். அதையும் லோகநாதன் குழு அறிக்கை நன்றாக விளக்குகிறது. இவர்கள் எவ்வளவு பணம் கேட்டார்கள் அவர்



கள் எவ்வளவு கொடுத்தார்கள்? என்ன காரணத்திற்காகக் குறைத்தார்கள்? என்பதையெல்லாம் இந்தச் சட்டமன்றத்தில் விளக்க வேண்டும்.

ஆண்டுக்கு ஆண்டு கைத்தொழில் துறைக்கு ஒதுக்கிய பணம் போதிய அளவு செலவிடப்படவில்லை; அதாவது, 1960-61-ம் ஆண்டின் பட்ஜெட் திட்டம் ரூ. 331 இலட்சம்; திருத்தப்பட்ட திட்டம் ரூ. 152 இலட்சம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது ஏன் போதிய அளவுக்கு . . .

**THE HON. SRI R. VENKATARAMAN:** கனம் அங்கத்தினர் 'பட்ஜெட்'டைப் பற்றிப்பேசும்போது, அதற்குக் கொடுக்கப்பட்டிருக்கிற விளக்கத்தையும் சேர்த்துப் படிக்க வேண்டும். அதை விளக்குவதற்குத்தான் 'மெமோராண்டம்' கொடுக்கப்பட்டிருக்கிறது. காதி போர்டு தனியாகப் போன காரணத்தால், கதருக்கு செலவு செய்யவேண்டியது போர்டுக்குப் போய்விட்டது; சர்க்கார் துறையில் இல்லை.

**SRI S. M. ANNAMALAI:** அதையும் படித்துப் பார்த்தேன். இருந்தபோதிலும், சர்க்கார் வேண்டியஅளவு செலவு செய்யவில்லை என்றுதான் கூற வேண்டியதாக இருக்கிறது.

அதைப்போலவே அரசினர் உதவிபெறும் தொழில்களுக்கு ஆண்டுக்கு ஆண்டு ஒதுக்கப்பட்ட பணம் எந்த அளவுக்குச் செலவு செய்யப்பட வேண்டுமோ அந்த அளவு செலவு செய்யப்படவில்லை. எல்லா வகையிலும் பல இலட்சம் ரூபாய் மீதப்பட்டிருக்கிறது. 1956-57, 1957-58, 1958-59, 1959-60, 1960-61-ம் ஆண்டுகளுக்கு கணக்குகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தந்த ஆண்டுகளுக்கு செலவு செய்யப்படவேண்டும் என்று பணம் ஒதுக்கியதில், பல இலட்சக்கணக்கான ரூபாய் செலவிடப்படாமலேயே மீதம் ஏற்பட்டிருக்கிறது; ஏன் அப்படி செலவு செய்யப்படவில்லை?

அதைப்போலவே 'ஜியலாஜிகல் சர்வே'; நமது மாநிலத்தில் ஐந்தில் ஒரு பங்குதான் 'சர்வே' செய்யப்பட்டிருக்கிறது. மத்திய அரசால் நியமிக்கப்பட்ட குழு ஏன் மாநிலம் முழுமையும் 'சர்வே' செய்யக்கூடாது. நமது மாநிலத்தில் அப்படி ஒரு குழு நியமித்து 'சர்வே' செய்யச் சொன்னால், அதை மத்திய சர்க்காரில் ஒத்துக் கொள்ளுவார்களா? அவர்கள் எந்தெந்த இடங்களில் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கலாம் என்று சொன்னால், மத்திய சர்க்கார் உண்மையிலேயே அதை ஒத்துக்கொள்ளுவார்களா? அப்படி இது வரையிலும் ஏதாவது ஒத்துக்கொண்டிருக்கிறார்களா என்று பார்த்தால் உண்மையில், 'இல்லை' என்று திட்டவட்டமாகச் சொல்ல முடியும். 1956-ம் ஆண்டில், இங்குவந்த ரஷ்ய நிபுணர்கள், காவேரி ஆற்றின் படுகையில் எண்ணெய் இருக்கிறது; இங்கே 'ஆயில் ரிபைனரி' ஏற்படுத்தலாம் என்று சொன்னார்கள். ஆனால் இப்போதுதான் நாலாயிரம் சதுரமைல் அளவுக்கு நாம் 'சர்வே' செய்து பார்த்திருக்கிறோம். இன்னும் பாக்கி எப்போது முடியும் என்று சொல்ல முடியாது. இப்படித்தான் மத்திய சர்க்கார்

நம்மைப் புறக்கணிக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கட்சியினர், 'காவேரிப்படுகையில் எண்ணெய் இருக்கிறது', என்று சொன்ன போது, 'ஓ, இவர்கள் தண்ணீரைப் பார்த்துவிட்டு எண்ணெய் என்கிறார்கள்', என்று கேலி செய்தார்கள்! ஆனால் இப்போது நிபுணர்கள், அங்கே எண்ணெய் இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். . . .

**THE HON. SRI R. VENKATARAMAN:** யாரும், 'எண்ணெய் இருக்கிறது' என்று சொல்லவில்லை; 'எண்ணெய் இருக்கலாம்' என்றுதான் சொன்னார்கள்.

**SRI S. M. ANNAMALAI:** நாங்கள், 'இருக்கிறது' என்று சொன்னோம்.

**THE HON. SRI R. VENKATARAMAN:** நிபுணர்கள், 'இருக்கலாம்', என்று சொன்னார்கள்; ஆனால் திராவிடக் கட்சியைச் சேர்ந்த நிபுணர்கள், 'இருக்கிறது', என்கிறார்கள்.

**SRI S. M. ANNAMALAI:** நிச்சயமாக இதன் உண்மை போகப் போகத் தெரியும். அன்றையதினம் எங்களைப் பார்த்து, 'தண்ணீரைக்கொண்டு எண்ணெய் என்கிறார்களே', என்று கேலி செய்தார்கள். அப்படி இனியும் பரிகாசம் செய்யாது, மேற்கொண்டும் பரிசீலனையை துரிதமாக நடைபெறச் செய்து, அங்கே 'ஆயில் ரிபைனரி', ஏற்படுத்தவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புற மக்கள் நகர்ப்புறங்களுக்கு ஏராளமாக வருகிறார்கள்; அதனால் தொழில் வளர்ச்சி அதிகம் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. கிராமப்புறங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்கு வந்து பிச்சை வாங்கினால் தொழில் வளர்ந்துவிட்டதா? வளர்ந்துவிடுமா? மதுரை நகரைப் பொறுத்த வரையில், இந்த வகையில் 17 சத விகிதம் மக்கள் தொகை அதிகப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். இப்படி, கிராமப்புறங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்கு வந்துவிட்டால், கிராம விவசாயம் பாதிக்கப்படுகிறது. விவசாயத்திற்கு ஆட்கள் தேவை. ஆகவே, கிராமத்தில் உள்ளவர்கள் அங்கேயே தங்கி விவசாயத்தொழிலில் ஈடுபடவும், விவசாய வேலை இல்லாத காலத்தில் இதர உபதொழில்களில் ஈடுபடவும், கிராமப்புறங்களிலேயே பல உபதொழில்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

போலீசு இலாகா அறிக்கையில், வாழ்க்கைச் செலவு அதிகமாகிக்கொண்டு வருவதால்தான் குற்றங்கள் அதிகமாகின்றன என்று குறிப்பிட்டிருப்பதைச் சுட்டிக்காட்டினேன். நாட்டில் நாளுக்குநாள் வறுமை பெருகாமல் இருப்பதற்கு ஆங்காங்கு சிறு சிறு கைத்தொழில்களை ஏற்படுத்தவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சிறு கைத்தொழில்களுக்கு 4 மாவட்டங்களில் மட்டும் 'சர்வே' செய்யப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எல்லா மாவட்டங்களிலும் 'சர்வே' செய்யவேண்டும்.



விவசாயத் தொழிலாளர்களுடைய தனிநபர் வருமானம் குறைந்திருக்கிறது. 1951-ல் 104-ஆக இருந்தது. முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிந்து, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவுற்று மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பமாகக்கூடிய நிலையில் இருக்கிறோம், ஆயிரக்கணக்கான ரூபாய்களை செலவு செய்திருக்கிறோம். விவசாயப் பொருள்களின் விலையும் ஏகமாக உயர்ந்திருக்கிறது; இருந்தும் இன்றையதினம் விவசாயத் தொழிலாளர்களுடைய தனி நபர் வருமானம் 99 ரூபாயாகக் குறைந்து விட்டது. உண்மையில் இதுதான் சமதர்ம சர்க்காரின் ஆட்சியா? சமதர்மம் பேசுகின்ற இந்தக் காலத்தில் யார் கையில் பணம் குவிந்துகொண்டிருக்கிறது என்று பார்க்கவேண்டும்.

**SRI R. SRINIVASA IYER: On a point of order, Sir.** சபாநாயகர் மூலமாக அவர் பேசுகின்றாரா? அல்லது மந்திரிக்கு நேரிடையாகச் சொல்கிறாரா?. . . . .

Temporary Chairman (Sri K. Sattanatha Karayalar): The hon. Member may continue.

**SRI S. M. ANNAMALAI:** விவசாயத் தொழிலாளர்களுடைய நிலைமை உயரவேண்டுமானால் கிராமப்புறங்களில் அநேகவிதமான துணைத் தொழில்கள் வளரவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

உண்மையில் நம் மாநிலத்தில், 'கோச் பாக்டரி'யைத் தவிர, வேறு பெரிய தொழிற்சாலைகள் எதுவும் கிடையாது. 'சேலம், சேலம்', என்று சொல்கிறோம்; அது செல்லுமோ என்னவோ? பொதுவாக கனரகத் தொழில்கள் ஏற்படவேண்டுமென்றால் இங்கே மூலப்பொருள்கள் கிடையாது என்று சொல்லலாம். கனரக மின்சாரத் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு வேண்டிய வசதிகளும், வாய்ப்புகளும் இந்த மாநிலத்தில் இருக்கின்றன. இராணிப்பேட்டை, அரக்கோணம், திருச்சி ஆகிய இடங்களை இதற்காக பரிசீலனை செய்து பார்த்தது எனக்குத் தெரியும். மின்சாரத் துறையில் அதிகம் வளர்ச்சி அடைந்து வருகிறோம் என்று சொல்லப்படுகிற நம் மாநிலத்தில் ஏன் உடனடியாக கனரக மின்சாரத் தொழிற்சாலையை ஏற்படுத்தக் கூடாது என்று பரிசீலனை செய்ய வேண்டும்.

திருவண்ணாமலையில் சர்க்கரை ஆலை ஏற்படப்போவதாகச் சொல்லப்பட்டது. ஆனால் இப்போது திட்டவட்டமாக திருவண்ணாமலைக்கு கிடையாது என்று உத்திரவிட்டிருப்பதாக அறிகிறேன். மிகவும் பின்தங்கியிருக்கக்கூடியது வடாற்காடு மாவட்டம். காட்பாடி, ஆம்பூர் இந்த இரண்டைத் தவிர வேறு ஊரில் தொழில் ஏற்படுத்தப்பட்ட இடம் கிடையாது. திருவண்ணாமலையில் சர்க்கரை ஆலையோடு வந்தவாசியில் நூற்பு ஆலையும் தேவை என்று கேட்டிருக்கிறார்கள். அதையும் ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[10th March 1961

* SRI T. T. DANIEL : Mr. Chairman, Sir, while supporting this demand, I would like to place some facts before the Government. So far as our State is concerned we have really progressed considerably well so far as agriculture and industry are concerned. The progress that we have shown in these two spheres of our activities are really very stupendous and really very great. We must also concede that in spite of our progress in these two fields, there is really very keen unemployment and under-employment in our State. It will not be possible for us, however much we may progress in agriculture side alone, to solve our problems and also to increase the per capita income of the common man. This problem, I think can be solved only by a rapid industrial development in our State. Our Government have also taken note of it and they are trying their level best for the past ten years to improve the industrial development in all sides. As a first step they have taken up the Techno Economic Survey as a result of which they have started some major industries in the State. Attention is also paid by the Government to the improvement of small-scale industries and also village industries. Mention has to be made about the major industry for which our Government have allotted nearly Rs. 22 crores, viz., the Neiveli Lignite Project. It is proposed that about 3½ million tons of lignite would be mined every year from this Project and about 1·4 million tons of good coal is the target of production per year. The Company that is now work-
10-30 a.m. ing in Coimbatore has set up the Pig Iron Plant and is manufacturing 15,000 tons of pig iron every year. It is also gratifying to note that the Government have granted two more licences to private persons to start two more Pig Iron Plants.

We also see that it is proposed to start a Steel Rolling Mill. By that industry, it is proposed to produce 20,000 tons of rolled materials. It is also suggested that our Government have decided to start a Rayon Factory and also a Surgical Instruments Factory in Madras and in that Factory about 2,000 persons will be employed and 2 million surgical instruments will be produced.

In the matter of development of small-scale industries, the Government have also paid proper attention and they have allowed considerable sums under the Second Plan. A sum of Rs. 8 crores is allotted for the small-scale industries; Rs. 3·2 crores is apportioned for Industrial Estates and about Rs. 60 lakhs for the development of handicrafts. For Co-operative Societies, nearly a sum of Rs. 11·8 lakhs has been allotted. We are also glad to hear that Fertilizer industries will also be started and one ammonium sulphate industry will also be started very shortly. This is a glorious picture that we have when we study the report that has been placed before us by the Government.

I would like to say that Coimbatore and Madras can at present form two dynamic centres which will open new avenues of industrial development in our State and will also form the basis of starting some more Chemical Industries. In this connection, it must be noted that the power that we now produce will not be sufficient



10th March 1961] [Sri T. T. Daniel]

to meet our requirements even during the Third Five-Year Plan period. It is also stated then even if the Neiveli Project is completed, we will not be able to get enough power-supply which may be necessary for our industries even for ten years. This possibility of increasing the electric power-supply in our State should be explored. I would suggest that we might form a Southern Zonal Council consisting of all the Southern States of Madras, Andhra and Kerala for the purpose of devising ways and means for increasing electric power-supply so that we may be able to progress industrially in a much more rapid manner than what we have hitherto been able to do. I would also suggest that we must explore the possibility of generating atomic energy in our State. For this purpose a thorough geological survey is necessary to find out the existence of the raw materials which will generate atomic energy. We are living in an atomic world and our industrial development will be rapid if we are able to discover some source by which we will be in a position to generate atomic energy in our State. It is said that thorium is available in some parts of our State. Thorium is one of the most important raw materials which is necessary for generating atomic energy. If a proper and intensive geological survey is conducted, we will be able to know what all minerals we have in our State. There is good scope for expansion of the Mineral Industry in our State. We can increase the possibilities of starting mica industries in several parts in our State. I believe that there is very good scope for starting a Mica Industry in the Kanyakumari district While Kanyakumari district was in the Travancore-Cochin State, the erstwhile Travancore-Cochin State conducted a geological survey and I understand the report of that survey reveals that Kanyakumari district contains plenty of very valuable minerals. I would suggest that our Government should again conduct a geological survey of the entire district for the purpose of finding out the mineral resources available in that district.

So far as the rubber industry is concerned, I would suggest that we should focus some more attention on the expansion of the rubber plantations. We are deficit so far as rubber is concerned and even for our internal use we need more and more rubber. It is commendable that our Government have allotted nearly 3,000 acres for rubber plantation which they intend to cultivate during the course of the Third Plan. I would suggest that it would be proper to make this programme a little bigger so that at least 15,000 acres of land may be brought under rubber cultivation during the course of the Third Plan. Rubber experts who have conducted a survey of the possibilities of rubber cultivation in our State have already announced that the Kanyakumari district soil is best suited for rubber cultivation. If extensive rubber cultivation is undertaken in that district, I think we can have a very good rubber factory in that district.

The Travancore Minerals Company produce moncsite. I would request the Government to explore the possibilities of starting a Titanium Factory at Manavalakurichi in the Cape district, and also to start a Paper Factory, a Spinning Mill and other

factories there. So far as that district is concerned, I may point out that both economically and industrially, it is very backward because for a century or so, it had been uncared for by several Rulers. The Government must come forward to undertake schemes for the rapid economic and industrial development of that district. It has to be industrially developed and that too quickly. I would request our Government to keep all these points in their view. In order that there may be greater industrial awakening in that district, there must be a railway link between Tirunelveli and Cape Comorin.

Although this extension of railway line is given only second priority, I would suggest that our Government should press before the Planning Commission for the inclusion of this extension of the railway line from Tirunelveli to Cape on the ground that it is quite necessary for the industrial development of that district. I hope that this will be included in the Third Five-Year Plan.

Without communications, it will not be possible to have any development on the industrial side in the modern world. So, if the Government are earnest, they must also develop the Colachel harbour. Much of the materials that are being exported from that district are now brought to Tirunelveli or Cochin in lorries. So much so the cost of expenditure in transport affects producers much whenever they offer these articles in the open market.

There is good scope also for the development of the palmyrah fibre industry in our State. Instead of exporting palmyrah fibre as such to foreign countries, we should try to make use of these articles by producing the necessary goods that we need for our own use. At present there seems to be some sort of dullness in the palmyrah fibre industry because of the competition that our producers have in the open foreign markets especially from Mexican and South African producers. The synthetic palmyrah fibre produced by them is produced at a cheaper rate than our palmyrah fibre and so much so it has begun to affect our exports also.

I would also suggest that the policy of the Government must be to have at least one spinning mill in each district and also they must increase the number of sugarcane factories.

Recently a Division has been opened to explore the possibility of generating electric power from the waters of the Pechipara Dam and we understand that it has been suggested that annually one lakh kilowatts of power could be produced from those waters. There fore, I would request the Government to start a hydro-electric station at Pechipara which will increase our electric supply.

So far as village industries are concerned, I would suggest that some more attention should be paid to the manufacture of Ambar charkas. At present we are not getting enough number of Ambar charkas. As it is, it is only the cottage industry which can help the trainees to get an average income of at least one rupee per day. So, I request the Hon. Minister to start centres in several parts of the State for the manufacture of Ambar charkas.



Sri V. SUBBIAH : கனம் தாற்காலீக தலைவர் அவர்களே, இந்த மான்யத்தின் பேரிலுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். குறிப்பாக, இந்த மான்யத்தின்மீது பேசுகையில் இந்த வெட்டுப்பிரேரணையை ஏன் ஆதரிக்கிறேன் என்றால் தொழில் துறை இன்று இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுவிட்டன. இந்நாட்டில் தொழில் முறைகள், அரசாங்கக் கொள்கைப்படி குவியல் முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. காந்தி அடிகள் அன்று சொன்னார்கள், இந்த நாட்டில் இயந்திரச் சக்தியால் ஏற்படக்கூடிய அல்லது இயங்கக்கூடிய உற்பத்திகள் எல்லாம் பரவல் முறையில் இருக்க வேண்டுமென்று அவர்கள் விரும்பினார்கள். ஆனால் இன்றைய பொருளாதார அமைப்பை எடுத்து சிந்தித்துப் பார்த்தால் கிராம, நகர பொருளாதார அமைப்பு பெரிய இயந்திரங்களால் ஏற்படக்கூடிய அமைப்புகளின் வித்தியாசம்தான். இன்றைக்கு, கிராமப் பொருளாதார அமைப்பையும், நகரப் பொருளாதார அமைப்பையும் எடுத்துப் பார்த்தால், மலைக்கும் மடுவிற்கும் உள்ள வித்தியாசம் இருக்கிறது. கிராமங்களிலிருந்து மக்கள் குவியலாக நகரப் புறங்களுக்கு போய்க்கொண்டிருப்பதற்குக் காரணம், இன்றைய அமைப்பு முறைதான். இதுபற்றிய விஷயத்தில் இன்று பொருளாதார நிபுணர்கள்கூட, யோசிக்கக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். நமது நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், நகரங்களுக்கு வேண்டுமானால் குடியேறட்டும் அதுதான் நல்லமுறை என்று அவர்கள் சொன்னார்கள். நன்கு ஊன்றிக் கவனித்துப் பார்ப்போமேயானால், இதனால் விவசாய உற்பத்தி எதிர்காலத்தில் மிகவும் குறைந்து போய் விடுமென்று சொல்ல முடியும். அந்த அளவில் இன்று கிராமங்கள் அழிக்கப்பட்டுவருகின்றன. தொழில் துறையில், அது பரவல் முறையில் இயங்காததினால்தான் கிராமங்கள் அழிந்துபோய்க்கொண்டிருக்கிறது. இன்றைய அமைப்புதான் விலைவாசி ஏற்றத்திற்கு காரணம். நகரங்களில்தான் பலகோடி ரூபாய்கள் செலவிட்டு தொழில்கள், இயந்திரத் தொழில்கள் அமைக்கப்படுகின்றனவே தவிர, நகர எல்லையை விட்டு நகர்ந்து எங்கேயாவது ஒரு தொழில் பேட்டை, இன்டஸ்ட்ரியல் எஸ்டேட் இருக்கிறதா என்று அமைச்சர் அவர்களால் சொல்ல முடியுமா? இன்றையதினம் கிராமங்களை எடுத்துப் பார்ப்போமேயானால் மழையில் நனைந்து தேக உழைப்பு கொண்டு வேலை செய்பவர்களுக்கு கிடைக்கக்கூடிய கூலி 12 அணா. ஆனால் குளிர்ந்த காற்றில் தேக உழைப்பு அவ்வளவாக இல்லாது எட்டு மணி நேரம் வேலை செய்யும் நகரப்புறத்திலுள்ள தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு 4 ரூபாய் கிடைக்கிறதென்றால் மக்கள் எதை விரும்புவார்கள் என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். அந்தளவு இன்றைய பொருளாதார அமைப்பு மாற்றியமைக்கப்பட்டுவிட்டது. ஆகவே அதன் பயனாக இந்த நாட்டின் ஜீவாதாரமாக இருக்கக்கூடிய 80 சதவிகிதம் கிராம மக்கள் கிராமங்களை விட்டு நகரங்களுக்கு குடியேறும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலை மாற்றியமைக்கப்படவேண்டும். அதற்காக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏதாவது வகை செய்யப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. விவசாயத்திற்கு அடுத்தபடியாக

நம் ராஜ்யத்தில் இன்று இருக்கக்கூடிய பெரிய தொழில் கைத்தறித் தொழில். பவர் லூம்ஸ் வரப்போகிறது. ஆகவே, கைத்தறித் தொழிலின் எதிர்காலம் எப்படியிருக்கும் என்பதைப்பற்றி நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இன்றே கைத்தறித் துணி ஏற்றுமதி யற்ற நிலையில் தேங்கிக் கிடக்கிறது. ஆகவே, பவர் லூம்ஸ் வந்து விட்டால், இதில் உற்பத்தியாகக்கூடிய ஜவுளி எவ்வளவு தேங்கும்? அவைகளை விலைக்கு வாங்கி வைக்க சர்க்காருக்கு சக்தியிருக்கிறதா? அதற்காக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள பணம் எவ்வளவு? இதை அரசாங்கம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்தளவில்தான் திட்டங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக எங்கள் பகுதியில் இரண்டு சிமெண்ட் மில்ஸ் ஓடுகிறது. தாழயுத்து, மதராஸ் சிமெண்ட்ஸ். பின், டால்மியா சிமெண்ட்ஸ் இருக்கிறது, மதுக்கரையிலும் ஒன்று இருக்கிறது. இவைகளில் இன்று மூன்று ஷிப்ட்கள் ஓடுகின்றன. ஆக, நான்கு மில்ஸ் இருந்தும்கூட, ஆயிரக்கணக்கான டன்கள் உற்பத்தி செய்யும் காலத்திலும்கூட நிலைமை எப்படியிருக்கிறது? நம் ராஜ்யத்தில் சிமெண்ட் இல்லாத காலத்தில் வெளியிலிருந்து இறக்குமதி செய்யக்கூடிய காலத்தில் ஒரு மூட்டை 10 அணாவிற்கு கிடைத்துக் கொண்டிருந்தது. ஆனால் இன்று இங்கு நான்கு மில்ஸ் ஓடியும்கூட, எவ்வளவோ உற்பத்தியாகியும்கூட, ஒரு மூட்டை 10 ரூபாய்க்குக்கூட கிடைப்பதில்லை என்ற நிலைதான் இருக்கிறது. அதோடு தரத்திலும் வெளிநாட்டு சிமெண்டின் தரத்தைவிட குறைந்த தரத்தில்தான் இருக்கிறது.

THE HON. SRI R. VENKATARAMAN: கனம் அங்கத்தினர் அவர்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பி.பி. ஸ்டான்டேர்டைவிட நமது சிமெண்ட் நல்ல, உயர்ந்த ரகம்.

SRI V. SUBBIAH: அமைச்சர் அவர்கள் நல்ல திறமையுள்ளவர்கள், நல்ல அனுபவமும் உள்ளவர்கள். ஆகவே அவர்கள் சொல்வதை ஏற்றுக்கொள்கிறேன். இருப்பினும் உற்பத்தி பெருகியும்கூட . . . . . .

THE HON. SRI R. VENKATARAMAN: தரம் நன்றாக இல்லை என்று சொன்ன ஒன்றை மட்டும்தான் எதிர்த்துச் சொன்னேன்.

SRI V. SUBBIAH: அதை நாம் எல்லாத் துறைகளிலும் பார்க்கிறோம். விவசாயத் துறையிலே இன்றைக்கு யந்திரத்தை வைத்து, யந்திர முறையில் மாற்றி அமைக்கலாம் என்று சொன்னால் அதை வரவேற்கலாம். ஆனால் அது அவ்வளவு பொருத்தமாக இருக்க முடியாது. இந்த நாட்டிலே இன்றைய தினம் நடுத்தர விவசாயிகள்தான் ஜாஸ்தியாக இருக்கிறார்கள். இருக்கக்கூடிய பணக்காரர்களெல்லாம் நகரங்களுக்குச் சென்று வேறு தொழில்களில் இறங்கிவிட்டார்கள். விவசாயக் கூலிகளும் நகரங்களுக்கு வந்துவிட்டார்கள். மிச்சம் இருக்கக்கூடியவர்கள் 10 எக்கர், 5 ஏக்கர் வைத்திருக்கக்கூடிய நடுத்தர விவசாயிகள் தான். அவர்கள்தான் இன்றையதினம் கிராமங்களில் வாழ்கிறார்கள். அவர்கள் எப்படி யந்திரத்தை உபயோகிக்க முடியும்? இந்தப் பிரச்னைகளெல்லாம் இருக்கின்றன. ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸிலே எத்தனையோ தொழில்கள், மாட்ச் பாக்டரி போன்றவைகள் கிராமாந்திரங்களை நம்பி கிராம ஜனங்களுக்கு தொழில் வசதி கொடுக்கக்கூடிய தொழில்கள் விவசாயிகளை அழிக்கக்கூடிய அளவில் அமைந்திருக்கின்றன என்று சொல்லாமல் இருக்க முடியவில்லை. கூட்டுறவு முறையில் தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதே அந்தத் தொழில்களின் நிர்வாகத்தைப் பற்றி எடுத்துக்கொண்டால் அதிலே பல குறைகள் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். குறிப்பாக தமிழ்நாடு சிறபக்கலை இண்டஸ்ட்ரீஸ் என்று வைத்திருக்கிறார்கள். அதனுடைய நிலைமையைப் பற்றிக் கேள்விப்படும்போது அது இயங்கவே இல்லை என்று சொல்லுகிறார்கள். அதில் யாரையோ ஒருவரை—தொழில் தெரியாதவரை—நியமித்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். அதனால்தான் அது நல்ல முறையில் இயங்கவில்லை என்று சொல்லுகிறார்கள். தொழில் துறைக்கு நிதி கார்ப்பொரேஷனிலிருந்து கொடுப்பதிலும் அரசாங்கம் கொடுப்பதிலும் நல்ல முறையில் குறைந்த வட்டியில், செயல்படும் முறையில், போதிய அளவு கொடுக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. தனியார் துறையில் இருந்தாலும், அல்லது ஏனைய துறையில் இருந்தாலும் தொழில்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்து கொடுக்கவேண்டும். பலர் கையில் இருந்த அவ்வளவு பணத்தையும் தொழிலில் முடக்கிவிட்டு வெளிநாட்டிலிருந்து மூலப்பொருள் வரவில்லை, அதனால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்ற நிலை இருக்கிறது. இம்போர்ட் செய்துதான் அவர்களுக்கு சாமான்கள் வரவேண்டுமென்றால் அதற்கு வேண்டிய அவ்வளவு சலுகைகளையும் தாராளமாக சர்க்கார் கொடுக்கவேண்டும். அது மட்டுமல்லாமல் ஒரு தொழிலை எந்த இடத்தில் ஸ்தாபித்தால் நல்ல முறையில் செயல்படும் என்று யோசித்துச் செய்யவேண்டும். விருதுநகரில் அமைக்கப்பட்ட தொழில் பேட்டையில் இதுவரையில் யாரும் அதை எடுக்காமல் இருந்தார்கள்—ஆனால் இப்போது எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த மாதிரி இல்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.



எங்கள் ஜில்லாவிலே—திருநெல்வேலியிலே—பல ஆண்டுகளுக்கு முன்னர், வெள்ளையர்கள் இருந்த காலத்திலேயே பாபநாசம் என்ற இடத்தில் ஒரு பேப்பர் மில் ஆரம்பிக்கவேண்டும் என்று ஒரு திட்டம் இருந்தது. அதெல்லாம் இப்போது கைவிடப்பட்டு விட்டது. நமது நாட்டிலே பெங்கால் கெமிகல் வொர்க்ஸ், அடையார் கெமிகல் வொர்க்ஸ் போன்ற ஸ்தாபனங்கள் செய்யக்கூடிய உயர்ந்த ரக மருந்துகளை, 5 ரூபாய்க்கு வாங்கக்கூடிய மருந்தை 5 காசுக்கு வாங்க முடியும். பொதிகை மலையில் கிடைக்கும் மூலிகையைக்கொண்டு மருந்துகளைத் தயாரிக்கும் ஸ்தாபனம் ஒன்று குத்தாலத்திலோ அல்லது வேறு இடத்திலோ இருக்கவேண்டும். யந்திரத்தினாலும் சரி, அல்லது ஏனைய மனித சக்தியினாலானாலும் சரி இந்தத் தொழிலை எங்கள் ஜில்லாவில் அமைக்கவேண்டுமென்று அரசாங்கத்தையும், அமைச்சரையும் கேட்டுக்கொண்டு, மானியத்தின்மீது கொண்டுவரப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

SRI A. GOVINDASAMI: கனம் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தொழில் சம்பந்தமாகக் கொடுத்திருக்கின்ற

[Sri A. Govindasami] [10th March 1961

விளக்க உரையைத் துருவிப் படிக்கிற நேரத்தில் என்னுடைய மாவட்டத்திலே இருக்கக்கூடிய நெய்வேலியைப் பற்றித்தான் முதல் முதலாக அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். நெய்வேலித் திட்டம் சர்க்கார் திட்டம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. சர்க்கார் திட்டம் என்று ஏன் அவர்கள் மூசகமாகச் சொல்லவேண்டும், மத்திய அரசாங்கத்தின் திட்டம் என்று ஏன் வெளிப்படையாகச் சொல்லவில்லை என்று அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன். இது நம்முடைய ராஜ்ய திட்டமாக மாற வேண்டுமென்று கடந்த பல வருஷங்களாகவே இங்கே நான் குறிப்பிட்டு வந்திருக்கிறேன். ஒவ்வொரு ஆண்டும் தொழில் மான்யக் கோரிக்கை வரும்போது எடுத்துக் கூறியிருக்கிறேன். அதற்காக 86 கோடி ரூபாய் செலவு செய்யப்போகிறார்கள். அந்த 86 கோடி ரூபாயை மத்திய அரசாங்கம் செலவு செய்து 75 சதவிகிதம் பங்கு மத்திய அரசாங்கத்திற்கும் 25 சதவிகிதம்தான் சென்னை அரசாங்கத்திற்கும் உரிமை இருப்பதை மாற்றி முழுக்க முழுக்க பலன் அனுபவிக்கும் பொறுப்பு நம் ராஜ்ய சர்க்காருக்கு வரவேண்டும். இந்த நிலைமையை மாற்றி அமைக்க மான்யமாகவோ அல்லது நீண்ட காலத்தில் திருப்பிக் கொடுக்கக்கூடிய கடனாகவோ பெற்று இந்தத் திட்டத்தை ராஜ்ய அரசாங்கத்திற்குப் பெறுவாரானால் நான் அமைச்சரைப் பாராட்ட முடியும். அந்த நிலைமை இல்லாது மத்திய அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுவிட்ட காரணத்தினால் தொழில் அமைச்சரோ, முதலமைச்சரோ அல்லது மற்ற அமைச்சர்களோ நெய்வேலி விஷயத்தில் சொல்லுகிறப் பிரகாரம் நடக்கக்கூடிய முறையில் எதுவும் இல்லாதிருக்கிறது. நெய்வேலி சம்பந்தப்பட்டமட்டில் இவர்களுக்கு அதிகாரம் எதும் இல்லை. அங்கு இருக்கக்கூடிய அதிகாரிகள் நம்முடைய மந்திரிகளை விடப் பெரிய அதிகாரிகளாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள், நம்முடைய ராஜ்யத்திற்கு உரிமை இல்லாத காரணத்தினால் மின்சார நிலையம், உர உற்பத்தித் தொழிற்சாலை, களிமண் பொருள்கள் உற்பத்தித் தொழிற்சாலை எல்லாம் நெய்வேலித் திட்டம் நிறைவேறும்போது வர இருக்கிறது. இது விஷயத்திலே, மின்சாரத் திட்டமும் மற்ற திட்டங்களும் நல்ல முறையில் வெற்றி பெறும் போது அண்டை ராஜ்யங்களுக்கும் உதவிகரமாக இருக்கும் என்று நிதி அமைச்சர் அவர்களுடைய உரையில் கூறப்பட்டிருக்கிறது. நான் நமது தொழில் அமைச்சரைக் கேட்டுக்கொள்ளப்போவதெல்லாம், ஏற்கெனவேயே நமக்கு உரப் பற்றாக்குறை இருக்கிறது; நம்முடைய உர உற்பத்தித் தொழிற்சாலை ஏற்படுகிற நேரத்தில் நம்முடைய ராஜ்யத்தின் தேவையைப் பூர்த்தி செய்த பிறகுதான் அண்டை ராஜ்யங்களுக்கு அனுப்பவேண்டும். அதற்கான ஒரு உத்திரவாதத்தை அமைச்சர் அவர்கள் கொடுக்கவேண்டும்.

அடுத்து நெய்வேலி டவுன்ஷிப் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. டவுன்ஷிப் அமைக்கின்ற நேரத்தில் அங்குள்ள—ஏற்கெனவேயே இருந்துவருகிற—ரைஸ் மில் போன்றவைகள் இந்த டவுன்ஷிப்பிலே இடம் பெறவேண்டும். இப்போது இவைகள் அப்புறப்படுத்தப்படும் நிலைமை இருக்கிறது. பல கடைகள் அப்புறப்படுத்தப்படும் நிலைமை வரும்போது, அவர்களுக்கு டவுன்ஷிப்பிலே வைத்துக் கொள்ள உரிமை வாங்கித் தரவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



10th March 1961] [Sri A. Govindasami]

சேலத்துக்கு இரும்பு உருக்குத் தொழிற்சாலை வரும் என்று மக்கள் நம்பக்கூடிய அளவுக்கு அமைச்சர்களினாலே பல முறை உறுதி அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையைப் பார்க்கும்போது, ஏற்கெனவேயே லாபரட்டரி டெஸ்ட் எல்லாம் முடிந்து கிழக்கு ஜெர்மனியிலும் ஜாம்ஷெட்பூரிலும் பரீட்சை செய்து நெய்வேலி நிலக்கரியையும் சேலத்து இரும்புக் கனியையும் வைத்து இரும்புத் தொழிற்சாலை அமைத்துவிடலாம் என்று நிபுணர்களெல்லாம் கூறியிருந்தும்கூட மீண்டும் காலம் கடத்துகின்ற நிலையில் நெய்வேலியிலிருந்து 2,000 டன் நிலக்கரி எடுத்துப் பரீட்சை செய்யப்போகிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதைப் பார்க்கும்போது இந்தத் திட்டம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது இடம் பெறுமா என்ற ஐயப்பாடு இருக்கிறது. நிச்சயமாக இந்தத் திட்டம் வரும் என்று அமைச்சர் அவர்கள் உத்திரவாதம் அளிக்கிறேன் என்று கூறியிருந்தால் அவரைப் பாராட்டி இருக்கலாம். அப்படி ஒரு உத்திரவாதம் இல்லாத நிலை இருப்பதைக் கண்டு வருந்தாமல் இருக்க முடியவில்லை.

மேலும் காவிரி வட்டத்தில் எண்ணெய் கிடைக்கக்கூடும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள்; இருக்கிறது என்று முன்னேற்றக் கழகத்தினர் சொல்லுகிறார்கள் என்ற வேறுபாட்டைத் தெரிவித்தார்கள். அமைச்சர் அவர்களுடைய உரையிலேயும் மற்ற உரைகளிலும் குறிப்பிட்டிருந்தபோதிலும், இரண்டு ஆண்டுகளாக நிதி அமைச்சர் உரையிலேயும் காவிரி வட்டத்திலுள்ள எண்ணெய் நிச்சயமாக எடுக்கப்படும் என்று சொல்லியும், அதிலும் காலம் கடத்திக்கொண்டு வருகிறார்கள். ஸீஸ்மிக் பார்ட்டி இப்போது வேலை செய்வதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்கு வேண்டிய மெஷினரி வராத காணத்தினால் காலதாமதம் ஆகிறது என்று அமைச்சர் அவர்கள் மறுக்க முடியும். ஏன் வர வேண்டிய முயற்சியில் நமது அரசாங்கம் ஈடுபடவில்லை என்று கேட்கிறேன். இன்னும் கிடைக்கக்கூடும் என்று சந்தேகமாகத்தான் சொல்லுகிறார்களே தவிர, நம்முடைய நிபுணர்களும் ரஷ்ய நிபுணர்களும் எல்லோரும் கூறிவிட்டபோதிலும் அமைச்சரே சந்தேகமாகச் சொல்லும் காரணத்தினால் திட்டம் நிறைவேறுமா என்ற 11 a.m.
சந்தேகம் இருக்கிறது. மேலும் கரும்பு ஆலைகள் அதிகமாகத் தேவைப்படுகிறது என்பதை நான் இந்த மன்றத்திலே பலமுறை வற்புறுத்திக் கூறிவந்திருக்கிறேன். நம்முடைய அரசாங்கமும் 1 லட்சம் டன் உற்பத்தியை 2 லட்சம் டன்னாக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே உயர்த்த வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். ஆனால் வடக்கு வாழ்கிறது, தெற்குத் தேய்கிறது என்று சொன்னால் மட்டும் அவர்களுக்குக் கோபம் வருகிறது. இப்போது நான் சொல்லப் போவதைக் கேட்டு அமைச்சர் அவர்களுக்கு நிச்சயமாகக் கோபம் வராது என்று கருதுகிறேன். நான் சொல்லப்போகிற விஷயம் அப்படிப்பட்டது. உத்திரப் பிரதேசத்தில் 69 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. பீகாரில் 22 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. ஆனால் நம்முடைய காமராஜ் சர்க்காரிலோ 5 சர்க்கரை ஆலைகள்தான் இப்போது உள்ளன. மேலும் 4

[Sri A. Govindasami] [10th March 1961

சர்க்கரை ஆலைகளுக்கு லைசன்ஸ் வழங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே மேலும் 5 சர்க்கரை ஆலைகள் கூட்டுறவு முறையிலே வருவதற்கு இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே அப்படிப் பார்த்தாலும் இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள் மொத்தம் 14 சர்க்கரை ஆலைகள் நம்முடைய ராஜ்யத்தில் ஏற்பட இருக்கிறது. இதற்கு அமைச்சர் அவர்கள் என்ன பதில் சொல்ல முடியும்? உத்திரப் பிரதேசம் போன்ற மாகாணங்களிலே உள்ள கரும்பு மிகவும் மட்டமானது, ருசி இல்லாதது, சத்து இல்லாதது என்று கனம் உணவு அமைச்சர் அவர்களே கரூரிலே ஒரு மகா நாட்டிலே குறிப்பிட்டார்கள். அந்த மகாநாட்டிலே நானும் கலந்துகொண்டேன். ஆனால் இப்படி சத்து இல்லாத, ருசி இல்லாத கரும்பிலே தயாரிக்கப்படுகின்ற சர்க்கரைக்கும் ஒரே விலைதான். நம்முடைய நாட்டிலே தயாரிக்கப்படுகின்ற ருசியுள்ள, சத்துள்ள கரும்பிலே தயாரிக்கப்படுகின்ற சர்க்கரைக்கும் ஒரே விலைதான். இந்த விலை நிர்ணயிக்கக்கூடிய அதிகாரம் மத்திய அரசாங்கத்தினிடத்திலே இருக்கிறது. நம்முடைய மாநில அரசுக்கு இல்லாததுதான் குறை.

மேலும், மணிலா தமிழ் நாட்டிலே பல ஜில்லாக்களிலே அதிகமாகப் பயிரிடப்பட்டு வருகிறது. அதிலும் குறிப்பாக எங்களுடைய மாவட்டம் மணிலா ஜில்லா என்றே அழைக்கப்படும். அந்த இடத்திலே மணிலா எண்ணெயிலிருந்து வனஸ்பதி செய்வதற்காக 10 லட்சம் ரூபாய் மானியமாக கொடுக்கப்பட்டு, தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டது. அதி சரியாக நடைபெறாததால், அத்தொகையைப் பெறுவதற்காக ஏலம் போடுவதிலே கவனம் செலுத்தப்படுகிறதே தவிர, அதை மேலும் இயங்குவதற்கான எந்த வழிவகையும் செய்யவில்லை. சோப் ஆலையாவது வருமென்று போன ஆண்டு எண்ணினோம். அது இப்போது குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது. சர்க்கார் செய்யத் தயங்கிய தொழிலை, தனியார் துணிந்து செய்ய முன்வந்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக சர்தார் வேதரத்னம் அவர்கள் கூறிப்பிட்டது போல், விதவைகள் செய்யக்கூடிய தொழிலைச் செய்வதற்கு நமது அரசாங்கம் இப்போது முன்னுக்கு வந்திருக்கிறது. அப்பளம் தனியார் செய்யவேண்டிய தொழில். விதவைகள் செய்ய வேண்டிய தொழில். அதைச் சர்க்கார் எடுத்துக்கொண்டு நடத்துகிறோம் என்று வேண்டுமானால் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். அதேபோல் தீப்பெட்டித் தொழிற்சாலையை இராமநாதபுரத்தில் சிவகாசியில் தனிப்பட்டவர்கள் நல்லமுறையில் நடத்திக்கொண்டு வருகிறார்கள். அதை ஏன் அரசாங்கம் எடுத்துக்கொண்டு நடத்த வேண்டும்? அதேபோல் செருப்புத் தொழிலையும் நாங்கள் ஏற்றுக்கொண்டு நடத்துகிறோம் என்றால், அதை நாம் பெருமையாக ஏற்றுக்கொள்ள முடியாது.

(Mr. Speaker in the Chair.)

பஞ்சாப் மாகாணத்தை குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன். அங்கு நானும் சென்று பார்த்திருக்கிறேன். கனம் அமைச்சர் அவர்களும் சென்று பார்த்திருப்பார்கள். அங்கு லூதியானாவில்



10th March 1961] [Sri A. Govindasami]

ஏற்பட்டுள்ள தொழில் வளர்ச்சியைப் பார்த்தால், இங்கு எதை கனம் அமைச்சர் அவர்கள் காட்டுவார்கள் என்று தெரியவில்லை. சும்மா இங்கு வால்டாக்ஸ் ரோடை மட்டும் காட்டி, தொழில் அபிவிருத்தி அடைந்திருக்கிறோம் என்று சொல்ல முடியாது. அந்த நிலைமையில்தான் நம்முடைய தொழில் வளர்ச்சி வளமடைந்திருக்கிறது. நம்முடைய இராஜ்யத்திலே தொழில் வளர்ச்சிக்கு என்னென்ன முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன? வெளிநாடுகளுக்குச் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு வந்த பெருமையும், அனுபவமும் நிறைந்த கனம் தொழில் அமைச்சர் அவர்கள் இந்த நாட்டிலே தொழில் வளத்தைப் பெருக்குவதற்காக பெருமைபடக்கூடிய என்னென்ன தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்ற புள்ளிவிவரங்களை இந்தச் சபைக்குக் கொடுத்தாக வேண்டும்.

அகதிகளுக்கு வடநாட்டிலே நிறைய திட்டங்கள் தீட்டி அவர்களைப் பல நல்ல தொழில்களில் ஈடுபடுத்தி, கைநிறையப் பணம் கொழிக்கச் செய்துவிட்டார்கள். ஆனால் அதே சமயத்தில் இலங்கையிலிருந்து திரும்புகின்ற பிற்பட்ட மக்களுக்கு பிற்பட்ட ஜில்லாவாகிய இராமநாதபுரத்தில் என்னென்ன வசதிகள் செய்யப்பட்டன என்றால், ஒன்றும் கிடையாது. இன்றைய தினம் கதருக்கு காட்டக்கூடிய அளவுக்கு சலுகை நம்முடைய அரசாங்கத்தினால் கைத்தறிக்குக் காட்டப்படவில்லை. அப்படி கதருக்கு சலுகைகள் காட்டப்பட்டும், இன்றையதினம் அத்திட்டம் வெற்றி பெறக்கூடிய முறையிலே நடைபெறவில்லை என்பதைப் பார்க்கின்றோம். ஆனால் கதரைப் போட்டுக்கொண்டு, கைத்தறிக்கு ரொம்பவும் பாடுபடுவதுபோல் பேசப்பட்டு மட்டும் வருகிறது. கைத்தறியைப் பொறுத்தமட்டில் அதற்கு மாற்றாந்தாய் சலுகையே இந்த அரசாங்கத்தினால் கொடுக்கப்பட்டு வருகிறது. ஏதோ வெள்ளைக்காரன் காலத்திலே அவர்களை விரட்டுவதற்கு ஒரு அடையாளச் சின்னமாக வேண்டுமானால் கதர் இருந்திருக்கலாம். ஆனால் இன்றைக்கு அதற்கு அதிக அக்கறை காட்டப்படுவதைப் பார்க்கின்றோம். ஆனால் கைத்தறி இன்றைக்கு வெற்றிகரமாக நடைபெற முடியாமல், பல கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டு வருகிறது. கதருக்கு மட்டும் விசேஷ ரிபேட்டுகள் எல்லாம் வழங்கப்பட்டு இருக்கிறது. இந்த நேரத்திலும் கொடுக்கப்பட்டு வருகிறது.

இன்றையதினம் தென்னாடும் வாழ்கிறது என்பதற்கு ஆதாரமாக கோயம்புத்தூரிலே இருக்கக்கூடிய மில்களை மட்டும் காண்பித்து தப்பித்துக் கொள்ள முடியாது. அதிலும் வட நாடு தான் வாழ்கிறது. தென்னாடு தேய்ந்துகொண்டுதான் இருக்கிறது. அதையும் ஆதாரத்துடன் குறிப்பிட முடியுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அகமதாபாத்தில் 20 லட்சம் கதிர்கள் இருக்கின்றன, 41 ஆயிரம் தறிகள் இருக்கின்றன. ஆனால் சென்னையிலோ 26 லட்சம் கதிர்கள்தான் இருக்கின்றன. 8 ஆயிரம் தறிகள்தான் இருக்கின்றன. ஏன் இங்கு இந்தத் தறிகள் அதாவது லூம்கள்

இவ்வளவு குறைவாக இருக்கவேண்டும்? அதேபோல் மத்தியப் பிரதேசத்திலே 5 லட்சம் கதிர்கள் இருக்கின்றன. 12 ஆயிரம் தறிகள் இருக்கின்றன.

THE HON. SRI R. VENKATARAMAN: இது நல்ல உபயோகமான விவாதம். ஆகவே நம்முடைய இராஜ்யத்திலே அதிகமான மில்கள், அதாவது விசைத்தறிகள் வைக்கலாம் என்று சொல்கிறீர்களா, அல்லது வைக்கக்கூடாது என்று சொல்கிறீர்களா என்பதைத் திட்டவட்டமாகச் சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன். ஆட்டோமாடிக் மில்கள் வைப்பது அவ்வளவு நல்லதல்ல என்று கருதி நமது இராஜ்ய சர்க்கார் அதை ஓரளவு குறைத்து வைத்துக்கொண்டிருக்கிறது. இது நமது இராஜ்ய சர்க்காரின் கொள்கையாக முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் கனம் அங்கத்தினர் எதை ஆதரிக்கிறீர்கள் என்பதைத் தெளிவாக அறிவித்தால் மிகவும் உபயோகமாக இருக்கும்.

SRI A. GOVINDASAMI: அமைச்சர் அவர்கள் இப்படிக் கூறி என்னை இந்தப் பிரச்னையில் எப்படிச் சிக்க வைக்கலாம் என்று பார்க்கிறீர்கள். (சிரிப்பு) ஆனால் நாங்கள் இங்கே சொல்ல விரும்புவதெல்லாம் நம் நாட்டுக் கைத்தொழிலாகிய கைத்தறிக்குத்தான் நாம் மிகவும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்பதுதான். இதைத்தான் திட்டவட்டமாகக்கூற விரும்புகிறேன். அதிலும்கூட வடக்கு வாழ்கிறது என்பதற்காகத்தான் இந்தப் புள்ளிவிவரங்களைக் குறிப்பிட்டேன்.

THE HON. SRI R. VENKATARAMAN: சர்க்கார் செய்துள்ள கொள்கையின் அடிப்படையில்தான் நாம் கடந்த ஐந்தாண்டுகளாக மில்கள் எடுத்துக் கொள்ளவில்லை.

SRI A. GOVINDASAMI: இப்போது சர்க்காருடைய திட்டம் அதுவாக இருந்தால் நான் ஒன்றும் ஆட்சேபிக்கவில்லை. அதேபோல் ஆலைகளுக்கு வேண்டிய ஸ்பேர் பார்ட்ஸ் இங்கே கிடைப்பதில்லை. பஞ்சாப், வெஸ்ட் பெங்கால் போன்ற இடங்களில் அதிகமாகக் கிடைக்கிறது. ஆனால் இங்கு கூடுதலான விலைக் கொடுத்து வாங்குவதாகச் சொல்லப்படுகிறது. அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் கனம் தொழில் அமைச்சர் அவர்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். என்னுடைய தொகுதியானதாலே இதைக் குறிப்பாகக் கேட்க விரும்புகிறேன். விழுப்புரத்திலே வனஸ்பதி தொழிற்சாலை ஏற்படுத்தப்படும் என்று உத்திரவாதம் அளிக்கப்பட்டதே, அது என்னவாயிற்று? அதைத் தவிர்த்து, அங்கு சோப் ஆலையாவது வைக்கப்படும் என்ற நம்பிக்கை சொல்லப்பட்டதே, அது என்னவாயிற்று? எதற்காக இந்த உத்திரவாதங்கள் கொடுக்கப்பட வேண்டும்? ஆனால் இப்போது எத்தகைய முடிவாகி இருக்கிறது? அது இப்போது மூடப்பட்டு இருக்கிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மட்டும் அங்கிருந்து கொண்டு, அதைக் காவல் புரிந்து வருகின்றனர். அதற்குத்தான் அதிகாரிகள் பயன்படுத்தப்பட்டு இருக்கிறார்களே தவிர அதைத் திறப்பதற்கான வழிவகைகள் எதுவும் செய்யப்படவில்லை. இதைச் சர்க்கார் எடுத்து நடத்த முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



நெய்வேலியிலே தெர்மல் ஸ்டேஷன் ஏற்படுத்துகின்ற நேரத்திலே நாம் அதைப் பயன்படுத்திக்கொண்டு, தொழில் துறையிலே முன்னேற்றம் அடைவதற்கு அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இன்றையதினம் நம்முடைய இராஜ்யத்தில் 10,000 கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் அது எப்படி வழங்கப்பட்டிருக்கிறது என்று பார்க்கும்போது விவசாயத்திற்கு 19 சதவிகிதமும், தெருக்களுக்கு விளக்குகள் போடுவது போன்றவற்றிற்கு 81 சதவிகிதமும் விநியோகிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே நாம் தொழில் துறையிலே அதிகமான மின்சாரத்தை உபயோகப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். அதே நேரத்திலே இங்கே கிடைக்கக்கூடிய மணிலாக் கொட்டைகளையும் பயன்படுத்திக்கொள்ளும் வகையிலே வனஸ்பதி ஆலையும் ஏற்படுத்த வேண்டும். அதேபோல், தென் ஜில்லாக்களில் குறிப்பாக, தென் ஆற்காடு மாவட்டத்திலும், திருச்சி போன்ற பகுதிகளிலும் நல்ல முந்திரிக் கொட்டைகள் பயிராக்கப்படுகின்றன. இப்போது அரசாங்கமும் முந்திரிக் கொட்டைகள் அதிகமாக உற்பத்திச் செய்யவேண்டுமென்று, புறம்போக்குப் பகுதிகளிலும், காட்டுப் பகுதிகளிலும் இந்தச் செடிகளை வைத்துப் பயிராக்கி வருகின்றனர். அந்த முந்திரிக் கொட்டைகளிலிருந்து பிளாஸ்டிக் செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது. ஆகவே அதற்கான தொழிற்சாலைகளையும் இந்த இடங்களில் ஏற்படுத்த இந்த அரசாங்கம் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

கடைசியாக, என்னுடைய பிளாக்கான போலீஞர் பிளாக்கிலே இண்டஸ்ட்ரீஸ் எக்ஸ்டென்ஷன் ஆபீசர் இரண்டு வருஷங்களாக நியமிக்கப்படாமல், அந்தப் பதவி காலியாக இருந்து வருகிறது. இப்படி காலியாக விடப்பட்டிருந்தால், எப்படி அங்கு நல்ல முறையில் வேலைகள் நடைபெறும்? இரண்டு வருஷமாகியும் அப்பதவிக்கு யாரையும் போடாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. இதைக் கவனித்து அங்கு ஒருவர் நியமிக்கப்பட்டால்தான், தொழில் அபிவிருத்திக்கு வேண்டிய காரியங்கள் செய்ய முடியுமென்று கூறிக்கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* SRI K. S. ARDHANAREESWARA GOUNDER: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய மான்யத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். குறிப்பாக இதுவரையிலும் சேலம் ஜில்லா பிற்போக்காக இருக்கிறது என்று சொல்லிக் கொண்டிருந்த ஜில்லா. அங்கு கன ரகத் தொழில்களான அலுமினியம் பாக்டரி, பேப்பர் பாக்டரி, இன்னும் இரும்புத் தொழிற்சாலைகள் ஆகியவைகள் ஏற்படுத்தப் போகிறோம். (குறுக்கீடு). நம்முடைய எதிர்க் கட்சியில் இருக்கக்கூடிய திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் எங்கு ஆரம்பிக்கப் போகிறீர்கள் என்று கேட்கிறார்கள் ஆனால் அவர் சேலம் ஜில்லாவிலேயே இருந்துகொண்டு எங்கு ஆரம்பிக்கப் போகிறீர்கள் என்று அவர்களுக்குத் தெரியவில்லை என்றால், அவர் மிகவும் பிற்போக்காக இருக்கிறார் என்றுதான் சொல்லவேண்டும்.

[Sri K. S. Ardhanareeswara Gounder] [10th March 1961]

ஏனென்றால், மேட்டூருக்கு வந்து பார்த்திருந்தால் எந்த இடத்தில் அலுமினியம் பாக்டரி ஆரம்பிக்கப்போகிறார்கள் என்பது தெரிய வரும். அதேமாதிரி கஞ்சமலைக்குச் சென்று பார்த்திருந்தால் இரும்புத் தொழிற்சாலை ஆரம்பிப்பது நமக்கு விளங்கும். அதை விட்டுவிட்டு பேச்சு அளவிலே பேசிக்கொண்டிருப்பது அவ்வளவு சரியல்ல என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக சேலம் ஜில்லாவைப் பொறுத்தவரைக்கும் அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மேட்டூருக்குப் பக்கத்தில் பக்கநாடு, ஆடையூர் என்ற கிராமங்களில் யுரேனியம் இருப்பதாக மத்திய சர்க்கார் ஆராய்ச்சியாளர்களால் இப்பொழுது பரிசோதனை நடந்துகொண்டிருக்கிறது. உடனடியாக யுரேனியத்தைத் தோண்டி எடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்ளுவார்கள் என்று நினைக்கிறேன். நம்முடைய எதிர்க்கட்சி அங்கத்தினர்கள், குறிப்பாக தி.மு.க அங்கத்தினர்கள் இனிமேலாவது சேலத்தில் யுரேனியம் இருக்கிறது என்பதை உணர்ந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, சேலம் ஜில்லாவிலே சங்ககிரி தாலுகாவிலே ஒரு சிமெண்டு தொழிற்சாலை ஏற்படுவதற்கு வேண்டிய மூலப் பொருள்கள் இருக்கின்றன. அதை உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சர்க்காருக்கு வலியுறுத்துகிறேன்.

அடுத்தபடியாக, நமது மாகாணத்தில் பூதத்துவ ஆராய்ச்சியாளர்கள் மிகவும் குறைவாக இருக்கிறார்கள் என்பதுபற்றி நாம் எல்லோரும் வருத்தப்பட வேண்டிய விஷயம். உடனடியாக நம்முடைய மாகாணத்திலிருந்து நல்ல நிபுணர்களைத் தேர்ந்தெடுத்து வெளிநாடுகளுக்கு அனுப்பி, நல்ல சிறந்த அறிவாளிகளைத் தேர்ந்தெடுத்து பூதத்துவ ஆராய்ச்சியாளர்களை அதிகப்படுத்தினால்தான் நம்முடைய தொழில் வளம் அதிகமாகப் பெருகும். ஆகவே, விரைவிலே பூதத்துவ ஆராய்ச்சியாளர்களை வெளி நாடுகளுக்கு அனுப்பி வைத்து, அவர்களுக்குப் பயிற்சி கொடுத்துவரவேண்டும் என்று அரசாங்கத்தை வலியுறுத்த ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, சிறு கைத்தொழில்கள் முன்னேறியிருக்கிறதா என்றால், இதற்கு முன்பு இந்தச் சபையிலே கூறியிருக்கிறேன், அதற்கு வேண்டிய மூலப் பொருள்கள் நல்ல முறையில் கிடைக்காத காரணத்தினால்தான் சிறு கைத்தொழில்கள் விரைவிலே முன்னேறவில்லை என்று. இண்டஸ்டிரியல் எஸ்டேட்டில் உள்ளவர்களுக்கு மூலப்பொருள்கள் எந்தவிதமான தடையுமில்லாமல் சர்க்கார் கிடைக்கச் செய்தால், நம்முடைய மாகாணத்தில் அதிவிரைவிலே சிறு கைத்தொழில்கள் முன்னேறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கள் சொன்னார்கள், 'வடநாடு வளர்கிறது, தென்னாடு தேய்கிறது' என்று. ஒன்றை அவர்கள் உணரவேண்டும். இப்பொழுது சென்னையில் இருக்கக்கூடிய இண்டஸ்டிரியல் எஸ்டேட்டில் வெளிமாகாணங்களிலிருந்து எவ்வளவு பேர்கள் வந்து இருக்கிறார்கள் என்பதை



10th March 1961] [Sri K. S. Ardhanareeswara Gounder]

அவர்கள் பார்க்கவேண்டும். அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள் நம்முடைய மாகாணத்தில் சிறு கைத்தொழில்களைச் செய்வதற்கு இந்த மாகாணத்தில் உள்ளவர்கள் முன்வருவதில்லை என்று. அதற்கு எடுத்துக்காட்டாக நமது கிண்டி எஸ்டேட்டில் பல வெளி மாகாணங்களிலுள்ளவர்கள் இங்கு வந்து தொழில் செய்கிறார்கள் என்பதை நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதுவும் குறிப்பாக தி.மு.க. அங்கத்தினர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த மகாணத்தில் தொழில் வளம் முன்னேறவேண்டுமானால் இந்த மாகாணத்திலுள்ள பொதுமக்களை உற்சாகப்படுத்தி சிறு கைத்தொழில்களில் அவர்களை அதிகமாக ஈடுபடச் செய்யவேண்டும். அப்படிச் செய்தால்தான் தென்னாட்டை நாம் வளம்மிக்க நாடாகச் செய்ய ஆசைப்படுகிறோம் என்பது தெரியவரும். இதை அவர்கள் உணரவேண்டும்.

அடுத்தபடியாக, வரி அதிகமாகப் போடுகிறோம் என்று கூறினார்கள். அதுவும் அன்றாடம் உபயோகப்படும் பொருள்களுக்குப் போட்டிருக்கக்கூடிய வரி குறையவேண்டுமென்றால், நம்முடைய மாகாணத்தில் பெரிய தொழில்களும், சிறு கைத்தொழில்களும் அதிகமாக ஏற்படுத்தப்படவேண்டும். குறிப்பாக நாட்டில் பல கைத்தொழில்கள் ஏற்பட்டு முன்னுக்கு வந்தால்தான், இந்த வரியைக் குறைப்பதற்கு வழிவகை இருக்கும் என்பதை நான் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கனம் அங்கத்தினர் திரு. கோவிந்தசுவாமி அவர்கள் தென்னாட்டில் அதிக கரும்பு ஆலைகள் இல்லை, வெளி மாகாணங்களில் அதிகமாக கரும்பு ஆலைகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். அவர்கள் யோசிக்கவேண்டும். தென்னாட்டில் ஆலைகள் குறைவாக இருந்தாலும், இந்த ஆலைகளுடைய 'கபாஸிடி' என்ன, எவ்வளவு டன்கள் தினத்திற்கு இந்த ஆலைகள் அறைக்கின்றன, வெளி மகாணங்களிலுள்ள கரும்பு ஆலைகள் தினம் எவ்வளவு அறைக்கின்றன, அவைகளுக்கு எவ்வளவு டன் 'கபாஸிடி' என்பதைப் பரிசீலனை செய்து பார்த்தால், நம்முடைய மாகாணத்தில் குறிப்பாக 1,000, 1,500 டன்கள் அதிகமாக அறைக்கக்கூடிய 'கபாஸிடி' உள்ள கரும்பு ஆலைகள் ஏற்பட்டிருப்பது தெரியவரும். அது போற்றத்தக்கது. அதே மாதிரி சிறு கைத்தொழில்களாக வெல்லாம், நாட்டுச் சர்க்கரை போன்ற பொருள்களை உற்பத்தி செய்வதற்குப் பல விவசாயிகள் கரும்பு உற்பத்தி செய்கிறார்கள். ஆனால் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய விலையையும், வெல்லத்திற்குக் கிடைக்கக்கூடிய விலையையும் சீர்தூக்கிப் பார்த்தால், கரும்பு ஆலைகளுக்கு கொடுக்கக்கூடிய கரும்பினுடைய விலையையும், அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய வெல்லத்திற்கு கொடுக்கக்கூடிய கரும்பினுடைய விலையையும் சீர்தூக்கிப் பார்த்தால், சிறு கைத்தொழில்கள் செய்யக்கூடிய விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு, ரூ. 15 அல்லது ரூ. 20 குறைவாகத்தான் கிடைக்கிறது. அதற்குக் காரணம் சிலோன்

ஏற்றுமதியை தடை செய்ததுதான். ஆகவே, சிறு கைத்தொழில்கள் மூலம் செய்யக்கூடிய வெல்லாம், நாட்டுச் சர்க்கரை ஆகியவைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவேண்டிய வழிவகைகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய நாட்டிலிருந்து 15 லட்சம் டன் சர்க்கரை வெளியிலே ஏற்றுமதி செய்கிறோம். ஒன்றுமில்லாத ஊசி முதற்கொண்டு இறக்குமதி செய்துவந்த நாட்டிலே இன்றைக்கு பெரிய கனரகத் தொழில்களுக்கு வேண்டிய பெரிய யந்திரங்கள் முதல்கொண்டு உற்பத்தி செய்கிறோம். அது மிகவும் போற்றத்தக்கது. நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் சென்ற பட்ஜெட்டில் ஒரு தாலுகாவிற்கு ஒரு தொழில் பள்ளிக்கூடம் வீதம் ஏற்படுத்தப்போகிறோம் என்று சொன்னார்கள். நம்முடைய நாட்டிலே தொழில் வளம் இன்னும் அதிக விரைவிலே ஏற்படவேண்டும். ஒரு பிளாக்கிற்கு ஒரு தொழில் பள்ளிக்கூடம் என்ற முறையில் ஏற்படுத்தவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். முக்கியமாக நம்முடைய நாட்டில் தொழில் வளம் பெருகவேண்டுமானால், அதிக நிபுணர்களை உண்டாக்கக்கூடிய அளவிலே தொழில் பள்ளிக்கூடங்கள், பாலிடெக்னிக்குகள் ஏற்படுத்தவேண்டும்.

அடுத்தபடியாக, சேலத்தில் இண்டஸ்டிரியல் எஸ்டேட் ஏற்படுத்துவதற்கு வேண்டிய நிலம் கிடைக்கவில்லை. அதனால் கால தாமதம் ஏற்படுகிறது என்று சொல்லுகிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், அதுவும் குறிப்பாக மேட்டூரில் 'மேட்டூர் இண்டஸ்ட்ரீஸ்' என்று ஒரு ஆங்கிலேயர் நூல் ஆலை வைத்திருக்கிறார்கள். அந்த ஆலையை ஆரம்பிப்பதற்கு அவர்களுக்குக் கிட்டத்தட்ட 250 ஏக்கர் நிலம் கொடுத்தார்கள். இப்பொழுது அவர்கள் இந்த இடத்திலே 50 ஏகர் நிலம்தான் தொழிலுக்காக உபயோகப்படுத்திக்கொண்டிருக்கிறார். பாக்கி 200 ஏகர் நிலத்தை தரிசாகத்தான் போட்டிருக்கிறார். அதை வேறு தொழில்கள் ஏற்படுத்துவதற்கு உடனடியாக சர்க்கார் எடுத்துக்கொள்ளவேண்டும். மேட்டூரில் பல தொழில்கள் வரக்கூடிய நிலைமை இருக்கிறது. அப்படியிருக்கும்போது இந்த நிலத்தை விவசாயம்கூட செய்யாமல் தரிசாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள் வேண்டுமென்றே. அதை உடனே சர்க்கார் எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அது ஒரு பல கனரக தொழில் ஏற்படுத்தக்கூடிய இடம். அந்த இடத்தை தொழில் ஏற்படுத்துவதற்கு உபயோகப்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, கைத்தறி நெசவாளர்களைப் பொறுத்தவரையில், அநேக கைத்தறி நெசவாளர்களுக்கு வேலை இல்லை என்று பலர் கூறிக்கொண்டிருக்கிறோம். நம்முடைய மகாணத்தில் லட்சக்கணக்கான மக்கள் கைத்தறியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்தத் தொழிலில் அவர்கள் இருப்பதைவிட, வேறு சிறு கைத்தொழில்களிலும், கனரகத் தொழில்களிலும் அவர்களை ஈடுபடுத்தினால் தான்; நமது மகாணத்தில் கைத்தறி நெசவாளர்களுடைய பிரச்னை



தீரும் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் நெய்யக்கூடிய துணியை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, அவர்களுக்கு விற்று பணத்தைக் கொடுப்பதைவிட, இங்கேயே தொழில்கள் வளரக்கூடிய பிரதேசமாக இருக்குமானால் வேறு தொழில்களை ஏற்படுத்தி அதிலே அவர்களை ஈடுபடுத்தினால், உடனடியாக நிவாரணம் அளிக்கலாம். துணியையே நம்பிக்கொண்டிருந்தால், அது மிகவும் கஷ்டமாக இருக்கும் அதுவும் குறிப்பாக சேலத்தைப் பொறுத்தவரையிலே கைத்தறி நெசவாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அதை அனுசரித்து சேலம் ஜில்லாவில் பல கனரகத் தொழில்கள் ஏற்படுத்துவதற்கு வழிவகை செய்வதுபற்றி நான் அவர்களைப் பாராட்டுகிறேன்.

சேலம் ஜில்லாவில் பல உலோகங்கள் இருக்கின்றன என்று கேள்விப்படுகிறோம். சேலத்தைப் பொறுந்தவரைக்கும் உடனடியாக நல்ல பூதத்துவ ஆராய்ச்சியாளர்களைக் கொண்டு அங்கு இருக்கக்கூடிய பல உலோகப் பொருள்களை ஆராய்ச்சி செய்து எடுத்தால், இந்த மாகாணத்தை மட்டுமல்ல, இந்த நாட்டையே மிகவும் வளம் பெறச் செய்வதற்கு வழிவகை இருக்கிறது என்று சொல்லிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

**SRI K. SATTANATHA KARAYALAR:** சபாநாயகர் அவர்களே, இந்த மான்யக் கோரிக்கைமீது பேசும்பொழுது ஒரு விஷயத்தை நான் வற்புறுத்த விரும்புகிறேன். நமது மாகாணத்திலே தொழில் அபிவிருத்தி அடைந்துகொண்டு வருகிறது என்பதிலே எந்தவிதமான ஆட்சேபணையும் இருக்க முடியாது. ஆனால் தேவைக்குத் தகுந்த அளவு தொழில் வளர்ச்சி உண்டா என்று பார்த்தால் அதிலே பல அபிப்பிராயங்கள் இருக்கக்கூடும்.

**THE HON. SRI R. VENKATARAMAN:** தொழில் வளர்ச்சி போதாது என்பதுதான் அபிப்பிராயம்.

**SRI K. SATTANATHA KARAYALAR:** அதோடு மாத்திரம் அல்ல. பொதுவாக, தொழில் வளர்ச்சி நீண்ட நாட்களாக இல்லாமல் இருந்து இப்பொழுது ஆரம்பிக்கக்கூடிய காலத்திலே கொஞ்சம் வேகம் இருக்கக்கூடும். இதே ரேட் ஆப் குரோத் தொடர்ந்து இருந்துகொண்டுபோவது கொஞ்சம் கஷ்டப்படலாம். எந்த வேகத்திலே இப்பொழுது தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறதோ, அதே வேகத்திலே இந்தத் தொழில் வளர்ச்சியின் வேகத்தைக் கொண்டுபோவதற்கு முழு முயற்சி எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏதோ தொழில் வளர்ந்து விட்டது என்ற காரணத்தினாலே உதாசீனமாக இருந்து விடக்கூடாது என்று வலியுறுத்திக்கூற ஆவலுறுகிறேன். குறிப்பாக, இன்று பலதரப்பட்ட தொழில்கள் பலதரப்பட்ட முறையிலே செயலாற்றப்பட்டு வருகின்றன. பெருவாரியான அளவிலே, பெருவாரியான மூலதனங்களைப் போட்டு மூலப் பொருள்களை உற்பத்தி செய்யக்கூடிய தொழில்கள்; அதற்கு அடுத்தபடியாக இயந்தி

ரத்தை உபயோகித்து உற்பத்தி செய்யக்கூடிய சிறு தொழில்கள்; அதைப் போல கிராமாந்திரப் பகுதிகளிலே ஓரளவு இயந்திரத்தை உபயோகித்து உற்பத்தி செய்யக்கூடிய சிறு தொழில்கள்; இதற்கு அப்பால் ஹாண்டி கிராப்ட்ஸ் அதாவது அழகுப் பொருள்கள் செய்யக்கூடிய சிறு குடிசைத் தொழில்கள். இந்தத் தொழில்களை எல்லாம் பார்த்தால் ஒன்றுக்கொன்று எந்த அளவுக்கு இணைப்பு இருக்கிறது என்பதை சிந்திக்க வேண்டியது அவசியம். ஓரளவு கோஆர்டினேஷன் இல்லை என்றே நினைக்கிறேன். ஏனென்றால் சில தொழில்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்ட தொழில்கள் போல் வளருகின்றன. ஒரு துறையில் இருக்கக்கூடிய தொழிலுக்கும், இன்னொரு துறையில் இருக்கக்கூடிய தொழிலுக்கும் போட்டிகள் பல சந்தர்ப்பங்களில் ஏற்படுகின்றன. குடிசைத் தொழிலாகவும் கைத்தொழிலாகவும் இருக்கக்கூடிய ஒரு தொழில் மாச் இண்டஸ்டிரி. இது ராமநாதபுரம், நெல்லை ஆகிய மாவட்டங்களிலே மிக விரிவாகப் பரவி இருக்கக்கூடிய ஒரு தொழில். வேலை வாய்ப்பு அதிகம் கொடுக்கக்கூடிய ஒரு தொழில். அதே நேரத்திலே இயந்திரத்தை உபயோகித்தும் இந்தத் தொழில் நடத்தப்பட்டு வருகிறது. இதனால் ஏற்படக்கூடிய நிலைமை என்னவென்றால், பல ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் வேலை செய்யக்கூடிய ஒரு இடத்தில், நூற்றுக்கணக்கான தொழிலாளிகள் ஒரு தொழிற்கூடத்திலிருந்து உற்பத்தி செய்யக்கூடிய நிலைமை ஏற்பட்டு விடுகிறது. இதிலே வரையறை அகில இந்திய ரீதியிலே இருக்க வேண்டும். மாகாண ரீதியில் இருந்தால் மட்டும் போதாது. நம் நாட்டை எடுத்துக்கொண்டால் இங்கே உற்பத்தி செய்யக்கூடியதைப் பொருத்து பிற மாகாணங்கள் திட்டமிடுவது இல்லை. அதனால் பொருள் தேக்கம் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. ராமநாதபுரம் வட்டாரத்தில் சில பகுதிகளில் சில காலத்திற்கு முன்பு பனையுடன் பென் நிப்புகள் மிக அழகாகச் செய்து கொண்டிருந்தார்கள். அது ஒரு நல்ல வளரக்கூடிய தொழிலாக இருந்தது. மிகவும் செல்வாக்குள்ள பல கம்பெனிகள் சர்வதேச ரீதியில் அந்தத் தொழிலை முக்கியமான தொழிலாகக்கொண்டு இயந்திரத்தை உபயோகித்து செய்யக்கூடிய தொழிலாக பல இடங்களில் இப்பொழுது வரும்பொழுது, இந்தத் தொழில் செய்து வந்தவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதைப் போல அகில இந்திய ரீதியிலே எந்தத் தொழிலுக்கும் ஒரு வரையறை செய்யப்படாத காரணத்தினாலே இந்தத் தொழில்கள் நசித்துப்போகின்றன. ஹாண்டிகிராப்ட்ஸை எடுத்துக்கொண்டால், அழகு சாதனங்களாக இருக்கக்கூடிய பொருளாதலால், இது ஒரு பெரிய தொழிலாக இருக்கமுடியாது. பனை ஓலையிலிருந்து கிலுக்கு முதலிய பொருள்கள் செய்வதினால் இது ஒரு விளையாட்டுப் பொருளாக, ஒரு க்யூரியாசாக ஒவ்வொரு சந்தர்ப்பத்தில் வாங்கக்கூடிய பொருளாக இருக்கலாம். ஆனால் திரும்பத் திரும்ப விற்பனையாகக்கூடிய வாய்ப்பு இல்லாமல் போகும். எங்கள் வட்டாரத்தில் இது போன்ற பொருள்கள் குற்றாலத்தில் சீசன் தோறும் விற்கப்படும். ஒரு சீசனிலே விற்ற பொருள்கள் அடுத்த சீசனிலே





விற்கும் என்ற அவாவுடன் அதிகமாக உற்பத்தி செய்துகொண்டு வருவார்கள். ஆனால் அவற்றை மக்கள் அதிகமாக வாங்க விருப்பம் இல்லாததினால் தேக்கம் ஏற்படுகிறது. இதைப் போல் பத்தமடைப் பாயும் ஒன்று. சமீபத்தில் நடந்த எக்ஸிபிஷனிலே, நாள் முழுவதும் இருந்துவிட்டு ஒரு பாய்கூட ஒருவரும் வாங்கவில்லை என்று சொல்லக்கூடிய நிலைமையிலேதான் விற்பனை நடந்தது. இந்தப் பொருள்கள் எல்லாம் மக்கள் அன்றாடம் உபயோகப்படுத்தக்கூடிய பொருள்களாக இருக்காத காரணத்தினால், இவைகளுக்கு நிரந்தரமாக சந்தை கிடைக்க முடியாது. இதுபோல் அல்ல வேறு சில தொழில்கள்.

எங்கள் வட்டாரத்திலே கத்தாழை நார் எடுக்கக்கூடிய தொழில் மிகவும் பரவலாக நடைபெறுகிறது. விவசாயிகளைப் பொறுத்தவரையில் விவசாய காலங்களைத் தவிர இதர காலங்களில் இந்தத் தொழிலை பெண்கள், தாய்மார்கள் நம்பி இருக்கிறார்கள். வயல் வரப்புகளிலே உள்ள கத்தாழைக் குருத்தை எடுத்துக் கொண்டுவந்து அதை அடித்துப் பக்குவப்படுத்தி நாராகச் செய்கிறார்கள். அலூபைபர் என்று சொல்லுகிறார்கள். அதிலிருந்து செய்யக்கூடிய பொருள்கள் பிற மாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. குறிப்பாக ஆலப்புழைக்கு அனுப்பப்பட்டு வருகிறது. அங்கிருந்து பக்குவப்படுத்தி கல்கத்தா போன்ற நகரங்களுக்கு அனுப்புகிறார்கள். ஒரு ஆளுக்கு சராசரி வருமானம் 8 அணா அல்லது 10 அணா கிடைக்கிறது. இந்த அளவுக்கு மக்கள் தரித்திரத்தில் இருப்பதால்தான் இந்தத் தொழிலிலே ஈடுபடுகிறார்கள். ஏற்கனவே இருந்த வாய்ப்பும் கூட இன்றைக்குக் குறைந்து வருகிறது. இது ஏன் இப்படிக் குறைந்து வருகிறது என்று சொன்னால் இதை வாங்கி அனுப்பி வந்த வியாபாரிகள் இப்பொழுது இதற்கு நல்ல விலை கிடைப்பதில்லை என்று சொல்லுகிறார்கள். நமது நாட்டிலே கத்தாழையை ஒரு பயிராகப் பயிரிடுவதில்லை. வேலிக்கு வைக்கக்கூடிய ஒரு பொருளாகத்தான் இது வைக்கப்பட்டு இந்த நார் கிடைக்கிறது. வெளி நாடுகளிலிருந்து, குறிப்பாக ஆப்ரிகாவில் மிகவும் நீளமுள்ள நாரையுடைய கத்தாழை பயிரிடப்படுவதாகச் சொல்லப்படுகிறது. நமது நாட்டிலே இந்த நாரின் நீளம் 2 அல்லது 3 அங்குலம்தான் இருக்கிறது. ஆனால் அங்கே 6 அல்லது 8 அங்குல நீளம் வரை இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இது எந்த அளவு உண்மையோ, பொய்யோ எனக்குத் தெரியாது. வியாபாரிகள் சொல்லுகிறார்கள்.

SRI S. LAZAR: அதே நீளம் இங்கேயும் கிடைக்கிறது.

SRI K. SATTANATHA KARAYALAR: எனது நண்பர் கத்தாழையைப் பற்றிச் சொல்லுகிறார்கள். அதில் இருக்கக்கூடிய நாரின் நீளத்தைப் பற்றித்தான் நான் குறிப்பிட்டேன். அந்தத் தரம் எங்கள் மாவட்டத்தில் இல்லை. இதர மாவட்டங்களில் கிடைக்கிறது என்று சொன்னால், வெளி நாடுகளிலிருந்து தருவிப்

பதை நிறுத்தவேண்டும். நமது பொருள்களுக்குச் சரியான விலை கிடைக்கவில்லை என்பதைச் சொல்லுகிறேன். சர்க்கார் இதைக் கவனிக்கவேண்டும். நேற்று ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும் பொழுது உள் துறை அமைச்சர் இவைகள் எல்லாம் கவனிக்கப்பட்டு வருகிறது என்று பொதுவாகப் பதில் சொன்னார்கள். தொழில்துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுவார்கள் என்று எதிர்பார்த்தேன். என்னுடைய மாவட்டத்தில் இப்படிச் சொன்னால் சிரிப்பார்கள். ஏனென்றால் அதற்கு அங்கே எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை. ஊக்கமும் கொடுப்பது இல்லை. வேலியில் வளர்க்கூடிய பொருளாகத்தான் இந்தக் கத்தாழை அங்கு கிடைக்கிறது. வெளி நாட்டிலிருந்து நல்ல கத்தாழையைக் கொண்டு வந்து எங்கள் மாவட்டத்தில் பரப்பினால் நல்ல முறையில் வளரும். அதனால் இந்தத் தொழிலும் நல்ல முறையில் வளர முடியும். இது ஒரு அழகுப் பொருள், அதாவது க்யூரியாஸ் என்று சொல்லக்கூடிய பொருள் இல்லை. இதை உபயோகித்து கயிறு செய்யக்கூடிய ஒரு தொழிலை ஏற்படுத்தலாம். மக்கள் வேறு ஏதாவது வேலை செய்துவிட்டு மற்றொரு பகுதி நேரத்தைச் செலவிடுவதற்கு உள்ள வாய்ப்பு இந்தத் தொழில் மூலம் உண்டாகும். இது போன்று என்னென்ன தொழில்கள் எந்தெந்த மாவட்டத்தில் இருக்கின்றன என்பதைப் பார்க்கவேண்டும். வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துக்கொண்டே வருகிறது. ஓரளவு இதைச் சமாளிப்பதற்கு இந்தத் தொழில்கள் பயன்படும். நாட்டிலே ஏற்கெனவே இருக்கக்கூடிய குடிசைத் தொழில்கள் எந்த அளவு நமது சுய தேவையைப் பூர்த்தி செய்துள்ளன, அவைகளை இணைப்பது எப்படி என்று ஆலோசித்து முடிவுகள் எடுக்க வேண்டும். நமது மாகாணத்திற்கு மட்டும் முடிவு எடுத்தால் போதாது. அகில இந்திய ரீதியில் எடுத்தால்தான் பலன் கிடைக்கும். ஸன் ஹெம்பு பைபர் மூலம் எங்கள் பகுதியிலே டிரக்கெட்டுகள் முதலியவை செய்கிறார்கள். மந்திரி அவர்கள் நேற்று பதில் சொல்லும்பொழுது, அப்படிச் செய்வதாகத் தெரியவில்லை என்று சொன்னார்கள். உண்மையிலேயே நான் வருத்தப்படுகிறேன். எங்கள் பகுதியிலே செய்யக்கூடிய இந்தப் பொருள்களை எல்லாம் பார்த்துவிட்டு, இங்கே சட்டசபை அங்கத்தினராக இருக்கும் ஒரு நண்பர், எங்கள் பகுதிக்கு அனுப்பிக் கொடுங்கள் என்று சொன்னார். தோலிலே மற்ற மாவட்டங்களில் செய்யப்படுகிறது. ஆனால் அதன் விலை அதிகம். தண்ணீர் இறைக்க கமலைக்கு இதை உபயோகப்படுத்துகிறோம். இது பல மாவட்டங்
11-30 a.m. களிலே பல பெயரால் அழைக்கப்படுகிறது. எங்கள் மாவட்டத்தில் இதைத் துறுத்தி என்று சொல்லுகிறார்கள். கமலையில் கட்டும் இந்தப் பகுதி, தோல் எத்தனை காலம் வேலை செய்யுமோ அவ்வளவு காலம் இதுவும் செய்யும். விலையோ, தோலைப் பார்க்க நாலில் ஒரு பங்கு விலைதான். ஆகவே இந்தத் தொழிலை ஊக்குவிக்கும் முறையிலே, இந்தத் தொழிலை எவ்விதத்தில் உபயோகிக்க முடியும் என்று பார்க்கவேண்டும். இம்மாதிரிச் சிறுசிறு குடிசைத் தொழில்களை எவ்விதங்களிலெல்லாம் பயன்படுத்தலாம் என்று சர்க்கார் பரிசீலிக்க வேண்டியது அவசியம்.



அடுத்தபடியாக சொல்லப்படுவது :—எங்கள் மாவட்டத்தில் நடுவயல் ஆராய்ச்சிக்கூடம் என்கிற ட்ரெயினிங் சென்டர் இருக்கிறது. இந்த ஆராய்ச்சிக்கூடத்தால் பலன் இல்லை. ஏனெனில், வெறும் தொழில் தெரியாதவர்களுக்கு ட்ரெயினிங் சென்டர் என்றால், அத்தொழிலை எப்படிப் பாதுகாப்பது என்பதைப் பார்க்காமல் இருப்பது சரியல்ல. தொழிலை அபிவிருத்தி செய்ய ட்ரெயினிங் சென்டர் இருந்தால் போதாது; தொழிலுக்குப் பாதுகாப்பு அளிப்பது எப்படி என்று பார்க்கவேண்டும், அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டியது அவசியம்.

அங்கே காயர் இண்டஸ்ட்ரீஸுக்கும் நிறைய வாய்ப்பு இருக்கிறது. அதற்கும் ஊக்கம் கொடுக்கும் முறையில், ஏதாவது செய்ய வேண்டும். வாசனைத் திரவியங்கள் தயாரிக்க வேண்டிய பல பட்டைகள், பொருள்கள் அங்கே கிடைப்பதால் அவற்றைப் பயன்படுத்தி, தொழிலை அபிவிருத்தி செய்ய ஊக்கமளிக்க வேண்டும். அதனால் வேலையில்லாத் திண்டாட்டம் வெகுவாகக் குறையும்.

அடுத்ததாகப் பட்டுப் பூச்சி வளர்ப்பு. இந்த பட்ஜட்டிலே, ரீலிங்குக்கு என்று நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதை வரவேற்கிறேன். கிணறு வெட்ட நிதி கொடுக்கப்பட்டுள்ளது. அதையும் வரவேற்கிறேன். அதை நல்ல முறையிலே, லிபரலஸ்டு முறையிலே கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பட்டுப் பூச்சி வளர்க்க மல்பரி அவசியம். அந்தச் செடிகள் மழை இல்லாததால், உலர்ந்து போகின்றன. அப்படி அவைகள் வீணாகிப் போய்விடாமல் இருக்கத் தக்க பாதுகாப்பு கொடுக்கவேண்டும். பயிரிடும் செடிகள் பாழ்பட்டுவிட்டால், அவைகளுக்குப் பாதுகாப்பு அளிக்க இவைகளுக்காவது க்ராப் இன்ஷூரன்ஸ் கொண்டு வரவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

இன்னொன்று குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன். இதிலே கூட்டுறவு சங்கங்கள் மூலமாகச் செய்வதில் 'பாட்டரீஸ்' சட்டி. பானை செய்வது ஒரு தொழில். அது ஒரு சாதாரணக் குடிசைத் தொழில். அதைக் கூட்டுறவு இயக்கத்தில் கொண்டு வந்தோம். பல நண்பர்களுக்குத் தெரியும் அதிலே இன்று நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. தனியாகச் சட்டி பானை செய்து வியாபாரம் செய்தால் அதற்கு விற்பனை வரி கிடையாது. ஆனால், கூட்டுறவு சங்கத்தில் சேர்ந்து விற்பனை செய்தால், அதற்கு வரி உண்டு. மேலும், ஒரு பானை 13 அணா என்றால், கூட்டுறவு சங்கத்தில் சேர்ந்திருப்பதற்காக அதை அவன் ஒரு அணா கூட்டி, விற்க வேண்டியிருக்கிறது; சங்கத்தில் சேர்ந்த அபராதத்திற்காக அப்படி விற்க வேண்டியிருக்கிறது. அதற்கு ஏன் விற்பனை வரி என்று தெரியவில்லை. இதைத் தயவுசெய்து சர்க்கார் பரிசீலனை செய்து, குடிசைத் தொழிலாக இருக்கக்கூடியவை கூட்டுறவு இயக்கத்தில் வந்தாலும், அவைகளை உற்சாகப்படுத்தும் முறையில் விற்பனை வரியை விலக்க வேண்டும் என்று வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். இத்துடன் என் உரையை முடிக்கிறேன்.

[10th March 1961

MR. SPEAKER இன்னும் ஆறு அங்கத்தினர்கள் பேச இருக்கிறார்கள். ஆகையினால், இனிமேல் பேசுகிறவர்களுக்குப் பத்து, பத்து நிமிஷம் கொடுக்கிறேன். கனம் திரு. கல்யாணசுந்தரம் அதன் பிறகு பேசுவார்கள்; அவர்களுக்குச் சில நிமிஷங்கள் அதிகம் கொடுக்கவேண்டும். ஆகவே இனிமேல் பேசுகிற அங்கத்தினர்கள் 10 நிமிஷம் பேசலாம். அதற்குள்ளே உட்கார்ந்தால் தப்பில்லை. அதற்கு மேல் வேண்டாம் என்று சொல்லுகிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியத்தின் பேரில் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். நம் ராஜ்யத்திலே தொழில் அபிவிருத்தி அடியோடு ஏற்படவில்லை என்று சொல்ல முடியாது. ஓரளவுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆனால், இந்தப் பதின்மூன்று ஆண்டு காலத்திலே எந்த அளவுக்கு அபிவிருத்தி உண்டாகியிருக்க வேண்டுமோ, அந்த அளவிற்கு ஏற்பட்டிருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கும் நேரத்திலே, அதைக் கனம் அமைச்சரவர்களும் ஒப்புக்கொள்வதற்காக அவர்களைப் பாராட்டுகிறேன். ஆனாலும், என் அபிப்பிராயம் என்னவென்றால், இன்றைக்கு மிகமிக அத்யாவசியமான தொழில்களைச் சர்க்காரே எடுத்து நடத்தவேண்டும் என்பதுதான். அப்படிச் சொல்லும் நேரத்திலே, நேற்றையதினம் கூட கனம் நிதியமைச்சரவர்கள், 'பெரிய அளவிற்குத் தொழில் அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது; கிராமத்தில் உள்ளவர்களெல்லாம் நகரங்களுக்குக் குடியேறுகிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, அத்தனை தொழில் அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது' என்று சொன்னார். விவசாய அபிவிருத்திக்கு வேண்டிய நவீனக் கருவிகளை நாம் கொடுக்காததனால், கிராமத்தில் உள்ளவர்கள் அங்கே விவசாய அபிவிருத்தி இல்லாத நிலைமையில், நகரப் புறங்களில் ஏதாவது வேலை கிடைக்குமா என்று குடியேறுகிறார்கள். மூன்றாவது திட்ட காலத்தில் விவசாய அபிவிருத்தி ஏற்படவேண்டுமானால், உணவுப் பொருள்கள் அதிகப்பட வேண்டும் என்று சொல்லும் நேரத்தில், போதுமான விவசாயத்திற்கு வேண்டிய நவீனக் கருவிகள் உற்பத்தி செய்தோ, இறக்குமதி செய்தோ கொடுக்கப் போகிறோமா என்று பார்க்க வேண்டும். மூன்றாவது திட்ட காலத்தில், திட்டம் பரிபூரணமாக நிறைவேற்றப்படவேண்டுமானால், உணவுப் பொருள்கள் மேன்மேலும் அதிகப்படியாக உற்பத்தியாக வேண்டுமானால், அவை குறைந்த விலையில் கிடைக்கச் செய்ய வேண்டுமானால், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வேண்டுமானால், உண்மையிலேயே, விவசாயத்திற்கு வேண்டிய கருவிகளான ட்ராக்டர்கள், புல் டோசர்கள் முதலியவைகள் நம் ராஜ்யத்தில் கிடைக்கச் செய்தாக வேண்டும். நம் ராஜ்யத்தில் பல ஜில்லாக்களில் கிணறுகள் வெட்டப்படுகின்றன. பல இடங்களில் பாறைகளாக இருக்கின்றன. ஆகவே, அதற்கு வேண்டிய ராக் ட்ரில்லிங் மெஷின்கள், பம்பு செட்டு கருவிகள், அதற்கான உப கருவிகள் இவைகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை பெரிய அளவில் நாம் ஆரம்பிக்க



10th March 1961] [Sri V. K. Kothandaraman]

வேண்டும். அதுபோன்ற தொழிற்சாலைகள் ஆரம்பிக்காத வரையில், மூன்றாவது திட்டம் போட்டாலும், இன்னும் எவ்வளவு திட்டங்கள் போட்டாலும், விவசாய அபிவிருத்தி என்பது, உணவு உற்பத்தி என்பது வாயளவில்தான் சொல்லலாம், ஏட்டளவில்தான் எழுதலாம்; உண்மையாக உதவி செய்தவர்களாக ஆக மாட்டோம்.

கரண்ட் சம்பந்தமாக, இந்த ராஜ்யத்திலே விவசாயத்திற்கு எவ்வளவு மின்சாரம் கொடுத்திருக்கிறோம், பம்பு செட்டுகள் இருக்கின்றன பார்த்தீர்களா என்று சொல்லிவிட்டால் மட்டும் போதாது; இன்றையதினம் பம்பு செட்டு கள்ள மார்க்கெட்டில் வாங்கப்படுகிறது; கள்ள மார்க்கெட்டில் மோட்டார்கள் வாங்கப்படுகின்றன. அதற்குத் தேவையான உப கருவிகள் வாங்கக்கூடிய அளவுக்குக் கிடைக்கவில்லை. அதையெல்லாம் சர்க்கார் கவனிக்க வேண்டும். எந்த அளவுக்குத் தேவையிருக்கிறதோ அந்த அளவுக்கு அதிகப்படியாக தொழிற்சாலைகளை மேன்மேலும் நாம் வளர்ப்பதில் கவனம் செலுத்தவில்லையென்றால், விவசாய அபிவிருத்தி ஏற்படக்கூடிய நிலைமை ஏற்படாது என்பதுதான் நான் இந்த நேரத்திலே ஞாபகப்படுத்த விரும்புவது.

இன்றைக்கு இரும்புத் தொழிற்சாலை, நிலக்கரி உற்பத்தியெல்லாம் நடக்க கவனம் செலுத்தி வருகிறோம். அதே போன்று, பல ஜில்லக்களிலேகூட அது போன்ற வாய்ப்புகளும், வசதிகளும் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் பல இடங்களில் நிலக்கரி, இரும்பு இவை இருப்பதாகவும், கண்ணாடிக்கு வேண்டிய கண்ணாடிக் கற்கள் இருப்பதாகவும் சொல்கிறார்கள். இன்றைக்கு வாலாஜா தாலுக்காவிலிருந்து அம்மாதிரிக் கற்கள் திருட்டுத்தனமாக லாரிகளில் சென்னைக்குக் கொண்டு வரப்பட்டு, வேறு விதமாக பம்பாய், கல்கத்தா போன்ற இடங்களுக்குக் கொண்டு போவதாகச் சொல்லப்படுகிறது. அதேபோன்று பல மூலப் பொருள்கள் கிடைப்பதாக ஜியாலஜிகல் ரிப்போர்ட்டும் மற்ற ரிப்போர்ட்டுகளும் கொடுத்திருப்பதாகத் தெரிய வருகிறது. ஆனால் சொல்லுகிறார்கள் கொஞ்சம்தானே கிடைக்கிறது என்று. அதை எடுத்து என்ன செய்வது என்றும் சொல்லுகிறார்கள். இன்றைக்கு சிறிய தொழிற்சாலைகளை ஆரம்பித்தாலும்கூட அதைப் பயன்படுத்தக்கூடிய அளவுக்கு அதை நாம் உபயோகப்படுத்த கவனம் செலுத்தப்பட வேண்டும். அதே போன்று இன்றைக்கு பவர்லூம்களைக் கொண்டு வரப்போவதாகச் சொல்லுகிறார்கள். அதை இங்கு உபயோகப்படுத்த வேண்டுமா வேண்டாமா என்ற பிரச்னை இருக்கிறது. நேற்றைக்கு முந்திய ஹிந்துப் பத்திரிகையைப் பார்த்தால் தெரியும், ஆந்திராவில் பவர்லூம்களை உபயோகப்படுத்திய காரணத்தால் லட்சக்கணக்கானவர்களுக்கு வேலை இல்லாமல் திண்டாடக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று எழுதி இருக்கிறார்கள். சுமார் இருபது கைத்தறிகள் உற்பத்தி செய்யக்கூடிய துணியை ஒரு பவர் லூமால் உற்பத்தி செய்ய முடியும் என்ற நிலைமை ஏற்படுகிறது. அந்த நிலை

ஏற்பட்டால் ஐந்து லட்சம் கைத்தறி நெசவாளர்களுடைய நிலைமை என்னவாகும்? இந்த ராஜ்யத்தில் அதிலும் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன் ஏற்றுமதி செய்யப்பட்டதை விட இப்பொழுது ஏற்றுமதி குறைந்திருக்கிறது. ஆகவே பவர் லூம்களை இங்கே கொண்டு வருவதன் மூலம் வேலை இல்லாத் திண்டாட்டத்தை இன்னும் அதிகரிக்கக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே அதைக் கொண்டு வருவதற்கு முன்பாக அவர்கள் எல்லோரையும் மீண்டும் கலந்து ஆலோசனை செய்து அந்தக் காரியத்தில் ஈடுபட வேண்டும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அது மாத்திரம் அல்ல. கைத்தறி நெசவுத் துணிகளை இன்றைக்கு சர்க்கார் கைத்தறி கூட்டுறவு சங்கங்கள் மூலமாக வாங்கி அதைக் கொள்முதல் செய்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டால் அதுதான் உசிதமாக இருக்கும். அதேபோன்று இப்பொழுது ப்ளீடிங் மெட்றாஸ் என்ற ஒருவித ரகத் துணி இருக்கிறது. அது தனி முதலாளிகளால் தனிப்பட்ட முறையில் ஏற்றுமதி செய்யப்பட்டதால், அதுவும் கீழ்த்தரமான துணியை ஏற்றுமதி செய்த காரணத்தால் அதன் கிராக்கி அந்நிய நாடுகளில் குறைந்து போய்விட்டது. நமது ராஜ்யத்திலுள்ள பல லட்சக்கணக்கான முதலாளிகள் லாபம் சம்பாதிக்க வேண்டும் என்ற காரணத்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதனால் கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம் தனியார் துறையில் ஏற்றுமதி செய்ய அனுமதித்ததுதான். ஆகவே இன்றையதினம் சர்க்காரே கொள்முதல் செய்து அவைகளை ஏற்றுமதி செய்வதன்மூலம் அந்தத் தொழிலைப் பாதுகாக்க முடியும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று தோல் பதனிடும் தொழில். தோல் பதனிடும் தொழில் சுமார் 75 சத விகிதம் இந்த நாட்டில்தான் செய்யப்படுகிறது. இப்பேர்ப்பட்ட ஒரு தொழில் அந்நியச் செலவாணியை சம்பாதித்துக் கொடுக்கக்கூடிய தொழிலாக இருக்கிறது. அந்தத் தொழில் நாளுக்கு நாள் க்ஷீணித்துக்கொண்டு வருகிறது. அந்தத் தொழில் அபிவிருத்தி அடைவதற்கு அதற்குக் கடன் உதவி கொடுக்கக்கூடிய அளவில் இருக்கிறது. இதைப்பற்றி கேள்வி கேட்கும்போது கனம் தொழில் அமைச்சர் அவர்கள் அதற்கு பதில் சொல்லும்போது, அதாவது எவ்வளவு பேர்களுக்குக் கடன் உதவி கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கேட்டதற்கு, சுமார் 586 பேர்களுக்குக் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார். ஆனால் ஒன்று அல்லது இரண்டு பேர்களுக்குத்தான் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. மற்றவர்களுக்குக் கிடைக்கவில்லை. மற்றும் உப கேள்விகள் கேட்டதற்கு தனிப்பட வேறு கேள்வி கேட்டால் பதில் சொல்லுகிறோம் என்று சொன்னார். அப்படி வேறு கேள்வி எழுதி அனுப்பினேன். ஆனால் அந்தக் கேள்வி அனுமதிக்கப்படவில்லை என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



குறிப்பாக இதை ஏன் சொல்லுகிறேன் என்றால் இந்தத் தொழிலைப் பாதுகாப்பதற்கு, இந்தத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்குப் போதுமான அளவில் நிதி உதவி கிடையாது. அதனால் அதற்கு வேண்டிய போதுமான நிதி ஒதுக்கவேண்டும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இது போன்று ரப்பர். இதைப் பெரிய அளவில் அபிவிருத்தி செய்வதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டும். இன்றைக்கு சில்க் டிமான்ஸ்ட்ரேஷன் என்று சில்க் பாரம்கள் எல்லா ஜில்லாக்களிலும் இருந்தாலும் அது போதாது. சில்க் துணிகளைப் போதிய அளவுக்கு உற்பத்தி செய்ய வேண்டும். இதற்கு முன் குடியாத்தத்தில் இண்டர் நேஷனல் பேமஸ் மில் பெரிய அளவில் தயார் செய்து வந்தார்கள். சர்வ தேச ரீதியில் அது நடைபெற்று வந்தது. என்ன கொடி வேண்டுமானாலும் அதைத் தயார் செய்து கொடுக்கக்கூடிய அளவில் அது நடைபெற்று வந்தது. சர்க்கார் எதைக் கேட்டாலும் அந்த அளவுக்குத் தயார் செய்து கொடுக்கக்கூடிய அளவில் சிறந்த மில் அது. போட்டா போட்டியின் காரணமாகவும் சில ஊழல்கள் காரணமாகவும் சில நாட்களாக அது வேலை செய்யவில்லை. பல வருஷங்களாக அது மூடப்பட்டிருக்கிறது. இன்னும் ஆரம்பிக்கவில்லை. ஆனால் ஆரம்பிக்கப்போவதாகச் சொல்லப்படுகிறது. அந்த மில்லை சர்க்காரே எடுத்து நடத்த முன் வந்தால் ரொம்பவும் நலமாக இருக்கும். இன்னும் இரண்டு நிமிஷங்கள் கொடுத்தால் முடித்து விடுகிறேன். (மணி அடிக்கப்பட்டு பேச்சு நிறுத்தப்பட்டது.)

**SRI S. LAZAR:** கனம் சபாநாயகர் அவர்களே, தொழில் துறை நிர்வாக மானியக் கோரிக்கையை வரவேற்று எனது கருத்துக்களைச் சொல்ல நான் விரும்புகிறேன். பொதுவாக நாட்டினுடைய பொருளாதார அபிவிருத்திக்கு எந்த அளவு தொழில்கள் உதவுகின்றன என்பதை எல்லா அங்கத்தினர்களும் எடுத்துச் சொன்னார்கள். அதிலும் குறிப்பாகத் தமிழ் நாட்டில் பொருளாதாரம் மேலும் மேலும் ஓங்கவேண்டுமானால் நிச்சயம் அதிகப்படியான தொழில் ஏற்பட வேண்டும். இப்பொழுது ஏற்பட்டிருப்பதோடு இன்னும் அதிகப்படியாக ஏற்பட வேண்டும் என்ற கருத்தினை எல்லோரும் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் எதிர் கட்சியில் பேசிய ஒரு சில அங்கத்தினர்கள் ஏதோ தொழில் எல்லாம் தயாராக இருக்கின்றன போலும் அதை எடுத்துக் கொள்ள அரசாங்கம் தவறிவிட்டது போலும் கருத்துப்பட இங்கே பேசினார்கள். அப்படிப் பேசுவதோடுகூட வெட்டுப் பிரேரேபணையையும் கொடுத்திருக்கிறார்கள். அரசாங்கத்தைப் பொறுத்த வரைக்கும் அதற்கான முயற்சி செய்வதில் அமைச்சர்களோ அல்லது அவர்களைச் சார்ந்திருக்கக்கூடிய அதிகாரிகளோ எந்த விதத்திலும் உற்சாகம் குறைந்தவர்கள் அல்ல என்பதையும் அவர்களே எடுத்துச் சொன்னார்கள். அப்படிச் சொல்லி அவர்களுக்குப் பாராட்டும் தெரிவித்தார்கள். தொழில்களை மேலும் மேலும் அமைக்க வேண்டும் என்று சொன்னால் நிச்சயமாக மூன்று காரியங்களைக் கவனிக்க வேண்டியதாக இருக்கிறது.

முதலாவதாக அதற்கான ஆராய்ச்சித் துறை. அந்த தொழில் நுட்ப ஆராய்ச்சித் துறைக்கு வேண்டிய ஏற்பாடுகளை நிச்சயமாக நல்ல முறையில் செய்ய வேண்டும். அப்படி ஏற்படக்கூடிய அளவுக்கு நமக்கு டெக்னிகல் அட்வைஸ் கிடைக்க வேண்டும். அப்பொழுதுதான் தொழில் அதிகப்படியாக ஏற்படுவதற்கு வசதி உண்டாகும். அத்துடன்கூட தொழிலை ஆரம்பிப்பதற்கு சிலர் முன்னுக்கு வரவேண்டியதாக இருக்கிறது. பொதுவாக இம்மாதிரி துறையை எடுத்துப் பார்த்தால் அதைப் பொறுத்த வரைக்கும் இப்பொழுது அரசாங்கம் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது என்று சொன்னாலும் இன்னும் அதிகப்படியான கவனம் செலுத்த வேண்டியது அவசியமாக இருக்கிறது என்பதை இங்கு வலியுறுத்துச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஓரளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது, அதற்கான நிபுணர்கள் அகப்படவில்லை என்று சொல்லி வருகிறார்கள். இனிமேலாவது இப்பேர்ப்பட்ட நெருக்கடி ஏற்படாமல் அதிக நிபுணர்கள் கிடைக்கக் கூடிய அளவுக்கு வெளிநாட்டிலிருந்து ஏராளமான நிபுணர்களை வரவழைக்கலாம். நம் நாட்டிலேயே பல திறமை வாய்ந்தவர்கள் இருக்கிறார்கள். அப்படிச் சொல்லக்கூடிய அளவில் தமிழ் நாட்டில் அநேகம் திறமை வாய்ந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களையாவது வெளிநாடுகளுக்கு அனுப்பி அதில் நிபுணத்துவம் அடைந்து வரும்படி அனுப்பலாம். அதற்கு வேண்டிய முயற்சியையும் எடுத்துக் கொள்ள வேண்டும். பணம் ஒதுக்கியும் டெக்னிகல் அட்வைஸ் கிடைக்கக்கூடிய அளவுக்கு வாய்ப்பு ஏற்படுவதற்கு அரசாங்கம் அதிகப்படியான முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படி நிதி ஒதுக்கும்போது இதற்கு முன் பேசியவர்கள் சொன்னார்கள், ஒதுக்கப்பட்ட நிதி பூராவும் செலவிடப்படவில்லை என்று. தமிழ்நாட்டைப் பொறுத்த வரைக்கும் நிதி படைத்தவர்கள் மிகவும் குறைவு. ஆகவே அரசாங்கம் அதிகப்படியாக நிதியை சேகரித்துக் கொடுக்க வேண்டியதான அவசியம் ஏற்படுகிறது. அதைப் பொறுத்த வரைக்கும் அரசாங்கம் ஒரு திட்டத்தை வகுத்திருக்கிறார்கள். அதாவது பேசிக் இண்டஸ்ட்ரிஸ், ஆதாரத் தொழில் எதையெல்லாம் அரசாங்கம் எடுத்து நடத்துவது, எந்தெந்த தொழில்களை எடுத்து நடத்துவது என்று எல்லாம் முடிவு செய்திருக்கிறார்கள். அதுதான் மூன்றாவது காரணமாக எடுத்துச் சொல்லப்பட்டது. அதைப்பற்றியும் நாம் நன்றாக கவனிக்க வேண்டியதாக இருக்கிறது. எந்த அளவுக்கு வசதியை அளிக்கிறார்களோ அந்த அளவுக்கு அதை எடுத்து நடத்துவதற்கு ஒருவரும் முன்வருவதில்லை. எவ்வளவு தொழில்களை ஆரம்பித்து நடத்த அரசாங்கம் உதவி செய்ய முன்வந்தாலும் அதை எடுத்து நடத்துவதற்கு யாரும் முன்வருவதில்லை என்று அவர்கள் அடிக்கடி சொல்லிக் கொண்டு வருகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை இருக்கும்போது அரசாங்கத்தையே குறை கூறிக்கொண்டிருக்கக்கூடிய அங்கத்தினர்கள் ஓரளவு பொதுமக்களைத் தட்டி எழுப்ப முயற்சி செய்தால் அது நல்ல பலனைத் தரும் என்று சொல்ல விரும்புகிறேன். இன்னொன்று. இந்த மாநிலத்திலே பெரிய பல தொழில்களை ஆரம்பிப்பதற்கு வேறு ராஜ்யத் தொழில் அதிபர்கள் நினைக்கிறபோது கூட இவர்களுடைய கட்சிக் கொள்கையான வடநாடு தென்னாடு என்பது அறிந்து—தயங்கிவிடுகிறார்கள். ஒரு சிலர் முன்னுக்கு வருகிறபோதுகூட இவர்களுடைய கொள்கை அவர்களைப் பின்னுக்கு நிற்கச் செய்கிறது. இதையும்கூட சர்க்காரைக் குறை சொல்கிற எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதை எல்லாம் உணர்ந்து பார்த்தார்கள் என்றால் இந்தமாதிரியாகக் குறை சொல்வதை இனி நிறுத்திக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.



இப்போது ஏற்படுத்தப்பட்டிருக்கும் தொழில்களைப் பொறுத்த வரையிலும் ஒரு சில பெரிய முட்டுக் கட்டைகள் இருப்பதை எனக்கு முன்னால் பேசியவர்களும் எடுத்துச் சொன்னார்கள். அரசாங்க இலாகா அறிக்கையிலும் அது சுட்டிக் காட்டப்பட்டு வருகிறது. குறிப்பாக ரெயில்வே போக்குவரத்து வசதிகள் போதுமான அளவு இங்கே பெருகாததுதான் பெரிய தடை. இந்தத் தடையை நீக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை விளக்க வேண்டும். மத்திய சர்க்காரிலே பேசுகின்றபோதுகூட இதற்குச் சாதகமான வார்த்தைகள் வரவில்லை. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலும், ஏன் கேரளாவும் கூட—ஆந்திரத்தையும் சேர்த்துக் கொள்ளலாம் என்று நிபுணர்கள் சொல்கிறார்கள்—இந்த மூன்று ராஜ்யங்களிலும் தொழில் வளர்ச்சிக்குப் பெரிதும் தடையாக இருப்பது ரயில்வே போக்குவரத்துத்தான். ரெயில்வே போக்குவரத்து வசதிகளை அதிகப்படியாக ஏற்படுத்தித் தர தக்க வழிவகை செய்ய வேண்டும். மற்ற ராஜ்யங்களின் நிலைமையைப்பற்றி நான் சொல்லவில்லை. இந்த மூன்று ராஜ்யங்களையும் பொறுத்தவரையிலாவது ரயில்வே போக்குவரத்து வசதிகளை அதிகப்படுத்தி விஸ்தரித்துத் தருவதோடுகூட வாகன் வசதிகளையும் அதிகப்படுத்தித் தரவேண்டும் என்று மத்திய சர்க்காரிடம் வலியுறுத்தவேண்டும்.

தொழில் வளர்ச்சிக்கு இன்னொரு பெரிய முட்டுக்கட்டையாக இருப்பது மின்சாரம் என்று சொன்னார்கள். அரசாங்கத்தின் அறிக்கையிலும்கூட இதுபற்றி குறிப்பிடப்பட்டு இருக்கிறது. மின்சாரத்தின் தடையினால் தொழில் தேக்கம் ஏற்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சங்கடம் நமக்கு ஏற்படாமல் இருப்பதற்கு அவர்கள் இரண்டு வழிகளைச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொல்லி இருக்கக்கூடிய முதல் யோசனை நெய்வேலியில் இருந்து இப்போது எடுப்பதற்குத் திட்டமிட்டிருக்கிற நிலக்கரி அளவை இன்னும் ஒரு பங்கு சேர்த்து எடுத்தால் அதைக் கொண்டு பவர் உற்பத்தி செய்து கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று சொல்லி இருக்கிறார்கள். அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

இன்னொரு யோசனை. இந்தப் பிராந்தியத்தில் அனுமின் நிலையத்தை ஏற்படுத்தினால் அதைக் கொண்டும் போதுமான அளவு மின்சக்தியைப் பெறலாம் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதுபற்றியெல்லாம் நன்றாக யோசனை செய்ய வேண்டும் என்பதாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[Sri S. Lazar] [10th March 1961

நம் ராஜ்யத்தில் சென்னையிலும் இதர இடங்களிலும் ஏராளமான தொழில்கள் ஏற்பட்டு வருகின்றன. சென்னையைப் பொறுத்த வரையிலும் ஒரு குறை சொல்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான நீர் வசதி குறைவாய் இருப்பதாகக் கூறப்படுகிறது. அதையும் கவனிக்க வேண்டும். மற்றொன்று தொழில்கள் ஓரிடத்தில் குவியலாக ஏற்படுவதற்குப் பதிலாக பரவலாக வேண்டும் என்றும் சொல்கிறார்கள். திருச்சியைப் பொறுத்த வரைக்கும் கன ரக மின்சார இயந்திரத் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்குப் போதுமான வசதிகள் இருப்பதாக நான் அறிகிறேன். ஆனால் கேரளத்தில் இத் தொழிற்சாலை ஏற்பட வேண்டும் என்று கேரள கவர்னர் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது பற்றி நம் மாநில அமைச்சர் கொஞ்சம் ஜாக்ரதையாக இருப்பதுடன்—அத்தொழிற்சாலை நம் மாநிலத்தில் ஏற்படுவதோடுகூட அதைத் திருச்சியில் ஏற்படுத்துவதற்கு தக்க வழிவகைகளைக் காணவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **SRI T. KARIA GOUNDER** : கனம் சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் கொண்டுவரப்பட்டுள்ள தொழில் துறை மானியத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். தொழில் துறையில் முன்னேற்றமே காணவில்லை என்று தொழில் துறையில் மிகவும் புகழ் பெற்றிருக்கும் அமைச்சருக்கு எதிரிலேயே எதிர்க்கட்சி அங்கத்தினர்கள்—(ஸ்ரீ கே. அன்பழகன் : தைரியத்தோடு சொல்கிறார்களே என்கிறீர்களா ?) தைரியத்தோடு சொல்கிறார்களே என்று நாங்களும் தைரியத்தோடுதான் கேட்கிறோம். பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் வருடம் 60 கோடி ரூபாய்க்கு இந்த நாட்டில் இறக்குமதி செய்து கொண்டிருந்த துணிக்கு இன்றையதினம் பல நூறு கோடி ரூபாய்க்கு நாம் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்கிற நிலையை அடைந்திருக்கிறோம் என்றால் இது முன்னேற்றம் இல்லையா ? ஆனால் ஒன்று கொஞ்சம் தரம் குறைந்து வருகிறது. தொழில் துறை வளரவில்லை என்று இங்கே குறை சொல்கிற அங்கத்தினர்கள் பொதுக்கூட்டங்களில் பேசுகிறபோது இந்தத் தரம் குறையாமல் பார்த்துக்கொள்ளவேண்டும் என்று தொழிலாளர்களிடத்தில் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் இந்த நாட்டில் ஓடுகின்ற மோட்டார் வண்டிகள் முதல் சிறிய மின்சாரக் கருவிகள் வரையில் எல்லாம் இங்கேயே உற்பத்தி செய்கின்ற நிலையைக் கண்டிருக்கிறோம். கார் வேண்டுமென்றால்கூட க்யூவில் நிற்க வேண்டியிருக்கிறது. இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலும் ஒன்றும் செய்யவில்லை. தொழில் வளர்ச்சிக்கு மின்சாரம் போதவில்லை என்பதாகவெல்லாம் சொல்லப்படுகிறது. குந்தாவில் உற்பத்தி செய்கின்ற மின்சாரமானது மேட்டுப்பாளையத்தில் இருந்து கோயம்புத்தூர் நகரம் வரைக்கும் 50 ஆயிரம் கிலோவாட் மின்சார விநியோகம் செய்ய—தொழில் துறைக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பதாக



10th March 1961] [Sri T. Karia Gounder]

அறிகிறோம். கோயம்புத்தூர் ஜில்லாவைச் சீர்தூக்கிப் பார்த்தால் எந்த எந்தத் துறையில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறதென்று தெரியும். ஆனால் தனியார் துறையில் தொழில் நடத்த சர்க்கார் no ஆர்வம் காட்டுகிறார்களா என்றும் இங்கே பேசப்படுகிறது.

தனியார்கள் அப்படி முன்வந்தால் உடனே தொழிலாளர் இயக்கங்கள் எல்லாம் வந்து விடுகின்றன. முதலாளிகள் ஒழிக, தொழிலாளிகள் வாழ்க என்ற முறையில் சொல்லி முட்டுக் கட்டைகள் போடுகிறார்கள். தொழில் அமைச்சர் அவர்களும், நிர்வாகத்தை நடத்துகிற அதிகாரிகளும் நம் நாட்டில் தொழில் சச்சரவின்றி நல்ல முறையில் செயல்பட்டு வருகிறார்கள் என்பதைக் கண்டு அவர்களை எங்களால் பாராட்டாதிருக்க முடியாது. நமது தொழிலமைச்சர் அவர்கள் இங்கு வருவதற்குமுன் எவ்வளவு வேலை நிறுத்தம் ஏற்பட்டதென்பதை நாம் அறிவோம். ஆக, அரசியல் காரணங்களுக்காக உள்ளதை ஒப்புக் கொள்ளாதிருக்கக் கூடாது என்று எதிர்க்கட்சியினரைக் கேட்டுக்கொள்கிறேன். பின்னர், சர்க்கரை ஆலை பற்றி திரு. கோவிந்தசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். நம் நாடு சுதந்திரம் அடைந்து பிற்பாடுதான் இங்கு, தமிழ்நாட்டில் சர்க்கரைத் தொழில் ஆரம்பிக்கப்பட்டது. நான் ஹைஸ்கூலில் படிக்கிறபோது படித்திருக்கிறேன், வடநாட்டில் பீஹார் மாகாணத்திலும், யு.பி.யிலும் சர்க்கரை உற்பத்தி ஆங்கிலேயர் காலத்திலிருந்தே செய்துகொண்டிருந்தார்கள். சுதந்திரம் அடைந்த பிறகு தமிழ் நாட்டில் ஆரம்பித்திருக்கும் இந்தத் தொழிலைப் பெரிய அளவில் செய்திருக்கிறார்கள், இங்கு நாள் ஒன்றுக்கு 1,000 டன்னுக்குக் குறையாமல் உற்பத்தி செய்யப்படுகிறது. மூன்றாவது திட்ட காலத்தில் 8 சர்க்கரை ஆலைகளுக்குச் சர்க்கார் அனுமதி வழங்குவதாகக் கண்டிருக்கிறது. இத்துறையில் வட ஆற்காடு பின் தங்கிக் கிடக்கிறது. எங்கள் தாலுகாவில் ஒரு சர்க்கரை ஆலை ஆரம்பிக்கப்பட்டு வேலை நடந்து கொண்டு வருகிறது. கூட்டுறவு முறையில், அதற்குத் தேவை, 7,000 ஏக்கர் கரும்பு உற்பத்தி செய்தால் போதுமானதென்று கணக்கிட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியில் மட்டும் 22,000 ஏக்கர் கரும்பு சாகுபடியை விவசாயிகள் செய்திருக்கிறார்கள். மிகுதியுள்ள கரும்பால் உற்பத்தி செய்கிற வெல்லாம் ரொம்பக் குறைந்து போயிருக்கிறது. நம் நாடு பொருளாதார வளர்ச்சி அடைய ஒரு துறை மட்டும் முன்னேறினால் போதாது. விவசாயிகளாகிய நாங்களும் நல்ல முன்னேற்றம் அடைந்தால்தான் தொழிலாளர்களும் முன்னேற்றம் அடைய முடியும் என்பதை எல்லோரும் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். ஸ்ரீமதி பண்டாரநாயகர் இந்தியா வந்த பிறகுதான் வெல்லம் ஏற்றுமதி தடை செய்யப்பட்டு விட்டதால் நம் நாட்டில் ஒரு மூட்டை 20, 23 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. சிலோன் தேசத்தில் 75 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஏனெனில் இந்த நாட்டின் விளை பொருள் அங்கு ஏற்றுமதி செய்யப்படாததையொட்டி அந்த விலைக்கு விற்கப்படுகிறது. ஆகவே, இந்தக் கரும்பு உற்பத்தி செய்யும் வெல்ல தொழில் நசித்து விடாதபடி மத்திய அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்தி

[Sri T. Karia Gounder] [10th March 1961

இந்தக் கட்டுப்பாட்டைத் தளர்த்த வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளுமாறு அமைச்சரவையையும், குறிப்பாக தொழில் அமைச்சர் அவர்களையும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். பின்னர் அமைச்சர் அவர்கள் இரண்டு மாதங்களுக்கு முன்பு ஆறு ரசாயன உரத் தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் ஆரம்பிக்கப் போவதாகக் கூறியிருந்ததைப் பத்திரிகையில் பார்த்தேன். மூன்று லட்சம் டன் உற்பத்தி செய்யப்படும் என்று கூறியிருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறோம். அந்த ரசாயன உரத் தொழிற்சாலைகளை விரைவில் ஆரம்பித்து வைக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். பின், கதர் அபிவிருத்தி. முன்பு கதர் போட்டால், 'என்ன இந்தமாதிரி துப்பட்டி போட்டுக் கொள்கிறீர்களே' என்று கேட்பார்கள், எதிர்க்கட்சி நண்பர்கள். கதர் அபிவிருத்தியில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. கோடி ரூபாய்க்கு மேல் உற்பத்தியாகும் கதரை வாங்கும் அளவிற்கு கதர் உற்பத்தி முன்னேறியிருக்கிறது என்றால் அதை யாரும் மறுக்க முடியாது. சிறு சிறு கைத்தொழில்கள் முன்னேறுவதிலும் கோயம்புத்தூர் ஜில்லாதான் முன்னணியில் நிற்கின்றது. எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும் கோயம்புத்தூர் ஜில்லாதான் முன்னணியில் நிற்கிறது, கதர்த் துறையிலும்கூட தமிழ்நாட்டில் இது கோவையில்தான் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. ஆக, எதிர்க்கட்சியினரும் இந்தத் தொழிலில் அக்கரை கொண்டு இத்தொழில் முன்னேற தீவிர முயற்சி எடுத்துக்கொண்டு இதுபற்றி பிரசாரம் செய்யுமாறு அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, நெய்வேலி பற்றி ஒரு வார்த்தை. இதுபற்றி அரசாங்கத்தின் சார்பில் பல முறை பேசப்பட்டிருக்கிறது, எதிர்க்கட்சியினரும் இதுபற்றி பல முறை பேசியிருக்கிறார்கள், நிபுணர்களும் இதுபற்றி ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் மத்திய சர்க்கார் இத்தொழிலை நடத்தினால் நிலக்கரியை அங்கு எடுத்துச் செல்லப் போவதில்லை, அந்தப் பணம் அவர்களுக்குப் போய்விடுமே என்றால், அதற்கு ஒரு வழி சொன்னால் இந்த சர்க்கார் 100 கோடி கூட கடன் வாங்கத் தயார். ஆனால் வரி போட்டால் வரி போடுகிறார்கள், மக்களை அம்பலத்தில் விட்டுவிடுகிறார்கள் என்கிறார்கள். எதிர்க்கட்சியினர் தைரியம் சொல்லி இதற்கு ஆதரவு கொடுத்தால், மத்திய சர்க்கார் செலவு செய்திருப்பது பூராவையும் கொடுத்துவிட்டு நாமே நிலக்கரி உற்பத்தியை எடுத்துக் கொள்ளலாம். நிபுணர்கள் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள், ஆகவே மக்களின் மனதை வீணாகக் குழப்பி சர்க்கார் ஒன்றுமே செய்யவில்லை என்று சொல்லாமல் நாங்கள் செய்திருப்பதையாவது ஒப்புக்கொள்ள அவர்களுக்கு ஆண்டவன் அருள்புரிய வேண்டுமென்று சொல்லிக்கொண்டு, இந்த மான்யத்தை ஆதரிக்கிறேன்.

* **Sri M. R. KANDASWAMI MUDALIYAR :** அந்த சபை முன் வந்திருக்கக்கூடிய கைத்தொழில் மான்யக் கோரிக்கையை ஆதரித்து சில விஷயங்கள் கூற விரும்புகிறேன். நம் ராஜ்யத்தில்



10th March 1961] [Sri M. R. Kandaswami Mudaliar]

தொழில் அபிவிருத்தி நன்கு அடைந்திருக்கிறதென்பதில் சந்தேகமேயில்லை. எதிர்த் தரப்பினர் எவ்வளவோ குறைகள் சொல்வதாகயிருந்தாலும், அவர்கள்கூட அழுத்தந்திருத்தமாக ஒன்றும் குறை சொல்லவில்லை. லேசான முறையில், அமைச்சர் அவர்களுக்கு இன்னும் சிறிது உற்சாகம் ஊட்டக்கூடிய முறையில்தான் அவர்கள் உரைகள், இந்த பட்ஜெட்டின் பேரில் இருக்கின்றனவே தவிர தொழில் துறை வளர்ச்சியடையவில்லை அல்லது முன்னேறவில்லை என்ற காரணத்தைக்கொண்டு பேசக்கூடிய முறையில் இந்த பட்ஜெட் விவாதத்தில அவர்கள் பேச்சு இல்லை. அதிலிருந்தே நம் ராஜ்யத்தில் தொழில்துறை நல்லமுறையில் அபிவிருத்தி அடைந்திருக்கிறது என்பதையும், தொழில் அபிவிருத்தியில்தான் நாம் நல்ல முற்போக்கு அடைந்திருக்கிறோம் என்பதும் எதிர்த்தரப்பு அங்கத்தினர்களின் வாதத்திலிருந்தே தெரிகிறது. தொழில் துறையில் முன்னேற்றம் ஏற்பட்டும்கூட உற்பத்தி செய்யப்படுகிற பொருள்களுக்கு ஏற்கனவே இருந்ததை விட இன்று தட்டுப்பாடு அதிகமாகயிருக்கிறது என்று சொல்லலாம். அதற்கு நம் நாட்டில் அதிக உற்பத்தியில்லாதது காரணம் அல்ல. நம் உள்நாட்டில் ஏற்பட்டிருக்கிற தொழில் அபிவிருத்தியோடு, வெளிநாடுகளிலிருந்து வரக்கூடிய பொருள்கள் இன்று கட்டுப்படுத்தப் பட்டிருப்பதால் எவ்வளவு அதிகம் நாம் உற்பத்தி செய்தாலும் நமக்குப் பற்றாக்குறை ஏற்படுகிறதே தவிர தொழில் துறையில் நாம் அபிவிருத்தி அடையாததால் அல்ல.

(Deputy Speaker in the Chair.)

ஸ்டர்லிங் நிலையை அனுசரித்து பல பொருள்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்தும் நிலையை நம் அரசாங்கம் ஏற்படுத்தியதால்தான் இது ஏற்பட்டது. குடிசைத் தொழிலானாலும் சரி, நடுத்தரத் தொழிலானாலும் சரி, பெரிய தொழில்களானாலும் சரி, நம் அரசாங்கம் அவைகளின் வளர்ச்சியில் மிகுந்த அக்கரையும், உற்சாகமும் கொண்டுள்ளதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் சிறிய தொழில்களுக்கு அரசாங்கம் இன்னும் அதிக பாதுகாப்பு அளிக்க வேண்டும். கைத்தறி நெசவாளர்களும், கைத்தறித் தொழிலும் அபிவிருத்தி அடைவதில் மிகுந்த ஆர்வமும், சிரத்தையும் கொண்டிருக்கிறார்கள் நமது அமைச்சர் அவர்கள். அவர்களைவிட இந்தத் தொழிலில் அதிக ஆர்வம் காட்டக்கூடியவர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லமுடியாது. ஆகவே இத்துறைபற்றி நான் குறும்பு சொல்ல விரும்பவில்லை. இருப்பினும், அரசியல் அமைப்பின் காரணமாக சிற்சில சங்கடங்கள் ஏற்படுகின்றன. அவைகளை நிவர்த்தி செய்து இத்தொழிலுக்கு ஊக்கம் கொடுக்கவேண்டுமென்று அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். சுமார் 1½ ஆண்டுகளுக்கு முன்பே நூல் குறைந்த விலையில் நெசவாளர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்பது பற்றி சிரத்தை எடுத்து காரியங்கள் செய்தார்கள். ஆனால் அதன் பலன்

[Sri M. R. Kandaswami Mudaliar] [10th March 1961

இன்னும் நெசவாளர்களுக்குக் கிடைக்கவில்லை. அதுமட்டுமல்ல. மத்திய அரசாங்கம் அமைச்சர் அவர்கள் மில் அதிபர்களைக் கூப்பிட்டு பலமுறை வற்புறுத்தியும் குறைந்த விலையில் நூல் கொடுக்கக் கூடிய முறையில் ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. அதுவும் இன்றைக்குச் சரியான முறையில் நடைபெறவில்லை. இதன் காரணமாக சிறிய தொழிலாக வைத்துக்கொண்டு சுமார் 40 ரூபாய், 30 ரூபாய் மூலதனத்திலே தங்கள் தொழில்களை நடத்திக் கொண்டிருக்கிற கைத்தறி நெசவாளி 1½ ஆண்டு காலமாக நூலை அதிக விலை கொடுத்து வாங்கினால், கிடைக்கக்கூடிய கூலியைக் கொண்டு, அதிக விலையினால், எப்படி வாழ முடியும் என்று அமைச்சரவை சிந்தித்துப் பார்க்கவேண்டும். தங்களுக்குக் கிடைக்கக்கூடிய 1½ அல்லது 1¼ ரூபாய் கூலியில் நூல் விலை அதிகம் காரணமாக 12 அணா அல்லது 8 அணா அதிகம் கொடுத்து விட்டால், மீதி இருக்கக்கூடிய வருவாயை வைத்துக்கொண்டு அவர்கள் வாழ்க்கை நடத்துவது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இது இப்போது மட்டும் இல்லை—1½ ஆண்டு காலமாக இருந்து வருகின்றது. இந்த விஷயத்தில் அமைச்சரவை சிறந்த கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நூல் விலை ஏற்றத்தைத் தடுக்கும் அதிகாரம் மத்திய அரசாங்கத்திற்குத்தான் இருப்பதால் நாமாக ஒன்றும் நடவடிக்கை எடுக்க முடியவில்லை. மத்திய அரசாங்கத்திற்குத்தான் அதிகாரம் இருக்கிறது, இதில் நாம் ஒன்றும் செய்வதற்கில்லை என்று சொல்லி நடவடிக்கை எதும் எடுக்காமல் அவர்களைப் பட்டினியில் கிடக்கச் செய்தால் அது சரியான முறை அல்ல, இந்த அமைப்பும் சரியான அமைப்பாக இருக்காது. இதற்கு விரைவில் பரிகாரம் கண்டுபிடித்து மத்திய சர்க்கார் அதிகாரத்தை உபயோகித்து குறைந்த விலையில் நூல் கிடைக்கக்கூடிய வகையில் மில் அதிபர்களின் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அந்த அதிகாரத்தை நாமாவது பெற்று குறைந்த விலையில் நூல் வாங்கிக்கொடுக்க வழிவகை செய்து நெசவாளிகளின் கொந்தளிப்பைத் தடுக்க அமைச்சர் அவர்கள் இதில் பிரத்தியேக கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த தொந்திரவைக் குறைக்க ஒரு யோசனையை நான் பல முறை இந்தச் சபையிலே சொல்லியிருக்கிறேன். 16 கதிர்களைக் கொண்ட சிறு நூற்பு யந்திரத்தை வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்து கிராமங்களில் வினியோகம் செய்து நூல் உற்பத்தி செய்ய வழிவகை செய்தால் கைத்தறிக் காரர்களுக்கு மில்லையே நம்பிக்கொண்டிருக்கும் அவசியம் இருக் காது என்று சொல்லிக்கொள்ளுகிறேன். இதை ஏன் அமைச்சர் அவர்கள் செய்ய முன் வரவில்லை என்று மிகவும் வருத்தத்தோடு கேட்கவேண்டியிருக்கிறது. ஒன்று மில் முதலாளிகளைக் கொண்டு கைத்தறிக்கு வேண்டிய நூலை விநியோகிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இல்லையானால் இந்த முறையிலாவது நூலை உற்பத்தி செய்ய வசதி செய்தாகவேண்டும். வருடம் பூராவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறவர்கள் விஷயத்தில் ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது அவ்வளவு சரியல்ல என்று சொல்லிக் கொள்கிறேன்.



10th March 1961] [Sri M. R. Kandaswami Mudaliyar]

அது மட்டுமல்லாமல் ஆர்ட் ஸில்க்கை எடுத்துக்கொண்டாலும் அங்கும் அதே நிலைதான். முன்பு சொசைட்டிகள் அவர்களுக்கு வேண்டியதை அவர்களே இறக்குமதி செய்து வந்ததை மாகாணக் கூட்டுறவு சங்கத்தின் மூலமாக இறக்குமதி செய்யவேண்டுமென்று அரசாங்கம் உத்திரவு பிறப்பித்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். அதன் காரணமாகத்தான் தங்கள் தங்கள் தேவைக்குத் தகுந்தாற் போல இறக்குமதி செய்ய முடியாமலே மாகாண சொஸைட்டியும் தேவைக்குத் தகுந்தாற்போல சப்ளை செய்ய முடியாத நிலையும் இரண்டு வருஷ காலமாக பட்டு நூல் கிடைக்காத நிலையில் கஷ்டப் பட்டுக்கொண்டு 4 ரூபாய்க்கு வாங்கக்கூடிய பட்டுக்கு 10 ரூபாய் விலை கொடுத்து வாங்குகிறார்கள்; 6 ரூபாய் அதிகம் விற்பதால் கட்டுப்படியாகாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இறக்குமதி செய்யக்கூடிய பட்டை பிரித்துக் கொடுப்பதற்குப் பல தனிப்பட்ட சங்கங்கள் அமைந்திருக்கின்றன. அந்த சங்கங்கள் வரக் கூடிய கோட்டாவை அந்தந்த நெசவாளிக்குப் பிரித்துக்கொடுக்கக்கூடிய முறையில் ஒழுங்காகப் பிரித்துக்கொடுப்பதில்லை; இறக்குமதி செய்யக்கூடிய பட்டுக்கான கோட்டாவும் சரியாகக் கிடைக்காத காரணத்தினால் பல நெசவாளிகள் பட்டு நூலைக் கள்ள மார்க் கெட்டில் வாங்கும் காரணத்தினால், அவர்களுக்குக் கிடைக் கக்கூடிய கூலியிலிருந்தே அதிக விலை கொடுக்கவேண்டி யிருப்பதால், நமது சர்க்கார் நெசவாளிகளுக்குத் தேவையான ஆர்ட் சில்க்கை இறக்குமதி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைய தினம் அத்தியாவசியமில்லாத பொருள் களை பல கோடிக்கணக்கான ரூபாய் அளவுக்கு இறக்குமதி செய் கிறோம். இப்படி ஆடம்பரப் பொருள்களை இறக்குமதி செய்வதை நிறுத்திவிட்டு ஜீவனத்திற்காகச் செய்யும் இந்தத் தொழில்களுக்கு வேண்டிய பொருள்களை வெளி நாடுகளிலிருந்து அதிகம் இறக்கு மதி செய்து இந்தத் தொழில்களை விருத்தி செய்வதில் வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவு சங்கங்களின் கீழ் இருக்கக்கூடிய சொஸைட்டிகளே, அரசாங்கம் கொடுக்கும் ரிபேட்டை வாங்கக்கூடிய நெசவாளிகளே கஷ்டப்படுகிற நேரத்தில் ரிபேட் கிடைக்காத தனிப்பட்ட நெச வாளி அதிக விலை கொடுத்து வாங்கி ஜீவிக்க முடியுமா என்று அமைச்சரவை கவனிக்க வேண்டும். ஏன், அவர்களும் கூட்டுறவு சங்கங்களில் அங்கத்தினர்களாகச் சேரலாமே என்று அமைச்சர் அவர்கள் கேட்கலாம். கூட்டுறவு சங்கத்தில் சேர்ந்து அதிகமாக உற்பத்தி செய்தாலும், 'பொய்க் கணக்கு வைத்திருக்கிறாய், ஆகையால் கொடுக்க முடியாது' என்று சொல்லக்கூடிய நிலையில் இப்போது 5,000 ரூபாய் அளவுக்கு நிறுத்தி வைக்கப்பட்டிருக் கிறது. குறிப்பாக காலிப்பட்டி வீவர்ஸ் கோவாபரேடிவ் சொஸைட்டியில் இந்த நிலை இருக்கிறது.

அடுத்தபடியாக சேலம் இரும்புக் கனியை எடுத்து இரும்புத் தொழிற்சாலை ஏற்படுத்தும்போது, அதை சேலத்திலேயே ஏற்படுத்தவேண்டும். அதை நிலக்கரி இருக்கக்கூடிய இடத்தில் ஏற்படுத்தவேண்டுமா அல்லது இரும்பு கிடைக்கக்கூடிய இடத்தில்

[Sri M. R. Kandaswami Mudaliyar] [10th March 1961

ஏற்படுத்தவேண்டுமா என்று பார்க்கக் கூடும். ஆனால் இந்தத் தொழிற்சாலையை சேலத்திலேயே ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : The hon. Member's time is up.

SRI M. R. KANDASWAMI MUDALIAR : அடுத்தபடியாக, எல்லா பெரிய தொழிற்சாலைகளும் நடுத்தரத் தொழில்களும், சிறு தொழில்களும் டவுன்புறத்திலேயே ஏற்படுத்தப்படுகிறது. கிராமப் புறங்களில் இவைகளை ஏற்படுத்தவில்லை. அப்படியில்லாமல் கிராமப்புறங்களிலேயே இவைகளை ஏற்படுத்தவேண்டும், அதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

* SRI R. CHIDAMBARA BHARATHI : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இன்றைய தினம் இந்தத் தொழில் மான்யக் கோரிக்கையை நான் வரவேற்றுப் பேசும்போது பழைய ஒரு ஞாபகம் தோன்றுகிறது. 6,000 மைல்களுக்கு அப்பால் மேற்கே இங்கிலாந்தில் இந்திய நாட்டின் தலைமை சர்க்கார் இருந்தபோது வடக்கு வாழ்ந்தது—தெற்கு தேய்ந்தது ; இது சரித்திரம் . . .

DEPUTY SPEAKER : மான்யத்தைப் பற்றிப் பேசினால் நலமாக இருக்கும். கனம் அங்கத்தினருக்குக் கொடுத்திருப்பது 7 நிமிஷங்கள்தான்.

SRI R. CHIDAMBARA BHARATHI : சந்தோஷம். இப்போது மேற்கேயிருந்து வடக்கே வந்து டில்லியிலே தலைநகரான பிறகு, 7-8 வருஷங்களுக்குள்ளாக தென் நாடு எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறது என்று வாயால் சொல்லுவது அல்ல, எழுத்தால் எழுதுவது அல்ல, கண்ணால் பார்க்க முடிகிறது. நல்ல முறையில் இன்னும் பரவலாகத் தொழில் வளர்ச்சி ஏற்படுவதற்கு மூன்றுவித கொள்கைகளில் தொழில்கள் தென்னகத்தில் வர வேண்டுமென்று நான் அபிப்பிராயப்படுகிறேன். ஒன்று கனரகத் தொழில், மற்றொன்று மக்களுக்குத் தேவையான பொருள்களை யந்திரங்கள் மூலமாக உற்பத்தி செய்யக்கூடிய தொழில், மற்றொன்று கைத்தொழில். ஆக இந்த மூன்றையும் போட்டியில்லாமல் இணைத்துச் செய்வதற்குத்தான் சர்க்கார் இப்போது கொண்டு வந்திருக்கக்கூடிய மான்யத்தில் ஒதுக்கியிருக்கக் கூடிய தொகையையும், திட்டத்தையும் பார்க்கும்போது அந்தக் கருத்துடன்தான் செய்திருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன். அந்தக் கருத்துடன் செய்யும்போது மிக முக்கியமாக இருக்கக்கூடியதில் வெல்லம் உற்பத்தி செய்வது, தோலினால் செருப்பு, மணிபர்ஸ், கைப்பெட்டி இவைகள் கையினால் செய்யக்கூடியது. இப்படிக் கையினால் செய்யக்கூடிய அநேக சாமான்கள் இப்போது மறைந்து வருகின்றன. அத்தகைய தொழில்களில் ஈடுபட்டவர்கள், இப்போது அந்தத் தொழில்களெல்லாம் யந்திரங்கள் மூலமாக நடைபெறுவதால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆதலால் அதைத் தடுக்க சர்க்கார் ஆலோசிக்க வேண்டும். அதிலும் முக்கியமாக



10th March 1961] [Sri R. Chidambara Bharathi]

ராமநாதபுரம் ஜில்லாவிலும், பரவலாகத் தமிழ் நாட்டிலும் வெல்ல உற்பத்தியும் தோல் பொருள்கள் உற்பத்தியும் கைத்தொழில் முறையிலே சிறுகச் சிறுக, ஆங்காங்கு, சொற்ப முதலில் நடந்து வருகின்றன. அதற்கு நாம் ஒரு முனை வரி போடுவதன் மூலமாக, உற்பத்தி செய்கிறவர்களே வரி கொடுக்க வேண்டியிருக்கிறது. அந்த நிலைமை காரணமாக 1,000 அல்லது 2,000 ரூபாய் மூலதனம் போட்டு சொற்ப லாபத்தில் கையால் அந்த சாமான்களைச் செய்து மற்ற மாநிலங்களுக்கு அனுப்புவதோடு, மற்ற மாநிலங்களில் செய்யக்கூடிய சாமான்களோடு போட்டி போடக்கூடிய நிலையில் அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதில் தோல் சாமான்கள் மிகவும் முக்கியமானது. ஒரு முனை வரி ஜாபிதாவில் தோல் சாமான்களைச் சேர்த்திருக்கிறார்கள். அதை விட்டு அவைகளுக்கு வரியே இல்லாமல் செய்யவேண்டும் ; இல்லை போட்டுத் தான் ஆகவேண்டுமென்றால் பல முனை வரியாக ஆக்கினால் அந்தத் தொழில் இன்னும் சிறக்கும்.

அடுத்தபடியாக கிழக்கு ராமநாதபுரத்தின் மத்திய பாகமாக மானாமதுரை இருந்து வருகிறது. மத்திய பாகத்தில் இருப்பது மாத்திரமல்லாமல் பல தொழில்கள் வளர்ச்சி அடையக்கூடிய அளவுக்குக் கட்டிட வசதிகளை உண்டு பண்ணிக்கொள்ள, தண்ணீர் வசதியை உண்டு பண்ணிக்கொள்ள சாத்தியக் கூறுகள் இருக்கின்றன.

ஆதலால் கிழக்கு இராமநாதபுரத்திற்கு மத்திய இடமாகிய மானாமதுரையிலே ஏற்படுத்துவதற்குக் காரணமாக, அங்குள்ள வாலிபர்கள் பலர் படிப்பதற்கு முன்வருவதாலே, இப்போது அப் பகுதிகளிலே உள்ள வாலிபர்கள் மற்ற இடங்களுக்குச் சென்று படித்துக் கொண்டு வருவதாலும், அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் பொருளாதாரத் துறையிலே மிகவும் பாதிக்கப்பட்டு இருப்பதால், அவர்களுக்கு உதவக்கூடிய வகையிலே ஒரு பாலிடெக்னிக்கை மானாமதுரையில் ஏற்படுத்துவது மிகவும் நல்லதென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி அங்கு ஒரு பாலிடெக்னிக்கை ஏற்படுத்துவதின் மூலம், தொழில் துறையிலே அவர்களுக்கு உதவியதாகவும் இருக்கும். சென்ற பட்ஜெட் கூட்டத்திலும், அதற்குப் பிறகு நடந்த பல கூட்டங்களிலும் மானாமதுரையிலே ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டு வந்திருக்கிறேன். அதற்கான கோரிக்கையும் சர்க்காருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஆனால் இது குறித்து இதுவரை எந்தவிதமான பதிலோ, தகவலோ கிடையாது. இதற்குப் பிறகு நான் கேள்விப்பட்டதன் மூலம் தெரிந்துகொண்டது, தனிப்பட்ட ஒருவருக்கு அதே சர்க்கரை மில்லுக்கு சர்க்கார் உதவி செய்வதற்கு அபிப்பிராயம் இருந்து வருவதாகத் தெரிகிறது. ஆனால் மொத்தத்திலே பார்க்கும்போது, கூட்டுறவு முறையிலே அங்கே ஒரு சர்க்கரை ஆலையை ஏற்படுத்துவதைத்தான் அங்குள்ள மக்கள் விரும்பி ஏற்பார்கள். அந்த முறையிலே மக்கள் விரும்பி விண்ணப்பம் அனுப்பிய பிறகு, தனிப்பட்டவர்களுக்குக் கொடுப்பதற்கு

[Sri R. Chidambara Bharathi] [10th March 1961

யோசிப்பது ஏன் என்று தெரியவில்லை. ஒருவேளை அதை நிறுவுகின்ற முறையிலே, அதிக மூலதனம் சேர்ப்பதில் ஏதாவது சிரமங்கள் ஏற்பட்டு, அதனால் தனிப்பட்டவர்களுக்குக் கொடுப்பதற்கு முற்பட்டிருக்கலாம். அப்படி முற்பட்டாலும், ஏதாவது ஒரு துறையில் சர்க்கரை ஆலை அங்கு சீக்கிரமாக வருவதற்கு சர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது வெல்லமானது ஒரு கைத்தொழில் முறையிலே தயாரிக்கப்பட்டு வருகிறது. சிறுசிறு விவசாயிகள் தாங்களாகவே குறைந்த அளவு சாகுபடி செய்து, தாங்களாகவே சிறிய அளவில் வெல்லத்தைத் தயாரிக்கின்றனர். அது ஒரு நல பரம்பரையான தொழிலாக சிறிய சிறிய விவசாயிகளுக்குப் பெரிய அளவில் உதவிக் கொண்டு வருகிறது. ஆனால் இதில் மற்றவர்களும் இப்போது ஈடுபட்டு தொழில் செய்துகொண்டு வருகிறார்கள். ஆனால் இப்போது வெல்லத்தின் விலை மிகவும் குறைந்துவிட்டது. இதற்கு என்ன காரணம் என்று கேட்டால், இப்போது இதை ஏற்றுமதி செய்வதற்கு அனுமதியில்லை. அதன் காரணமாக விலை இறங்கி விட்டது என்று சொல்லப்படுகிறது. ஆகவே இதை நம்முடைய சர்க்கார் கவனித்து, ஆவன செய்ய வேண்டும். காரணம், வெல்லத்தினுடைய தன்மையை நாம் கவனிக்க வேண்டும். அதை மாதக் கணக்கில் வைத்துக்கொள்ள முடியாது. அது சீக்கிரம் எடையும் குறைந்துவிடும். உருகித் தண்ணீராகவும் போய்விடும். ஆகவே இதுபற்றி சீக்கிரமாகக் கவனித்து, விலையைக் கட்டுப்படுத்தி, தற்போதுள்ள நிலைமையைச் சீர்படுத்துவார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்தாற்போல், திருப்பத்தூரிலிருந்து ராமநாதபுரம் டிவிஷனில் ஆபீசர் அவர்கள் இரும்புச் சத்துள்ள மண்ணை அங்கிருந்து பரிசோதனைக்காக அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது. அந்த மண்ணில் சேலத்தைப் பார்க்கிலும் அதிகமான சதவிகிதம் இரும்புச் சத்து இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

**THE HON. SRI R. VENKATARAMAN :** அது பரிசீலனை செய்யப்பட்டு, அங்கே இரும்பு இல்லை என்பது தீர்மானமாகி, இந்தச் சட்டசபையிலும் அதைச் சொல்லியாகிவிட்டது.

**SRI R. CHIDAMBARA BHARATHI :** அந்த மாதிரி இல்லாவிட்டால், அதைப் பற்றி பேசவில்லை. நாட்டரசன்கோட்டையில் வார்னீஷ் செய்வதற்கு அங்கு நல்ல கலர் மண்கள் கிடைக்கிறது. தனிப்பட்டவர்களால் இத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு, பல கோளாறுகளினால் இப்போது அந்த தொழில் நிறுத்தப்பட்டது. அதை அரசாங்கம் எடுத்துக்கொண்டு அதை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களேயானால், நமக்கு நல்ல மூலப் பொருள்கள் கிடைப்பதற்கு உதவியாக இருக்குமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப் செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன். அதோடு இவ்வளவு நேரம் பேசுவதற்கு அனுமதி கொடுத்ததற்காகத் தலைவர் அவர்களுக்கு என் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



10th March 1961]

*** SRI M. A. MUTHIA CHETTIAR :** தலைவர் அவர்களே, தொழில் துறை மந்திரி அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த மான்யத்தை நான் ஆமோதித்துப் பேச இருக்கிறேன். நம் தொழில் துறை அமைச்சர் அவர்கள் உலகமெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்வதாலும், அவர்கள் அடிக்கடி அமெரிக்காவுக்கும், யூரோப்புக்கும் போகிற காரணத்தினாலே, அவர்களுக்கு ஏற்படும் அனுபவத்திலே நம் நாட்டுக்கு அதிகமான நன்மைகள் தொழில் துறையிலே ஏற்படுவதாலும், அதற்கான முயற்சிகளை அவர்கள் எடுத்துக் கொள்வதாலும், நாம் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறோம்.

நம் நாட்டிலே பெரும் தொழில்கள் எல்லாம் ஏற்பட்டிருக்கிறது. நேரம் குறைவாக இருந்து, சுருக்கமாகச் சொல்ல வேண்டியிருப்பதாலே அவைகளையெல்லாம் லிஸ்ட் பண்ணிச் சொல்ல முடியாது. ரயான் போன்ற தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. இன்னும் சில தொழில்கள் வரப் போகிறது. ஆனால் இப்போது நான் சொல்ல விரும்புவது இந்த ப்ரைவேட் செக்டாரைப் பற்றி. இந்தத் தனியார் துறை செய்யக்கூடிய வேலையைப் பற்றிச் சுருக்கமாக ஒரே வார்த்தையில் சொல்வதற்கு கடமைப்பட்டிருக்கிறேன். அதாவது அவர்களுக்குப் பெரிய பாராட்டு தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம்.

பொதுவாக, இந்தியாவிலே அதுவும் தென்னாட்டிலே, வடநாட்டிலே இருப்பதைப் போன்ற பெரிய தொழில்கள் இல்லை என்பதை கனம் அமைச்சர் அவர்களே சொல்லி ஒப்புக்கொண்டிருக்கிறார். ஆகையாலே அதற்கு முயற்சி செய்துகொண்டு போவதற்கு நாம் துணையாக, ஆதரவாக இருந்தால்தான், அமைச்சர் அவர்கள் டெல்லியிலே சென்று இன்னும் அதற்கான முயற்சிகள் செய்வதற்கு ஒத்தாசையாக இருக்கும். அதிலும் பப்ளிக் செக்டார் தொழில்கள் நமக்கு அதிகமில்லை. தென்னாட்டைப் பற்றியும், வடநாட்டைப் பற்றியும் பேசாமல் இந்த மான்யத்தைப்பற்றி பேசுவதற்கு முடியவில்லை. அதைவிட சும்மா இருக்கலாம். ஆகவே மந்திரி அவர்கள் இதைப் பற்றியெல்லாம் முயற்சி எடுத்துக்கொள்வதற்கு வேண்டிய முறையில் அவரைப் பலப்படுத்த வேண்டும்.

ஹெவி எலக்ட்ரிகல் இண்டஸ்ட்ரீஸ் தென்னாட்டிலே திருச்சிராப்பள்ளியில் எடுக்க வேண்டுமென்று முன்பு அபிப்பிராயங்கள் எல்லாம் சொல்லப்பட்டு வந்தது. ஆனால் இப்போது அதைப்பற்றி தகவலே இல்லை. இந்த ஹெவி எலக்ட்ரிகல் இண்டஸ்ட்ரீஸ் இந்தியாவிலே இரண்டு இடங்களில் ஏற்படுத்தப் போவதாகக் கூறப்பட்டது. இப்போது ஒன்று போபாலில் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. மற்றொன்றை இங்கு ஏற்படுத்துவதற்கு கனம் அமைச்சர் அவர்கள் முயற்சி செய்வார்கள் என்று நம்புகிறேன். அந்த முயற்சியைப்பற்றி நாம் மத்திய அரசாங்கத்திற்கு வலியுறுத்திச் சொல்ல வேண்டும். இவர்கள் இப்படிச் சொன்னால், மத்திய அரசாங்கமும் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

[Sri M. A. Muthia Chettiar] [10th March 1961

ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் பற்றி சென்ற வருஷம் பேசும் போது இண்டஸ்ட்ரீஸ் எஸ்டேட்டில் பல இடங்கள் காலியாக இருப்பதாகக் கூறப்பட்டது. இப்போது கேள்விப்பட்டால், எல்லாம் பூர்த்தியாகி விட்டதாகச் சொல்லப்படுகிறது மேலும் தேவை என்று சொல்வதாகத் தெரிகிறது. நம்முடைய மக்கள் எல்லோரும் இதிலே அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. ஆனால் இதிலே வேலை செய்யக்கூடிய டெக்னிகல் ஆட்கள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. என்ஜினியரிங் காலேஜ்கள், பாலிடெக்னிக்குகள் பல ஏற்படுத்தப்பட்டு, இந்த டெக்னிகல் ஆட்கள் கிடைப்பதற்கு ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் அயல்நாடுகளிலே உள்ள சவுகரியத்தைப்போல் இங்குள்ள மாணவர்களுக்கு ஒர்க் ஷாப்பில் பழகுவதற்குச் சந்தர்ப்பம் இல்லை. இரண்டாவது காரணம்; அப்படி பாலிடெக்னிக்குகள் இருக்கக்கூடிய இடத்திற்கு அருகாமையில் பெரிய ஒர்க் ஷாப்புகள் இல்லை. இவைகள் ஒன்றாக இருந்தால், மாணவர்கள் நல்ல முறையில் கற்பதற்கு வசதியாக இருக்கும். ஆகவே இவைகளை எல்லாம் நேரிலே கவனித்து நல்ல முறையிலே வேலை செய்ய ஒரு லயாசன் ஆபிசர் நியமிக்கப்பட்டால், இண்டஸ்ட்ரீஸ் டைரக்டருக்கு மிகவும் உபயோகமாக இருக்கும். முன்பு இண்டஸ்ட்ரீஸ் டைரக்டராக இருந்தவரே இப்போது அந்த இலாகாவுக்குக் காரியதரிசியாகவும் இருந்து வருகிறார். ஆகையினாலே அவர் இவைகளையெல்லாம் நன்கு கவனித்துச் செய்வார். ஆகவே இப்படி ஒரு ஸ்பெஷல் ஆபிசரைப் போட்டு எல்லா இண்டஸ்ட்ரீசுக்கும் வசதி செய்து கொடுத்தால், பூரணமாக 6 மாதம் என்று இல்லாவிட்டாலும் 6 வாரமாவது அல்லது இரண்டு மாதமாவது தொழிற்சாலைக்கு நேரடியாகப் போய் பழகிக் கொள்வதற்கு சவுகரியம் ஏற்படுமென்று நம்புகிறேன். அது முக்கியமானது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று முக்கியமானது. நம் நாட்டிலே நாம் தொழில்களிலே மட்டும் விசேஷமாக கவனம் செலுத்திக் கொண்டு வந்தால் போதாது. தொழில் அபிவிருத்தியை அனுசரித்து ரோடு ரயில் போக்குவரத்து ஆகியவைகளையும் அபிவிருத்தி செய்தாக வேண்டும். ரயில் போக்குவரத்தை அபிவிருத்தி செய்யவேண்டுமென்பதைப்பற்றி நாம் டெல்லிக்கு அதிகமாகச் சொல்லி வந்திருக்கிறோம். ஆகவே கனம் அமைச்சர் அவர்கள் டெல்லி ரயில் மந்திரி அவர்களிடம் சொல்லி இதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். இந்தப் போக்குவரத்துகள் அதிகமானால்தான், தொழில் அபிவிருத்தியையும் நாட்டிலே அதிகப்படுத்த முடியும். ஆகவே அதற்கான முயற்சியையும் கனம் அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொள்வார்களென்று நம்புகிறேன்.

இப்போது சிலோனைப்பற்றி நான் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சிலோனுக்கும், இந்தியாவுக்கும் வியாபாரம் அதிகமாக நடந்து கொண்டிருந்தது ஒரு காலத்தில். முன்பெல்லாம் இங்கிருந்து லுங்கி, நூல் முதலிய பொருள்கள் வியாபாரப் பொருள்களாகப் பெரிய அளவில் இங்கிருந்து ஏற்றுமதியாகி வந்தது. இப்போது சிலோனில் ஏற்றுமதிச் சட்டத்தை மாற்றி



10th March 1961] [Sri M. A. Muthiah Chettiar]

இருப்பதாகத் தெரிய வருகிறது. அதைச் சரி செய்வதற்கு டெல்லியிலிருந்து அனுப்பப்பட்டிருக்கும் ட்ரேட் கமிஷனரோ அல்லது ஏஜெண்டோ அல்லது ஹை கமிஷனரோ நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கு சென்னை அரசாங்கத்தார் ஏற்பாடு செய்யவேண்டும். முன்புபோல் தொடர்ந்து சிலோனுக்கும், இந்தியாவுக்கும் லுங்கி வியாபாரம் நடக்கும்படி செய்யவேண்டும்.

இப்போது ஒரு நண்பர் சொல்லச் சொன்னார். அவரிடம் 12-p.
கேள்விப்பட்டதைச் சொல்கிறேன். இப்பொழுது 'ஷுகர் பாக்டரிகளில்' அதிகமாகச் சர்க்கரை உற்பத்தி செய்கிறார்கள் என்று கேள்விப்படுகிறோம். சிலோனுக்கு 'ஜாகரி' ஏற்றுமதியை நிறுத்தி விட்டார்கள். அதை நிறுத்த வேண்டிய தேவையில்லை. அதிகமாக சர்க்கரை உற்பத்தியாவதால், வெல்லத்தை ஏற்றுமதி செய்வதற்கு அனுமதித்தால், அது வெல்லம் காய்ச்சுபவர்களுக்கு உதவியாக இருக்கும்.

கடைசியாக, தொழில்துறை அமைச்சர் அவர்களை அவர்கள் தொழில் துறையில் எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்காக பாராட்டுகிறேன். அவர்கள் 'லேபர் மினிஸ்டராகவும்' இருக்கிறார்கள். கடந்த 4 வருஷங்களாக 'லேபர் ரிலேஷன்ஸ்' நல்ல முறையில் இருந்து வருகிறது. அமைச்சர் அவர்களுடைய அனுபவத்தின் காரணமாக அது நம் மகாணத்திற்கு ஒரு பெருமையை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. இது விஷயத்தில் தென்னாட்டில் உள்ள தொழில் சங்கங்களையும் நாம் பாராட்ட வேண்டும். மந்திரி அவர்கள் ஒரு 'லயசனாக' இருந்தது இதுவரையில் அவர்களுக்கு அனுகூலமாக இருந்தது. வருங்காலத்திலும் அந்த அனுகூலம் கிடைத்தால்தான் 'தேர்டு பிளான்' நல்ல முறையில் நிறைவேற்ற முடியும் என்பதைச் சொல்லிக்கொண்டு; என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* SRI K. ANBAZHAGAN: சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே; தொழில் துறை மான்யத்தை ஒட்டி அதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை உண்மையாகவே போதுமானது அல்ல என்ற நோக்கத்தோடு பிரேரேபிக்கப்பட்ட வெட்டுத் தீர்மானத்தைத் தழுவிச் சில வார்த்தைகளை நான் கூற விரும்புகிறேன். ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை ஏறத்தாழ 3 கோடி ரூபாய். மாநில அரசாங்கத்தினுடைய வரவு செலவு ஏறத்தாழ 90 கோடி ரூபாய். எனவே இந்த 3 கோடி ரூபாய் முப்பதில் ஒரு மடங்காக இருக்கிறது. வளர்கின்ற சமுதாயத்தினுடைய தேவைக்கேற்ற பல்வேறு கடமைகளை ஒரு அரசாங்கம் நிறைவேற்றவேண்டுமானால், விதிக்கப்படும் வரியை நம்பி மட்டும் ஒரு அரசாங்கம் நடைபெற முடியாது என்பதை சமதர்மத்தை வரவேற்கிறோம் என்று சொல்லுகிற அரசாங்கம் உணர்ந்திருக்க வேண்டும். அப்படியானால், தொழில் துறையில் வருமானத்தைப் பெருக்க வேண்டுமென்று சொன்னால், இதற்காக 3 கோடி அல்ல; ஐந்து ஆறு கோடி ரூபாய் மட்டும் ஒதுக்கியிருப்பது மிகவும் வருந்தத்தக்கது. ஏறத்தாழ அரசாங்கத் துறையில் மொத்த வரவுசெலவுத் திட்டத்தில் பக்கில் ஒரு மடங்கு, எட்டில் ஒரு மடங்கு இதற்காக ஒதுக்கப்படுகிற நிலைமை ஏற்பட்டால்தான், 8 கோடி என்பது 15 கோடி ஆகி, 25 கோடியாக

[Sri K. Anbazhagan] [10th March 1961

வளர்ந்தால்தான், அதிலே கிடைக்கிற வருமானம் நிச்சயமாக அரசாங்கத்தின் மூலமாகப் பல துறைகளிலே பொது மக்களுக்கு நன்மை செய்வதற்குப் பயன்படும். அதனால்தான் ஒதுக்கப்பட்ட தொகை குறைவு என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். மேலும் வேறு வகையாக சில கோடி கடனுக்கு ஒதுக்கியிருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் தெரிவிக்கக்கூடும் என்றாலும் மேலும் பல கோடி இதற்குத் தேவை. இன்றையதினம் தொழில் துறையிலே மகத்தான வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்று காங்கிரஸ் நண்பர்கள் அமைச்சர் அவர்களை மிகுதியும் பாராட்டினார்கள். அவர்கள் பாராட்டுகிறபொழுது அமைச்சர் அவர்களிடத்திலே எனக்கு ஒரு கோபமும் இல்லை. இன்றையதினம் இருக்கும் தொழில் அமைச்சரை நானும் பாராட்டுகிறேன். ஏனென்றால் அதில் இருக்கக்கூடிய குறைபாடுகளை நன்றாகத் தெரிந்தவர் அவர் என்பதால்; பாராட்டிய காங்கிரஸ் உறுப்பினர்கள் கடைசி வரையில் பாராட்டுகிறார்களா என்று பார்த்தால்--திருமணத்திற்கு வந்தவர்கள் விருந்து பிரமாதம், கலியாணம் தனிச்சிறப்பு என்று சொல்லியவாறு விருந்தில் கலந்து கொண்டு 'என்னுடைய இலையிலே சோறு இல்லை, என்னுடைய இலையிலே பொறியல் இல்லை' என்று உணவு பரிமாறுபவனைக் கேட்பதுபோல்—எங்கள் மாவட்டம் மட்டும் பின்தங்கிவிட்டது, எங்கள் மாவட்டத்தில் மட்டும் தொழில் வளர்ச்சி இல்லை' என்று பலமுறை சொன்னார்கள். நான் கனம் உறுப்பினர்களை வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன். 'பாராட்டுகின்ற நேரத்திலாவது கொஞ்சம் குறை சொல்லாமல் இருக்கக் கூடாதா என்று. அந்த அளவுக்காவது அமைச்சருடைய செவி குளிரட்டுமே என்று அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஒரு நண்பர் கோவை உயர்ந்துவிட்டது என்று—வேதனையோடு அல்லது—மகிழ்ச்சியோடு குறிப்பிடுவதுபோலத் தெரிவித்தார். அவருக்கு நினைப்பு வடஆற்காடு மாவட்டத்தில். ஆனால் நான் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எந்த மாவட்டம் உயர்ந்தாலும், தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் வரவேற்கின்ற என் போன்றவர்கள், இராமநாதபுர மாவட்டத்தைப் போன்று இயற்கையிலேயே பல வகையிலே பிற்பட்ட நிலையிலுள்ள மாவட்டங்களுக்குத் தொழிலுக்குத் தொகை ஒதுக்கும்பொழுது அதிகமாக ஒதுக்க வேண்டும் என்று கருதுவார்கள். மற்ற மாவட்டங்களுக்கு ஒதுக்குகிற தொகை ரூ. 75 லட்சம் என்றால் அதே ரூ. 7,580 லட்சம் அளவிற்குத்தான் பிற்பட்ட மாவட்டங்களுக்கும் ஒதுக்கியிருக்கிறார்கள். அது மிகவும் குறைவாகும். பிற்பட்ட மாவட்டங்களுக்குச் சற்று அதிகமாக ஒதுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இதிலே ஏன் வடக்கு தெற்கு காணவில்லையா என்று கேட்கலாம். அவர்களுக்குச் சொல்லுகிறேன், அதுவே திசையைப் பொறுத்த வாதம் அல்ல, நிலைமையைப் பொறுத்த வாதம். நிலைமையைப் புரிந்து கொள்பவர்கள் எங்கே பிற்பட்ட நிலைமை இருந்தாலும், அதை முன்னேற்ற உறுதுணையாக எந்த அரசும் நடந்து கொள்ளவேண்டும் என்பதைத்தான் வற்புறுத்துவார்கள், இதையேதான் கனம் முத்தையா செட்டியார் அவர்கள் பேசுகிற



10th March 1961] [Sri K. Anbazhagan]

பொழுது, முதலிலே தெற்கு பின்தங்கி விடுகிறது என்று சொல்லி விட்டுப் பிறகு மேலும் வற்புறுத்தாத அளவுக்கு குறிப்பாகப் பேசி முடித்தார்கள்.

அடுத்து சர்தார் வேதரத்னம் அவர்கள் பேசும்போது பஞ்சாபில் குடிசைத் தொழில்கள் வளர்ச்சி அடைந்திருக்கிறது. ஆனால் இந்த மாநிலத்தில் குடிசைத் தொழில் வளருவதை ஏனோ கேலி செய்கிறார்கள் என்று குறிப்பிட்டார். பஞ்சாபில் குடிசைத் தொழில்கள் வளர்ந்திருக்கிறது என்றால், அரசாங்கம் நேரடியாக மேற்கொண்டு நடத்துகிற காரியம் அதற்குக் காரணம் அல்ல. அங்கே உள்ள மக்கள் இதை மேற்கொண்டிருக்கிறார்கள். அது போல குடிசைத் தொழில்கள் மக்கள் தாமாகவே முன்வந்து வளர்க்க வேண்டிய பகுதியிலே இருக்கவேண்டும். பெரிய தொழில்களும், தொழில் துறையிலே பல்வேறு வகையான நிபுணர்களைக் கலந்து ஆற்றப்பட வேண்டிய அடிப்படைத் தொழில்களும் தான் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு பெருக்கப்பட வேண்டும். மேலும் பஞ்சாபில் இன்றையதினம் உள்ள தொழில் குடிசைத் தொழில் என்ற பெயரில் கனம் வேதரத்னம் அவர்கள் அழைத்தாலும், அங்கு வளர்ந்திருக்கிற தொழில்கள் தொழில் நுணுக்கத்தோடு கூடியவை. தொழில் நுணுக்கத்தோடு கூடிய தொழில்கள் வளர்கின்ற காரணத்தினாலே பஞ்சாபில் வேலை வாய்ப்பு பெருகியிருக்கிறது. வேலை வாய்ப்பு பெருகியிருப்பது மட்டுமல்ல, வருமானம் நம்மைப்போல இரண்டு மடங்கு அளவுக்கு தொழில் துறையிலே அங்கு கிடைக்கிறது. அமைச்சர் வெங்கடராமன் அவர்கள் பஞ்சாபுக்கு மட்டும் அல்ல, அமெரிக்காவுக்கும் சென்று வந்தவர். இது தவறானால் சொல்லட்டும். இங்கே உள்ள குடிசைத் தொழில் போன்று குறைவான வருமானம் வரக்கூடிய குடிசைத் தொழில்கள்தான் அங்கே இருக்கிறது என்று சொல்லுவார்களேயானால், நான் தலை வணங்கி ஏற்றுக்கொள்கிறேன். எனவே நமது மாநிலத்தில் வளர்க்கப்படும் குடிசைத் தொழில் கண்டு திருப்தி ஏற்பட முடியவில்லை.

அடுத்து இங்கு தொழில் துறையில் வளர்ச்சி என்று சொல்லுவதை 1958-59-ம் ஆண்டு குறித்து அரசாங்கம் தந்திருக்கிற நிர்வாக அறிக்கையில் தொழில் துறையிலே எவ்வளவு பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்தது என்று பார்த்தால் விளங்கும். அதில் 0.6 சதவிகிதம், அதாவது ஒரு விழுக்காடு கூட கிடைக்கவில்லை. வேலை வாய்ப்பு எவ்வளவு பேர்களுக்கு அதிகமாக இருக்கிறது என்று பார்த்தால், ஒரு ஆண்டு முழுவதற்கும் 100-க்கு ஒரு ஆளுக்குக்கூட அதிகம் கிடைக்கவில்லை. ½ ஆள் அளவுக்கே கிடைத்திருக்கிறது, 0.6 சதவிகிதம் அளவுக்கு தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கக்கூடிய நிலையில் தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், புதியதாகத் தொடங்கி இருக்கும் தொழில்களின் பட்டியலைப் படித்து, தொழில் வளர்ந்து விட்டது என்று கூறுவது எப்படி இருக்கிறது என்றால்—அமைச்சர் அவர்களுக்குப் புரியும் என்று சொல்லுகிறேன்—பெண்—பார்த்து விட்டு வந்த உடனேயே, திருமணம் நடைபெற்று, குடும்பம் அமைத்து குழந்தை பிறந்துவிட்டது என்பதைப் போன்றதாகவே

எவ்வளவு ஏக்கருக்குப் பாய வழியில்லை என்பதை எடுத்துக் தண்ணீர் இல்லை என்று சொல்லக் கூடாது என்ற காரணத்திற்காகத்தான் அதிகாரிகள் செய்திருக்கிறார்களே தவிர, இதைக் குறையாக அங்கத்தினர்கள் எடுத்துக் கொள்ளக்கூடாது.

**SRI K. ANBAZHAGAN :** கட்டப்பட்டிருக்கிற அணைக்கட்டுத் திட்டங்களிலிருந்து ஆயக்கட்டின் முழு அளவுக்குத் தண்ணீர் பாயவில்லை என்ற கருத்தைத் தெரிவித்தேன். இனிமேலாவது ஆயக்கட்டை பகுதி பகுதியாகப் பிரித்து இன்னென்ன பகுதிக்கு இன்னென்ன நேரத்தில் தண்ணீர் விடவேண்டும் என்று வரையறுக்க வேண்டும் என்பதைத் தெரிவித்தேன். இப்பொழுது எவ்வளவு ஏக்கருக்குத் தண்ணீர் பாய வசதி இருக்கிறது, எவ்வளவு ஏக்கருக்கு பாய வழியில்லை என்பதை எடுத்துக் காட்டினேன். அதற்குப் பதிலளித்தால் ஏற்றுக் கொள்வேன்.

**THE HON. SRI P. KAKKAN :** நாம் திட்டங்களைப் போடுகிறோம். திட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு தண்ணீர் கொடுக்கும் முறையை கனம் அங்கத்தினர் தெரிந்து கொள்ளவேண்டும். கொஞ்ச நிலங்களுக்குத் தண்ணீர் கொடுத்தால் கூட பரவாய் இல்லை. அதிகமான நிலங்களை எடுத்துவிட்டு பிற்பாடு பூராவுக்கும் கொடுக்க முடியவில்லை என்றால் மக்கள் குறை கூறுவார்கள். ஆகையால் எவ்வளவு ஏக்கருக்குத் தண்ணீர் கொடுக்க முடியும் என்பதைப் பார்த்துத்தான் அதிகாரிகள் செய்கிறார்கள். திட்டத்தைக் குறைக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் செய்யவில்லை என்பதை கனம் அங்கத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே அவர்கள் முன்பு சொன்னதற்கும் பதில் சொல்லிவிட்டேன் என்று நினைக்கிறேன்.

நந்தன் கால்வாயைப் பற்றிச் சொன்னார்கள். நந்தன் கால்வாய்த் திட்டத்தைக் கொண்டுவரவில்லை என்று சில அங்கத்தினர்கள் சொன்னார்கள். ஸ்ரீமான் அன்பழகன் நந்தனைப் பற்றி பெருமையாகப் பேசுவதாகச் சொல்லுகிறார்கள். அவர் பெருமையாகப் பேசுகிறாரோ இல்லையோ நான் பெருமையாகப் பேசுகிறேன். அவர் கட்சியைச் சேர்ந்தவர்கள். நான் அந்த சாதியைச் சேர்ந்தவன். இந்த ஜாதியைச் சேர்ந்தவன் என்று என்னைப் பற்றி இழிவாகப் பேசியிருக்கிறார்கள். ஒன்றே குலம், ஒருவனே தேவன். இந்த ஜாதி, அந்த ஜாதி என்ற பாகுபாடே இருக்கக்கூடாது. நந்தனைப் பற்றிப் பெருமையாகப் பேசுகிறோம் என்று சொல்லுகிறவர்கள் தான் கக்கன் இந்த ஜாதியிலே பிறந்தவர், இழிவான ஜாதியிலே பிறந்தவர் என்று சொல்லுகிறார்கள். திரு. அண்ணாதுரை அவர்கள் கக்கன் மந்திரியாக இருக்கும் பொழுது நான் ஏன் மந்திரியாக வரக்கூடாது என்று பேசியிருக்கிறார்கள்.

**SRI K. ANBAZHAGAN :** அமைச்சர் அவர்கள் இந்த வாதத்தை தவறாக எடுத்துக்கொண்டு விட்டார்கள் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். இது ஜாதியைக் குறிக்கிற வாதம் அல்ல. கக்கன் அவர்கள் படித்த படிப்புக்கு அவர்கள் மந்திரியாக இருக்கும்பொழுது நான் ஏன் இருக்கக் கூடாது என்று சொன்னார்கள். அதற்கு வேண்டுமானால் பதில் அளிக்கட்டும்.



**THE HON. SRI P. KAKKAN :** கனம் அண்ணாதுரை அவர்கள் எம்.ஏ. படித்து இருக்கலாம். நான் எம்.ஏ. படிக்காத ஆள்தான். இந்தச் சர்க்காரைப் பொறுத்த வரையில் தமிழிலேயே எல்லா நிர்வாகமும் நடத்த வேண்டுமென்று சொல்லுகிறோம். தமிழுக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறோம். இப்படிப் பேசும்பொழுது தமிழை இழிவு படுத்துகிறார்களா அல்லது என்னுடைய ஜாதியை இழிவு படுத்துகிறார்களா என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும். கக்கன் மந்திரியாக இருக்கும் பொழுது நான் ஏன் மந்திரியாக இருக்கக்கூடாது என்று சொன்னால், கக்கனுடைய ஜாதி இழிவான ஜாதி அல்ல, மற்ற ஜாதிகளை விட உயர்ந்த ஜாதி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (ஆளும் கட்சியிலிருந்து ஆரவாரம்).

நந்தன் கால்வாய்த் திட்டத்தை அரசாங்கம் பரிசீலனை செய்து வந்தது. பல வருஷங்கள் ஆகிவிட்டன. அதிகப்படியாகச் செலவு செய்தாலும் அதிகமான அளவுக்கு நன்மை இல்லை என்ற காரணத்தினால் எடுத்துக் கொள்ளவில்லை. கனம் அங்கத்தினர் கோவிந்தசாமியும் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் அங்கேயுள்ள ஏரிக்குத் தண்ணீர் வருவதற்கு என்ன உதவி செய்யவேண்டுமோ, அதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்யப்படுமென்று கனம் அங்கத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவேரி-கங்கை இணைப்பைப் பற்றி கனம் அங்கத்தினர் சசிவர்ணத் தேவர் குறிப்பிட்டார். மதிப்பிற்குரிய ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் அவர்கள் அரசாங்கத்தின் எக்ஸிகூடிவ் கவுன்சிலிலே இருந்த காலத்தில் இதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதைப் பற்றி மத்திய அரசாங்கத்திற்கு எழுதிக் கேட்டதில், இந்த மாதிரி ஒரு திட்டமும் மத்திய அரசாங்கத்தின் திட்டத்தில் இல்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். மத்திய சர்க்கார் எடுத்துக் கொள்ள வேண்டிய திட்டம் இது. நாம் எடுத்துக் கொள்ளக் கூடிய வேலை அல்ல, இந்தத் திட்டத்தை எடுத்துக்கொண்டால் இதர மாகாணங்களும் ஒத்துழைக்க வேண்டும்.

**SRI N. K. PALANISAMI :** 1940-ல் சீப் எஞ்சினியர் நார்ட்டன் இந்த மாதிரி எல்லா நதிகளையும் லிங்க் செய்வதற்கு ஒரு திட்டம் கொடுத்தார்கள். அதைப்பற்றி விசாரணை செய்வதாக மந்திரி சொன்னார்களே. என்ன முடிவு எடுக்கப்பட்டது?

**THE HON. SRI P. KAKKAN :** கனம் அங்கத்தினர் கேள்வி நேரத்தை ஞாபகப்படுத்துகிறார். கங்கை-காவேரி இணைப்புத் திட்டம் ஒரு சுலபமான திட்டம் அல்ல. அந்தப் பக்கம் ஒரு ஓடையை வெட்டி இந்தப் பக்கம் இணைப்பதுபோல் அங்கத்தினர் பேசுகிறார்கள். அது ஒரு பெரிய திட்டம். எல்லா மாகாண அரசாங்கங்களும் ஒத்துழைக்க வேண்டும். மத்திய அரசாங்கம் தான் இதைப் பரிசீலனை செய்ய வேண்டும். ஆகவே, முடியும் முடியாது என்று சொல்லுவதற்கு இல்லை, எப்படி நெய்வேலித் திட்டத்தை மத்திய சர்க்கார் நடத்துகிறார்களோ, அந்த மாதிரி

[Sri K. Anbazhagan] [10th March 1961

நிலக்கரி போதுமான அளவுக்குக் கிடைக்கவில்லை. அமைச்சர் அவர்களும் இந்தத் தொழில் துறையைச் சேர்ந்தவர்களும் மாநிலத்திற்கு அதிக நிலக்கரி ஒதுக்குமாறு மத்திய சர்க்காருக்கு விண்ணப்பித்திருக்கிறார்கள். மேலும் உயர்த்தப்பட்டது. உயர்த் தப்பட்டது என்று சொன்னாலும் :

" During the months of October 1958 to January 1959 there was no movement of soft coke due to the dislocation in the railway traffic and 50 per cent cut on the monthly quota of the consumers had to be imposed."

என்று அறிக்கை விளக்குகிறது. இதைப் பயன்படுத்தித் தொழில் நடத்துகிறவர்களுக்கு 100-க்கு 50 விழுக்காடு தான் கிடைத்திருக்கிறது. இப்படிப் பல்வேறு செய்திகளை நான் இந்த நிர்வாக அறிக்கையிலிருந்து எடுத்துக் காட்ட முடியும். போதுமான இரும்பும் கிடைக்கவில்லை. போதுமான நிலக்கரியும் கிடைக்கவில்லை. நெய்வேலி நிலக்கரி வெளிப்படவில்லை, சேலத்து இரும்பு தோன்றவில்லை. இந்த நிலையிலேயா தமிழ் நாட்டிலே தொழில் வளர்ச்சியை எதிர்பார்க்கிறார்கள்? சிமெண்ட் தொழில் இருக்கிறது, சர்க்கரைத் தொழில் இருக்கிறது என்று சொன்னால், இந்தத் தொழில்கூட இல்லாமல் இன்றைக்குத் தமிழ் நாடு எப்படி தன்னைத் தானே ஓரளவு காப்பாற்றிக் கொள்ள முடியும்? அந்தத் தொழில்களின் வளர்ச்சியை இன்றையதினம் இருக்கின்ற அரசியல் அமைப்பு பல வழிகளிலே பாதிக்கச் செய்கிறது என்று நான் உறுதியாகக் கருதுகிறேன். இந்தத் தொழில் துறைக் கொள்கையைப் பற்றி அமைச்சர் அவர்கள் தந்திருக்கிற அறிக்கையிலே கூறுகிறார் :

" The State Government's Policy conforms to the Policy of the Government of India."

மாநில அரசின் தொழில் கொள்கை—மத்திய அரசின் கொள்கையோடு ஒத்ததாகும் என்று கூறுகிறார். இதைப் பார்க்கும் பொழுது எனக்கு வேதனையாக இருக்கிறது. அகில இந்தியாவுக்கும் தொழில் கொள்கை எதுவோ அதுவே நான் சென்னை மாகாணத்திற்கும் தொழில் கொள்கையாக இருக்குமேயானால், பின்தங்கி இருக்கும் நிலையை மாற்ற என்ன வசதி இருக்கிறது? பின்தங்கி இருக்கும் நிலைமைக்குக் காரணம் ஒரு காங்கிரஸ் உறுப்பினர் சொன்னார், தமிழ் நாட்டு முதலாளிகள் பணம் போட முன் வருவதில்லை, அவர்களிடத்தில் அதிக நிதியும் இல்லை என்று. அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்குமேயானால், தமிழ் நாட்டு அரசாங்கம் இதிலே அதிகமாக அக்கறை எடுத்துக் கொள்வதற்குத் தேவையிருக்கிறது. அதற்கான வழி இன்றையதினம் உள்ள அரசாங்கத்தின் கொள்கையில் அமையவில்லை.

அதேபோல் மற்றொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். தொழில் துறையிலே தனிக் கொள்கை இல்லாதது மட்டுமல்ல. நெய்வேலி, சேலம் போன்ற இடங்களிலே ஏற்பட வேண்டிய அடிப்படைத் தொழில்கள்கூட நம்முடைய மாநில சர்க்காருக்குச் சிறப்பு உரிமையும், தனி அதிகாரமும் இல்லாத காரணத்தினால் ஓரளவு தேங்கிப் போயிருக்கிறது. ஸ்டீல் பிராஜெக்டைப்



10th March 1961] [Sri K. Anbazhagan]

" The Experts of the German Democratic Republic submitted their report in May 1960. The report was considered by the Technical Committee appointed by the Government of India on August 8, 1960,"

என்ற குறிப்பு அமைச்சரால் தரப்பட்டிருக்கிறது. மே, 1960 என்பதற்கும், ஆகஸ்டு 1960 என்பதற்கும் இடையிலே இருக்கிற மூன்று மாத காலம் டெல்லி சர்க்காருக்கு அர்ப்பணித்திருப்பதால் விஷயம் காலம். ஒரு நாடு எடுத்துக்கொண்ட மூன்று மாத காலமானால், பின்னர் ஏற்பட்ட பல்வகை தாமதத்திற்கும் என்ன பதில் அளிக்கப்படுகிறது? அமைச்சர் வெங்கட்ராமன் அவர்களுக்கு இங்கே சொல்ல இருக்குமேயானால், கிழக்கு ஜெர்மனி போய் விட்டு வந்த உடனேயோ அல்லது மேற்கு ஜெர்மனி போய்விட்டு வந்த உடனேயோ, மறுநாள் காலையிலேயோ ஒரு குழுவை ஏற்படுத்த வேண்டுமென்ற வாய்ப்பு இருந்திருக்க முடியும். டெல்லி சர்க்காருக்கு இந்த அதிகாரம் இருக்கிற காரணத்தினாலே, இந்த அவல நிலை ஏற்படுகிறது. தாமதம் காலக்கேடு ஏற்படுகிறது. தொழில் வளர்ச்சியைப் பொறுத்த வரையில் காலந்தான் மிகவும் முக்கியமானது. எவ்வளவுக்கெவ்வளவு நாம் காலம் தாழ்த்துகிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு நாம் பின்தங்கிப் போகிறோம். அமைச்சர் வெங்கட்ராமன் அவர்கள், அமெரிக்காவுக்குச் சுற்றுப் பிரயாணம் செய்ய வாய்ப்புப் பெற்றவர்கள், ஒவ்வொரு மணித் துளியும் அங்கே எப்படிப் பயன் படுத்தப்படுகிறது என்பதைத் தெரிந்தவர்கள், நாட்டின் வளர்ச்சிக்கு இப்படிப்பட்ட கால தாமதம் ஏற்படலாமா என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

கடைசியாக ஒரு வேண்டுகோள். அமைச்சருக்குத் தெரிந்ததைத்தான் சொல்லுகிறேன். சிமெண்டைப் பொறுத்தவரையில் அகில இந்திய விலைக் கட்டுப்பாடு இருக்கிறது. ஆனால் நிலக்கரியைப் பொறுத்தவரையில் அகில இந்திய விலைக்கட்டுப்பாடு கிடையாது. வட இந்தியாவிலிருந்து கரி இங்கே வரவேண்டுமானால், எத்தனை மைலுக்கு அப்பால் வருகிறதோ, அத்தனை மைலுக்கு ஏற்றபடி விலை ஏறுகிறது. ஆனால் ராஜபாளையம், கோவை சிமெண்ட் வடநாட்டிற்குச் சென்றால்கூட, விலை ஏற முடியாது. குறிப்பிட்ட விலைக்கே வட இந்தியாவிலும் விற்கப்பட வேண்டும். வடநாட்டுப் பொருள் தெற்கே வருகிறபொழுது வருகிற செலவையும் சேர்த்து நம்மிடம் வாங்குகிறார்கள். ஆனால் தென்னாட்டுப் பொருள் வடக்கே போகும்பொழுது செலவு போக கிடைக்கும் விலையையும் தேய்ந்து கொண்டே போகிறது. இந்த நிலைமை நீடிப்பதை நமது தொழில் அமைச்சர் ஏற்றுக் கொள்ள மாட்டார் என்ற நம்பிக்கையுடன், என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

SRI M. KALYANASUNDARAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே . . . . . . .

DEPUTY SPEAKER : I hope the hon. Member, Sri M. Kalyanasundaram will take fifteen minutes and try to finish his speech by 1 o'clock.

[10th March 1961

SRI M. KALYANASUNDARAM : இந்த மான்யத்திற்கு இன்னும் அதிகமாகத் தொகை ஒதுக்கவில்லை என்பதுதான் என்னுடைய குறைபாடு. அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள ஒரு குறிப்பில் இந்திய அரசாங்கத்தின் தொழில் கொள்கையை அனுசரித்து நமது ராஜ்யமும் தன்னுடைய தொழில் கொள்கையை வளர்ந்து வந்திருக்கிறது என்று பெருமைப்படக் கூறியிருக்கிறார்கள். என்னுடைய குறைபாடு அந்தமாதிரி நடக்கவில்லை என்பது. 1956-ம் வருஷத்தில் நிறைவேற்றப்பட்ட தொழில் கொள்கையின் அடிப்படையில் இந்தியாவின் வளர்ச்சியை எடுத்துப் பார்த்தாலும் சரி, நம்முடைய ராஜ்யத்தின் வளர்ச்சியை எடுத்துப் பார்த்தாலும் சரி, எந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறோம், அந்த லட்சியத்தை நிறைவேற்றியிருக்கிறோமா என்பதைப் பார்க்க வேண்டும். அந்த லட்சியம் என்ன? நமது நாட்டிலே சோஷலிஸ அடிப்படையிலே ஒரு சமுதாயத்தை உருவாக்கவேண்டுமென்பது கொள்கை. ஆனால் அந்த சோஷலிஸம் எப்படியிருக்கும் என்பதை திட்டவட்டமாகச் சொல்லவில்லை. சோஷலிஸம் என்று சொன்னாலேயே ஒரு கோட்பாடு நிச்சயம். தனிப்பட்ட முதலாளிகள் இஷ்டம்போல் வளர முடியாது. அரசாங்கத்தின் நிர்வாகத்தில் இருக்கக்கூடிய தொழில்கள் வளரவேண்டும் என்பதுதான் சோஷலிஸத்தின் அடிப்படையான கருத்துக்களில் ஒன்றாக இருக்க வேண்டும். அப்படிப் பார்க்கிறபொழுது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே நிறைவேற்றப்பட்டிருக்கக்கூடிய தொழில்களை எடுத்துக்கொண்டாலும் சரி, மூன்றாவது திட்டத்தில் திட்டமிட்டிருக்கிற தொழில்களை எடுத்துக்கொண்டாலும் சரி, அடிப்படையான கொள்கையிலே இன்னும் பின்தங்கி இருக்கிறோம். குறிப்பாக, இரும்பு உருக்கு தொழிற்சாலையிலே இரண்டாவது திட்டத்திலே போட்ட இலக்கே நிறைவேறவில்லை என்று பிளான் அவுட்லேயிலே சொல்லியிருக்கிறார்கள். பெர்ட்டிலைசர், உருக்கு, அம்மோனியம் போன்ற தொழில்களிலே நாம் போட்ட இலக்கே நிறைவேறவில்லை என்பது அவர்களுடைய குறைபாடு. அதற்கு என்ன காரணம்? ரூபாய் அளவிலே, போட்ட இலக்கைவிட அதிகமாக நிறைவேற்றி இருக்கலாம். இந்தியா பூராவுக்கும் தொழில் வளர்ச்சிக்காக 1,450 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. பொதுத் துறையிலே 775 கோடி ரூபாய், தனியார் துறையிலே 675 கோடி ரூபாய். கிட்டத்தட்ட இரண்டும் ஒன்றுக்கொன்று சமமாக இருந்துகொண்டிருக்கிறது. இது இந்தக் கால கட்டத்திலே. வெளி நாட்டுச் செலவாணியைப் பெறுவதில் தனியார் துறைக்கு இருக்கும் வசதிகூட அரசாங்கத்துக்கு கிடைக்காதது துர்ப்பாக்கியமாக இருக்கிறது. அதனால்தான் தனியார் துறைக்கு அதிக ஊக்கம் அளிக்கக்கூடாது என்று சொல்லுகிறேன். தனியார் துறைக்கு அதிக ஊக்கம் அளிப்பதும் சரி, இன்னும் அந்நியர் மூலதனத்தை இந்த நாட்டிற்குக் கொண்டுவருவதும் சரி, சர்க்கார் துறையிலே தொழில் வளருவதற்கு குந்தகத்தையும், ஆபத்தையும் விளைவிக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் உணர்ந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். சில தொழிலதிபர்கள் எப்படி இரண்டு கணக்குகள் வைக்கிறார்களோ, அதுபோல் வெளிநாட்டுச் செலாவணியைப் பொறுத்தவரையில் இரண்டு கணக்கை வைத்துக்



10th March 1961] [Sri M. Kalyanasundaram]

கொண்டு தனியார் அவர்களுக்கு வேண்டிய வசதியைப் பெற முடிகிறது. ஆனால் அரசாங்கத் துறையில் ஒரு தொழிலை அவசரமாகச் செய்யவேண்டுமென்றால், வெளி நாட்டுச் செலவாணி, அமெரிக்கா, பிரிட்டன், மேற்கு ஜெர்மனி போன்ற நாடுகளிலிருந்து கிடைப்பதற்குக் கஷ்டமாகத்தான் இருக்கும். இதை அவர்கள் உணரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய ராஜ்யத்தை எடுத்துப் பார்த்தால் மூன்றாவது திட்ட காலத்திலே பெரிய பெரிய தொழில்களுக்காக ஒதுக்கப்பட்டிருப்பது என்ன? 3 கோடி, 35 லட்சம் ரூபாய். 23 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தாலும்கூட, பெரிய தொழில்கள் என்கிற தலைப்பில் வந்திருக்கக்கூடியது 3.35 கோடி. அந்தத் தொகையும் எதற்கெல்லாம் ஒதுக்கப் பட்டிருக்கிறது? ஜீயாலஜிகல் சர்வே யூனிட்டை வலுப்படுத்துவதற்காக ஒரு கணிசமான தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. சேலம் உருக்குத் தொழிற்சாலையைப் பற்றி பரிசீலனை செய்வதற்காக, ஆரம்பச் செலவுக்காக 75 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது அல்லாமல் புதிதாக என்ன தொழில் உருவாக்கப்பட்டிருக்கிறது? ஒரு கோடி ரூபாய் அளவிலே ஸ்டீல் பாளங்களைக் கொண்டுவந்து, கம்பிகளாகவும், தகடுகளாகவும் ஆக்குவதற்கு ஒரு தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு திட்டம் இருக்கிறது. இது ஒன்றுதான் நிறைவேறினால் நிறைவேறலாம். மற்றவைகளைப்பற்றி சாத்தியக் கூறுகள் என்ன? என்னுடைய தகவலிருந்து அரசாங்கத் துறையில் ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய தொகை மிகக் குறைவு. அமைச்சர் அவர்கள் சொல்லலாம், நம்முடைய ராஜ்யத்திலே ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய தொகையை மட்டும் கணக்கிடாதீர்கள், மத்திய சர்க்கார் பொதுத் துறைக்கு எவ்வளவு ஒதுக்கியிருக்கிறது என்பதையும் கணக்கிடவேண்டுமென்று. அப்படியானால் நம்முடைய ராஜ்யத்தில், மத்திய அரசாங்கத்தின் தொழில்கள் அதிகமாக நிறைவேற்றப்படவேண்டியது முக்கியம். மத்திய அரசாங்கம் நிறைவேற்றக்கூடிய தொழில்களிலே எது எது உருவாகி இருக்கிறது? என்னுடைய அபிப்பிராயத்திலே சேலம் உருக்குத் தொழிலைக் கணக்கிலே சேர்க்கக் கூடாது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் நீங்கள் வாக்களித்தபடி, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே வந்தாலும்கூட நான் இதைச் சேர்க்கமாட்டேன். முதலாவது ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம், இதிலே விடப்பட்ட கணக்கில் இது வரவேண்டுமே தவிர, பத்து வருஷ காலமாக காட்டிக் கொண்டே வந்து மூன்றாவது திட்டத்திற்கு ஒதுக்கியிருக்கக்கூடிய நிதியில் இதைச் சேர்க்கக்கூடாது என்பது என்னுடைய அபிப்பிராயம். இதை ஒதுக்கிவிட்டுப் பார்த்தால் வேறு எது வருவதற்கு இருக்கிறது? கணிசமான அளவிலே அடிப்படையான தொழில் ஒன்றும் வருவதாக இல்லை. கிண்டியிலே வைக்கக்கூடிய ரண சிகிச்சைக் கருவிகள் தொழிற்சாலையைச் சொல்லலாம். இப்படிச் சில தொழிற்சாலைகளைக் கட்டலாமே தவிர, அடிப்படையான தொழிற்சாலை ஒன்றும் கிடையாது. அரசாங்கத் திட்டத்தின் கீழ் எந்தத் தொழிற்சாலை வர இருக்கிறது என்பதைத் திட்டவட்டமாகச் சொல்லவேண்டும்.

[Sri M. Kalyanasundaram] [10th March 1961

கடந்த 10 வருஷ காலமாக, நெய்வேலியைப் பற்றியும் இன்டீக்ரல் கோச் பாக்டரியைப் பற்றியும் பேசிக் கொண்டு வருகிறோமே தவிர, இரண்டாவது திட்ட காலத்திலும், மூன்றாவது திட்ட காலத்திலும் எந்தக் கனரகத் தொழில் இங்கே அமையப் போகிறது என்பதற்குக் கணக்குக் கொடுக்க வேண்டும். அப்படி அமையப் போகிறது என்று நிச்சயமாகக் கணக்குக் கொடுத்தால், 1956-ம் வருஷ தொழில் கொள்கைத் தீர்மானத்தின் அடிப்படையில், நம்முடைய ராஜ்ய சர்க்கார் முன்னேறிக் கொண்டிருக்கிறது என்பதை நான் ஒப்புக் கொள்ளத் தயாராயிருக்கிறேன். தொழில் வளர்ச்சி இல்லையென்று சொல்லவில்லை; சர்க்கரைத் தொழிற்சாலைகள், செமண்ட் தொழிற்சாலைகள், அதுவும் தனியார் துறையில், வந்திருக்கின்றன. தனியார் துறையில் அதிகமாகவே வந்திருக்கிறது. அதைப் பாராட்டாமல் இல்லை. ஆனால் பொதுத் துறையில் வரவேண்டிய அளவுக்கு அது வரவில்லை. அந்தத் தீர்மானத்தை எந்த அளவுக்கு அமுல் நடத்தியிருக்கிறார்கள். போனது போகட்டும். இனிமேலாவது உஷாராக இருங்கள் என்றுதான் சொல்லுகிறேன். அந்த தீர்மானம் இன்னும் அமுலில் இருக்கிறது; மூன்றாவது திட்ட நகலில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது; அந்த தீர்மானம் இன்னும் வாபஸ் வாங்கப்படவில்லை. அப்படி வாபஸ் ஆகாத வரையில், அதை அமுல் நடத்த வேண்டும் என்று நம்புகிறேன். நான் அந்த தீர்மானத்தை ஆதரிக்கிறேன்.

மூன்றாவது திட்டகாலத்தில், கனரகத் தொழில், கனரக மின்சார சாதனங்களை உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலையை தமிழ் நாட்டில் திருச்சியில் நிறுவ உத்தேசித்திருப்பதற்காகப் பாராட்டுகிறேன்; அது தமிழ்நாட்டுக்கு கிடைக்கக்கூடிய ஏற்பாட்டை நிச்சயமாகச் செய்யவேண்டும் இரண்டு தொழில்கள் ஏற்படுத்த ஏற்கனவே முடிவு செய்தாகிவிட்டது. மூன்றாவதற்கு அன்னியச் செலவாணிகூடத் தேவைப்படாது என்று நினைக்கிறேன். முன்னது இரண்டுக்கும் உதவி முதலாளி நாடுகளிலிருந்து வருகிறது; இந்த மூன்றாவது சோஷலிச நாடான செக்கோஸ்லோவேகியாவிலிருந்து என்று நினைக்கிறேன். ஆகையால் அதற்கு அன்னியச் செலவாணிக் கஷ்டமும் இல்லை. அந்தப் பிரச்னை எழாது. மற்ற வசதிகளும் நிறைய இருக்கின்றன; காவேரித் தண்ணீர் இருக்கிறது; திறமையான மக்களின் ஒத்துழைப்பு இருக்கும். தமிழ் நாட்டில் திருச்சி ஜில்லா பொருத்தமான இடம் தான். ஆகவே, மூன்றாவது திட்டத்தில் அதைத் தமிழகத்தில் நிறுவ அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

மேலும் தனியார் துறையில் தொழில் வளர்ச்சியை எந்த அளவுக்கு அனுமதிக்கலாம், கட்டுப்படுத்தலாம் என்று கவனிக்க வேண்டும். தனியார் நடத்தக் கூடிய பல தொழில்களுக்கு சர்க்கார் மூலதன உதவி செய்கிறார்கள். ஆலவாய் பர்ட்டிலைசர் பாக்டரியில் போட்ட மூலதனத்தின் பலன் என்ன? தொழிற்சாலை எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறது? ஏன் தொடர்ச்சியாக லாபமே வராமல் இருக்கிறது? இதைக் கவனிக்க வேண்டும். தனியார் துறை வளர்வதை விடக் கூடாது என்று சொல்லவில்லை. இண்டஸ்ட்



10th March 1961] [Sri M. Kalyanasundaram]

ரியல் பாலிஸி ரெஸல்யூஷனில்கூட தனியார் துறையும் பொதுத் துறையும் ஒன்றுக்கொன்று அனுசரணையாக இருக்க வேண்டும் என்றிருக்கிறதே தவிர, தனியார் துறை பொதுத் துறைக்கு உதவியாக இருக்கலாம், ஆனால் பொதுத் துறை தனியார் துறைக்கு உதவியாக இருக்க வேண்டும் என்றில்லை. உண்மையிலேயே தனியார் துறை பொதுத் துறைக்கு உதவக்கூடியதாக இருக்க வேண்டும். தனியார் துறைதான் திறமையாக நடக்கும் என்று இன்றுகூட விவாதத்தில் யாரும் சொல்லவில்லை; செட்டிநாட்டு அரசர்கூட உள்ளபடியே சாமர்த்தியமாகப் பேசி, தொழிலாளிகள், முதலாளிகள், தனியார் துறை, பொதுத்துறை, வட நாடு, தென் நாடு ஆக எல்லோரையும் திருப்தி செய்யும் முறையிலே இப்படியும் இல்லாமல், அப்படியுமில்லாமல் பேசிவிட்டார்கள். தனியார் துறையைப் பெருமைப் படுத்தக்கூடாது என்று சொல்லவில்லை. உண்மையிலேயே, அவர்களுடைய விஷயங்கள் அவ்வளவாக வெளியே வராமல் இருக்கலாம். ஆனால், அரசாங்கம் துரதிர்ஷ்டவசமாக இங்கே எல்லாவற்றையும் வைக்கவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. ஜனநாயகத்தில் அப்படிச் செய்ய வேண்டியிருக்கிறது. எதிர்க் கட்சிகளும் இருக்கின்றன அவைகளை வெளிப்படுத்த. ஆகவே சர்க்கார் துறையில் உள்ள குறைபாடுகள் துரிதமாக வெளிப்படுகிறது. தனியார் துறையிலுள்ள கோளாறுகள் அவர்கள் கொள்கைப்படி வெளிவராமல் இருந்து விடுகின்றன.

SRI M. A. MUTHIA CHETTIAR : தனியார் துறையிலும் ஷேர் ஹோல்டர்கள் மீட்டிங்குகள் இருக்கின்றன; பர்ட்டிலைசர் பாக்டரி என்றால் அதற்கு பாலன்ஸ் ஷீட்டு இருக்கிறது. தனியார் துறையிலும் தவறுகளைக் காண சந்தர்ப்பம் இருக்கிறது.

SRI M. KALYANASUNDARAM : அங்கத்தினர் அவர்களுக்கு தனியார் துறையில் மிகுந்த அனுபவம் உண்டு. மெஜாரிடி ஷேர் ஹோல்டர்களிடமிருந்து ப்ராக்ஸி வாங்கிக் கொண்டு விட்டால், என்ன பேச முடியும்? அதன் பிறகு தப்ப முடியுமா? அவர்களுக்கு என்று கெஸ்ட் ஹௌஸ் கட்டி, அதில் வசதிகள் செய்து, பாலும் பழ ரசமும் சாப்பிட்டு விட்டு, நன்றாகத் தூங்கிவிட்டு, கைதூக்கி விட்டுப் போகிறார்கள். ஆகையால் அதில் ஒன்றும் கோளாறுகள் வெளிவந்துவிடப் போவதில்லை. ஆனால் எல்லோருமாகச் சேர்ந்து கொண்டு, ஜனங்களைச் சுரண்டலாம்.

இன்றைக்கு ஏன் காலேச்வரா மில் மூடப் பட்டிருக்கிறது? ஏன் பாலாறு மில் சரியாக நடக்கவில்லை? அவர்கள் சேர்ந்து கொண்டு ஜனங்களை வேண்டுமானால் சுரண்டலாம், அரசாங்கத்தை வேண்டுமானால் ஏமாற்றலாம். அவ்வளவுதான்.

SRI M. A. MUTHIA CHETTIAR : தனியார் துறையின் விவரம் தெரியாது என்று சொன்னதற்குச் சொன்னேன், தெரியும் வழிகள் இருக்கின்றன என்று. தனியார் துறையில் ஊழலே இல்லை என்று சொல்லவில்லை. பொதுத் துறைப்பற்றி சட்ட சபையில் தெரிந்து கொள்ளலாம் என்றதற்கு, அங்கேயும் சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம் என்று சொன்னேன்.

[10th March 1961

SRI M. KALYANASUNDARAM : வெளியே தெரியும்;
கோர்ட்டுச் சண்டை வந்தால் ஹைகோர்ட் வரை சிரிக்கும். அப்படி
யில்லாவிட்டால் வெளியே வராது.

ஆகவே, தனியார் துறை வளர எதிர் காலத்தில், உலக சூழ்நிலை
அதற்குச் சரியாக இல்லை. பஞ்சாலைகளில் லட்சக் கணக்கான
தொழிலாளிகள் வேலை வாய்ப்பு அடைகிறார்கள். சிறிதளவு சம்பள
உயர்வு என்று வந்தால் உடனே அங்கு கோளாறு. அதற்கெல்லாம்,
ரேஷனலைசேஷன் கமிட்டிகள் போட்டு, அந்தந்த பிராந்தியத்திற்கு
ஒரு கமிட்டியும் போட்டுப் பணியாற்ற வேண்டும். சிக்கனம்
சீரமைப்புக்கு அவசியம் இருந்தால் 15-வது கூட்டு மாநாட்டு
ஒப்பந்தப்படி நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இதனால் அனு
கூலம் ஒரு பகுதி முதலாளிகளுக்கும், ஒரு பகுதி தொழிலாளி
களுக்கும், பண்டங்களை உபயோகிக்கும் மக்களுக்கு ஒரு பகுதி
யுமாக வரவேண்டும். அந்த முறையிலே சிக்கனம் சீரமைப்பு
இருந்தால் ஆலோசிக்கக்கூடிய விஷயம்தான் அது. அதற்குப்
பதிலாக இன்றைக்குத் தொழிலாளிகளைக் குறைப்பது என்ற
சிக்கனம் என்றால், பொது மக்களை சுரண்டுவது என்றால், முதலாளி
களுக்கு லாபத்தைத் தேடித் தருவது என்றால் அது சரியான
ஏற்பாடு ஆகாது. அது தொழில் வளர்ச்சிக்குப் பலன் கொடுக்
காது. அப்பேர்ப்பட்ட கொள்கை யிருக்குமானால், எதிர் காலத்தில்
நம் நாட்டில் தொழில் வளர்ச்சி இருக்க முடியாது.

கைத்தறிக்கு மூன்றாவது திட்டத்தில் 8 கோடி ரூபாய்
ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது இந்தத் தொழில் எவ்வளவு முக்கிய
மானது என்பதை எடுத்துக் காட்டுகிறது. இந்தத் தொழிலினால்,
கிட்டத்தட்ட 20 லட்சம் ஜனங்கள் பிழைக்க வேண்டியிருக்கிறது.
ராஜ்யத்தின் துணித் தேவையும் இவர்களை நம்பிக் கொண்டுதான்
இருக்கிறது. மூன்றாவது, நான்காவது திட்டம் வந்தாலும்,
கைத்தறியைப் பாதிக்காமல் துணி உற்பத்தி செய்ய
நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இதையெல்லாம் மனதில்
வைத்துக்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்; நிதி ஒதுக்கி
விட்டால் மட்டும் போதாது. அதனால்தான் கைத்தறித் துணிகள்
1 p.m. தேங்கி இருக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கைத்தறி
நெசவாளர்களுக்கு கூலி உயர்வு அதிகமாகக் கொடுக்க வேண்டிய
தாக இருக்கிறது. விலைவாசிகள் உயர்வதால் அவர்களுக்கு கிடைக்
கக்கூடிய கூலி கிடைக்க மாட்டேன் என்கிறது. அவர்களால் மில்
துணிகளோடு போட்டி போட முடியவில்லை. மில் துணிகளை எந்த
அளவுக்குக் கட்டுப்படுத்த முடியுமோ, டெக்ஸ்டைல் பாலிசியை
எந்த அளவுக்கு தளர்த்த முடியுமோ அந்த அளவுக்கு தளர்த்தி
கைத்தறி துணிகளுக்கு ஏற்றுமதி வசதிகளைச் செய்து கொடுக்க
வேண்டியது அவசியமாக இருக்கிறது. அதற்கு வேண்டிய நட
வடிக்கைகளையும் எடுத்துக் கொள்ள வேண்டும். ரொம்ப நாளைக்கு
நாம் கைத்தறி தொழிலையும் குடிசைத் தொழில்களையும் நம்பிக்
கொண்டிருக்க முடியாது. நாற்பது வருஷ காலமாக அந்தத்
தொழில் நடந்து வருகிறது. உலகம் முன்னேற்றமடைந்து கொண்
டிருக்கும்போது குடிசைத் தொழில்களை நாம் வைத்துக்கொண்
டிருந்தால் பிரயோசனம் இல்லை. சந்திர மண்டலத்தை எட்டிப்



10th March 1961] [Sri M. Kalyanasundaram]

பிடிக்கக்கூடிய காலத்தில் குடிசைத் தொழிலை வைத்துக்கொள்ள
வேண்டும் என்று சொன்னால் உலகத்திலுள்ளவர்கள் நம்மை மதிக்க
மாட்டார்கள். இப்பொழுது உலகம் விஞ்ஞான துறையில் எவ்
வளவோ முன்னேற்றமடைந்துகொண்டு வருகிறது. அந்த அளவில்
நம் நாடும் முன்னேற்றமடைய வேண்டும். அதனால் இந்தக்
குடிசைத் தொழிலை அதிக நாட்கள் வைத்துக் கொண்டிருக்க
முடியாது. ஆனால் அதை திடீரென்று கைவிட்டு விடவும் முடியாது.
இனிமேல் குடிசைத் தொழில்கள் எல்லாம் அபூர்வமாகி விடும்.
அப்பொழுது குடிசைத் தொழில் மூலம் உற்பத்தியாகும் பண்டங்
களை அபூர்வ பொருள்களாகத்தான் வைத்துக் கொண்டிருப்பார்
கள். அதற்குத்தான் மதிப்பு கொடுப்பார்களேயொழிய அதை
வாங்குவதற்கு முன் வரமாட்டார்கள். அந்தத் தொழில் கொஞ்ச
காலத்திற்கு முன்னதாக வயிற்றுப் பிழைப்புக்காகத்தான் வந்தது.
குடிசைத் தொழில் மூலமாக வரக்கூடிய வருவாயை வைத்துக்
கொண்டு வாழவே முடியாது. அவர்களுடைய வருமானம் ரொம்
பவும் குறைவாகவேதான் இருக்கும். அப்பொழுது அதை எடுத்து
விட வேண்டும் என்று சொன்னால் அதற்கு யாரும் ஆட்சேபிக்க
மாட்டார்கள். அது வரைக்கும் கைத்தறி நெசவாளர்களுக்கு
பாதுகாப்பு கொடுக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது.

கதர் போர்டு சம்பந்தமாக அது எப்படி இருந்தாலும் அதில்
போட்டிருக்கக்கூடிய பணம் எந்த அளவு பயன்படப்போகிறது
என்பதைப் பரிசீலனை செய்து பார்த்த பிறகுதான் அதைப்பற்றி
பேச முடியும். அது எப்படி இயங்கப் போகிறது என்பதையும்
பார்த்துத்தான் ஆக வேண்டும். அதற்கு முன்னால் என்னுடைய
அபிப்பிராயத்தைச் சொல்ல முடியாது. அந்த முறையில் கைத்
தறிக்கும் குடிசைத் தொழில்களுக்கும் ஆதரவு கொடுத்துப் பாது
காக்க வேண்டியதாக இருக்கிறது என்பதை வலியுறுத்திக் கூறிக்
கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

* THE HON. SRI R. VENKATARAMAN : கனம் உதவி
சபாநாயகர் அவர்களே, பொதுவாக இந்த விவாதத்தில் பங்கு
எடுத்துக் கொண்டவர்களெல்லாரும் சிறந்த நல்ல ஆலோசனை
களைச் சொன்னதற்காக நான் முதலாவதாக அவர்களுக்கு என்
நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த விவாதத்தில் ஈடு
பட்டிருக்கும்போது எல்லோரும் ஒத்துக்கொள்வது ஓரளவு
இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் எடுத்துக் கொண்ட
முயற்சி பூர்த்தி அடைந்திருக்கிறது என்றும் எடுத்துக்கொண்ட
முயற்சிகளுக்குச் சற்று அதிகமாகவே இந்த ராஜ்யத்தில் தொழில்
துறையில் செலவு செய்யப்பட்டிருக்கிறது, அது போதாது இன்
னும் அதிகமாகச் செய்ய வேண்டும் என்றுதான் எல்லோரும் கூறி
யிருக்கிறார்கள். அது சம்பந்தமாக எந்தவிதத்திலும் கருத்து
வேறுபாடு யாருக்கும் இருக்க முடியாது. தமிழ் நாட்டிற்கு
செய்யக்கூடிய தொழில் அபிவிருத்திகளையெல்லாம் செய்துவிட்
டோம் என்று சொன்னால் அதன் பிறகு எனக்குப் பெரும் வேலை
இந்தக் கணக்கில் வராது. கொடுக்கப்பட்டிருக்கிற புள்ளி விவரங்க
ளைப் பார்த்தால் இண்டஸ்ட்ரியல் கார்பொரேஷன் பணம் கொடுத்
வேண்டும், இன்னும் அதிகமாகச் செய்ய வேண்டும் என்று சொல்

[Sri R. Venkataraman] [10th March 1961

வதில் யாரும் வருத்தப்பட மாட்டார்கள், அதை வரவேற்பார்கள்.
இன்னும் முன்னேறச் செய்ய வேண்டும் என்று நல்ல அபிப்பிராயங்
களைச் ஆலோசனைகளைச் சொன்னால் அதை சர்க்கார் மகிழ்ச்சியுடன்
ஏற்றுக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.
வேண்டுமானால் ஒன்றிரண்டு புள்ளி விவரங்களை மாத்திரம் நான்
கொடுக்க விரும்புகிறேன். ஸ்மால் ஸ்கேல்ஸ் இண்டஸ்ட்ரீஸ்
சம்பந்தமாக இரண்டாவது திட்ட காலத்தில் ஒதுக்கிய தொகை
250 லட்சம் ரூபாய். ஆனால் இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலம்
இப்பொழுது மார்ச் 31-வுடன் முடியப் போகிறது. அதற்குள் 408
லட்சத்தி சொச்சம் செலவழித்திருக்கிறோம். சற்றேறக்குறைய
75 சதவிகிதம் அதிகமாக செலவாகி இருக்கிறது என்று சொல்ல
லாம். அடுத்தாற்போல் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டுக்கு 82½
லட்சம் ஒதுக்கினார்கள். ஆனால் 154 லட்சம் ரூபாய் செலவழிக்கப்
பட்டிருக்கிறது. அதைப்போலவே ஒவ்வொரு துறையிலும் நாம்
எடுத்துக் கொண்ட எல்லா காரியங்களையும் முடித்திருக்கிறோம்.
ஒதுக்கப்பட்ட பணத்திற்குச் சற்று அதிகமாகவே செலவு செய்
திருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மூன்
றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு என்று ஒதுக்கிய தொகை
போதாது என்ற பிரச்னையை நாம் முதலில் ஆராய்ந்து பார்க்க
வேண்டும். மூன்று கோடி ரூபாய் அடுத்த ஆண்டிற்கு ஒதுக்கப்
பட்டிருக்கிறது. தொழில் ஆரம்பிப்பதற்கு நிர்வாகச் செலவு
செய்ய வேண்டியதாக இருக்கிறது. தொழில் ஆரம்பிக்க வேண்டு
மானால் அதிக காபிடல் எக்ஸ்பெண்டிசர் போட வேண்டும்.
தொழில் இலாகா நிர்வாகத்திற்கு சுமார் மூன்று கோடி ரூபாயா
கிறது. அது குறைவாக இருக்கிறது என்று சொன்னால் நிர்வாகச்
செலவு குறைவாக இருப்பதை எல்லோரும் வரவேற்க வேண்டும்.
நிர்வாகச் செலவு குறைவாக இருக்கிறது என்பதை ஒரு குறை
என்று கூறக் கூடாது. அதைக் குறைவாகத்தான் செய்கிறோம்.
அதனால்தான் நல்ல முறையில் எடுத்துக் கொண்ட காரியங்களை
நிறைவேற்றி வருகிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். மூன்று
கோடி ரூபாயை வைத்துக் கொண்டு எல்லா அபிவிருத்தித்
தொழிலையும் நடத்தலாம் என்ற நிலைமையில் இல்லை என்பதை
மட்டும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்தப் பணத்தை
வைத்துக் கொண்டு ஒன்றுமே செய்ய முடியாது. அதற்கு
என்று இரண்டாவது டிமாண்டு இருக்கிறது. முதலில்
நிர்வாகச் செலவு, அடுத்த படியாக காபிடல் எக்ஸ்பெண்
டிசர். அதற்கு 5½ கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.
அதை மாத்திரம் வைத்துக் கொண்டு தொழில்களை நடத்துவது
என்பது இல்லை. தொழில்களை நடத்துவதற்கு வெவ்வேறு
ஸ்தாபனங்கள் உண்டு. தனியார் துறையில் தொழிலை
ஆரம்பிப்பதாக இருந்தால் இண்டஸ்ட்ரியல் இன்வஸ்ட்மெண்ட்
கார்போரேஷன் இருக்கிறது. அதற்கு சுமார் ஒன்று
அல்லது ஒன்றரைக்கோடி ரூபாய் கொடுக்கிறது. அதெல்லாம்
இந்தக் கணக்கில் வராது. கொடுக்கப்பட்டிருக்கிற புள்ளி விவரங்
களைப் பார்த்தால் இண்டஸ்ட்ரியல் கார்போரேஷன் பணம் கொடுத்
திருக்கிறது என்பதைப் பார்க்கலாம். அவர்கள் பங்குகளை எடுத்துக்



10th March 1961] [Sri R. Venkataraman]

கொண்டு அதிலிருந்து செலவு செய்கிறார்கள். அந்தப் பணம் சர்க்காருடைய பட்ஜெட்டில் வராது. அலுமினியம் தொழிற்சாலைக்கு 1½ கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள், சேஷசாயி பேப்பர் அண்ட் போர்டுக்கு ஒரு கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். கோதாரி ஷுகர்ஸ் அண்ட் கெமிகல்சுக்கு 15 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். இதற்கு எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிற புஸ்தகத்தில் பத்தாவது பக்கத்தில் விவரங்கள் இருக்கின்றன. அவையெல்லாம் நம்முடைய பட்ஜெட்டுக்கு புறம்பாக வெளியில் இருக்கக்கூடிய செலவுகள். இன்னும் அதிகப்படியான தொழில் ஆரம்பிக்க முன் வந்தால் இண்டஸ்ட்ரியல் கார்ப்போரேஷன் அதற்கு உதவி செய்ய இருக்கிறது. எந்தத் தொழிலுக்கும் ஊக்கம் அளிக்கக்கூடிய வசதி இருக்கிறது என்பதை நான் முதலில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக இந்த மூன்றாவது திட்டத்தில் தனியார் துறையில் எவ்வளவு தொழில்களை ஆரம்பிக்கப் போகிறோம், பொது துறையில் எவ்வளவு தொழில்களை ஆரம்பிக்கப் போகிறோம், இண்டஸ்ட்ரியல் பாலிசி ரிசொலுஷனை நிறைவேற்றி இருக்கிறோமா என்ற சர்ச்சைகள் எல்லாம் எழுப்பப்பட்டன. என்னைப் பொறுத்த வரையில் துறையைப்பற்றி கவலை இல்லை. என் நிர்வாகத்தில் எந்தத் துறையிலாவது தொழில் வளர வேண்டும் என்பதுதான். தொழில்கள் வந்த பிறகுதான் அதன் துறையைப்பற்றி ஆலோசனை செய்யலாம் என்ற ஒரே நோக்கத்துடன்தான் இருக்கிறேன். அதை மக்ளே ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுகொள்ளலாம், ஏற்றுக்கொள்ளாமல் போனாலும் போகலாம். அதைப்பற்றி சொன்னால் கனம் சின்னதுரைக்கு கோபம் வரலாம். நாங்கள் செய்வதை கொள்கை அளவில்தான் பார்க்க வேண்டும். இன்றைக்கு நமக்குத் தேவையாக இருப்பது தொழில். அது எந்தத் துறையிலாவது வரவேண்டும். அது தனியார் துறையா அல்லது பொது துறையா என்பது பேச்சில்லை. இன்றைக்கு ஏராளமான தொழில் வளர வேண்டும் என்பதுதான் கொள்கை. அப்படித் தொழில் வளர்ந்த பிறகுதான் அதை எந்த அளவில் கட்டுப்படுத்த வேண்டும் என்பதைப்பற்றியெல்லாம் யோசிக்க வேண்டும். இன்றைக்கு மற்ற நாடுகள் எந்த அளவில் முன்னேற்றமடைந்திருக்கிறதோ அந்த அளவில் நாமும் முன்னேற்றமடைய வேண்டும் என்பதுதான். 19-வது நூற்றாண்டு காலத்தில் எந்த அளவில் இருந்தோமோ அந்த அளவிலேயே இப்பொழுதும் இருக்க முடியாது. மற்ற நாடுகள் அந்த அளவில் முன்னேற்ற மடைந்திருக்கிறதோ அந்த அளவில் நாம் முன்னேற்றமடைய எவ்வளவு வேகமாகப் போக வேண்டுமோ அவ்வளவு வேகமாகப் போவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். முன்னால் போனவர்களை எட்டிப் பிடிக்கக்கூடிய அளவில் நாம் வேகமாகப் போவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். அது எந்தத் துறையானாலும் சரி. தனியார் துறையில் தொழில்களை ஆரம்பிக்காவிட்டால்தான் பொது துறையில் ஆரம்பிக்கப்படும். அதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். நமக்குத் தொழில்தான் அவசியம். அந்த முறையில் பார்க்கும்போது

[Sri R. Venkataraman] [10th March 1961

இண்டஸ்ட்ரியல் பாலிசி தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்பதைப்பற்றி சர்ச்சை இருக்காது. அதற்கு பெரிய விவாதம் அவசியம் இல்லை. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும் இந்தச் சர்க்கார் நீடித்து இருக்குமானால் இதே கொள்கையைத் தான் கடைப்பிடிக்கும் என்று உறுதிகூறுகிறேன். இதே கொள்கை அடிப்படையில் தேர்தல் விஞ்ஞாபனத்தை வைத்து மக்களிடத்தில் வோட்டுப் பெறவும் தயாராக இருக்கிறேன். ஒரு வேளை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இப்போது ஏற்பட்டிருக்கிற வளர்ச்சியைப்போல இரண்டு மூன்று மடங்கு அதிகம் ஏற்பட்டால் இந்தத் துறையில் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் ஏற்படலாம். அப்போது இதைப்பற்றி ஆலோசிக்க முடியும் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கொள்கை பூர்வமாக தொழில்களை பரவலாக ஏற்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள். அதை ஒப்புக்கொள்கிறேன். பொதுவாக நாம் எங்கெங்கே அதிகத் தொழில்கள் இல்லையோ, பின்தங்கிய பிரதேசமோ அங்கெல்லாம் ஏற்படுத்துங்கள் என்றுதான் சொல்கிறோம். எந்தப் பிரதேசமாக இருந்தாலும் ஆரம்பித்து நடத்தலாம் என்ற அடிப்படையில் உள்ள நூற்பு ஆலைகளை எடுத்துக் கொண்டால் வற்புறுத்த முடியும். பத்து நூற்று ஆலைகளுக்கு சென்ற 1½ ஆண்டில் லைசென்சு வழங்கப்பட்டன. அவர்கள் லைசென்சு கோரியபோது திருத்தணியில் வைக்க வேண்டும், காஞ்சீபுரத்தில் வைக்கவேண்டும், திருவாடானையில் வைக்கவேண்டும், ராமநாதபுரத்தில் வைக்கவேண்டும் என்று வற்புறுத்தினோம். அவர்கள் முடியாது என்றிருந்தால் லைசென்சு வழங்கப்பட்டிருக்காது. பொதுவாக ராஜ்ய சர்க்கார் லைசென்சு கொடுக்க சிபார்சு செய்கிறது. ஆனால் ரசாயனத் தொழிற்சாலை, இன்னும் இதுபோன்ற தொழிற்சாலைகளை இன்ன இடத்தில்தான் ஏற்படுத்தவேண்டும் என்று வற்புறுத்துவதன் காரணமாக அந்தத் தொழிலையே இழக்க நாம் தயாராக இல்லை. டிசென்ட்ரலைஸ் பண்ணுவது என்பது ஓரளவுக்குத்தான் முடியும். அதை இந்த ராஜ்ய சர்க்கார் முடிந்த அளவு செய்து வருகிறது.

கனம் சுப்பையா கூடச் சொன்னார், "சிமெண்டு உற்பத்தி செய்கிறோம் செய்கிறோம் என்கிறீர்களே, நாட்டில் நிறைய பற்றாக்குறைதானே இருக்கிறது" என்றார்கள். இன்றைக்கு நம் ராஜ்யத்தில் 4 லட்சம் டன் சிமெண்டு உற்பத்தி செய்கிறோம். இரண்டு வருஷத்திற்குள் தாழையூத்து பாக்டரியின் உற்பத்தி 2 மடங்கு அதிகமாக்கப்பட்டிருக்கிறது. அகில இந்தியாவிலும் தனியாக இவ்வளவு அதிகமாக உற்பத்தி செய்து வேலை செய்யக்கூடியது இது ஒன்றுதான். இங்கே 200 டன் உற்பத்தி செய்துவந்ததற்குப் பதிலாக இப்போது 400 டன் உற்பத்தியாகிறது. டால்மியாபுர பாக்டரியிலும் இப்படித்தான், ராஜபாளையத்திலும் இப்படித்தான் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. இப்படி இன்றைக்கு 14 லட்சம் டன் உற்பத்தி செய்கிறோம், இருப்போதவில்லை என்றால் மக்கள் இன்னும் அதிகமாக வாங்குவதற்குத் தயாராய் இருக்கிறார்கள் என்றுதான் பொருள். மேலும் மேலும் உற்பத்தியானாலும் வாங்கக்கூடிய சக்தி அவர்களிடத்தில் இருக்கிறது. ஆகவே நாட்டில் பற்றாக்குறை இருக்கிறது. ஆனால் ஒன்று. இந்தப் பற்றாக்



10th March 1961] [Sri R. Venkataraman]

குறையைக் கண்டு பயப்பட வேண்டியது [illegible] பற்றாக்குறை இருப்பதனால்தான் மேலும் மேலும் தொழில்க[illegible]வதற்கு இட மேற்படுகிறது. உற்பத்தி செய்யக்கூடிய பண்[illegible] விற்பனை யாகாமல் தேங்குமானால் தொழில் துறையில் ம[illegible]ற்படும். புதிதாக யாரும் தொழில் ஏற்படுத்த அஞ்சுவார்கள். தொழில் சரிவு ஏற்படும்.

அடுத்தபடியாக கனம் சின்னதுரை பேசுகின்றபோது ஜப்பானிலே உருக்கு இல்லாத இடங்களில் தொழிற்சாலை ஏற்படுத்தவில்லையா என்று சொன்னார்கள். ரூர்கேலாவில் செய்யவில்லையா, துர்க்காபூரில் செய்யவில்லையா? பிலாயில் செய்யவில்லையா? முடியாது என்பது இல்லை. எல்லாம் கனிப் பொருளின் தன்மையைப் பொறுத்திருக்கிறது.

மேற்கு ஜெர்மனியையும், கிழக்கு ஜெர்மனியையும் ஒப்பிட்டுப் பாருங்கள். அவர்களுக்கு உயர்ந்த ரக இரும்புக் கனி கிடைக்கிறது. ஆனால் கிழக்கு ஜெர்மனியிலே 21 சதவிகிதம்தான் கிடைக்கிறது. நமக்காவது 36 சதவிகிதம் கிடைக்கிறது. அதேபோல அங்கே உயர்ந்த ரக நிலக்கரி கிடைக்கிறது. ஆனால் இங்கே லிக்னைட் தான் கிடைக்கிறது. அதுவும் நம் அளவுக்குத்தான் இருக்கிறது. ஆகவே அங்கங்கே கிடைக்கக்கூடிய இயற்கை வளத்தின் தன்மையைப் பொறுத்துத்தான் தொழில்வளம் அமைகிறது. இன்றைக்கு நமக்கு இருக்கிற கனி வளத்தை வைத்துக்கொண்டு ஆரம்பிக்க வேண்டும் என்கிற காலதாமதம் ஆகிறது. இன்னொன்று. இங்கே கிடைக்கக்கூடிய பழுப்பு நிலக்கரியை டெஸ்டுக்கு அனுப்ப ஜூலை மாதத்தில் கிடைத்துவிடும் என்று சொன்னேன். நாம் ஜூலை மாதத்தில் அனுப்பினால்கூட அவர்களிடம் இருந்து ரிசல்ட் கிடைப்பதற்குள் 62-ம் வருஷம் வந்துவிடும்போல் இருக்கிறது. அத்தனை காலதாமதம் ஆகும் என்பதாகத் தெரிகிறது. அவர்களிடம் இருந்த கடிதங்களைப் பார்த்தபோது. அதற்காகத்தான் உடனே கிழக்கு ஜெர்மானிய பிரதிநிதியை கூப்பிட்டு—எங்களுக்கு சீக்கிரம் இந்த ரிசல்ட் கிடைத்தாக வேண்டும் என்று பேசினோம்.

திடீரென்று ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்கவேண்டுமென்று சொன்னவுடன் ஆரம்பிப்பது என்பது முடியாத காரியம். அப்படி ஆரம்பித்து நஷ்டம் ஏற்பட்டாலும் நம் மக்கள்தான் பாதிக்கப் படுவார்கள். ஆகவே எல்லாவித ஆராய்ச்சிகளையும், பரிசீலனைகளையும் ஆரம்பித்தாக வேண்டியிருக்கிறது. நானும் இதைப்பற்றி வெளி நாடுகளுக்குச் சென்றபோது ஒரு தொழிற்சாலையை எத்தனை காலத்தில் ஆரம்பிக்கலாம் என்று கேட்டேன். முன்னால் நடந்து கொண்டிருக்கிற தொழில்களாக இருந்தால் வெகு சீக்கிரத்தில் வைத்துவிடுகிறார்கள். ஆனால் புதுத்தொழிற்சாலை என்றால்—ஆராய்ச்சி, பரிசீலனை என்று நாம் படுகிற கஷ்டத்திற்கும் அதிகமாகவே கஷ்டப்படுகிறார்கள். இதில் சர்க்காரை குறைசொல்லிப் பயன் இல்லை.

அதேபோலத்தான் எண்ணையும். முதலில் மாக்னடிக் சர்வே பண்ணினார்கள். அதில் எண்ணை இருக்கலாம் என்று சொன்னார்கள். அப்புறம் பூமியில் குழி தோண்டி மருந்து வைத்து வெடிக்கச் செய்து அலை எந்த இடத்தில் மோதுகிறது என்று பார்த்து—எண்ணை இருக்கலாம் என்றார்கள். இதுவும் ஊகம்தான். இப்படி எண்ணை எங்கே இருக்கிறது என்பதைப் பார்ப்பதற்காக அமெரிக்க நாட்டில் செலவழிக்கப்பட்ட பணம் கணக்கு வழக்கில்லை. இதனால் இன்சால்வெண்டானவர்கள் எத்தனையோ பேர். "ஆயில்" என்ற புத்தகத்தைப் படித்துப் பார்த்தால் தெரியும். உலகத்தில் பலர் இப்படி ஆராய்ச்சி செய்து செய்து, இன்று ஆராய்ச்சி முறைகளை வளர்த்திருக்கிற காரணத்தினால்தான் நாம் கொஞ்சம் வேகமாக இத்துறையில் முன்னேற முடிகிறது. அவசரமாக ஒன்றும் செய்துவிட முடியாது.

உதாரணமாக பழுப்பு நிலக்கரியை ஆகஸ்டு மாதத்தில் அனுப்ப வேண்டும் என்று அவர்கள் சொன்னால்—நாம் டிசெம்பர் மாதத்தில் அனுப்புகிறோம் என்றால் இதற்கு சர்க்கார் பொறுப்பு. இது சர்க்காருடைய குறையாகயிருந்தால் கண்டிக்கத்தான் வேண்டும். ஆனால் நாம் ஜூலை மாதத்திலேயே அனுப்பி அவர்கள் ரிசல்டைச் சொல்வதற்குக் காலதாமதமானால் அதற்கு எந்தவகையிலும் சர்க்கார் பொறுப்பாளி அல்ல.

**SRI A. GOVINDASAMI:** ஸீஸ்மிக் டெஸ்ட் நடத்தப் போவதாகக் குறிப்பிட்டிருக்கிறதே, எங்கே நடக்கிறது? அதற்குரிய கருவிகள் எல்லாம் வந்தாகிவிட்டனவா?

**THE HON. SRI R. VENKATARAMAN:** எல்லாம் நடந்து முடிந்தாகிவிட்டது. நாங்கள் அறிக்கை தயார் செய்தபோது அதற்கான ஏற்பாடுகள் நடந்தன. அறிக்கை வெளிவருவதற்குள்ளேயே அந்தக் காரியம் நடந்திருக்கிறது என்றால் எவ்வளவு துரிதமாக செயல்பட்டு வருகிறோம் என்பதை அங்கத்தினர்கள் உணர்ந்து கொள்ளலாம். அதேபோலத்தான் டெக்னோ எக்கனமிக் சர்வே நடத்தினோம். ரிப்போர்ட் வெளிவருவதற்குள்ளேயே இதற்கான காரியங்கள் நடந்து கம்பெனிகள் உருவாகிவிட்டன. ரிப்போர்ட்டுகள் வருவதற்குள்ளேயே காரியங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. திரு. சின்னதுரை அவர்கள் பல்லடத்தில் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் வைக்கவேண்டும் என்று கட் மோஷன் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அதைப்பற்றி அவர் பேசவில்லை. நான் படித்து வைத்திருக்கிறேன். கூட்டுறவு மூலமாக ஏற்படுத்துவதற்கு அவர் முயற்சி செய்யலாம். சர்க்கார் உதவி செய்யும். அதுவும் அவர்கள் கொடுக்க வேண்டியது 20 சதவிகிதம்தான். 80 சதவிகிதம் ராஜ்ய சர்க்கார் உதவி கிடைக்கும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, நம் ராஜ்யத்தில் புதிதாக பல தொழில்கள் வேண்டுமென்று சொன்னார்கள். ஸ்ரீ வேதரத்னம் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள், மெலாஸஸை உபயோகப்படுத்தக்கூடிய தொழில் வேண்டுமென்று. சோடா செய்யவேண்டும், டம்ப்ஸ் வேண்டும். இவைகளுக்கு வேண்டிய வசதி செய்ய இந்த புத்தகத்



திலேயே அவைப்பற்றி குறிப்பிடப்பட்டிருக்றது. அடுத்தபடியாக, அண்ணாமலை அவர்கள் சொன்னார்கள், "ஸ்டேட் எய்டு இண்டஸ்ட்ரீஸ்" குறைவாகயிருக்கிறதென்று. 28 லட்சம் ரூபாய்க்கு 22 லட்சம் வரை டிஸ்பர்ஸாகியிருக்கிறது. இன்னும் மார்ச் 31-ம் தேதி வரையிருக்கிறது, டைம். இந்த ரிப்போர்ட் தயாரிக்கும்போது எந்தளவு டிஸ்பர்ஸ் செய்யப்பட்டதோ அது மட்டும் கொடுக்கப்பட்டிருக்கிறது. சாங்ஷன் செய்திருப்பது, 28 லட்சம். இந்த ரிப்போர்ட் தயார் செய்யும்போது அதுவரை டிஸ்பர்ஸ் செய்யப்பட்டிருப்பது 22 லட்சம். 1957-58-ல் கொடுக்கப்பட்ட தொகை 24,88,962 ரூபாய். 1958-59-ல் 4,057 கேஸ்களுக்கு 24,56,687 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆக, ஏற்றத்தாழ்வு 30,000 இருக்கிறதென்றால் அது ஒரு பெரிய ஏற்றத்தாழ்வல்ல, அதற்காக சர்க்காரை தூக்கு போட வேண்டுமென்று சொன்னால், எந்த சர்க்காரானாலும், யார் நடத்தினாலும் அது மிகவும் கஷ்டம். இதற்கு முன்னால் "ஸ்டேட் எய்டு இண்டஸ்ட்ரீஸ்" மட்டும்தான் இருந்தது. அங்குதான் எல்லோரும் வாங்கிக் கொண்டிருந்தார்கள். ஆனால் இன்று அங்கு யாரும் அதிகமாகப் போவதில்லை. எல்லோரும் இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பரேஷனிடம்தான் போகிறார்கள். இங்கு ஜாமீன் கட்டவேண்டும். ஜாமீன் சொத்தில் 75 சதவிகிதம்தான் கொடுக்கப்படும். ஆனால் அங்கோ அதிகப்படியான பணம் கிடைக்கும் என்று இப்பொழுது அங்குதான் சென்று வாங்குகிறார்கள் அதிகம் பேர்களும். பின்னர், பொதுத் துறையில் என்ன வைத்திருக்கிறீர்கள், என்ன பிரயோஜனம் ஏற்பட்டிருக்கிறதென்றெல்லாம் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் கேட்டார்கள். நெய்வேலியில், நாலைந்து திட்டங்கள் சேர்ந்திருக்கிறது. நிலக்கரியை உபயோகப்படுத்தி 2.5 லட்சம் கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதை, 4 லட்சம் செய்வதற்கு தொழிற்சாலை அமைக்கயிருக்கிறது, உரத்தொழிற்சாலைகள் அமைக்கயிருக்கிறது. க்ளே வாஷிங் இப்படி ஒரே தொழிற்சாலையில் பல சேர்ந்திருக்கின்றன. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் சர்ஜிக்கல் யூனிட்ஸ், ரா பிலிம் பாக்டரி, டெலிப்பிரின்டர் இவை வைக்க கம்பெனிகள் ரெஜிஸ்தர் செய்யப்பட்டு வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. கோச் பாக்டரி விஸ்தர்க்கப்பட இருக்கிறது. பர்னிஷிங் பாக்டரி செய்கிறார்கள். எல்லாமே நமக்கு வந்துவிட வேண்டுமென்ற ஆசைதான். எல்லாம் எங்களுக்குத்தான் வேண்டும், எல்லாத் தொழிற்சாலைகளும் எங்களுக்குத்தான் வேண்டும், வேறு யாருக்கும் மற்ற ராஜ்யங்களுக்கும் கொடுக்கக் கூடாது என்று தேசீய அபிவிருத்தி கௌன்ஸிலிலோ அல்லது ப்ளானிங் கமிஷனிலிலோ சொல்ல எங்களால் முடியாது. வேறு யாராவது அதிகாரத்திற்கு வந்து சொன்னால் சொல்லட்டும். எல்லாத் தொழில்களும் எங்கள் ராஜ்யத்தில்தான் அமைக்க வேண்டும், வேறு ராஜ்யங்களில் வைக்கக்கூடாது என்று சொல்ல எங்களால் இயலாது. நான் ஒன்று இங்கு திட்டவட்டமாகச் சொல்ல விரும்புகிறேன். எங்கள் ராஜ்யம் பின்தங்கிய ராஜ்யம். அதற்காக எங்களுக்குக் கொடுங்கள் என்று நாங்கள் பேசியதே கிடையாது. எங்கள் ராஜ்யத்தில்

[Sri R. Venkataraman] [10th Mar

இன்னின்ன வசதிகள் இருக்கின்றன, திறமையிருக்கி
தொழில் அனுபவம் இருக்கிறது, நல்ல வாய்ப்பு
இருக்கின்றன. அதனால் இந்தத் தொழில்களை எங்கள் ராஜ்யத்தி
வைக்க வேண்டுமென்று கேட்கிறோமே தவிர, எங்கள் ராஜ்யம் பின்
தங்கிக் கிடக்கிறதென்று சொன்னால் அவர்கள் உடனே பேப்பரை
எடுத்து மடித்து விடுவார்கள். இங்கு "ஹெவி எலெக்ட்ரிக்கல்ஸ்
ப்ராஜெக்ட்" வைக்க வேண்டுமென்று சொல்லும்போது, 10 சதுர
மைல் நிலம் வேண்டுமென்று சொன்னால் நாங்கள் சென்னை ராஜ்யத்
தில் கொடுக்கிறோம், அதற்கு தொழில் நுட்பம் வாய்ந்தவர்கள்
வேண்டுமா, நாங்கள் தருகிறோம், எங்கள் ராஜ்யத்தில் பயிற்சி
பெற்றவர்கள் இருக்கிறார்கள், தருகிறோம் என்று சொல்லி கோல்
டன் ராக் வொர்க்ஷாப்பிற்கு அழைத்துச் சென்று காண்பித்தோம்,
8,000 பேர்கள் அங்கு திறமையாக வேலை செய்கிறார்கள். அதைக்
கண்டு பாராட்டினார்கள் செக்கோஸ்லேவேக்கியாவிலிருந்து வந்த
வர்கள். கோச் பாக்டரியை காண்பித்தோம். உலகத்திலேயே உள்ள
ஒரு உன்னத தொழிற்சாலையை நாம் நம் ராஜ்யத்தில் நடத்து
கிறோம். ஆக, நமக்குள்ள வசதிகள், நமக்குள்ள திறமை, நம் அனு
பவம் இவைகளையெல்லாம் காட்டி கேட்கிறோமேயல்லாது பின்
தங்கிக் கிடக்கிறது எங்கள் ராஜ்யம், ஆகவே இத்தொழில்களை
இங்கு அமையுங்கள் என்று கூறவில்லை. அடுத்தபடியாக
திரு. கோவிந்தசுவாமி அவர்கள் சொன்னார்கள், நெய்
வேலி நம் . ராஜ்ய தொழிற்சாலையாக இருக்கக்கூடாதா ?
என்று. அப்படியானால், அப்படிச் செய்தால் பிலாய்
தொழிற்சாலை அந்த மாகாண அரசாங்கத்தினுடையதாகி
விடும், சிந்திரி தொழிற்சாலை பீஹார் ராஜ்யத்திற்கு
போய்விடும். இப்படியாக அந்தந்த ராஜ்யத்திலுள்ள தொழிற்
சாலைகள் அந்தந்த ராஜ்யங்களுக்கு போய் விட்டால் நிலைமை
என்னவது ? அத்தியாவசியப் பண்டங்கள் எல்லாவற்றையும் கூடு
மான வரையில் மத்திய அரசாங்கம்தான் வைத்துக் கொண்டிருக்
வேண்டும் என்பதுதான் எங்கள் விருப்பம். அப்பொழுதுதான்
உருக்கு, இரும்பு இவைகளை நாம் நமக்குப் போதுமான அளவில்
கொண்டு வரமுடியும். அப்பொழுதுதான் நமக்கு நிலக்கரி கொண்டு
வர முடியும். அந்தந்த ராஜ்யங்கள் அந்தந்தத் தொழிலை வைத்துக்
கொண்டு விட்டால் நமக்கு நிலக்கரி எப்படி கிடைக்கும். அப்
பொழுது அவர்கள் இஷ்டம்போல்தான் நடக்கும் என்ற நிலை
ஏற்பட்டு விடும். ஆகவே, அது ஒருக்காலும் நடக்காது. பின்,
சிமென்டிற்கு "டல்மைஸ்" வைத்திருக்கிறார்களே. ஏன் "கோல்"
க்கு இல்லை என்று கேட்டார்கள். அவர்கள்; ஸ்டீலுக்கு வைக்க
வில்லையா என்று கேட்பார்கள். ஆக, இதெல்லாம் உபயோகமில்
லாத வாதம். தொழில் வளத்திற்கு நம் ராஜ்யத்தில் என்னென்ன
கஷ்டங்கள் இருக்கின்றன என்று பார்க்கவேண்டும். இரண்டு கஷ்
1-30 p.m. டங்கள் இருக்கின்றன. அதை ஒப்புக்கொள்கிறேன். அதை வற்
புறுத்திப் பேசுவார்கள் என்று எதிர்பார்த்தேன். திரு.
அன்பழகன் அவர்கள்கூட அதைத்தான் சொன்னார்கள்.
ஒன்று, நமக்கு இரும்பு கிடைக்கவில்லை; இரண்டாவது,
நிலக்கரி கிடைக்கவில்லை. இரும்பு கிடைக்காததற்குப்



10th March 1961] [Sri R. Venkataraman]

பல காரணங்களை அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.
திடீரென்று வெள்ளம் வந்தது, கல்கத்தா-சென்னை போக்கு
வரத்து நின்றுவிட்டது, அதனால் நமக்கு நிலக்கரி வரவில்லை என்று
பல கஷ்டங்கள் இருக்கின்றன. கப்பல் மூலமாவது நிலக்கரி
கொண்டு வந்தாகவேண்டும் நம் ராஜ்யத்திற்கு. நம் ராஜ்யத்தின்
தொழில் வளம் பெருக இரும்பும், நிலக்கரியும் நிச்சயமாக எந்த
வகையிலாவது கிடைக்கும்படியான நிலைக்கு ஏற்பாடு செய்ய
வேண்டும். அதைத்தான் மத்திய சர்க்காரிடம் வற்புறுத்திக்
கொண்டிருக்கிறோம். இரும்புத் தொழிற்சாலை முன்பின் ஏற்பட்
டாலும், ஒரு ஸ்டீல் ரோலிங் மில் நம் ராஜ்யத்தில் ஏற்படுத்த
வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டு, மூன்று ஆண்டுகளாக
வாதிட்டு, பில்லட் உபயோகித்துக் கொள்கிறோம் என்று சொல்லி,
அது வந்திருக்கிறது. பின், அதற்காக "டம்ப்" வைக்கலாம்
என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். தூத்துக்குடியில், ஒரு
கப்பல் சார்ட்டர் செய்து நிலக்கரியைக் கொண்டு வந்து, தூத்துக்
குடியிலிருந்து உப்பைக் கொண்டு போக ஒரு கப்பல் வைத்துக்
கொள்ளலாம். இப்படி பல யோசனைகள் இருக்கின்றன.
பொதுவாக நமது ராஜ்யத்தில் தொழில் இன்னும்
அதிகரிக்கவேண்டும். நான் ஒரு வேண்டுகோள் விடுத்துக்
கொள்ள விரும்புகிறேன். நம் ராஜ்யத்தில் தொழில்
அபிவிருத்தி ஏற்படவேண்டுமென்று விரும்புகிற நண்பர்
கள் எல்லோரும் சென்னை ராஜ்யத்தில் கம்பெனிகள் ஆரம்பித்தால்
அதில் "டோக்கனாக" ஆளுக்கு 100 ரூபாயாவது பங்கு போட
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அல்லது வாய் அளவில்
தொழில் வளர வேண்டும், தொழில் வளரவேண்டுமென்று சொல்லிக்
கொண்டிருந்தால் தொழில் வளர்வது கஷ்டமாக இருக்கிறது. நாம்
ஒரு "இன்வஸ்ட்மென்ட் க்ளைமட்"-டை உண்டாக்கவேண்டும். அப்
பொழுதுதான் பலர் பல தொழில்களைத் துவக்க முன்வருவார்கள்.
இன்று நம் ராஜ்யத்திலுள்ள பல்வேறு லைசென்ஸ்களைப் பார்க்கும்
போது நாம் வெகு வேகத்தில் தொழில் துறையில் வளர்ச்சி
யடைந்து முன்னேற்றமடைவோம் என்ற நம்பிக்கையிருக்கிறது.
ஆனால் கம்பனி ஆரம்பிக்க நினைப்பவர்களுக்கு போதுமான காப்
பிட்டல் திரட்ட முடியுமா, அதற்கு வழியிருக்குமா இருக்காதா
என்ற பயம் இருக்கிறது. ஆகவே சில கம்பனிகளை ஆரம்பிக்க
வேண்டியவர்கள் 3, 6 மாதங்கள் தள்ளிப் போட்டு பின்னர் ஷேர்
இஷ்யூ செய்யலாம் என்று நினைக்கிறார்கள். நம்முடைய ராஜ்யத்தில்
இன்றைக்கு இருக்கிற தொழில் முன்னேற்றத்தை வைத்து நம்
முடைய ராஜ்ய மக்கள் தொழில் வளம் பெறுவதற்கு ஒவ்வொரு
வரும் கொஞ்சம் அதிகமான பங்கு எடுத்துக்கொள்வார்களானால்,
இன்னும் நல்ல முன்னேற்றம் ஏற்படும் என்று நான் நம்புகிறேன்.
இந்த விவாதத்திலே பங்கெடுத்துக்கொண்ட கனம் அங்கத்தினர்
கள் சொன்ன எல்லா அரிய யோசனைகளையும்—அவைகளைப்பற்றி
யெல்லாம் இப்போது பதில் சொல்ல இயலாவிட்டால்கூட—சர்க்கார்
பரிசீலனை செய்து, ஒவ்வொன்றுக்கும் என்ன நடவடிக்கை எடுக்க
வேண்டுமோ அதை நிச்சயமாக எடுக்கும் என்று தெரிவித்துக்
கொண்டு, இந்த மான்யத்தை சபை ஏற்றுக்கொள்ளவேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

[10th March 1961

DEPUTY SPEAKER : Is the hon. Member, Sri P. S. Chinnadurai, pressing his Cut Motion?

SRI P. S. CHINNADURAI : I am pressing my Cut Motion, Sir.

DEPUTY SPEAKER : The question is—

'That the allotment of Rs. 2,97,45,400 under Demand XXII—Industries and Cinchona be reduced by Rs. 100.'

The Cut Motion was put and lost.

DEPUTY SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 2,97,45,400 under Demand XXII—Industries and Cinchona.'

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER : Is the hon. Member, Sri S. M. Annamalai, pressing his Cut Motion?

SRI S. M. ANNAMALAI : எனது மோஷனை ஒத்துக் கொண்டு விட்டார்கள்—அதாவது நிறைய கைத்தொழில்கள் ஆரம்பிக்க வேண்டுமென்பதை அமைச்சரே ஒத்துக்கொண்டு விட்டார்.

DEPUTY SPEAKER : Is the hon. Member withdrawing or pressing his Cut Motion?

SRI S. M. ANNAMALAI : Sir, I am pressing my Cut Motion

DEPUTY SPEAKER : The question is—

'That the allotment of Rs 5,59,44,800 under Demand XLI—Capital Outlay on Industrial Development be reduced by Rs. 100.'

The Cut Motion was put and lost.

DEPUTY SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 5,59,44,800 under Demand XLI—Capital Outlay on Industrial Development.'

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.

VI—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

*A.—Statutory Rules and Orders.*—Nil.

*B.—Reports Notifications and others papers.*

85. *Notification issued with G.O. Ms. No. 3847, Home, dated 26th November 1960, amending the Management of Special Homes and Work Houses in the State of Madras (except the City of Madras, Rules, 1960, under section 13 of the Madras Prevention of Begging Act, 1945 (Madras Act XIII of* 1945).

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

**Saturday, 11th March 1961.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Village maps*

* 741 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சர்வே நம்பர், நிலங்களின் எல்லைகள், கிராமப் படங்கள் போன்றவைகளைச் சரியானபடி சர்வே செய்து வைத்துக் கொள்ள வேண்டுமென்று மத்திய சர்க்கார் மாநில சர்க்காருக்கு ஆலோசனை கூறியுள்ளார்களா ?

(இ) அப்படியாயின், சர்க்கார் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI S. M. ANNAMALAI : ஸார், ரயத்துவாரி நிலங்கள் எப்போது சர்வே செய்யப்பட்டன ? அப்படி சர்வே செய்யப்பட்ட மொத்த நில்த்திற்கும் மேப் போடப்பட்டிருக்கிறதா ? அப்படி போடப்பட்ட மேப்புகள் அனைத்தும் வில்லேஜ் கர்ணங்களிடத்தில் இருக்கின்றன. ஆனால் அனைத்தும் சரிவரத் தெரியவில்லை. ஆகவே மறுபடியும் சர்வே செய்யக் கூடாதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கேள்வி, மத்திய அரசாங்கம் இந்த மாதிரி ஏதாவது சர்வே செய்ய ஆலோசனை சொல்லப்பட்டதா என்பது. அதற்கு இல்லை என்று சொன்னேன். மற்றபடி ஏதாவது சமாசாரம் வேண்டுமானால், வேறு தனிக் கேள்வி போடவேண்டும்.

*Panchayat Executive Officers*

* 742 *Q.*—SRI T. T. DANIEL : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the scale of pay of the Panchayat Executive Officers in the Kanyakumari district and the scale of such officers in the other districts; and

(*b*) the reasons for the disparity in the scale of pay, if any?

[11th March 1961

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) The scales of pay of Panchayat Officers in the Kanyakumari District and Shencottah Taluk of Tirunelveli District are—

| | |
|---|---|
| I Grade ... ... ... ... ... | Rs. 45-5-75 |
| II Grade ... ... ... ... ... | Rs. 30-3-45 |

Prior to 1st October, 1960, the scales of pay of Executive Officers of Panchayats in this state were :—

| | | RS. |
|---|---|---|
| 1. | Selection Grade .. .. .. | 100—2½—120 |
| 2. | I Grade .. .. .. | 80—2½—100 |
| 3. | II Grade .. .. .. | 65—1½— 80 |
| 4. | III Grade .. .. .. | 50—1½— 65 |

It was recently decided to constitute a State Subordinate Service for Executive Officers and to have only two grades instead of four. Accordingly with effect from 1st October 1960, their scales of pay have been revised as follows :—

| | RS. |
|---|---|
| I Grade .. .. .. | 125—5—175 |
| II Grade .. .. .. | 90—4—110—5—140 |

MR. SPEAKER : I want to make another clarification. I have not read the privilege matter. I do not know whether I can myself come to a decision or I will also ask the Hon. the Leader of the House to express his opinion and if I have any doubt I will also seek the assistance of leaders of parties to give their opinions. So I may tell the hon. Member that he should wait till to-morrow and in the meantime I will read it and come to a decision. It may be that I will give my ruling in the Chamber itself and not here.

SRI V. S. MANIKKASUNDARAM : Sir, since a matter of privilege has been raised in the House, the House is entitled to know what it relates to . . .

MR. SPEAKER : Nothing has been mentioned. The hon. Member just got up and stated that he was raising a matter of privilege.

SRI M. KALYANASUNDARAM : To-day we are adopting a different procedure. Hitherto disposal of such matters was done on the floor of the House and not in the Chamber. Now the procedure is changed. I have to submit that I am helpless and I am

[Sri M. Kalyanasundaram] [11th March 1961

in your hands. Even when so many privilege motions were moved earlier the rules were the same and rules have not been changed and there is a change now.

MR. SPEAKER: There is no change. I will read it and let him know to-morrow.

SRI M. KALYANASUNDARAM: Unfortunately I would not be here to-morrow.

MR. SPEAKER: I am sorry.

There is another point. The privilege matter raised must be a matter of recent occurrence. It does not matter and I am not going to rule it out of order on that ground and I give that assurance. Whenever the hon. Member comes, I will take it up.

SRI S. LAZAR: On a point of order, Sir.

I think that some interpretation has been given here but in tune with the procedure that is obtaining in the British Parliament, notice is given to the Chair not to decide whether there is any *prima facie* case or not but to decide whether the motion itself is in order and that has got to be considered in your Chamber. If the motion is found to be in order, then the hon. Member is allowed to raise it if there is a *prima facie* case.

MR. SPEAKER: We will take it up when the hon. Member comes here next time.

SRI M. KALYANASUNDARAM: Regarding the question of procedure it should be left open and we shall discuss it in the Business Advisory Committee or the Rules Committee. In fact, after referring to May's Parliamentary Practice I will be able to show that with regard to the privilege matter, the permission of the Chair is necessary only to decide whether the subject-matter raised involves a breach of privilege or not. The Chair is not authorized to go into details . . .

MR. SPEAKER: It is only in the British Parliament that practice prevails and not in other Parliaments. In the Lok Sabha it is not so. We are following what the Lok Sabha follows. For us the Lok Sabha is the final authority.

SRI M. KALYANASUNDARAM: Rules have remained the same up to now. To-day a change is introduced.

THE HON. SRI C. SUBRAMANIAM: The hon. Member should kindly appreciate the difficulty involved in the matter. Rule 185 says—

'If the Speaker is of opinion that the matter which the member proposes to raise does involve a question of privilege of the House, he may consent to the matter being raised.'

Therefore, there is no question of giving any opinion even in a very cursory manner and so the question does not arise at all. Unless the Hon. Speaker goes through the matter, there is no question of raising it and then discussing it.



11th March 1961]

SRI M. KALYANASUNDARAM: I am very sorry that this has developed into a discussion of the procedure on the floor of the House. I am prepared to discuss it further in the Business Advisory Committee or the Rules Committee. Rule 184 says—

'A member wishing to raise a matter of privilege shall, before the commencment of the sitting of the day on which he proposes to raise the point, leave with the Speaker a written notice of the matter proposed to be raised.'

I have left the written notice with the Hon. Speaker and let it be disposed of to-day itself.

THE HON. SRI C. SUBRAMANIAM: I am sorry the hon. Member is taking an unreasonable attitude because he cannot insist that the Hon. Speaker should dispose it on a particular day or at a particular time. Rule 185 does not prescribe a time-limit. Therefore, it is for the Hon. Speaker to decide when it should be taken up. The hon. Member cannot say that here and now the Hon. Speaker should consider and give his opinion about it. Nobody can insist that the Hon. Speaker should do such a thing. As a matter of fact, the Hon. Speaker has not even gone through it and it was given to him while he was starting for the Assembly. Therefore, that question does not arise at all now. If clarification is necessary we will dicuss it in the Business Advisory Committee or the Rules Committee but that is quite a different thing. Therefore, to say that the rules are not followed is not correct.

SRI M. KALYANASUNDARAM: In my opinion Rules 184 and 185 are not contradictory. Ordinarily in the normal course the Chair is expected to give his opinion on the same day. If the Chair wants time to study the matter. . . .

THE HON. SRI C. SUBRAMANIAM: Yes, he wants time.

SRI M. KALAYANASUNDARAM: But if he rules it out of order inside the Chamber, then I will have no remedy.

THE HON. SRI C. SUBRAMANIAM: Supposing if the Hon. Speaker has not come to any conclusion, it is not possible for him to give any ruling as to whether the question raised involved a matter of privilege. Under Rule 185, the Speaker is the ultimate authority and his opinion is binding on the House. For giving his opinion he may seek the assistance of the House. 9-30 a.m.

SRI M. KALYANASUNDARAM: Under the Constitution the rights and privileges of this House are the same as the rights and privileges of the House of Commons. We have been following this practice. Our rules are not conflicting with the procedure adopted in the House of Commons. Rules 184 and 186 are definite. Whether the opinion is expressed in the Chamber or on the floor of the House, my submission is that it should be disposed of on the floor of the house. This is all my submission, Sir.

THE HON. SRI C. SUBRAMANIAM: Unfortunately, the hon. Member Sri M. Kalyanasundaram is confusing between the matter of privilege and the procedure adopted. The Speaker has not gone through the notice handed to him by the hon. Member,

[Sri C. Subramaniam] [11th March 1961

He has not come to any concusion on the question, i.e., the point raised whether it constitutes a breach of privilege or not. No doubt we have all the rights of Parliament. But it does not mean that we are bound by the procedure adopted by the British Parliament. The constitutional provision is only with reference to substantive right. Whatever procedure is followed in British Parliament it need not be followed here. As far as procedure is concerned we have laid down in our rules. I do not think we can have any further discussion on this.

(Sri M. Kalyanasundaram rose.)

MR. SPEAKER : Let the hon. Member, Sir M. Kalyanasundaram resume his seat. I will give my ruling.

SRI M. KALYANASUNDARAM : The Hon. the Finance Minister has made a distinction between the procedure and the substantive right. I want to meet it. The procedure cannot be used to take away the substantive right. I want to argue. You can even send me out, Sir, if you want.

MR. SPEAKER : The hon. Member will resume his seat.

SRI M. KALYANASUNDARAM : You can send me out, Sir.

MR. SPEAKER : The hon. Member is at perfect liberty to withdraw from the House.

SRI M. KALYANASUNDARAM : Sir, you must allow me to have my say.

MR. SPEAKER : I have allowed the hon. Member several times. He has argued, re-argued, counter-argued, again counter-argued and then where is the end(?). If he thinks that I have not heard him, he is at perfect liberty to withdraw from the House. I have no objection. If he wants, I am prepared to name him.

SRI M. KALYANASUNDARAM : With regard to procedure, I want to say something.

MR. SPEAKER : Not necessary. I am the final authority so far as this is concerned.

I will read from the May's Parliamentary Practice regarding permission to raise privilege matters :

". . . .the Speaker requires to be satisfied, both that there is a *prima facie* case that a breach of privilege has been committed; and also that the matter is being raised at the earliest opportunity. If he is not so satisfied when the circumstances are first brought to his attention privately, he may inform the Member that he is not entitled to raise the matter as a question of privilege or he may allow him to make statement with a view to ascertaining whether or not a *prima facie* case can be made out."

All these things arise after I read the motion. I have not read the motion. I am not going to allow any further discussion on the matter.



11th March 1961]

SRI M. KALYANASUNDARAM : Sir, this may be taken up on the 16th instant when I will be here.

SRI T. SAMPATH : The hon. Member, Sir M. Kalyanasundaram has not read out the motion.

MR. SPEAKER : Because I did not allow him.

### IV.—PRESENTATION OF THE REPORT OF THE COMMITTEE ON SUBORDINATE LEGISLATION.

SRI T. SAMPATH : Sir, I present the Eleventh Report of the Committee on Subordinate Legislation. This is the Third Report of the Committee for the year 1960-61. This report deals with the action taken by the various Departments of the Government on the recommendations of the Committee contained in the 8th Report. I have to state with satisfaction that most of the recommendations of the Committee have been duly accepted by the Government. On behalf of the Committee, I thank the Government for the same.

### V.—BUDGET FOR THE YEAR 1961-62—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1961-62.

(1) DEMAND III—FOREST DEPARTMENT.

(2) DEMAND XVIII—AGRICULTURE.

(3) DEMAND XX—ANIMAL HUSBANDRY.

(4) DEMAND XXXVII—CAPITAL OUTLAY ON FORESTS.

(5) DEMAND XL—CAPITAL OUTLAY ON AGRICULTURE.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 80,15,600 under Demand III—Forest Department.'

'That the Government be granted a sum not exceeding Rs. 4,35,25,900 under Demand XVIII—Agriculture.'

'That the Government be granted a sum not exceeding Rs. 1,36,15,900 under Demand XX—Animal Husbandry.'

'That the Government be granted a sum not exceeding Rs. 40,17,300 under Demand XXXVII—Capital Outlay on Forest.'

'That the Government be granted a sum not exceeding Rs. 20,60,100 under Demand XL—Capital Outlay on Agriculture.'

Regarding the Demand XIX—Fisheries, the Hon. Minister-in-charge will move. After that I will speak.

(6) DEMAND XIX—FISHERIES.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Sir, on the recommendation of the Governor, I move :

'That the Government be granted a sum not exceeding Rs. 41,94,500 under Demand XIX—Fisheries.'

MR. SPEAKER: I understand that the hon. Member Sri A. Govindasami is moving this cut motion (No. 71) under this Demand. He may move it now.

SRI A. GOVINDASAMI: Sir, I move:

'That the allotment of Rs. 80,15,600 under Demand III—Forest Department—be reduced by Rs. 100.'

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Sir, I move:

'That the allotment of Rs. 4,35,25,900 under Demand XVIII—Agriculture—be reduced by Rs. 100.'

MR. SPEAKER: The hon. Member, Sir A. R. Marimuthu is not in his seat. I think some other hon. Member may move the cut motion.

SRI N. K. PALANISAMI: Sir, I move:

'That the allotment of Rs. 1,36,15,900 under Demand XX—Animal Husbandry—be reduced by Rs. 100.'

SRI S. M. ANNAMALAI: Sir, I move:

'That the allotment of Rs. 20,60,100 under Demand XL—Capital Outlay on Agriculture—be reduced by Rs. 100.'

SRI K. SATTANATHA KARAYALAR: Sir, I move:

'That the allotment of Rs. 40,17,300 under Demand XXXVII—Capital Outlay on Forests—be reduced by Rs. 100.'

MR. SPEAKER: The Demands and the cut motions are before the House for discussion.

* THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விவாதத்தில் 6 கோரிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அதில் விவசாயத்தைப்பற்றியது முதல் கோரிக்கை. இதற்கு 4,35,25,900 ரூபாய் கோரப்பட்டிருக்கிறது. ஆனால் இதில் நிகர கோரிக்கை 3 கோடி சொச்சம் தான். பாக்கி வருமானத்தில் வந்துவிடும். அதில் கூட இன்ன இன்ன இனத்திலே முக்கியமாக இவ்வளவு தொகை கோரப்பட்டிருக்கிறது என்றும் நான் விவரிக்க விரும்புகிறேன்.

| | RS. |
|---|---|
| Direction and Superintendence .. .. | 14·75 lakhs. |
| Experimental Farm .. .. .. | 9·24 „ |
| Agricultural demonstration and propaganda .. | 63·49 „ |
| Agricultural Education .. .. .. | 12·68 „ |
| Agricultural Engineering .. .. .. | 38·42 „ |
| Research schemes .. .. .. .. | 14·49 „ |
| Botanical and other gardening development .. | 1·05 „ |



| | RS. |
|---|---|
| Agricultural Marketing .. .. .. | 2·65 lakh |
| Grants-in-aid for Agricultural Horti Development Society .. .. .. .. .. | 50,000 |
| Capital Outlay on Civil Works (Post-Graduate Training.) .. .. .. .. .. | 12·63 lakhs. |

THE HON. SRI M. BHAKTAVATSALAM: மேலும், விவசாயக் கல்லூரிக்காக புதிய கட்டிடங்கள் கட்டவேண்டுமென்று ரூ. 9.41 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேலும் இதற்காக முதலீடு இனத்தில் 5.15 லட்சம் ரூபாய் கோரப்பட்டிருக்கிறது. முக்கியமாக, இதன் நோக்கம் உணவு உற்பத்தியை பெருக்கவேண்டியதே. உணவு உற்பத்தியை பொறுத்த மட்டில் 53 லட்சம் டன் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உற்பத்தியாகியிருக்கிறது. ஆனால் நமது தேவைக்குக் கிடைத்ததுடன் நமது உற்பத்தியை மேலும் அதிகப்படுத்துவதில்லை என்றல்ல. உபரியாகக் கூட உற்பத்தி செய்யவேண்டியிருக்கிறது. பருவ மழையும் நமக்கு சாதகமாக இருக்கவேண்டும். அப்போது தான் உற்பத்தியை பெருக்க முடியும். ஆகவே மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 69 லட்சம் டன் வரையில் பெருக்க வேண்டும். அதாவது கூடுதலாக 16 லட்சம் டன் அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டும். அதற்காக தொகையும் கோரப்பட்டிருக்கிறது. இப்போது 53 லட்சம் டன் உற்பத்தியாகிறது என்றால், நம்முடைய முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 38 லட்சம் டன் தான் உற்பத்தியாகிக்கொண்டிருந்தது என்பதை நாம் நினைவுப்படுத்திக்கொள்ளவேண்டும். ஜப்பானிய முறை சாகுபடியை அதிகப்படுத்திக்கொண்டிருக்கிறோம். நிலத்தை திருத்தி உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டும் என்பதிலும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. புதிய கருவிகள் மூலம் நிலங்களை பண்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தோடு விவசாயிகளுக்கு போதிய அளவு நவீன கருவிகளை கொடுக்கவேண்டும் என்ற திட்டமும் இருந்து வருகிறது. பூச்சிகளை தவிர்ப்பதற்கு வேண்டிய திட்டங்கள் போடப்பட்டிருக்கிறது. இதற்காக 1960-61-ல் 35 லட்சம் ரூபாய் கோரப்பட்டிருக்கிறது. மொத்தத்தில் ஐந்தில் ஒரு பாகம் பூச்சிகளால் பாதிக்கப்படுகிறது. ஆர்ச்சர்ட் டெவலப்மென்ட்-க்காகவும் போதிய கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. வெஜிட்டபிள் ஸீட்ஸ் அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. காய் கறி உற்பத்தியைப் போதிய அளவு பெருக்கவேண்டும் என்பதில் விவசாய இலாகா தனி கவனம் செலுத்தி வருகிறது. முக்கியமாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஏராளமான கிராமப் பள்ளிக்கூடங்களில் காய் கறி செடிகளை பயிரிட வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் போதிய வசதி அளிக்கவேண்டும். அதற்கான விதைகளை இலவசமாகக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதிலிருந்து கிடைக்கின்ற காய்கறிகளைக்கொண்டு மதிய உணவுக்கு

[Sri M. Bhaktavatsalam] [11th March 1961

உபயோகப்படுத்திக் கொள்ளலாம். ஆயில் ஸீட்-உற்பத்தியிலும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. பருத்தி உற்பத்தியை பொறுத்தவரையில் ஒரு லட்சம் பேல் மேலும் நமக்கு தேவைப் படுகிறது. இந்த ஆண்டில் 20 ஆயிரம் பேல் அதிக உற்பத்திக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கான திட்டங்களும் வகுக்கப்பட்டிருக்கின்றன. கால்நடை அபிவிருத்தியைப் பொறுத்த மட்டில் இதற்காக ஒரு கோடியே முப்பத்தி ஆறு லட்சத்தி பதினேழாயிரத்தி தொளாயிரம் ரூபாய் கோரப் பட்டிருக்கிறது. இதில் முக்கியமாக கேந்திர கால்நடை பண்ணைகளை அதிகமாக ஏற்படுத்தவேண்டும். கால்நடை இனம் போதிய அளவு விருத்தி செய்ய வேண்டும். மற்ற நாடுகளில் எல்லாம் பால் உபயோகிக்கின்ற அளவை எடுத்துக்கொண்டால், அது பவுண்டு கணக்கிலும், நமது அளவு அவுன்ஸ் கணக்கில் தான். அதிலும் நம் நாட்டில் அகில இந்திய சராசரி தலைக்கு 5·8 அவுன்ஸ் என்றிருக்கிறது. நமது சென்னை ராஜ்யத்தை மட்டும் எடுத்துக்கொண்டால் 2·8 அவுன்ஸ் என்று தான் தெரிகிறது. நாம் பால் உபயோகிப்பதில் மிகவும் பிற்போக்கான நிலையில் இருக்கிறோம். ஆகவே மேலும் நாம் கவனம் செலுத்த வேண்டும். அதற்கான திட்டங்களும் போடப்பட்டிருக்கின்றன. காடுகளை எடுத்துக்கொண்டால், அகில இந்திய ரீதியில் தலைக்கு ·35 ஏக்கர் தான் இருக்கிறது. அதிலும் சென்னையிலுள்ள சராசரியை எடுத்துக்கொண்டால் சராசரி 16 ஏக்கர் தான் இருக்கிறது. அமெரிக்காவைப் பார்த்தால் 3 ஏக்கர் இருக்கிறது, சுவீடனில் 7·9 ஏக்கர் இருக்கிறது, சோவியத் ரஷ்யாவை எடுத்துக் கொண்டால் 8·6 ஏக்கர் இருக்கிறது, கானடாவில் 22·2 ஏக்கர் இருக்கிறது. ஆகவே நம்மைப் பொறுத்தவரையில் இன்னும் அதிகமாக காடுகளை விருத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. இதற்காக பல திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. முக்கியமாக காட்டிலாகாவின் கீழ் (farm forests) காட்டுப்பண்ணை திட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக இப்போது ஆறு வட்டாரங்களில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இதற்காக மூன்றாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் 6,600 ஏக்கர்களை பிளாக்கு ஒன்றுக்கு 100 ஏக்கர்கள் வீதம் 66 பிளாக்குகளுக்கு கொடுத்து விருத்தி செய்யவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. செங்கல்பட்டு, தென்னாற்காடு, வடாற்காடு, சேலம் முதலிய ஆறு வட்டாரங்கள் இதில் உட்படும். இதனால் முக்கியமாக கிராமங்கள் மிகவும் பயனடையும். ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒவ்வொரு ஃபாரஸ்ட் அதிகாரி என்று அமைத்து, பிளாக் டெவலப்மெண்ட் ஆபீஸரின் கீழ் அந்த சிப்பந்திகள் பணியாற்றுவார்கள். இதற்காக டெக்னிக்கல் சூப்பர்விஷன் செய்வதற்கு வேறு ஆட்கள் இருப்பார்கள். இதல்லாமல் காட்டு இலாகாவின் கீழ் பசுந்தாள் உரத்தை அதிகமாக பெருக்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதோடு காடுகளில் இதற்கான



11th March 1961] [Sri M. Bhaktavatsalam]

மரங்களை வளர்ப்பதற்கும் விதைகளைப் பெருக்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதற்காக 2,000 ஏக்கர் செஸ்பேனியா பயிரிடுவதற்கும், 500 ஏக்கரில் ஸன்ஹேம்ப்ஸ் பயிரிடுவதற்கும், 500 ஏக்கரில் டேஞ்சியா பயிரிடுவதற்கும் திட்டமிடப்பட்டிருக்கிறது. ஸாயில் கன்ஸர்வேஷன் ஸ்கீம், அதாவது மண் அரிப்பு தடுப்பு திட்டத்திற்காக 1960-61-ல் வேண்டிய தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில் ஒரு ரேஞ்சுக்கு 10 ஏக்கர் வீதம் 75 ரேஞ்சுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இதற்காக 583 ஏக்கர் ஒதுக்கப்பட்டு அதில் பசுந்தாள் உரத்தை பெருக்குவதற்காக, இப்போது பரீட்சார்த்தமாக நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது.

அதோடு "ஸ்பிரிங்க்ளர் இரிகேஷன்" என்ற ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதில் . . . . . . . .

For the successful raising of Forest species and accelerating their growth, the Department is introducing the system of sprinkler irrigation especially in nurseries and intensive cultivation plots. This is comparatively a new system of irrigation by which the effect of rain is stimulated. It is becoming increasingly popular with tea-planters and other commercial cultivators in the State. Even in dry areas, for intensive cultivation, sprinkler irrigation is reported to prove effective. A beginning will be made by the Forest Department to introduce this system of sprinkler irrigation in Rubber Plantations and Green Manure plots and if the results prove successful, this system of irrigation will be introduced in their central tree nurseries for Farm Forestry work also. வேறு பல திட்டங்களும் உள்ளன. இவைகளுக்கு எல்லாம் சேர்த்து தொகை கோரப்பட்டிருக்கிறது.

MR. SPEAKER: How long will the Hon. Ministers take to reply to the discussion?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I may take about 45 minutes and the Hon. Minister for Local Administration, about 15 minutes.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: Sir, the hon. Members are aware that till last year, the expenditure for Fisheries Department was included in the composite Demand for "Agriculture and Fisheries." During the discussions on the Budget last year, some of the hon. Members expressed the view that it will be better to separate the Demand for Fisheries to give due prominence to it and also to give the members full opportunity to discuss the subject. The expenditure for Fisheries has therefore been shown as a separate Demand this year.

The Budget Estimate for 1960–61 for Fisheries was Rs. 34 lakhs while the Revised Estimate is Rs. 39 lakhs. The present Demand for Fisheries is Rs. 41,94,500.

The increased Demand provides for the continuance of the important schemes in the Third Five-Year Plan and increased expenditure on account of improvement of Fish Curing Yards, supply of

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [11th March 1961]

With regard to agriculture, the Government have allotted about Rs. 12 lakhs for the soil conservation scheme. My submission is that it should be extended little by little to all the areas. Even though the Government are not having sufficient machinery to cope up with the demand, still some training must be given to some people in the interior places who have been adopting the crude method, i.e., by using indigenous instruments, so that they could adopt soil conservation methods. Unless some training is given, I do not think the ryots will take up this method. It is also not possible for the Government to supply the machinery all at a time in view of the foreign exchange difficulties.

Another factor which I wish to emphasise is that Rs. 20 lakhs have been allotted under the Hire Purchase Scheme to supply tractors to ryots. I want to know from the Hon. Minister whether the entire amount will be spent in view of the fact that we may not be able to get many tractors. There was also a proposal to start a small tractor factory in collaboration with a Japanese firm. I would like to know at what stage it is and whether it will be possible to push through this scheme and establish a factory for manufacture of low h.p. tractors, with a view to giving help to the smaller ryots.

Another problem that faces the ryots is this. They do not get sufficient artificial manures and I am afraid this difficulty will continue to be experienced for one or two more years till the factories both in the private and public sectors go into production. Till then, what is it that we should do—whether we should stop the export of groundnut and other articles or give them at a subsidised rate or a very reasonable rate to ryots. If we stop export, price may come down. Like that, it should be possible for the Government to help the ryots by providing some other alternative methods of supplying fertilizers or some organic manures. Green manure, paddy, cotton, groundnut and other seeds are not easily available in many agricultural demonstration depots. These things are rushed through at certain times. But when ryots want them, they are not given in time.

10 a.m. This is the harvest time and the ryots require green manure seeds. These seeds are not at all available in the depots. I have also written to the Agriculture Department fifteen days ago. Plenty of green manure seeds should be stored in the depots and steps should be taken to see that the ryots avail themselves of this opportunity and try to produce more.

Another important factor that I would emphasise is that the ryots should be given training. Now they are not given any proper training, for adopting improved methods. The Agricultural Demonstrators and the Technical Officers are not in a position to visit the villages as often as they should. They are preoccupied with writing diaries and returns. They have to submit so many figures and returns to officers especially to the Deputy Directors and



11th March 1961] [V. K. Ramaswamy Mudaliar]

other officers. I do not know whether these figures and returns are seen by the officers above. My submission is that all these scriptory work should be entrusted to clerks and for this purpose some additional establishment might be sanctioned.

Plenty of subsidy must be given for making compost manures. On account of dearth of fertilisers, some incentive must be given to the ryots for the manufacture of the compost manure. I think the ryots will take up compost manure work.

Another thing, I submit, Sir, is that loans given to the ryots are not given in time. Most of the ryots receive the loans after a prolonged and cumbersome procedure. In most of the cases the loans are received by the ryots after the agricultural season is over.

The ryots are not able to get iron materials, i.e., Agricultural implements. It should be possible for the Government to supply these indispensable materials to the ryots in time.

With regard to pests and diseases, it is only on the increase. I suggest that the mobile vans of the Agriculture Department with plenty of pesticides and sprayers and with the skilled demonstrators and maistries should go round all the villages to supply these pesticides and collect money immediately on the spot. Though 50 per cent of subsidy is given to the pesticides it is not sufficient. I would request the Government to give at least 75 per cent subsidy so far as pesticides are concerned. It may not be possible to eradicate this disease, if steps are not taken at the appropriate time.

Another important thing is that marketing facilities should be given to the ryots. The Agriculture Department have made a start in some areas. I request the Government to give more marketing and loan facilities to the ryots. Unless propaganda is done on a large scale and some incentive is given to the ryots, the success of food production will become a mere mockery. Therefore, I request the Hon. Minister to give top priority to this Department and see that the ryots are helped in all ways.

**SRI A. GOVINDASAMY:** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் விவசாய இலாகா மான்யத்தின் மீதும், காட்டிலாகா மான்யத்தின் மீதும், மீன் இலாகா மான்யத்தின் மீதும், கால்நடை இலாகா மான்யத்தின் மீதும் கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுப் பிரேரணையை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய சர்க்கார் திட்டமிட்டுள்ளபடி நடக்கவில்லை என்பதற்காக பல ஆதாரங்களை நான் சொல்ல முடியும். இந்த நாட்டின் உணவுப் பற்றாக்குறையைப் போக்குவதற்காக இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, முடிக்கின்ற நேரத்தில்........

**MR. SPEAKER :** ஒரு நிமிஷம், 10, 12 அங்கத்தினர்கள் பேச வேண்டுமென்று கேட்டிருப்பதால், ஒவ்வொரு அங்கத்தினரும் 10 நிமிஷமே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தயவாகக் கேட்டுக் கொள்கிறேன்.

**SRI A. GOVINDASAMY :** உணவு உற்பத்தி விஷயத்திலே நமது அரசாங்கம் குறிப்பிட்ட இலக்கை அடையவில்லை என்பதற்கு அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய புள்ளி விவரத்தில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவிற்குள் 12.79 லட்சம் டன் அதிகமாக உற்பத்தி செய்ய திட்டமிட்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் சென்ற ஆண்டு 1960–61-லே 9 லட்சம் டன் தான் உபரியாக உற்பத்தி செய்ய முடியுமென்று நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு அதே விஷயத்தைப் பற்றிச் சொல்கின்றபோது 7 அல்லது 8 லட்சம் டன்தான் உபரியாக அபிவிருத்தி அடையுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். குறிப்பிட்ட இலக்கு 12.79 லட்சம் டன். ஆனால் 7 அல்லது 8 லட்சம் டன்தான் உபரியாக உற்பத்தியாகும் என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. அந்த இலக்கு குறைவதற்கு முக்கிய காரணம் போதுமான ரசாயன உரம் நாம் எதிர்பார்த்த அளவு கிடைக்க வில்லை என்று நமது நிதி அமைச்சர் அவர்களுடைய நிதி நிலைமை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள் : உரம் விஷயமாகவும் பொதுமக்களுக்கு இந்த அவையின்மூலம் 2.07 லட்சம் டன் உரம் கொடுக்கப்போவதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் 1.3 லட்சம் டன் உரத்தைத்தான் விநியோகம் செய்திருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்திடமிருந்து நாம் எதிர்பார்த்த அளவு உரம் கிடைக்க வில்லை. உரம் கிடைப்பதிலே இன்றைய தினம் விவசாயிகள் கிராமங்களிலே படுகின்ற கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. எங்களுடைய மாவட்டத்திலே உரம் கிடைக்காத காரணத்தினால், பக்கத்திலுள்ள பாண்டிச்சேரி ஸ்டேட்டுக்குச் சென்று கள்ள மார்க்கட்டில் உரத்தை வாங்கிக் கொண்டு வந்து, அதையும் அதிகப் படியான விலைக்கு விற்கக்கூடிய நிலைமையைப் பார்க்கலாம். தமிழ் நாடு பூராவும் உரம் விஷயத்திலே பற்றாக்குறை இருப்பதும், அப்படிக் கிடைக்கின்ற உரமும் ஒரு சில பணக்காரர்களுக்கும், வசதிபடைத்தவர்களுக்கும்தான் கிடைக்கின்றதே தவிர, ஏழை நடுத்தர விவசாயிகளுக்கு கிடைக்காததைத்தான் நாம் இன்று பார்க்கின்றோம். இன்றைய தினம் உர விநியோகம் பிளாக்கு களிலே கூட்டுறவு சங்கங்கள் மூலமாக விநியோகிக்கப்படுகின்றன. ஒரு கூட்டுறவு சங்கத்தில் 7, 8 கிராமங்களை இணைத்திருக்கிறார்கள். ஆனால் அந்த 7, 8 கிராமங்களிலே உள்ள அத்தனை பேருக்கும் உரம் கிடைப்பதில்லை. அப்படி கொடுக்கப்பட்டாலும் படிக் கணக்கிலே தான் கொடுக்கப்படுகிறது. மூட்டை 39 ரூபாய்க்கு வாங்கக் கூடியதை 60, 70 ரூபாய்க்கு கொடுத்து வாங்கக்கூடிய நிலைமை இன்றிருக்கிறது. இப்படி விற்கக்கூடிய உரத்திலும், பணக்காரர் கள் சாப்பாட்டு உப்பைக் கலந்து விற்கிறார்கள். இதைப்பற்றி





அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்த நேரத்திலே, கனம் அமைச்சர் அவர்கள் சமாதானம் கூறுகின்ற முறையிலே "எத்தனையோ பொருள்களில் கலப்படம் செய்யப்படுகிறது, அதே போல் இதிலும் கலப்படம் செய்யப்படுகிறது, போனால் போகிறது" என்ற கருத்தைத்தான் சொன்னார்களே தவிர ......

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** "கலப்படம் செய்தால் போனால் போகிறது" என்று நான் ஒருக்காலும் சொல்ல வில்லை.

**SRI A. GOVINDASAMY :** நான் இதே மன்றத்தில் கேள்வி கேட்ட நேரத்தில் உரத்தில் சாப்பாட்டு உப்பைப் போட்டு விற்கின்றார்களே, இதைப்பற்றி என்ன நடவடிக்கைகள் எடுக்கப் பட்டது என்று கேட்ட நேரத்திலே, எத்தனையோ கலப்படங்கள் இருக்கின்றன என்று சொல்லி இருக்கிறார்கள். அப்படி கனம் அமைச்சர் அவர்கள் சொன்னதை, இங்கே சர்க்கார் ரிக்கார்டுகளில் வைத்திருக்கிறார்கள் ; வாங்கிப் பார்க்கட்டும். உரத்தை எப்போதும் கிராமக் கூட்டுறவு சொஸைடிகளின் மூலமாக வழங்க வேண்டும். பிளாக்குகளின் மூலமாக நான்கைந்து இடங்களில் ஆங்காங்கு விநியோகிப்பதால், பெருவாரியா னவர்களுக்கு எல்லா கிராமங்களிலும் நல்ல முறையிலே உரம் கிடைப்பதில்லை. ஆகவே கிராமக் கூட்டுறவு சொஸைடிகளின் மூலமாக உரத்தை விநியோகிப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும். நெய்வேலியிலே ஏற்படுத்த இருக் கின்ற ரசாயன உரத் தொழிற்சாலையிலே உற்பத்தியாகக்கூடிய உரத்தை, பிற இடங்களுக்கு அனுப்பாமல், மொத்த உரமும் தமிழ் நாட்டிற்கே பயன்படும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். அதை வேறு நாட்டுக்கு அனுப்ப வேண்டியதில்லை. அவசியம் இதைப் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று, இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன். விதைப் பண்ணைகள் விஷயத்தில், சென்ற ஆண்டு 190 விதைப்பண்ணைகள் ஏற்படுத்தப் போவதாகச் சொன்னார்கள். ஆனால் 136 விதைப் பண்ணைகள்தான் ஏற்படுத்தி யிருப்பதாக இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே குறிப்பிடப் பட்டிருக்கிறது. இலக்கு 190, ஆனால் அடைந்தது 136. ஏன் இவ்வளவு குறைவாக இலக்கை அடைந்திருக்கிறார்கள் என்று கேட்க விரும்புகிறேன். அதுவும் பல விதைப்பண்ணைகள் மூடப் பட்டது. அதனால் பல லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. அதையும் 'ரைட் ஆப்' செய்திருக்கிறார்கள். கேள்வி நேரத்தின் போது அமைச்சர் அவர்கள் நிலச் சொந்தக்காரர்கள் நிலத்தைத் திருப்பிக் கேட்டதால், நிலத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டோம் என்று சொன்னார்கள். உண்மை அது அல்ல. விதைப்பண்ணை களுக்கு எடுக்கப்பட்ட நிலங்கள் நல்ல நிலங்களாக எடுக்கப்பட வில்லை. நீர்ப்பாசன வசதிகள் உள்ள நிலங்களாக எடுக்கப்பட வில்லை. போட்ட அதிகாரிகளுக்கு வேண்டிய வசதிகளும் செய்து கொடுக்கவில்லை. அதனால் பொது மக்களும் அவர்களுடன் ஒத்து

ழைக்க முன்வரவில்லை. கூலிக்காரர்களுக்கும் போதுமான கூலி கொடுக்கவில்லை. இந்தக் காரணங்களினால் நல்ல பொறுக்கு விதை கிடைக்கவில்லை. அதனால்தான் இந்தப் பண்ணைகள் மூடப்பட்டன என்று ஆடிட் ரிபோர்ட்டில் காணப்பட்டிருக்கிறது. எஸ்டிமேட் கமிட்டியும் இதுபற்றி கருத்து தெரிவித்திருக்கிறார்கள். எஸ்டிமேட் கமிட்டியின் சிபார்சுகளை அமுல் நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். விதைப்பண்ணைகளை நல்ல முறையில் நடத்தவேண்டும்.

மற்ற நாடுகளில் காடுகள் அபிவிருத்தியில் அதிக கவனம் செலுத்துகிறார்கள். நாமும் கவனம் செலுத்தவேண்டுமென்ற நல்ல கருத்தை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தென் ஆற்காடு மாவட்டத்தில் பல காடுகள் அழிக்கப்பட்டிருக்கின்றன. நெய்வேலித் திட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்களை குடியேற்றுவதற்காக விருத்தாசலம் தாலுக்காவில் கருவேப்பலம்குரிச்சி என்ற காடு அழிக்கப்பட்டிருக்கிறது. அதுமாதிரி வடவாடி, முகாசா, கரூர் என்ற காடுகளும் அழிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் கருவேப்பலம்குரிச்சியில் மக்கள் குடியேற்றப்பட்டார்களா என்றால், 5, 6 வீடுகள்தான் கட்டப்பட்டன. அதுவும் சமீபத்தில் வெள்ளம் வந்தபொழுது அந்த இடத்தில் ஆற்றுத் தண்ணீர் புகுந்து, அந்த இடம் மக்கள் குடியிருப்பதற்கு லாயக்கு இல்லாமல், வசதி இல்லாமல் போய்விட்டது. அந்தக் காடுகளை மிகவும் குறைவான விலைக்கு ஏலத்திற்கு விட்டிருக்கிறார்கள். ஏலத்தில் எடுத்தவர்கள் அதிக லாபம் சம்பாதிக்கிறார்கள். கருவேலம் குரிச்சியில் மக்கள் குடியிருக்க முடியாது. மீண்டும் அங்கே காட்டு வளத்தை உண்டாக்கவேண்டும். இல்லாவிட்டால் அந்த நிலங்களை பயிரிடுவதற்கு அந்த வட்டாரத்திலுள்ள விவசாய மக்களுக்கு வழங்கலாம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். நான் கூறியபடி வடவாடி, முகாசா, கரூர் காடுகள் அழிக்கப்பட்டிருக்கின்றன. காடுகள் அழிப்பதற்கு செலவு செய்கிறார்கள். ஒரு பக்கத்தில் காடுகள் வளத்தை அபிவிருத்தி செய்யவேண்டும் என்று சொல்லிக்கொண்டு, இருக்கிற காடுகளை கவனிக்காத காரணம் என்ன? விவசாயிகளுக்கு வேறு இடங்களில் இடம் தேடிக்கொடுக்க வழிவகைகள் செய்யக்கூடாதா? காடுகள் வளர்ப்பதற்காக வனமகோத்சவம் கொண்டாடுகிறார்கள். ஆனால் வனமகோத்சவம் வெற்றிகரமாக நடைபெறவில்லை என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். பல லட்ச ரூபாய் அதிலே நஷ்டம் ஆகிறது. நட்ட மரங்களுக்கு தண்ணீர் ஊற்ற வழி இல்லாமல் நட்ட மரங்கள் காய்ந்துபோய்விடுகின்றன.

கால்நடை பராமரிப்புக்கு மேய்ச்சல் காடுகளை அதிகமாக உண்டாக்க வேண்டும். நமது சென்னையிலே போதுமான பால் கிடைக்கவில்லை, ஈரோட்டுப் பகுதியிலிருந்து பாலைச் சேகரித்துச் சென்னைக்குக் கொண்டுவந்து வழங்குவதற்கு ஒரு திட்டம் உருவாக்கப்பட்டு வருகின்றது என்று நிதி நிலை அறிக்கையில் கூறப்



பட்டிருக்கிறது. காமராஜ் சர்க்காருக்கு ஈரோட்டிலிருந்து போஷாக்கு கிடைக்கிறது என்று நாம் அறிகிறோம். ஈரோட்டிலிருந்து பால் வருவதற்கும் ஏதாவது அரசியல் கண்ணோட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு) பழையகோட்டையிலிருந்தும் நமக்கு பால் கிடைக்கிறது. அதுவும் அரசியல் லாபம்தான்.

மீன் இலாகாவைப் பொறுத்தவரையில், மீனவர்கள் கடலோரப் பகுதியில் குடிசை கட்டிக்கொண்டு வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் அடுத்த ஆண்டு மண் மேடு இடாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. அவர்கள் அந்த நிலைமையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் குடியிருக்கும் நிலங்கள் புறம்போக்கு நிலங்கள். அந்த இடங்களை அவர்களுக்கே சாரி பண்ணித்தரவேண்டும், பட்டா பண்ணித்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். மீனவர்கள் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கும்பொழுது கட்சி கண்ணோட்டத்துடன் அமைக்கக் கூடாது. காந்தி மீனவர் சங்கம், அல்லது மீனவர் முன்னேற்ற சங்கம் என்று பெயரிட்டால்தான் அனுமதி வழங்கப்படும் என்று சொல்லப்படுகிறது. கடலூரில் இம்மாதிரி நிகழ்ச்சி நடந்திருக்கிறது. மீன் இலாகாவிலிருந்து பாபிலோ போட், நைலான் வலைகள் ஆகிய சாதனங்கள் வழங்கும்பொழுது கட்சி கண்ணோட்டத்துடன் வழங்கக்கூடாது. குளச்சல் பகுதியில் 'பாப்லோ போட்' போடுகிற இரைச்சல் காரணமாக கட்டுமரத்தில் சென்று மீன் பிடிப்பவர்களுக்கு மீன் கிடைக்கவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். அதுபற்றி கனம் அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன். இந்த ஆண்டு மீன் இலாகாவுக்கு தனியாக மான்யம் கோருகிறார்கள். மீன் இலாகாவைப்பற்றி அவர்கள் தனியாக பேசப்படுவது வரவேற்கவேண்டிய விஷயம். மீனவர் சமுதாயத்திற்கு பல சலுகைகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். மீனவர்கள் குழந்தைகளுக்கு அதிகப்படியான உத்தியோகங்கள் வழங்குவதற்கு வழிவகை செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் தான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எம்.எஸ்.ஸி. படிக்கும் மாணவர்களுக்கு 40 மாணவர்களுக்குத்தான் நமது சர்க்கார் ஸ்காலர்ஷிப் வழங்குகிறார்கள். இந்த எண்ணிக்கையை இன்னும் உயர்த்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

விவசாய ஆராய்ச்சிக்காக பல இடங்களில் பல பண்ணைகளை ஏற்படுத்தி நிபுணர்களை அங்கே அனுப்பி ஆராய்ச்சி செய்வதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். பாலூர், திண்டிவனம் ஆகிய இடங்களில் ஆராய்ச்சிப் பண்ணைகள் இருக்கின்றன. தென் ஆற்காடு ஜில்லாவிலே மணிலா அதிகமாக உற்பத்தி ஆகிறது. கரும்பு விளைச்சலும் அதிகமாக இருக்கிறது என்று அமைச்சர்

[Sri A. Govindasamy] [11th March 1961

அவர்களுக்கு நன்றாகத் தெரியும். விவசாய இலாகா காரியதரிசி வெங்கடேசன் அவர்கள் எங்கள் மாவட்டத்தில் இருந்தவர்கள். அவருக்கு அந்த மாவட்டத்தின் நிலைமையும், அங்கு விளையக்கூடிய விளைபொருள்களின் நிலைமையும், 'கமர்ஷியல் கிராப்ஸ்'-ன் நிலைமையும் நன்றாகத் தெரியும். வெளி மாநிலங்களிலிருந்து நல்ல உயர்தரமான வித்துக்களை வரவழைத்து மணிலா மார்கெட்டிங் சொஸைடி மூலமாக ஏற்கனவே வழங்கி வந்தார்கள். அதில் நஷ்டம் ஏற்படுகிறது என்ற காரணத்தினால் அதை இப்பொழுது நிறுத்திவிட்டார்கள். நஷ்டம் ஏற்பட்டாலும் விவசாயிகளுக்கு அதனால் லாபம் ஏற்படுகிறது. சத்துள்ள விதைகளை உற்பத்தி செய்ய முடிகிறது. அது விஷயத்தில் மறுபடியும் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். திண்டிவனம் ஆராய்ச்சிப் பண்ணையில் நல்ல சத்து விதை கிடைக்கிறது என்று முடிவு காணப்பட்டிருக்கிறது. அதேமாதிரி பொள்ளாச்சி ஆராய்ச்சிப் பண்ணையிலும் முடிவு காணப்பட்டிருக்கிறது. இன்னும் அதற்கு வேண்டிய ஆராய்ச்சிப் பண்ணைகளை அதிகமாக ஏற்படுத்தி, மணிலாவை அதிகப்படியாக உற்பத்தி செய்வதற்கும், அதன் மூலம் வனஸ்பதி ஆலைகள் தமிழ் நாட்டில் ஏற்படுவதற்கும், சோப்பு ஆலைகள் ஏற்படுவதற்கும் வழி வகை காணவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். விழுப்புரம் வனஸ்பதி ஆலையை யாருக்கோ குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது. அங்கு ஒரு சோப்பு ஆலை ஏற்படுத்தினால் மணிலா பயிரிடும் விவசாயிகளுக்கு நன்மை ஏற்படும்.

தென் ஆற்காடு மாவட்டத்தில் கரும்பு அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. அங்கே நல்ல கரும்பு விளைகிறது என்பது அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். நானும், விவசாய அமைச்சர் அவர்களும் கரூரில் நடந்த கரும்பு விவசாயிகள் மகாநாட்டில் கலந்துகொண்டோம். அப்பொழுது அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது எனக்கு இப்பொழுது கவனத்திற்கு வருகிறது. உத்திரப் பிரதேசத்திலும், பீகாரிலும் விளையக்கூடிய கரும்பு என் உயரம் இருக்கும் என்று சொன்னார், அதாவது அமைச்சர் உயரம் இருக்கும் என்று சொன்னார். தமிழ் நாட்டிலே விளையக்கூடிய கரும்பு நல்ல ருசியான கரும்பு, சத்து உள்ள கரும்பு, உயர் ரகமான கரும்பு. அமைச்சர் அவர்களைப் போல இரண்டு மடங்கு உயரம் இருக்கும். (இந்த சமயத்தில் சபாநாயகர் 'பெல்' அடித்தார்.) கரும்பு விளைச்சலில் தென் ஆற்காடு மாவட்டம் முதல் பிரைஸ் வாங்கியிருக்கிறது. ஆனால் கரும்பு விலை நிர்ணயம் செய்யும் அதிகாரம் மத்திய சர்க்காரிடம் இருக்கிறது. சர்க்கரை விலை நிர்ணயம் செய்யும் அதிகாரம் மத்திய சர்க்காரிடம் இருக்கிறது. ஆலைகள் வடநாட்டில்தான் அதிகமாக இருக்கின்றன. லைசென்ஸ் கேட்டால் மறுக்கப்படுகிறது. நேற்றைய தினம்கூட குறிப்பிட்டேன். காமராஜ் அவர்கள் சபையில் இருப்பதால் மறுபடியும் குறிப்பிடுகிறேன். நேரு அவர்கள் பிறந்த



11th March 1961] [Sri A. Govindasamy]

மாநிலத்திலே 69 ஆலைகள், ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத் அவர்கள் பிறந்த மாநிலத்திலே 24 ஆலைகள். ஆனால் காமராஜ் அவர்கள் பிறந்த மாநிலத்திலே ஐந்து சர்க்கரை ஆலைகள்தான். நான்கு ஆலைகளுக்கு லைசென்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது, மேலும் 7, 8 ஆலைகளுக்கு லைசென்ஸ் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலைமை கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டிய விஷயம். ஆகையால் இதை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். கரும்பு பயிரிடுவதற்கு விவசாயிகளுக்கு நல்ல வசதிகள் செய்துதரவேண்டும். உயர்தர கரும்பு உற்பத்தி செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 2 லட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்யவேண்டும் என்று திட்டமிட்டிருக்கும்பொழுது சர்க்கரை அதிகமாக உற்பத்தி செய்வதற்கு, சர்க்கரை ஆலைகள் அதிகமாகத் தேவை என்பதை கனம் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள். அதிலும் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மற்றும் பால் பண்ணை விஷயத்தில் பம்பாய் 'ஆரே மில்க் பாக்டரி' மாதிரி என்று மாதவரம் பண்ணையை ஒப்பிட்டுச் சொன்னார்கள். எனக்கும், சர்க்கார் பிரதம கொரடாவுக்கும் 'ஆரே மில்க் பாக்டரியை' நேரில் காணபதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டது. எப்படி அவர்கள் மாதவரம் பண்ணையை இந்த 'ஆரே மில்க் பாக்டரிக்கு' ஒப்பிட்டார்கள் என்று தெரியவில்லை. ஏழை எளியவர்களுக்கு, கிராமத்தில் வசிப்பவர்களுக்கு பால் கிடைக்கவில்லை. கிராமத்தில் இருக்கிற பால் எல்லாம் திரட்டப்பட்டு நகரத்திற்கு வந்துவிடுகிறது. கிராமத்தில் திடீரென்று போனால் பால் கிடைப்பதில்லை. எந்த அமைச்சர் போனாலும் கிராமத்தில் பால் தட்டு இருக்கும் நிலைமை தெரியும். கால்நடை அபிவிருத்தி குறைவு என்பதை இது எடுத்துக்காட்டுகிறது. (குறுக்கீடு) அமைச்சர்கள் கிராமத்திற்கு போனால்கூட, அவர்களுக்கு காபி கொடுக்க வேண்டிய வகையில் பால் தேடினால், முன் ஏற்பாடோடு போனால்தான் பால் கிடைக்கும், இல்லாவிட்டால் கிடைக்காது....

**MR. SPEAKER :** (பெல் அடித்துவிட்டு). நான் மணி அடித்த பிறகுகூட, நிறுத்தாமல் பேசிக்கொண்டே போனால் என்ன செய்வது? இப்பொழுது கனம் அங்கத்தினர் சௌந்தரம் ராமச்சந்திரன் அவர்கள் பேசுவார்கள்.

* DR. SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN : கனம் தலைவர் அவர்களே, எல்லோரும் பேசின விஷயங்களையே மறுபடியும் சொல்லாமல், சில குறிப்பிட்ட விஷயங்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன். விவசாயத்தைப் பொறுத்தவரையில் நம்முடைய நாட்டிலே தண்ணீர் வளம் அதிகமாக இல்லை என்பதை நாம் எல்லோரும் அறிவோம். அதனால், இந்த ஆழக் குழாய்க் கிணறு

[Dr. Srimathi T. S. Soundaram Ramachandran]

கள் போட்டு, அதன்மூலமாக பாசன அபிவிருத்தி செய்வதை, சரியாகத் திட்டமிட்டுச் செய்து, துரிதமாக நிறைவேற்றிவைத்தால் தான், இரிகேடட் ஏரியாவை நம்மாலே ஜாஸ்தியாக்க முடியும். இந்த விஷயத்திலே மின்சாரத்தைப் பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். சாதாரணக் கிணறுகளுக்குப் போடக்கூடிய மின்சார பம்பு செட்டுகளை ஆழக் குழாய்க் கிணறுகளுக்குப் போடும்பொழுது, மின்சாரம் அதிகமாக ஆகிறதாலே மின்சாரக் கட்டணமும் ஜாஸ்தி ஆகிறது. நாம் பெரிய அளவிலே ஆழக் குழாய்க் கிணறுகளை விஸ்தரிக்கவேண்டுமென்று நினைக்கிற பொழுது, அதற்குண்டாகும் மின்சாரச் செலவையும் கணக்கிட்டு, அதற்கு ஸப்ஸிடி கொடுக்கவேண்டியிருந்தால் அதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தண்ணீர் சிக்கனத்தைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நெல் விவசாயம் செய்கிற பொழுது, வயல்களிலே 2 அடித் தண்ணீர், 1½ அடித் தண்ணீர் நிற்கவேண்டும், அதிலே மீன்கள்கூட வளர்க்கவேண்டுமென்றெல்லாம் சொல்லுகிறோம். தண்ணீர் தட்டு அதிகமாக இருக்கிற நம்முடைய நாட்டிலே, எவ்வளவு குறைந்த அளவிலே தண்ணீர் விட்டால்போதும் என்று கண்டுபிடிக்க ஆராய்ச்சிக் குழு நிறுவி இருக்கிறோம். ஆராய்ச்சியும் நடக்கிறது. ஆனால் அந்த ஆராய்ச்சியின் பலன் என்ன என்பது விவசாயிகளுக்குத் தெரியவில்லை. அக்ரோநாமிக்ஸைப் பற்றி எவ்வளவோ விஷயங்கள் தெரியவரலாம். எப்படி கம்போஸ்ட் இன்ஸ்பெக்டர்கள், கிராம சேவகர்கள் முதலியவர்கள் ஒவ்வொரு வீட்டிற்கும் போய் அணுகுகிறார்களோ, அதேமாதிரி இந்த ஆராய்ச்சியின் பலனை ஒவ்வொரு விவசாயிக்கும் சொல்லிக் கொடுத்து, தண்ணீரில் சிக்கனத்தை அனுஷ்டிக்கும்படி செய்வோமேயானால், தற்போதுள்ள தண்ணீர் வளத்தை வைத்துக்கொண்டே, குறைந்தபட்சம் மூன்றில் ஒரு பங்கு விஸ்தீரணத்தில் சாகுபடியை அதிகரிக்கலாம், அதாவது ஏக்கரேஜை அதிகப்படுத்தலாம் என்று நான் கேள்விப்படுகிறேன். அந்தத் துறையில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது தண்ணீர் பாசனக் கால்வாய்களைச் செப்பனிடும் வேலை நடந்து வருகிறது. ஆனால் அதிலே துரிதம் போதாது. பெரிய அணைகளைக் கட்டுவதற்கு நமக்கு வாய்ப்பில்லாமல் இருப்பதால், இந்த வாய்க்கால்களைச் செப்பனிடுவதை துரிதமாகச் செய்யவேண்டும். குறுகின வாய்க்காலாகச் செய்து ஆழமாகத் தண்ணீர் போனால், ஏவாப்பொரேஷன், ஸீப்பேஜ் எல்லாம் குறையுமென்று தெரியவருகிறது. இந்தக் கால்வாய்கள் செப்பனிடுவதையும், குளங்களை ஆழப்படுத்துவதையும் வெகு துரிதமாக மூன்றாவது திட்டத்தில் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



[Dr. Srimathi T. S. Soundaram Ramachandran]

அடுத்தபடியாக, பனை மரங்களை எடுத்துக்கொண்டால், தமிழ் நாட்டிலே கோடிக்கணக்கிலே இல்லாவிட்டாலும், 10 லட்சக் கணக்கிலாவது இருக்கின்றன. இதை ஒருவரும் வைத்துப் பயிரிடவில்லை. தானாகவே வளர்ந்து கொண்டு வருகிறது. பழைய காலத்திலே ஒருவருக்கு எவ்வளவு பனை மரங்கள் இருக்கின்றன என்று கணக்கிட்டு, அதன்மூலமாக அவர்களைப் பெரியவர்கள் என்று கருதுவார்கள். அதைக் காமதேனு என்று சொல்லுகிறோம். இந்தப் பனைமரத்தை சரியானபடி உபயோகப்படுத்த ஆராய்ச்சி தேவை. பனைமரத்திலிருந்து இறக்கும் பதனீர் புளிக்காமல் இருப்பதற்கு என்ன செய்யலாம் என்பதற்கு ஆராய்ச்சி நடத்தவேண்டும். பனை மரங்களிலிருந்து இரண்டு மாதங்கள், மூன்று மாதங்கள் இறக்குகிறோம். இதை ஆறு மாத காலத்திற்குச் செய்ய முடியுமா என்று பார்க்கவேண்டும். ஆராய்ச்சி செய்தால் ஏன் முடியாது என்று கேட்க ஆசைப்படுகிறேன். நமக்குள்ள பெரிய செல்வத்தை பூரணமான முறையிலே பயன்படுத்தாமல் இருக்கிறோம். நெல் விளையாத இடங்கள், கரும்பு விளையாத இடங்களில் இந்தப் பனை மர வளத்தை அதிகப்படுத்தி, பெர்மெண்டு ஆகாத பதநீரை எடுத்து அதிலிருந்து சர்க்கரை செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். வைத்திய முறையில் பார்த்தாலும் இது ரொம்பவும் மேன்மையானது என்று தெரிய வருகிறது. இதைச் செய்வதற்கு ஒரு தீவிரத் திட்டம் தேவை என்று சொல்ல விரும்புகிறேன்.

உர வகைகளைப் பற்றி ஒரே ஒரு வார்த்தை. கெமிகல் பெர்ட்டிலைசர்கள் குறிப்பிட்ட காலங்களிலே குறிப்பிட்ட அளவுக்குத் தேவைப்படுகிறது. தேவையான காலங்களில் கிடைக்காமல், தேவை கடந்த காலங்களில் கிடைத்து வருகிறது. அப்போதைக்கப்போது எவ்வளவு வேண்டுமோ உரிய காலங்களில் அது கிடைக்க ஏற்பாடு செய்தால், நன்றாக இருக்கும். பசுந்தாள் உரத்தைப் பற்றி ஒரே ஒரு வார்த்தை. அதனுடைய உபயோகத்தைப்பற்றி எல்லோருக்கும் தெரியும். ஆனால் விதைகள் கிடைப்பது இல்லை. விதைகளைச் சேகரித்துக் கொடுப்பது தேசத்தொண்டு என்று கருதுகிறோம். விதைகளைச் சேகரித்துக் கொடுப்பதில் இன்னும் தீவிரம் காட்டவேண்டுமென்று வற்புறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். நம்முடைய சகா மெம்பர்களும் இதிலே அதிக சிரத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடையைப் பற்றி பலர் பேசியிருக்கிறார்கள். கோழிப் பண்ணையைப் பற்றி ஒரே ஒரு வார்த்தை. கோழிப்பண்ணைகளை ஒரு குடிசைத் தொழிலைப்போல் எங்கெல்லாம் வளர்க்க முடியுமோ அங்கே எல்லாம் வளர்க்கவேண்டும். பெண்களுக்கு அது ஒரு உப ஜீவனமாக இருக்கிறது. இந்த அம்மையார் கோழி முட்டை சாப்பிடமாட்டார்கள் என்று நினைக்கவேண்டாம். இந்த நாட்டி

னுடைய பொருளாதார அபிவிருத்திக்கு கோழிப்பண்ணைகள் அவசியம். அவைகளுக்கு ஒரு பெரிய எதிர்காலம் இருக்கிறது. குடிசைத் தொழிலைப்போல் இதற்கு அதிகமான ஆதரவு கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

பால் பண்ணையின் அவசியத்தைப் பற்றி எல்லோரும் அறிவோம். நமது காட்டு வளத்தைப் பற்றி ஒரு வார்த்தை. ரப்பர், தேக்கு, மெது மரம், இவைகள் இப்பொழுது பல இடங்களிலே அபிவிருத்தி நடப்பதை நாம் பார்க்கிறோம். இதிலே காட்டுகிற தீவிரம் கொஞ்சம்கூட போதாது. சர்க்கார் மட்டும் தான் இதைச் செய்யவேண்டுமா, தனியார் துறையில் செய்தால் அவர்களுக்கு சப்சிடி கொடுத்து இந்த பிளாண்டேஷன்ஸ் முதலியவைகளை ஊக்குவிக்கலாமா என்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

அடுத்தபடியாக டிரங் ரோடுகள் இருக்கின்றன. பஞ்சாபிலே பிளாட் 1, பிளாட் 2, பிளாட் 3 என்று ரோடுகளிலே போட்டிருக்கிறார்கள். இந்த காட்டிலாகா டிரங் ரோடுகளின் கிட்டே வந்துவிட்டார்களோ என்று நினைத்தேன். நாம் இங்கே ஒரு வரிசை மரம் நடுகிறோம். 4, வரிசை, 5 வரிசை, 7 வரிசை என்று அங்கே மரம் வைத்திருக்கிறார்கள். மண் அரிப்பும் தவிர்க்கப்பட்டு வருகிறது. இதிலே காட்டு இலாகாவை இணைத்திருக்கிறார்கள். இதிலிருந்து நாமும் நல்ல விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம். ரோடு புறம்போக்குகளிலே நிறைய மரங்களை வைக்கலாம்.

மீனவர்கள் இருக்கும் பகுதிகளிலே நான் நிறைய சுற்றுப் பிரயாணம் செய்து பார்த்திருக்கிறேன். கடலோரப் புறங்களிலே ஒரே மணலாக இருக்கிறது. ரோடு வசதி கிடையாது. இந்த மாதிரி புறக்கணிக்கப்பட்ட பகுதிகளிலே எல்லாம் தாராளமாகப் பண உதவி செய்து, ரோடுகள் போடவேண்டும். மீன் இலாகாவினர் அந்தப் பகுதிகளில் ரோட்டைப் போடுகிறார்கள். சில இடங்களிலே ஒரு மைலுக்கு அல்லது இரண்டு மைலுக்கு விடப்பட்டிருக்கிறது. மராமத்து இலாகா போடவேண்டுமா அல்லது மீன் இலாகா போடவேண்டுமா என்ற சந்தேகம் வருகிறது. இதனால் அதிக காலதாமதம் ஏற்படுகிறது. இந்த இரண்டு இலாகா வேலைகளையும் கோவார்டினேட் செய்தால் இந்த மாதிரிக் கஷ்டங்கள் போய்விடும்.

கடலோரப் பகுதிகளிலே குடி தண்ணீர் ஒரு தீராத பிரச்னையாக இருக்கிறது. திருநெல்வேலி கடலோரப் பகுதியிலே கன்னியாகுமரியிலிருந்து திசையன்விளைவரை சென்று பார்த்தால் அங்கே உள்ளவர்கள் தண்ணீருக்குப் படும் கஷ்டம் சொல்லி முடியாது. இந்த இருபதாவது நூற்றாண்டில்கூட இப்படியும் இருக்கிறதா என்று ஆச்சரியமாக இருக்கிறது. சில இடங்களிலே இரண்டு மைல், நான்கு மைல் சென்று குடிதண்ணீர் கொண்டு வருவதை





நான் பார்த்திருக்கிறேன். எந்த விதத்திலே இந்தமாதிரிப் பகுதிகளுக்கு நல்ல குடி தண்ணீர் கொண்டுவரலாமென்று யோசிக்க வேண்டும். ஆகவே, ஆராய்ச்சிகள் செய்து நல்ல தண்ணீர் கொடுக்க தீவிர முயற்சிகள் எடுக்க வேண்டும்.

இன்னும் ஒரு வார்த்தை சொல்லி முடிக்கிறேன். மீனவர் துறை, நெசவுத் துறை முதலியவைகளில் அதிகப்படியான ஜனங்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்தத் துறைகளில் அபிவிருத்தி வர வர, இயந்திர சாதனங்களைக் கொண்டுவர, வேலை வாய்ப்புகள் குறையும்; ஆகவே, ஒரு திட்டமிட்டு, அவர்களுக்கு மாற்றுவேலை தேடிக் கொடுக்கவும் அந்தத் துறைக்குத் திட்டம் என்று ஒன்று வேண்டும் என்று சொல்லிக்கொண்டு என் பேச்சை முடிக்கிறேன்.

SRI N. K. PALANISAMI: கனம் சபாநாயகர் அவர்களே, இரண்டாவது திட்டத்தில் கிட்டத்தட்ட எட்டு லட்சம் டன் உற்பத்தியாயிற்று; மூன்றாவது திட்டத்திலும் அதைவிட அதிகமாக உற்பத்தி செய்ய திட்டமிட்டிருக்கிறோம். ஆனாலும், கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்தும்கூட கணிசமான அளவுக்கு உற்பத்தி செய்யாவிட்டாலும், உற்பத்தி செய்திருக்கிறோம்.

(Sri K. Sattanatha Karayalar in the Chair.)

அதனால்தான் மற்ற மாகாணங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது நாம் மூன்றாவது இடத்தில் இருக்கிறோம். அந்த அளவுக்கு நிர்வாகத் திறமையினாலும், இன்னும் சர்க்காருடைய முயற்சிகளாலும், அந்த அளவுக்கு உற்பத்தியைப் பெருக்க முடிந்திருக்கிறது. ஆனால், போதுமான அளவுக்குக் குறைவு அது. அதற்கு அடிப்படையான காரணங்கள் என்ன என்பதை மறுக்க முடியாது. அக்ரிகல்சர் டிபார்ட்மெண்டு அவர்களே சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கும் வார முறை, குத்தகை முறை மாறவேண்டும். கணிசமான உற்பத்தியிருந்தாலும், விலை ஏறிக்கொண்டே போகிறது, மேலும் மேலும் ஏறிக்கொண்டே போகிறது, ஜனங்களுக்கு உணவு பற்றாக்குறை ஏற்படுவதைப் பார்க்கிறோம்.

ஸ்டேட் எவால்யுவேஷன் கமிட்டி ரிபோர்ட்டை எடுத்துக்கொண்டால் 18 ப்ளாக்குகளில் சர்வே செய்யப்பட்டது. அதில் 14 ப்ளாக்குகளில் தண்ணீர் கிடையாது என்று தெரிந்தது. அது ஒரு முக்கியமாக உள்ள பிரச்சினை. சுதந்தரம் அடைந்ததற்குப் பிறகு, பல இடத்திலும் தண்ணீர் கொடுத்திருக்கிறோம். ஆனாலும் தண்ணீர் வசதியற்ற பிரதேசங்களும் இருக்கின்றன. ஆகவே அப்படிப் பாக்கியிருக்கும் பிரதேசங்களிலுள்ள ஜனங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த என்ன நடவடிக்கைகள் எடுக்கப் போகிறார்கள். இந்த சந்தர்ப்பத்தில், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் மிகமிகத் தேவையாக ஆகிறது. பாக்கியிருக்கக்கூடிய

பிரதேசங்களுக்கு அம்மாதிரிப் பாசன வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். மேட்டூர் நீர்த் தேக்கத்தில் இரண்டு மூன்று வருஷத்திற்கு ஒரு முறை தண்ணீர் அதிகமாக வருகிறது. அது வீணுகப் போகிறது. அந்த அதிகப்படியான தண்ணீரை தேக்கி வைக்க ஒரு இரண்டாவது தேக்கம் கட்டமுடியுமா என்று ஆலோசிக்க வேண்டும். அதே மாதிரி லோயர் பவானித் தண்ணீரை அப்பர் பவானியில் தேக்கி வைக்க ஏற்பாடு செய்யவேண்டும். சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக இந்த பத்து வருஷத்தில் அங்கெல்லாம் ஒரு ஆல்டர்நேடிவ் டாம் கட்ட முற்படவேண்டும். எட்டு கோடிதான் செலவழித்திருந்தாலும், இப்பொழுது 12 கோடியாக அடுத்த 5 வருஷங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது வரவேற்கத்தக்கது. பாராட்டக்கூடிய அம்சம். பாசன வசதிகள் செய்து கொடுப்பதில், குட்டைகள் கட்டும் திட்டமும் இப்பொழுதுதான் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. போன வருஷம் கூட இதற்காக ஒதுக்கப்பட்ட பணம் ஸரண்டர் செய்யப்பட்டது. காரணம் அப்பொழுது பல இடங்களிலும் போதுமான டிபார்ட்மெண்ட் பிராஞ்சுகள் ஏற்படுத்தப்படவில்லை என்பது. இப்பொழுதுகூட நிறைய சப்-டிவிஷன்கள் இல்லை. தாலுக்காவிற்கு ஒரு சப்-டிவிஷனைப் போட்டு, அதிகப்படியாக குட்டைகள் கட்டி, மராமத்து வேலைகளையும் செய்ய வேண்டும்.

ஏராளமாக இருக்கும் புறம்போக்கு நிலங்களில் சிறிதளவு பட்டா செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அவை வெள்ளைக்காரன் ஆட்சி காலத்தில் செய்து கொடுக்கப்பட்டது. அங்கெல்லாம் அதிகப்படியான குட்டைகள் வெட்ட, அணைகள் கட்ட, குளம் மராமத்து செய்ய, அவைகளை ஆழமாக்க, அதிகப்படியான தொகைகள் கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்றைக்கு ஒரு டன்னுக்கு 2,000 என்றுதான் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அதை 3,000 ஆகவாவது ஆக்க வேண்டும். அப்படி உயர்த்தினால்தான் பல இடங்களில் திட்டங்கள் போட்டு வேலை செய்ய முடியும். என் கேள்விக்குப் பதில் சொல்லும்போதுகூட 3,000 வேண்டுமானாலும் அதைச் செய்வோம் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆகவே அம்மாதிரி உதவி குறைந்த பட்சம் ஒரு டன்னுக்கு 3,000 என்று நிர்ணயித்து திட்டங்களைச் செய்ய வேண்டும், சர்க்கார் அந்த உதவியைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

விதைப்பண்ணைகளை எடுத்துக்கொண்டால் அவைகளில் பல ஊழல்கள். கொஞ்சம் கூலி கொடுத்துவிட்டு அதிகக் கூலி கொடுத்ததாக எழுதுவது; கொஞ்சப் பணத்திற்கு அம்மோனியம் சல்பேட் வாங்கிவிட்டு, அதிகப் பணத்திற்கு வாங்கியதாகக் கணக்குக் காட்டுவது, இம்மாதிரி பல ஊழல்கள் காரணமாக, அதிகப்



படியாக ஸீட் பார்ம்-களிலிருந்து பலன் கிடைக்கவில்லை. இப்பொழுது பஞ்சாயத்து யூனியன் நிர்வகிக்கும் முறையிலே இருக்கக் கூடிய ஸீட் பார்ம்-களை செய்யவேண்டுமென்று ஆலோசனை சொல்ல விரும்புகிறேன்.

லாண்ட் ரிக்ளமேஷனை எடுத்துக்கொண்டால், அது போதிய அளவுக்கு முன்னேறவில்லை. மொத்த நிலப்பரப்பில் 110 லட்சம் ஏக்கர்தான் புஞ்சையாக இருக்கிறது; 60 லட்சம் ஏக்கர்கள் பாசன வசதியுடன் கூடியதாக இருக்கிறது. இந்தப் பூமிகள் அந்தந்த இடத்தில் வசதியான முறையில் விவசாயம் செய்ய முடியும். நிலச் சீர்திருத்தம் வர இருக்கிறது. கூட்டுறவு பார்ம் வைக்க ஏராளமான புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. அந்த பூமிகளை சர்க்கார் பண்ணைகளாக்கி கூட்டுறவு பார்ம்கள் ஏற்படுத்தி அவற்றை அபிவிருத்தி செய்யவேண்டும். மேலும் சர்க்கார் ஒவ்வொரு ப்ளாக்கிலும் ஒரு கோஆபரேடிவ் பார்ம் ஏற்படுத்துவதாக திட்டமிட்டார்கள். ஆனால் 10 கூட ஏற்படுத்த முடியவில்லை. காரணம் தெரியவில்லை. சிறிய விவசாயிகள் விவசாயம் செய்வது மிகுந்த கஷ்டமாக இருக்கிறது. கடன் வசதிகள் கொடுத்தாலும், அதெல்லாம் பணக்காரர்களுக்குத்தான் போகிறது. க்ரெடிட் கோ ஆப்ரேடிவ் சொஸைடிகளில் கூட பணக்காரர்களே பினாமியாக 10, 15 பேர்கள் மேல் போட்டு, பணம் பூராவையும் எடுத்துக்கொள்ளுகிறார்கள். ஆடிட் ரிபோர்டில் கூட அது பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தக்காவி லோனும் பணக்காரர்களுக்குத்தான் போய்ச் சேருகிறது. ஆகவே, இந்த கூட்டுறவு முறையில் இருக்கக்கூடிய ஊழல்களைப் போக்கக்கூடிய அளவில் ஒரு காம்ப்ரெஹென்ஸிவ் லெஜிஸ்லேஷன் கொண்டு வர வேண்டும். மூன்று, நான்கு க்ரெடிட் கோ ஆபரேடிவ் சொஸைடிகளை ஒன்றாகச் சேர்த்து, சர்க்காரே அவர்களுக்குக் கடன் கொடுக்கக்கூடிய முறையிலே செய்ய வேண்டும். பொருக்கு விதைகளைக் கொடுத்தாலும் அதை வாங்கக்கூடிய அளவு சிறிய விவசாயிகளிடம் பணம் இல்லை. அது கிடைக்கும் சமயத்தில் பணம் இருப்பதில்லை. பொருக்கு விதைகளும் சரியான சமயத்தில் வழங்குவதில்லை. காலம் கழித்து கொடுக்கப்படுகிறது. அவர்களுக்கு குறுகிய காலக்கடன் கொடுத்தால், விதைத்தேவை சமயத்தில் அதைக் கொடுத்தால், அறுவடை காலத்தில் அதை திருப்பி வாங்க வழிவகை செய்தால், அவர்களுக்கு உதவியாக இருக்கும் ஸீட் பார்ம் சம்மந்தமாக எஸ்டிமேட் கமிட்டி கூட விசாரணைகள் செய்து சிபாரிசுகள் செய்திருக்கிறது, ஆகவே அம்மாதிரி குறுகிய காலக் கடன் கொடுக்க வேண்டிய முயற்சிகள் செய்யவேண்டும்.

ஸாயில் கன்ஸர்வேஷன் மலைப் பிரதேசங்களில்தான் நடக்கிறது. இந்த வருஷம் 2-½ கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. போன வருஷம் சில ஆயிரம் ரூபாய்கள்தான் ஒதுக்கப்பட்டிருந்தது. ஸாயில் கன்ஸர்வேஷன் விவசாயத்திற்கு மிகவும் அவசியமானது. மலைப்பிரதேசங்களில் மட்டுமல்லாமல், ஓடை

உள்ள பிரதேசங்களுக்கும், மண் தடுப்பு இல்லாவிட்டால் நாளா வட்டத்தில் பாதிக்கப்படுவார்கள் என்ற காரணத்தினால், அதற்கும் வேண்டிய தொகையை ஒதுக்கி ஆவன செய்ய வேண்டும்.

விவசாயக் கருவிகள் ஏராளமாகக் கொடுத்தாலும், பல பேர்களுக்கு அவற்றை உபயோகிக்கத் தெரிவதில்லை; உபயோகப்படுத்த முடிவதில்லை. அவர்களுக்குச் சலுகைகள் கொடுக்கும் முறையில், இம்ப்ளிமெண்ட்லை உபயோகிக்கும் முறையையும் தெரிவிக்க வேண்டும்; அதோடு, அக்ரிகல்சர் சர்வே செய்து, ஒவ்வொரு பூமிக்கும் இன்னென்ன இம்ப்ளிமெண்ட் உபயோகிக்க வேண்டும் என்று குறிப்பிட வேண்டும் என்ற முறையிலே செய்தால் விவசாயிகளுக்கு வசதி ஏற்படும். ஆகவே அம்மாதிரி சர்வே செய்து, சர்வே பிரகாரம் விவசாயிகளுக்கு ஆலோசனை சொல்ல ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஆகவே அக்ரிகல்சரல் ப்ளானிங் இல்லாமல் எந்த அபிவிருத்தியும் செய்ய முடியாது.

அடுத்தபடியாக கீ வில்லேஜ் ஸ்கீம். உலகத்திலேயே சோவியத் ரஷியாவில்தான் இது ஆரம்பிக்கப்பட்டது. அதன் பிறகு நம் மாகாணத்தில்தான் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலமாக அதிகப்படியான பால் உற்பத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதைக் கண்டு நாம் ரொம்பவும் பெருமைப்பட வேண்டியதாக இருக்கிறது. நம் மாகாணத்தில் இன்றையதினம் 39 செண்டர்கள் இருக்கின்றன. அதற்கான 234 கேந்திர கிராமங்களும் இருக்கின்றன. அதை இன்னும் அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது அதிகப்படியான கால்நடைகள் இருக்கின்றன. அவைகளுக்குப் போதுமான வசதிகள் கிடையாது. ஆகவே கால்நடைகளுக்குப் போதுமான வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். இது ரொம்பவும் முக்கியம் என்று வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு பஞ்சாயத்து போர்டுகள் அதிகப்படியான கால்நடைகளை வாங்கலாம் என்று திட்டமிட்டிருந்தும் கூட பஞ்சாயத்து போர்டுகள் அதிகப்படியான கால்நடைகளை வாங்குவதாகவே இல்லை. அப்படி அவர்கள் வாங்குவதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக மீன் இலாகா. இன்றைய தினம் டாப்லோ போட்டுகள் ஏராளமாக வாங்கி இருக்கிறார்கள். அதுவும் போதுமான அளவுக்கு இல்லை. இருக்கிற போட்டுகளை ரிப்பேர் செய்வதற்கு யாருக்கும் தெரியாது. ஆகவே டாப்லோ போட்டுகள் ரிபேரானால் அவைகளை ரிபேர் செய்வதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். மீன் இலாகா சம்பந்தமாக டீப் சீ ஹார்பர் பல இடங்களில் அமைக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. இப்பொழுது ஒன்றிரண்டு இடங்களில்தான் இருக்கின்றன. அடையாறுக்குப் பக்கத்தில் ஒரு டீப் சீ ஹார்பர் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். (மணி அடிக்கப்பட்டு அடுத்த அங்கத்தினர் பெயர் கூப்பிடப்பட்டது).



* SRI R. SRINIVASA IYER: Sir, so far as the several Demands before the House are concerned, the Agriculture Department, the Animal Husbandry Department, Fisheries Department, and the Forest Department have done very good work during the past ten years and the result of the good work has been catalogued in the Finance Minister's Budget speech and he has given full particulars of the achievements made and the plans for the Third Five-Year Plan. The Hon. Minister for Home who moved the Demands to-day has also catalogued certain proposals and given figures. In addition to that, I would like to submit to the House, through you, Sir, some more particulars to show that in the whole of India we lead in every respect in production in the agricultural sector. If we compare all-India figures of 1958–59 and the Madras figures for the same year, we find that Madras produces 1,077 lb. of rice per acre while the all-India average is 748 lb. per acre. In the case of cholam, Madras produces 706 lb. as against the all-India average of 363 lb. In the case of kambu, Madras produces 545 lb. as against the all-India average of 209 lb. In the case of ragi, Madras produces 1,002 lb. as against the all-India average of 734 lb. In the case sugarcane we produce more than twice the all-India average of 2,951 lb., that is, 6,151 lb. In the case of groundnut, Madras produces 1,035 lb. as against the all-India average of 677 lb. In the case of cotton, Madras produces 120 lb. as against the all-India average of 77 lb. So, in every respect, we are far ahead so far as all-India average is concerned.

I am also proud to mention that the Madras State does not lag behind in making use of the irrigation facilities while other States are lagging behind. Sir, yesterday it was stated that we should not also make our representations or requests when we appreciate the work of the Ministry which means, according to the hon. Member Sri K. Anbazhagan who spoke yesterday, that we are also decrying the administration while praising it. It is not so We say that while the achievement made so far is good, still more achievements should be made and that benefits should be distributed all over the State quickly. It does not mean that we are decrying the administration. We support the present administration in every respect. Within the ten minutes allotted to me, I may not be able to speak in detail about all that has to be done. So let me catagolue in brief what has to be done in my constituency in the Tanjore district. I request that the Agricultural Research Station at Pudukkottai be made a permanent Research Station because it caters to the need of Cauvery-Mettur Project area which has got peculiar problems. An Agricultural College should be started anywhere in the Tanjore district. There should be joint exploitation or rivers in the Southern Zone as recommended by

Dr. P. S. Loganathan in his Report on the Techno-Economic Survey of the State recently published. So far as the Krishna and Godavari rivers are concerned, a large quantity of these waters according to us, are going to waste. The waters of these rivers should be brought to Madras State. A thorough study of the cost of cultivation per acre in relation to the crop pattern should be made. So far we have not been able to gather information about the cost of cultivation per acre for easy crop in every area. We have got to do it very quickly so that we can advise ryots as to what crops they should grow profitably and in what soil. There should be increased cultivation of commercial crops which will be more useful for gur industries and they will also earn foreign exchange. We are doing a great deal in that respect and something more has got to be done. A special drive to cover the East Coast belt to a depth of at least ten miles with coconut and casuarina plantations should be made. Coconuts are in great demand. We are importing Rs. 25 crores worth of coconut copra every year. We can plant teak and babul ( கருவை ) trees in our tank fore-shores. In the Zamin and Inam estates where the zamindars were having supreme control over the tanks, they had grown babul trees and now they are not in existence. So, we must re-plant babul trees which will be useful for agricultural implements.

So far as fisheries are concerned, there should be an intensive development of inland fisheries. According to statistics, in one acre of waterspread of an average depth of three feet, we can grow and get Rs. 3,000 worth of fish per year. As the majority of the people in this State are non-vegetarians, we must develop inland fisheries. Panchayats will go a great way to help us, if only fisheries in non-irrigation ponds and tanks are vested with them; it is said this matter is under consideration of Government. But orders have not so far been passed. A shark liver oil factory must be set up in Nagapattinam or at least in Tuticorin as recommended by Dr. P. S. Loganathan. Something also should be done towards increasing marketing facilities, fish-curing and preservation. In this connection, I will reiterate the request of Dr. Soundaram Ramachandran that fishermen villages must be provided with good road facilities and there should be a scheme to connect all of them with the main road. In my constituency there are about 20 fishermen villages which have no roads. They have to bring their head-loads of fish from the sea along for two furlongs of sea sand, which is a difficult thing to do. Fishermen villages also should be provided with good water-supply and it is very important and it should be done.

So far as animal husbandry is concerned, the Government have done a great deal. Even the All-India prizes we have won; and anybody who saw the cattle show organised at the State level or the regional level would certainly certify that we have done a great deal in this respect. Something more has got to be done. We



are exporting hides and skins on a large scale to the United Kingdom. Animal carcass utilisation scheme is in operation in Bakshi-ka-talab near Lucknow and such a scheme has got to be implemented in the Madras State also. I have given a scheme to the Hon. Ministers for Agriculture and Industries; it is under investigation. I request that it may be taken up at least in Madras City in the first instance. Our officers who have undergone training in this respect are wasting their knowledge in the veterinary college at present. Their services should be properly utilised.

There should be an increase in key village scheme all over the State and the whole State should be covered by 1971. Sir, in this respect, we have to increase the inspecting staff for the key village schemes. Sufficient staff has not been provided. So far as animal husbandry department is concerned, we have not spent the amount provided for in the Second Five-Year Plan. Staff must be increased and sanctioned when the Director of Animal Husbandry puts up a proposal reasonable with the work involved. Without enough supervisory staff no real useful work can be done.

The veterinary hospitals are very important. I request at least one veterinary hospital should be opened in each Revenue Division and a Veterinary Dispensary in each taluk.

So far as irrigation is concerned, the Estimates Committee has exhausted all major sources. There are only minor irrigation works to be taken up. In this respect in my area, Pattukkottai and Arantangi Taluks, there are number of jungle streams and their water run to waste. I have been representing this matter for the past four years. These are all small irrigation schemes and if they are executed they would yield quick results. Now there are 2 works under execution and they are likely to be finished. There are twenty other schemes under investigation. There are proposals for constructing anicuts across Agniyar, Ambuliyar and Pappankanni in Pattukkottai taluk and Vellar in Arantangi tank. These are schemes which would bring large tracts of waste lands under irrigation, stabilise existing irrigation and would help to step up the food production a great deal. There is inordinate delay in implementing these schemes.

So far as irrigation is concerned, the Estimates Committee has made a report last year. Some orders must be passed on the report and on the recommendations made by that Committee. These recommendations should be implemented as far as possible and as early as possible. The minor irrigation tanks and the major irrigation tanks should be handed over to the Food Production Department for renovation and maintenance. In Russia the Ministry of Agriculture is in control of irrigation as well. I therefore suggest that irrigation and agriculture should go together.

I desire to mention that there is no co-ordination between the Public Works Irrigation Department and the Food Production Department. There are about 33,953 major and minor tanks in our State. The area irrigated by them is equal to 40 per cent of the total irrigated area in the State. Underground water resources should also be tapped. At present, they have taken up the improvement work of few tanks only. They must take up the improvement work for all the tanks at the earliest possible time. At the rate at which we are now taking up the tanks it will take 50 years more to complete. I request therefore that all the minor irrigation works and the jungle stream works should be taken up on hand immediately without any loss of time.

**SRI M. A. MUTHIAH CHETTIAR :** தலைவர் அவர்களே, கால் நடை, விவசாய, மீன் இலாக்காக்களுக்காக கோரியிருக்கும் மானியத்தை ஆதரிக்கும்போது விவசாய அபிவிருத்திக்காக நமது அமைச்சர், மற்றும் அந்த அந்த இலாகா செய்துள்ள சேவைகளை செய்துவரும் சேவைகளைப் பாராட்டி ஒரே ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன்.

குன்னூரில் உள்ள பொட்டானிகல் கார்டன் இன்றைய தினம் உபயோகம் இல்லாமல் இருக்கிறது. அதை உபயோகப்படுத்தக் கூடிய திட்டத்தை வகுக்க வேண்டும். சில உயர்ந்த ரக விருட்சங்கள் எல்லாம் அங்கே இருக்கின்றன. கோயம்புத்தூர் விவசாயக் கல்லூரி மாணவர்களுக்கு சிறந்த ஆராய்ச்சி செய்வதற்கு உபயோகப்படக்கூடிய வகையில் சில லட்சம் ரூபாய் செலவானாலும் அதைப் பாராமல் உபயோகப்படத்தக்க வகையில் அதை அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இன்னும் பல விவசாயக் கல்லூரிகள் நம் ராஜ்யத்தில் ஏற்படுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதேபோல் தமிழ் நாட்டில் இன்னும் இரண்டு, மூன்று வெடரினரி காலேஜ்கள் ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்வார்கள் என்று நம்புகிறேன்.

**SRI P. G. KARUTHIRUMAN :** அவைத் தலைவர் அவர்களே, இன்று விவசாய அமைச்சர் கொண்டுவந்திருக்கும்படியான மானியத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல ஆசைப் படுகிறேன். நாட்டின் சுபிட்சம் எங்கு இருக்கிறதென்றால் பெரும் பட்டிணங்களில் இருக்கும்படியான அபிவிருத்தியைப் பற்றி மட்டும் அல்ல, பட்டிணங்களில் இருக்கும்படியான ரோடுகளோ, மின்சார விளக்குகளோ இவற்றைப் பற்றி மட்டும் அல்ல. வெகு தூரத்தில் இருக்கும்படியான கிராமங்கள், கிராமங்களில் இருக்கும் படியான விவசாய நிலங்கள், விவசாய நிலங்களில் இருக்கும் படியான செழிப்பான தானிய மணிகள் இவற்றைப் பொறுத்துத் தான் இருக்கிறது என்பதை அறிவுறுத்த விரும்புகிறேன். இந்த மானியக் கோரிக்கையைப் பிரேரித்திருக்கிற போது விவசாய உற்பத்தி, கழனிகளில் இருக்கும்படியான பயிரை வளர்ப்பதற்கான திட்டங்கள் இருக்கின்றனவா என்று பார்க்கவேண்டும்.





சென்னை ராஜ்யம் இவ்விஷயத்தில் தலைசிறந்து இருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அதுவும் அண்மையில் நடந்த உலக விவசாயக் கண்காட்சியில் சென்னை ராஜ்யம்தான் முதல் பரிசு பெற்றது. சென்னை ராஜ்ய விவசாயிகள்தான் தலை சிறந்த நிலையில் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை அந்நிய தேசத்தில் இருந்து வந்த நிபுணர்களே ஒப்புக்கொண்டு அத்தாட்சி கொடுத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. நம் நாட்டின் சராசரி உற்பத்தியை அகில இந்திய உற்பத்தியோடு ஒப்பிட்டுப் பார்த்தால் நம் நாட்டு விவசாயிகள்தான் தலைசிறந்த உழைப்பாளிகளாக இருக்கிறார்கள் என்பது தெரியவரும். அதுவும் இந்தியாவின் சராசரி ஏக்கருக்கு 1,300 பவுண்டாக இருக்கும்போது சென்னை ராஜ்யத்தின் சராசரி 2,300 பவுண்டு என்றால் உண்மையில் நாம் பெருமைப்படவேண்டும். அதைவிட்டு எதிர் கட்சிக்காரர்கள் புகார் சொல்கிறார்கள் என்றால் அவர்கள் சொல்வது என்ன? உப்பு கிடைக்கவில்லை, அமோனியம் சல்பேட் கிடைக்கவில்லை, அமைச்சர் அவர்களே கலப்படமாகச் சொல்லி விட்டார் என்று குற்றம் சாட்டினார்கள். அமோனியம் சல்பேட் இல்லாமலேயே விவசாய உற்பத்தியை மிக அதிக அளவில் பெருக்க முடியும் என்று உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**SRI A. GOVINDASAMI :** சர்க்கார் கட்சிக் கொறடா பேசுகின்றபோது கலப்படமாக மந்திரி பேசிவிட்டார் என்று சொன்னதாகச் சொன்னார். நான் அப்படிச் சொல்லவில்லை. இதில் கூட கலப்படம் இருக்கிறது என்பதை மந்திரி சொல்லிவிட்டார் என்பதாகத்தான் சொன்னேன்.

**SRI P. G. KARUTHIRUMAN :** நல்லவேளையாகத் திருத்திக் கொண்டதைப்பற்றி எனக்கு சந்தோஷம். வட இந்தியாவில் 69 ஆலைகள் இருக்கின்றனவே என்று சொன்னார். சுயராஜ்யம் வந்த பிறகு ஏற்படுத்தப்பட்ட ஆலைகள் அல்ல அவை. பிரிட்டிஷ் ஆட்சி காலத்திலேயே ஏற்பட்டவை. அங்கே எத்தனை பாக்டரிகள் இருந்தாலும் இங்கே இருக்கும்படியான கரும்பு உற்பத்தி உலகிலேயே சிறந்த நிலையில் இருக்கிறது. அதுவும் கோவை விவசாய ஆராய்ச்சிப் பண்ணையில் தயாரிக்கும்படியான வித்துக்கள் மிக உயர்ந்த முறையில் அதிக உற்பத்தியைப் பெருக்குவதற்கு வகை செய்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைத் தெரிந்துகொள்ளாது உப்பு இல்லை, அமோனியம் சல்பேட் இல்லை என்று சொல்லிக்கொண்டிருப்பதால் பயன் இல்லை. சுமார் 1940-ம் வருடத்திலே 21 ஆண்டுகளுக்கு முன்னாலே கோவை ஆராய்ச்சி நிலையத்து விதையாகிய தனி ரகம் சிறுமணியம் கோ 19 நம். விதையை உபயோகித்து பத்தொன்பதாயிரம் பவுண்டு 50 ஏக்கரிலே விளைவித்துக் காட்டியிருக்கிறேன். 1945-ல் கோ 25-நம். விதையை உபயோகித்து உப்பு, அமோனியம் எதுவும் இல்லாமல் 5 ஆயிரம் பவுண்டுக்கு மேல் நூறு ஏக்கரில் ஒவ்வொரு போகத்திலும் விளைவித்துக் காட்டியிருக்கிறேன். இதையெல்லாம்

மக்களிடத்தில் சொல்லாமல் உப்பு இல்லை, அமோனியம் இல்லை என்கிற குறைபாட்டை வலியுறுத்திச் சொல்லிக்கொண்டிருப்பது அவர்களைத் தவறான பாதையில் இழுத்துச் செல்லும் என்று சொல்ல விரும்புகிறேன். எப்படி மருத்துவ உலகத்திலே "பென்சிலின்" ஊசிகளை நம்பி இருக்கிறார்களோ, அதைப்
11 a.m. போன்றுதான் இதையும் நம்பி இருக்கிறார்கள். இந்த அமோனியம் சல்பேட் உப்பை அதிகமாக நம்பியிருப்போமானால் இதற்காக பணமும் செலவாகும், பூசார சத்தும் குறையும். இதற்குப் பதிலாக தழை உரத்தை அதிகமாகப் பயன்படுத்தினால் நல்ல பலனைக் காணலாம். இதைப் பயன்படுத்துவதற்கு மக்களிடையே சரியான முறையிலே பிரசாரம் செய்யவேண்டும். உயிருள்ள பிராணிகளின் மலஜலம் பாதுகாக்கப்பட்டு உரமாக உபயோகப்படுத்தினால் ஐந்து மனிதனுடைய எருவுக்கு சமமாகி, 3 ஏக்கருக்கு மூன்று போகங்களாக உயர்ந்து, உறபத்தியைப் பெருக்கிக் கொடுப்பது மட்டுமல்லாமல் பூசார சக்தியை அதிகரிப்பதற்கும் உபயோகமாக இருக்கும் என்று சொல்ல விரும்புகிறேன். மலஜல எருவை பிரயோஜனப்படுத்துவதினால் 200 ஏக்கருக்குப் போடக்கூடிய உரம் உண்டாக்கலாம். அது 100 ரூபாய் அமோனியம் சல்பேட் போடக்கூடிய மதிப்பிற்குச் சமமாகும். அந்த அளவு உரசத்து கொடுப்பதோடுமட்டுமல்லாமல் சாதாரணமாக 5, 6, வருஷங்களுக்கு பூசார சத்தும் குறையாமல் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். போலி உப்புக்களை நம்பிக்கொண்டு உற்பத்தியாவதுகூட உற்பத்தியாகாமல் இருப்பதைவிட சாதாரண நிலத்தில்கூட இயற்கை எரு போட்டு 5 ஆயிரம் பவுண்டு உற்பத்தியை செய்திருக்கிறோம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக நான் சொல்வது என்னவென்றால், சரியான விவசாயிக்கு தன்னுடைய உழைப்புத்தான் முக்கியம். அதைத் தான் அவன் முக்கியமாகப் பயன்படுத்திக்கொள்வான். உண்மையில் ஒவ்வொரு விவசாயியும் அவன் உழைப்பை அதிகமாகப் பயன்படுத்துவானானால் குறைந்தது எவ்வளவு தூரம் உற்பத்தியை பெருக்க முடியுமோ அவ்வளவு தூரம் உற்பத்தியை உயர்த்திக் கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படும். கம்பராமாயணத்தில் ராம ராஜ்யம் என்பதை "வையகம் முழுவதும் ஒரு வறிநன் ஓம்பும் ஓர்சேய் என காத்து இனிது அரசு செய்கிறான்" என்று குறிப்பிட்டிருக்கிறார். ஒரு ஏககருக்குக் குறைவான ஒரு சிறு மனையைக்கூட கண்ணும் கருத்துமாக பாதுகாத்து வந்தால் உற்பத்தியை மிக அதிகமாகப் பெருக்கமுடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்த நிலையில்தான் ராமராஜ்யம் அமைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார். ஒவ்வொரு விவசாயியும் தன்னுடைய நிலத்தில் கண்ணும் கருத்துமாக உழைத்தால் உற்பத்தியைப் பன்மடங்கு பெருக்குவதற்கு வழி



ஏற்படும். இம்மாதிரி உழைக்கின்றவர்கள் சின்ன விவசாயிகள் தான். அவர்களுக்கு வேறு எந்தவிதமான வருமானமும் கிடையாது. அவர்கள்தான் நிறைய உற்பத்தியைப் பெருக்குகிறார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சர்க்காருக்கு யோசனை ஒன்று மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். உண்மையாக உற்பத்தியைப் பெருக்குவதற்கு நியாய விலையைக் கொடுக்கவேண்டும். மேலும் விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவு அதிகமாகிவிட்டது. ஆகவே விவசாயிகளுக்கு கட்டுப்படியாகக்கூடிய அளவிற்கு நியாய விலைக் கொடுத்து உற்சாகப்படுத்தினால் நாட்டிலே விவசாய உற்பத்தி பெருமளவிற்கு அதிகமாக்கமுடியும். இப்பொழுது 58 லட்சம் டன் உற்பத்தி செய்திருக்கிறார்கள். இன்னும் உற்சாகப்படுத்தினால் அவர்கள் உற்பத்தியைப் பன்மடங்கு அதிகமாக்கமுடியும். இப்பொழுது உற்பத்தியைப் பெருக்குவதற்கு பல காரணங்கள் இருந்தாலும், திட்டங்கள் விஸ்தரிப்பதன் மூலம் உற்பத்தியைப் பெருக்கினாலும்கூட, இவ்வளவு செலவு செய்தும் நியாயவிலை இல்லை என்றால் ஒன்றும் இயலாது என்று சொல்ல விரும்புகிறேன். யுத்த காலத்திலே விலைவாசி உயர்ந்துவிட்டது என்று சொல்லலாம். யுத்த காலத்தில் நம் மாகாணத்தில் உற்பத்தியின் புள்ளிவிவரம் என்ன? இப்பொழுது இருக்கக்கூடிய புள்ளிவிவரம் என்ன? 100 என்று வைத்துக்கொண்டால் 400 அதிகமாக ஏறிவிட்டது. ஆனால் நாட்டிலே ஏழை விவசாயிகளின் உற்பத்தியின் புள்ளி விவரத்தை எடுத்துக்கொண்டால் 100 என்பதை ஆயிரம் ஆக்கியிருக்கிறார்கள். யுத்த காலத்திற்கு முன்பு விலைவாசிகள் 10 பங்கு அதிகமாக இருந்தாலும் யாரும் நியாயமான விலை என்று நம்ப முடியாது. சர்க்கார் நியாயவிலையை ஏற்படுத்தினால்தான் உற்பத்தியைப் பெருக்க முடியும். நியாயவிலையைக் கொடுத்தால் 50 லட்சம் டன் அல்ல 100 லட்சம் டன்கூட உற்பத்தி செய்கிறோம். சர்க்கார் இதையெல்லாம் கவனித்துத்தான் நியாயவிலைக்கு அக்கரை காட்டுகிறார்கள் என்பதை நான் வரவேற்கிறேன்.

நாம் உற்பத்தியைப் பெருக்குவதற்கு நிலத்தைப் பாதுகாத்தால் மட்டும் போதாது, கால்நடைகளையும் பாதுகாக்க அதிக அக்கறைக் காட்டவேண்டும். எல்லா சத்தும் சேர்ந்தது மாட்டுப் பால் உணவு. ஆனால் நம் நாட்டில் அதிகமான பால் கிடைக்காதது வருந்தத்தக்கது. பசுவின் எண்ணிக்கை நிறையத்தான் இருக்கிறது. ஆனால் அவைகள் அதிகப் பால் கொடுப்பதில்லை. உலகத்திலேயே அதிக அளவுப் பால் கொடுக்கக்கூடிய சிந்தி பசு போன்ற இனங்கள் நம் நாட்டில் இருக்கின்றன. இவைகள் முதல்தரமான ஜாதிப் பசுக்கள். இந்தப் பால் கொடுக்கும் இனத்தின் அபிவிருத்தியில் அதிக கவனம் செலுத்தவேண்டும். இந்தக் கால்நடைகளைப் பராமரிக்க, பராமரிப்பு நிலையங்களுக்கு நிறைய மான்யம் கொடுத்தால் அவைகளை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வருவதற்கு ஏதுவாக இருக்கும். அதிகமாக பால் தரக்கூடிய இனங்களை வெளிநாடுகளிலிருந்து தருவித்து இங்கு விருத்தி செய்யலாம். இந்தியாவிலே வேலை செய்யக்கூடிய மாடுகள்

அதிகம். பால் கொடுக்கக்கூடிய இனம் குறைவு, இருந்தாலும் பாலை அதிகரித்து வருவாயைப் பெருக்கிக்கொள்வதற்கு கேந்திர நிலையங்களை ஏற்படுத்தி மிகச்சிறந்த முறையிலே பாதுகாத்து நம் ராஜ்யத்தை இந்தியாவிலேயே தலைசிறந்த ராஜ்யமாக செய்ய வேண்டும். பால் பெருகவும், உணவு தான்யங்கள் பெருகவும், மக்கள் சுபிட்சம் பெருகவும் உதவும். இந்த மான்யத்தை மனமார வரவேற்று முடித்துக்கொள்ளுகிறேன்.

* **Sri T. IRUSAPPAN** : கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, இன்றையதினம் விவசாய காட்டிலாக்கா, மீன் இலாக்கா மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரேபணையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய சர்க்கார் இந்தக் காடுகளை பாதுகாப்பதற்காக அதிக பணம் செலவு செய்து திட்டமிட்டு வேலை செய்து வருகிறது. அப்படியிருக்கும்போது இப்பொழுது எந்த நிலைமையில் இருக்கிறதென்றால் எல்லாம் அழிந்துப்போகக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் முக்கிய காரணம் என்னவென்றால் அங்கு இருப்பவர்களுக்கு போதிய ஊதியம் கொடுக்கப்படுவதில்லை. இப்படி அவர்களுக்கு போதிய ஊதியம் கொடுக்காத காரணத்தினால் கையாடல் செய்து ஜீவிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு நிறைய மரங்களைப் பார்த்தால் அடுத்த ஆண்டு காணோம். இதனால் ஒதுக்கப்படுகின்ற பணம் வீணாக விரயம் ஆகிறது. இது வீணாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். மேலும் காடுகளில் விறகுகள் எடுப்பதற்கு கான்ட்ராக்ட் விடுகிறார்கள். சர்வே செய்வதற்காக ஆயிரம் ஏக்கர் என்று விடுகிறார்கள். இதனால் காடுகளில் உள்ள மரங்கள் நிறைய வெட்டியெடுக்கப்பட்டு அழிக்கப்படுகிறது.

ஆகவே, காண்ட்ராக்டர்களுக்கு குத்தகைக்கு விடும்போது, எவ்வளவு ஏக்கர்கள் எடுத்துச் செல்லவேண்டுமென்றதொரு நிலையிருக்கவேண்டும். பச்சைக் கட்டைகளைகூட வெட்டிச் செல்வதால் காட்டுச் செல்வம் அழிந்துவிடுகிறது. மரம், செடியில்லாத யிடங்களை, பொட்டல் இடங்களை விவசாயம் செய்வதற்கு குத்தகைக்கு விடுகிறார்கள். அதில் ஏழை மக்கள் விவசாயம் செய்து மரம் செடிகளும் நட்டு வளர்க்கிறார்கள். இந்த மக்களுக்கு சர்க்கார் உரம், விவசாயக் கருவிகள் இவைகள் வாங்குவதற்கு பணம் கொடுத்து உதவி செய்தால் காட்டு வளத்தை பெருக்குவதோடுகூட விவசாய உற்பத்தியையும் பெருக்க உதவியாகயிருக்கும். ஆகவே, அவர்கள் பண உதவி அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சேலம் மாவட்டத்தில் ஏராளமான காடுகள் இருக்கின்றன. அங்கு, அரூர் தாலுகாவில் ஆதி-திராவிட மக்கள் விவசாயம் செய்து வந்தார்கள். பின்னர்தான் அந்த காட்டை சர்வே செய்தார்கள். அதற்கு பின்னர் அதை காட்டு இலாகாவோடு சேர்ப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அதனால் விவசாய ஏழை மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அது



பற்றி எவ்வளவோ விண்ணப்பித்தும் இருக்கிறார்கள். ஆகவே, அரூர் தாலுகாவில் ஏற்கெனவே தரிசு நிலங்களில் உழைத்து வந்தவர்களை பாதுகாக்க, அந்நிலங்களை பாரஸ்ட் இலாகாவோடு இணைப்பதை நீக்கி அந்த ஏழை மக்களுக்கு உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஜமீந்தாரி முறையை, மிட்டாதார்களை நீக்கிவிட்டோம் என்று சொல்கிறார்கள். அதே நேரத்தில் தனிப்பட்டவர்களிடம் ஏராளமாக காடுகள் இருக்கின்றன. சின்ன கல்வராயன், பெரியகல்வராயன் மலைகளிலுள்ள காடுகளில் இவர்கள் இஷ்டம்போல் வெட்டுகிறார்கள். ஆகவே, அவர்களுடையதாயிருந்தால், நஷ்டஈடு கொடுத்துவிட்டு அவைகளை சர்க்காரே எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பின்னர், ஆத்தூர் காடுகளில் கிடைக்கும் சந்தனக்கட்டைகளைக் கொண்டு அங்கு ஒரு எண்ணெய் தொழிற்சாலை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சின்னகல்வராயன், பெரியகல்வராயன் மலையில் ஒரு ரோடு போட இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 9 மைல் சர்வே செய்யப்பட்டு 3 மைலுக்கு ரோடு வேலையாகி ஆயிரக்கணக்கில் ரூபாய் செலவு செய்து இப்பொழுது அதை அப்படியே விட்டு விட்டார்கள். அதை இந்த வருடமாவது எடுத்து நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தும்பல், பாப்பநாய்க்கன்பட்டி இவைகளை மலையோடு இணைத்து ஒரு ரோடு போடவேண்டும். மலையில் கடுக்காய் போன்ற பொருள்களை விளைவிக்கப்படுகின்றன. அடுத்தபடியாக நான் இங்கு குறிப்பிட விரும்புவது, கடுக்காய் போன்ற பொருள்களை உற்பத்தி செய்து அவைகளுக்கு நல்ல விலை கிடைப்பதற்குரிய முறையில் மலைவாசிகளுக்கு ஒரு கூட்டுறவு சொஸைட்டி ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். மலைவாசிகளுக்கு, கடுக்காய் போன்ற பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டு அவைகளுக்கு நல்ல விலை கிடைப்பதற்கு வேண்டிய வசதிகளை சர்க்கார் செய்து கொடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். பின், காட்டு இலாகா ரோடுகள் மிகவும் மோசமாயிருக்கிறது. விவசாயிகள், தழைகளை கொண்டுவந்து விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு முடியாத நிலையில் ரோடுகள் மோசமாகயிருக்கின்றன. ரோடுகளை செப்பனிடவேண்டுமென்று மாவட்டக் கமிட்டி, வட்டார வளர்ச்சி கமிட்டி இவைகளில் வற்புறுத்தியும், காட்டு இலாகாவிற்கு போதிய பணம் இல்லை. ஆகவே அவைகளை சீர்படுத்த முடியாது என்றும் சொல்கிறார்கள். ஆத்தூரில் குடமலை பச்சை மலைக்கு ரோட்டு வசதியும், ஆத்தூரிலிருந்து கல்ராயன் மலைக்கும் நல்ல ரோடுகள் போட்டுக் கொடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். அதோடு பாரஸ்ட் ஏரியா ரோடுகளை செப்பனிட வேண்டிய பணம் ஒதுக்கப்பட்டு அவைகள் செப்பனிடப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, மலைவாசிகளுக்கு இன்று பள்ளிக்கூடங்கள் ஏராளமாக திறந்திருக்கிறார்கள். அப்படி பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டிருந்தும் அங்கு அவர்களுக்கு படிக்க இட வசதியில்லை. மரங்களின் அடிகளில்

வைத்துத்தான் படிப்பு சொல்லிக்கொடுக்கிறார்கள். பொதுமக்கள் 50% பணம் கொடுத்தால்தான் பள்ளிக்கூடங்கள் அமைக்கப்படும் என்ற நிலை இன்றிருக்கிறது. மலைவாசிகள் மிகவும் ஏழைகள், பிற்போக்கானவர்கள். அவர்கள் இந்த பாதித் தொகையைக் கொடுத்து பள்ளிக்கூடங்கள் அமைப்பதற்குள்ள நிலையில் அவர்கள் இல்லை. ஆகவே பொதுமக்கள் இந்த பாதித் தொகை கொடுக்க வேண்டுமென்பதை நிறுத்தி விட்டு சர்க்காரே பூராத் தொகையும் போட்டு பள்ளிக்கூடங்கள் கட்டி மலைவாசிகள் கல்வி பெற வசதி செய்துகொடுத்து அவர்களும் மனிதர்களாக வாழ்வதற்கு வேண்டிய உதவிகள் செய்து கொடுக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படவேண்டும். பெரிய ஜமீன்தார்களுக்குத்தான் இன்று உற்பத்தி செய்யப்படுகிற பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கிறது. ஏழை விவசாயிகளுக்கு ஊக்கம் கொடுத்தால்தான் விவசாயத்தை நன்கு பெருக்கமுடியும். ஆகவே, ஏழை விவசாயிகளுக்கு உரம் கொடுப்பது, கூட்டுறவு சொஸைட்டியில் கடன் உதவி அளிப்பது போன்ற வசதிகள் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு காட்டை பாதுகாக்கக்கூடிய காவலர்களுக்கு சம்பளத்தை உயர்த்திக்கொடுக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* SRI S. RAMALINGA PADAYACHI தலைவர் அவர்களே, இந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து நான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நம் நாடு விவசாய பெருமக்களைகொண்ட நாடு. விவசாயம் வெற்றி பெற்றால்தான் நம் நாடும் வெற்றி பெற்றதாக கருத முடியும். எந்த ஜனநாயக நாட்டிலும், அரசாங்கமும் ஜனநாயகமும் ஒன்றோடொன்று பிணைத்து கொண்டிருக்கிறது. அதேபோல் விவசாயமும், நீர்பாசனமும் ஒன்றோடொன்று பிணைத்திருப்பதாகும். இந்த இரண்டிற்கும் சேர்ந்து ஒரே மந்திரியாகயிருந்தால் நல்லது என்று நான் கருதுகிறேன். புட் ப்ரொடக்‌ஷன், பி. டப்ளியூ. டி. என்று இரண்டாக பிரிக்கப்பட்டிருக்கிறது. உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் எதாவது செய்வதற்காக அங்கு சென்றால் அவர்கள் சொல்கிறார்கள், பி. டப்ளியூ. டி.-யை கேளுங்கள் என்று. பி. டப்ளியூ. டி.-க்கு சென்று கேட்டால் எங்களுக்கு தெரியாது, புட் ப்ரொடக்‌ஷன் டிப்பார்ட்மெண்டை கேளுங்கள் என்று சொல்கிறார்கள். ஆக, ஒன்றுக்கு ஒன்று முரண்பட்டிருக்கிறது. ஆகவே, இவை இரண்டும் ஒரே மந்திரியிடம் இருக்கவேண்டுமென்பது என் கருத்து. பின்னர், நீர்நிலை நன்கு இருந்தால்தான் நாடு செழிக்க முடியும். நீர் உயர்ந்தால் நெல் உயரும், நெல் உயர்ந்தால் குடி உயரும், குடி உயர்ந்தால் கோன் உயரும் என்று ஒரு பழமொழியுண்டு. வரப்பு உயர்ந்தால் நீர் உயரும் என்பார்கள், அது எப்படி முடியும்? Capacity தான் அதிகமாக இருக்கவேண்டும். ஒரு முறை தண்ணீர் பிடித்தால் ஒரு போகம் விளையவேண்டும். ஆக, கப்பாஸிட்டி அதிகம் இருக்கவேண்டும். ஆகவே, விவசாயமும் நீர்பாசனமும் ஒன்றாக இருந்தால் நன்றாகயிருக்கும். விவசாய



மக்களுக்கு அரசாங்கம் பல வகைகளிலும் உதவி புரிந்துகொண்டு வருகிறார்கள்.

உழுவார் உலகத்தார்க் காணியஃதாற்று
தெழுவாரை எல்லாம் பொறுத்து.

என்று வள்ளுவர் பெருமான் விவசாய பெருமக்களுக்கு எடுத்து கூறியிருக்கிறார்கள். ஆகவே, விவசாய மக்களுக்கு வேண்டிய எல்லா உதவிகளும் அளித்தால்தான் நாடு முன்னேறமுடியும். நமது அரசாங்கம் விவசாயிகளுக்கு பல்வேறு விதங்களில் உதவி செய்துகொண்டு வருகிறார்கள். பின்னர், உடையார்பாளயம் தாலுகாவில் இந்த மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் 50 குழாய்க் கிணறுகளுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. குழாய்க் கிணறுகள் இறங்குவதற்கு நம்மிடம் வசதியில்லை. ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு டிரில்லிங் மெஷின்தான் இருப்பதாக கேள்விப்படுகிறேன். அதைப் பார்த்து எதையும் ஏற்படுத்திவிட முடியாது. புட் ப்ரொடக்‌ஷன், அஸிஸ்டன்ட் இன்ஜினியர் அவர்களிடத்தில் போய் கேட்டபோது, ஐம்பது கிணறுகள் ஏற்படுத்தப்போவதாக சொல்லப்பட்டிருக்கிறதே அவைகளை எப்போது செய்யப்போகிறீர்கள் என்று கேட்டதற்கு, நாங்கள் என்ன செய்வது, டிரில் இறக்குவதற்கு உங்கள் நிலம் சரியாக இல்லை, மலைப்பாங்கான இடமாக இருக்கவேண்டும். ஆகவே ரோட்டரி இன்ஜின் வரவேண்டும். அது இருந்தால்தான் இவைகளை போட முடியும், இந்த இன்ஜின் இப்போது நெய்வேலியில் இருக்கிறது. அதைக்கொண்டு வருவதற்கு விவசாய மந்திரி அவர்களிடம் சொல்லுங்கள். அதைக் கொண்டு வந்தால் இவைகளை உடனே ஏற்படுத்திவிடலாம் என்று சொன்னார்கள். ஆகவே இவைகளை ஏற்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் உடனே நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக, நீர்நிலைகளை மட்டும் வைத்துக்கொண்டு விவசாயம் வளர்ந்துவிட முடியாது. நமது நாட்டில் இருக்கின்ற விவசாயத்தில் மூன்றில் ஒரு பங்குதான் நஞ்செய் நிலங்களாக இருக்கின்றன. மீதி இரண்டு பங்கு புஞ்செய் நிலங்களாகத்தான் இருக்கின்றன. இவைகளை எல்லாம் வளப்படுத்தி அதன் மூலம் உற்பத்தியை பெருக்குவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதை எப்படி பெருக்குவது என்பதைப் பார்க்கும்போது, 'அகல உழுவதை ஆழ உழு' என்ற பழமொழிக்கு இணங்க நிலத்தை ஆழமாக உழ வேண்டும். எப்படி ஆழமாக உழுவது என்பதைப் பார்க்கும்போது, டிராக்டரைக்கொண்டுதான் உழவேண்டியிருக்கிறது. இதற்கான இன்ஜின் கலப்பை போதிய அளவு கிடைக்கவேண்டும். சாதாரண மாட்டுக் கலப்பைக்கொண்டு உழுவதால் 3 இஞ்சு அல்லது 4 இஞ்சு ஆழத்தில்தான் உழ முடியும். இன்ஜின் கலப்பை வைத்து உழுதால் முக்கால் அடி அல்லது ஒரு அடி ஆழம் வரை உழ முடியும். இதன் காரணமாக நல்ல முறையில் மண் புரள ஏதுவாக இருக்கும். அதன் காரணமாக மழை குறைவாக இருந்தாலும்

பயிருக்குக் காய்ச்சல் ஏற்படாது. பயிர்களும் நன்றாக இருக்கும். விளைச்சலும் இதன் காரணமாக அதிகமாக கிடைக்கும். இதை வைத்துப் பார்க்கும்போது நம்முடைய நாட்டுக்கு புஞ்செய் தான்யங்கள் அதிகமாக தேவைப் படுகிறது. இந்த நிலையை எடுத்துப் பார்த்தால் இஞ்சின் கலப்பை நமது நாட்டுக்கு அதிகமாக தேவை என்பதும் தெரியவருகிறது. ஆனால் இப்போது நமது தேவைக்கு தகுந்தபடி இன்சின் கலப்பை கிடைப்பதில்லை. ஆகவே ஒரு தாலுகாவுக்கு ஒரு இன்சின் கலப்பையாவது இருக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும். அப்போதுதான் அதன் மூலமாக உணவு உற்பத்தியைப் பெருக்கிக் கொள்ள முடியும். இன்றைய நிலைமையில் இன்சின் கலப்பையை உபயோகிக்க வேண்டுமென்றால் ஒரு ஏக்கருக்கு 12 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று ரேட் இருப்பதாக தெரிகிறது. இப்படி இருந்தால் பெரும் பணக்காரர்களுக்குத்தான் இதை உபயோகித்துக் கொள்ள முடியும். பணவசதியற்றவர்களுக்கு இதை உபயோகிக்க முடியாது. ஆகவே இதை குறைவான கட்டணத்திற்கு, அதாவது ஒரு ஏக்கருக்கு 8 ரூபாய் என்றிருந்தாலாவது போதுமானதாக இருக்கும். இதனால் சர்க்காருக்கு சிறிது நஷ்டம் ஏற்படலாம். அது அவ்வளவு முக்கியமல்ல, உற்பத்தி பெருகவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தினுடைய முக்கிய குறிக்கோள். ஆகவே சிறிய நஷ்டத்தை எதிர் பார்க்காமல், குறைவான வசதியுள்ளவர்களுக்கு இந்த இன்சின் கலப்பை உதவி கிடைக்கக்கூடிய வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வள்ளுவர் பெருமான் கூட "தொடிப்புழுதி கஃசா உணக்கிற் பிடித்தெருவும் வேண்டாது சாலப்படும்" என்று கூறியிருக்கிறார்கள். அந்த வாக்குக்கிணங்க ஆழ உழுவதின் மூலமாக விவசாயத்தை நல்ல முறையில் செய்து கணிசமான அளவு உற்பத்தியை பெருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு இன்சின் கலப்பையை அதிகமாக தருவதற்கும் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் தாலுகாவிலும் கலப்படங்கள் சேர்த்து விற்பனை செய்கின்ற காரியங்கள் நடந்திருக்கிறது. அதன் பேரில் கேஸ் போடப்படுகிறது. பின்னால் கோர்டில் சிலர் விடுதலையாகி விட்டார்கள். நியாய ஸ்தலத்தில் எப்படியெல்லாமோ மாறி விடுகிறது. இதனால் என்ன ஆகிறது என்றால் சாதாரண ஏழை மக்கள் கஷ்டப்பட வேண்டியநிலை வந்துசேருகிறது. யார் செய்திருந்தாலும் கடைசியில் ஏழையின்மீது குற்றம் வந்து சேருகிறது. இதை நாம் தடுக்கவேண்டும். கோர்ட்டில் பலவிதமான சாட்சிகள் சொல்லப்படுகின்றன. அதை நம்பித்தான் கோர்ட்டில் தீர்ப்பு அளிக்கப்படுகிறது. ஆகவே அரசாங்கம் சாட்சியை மட்டும் ருசுவாக எடுக்காமல், பொதுமக்களிடத்தில் என்ன கருத்து இருக்கிறது என்பதை கருத்தில் எடுத்து, அதன்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்தபடியாக, ஃபாரஸ்டைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இப்போது இருக்கிற ஃபாரஸ்ட் நமக்கு போதவில்லை என்று இருந்தும்கூட, இருக்கிற ஃபாரஸ்ட் மிகவும் குறைந்து கொண்டே இருக்கிறது. இதற்கு காரணம் வெள்ளாடுகள்தான் என்று சொல்ல வேண்டியிருக்கிறது. இதற்காக வெள்ளாடுகள் வேண்டாம் என்றும் சொல்லுவதற்கில்லை. ஆகவே இந்தக் காடுகளை எல்லாம் நல்ல முறையில் பாதுகாக்கவேண்டும் என்றால் அங்கங்கேயுள்ள கிராம அதிகாரிகள் அல்லது பஞ்சாயத்து அதிகாரிகள் இவர்கள் முக்கிய கவனம் செலுத்திவரவேண்டும். அப்போதுதான் நல்ல முறையில் காடுகளையும் மரங்களையும் பாதுகாக்க முடியும் என்பதை தெரிவித்துக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* Sri V. SUBBIAH : கனம் தற்காலிக தலைவர் அவர்களே, இன்று சபை முன் வந்திருக்கும் மான்யங்கள் ஒன்றிரண்டு அல்ல, நான்கு மான்யங்கள் வந்திருக்கின்றன. கொடுக்கப்பட்டிருக்கும் இந்த நான்கு மான்யங்களையும் நான்கு மணி நேரத்தில் பேசித் தீர்க்கவேண்டும். பிஸினஸ் அட்வைஸரி கமிட்டியிலோ அல்லது சட்டமன்றத்திலோ இவ்வாறு முடிவு செய்திருந்தாலும் இந்த மான்யத்தின் பேரில், அதிலும் முக்கியமாக இருக்கின்ற விவசாயத் துறையின்மீது ஒரு நாளாவது பேசவேண்டும். அப்படியில்லாமல் நான்கு மான்யங்களையும் நான்கு மணி நேரத்திற்குள் விவாதிக்கவேண்டும் என்று முடிவு செய்திருப்பது மிகவும் வருத்தமாய் இருக்கிறது. அதிலும் இந்த நான்கு மணி நேரத்திற்குள் விவாதிக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கும் இந்த நான்கு மான்யங்களின்மீது 10 நிமிடத்திற்குள் பேச வேண்டும் என்பது மிகவும் வருத்தப்படக்கூடிய நிலை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன. குறிப்பாக விவசாயத் துறைக்காக 4 கோடி, 35 லட்சம் ரூபாய்க்குமேல் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில் மதிப்பிற்குரிய நண்பர்கள் பலர் திரும்ப திரும்ப ஒரு விஷயத்தைப் பற்றி சொன்னார்கள். இன்றைக்கு ரசாயன உரம் மிகவும் பற்றாக் குறையாக இருக்கிறது என்று திரும்ப திரும்ப எல்லோரும் சொன்னார்கள். அதே சமயத்தில் விவசாயிகளுக்கு தேவைப்படுகிற விவசாயக் கருவிகளின் விலை என்ன என்பதையும் நாம் பார்க்க வேண்டும். வண்டிப் பட்டை, மண் வெட்டி, கொழு-வுக்கு வேண்டிய இரும்பு இவைகள் எல்லாம் எவ்வளவோ விலை உயர்ந்து இருக்கிறது. இதைப்பற்றி இந்த மன்றத்தில்கூட பல முறை குறிப்பிட்டிருக்கிறேன்.

(Mr. Speaker in the Chair.)

முக்கியமாக விவசாயிகளுக்கு தேவையாயிருக்கிற உரத்தை குறிப்பிட்ட காலத்திற்குள் கொடுக்கவேண்டும். அதோடு பூச்சி மருந்துகளும் காலாகாலத்தில் கொடுக்கவேண்டும். விவசாயக் கருவிகள், பம்பு செட்டுக்கு வேண்டிய சாதனங்கள் இவைகள் எல்லாம்கூட கிடைப்பதற்கு கஷ்டமாயிருக்கின்றன. பம்புசெட் ஏற்படுத்து

வதை எடுத்துக்கொண்டால், அதுகூட நல்ல முறையில் செயல்படுவதாகத் தெரியவில்லை. விவசாயத்திற்கு வேண்டிய வேண்டிய இரும்பு ஒரு பக்கத்தில் கிடைக்கவில்லை என்று இருந்தபோதிலும், பம்பு செட்டுகளுக்கு வேண்டிய எலக்ட்ரிக் மோட்டார்கள், அதற்கான சாதனங்கள் இவைகள் எல்லாம் எப்படி கிடைக்கின்றன என்பதைப் பார்க்கும்போது, விவசாயத் துறையில் முன்பு 36 ரூபாய் விலையாக இருந்த உரம், இப்போது அமோனியம் சல்பேட் வாங்க வேண்டுமென்றால் 85 ரூபாய் கொடுக்கவேண்டியிருக்கிறது. எட்டு அணா கொடுத்து வாங்கின கொழு இப்போது 2-½ ரூபாய்க்கு வாங்க வேண்டியிருக்கிறது. இது இந்த நிலையில் இருந்தபோதிலும்கூட பம்பு செட்டுக்கு வேண்டிய எலக்ட்ரிக் சாமான்கள் வாங்கக்கூடிய நிலைமையைப் பார்த்தால் மிகவும் பரிதாபகரமாய் இருக்கிறது. மார்க்கட் வால்யூவை விட எத்தனையோ மடங்கு விலை கொடுத்து வாங்கக்கூடிய அளவுக்கு நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இவைகளை எல்லாம் சரியான முறையில் வாங்க முடியாத நிலை ஏற்படுவதின் காரணமாக சில நேரங்களில் பயிர்கள் எல்லாம் வாடக்கூடிய நிலை ஏற்படுகின்றது. இவைகளை எல்லாம் நீக்குவதற்காக அரசாங்கம் பல திட்டங்களை போட்டிருந்தாலும்கூட, இதற்காக எவ்வளவோ பணம் ஒதுக்கியிருந்தாலும்கூட, அந்தப் பணங்கள் எல்லாம் சரியான நேரத்தில் விவசாயிகளிடம் போய் சேருவதில்லை என்கின்ற நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது.

இது மாத்திரமல்லாமல் லோன்கள் கொடுக்கிறோம் பல ரூபத்திலே. விவசாய லோன் ஒரு பக்கத்தில் இருக்கிறது. ரெவின்யூ லோன் ஒரு பக்கத்தில் இருக்கிறது. அதோடு சமுதாய நலத் திட்டத்தின்கீழ் எத்தனையோ துறைகளில் கொடுக்கிறார்கள். விவசாய உற்பத்தி பெருகவேண்டுமென்று இந்த மாதிரியான லோன்கள் கொடுக்கப்படுகின்றன. என்றாலும் பல வித லோன்களைக் கொடுப்பதில் கையாளப்படுகிற முறை, வாங்குவதில் இருக்கக்கூடிய சிரமங்கள், கடைசியாக லோன் கையில் சேரக்கூடிய நிலைமை இவைகளைப்பற்றியெல்லாம் பல முறை இங்கே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இதெல்லாம் சுலபமாக, நேரடியான எந்தவிதக் கஷ்டமும் இல்லாமல், அரசாங்கம் ரிஸர்வ் பாங்கியிடமிருந்து என்ன வட்டிக்கு வாங்குகிறதோ அந்த வட்டியிலேயே கொடுக்கவேண்டும். எந்தக் கடன் கொடுத்தாலும் வட்டி சதவீதம் குறைந்த பட்சம் இருக்கவேண்டும். அந்த நிலையில் இருந்தால்தான் விவசாயம் நாட்டில் முன்னேற முடியும். மதிப்புக்குரிய கட்சிக் கொறடா அவர்கள் குறிப்பிடும்போது விவசாயப் பொருள்களின் உற்பத்திச் செலவை அரசாங்கம் நிர்ணயம் செய்ய முடியாமல் இருக்கிறது, இதனால்தான் விலையானது இப்படி போய்க்கொண்டிருக்கிறது என்கிறார்கள். உண்மை இதுதான். விவசாயிகளின் உழைப்பில் குறைவு ஒன்றும் இல்லை. அது உள்ள அளவில் இருந்துகொண்டுதான் இருக்கிறது.



எங்கள் பகுதியிலே ஒரு ரிஸர்ச் பண்ணை இருக்கிறது. இது கோயம்புத்தூருக்கு அடுத்தபடி பெரிய பண்ணையாக இருக்கிறது. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் ஏற்பட்ட பண்ணை. அந்தப் பண்ணையில் ஆராய்ச்சி செய்து நீண்ட உயர்ந்த ரக பருத்தி கே. 6 போன்ற ரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. அந்த ஆராய்ச்சியின் பலன் பருத்தியிலும், நெல்லிலும்தான் இருக்கிறது. நவதானியங்கள், குறிப்பாக கம்பு, ராகி, தினை போன்ற ரகங்களில் அந்த ஆராய்ச்சி பலன் அளிக்கவில்லை. தானியங்கள் விஷயத்தில் நல்ல நிபுணர் அங்கு இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். அதனால்தான் அந்த நவதானியங்கள் விஷயத்தில் நல்ல பலன் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. புதிய முறையில் அரசாங்கம் ஊக்கம் அளித்து நல்ல தேர்ச்சியுள்ள நிபுணர்கள் இருந்தால் நவதானியங்களிலும் நல்ல முன்னேற்றம் கண்டிருக்க முடியும். இப்போது புதிதாக மண் வள ஆராய்ச்சி செய்வதற்காக 4 லட்சம் ரூபாய் செலவழிக்கப் போவதாகவும், கடலூரிலும் கோவில்பட்டியிலும் செய்யப்போவதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். மண்வளப் பாதுகாப்பு செய்வதில் கரிசல் மண் பிரதேசத்தில் செய்வது கஷ்டமாக இருக்கலாம். அதோடு சமீபத்தில் பெய்த மழை காரணமாக மேடுகள் பள்ளமாக ஆகியும் பள்ளங்கள் மேடாக ஆகியும் இருப்பதால் அதைச் சமப்படுத்த மண்வளப் பாதுகாப்பு செயல்படவேண்டும். அதற்கு நல்ல முறையில் பணம் ஒதுக்கி செயல்படவேண்டும்.

விதைப் பண்ணைகளைப் பற்றிக் குறிப்பாகச் சொல்லவேண்டுமானால் எல்லா இடங்களிலும் பெரும்பாலும் சரியான முறையில் நடக்கவில்லை என்று தெரிகிறது. அது மட்டுமல்லாமல் கட்டுக்குத்தகை எடுக்கிறார்களே அரசாங்கம், அதைப் பற்றிக் கேள்விப்படுவது வருந்தத் தக்கதாக இருக்கிறது. ஒரு நிலத்தின் மதிப்பு 100 ரூபாயாக இருந்தால் 5 வருஷ லீஸ் 500 ரூபாயாக இருக்கிறது. இந்த மாதிரி பல இடங்களில் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அதைவிட அரசாங்கம் அந்த நிலத்தை கிரயத்திற்கு வாங்கிக் கொள்வது மிகவும் நலமாக இருக்க முடியும். இதையெல்லாம் அமைச்சர் அவர்கள் கவனத்தில் வைத்துக்கொண்டு எதிர்காலத்தில் விதைப் பண்ணைகளை ஏற்படுத்தினால் இந்த முறையில் செயல்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாய என்ஜினீயரிங் முறைகள் இருக்கிறதே அதில் குறிப்பாக பி.எஸ்ஸி. டிகிரி உள்ளவர்களைத் தவிர வேறு யாரையும் அமர்த்துவது பலன் அளிப்பதாக இல்லை. பி.எஸ்ஸி. பட்டதாரிகளைத் தவிர யாருக்கும் இடம் கொடுக்கக் கூடாது.

இன்னும் விவசாயத் துறையில், எங்கள் பகுதி மிகவும் வறண்ட பிரதேசம். அதோடு கரிசல் பிரதேசமாக இருப்பதால், கோவில்பட்டி விவசாய ரிஸர்ச் பண்ணையை நல்ல முறையில் கொண்டு வருவதோடல்லாமல் விவசாய இன்ஜினீரிங் இன்ஸ்ட்டிட்யூட் போன்ற ஸ்தாபனங்களை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* SRI S. RAMASAMI THEVAR : சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த டெட்டுப் பிரோரணையின்மீது சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நமது தேசத்திலே, அதிலும் நம் தமிழ் நாடு விவசாயத்திலே பெரிதும் முன்னேறி இருப்பதைப் பற்றிப் பேசப்பட்டு வருகிறது. அந்த மாதிரி முன்னேறி இருப்பதைக் குறித்து நாம் எல்லோரும் மகிழ்ச்சி அடைய வேண்டியிருக்கிறது. உண்மையிலேயே விவசாயத்திலே நம் நாடு பெரிதும் முன்னேறி உற்பத்தி பெருகியிருக்கிறது என்றால் இன்னும் நாம் விவசாயத்திற்கு அதிகத் தொகை ஒதுக்கலாம். ஏனைய மாநிலங்களைவிட நம் மாநிலம் அதிக அளவிலே உற்பத்தியைக் கண்டிருக்கிறது. அதற்கு இன்னும் நாம் அதிகம் தொகை ஒதுக்கவேண்டியிருக்கிறது. இன்னும் அதிக ஊக்கம் அளிக்க விவசாயத்திற்கென்று அதிகத் தொகையை மத்திய சர்க்காரிடமிருந்து பெறுவதிலும் கஷ்டம் இருக்காது—கேட்டு வாங்கலாம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இப்படி இருந்தும்கூட பல குறைகள் இருக்கின்றன. அந்தக் குறைகள் எல்லாம் நீங்கினால் இன்னும் அதிக உற்பத்தியை நாம் காணலாம். இன்னும் நம் விவசாய மக்கள் நல்ல முறையில் கஷ்டமின்றி வாழ்வார்கள் என்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். முக்கியமாக மக்களுக்கு கடன் உதவி கொடுக்கும்போது உதவிகள் எல்லாம் காலாகாலத்தில் போய்ச் சேரவேண்டும். இப்போது அந்த முறையில் காலாகாலத்தில் போய்ச்சேருவதில்லை என்று பேசப்பட்டு வருகிறது. காலாகாலத்தில் போய்ச் சேரா விட்டால் கடன்கள் கொடுப்பதனால் பலன் இல்லை.

"காலத்தி னாற்செய்த உதவி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது."

என்று வள்ளுவனார் கூறியிருக்கிறார்கள். விவசாயத்திற்காகக் கொடுக்கப்படும் கடன் விவசாய காலத்தில் கிடைக்காமல் சாகுபடி முடிந்த பிறகு கையில் கிடைத்தால், அவர்கள் அந்தப் பணத்தை விவசாயத்திற்குச் செலவழிக்க முடியாமல் வீணாகச் செலவழிக்கக் கூடிய நிலை இருக்கிறது. அதை விவசாயத்திற்குப் பயன்படுத்துவதில்லை. ரசாயன உரத்தைப் பற்றி, சிலர் ரசாயன உரம் தேவையில்லை, ரசாயன உரம் இல்லாமலேயே உற்பத்தியை அதிகரிக்கலாம் என்று சொன்னார்கள். உண்மையிலேயே மக்கள் இன்று ரசாயன உரத்தின் பயனைக் கண்டிருக்கிறார்கள். அதன் பயனைக் கண்டுதான் வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆக, காலாகாலத்தில் இதெல்லாம் வந்து சேருவதற்கு என்னென்ன வழிகளை வகுக்கவேண்டுமோ, திட்டங்களைத் தீட்ட வேண்டுமோ, அவைகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதோடுகூட, விவசாயத்திற்கு நீர்ப்பாசனம் அதிகம் தேவை. முக்கியமாக எங்கள் பகுதி பிற்பட்ட பகுதி. அறந்தாங்கி பகுதி மிகவும் வறண்ட பிரதேசம். அங்கே ஸி.எம்.பி. பாய்ச்சல்



ரொம்பக் குறைச்சல். பெரும்பாலும் வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருக்கும் நிலையில் இருக்கிறோம். அந்தப் பகுதியில் பல காட்டாறுகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. மழை காலத்தில் தண்ணீரும் செல்லுகிறது. அதைத் தடுத்து அணைகளைக் கட்ட பல திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. அவைகளெல்லாம் தாமதமாக நடந்துகொண்டிருக்கின்றன. அவைகளில் எந்தெந்த திட்டங்களை சீக்கிரத்தில் செய்து கொடுக்க முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு விவசாயம் பெருகும், உற்பத்தியும் பெருகும் என்பதில் சந்தேகமில்லை. அறந்தாங்கி பகுதி மக்கள் ஒரு காலத்தில் இலங்கையை நம்பிக் கொண்டிருந்தார்கள். இலங்கைக்குச் சென்று உழைத்துக்கொண்டிருந்தார்கள். இப்போது அவர்களுக்கு நீர்ப்பாசன வசதிகளைச் செய்துகொடுத்தால் உற்பத்தியை பெருக்கி நல்வாழ்வு வாழ வசதியாக இருக்கும். மற்ற பகுதிகளை விட அறந்தாங்கி பகுதி மக்கள், நல்ல முறையில் உற்பத்தியைப் பெருக்கக்கூடிய பெரும் உழைப்பாளிகள். வசதிகளைச் செய்து கொடுத்தால் அதிக உற்பத்தியைப் பெற முடியும். உரம் கொடுப்பதிலும், அதற்காக மனுக்கள் போட்டு பல மாதங்கள் போய் பல அதிகாரிகள் முன்னிலையிலே சென்று காத்துக் கிடக்கவேண்டிய நிலை இருக்கிறது. காலாகாலத்தில் கிடைக்கத்தக்க வழியில்லை. ஒருவர் மனுச் செய்து கொடுத்தவுடனே கேட்ட அளவு தொகை கிடைக்கவேண்டும். இதில் பல தடைகள் இருப்பதால் விவசாயம் கெட்டுப்போகிறது. விவசாயத்தைச் சரிவர கவனிக்க முடியவில்லை. அந்த நிலை இல்லாமல் விவசாயி சுதந்திர புருஷனாக இருக்கவேண்டும். அவர்களுக்கு இப்படி பல அலைச்சல் இருக்கக் கூடாது; அல்லல்கள் இருக்கக்கூடாது. கடனுக்கு 100 தடவை, உரத்திற்கு 10 தடவை என்று போக வேண்டியிருக்கிறது. கிடைக்கக்கூடிய கடனை அவர்கள் செலவிலேயே மணியார்டர் கமிஷனைக் கழித்து அவர்களுக்கு அனுப்பிவிடலாம். அதேபோல் உரத்தையும் நாம் அவர்கள் செலவிலேயே கொண்டுபோய் அவர்கள் இருப்பிடத்திலேயே சேர்த்து விடலாம். அவர்கள் அடிக்கடி நேரிலே போய் வருவதால் இதைவிட செலவு அதிகமாகிறது. இன்னும் பல மோசடிகள் நடைபெறுகின்றன. இதைப்பற்றி பலதரம் இங்கு எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து காட்டு வளம். நம்முடைய நாட்டிலே காட்டு வளம் இப்போது அதிகமில்லை. அதை அதிகமாக பெருக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது. இப்போது மரங்கள் எல்லாம் எங்கும் அழிக்கப்பட்டு வருகின்றன. முக்கியமாக ஜமீன் இனாம் கிராமங்களிலே முன்பெல்லாம் நிறைய மரங்கள் இருக்கும். ஜமீன் இனாம்கள் இருந்த காலத்திலே அதைச் சேர்ந்த குளக்கரைகளிலும், ஏரிக் கரைகளிலும் நிறைய மரங்கள் வளர்க்கப்பட்டன, அவைகள் பாதுகாக்கப்பட்டும் வந்தன. ஆனால் இன்று பார்த்தாலோ, குளக்கரைகளிலும், ஏரிக்கரைகளிலும் வளர்க்கப்பட்ட

மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டிருக்கின்றன. காடுகள் போல் காட்சியளித்த குளங்களும், ஏரிகளும் இப்போது வெறும் திறந்த வெளியாகக் காட்சியளிக்கின்றன. இதைத் தடை செய்யும்படியாக நான் பல தடவை கேட்டுக்கொண்டிருக்கிறேன். இன்னும் அதிக மரங்களை வளர்ப்பதற்காக, நாம் இன்னும் அதிகமான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும். மரங்களை வளர்ப்பதற்காக அதிகமாக செலவு செய்தால் மட்டும் போதாது. அதேபோல் மரங்களை அதிகமாக நட்டுவிட்டால் மட்டும் போதாது. அவைகளை நல்ல முறையில் வளர்த்து பாதுகாப்பதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். அவைகளை நல்லமுறையில் பாதுகாக்க வேண்டும். அதை விட்டு, பணம் அதிகமாக செலவழிக்கப்பட்டிருக்கிறது என்று கணக்கை காட்டுவது மட்டும் போதாது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும், என்னுடைய தொகுதியாகிய அறந்தாங்கிப் பகுதியில் பெரும் பகுதி கடற்கரைப் பிரதேசமாக இருக்கிறது. இப்பிரதேசத்தில் நிறைய தென்னை மரங்களை வளர்க்கலாம். அதற்கு சர்க்கார் நிறைய ஊக்கம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது தென்னைக்கு நல்ல விலை கிடைக்கிறது. தவிர, அது ஏற்றுமதிப் பொருளாகவும் இருக்கிறது. ஆகவே அந்தப் பகுதிகளிலே இன்னும் அதிகமாக தென்னைகளை வளர்ப்பதற்கு சர்க்கார் மக்களுக்கு ஊக்கம் காட்ட வேண்டும்.

தவிர, அந்தப் பகுதியில் நிறைய மீன் கிடைக்கிறது. ஆனால் மீனவர்களுக்கு பல கஷ்டங்கள் இருக்கின்றன. முன்பு பல அங்கத்தினர்கள் குறிப்பிட்ட மாதிரி, இந்தப் பகுதிகளிலே போக்குவரத்து வசதி மிகவும் குறைவு. மெயின் ரோடுகளுக்கும், மீனவர்கள் தங்கக்கூடிய இடங்களுக்கும் நல்ல முறையிலே ரோடுகள் இல்லை. ஒரே மணல் பரப்பாக இருக்கிறது. அதுவும் அவர்கள் வசிக்கக்கூடிய கிராமங்களுக்கும், அந்த மெயின் ரோடுகளுக்கும் அதிக தூரம்கூட இல்லை. இரண்டு மைல், 1 மைல், ½ மைல் என்ற அளவில்தான் இருக்கிறது. அதற்கும் சர்க்கார் வசதி செய்து கொடுக்க வேண்டும். அதோடு மீன் பிடிப்புத் தொழிலுக்கு நல்ல வசதிகள் செய்து கொடுத்து, அங்கு கிடைக்கக்கூடிய மீன்களை அங்கிருந்து (உள்ளூர்) திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை போன்ற இடங்களுக்கும் கொண்டு போவதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டும். அப்படி வசதி செய்து கொடுத்தால், பல மீனவர்கள் இத்தொழிலில் ஈடுபட்டு, நல்ல முறையிலே வியாபாரம் செய்து, தொழிலைப் பெருக்க முடியுமென்று சொல்லிக் கொள்வதோடு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**SRI S. M. ANNAMALAI :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தின் முன்னால் வந்திருக்கக்கூடிய வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். முக்கியமாக, இந்த விவசாயத் துறையில் நாம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள் எந்த



அளவுக்கு நாம் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று ஆசைகொண்டோமோ, அதை அடைய முடியவில்லை. 12.79 லட்சம் டன் என்பது சர்க்காருடைய முயற்சி. ஆனால் அடையப் போகின்றது 7 அல்லது 8 லட்சம் டன்கள் தான். அதுகூட இந்த ஆண்டில் இருக்காது என்பது என்னுடைய அபிப்பிராயம். அதிகமாக மழை பெய்ததின் காரணமாக, 20, 22 நாட்களுக்கு தொடர்ந்தாற்போல் சூரியகிரணங்கள் இல்லாததின் காரணமாக பயிர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய சொந்த அனுபவத்திலிருந்து, எனக்கு இருக்கக்கூடிய இரண்டு ஏக்கரிலே, நான் வருஷா வருஷம் 40 மூட்டைகள் நெல் எடுப்பேன். ஆனால் இம்முறை 26 மூட்டை நெல்லும்; 10 மூட்டை பதரும் தான் கிடைத்திருக்கிறது. சூரிய கிரணம் கிடைக்காததினால்தான், அதிகமான பதர் ஏற்பட்டிருக்கிறது. இப்படி இருக்கும்போது, இந்த 7 அல்லது 8 லட்சம் டன்னாவது கிடைக்குமா என்பதுதான் எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. அதற்கு முக்கிய காரணம் இயற்கையான சூரிய கிரணங்களாக இருந்தாலும், நம்முடைய வரவு செலவுத் திட்டக் கணக்கு அறிக்கையைப் பார்க்கின்றபோது, அதற்கு முக்கிய காரணம் உரம் சரியாக கிடைக்கவில்லை என்பதாகும். இதற்கு முக்கிய காரணம் நம்முடைய மத்திய சர்க்கார். அதற்கு என்ன சொல்கிறார்கள் என்று பார்த்தால், ரசாயன உரத்தைப் பெறுவதற்கு அதிகமான அளவில் அந்நியச் செலாவணி செய்ய வேண்டியிருக்கிறது என்று சொல்லப்படுகிறது.

இதற்கு மற்றொரு காரணம், டிராக்டர்களும், புல்டோசர்களும் நமக்கு அதிக அளவில் கிடைக்காததாகும். அதற்காக 53-ம் வருஷத்திலே 10 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, டிராக்டர்களும், புல்டோசர்களும் வாங்கப்பட இருக்கிறது என்று சொல்லப்பட்டது. இப்போது 60-க்கு பிறகு 28 புல்டோசர்களே இருக்கிறது. அவைகள்கூட பழையவைகளாகத்தான் வாங்கப்பட்டது. இப்போது அவைகள் உபயோகப்படுத்தப்பட்டு, சில ரிப்பேர் செய்ய முடியாத நிலையில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதற்கும் முக்கியமான பொறுப்பு மத்திய சர்க்கார்தான். அவர்கள்தான் இவைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டு செய்யவேண்டும். எதற்கெடுத்தாலும் அந்நியச் செலாவணி என்று சொல்லப்படுகிறது.

சென்ற ஆண்டு 2.07 லட்சம் டன் ரசாயன உரம் விவசாயிகளுக்கு தரவேண்டுமென்று திட்டமிடப்பட்டது. ஆனால் விநியோகிக்கப்பட்டது 1.03 லட்சம் டன், அதற்கும் காரணம் வேறொன்றுமில்லை. மத்திய சர்க்கார் வைத்திருக்கக்கூடிய கொள்கைதான். இப்போதாவது மத்திய சர்க்கார் சமர்ப்பித்திருக்கக்கூடிய பட்ஜட்டிலே ரசாயன உரத்தை மேலும் அதிகமாக இறக்குமதி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா என்று பார்த்தேன். அதற்கெல்லாம் நம்முடைய அரசாங்கம்தான் தக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த ஆண்டாவது எப்படியாவது ரசாயன உரத்தை அதிகமாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல அப்படி வரக்கூடிய ரசாயன உரத்தை நல்ல

முறையிலே விநியோகிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இப்போது ஒரு படி ரசாயன உரம் ஒன்றரை ரூபாய் என்று கள்ள மார்க்கட்டில் விற்கப்படுகிறது. அப்படியுள்ள நிலைமையை தடுக்க வேண்டும். என்னுடைய ஜில்லாவிலிருந்து பக்கத்து ஜில்லாவாகிய சித்தூருக்கு அடிக்கடி இந்த ரசாயன உரம் கள்ளக் கடத்தல் செய்யப்படுகின்றது. அப்படி 10 மூட்டை லாரியில் ஏற்றிக்கொண்டு போவதைக் குறித்து போலீசாரிடம் ரிப்போர்ட் செய்தாலும், அவர்களை அரஸ்ட் செய்து தக்க நடவடிக்கை எடுப்பதில்லை. அதற்குப் பதில் ஒரு வியாபாரியிடமுள்ள 10 மூட்டையைக் காண்பித்து ஏதாவது சாக்குபோக்கு சொல்லி விடுகிறார்கள். அதே போல் கன்யாகுமரியில் 4 மூட்டைகள் கொண்டு போகும்போது ஒரு விண்ணப்பத்தை அமைச்சர் அவர்களிடம் கொடுத்தேன். போலீஸ் ஸ்டேஷனில் பிடித்து வைத்தார்கள். பின்னர் ஏதோ சாக்கைக் காண்பித்து விட்டு விட்டார்கள். ஆகவே இப்போதும் கள்ள மார்க்கட் இருந்து கொண்டுதான் இருக்கிறது. அதையும் தடுக்க வேண்டும்.

அடுத்தபடி, டிராக்டர்கள் வாங்குவதற்கும், புல்டோசர்கள் வாங்குவதற்கும் 58-லே 10 லட்சம் ஒதுக்கப்பட்டதென்றும், இதை மத்திய சர்க்காரும் ஒத்துக்கொண்டதாகவும் சொல்லப்பட்டது. ஆனால் இந்த 10 லட்சத்தை நாம் செலவிடவில்லை என்று சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட காரணங்களினால்தான் நாம் உற்பத்தியை இன்னும் அதிகமாகப் பெருக்க முடியவில்லை என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதற்கும் காரணம் 1959-60-ல் வர்ஜின் லாண்ட் அதாவது பயிரிடப்படாத நிலங்களில் பயிரிடுவதற்காக திட்டமிட்ட நிலத்தின் பரப்பளவு 13,000 ஏக்கர். ஆனால் பயிர் செய்த நிலமோ 2,668 ஏக்கர்தான். அதைப்போலவே நாம் டார்ஜட் போட்டு பயிரிட வேண்டுமென்று நினைத்தது 19,000 ஏக்கர். ஆனால் பயிரிடப்பட்ட நிலங்களோ 4,322 ஏக்கர்கள். அதைப்போல் எந்த விஷயங்களிலும் நாம் டார்ஜட் போடக்கூடிய அளவுக்கு டார்ஜட் அசீவ்மெண்ட் அடைய முடியவில்லை.

அதைப்போலவே சாயில் கன்சர்வேஷனைப் பொறுத்தவரையில் 1959-60-ல் 31,566 ஏக்கர்கள் என்று நாம் திட்டமிட்டு இருந்தோம். ஆனால் உண்மையில் எடுத்துக்கொண்டது 12,072 ஏக்கர்களே. இதற்குக் காரணம் நமக்குத் தேவையான டிராக்டர்கள் கிடைக்காததுதான். இதற்கு முக்கியப் பொறுப்பு மத்திய சர்க்கார்தான். ஆக இப்படி எதற்கெடுத்தாலும் மத்திய சர்க்கார் குறுக்கிடும், அந்நியச் செலாவணியும் குறுக்கே வந்து நிற்கிறது. அதனால் நாம் போடுகின்ற டார்ஜட்டை நாம் அடைய முடிகிறதில்லை. இந்தக் காரணங்களினால்தான் நமக்கு இந்த அவநம்பிக்கை ஏற்படுகிறது என்று இவைகள் மூலமாக உண்மையிலேயே புலனாகிறது.

அடுத்தபடியாக 'நியூ வெல் ஸப்ஸிடி ஸ்கீம்' 'நான் பிளாக் ஏரியாவுக்கு' மட்டும் தான் இப்பொழுது கொடுக்கப்படுகிறது. பிளாக் ஏரியாவுக்கு கிடையாது. சமுதாய நல அபிவிருத்தித் திட்டத்திற்காக நாங்கள் பணம் ஒதுக்குகிறோம், அதற்கு வே பணம் இருக்கிறது, அதன் மூலமாக கொடுத்துவிடலாம் என்



சர்க்கார் அடிக்கடி சொல்லிக்கொண்டு வருகிறார்கள். இரண்டாவது ஸ்டேஜில் இருக்கும் பிளாக்குகளுக்கு சமுதாய நல அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஒரு லட்ச ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு ஒதுக்குகிறோம். ரூ. 60,000 அட்மினிஸ்டிரேஷனுக்குப் போகிறது. மீதி இருக்கக்கூடிய ரூ. 40 ஆயிரத்தில் சமுதாய நலத் திட்டப் பகுதிகளில் இப்படிப்பட்ட ஸ்கீமுக்கு வேண்டிய பணத்தை கொடுக்க முடியுமா என்றால், முடியாது. இரண்டாவது ஸ்டேஜில் இருக்கக்கூடிய பிளாக்குகளுக்கும் இப்படிப்பட்ட திட்டங்களை புகுத்த வேண்டும்.

'ரிவர் பம்பிங் ஸ்கீமுக்கு' மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய பணம் போதாது. மூன்றாவது திட்டத்தில் ரூ. 5 லட்சம் ஒதுக்கியிருக்கிறோம். இந்த ஆண்டு செலவழிக்கப்போவது ரூ. 14,000. இது போதாது. மிகமிகக் குறைவு. ரூ. 5 லட்சம் என்பதை மேலும் ரூ. 10 லட்சம் என்றாவது உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

விவசாயிகள் கடன் பட்டிருப்பதைப் பற்றி சர்வே செய்யப்பட வேண்டும். 1951-ம் ஆண்டில் சர்வே செய்தோம். ஒரு குடும்பம் ரூ. 745 கடன் பட்டிருப்பதாக அப்பொழுது தெரியவந்தது. 4, 5 முறை சர்வே செய்யப்பட்டிருக்கிறது. முதலில் 1898-ல் சர்வே செய்யப்பட்டது என்று நினைக்கிறேன். அப்பொழுது ரூ. 45 கோடி விவசாயிகள் கடன் பட்டிருந்தார்கள் என்று சொல்லப்படுகிறது. 1930-ம் ஆண்டில் சர்வே செய்யப்பட்டதில், அது ஏறத்தாழ 150 கோடி ரூபாய் என்றும், 1935-ல் ரூ. 200 கோடி என்றும், 1945-ல் என்று நினைக்கிறேன் ரூ. 250 கோடி என்றும் சொல்லப்படுகிறது. 1951-ல் ஒவ்வொரு விவசாயக் குடும்பத்திற்கும் ஏறத்தாழ ரூ. 745 கடன் இருந்தது என்று அப்பொழுது சர்வே செய்யப்பட்டதில் தெரியவந்திருக்கிறது. அப்படிப் பார்க்கிறபொழுது விவசாயிகளுடைய கடன் மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டிருக்கிறதா என்று கேள்வி கேட்டால், கைத்தொழில் அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள், கூட்டுறவு சங்கங்களின் மூலம் இவ்வளவு கடன் கொடுத்திருக்கிறோம், அவ்வளவு கடன் கொடுத்திருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். கடன் பட்டிருப்பது பற்றி சர்வே செய்ய வேண்டுமென்று சொன்னால், கடன் அளிப்பது பற்றி பதில் சொல்லுகிறார்கள். நான் சொல்லுவது சர்வே செய்யவேண்டுமென்பது. ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் அவர்களுக்கு இருந்த கடன் எவ்வளவு, இப்பொழுது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலமாக அவர்கள் பெற்ற பலனினால் கடன் குறைந்து வருகிறதா, அல்லது மேலும் மேலும் அதிகரித்துக்கொண்டு வருகிறதா என்பதைப் பார்ப்பதற்குத்தான் நான் சர்வே செய்யவேண்டுமென்று வற்புறுத்துகிறேன். அப்படி சர்வே செய்தால்தான் விவசாயிகளின் நிலைமை என்ன என்பது தெரியவரும். விவசாயிகள் முன்பு இருந்த நிலைமையிலேதான் இருக்கிறார்களா, அல்லது சற்று முற்போக்குக்கு வந்திருக்கிறார்களா அல்லது பிற்போக்கில் இருக்கிறார்களா என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும்.

விலைவாசிகளைப் பற்றி 'விலைக் பாலனை கமிட்டி' சொல்லியிருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பித்திருக்கிறதாக [illegible] 'பொலிஸி' செய்வதற்கு வேண்டிய முயற்சியை தொடங்கவேண்டும் என்று கூறியிருக்கிறது.

'It was agreed that all measures necessary for keeping the price situation under control should be taken and the effort to mobilise resources should be started with the commencement of the Third Plan.'

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் இப்பொழுது ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. சர்க்கார் இதுவரையில் என்ன செய்திருக்கிறீர்கள், என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள், என்ன செய்ய இருக்கிறீர்கள்? விலைவாசி இப்படியே மேலும் மேலும் உயர்ந்து கொண்டே போவதற்கு விட்டுவிடப் போகிறீர்களா என்று சர்க்கார் நினைத்துக் கொண்டிருக்கிறார்களா என்பது விளங்கவேண்டும். நியாய விலைக் கடைகளை அதிகமாக ஆக்கவேண்டும். நியாய விலைக் கடைகள் இருந்தால்தான் விலைவாசி அதிகமாகிக் கொண்டு போவதை ஓரளவுக்கு கட்டுப்படுத்த முடியும். சட்டமன்றத்தில் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், மார்ச் மாதம் முடியும் வரையில்தான் நியாய விலைக் கடைகள் இருக்கும் என்று. அதுவரைக்கும்தான் காலத்தை நீடித்திருக்கிறோம் என்று சொன்னார்கள். அது போதாது. இப்பொழுது இருக்கக்கூடிய விலைவாசிகள் ஏறுகிற பயத்தைப் பார்க்கிறபொழுது மக்களிடத்திலே மேலும் மேலும் பயம் உண்டாகியிருக்கிறது. ஆகையால் நியாய விலைக் கடைகளை மேலும் அதிகரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக காட்டு இலாகாவைப் பொறுத்தவரையிலே ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். எனக்கு சட்ட மன்றத்திலே 'ஜவ்வாது மலை' என்ற ஒரு பெயர் உண்டு. ஜவ்வாது மலையைப் பற்றி அடிக்கடி இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஜவ்வாது மலையில் உள்ள உத்தியோகஸ்தர்களுக்கு முன்பு ஒரு அலவன்ஸ் கொடுக்கப்பட்டு வந்தது. இப்பொழுது அதை நிறுத்திவிட்டார்கள். அமைச்சர் அவர்களும் ஜவ்வாது மலைக்கு வந்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அங்கு வந்திருக்கும்பொழுது, எப்பொழுதோ ஒரு தடவை அமைச்சர் அவர்கள் வருகிறார்களே என்று நினைத்து, அங்குள்ளவர்கள் அமைச்சர் அவர்களுக்கு வேஷம் போட்டு ஆடிக் காண்பித்தார்கள். அதைப் பார்த்துவிட்டோ என்னவோ 'ஏதோ, இவர்கள் இவ்வளவு முன்னேற்றம் அடைந்துவிட்டார்களா என்று நினைத்து, அப்படியானால் அவர்களுக்கு அலவன்ஸ் கூடாது' என்று கருதி மலையை விட்டு [illegible] அலவன்ஸ் கிடையாது என்ற உத்தரவு வெளியே சென்றுவிட்டது. அங்குள்ள காட்டு இலாகா அதிகாரிகளுக்கு ஹில் அலவன்ஸ் கிடையாது என்று சர்க்கார் உத்தரவு போட்டிருக்கிறார்கள் . . .

**THE HON. SRI M. BHAKTAVATSALAM:** நான் அங்கே போய் பார்த்ததற்கும், இந்த உத்தரவு போடப்பட்டதற்கும் ஒன்றும் சம்பந்தம் கிடையாது.

**SRI S. M. ANNAMALAI:** அமைச்சர் அவர்கள் [illegible] பார்த்து சென்று வந்த பிறகுதான் இந்த உத்தரவு போடப்பட்டிருக்கிறது. [illegible] இந்த அலவன்ஸ் [illegible] உத்தியோகஸ்தர்களுக்கு [illegible] அமைச்சர் அவர்கள் இந்த அலவன்ஸ் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜவ்வாது மலையில் சந்தனக்கட்டை மூலமும், மூங்கில் ஏலம் விடுவதன் மூலமும் சர்க்காருக்கு ரூ. 28,000 வருமானம் வருகிறது. அப்படி இருக்கும்பொழுது [illegible] ஆயில் பாக்டரி ஏற்படுத்தக்கூடாது? [illegible] சர்க்கார் [illegible] ஒரு ஆயில் பாக்டரி ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவர்களுக்கு நல்ல லாபம் இருக்கிறது. மைசூர் சர்க்கார் செய்திருக்கிறபொழுது, ஏன் நம் சர்க்கார் செய்யக்கூடாது? அமைச்சர் அவர்கள் சந்தனக் கட்டையாக விற்றால் அதிக லாபம் வருகிறது என்று சொல்லலாம். அதிக லாபம் வருவது ஒரு புறம் இருக்கட்டும். ஒரு ஆயில் பாக்டரி ஆரம்பித்தால் ஜவ்வாது மலையில் உள்ள மக்கள் [illegible] பேர்களுக்கும் பலவித நன்மை ஏற்படும். ஆகவே, அந்த இடத்தில் ஒரு ஆயில் பாக்டரி ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, மூங்கில் ஏலம் விடுவது பற்றி . . .

(மணி அடிக்கப்பட்டது)

**• SRI N. S. RAMALINGAM:** [illegible] சட்டமன்றத்தில் முன் வைக்கப்பட்டிருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். விவசாயத் துறையிலே நாடு [illegible] முன்னணியில் இருப்பதைப்பற்றி எனக்கு முன்பு பேசிய பல அங்கத்தினர்கள் கூறினார்கள். முதல் ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பிப்பதற்கு முன்பு இருந்ததைவிட இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் ஏறக்குறைய 70 சதவிகிதம் விவசாய உற்பத்தியை அதிகரித்திருக்கிறோம் என்பதையும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 1515 லட்சம் டன் அதிகமாக உற்பத்தி செய்ய திட்டம் போட்டிருக்கிறோம் என்பதையும் எடுத்துக் கூறியது பற்றி பல அங்கத்தினர்கள் அமைச்சர் அவர்களை பாராட்டினார்கள். நானும் அதற்காக அவரைப் பாராட்டுகிறேன். சென்ற வருஷம் டெல்லியில் நடந்த கண்காட்சியில் எல்லோரும் வந்து பார்த்து நம்மைப் பாராட்டினார்கள். சென்ற வருஷமும் டில்லியில் நடந்தது [illegible]. இந்த வருஷம் கல்கத்தாவில் ஒரு கண்காட்சி நடந்தது. அப்பொழுதும் எல்லோரும் நம்மை பாராட்டினார்கள். அதுபோல அடுத்த வருஷம் சென்னையிலே இந்தக் கண்காட்சி நடக்கப் போகிறது. நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன், மைசூரில் இருப்பதுபோல சென்னையிலும் ஒரு சாசுவதமான 'எக்ஸிபிஷன் கிரவுண்ட்' இருக்க

வேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்பொழுதுதான் நம்முடைய மாநிலத்திற்கு வெளி நாடுகளிலிருந்தும், வெளி மாநிலங்களிலிருந்தும் வருபவர்களும், நம் ராஜ்யத்தில் உள்ளவர்களும் நம்முடைய மாநிலத்தில் என்னென்ன முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளுவதற்கு சௌகரியம் அதிகமாக இருக்கும். அதற்காக சென்னையிலே ஒரு 'பர்மெனன்ட் எக்ஸிபிஷன் கிரவுண்டு' வைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, விவசாய இலாகாவில் பல விளம்பரங்கள் செய்கிறார்கள், அநேக விழாக்கள் கொண்டாடுகிறார்கள். பசுந்தாள் விழா, கம்போஸ்டு விழா, பொறுக்கு விதை விழா, இப்படி பல விழாக்கள் கொண்டாடுகிறார்கள். பல விளம்பரங்களும் காட்டப்படுகின்றன. இன்னும் பல எக்ஸிபிஷன்ஸ் இவைகளெல்லாம் நடத்தவேண்டும். இப்பொழுது நாம் பஞ்சாயத்து சட்டத்தை நிறைவேற்றிய பிறகு, பஞ்சாயத்துக்களும் இம்மாதிரி விழாக்கள் கொண்டாட வேண்டும். கண்காட்சிகள் நடத்த வேண்டும். எல்லாம் ஒருங்கே இணைந்ததாக நடத்தினால்தான் நன்றாக இருக்கும். அதற்கு ஒரு தனி ஆபீசர் இருக்க வேண்டும். இப்பொழுது 'அக்ரிகல்சரல் இன்பர்மேஷன் ஆபீசர்' இருக்கிறார். அவரை 'டெப்யூடி டைரக்டர் கிரேடுக்கு' உயர்த்தி, அவருக்குக் கீழே ஒரு 'காம்பைன் ஆபீசர்', ஒரு 'பப்ளிகேஷன் ஆபீசர்', ஒரு 'எக்ஸிபிஷன் ஆபீசர்' ஆகிய 3 ஆபீசர்களைப் போட்டு பஞ்சாயத்துக்களுக்கும், மற்ற உத்தியோகஸ்தர்களுக்கும் வழிகாட்டியாக இருக்கும்படிச் செய்யவேண்டும். இந்த முறையில் செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சமீபத்தில் உத்திர பிரதேசத்தில் கிராம பல்கலைக் கழகம் நடத்தப்பட்டு வருவதாக நேற்றுகூட சட்டமன்றத்தில் கேள்வி நேரத்தில் சொல்லப்பட்டது. அம்மாதிரி ஒரு கிராம பல்கலைக் கழகத்தை இங்கும் ஏற்படுத்தப் போவதாக நமது மந்திரி அவர்கள் அறிவித்தார்கள். அம்மாதிரி ஒரு கிராம பல்கலைக்கழகத்தை தஞ்சை ஜில்லாவிலே ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். தஞ்சை ஜில்லாவில் கபிஸ்தலத்தில் உள்ள ஒரு பிரமுகர் 1,000 ஏகர் நிலம் அதற்காக வழங்குவதற்கு முன்வந்திருக்கிறார். அரசாங்கம் அதை பயன்படுத்திக்கொண்டு ஒரு கிராம பல்கலைக் கழகத்தை தஞ்சை ஜில்லாவிலே ஏற்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். அது வருவதற்கு கொஞ்சம் காலதாமதம் ஆனாலும்கூட, தஞ்சை ஜில்லாவில் ஆடுதுறை போன்ற இடத்தில் ஒரு விவசாயக் கல்லூரி வைப்பதற்கு அதிகக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

12-0 noon 1956-ம் வருஷம் இராஜ்யப் பிரிவினைக்கு பிறகு முந்திரிச் செடிகளிலிருந்து கிடைக்கக்கூடிய வருமானம் மிகவும் குறைச்சலாக



இருக்கிறது. முந்திரிச் செடிகள் வல்லம், நாகை கடலோரப் பகுதிகளிலும் அதிகம் விஸ்தரிக்க வேண்டும். முந்திரி எண்ணெய் எடுக்கும் ஒரு தொழிற்சாலையை இங்கே ஏற்படுத்தினால் அன்னிய நாட்டுச் செலாவணி பெறுவதற்கு உதவியாக இருக்கும். இந்தத் துறையில் கவனம் செலுத்த வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகள் எல்லோரும் பூச்சி மருந்துகளை அடிப்பதிலே கவனம் செலுத்தி வருகிறார்கள். பூச்சி மருந்துகள் அடிக்கும் ஸ்பிரேயர் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. திருவாரூரிலே ஒரு தொழிற்சாலை வைத்திருக்கிறார்கள். அங்கே நிபுணர்களைக் கொண்டு நல்ல ஸ்பிரேயர்கள் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். உணவு விவசாய சங்கத்தினர் இந்திய சர்க்கார் மூலமாக அணுகினால் நல்ல நிபுணரை அனுப்புவதற்கு தயாராயிருப்பார்கள் என்று தெரிய வருகிறது. ஆகவே இந்திய சர்க்கார் மூலமாக அணுகி, நல்ல நிபுணர்களைக் கொண்டு ஸ்பிரேயர்கள் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்பொழுது சூப்பர்பாஸ்பேட் குறைச்சலாகக் கிடைக்கிறது. இன்னும் பல தொழிற்சாலைகளுக்கு திட்டமிட்டிருப்பதாக நமது நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தஞ்சை ஜில்லாவிலே 60,000 டன் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்த உத்தேசித்திருப்பதாகச் சொன்னார்கள். இந்தத் தொழிற்சாலையை நாகப்பட்டிணத்தில் வைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேவையான ரசாயன உரங்கள் தேவையான காலத்தில் தேவையான அளவுக்கு தேவையான இடத்தில் விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டும். இப்பொழுது புள்ளி விவரங்களைச் சேகரித்து, கிராமவாரியாக எவ்வளவு ஏக்கர் இருக்கிறது என்று கணக்கிட்டு உரங்கள் ஒதுக்கிறார்கள். நல்ல பிரசாரம் இல்லாத காரணத்தினால் சிலாக உரங்களை விவசாயிகள் வாங்குவதற்கு விரும்பவில்லை. உதாரணமாக தஞ்சை ஜில்லாவிலே 10 லட்சம் ரூபாய் பெருமானமுள்ள மாங்கனைபாஸ்பேட் உரம் மொத்த வியாபாரிகளிடம் இருக்கிறது. அந்த உரத்தை வேறு ஜில்லாவுக்கு மாற்றவேண்டுமென்று அங்கேயுள்ள வியாபாரிகள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். மக்களுக்குத் தேவையான அமோனியம் சல்பேட், யூரியா, சூப்பர் பாஸ்பேட் போன்ற உரங்கள் தேவையான காலங்களில் கிடைக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது இருக்கிற நிலையிலே இந்த உரங்களை வைப்பதற்கு கிடங்குகளோ அல்லது வேறு வசதியோ இல்லாததினால், இந்த உரங்களை தாலூகாவாரியாக ஒதுக்கி மொத்த வியாபாரிகள் மூலமாக, கலெக்டர் அனுமதியின் பேரில், எங்கெங்கே தேவையாக இருக்கிறதோ அங்கெல்லாம் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். ஒரு கிராமத்திற்கு இவ்வளவு என்று மொத்தமாகக் கணக்கிட்டு ஒதுக்குவது சரியான

முறை அல்ல. சென்ற வருஷம் தஞ்சை ஜில்லாவிலே ஏற்பட்ட அனுபவத்திலிருந்து இதை நான் சொல்லுகிறேன். ஆகவே தாலுகாவாரியாக, கலெக்டர் அனுமதியின் பேரில், மொத்த வியாபாரிகள் மூலமாக இந்த உரங்கள் கிடைப்பதற்கு வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ரசாயன உரங்களைக் கொண்டுவந்து இப்பொழுது சென்னை துறைமுகத்திலும், கடலூர் துறைமுகத்திலும் இறக்குகிறார்கள். தஞ்சை ஜில்லாவிலுள்ள துறைமுகத்தில் இறக்கிக் கொண்டு போவதற்கு வழி செய்யவேண்டும். நாகப்பட்டிணம் துறைமுகத்தை அபிவிருத்தி செய்து, அதன் மூலமாக இறக்குவதற்கு ஏற்பாடு செய்யலாம். கோடிக்கரை துறைமுகத்தையும் அபிவிருத்தி செய்ய வேண்டும். சென்ற வாரம் இந்தச் சபையிலே மராமத்து இலாகா அமைச்சர் பதில் சொல்லும்பொழுது, கோடிக்கரைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்குப் போதிய காரணங்கள் இல்லை என்று கூறினார்கள். சென்ற வாரத்திலே ஒரு செய்தியைப் பார்த்தோம். மண் அரிப்பின் காரணமாக தனுஷ்கோடி துறைமுகத்தை மூடவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடுமோவென்ற அச்சம் இருக்கிறது. இந்தக் காரணத்தினாலே கோடிக்கரைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதால் போக்குவரத்திற்கு சௌகரியமாக இருக்கும். ரசாயன உரங்களைக் கொண்டுவந்து இறக்குவதற்கும் உபயோகப்படும். துரதிருஷ்டவசமாக சென்னை ராஜ்யத்திற்கும் வெளி நாடுகளுக்கும் உள்ள தொடர்பு குறைந்து கொண்டே வருகிறது. இதற்குமுன் சென்னையிலிருந்து பர்மாவுக்கு கப்பல்கள் போய்க் கொண்டிருந்தன. இப்பொழுது நிறுத்தப்பட்டிருக்கிறது. வர்த்தகத் துறையிலே சென்னை ராஜ்யம் பின்தங்கிப் போய்க் கொண்டிருக்கிறது. ஆகவே கோடிக்கரை துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காட்டு இலாகாவைப் பொறுத்தவரையில் நமக்குள்ள விஸ்தீரணத்தில் 33 சதவிகிதம் காடுகள் இருக்கவேண்டுமென்று திட்டமிடப்பட்டிருக்கிறது. இப்பொழுது 17 சதவிகிதம்தான் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். கோடிக்காடு போன்ற இடங்களில் காட்டு வளத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**MR. SPEAKER :** எதிர்க்கட்சித் தலைவர்கள் சார்பாக கனம் அங்கத்தினர் திரு. அன்பழகன் பேசப் போகிறார். அவருக்கு 15 நிமிஷங்களை ஒதுக்கி வைத்திருக்கிறேன். பாக்கியுள்ள 10 நிமிஷத்தில் இன்னும் இரண்டு அங்கத்தினர்கள் பேசலாம். கனம் அங்கத்தினர் ஸ்ரீ மருதாசலம் 5 நிமிஷங்களுக்கும், ஸ்ரீ கே. ஆர். நல்லசிவம் ஐந்து நிமிஷங்களுக்கும் பேசலாம்.

**SRI N. MARUDACHALAM :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, காட்டு இலாகா வெட்டுப் பிரேரணையின் பேரில் என்னுடைய கருத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்பு



கிறேன். என்னுடைய பகுதியிலே உள்ள விவரங்களை எடுத்துக்கூற விரும்புகிறேன். அங்கே கோவை விவசாயப் பண்ணை ஒன்று இருக்கிறது. 4, 5 வருஷங்களுக்கு முன்வரை இந்த விவசாயப் பண்ணை ஒரே இலாகாவில் இருந்தது. அப்படியிருந்தபொழுது அங்கே அதிகப்படியான உற்பத்தி ஏற்பட்டது. வேலைகளும் சரியாக நடந்து வந்தன. இப்பொழுது அந்த விவசாயப் பண்ணையை இரண்டு பாரங்களாகப் பிரித்திருக்கிறார்கள். இப்படிச் செய்ததிலே ஆட்கள்தான் அதிகமாக இருக்கிறார்களே ஒழிய, உற்பத்தி குறைந்துவிட்டது. வேலையும் சரிவர நடைபெறுவதில்லை. இதனால் விவசாயிகளுக்கு விதைகள் குறைவாகக் கிடைக்கிறது. இந்த இரண்டு பாரங்களையும், முன்போல, ஒன்றாக இணைத்து வேலை செய்தால், சரியாக வேலை நடக்கும், உற்பத்தியும் அதிகமாகும், சர்க்காருக்கும் லாபம் உண்டு.

அந்த விவசாயப் பண்ணையிலே இன்றைக்கு அநேகம் பேர் சாதாரண கூலி வேலை செய்கிறார்கள். சென்ற 4, 5 வருஷங்களாக தினசரிக் கூலிகளாகவே வேலை செய்து வருகிறார்கள். சர்க்கார் என்ன கூலி நிர்ணயம் செய்திருக்கிறார்களோ அந்தக் கூலி அவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. சர்க்கார் நிர்ணயித்த கூலியைக் கொடுக்கவேண்டுமென்று கலெக்டர் மூலமாகவும், ஆறுகோஷ்டிகள் மூலமாகவும் போய்க் கேட்டும் கொடுக்காமல், இப்பொழுது மேலும் கேட்டுக்கொண்டு வருகிறார்கள். சர்க்கார் செய்த கூலி நிர்ணயப்படி அந்த விவசாயப் பண்ணையில் வேலை செய்யக்கூடிய பெண்களுக்கு கூலி கொடுக்க வேண்டும். அவர்களுக்கு எந்த விதமான சலுகையும் இல்லை. சம்பளச் சலுகையோ, காஷுவல் லீவ் வசதியோ, சிக் லீவ் வசதியோ, அவர்களுக்கு கிடையாது. அவர்களை பெர்மனென்ட் ஆக்கி, சர்க்கார் நிர்ணயித்த சம்பளப்படி அவர்களுக்கு கொடுத்து, அவர்களுக்கு மெடிக்கல் வசதியும் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுத்தால் அவர்கள் நல்ல முறையில் வேலை செய்வார்கள். ஆகவே உடனடியாக அவர்களுக்கு சர்க்கார் நிர்ணயம் செய்த கூலியைக் கொடுக்க உத்தரவிடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காட்டு இலாகாவைப் பற்றி ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். என்னுடைய பகுதியிலே சிறுவாணியிலிருந்து வெள்ளியங்கிரி மலை அடிவாரம் வரையில் காடுகள் இருக்கின்றன. வாச்சர்கள், கார்டனர்கள் 24 பேர்கள் இருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களைப் பாதுகாக்க வேண்டியிருக்கிறது. அப்படிப் பாதுகாக்க வேண்டிய வாச்சர்களும், கார்டனர்களும் திரும்பி வருவதே அபாயகரமான நிலையிலிருக்கிறது. அவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை. அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்ப தோடு அல்லாமல் வீட்டு வசதியும் அளிக்க வேண்டும்.

(மணி அடிக்கப்பட்டது.)

இந்த வெள்ளியங்கிரி மலையில் அவர்கள் ஆபத்தான காட்டில் வாசம் செய்கிறார்கள். அங்கு யாராவது அடிபட்டால் விளக்கே கிடையாது; மின்சார விளக்கு கிடையாது, பெட்ரோமாக்ஸ் விளக்கில் தான் வேலை செய்கிறார்கள். அதற்கும் வேண்டிய வசதிகள் செய்ய

வேண்டும். இந்த வாச்சர், கார்ட் முதலியவர்களுக்கும் வேண்டிய உதவிகள் செய்ய சர்க்கார் முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

**Sri K. R. NALLASIVAM :** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இன்றைக்கு இங்கே பேசிய அங்கத்தினர்கள் சல்பேட் ஆப் அம்மோனியா பற்றிக் குறிப்பிட்டார்கள், அதிலுள்ள பற்றாக்குறைபற்றி சர்க்காரே ஒத்துக் கொள்ளுகிறது, தேவை அதிகமாக இருக்கிறது என்று. மூன்றாவது திட்ட காலத்திலாவது அம்மோனியம் தேவையை பூர்த்தி செய்யப்படாதென தெரிகிறது. இதில், சர்க்கார் விளம்பரம் அதிகமாக இருப்பதே, அந்த உரத்தின் மூலம் எல்லாம் சாதித்து விடலாம் என்று பிரசாரம் செய்வதன் மூலமாகத்தான். மக்கள் எகப்பட்ட அளவில் சல்பேட் வேண்டும் என்று சொல்லுகிறார்கள்; அவர்களிடையே அந்த எண்ணம் வந்துவிட்டது. ஆகவே, எந்த அளவுக்கு வேண்டுமோ அந்த அளவோடு நிறுத்தி அம்மோனிய உரத்தை உபயோகிப்பதை குறைக்க பிரசாரம் வேண்டும். இரண்டாவதாக, நிலத்திற்குத் தண்ணீர் விடுவது பற்றியது. சர்க்கார் தெளிவான முடிவுக்கு வரவேண்டும். சோதனைகள் செய்ய வேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிலும் பாசனச் சோதனை வேண்டும், எவ்வளவு தண்ணீர் நெற்பயிருக்கு வேண்டும் என்று ஆராய்ந்தறிய வேண்டும். அப்படிச் செய்து தண்ணீரைக் குறைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். நல்ல முறையிலே சோதனைகள் செய்து நெல்லை எப்படி அதிகமாக, குறைந்த தண்ணீரை வைத்துக் கொண்டு விளைவிக்க முடியும் என்று தீர்மானிக்க வேண்டும். இரண்டாவதாக சர்வே செய்ய வேண்டும். இன்றைக்கு மதகுகளை குறைத்து விடக்கூடிய நிலைமை ஏற்படும். இப்பொழுது விவசாயிகள் தண்ணீர் எராளமாக வேண்டும் என்று நினைக்கிறார்கள். ஆகவே, சோதனைகள் செய்தி, சர்க்கார் துணிந்து நடவடிக்கை எடுக்க முற்பட்டால் மதகுகளைக் குறைக்க எந்த விவசாயியும் எதிர்ப்புக் கூறமாட்டார்கள். எங்கள் தாலுக்காவைப் பொறுத்தவரை, எல்லா ஜில்லாக்களிலும் கரும்பு ஆலைகள் ஏற்பட்டிருக்கின்றன. கோயம்புத்தூரில்கூட அமராவதி கரும்பு ஆலை இருக்கிறது. கீழ் பவானி எங்கள் தாலுக்காவில் சுமார் ஒரு லட்சத்து 30 ஆயிரம் ஏக்கருக்குப் பாய்கிறது. மற்ற ஜில்லாக்களில், இன்றைக்குக் கரும்பு சாகுபடிக்கு நெல் சாகுபடியாகும் நிலங்களைத் திருப்பியிருக்கிறார்கள். எங்கள் தாலுக்காவில் ஒரு விசேஷ நிலை இருக்கிறது. லோயர் பவானிக்குப் பிறகு சுமார் 10 ஆயிரம் ஏக்கர் களர் நிலங்களாக மாறிவிட்டது. அதில் கரும்பு சாகுபடி செய்தால், நல்ல வெள்ளாமையும் வரும், களரும் திருந்தும். ஆகவே எங்கள் ஈரோடு தாலுக்காவில் அப்படிக் கரும்புச் சாகுபடி செய்ய வேண்டிய உதவிகளை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சர்க்கார் கோரும் 25 லட்ச ரூபாய் கொடுத்து கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவத்தயாராக இருக்கிறோம். அதற்கு வேண்டிய விண்ணப்பங்கள் கொடுக்கவும் தயாராக இருக்கிறோம்.



அடுத்தபடியாக சர்க்கார் இன்றைக்கு கால்நடை, கோழிப் பண்ணைகள் வைத்து வளர்க்க முன் வருகிறார்கள். ஆனால் கால் நடை வளர்ப்பு மட்டும் போதாது. அதோடு கோழி வளர்ப்பையும் சேர்த்தால் நல்ல லாபம் இருக்கிறது என்பது கண்டறிந்த உண்மை. அது மாத்திரமல்ல. அதே போல பன்றி வளர்ப்பையும் செய்தால் நம் நாட்டிலே நிச்சயமாக நல்ல லாபமாக இருக்கும். நம் நாடு உஷ்ணமான பிரதேசம். இங்கே ஆடு, கோழி இவைகளின் மாமிசங்களைவிட பன்றி மாமிசம் ஜனங்களுக்கு மிக்க நலமாக இருக்கும். இதை ஜனங்களிடையே பிரசாரம் செய்தால், உஷ்ணப் பிரதேசமான நம் நாட்டுக்கு அது மிக்க நன்மை பயக்கும். அதோடுகூட உரத்திற்காக நாம் இப்படி திண்டாடித் தெருவில் நிற்கவேண்டாம். பன்றி உரம் மிக்க பயனுள்ளது என்பது எல்லோரும் அறிந்தது, நம் விவசாயிகள் அறிந்தது. ஆகவே, பன்றி வளர்ப்புக்கும் ஏற்றவகையில் திட்டங்கள் போட்டுச் செயலாற்ற வேண்டும்.

கடைசியாக ஒரு வார்த்தை. பொது வாய்க்கால் கரைகளில் தேக்கு, தென்னை மரங்களை வைத்து வளர்க்க ஏற்பாடு செய்ய வேண்டும். எங்கள் பகுதியில் கீழ் பவானி வாய்க்கால் கிட்டத்தட்ட 124 மைல் நீளம் ஓடுகிறது, வருஷத்தில் 7 மாதங்கள் தண்ணீர் இருக்கிறது. அதன் கரைகளில் 30 ஆயிரம் மரங்கள் வைக்கலாம். மரம் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் வருமானம் வரும். ஆக 15 லட்ச ரூபாய் வருஷம் ஒன்றுக்குக் கிடைக்கும். ஆகவே அதற்கான நடவடிக்கைகளை சர்க்கார் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என் உரையை முடிக்கிறேன்.

Srimathi T. N. ANANDANAYAKI : On a point of order, Sir.

Fisheries and Agriculture are two separate demands in the Budget. I do not know why they should be clubbed together and discussed. Time should be allotted for discussion for each demand separately. Fish is as important as other food. We would like to have a thorough discussion over it. The time at our disposal is very short.

Mr. SPEAKER : The Business Advisory Committee grouped these together. They selected fisheries for discussion. The Hon. the Leader of the House put it to the vote of the House. The House has agreed. How can I change the order now ? Many hon. Members who are taking part in the discussion talk on agriculture and fisheries. The hon. Member, Srimathi T. N. Anandanayaki may also refer to fisheries in her discussion. I think it is perfectly in order.

**Sri K. ANBAZHAGAN :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, இன்று கொண்டு வரப்பட்டிருக்கிற மானியங்கள் மீது, பல் வேறு வெட்டுத் தீர்மானங்கள் தரப்பட்டுள்ளன; இந்தத் துறைகளில் செலுத்தப்படுகிற கவனம் இப்பொழுது செலுத்தப்படுவதை

விட மிருதியாக செலுத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு, வெட்டுத் தீர்மானங்கள் தரப்பட்டுள்ளன. உண்மையாகவே அந்தத் துறைகளில் ஈடுபட்டிருக்கிற நம் அமைச்சர்கள் அதிக ஆர்வத்தோடுதான் ஈடுபடுகிறோம் என்று சொன்னாலும், அவர்கள் சக்தியையும் மீறி, திறமையையும் கடந்து பல நேரத்தில், சிலபல தவறுகள் அந்தத் துறைகளில் நடைபெறுவதையும்; அப்படி நடைபெறுகிற தவறுகளைத் திருத்தும் முயற்சிகளில் அவர்கள் ஈடுபடுகிறபோது பல வகைகளில் தாமதம் ஏற்படுவதையும் அவர்கள் நன்கு அறிவார்கள். உண்மையாகவே, இன்றைய தினம், உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டுவது மிகவும் அவசியம் என்பதை உணவு அமைச்சர் திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்கிறார்கள். இரண்டாவது திட்ட இறுதியில் ஏறத்தாழ 12 லட்சம் டன் அளவுக்கு அதிக உணவு உற்பத்தி செய்வோம் என்று தெரிவித்தார்கள். ஆனால் அந்த இலக்கை அவர்களால் எட்ட முடியவில்லை என்பதை இப்போது தெரிவிப்பதுடன் அந்த இலக்கை அடைய முடியாததற்குக் காரணம் போதுமான அளவுக்கு மக்கள் விரும்பிய உரத்தை அவர்களுக்குத் தர முடியவில்லை. 'ரசாயன உரம் கிடைக்கவில்லை. எனவேதான் பின்தங்கி விட்டது' என்று இங்கேயே அமைச்சர் அவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் காங்கிரஸ் கட்சிக் கொறடா—நண்பர் திரு. கருத்திருமன் அவர்கள் கட்சியின் சார்பில் பேசினார்கள் என்று நான் கருதுகிறேன்—'உர வினியோகம் செய்யப்படாமலும் கூட சில பகுதிகளில் நல்ல விளைச்சலை உண்டாக்க முடிந்திருக்கிறது. எனவே உரம் கிடைக்காததைப் பெரிதாகக் கூறுகிறீர்கள். அதைக் காரணமாகக் காட்டாதீர்கள்' என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். கனம் அமைச்சரவர்களை இப்பொழுது நான் கேட்டுக் கொள்ளுவேன், நண்பர் திரு. கருத்திருமன் தேர்ந்தெடுக்கப்பட்ட கோவை மாவட்டத்தில் பல இடங்களில் புதிய நிலம் மிருதியாக விளைச்சலுக்கு வந்த காரணத்தால் அவை சத்துள்ளதாக இருக்குமாதலின் கோவைக்கு வேண்டுமானால் உர வினியோகத்தை நிறுத்தி, அந்த உரத்தை பல காலமாக விளைச்சலுக்கு வந்துள்ள செங்கல்பட்டு மாவட்டம், தஞ்சை மாவட்டம், தென்னார்காடு மாவட்டம் போன்ற பகுதிகளுக்கு, திரு. கருத்திருமன் சம்மதத்தைப் பெற்று, அளித்தால் நல்லது என்று கருதுகிறேன்.

அதைவிட முக்கியமாக, விரைவில் உர உற்பத்தியைப் பெருக்கிக் காட்டுவோம். இதனால் விளைச்சல் அதிகமாக ஏற்படும் என்ற நம்பிக்கையைப் பலர் தெரிவித்தார்கள்; நெய்வேலியில் ஏற்படவிருக்கிற உர உற்பத்தி அடுத்த ஆண்டில் துவங்கும் என்று தெரிவிக்கிறார்கள். அடுத்த ஆண்டு என்பது "நாளைக்கு" என்ற பொருளில் இன்று பிச்சை கேட்டவர்கட்கு போடுகிறவர்கள் "நாளைக்கு வா" என்று என்றைக்குமே அதைத் தவறாமல் சொல்லுகிறார்களே, அதுபோல் ஆகிவிடக்கூடாது. மாறாக, 62 மார்ச்சில், 62 ஏப்ரலில் விளைச்சலுக்குத் தேவையான நேரத்தில் உரம்



கிடைக்கும் என்பதற்கு வழிவகை செய்ய வேண்டும். உரத்தைப் பொறுத்தவரை இந்திய அரசாங்கம் மேற்கொண்டிருக்கிற கொள்கை, அதாவது வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வது அவ்வளவு நல்லதல்ல; அது நாட்டின் அன்னியச் செலாவணிக்கு ஏற்றதல்ல என்பதான கொள்கை பற்றிய அரசாங்கத்தின் உணவு அமைச்சரால் கண்டிக்கப்பட்டிருக்கிறது என்று நான் கேள்விப்படுகிறேன். உணவு உற்பத்தியைப் பெருக்கும் பொறுப்பில் உள்ள அமைச்சர்கள், வெளிநாட்டிலிருந்து ரசாயன உரத்தைப் போதுமான அளவு வரவழைத்தால், இந்தியாவிற்கு இறக்குமதியாகும் அளவுக்கு உணவு தானியங்களின் தேவையை நிறைவேற்றவும், உணவுப் பொருள் வரவழைப்பதைக் கட்டுப்படுத்தவும் துணை செய்யும் என்று தெரிந்துகொள்கிறேன். அந்த அளவுக்கு வெளிநாட்டு உரம் தேவை என்பதை மத்திய சர்க்கார் அமைச்சர் ஒப்புக்கொண்டிருக்கும் நேரத்தில், நம் மாநில அமைச்சர்கள் வெளிநாட்டு உரத்தை வரவழைக்கச் செய்து, உடனடியாக இங்கேயுள்ள தேவையை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மற்றொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். உரத்தை விநியோகிக்கும் முறையை கனம் அமைச்சர் அவர்கள் அறிவார், அதனால் ஏற்பட்டுவரும் பலன்கள் என்ன என்பதையும் அவர் அறிவார். உரம் வினியோகம் முறையாகவும் சரியாகவும் இருந்தால்தான் அதனால் உற்பத்தி பெருகுவதற்கு ஏதுவாகும். அதனால் தமிழ் நாட்டு மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயருவதற்கும் வழி ஏற்படும். ஆனால் அப்படி வினியோகம் செய்வதில் எவ்வளவோ குறைகள் ஏற்படுகின்றன, அதனால் மக்களுக்குத் துன்பமும் உற்பத்திக் குறைவும் அடைகிறது. அப்படிப்பட்ட ஒரு வருந்தத்தக்க நிலை இப்பொழுது தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. பல பகுதிகளில் கொள்ளை லாபம் அடிக்கக்கூடியவர்கள் இதில் தலையிட்டுள்ளதால் சரியான வகையில் உரத்தை விநியோகிப்பதாகத் தெரியவில்லை. இது குறித்து சமீபத்தில் அரியலூர் பகுதியில் ஒரு வழக்கு தொடரப்பட்டது. அங்கு ரசாயன உரத்துடன் உணவு உப்பைக் கலந்து விற்றதாகப் புகார் வந்தது. அதைப்பற்றி எந்த விதமான நடவடிக்கையும் உடனடியாக எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஆனால் பொதுமக்கள் சார்பில் அரசியல் கட்சிகள் திரும்பத் திரும்ப அந்த ஊழலைப்பற்றி விண்ணப்பங்கள் அனுப்பிய பிறகு, பொதுக் கூட்டங்களில் பல தலைவர்கள் கண்டித்துப் பேசிய பிறகுதான் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது. உரத்தை விற்பனை செய்கிற போது அத்துடன் சோத்து உப்பை பெரும் அளவில் கலந்து விற்பனை செய்கிறார்கள். சோத்து உப்பை விற்பனை செய்தால் அதைச் சாப்பாட்டிற்கு உபயோகித்துக் கொள்ளலாமே என்று கூடச் சொல்லலாம். அப்படி சொல்வது வேடிக்கையாக இருக்கலாம். ஆனால் அது உணவு உற்பத்தியையே பாழ் செய்து விடுவதால் எனக்கு வேதனையைத் தருகிறது. எனவே இப்படிப்பட்ட முறைகளை கையாண்டு ஏமாற்றுதலை செய்யாமல் தடுக்க வேண்டும்

(Deputy Speaker in the Chair.)

என்பதற்குத்தான் கனம் அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே இனிமேலாவது இப்படிப்பட்ட தவறுகள் நடவாமல், நடக்கமுடியாமல் பார்த்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக உரத்தை கூட்டுறவு பண்டகசாலைகள் மூலமாக விநியோகம் செய்ய வேண்டும் என்று அமைத்திருக்கிறார்கள். அப்படி விநியோகம் செய்தாலும் சில சங்கடங்கள் ஏற்படுகின்றன. சலுகை பெற்றவர்கள்தான் அவைகளைப் பெற்றுக் கொள்ளுகிறார்கள். அப்படிப்பட்ட சலுகைமுறை விநியோகத்தில் இருக்கக் கூடாது. உணவு உற்பத்திக்கு என்று மண்டலக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மண்டலக் குழுக்கள் சார்பாக எந்தெந்த கிராமங்களுக்கு எந்த அளவு உரம் தேவைப்படுகிறது என்பதைத் தீர்மானித்து அந்த வகையில் அந்த கூட்டுறவு பண்டகசாலைகள் மூலமாக உரம் விநியோகம் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். மற்றும் உரம் மூட்டை ஒன்றுக்கு 47 ரூபாய் என்று விற்பதற்குப் பதிலாக 66-67 ரூபாய்க்கு விற்று வருகிறார்கள். இப்படிப்பட்ட விற்பனை பல இடங்களில் நடைபெற்று வருகின்றன. இதை எந்த விதத்திலும் அனுமதிக்கக் கூடாது. இதைப்பற்றி போலீசாரிடம் தெரிவிக்கப்பட்டாலும் அவர்களும் சில இடங்களில் எந்த விதமான நடவடிக்கையும் எடுப்பதாக இல்லை. இப்படித் திருச்சியில் சென்ற ஆண்டில் ஒரு புகார் வந்தது. ஆகவே போலீசார் இதில் அதிக கவனம் செலுத்துவதற்கு வேண்டிய வழிவகை செய்ய வேண்டும் என்று விரும்புகிறேன். இந்த கொள்ளை நடவாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாக இருக்கிறது.

உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று சொல்லுகிறபோது அதற்கு உதவியாக தேவையான இரும்பு உழவுக் கருவிகளைக் கிடைக்கச் செய்ய வேண்டியது அவசியமாக இருக்கிறது. அவைகள் எல்லாம் காலாகாலத்தில் விவசாயிகளுக்குக் கிடைப்பதாக இல்லை. இந்தக் கருவிகளை வழங்குவதற்கு அந்த இலாகா ஒரு முறையைக் கடைப்பிடித்து வந்தாலும் பாமர மக்களுக்கு அவைகள் எந்தக் காலத்தில் எப்பொழுது எங்கு கிடைக்கும் என்பது தெரியாததால் துன்பப்படுகிறார்கள். அவர்கள் படிக்காதவர்களாக இருப்பதால் அவர்களால் காலாகாலத்தில் விண்ணப்பித்துக் கொள்ள முடியவில்லை. பாமர மக்களுக்கு வேண்டிய கருவிகள் தேவையான காலத்தில் கிடைப்பதாக இல்லை. இதைப் பற்றி கனம் பெரியவாலகுருவா ரெட்டியார் அவர்களும் குறிப்பிட்டதை நினைவூட்டுகிறேன். அவர் சொன்னபோது மதுரை பகுதியில் தேவையாக இருக்கிறது என்று சொன்னால் கோயம்புத்தூரில் அதற்காக இரும்பு அனுமதி கொடுப்பதாகத் தெரிய வருகிறது. அதனால் மக்கள் நெடுந் தொலைவு சென்று வாங்கிக்கொள்ள முடியவில்லை. ஆகவே இப்படிப்பட்ட தொல்லை ஏற்படாமல் உழவுக்குத் தேவையான கருவிகளை அவர்கள் கேட்கும்போது



கொடுக்கக்கூடிய அளவில் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

டிராக்டர்களைப் பொறுத்த வரைக்கும், 1953-ம் ஆண்டு டிராக்டர்கள் வேண்டுமென்று விண்ணப்பித்தவர்களுக்கு இன்னும் கொடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஏதோ சிலருக்குக் கொடுக்கப்பட்டிருந்தாலும் பலருக்கு இன்னும் கொடுக்கப்படவில்லை. விவசாயிகள் தவணைக் கடன் முறையில் கேட்டும் கிடைக்கவில்லை. இதற்காக 1958-ம் ஆண்டில் விண்ணப்பித்தும் இன்னும் ட்ராக்டர்கள் வழங்கப்படவில்லை. அரசாங்கம் இதில் கவனம் செலுத்த வேண்டும். அதற்குக் காரணம், அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட கம்பெனியின் மூலம், அதாவது மார்ஷெல் கம்பெனி என்று நினைக்கிறேன், ட்ராக்டர்களை வாங்குகிறார்கள். அந்தக் கம்பெனி ஒன்றிரண்டு வகையான ட்ராக்டர்களைத்தான் விற்பதாகத் தெரிய வருகிறது. அவர்களால் அந்த வகை ட்ராக்டர்களைத்தான் உற்பத்தி செய்ய முடிகிறது என்றும் தெரிகிறது. வேறு வகையான ட்ராக்டர்கள் வேண்டும் என்று கருதினால் அவர்களிடம் கிடைப்பதில்லை. வேறு நிறுவனங்களிலிருந்து வாங்காததால் தாமதமாகிறது என்றும் தெரிய வருகிறது. ஆகவே அரசாங்கம் உடனடியாக தேவையான ட்ராக்டர்களை சப்ளை செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும் அந்தக் கம்பெனியிலிருந்து மட்டும் வாங்குவதற்கும் காரணம் இருப்பதாகத் தெரிய வருகிறது. மற்ற கம்பெனிகளில் வாங்குவதாக இருந்தால் உடனடியாக அந்தத் தொகையை அரசினர் கட்ட வேண்டியதாக இருக்கிறது. அதனால் மற்ற கம்பெனிகளை அரசாங்கம் கடன் தவணை கேட்டால் அவர்கள் கொடுக்கத்தயாராக இல்லை என்றும் தெரியவருகிறது. இப்படி நான் சொல்லும்போது இது தவறு என்று கனம் அமைச்சர் கருதலாம். ஏனென்றால் நான் எந்தக் குறையைச் சொன்னாலும் அது தவறு என்று சொல்ல அவர் தயங்குவதில்லை. எது தவறாக இருந்தாலும் இனி பல நிறுவனங்கள் மூலமும் ட்ராக்டர்கள் சப்ளை செய்வதற்கு வழிகண்டு தாமதத்திற்கு இடம் கொடுக்காமல் இருக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். 1961-ம் ஆண்டிலாவது 1960-ம் ஆண்டு வரை விண்ணப்பித்தவர்களுக்கு வேண்டிய ட்ராக்டர்களை தவணை முறையில் வழங்குவதற்கு வழிவகை செய்ய வேண்டும். அதற்கு வேண்டிய வழிவகை செய்தால் நிச்சயமாக உணவு உற்பத்தி பெருகுவதற்கு இடம் இருக்கிறது.

இன்னொரு வகையிலும் உற்பத்திப் பெருக்கத்திற்கு இடையூறு ஏற்படுகிறது. இதனால் உற்பத்தி மிகவும் பாதிக்கப்படுகிறது. பயிர்களை பூச்சிகள் அரிப்பதால் உற்பத்தி பெரிய அளவில் கெடுகிறது. இப்படிப் பூச்சிகள் பயிர்களில் விழுகிறது என்று அடிக்கடி புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. பயிர்கள் பாழாவதற்கு எவ்வளவோ வழிகள் இருக்கின்றன. அதிகப்படியான தண்ணீர் தேங்கி இருந்தாலும் தண்ணீரே இல்லாமல் போனாலும் பயிர் பாழாகிறது. இதன் மூலம் பாழாவதோடு பூச்சிகளால் பயனற்றுப் பாழாகின்றன. இதைத் தடுக்க ஆராய்ச்சிகள் நடத்தப்பட வேண்டியதாக இருக்கிறது. அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கும்

பணம் குறைவாகத்தான் இருக்கிறது. இன்னும் அதிகப்படியான தொகை ஒதுக்க வேண்டியது அவசியம். குறைவாக இருக்கிறது என்பதை புள்ளிவிவரத்தில் இருந்து குறித்திருக்கிறேன். முக்கியமாக இப்படிப் பூச்சி விழுவதால் வெற்றிலை பயிர்கள் வேரோடு பாதிக்கப்படுகிறது. வெற்றிலைப் பயிர்த் தொழிலினால் எவ்வளவோ மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவற்றில் அதிகப்படியான பூச்சி விழுவதால் அந்தத் தொழில் பெருக முடியாமல் அழிகிறது. அதைத் தடுக்க வழிவகை செய்ய வேண்டியது அவசியமாக இருக்கிறது. இது சம்பந்தமாக ஒரு ஆராய்ச்சி நிலையத்தை சேலம் மாவட்டம் பொத்தனூர் (பாண்டமங்கலம்) என்ற இடத்தில் அமைந்திருக்கிறார்கள். அங்கு இதைப் பற்றிய ஆராய்ச்சியை நல்ல முறையில் செய்து அந்த வெற்றிலைப் பயிரை பூச்சிகளில் இருந்து பாதுகாப்பதற்கு வழிவகை காணவேண்டும். அதற்கு வேண்டிய நிபுணர்கள் இங்கு இல்லாவிட்டாலும் திறமைவாய்ந்தவர்களை வெளிநாட்டிலிருந்தேனும் இங்கு வரவழைத்து அவர்கள் மூலம் இந்த ஆராய்ச்சியை நடத்துவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். அந்த முறையில் நடவடிக்கை எடுத்தேனும் ஏழை வெற்றிலை விவசாய மக்களை வாழவைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பயிர்களில் பூச்சி விழுந்தால் அவற்றிற்கு மருந்து தெளிக்க அரசாங்கத்தினிடம் வேண்டிய ஸ்ப்ரேயர்கள் இல்லை என்று தெரிய வருகிறது. விவசாய இலாகாவில் போதுமான அளவில் ஸ்ப்ரேயர்கள், மருந்து தெளி கருவி இல்லாத காரணத்தால் தேவைப்படும் காலத்தில் அதை வழங்க முடியவில்லை. சாதாரணமாக தெளிமருந்து பாதி விலைக்குக் கொடுக்கப்படுவதற்கு அனுமதி பெறுவதில் தாமதமேற்படுவதால், காலத்தில் கொடுக்க முடியவில்லை. அதனால் பூச்சி விழக்கூடிய காலத்தில் உடனடியாக மருந்து சப்ளை செய்ய முடியவில்லை. ஆகவே உடனடியாக வேண்டிய ஸ்ப்ரேயர்களையும் பூச்சி மருந்துகளையும் வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அந்த இலாகாவைக் கவனிக்கும் கனம் போலீசு அமைச்சர் அவர்கள் வயதானவராக இருந்தாலும் போலீஸ்காரர்களைப்போல் மிகவும் முடுக்காக இருப்பதால் இந்தத் துறையிலும் கவனம் செலுத்தி உற்பத்தி பெருகுவதற்கு வழிவகை காண வேண்டும் என்று விரும்புகிறேன்.

அடுத்தபடியாக கால்நடை இலாகாவைப் பற்றிச் சில கூற வேண்டி இருக்கிறது. இந்த இலாகா சம்பந்தமான கால்நடை மருத்துவக் கல்லூரி ஒன்றுமட்டும் இருப்பது போதாது. இப்பொழுது இருக்கக்கூடிய கல்லூரியில் சிறந்த முறையில் பணியாற்றி வருகின்ற பேராசிரியர்கள் பலர் இருந்தும் அந்தக் கல்லூரிக்கு வெளியிலிருந்து ஒரு பேராசிரியரைக் கொண்டுவந்து நியமித்திருப்பதாகத் தெரியவருகிறது. தமிழ் நாட்டில் அதற்குத் தகுதியுள்ளவர்கள் கிடையாதா? அந்தக் கல்லூரியிலேயே எவ்



வளவோ தகுதி வாய்ந்தவர்கள் இருக்கிறார்கள். அந்த நிலைமையில் வெளியிலிருந்து ஒருவர் வரவேண்டிய காரணம் என்னவென்பது தெரியவில்லை. அப்படி வந்திருக்கக்கூடியவரும் முழுத் தகுதி வாய்ந்தவராக இருப்பதாகத் தெரியவில்லை. அப்படி தகுதிக் குறைவாக இருப்பவரைக் கொண்டு வருவது முறையல்ல. அப்படி நான் சொல்வது தவறாக இருக்கிறது என்று நிரூபித்தால் அதைக் கேட்டு நான் மகிழ்ச்சி அடைவேன். நான் சொல்வது சரியாக இருந்தால் கனம் அமைச்சர் அவர்கள் வருத்தப்பட வேண்டும். அப்படிப்பட்ட முறை இருக்கக் கூடாது. அந்தக் கல்லூரியில் இருப்பவர்களுக்கு தகுதி இருக்குமானால் அவர்கட்கே மேல் பதவி கிடைப்பதற்கு வழிவகை செய்யவேண்டும். மேலும் இந்தக் கால்நடை மருத்துவ இலாக்காவுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை பத்து லட்சம் ரூபாய் என்று கருதுகிறேன். கால்நடை காப்புக்கு அது குறைவு என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். இன்றைய தினம் நம் நாட்டில் உள்ள கால்நடை எண்ணிக்கைக்கு ஏற்ற அளவிலும் அதிகரித்துக் கொண்டு வருவதற்கு ஏற்பவும் அவைகளை நோயிலிருந்து காப்பதற்குத் தேவையான அளவு தொகை ஒதுக்கி வழிவகை செய்யவேண்டும்.

இதற்கு அடுத்தபடியாக மீன் இலாகாவைப்பற்றி சில கூற விரும்புகிறேன். சென்ற ஆண்டு பல குற்றச் சாட்டுகளை எடுத்துச் சொன்னேன். அதற்கு எந்த விதமான தக்க பதிலும் கனம் அமைச்சர் சொல்லவில்லை. நான் சொல்லிய குற்றச்சாட்டுகளுக்குச் சற்று அதிகமாகவே அங்கு தவறுகள் நடைபெற்றிருக்கிறது என்று நாளடைவில் தெரியவருகிறது. அதன் உண்மையை ஆராய்ந்து பார்த்து வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். இதுவரையிலும் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. வேறு இடத்தில் பேசும்போது நாலைந்து நாட்களுக்கு முன்பு, சுமார் 35 ஆயிரம் சங்குகள் காணமல் போய்விட்டதாகத் தெரியவருகிறது, அதைப்பற்றி விசாரணை நடந்து வருகிறது என்று அத்துறை அமைச்சர் சொல்லி இருக்கிறார். அதையே நான் இந்த மன்றத்தில் கூறி ஒரு ஆண்டு ஆகிறது. அந்தச் சங்குகள் போன இடம் தெரியவில்லை என்று அமைச்சர் சொல்லி இருக்கிறார். கனம் அமைச்சருக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் அங்கிருந்த அதிகாரிகளுக்கு அது தெரியாமல் இருக்காது, தெரிந்திருக்க வேண்டும். பல விவரங்களை சென்ற ஆண்டு இங்கு தெரிவித்தேன். அப்பொழுது அவைபற்றி தெரியாமல் இருந்திருக்கலாம். ஆனால் இந்த ஆண்டிலாவது அவைகளுக்குப் பதில் சொல்லவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER : Hon. Member's time is up.

SRI K. ANBAZHAGAN : இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்து விடுகிறேன். மீன் இலாகாவிற்கு 1960-61-க்கு செலவு செய்ய திட்டமிட்டிருந்தது 34.12 லட்சம் ரூபாய், அதன் திருந்த மதிப்பீடு 36.98 லட்சம் ரூபாய். ஆக மூன்று லட்சம் ரூபாய் அதிக

மாகச் செலவாகி இருக்கிறது. இந்த இலாகா வருமானத்தைத் தொகுத்துப் பார்த்தால் சென்ற ஆண்டு திட்டமிடப்பட்ட மதிப்பீட்டின்படி 29.6 லட்சம். ஆனால் திருத்தப்பட்ட மதிப்பீட்டின்படி 12-30 p.m.
வருமானம் 25.96 லட்சம். வருமானத்தால் 5 லட்சம் குறைகிறது. இதற்கு தக்க சமாதானம் நிதி நிலை அறிக்கையில் கொடுக்கப்படவில்லை. சென்ற ஆண்டில் செலவு மூன்று லட்சம் அதிகமாகி வரவு நான்கு லட்சம் குறைந்ததற்கு என்ன காரணம் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் கூறவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டில் மீன் வளம் பெருகியிருக்கிறது, பெருகியிருக்கிறது என்று சொல்லப்படுகிறதே தவிர கிடைக்க வேண்டிய வருமானம் குறைந்து போகிறது. இதைப்பற்றி அந்த இலாகா அமைச்சர் அவர்கள் தக்க விளக்கம் தரவேண்டும்.

கடைசியாக நான் சொல்லி முடிக்க விரும்புவது கால்நடை பராமரிப்புக்காக 1960-61-ல் திருத்தப்பட்ட மதிப்பீட்டின்படி 81 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டில் அது 58 லட்சமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. அந்த அளவு கால்நடை பராமரிப்புக்காக ஒதுக்கப்பட்ட தொகை குறையக் கூடாது, தேயக்கூடாது. உண்மையில் பயிர் வளர, காடு வளர, மாடு வளர, மீன் வளர வழிகண்டால்தான் மனிதர்கள் வளர, வாழ முடியும். இல்லாவிட்டால் மனிதர்கள் கூடத் தேய்ந்து விடுவார்கள் என்று தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

SRI P. G. KARUTHIRUMAN : Sir, on a point of personal explanation.

உரமே சாகுபடிக்குத் தேவையில்லை என்று நான் சொன்னது போல திரு. அன்பழகன் சொன்னார். நான் அப்படிச் சொல்லவில்லை. உரம் அவசியம். ஆனால் செயற்கை உரம்தான் அவசியம் என்றல்ல, இயற்கை உரத்தையும் பெருக்கி, விவசாய உற்பத்தியை அதிகப் படுத்தலாம் என்றுதான் சொன்னேன். உரம் இல்லாமல் உற்பத்தியைப் பெருக்க முடியும் என்பதாக திராவிடக் கட்சி நிபுணர்கள் வேண்டுமானால் நினைக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : கனம் சபாநாயகர் அவர்களே, உணவு உற்பத்திப் பெருக்குக்கு மீன் வளத்தை அதிகப்படுத்துவது மிகவும் முக்கியமான திட்டம். இதற்காகத்தான் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. முக்கியமாக விசைப் படகுகள் கட்டி வருகிறார்கள். அறுபத்தைந்து படகுகள் கட்டியிருக்கிறார்கள். இன்னும் 67 படகுகளை உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கூட 400 படகுகள் கட்ட வேண்டும் என்று முயற்சிகள் நடைபெறுகின்றன.

ஆனால் அதேசமயத்தில் இந்தப் படகுகளைப் பற்றி ஒரு தப்பான அபிப்பிராயம் மீனவர்களிடத்திலே பரப்பப்படுகிறது. கட்டுமரங்கள் மீன் பிடிக்கிற இடங்களிலே இவைகள் போனால் கட்டுமரங்களுக்கு மீன் கிடைப்பது கிடையாது. இந்த விசைப் படகுகளின் சத்தத்தினால் அவை ஓடிவிடுகின்றன என்ற தப்பான பிரசாரத்தை மீனவர்களிடையே சிலர் செய்து வருகிறார்கள். ஆனால் உண்மையில் இது சரியல்ல. விசைப் படகுகள் சத்தம் போடுகின்றன என்றால்—விசைப் படகுகளுக்கும் மீன் கிடைக்கக் கூடாது. ஆனால் விசைப் படகுகளுக்கு நிறைய மீன் கிடைக்கின்றன. இதிலிருந்து விசைப் படகுகளின் சத்தத்திற்கும், மீன் கிடைப்பதற்கும் சம்பந்தம் இல்லை என்று கூறவேண்டியிருக்கிறது. இருந்தாலும் மீனவர்களுக்கு உதவி செய்கிறோம் என்று சொல்லிக்கொண்டு இப்படி நைலான் வலை உபயோகிக்கக் கூடாது, விசைப் படகினால் கட்டுமரங்களுக்கு மீன் கிடைப்பது இல்லை என்பதாக எல்லாம் ஒரு சிலர் தவறாகப் பிரசாரம் செய்வதை நிறுத்திவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆரம்பத்தில் மீனவர்கள் இந்தப் பேச்சைக் கேட்டு ஏமாற்றம் அடைந்தாலும் கூட, இப்போது அவற்றின் பலன்களை உணர்ந்து, அவற்றினால் உள்ள வருமானத்தை உணர்ந்து, லாபத்தை உணர்ந்து எல்லோரும் உபயோகிக்க முன் வருகிறார்கள். அதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொள்கிறார்கள்.



SRI A. GOVINDASAMI : தலைவர் அவர்களே, பாப்லோ போட் ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்கு உபயோகப்பட வேண்டியவை. கட்டுமரம் கடல் ஓரத்தில் மீன் பிடிக்க உபயோகப்படும். கட்டுமரங்கள் மீன் பிடிக்கக்கூடிய இடங்களிலேயே இந்த பாப்லோ போட்டைக் கொண்டுபோய் மீன் பிடிப்பதனால் கட்டுமரங்களுக்கு மீன் கிடைக்கவில்லை என்பதாக மீனவர்களே புகார் செய்வது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதை உணராமல் யாரோ ஒரு சிலர் தப்பாகப் பிரசாரம் செய்வதாகக் கூறும்படியான குற்றச்சாட்டு தவறானது.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : ஆழ்கடலில் மீன் பிடிப்பது அல்ல இந்த விசைப்படகுகள். கட்டுமரங்களிலும் இந்த விசைக் கருவிகளை உபயோகிக்கலாம். கட்டுமரங்கள் போகக்கூடிய தூரத்திற்குள்ளேயேதான் இந்த பாப்லோ போட்டு உபயோகப்படுத்தப்பட வேண்டியவை. ஆனால் கட்டுமரங்களுக்கு எவ்வளவுக்கு எவ்வளவு இடம் கொடுக்க வேண்டுமோ அவ்வளவுக்குக் கொடுக்கப்படுகிறது.

திரு. பழனிசாமி அவர்கள் பேசும்போது இந்தப் படகுகளை அதிகமாக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இப்போதே அதிகமாக்கப்பட்டு வருகிறது என்று சொன்னேன். அதோடு இந்த விசைப் படகுகள் வந்து தங்குவதற்கு துறைமுக வசதி செய்துதரவேண்டும் என்பதற்காகத்தான் முதற்படியாக 3 துறைமுகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. கடலூரில் வசதி செய்யப்பட்டு வருகிறது. இன்னும் ராயபுரம், நாகப்பட்டிணம் இங்கெல்லாம் அமைக்கப்படும்.

மீன் எண்ணெயும் மிக முக்கியமானது. ஷார்க் லிவர் ஆயில் உற்பத்தி பண்ணுகிற தொழிற்சாலை கோழிகோட்டில் இருந்தது. நம் ராஜ்யத்தில் இருந்து அது பிரிந்த பிற்பாடு இப்போது கிடையாது. இப்போது 35 ஆயிரம் ராத்தல் எண்ணெய் கிடைக்கிறது. இன்னும் அதிகம் கிடைக்க ஒரு தொழிற்சாலை அவசியம். அதற்கான ஏற்பாடுகள் நடக்கின்றன. சிபார்சும் செய்திருக்கிறோம். ஆனால் பாரின் எக்ஸ்சேன்ஜ் காரணமாக உடனடியாக அந்த வேலை துவக்கப்படாமல் இருக்கின்றன.

கடற்கரையில் மணல் சேரிகள் ஏற்பட்டு அநேக வீடுகள் சேதம் அடைந்துவிட்டன என்பது உண்மை. குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் இப்படி ஏற்பட்டதன் காரணமாக டிராக்டர்களைக் கொண்டு மண்ணை அகற்றி சேதமான வீடுகளைக் காப்பாற்றியதோடு கூட, பல வீடுகள் சேதம் அடையாமலும் காப்பாற்றப்பட்டிருக்கின்றன.

ஏரி, குளம், குட்டைகளில் மீன் வளர்ப்பது பற்றியும் குறிப்பிட்டார்கள். மீன் குஞ்சுகள் தயாரிப்பதில், இன்னும் ஆரம்ப நடவடிக்கைகள் எடுப்பதில் செலவு இவ்வாண்டு அதிகம். ஆனால் இனி இதுபோல் செலவாகாது. வருமானம் அதிகம் இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு ஏக்கர் தண்ணீரில் சரியான முறையில் மீன் குஞ்சுகளை வளர்த்தால் ஆயிரம் ராத்தல் மீன் கிடைக்கும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. திரு. அன்பழகன் குறிப்பிட்டதுபோல அமராவதி, பரம்பிக்குளம், ஆளியார், மேட்டூர் போன்ற இடங்களில் ஆராய்ச்சி, பரிசீலனை, மீன் குஞ்சு சேகரித்தல் முதலியவற்றால்தான் செலவு அதிகம் இவ்வாண்டு ஏற்பட்டிருக்கிறது. இனிமேல் இப்படிச் செலவாகாது என்று அவருக்குச் சொல்ல விரும்புகிறேன்.

முத்துக்குளிப்பது, சங்கு எடுப்பது இவைகள் நம் நாட்டின் முக்கிய தொழில்கள். நமக்கு இப்பொழுது தூத்துக்குடியில் மட்டும்தான் முத்து கிடைக்கிறது. ஆறு வருடங்களாக முத்துக் குளிப்பு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 28 ஆண்டுகள் அது நடக்காமல் இருந்து இப்பொழுது ஆறு வருடங்களாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதோடு இதைப்பற்றி நன்கு பரிசீலனை செய்து, சால்வடார் எப். ஏ. ஓ.-யிலிருந்து வந்து பரிசீலனை செய்து வேறுயிடங்களிலும் முத்து கிடைக்கக்கூடிய நிலையிருக்கிறதென்று ஆராய்ந்து அதுபற்றி குறிப்பும் தந்து போயிருக்கிறார்கள். அதைக் கவனித்து கூடுதல் முத்து எடுத்து நாம் நல்ல லாபம் அடைய வழியிருக்கிறது. பின்னர், 35,000 சங்குகள் காணாமல் போய் விட்டதென்று சொன்னார்கள். அதன் பேரில் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அவை வைக்கப்பட்டிருந்தயிடத்தின், அதில் இரண்டு பூட்டுகள் போடப்பட்டிருந்தது; அதன் சாவி ஒரு இன்ஸ்பெக்டரிடமும், அவரது அஸிஸ்டெண்ட்டிடமும் இருந்தது, அவர்கள் உடனடியாக ஸஸ்பென்ஷனில் வைக்கப் பட்டிருக்கிறார்கள். அதற்கு மேலும் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதுபற்றிய முடிவு ஏற்பட்டதும் அதுபற்றி சபைக்கு அறிவிக்கப்படும். பின்னர், "பிஷ் மார்க்கட்டிங்"-க்கு அதிக வசதிகள் செய்து கொடுப்பதோடுகூட வேண்டிய உப்பு கொடுப்பது, அதைப் பாதுகாப்பாக வைக்கும் முறை, உலர்த்தக்கூடிய முறை இவைகளைக் கண்டறிய வேறுயிடங்களுக்குப் போய் பார்த்து அவைகளை, ஒவ்வொன்றையும் எப்படி எப்படிச் செய்யவேண்டும் என்பதைப்பற்றியும், விற்பனை செய்யும் முறைபற்றியும் நல்ல விளக்கங்கள் மீனவர்களுக்கு கொடுக்கப்படுகிறது. 1958-59-ல 3 கோடியும், 59-60-ல் 2½ கோடி அளவிற்கு வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. மீன்களை தக்க முறையில் உலர்த்த வசதியில்லாததால் அதற்குள்ள கிராக்கிகூட குறைகிறது. ஆகவே, மீன்களை நன்கு உலர்த்துவதற்கு, நவீன முறையில் உலர்த்துவதற்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்படுகிறது. திரு. பழனிசுவாமி அவர்கள் அடையாறுபற்றி சொன்னார்கள். அடையாரில் ஒரு பிஷிங் ஹார்பர் ஏற்படுமா என்று. அடையாரில் ஒன்று ஏற்படுத்துவது உடனடியாக சாத்தியமாகயிருக்காது என்று நினைக்கிறேன. பரிசீலனை செய்து அடையாறைவிட ராயபுரம் சிறந்தது என்று கருதி அந்த இடத்தில் ஆரம்பிக்கும் தருணத்தில் இருக்கிறது. மீனவர்களின் நிலையை உயர்த்த பல வசதிகள் செய்து கொடுக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் வசிக்கும் இடங்களுக்கு "அப்ரோச் ரோட்ஸ்" போட வேண்டுமென்று ஸ்ரீமதி சௌந்தரம் ராமச்சந்திரன் அவர்கள், திரு ஸ்ரீனிவாசன் அவர்கள், திரு ராமஸ்வாமித்தேவர் அவர்கள் எல்லோரும் கூறினார்கள். அங்குள்ளவர்களுக்கு வசதியாகயிருக்கும்படி, ரோடுகள் அமைக்கவும், குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்றும் கூறினார்கள். இதற்காக அதிகப்படி நிதி ஒதுக்க வேண்டுமென்றும் கூறினார்கள், அதற்காக நான் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடற்கரையோர கிராமங்களில், மீனவர்கள் வசிக்கும் இடங்களில் நல்ல ரோடுகள் இல்லை, அப்படி கடற்கரையோரயிடங்களில் ரோடுகள் அமைக்கத் திட்டம் போட்டும், நிதி ஒதுக்கியும்கூட வேலைகள் நடக்க பல தடங்கல்கள் ஏற்படுகின்றன. இப்பொழுது வேலைகள் ஜரூராக நடக்கிறது. தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருநெல்வேலி மாவட்டங்களில் 4,71,500 ரூபாய் ரோடுகள் அமைக்க ஒதுக்கப்பட்டிருக்கிறது. குளச்சலிலிருந்து நீரோடி, கோவளத்திலிருந்து மணக்குடி ரோடு அமைக்க திட்டம் ஏற்படுத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகிறது. மீனவர்களின் வாழ்க்கையில் பலவிதத் துன்பங்கள் ஏற்படுகின்றன. அவர்களது தொழில், ஆபத்துக்கள் நிறைந்ததாகவும், சில சமயங்களில் உயிரைக்கூட இழக்கும் நிலை ஏற்படுகிறது. ஆகவே அவர்களது பாதுகாப்பிற்காக பல வசதிகள் செய்து தரப்படுகிறது. எந்த எந்தயிடங்களில் எப்பொழுது, எப்பொழுது புயல் ஏற்படும் என்று தெரிகிறதோ அப்பொழுது அங்கெல்லாம் அதுபற்றிய அறிவிப்புகள் கொடுக்கப்படுகின்றன. காணாமல் போன படகுகளையோ அல்லது ஆள்களையோ கண்டு பிடித்துக் கொண்டுவர விசைப் படகுகள், விமானக் கப்பல் வழி சர்ச் பார்ட்டி சர்ச்சஸ் நடத்துவது போன்றவைகள் செய்யப்படுகின்றன. அடுத்தபடி

யாக, மீனவர்கள் வீடுகள் பற்றி பல குறைகள் சொல்லப்பட்டன. கடலை நம்பி வாழும் அவர்களுக்கு கடற்கரையோரத்தைத் தவிர வேறுயிடங்களில் அவர்கள் வாழும் நிலைமையில்லை. ஆனால் கடலரிப்பு, அல்லது அந்தயிடங்களை வேறு காரியங்களுக்காக அக்வயர் செய்தாலோ அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டால் அவர்களுக்கு வேறு எங்கெங்கு வீடுகள் கட்டிக் கொடுக்க முடியுமோ அவ்வாறு செய்யப்பட்டு வருகிறது. வீடுகள் கட்டுவதில், அதிக வருமானம் இல்லாததால் . அதில் அதிகமான வெற்றி காண முடியாமல் இருக்கிறது. மீனவர்களின் வாழ்க்கை நிலை உயரவேண்டும், அவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று சொல்லும்போது, அந்த வேலை செய்யும் உரிமையை இந்த ஏழை மக்களிடமிருந்து அப்புறப்படுத்தப் பார்ப்பது என்றால் எப்படி அதை ஏற்றுக் கொள்ள முடியும்? கனம் அங்கத்தினர்கள் சொன்ன யோசனைகளை மனதில் கொண்டு ஆவன செய்யப்படும். மீன் இலாகா வழி வருமானம், நிர்வாகச் செலவு, அபிவிருத்திக்காகும் செலவு இவைகளில் 2/3 பாகத்திற்குப் போதுமானதாகயிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் மேன்மேலும் இந்தத் துறை அபிவிருத்தியடைந்து, மீனவர்களுக்கும், அதை உண்பவர்களுக்கும், அரசாங்கத்திற்கும் லாபம் கிடைக்கும் என்ற என் நம்பிக்கையைத் தெரிவித்துக் கொண்டு இந்த மான்யத்தை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

* **SRI K. ANBAZHAGAN**: கனம் மீன்வளர்த்துறை அமைச்சர் அவர்கள் இப்பொழுது நாம் அதிகம் செலவு செய்வதால் வருகிற ஆண்டில் அதிக வருமானம் வரும் என்று தெரிவித்தார்கள். 1961-62-ம் ஆண்டு வருமானம் 28-½ லட்சம் என்று தரப்பட்டிருக்கிறது. அதைவிட அதிகம் வருமானம் உயரும் என்று கருதுகிறார்களா? அதோடு, விவசாய இலாகாவோடு இது சேர்த்துத் தரப்படுகிறது. ஆகவே இந்தத் துறை வருமானத்தை இனி தனியாகப் பிரித்துத் தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன். மேலும் 35,000 சங்குகள் காணாமல் போனதுபற்றி விசாரித்திருப்பதாகத் தெரிவித்தார்கள். சென்ற ஆண்டு கூறப்பட்ட மற்ற குற்றச் சாட்டுகள் பற்றியும் விசாரித்தார்களா? அல்லது இனி தான் விசாரிக்கப் போகிறார்களா என்றும் தெரிவிக்க வேண்டுகிறேன்.

* **THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON**: அதிகமான வருமானம் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆண்டு ஆக்க வேலையில் ஈடுபடுவதால் புதிதாகக் குளம், குட்டைகள் இவைகளின் அதிகரிப்பினால் அதிகச் செலவினம் ஏற்படுவதால் மீன் குஞ்சுகள் வளரும், இந்த ஆண்டு அவற்றைக் கொண்டு வியாபாரம் செய்ய உதவ முடியவில்லை என்றால் அடுத்த ஆண்டு இதன் வருமானம் பெருகும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. கழிந்த ஆண்டு வேறு குற்றச்சாட்டுகள் கூறினார்கள் என்றால் அவை



பரிசீலனையில் இருக்கின்றன, அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

* **THE HON. SRI M. BHAKTAVATSALAM**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மீன் இலாகா கோரிக்கை உள்பட ஆறு கோரிக்கைகள் பற்றிய விவாதத்தில் 16, 17 அங்கத்தினர்கள் கலந்து கொண்டார்கள். அவர்கள் அதில் மிகுந்த அக்கறை செலுத்தி பல அரிய யோசனைகளையும் தெரிவித்தார்கள், குறைபாடுகளையும் தெரிவித்திருக்கிறார்கள். குறைகள் இருந்தால் அவைகள் எல்லாம் அகற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதற்காகக் கவனம் செலுத்தப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு பல யோசனைகள் தெரிவிக்கப்பட்டன. அவைகளை எல்லாம் எந்த அளவுக்கு நிறைவேற்ற முடியுமோ அந்த அளவுக்கு நிறைவேற்ற அரசாங்கம் கவனம் செலுத்தும் என்பதை முதன்முதலாகத் தெரிவித்துக் கொள்கிறேன். சற்று முன்பு கனம் அங்கத்தினர் திரு நல்லசிவம் அவர்கள் பன்றி வளர்ப்பது மிகவும் அவசியம், அதன் மாமிசம் மிகவும் நல்லது என்ற அரிய கருத்து ஒன்றை தெரிவித்தார்கள். கனம் அங்கத்தினர் ஸ்ரீமதி அனந்தநாயகி அவர்கள் மீன் வளர்ப்பது நல்லது, மீன் முக்கியமான உணவாகும் என்று தெரிவித்தார்கள். கனம் நல்லசிவம் அவர்கள் தெரிவித்த கருத்துக்கு நான் சொல்லிக்கொள்வது என்னவென்றால், இப்போதே கால்நடை இலாகாவின்கீழ் பன்றி வளர்ப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு, இந்த விஷயத்தில் அரசாங்கம் வேண்டிய அக்கறை எடுத்து கால்நடை இலாகாவின்கீழ் சேவை செய்து வருகிறது. கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன், ஹோசூர் பண்ணையில் பன்றி வளர்க்கப்பட்டு வருகிறது. சமீபத்தில் இங்கு நடந்த கால்நடைக் கண்காட்சியைப் பார்த்திருப்பார்களானால் அங்கு நல்ல கொழுத்த பன்றிக் குட்டிகள் கொண்டு வந்திருந்ததைப் பார்த்திருக்கலாம். அது வேகமாக வளருகிறது, பெருகுகின்றது, பல பேர்கள் இதை உணவுக்காகவே பெருமளவு வைத்துக் கொள்ளலாம் என்றுகூடக் கூறியிருக்கிறார்கள். அதற்காக அரசாங்கத்தினுடைய உதவி கிடைப்பதற்கும் வழி செய்யப்பட்டிருக்கிறது. மேலும் கனம் நல்லசிவம் அவர்கள் சொன்னார்கள், நீர்ப்பாசன விஷயத்தில் மிகவும் சிக்கனம் தேவை என்று. எனக்கு இந்த யோசனை நீண்ட காலமாகவே இருந்து வருகிறது. அதிலும் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. இதை உடனடியாகவே செய்துவிட முடியாது. நல்ல முறையில் ஆராய்ச்சி செய்து பார்த்து அதன்மீது தான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. அதிலும் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. அகில இந்திய ரீதியில் ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது. பொதுவாக விவசாய இலாகா, சீரிய முறையில் தொண்டாற்றி வருகிறது என்பதை கனம் அங்கத்தினர்கள் ஒப்புக் கொள்வார்கள். அதற்காக நான் அவர்களைப் புகழ வேண்டியதில்லை. ஆனால் பொதுவாக மக்களுடைய ஆதரவை பெற்று முன்னேற்றத்துடன் வேலை செய்து

[Sri M. Bhakthavatsalam] [11th March 1961

வருகிறது என்று அங்கத்தினர்கள் உணர்வார்கள். நாம் பல திட்டங்களைப் போடுகிறோம். அதிலிருக்கின்ற லட்சியத்தை அடைவதற்காகத் திட்டங்களை நிறைவேற்றுகிறோம். சில சமயம் லட்சியம் ஈடேறுவதில்லை. எந்த வகையில் லட்சியத்தை அடையத் தவறி விட்டோம் என்பதை நாம் ஆராய வேண்டியிருக்கிறது. அந்த முறையில் நாம் பல புள்ளி விவரங்களைக் கொடுக்க வேண்டியிருக்கிறது. உணவு உற்பத்தி விஷயத்தில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் 53 லட்சம் டன் உற்பத்தியாகும் என்று சொல்லியிருக்கிறோம். இதில் இப்போது 44 லட்சம் டன் தானே உற்பத்தியாகி இருக்கிறது, எப்படி பாக்கி எட்டு அல்லது ஒன்பது லட்சம் டன்னையும் உற்பத்தி செய்ய முடியும் என்று கனம் அங்கத்தினர் ஒருவர் கேட்டார். கனம் அண்ணாமலை அவர்கள் தனது சொந்த அனுபவத்தை வைத்துக்கொண்டு மழை பெய்யவில்லை, அதன் காரணமாக உற்பத்தி பெருகாது என்று குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டது உண்மைதான். இருந்தாலும்கூட பொதுவாகச் சேர்த்துப் பார்க்கும்போது நிச்சயமாக இன்னும் உற்பத்தி பெருகும். (குறுக்கீடு) பட்ஜெட் உரைக்குப் பின்னால் தான் நான் சொல்லுகிறேன். ஒன்பது லட்சம் டன் நிச்சயமாக உற்பத்தியாகும். கையில் இருக்கும் புள்ளிவிவரத்தை வைத்துக் கொண்டுதான் சொல்லுகிறேன். எப்படியும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட கால முடிவில் 53 லட்சம் டன் உற்பத்தியாகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்போதுள்ள நிலைமையை எடுத்துக் கொண்டாலும் இரண்டு மூன்று லட்சம் டன் கேரளாவுக்குப் போனாலும்கூட, நம்மிடத்தில் போதிய அளவுக்கு உணவு தானியம் இருந்து கொண்டிருக்கிறது. விலை அதிகமாயிருக்கிறதே தவிர பற்றாக்குறை இல்லை. ரசாயன உரத்தைப் பொறுத்த அளவில் கனம் நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மைனர் இரிக்கேஷனுக்கு இவ்வளவு, மேஜர் இரிக்கேஷனுக்கு இவ்வளவு, ரசாயன உரத்திற்கு இவ்வளவு என்ற வகையில்தான் நாம் செலவு செய்யக் கூடியதை மதிப்பிடுகிறோம். ஒரு இனத்திற்கு என்று தனியாக ஒதுக்குவதில்லை. மண் அரிப்புத் திட்ட உத்தேசம்கூட குறைந்து போய்விட்டது என்று சொன்னார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நம்முடைய லட்சியம் என்னவென்றால் இதில் 1 லட்சத்தி 900 ஏக்கர் என்று டார்ஜெட் போட்டிருக்கிறோம். இதற்காகச் செலவுக்கு மதிப்பிட்ட ரூபாய் ஒரு கோடி 20 ஆயிரம். ஆனால் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1960 செப்டம்பர் 30-ம் தேதி வரை நாம் எவ்வளவு சாதித்திருக்கிறோம் என்று பார்த்தால் 1 லட்சத்தி 6,838 ஏக்கர் என்று சாதித்திருக்கிறோம். ஏறக்குறைய 6,000 ஏக்கர் அதிக அளவாகவே இருக்கிறது. இதற்கான செலவு 74 லட்சத்து 16 ஆயிரம் ரூபாய்தான். செலவு குறைந்து சாதனை பெருகியிருக்கிறது என்றால் அதை மன்றத்திலுள்ள அங்கத்தினர்கள் வரவேற்பார்கள். அதே போன்று ரசாயன உரத்திற்கு நமக்கு அதிகமாக அந்நிய நாட்டு



11th March 1961] [Sri M. Bhakthavatsalam]

செலாவணித் தேவையிருக்கிறது. இதை அதிகப்படுத்த வேண்டும் என்பதை மத்திய அரசாங்கத்தின் உணவு-விவசாய இலாகா ஒப்புக் கொண்டிருக்கிறது. இந்த வகையில் உணவுப் பொருள்களை நாம் எந்த அளவுக்கு வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்கிறோமோ அந்த அளவுக்கு ரசாயன உரத்திற்காக அந்நிய நாட்டுச் செலாவணி ஒதுக்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். நாம் சர்க்கரை உற்பத்தியை மேலும் மேலும் பெருக்கிக் கொண்டிருக்கிறோம். இது இப்படியே போய்க் கொண்டிருந்தால் நாம் எதிர்பார்ப்பது நிறைவேறுமா என்று கனம் அன்பழகன் அவர்கள் கேட்டார்கள். ரசாயன உரத்தை அதிகப்படுத்துவதற்காக நாம் வேண்டிய முயற்சிகள் எடுத்திருக்கிறோம். இப்போது இரண்டு ரசாயன உற்பத்தி லைசன்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒன்று தூத்துக்குடியிலும், மற்றொன்று எண்ணூரிலும் அமைக்கப்படும். அந்நிய நாட்டிலிருந்து 'செங்கற்பட்டு பக்கத்தில் ஒரு தொழிற்சாலையை அமைப்பதற்கு அனுமதி தாருங்கள், உங்கள் நிபந்தனைபடியே ஒரு நைட்ரஜன் பெர்டிலைசர் ஏற்படுத்துகின்றோம்' என்று கேட்கிறார்கள். இது மத்திய அரசாங்கமும் இந்த அரசாங்கமும் கலந்து ஆலோசித்து முடிவு செய்ய வேண்டிய விஷயம். அதோடு சூப்பர் பாஸ்பேட் தொழிற்சாலை அமைப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த முறையில் ரசாயன உரம் முன்பு இருந்ததை விட ஓரளவுக்கு அதிகமாகக் கிடைக்கும். அதோடு இப்போது உரங்கள் சரியான முறையில் விநியோகம் செய்யப்படுவதில்லை என்று திரு. அன்பழகன் அவர்கள் சொன்னார்கள். எங்கு தவறுதல் நடக்கிறதோ, அதைப் பற்றி அரசாங்கத்திற்குத் தெரியும்போது, அதன்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு கவனிக்கப்பட்டு வருகிறது. அதோடு பாண்டிச்சேரி, சிந்தூர் முதலிய இடங்களுக்குக் கொண்டு போகப்படுகிறது என்றும் சொன்னார்கள். இதைத் தடுக்கவேண்டும் என்று மத்திய அரசாங்கத்தினிடம் சொன்னோம். அவர்களும் ஏற்றுக் கொண்டார்கள். இதற்குக் காரணம் பற்றாக்குறை இருப்பதுதான். அதற்காக கலப்படம் இருக்கட்டும் என்றோ அல்லது பற்றாக்குறை இருந்து கொண்டு இருக்கட்டும் என்றோ சொல்லவில்லை. இப்போது நான் என்னிடமுள்ள தகவல்களின்படி, கலப்படம் செய்தவர்களின் பேரில் ஆறு, ஏழு கேஸ்கள் போடப்பட்டிருக்கின்றன. இவர்கள் ஃபர்டிலைஸர் கண்ட்ரோல் ஆர்டர்ஸை மீறி குற்றம் செய்தவர்கள். புகார்கள் விசாரிக்கப்படுகின்றன. கேஸும் போடுகிறோம். அது கோர்ட்டிற்குப் போய் கோர்ட்டார் விசாரித்து முடிவு செய்ய வேண்டும்.

ஹையர் பர்சேஸ் ஸ்கீமிலே டிராக்டர்கள் கிடைக்கவில்லை என்று குறிப்பிடப்பட்டது. இப்போது ஒரு உத்திரவு போடப்பட்டிருக்கிறது. விவசாயிகள் எந்த டிராக்டரை வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம். இந்த நாட்டிலேயே இப்போது டிராக்டர்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. மேலும் உற்பத்தி செய்ய இன்னும் தொழிற்சாலைகள் ஏற்படப் போகின்றன. விவசா

யிகள் என்ன டிராக்டர் வேண்டுமானாலும் இந்த நாட்டில் கிடைக்கிற டிராக்டரை வாங்கிக் கொள்ளலாம். முன்பு இருந்த குறைபாடு இப்போது இல்லை. விவசாயி பார்த்து ஹையர் பர்சேஸ் ஸ்கீம்படி இந்த டிராக்டர் வாங்கிக் கொடுங்கள் என்று கேட்டால் அவ்வாறு செய்யலாம் என்ற முறை இப்போது கையாளப்படுகிறது.

இவ்வாறு எத்தனையோ சங்கடங்கள் இருக்கின்றன. இருந்தாலும் விவசாயத்தை அபிவிருத்தி செய்து கொண்டுதான் இருக்கிறோம். சங்கடங்களைக் கூடிய வரையில் சமாளித்து அபிவிருத்தி அடைந்து கொண்டிருக்கிறோம். இப்போது மற்ற நாடுகளில்கூட பார்க்கிறோம். தொழில் வளர்ச்சியில் முன்னணியில் நிற்கும் நாடுகளிலும்கூட விவசாயத்தில் கவனம் செலுத்த வேண்டுமென்று உணர்ந்து கவனம் செலுத்தி வருகிறார்கள்.

இன்றைக்கு அமெரிக்காவை எடுத்துக் கொண்டால் 100-க்கு 12 பேர்கள்தான் விவசாயத்தை நம்பி வாழ்கின்றார்கள். பன்னிரண்டு பேர்கள்தான் ஈடுபட்டிருந்தாலும் தங்கள் நாட்டுத் தேவையைப் போல் இரட்டிப்பு மடங்கு அவர்கள் உற்பத்தி செய்கிறார்கள். அப்படிச் செய்தாலும் மேலும் மேலும் ஆராய்ச்சி செய்கிறார்கள்—கவனம் செலுத்தி வருகிறார்கள். உற்பத்தி அதிகமாக இருக்கிறதே என்ன செய்வது என்றுகூடச் சிலசமயம் கவலைப்படுகிறார்கள். இப்போது ரஷ்யாவில்—நான் கூடப் பார்த்தேன்—சிறந்த ஆராய்ச்சி செய்கிறார்கள். பிரசித்தி பெற்ற விஞ்ஞானிகள் இருக்கிறார்கள், பல கல்லூரிகள் இருக்கின்றன, நல்ல முயற்சி செய்கிறார்கள். இருந்தாலும் அவர்களில் 100-க்கு 45 பேர்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நிலம் ஏராளமாக இருக்கிறது—தலைக்கு 12 ஏக்கர் வரை நிலம் இருக்கும். அதோடு ராட்சஸ யந்திரங்களும் இருக்கின்றன. நிலங்களை நல்ல முறையில் திருத்திக் கொண்டு வரவேண்டுமென்று பெருமுயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். 100-க்கு 45 பேர்கள் ஈடுபட்டிருந்தும் தங்கள் நாட்டுக்குத் தேவையானதற்கு மேல் உற்பத்தி செய்து வெளியே ஏற்றுமதி செய்கிறார்களா என்று தெரியவில்லை. அவர்கள் சாதனைகள் இன்னும் திருப்தியளிக்கவில்லை. அதிகமான நிலத்தைத் திருத்தி விவசாய உற்பத்தியைப் போதிய அளவு பெருக்கவில்லை என்று ஸ்ரீ குருஷேவ் அவர்களுக்கே அதிருப்தி ஏற்பட்டு, அதன் காரணமாக சில மந்திரிகளையேகூட மாற்றினார்கள் என்ற செய்தியை நாம் எல்லோரும் பார்த்தோம்.

சீனாவை எடுத்துக்கொண்டால் 1 ஏக்கருக்கு 360 டன் விளைவிக்கிறார்கள் என்று முதலில் சொன்னார்கள். அதைப் போய்ப் பார்த்து வருவதற்கு நம் நாட்டிலிருந்து ஒரு தூதுகோஷ்டியும் சென்றது. இன்றைக்கு நாம் பார்க்கிறோம், அங்கே உணவுப் பஞ்சம்! இன்றைக்கு ரஷ்யா தொழில் வளர்ச்சியில் முன்னணியில் இருக்கிறது. நமக்குக்கூட பல உதவிகளைச் செய்கிறது. நமக்குப் பல தொழில்களை அமைத்துக் கொடுக்கிறது. அப்படி இருந்தாலும் விவசாயத்தில் திருப்தியான அளவில் சாதிக்க முடியவில்லை. விவசாய முன்னேற்றம் சுலபமானதல்ல. இதையெல்லாம்



பார்த்த பிறகு கனம் அங்கத்தினர்களே உணர்வார்கள். 10—12 ஆண்டுகளில் இரு ஐந்தாண்டுத் திட்டங்களினால் நாம் அடைந்திருக்கின்ற சாதனையைக் குறித்து நாம் பெருமைப் படலாம் வருங்காலத்தில் மகத்தான அளவுக்கு நம்முடைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளலாம் என்று நம்பிக்கை அளிக்கும் அளவில் சிறந்த முறையில் மக்கள் ஈடுபட்டு விவசாய இலாகாவும், மற்ற இலாகாக்களும் எல்லோரும் உற்சாகமாக உழைத்து சாதனைகளைச் சாதித்திருக்கிறோம் என்றுதான் சொல்ல வேண்டும்.

கனம் அங்கத்தினர் சீனிவாச அய்யர் அவர்கள் குறிப்பிட்டது பற்றி, நாம் எவ்வளவு சாதித்திருக்கிறோம் என்று காட்டக் கூடிய முறையில் சில புள்ளிவிவரங்களைச் சொல்லுகிறேன். முதலில் சென்னையில் ஒரு ஏக்கர் நிலத்திலிருந்து உற்பத்தியாகக் கூடிய பொருள்களின் சராசரியையும், அதற்கான அகில இந்திய சராசரியையும் குறிப்பிட விரும்புகிறேன்.

அரிசியை எடுத்துக் கொண்டால் சென்னையில் சராசரி ஏக்கர் ஒன்றுக்கு 1,332 ராத்தல்—ஆனால் அகில இந்திய சராசரி 808 ராத்தல்தான். அதேமாதிரி பருத்தியை எடுத்துக் கொண்டால் நமமுடைய மாநிலத்தின் சராசரி 139 லிண்ட்ஸ்—ஆனால் அகில இந்திய சராசரி 78 லிண்ட்ஸ் தான். நிலக்கடலை உற்பத்தியில் நம் ராஜ்ய சராசரி ஏக்கர் ஒன்றுக்கு 1,081 ராத்தல். அகில இந்திய சராசரியோ 643 ராத்தல்தான். அடுத்தாற்போல் சோளத்தை எடுத்துக் கொண்டு பார்த்தால் தமிழ்நாட்டின் சராசரி ஏக்கர் ஒன்றுக்கு 687 ராத்தல், ஆனால் அகில இந்திய சராசரி 424 ராத்தல் தான். கம்பும் அப்படியே—நம் சராசரி 550 ராத்தல்—அகில இந்திய சராசரி 292 ராத்தல். கேழ்வரகு, நம் சராசரி 865 ராத்தல், அகில இந்திய சராசரியோ 671 ராத்தல் மட்டும்தான்.

ஆக இப்போது மொத்தத்தில் உற்பத்தி ஏக்கர் ஒன்றுக்குக் கணக்குப் போட்டுப் பார்த்தாலும், தமிழ்நாடு ராஜ்யத்தில் மதிப்பு 183 ரூபாய் ஆகிறது. கனம் அங்கத்தினர் திரு பழனிசாமி அவர்களுக்கு இதெல்லாம் தெரியாததல்ல. அவர்களுக்கு எவ்வளவோ புள்ளி விவரங்களெல்லாம் தெரியும். இருந்தாலும் இதையும் கொஞ்சம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்—நம் மாநிலத்தில் உற்பத்தி ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 183. ஆனால் அகில இந்தியாவின் புரொடக்ட்டிவிட்டி ரூ. 152 தான். கரும்பு சாகுபடியைப் பற்றியும் குறிப்பிடலாம். அரிசி குறைகிறதே கரும்பு வருவதினால் என்று யாரும் கவலைப்பட வேண்டாம். அரிசி விளைச்சல் அதிகமாகவே இருக்கிறது—இன்னமும் அதிகப்படுத்துகிறோம். விவசாயிக்குக் கட்டுப்படியாக வேண்டுமென்றால் அவன் பல பயிர்களை இட வேண்டும்—அவனுக்கு அதற்கான வசதிகளை நாம் அளிப்போம். விலை மதிப்புள்ள பயிர்களுள்ள நில விஸ்தீரணம், 1955-56-ல் சென்னையில் கரும்புப் பயிர் 100-க்கு 7 பங்கு—இது 1955-56-ல்; இப்போது கரும்பு சாகுபடி இன்னும் அதிகமாக இருக்கிறது—அப்படி 7% இருக்கும்போது அகில இந்தியாவை எடுத்துக் கொண்டு

பார்த்தால் 1.2% தான். அரிசியை எடுத்துக் கொண்டால் இங்கே 31%—அகில இந்தியாவில் 22% தான். நிலக்கடலை சம்பந்தப்பட்ட மட்டில் நம் நாட்டில் 11%—அகில இந்தியாவில் 3.5% தான். பருத்தி—எல்லோருக்கும் அத்தியாவசியமானது—அதை எடுத்துக் கொண்டாலும் நம் சராசரியும் அகில இந்திய சராசரியும் ஒரே மாதிரி இருக்கிறது. விவசாயத்திற்குத் தேவையான நீர்ப்பாசனத்தை எடுத்துக் கொண்டால் சென்னையில் 38%—36% என்று சில பேர்கள் சொல்லுகிறார்கள், தஞ்சையை எடுத்துக் கொண்டால் 50%-ஆக இருக்கிறது—ஆனால் அகில இந்திய சராசரி 17.6% தான். நாம் நீர்ப்பாசன வசதிகளை நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டு வருகிறோம். இதுபற்றி கணக்குச் சொல்லுகிறார்கள். நம் மாநிலத்தில் 33,953 கண்மாய்கள் இருக்கின்றன. அதில் 10 ஏக்கருக்கு உட்பட்டதே 3,332. 10-லிருந்து 200 ஏக்கர் வரையில் உள்ளது 22,924. ஜமீன் பிரதேசத்தில் வந்தது 7,707 மொத்த இர்ரிகேஷனிலே அதாவது 22 லட்சம் ஏக்கரிலே, கெனால் இர்ரிகேஷன் 20 லட்சம் ஏக்கராகும். அம்மாதிரி இல்லாமல் கிணறு மூலமாக நீர்ப்பாசனம் செய்வது—மொத்தம் 8 லட்சம் கிணறுகள் இருக்கின்றது. 10-12 ஆண்டுகளில் எத்தனையோ கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. அவைகளின் மூலமாக இர்ரிகேட் செய்யப்படுவது—14 லட்சம் ஏக்கர்.

இதேமாதிரி இன்னொரு அனுகூலமும் இருக்கிறது. விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்களைப் பொறுத்த வரையில் கணக்குப் போட்டுப் பார்த்தால் நம் நாட்டில் ஈடுபட்டுள்ளவர்கள் 63%—ஆனால் இந்தியாவின் சராசரியோ 70% ஆகும். இத்தனை சாதனைகள் இருக்கின்றன.

* SRI K. ANBAZHAGAN: அமைச்சர் அவர்கள் அகில இந்திய சராசரி விவசாயப் புள்ளிவிவரத்தைத் தமிழ்நாட்டு புள்ளிவிவரத்தோடு ஒப்பிட்டுச் சொல்லுகிறார்கள். அதே நேரத்தில் அகில இந்தியாவில் 1 சதுர மைலுக்கு எத்தனை மக்கள் இருக்கிறார்கள், நம மாநிலத்தில் மக்கள் எண்ணிக்கை எவ்வளவு என்ற . . . . . .

* THE HON. SRI M. BHAKTAVATSALAM: **நான்** இனி குறிப்பிடப் போவதை எதிர்பார்த்து விவரம் கேட்டார். இப்போது நாம் எதை எதை எப்படிச் சாதித்திருக்கிறோம் என்று சொன்னேன். ஆனால் இதிலே நம் மாகாணத்தைப் பொருத்த வரையில் சில சங்கடங்களும், கஷ்டங்களும், இடையூறுகளும் இருக்கின்றன என்றும் நான் சொன்னேன். இதில் முக்கியமாகச் சில கஷ்டங்கள் உள்ளதென்றும் நான் சொன்னேன். இப்போது சொன்னது பூராவும் தமிழ் நாட்டு மக்கள் எவ்வளவு தூரம் சாதித்திருக்கிறார்கள் என்பது. நம்முடைய இடையூறுக்கு முக்கியமான அடிப்படை ஜனத்தொகை. 1951-வது வருஷ ஜன சங்கியைப்படி ஒரு சதுரமைலுக்கு 597 பேர் நம் நாட்டிலே இருக்கிறார்கள். ஆனால் அகில இந்திய ரீதியிலே பார்த்தால், இதில் பாதிதான் இருக்கிறது. நமக்கு ஜன நெருக்கடி அதிகமாக இருக்கிறது.



இதோடு நாம் சாதித்துள்ளதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இதுவரை நாம் சாதித்தது போதவே போதாது. குறைவு தான். காரணம் ஜனத் தொகை பெரிய அளவில் பெருகியிருக்கிறது. அதற்குத் தான் இப்போது குடும்பக் கட்டுப்பாடு வற்புறுத்தப்பட்டு வருகிறது. அதுவும் செய்ய வேண்டியதுதான். அதல்லாமல் நாம் எவ்வளவு தான் விவசாயத்திலே கவனம் செலுத்தினாலும் போதிய பலன் ஏற்படாது. ஜனத்தொகைப் பெருக்குத் தான் நமக்குப் பெரிய இடையூறாக இருந்து வருகிறது. இதனால்தான் நம் வாழ்க்கைத் தரம் குறைகிறது. நம் ராஜ்யத்தில் 63 சதவிகிதம் தான் விவசாயத்தை நாடியவர்கள். ஆனால் இந்தியாவில் 70 சதவிகிதம். அதேபோல் தமிழ்நாட்டில் விவசாயம் செய்யக்கூடிய நிலம் பர் காபிடா—ஆள் ஒன்றுக்கு—71 செண்ட். அகில இந்திய ரீதியிலே பார்த்தால் 1.18 ஏக்கர் அதாவது 118 செண்ட். நமக்கோ 71 செண்ட் மட்டும் தான். அதேமாதிரி விவசாயப் பெருங்குடி மக்கள் என்று சொல்கிறோமே, அவ்வாறு சம்பாதிக்கிறவர்களுடைய கணக்கைப் பார்த்தால் 30% தான். ஆனால் அகில இந்திய ரீதியிலே சராசரி 44%. அங்கே ஜனத்தொகை குறைவாக இருக்கிறது. ஆனால் இதிலே பர் காபிடா வருவாயை எடுத்துக் கொண்டாலும், வடக்கு வாழ்கிறது என்று சொல்வதற்கில்லை. நாம் வளருவதாலேதான், இந்த ஜனத்தொகை பெருகுவதாலேதான் இந்தக் கஷ்டமான நிலை ஏற்படுகிறது. நம்முடைய தமிழ் நாட்டிலே பர் காபிடா வருமானம் 94 ரூபாய். அகில இந்தியாவில் 113 ரூபாய். நாம்தான் வளர்ந்து கொண்டு வருகிறோம். எனவே, நாம் விவசாயத்தை எப்படி மேலும் அபிவிருத்தி செய்வதென்று கவனிக்க வேண்டும். இதுவரை சாதித்துள்ளதைப் பற்றி நாம் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். எனினும், ஜனத்தொகை அடிப்படையில் பார்க்கும்போது நாம் இதுவரை சாதித்துள்ளது போதவே போதாதுதான். தவிர, பொருளாதார நிலை நம் நாட்டிலே உயரவேண்டுமானால், அமெரிக்காவைப் பார்த்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும். அவர்கள் தங்கள் தேவைக்கு மேல் அதிகமாக உற்பத்திச் செய்கிறார்கள். அப்படிச் செய்து அவைகளை எப்படி ஏற்றுமதிச் செய்வது என்பதிலேகூட சில சமயங்களில் அவர்கள் கஷ்டப்படுவதாகத் தெரிகிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நாம் 16 லட்சம் அளவுக்கு உற்பத்தி செய்ய இருக்கிறோம். ஜனத்தொகை அளவிலே இதைப் பார்க்கின்றபோது இது குறைவுதான். இதை எப்படிச் செய்வது என்பதிலேதான் மிகவும் கவனம் செலுத்த வேண்டும்.

வேறொரு கூட்டத்திலே இந்த நில உச்ச வரம்பைப் பற்றிச் சொன்னேன். அதையேதான் கனம் சர்க்கார் கொரடா அவர்களும் கம்பரை மேற்கோளாகக் காட்டிப் பேசினார்கள். நிலம் குறைவாக வைத்துக் கொண்டிருப்பவர்கள்தான் அதிலே அதிகமான கவனத்தைச் செலுத்தி, விளைச்சலைப் பெருக்க முடியும். ஆனால்

கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர் ஒருவர் இதெல்லாம் எங்கே வரப் போகிறது என்னும் பொருள்பட சொன்னார்கள். இதைச் சட்டமாகவே ஆக்கப் போவதில்லை என்றும் சொன்னார். ஆனால் நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏப்ரல் மாத இறுதியில் முடிவெடுப்பதற்காகக் கூட்டுக் கமிட்டி கூடும். அப்படி எடுக்கக் கூடிய முடிவு ஜூலை அல்லது ஆகஸ்ட் மாதத்திலே சட்டமாக்கப்படலாம் என்றுதான் நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இப்படியெல்லாம் நல்ல முறையிலே விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டும், இன்னும் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை என்று குறை கூறப்படுகிறது. இப்போது ரூரல் யூனிவர்சிடி ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் செய்யப்பட்டு வருகிறது. இதற்கு அமெரிக்க நிபுணர்களைக் கலந்தாலோசித்ததில், அதைக் கோயம்முத்தூரிலே ஏற்படுத்தலாம் என்றும், அங்குதான் இதற்கான பாரம்பரியமான வாய்ப்பு இருக்கிறது என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் உத்தியோகத்திற்கு என்று ஒரு சர்வகலாசாலை நடத்தினால் அது போதாது. அசல், உண்மையான விவசாயியின் அறிவு வளர்ச்சிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். கனம் நிதி அமைச்சர் அவர்கள் இங்கிலாந்து முதலிய நாடுகளுக்குச் சென்றபோது பல விவசாயப் பள்ளிக்கூடங்களைப் பார்த்துவிட்டு வந்தார். அந்தப் பள்ளிக்கூடங்களிலே அதிகம் படித்தவர்களுக்கு அங்கு பயிற்சி கொடுப்பதில்லை. உண்மையிலேயே விவசாயியாக இருந்து, பயிற்சிக்குப் பின் பண்ணைக்குச் சென்று வேலை செய்யக்கூடியவர்களுக்குப் பயிற்சி அளிக்கிறார்கள். இதுபோன்ற கருத்தைத்தான் நானும் ரொம்ப நாட்களாக சிந்தித்துக் கொண்டு வந்திருக்கிறேன். இந்த ஆண்டிலே இப்படிப் பட்டவர்களுக்குப் பயிற்சி கொடுப்பதற்காகக் குறைந்தபட்சம் 4, 5 பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்த யோசனை செய்யப்பட்டு வருகிறது. இந்தப் பயிற்சிப் பள்ளிகளிலே உத்தியோகத்திற்காகவோ அல்லது அதிகம் படித்தவர்களுக்கோ பயிற்சி அளிக்கப் போவதில்லை. உண்மையிலே கிராமத்திற்குச் சென்று வேலை செய்யக்கூடியவர்களுக்கு, அவர்கள் ஓரளவு படித்திருந்தாலும் அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்குத் திட்டமிட்டு வருகிறோம். இம் மாதிரியான விவசாயப் பள்ளிகள் ஒவ்வொரு ஜில்லாவிற்கும் வேண்டியிருக்கும். ஆனால் உடனடியாக 4 பள்ளிகளை ஏற்படுத்தலாம் என்று திட்டமிட்டு வருகிறோம். முடிந்தால் 6 பள்ளிகள் வருகிற ஆண்டில் ஏற்படுத்தலாம். ஆகவே இந்தப் பயிற்சிப் பள்ளிகளிலே உண்மையிலேயே கிராமத்திற்குச் சென்று விவசாயத்தில் ஈடுபடக் கூடிய விவசாயிக்கு மட்டும் பயிற்சி அளிக்கப்படும்.

அதோடு விவசாயத்திற்குரிய ஒரு உபதொழிலையும் வளர்க்க வேண்டும். அந்தக் கைத்தொழிலுக்குத்தான் அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் என்று பெயர். இம்மாதிரியான உபதொழில் அமைப்பது மிகவும் முக்கியமானது. விவசாயத்திற்கு உப



தொழிலாகச் சர்க்கரை ஆலை அமைக்கப்படுகிறது. அப்படி அமைப்பதின் மூலம் ஓரளவு விவசாயத் தொழிலிலேயே ஈடுபட்டிருப்பவர்களுக்கு அது உதவியாக இருக்கும். விவசாயத்திலே வருமானம் போதாது என்று கூறுபவர்களுக்கு, அதிகப்படியான வருமானம் கிடைப்பதற்காகவே இதில் இப்போது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இதிலே மேலும் நன்மைகள் ஏற்படுவதற்கு நாம் எல்லோரும் சேர்ந்து கவனம் செலுத்தக்கூடியவர்களாக இருக்கிறோம்.

விவசாயத்திலே வேலை செய்யக் கூடியவர்களுக்கு ஊதியம் கொடுப்பதைப் பற்றி ஒரு அங்கத்தினர் எப்போதோ வெளியிட்ட புள்ளி விவரங்களை வைத்துக் கொண்டு பேசினார். அதன்பேரில் 51-லே எவ்வளவு ஊதியம், அதற்குப் பிறகு எவ்வளவு ஆள் குறைந்திருக்கிறது என்பதையெல்லாம் பரிசிலனை செய்து பார்த்தேன். 51-லே அதிகமாக இருந்தது, 56-57-லே குறைந்திருக்கிறது. ஆனால் இந்தக் குறைவு நம் ராஜ்யத்திலே மட்டும் ஏற்படவில்லை. மற்ற ராஜ்யங்களிலும் இதே நிலைமை ஏற்பட்டிருக்கிறது. காரணம் என்னவென்று பரிசீலனை செய்து பார்த்ததில், எங்களுக்குத் தெரிந்தது. அப்போது பற்றாக்குறை அதிகமாக இருந்திருக்கிறது. பங்கீடு முறை கையாளப்பட்ட சமயம். கள்ள மார்க்கட்டில் அரிசியை விற்றுக் கொண்டிருந்த காலம். அப்படி விற்றுக் கொண்டிருந்ததினாலே அப்போது இந்த விலையேற்றம் ஏறியிருக்கிறது. இது நம்முடைய ராஜ்யத்திலேயும், மற்றெல்லா ராஜ்யங்களிலேயும் ஒரே மாதிரியாக இருந்திருக்கிறது. இந்நிலை 56-57-லே மட்டும்தான் இருந்திருக்கிறது. ஆனால் 60-ல் பார்த்தால் 51-ல் இருந்த நிலைக்கே போய் இருக்கிறது. 60-ல் ஆண்களுக்கு ஊதியத்தைப் பார்த்தால் கூடிப் போய் இருக்கிறது. பெண்களைப் பொருத்தவரையில், ஆண்களைவிடக் கொஞ்சம் அதிகமாகவே போய் இருக்கிறது.

கரும்பைப் பற்றிச் சொன்னேன். சிலர் கரும்பாலையைக் கூட்டுறவு முறையில் ஏற்படுத்தலாம் என்று கூறுகிறார்கள். சிலர் தனிப்பட்ட முறையில் ஏற்படுத்தலாம் என்று கூறுகிறார்கள். இரண்டும் அவசியம் தான். மொத்தத்தில் கரும்பு உற்பத்தி செய்கிறவர்கள் பயனடைய வேண்டுமென்றால், கரும்பாலை இருக்க வேண்டியது அவசியம். வெல்லத்திற்கு இப்போது கிராக்கி யில்லை. திடீரென்று அதன் ஏற்றுமதியும் குறைந்து விடுகிறது. மக்களும் தங்களுக்கு வெள்ளைச் சர்க்கரை தான் வேண்டுமென்று கேட்கிறார்கள். கிராமத்திலேகூட இன்று வெள்ளைச் சர்க்கரைதான் தேவைப் படுகிறது. அப்படி யென்றால் இந்தச் சர்க்கரையின் உற்பத்தியை நாம் பெருக்க வேண்டியிருக்கிறது. ஆனால் இப்போது சர்க்கரைக்குப் பற்றாக்குறைகூட இல்லை. சர்க்கரையை அதிகமாக உற்பத்தி செய்து நாம் ஏற்றுமதியும் செய்ய வேண்டும். அப்படி ஏற்றுமதி செய்தால் நாட்டினுடைய வளமும் பெருகும். பொருளாதாரமும் வளரும். அதோடு அந்நிய நாட்டுச் செலவாணியும்

நமக்கு அதிகமாகக் கிடைக்கும். இப்போதுள்ள அளவில் 5 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்ய வேண்டும் என்று விரும்பப் படுகிறது. மத்திய அரசாங்கமும் அப்படி ஏற்றுமதி செய்து அதிலிருந்து வரக்கூடிய அந்நிய செலவாணியின் அளவுக்கு நாம் உரத்தை இறக்குமதி செய்து, விவசாயத்தைப் பெருக்கிக் கொள்ளலாம் என்றும் சொல்கிறார்கள். ஆனால் அப்படி ஏற்றுமதி செய்வதிலே நமக்குச் சில கஷ்டங்கள் இருக்கிறது. வெளி நாடுகளில் விற்கக்கூடிய சர்க்கரை நம் நாட்டுச் சர்க்கரையை விட விலை குறைவாக இருக்கிறது. நாம் சர்க்கரை விலையைக் குறைத்து விற்றால், அமெரிக்காகூட க்யூபா சர்க்கரையைக் குறைத்துக் கொண்டு நம்முடைய சர்க்கரையை வாங்கக் கூடும். ஆனால் இதற்கு நாம் எல்லோரும் சேர்ந்து கொண்டு பரிசீலனை செய்து ஒரு முடிவு செய்ய வேண்டும். ஆனால் விலையைக் குறைப்பது எப்படி? கரும்பு விலையும் அதிகமாக இருக்கிறது. உற்பத்திச் செலவும் அதிகமாகிறது என்று சொல்லப்படுகிறது. அதோடு பாக்டரி உற்பத்திச் செலவும் அதிகமாகிறது என்று அவர்களால் கூறப்படுகிறது. அதே சமயத்தில் பாக்டரிகளுக்கு அதிக லாபம் கிடைக்கிறது என்றும் சொல்லலாம் அல்லது கரும்பு விலையும் அதிகமாக இருக்கிறது என்றும் சொல்லலாம். ஆனால் இதை மட்டும் சொல்லிக் கொண்டிருப்பதில் பயனில்லை. நீண்டகாலமாக யோசித்துக் கொண்டிருப்பதிலும் பயனில்லை. இன்று வெளிநாட்டிலே பற்றாக்குறை அதிகமாக இருப்பதால், விலையைக் குறைத்து உற்பத்தியை நாம் அதிகரிக்க வேண்டும். அப்படி உற்பத்தியைப் பெருக்கி ஏற்றுமதி செய்வதின் மூலமாக நமக்கு அந்நியச் செலவாணியும் கிடைக்கும். பொருளாதார வளர்ச்சியும் நாட்டிலே ஏற்படும். அப்படியே விலையைக் குறைப்பதற்காக சப்சிடி கொடுப்பதாக இருந்தாலும், எவ்வளவு காலத்திற்கு இந்த சப்சிடி கொடுப்பது? தற்காலிகமாக வேண்டுமானால், ஏற்றுமதியைப் பொருத்த அளவில் சப்சிடி கொடுக்கலாம். இதைப்பற்றி இங்கிருக்கக்கூடிய எல்லோரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். விலையைக் குறைப்பது கஷ்டம் என்று சொல்லிக் கொண்டிருப்பதில் பிரயோஜனமில்லை. ஆனால் விவசாயிகளுக்கும் கட்டுப்படியாக வேண்டும். ஆகவே அவரவர்கள் கொஞ்சம் லாபத்திலே குறைத்துக் கொள்ள வேண்டும். உற்பத்தியை அதே சமயத்தில் பெருக்க வேண்டும். அப்போது தான் ஏற்றுமதியைப் பெருக்க முடியும். ஆகவே இந்தப் பிரச்னைகளையெல்லாம் நாம் நன்கு ஆராய்ந்து, எப்படி ஒரு முடிவுக்கு வருவது என்பதைப் பற்றி நாம் யோசிக்க வேண்டியது அவசியம்.

விவசாயக் கருவிகளைப் பற்றிச் சொன்னார்கள். நவீன விவசாயக் கருவிகளை உபயோகப்படுத்துவது பற்றி நமது பிரதம மந்திரி அவர்கள் கூட அடிக்கடி வற்புறுத்தி வருகிறார்கள். கோவையில் நவீனக் கருவிகள் இருக்கின்றன. ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு முக்கியமான இடத்திலே இந்த நவீன விவசாயக் கருவிகளை வைத்து ஒரு நிரந்தரமான பொருட்காட்சி வைக்க வேண்டும். அம்மாதிரி செய்து விவசாயக் கருவிகளை எல்லோரும் வாங்கச்



செய்யவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் உத்தேசம். சென்ற ஆண்டில் டெல்லியில் உலகப் பொருட்காட்சி ஒன்று நடந்தது. அதே மாதிரி ஒவ்வொரு வருஷமும் ஒவ்வொரு ராஜ்யத்தில் ஒரு விவசாயப் பொருட்காட்சி நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு கல்கத்தாவில் இம்மாதிரி எக்ஸிபிஷன் நடந்தது. இன்னும் 2, 3 நாட்களில் முடியப் போகிறது. மிகச் சிறந்த வகையிலே அது நடந்தது. நம்முடைய ராஜ்யமும் அதில் பங்கு எடுத்துக் கொண்டது. நம்முடைய ராஜ்யத்தினுடைய ஸ்டாலைப் பார்த்தவர்கள் எல்லோரும் அதைப் பாராட்டி புகழ்ந்திருக்கிறார்கள் என்று எனக்குச் செய்தி வந்திருக்கிறது. அடுத்த ஆண்டில் சென்னையில் வைப்பதாக உத்தேசம். சென்னையிலோ அல்லது சென்னைக்குப் பக்கத்திலே ஒரு சௌகரியமான இடத்தில் அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். முக்கியமாக விவசாயத்தில் கவனம் செலுத்தி சிறந்த முன்னேற்றம் அடைந்த அன்னிய நாடுகள் கூட, அதில் கலந்து கொள்ளத் தயாராக இருக்கின்றன. கல்கத்தா எக்ஸிபிஷனிலும் சில அன்னிய நாடுகள் கலந்து கொண்டன. சென்னையிலோ, அதற்குப் பக்கத்திலோ ஒரு சிறந்த இடத்தில் அம்மாதிரி ஒரு பொருள்காட்சி அமைப்பதற்குக் கவனம் செலுத்தி வருகிறோம்.

அன்று விடை அளிக்கும்பொழுது கேள்வி நேரத்தில் சில ஜப்பான் நிபுணர்களின் உதவியைக் கொண்டு ஒரு 'பைலட் ப்ராஜக்ட்' ஏற்படுத்தப் போவதாகச் சொன்னேன். ஜப்பானில் சிறந்த முறையில் அவர்கள் சாகுபடி செய்கிறார்கள். நல்ல சாதனை சாதிக்கிறார்கள். ஜப்பான் முறையில் புதிய கருவிகளை உபயோகப்படுத்தி ஒரு இடத்தில் 25 ஏக்கர் நிலத்தை எடுத்து, அங்கே சாகுபடி செய்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றி, அதை எல்லோரும் பின்பற்றச் செய்ய வேண்டும். ஐந்தாறு நிபுணர்கள் இங்கு வந்திருக்கிறார்கள். அவர்களிடம் நேற்று முன்தினம் நான் பேசிக் கொண்டிருந்தேன். சீக்கிரம் அந்த 'ப்ராஜக்ட்' எடுத்துக் கொள்ளப்படும். தஞ்சாவூர் ஜில்லாவில் ஏற்படுத்துவதாக உத்தேசம். தஞ்சாவூர் ஜில்லா என்றால் அதிலே பாரபட்சம் ஒன்றுமில்லை. நீர்ப்பாசன வசதி இந்த பரீட்சார்த்த திட்டத்திற்கு வேண்டியிருக்கிறது. அதனால்தான் அங்கே முதலில் ஒரு 'பைலட் பிராஜக்ட்' ஏற்பத்தலாம் என்று உத்தேசம். நிபுணர்கள் தங்க நாம் வசதி தேடிக் கொடுக்கவேண்டும். மற்ற செலவுகளையெல்லாம் அவர்களே செய்து கொள்ளுகிறார்கள். சீக்கிரம் 2, 3 மாதங்களுக்குள் இந்த 'ப்ராஜக்ட்' ஏற்படுத்தப்படும்.

கனம் அங்கத்தினர் திரு. முத்தையா செட்டியார் அவர்கள் பேசும்பொழுது கூனூர் பொடானிகல் கார்டன்ஸைப் பற்றிச் சொன்னார்கள். அதைக் கவனிக்கவேண்டியதுதான். அங்கே ஒரு 'போமலாஜிகல் கார்டன்' இருக்கிறது. அதாவது பழத் தோட்டம். அதையும் கவனிக்க வேண்டும். கொடைக்கானலில் ஆப்பில் ஆராய்ச்சி நிலையம் ஒன்று ஏற்படுத்தியிருக்கிறோம். பெரிய

குளத்தில் 'ரீஜினல் புரூட் ரிஸர்ச்' ஸ்டேஷன் ஒன்று வைத்திருக்கிறோம். பழப் பயிர்களினால் நல்ல வருமானம் வரும். நான் முன்பே சொல்லியிருக்கிறேன். கொடி திராட்சை போட்டால் ஒரு ஏக்கருக்கு ரூ. 3,000, 4,000 வருமானம் வரும். ஒருவருக்கு 10 ஏக்கர் நிலம் இருந்தால், அதில் ஒரு ஏக்கர் 2 ஏக்கர் நல்ல பழத் தோட்டங்கள் ஏற்படுத்துவதற்குப் பயன்படுத்தினால் ஏராளமான வருமானம் வரும். எல்லோரும் சேர்ந்து பழங்களைச் சாகுபடி செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய அவா.

காடுகளைப் பற்றிச் சொன்னார்கள். சந்தன மரங்கள் இயற்கையாகவே உண்டானவை. அதற்கு நல்ல விலை கிடைக்கிறது. 'சாண்டல் ஆயில்' தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டுமென்று சிலர் யோசனை சொன்னார்கள். இப்பொழுது சந்தன மரத்தை விற்றாலும், ஒரு ஆயில் தொழிற்சாலை இருக்கிறது. அதை ஒருவர் நடத்துகிறார். நமக்கு நல்ல விலையும் வருகிறது. மைசூர் சர்க்கார் அவர்களுக்கே சொந்தமாக ஆயில் தொழிற்சாலை வைத்திருக்கிறார்கள். அதிலே அவர்கள் லாப நஷ்டம் பார்ப்பது இல்லை. நமக்கு இப்பொழுது லாபமும் வருகிறது. மைசூர் அரசாங்கத்தின் அனுபவத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்டு, இது விஷயமாக அவர்களுடன் கலந்து பேசி இதைப் பற்றி வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம் என்று இருக்கிறோம்.

சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களைப் பற்றி, ஏதோ இந்த இலாகாவா, அந்த இலாகாவா என்று தெரியவில்லை என்று சில அங்கத்தினர்கள் சொன்னார்கள். மத்திய அரசாங்க அமைச்சர் அவர்களிடத்திலேயே சொல்லியிருக்கிறேன். இந்த ராஜ்யத்தைப் பொறுத்தமட்டில் அம்மாதிரித் தகராறு ஒன்றும் இல்லை என்று. பல பிரிவுகளில் பரிசீலனை செய்யப்பட்டு திட்டங்கள் நடத்தப்படுவதால் தான் வேலை துரிதமாக நடந்து வருகிறது. அதிலும் சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தில், உணவு உற்பத்தி இலாகா திட்டத்தில் நாம் திட்டமிட்டிருந்த லட்சியத்திற்கு மேலே கூட செலவு செய்யப்பட்டிருக்கிறது. நம்முடைய ராஜ்யத்திலே உடையார்பாளையம் போன்ற இடத்தில் 'ஆர்டிஷியன் ஸ்பிரிங்ஸ்', அதாவது குழாய்க் கிணறுகள் தோண்டுவதற்கு வேண்டிய இயந்திரங்களைப் பெற்று வேலை நடந்து வருகிறது. உடையார்பாளையம் தாலுகா, சிதம்பரம் தாலுகா, இப்படி மற்ற தாலுக்காக்களிலும் குழாய்க் கிணறுத் திட்டங்கள் வைத்திருக்கிறோம். இதையெல்லாம் நாம் செய்து கொண்டு வருகிறோம்.

இதோடு விதைப் பண்ணைகளைப் பற்றிச் சொன்னார்கள். ஓரளவு நிலங்களை இதற்காக ஆர்ஜிதம் செய்கிறோம். ஓரளவு சர்க்கார் நிலத்திலே ஏற்படுத்தப்படுகிறது. இதற்கு நல்ல நிலம் வேண்டும். அரசாங்கத்தின் கையில் நிலம் இருந்தால் பரவாயில்லை. வேறு தனி நபர்களிடத்திலே இருக்கிறது என்றால் அதற்கு விலை பேச வேண்டியிருக்கிறது. விலை அதிகமாக இருக்கிறது. 'அக்வயர்'



செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. 'ஆர்பிட்ரேஷன்' அல்லது கோர்ட்டுக்குப் போனால் நாம் என்ன விலை கொடுக்கலாம் என்று நினைத்தோமோ அதைவிட அதிக விலை கொடுக்க வேண்டி இருக்கிறது. சில சமயங்களில் அவர்கள் கேட்பதற்கு மேலே கூட விலை கொடுக்கவேண்டி ஏற்படுகிறது. கோர்ட்டார் அதுதான் நியாயம் என்று சொல்லுகிறார்கள். அதற்கு மேலே வேறு பேச்சே கிடையாது. இம்மாதிரி சிக்கல் எல்லாம் இதில் இருக்கிறது. ஆகவே, விதைப் பண்ணைகளுக்காக இப்பொழுது நிலம் வாங்குவதை நிறுத்திக் குத்தகை கொடுக்கிறோம். 'ரெண்டு' கொடுப்பது என்றால் கொஞ்சம் நஷ்டம் தான் ஏற்படும். லாப நஷ்டத்தைப் பற்றிப் பேச்சு இல்லை. முக்கியமானது என்னவென்றால் நல்ல விதைகளைக் கொடுக்கிறோம். அப்படி நல்ல விதைகளைக் கொடுக்க வேண்டுமென்று சொல்லும்பொழுது லாபத்தையே பார்க்க முடியாது. ஓரளவுக்குப் பார்க்கலாம். அதனால் அதிக நஷ்டமும் வரக் கூடாது. இவை எல்லாவற்றையும் பார்த்துத்தான் செய்கிறோம். முதலில் 350 பண்ணைகள் ஏற்படுத்த வேண்டும் என்று எண்ணியிருந்தோம். இப்பொழுது 210 பண்ணைகள் போதும் என்று முடிவெடுக்கிறோம். எல்லாவற்றையும் பரிசீலனை செய்து மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இன்னும் சர்க்கார் நிலம் எங்கிருக்கின்றதோ அங்கு விதைப் பண்ணைகளை வைக்கவும் ஏற்பாடு செய்வதாக உத்தேசம். மற்றபடி நிலம் சரசமான விலைக்குக் கிடைக்க வேண்டும். நல்ல நிலமாகவும் இருக்க வேண்டும். இப்பொழுது இதெல்லாம் கவனிக்கப்பட்டு வருகிறது. அதிக அனுபவம் இல்லாத காரணத்தினால் நல்ல பலன் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். இந்தக் குறைபாடுகளெல்லாம் இப்பொழுது சரிப்படுத்தப்பட்டிருக்கின்றன. எல்லாம் இப்பொழுது திருப்திகரமாக நடந்து கொண்டிருக்கிறது. ஓரளவுக்கு நாம் லட்சியத்தை அடைந்துதான் இருக்கிறோம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்கு முன்னமேயே இந்த லட்சியம் பூர்த்தி அடைய வேண்டும் என்று எண்ணுகிறோம். அதிலும் விதை 'மல்டிபிளிகேஷன்' பற்றிச் சொன்னார்கள். நான் முன்னமே சொன்னேன். இந்த விதைப் பண்ணைகளை பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைப்பதாக இல்லை. ஆனால் கிராமங்களில் இந்த விதைகளை 'மல்டிபிளிகேஷன்' செய்வதைத்தான் பஞ்சாயத்துக்களிடம் கொடுக்கலாம் என்று யோசனை. கிராமத் திட்டங்களை பஞ்சாயத்துக்கள் நிறைவேற்ற வேண்டும். அதில் அவர்கள் அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். அதில் அவர்கள் அக்கறை எடுத்துக் கொண்டு செய்யவேண்டுமென்பதற்காகத்தான் இந்த விதைகள் மல்டிபிளிகேஷன் செய்வதை அவர்களிடம் விடலாம் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

கடைசியாகப் பேசிய கனம் அங்கத்தினர் திரு. அன்பழகன் அவர்கள் கால்நடைக் கல்லூரியில் ஏதோ வெளியிலிருந்து ஒரு 'ப்ரொபஸரை' கொண்டு வந்து போட்டதாகச் சொன்னார்கள். இதிலே 'ப்ரொபஸராக' போடுவதற்கு, திறமை, அனுபவம்

[Sri M. Bhakthavatsalam] [11th March 1961

எல்லாம் ரொம்ப முக்கியம். எல்லாவற்றையும் பரிசீலித்துத் தான் போடப்படுகிறது. இதிலே ஒன்றும் தாட்சண்யம் இல்லை. அதிலே 'போஸ்ட் கிராஜுவேட் கோர்ஸ்' இருக்கிறது. ஆசைப்படுகிறவர்களுக்கு அதிருப்தி இருக்கத்தான் செய்யும். ஒரு முறைக்கு 4 முறை பார்க்கிறோம். ஏன் அங்கேயே ஒருவரும் இல்லையா, வெளியிலிருந்து ஏன் ஒருவரைக் கொண்டுவர வேண்டும் என்றெல்லாம் பரிசீலனை செய்து பார்க்கிறோம். உடனடியாகப் போடுவதில்லை. எல்லாவற்றையும் பார்த்த பிறகுதான் போடப்படுகிறது. வெளியிலே இருப்பவர் யார் என்று நமக்குத் தெரியாது. திறமை, அனுபவம் இதுதான் முக்கியம்.

மற்றபடி கனம் அங்கத்தினர்கள் கொடுத்த அரிய யோசனைகளையெல்லாம் மேலும் பரிசீலனை செய்து, இன்னும் வேகமாக அபிவிருத்தி அடையும் வகையிலே, சாதனையை அடையும் வகையிலே கவனம் செலுத்தப்படும் என்று கூறி, என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

SRI A. GOVINDASAMI : கரும்பு விலை குறையும் என்ற ஒரு கவலையை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். கரும்பு உற்பத்தி விலையைக் குறைக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது? அப்படியானால்தான் கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்குப் பாதுகாப்பு இருக்கும். கரும்பு அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது, சர்க்கரை அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது என்பதற்காக இந்த யோசனை சொல்லப்பட்டதா?

THE HON. SRI M. BHAKTHAVATSALAM : நான் முன்பு வேறு இடத்தில் சொன்னேன். மூன்றாவது வகுப்பில் பிரயாணம் செய்பவர்கள் நிறையக் கூட்டம் வந்துவிடும் என்ற காரணத்தினால் அவசரமாக ஏறுவதற்கு ஒருவர் வந்தால் அவரைத் தடுத்து விடுவார்கள். அப்படித் தடுக்கப்பட்டவர் கஷ்டப்பட்டு ஏறியதும், வண்டிக்குள் வந்து கேட்டில் நின்று கொண்டு அடுத்தாற்போல் வருகிற ஸ்டேஷனில் வேறு யாரும் ஏறக் கூடாது என்று தடுப்பார். கரும்பு ஒரு நல்ல பயிர்தான். ஆனால் அதை வேறு யாரும் பயிரிடக் கூடாது என்று சொல்லுவதற்கில்லை. கரும்புப் பயிர் ஓரளவுக்கு வைத்திருக்க வேண்டும்தான். கரும்பு விலையைக் குறைக்க வேண்டும். கரும்பு உற்பத்தி செய்பவர்களுக்கும் அது கட்டுப்படியாக வேண்டும். சர்க்கரை விலையும் குறைய வேண்டும். வாங்கிச் சாப்பிடுகிறவர்கள்தான் அதிகம். இப்பொழுது 'டயாபிடிஸ்' பற்றிகூட கவலைப்படத் தேவையில்லை. அதிகமாக சாப்பிடட்டும் 'டயாபிடிஸ்' குறைந்து கொண்டு வருகிறது. வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டும்.

SRI N. K. PALANISAMI : கனம் அமைச்சர் அவர்கள் என்னுடைய கேள்விக்குப் பதில் அளிக்கும்பொழுது, Food ப்ரொடக்ஷன் டிபார்ட்மெண்டிலே 2,000 ரூபாய் என்று லிமிட்



11th March 1961] [Sri N. K. Palanisami]

வைத்திருப்பதினால், பல ஸ்கீம்கள் சாங்ஷன் ஆகாமல் இருக்கின்றன. இந்த 2,000 என்று இருப்பதை 3,000 என்று வைத்தால் கூட பரவாய் இல்லை, இதை விளக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களைப் பொறுத்த வரையில் சர்க்கார் மிகுந்த அக்கறை செலுத்துகிறது. எதற்கும் ஒரு வரம்பு வேண்டும். கணக்கு வழக்கு இல்லாமல் பணத்தைச் செலவு செய்தால் வேண்டிய பலன் கிடைக்காது. ரூபாய் 2,000 அல்லது ரூபாய் 3,000 என்று வரம்பு இல்லை. அந்தந்தப் பிராந்தியத்திலுள்ள நிலைமையைப் பார்க்கிறோம். லாண்ட் அக்விஸிஷன் ஆக்டின் கீழ் நிலம் நியாயமாகக் கிடைக்கிறதா, சம்பந்தப்பட்ட விவசாயிகள் ஒரு பங்கு கொடுக்கிறார்களா என்பதை எல்லாம் பார்த்து செய்யப்படுகிறது.

(SRI K. ANBAZHAGAN rose.)

DEPUTY SPEAKER : I cannot allow any personal explanation. The hon. Member will resume his seat.

Is the hon. Member Sri A. Govindasami withdrawing his cut motion?

SRI A. GOVINDASAMI : I press my cut motion, Sir.

DEPUTY SPEAKER : The question is—

'That the allotment of Rs. 80,15,600 under Demand III—Forest Department—be reduced by Rs. 100.'

The Cut Motion was put and lost.

DEPUTY SPEAKER : I now put the Demand to the vote of the House. The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 80,15,600 under Demand III—Forest Department.'

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER : As the hon. Member, Sri V. K. Ramaswamy Mudaliar, is not in his seat, his cut motion is deemed to have been withdrawn.

I now put the Demand to the vote of the House. The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 4,35,25,900 under Demand XVIII—Agriculture.'

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER : Is the hon. Member, Sri A. Govindasami withdrawing his cut motion?

SRI A. GOVINDASAMI : I press my cut motion, Sir.

[Sri M. Bhakthavatsalam] [11th March 1961

எல்லாம் ரொம்ப முக்கியம். எல்லாவற்றையும் பரிசீலித்துத் தான் போடப்படுகிறது. இதிலே ஒன்றும் தாட்சண்யம் இல்லை. அதிலே 'போஸ்ட் கிராஜுவேட் கோர்ஸ்' இருக்கிறது. ஆசைப்படுகிறவர்களுக்கு அதிருப்தி இருக்கத்தான் செய்யும். ஒரு முறைக்கு 4 முறை பார்க்கிறோம். ஏன் அங்கேயே ஒருவரும் இல்லையா, வெளியிலிருந்து ஏன் ஒருவரைக் கொண்டுவர வேண்டும் என்றெல்லாம் பரிசீலனை செய்து பார்க்கிறோம். உடனடியாகப் போடுவதில்லை. எல்லாவற்றையும் பார்த்த பிறகுதான் போடப்படுகிறது. வெளியிலே இருப்பவர் யார் என்று நமக்குத் தெரியாது. திறமை, அனுபவம் இதுதான் முக்கியம்.

மற்றபடி கனம் அங்கத்தினர்கள் கொடுத்த அரிய யோசனைகளையெல்லாம் மேலும் பரிசீலனை செய்து, இன்னும் வேகமாக அபிவிருத்தி அடையும் வகையிலே, சாதனைகளை அடையும் வகையிலே கவனம் செலுத்தப்படும் என்று கூறி, என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

SRI A. GOVINDASAMI : கரும்பு விலை குறையும் என்ற ஒரு கவலையை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். கரும்பு உற்பத்தி விலையைக் குறைக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது? அப்படியானால்தான் கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்குப் பாதுகாப்பு இருக்கும். கரும்பு அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது, சர்க்கரை அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது என்பதற்காக இந்த யோசனை சொல்லப்பட்டதா?

THE HON. SRI M. BHAKTHAVATSALAM : நான் முன்பு வேறு இடத்தில் சொன்னேன். மூன்றாவது வகுப்பில் பிரயாணம் செய்பவர்கள் நிறையக் கூட்டம் வந்துவிடும் என்ற காரணத்தினால் அவசரமாக ஏறுவதற்கு ஒருவர் வந்தால் அவரைத் தடுத்து விடுவார்கள். அப்படித் தடுக்கப்பட்டவர் கஷ்டப்பட்டு ஏறியதும், வண்டிக்குள் வந்து கேட்டில் நின்று கொண்டு அடுத்தாற்போல் வருகிற ஸ்டேஷனில் வேறு யாரும் ஏறக் கூடாது என்று தடுப்பார். கரும்பு ஒரு நல்ல பயிர்தான். ஆனால் அதை வேறு யாரும் பயிரிடக் கூடாது என்று சொல்லுவதற்கில்லை. கரும்புப் பயிர் ஓரளவுக்கு வைத்திருக்க வேண்டும்தான். கரும்பு விலையைக் குறைக்க வேண்டும். கரும்பு உற்பத்தி செய்பவர்களுக்கும் அது கட்டுப்படியாக வேண்டும். சர்க்கரை விலையும் குறைய வேண்டும். வாங்கிச் சாப்பிடுகிறவர்கள்தான் அதிகம். இப்பொழுது 'டயாபிடிஸ்' பற்றிகூட கவலைப்படத் தேவையில்லை. அதிகமாக சாப்பிடட்டும் 'டயாபிடிஸ்' குறைந்து கொண்டு வருகிறது. வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டும்.

SRI N. K. PALANISAMI : கனம் அமைச்சர் அவர்கள் என்னுடைய கேள்விக்குப் பதில் அளிக்கும்பொழுது, Food ப்ரொடக்ஷன் டிபார்ட்மெண்டிலே 2,000 ரூபாய் என்று லிமிட்



11th March 1961] [Sri N. K. Palanisami]

வைத்திருப்பதினால், பல ஸ்கீம்கள் சாங்ஷன் ஆகாமல் இருக்கின்றன. இந்த 2,000 என்று இருப்பதை 3,000 என்று வைத்தால் கூட பரவாய் இல்லை, இதை விளக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களைப் பொறுத்த வரையில் சர்க்கார் மிகுந்த அக்கறை செலுத்துகிறது. எதற்கும் ஒரு வரம்பு வேண்டும். கணக்கு வழக்கு இல்லாமல் பணத்தைச் செலவு செய்தால் வேண்டிய பலன் கிடைக்காது. ரூபாய் 2,000 அல்லது ரூபாய் 3,000 என்று வரம்பு இல்லை. அந்தந்தப் பிராந்தியத்திலுள்ள நிலைமையைப் பார்க்கிறோம். லாண்ட் அக்விஸிஷன் ஆக்டின் கீழ் நிலம் நியாயமாகக் கிடைக்கிறதா, சம்பந்தப்பட்ட விவசாயிகள் ஒரு பங்கு கொடுக்கிறார்களா என்பதை எல்லாம் பார்த்து செய்யப்படுகிறது.

(SRI K. ANBAZHAGAN rose.)

DEPUTY SPEAKER : I cannot allow any personal explanation. The hon. Member will resume his seat.

Is the hon. Member Sri A. Govindasami withdrawing his cut motion?

SRI A. GOVINDASAMI : I press my cut motion, Sir.

DEPUTY SPEAKER : The question is—

'That the allotment of Rs. 80,15,600 under Demand III—Forest Department—be reduced by Rs. 100.'

The Cut Motion was put and lost.

DEPUTY SPEAKER : I now put the Demand to the vote of the House. The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 80,15,600 under Demand III—Forest Department.'

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER : As the hon. Member, Sri V. K. Ramaswamy Mudaliar, is not in his seat, his cut motion is deemed to have been withdrawn.

I now put the Demand to the vote of the House. The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 4,35,25,900 under Demand XVIII—Agriculture.'

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER : Is the hon. Member, Sri A. Govindasami withdrawing his cut motion?

SRI A. GOVINDASAMI : I press my cut motion, Sir.

DEPUTY SPEAKER: The question is—

'That the allotment of Rs. 41,94,500 under Demand XIX—Fisheries—be reduced by Rs. 100.'

The Cut Motion was put and lost.

DEPUTY SPEAKER: I now put the Demand to the vote of the House. The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 41,94,500 under Demand XIX—Fisheries.'

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER: Is the hon. Member, Sri N. K. Palanisami withdrawing his cut motion?

SRI N. K. PALANISAMI: Yes, Sir.

The Cut Motion was by leave, withdrawn.

DEPUTY SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 1,36,15,900 under Demand XX—Animal Husbandry.'

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER: As the hon. Member, Sri K. Sattanatha Karayalar, is not in his seat, his cut motion is deemed to have been withdrawn.

I now put the Demand to the vote of the House. The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 40,17,300 under Demand XXXVII—Capital Outlay on Forests.'

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER: Is the hon. Member, Sri S. M. Annamalai, withdrawing his cut motion?

SRI S M. ANNAMALAI: I press my cut motion, Sir.

DEPUTY SPEAKER: The question is—

'That the allotment of Rs. 20,60,100 under Demand XL—Capital Outlay on Agriculture—be reduced by Rs. 100.'

The Cut Motion was put and lost.

DEPUTY SPEAKER: I now put the Demand to the vote of the House. The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 20,60,100 under Demand XL—Capital Outlay on Agriculture.'

The Demand was put and carried and the Grant was made.



DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again at 8-30 a.m. on Monday, the 13th March 1961.

The House then adjourned.

### VI. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

*A.—Statutory Rules and Orders.*

**Nil.**

*B.—Reports, Notifications ond other papers.*

86. *A Review on Industrial Development in Madras State*, 1960–61.

87. *Supplement to the Review on Industrial Development (Small Industries Sector) in Madras State*, 1960–61.

88. *Report and Proceedings of the Committee of Privileges* (*" Madras Corporation Case "*).

DEPUTY SPEAKER : The question is—

'That the allotment of Rs. 41,94,500 under Demand XIX—Fisheries—be reduced by Rs. 100.'

The Cut Motion was put and lost.

DEPUTY SPEAKER : I now put the Demand to the vote of the House. The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 41,94,500 under Demand XIX—Fisheries.'

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER : Is the hon. Member, Sri N. K. Palanisami withdrawing his cut motion?

SRI N. K. PALANISAMI : Yes, Sir.

The Cut Motion was by leave, withdrawn.

DEPUTY SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 1,36,15,900 under Demand XX—Animal Husbandry.'

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER : As the hon. Member, Sri K. Sattanatha Karayalar, is not in his seat, his cut motion is deemed to have been withdrawn.

I now put the Demand to the vote of the House. The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 40,17,300 under Demand XXXVII—Capital Outlay on Forests.'

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER : Is the hon. Member, Sri S. M. Annamalai, withdrawing his cut motion?

SRI S. M. ANNAMALAI : I press my cut motion, Sir.

DEPUTY SPEAKER : The question is—

'That the allotment of Rs. 20,60,100 under Demand XL—Capital Outlay on Agriculture—be reduced by Rs. 100.'

The Cut Motion was put and lost.

DEPUTY SPEAKER : I now put the Demand to the vote of the House. The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 20,60,100 under Demand XL—Capital Outlay on Agriculture.'

The Demand was put and carried and the Grant was made.



DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. on Monday, the 13th March 1961.

The House then adjourned.

### VI. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

*A.—Statutory Rules and Orders.*

**Nil.**

*B.—Reports, Notifications ond other papers.*

86. *A Review on Industrial Development in Madras State*, 1960–61.

87. *Supplement to the Review on Industrial Development (Small Industries Sector) in Madras State*, 1960–61.

88. *Report and Proceedings of the Committee of Privileges ("Madras Corporation Case").*

## APPENDIX II [11th March 1961

[Vide answer to starred question No. 748 asked by Sri S. Ramalinga Padayachi at the meeting of the Legislative Assembly held on 11th March 1961, page 115 supra.]

*Steps taken towards the prevention and control of Venereal Diseases in Madras State.*

(*a*) Participation of the Government Medical Institutions in various exhibitions conducted in the State, so as to educate the public on the evils of the diseases and the need to prevent it;

(*b*) exhibition at public conveniences of posters explaining the importance of prevention of the diseases;

(*c*) distribution of hand bills containing necessary information on the diseases to patients seeking treatment in Government Medical Institutions;

(*d*) establishment of Venereal Diseases Clinics in the District Headquarters Hospitals, in addition to the clinics functioning in the Government General, Government Stanley, Government Women and Children, Government Kasturba Gandhi and Government Royapettah Hospitals at Madras;

(*e*) conduct of mass serological examinations of special groups of people at exhibitions, beggar homes, Women's Service Home and on patients in the Government Ophthalmic and Mental Hospitals at Madras;

(*f*) prevention of immoral traffic by enforcing the Suppression of Immoral Traffic Act;

(*g*) avoidance of promiscuity and prostitution to an appreciable extent by effective implementation of provisions of the Prohibition Act;

(*h*) enforcement of the Drugs and Magic Remedies (Objectionable Advertisements) Act;

(*i*) isolation of persons affected by the diseases by admitting them for treatment as in-patients in hospitals till they are free from the infectious stage of the diseases;

(*j*) tracing the source of infection and treatment of sexual as well as non-sexual contacts; and

(*k*) provision of facilities for diagnosis and treatment at seaports for foreign national seamen engaged in maritime commerce



## APPENDIX III.

[Vide answer to the starred question No. 750 asked by Sri A. A. Rasheed at the meeting of the Legislative Assembly held on 11th March 1961, page 116 supra.]

*Particulars regarding the number of applications received and number selected for Government Colleges during 1960–61.*

| Serial number and name of the College. | P.U.C. | | | B.A. | | | B.Sc. | | | B.Com. | | | Post Graduate Courses. | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Number of seats authorised. | Number of applications received. | Number of persons selected. | Number of seats authorised. | Number of applications received. | Number of persons selected. | Number of seats authorised. | Number of applications received. | Number of persons selected. | Number of seats authorised. | Number of applications received. | Number of persons selected. | Number of seats authorised. | Number of applications received. | Number of persons selected. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) | (16) |
| 1 Presidency College, Madras. | .. | .. | .. | 145 | 124 | 87 | 256 | 774 | 240 | .. | .. | .. | 219 | 883 | 191 |
| 2 Queen Mary's College, Madras. | 260 | 431 | 256 | 123 | 106 | 103 | 122 | 208 | 102 | .. | .. | .. | 12 | .. | .. |
| 3 Government Arts College, Madras. | 480 | 868 | 480 | 60 | 62 | 42 | 96 | 222 | 84 | . | .. | .. | .. | .. | .. |
| 4 Government Arts College, Coimbatore. | 320 | 731 | 320 | 100 (Tamil Medium) 65 (English Medium) | 170 65 | 100 65 | 75 | 204 | 67 | 40 | 78 | 40 | .. | .. | .. |
| 5 Government Arts College, Ootacamund. | 160 | 190 | 144 | 70 | 24 | 19 | 50 | 33 | 21 | .. | .. | .. | .. | .. | .. |
| 6 Government College, Salem. | 402 | 673 | 401 | 60 | 55 | 51 | 96 | 161 | 93 | .. | .. | .. | .. | .. | .. |
| 7 Government College, Kumbakonam. | 320 | 516 | 320 | 70 | 46 | 46 | 130 | 163 | 97 | .. | .. | .. | .. | .. | .. |
| 8 H. H. Rajah's College, Pudukkottai. | 240 | 255 | 224 | 80 | 14 | 14 | 72 | 35 | 28 | 50 | 20 | 19 | .. | .. | .. |

## APPENDIX V.

[Vide answer to the starred question No. 758, asked by Sri T. S. Ramaswamy at the meeting of the Legislative Assembly held on 11th March 1961, page 123 supra.]

*Statement showing the number of Inspectors and Sub-Inspectors suspended, discharged and dismissed during the years* 1957, 1958 *and* 1959.

| *District.* | *Suspended.* 1957 *Inspectors.* | 1957 *Sub Inspectors.* | 1958 *Inspectors.* | 1958 *Sub-Inspectors.* | 1959 *Inspectors.* | 1959 *Sub-Inspectors.* |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| Tirunelveli | 1 | 1 | .. | 4 | 1 | 5 |
| Kanyakumari | .. | 1 | .. | 2 | .. | 1 |
| Madurai North | .. | .. | .. | 4 | .. | 2 |
| Madurai Urban | .. | 1 | .. | 1 | .. | .. |
| Ramanathapuram | .. | 2 | 1 | 2 | .. | 2 |
| Tiruchirappalli | .. | .. | .. | 2 | 1 | 3 |
| Coimbatore | 1 | 1 | .. | 1 | .. | 1 |
| South Arcot | 1 | .. | .. | .. | .. | 2 |
| North Arcot | .. | .. | 1 | 1 | .. | .. |
| Salem | 1 | .. | .. | 2 | 1 | 1 |
| Thanjavur | .. | 1 | .. | .. | .. | .. |
| Chingleput | .. | .. | 1 | 1 | 1 | .. |
| Madras City | 2 | .. | .. | 3 | 1 | 1 |
| The Nilgiris | .. | .. | .. | .. | .. | .. |
| Total | 6 | 7 | 3 | 23 | 5 | 18 |

| *District.* | *Dismissed.* 1957 *Inspectors.* | 1957 *Sub-Inspectors.* | 1958 *Inspectors.* | 1958 *Sub-Inspectors.* | 1959 *Inspectors.* | 1959 *Sub-Inspectors.* |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| Tirunelveli | .. | .. | .. | 1 | .. | 1 |
| Kanyakumari | .. | .. | .. | .. | .. | .. |
| Madurai North | .. | .. | .. | .. | .. | 1 |
| Madurai Urban | .. | .. | .. | .. | .. | .. |
| Ramanathapuram | .. | .. | .. | 1 | .. | .. |
| Tiruchirappalli | .. | .. | .. | .. | .. | .. |
| Coimbatore | .. | .. | .. | .. | 1 | .. |
| South Arcot | .. | .. | .. | .. | .. | 2 |
| North Arcot | .. | .. | .. | .. | .. | .. |
| Salem | .. | .. | .. | .. | .. | .. |
| Thanjavur | .. | .. | .. | 1 | .. | .. |
| Chingleput | .. | 1 | .. | .. | .. | .. |
| Madras City | .. | .. | .. | 1 | .. | 3 |
| The Nilgiris | .. | .. | .. | .. | .. | .. |
| Total | .. | 1 | .. | 4 | 1 | 7 |

None of the Sub-Inspectors and Inspectors were discharged during the years 1957, 1958 and 1959.



## APPENDIX VI.

[Vide answer to the starred question No. 769 asked by Sri T. S. Ramaswamy at the meeting of the Legislative Assembly held on 11th March 1961, page 129 supra.]

There are two grades of Hindi Teachers, Grade I and Grade II Hindi teachers should possess the following qualifications:—

### GRADE I.

(A) (i) A degree in Hindi of the Madras or Annamalai University :

Provided that holders of the degree of B. A. of the Madras or Annamalai University shall be eligible only if they have taken Hindi under Part III ; and

(ii) the B.T. degree of the Madras University or the B.Ed. degree of the Annamalai University ;

or

(B) (i) A completed Secondary School-Leaving certificate; and

(ii) (*a*) the Pracharak Diploma or the Pracharak Training certificate of the Dakshina Bharat Hindi Prachar Shaba, Madras; or

(*b*) (i) A title of Oriental Learning in Hindi conferred by the Madras or Annamalai University, and

(2) A trained teacher's certificate of the Secondary Grade or a Senior Grade Basic Trained Teacher's certificate or successful completion of the Pandit's Training Course.

### GRADE II.

(i) The Pracharak Diploma or the Pracharak Training certificate of the Dakshina Bharat Hindi Prachar Sabha, Madras, and

(ii) a pass in the third form of Secondary school.

NOTE.—(1) If persons satisfying the qualifactions specified above are not available for appointment as Pandits and Munshis, other persons may be appointed subject to such conditions as may be prescribed by the State Government.

(2) In the case of Pandits in Schools under the managements of Local Bodies and Aided managements persons without the III Form qualification can be appointed as Hindi Pandits if persons with III Form qualification are not available.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

**Monday, the 13th March 1961.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS

*Tanks (Chinnasanthavasal)*

*771 *Q.*—SRI S. M. ANNAMALAI: கனம் பொதுப்பணி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், போளூர் தாலூகா, சின்ன சந்தவாசல், கிழக்கு ஏரி, மேற்கு ஏரிகளுக்கு 1958, 1959, 1960-ம் ஆண்டுகளில் எத்தனை நாள் தண்ணீர் வந்தது ?

(இ) அந்த ஏரிகளின் கீழ் உள்ள நஞ்சை நிலங்களை புஞ்சையாக மாற்ற வேண்டுமென்று மகஜர் அனுப்பப்பட்டதா ?

(உ) அப்படியானால், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU:

(அ)

| Year. (1) | East tank (Two months' capacity). (2) | | West tank (One month's capacity). (3) | |
|---|---|---|---|---|
| | M. | D. | M. | D. |
| Fasli 1367 .. .. .. .. | 0 | 14 | 0 | 14 |
| Fasli 1368 .. .. .. .. | 0 | 09 | 1 | 04 |
| Fasli 1369 .. .. .. .. | 0 | 14 | 0 | 11 |
| Fasli 1370 .. .. .. .. | 2 | 00 | 1 | 00 |
| | Surplused in November 1960. | | Surplused in November 1960. | |

(இ) No, Sir.

(உ) Does not arise.

SRI S. M. ANNAMALAI: சென்ற ஆண்டு அதாவது 1960-ம் ஆண்டுதான் அதிக மழை பெய்து போதிய தண்ணீர் வந்து அந்த ஏரிகள் நிரம்பியன. சுமார் பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளாக அந்த ஏரிகளுக்கு தண்ணீரே இல்லாமல் எங்கு பார்த்தாலும் பயிர் சாவியாகப் போய்க் கொண்டிருந்தன. பயிர்கள் சாவியாகப் போனாலும் அந்த நிலங்களுக்கு வரி வசூல் செய்யப்படுகிறது. ஆகவே அந்த ஏரிகளுக்குத் தண்ணீர் வருவதற்கு வசதி செய்து

13th March 1961]

SRI N. R. THIAGARAJAN: காஷ் ரெமிட்டன்ஸ் என்ற இனத்தின் கீழ் சுமார் 86 லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் முழு விவரம் தெரியவில்லை. அதைப்போலவே கல்விக்காக மட்டும் இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அதாவது வரவுக்கு மேல் அதிகமாக செலவு செய்யப்பட்டிருக்கிறது. மற்ற ஜில்லாக்களைவிட அங்கு வரவுக்கு மேல் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அதன் காரணம் என்ன? காஷ் ரிமிட்டன்ஸ் என்று இருப்பதற்கு விவரம் என்ன?

THE HON. SRI M. A. MANICKAVELU: தமிழ் நாட்டில் வரவு எவ்வளவு என்று பார்த்து அந்த அளவில் செலவு செய்வது என்பது கிடையாது. அது இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை அல்ல. மாகாண வருவாயை மொத்தமாக எடுத்துக் கொண்டு எந்தெந்த இடங்களுக்கு என்னென்ன தேவையோ அந்த அடிப்படையில் தான் செலவு செய்யப்படுகிறது.

*Girls' hostel (Gudiyatham)*

* 773 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN: கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குடியாத்தத்திலுள்ள சர்க்கார் பெண்கள் பயிற்சிப் பள்ளி மாணவிகள் தங்குவதற்கான விடுதிகள் எத்தனை இடங்களில் உள்ளன?

(இ) மாதம் வாடகை எவ்வளவு?

(உ) 1959-60-ல் மேற்படி விடுதிகளில் எத்தனை முறை திருட்டுப் போயிற்று?

(எ) என்னென்ன? எவ்வளவு மதிப்புடைய சொத்து திருட்டு போனது? திருட்டுப் போன சொத்து கிடைத்து விட்டதா?

(ஐ) சர்க்கார் கட்டடம் கட்ட உத்தேசம் உண்டா?

THE HON. SRI C. SUBRAMANIAM: (அ) The hostel is accommodated in two private buildings.

(இ) Rs. 150 for both the buildings.

(உ) Only once.

(எ) The loss by theft included (1) cash of Rs. 19 50 nP. belonging to four students and (2) three fountain pens, one soap and one nose ornament. The value of the articles is not exactly known. The articles lost could not be recovered.

(ஐ) No, Sir.

**Sri V. K. KOTHANDARAMAN** : இந்த மாணவிகளுக்கு நிரந்தரமாக யாதொரு கட்டிடமும் இல்லாத காரணத்தால் அடிக்கடி பல வாடகைக் கட்டிடங்களில் மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதனால் அடிக்கடி திருட்டுப் போகக்கூடிய அளவுக்கு அங்கு நிலைமை ஏற்படுகிறது. ஆகவே நிரந்தரமாகக் கட்டிடம் கட்டுவதற்கு உடனடியாக ஏற்பாடு செய்யப்படுமா?

The Hon. Sri C. SUBRAMANIAM : திருட்டுப் போவதற்கும் நிரந்தரமாக கட்டிடத்தை கட்டுவதற்கும் சம்பந்தம் இல்லை. நிரந்தரமாகக் கட்டிடம் இருந்தால் கூட திருட்டுப் போய்க்கொண்டிருக்கும். நிரந்தரமாகக் கட்டிடம் கட்டுவதற்கு இப்பொழுது ஆலோசனையில் இல்லை.

*Iron deposits*

* 774 Q.—Sri P. G. MANICKAM : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சேலம் ஜில்லா சேர்வராயன் மலைப் பகுதியிலும், நீலகிரி ஜில்லாவில் ஒரு சில பகுதிகளிலும் கிடைக்கக்கூடுமெனப் பரிசீலனை செய்யப்பட்டு வரும் இரும்பு பாக்ஸைட் கனிப் பொருள்களை ஆராய்ச்சி செய்த அமெரிக்க பூமி வள ஆராய்ச்சி இலாகாவைச் சேர்ந்த ஸ்ரீலாரன்ஸ் பிளேட் அவர்களால் சென்னை சர்க்காருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் விவரங்களடங்கிய குறிப்பு ஒன்று சட்டசபை நூல் நிலையத்தில் வைக்கப்படுமா?

The Hon. Sri R. VENKATARAMAN : Yes, Sir. A note on the salient features of the report of Mr. Lawrence Blade is placed in the library of the Legislature.

*Slums (Vazhaipoocheri) and Kirimedu*

**Mr. SPEAKER:** கனம் அங்கத்தினர் திரு. பக்கிரிசாமி பிள்ளை இடத்தில் இல்லாததால் கேள்வியும் பதிலும் சட்ட சபையின் நடவடிக்கையில் அச்சடிக்கப்படும்.

* 775 Q.—Sri S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. the Minister for Industries be pleased to state the reasons for the delay in effecting improvements of the slums known as 'Vazhaipoocheri' and 'Karimedu' in Perambur area, Madras City?

The Hon. Sri R. VENKATARAMANAN : *Vazhaipoocheri slum* : The alternative site has been fully developed by the Corporation of Madras and is ready for occupation, but is considered by the Corporation that the shifting of the families may be deferred till the Slum proper (Private Land) which is under acquisition is taken possession of. There was some difficulty in regard to payment of compensation for this land which has since been resolved and it is expected that the award will be passed shortly by the Collector and the land handed over to the Corporation.



*Karimeducheri slum* : The alternative site is under acquisition. Eight fields still remain to be handed over to the Corporation of Madras. Before these fields can be handed over, the standing crops in two of the fields have to be harvested while the compensation for four fields have to be settled, and the objection raised by the owner of the remaining two fields have to be considered. It is expected that all these things will be settled by the end of March 1961.

*Co-operative farming*

* 776 Q.—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any staff has been employed to do propaganda about the benefits of co-operative farming; and

(b) if so, the details of their salary and their functions?

The Hon. Sri R. VENKATARAMAN : (a) No, Sir.

(b) Does not arise.

* 777 Q.—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state whether any decision has been taken at the meeting of the National Development Council held in September 1960 for starting pilot schemes on co-operative farming?

The Hon. Sri R. VENKATARAMAN : It is understood that at its meeting held on 13th September 1960, the National Development Council endorsed the recommendations of the working group on Co-operative Farming under the Chairmanship of Sri S. Nijalingappa. The Council has agreed to the working groups' proposal to start 320 Pilot Projects in the country, which will be in addition to the programmes for development of Co-operative Farming which would be normally formulated by the States.

Sri N. K. PALANISAMI : May I know whether there was any proposal to set up a Co-operative Farm in each Block in this State? If so, may I know why there was failure in setting up this Co-operative Farm?

The Hon. Sri R. VENKATARAMAN : This is a proposal for 1961-62. That is, we should select in Madras State ten areas and start Co-operative Farms in those areas. That is the proposal. I may inform the hon. Member that there has been no failure. The proposal itself is for 1961-62.

Sri N. K. PALANISAMI : May I know whether the Government have drawn the attention of the State Evaluation Committee to the present defective system of functioning of co-operative farms and if so, whether any modifications have been proposed and the details thereof?

The Hon. Sri R. VENKATARAMAN : It would be helpful if the hon. Member points out any particular defect. If he should generally state 'defective system' I am unable to understand what he means.

[13th March 1961

MR. SPEAKER: I endorse the Hon. Minister's view. When the hon. Member generally states 'defective system', he presumes that it exists. Let the hon. Member put a specific question instead of making a general statement like this.

SRI N. K. PALANISAMI: At present the co-operative farms are set up only to get more grants from the Government, instead of producing more. In such cases, may I know what the Government propose to do?

MR. SPEAKER: This is another insinuation. Does the Hon. Minister agree with the statement made by the hon. Member?

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, I just want to clear the misapprehension. Because, we see that this sort of wrong impression goes about among the people. Co-operative farming is done by small and poor landholders and they do not have the wherewithal to buy the ploughs, implements and other things. Therefore, the Government give subsidies in respect of certain items and half-grants in respect of other items. If that is stopped, the poor cultivator will continue to remain poor and he cannot improve agriculture.

*Copper*

* 778 *Q.*—SRI T. S. RAMASWAMI: Will the Hon. the Minister for Industries be pleased to state the number of persons and firms for whom quotas were allotted for the supply of copper, zinc, iron and steel by the Government and the quantity allotted to each of them for the last three years?

THE HON. SRI R. VENKATARAMAN: Statements containing particulars of the number of persons and firms for whom quotas were allotted for the supply of copper, zinc, iron and steel by the Government and the quantity allotted to each of them for the last three years are placed in the Legislature Library.

*Nuisance*

* 779 *Q.*—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Home be pleased to state whether the Government have instructed the City and Town Police to be more vigilant in the matter of rounding up people committing nuisance?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No, Sir. But it is usual as part of the regular police duty to depute moving beats from the night section men early in the morning as a preventive measure and also to prosecute people committing nuisance.

SRI A. A. RASHEED: Is the Hon. Minister aware that City lanes and streets have become good breeding grounds for all diseases because of the nuisance committed and if so, will the Government take more vigorous steps to see that the people who commit nuisance are rounded up immediately?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I would request the hon. Member to note down particular spots which are bad and communicate it to the Commissioner of Police.



13th March 1961]

SRI A. A. RASHEED: May I know whether the Government have got any information regarding the number of persons arrested, prosecuted and convicted?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I am sorry. I do not have that information with me just now.

SRI K. VINAYAKAM: The Police are taking some care and interest in detecting the offences committed near the sea-shore and other open places during the night and early morning. Will similar instructions be given to the police authorities to check up this kind of committal of nuisance by children in the small lanes and by-lanes and streets inside the City of Madras?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, the police are not asked to see only public places like Marina and other places. But still the hon. Member and others must take some interest in creating more civic consciousness among the people, particularly those residing in these lanes.

SRI P. G. MANICKAM: அநேக நகரங்களில், குறிப்பாக ஜன நெருக்கடி அதிகமாக உள்ள பகுதிகளில், அசுத்தம் அதிகமாகச் செய்கிறார்கள். அதில் விசேஷ சிரத்தை காட்டுவதற்கு சர்க்கார் முன் வருவார்களா, தவறு செய்பவர்களைத் தண்டிக்க ஏற்பாடு செய்வார்களா? பழக்க வழக்கம் காரணமாக அவர்கள் அப்படிச் செய்கிறார்கள். அதைத் தடுக்க என்ன ஏற்பாடு?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கண்டுபிடிக்கப் பட்டுத்தான் வருகிறார்கள். பழக்க வழக்கம் என்பதை நிறுத்த வேண்டும். அது பிரசாரத்தால் தான் முடியும். அதில் உத்யோகப்பற்றற்றவர்கள் அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும்.

*Elementary schools*

* 780 *Q.*—SRI M. P. SARATHI: கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1959-60-ல் வேலூர் நகர மன்றத்துக்கு ஆரம்பப்பள்ளிகள் கட்டுவதற்காகக் கடன் கொடுத்த தொகை எவ்வளவு?

(இ) எத்தனை கட்டிடங்கள், எவ்வளவு செலவில் இதுவரை கட்டப்பட்டுள்ளன?

THE HON. SRI C. SUBRAMANIAM: (அ) Rs. 60,000, Sir.

(இ) One building is nearing completion and another is under construction. A sum of Rs. 23,615 has been spent on both the buildings up to November 1960.

*Iron forging*

* 781 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of Iron Forging Training Units and the number of trainees therein;

[13th March 1961

(*b*) the amount of subsidy given to each unit; and

(*c*) the manner in which the trainees are selected?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) to (*c*) The answer [a] is placed on the table of the House.

*Pig iron*

*** 782 *Q*.—SRI A. VEDARATHNAM:** *கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

*(அ) 1960-ம் ஆண்டு ஆகஸ்டு மீ 19-ம் தேதியன்று கனம் அமைச்சர் அவர்கள் 290-வது எண்ணுள்ள கேள்விக்களித்த பதிலையொட்டி, வார்ப்பு இரும்புக்கு* (Pig-iron) *தற்சமயம் விலை கட்டுப்பாடு இருக்கிறதா ?*

*(இ) அப்படியானால், என்ன விலை ?*

*(உ) இல்லையானால் எப்போதிருந்து அதற்கு விலை கட்டுப்பாடு இல்லை ?*

*(எ) கட்டுப்பாடு நீக்கியபின் வார்ப்பு இரும்பின் விலை ஏறி இருக்கிறதா ? எவ்வளவு ?*

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) There is statutory price control over pig-iron. The prices of all grades of pig-iron have been fixed by the Iron and Steel Controller, Calcutta.

(*b*) A copy [b] of the Schedule containing the prices of all grades of pig-iron together with the "Extras and penalties" in respect of variation from standard grades is placed on the table of the House.

(*c*) & (*d*) Do not arise.

**SRI A. VEDAMATHNAM:** *ஸார், இரும்புக்கு விலைக் கட்டுப்பாடு நீக்கிய பிறகு . . . ,*

**THE HON. SRI R. VENKATARAMAN:** *நீக்க வில்லை.*

**SRI A. VEDARATHNAM:** *வார்ப்பு இரும்பின் விலை ஏறியிருக்கிறதே, அதற்குக் காரணம் என்ன ?*

**THE HON. SRI R. VENKATARAMAN:** *கனம் அங்கத்தினர் இங்கே "பிக் ஐர்ன்" என்று கேட்டிருக்கிறார்; பிக் ஐர்னுக்கு விலைக் கட்டுப்பாடு ரத்து செய்யவில்லை. "வார்ப்பு ஐர்ன்"* **is 'wrought iron', I think.**

**SRI A. VEDARATHNAM:** *வார்ப்பு இரும்புக்கு விலைக் கட்டுப்பாடு உண்டா ? விலை ஏறியிருப்பதற்குக் காரணம் என்ன ? கட்டுப்பாட்டை நீக்கிய பிறகு விலை ஏறியிருக்கிறதே !*

**THE HON. SRI R. VENKATARAMAN:** *"வார்ப்பு இரும்பு" என்ன என்பது தெரியவில்லை. அதன் இங்கிலீஷ் ஈக்விலெண்ட் சொன்னால், பதில் சொல்ல முடியும்.*

---

[a] Printed as Appendix II on page 326 infra.

[b] Printed as Appendix III on pages 327–328 infra.



13th March 1961]

**MR. SPEAKER:** *யோசனை செய்து இன்னொரு கேள்வி கொடுங்கள்.*

*State Transport*

*** 783 *Q*.—SRI S. M. ANNAMALAI:** *கனம் மின்சார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

*(அ) 1960-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் மாநில பஸ் போக்கு வரத்து ஆலோசனைக் குழுவில் என்னென்ன ஆலோசனைகள் கூறப்பட்டன ?*

*(இ) அதையொட்டி சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்ன ?*

**THE HON. SRI V. RAMAIAH:** (அ) & (இ) **A statement** is placed on the table of the House.

**SRI S. M. ANNAMALAI:** *ஸார், ரேடியோ வியாபாரிகள் பஸ்களில் ரேடியோ வைக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்களே. அப்படி வைக்காவிட்டாலும் அதிக தூரம் செல்லும் பஸ்களில், அவை ஆங்காங்கே நிற்கும் இடங்களிலாவது வைக்க முன்வருவார்களா ?*

**THE HON. SRI V. RAMIAH:** *அப்படி உத்தேசம் இல்லை.*

**SRI S. M. ANNAMALAI:** *சிபாரிசுகளிலே அதைக் கவனிக்க முடியவில்லை என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதைக் குறித்துத்தான் கேள்வி போட்டேன். பஸ் ஓடும்போது வைக்காவிட்டாலும், அவை நிற்கும் இடங்களில், பிரயாணிகள் சாப்பாட்டுக்குப்போகும் நேரங்களில், ரேடியோவை வைக்க ஏன் சர்க்கார் பரிசீலிக்கக் கூடாது ?*

**THE HON. SRI V. RAMIAH:** *கனம் அங்கத்தினர் ஆலோசனையை பட்ஜட் விவாதத்தின் போது சொன்னால், அதற்கான பதிலைச் சொல்லுகிறேன்.*

SRI K. VINAYAKAM: Sir, from the statement placed on the table of the House, in regard to item 5, the Director of State Transport has advised the Government that radio-receiving sets can be installed in buses plying for short distances, say 8 miles. So, what action the Government have taken at least with regard to buses owned by the Transport Department and which are plying within 8 miles in the Madras City, to places like St. Thomas Mount and Pallavaram?

THE HON. SRI V. RAMAIAH: I wish the hon. Member reads the second part of the answer also. We have been considering this matter for quite a long time. This matter had again been placed before the State Transport Advisory Committee and the Advisory Committee had also come to the conclusion that it would

---

[a] Printed as Appendix IV on pages 329–333 infra.

[13th March 1961

be an hindrance to driving and that it would distract the attention of the driver and that it would also be a nuisance to passengers. So, we have come to the decision that we need not instal radios for the sake of radio dealers.

SRI V. SUBBIAH : பெரிய நகரங்களிலிருந்து கிராமங்களுக்குப் போகும் ரூட்டுகள் புதிதாக எத்தனை கொடுக்கப்பட்டிருக்கிறது? இன்னும் கொடுக்கும் உத்தேசமுண்டா?

MR. SPEAKER: மூல கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. கனம் மந்திரி பதிலளித்தால் எனக்கு ஆட்சேபனை இல்லை.

(பதில் இல்லை)

SRI P. G. MANICKAM: மேஜை மீது வைக்கப்பட்டிருக்கும் ஸ்டேட்மெண்டில், மூன்றாவது ஐட்டத்தில், தனிப்பட்ட பஸ் ஸ்டாண்டுகள் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. குறிப்பாக அநேக நகரங்களில் தனிப்பட்டோர் பஸ் ஸ்டாண்டுகளால் பொது ஜனங்களுக்கு இடைஞ்சல் ஏற்படுகிறது, முனிஸிபாலிடிக்கும் வருமானம் குறைகிறது. ஆகவே, அதைக் கவனித்து, முனிஸிபாலிடிகளே பஸ் ஸ்டாண்டுகளை வைத்து நடத்தவேண்டும் என்று இன்ஸ்பெக்டர் ஆப் முனிஸிபல் கௌன்ஸிலுக்கு தாக்கீது அனுப்புவார்களா?

THE HON. SRI V. RAMAIAH: இப்பொழுது இருக்கும் அரசாங்கத்தின் கொள்கை ஒவ்வொரு நகரத்திலும் பஸ் ஸ்டாண்டுகள் ஏற்பட வேண்டும், ஆங்காங்கே இருக்கும் பஞ்சாயத்துக்கள், நகர சபைகள் அதை நடத்த வேண்டும் என்பது. ஆனால் கோயம்புத்தூரைப் பொருத்தவரை நீண்ட நாளாகத் தனிப்பட்டோர் தங்கள் பஸ்களுக்கு விசேஷ ஸ்டாண்டுகள் வைத்திருக்கிறார்கள். அதைப் படிப்படியாக இல்லாமல் செய்ய நகர சபைகள் முன் வந்தால், அரசாங்கம் உத்தரவு கொடுக்கும்.

SRI S. M. ANNAMALAI: ரேடியோ வைத்தால் ஆக்ஸிடெண்டுகள் அதிகமாகும் என்கிறார்கள். ஆனால், ட்ரைவர் பக்கத்திலேயே இருந்து பேசிக்கொண்டு இருக்கிறார்கள், அதனாலும் அதிக ஆக்ஸிடெண்டுகள் ஏற்படுகிறதனால், அதைத் தடுக்க என்ன ஏற்பாடு செய்வார்கள்?

THE HON SRI V. RAMAIAH : கனம் அங்கத்தினர் இந்த ஆலோசனையை பட்ஜெட் விவாதத்தின்போது சொன்னால் கவனிக்கிறேன்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : With reference to answer to item No. 6, in view of the hardships caused to the lorry owners, may I know when a decision will be taken on this point?

THE HON. SRI V. RAMAIAH : As soon as the remarks from the Transport Commissioner come.



13th March 1961]

SRI A. A. RASHEED : If radios were to be installed in buses, will the Government consider to supply freely to the passengers head-ache cure tablets like aspirin, etc.?

MR. SPEAKER : These are only suggestions.

THE HON. SRI C. SUBRAMANIAM : The hon. Member indulges in advertisement for particular products like aspirin, etc. That should not be permitted in the House. He has asked whether, for cure of headache, aspirin tablets would be supplied.

MR. SPEAKER : If the hon. Member mentions any particular brand, that would not be permitted. He simply said 'head-ache.'

THE HON. SRI C. SUBRAMANIAM : He said for curing 'headache' whether aspirin would be supplied.

SRI N. K. PALANISAMI : May I know whether the Director of State Transport has suggested to Government to permit the installation of radios in buses, as far as possible?

MR. SPEAKER : The hon. Member Sri K. Vinayakam has asked the same question and it has been answered.

SRI K. PERIANNAN : திருச்சி மிக முக்கியமான தலை நகரமாக இருந்தும் அங்கே பஸ் ஸ்டாண்டில் போதிய வசதி இல்லாமல் மிக அவஸ்தைபடுகிறார்கள். அதை விஸ்தரிக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

THE HON. SRI V. RAMAIAH : திருச்சி நகரத்தில் இப்போது இரண்டு இடத்தில் பஸ் ஸ்டாண்டுகள் இருக்கின்றன. இரண்டு இடத்திலும் போதுமான வசதி இல்லாது இருக்கிற காரணத்தினால் மத்திய பஸ் ஸ்டாண்டு ஏற்படுத்தவேண்டும் என்ற முறையில் எல்லா முயற்சிகளும் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. அதற்கு இடம் கிடைப்பதுதான் கஷ்டமாக இருக்கிறது.

*Children's club.*

* 784 *Q.*—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any scheme under the Third Plan to start clubs for children in the State to take care of children of working class families where both the parents and senior members of the family go for work; and

(*b*) whether the State Welfare Board has any schemes for this purpose?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Presumably the hon. Member refers to creches. The State Government have no such scheme in the Third Plan.

(*b*) Balwadis which are a somewhat modified type of creches are proposed to be run by the State Social Welfare Advisory Board.

[13th March 1961

SRI T. T. DANIEL: In view of the fact that children of working classes are there, whose parents are obliged to go for their work all through the day, will the Government think of starting such clubs at least in the villages?

THE HON. SRI C. SUBRAMANIAM: First I am afraid these will have to be started in urban areas and then they should spread to villages. As I have already said there is no such programme in the Third Plan.

*Engineering courses*

* 785 Q.—SRI T. S. RAMASWAMI: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether it is a fact that the Madras City got more seats to the Engineering Course proportionately than that of the other districts;

(b) if so, the reasons therefor;

(c) whether children of Government servants from the City were allowed to apply either as City applicants or from the district from where they came; and

(d) if so, how many of them have applied from their native districts and not as City applicants?

THE HON. SRI C. SUBRAMANIAM: (a) & (b) Yes, Sir. Besides the seats allocated on the basis of population, one-third of the unutilised seats reserved for Scheduled Castes and Scheduled Tribes were added to the Madras City general pool, while the remaining two-thirds were allocated to the general pool of the districts on the basis of population. As there are more colleges in the City, candidates who pass out from these colleges, with distinction, will be denied admission if the unutilised seats are distributed among the City and the District quotas strictly on a population basis.

(c) Yes, Sir. In case a Government servant of the Madras State cannot claim permanent residence in a district as required under the rules, he may declare as his permanent residence, the district where he is residing at the time of application of his son or ward.

(d) Statistics regarding this have not been maintained by the Selection Committee and it is not possible to collect the same now.

SRI T. S. RAMASWAMI: As is evident from the answer itself, the children in the City are benefited both by the additional number of seats allotted to the City as well as the facility given to their parents in the matter of production of nativity certificates. In view of the above, will the Government re-consider the whole thing?

THE HON. SRI C. SUBRAMANIAM: There is no case for re-considering it. It has worked fairly well for the past four or five years.



13th March 1961]

*Abandoned children*

* 786 Q.—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Revenue be pleased to state the number of children abandoned by mothers in Government Maternity Hospitals in the year 1959–60?

THE HON. SRI M. A. MANICKAVELU: Seventeen, Sir. This figure includes the cases pertaining to the Maternity Departments of the Government District Headquarters Hospitals also.

SRI A. A. RASHEED: Is it not a fact that these children have been abandoned because of poverty?

THE HON. SRI M. A. MANICKAVELU: Yes, that is correct. Some cases are due to poverty. Others are illegitimate children.

SRI A. A. RASHEED: May I know how these children are brought up by Government?

THE HON. SRI M. A. MANICKAVELU: They are transferred to orphanages. If some childless people want children, they are given these children.

*Engineering workshops*

* 787 Q.—SRI T. S. RAMASWAMI (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR): Will the Hon. the Minister for Home be pleased to satte the value of out-put in the past three years, yearwar from the Government General Purposes Engineering Workshops?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: A statement[a] showing the particulars of the value of output of the Government General Purposes Engineering Workshops at Rajapalayam and Vellore for the past three years is placed on the table of the House.

SRI S. M. ANNAMALAI: இது லாபத்தில் வேலை செய்கின்றதா? அப்படியாயின் இதற்காக செலவான தொகை எவ்வளவு? அதில் எத்தனை தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: தனிக் கேள்வி போட்டால் இதையெல்லாம் சேகரித்துக்கொடுக்க முடியும்.

*Salt (Bye-products)*

* 788 Q.—SRI A. VEDARATHNAM: கனம் கைத் தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

உப்பிலிருந்து கிடைக்கும் என்னென்ன உபபொருள்களைக் கொண்டு என்னென்ன தொழில்களைக் துவக்க உத்தேசம்?

THE HON. SRI R. VENKATARAMAN: There is no proposal for setting up any factory in the public sector for the utilisation of the bye-products of salt.

[a] Printed as Appendix V on page 334 infra.

[13th March 1961

Proposals, if any, from Private Sector for utilisation of salt and bitturns will receive every encouragement from the Government.

**SRI A. VEDARARTNAM**: மத்திய அரசாங்கம் சமீபத்தில் ஒரு கோடி ரூபாய் செலவில் வேதாரண்யத்தில் ஒரு உப்புத் தொழிற்சாலையை ஆரம்பிக்கப்போவதாகக் கூறப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி நம் அரசாங்கத்திடம் யோசனை கேட்டார்களா? அதற்கு நம் சர்க்கார் என்ன பதில் அளித்திருக்கிறது என்று கூறமுடியுமா?

**THE HON. SRI R. VENKATARAMAN**: அதைப்பற்றி எங்களிடத்தில் தகவல் இல்லை. ராஜ்ய சர்க்காரை கலந்து அவர்கள் ஆலோசிக்கவில்லை.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: In view of the fact that many of the licensees of salt factories in the South do not know what bye-products of salt are and how they are manufactured, is there any proposal before Government to send a pamphlet to each factory through the factory officers concerned?

THE HON. SRI R. VENKATARAMAN: I think they know it fairly well. There are 30 licences granted to various people for manufacture of salt and its bye-products. With all these 30 licensees there will be very good scope for development of salt industry in the State.

**SRI A. VEDARATHNAM**: உப்பிலிருந்து என்ன என்ன உபபொருள்கள் எடுக்க முடியும் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் அறிவிக்க முடியுமா?

**THE HON. SRI R. VENKATARAMAN**: அது வந்து பரிட்சையில் போட வேண்டிய கேள்வி. சர்க்காரிடம் கேட்கிற கேள்வி அல்ல.

*Crackers*

* 789 Q.—**SRI S. M. ANNAMALAI**: கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் தீபாவளியின்போது பட்டாசு வெடித்ததினால் ஏற்பட்ட விபத்துக்கள் எத்தனை?

(இ) எத்தனை பேர்கள் இறந்தனர்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Fifty-one fire accidents occurred in the districts and in the City due to the firing of crackers on 18th, 19th and 20th October 1960 and were attended to by the Fire Service Department.

(b) There was no loss of human life in any of the accidents referred to above.



13th March 1961]

**SRI S. M. ANNAMALAI**: சென்னை நகரத்தில் மட்டும் எத்தனை பையர் ஆக்ஸிடென்ட் நடந்தன? அதைப்போல் மற்ற மாவட்டங்களில் நடந்த விபத்துக்கள் எத்தனை?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM**: என்னிடத்தில் விவரம் இருக்கின்றன. ஆனால் கணக்குப் பார்த்துத்தான் சொல்ல வேண்டும். இவற்றால் ஏற்பட்ட நஷ்டம் ஐம்பத்தேழாயிரம் ரூபாய் சொச்சம்தான். ஆனால் பையர் சர்விஸ்களினால் சேதம் அதிகமாகத் தடுக்கப்பட்டிருக்கிறது.

**SRI V. K. KRISHNAMURTHY**: இந்தப் பட்டாசுகளினால் விபத்து ஏற்படுகின்ற காரணத்தினால் இவற்றை அடியோடு நிறுத்திவிடுவதற்கு பரிசீலனையின்றி உடனடியாகச் சட்டத்தை ஏற்படுத்த சர்க்கார் முன் வருவார்களா?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM**: ரொம்ப அதிக ஆபத்தை உண்டாக்கக்கூடியவைகளை எல்லாம் இப்போதே தடை செய்திருக்கிறோம். ஆனால் குழந்தைகளுக்கு மட்டும் அல்ல, வயது வந்தவர்களுக்கும் கூட தீபாவளி சமயத்தில் இரண்டு மூன்றுநாள் இது விளையாட்டாக இருப்பதனால் இதை அடியோடு தடை செய்வது சரியல்ல என்று நினைக்கிறேன்.

*Hindi*

* 790 Q.—SRI T. S. RAMASWAMI: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether any grant and aids are given by the State Government to institutions propagating Hindi; and

(b) if so, the help rendered and the names of the institutions to which help is given?

THE HON. SRI C. SUBRAMANIAM: (a) Yes, Sir.

(b) Rs. 45,300 was paid to the Dakshina Bharat Hindi Prachar Sabha, Madras, during 1960–61.

*A.I.R. (Tirunelveli)*

* 791 Q.—SRI T. S. RAMASWAMI (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR): Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether any Government building or land is to be given for erecting a receiving and transmitter station of the All-India Radio in Tirunelveli; and

(b) if so, the place or building selected?

THE HON. SRI C. SUBRAMANIAM: (a) & (b) The All-India Radio Headquarters have requested the State Government to make available certain private and poramboke lands in Tirunelveli taluk of Tirunelveli district for the installation of a new Medium Wave Transmitter and Receiving Centre. The matter is under consideration of this Government.

[13th March 1961

SRI A. A. RASHEED : May I know what is the compensation that the All-India Radio has proposed to give for the lands?

THE HON. SRI C. SUBRAMANIAM : The usual compensation according to the Land Acquisition Act in respect of private property.

*Chemical factories*

* 792 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் இம் மாநிலத்தில் எத்தனை ரசாயனத் தொழிற் சாலைகள், எங்கெங்கே இருக்கின்றன?

(இ) இவற்றின் மூலம் என்னென்ன ரசாயனப் பொருட்கள் உற்பத்தியாகின்றன?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) & (இ) There is no chemical factory in the public sector. Thirty licences have been granted by Government of India under the Industries (Development and Regulation) Act, 1951, for setting up factories in the private sector for the manufacture of various chemicals. Details about these factories are not available as they are in the private sector.

SRI A. VEDARATHNAM : நம்முடைய நாட்டிலே ஏராளமான ரசாயன உரப் பொருள்கள் தேவையாக இருக்கின்றனவே, அப்படியிருந்தும் இந்தத் தொழிற்சாலைகளை நடத்தவேண்டுமென்று அரசாங்கம் கருதவில்லையா?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்பொழுது 30 லைசென்சுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இது நிறைவேற்றப் பட்டால், சர்க்கார் நடத்தவேண்டிய அவசியம் இருந்தால் நடத்தும்.

*Provident Fund (Misappropriation)*

* 793 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், வந்தவாசி வட்டம், அறுதிமங்கலம் பஞ்சாயத்துப் பள்ளி ஆசிரியருடைய பிராவிடண்டு நிதி பணத்தை மாவட்ட ஆட்சி மன்றத்தில் கையாடியதாக சென்ற 1960-ம் ஆண்டு மார்ச்சுமீ 14உல் வேலூர் வடக்கு போலீஸார் விசாரணை செய்தது எந்த நிலையில் உள்ளது?

(இ) எவ்வளவு பணம் யாரால் எப்படிக் கையாளப்பட்டது?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (அ) & (இ) The matter is still under investigation by the Police.



13th March 1961]

SRI S. M. ANNAMALAI : சர்க்கார் பணத்தைக் கையாடியதாக இப்பொழுது புகார் வந்திருக்கின்றனவே அப்படியானால் ஏன் அவர்களை சஸ்பெண்ட் செய்யக்கூடாது?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : யாரை சஸ்பெண்ட் செய்வது, இதற்கு தகுந்த காரணம் என்ன என்று சொல்வதற்கில்லை. The matter is under Police investigation.

MR. SPEAKER: கனம் மந்திரி அவர்கள் இப்பொழுது பதில் சொல்வது சரி அல்ல. இது இன்வெஸ்டிகேஷனில் இருக்கும் போது அதைப்பற்றி கேட்பதும் சரி அல்ல. This will prejudice the investigation.

*Selection posts (P.W.D.)*

* 794 *Q.*—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the number of officers selected for the selection posts in the Public Works Department every year for the last five years and the posts to which they were selected;

(*b*) the principle followed in the selection and the body which selects them; and

(*c*) how far their academic qualifications and rank in examinations are taken into consideration in the matter of selection?

THE HON. SRI P. KAKKAN : (*a*) to (*c*) The particulars [a] are placed on the table of the House.

SRI V. K. KOTHANDARAMAN : இப்பொழுது சூபரின்டன்டிங் என்ஜீனியரை தேர்ந்தெடுத்ததில், நேரடியாக அசிஸ்டன்ட் என்ஜீனியராக நியமிக்கப்பட்டு அந்த தேதியில் இருந்து சர்விசைக் கணக்கிட்டுப்பார்த்து ஒரு ஹரிஜன் மாத்திரம் எக்ஸீகூடிவ் என்ஜீனியராக நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து கணக்கு எடுத்தது உண்மையா? அப்படியாயின் அதற்குக் காரணம் என்ன?

THE HON. SRI P. KAKKAN : எக்ஸீகூடிவ் என்ஜீனியர் ஆன பிறகுதான் சூபரிண்டன்டிங் என்ஜீனியராக முடியும். எக்ஸ்கூடிவ் என்ஜீனியருக்கு மேல்தான் சூபரிண்டன்டிங் என்ஜீனியர்.

SRI V. K. KOTHANDARAMAN: மற்றவர்கள் விஷயம் போல் அல்லாமல் இது மாத்திரம் ஏன் இப்படி செய்யப்பட்டது?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினருக்கு நான் சொல்லவிரும்புவது நான் வந்த பிறகு எந்தவிதமான முடிவும் ஏற்படவில்லை என்று.

---

a Printed as Appendix VI on pages 334-335 infra.

[13th March 1961

*Medical and Public Health Schemes*

* 795 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the nature of assistance given to the Central Health Service Schemes functioning in our State; and

(*b*) the diseases that are surveyed in our State under the Pilot Survey Project?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) Assistance is received in the shape of cash subsidies, materials and/or equipment for the several schemes of the Medical and Public Health Departments.

(*b*) Yaws, Guinea worm and Smallpox.

SRI N. K. PALANISAMI: Sir, whether any survey has been conducted regarding the large prevalence of dysentery and typhoid particularly in the City of Madras and may I know whether the Government were able to find any such cases?

THE HON. SRI M. A. MANICKAVELU: This is a different question. The original question asked for is about the assistance received from the Centre for the various schemes. If the hon. Member Sri N. K. Palanisami puts a separate question I will answer.

*Education Ministers' Conference*

* 796 *Q.*—SRI A. VEDARATHNAM: } SRI S. M. ANNAMALAI: } கனம் நிதி அம்மைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-நவம்பர் முதல் வாரத்தில் டெல்லியில் நடந்த கல்வி அமைச்சர்கள் மகாநாட்டில் செய்த முடிவுகளின் சாராம்சம் என்ன?

(இ) இவற்றின்பேரில் நம் மாநில சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கிறது?

(உ) அவை எப்போது அமுலுக்கு வரும்?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) The Conference discussed generally matters relating to—

(i) Programme of expansion or improvement of primary education during the Third Plan period.

(ii) Improvement in the salaries of teachers in general and primary teachers in particular.

(iii) Propagation of Hindi.

(iv) Stimulation of national consciousness among students.

(v) Policy regarding admission of students to Universities.

(vi) Grants-in-aid to affiliated colleges.

(vii) Education of girls and women in Third Plan.

(*b*) & (*c*) The recommendations have been taken due note of when finalizing the Education Third Plan of the State.



13th March 1961]

SRI A. VEDARATHNAM: மாநாட்டில் குறிப்பிட்ட ஹிந்தி அபிவிருத்திப்பற்றி என்ன முயற்சி எடுத்துக்கொண்டார்கள். அருகிலுள்ள ஆந்திர பிரதேச ஜில்லாவிற்கு ஒரு ஹிந்தி கல்லூரி ஏற்படுத்த இருக்கிறது, இந்தத் துறையில் நமது அரசாங்கமும் முயற்சி எடுக்குமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: எந்த அடிப்படையில் ஹிந்தி போதிக்கப்படவேண்டும் என்பதைப்பற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டது தெரிந்ததே.

SRI S. M. ANNAMALAI: கல்வி அமைச்சர் மாநாட்டில் ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்கப்படும் என்பதைப்பற்றி பேசப்பட்டதா?

THE HON. SRI C. SUBRAMANIAM: ஆங்கிலம் கூடாது என்று யாரும் சொல்லவில்லை. ஆங்கிலம் மொழியாகத் தொடர்ந்து பயிலப்படும்.

SRI K. VINAYAKAM: In that Conference of Education Ministers which was held in New Delhi, was any subject like the students participation in active politics which resulted in the growing unrest of this kind, discussed and if not, will the Hon. the Minister pilot the same subject in the coming conference and take a decision from the matured experience of the other Ministers?

THE HON. SRI C. SUBRAMANIAM: The subject is generally discussed in every conference. It is not coming in any particular form. The problem is generally understood by all the Education Ministers and I am sure they will be taking steps in their own way in each State.

SRI A. VEDARATHNAM: மாணவர்கள் அரசியலில் தலையிடக்கூடாது என்பது சம்பந்தமாக சர்வகட்சி கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டபோது ஒரு கட்சி மாத்திரம் ஒப்புதல் தரவில்லை என்ற காரணத்திற்காக திட்டம் கைவிடப்பட்டதா? இந்தத் திட்டத்தைக் கைவிடாமல் மேலும் சர்க்கார் எடுத்துக்கொள்வதற்கு முன்வருமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: இது டில்லியில் நடந்த மாநாட்டைப் பொறுத்தது.

SRI V. K. KRISHNAMURTHY: அறிவு வளர்ச்சிக்காக கல்வியைப் போதிக்கும்போது, ஒழுக்க வளர்ச்சிக்கும் இறைவன் அறிவு பெருகுவதற்கு கல்வி போதிப்பதற்கும் அரசாங்கத்தில் யோசனை இருக்கிறதா என குறிப்பிடப்பட்டதா?

THE HON. SRI C. SUBRAMANIAM: ஒந்த மாநாட்டில் இதைப் பற்றிய யோசனை குறிப்பிடப்படவில்லை.

[13th March 1961

*Fertilizer factories*

* 797 *Q.*—SRI S. M. ANNAMALAI :
SRI A. VEDARATHNAM :
SRI V. K. KOTHANDARAMAN : } கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப்பதிலளிப்பாரா—

(அ) மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நம் மாநிலத்தில் இரசாயன உரத் தொழிற்சாலைகள் ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா ?

(இ) அப்படியானால் பொதுத் துறையிலா அல்லது தனியார் துறையிலா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) & (இ) So far as the public sector is concerned under the Integrated Neyveli Lignite Project which is sponsored by the Central Government, manufacture of urea with a fixed nitrogen content of 70,000 tons per annum is contemplated in the Third Five-Year Plan period.

The Government of Madras have no proposal to set up, of their own, any fertilizer factory.

In the private sector licences have been granted for the establishment of four fertilizer factories recently—three for the manufacture of super-phosphate and one for the manufacture of ammonium phosphate. These units are expected to go into production during the Third Plan period.

SRI S. M. ANNAMALAI : உரத்தொழிற்சாலைகள் எங்கெங்கே ஆரம்பிக்கப்படும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : எண்ணூரில் ஒன்றும், கடலூரில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றும், அமோனியம் பாஸ்பேட்டுக்காக எண்ணூரில் இன்னொரு தொழிற்சாலையும் ஆரம்பிக்கப்படும்.

SRI A. VEDARATHNAM : எலும்பிலிருந்து போன் டைஜஸ்டர் செய்வதற்கு பல இடங்களில் சிறு கைத்தொழிற்சாலைகள் நடைபெறுகின்றன. இதைப் பெரிய அளவில் நடத்துவதற்கு யோசனை இருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : பெரிய அளவில் செய்யமுடியாது. அங்கே சிறு தொழிற்சாலைகள் உர உற்பத்திக்கு அதிகமாக இருக்கின்றன.

SRI V .K. RAMASWAMY MUDALIYAR : Is the Hon. the Minister aware that the State will become self-sufficient if all the factories mentioned by him go into production?

THE HON. SRI R. VENKATARAMAN : Our demand is much more of what these factories will be able to supply. That is why the Government of India licensed certain more major factories and joint factories of this kind.



13th March 1961]

SRI N. S. RAMALINGAM : தஞ்சாவூரில் ஆரம்பிக்கப்பட்ட சூபர்பாஸ்பேட் தொழிற்சாலையைப்போல், நாகப்பட்டினத்திலும் ஆரம்பிக்க யோசனை உண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இம்மாதிரி ஆரம்பிக்க லைசன்ஸ் ஒன்றும் கொடுக்கப்படவில்லை. ஆனால் அங்கே வைக்கவேண்டும் என்பதுதான் சர்க்காரின் விருப்பம்.

SRI K. PERIANNAN : பெரம்பலூர் தாலுக்காவிலும் ஏராளமான உரத் தொழிற்சாலைக்கு வேண்டிய கனிப்பொருள்கள் கிடைப்பதனால் அங்கே ஒரு உர உற்பத்திசாலை ஆரம்பிப்பதற்கு முன்வருமா ? இதைப்பற்றி விண்ணப்பம் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதுமாதிரி இந்தப் பகுதியிலும் மற்றப்பகுதியிலும் மனுப்போடவில்லை.

*Ministers' tours*

* 798 *Q.*—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government have taken a decision—

(i) to stop the practice of Ministers travelling in private cars while on tour in the districts and

(ii) to provide Government cars on such occasions?

THE HON. SRI C. SUBRAMANIAM : (i) Ministers use private cars for their tours in the districts only on those occasions when Government cars are not available.

(ii) No Sir. It would not be economical to have a separate Government car reserved solely for the use of Ministers, while touring each district.

SRI S. M. ANNAMALAI : சர்க்கார் கார்கள் இல்லாதிருக்கிறபோது தனியார் கார்களில் செல்வதாக கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார். கலெக்டர்கள் கார்கள் இருக்கின்றன. பி.டீ.ஓ. கார்கள் இருக்கின்றன, ஆகவே அமைச்சர்கள் சுற்றுப்பிரயாணம் செய்கிறபோது அவைகளை ஏன் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கலெக்டர் கார் அவர்கள் உபயோகத்திற்கு. அவர்கள் கார்களை கேட்டு வாங்கும் நிலையில் நாங்கள் இப்பொழுது இல்லை.

*Technical College*

* 799 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை ஜில்லா தேனியில் தென்னாடு டெக்னிக்கல் காலேஜ் சர்க்கார் அங்கீகாரம் பெற்றது என பத்திரிகையில் விளம்பரம் செய்வதை சர்க்கார் அறியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir. No such advertisement has come to the notice of the Government.

[13th March 1961

SRI N. R. THIAGARAJAN: பத்திரிகையில் விளம்பரம் செய்து பல மாணவர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் 150 ரூபாய் வாங்கி, சர்க்கார் அங்கீகாரம் பெற்றது, ஸ்காலர்ஷிப் வரும் என்று சொல்லி 150 மாணவர்களுக்கு மேல் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். இதுபற்றி போலீசாரிடம் புகார் செய்ததில் அவர்கள் இதைக் கவனிக்கவில்லை. ஆகவே அரசாங்கமாவது இனிமேல் இத்தகைய காரியங்கள் நடைபெறாமல் இருக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்குமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: அம்மாதிரி விளம்பரம் சர்க்கார் கவனத்திற்கு வரவில்லை. அது சர்க்கார் கவனத்திற்கு வந்தால் அதுபற்றி பரிசீலனை செய்யப்படும்.

*Saraswathi Mahal Library*

* 800 Q.—SRI A. VEDARATHNAM: கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை சரஸ்வதி மஹால் நூல் நிலையத்திற்கு அரசாங்கம் அளித்துவரும் உதவி என்ன?

(இ) இதுவரை இதிலிருந்து அச்சிட்டு வெளியிட்டிருக்கும் நூல்கள் எவை? இன்னும் பிரசுரிக்க இருக்கும் நூல்கள் எவை?

(உ) இதிலுள்ள புராதான சுவடிகள் பழுதடையாமல் இருக்க என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது?

THE HON. SRI C. SUBRAMANIAM: (அ) The Government are sanctioning grants every year for the following purposes:—

| | RS. |
|---|---|
| 1. Recurring grant for the purchase of Reference books ... ... ... ... ... ... .. | 300 |
| 2. Recurring grant for the improvement and publication of the journal of the Library ... ... | 2,000 |
| 3. Recurring grant towards the maintenance of the Library ... ... ... ... ... ... ... | 27,700 |
| 4. Recurring grant for the publication of manuscripts ... ... ... ... ... ... . | 20,000 |
| 5. A temporary grant towards the expenditure on the employment of two Special Modi Pandits (about). | 3,000 |

(இ) The Library has published 84 works so far and the publication of six manuscripts is in progress. A list of the above works is kept in the Legislature Library. The manuscripts awaiting publication are too numerous to be listed.

(உ) The manuscripts are preserved by application of modern disinfectants and chemicals. The contents of valuable but decaying manuscripts are preserved by copying them by the Pandits employed in the Library.



13th March 1961]

SRI A. VEDARATHNAM: சரஸ்வதி மஹால் லைப்ரரியில், மாஹாராஷ்டிரம், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற பல மொழிகளில் உள்ள புராதான சுவடிகள் நிரம்ப இருக்கின்றன. அதையெல்லாம் பரிசீலித்து தகுந்தவைகளை பிரசுரிக்க மத்திய சர்க்கார் உதவி நாடப்படுமா? இதுவரை அப்படி முயற்சி எடுத்துக்கொண்டு உதவி ஏதாவது கிடைத்திருக்கிறதா?

THE HON. SRI C. SUBRAMANIAM: மத்திய சர்க்காரிட மிருந்து நமக்கு ஏதாவது உதவி வந்திருக்கிறதா என்பதுபற்றி என்னிடம் இப்பொழுது புள்ளிவிவரம் இல்லை. அவசியமானால் அங்கிருந்து கேட்டுப் பெற முடியும். (After a pause) We have received assistance from Central Government during some years, Sir.

SRI A. VEDARATHNAM: அங்குள்ள புராதானச் சுவடிகள் பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முந்தியவையாக இருப்பதால் அவை சிதலமாகப் போவதற்குமுன் அவற்றின் நகல்களை எடுத்து வைத்துக் கொள்ள அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: அந்த முயற்சி செய்யப் படுகிறது.

MR. SPEAKER: Questions are over.

## II.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1961-62—*cont.*

### (1) DEMAND VII—IRRIGATION.

### (2) DEMAND XXXVIII—CAPITAL OUTLAY ON IRRIGATION.

MR. SPEAKER: நீர்ப்பாசனத்தின் மீதுள்ள மான்யக் கோரிக்கை விவாதத்திற்கு வரும். 7-வது டிமாண்டும், 38-வது டிமாண்டும் விவாதத்திற்கு வரும்.

THE HON. SRI P. KAKKAN: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,82,81,200 under Demand VII—Irrigation."

Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 7,87,76,400 under Demand XXXVIII—Capital Outlay on Irrigation."

MR. SPEAKER: Motions moved—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,82,81,200 under Demand VII—Irrigation."

"That the Government be granted a sum not exceeding Rs. 7,87,76,400 under Demand XXXVIII—Capital Outlay on Irrigation."

[Mr. Speaker] [13th March 1961

திரு. சசிவர்ண தேவர் அவர்கள் கொடுத்திருக்கும் 135-வது வெட்டுப் பிரேரணையை அவர் பிரேரேபிப்பார் என்று நினைக்கிறேன். ஆகவே, அவர் அதை பிரேரணை செய்யலாம்.

**SRI T. L. SASIVARNA THEVAR :** என் பெயரிலுள்ள வெட்டுப்பிரேரணையை பிரேரேபிக்கிறேன்.

"That the allotment of Rs. 1,82,81,200 under Demand VII—Irrigation be reduced by Rs. 100."

**MR. SPEAKER :** திரு. கோதண்டராமன் அவர்களின் 154-வது வெட்டுப் பிரேரணையை அவர் பிரேரேபிப்பார் என்று நினைக்கிறேன். ஆகவே அவர்கள் அதை பிரேரேபிக்கலாம்.

**SRI V. K. KOTHANDARAMAN :** என் பெயரில் வந்திருக்கக் கூடிய 154-வது வெட்டுப் பிரேரணையை பிரேரேபிக்கிறேன்—

"That the allotment of Rs. 7,87,76,400 under Demand XXXVIII—Capital Outlay on Irrigation be reduced by Rs. 100."

MR. SPEAKER : Cut Motions moved—

"That the allotment of Rs. 1,82,81,200 under Demand VII—Irrigation be reduced by Rs. 100."

"That the allotment of Rs. 7,87,76,400 under Demand XXXVIII—Capital Outlay on Irrigation be reduced by Rs. 100."

**THE HON. SRI P. KAKKAN :** கனம் சபாநாயகர் அவர்களே, முன்னுரையாகச் சொல்லவேண்டியதை அச்சிட்டு அங்கத்தினர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. பட்ஜெட் பொது விவாதத்தில் கலந்து கொண்டு பல அங்கத்தினர்கள் இங்கு பேசினார்கள், அவர்கள் சொன்ன காரியங்களுக்கு நான் இப்பொழுது கொடுத்திருக்கும் பதில் திருப்தியளிக்கும் என்று நினைக்கிறேன். மேலும் ஏதாவது சொல்லவேண்டியிருந்தால், இறுதியில் அவர்களின் அபிப்பிராயங்களை தெரிந்து கொண்ட பின் நான் பதிலளிக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**MR. SPEAKER:** கனம் அமைச்சர் அவர்களுக்கு ஒரு மணி நேரம் போதுமா? (கனம் ஸ்ரீ. பி. கக்கன்: போதும்). அதிகம் பேர்கள் பெயர்கள் கொடுக்கவில்லை. ஆகவே கால்மணி நேரம் அங்கத்தினர் அவர்கள் பேசலாம். பேர்கள் வந்த பிற்பாடு நேரத்தை மாற்றலாம்.

**SRI T. L. SASIVARNA THEVAR :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த முக்கியமான மான்யத்தின் மீது நான் கொண்டு வந்துள்ள வெட்டுப் பிரேரபணையை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நமது மாநிலத்திலுள்ள சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் எல்லாம் ஏற்கனவே முடிந்து விட்டன, அவைகள் உபயோகப் படுத்தப்பட்டு விட்டன என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. நமது மாநிலத்திலுள்ள எல்லா ஆறுகளிலும் ஆங்காங்கு அணைகள் கட்டப்பட்டு ஜலம் பூராவும் உபயோ



13th March 1961] [Sri T. L. Sasivarna Thevar]

கப்படுத்தப்பட்டு விட்டதென்று பட்ஜெட் பிரசங்கத்தில் நிதி
அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இதன்
மூலம் நம் நாட்டில் ஏற்பட்டுள்ள தண்ணீர் பிரச்னை பூராவும்
நீக்கப்பட்டு விட்டதா என்றால் இல்லை என்றுதான் கூறவேண்டும்.
நமது மாநிலத்தில் நீர்ப்பாசன வசதி மிகவும் குறைவாயுள்ள
மாவட்டம் ராமநாதபுரம் மாவட்டம்தான் என்பது அமைச்சர்
அவர்களுக்குத் தெரியும். அதிலும் கிழக்கு ராமநாதபுரம் பகுதி
இத்துறையில் மிகவும் பின்தங்கிக் கிடக்கிறது என்பதும் அமைச்
சர் அவர்களுக்குத் தெரியும். அதற்குமேல் பெரியார் திட்டம் என்ற
ஒரு திட்டம் இருக்கிறது. இந்த மேல் பெரியாறு திட்டத்தை
நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று சென்ற நான்கு ஆண்டு
காலமாக இந்த சபையிலுள்ள, அந்தப் பிராந்தியத்திலிருந்து
வரும் எல்லாக் கட்சி அங்கத்தினர்களும் வேண்டுகோள் விடுத்
திருக்கிறார்கள். அதற்கு அரசாங்கத் தரப்பிலிருந்து, மேல்பெரி
யாறு திட்டம் சம்பந்தப் பட்ட வரையில் அரசாங்கக் கொள்கை
என்ன என்று திட்டவட்டமாக சொல்லப் படவில்லை, ஆகவே
அதுபற்றி திட்டவட்டமாக விளக்க வேண்டுமென்று நான் அமைச்
சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன். அந்த ஆறு ஒரு "இன்டர்
ஸ்டேட் ரிவர்". அது இரு மாநிலங்களுக்கும் சொந்தமானது
என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனமலை போன்ற இடங்
களிலிருந்து நமது மாநிலத்தில் உற்பத்தியாகக் கூடிய பல ஆறுகள்
அதில் சேர்ந்து கலக்கின்றன. பெரியாறு தண்ணீரை
பெரியார் ப்ராஜக்ட் மூலம் நம் மாநிலத்தில் உபயோகப்
படுத்திக் கொண்டிருக்கிறோம். அப்படிப் பார்த்தாலும்
கூட, அந்த திட்டத்தை நிறைவேற்ற, அதன் மூலம்
கிடைக்கக் கூடிய தண்ணீரை நம் ராஜ்யத்திற்கு திருப்பி
யனுப்ப கேரள அரசாங்கத்திற்கு ஒரு ஆட்சேபணையும்
இருக்க முடியாது. இது சம்பந்தமாக அவ்வப்போது பத்திரி
கையில் வரும் செய்திகளை பார்க்கும்போது வருத்தப்
படக் கூடியநிலையில் இருக்கிறது. கேரள ராஜ்ய அமைச்சர்
கள் ஒரு சிலர், ஒரு சொட்டு தண்ணீர் கூட இனிமேல் கேரளாவி
லிருந்து தமிழ்நாட்டிற்கு தரமுடியாதென்று கூறுகிறார்கள்.
ஆனால் சமீபத்தில் கேரள ராஜ்ய சட்டசபையில் பேசிய கேரள
நாட்டு உதவி பிரதம மந்திரியவர்கள் ஒரு அறிக்கை விட்டிருக்
கிறார்கள். "சர்ப்ளஸ் வாட்டர்ஸ்—மட்ராஸ் டிமான்ட் நாட்
கிரான்டட்—சங்கர்ஸ் ரிப்ளை இன் அஸெம்பளி." எந்தத் தண்
ணீரைக் குறிப்பிட்டு சென்னை அரசாங்கம் கேட்கிறது, திருப்பி
விடவேண்டுமென்று, அதுபற்றி நாளது வரையில் எந்தத் தண்
ணீரை சென்னை அரசாங்கம் கேட்கிறதென்று அவர்களிடமிருந்து
பதில் வரவில்லை என்று கேரள சட்டசபையில் கூறியிருக்கிறார்கள்.
இதை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், இந்தத் திட்டத்தை
நிறைவேற்றுவதில் கேரள அரசாங்கத்திற்கு எவ்வித ஆட்சே
பணையும் இருக்க முடியாது. ஆனால் மூன்றாவது ஐந்தாண்டுத்
திட்டத்தில் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக 27½ லட்சம்
ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கிறது. அதில் 22 லட்சம் பாரம்பிக்

[Sri T. L. Sasivarna Thevar] [13th March 1961

குளத் திட்டத்திற்கு மட்டும் போய்விடும், மீதி 6 கோடி வேறு காரியத்திற்காக ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கலாம். ஆகவே மூன்றாவது திட்டக் காலத்தில் நிறைவேற்றப் படக்கூடிய ஒரே ஒரு திட்டம் பரம்பிக்குளத் திட்டம்தான், வேறு ஒன்றுமில்லை என்றுதான் சர்க்கார் கருதுகிறார்கள் என்றுதான் நான் நினைக்கிறேன். அதோடு, மற்ற மாநிலத்திலுள்ள அதிகப்படி. தண்ணீரை நம் மாநிலத்திற்கு திருப்பி விடுவதற்கான முயற்சிகள் செய்வதற்கு 100 லட்சம் ஒதுக்கி வைத்திருப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. எந்த முயற்சிகள் செய்ய ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறதென்று அறிய விரும்புகிறேன். பின்னர், இந்தத் திட்டத்தை நிறைவேற்ற இன்னும் ஆறு ஆண்டு காலம் தமிழ்நாடு பொறுத்திருக்க வேண்டுமென்றால் கிழக்கு ராமநாதபுர மாவட்டப் பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட வரையில், அவர்களுக்கு ஒரு பெரிய அநீதி விளைவிப்பதாகும். ஆகவே உடனடியாக ஸதர்ன் ஸோனல் கௌன்ஸிலில் இதுபற்றி தீர்மானத்தைக் கொண்டு வந்து இந்தப் பிரச்னை பற்றி கேரள அரசாங்கத்தோடு நமது ராஜ்ய அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தி வேண்டிய முயற்சிகள் எடுத்துக்கொண்டால் நிச்சயமாக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலேயே இந்தத் திட்டத்தை சேர்த்துக் கொள்ள முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்த முறையில் பெரியாறு திட்டம் சம்பந்தமாக சட்டசபையில் கேள்வி ஒன்று வந்தபோது அதற்கு மராமத்து அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்திற்கு 10 கோடி ரூபாய் செலவாகும் என்றும், இதனால் 2 லட்சம் ஏக்கர்கள் பாசனவசதி பெறும் என்றும் தெரிவித்தார்கள். இவ்விதம் இரண்டு லட்சம் ஏக்கர் பாசனவசதி பெறக்கூடிய இந்தத் திட்டத்தை அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிறதா என்று பார்த்தால் இதுவரை அதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்திருப்பதாக தெரியவில்லை என்பதைப் பார்க்கும்போது மிகவும் வருத்தமாய் இருக்கிறது. ஆகவே உடனடியாக இந்த திட்டத்தைப்பற்றி ஸோனல் கவுன்ஸிலில் கொண்டு வரும்போது, இந்த திட்டமானது இன்டர் ஸ்டேட் சம்பந்தப்பட்டது என்று கூறி அதற்காக வேண்டிய நிதியை ஒதுக்கி, அதன் மூலம் கிழக்கு ராமநாதபுரம் பகுதி, மதுரையில் சில பகுதிகள் இவைகள் எல்லாம் பயன் பெறக்கூடிய அளவில் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அப்பர் பெரியாறு திட்டத்தைப் பொறுத்தவரையில் திட்டவட்டமாக சர்க்காருடைய கொள்கை என்ன என்பதை இந்த சபையில் சொல்லவேண்டும். அப்போதுதான் பொதுமக்களுக்கு இந்தத் திட்டத்தின் பேரில் நம்பிக்கை ஏற்படும்.

மேலும், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் பலவற்றை செய்து முடிக்க வேண்டிய அவசியம் இன்னும் எவ்வளவோ இருக்கின்றது. சென்ற காலத்தில் தமிழ் மன்னர்கள் எல்லாம் எத்தனையோ திட்டங்களை எல்லாம் போட்டிருக்கிறார்கள். வெற்றிகரமாகவும்



13th March 1961] [Sri T. L. Sasivarna Thevar]

செய்து முடித்திருக்கிறார்கள். இருமனூர் திட்டம் என்ற ஒரு திட்டம் இருந்து கொண்டிருக்கிறது. அதாவது வைகை நதியில் இருந்து தண்ணீர் இதன் மூலமாக 30, 35 மைல் ஓடுகின்றது. இதன் மூலம் 70, 80 கிராமங்களுக்கு வசதி கிடைத்துக்கொண்டிருந்தது. இந்தக் கிராமங்கள் எல்லாம் பிற்காலத்தில் ஜமீன் ஏரியாவை சேர்ந்திருந்ததினால் சில கிராமங்களில் இந்த நதியே இல்லாத அளவுக்கு இப்போது நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இதை நல்ல முறையில் சீர்திருத்தம் செய்து கொடுத்தால் சுமார் 60, 70 கிராமங்களுக்கு நீர்ப்பாசனவசதி கிடைக்கும். இதற்காக ஜாஸ்தியாக செலவு செய்யவேண்டிய அவசியமும் இராது. இதற்கு ஒரு கோடியோ அல்லது இரண்டு கோடியோ தான் செலவு செய்யவேண்டியிருக்கும் என்று தெரிகிறது. இதை யெல்லாம் நான் வருடந்தோறும் சொல்லிக்கொண்டே வருகிறேன். ஆனால் அரசாங்கம் இதில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க முன் வந்திருப்பதாக தெரியவில்லை.

THE HON. SRI P. KAKKAN: அரசாங்கம் முன்வரவில்லை என்று சொல்வது சரியல்ல. அரசாங்கம் ஒவ்வொரு காரியத்திலும் பரிசீலனை செய்து ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறது.

SRI T. L. SASIVARNA THEVAR: மூன்று ஆண்டுகளாக இவ்விதம் ஏற்பாடு செய்து கொண்டிருப்பதாகத்தான் சொல்லப்படுகிறது. எவ்விதம் தான் ஏற்பாடு செய்கிறார்கள் என்று தெரியவில்லை. மேலும் நாராயணக்காவேரி திட்டம் என்ற ஒரு திட்டம் இருக்கிறது. இதில் குந்தா என்ற ஆறு இருக்கிறது, இதிலிருந்து 70, 80 கிராமங்களுக்கு தண்ணீர் பாயக்கூடிய வசதி இருக்கிறது. இதற்காக ஒரு கோடி ரூபாய் செலவாகும் என்று சொல்லப்படுகிறது. இதைப்பற்றி நான் நான்கு ஆண்டுகளாக சொல்லிக் கொண்டிருக்கிறேன். இதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. ஆகவே இதைப்பற்றி உடனடியாக நல்லமுறையில் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் பகுதியைப் பொறுத்தவரையில் பலப் பல சிறிய ஆறுகள் ஓடுகின்றன. இவைகளை எல்லாம் நல்ல முறையில் பரிசீலனை செய்து அதற்கேற்றாற்போல் பல திட்டங்களைப் போட்டு நிறைவேற்றினால் நிச்சயமாக ஐந்தாண்டுத்திட்டத்தில் அதிகமாக உற்பத்தியாகும் என்பதை அமைச்சர் அவர்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கிணறுகள் வெட்டுவதற்குப் போதுமான பணம் இந்தப் பட்ஜெட்டில் ஒதுக்கப்படவில்லை என்பதை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச்சொன்னார்கள். ஆகவே கிணறுகள் வெட்டுவதற்கு போதுமான அளவு பணம் ஒதுக்கிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக நதி சம்பந்தமாக ஆறுகளை எல்லாம் ஒன்றாக இணைத்து நல்லமுறையில் பயன்படக்கூடிய முறையில் ஒரு திட்டம் வகுக்கவேண்டும். முன்

காலத்தில் கங்கை நதியை காவிரியோடு சேர்ப்பதற்கு ஒரு திட்டம் வகுத்து அதைப்பற்றி ஆராய்ச்சி நடத்திய விவரங்கள் அறிக்கை மூலமாக இப்போதும் மத்திய சர்க்காரிடத்தில் இருப்பதாக கேள்விப்படுகிறேன். அதேபோன்று நான் கோதாவரி தண்ணீரையும் பெண்ணை தண்ணீரையும் கொண்டுவந்தால் தென்னாற்காடு மாவட்டத்திற்கு பயன்படும் என்று சொல்லப்படுகிறது. இவைகளை எல்லாம் அரசாங்கம் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக மொழிவாரியாக மாகாணங்கள் அமைக்கப்பட்ட பிறகு ஒவ்வொரு மாகாணத்திலும் அவரவர்கள் தங்கள் ராஜ்யத்தில் இருக்கும் நதியை எங்கள் நதி, எங்கள் நதி என்று சொல்லக்கூடிய முறை தான் கையாளப்படுகிறது. இந்த நிலைமையை மாற்றவேண்டுமென்றால், இப்போது எல்லா மாகாணங்களுக்கும் இருக்கின்ற ரோடுகளை பார்த்துக் கொள்வதற்கு 'நேஷனல் ஹைவேஸ்' என்று ஏற்படுத்தியிருப்பது போல் நதிகளையும் ஒன்றாகச் சேர்த்து பார்த்துக்கொள்ளும் முறையில் மத்திய சர்க்காரின்கீழ் 'நாஷனல் வாட்டர் வேஸ்' என்கின்ற முறையில் ஒரு திட்டத்தை வகுத்துவிட்டால் சாதாரணமாக வரக்கூடிய கட்சிப் பூசல்கள், மாகாணத்திற்கு மாகாணம் ஏற்படக்கூடிய சச்சரவுகள் ஏற்படாது என்று கருதுகிறேன். தண்ணீர் சம்பந்தப்பட்ட வரையில் பிரச்னைகள் அரசியலுக்கு அப்பாற்பட்டு இருக்கவேண்டும். அப்போதுதான் நல்ல முறையில் திட்டங்கள் நிறைவேற முடியும். அப்படி அமைத்துவிட்டால், அதில் கட்சிப் பூசல்கள் எல்லாம் வராமல், இது சம்பந்தமான டெக்னிஷியன்கள், நல்ல இன்சினியர்கள், நல்ல முக்கியஸ்தர்கள் இதில் ஒத்துழைத்து நல்ல முறையில் திட்டங்களை உருவாக்க முடியும். அதன்மூலம் மாகாணத்திற்கு மாகாணம் தண்ணீரை நல்ல முறையில் கொடுத்து உதவி அதன்மூலம் சிறந்த பயனை அடைய முடியும் என்பதை தெரிவித்துக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**Sri T. K. SUBBIAH :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் மான்யத்தை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். குறிப்பாக நீர்ப்பாசன வசதிகள் நல்ல முறையில் தமிழ்நாட்டில் பெருகி அதன் மூலமாக விவசாயம் பெருகி வருவதைப் பார்க்கிறோம். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முக்கியமாக நல்ல பலனை, உடையார்பாளையம் தாலுகாவில் உள்ள மக்கள் அடைந்திருக்கிறார்கள், புள்ளம்பாடி வாய்க்காலில் இன்னும் சில நல்ல காரியங்கள் செய்யவேண்டும் என்பதை சொல்லவிரும்புகிறேன். பல பெரிய ஆறுகளை எல்லாம் தடுத்து நிறுத்தி கட்ட திட்டமிட்டிருந்தார்கள். ஏரிகளில் பொதுவாக அணைகளை கட்டும்போது, வெறும் கருங்கல்லையும் மண்ணையும் வைத்து கட்டிவிடுகிறார்கள். பின்னால் நீர் அதிகமாக வரும்போது அலைமோதி இந்தக் கரைகள் எல்லாம் பழுதாகிறது. ஆகவே இதில் கொஞ்சம் செலவு அதிகமானாலும் சிமின்ட் கான்கிரீட் போட்டு கட்டவேண்டும் என்று



கேட்டுக்கொள்கிறேன். அதோடு, இந்த வாய்க்காலின் மூலமாக பயன்படும் இடங்களில் எல்லாம் லஸ்கர்களை போடாமல் இருப்பதால் தண்ணீர் எவ்வளவு தேவை என்பதையோ அல்லது இதன் மூலம் எவ்வளவு நன்மை கிடைக்கிறது என்பதையோ சொல்வதற்கு வழியில்லாமல் இருக்கின்றது. இதையும் அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சுக்கிரநேரிக்கு வரக்கூடிய தண்ணீர் புள்ளம்பாடி வாய்க்காலினால் மட்டும் வரவில்லை. காவேரி தண்ணீரிலிருந்தும் வருகிறது. அதோடு மழைத் தண்ணீர் மூலமாகவும் வருகிறது. இதில் இப்போது வீணாகப்போகும் தண்ணீரை கருப்பாக்கட்டளை என்ற ஊருக்கு அருகாமையில் ஓர் அணை கட்டினால் அந்தப் பகுதியிலுள்ளவர்களுக்கும் மிகவும் வசதியாக இருக்கும். இதையும் அரசாங்கம் கவனிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மருதையாறுத் திட்டம் வரும் என்று எங்கள் பகுதியிலுள்ள மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக மருதையாறுத் திட்டம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படும் என்கின்ற நல்ல செய்தியை இந்த சபையிலே அறிவித்தால் மிகவும் நன்றாக இருக்கும். இந்தத் திட்டத்தினால் அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு நல்ல பலன் ஏற்பட முடியும். ஒரு சந்தர்ப்பத்தில் இதனால் பல கிராமங்களுக்கு நஷ்டம் ஏற்படும் என்று சொல்லப்பட்டது. அதன் காரணமாக எல்லோரும் அச்சப்பட வேண்டிய நிலை இருந்தது. பின்னால் நம்முடைய ராஜ்யத்திலுள்ள நல்ல திறமையான இன்சினியர்களின் பரிசீலனை காரணமாகவும், அதிகாரிகளின் ஒத்துழைப்பு காரணமாகவும், அமைச்சர் அவர்கள் இதில் நன்றாக பரிசீலனை செய்து யாருக்கும் நஷ்டம் ஏற்படாதவாறு இதை அமைக்கவேண்டும் என்று எண்ணியதின் காரணமாகவும் இந்தத் திட்டத்தை மறு பரிசீலனை செய்து பார்த்து இப்போது புதிய முறையில் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. முன்னால் இதன் மூலமாக 15 கிராமங்கள் மூழ்கிவிடும் என்கின்ற நிலைமை இருந்தது. இப்போது இதனால் 6 கிராமங்கள்தான் பாதிக்கப்படும் என்கின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்போது அந்த ஆறு கிராமத்திலுள்ளவர்கள் தாங்களாகவே அதை விட்டுக்கொடுக்கக்கூடிய அளவில் மனம் பக்குவமடைந்துவிட்டார். ஆகவே இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும். இந்தத் திட்டம் காலங்கடந்து செல்வதினால் இந்தக் கிராமங்களில் உள்ளவர்கள், தங்களுக்கு எப்போது எந்தவிதமான கஷ்டம் ஏற்படுமோ என்று நினைத்துக்கொண்டு, எப்போது ஊரை விட்டுவிட்டுப் போகவேண்டியிருக்குமோ என்ற எண்ணத்தில் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்தத் திட்டத்தைப்பற்றி சந்தேகத்திற்கு இடமில்லாத அளவில் அரசாங்கம் சொல்லிவிட வேண்டும். இவ்விதம் தெரிவிக்காததின் காரணமாக அந்தக் கிராமங்களில் எந்தவிதமான முன்னேற்றகரமான காரியங்களோ, முன்னேற்றகரமான கட்டி

[Sri T. K. Subbiah] [13th March 1961

டங்களோ ஏற்படாத நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே
அந்தக் கிராமத்திலுள்ள மக்கள் தெளிவாக அறிந்துகொள்ளக்
கூடிய வகையில் இந்த ஆண்டே, அதாவது மூன்றாவது
ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாவது ஆண்டே இதற்கான வேலை
கள் ஆரம்பிக்கப்படும், ஆகவே இந்தக் கிராமங்களிலுள்ளவர்கள்
நல்ல முறையில் வெளியேறவிடவேண்டும் என்ற கோரிக்கையை
இந்தச் சபையிலேயே அரசாங்கம் தெரிவிக்கவேண்டும்.
ஏனென்றால், அவர்கள் இப்போது அவல நிலையில்
9-30 a.m. வாழ்கிறார்கள். அவர்களுக்கு மற்ற கிராமத்தவர்கள்கூட
கடன் கொடுக்க மறுக்கிறார்கள். குறிப்பாகச் சொல்லப்
போனால் மற்ற கிராமத்தவர்கள் பெண் கொடுப்பது
என்றால்கூட, உங்கள் ஊரே மூழ்கப் போகிறதே, உங்கள் ஊர்
காரருக்கு எப்படி பெண் கொடுப்பது என்று கேட்கிறார்கள்.
நிரந்தரமாகப் போகவேண்டும் என்று ஏற்பட்டால் அதை சீக்கிர
மாகத் தெரிவித்தால் நல்லது. ஆக, இந்தத் திட்டத்தை
மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே வலியுறுத்திச் சேர்த்து
அதை விரைவாக நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன். இந்தத் திட்டத்திற்கு சுமார் 2 கோடி ரூபாய் செலவாகும்
என்று எதிர்பார்க்கப்படுகிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்
திலே நல்லதொரு திட்டமான இதை—பெரிய திட்டங்களுக்காக
பல கோடி ரூபாய்கள் செலவிட்டாலும்கூட, 4—5 கோடி ரூபாய்
மிச்சம் இருக்கும் என்று எதிர்பார்க்கிறேன்—எடுத்துக்கொண்டு
நிறைவேற்றினால் 2 கோடிதான் செலவாகும். இது நல்ல திட்டம்
தான் என்று கருதுகிறேன். 2 கோடி ரூபாயில் வாண்ட
பிரதேசமாகிய உடையார்பாளையம் தாலுகாவில் 25,000 ஏக்கர்
பாசனத்திற்கு வரும். இந்தத் திட்டத்தை சீக்கிரமாக பரிசீலனை
செய்யவேண்டும். இத்துடன் அதன் மூலமாகத்தான் நிரந்தரமாக
10,000 ஏக்கர் பாசனம் ஆகக் கூடிய பொன்னாறு தண்ணீர் வசதி
பெற்றாக வேண்டியிருக்கிறது. கொள்ளிடத்திலிருந்து பொன்
னாற்றின் தலைப்பிற்குத் தண்ணீர் வரவேண்டியிருக்கிறது.
கொள்ளிடம் அதிக பள்ளமாகப் போனதால் அதன் தலைப்பி
லிருந்து தண்ணீர் வர முடியாமல் இருந்தது. பல ஆண்டுகளுக்கு
முன் தலைப்பை இன்னும் மேற்கே தள்ளிப் போட்டார்கள். இப்
போது இன்னும் பள்ளம் அதிகமாகப் போய் விட்டதால் தண்ணீர்
ஏற முடியாமல் ஏற்பட்டு 10,000 ஏக்கர் நிலத்தின் பாசனம் அடி
யோடு தடைபட்டிருக்கிறது. பறம்பை வைத்து தண்ணீர் போய்க்
கொண்டிருந்தது ஒரு காலத்தில். இப்போது அடர்ந்த காடாக
இருப்பதால் பறம்பை வைத்து தண்ணீர் போவதும் கஷ்டமாக
இருக்கிறது. பொன்னாற்றில் பாசனம் செய்ய முடியாமல் இருக்
கிறது. இது விஷயத்தில் என்ஜினியர்கள் நிரந்தரமாக ஒரு
திட்டத்தைத் தயாரித்திருக்கிறார்கள். மருதையாறு திட்டத்திலே
தலைப்பை சுக்கிரநேரியில் வைத்துவிட்டால் நலமாக இருக்கும்
என்று இந்தத் திட்டத்தை உறுதுணையாக வைத்துக்கொண்டிருக்
கிறார்கள். அத்துடன் அல்லாமல் நீப்பலூர் பகுதியில் வெண்ணா
றோடையை தேக்கி வைக்க அணைகளைக் கட்டுவதை மருதையாறு
திட்டம் காரணமாக நிறுத்தி வைத்திருக்கிறார்கள். மருதையாறு



13th Masch 1961] [Sri T. K. Subbiah]

திட்டம் வருவது தாமதப்படுவதன் காரணமாக பல சின்ன
திட்டங்களெல்லாம் தடைபட்டிருக்கின்றன. பொன்னாறுக்கு நிரந்
தரமாக வரும் திட்டம் தடைபட்டிருக்கிறது. மருதையாறு
திட்டம் வந்துவிட்டால் இதெல்லாம் நல்ல முறையில் நடைபெறும்
என்ற எண்ணத்தில் சிறிய சிறிய திட்டங்களெல்லாம் நிறுத்தப்
பட்டிருக்கிறது. ஆகவே இந்தத் திட்டம் விரைவில் வந்தால் இந்த
விதமான கஷ்டங்கள் நிவர்த்தியாகும் என்று தெரிவித்துக்
கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஆற்று நிர்ப்பாசனத்திலே இப்போது திருச்சி
எக்ஸிகூடிவ் டிவிஷனின் கீழ் சாதாரணமாக திருச்சியிலிருந்து
சிதம்பரம் வரையில் இந்தப் பகுதி இருக்கிறது. விவசாயிகள்
ஏதாவது தங்களுடைய கஷ்டத்தைச் சொன்னால் நிலைமையை
என்ஜினீயர்கள் உடனடியாகப் பார்க்கவேண்டுமென்று சொன்னால்,
உடனடியாகப் போய்ப் பார்ப்பதற்குத் தக்க வசதி கிடையாது.
நிச்சயமாக ஒவ்வொரு டிவிஷன் எக்ஸிகூடிவ் என்ஜினீயருக்கும்
ஒரு ஜீப் அவசியம் கொடுத்துத்தான் ஆகவேண்டும். அதுவும்
கொள்ளிடத்தில் திடீரென்று வெள்ளம் வரும்போது அவர்கள்
போய்ப் பார்க்க முடியவில்லை. குறிப்பாக நந்தையாறு, கூழை
யாறு போன்ற ஆறுகளின் கீழ் நிலையற்ற பாசனம் கொண்ட ஒரு
பகுதி இருக்கிறது. அந்த ஆறுகளில் திடீரென்று வெள்ளம் வரும்.
வெள்ளம் வந்தால் இதில் வரக்கூடிய தண்ணீரை அடித்துக்
கொண்டு கொள்ளிடத்தில் விட்டுவிடும். அல்லது கொள்ளிடத்தில்
வெள்ளம் வந்தால் கொள்ளிடத்திலுள்ள மணலை இங்கே கொண்டு
வந்து மேடிட்டுவிடும். அதைப் பரிசீலனை செய்து, அமைச்சர்
அவர்களும் நேரில் பார்த்து அங்கு நல்ல நிலைமை ஏற்பட்டிருக்
கிறது—இப்போது ஷட்டர்ஸ் போட்டிருக்கிறார்கள். ஷட்டர்ஸ்
போட்ட பின்பும் நந்தையாற்றிலிருந்து கொள்ளிடத்திற்கு லஸ்கர்
கள் செல்லவேண்டுமானால்—முன்பெல்லாம் பரிசல்கள் உபயோ
கித்துக்கொண்டிருந்தார்கள்—இப்போது திடீரென்று வெள்ளம்
வரும் சமயத்தில் போய் ஷட்டர்ஸை திறப்பதோ, மூடுவதோ
முடியாத நிலை இருக்கிறது. அதற்கு இப்போது நந்தையாற்றிலே
கட்டப்பட்டுள்ள ஷட்டர்ஸின் மேல் நடந்து செல்லக்கூடிய முறை
யில் ஒரு பாலத்தை அமைத்தால் வசதியாக இருக்கும். லஸ்கர்ஸ்
மட்டுமல்லாமல் அந்தப் பகுதி கிராம வாசிகளுக்கும் போக்கு
வரத்துக்கு பலன் அளிக்கக்கூடியதாக இருக்கும்.

அத்துடன் முன்பெல்லாம் கொள்ளிடத்தின் கரையில் நாணல்
இடுவார்கள். எங்கு அரிப்பு ஏற்படுகிறதோ அங்கு இந்த நாணலை
இட்டால் அரிப்பு ஏற்படாமல் கரையை பாதுகாக்க முடியும்.
என்ன காரணமோ தெரியவில்லை, இப்போது ஒரு சில பகுதிகளில்
இதை கைவிட்டிருக்கிறார்கள். இந்த நாணல் இடுவது ஒரு நல்ல
திட்டம் என்று நான் கருதுகிறேன். விவசாயிகள் ஜீவனத்திற்குக்
கூட உதவுகிறது. ஆகையால் இந்தத் திட்டத்தை மறுபடியும்
உருவாக்கவேண்டும்.

[Sri T. K. Subbiah] [13th March 1961

முன்பெல்லாம் கொள்ளிடத்தின் கரையை போக்குவரத்துக்கு செளகரியமாக இருக்கக்கூடிய அளவுக்கு நல்ல முறையில் வைத்துக் கொண்டிருப்பார்கள். சாதாரணமாக திருச்சி டோல் கேட்டி லிருந்து புறப்பட்டால், கரையிலேயே சிதம்பரம் வரையில் செல்லும் வாய்ப்பு இருந்தது. இப்போது பழுதடைந்து போக்கு வரத்துக்கு வழியில்லாமல் தடையாக இருக்கிறது. இதை போக்கு வரத்து வசதி செய்தால் என்ஜினியர்களுக்கு மட்டுமல்லாமல் கிராம மக்களுக்கும் பல இடங்களுக்கு செல்வதற்கு வழி ஏற்படும் முறையில் ஒரு நல்ல நிலைமையை ஏற்படுத்தவேண்டும். கரைகளை பலப்படுத்தி கிராவல் போடவேண்டும். அதன் காரணமாக நீர்ப் பாசனம் நல்ல முறையில் நடைபெறுவதோடல்லாமல். பொது மக்களுக்கும் வசதி ஏற்படுகிறது. குறிப்பாக எனது பகுதியில் கூத்தூர், கப்பூர் பகுதிகள் மிகவும் பின் தங்கிய பிரதேசம்—கள்ளச் சாராயம் காய்ச்சுவது, கொலை செய்வது போன்ற செய்கைகள் நடக்கக்கூடிய பிரதேசம் என்பதை யாரும் ஒத்துக்கொள்ள வேண்டும். நல்ல போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தினால் தான் இவ்விதமான தவறான செய்கைகள் ஏற்பட வசதி இருக் கிறது. இந்தக் கரையை பலப்படுத்தி போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்தால் மக்கள் நல்ல முறையில் வாழ்வதற்கு வழி ஏற்படும், போலீஸ்காரர்கள் சென்று குற்றங்களை நடைபெறுமல் தடுக்க வழி ஏற்படும், ஆகையால் இதை உடனடியாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இப்போது ஆர்.ஸி. டிவிஷனைப் பொருத்த மட்டில் இந்தப் பகுதியில் திருச்சி ஜில்லாவிலே புள்ளம்பாடி, கட்டளை வாய்க்கால்கள் வந்ததன் காரணமாக இந்த டிவிஷனை இரண்டாகப் பிரித்தால் நல்லது. வடக்கு பகுதியை ஒரு டிவிஷ னாகவும், தெற்கு பகுதியை ஒரு டிவிஷனாகவும் ஏற்படுத்தி இரண்டு எக்ஸிகூடிவ் என்ஜினீயர்கள் கையில் ஒப்படைத்தால் செளகரிய மாக காரியம் நடைபெற வசதியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக நந்தையாறு வாய்க்காலில் பாசனம் ஆகக் கூடிய ஏரிகள் மேடிட்டிருக்கின்றன. இப்போது நிரந்தரமாக தண்ணீர் வந்து கொண்டிருப்பதால், தண்ணீர் தடை ஏற்பட வில்லையே, ஏன் மராமத்து செய்யவேண்டுமென்று கூறுகிறீர்கள். என்று கேட்கிறார்கள். உண்மையிலேயே ஏரியை மராமத்து செய்தால் நல்ல முறையில் தண்ணீர் கிடைக்க வசதி ஏற்படும். இல்லையென்றால் மேடிட்டிருப்பதன் காரணமாக அந்த இடத்தில் பயிர் செய்துகொள்ளலாம் என்ற எண்ணம் இருப்பதால் அந்த முறையில் முற்படுவார்கள். அப்படி பயிர் செய்யும்போது பலன் ஏற்படக்கூடிய நிலையில் 'தண்ணீர் நிரம்பி அதனால் பயிருக்கு பாதகம் ஏற்படும் என்ற நிலை வருமானால் ஏரியில் இருக்கக்கூடிய தண்ணீரைக்கூட காலி செய்து விடுவார்கள். இந்தமாதிரியான நிலைமை ஏற்படாமல் வண்டலை நீக்கி மராமத்து செய்யக்கூடிய திட்டத்தை நிறைவேற்றி, இந்தத் திட்டத்தை உடையார்பாளையம் தாலுகாவிற்கு விஸ்தரித்து, இப்போது நான் சொன்ன யோசனை



13th March 1961] [Sri T. K. Subbiah]

களையெல்லாம் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நல்ல முறையில் பணியாற்றுகிற காரணத்தினால் மராமத்து இலாகா முன்னேறியிருக்கிறது என்று கூறி, அவர்களைப் பாராட்டி எனது வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**MR. SPEAKER :** பேசுவதற்கு அங்கத்தினர்கள் இல்லை என்று முதலில் நான் நினைத்தேன். அது இப்போது மாறி விட்டது. 20 பேர்கள் தங்கள் பெயர்களைக் கொடுத்திருக்கிறார் கள். ஆகவே குறைந்தபட்சம் ஒருவருக்கு 10 நிமிஷ நேரம்தான் கொடுக்க முடியும். ஆகவே ஒவ்வொரு அங்கத்தினரும் 10 நிமிஷம் எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். அதையும் குறைத்தால் நல்லதுதான்.

* **SRI M. A. B. ARUMUGHASAMY :** கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய மாநில மராமத்து அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் நீர்ப்பாசன மான்ய கோரிக்கையை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் சொல்லிக்கொள்ள ஆசைப்படு கின்றேன். நம்முடைய நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னால், யுத்த காலத்திலே உணவுப் பற்றாக்குறையினால் பங்கீட்டு முறை ஏற்பட்டு, அப்போதைக்கு அந்தப் பங்கீட்டு முறையானது மக்க ளிடையே பெரிதும் அதிருப்தியைக் கொடுத்து வந்தது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். நாம் சுதந்திரம் அடைந்த பிறகு, நம்முடைய நாட்டிற்குத் தேவையான உணவை நம்முடைய நாட்டிலேயே உற்பத்தி செய்யவேண்டுமென்ற நோக்கத்தோடு நம் முடைய சர்க்கார் விவசாயத்துறைக்கு முதலிடம் கொடுத்து, உற்பத்தியை அதிகமாக்குவதற்காக நம்முடைய ராஜ்யத்திலே எங்கெங்கு சாத்தியமோ அந்த சாத்தியமான இடங்களில் எல்லாம் பெரிய பெரிய அணைக்கட்டுகளையும், சிறிய அணைக்கட்டுகளையும், மற்றும் விவசாயிகளுக்குத் தேவையான எந்தெந்த வகையிலே அவர்கள் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியுமோ, அந்த வகை களிலே எல்லாம் ஊக்கம் கொடுத்து வந்தார்கள். அப்படி ஊக்கம் கொடுத்துக்கொண்டு வருவதற்காகத்தான், ஐந்தாண்டுத் திட்டங் கள் என்று வகுத்து, இப்போது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவடையும் தருவாயில் இருக்கிறோம். அப்படித் திட்டங்கள் வகுக்கப்பட்டு செய்ததாலே, இப்போது நம்முடைய மாகாணத்திலே உள்ள பெரிய அணைக்கட்டுகள் எல்லாம், பரம்பிக் குளம், ஆளியாறு, நீங்கலாக நம்முடைய ராஜ்யத்திலே பெரிய அணைக்கட்டுகள் எல்லாம் ஏற்கெனவே கட்டி முடித்தாகி விட்டது. இந்த இரண்டு அணைக்கட்டுகளும் அநேகமாக சீக்கிரமாக முடிவடைவதற்கு ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன.

நம்முடைய நாட்டிலே உணவுப் பற்றாக்குறையை நீக்கு வதற்காக பெரிய அணைக்கட்டுகளை மட்டும் கட்டி விட்டால் போதாது. நம்முடைய நாட்டிலே ஆங்காங்குள்ள சிறிய ஆறு களிலே வீணாய்ப் போகக்கூடிய தண்ணீரை தடுத்து, அதன் மூலமும் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக சிறிய அணைக்

[Sri M. A. B. Arumughasamy] [13th March 1961

கட்டுகளை 4, 5 அல்லது 10 லட்சம் ரூபாய் அளவிற்குள் உள்ளத் திட்டங்களை கட்டுவதற்கு சர்க்கார் முயற்சி எடுத்துக் கொண்டுள்ளதை பெரிதும் பாராட்டவேண்டும்: அப்படிப் பார்க்கும்போது என்னுடைய மதுரை ஜில்லாவிலே பெரிய அணைக் கட்டுகள் இரண்டு ஏற்கனவே கட்டி முடித்தாகி விட்டது. ஆனால் இந்த சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழே அதாவது 10 லட்சம் ரூபாய்க்குள் கட்டிமுடிக்கவேண்டிய திட்டத்தின்கீழே என்னுடைய தொகுதியிலே இரண்டொரு அணைக்கட்டுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்பதற்காக, அது சம்பந்தமான கனம் மராமத்திலாகா அமைச்சர் அவர்கள் அங்கு சுற்றுப் பிரயாணத்திற்கு வந்தபோது மகஜர்கள் கொடுத்தார்கள். அப்படிக் கொடுக்கப் பட்ட மகஜர்களில் முதல் முதலாக மதுரை ஜில்லாவிலே, திண்டுக்கல் தாலுகா, ஆத்தூர் தொகுதியிலுள்ள கன்னிவாடி ஜமீன் பிரதேசமாக இருக்கும்போது ஜமீனில் நீர்ப்பாசனத்திற்காக எவ்வித அக்கறையும் எடுத்துக்கொள்ளவில்லை. ஜமீன் ஒழிப்புக்குப் பின்னால், என்னுடைய தொகுதியானது மலையடிவாரங்கள் உள்ள கிராமங்களாக இருப்பதால், அங்கு நீர்ப்பாசனத்திற்கான வசதிகளும், சவுகரியங்கள் இருந்தபோதிலும், எந்தவிதமான நீர்ப்பாசனத் திட்டங்களும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை; இது வரை செய்யப்படவும் இல்லை.

என்னுடைய தொகுதியிலே அய்யம்பாளையம் என்ற கிராமத்திலே, மருதா நதிக்கு ஒரு அணைக்கட்டு கட்டினால், அதன் மூலமாக சுமார் 5,000 ஏக்கர் நிலங்கள் இருபோக நன்செய் நில சாகுபடி செய்வதற்கு வசதியாக இருக்கும் என்று கனம் நிதி அமைச்சர் அவர்கள் 1957-ம் வருஷம் என்னுடைய தொகுதிக்கு விஜயம் செய்தபோது, திண்டுக்கல் அரசியல் மகாநாட்டிலே ஒரு தீர்மானம் போட்டு, அத்தீர்மான நகலையும் சம்மந்தப்பட்ட கனம் அமைச்சர் அவர்களிடம் கொடுக்கப்பட்டது. அப்படிக் கொடுக்கப் பட்ட தீர்மானத்திற்கு, இரண்டு வருஷங்களுக்குப் பின்னால் இப் போது மருதா நதி அணைக்கட்டுத் திட்டமானது வைகைப் பட்டா தார்கள் அதாவது இராமநாதபுரம் விவசாயிகளால் ஆட்சேபிக்கப் படுகிறது என்பதற்காக, அந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ள சாத்தியப்படாது என்று சர்க்காரிடமிருந்து பதில் வந்திருக்கிறது. ஆகவே அதைப்பற்றி கனம் அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்: இந்த அணைக்கட்டுவதினால் கீழே உள்ள இராமநாதபுரம் விவசாயிகள் பாதிக்கப்படமாட்டார்கள். தவிர 4,000, 5,000 ஏக்கர் நிலங்கள் இங்கு இருபோக சாகுபடிக்கு வரக்கூடிய ஒரு சந்தர்ப்பம் இருப்பதால்; இந்தத் திட்டத்தை மறு சரிசிலனை செய்து, எடுத்துக்கொள்ளக்கூடுமானால் எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியிலே அதே கன்னிவாடிப் பகுதியிலே உற்பத்தியாகி இப்போது ஓடிக்கொண்டிருக்கும் மாங்கரை ஆற்றிலேயும் ஒரு சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தை ஏற்படுத்தவேண்டியது அவசியமாகும், சில லட்சம்



3th March 1961] [Sri M. A. B. Arumughasamy]

ரூபாய் செலவிலே இங்கு அணைக்கட்டு கட்டினால், அந்த அணையின் மூலமாக சுமார் 10,000 ஏக்கருக்கு பாசன வசதி ஏற்படுமென்று அங்குள்ள பெரிய விவசாயிகள் அதாவது வயது முதிர்ந்த அனுபவ முள்ள விவசாயிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். கன்னிவாடி ஜமீன் பிரதேசமாக இருந்த காலத்திலேயே, இந்தத் திட்டம் பரி சீலனை செய்யப்பட்டதாகவும், ஜமீன் ஒழிப்பு ஏற்படப்போவது தெரிந்தவுடன், அந்தத் திட்டம் கைவிடப்பட்டதாகவும் சொல்லப் படுகிறது. இந்தத் திட்டத்தினால், என்னுடைய தொகுதியிலே உள்ள பெரும்பாலான கிராமங்களிலே உள்ள புஞ்சை நிலங்கள் நன்செய் நிலங்களாக விவசாயத்திற்கு கொண்டுவர முடியுமென்ற ஒரே ஆவலோடு இருப்பதால், அந்தத் திட்டத்தை கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்: அதோடு அந்த அணைக் கட்டு கட்டுவதன் மூலமாக மேலும் 10,000 ஏக்கர்களுக்கு நீர்ப் பாசன வசதி ஏற்படுவதோடு, அந்த அணைக்கட்டுக்கு கீழே உள்ள நான்கைந்து ரெவின்யூ கிராமங்களுக்கும், சுமார் 10 கண்மாய் களுக்கும் தண்ணீரை நிரப்ப முடியும். அதோடு இருபோக நன்செய் சாகுபடி செய்ய முடியுமென்பதையும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சிறிய நீர்ப்பாசனங்கள் தவிர, நம்முடைய சர்க்கார் விவசாயி களுக்கு இன்னும் பல வழிகளிலே உதவி செய்யவேண்டுமென்று கண்மாய்களை, ஏற்கனவே ஜமீன் பிரதேசத்தைச் சுற்றி இருக்கும் கண்மாய்களை ஆழப்படுத்தி தண்ணீரை அதிகமாக நிரப்பி, அதன் மூலமாக நீர்ப்பாசன வசதியைப் பெருக்குவதற்கு திட்டமிட்டி ருக்கிறார்கள். அப்படித் திட்டமிட்ட வகையிலே, புதிதாக சில வற்றை ஆழப்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று ஏற்கனவே கனம் அமைச்சர் அவர்களிடத்தில் நானே மகஜர் கொடுத்திருக்கிறேன். என்னுடைய தொகுதியிலே, வரண்ட பிரதேசமாகக் கருதப்படும் குருநாதநாயக்கனூர் போன்ற இடங்களிலே குறிப்பாக மழைக் காலத்தில் தண்ணீர் வீணாக ஓடி கீழே போகின்றது. அங்குள்ள விவசாயிகள் எல்லாம் கிணற்று இறவையை நம்பி, புஞ்சைப் பயிர் சாகுபடி செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகையால், அவர்கள் ஒரு மகஜரிலே இந்தத் தண்ணீரைத் தேக்கி, ஒரு கால்வாய்மூல மாக அங்கு புதிதாக ஒரு குளத்தை வெட்டினால் ஒரு (1,000 ஏக்கர்) ஆயிரம் ஏக்கர்களை பாசன வசதிக்கு ஏற்படுத்திக்கொள்ள முடியுமென்று அவர்கள் கோரிக்கையை கனம் அமைச்சர் அவர்கள் சமீபத்திலே திண்டுக்கல் தாலுகாவுக்கு சுற்றுப்பிரயாணம் செய்யும்போது கொடுத்திருக்கிறார்கள். அதை சம்பந்தப்பட்ட விவசாய உணவு உற்பத்தி அதிகாரியிடம் கொடுத்து, அந்தத் திட்டத்தை உடனடியாக மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியிலே காந்தி கிராமத் திற்குப் பக்கத்திலே உள்ள சிறுமலை அடிவாரப் பிரதேசத்திலே பாயும் தண்ணீரானது கீழே விழுந்து, அப்படி கீழே விழக்கூடிய வேகத்தினால் அநேக விளை நிலங்களை பாழாக்கிவருகிறது. இது

[Sri M. A. B. Arumughasamy] [13th March 1961

மழைக்காலங்களில் எல்லாம் ஏற்பட்டு அங்குள்ள கிணறுகளையும்,
விளைநிலங்களையும் பாதித்துவருகிறது. அது சம்பந்தமாகவும்
விவசாயிகள் தங்கள் குறைகளைச் சொல்லிக்கொண்டுவருகிறார்
கள். இது ஒரு சிறியத் திட்டம், ஒருசில ஆயிரம் ரூபாய் செலவில்
முடிக்க முடியும். ஆகவே இதையும் தயவுசெய்து கொஞ்சம்
அக்கறையுடன் கவனிக்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன். இப்
போது இதனால் அங்குள்ள விவசாயிகள் பெருத்த நஷ்டமடைந்து
வருகிறார்கள். ஆகவே ஆனைவிழுந்தான் பள்ளத்தில் ஏற்படும்
சேதத்தைத் தடுக்க ஒரு திட்டம் வகுத்து, அந்தத் திட்டத்தின்
மூலமாக இந்த நிலங்கள் எல்லாம் பாதிக்காதபடி பார்த்துக்
கொள்ளவேண்டுமாய் மிகவும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.
இப்போது நான் சொல்லிக்கொண்டு வந்த இந்தத் திட்டங்களை
யெல்லாம் கனம் அமைச்சர் அவர்கள் பரிசிலனை செய்து, எந்தந்தத்
திட்டங்கள் சாத்தியப்படுமோ, அந்தத் திட்டங்களையெல்லாம்
சர்க்கார் உடனடியாக மேற்கொண்டு, உடனடியாக அவைகளைப்
பூர்த்தி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை
முடித்துக்கொள்கிறேன்.

Sri S. M. ANNAMALAI : சட்டமன்றத் தலைவர் அவர்களே,
இந்த நீர்ப்பாசன இலாகா மான்யத்தின்மீது கொண்டுவரப்பட்
டிருக்கும் இரண்டு வெட்டுப் பிரேரபணைகளையும் ஆதரித்து ஒரு
சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த மான்யத்
தைக்கொண்டுவந்த அமைச்சர் அவர்களுடைய இலாகாவைப்
பார்த்தால், நாங்கள் ஒன்றுமே சொல்லமுடியாத நிலையில் இருக்
கிறோம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொறுத்தவரை
யில் பெரிய பாசனத் திட்டங்களுக்காக ஏறத்தாழ ரூ. 27 கோடி
ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதில் பெரும் பகுதி 21 கோடி
ரூபாய் பரம்பிக்குள திட்டத்திற்காக செலவழிக்கப்படும். இந்த
பரம்பிக்குளத் திட்டம் தேவை இல்லை என்று நான் சொல்லவில்லை.
ரூ. 27 கோடியில் ரூ. 21 கோடி பரம்பிக்குளத் திட்டத்திற்கு போய்
விடுகிறது. 1961-62-ம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் அநேகமாக
ஒன்றும் கிடையாது. ஏறத்தாழ ரூ. 414 லட்சம் ஒதுக்கப்பட்டி
ருக்கிறது. அதில் பரம்பிக்குளத் திட்டத்திற்காக வேண்டி ஏறத்
தாழ ரூ. 376 லட்சம் போய்விடுகிறது. பத்து பழைய திட்டங்களை
மேற்கொள்ளுவதற்காக வேண்டி ஏறத்தாழ ரூ. 37 லட்சம் 1961-
62-ம் ஆண்டில் ஒதுக்கப்பட்டிருப்பதாகக் காணப்படுகிறது.

ஆகையினால் நமது அமைச்சர் அவர்களுக்கு ஒன்றே ஒன்று
மட்டும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அவர்களுடைய
உரையில் கடைசியாக பிற மாநிலங்களில் ஓடும் ஆறுகளின் உபரி
நீரைப் பெறுவதற்கு முயன்று வருவதாகச் சொல்லியிருக்கிறார்.
இதற்கென்று மூன்றாவது திட்டத்தில் ஒரு கோடி ரூபாய்
அடையாள நிதியாக ஒதுக்கப்பட்டுள்ளது. இரண்டு ஆண்டு
காலமாக கிருஷ்ணா-கோதாவரி தண்ணீரை நம் மாநிலத்திற்குக்
கொண்டுவருவதற்கு முயற்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன,
பேச்சுவார்த்தைகள் நடந்துகொண்டிருக்கின்றன என்று சட்ட



13th March 1961] [Sri S. M. Annamalai]

மன்றத்தில் அடிக்கடி அமைச்சர் அவர்கள் சொல்லிவந்திருக்கிறார்
கள். ஆனால் இப்பொழுது கிருஷ்ணா-கோதாவரி என்ற வார்த்தை
களை விட்டுவிட்டு, பொதுவாக பிற மாநிலங்களில் ஓடுகின்ற நதி
களின் தண்ணீரை நம்முடைய மாநிலத்திற்குக் கொண்டுவந்து
பயன்படுத்தவேண்டி, அதற்கேற்ற முயற்சிகளை எடுத்துக்கொண்டு
வருகிறோம் என்று சொல்லுகிறார். இதைப் பார்த்தால், கிருஷ்ணா-
கோதாவரி நதிகளின் தண்ணீரைப்பற்றி மேலும் முயற்சி இல்லை
என்றுதான் நாங்கள் சொல்லவேண்டும். கிருஷ்ணா-கோதாவரி
தண்ணீரைக் குறித்து பல மாநிலங்கள் எங்களுக்குத் தேவை,
உங்களுக்குத் தேவை என்று சொல்லிக்கொண்டு பேச்சு வார்த்தை
கள் நடத்த முன்வருகிறார்கள். பெரிய முயற்சி நடந்துகொண்டி
ருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது நம்முடைய மாநிலம்
மட்டும் சும்மாக இருந்தால், கோதாவரி-கிருஷ்ணா தண்ணீர்
நமக்கு எப்படி கிடைக்கும்? அமைச்சர் அவர்கள் நல்ல முறையில்
இதை விளக்கவேண்டும். இரண்டு ஆண்டு காலமாக கிருஷ்ணா-
கோதாவரி தண்ணீரை நமது மாநிலத்திற்குக் கொண்டுவருவது
பற்றி முயற்சிகள் எடுத்துக்கொண்டுவருகிறோம், பேச்சு வார்த்தை
கள் நடக்கிறது என்று சொன்னார்களே? அந்தப் பேச்சு வார்த்தை
களின் முடிவு என்ன ஆயிற்று? அதைப்பற்றி இந்த மாநில
சர்க்கார் கவலைப்படவில்லையா? இந்தத் தண்ணீரைக் கொண்டு
வருவதற்கு ஏதாகிலும் முயற்சி எடுத்துக்கொண்டார்களா
என்பதை அமைச்சர் அவர்கள் பேசுகிறபொழுது விளக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, இந்த மராமத்து இலாகா 'பாலாறு பேஸின்
ரூல்' என்ற ஒன்றை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதனால்
வட ஆற்காடு மாவட்டமே பாழடைந்துவருகிறது. பாலாறு
பேஸின் ரூலைப் பொறுத்து, ஒரு கேள்விக்கு அமைச்சர் அவர்கள்
பதில் சொன்னார்கள். எங்கேயோ 22 மைலுக்கு அப்பால்
தண்ணீரை எடுத்துக்கொள்ள அது பாலாறு பேஸின் ரூலினால்
பாதிக்கப்படுகிறது என்று சொல்லுகிறார். எதற்கு எடுத்தாலும்
பாலாறு பேஸின் ரூல், பாலாறு பேஸின் ரூல் என்று சொல்லி
அதைக் காட்டிவிடுகிறார்கள். வட ஆற்காடு மாவட்டம் வரண்ட
பிரதேசம். அப்படி வரண்ட பிரதேசமாக இருந்தாலும் வட
ஆற்காடு மாவட்டம் இந்த மாநிலத்தில் தஞ்சைக்கு அடுத்த
படியாக இரண்டாவதாக உணவு உற்பத்தியில் நிற்கிறது. தஞ்சை
மாவட்டத்தில் ஆற்று நீரைக்கொண்டு பாசனம் செய்கிறார்கள்.
எங்களுடைய வட ஆற்காடு மாவட்டத்தில் இறைத்து, கஷ்டப்
பட்டு பாசனம் செய்யவேண்டியிருக்கிறது. தண்ணீரை எடுத்துக்
கொள்ளுவதற்கு பாலாறு பேஸின் ரூல் தடுக்கிறது. தண்ணீரை
இறைக்கக்கூடாது என்ற விதி இருக்கிறது. உண்மையிலேயே
நாங்கள் வாழ்வதா அல்லது சாவதா என்று கேட்கிறேன். வட
ஆற்காடு மாவட்டத்திலிருந்து ஒரு அமைச்சர் இருக்கிறார். அவர்
அதைப்பற்றி கவலைப்படுவதே கிடையாது. 'பாலாறு பேஸின்
ரூல் எங்கள் மாவட்டத்தைப் பாதிக்கிறது. அதை தயவுசெய்து
எடுத்து விடுங்கள்' என்று அவர் சொன்னாரா என்றால், கிடையாது.

[13th March 1961

THE HON. SRI P. KAKKAN : அந்த அமைச்சர் அதைப் பற்றி கவலைப்படுவதில்லை என்று சொல்லுவது சரியல்ல. அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கிற அக்கறை கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியாத காரணத்தினால்தான் அப்படி சொல்லுகிறார்கள் என்று நினைக்கிறேன்.

SRI S. M. ANNAMALAI : அக்கறை எடுத்துக்கொண்டதாக நடவடிக்கையில் ஒன்றும் தெரியவில்லை. அதனால்தான் சொல்லுகிறேன். மின்சார இலாகா கொஞ்சம் கருணை கூர்ந்து பம்பு செட்டுகள் வைப்பதற்கும், சர்விஸ் தருவதற்கும் அனுமதி வழங்கியிருக்கிறார்கள். ஆனால் பாலாறு பேஸின் ரூல்படி 2,000 அடிக்குள் பம்பு செட்டுகள் வைக்கக்கூடாது என்று விதி இருக்கிறது. மின்சார இலாகாவில் ஸ்கீமெல்லாம் ஸாங்ஷன் ஆகிவிட்டது. பாலாறு பேஸின் ரூலின் காரணமாக அதை அப்படியே தடுத்து வைத்திருக்கிறார்கள். அதை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்யவேண்டும் என்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். இரண்டாயிரம் அடி என்று இருப்பதை, 100 அடி அல்லது 500 அடி என்று திருத்தி பம்பு செட்டுகள் வைத்து சர்வீஸ் தரலாம் என்று பாலாறு பேஸின் ரூலை திருத்தவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன். அணை கட்டுவதற்கு இனிமேல் இடம் கிடையாது, பெரிய நதிகளையெல்லாம் பயன்படுத்திக்கொண்டாகிவிட்டது என்று சொல்லுகிறார்கள். அணை கட்டியும் தண்ணீர் கொடுக்க முடியாது என்று சொல்லுகிறார்கள். வேறு வசதியும் செய்துகொடுக்க வழி செய்யவில்லை என்றால் நாங்கள் எப்படி வாழ்வது? எங்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்துகொடுத்தால் அந்த அளவுக்கு நாங்கள் அதிகமாக உணவு உற்பத்தி செய்து தருவோம் என்று வட ஆற்காடு மாவட்டத்தின் சார்பாக நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, இந்த ஆண்டு அதிக மழை பெய்திருக்கிறது. அதிக மழை பெய்திருந்தாலும் பல ஏரிகள் 'ஓவர் ப்ளோ' ஆக இல்லை. இதைப்பற்றி சர்வே செய்யக்கூடாதா? முப்பது ஆண்டுகள், 40 ஆண்டுகளுக்கு ஒரு தரம்தான் அதிக மழை பெய்கிறது. அப்படி அதிக மழை பெய்தும்கூட இன்னும் சில ஏரிகள் கோடி போகாமல் இருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்று ஆராய வேண்டும் என்று 'இர்ரிகேஷன் கான்பரென்ஸில்' சொன்னேன். இப்படி அதிக மழை பெய்தும், பல ஏரிகள் கோடி போகாமல் இருக்கிறதே? அதற்கு சர்வே செய்தாதான், சர்வேமூலம் எப்படி கால்வாய்களை வெட்டி ஏரிகளுக்கு தண்ணீர் கொண்டுபோய் நிறப்ப முடியும் என்பதைத் தெரிந்துகொள்ளலாம் என்று 'இர்ரிகேஷன் கான்பரென்ஸில்' சொன்னேன். சர்க்கார் இதைப் பரிசீலனை செய்யவேண்டும். நாற்பது ஆண்டுகளுக்கு ஒரு முறை மழை பெய்தும்கூட பல ஏரிகள் அந்தக் காலத்தில் கோடி போகவில்லை என்றால் அது உண்மையிலேயே வருந்தத்தக்க விஷயம்.



13th March 1961] [Sri S. M. Annamalai]

ஷெண்பகத்தூர் ரிஸர்வாயரைப்பற்றி நான் பல முறை இந்த சட்டமன்றத்தில் பேசியிருக்கிறேன். அமைச்சர் அவர்கள் ஆற்றில் தண்ணீர் கிடையாது. அங்கே ரிஸர்வாயர் கட்ட முடியாது என்று சொல்லிவிட்டார். சிப் என்ஜினியர் அந்த இடத்தைப் பார்வையிட்டிருக்கிறார்கள். நாங்கள் அதிகத் தண்ணீரை தேக்கிவைக்கவேண்டும் என்று கேட்கவில்லை. 16 ஏரிகளுக்குச் செல்லுகின்ற தண்ணீரை மேலே தேக்கி வைத்து எங்களுக்குத் தந்தால் அங்குள்ள கிணறுகளுக்கு ஊற்றம் அதிகமாக ஆகும். 16 ஏரிகளுக்கு பாய்ச்சப்படுகிற தண்ணீரை மேலே தேக்கி வைத்துத் தாருங்கள், ஊற்று அதிகமாக இருக்கும் என்றுதான் கேட்கிறோம். அப்படிச் செய்தால் அதிகப்படியாக பம்பு செட்டுகளை வைத்துக்கொள்ளுவதற்கு அது ஏதுவாக இருக்கும். பல முறை அதைப்பற்றி வற்புறுத்தியிருந்தும் அமைச்சர் அவர்கள் அன்றைக்கு கேள்விக்கு பதில் சொல்லும்பொழுது 'அந்த ஸ்கீம் கைவிடப்பட்டது' என்று சொன்னார்கள். அதை மறு பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். நாங்கள் அதிக மாக தண்ணீர் கேட்கவில்லை. பதினாறு ஏரிகளுக்கு, கீழே தரை தண்ணீரை மேலே தேக்கி வைத்து அந்த ஏரிகள்மூலமாக தந்தால் அதுவே போதும் என்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். இதை மறுபடியும் பரிசீலிக்கவேண்டும்.

அடுத்தபடியாக, போளூர் சப்ளை சானலைப்பற்றி மூன்று ஆண்டு களாக அது சர்க்கார் பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது. இதைப்பற்றி சட்டமன்றத்தில் மேலும் மூன்று கேள்விகள் கேட்டிருக்கிறேன். எப்பொழுதும் 'It is still under consideration of the Government' என்றுதான் பதில் சொல்லப்பட்டதே ஒழிய, வேறு ஒன்றுமில்லை. இதனால் பல சச்சரவுகள் ஏற்பட்டு, வழக்குகள் ஏற்பட்டிருக்கின்றன. பல வழக்குகள் நடந்து இப்பொழுதுதான் 2, 3 மாதங்களுக்கு முன்பு தீர்ந்திருக்கின்றன. ஆகவே, இங்கு ஒரு அணைக்கட்டைக் கட்டி போளூர் சப்ளை சானலுக்கு வசதி செய்து தரவேண்டும் என்று அமைச்சர் அவர்களை தாழ்மையோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

* SRI P. M. PERIA KARUPPAN AMBALAM கனம் சபா நாயகர் அவர்களே, கனம் மராமத்து இலாகா அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் மான்யக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் பேச ஆசைப்படுகிறேன். நமது மாகாணத்தில் பல நூற்றுக்கணக்கான வருடங்களாக செய்யப்படாத பல பெரிய வேலைகளை நமது அரசாங்கம் வந்தபிற்பாடு செய்து, பெரிய அணைக் கட்டுகளையெல்லாம் கட்டி முடித்திருக்கிறார்கள்.

(Sri V. K. Krishnamurthy in the Chair.)

அதற்காக நான் அரசாங்கத்தையும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் மிகவும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நமது மாகாணத்திலுள்ள எல்லா பெரிய நதிகளிலும் அவைகளை பயன்

[Sri P. M. Peria Karuppan Ambalam] [13th March 1961

படுத்திக்கொண்டு அணைகள் கட்டி முடித்தாகிவிட்டது. இன்னும் சிறிய காட்டாறுகளில் நாம் இம்மாதிரி அணைகளைக் கட்ட வேண்டிய நிலையில் இருக்கிறோம். சிறிய காட்டாறுகளில் அணைகள் கட்டினால் நமக்கு மிகுந்த பலன் தரக்கூடிய நிலையில் இவை
10-00 a.m. இருக்கின்றன. உதாரணமாக, மதுரை ஜில்லாவிலே பல இடங்களில் சிறிய காட்டாறுகள் செல்லுகின்றன. அதற்கு குறுக்கே அணைகளைக் கட்டித் தேக்கினோமானால், அந்த பகுதியிலுள்ள கண்மாய்களுக்கு தண்ணீர் சென்று நல்ல பலனைத் தரும். சிறிய அணைகளைக் கட்டுவதினால், அங்குள்ள கிணறுகள் நன்றாக ஊறி, அந்தக் கிணற்றுத் தண்ணீர்மூலமாக பல ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் விவசாயத்திற்கு வர ஏதுவாக இருக்கும். அந்த வேலையை உடனடியாகச் செய்யவேண்டும். அங்குள்ள காட்டாறுகளைக் கட்டுவதற்கு சில ஆயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்தால் போதும். அம்மாதிரிக் காட்டாறுகளைத் தடுத்து நிறுத்தினால், முக்கியமாக பின் பகுதியிலுள்ள மக்களுக்கு கஷ்டம் ஏற்படுமென்று சிலர் சொல்லுகிறார்கள். அது உண்மையல்ல. வைகை அணைக்கட்டைக் கட்டி இருக்கிறோம். அது கட்டிய பிற்பாடு வைகை நதியில் எப்பொழுதும் தண்ணீர் சென்றுகொண்டிருக்கிறது. வைகை நதி இப்பொழுது ஒரு ஜீவநதியாகக் காட்சி அளிக்கிறது. அதே மாதிரி வைகை அணை கட்டியதால் குச்சனூர் பகுதியில் இந்த அணையைக் கட்டின காரணத்தினால், அங்குள்ள கிணறுகளுக்கு இறைவைக்கு வேண்டிய தண்ணீர் கிடைத்து, அங்குள்ள மக்கள் விவசாயத்தை நல்ல முறையில் பயன்படுத்துகிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். ஆகவே இந்த சிறிய காட்டாறுகளில் அணைகளைக் கட்டுவதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலூர் தாலுகாவில் பெரிய அருவி என்ற அருவியைக் கட்டுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டு எஸ்டிமேட்களை எல்லாம் தயார் செய்திருப்பதாக நான் அறிகிறேன். இதனால் கொட்டாம்பட்டி பிர்க்கா போன்ற பகுதிகள் பயனடையும். பெரியாறு தண்ணீர் அங்கே கிடையாது. அந்த அருவியைக் கூடிய சீக்கிரம் கட்டி முடிக்கவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக மதுரை ஜில்லாவில் அதிகமான ஏ-2 டாங்குகள் இருக்கின்றன. வேறு எந்தப் பகுதியிலும் இவ்வளவு குளங்கள் இருக்காது என்று நினைக்கிறேன். அக்குளங்கள் மராமத்து இலாகாவில் சேராத காரணத்தினால், அவைகள் சரியாகச் செப்பனிடப்படுவதில்லை. நல்ல கரைகள் இல்லை. மடைகளும் நல்ல முறையில் வைக்கப்படவில்லை. தண்ணீர் போவதற்கு கலுங்குகள் இல்லாத காரணத்தினால், அந்தக் கண்மாய்களிலுள்ள தண்ணீரை நிரப்பி வைக்கமுடியவில்லை. ஆகவே இந்த ஏ-2 டாங்குகளை மராமத்து இலாகாவில் சேர்த்து, அவைகளை எல்லாம் நன்றாகச் செப்பனிட்டால், மழை காலத்தில் தண்ணீரைத் தேக்குவதற்கு சௌகரியமாக இருக்கும். ஆகவே அரசாங்கம் இதை உடனடியாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



13th March 1961] [Sri P. M. Peria Karuppan Ambalam]

அடுத்தபடியாக பெரிய பெரிய கண்மாய்கள் இருக்கின்றன. பெரியார் பாசனமாக இருப்பதினால், கண்மாய்கள் சிறிதாக இருக்கின்றன. 20 நாட்களுக்கு மேல் அந்தக் கண்மாய்களில் தண்ணீர் தேங்குவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. ஆனால் அவைகளை ஆழமாக்கி சரியான முறையில் அவைகளைச் செப்பனிட்டால், இரண்டு மாதம் அல்லது மூன்று மாதம் தண்ணீரைத் தேக்கி வைப்பதற்கு சூழ்நிலை இருக்கிறது. மழை காலங்களில் அந்தக் கண்மாய்களை நிரப்பி வைத்தால், தண்ணீர் இல்லாத காலங்களில் கூட ஓரளவுக்குப் பயன்படும். ஆகவே அந்தக் கண்மாய்களை நன்றாக ஆழப்படுத்தவேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

வைகை அணை கட்டிய பிற்பாடு மேலூர் தாலுகாவுக்கு நஞ்சை நிலங்களுக்குத் தண்ணீர் புதிதாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதற்குச் சமீபமாக உள்ள இடங்களுக்கு 15 அல்லது 20 அல்லது 30 ஏக்கருக்கு மேல் உள்ள நஞ்சை நிலங்களுக்குத் தண்ணீர் உத்திரவு கொடுக்கப்படாமலிருக்கிறது. அங்கு புஞ்சை சாகுபடி செய்வதற்கு லாயக்கற்றதாக இருக்கிறது. ஆகவே அந்தச் சிறிய இடங்களையும் நீர்ப்பாசனத் திட்டத்தில் சேர்த்து தண்ணீர் எடுத்துக்கொள்ள உத்திரவு வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* SRIMATHI HEMALATHA DEVI : தற்காலிகத் தலைவர் அவர்களே, கனம் மராமத்து இலாகா அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள நீர்ப்பாசன மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில விஷயங்களை எடுத்துக் கூற விரும்புகிறேன். அன்று நமது ஔவை மூதாட்டியார் "வரப்பு உயர" என்று சொன்னார்கள். நாடு நீர்வளம் பெற்று, விவசாயம் செழிப்புற்று, மக்கள் நல்ல வளம் பெற்று, அதனால் மன்னனுடைய ஆட்சி சிறப்புற விளங்க வேண்டுமென்ற தத்துவத்தில், சுருங்கச் சொல்லி விளங்க வைக்கின்ற நிலையிலே, "வரப்பு உயர" என்று சொன்னார்கள். அதற்கேற்ப நமது அரசாங்கம் நீர்ப்பாசனத் திட்டங்களிலே அதிக அக்கறையும் ஊக்கமும் காட்டி வந்துள்ளது. வெள்ளையர் ஆட்சியின்போது நமது மாகாணத்திலே இரண்டே அணைக்கட்டுகள் தான் இருந்தன என்பதை நாம் அறிவோம். நம்முடைய அரசாங்கம் அந்த இரண்டு அணைக்கட்டுகளோடு விட்டுவிடாது, மேற்கொண்டு 7 புதிய திட்டங்களைச் சேர்த்து, முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே 9 திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் மேற்கொண்டு 6 திட்டங்களைச் சேர்த்து, இன்றைக்கு பாம்பிக்குளம், ஆளியாறு திட்டத்தை நிறைவேற்றக்கூடிய நிலையிலே இருக்கிறார்கள். இதை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது. அதிலும், குறிப்பாக திட்டமிட்ட அளவுக்கு மேல் 2.12 கோடி ரூபாய் செலவு செய்திருப்பதை நாம் எல்லோரும் வரவேற்கிறோம். பாராட்டுகிறோம்.

[Srimathi Hemalatha Devi] [13th March 1961

இந்த நிலையிலே நம்முடைய மாநிலத்திலே இருக்கும்படியான எல்லாப் பெரிய ஆறுகளுக்கும் அணைகளைக் கட்டிவிட்டு, இன்னும் எஞ்சி இருக்கக்கூடிய ஒருசில ஆறுகளுக்கும் உடனடியாக அணைகளைக் கட்டி அந்தப் பகுதி மக்கள் நல்ல வளர்ச்சி அடையும்படியான நிலையிலே ஆக்கவேலைகளைச் செய்து வருவார்கள் என்று நம்புகிறேன். இந்த நிலைமையில் நான் ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். இந்த சபையிலே சென்ற மூன்று ஆண்டுகளாக நான் எடுத்துக் கூறி இருக்கிறேன். சேலம் ஜில்லாவிலே தருமபுரி தாலுகாவானது ஒரு வரண்ட பிரதேசம் என்பதை யாவரும் அறிவார்கள். அந்த வரண்ட பிரதேசத்தை வளம் பெறச் செய்வதற்கு சின்னாறுத் திட்டம் என்று ஒரு திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தினால்தான் அந்தப் பகுதி மக்கள் விவசாயத்திலும், பொருளாதாரத்திலும் வளம்பெற்று வாழவேண்டும். அந்தத் திட்டம் பல ஆண்டுகளாக நீக்கப்பட்டபோதிலும், நமது கருணை மிகுந்த அரசாங்கம் அந்த சின்னாறு அணைக்கட்டுத் திட்டத்தை நிறைவேற்றவேண்டுமென்ற அவசியத்தை உணர்ந்து, நமது மராமத்து இலாகா அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியில் சுற்றுப் பிரயாணம் செய்தபோது இது அவசிய அவசரமாய் செய்து முடிக்கவேண்டிய திட்டம் என்பதை அவர்களே நன்கு அறிந்துகொண்டார்கள். அவ்விடத்திற்கு சீப் எஞ்சினியரை அனுப்பிவைத்தார்கள். அப்பகுதியிலுள்ள மக்கள், அங்குள்ள நீர்க்கட்டி தவறான கணக்குகளை வைத்திருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டைச் சொல்லுகிறார்கள்.

இப்பொழுது அந்த பகுதியில் இருக்கும் ஆயக்கட்டுதார்கள், எவ்வளவு இருக்கிறார்கள் என்று ஆராய்ந்து, வருவாயைக் கணக்கிட்டு, சீப் எஞ்ஜினியர் மதிப்பிட்டால், அது மிகவும் சிறந்ததாக இருக்கும் சின்னாறு, ஒரு ஆற்றுக்கு மட்டும் அணை கட்டுவதானால், 40 லட்ச ரூபாய் செலவழிக்க வேண்டும். ஆனால் அதோடு 4, 5 கிளை ஆறுகளைச் சேர்த்து வெள்ளைக்கால் மலைச்சாரல் மல்லேசுரம் கோயில் குன்றில் அதை அமைத்தால் 75 லட்ச ரூபாய் செலவாகும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி 75 லட்ச ரூபாய் செலவில் ஒரு அணையைக் கட்டினால் பாதகம் என்று ஒன்றும் கூறவில்லை. அங்குள்ள மக்களுக்கு நன்மை செய்ய, அந்தப் பகுதியில் நிலவளத்தைப் பெருக்க அதிகச் செலவைப் பொருட்படுத்தாமல், 75 லட்ச ரூபாய்ச் செலவிலேயே, அந்த அணையைக் கட்டவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். கனம் முதல் அமைச்சரவர்கள் அந்தப் பகுதியில் சுற்றுப் பிரயாணம் செய்தபோது அந்தப் பகுதி மக்கள் சார்பாக நடைபெற்ற விவசாய மகாநாட்டிலும், மற்றவர்களாலும் மகஜர்கள் கொடுக்கப்பட்டன. அவற்றில் எல்லாம் இந்த வெண்ணைக்கால் மலைச்சாரல் மல்லேசுரம் குன்றில் அந்த அணையைக் கட்டவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். இது தாலுகா பிரச்னை என்பது முதல் அமைச்சர் அவர்களுக்கும் நன்கு புலப்பட்டது. அதன் பலனாக அதற்கென்று ஒரு தனிக்கமிட்டியை அமைத்து பரிசீலனை செய்வதற்கு அரசாங்கத்தைக் கேட்டிருப்பதாக சம்பந்



13th March 1961] [Srimathi Hemalatha Devi]

தப்பட்ட அதிகாரிகள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அந்தக் கமிட்டியை உடனடியாக ஏற்படுத்தி, நன்கு பரிசீலித்து, சின்னாற்றுக்கு 75 லட்ச ரூபாயிலேயே, அந்த அதிகச் செலவு பாதகமில்லை என்று, அந்த இடத்திலே ஒரு அணையைக் கட்டவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு மட்டுமல்லாமல், சிறிய நீர்ப்பாசனங்களுக்காகவும், ரூ. 8 கோடி செலவழிக்க இருப்பதை வரவேற்கிறேன். நம் ராஜ்யத்தில் 33,000 ஏரிகள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் அகலப்படுத்துவதைவிட, ஆழப்படுத்த வேண்டும் என்று இருப்பதைப் பாராட்டுகிறேன். அதில் 200 ஏக்கருக்கு அடங்கியுள்ள பகுதியை அந்தந்த ஜில்லா கலெக்டரே ஏற்றுச் செய்யவேண்டும் என்பதையும் வரவேற்கிறேன்.

சேலம், கோயம்புத்தூர் ஜில்லாக்களில் காட்டாறுகளைச் செப்பனிடுவதாக இருக்கிறார்கள். அதைப் பார்க்கும்போது, சேலம் ஜில்லாவில், என்னுடைய தொகுதியில் காட்டாறுகள் இருக்கின்றன. மரவேட்டைப் பள்ளம், சாமத்தாள் பள்ளம், மத்தள பள்ளம் முதலியவைகளை உடனடியாக சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தில் சேர்த்து, நீர்ப்பாசன வசதிகள் செய்துகொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடிக்கிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN: கனம் தலைவர் அவர்களே, நீர்ப்பாசன மானியத்தின் பேரில் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்துப் பேச விரும்புகிறேன். இந்தியாவிலேயே நம் ராஜ்யம் 11-வது ஸ்தானத்தில் இருக்கிறது. முதல் ஸ்தானம் பஞ்சாப் வகிக்கிறது, 11-வது ஸ்தானத்தை வகிக்கும் தமிழ்நாடு நிலைமை எப்படியிருக்கிறது? மூன்றாவது திட்டத்திலே 33 பர்செண்ட் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று திட்டமும் இருக்கிறது. இன்றைக்கு ஒரு மனிதன் உயிரோடு வாழவேண்டுமானால், குடிக்கத் தண்ணீர் இல்லை என்றால் வாழ முடியாது; சுவாசிக்க காற்று இல்லையென்றால் வாழ முடியாது. அதேபோல, இன்றைக்கு விவசாயிக்கு என்னதான் செய்தாலும் தண்ணீர் இல்லையென்றால், விவசாயம் நடைபெறாது என்பது எல்லோருக்கும் தெரியும். இந்த ரிப்போர்ட்டைப் பார்த்தால், நீர்ப்பாசனம் சம்மந்தப்பட்டவரை வெகுதூரம் முன்னேறிவிட்டோம், இனி நீர்ப்பாசனத்திற்கு திட்டமே இல்லை என்று ரிப்போர்ட்டில் இருக்கிறது. உண்மையாகப் பார்த்தால், இன்னும் வெகுதூரம் போக, திட்டங்கள் போட, வாய்ப்புகளும் வசதிகளும் நிறைய இருக்கின்றன என்பதுதான் என் அபிப்பிராயம்....

THE HON. SRI P. KAKKAN: அப்படிச் சொல்லவில்லை. தயவு செய்து கனம் அங்கத்தினர் அதைப் படிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN: இருக்கிறது; நான் பின்னால் காண்பிக்கிறேன் (சிரிப்பு). கனம் முதல் அமைச்சருடைய குருநாதர் உயிருடன் இருந்த காலத்தில், உயர் திரு. சத்திய

[Sri V. K. Kothandaraman] [13th March 1961

மூர்த்தியவர்கள் தேர்தல் காலத்தில் கங்கைத் தண்ணீரைக் காவேரிக்குக் கொண்டுவர வோட்டுப் போடுங்கள் என்று பேசியிருக்கிறார்கள். இன்றையதினம், கங்கை நதித் தண்ணீரைக் கொண்டுவர முடியாது என்றாலும் ஆந்தராவிலிருந்து கிருஷ்ணா, கோதாவரித் தண்ணீரை வரண்ட பகுதிகளான பாலாற்றுக்குக் கொண்டுவரக்கூடிய வாய்ப்பு வசதிகள் இருப்பதால், அதைச் செய்யத் திட்டமிடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பசி பட்டினியாக இருப்பவர்களைப் பார்த்து, பொறுத்துக் கொள்ளுங்கள், சீக்கிரம் கொடுக்கிறோம் என்று சமாதானம் சொன்னால், பொறுத்துக் கொள்ள முடியுமா? ஆகவே, இந்த தண்ணீர் கொடுப்பது விவசாயிகளின் வாழ்க்கைப் பிரச்சினை, உணவுப் பிரச்சினை. ஆகவே, நீர்பாசனம் சம்மந்தப்பட்டவரை பெரிய அளவுக்கு கவனம் செலுத்தி சிறிய நீர்ப்பாசனம் சம்பந்தப்பட்டவரை எவ்வளவு பணம் செலவானாலும், அவைகளைச் செய்ய வேண்டும் என்று மத்திய சர்க்கார் அமைச்சர் மிஸ்டர் டே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அது எந்த அளவுக்கு உபயோகப் படுத்தப்பட்டிருக்கிறதோ தெரியாது.

நம் ராஜ்யத்திலுள்ள ஏரி, குளங்கள் எந்தக் காலத்திலோ கட்டப்பட்டவை. அவைகளை ஆழப்படுத்த வேண்டிய வசதிகள் கிடையாது. ரிபோர்ட்டில், செங்கல்பட்டு ஜில்லாவில் ஆரம்பித்திருக்கிறோம்; வெகு சீக்கிரத்தில் தென் ஆற்காடு, கன்யாகுமரி முதலிய ஜில்லாக்களில் ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று இருக்கிறது. எனக்குத் தெரிந்த வரையில் டி-ஸில்டிங்குக்கு ஆழப்படுத்தும் கருவிகள் நாலு செட்டுத்தான் நம் மாநிலத்தில் இருக்கின்றன. அதுதான் நான் கேள்விப்படுவது. 1956-57-ல் ஆரம்பிக்கப்பட்டது செங்கல்பட்டில். ஒரு ஐந்தாண்டுத் திட்டம் பூரா ஒரு ஜில்லாவிற்கே ஆகிவிட்டது. அப்படிப் பார்க்கும்போது, நம் ராஜ்யத்திலுள்ள 12 ஜில்லாக்களுக்கும் ஒரு தலைமுறையே காணாது. ஆகவே, ஆழப்படுத்த வேண்டிய கருவிகள் எவ்வளவு தேவைப்பட்டாலும், அவற்றை உடனடியாகக் கொடுப்பதில் தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மைனர் இர்ரிகேஷன், ஸ்பெஷல் மைனர் இர்ரிகேஷன் என்றெல்லாம் இருக்கிறது. அதற்கு மேல் புட் ப்ரொடக்ஷன் டிபார்ட்மெண்ட்; பிறகு பஞ்சாயத்து யூனியன்களுக்கு கொஞ்சம் கொடுக்கப் போகிறோம். எல்லாம் பல துறைகளாக இருக்கின்றன. இந்த டிபார்ட்மெண்டில் கேட்டால், அந்த டிபார்ட்மெண்ட் என்கிறார்கள். ஆகவே, மக்களுக்கு எது என்ன என்று தெரியவில்லை. இப்படி 7, 8 டிபார்ட்மெண்டுகளாக இருப்பதற்குப் பதிலாக, மேஜர், மைனர் என்று இரண்டு டிபார்ட்மெண்டுகளாக இருந்தால் நலமாக இருக்கும். கிராம மக்களும் சுலபமாகத் தெரிந்து கொள்ள முடியும். யாரிடத்தில் போகவேண்டும் என்று தெரிந்து கொள்ளுவார்கள். அதல்லாமல், குடிமராமத்து விஷயத்திலும், சர்க்காரே எடுத்துச் செய்து, அவற்றை நிறைவேற்றி, வேண்டு



13th March 1961] [Sri V. K. Kothandaraman]

வரு
மானால், அதற்கான வரியையும் மற்ற வரியோடு சேர்த்து விதித்து, நீர்ப்பாசன வசதி கொடுக்கவேண்டும். அப்பொழுதுதான் நல்லபடியாக உணவு உற்பத்தி ஏற்படும்.

**THE HON. SRI P. KAKKAN :** தனியாக வரி போடுங்கள் என்று சொன்னதற்காக நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**SRI V. K. KOTHANDARAMAN :** நாங்கள் வரி போட வேண்டாம் என்று சொல்லவில்லை; யார் பேரில் போடவேண்டும், எவ்வளவு போடவேண்டும் என்பதில்தான் கருத்து வேற்றுமை. இன்னார் தலையில் இன்னதைப் போடவேண்டும் என்று தீர்மானிக்க வேண்டும். யானைமீது சுண்டைக்காயை. வைத்தால் நாங்கள் எதிர்க்கவில்லை; ஆனால், குருவிமேல் பாராங்கல்லை வைத்தால், எதிர்க்கிறோம். யார் பேரில் எவ்வளவு போடவேண்டும் என்பது தான் பிரச்சினை. எல்லா வரியையும் நாங்கள் எதிர்க்கவில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

வட ஆற்காடு ஜில்லாவைப் பொறுத்த வரைக்கும் போர்வெல், பம்பு செட், ரிவர் பெட் ஸ்கீம், ட்யூப் வெல்ஸ், ஆர்டிசன் வெல்ஸ், பில்டர் பாயிண்ட், இவைகள் ஒன்றுமே கிடையாது. பல முறை இவைகள் வேண்டுமென்று கேட்டதற்கு அங்கேயெல்லாம் பெரிதும் பாறை இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். பில்டர் பாயிண்ட் எல்லாம் மணல் பாங்கான இடங்களில் வைக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். அங்கும் ஏராளமான மணல் பிரதேசம் இருக்கிறது. இவைகள் எல்லாம் கொடுக்கிற அளவுக்கு அங்கு மணல் பாங்கான இடம் இருக்கிறது. ஆகவே அங்கு தண்ணீரைக் கொண்டு வருவதற்கு வேண்டிய வசதிகளை ஏன் செய்து கொடுக்கக்கூடாது? அதற்கு வேண்டிய முயற்சி ஏன் செய்துகொள்ள வில்லை. தயவுசெய்து இப்படிப்பட்ட பல விஷயங்களில் தீவிர கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இதுபோன்று கிணறுகள். கிணறுகள் வெட்டுவதற்கு மானியம் கொடுக்கிறார்கள். இப்பொழுது செங்கற்பட்டு, கோயம்பத்தூர், இன்னும் ஒன்றிரண்டு ஜில்லாக்களில் கிணறுகளை வெட்டி அதன்மூலம் தண்ணீரைக் கொண்டுவரக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதை நம்பி வெள்ளாமை செய்யக்கூடிய நிலைமை இருப்பதாக ரிபோர்ட்டில் இருக்கிறது. அதைப்போலவே வட ஆற்காடு ஜில்லாவிலும் கிணறுகள் வெட்டி விவசாயம் நடக்கக் கூடிய அளவுக்கு இருக்கிறது. பாறைமயமாகவுள்ள பிரதேசம் அங்கு இல்லை. அதனால் அங்கு அதிகப்படியான கிணறுகளை வெட்டியும், இருக்கக்கூடிய கிணறுகளை ஆழப்படுத்தியும் கொடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்குக் கடனோ அல்லது பாதிக்குப் பாதி மானியமோ கொடுத்து உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதோடு பாலாறு பேசின் ரூல்ஸ் இருக்கிறது. எதை எடுத்தாலும் அவைகளுக்கு இது சர்வரோக நிவாரணியாக இருக்கிறது. இதை வைத்துக்கொண்

எந்த திட்டத்தையும் எடுத்து நடத்த முடியவில்லை என்று சொல்
லுகிறார்கள். அங்கு மோர்தன டாம் கட்டக்கூடிய விஷயத்தில்
இந்த ரூல்களைக் கொண்டு வருகிறார்கள். அந்த அணையைக்
கட்டக்கூடிய விஷயமாக கனம் முதல் அமைச்சர் அவர்கள் 1955-ல்
அதை நேரடியாகப் போய்ப்பார்த்து அதற்கு என்று 75 லட்சம்
ரூபாயில் திட்டம் தயாராக இருக்கிறது என்றும் சொன்னார்.
அதைக் கட்டிக்கொடுத்தால் அந்த தாலுகாவிற்கு குடி தண்ணீர்
வசதியைச் செய்து கொடுக்கலாம். அப்படி குடி தண்ணீர் வசதி
செய்து கொடுப்பதற்கு 75 லட்சம் ரூபாய் செலவு செய்யா
விட்டாலும் பத்து அல்லது பதினைந்து லட்சம் ரூபாயில் ஒரு நீர்த்
தேக்கம் கட்டினால் இந்தப் பிரச்னை தீர்ந்து போகும். அங்கு
அதிகப்படியான உற்பத்தியைப் பெருக்குவதோடு அந்தத் தாலு
காவின் குடி தண்ணீர்ப் பிரச்னையும் தீர்ந்து போகும் என்பதைத்
தெரிவித்துக் கொள்ளுகிறேன். அந்த நிலைமையில் இந்த இரண்டு
வசதிகளைக் கொடுக்கக்கூடிய அளவில் நிலைமை இருப்பதால்
அந்தக் காரணத்தால் அந்த மோர்தன அணைக்கட்டைக் கட்ட
வேண்டும். அதற்கு இடையூறாக இருக்கக்கூடிய பாலாறு பேசின்
ரூல்களை உடனடியாக உடைத்து எறிய வேண்டும், பம்பு செட்டு
கள் போட வேண்டுமானாலும் இந்த ரூல்கள் இடம் கொடுக்காமல்
இருக்கிறது. அதனால் அதை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்துக்
கொள்ளவேண்டும். எத்தனை திட்டங்கள் எடுத்துச் சொன்
னாலும் அவைகளுக்கு முட்டுக் கட்டையாக இருக்கக்கூடிய இந்த
பாலாறு பேசின் ரூல்களை ரிலாக்ஸ் செய்வதற்கு நடவடிக்கை
எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படியே அதைச் சார்ந்த அதிகா
ரிகள்கூட சிபாரிசு பண்ணி இருப்பதாகத் தெரியவருகிறது.
அதை ரத்து செய்வதற்கு எந்த அளவு கவனம் செலுத்த
வேண்டுமோ அந்த அளவுக்கு கவனம் செலுத்த வேண்டும்
என்பதை கனம் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு
வருவதுடன் . . . . (மணி அடிக்கப்பட்டது). மற்ற விஷயங்
களை இன்னும் இரண்டு நிமிஷங்களில் முடித்துவிடுகிறேன்.

பெருவாரியான சிறிய நீர்ப்பாசனத் திட்ட விஷயங்களிலும்
சர்க்கார் தீவிர கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்
கொள்ளுகிறேன். அத்துடன் இருக்கக்கூடிய எரிகளை ஆழப்படுத்த
வேண்டும். அதற்குத் தேவையான கருவிகளை வாங்கி அந்த எரி
களை ஆழப்படுத்தி அதிகப்படியான தண்ணீரைத் தேக்கி வைப்ப
தற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அந்த
அளவுக்கு இந்த விஷயங்களில் அதிகப்படியாக தீவிர கவனம்
செலுத்த வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்
துக்கொண்டு இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

**Sri K. PONNIAN** : கனம் தலைவர் அவர்களே, கனம் மராமத்து
இலாகா அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய மானியக்
கோரிக்கையை ஆதரித்துச் சில வார்த்தைகளைப் பேச விரும்பு
கிறேன். என்னுடைய தொகுதியில் பரம்பிக்குளம், அலியார்
ப்ராஜெக்ட் திட்டங்கள் உருவாகி மிகவும் நல்ல முறையில் அவை





கள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக முன்னே
றிக்கொண்டு வருகின்றன. அதற்கு நான் என் நன்றியைத் தெரி
வித்துக் கொள்ளுகிறேன். அங்கு ஏரோட்டு டிவிஷன்களில் வேலை
கள் வெகு வேகமாக நடைபெற்று வருகின்றன. இருந்தாலும்
அங்கே சில குறைகள் இருக்கின்றன. அவைகளை நான் சுட்டிக்
காட்ட விரும்புகிறேன். பரம்பிக்குளத் திட்டப் பிராந்தியத்தில்
வேலைசெய்யக்கூடிய தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு பள்ளிக்
கூடம் கிடையாது. அங்கு இருக்கக்கூடிய மக்கள் எல்லோரும்
தமிழ் மக்கள். பரம்பிக்குளம் ஏரியாவானது கேரளாவில் இருக்
கிறது. அங்கு பள்ளிக்கூடத்தைக் கேரள அரசாங்கம் ஆரம்பிப்
பதா அல்லது தமிழ்நாடு அரசாங்கம் ஆரம்பிப்பதா என்ற
யோசனையில் இருந்து வருகிறது. இது ஒரு பெரிய பிரச்னையாக
இருக்கிறது. அங்கு வாழக்கூடிய மக்களுக்குக் கல்வி மிகவும்
அவசியமாக இருக்கிறது. அங்கு தமிழ் மக்கள் அதிகமாக இருப்
பதால் ஒரு பள்ளிக்கூடத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக அங்குள்ள தொழிலாளர்களுக்கு ஆஸ்பத்திரி
வசதி கிடையாது. அங்குள்ள தொழிலாளர்களுக்கு வியாதிகள்
ஏற்பட்டால் அவர்களைக் கொண்டுபோவதற்கு வேண்டிய மருத்துவ
வான்கள் கிடையாது. அங்குள்ள தொழிலாளர்களுக்கு இருக்கக்
கூடிய வீடுகளை நேரில் போய்ப் பார்த்தேன். அவர்களுடைய வீடு
கள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. ஆகவே அங்கு
தொழிலாளர்கள் வசிக்கக்கூடிய வீடுகளை நல்ல முறையில் செப்ப
னிட வேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்
கொள்ளுகிறேன். அவர்களுக்கு என்று அங்கு ஒரு சங்கம்
அமைத்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்து கொடுக்கவேண்டும்.
அங்குள்ள தொழிலாளர்களுக்கு ஆகஸ்ட் 15-ம் தேதியும், ஜனவரி
26-ம் தேதியும், விடுமுறை விட்டு சம்பளமும் கொடுக்கும்படியாக
ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அங்கு டிபார்ட்மெண்டில் வேலை செய்யக்கூடியவர்கள் இந்தத்
திட்டம் முடிந்தவுடன் வாழ வேறு என்ன செய்வது என்றும்,
அவர்கள் தங்களுடைய கதி என்னவாகுமோ என்றும் கவலைப்
பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதன் பிறகு அவர்களுடைய
வாழ்க்கையெல்லாம் கேவலமாக ஆகிவிடும் என்றும் அதனால் அவர்
களை இப்பொழுதே பர்மனென்ட் பண்ணிவிட வேண்டும் என்றும்
அவர்களுக்கு இப்பொழுது முதற்கொண்டே ப்ராவிடெண்ட்
பண்ட் வசதி, கிராடியூட்டி வசதி முதலியவைகளைச் செய்து
கொடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். மற்றப்படி
எல்லாவித சலுகைகளையும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும்
என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக வால்பாறை பிராந்தியத்திலுள்ள வால்பாறை
அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஆபீஸ், எக்சிக்யூட்டிவ் இஞ்சினியர் ஆபீஸ்
இவைகளையெல்லாம் வால்பாறையிலேயே அமைத்து அதை அபி

அதுமட்டுமல்ல. அங்குள்ள ரயத்துக்கள் பெட்டர்மெண்ட் டாக்ஸ மூலமாக நீண்ட தவணையில் அந்தத் தொகையைக் கொடுக்கவும் தயாராய் இருக்கிறார்கள். ஆகவே அந்த இரு கிராமங்களைப் பார்க்காமல் உடனடியாக இத்திட்டத்தை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். இதுபற்றி போர்டில் இருந்து உத்தரவு சீக்கிரம் பிறப்பிக்கும்படியாகவும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக அருள்தாஸ் ரிப்போர்ட்டில் காவேரி—மேட்டூர் ப்ராஜெக்ட் உபரி தண்ணீரை திருவாடானை தாலுக்கா, திருப்பத்தூர் தாலுக்கா ஆகிய இரண்டு தாலுக்காக்களுக்கும் கொண்டு வரலாம் என்று சொல்லியிருக்கிறார். தனிப்பட்ட அதிகாரியை அமைத்து அதையும் பரிசீலனை செய்தால் அந்தத் தாலுக்காக்கள் மிகவும் பயன்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியிலே கிராமங்களுக்கு கண்மாய் வெட்டுவதற்கு நிறையப் பணம் ஒதுக்கியிருந்தபோதிலும் சரியான முறையில் அந்த வேலை நடக்கவில்லை. பெரியோர்களின் சிபார்சினால்தான் அவ்வேலை பாதிக்கப்படுகிறது. அங்கு லேபர் சொஸைடிகள் இருந்தபோதிலும் அவர்களுக்குக் காண்டிராக்ட் கொடுக்க புட் ப்ரொடக்ஷன் என்ஜினியர் மறுக்கிறார். அப்படியின்றி பெரியவர்கள் தலையீடு இல்லாமல், லேபர் சொஸைடிகளுக்கு காண்டிராக்ட் கொடுத்தால் அவ்வேலை நல்ல முறையில் நடைபெறும் என்று சொல்லிக்கொண்டு உரையை முடித்துக் கொள்கிறேன்.

* SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM · தலைவர் அவர்களே, இந்தப் பொதுப் பணித் துறை இலாகாவை எடுத்துக் கொண்டால் இது சமுதாயத்தில் இருக்கக்கூடியவர்களில் மிகப் பெரும்பாலானவர்கள் வாழ்க்கையில் வளம் பெறவும், முன்னேற்றம் அடையவும் அரும் சேவை செய்து வருகிறது. பழங்காலத்தில் இருந்தே பயிர்த்தொழில் இங்குள்ள பெரும்பாலோரின் முக்கிய ஜீவனமாக இருந்து வருகிறது. சமுதாயத்தில் இருக்கிறவர்களுடைய முக்கியத் தொழிலாகிய விவசாயம் செழிக்க முதுகெலும்பாக இருப்பது இந்த பொதுப் பணி இலாகாவின் சேவைகள் என்றுகூடச் சொல்லலாம். பெரும் திட்டங்களை எடுத்துக்கொண்டால் முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே ஒன்பது திட்டங்களும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 6 பெரும் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இவற்றினால் 3-½ லட்சம் ஏக்கரா வரையிலும் பாசனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதோடு இருக்கக்கூடிய பாசனத்தை உறுதிப்படுத்துகின்ற முறையில் 1-½ லட்சம் ஏக்கரா பயன்படுகிறது என்று இதிலே குறிப்பிட்டிருப்பது எல்லாம் வரவேற்கத்தக்க அம்சங்கள். இதை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அதேசமயத்தில் சிறிய நீர்ப்பாசனத்திற்காக ஒன்றேமுக்கால் கோடி கோரியிருக்கிறார்கள். சிறிய பாசனம், பெரிய பாசனம் அத்தனையும் சேர்த்து 20 கோடி கோரியிருக்கிறார்கள். முக்கியமாக நம் நாட்டில் சிறிய பாசனங்களினால் பயன்பெறக்கூடிய விவசாயி



கள்தான் அதிகம். மொத்தம் 1,773 வேலைகளில் 1,520 வேலைகள் முடிக்கப்பட்டுவிட்டன, இன்னும் 600 வர இருக்கிறது என்கிறபோது இன்னும் அதிகமாக சிறிய பாசனத் திட்டங்கள் வருவதனால்தான் சிறு விவசாயிகள் சந்தோஷம், உற்சாகம் எல்லாம் அடைவார்கள் என்று பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதிகாரிகளுடைய உற்சாகத்தினாலும், திறமையினாலும்தான் செலவில்கூடக் கொஞ்சம் மிச்சம் காட்டியிருக்கிறார்கள் என்கிறபோது அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். மேலும் இத்துறையைப் பரவலாக்கி பலப்பல பிரிவு அதிகாரிகளைப் போட்டிருப்பதனால்தான் வேலை துரிதமாக நடந்துகொண்டு வருகிறது என்று சொல்ல முடியும். குறிப்பாக திருநெல்வேலி ஜில்லாவை எடுத்துக்கொண்டால் மைனர் இரிகேஷன்கீழ் மிகப் பெரும்பான்மையான வேலைகளைச் செய்திருக்கிறார்கள். அவ்வப்போது மக்களுக்குச் செய்யவேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கிறார்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன். இந்தத் துறையிலே ஈடுபட்டிருக்கும் பணியாளர்கள் குளங்களை மராமத்து செய்வதிலும், தூர்ந்து இருக்கும் கால்வாய்களைச் செப்பனிடுவதிலும் தயக்கமோ, தாமதமோ இல்லாமல் உடனுக்குடன் செய்திருக்கிறார்கள் என்பதை என்னுடைய அனுபவத்தில் இருந்து எடுத்துச் சொல்லுகிறேன். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கனம் அமைச்சர் அவர்கள் மானூருக்கு வந்திருந்தார்கள். அப்போது பிரதம என்ஜினியராக இருந்த திரு. ஆனந்தராவ் அவர்களும் வந்தார்கள். மானூர் குளத்தைப் பார்த்து, கடல் எனத் தண்ணீர் கொள்ளக்கூடிய ஒரு பெரிய குளத்தை ஏறத்தாழ ஒரு லட்சம் ரூபாய் செலவில் அதை மராமத்து செய்திருக்கிறார்கள். இன்று பார்க்கிறோம் 3,000, 4,000 ஏக்கர் அங்கு விளையக்கூடிய அளவில் இந்தத் திட்டம் பயன்படுகிறது. பயிர் விளைவது என்றால் இன்னது என்று தெரியாது இருந்த அந்தப் பகுதியில் வளம் தரும் நிலையிலே சிறு பாசனத் திட்டம் பயன் அளித்திருக்கிறது. நல்ல காலமாக, பயிர்செய்யப்பட்ட அந்தப் பகுதியில் இன்றையதினம் 4,000 ஏக்கர் விளைகிறது. அங்குள்ள மக்கள் வாயார வாழ்த்துகிறார்கள். அரை வயிறு, முக்கால் வயிறு நிரம்ப இந்த சர்க்கார் வாழ்க்கை வசதி செய்து கொடுத்திருக்கிறார்களே என்று வாழ்த்துகிறார்கள். இந்த நிலைமையில் இதுபோன்ற திட்டம் பயன்தரக்கூடியதாக இருக்கிறது. பிரிட்டிஷ் ஆட்சி நடந்துகொண்டிருந்தபோது 1927-ம் ஆண்டில் மானூர் கால்வாயை என்ஜினியரைக் கொண்டு பரிசீலித்துப் பார்த்ததில் 27 லட்சம் ரூபாய் செலவழித்து கடைசி 17 மைல் வரை கால்வாயை வெட்டினார்கள். மானூர் குளத்திற்குத் தண்ணீர் வரமுடியாமல், குளத்தின் லெவல் உயர்வாகவும், கால்வாயின் லெவல் தாழ்வாகவும் இருக்கிறது. ஆகையால் அந்தக் கால்வாய்க்காக செலவழிக்கப்பட்ட ரூபாய் வீணாகி கால்வாய்க்கு மதிகெட்டான் கால்வாய் என்று ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இப்பொழுது நல்லமுறையில் நிறைவேற்றப்பட்டிருப்பது குறித்து கனம் அமைச்சர் அவர்களையும், பணியாட்களின் திறமையையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[Srimathi Rajathi Kunchithapatham] [13th March 1961

இதுபோன்று இந்த வருஷத்திலேகூட பள்ளிக்குடி கால்வாய்
மராமத்திற்கு 93 ஆயிரம் ரூபாய் செலவழித்து ஏறத்தாழ ஆயிரம்
ஏக்கர் நஞ்சை சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டு செழிக்கும் நிலை
யில் இருக்கிறது. அதைக் கனம் அமைச்சர் அவர்கள் நேரில்
பார்க்கவேண்டுமென்று கிராம மக்கள் எல்லாரும் அவர்களை வர
வேற்க குதூகலத்தோடிருக்கிறார்கள். இந்த நிலைமை இன்று
சிறு பாசனத்தினால் வருகிறது என்பதைத்தான் குறிப்பிட விரும்
புகிறேன்.

அதேசமயத்தில் இப்போது நெல்லை ஜில்லாவில் எடுத்துக்
கொண்டால் அங்குள்ள ஊர்களின் பெயர்களெல்லாம் குளம், குளம்
என்று இறுதியாக முடியும் பெயர்களாகவே இருக்கும். புதுக்
குளம், அரசங்குளம் போன்று குளம் என்று முடியும் பெயர்களே
நிறைய இருக்கின்றன. எந்த ஊரைப் பார்த்தாலும் குளம்
என்றே முடியும். வெள்ளையர் ஆண்டகாலத்திலும், சிறு அரச
பரம்பரை ஆண்ட காலத்திலும், சிறு ஜமீந்தார்கள் ஆண்டகாலத்
திலும் இதுபோன்ற குளங்களை நம்பித்தான் அந்தப் பகுதியில்
உள்ள மக்கள் பயிர் செய்து வந்திருக்கிறார்கள். வானம் பார்த்த
பூமியாக அன்று இருந்திருக்கிறது. அந்தப் பகுதியில் எங்கு
பார்த்தாலும் மக்களுடைய ஜீவனமே குளத்தை நம்பித்தான்
இருந்திருக்கிறது. ஆகவே குளத்தை மராமத்து செய்வது
மிகவும் முக்கியமானது.

பெரியார் திட்டம், பரம்பிக்குளத் திட்டம், ஆளியார் திட்டம்,
சோலையார் திட்டம் பற்றி எல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள்
அவைகளெல்லாம் பற்றி மக்கள் சந்தோஷப்பட்டாலுமகூட
மாவட்ட ரீதியாக எடுத்துக்கொண்டால் எங்கள் மாவட்டத்தில்
ஒரு திட்டமும் இல்லை என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன். நெல்லை மாவட்டத்தில்தான் மணி
முத்தாறு திட்டம் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் கொண்டு
வந்தார்கள். அதை மறுக்கவில்லை. அதனால் 20 ஆயிரம் ஏக்கர்
நிலம் பாசன வசதி பெறக்கூடிய நிலையில் இருக்கிறது.
அதை மறுக்கவில்லை. இருந்தபோதிலும் ஏதோ ஒரு மணி
முத்தாறு திட்டம் நிறைவேற்றிவிட்டோம் என்று சொல்லி
அதோடு நெல்லை மாவட்டத்தை மறந்துவிட்டார்கள் என்று
நினைக்கிறேன். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எங்களுக்கு
ஒரு திட்டமும் இல்லை. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே
எங்களுடைய பம்பையாறு, புனலாறு திட்டங்கள் இருக்குமா
என்று பார்த்தால், காணவில்லை. ஆனால் பரம்பிக்குளம் திட்டத்
திற்கு 22 கோடி ரூபாய் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.
இதுபோன்று எங்கள் பம்பையாறு திட்டத்தைக் கொண்டு
வரவேண்டும். அண்டை மாகாணங்களில் ஓடும் ஆறுகளின் உபரி
நீரைப் பெறுவதற்கு கேரள அரசாங்கத்தின் ஒத்துழைப்பையும்,
பரஸ்பர நல் எண்ணத்தையும் பெறுவதற்கு முயற்சிக்கிறோம்
என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்களுடைய நல்
எண்ணத்தைப் பெறுவதற்கும், ஆதரவைக் கோருவதற்கும் பால்



13th March 1961] [Srimathi Rajathi Kunchithapatham]

பரமாகப் பேசி எங்களுடைய மாவட்டத்திற்குப் பயன்படக்கூடிய
ராமநதி திட்டம், கல்லாறு திட்டம், பம்பையாறு திட்டம், புனல்
ஆறு திட்டம் முதலிய திட்டங்களை இன்னும் கொண்டுவரவில்லை.
அவைகளைச் சீக்கிரமே நிறைவேற்றவேண்டுமென்று கனம்
அமைச்சர் அவர்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.
கடனா நதி திட்டம் தீட்டியாகிவிட்டது, ஸ்பெஷல் என்ஜினி
யரைப் போட்டாகிவிட்டது என்று சொல்கிறார்கள். ஆனால் அந்தத்
திட்டம் இன்னும் ஏட்டளவில்தான் இருக்கிறது. ஒரு வேலையும்
ஆரம்பிக்காமல் கடனா திட்டம் வருகிறதென்றால் 9 ஆயிரம் ஏக்க
ருக்குப் பாசன வசதி எப்பொழுது உறுதி செய்யப்படும் என்று
தெரியவில்லை. ஆகையால் பெரிய திட்டங்களைத் தவிர சிறிய
திட்டங்கள் ஆனாலும் சேலத்திற்கும் கோவைக்கும் திட்டத்திற்கு
அதிகப் பணம் கொடுத்திருப்பதுபற்றி தனியாகக் குறிப்பிடப்
பட்டிருக்கிறது. ஆனால் எங்கள் நெல்லை மாவட்டத்தைப்பற்றித்
தனியாக ஒன்றுமே எந்தவகையிலும் காணோம். பெரிய திட்டங்
கள் இல்லையென்றாலும் குளமராமத்து என்கிற வகையில் சேலத்
தைப் போலவோ, கோவையைப் போலவோ ஏதாவது ஒன்று
இருக்குமா என்று பார்த்தால் அதுவும் எங்கள் நெல்லை மாவட்டத்
தைப் பொறுத்தவரையில் பூஜ்யமாக இருக்கிறது. நாங்குனேரி
தாலுக்கா, சங்கரன்கோவில் தாலுக்கா மிகவும் பிற்பட்டதாகவும்
வரட்சி உள்ளதாகவும், மிகவும் மோசமான நிலையிலும் இருக்
கின்றன. அங்கே குளங்கள் வரண்ட தாம்பாளங்கள் ஆகி
விட்டன. இந்தக் குளங்களை மராமத்து செய்வதற்கு சேலத்
திலும், கோவையிலும் திட்டங்கள் இருப்பதுபோல் எங்கள்
மாவட்டத்திலும் ஸ்பெஷல் ஸ்கீம்கள் கொண்டுவரவேண்டுமென்று
தாழ்மையுடன் கேட்க விரும்புகிறேன். பழங்காலத்தில் நல்லத்
தங்காள் நாடகம் பார்த்திருக்கிறோம். நல்லத்தங்காள் 7 குழந்தை
களைக் கிணற்றில் போட்டுவிட்டு, தானும் இறந்ததற்குக் காரணம்,
பஞ்சத்தின் கொடுமையினாலும், பசியின் கொடுமையினாலும் என்ற
சோகக் கதையைக் கேட்டிருக்கிறோம். அப்படிப்பட்ட சோகக்
கதை நடந்த இடம்தான் சங்கரன்கோவில் தாலுக்காவில் உள்ள
தேர்குளம். அந்தப் பகுதியில் நடந்து செல்கிறவர்களுக்கு
அந்தச் சோகக் கதை நினைவிற்கு வராமல் இருப்பதற்கு இம்
மாதிரி ஒரு நல்ல திட்டம் அங்கு வரக்கூடாதா என்று கேட்க
விரும்புகிறேன்.

அடுத்தபடியாக குடிமராமத்துபற்றி ஒரு வார்த்தை சொல்ல
விரும்புகிறேன். திருநெல்வேலி முனிசிபல் எல்லையில் தாம்பிர
பரணி நதியில் ஒரு கால்வாய் போய்க்கொண்டிருக்கிறது. அது
வீடுகளுக்குப் பின்புறமாக ஓடுவதால் அதில் எச்சில் இலை, குப்பை
கூளங்கள் போட்டுவிடுகிறார்கள். அதனால் அது நிரம்பிக்
கொண்டே வந்து இப்போது பழுது அடைந்த நிலைமையிலே
இருந்துகொண்டிருக்கிறது. மராமத்து இலாக்கா என்ஜினியரைக்
கேட்டால் அது முனிசிபல் எல்லையில் இருப்பதால் அதை முனிசி
பாலிடி பழுது பார்க்கவேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால்
இதுவரையில் எந்த ஒரு முனிசிபாலிடியோ, பஞ்சாயத்தோ குடி

[Srimathi Rajathi Kunchithapatham] [13th March 1961

மராமத்து செய்திருப்பதாகத் தெரியவில்லை. அப்படியிருக்கும்போது அவர்கள் செய்யவேண்டும் என்று எதிர்பார்ப்பது நடக்கக்கூடாத காரியம் என்றுதான் நினைக்கிறேன். இம்மாதிரி கால்வாய்கள் முனிசிபல் எல்லை, பஞ்சாயத்து எல்லைக்குள் ஓடினாலும்கூட அவ்வேலையை பி.டபிள்யூ.டி. எடுத்துச் செய்யவேண்டும்.

சில குளம் குட்டைகள் இர்ரிகேஷன் திட்டத்திலே இருக்கின்றன. திருநெல்வேலி தாலுக்காவில் இரட்டைக்குளம் இருக்கிறது. ஆனால் அந்தக் குளம் எங்கே இருக்கிறதென்று மைனர் இர்ரிகேஷன் லிஸ்ட்டிலே இல்லை. பி.டபிள்யூ.டி. லிஸ்ட்டிலும் இல்லை என்று சொல்லுகிறார்கள் Food Production Department லிஸ்டிலும் இல்லை என்று சொல்லுகிறார்கள். எந்த இலாகா லிஸ்டிலும் சேராத குளங்களைப் பொறுத்தவரையில் ஸ்பெஷலாக எடுத்துக்கொண்டு அவைகளைப் பழுதுபார்க்கவேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்தக் குறை மிகவும் முக்கியமானது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நான் முதலில் குறிப்பிட்ட சிறு பாசனங்களுக்கு இன்னும் அதிகமான தொகை ஒதுக்கி இருக்கலாம். பெரும் திட்டங்கள் பொறுத்தவரையில் நெல்லை போன்ற மாவட்டங்களுக்குக் குறைவான நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. கேரளத்தில் இருந்து பாயும் நதிகளை நெல்லை மாவட்டத்தில் பயன்படுத்துவதற்கு கனம் அமைச்சர் அவர்கள் அதிகக் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பாம்பிக்குளம் இருக்கிறதென்று சொல்லிவிட்டால் அது மற்றவர்கள் எல்லோருக்கும் சந்தோஷமாக இருந்தாலும் நெல்லை மாவட்டத்தில் உள்ளவர்களைப் பொறுத்தவரை ஆறுதல் அளிக்க முடியாது. அவரவர்களுடைய மாவட்டங்களுக்குத் திட்டம் வேண்டுமென்று அழுத பிள்ளைதான் பால் குடிக்கும் என்ற நிலையை கனம் அமைச்சர் அவர்கள் உண்டாக்கித் தராமல் ஒரு மாவட்டத்திற்கு ஒரு திட்டம் இருக்கவேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கல்யாண வீட்டுக்குப் போன அத்தனைபேரும் சந்தோஷமாக இருப்பதுபோல், ஒரு வீட்டிலே கல்யாணம் நடந்தாலும் ஊரில் உள்ளவர்கள் எல்லாம் சந்தோஷப்படுகிறார்கள். காரணம், அங்கு போகிறவர்களுக்கு சாப்பாடு, சந்தனம், தாம்பூலம் எல்லாம் கிடைக்கிறது. அதுபோல் திட்டம் என்று வரும்போது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு திட்டமாவது இருந்தால்தான் எல்லோரும் திட்டத்தை வரவேற்பார்கள். இந்த வகையில் பார்த்தால் நெல்லை மாவட்டம் மிகவும் புறக்கணிக்கப்பட்டது என்ற என்னுடைய தாழ்மையான அபிப்பிராயத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். எங்களுக்கு பம்பையாறு, புனல் ஆறு திட்டம், கல்லாறு திட்டம் இவைகளைப் பொறுத்தவரையில் கேரள அரசாங்கத்துடன் பேசி ஒரு நல்ல திட்டத்தை எங்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.



13th March 1961]

* SRI S. RANGANATHA MUDALIAR: Mr. Chairman, while supporting the Demands for Irrigation, I wish to make a few observations for the consideration of the Government. It is generally believed that our State has almost exhausted its irrigation potentialities. Sharing perhaps this belief, the Hon. the Minister for Finance made a statement the other day in his Budget speech that 'so far as irrigation is concerned, our future hopes rest entirely on the surplus waters of the rivers flowing in other States'. Now, the question is, 'have we really exhausted the available resources?' So far as the two principal rivers in our State—Cauvery and Tambraparni—are concerned, the answer to the question is 'Yes'. The river Cauvery has been the principal source of irrigation of the Tamil country from the times of recorded history. At one time, it must have been a perennial river. For, it is so described in the ancient classics of Tamil Sangam Age. 'Van Poikkinum than Poyya Cauvery'. It must be said to the credit of the Tamils that long before any planning was even drempt of, the river Cauvery was made to shed its waters to its utmost limits for the welfare of the people. This cannot be said even of the great rivers in our country, not even of the Ganges and the Indus. Under these circumstances, it is unfair to strain the resources of the Cauvery any more for our irrigation and non-irrigation purposes. The same is almost true in regard to the river Tambraparni. These two rivers apart, what are our other resources? What are the sources still available and which remain to be explored?

Now, Sir, I would like to classify our resources under five heads: First comes Lift Irrigation, secondly come Artesian Wells. Thirdly, we must harness rain waters pouring on the Western and Eastern Ghats and flowing down the slopes into innumerable rivulets and streams. Fourth comes the conversion of sea water into fresh water. Last comes the linking of the All-India River System. In this context, we have also to take into account the surplus waters of the rivers Godavari, Krishna and Pennar. In this order, you will be pleased to see that I place the surplus waters of the other States last. We should go in for the same only as a last resort. So far as the river system is concerned, our State is in an unenviable position compared to States like the Punjab, Uttar Pradesh, Bengal, Bihar, Orissa, Andhra Pradesh and Maharashtra where the rivers are more often in floods than otherwise, and which States do not need any additional supply of water from outside.

Coming to the available resources in our State which are still to be explored, I put lift irrigation first. Now that electric power is being made cheaper, thanks to the great and meritorious services of the Electricity Board of our State, we can improve lift irrigation on a very extensive scale, particularly in the districts of North Arcot, Chingleput and Salem where already large tracts of land have been brought under lift irrigation. Now that electricity is becoming more and more cheaper, we can expand and improve this scheme on a very extensive scale.

[Sri S. Ranganatha Mudaliar] [13th March 1961

Secondly, we have to improve our irrigation through artesian wells. For several years now, in the South Arcot district, there are artesian wells and lands which were barren a score of years ago in that district, have been brought under cultivation through artesian flow. We all know that the mining of lignite at Neyveli is being held up by subterranean water associated with lignite. There is a particular kind of rock formation along the entire length of Coromandel Coast from Marakanam in the North up to Rameswaram in the South. This rock formation is known as Tertiary which is sand-stone and is porous and which also contains large quantities of water. The width of the territory belt ranges from 30 to 50 miles in the regions covered by the districts of South Arcot, Tanjore, Tiruchirappalli, Madurai and probably Tirunelveli. The Geological experts say that under these Tertiary rocks, there is plenty of subterranean water. It is therefore necessary and very urgent that our Government should start investigation on the potentialities of this region in this regard.

Thirdly, large and enormous quantities of water in the shape of rainfall during the monsoon, fall on the Eastern and Western Ghats and flow into a number of rivulets and streams ultimately losing themselves into the sea. The south and south-western parts of our State, viz., North Arcot, Salem and Coimbatore have no subterranean water resources and no rivers worth the name. It is therefore, very necessary that for the welfare of those districts, the monsoon waters that now escape into the sea should be properly utilized. It behoves our Government to enlist the co-operation and co-ordination of the Central Government to build dams across the small rivers that flow in these places and conserve water which is at present wasted into the sea.

Fourthly, we have got sea water in abundance. Even the other day, the Hon. the Minister for Revenue answered a question relating to the advisability and feasibility of converting sea-water into fresh water. (The time-bell was rung.) Sir, I crave your indulgence for two more minutes as this is a very important subject. I was referring to the abundance of sea water. In many parts of the world, experts are attempting to convert sea-water into fresh water. For example, in Kuvaite in Arabia they produce $2\frac{1}{2}$ million gallons of fresh water from sea water. In the Ariba Island off the Venezuelan coast in South America they depend on such converted water which they use to a limited extent for growing vegetables and fruits. The storage capacity of tanks there is 13 million gallons of water. The Department of Interior of the United States Government runs a Division of Saline water. This department is doing excellent work by converting sea water into fresh water. Russia is also doing excellent work in this regard. Recently, the UNESCO organized a symposium on this concept in Iraq. I suggest the formation of a Saline Water Division on the model of the one existing in the United States, that may work in close and active co-operation with the Saline Water Division in the United States in the first instance. If necessary, we may take on loan the services of one of the American Officers working there.



13th March 1961] [Sri S. Ranganatha Mudaliyar]

Lastly, I would request the Government to pay greater and intensive attention to the desilting of many of the irrigation projects. By deepening those sources, we will be able to considerably increase their capacity and also increase the water-supply. After exhausting all these resources, if we should still need water, then we can think of going with a begging bowl to the neighbouring States for their surplus waters. 11-00 a.m.

With unlimited resources still to be exploited and with Neyveli flourishing and giving us power, it is my humble opinion that our State does not need anything more. Thank you, Sir.

* SRI K. ANBAZHAGAN : சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, இன்று கொண்டு வரப்பட்டிருக்கின்ற மான்யத்தில் ஏறத்தாழ 10 கோடி ரூபாய் அளவுக்குச் செலவு செய்வதற்கு வழிவகைகள் இருக்கின்றன. பத்து கோடி ரூபாய் அளவுக்குச் செலவு செய்யப்பட வேண்டிய இந்த இலாகாவில் எந்த அளவுக்குப் பொறுப்பும் கவனமும் இருந்து வருகிறது என்பதை எண்ணிப் பார்ப்பார்களேயானால் அமைச்சர் அவர்கள் இதில் தேவையான சுறுசுறுப்பு இல்லையென்பதை நிச்சயமாக உணருவார்கள். அமைச்சர் அவர்கள் இதை உணரவில்லை என்பதற்காக இதைச் சொல்லவில்லை. பெரும் அளவில் செலவாகக் கூடிய இந்தத் திட்டங்களின் மூலமாக அதன் பலனை முழு அளவுக்கு மக்கள் அடைகின்றனரா என்பதை இந்தத் துறையில் பணியாற்றுகின்றவர்கள் சிந்திக்கவேண்டும். ஏறத்தாழ பல அணைகட்டுத் திட்டங்களை நிறைவேற்றிவிட்டோம் என்று அமைச்சர் அவர்கள் பெருமையாக எடுத்துச் சொல்லுகிறார்கள். கடந்த பத்தாண்டு காலத்தில் நிறைவேற்றப்பட்ட நீர்த்தேக்கத் திட்டங்களை எல்லாம் எடுத்துக் கொண்டு, அவைகள் எல்லாம் எந்த அளவுக்கு மக்களுக்குப் பயன்படுகிறது என்பதையும் நாம் பார்க்க வேண்டும். இதுவரை நிறைவேற்றியுள்ள திட்டங்களால் இத்தனை ஏக்கரா நிலங்கள் நல்ல நீர்ப்பாசனம் பெறுவதன் மூலம் வருமானத்தைப் பெருக்கிக்கொள்வதற்கு வாய்ப்பு பெற்றிருக்கிறது என்று தெரிவித்துள்ளார். ஆனால் குறிப்பிட்டு நான் சொல்ல விரும்புவது, கட்டிய அணைக்கட்டுத் திட்டங்களின் மூலமாக எந்த அளவுக்குப் பாசனம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டதோ அந்த அளவுக்குப் பலனைப் பெறக்கூடிய வாய்ப்பு ஏற்படவில்லை என்பதை அந்த இலாக்காவின் சீப்-இன்ஜினியராக இருக்கக்கூடியவர் அதற்கு அடுத்த நிலையில் நிர்வாகத்துறையில் பணியாற்றக் கூடிய சூப்பிரண்டெண்டிங் இன்ஜினியர்களுக்கு அனுப்பியிருக்கின்ற சுற்றறிக்கையில் காணப்படும் சில வாசகத்தை அமைச்சர் அவர்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். . . .

5—11—1960 தேதியிட்டு, சீப்-இன்ஜினியர் அனுப்பிய சுற்றறிக்கையின் முதற்பகுதி இது. . . .

"The Superintending Engineers are aware of the fact that our storage reservoirs built under the Five-Year Plans are not successful in *all* the years. Very often, when the canals under them

[Sri K. Anbazhagan] [13th March 1961

are opened for irrigation, there may not be adequate water to successfully carry out irrigation over the *full extent* as envisaged in the Project Report. There is also no definite means of knowing as to whether the reservoirs will get the requisite quantity of water later in the season. So, the problem arises as to the extent under the canal, which should be thrown open for irrigation on the due date. Very often, we throw open the full extent, with the hope the reservoir may receive adequate storage; but it is obvious that this can land us in trouble.''

. . . . என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இதிலிருந்து
கட்டப்பட்ட நீர்த்தேக்கங்கள் எந்த அளவுக்குப் பலனைத்தரும்
என்கின்ற புள்ளி விவரங்களைப் பார்க்கும்போது, சில நேரத்தில்
75 சதவிகிதமும், சில நேரத்தில் 50 சதவிகிதமும், சில நேரத்தில்
25 சதவிகிதமும்தான் உழவுக்குத் தண்ணீர் தரக்கூடிய நிலையில்
இருக்கின்றன என்பது விளங்கும். புத்தகத்தில் தரப்படும் புள்ளி
விவரங்களை மட்டும் வைத்துக்கொண்டு, நாங்கள் பெருமளவு
சாதித்துவிட்டோம் என்று சொல்லுவது, உணவு அமைச்சர் அவர்
கள் இந்நாட்டில் உணவு உற்பத்தியை அதிகம் பெருக்கிவிட்டோம்
என்று சொன்னாலும், புள்ளி விவரத்தில் அது குறைந்து விட்டது
என்று காட்டுவது போன்றுதான் இருக்கும். கட்டப்பட்ட அணைக்
கட்டுக்கள் எல்லாம் எதிர்பார்க்கப்பட்ட முழு அளவுக்குப் பயன்
படவில்லை, குறைவான நிலத்திற்குத்தான் பயன்பட்டிருக்கிறது
என்பதை நினைவில் கொண்டு, இனிமேலாவது இந்த அணைகளி
லிருந்து இந்த அளவு நிலத்திற்குத்தான் தண்ணீர் விட முடியும்
என்று வரையறுக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதால் திட்டங்
களின் நோக்கம் முழு அளவில் நிறைவேறவில்லை என்பதை ஒப்புக்
கொள்ளவேண்டும். அமைச்சர் அவர்கள் தம்முடைய உரையில்,
"நமது மாநிலத்திலுள்ள பெரிய ஆறுகளை எல்லாம் ஏற்கனவே
நாம் முழு அளவிற்குப் பயன்படுத்திக் கொண்டுவிட்டோம். அதன்
விளைவாக பெரிய பாசனத் திட்டம் எதையும் நாம் இனி நினைப்
பதற்கில்லை. சிறிய ஆறுகளைப் பயன்படுத்துவதற்கான இடைத்
தரத் திட்டங்களை மேற்கொள்வதையும், ஏற்கனவேயுள்ள பாசனத்
திட்டங்கள் சிலவற்றைச் சீர்திருத்துவதையும் மட்டுமே நாம் இனி
கருத வேண்டியிருக்கிறது" என்று சொல்லுகிறார்கள். நான் அவர்
களுக்கு நினைவூட்ட விரும்புவது, சில திட்டங்கள் ஏற்கனவே
மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படும் என்று சொல்
லப்பட்டவை, இப்பொழுது கைவிடப்பட்டிருக்கின்றன. காரணங்
கள் வேண்டுமானால் இலாகாவிலுள்ளவர்கள் எடுத்துச் சொல்ல
லாம். தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள காவிரி கால்வாய் கரைகள்
எல்லாம் புதுப்பிக்கப்பட்டாக வேண்டும் என்றும், அதற்காக ஒரு
கோடி ரூபாய் செலவாகும் என்றும் ஒரு திட்டம் இருந்தது.
இப்போது அது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்
கொள்ளப்படுகின்ற நிலை இல்லை. அதே போன்று கோவை மாவட்
டத்தில் காளிங்கராயன் ஹைலெவல் கனால் திட்டமும் இப்பொழுது
கைவிடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. நூற்று எண்பத்தெட்டு
லட்சம் ரூபாய் செலவில் போடப்பட்டிருந்த மருதையாறு அணைத்



13th March 1961] [Sri K. Anbazhagan]

திட்டமும்—திருச்சி ஜில்லாவில் நிறைவேற்றுவதாக இருந்தது—
அதுவும் கைவிடப்பட்டிருக்கிறது. பாலாறு-பூந்தலாறு திட்டத்
தைப்பற்றி பழனி சட்ட மன்ற அங்கத்தினர் அவர்கள் அடிக்கடி
வற்புறுத்துவார்கள், 178 லட்சம் ரூபாயில் அந்தத் திட்டம் உருவாக்
கப்பட்டிருந்தது; அதையும் மூன்றாவது திட்டத்தில் ஏற்றுக்கொண்
டிருப்பதாகத் தெரியவில்லை. நூற்று இருபத்து நான்கு லட்சம்
ரூபாய் அளவில் போடப்பட்டிருந்த நொய்யல் ஆறு திட்டமும்
கைவிடப்பட்டிருக்கிறது. அதே போன்று வட ஆற்காட்டில்
செய்யாறு அணைத் திட்டமும். தென்னாற்காட்டில் மணிமுத்தா
நதித் திட்டமும் கைவிடப்பட்டிருக்கின்றன. இத்தனை திட்டங்
களைக் கைவிட்டு விட்டு, இனிமேல் எடுத்துக்கொள்வதற்கான
பெரிய திட்டங்கள் ஒன்றும் மாநிலத்தில் இல்லை என்று எதிர்க்
கட்சியினரைத் திருப்தி செய்வதற்காகச் சொல்வதைப்பார்த்தால்,
உண்மையிலேயே இதற்கான பணம் கிடைத்தால், இப்படிப் பேசி
இறைக்கிறார்கள் என்பதைத்தான் இது காட்டுகிறது. மத்திய
சர்க்காரிடத்திலிருந்து நமக்குக் கிடைக்கவேண்டியதாகக் கேட்கப்
பட்டது 30 கோடி ரூபாய்; அதில் கிடைத்திருப்பது 27 கோடி
ரூபாய்; அதிலும் 23 கோடி ரூபாய் பரம்பிக்குளம்-ஆழியாறு
திட்டத்திற்காக ஒதுக்கியபின் மீதமிருக்கின்ற 4½ கோடியைக்
கொண்டுதான் ஏற்றுக் கொண்டுள்ள மூன்று, நான்கு திட்டங்
களுக்குச் செலவு செய்யவேண்டியிருக்கிறது. நான் குறிப்பிட்ட
இந்தத் திட்டங்கள் ஏன் இப்போது மூன்றாவது திட்டத்தில்
சேர்க்கப்படவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்
களானால் நான் அதை ஏற்றுக்கொள்வேன். அதே நேரத்தில் புதிய
திட்டங்கள் ஒன்றையும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லையா
என்றால் ஒன்றிரண்டு திட்டங்களையும் மேற்கொண்டிருக்கிறார்கள்.
அவை சிறு சிறு திட்டங்களானாலும் கருத்து வேற்றுமையை ஏற்
படுத்தக் கூடிய வகையில் அமைச்சர் அவர்கள் இடந்
தந்திருக்கிறார்கள். குறிப்பாக நான் சொல்ல விரும்பு
கிறேன், நமது அமைச்சர் திரு. கக்கன் அவர்களின் மதுரை
மாவட்டத்தில் அழகர்மலையில் பெரிய அருவித் திட்டம்
ஒன்று ஓராண்டு காலத்திற்குள் பரிசீலனை செய்யப்பட்டு
அதற்கென்று நான்கைந்து லட்சம் ரூபாய் செலவாகும் என்று
திட்டமிடப்பட்டு, அதற்கான துவக்க விழாவும், வருகிற தேர்த
லுக்கு முன்னர் நடைபெறுவதற்குரிய முறையில் வேலை விறுவிறுப்
பாக நடந்து வருகிறது. இந்த அளவுக்கு வேலை துரிதமாக நடக்
கிறது என்பதற்காக அமைச்சர் அவர்களை நான் வாழ்த்துகிறேன்.
அதே சுறுசுறுப்பு வட ஆற்காடு மாவட்டத்தில் 3 லட்சம் ரூபாய்
செலவில் போடப்பட்ட கமண்டலநாகநந்தி திட்டம் ஐந்து ஆண்டு
காலமாகவே நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்
பட்டும், அதற்கான எஸ்டிமேட் இலாக்காவினால் தயாரிக்கப்பட்
டிருந்துங்கூட இதுவரை எடுத்துக் கொள்ளவில்லை, வேறு புது
திட்டத்திற்கெல்லாம் அரசாங்கத்தில் எஸ்டிமேட் போடப்படு
கிறது. ஆனால் இந்தத் திட்டம் இதுவரை கைவிடப்பட்டிருக்
கிறது இதை நான் கண்டிக்க விரும்புகிறேன். அழகர்மலை அருவித்

[Sri K. Anbazhagan] [13th March 1961

திட்டம் காலையில் எழுந்து, பகலில் சாப்பிட்டு மாலையில் நடக்க ஆரம்பிக்கின்றது, ஆனால் அதே நிலைமை மற்ற இடத்தில் ஏனோ ஏற்படவில்லை? ஒரு பக்கத்தில் விருவிருப்பாக வேலை நடக்கிறது, இன்னொரு பக்கத்தில் பிற்போக்குத்தனமும் இருக்கிறது. ஏன் இந்த வித்தியாசம் காட்டப்படுகிறது என்று கேட்க விரும்புகிறேன்.

அதே போன்று தஞ்சை மாவட்டத்தில் காவிரி கால்வாய்களின் கரையோரங்களை சீர்திருத்தம் செய்தால் அதன் மூலமாக பாசனத்தைப் பெருக்க முடியும் என்று திட்டமிடப்பட்டிருந்தது, அதுவும் கைவிடப் பட்டிருக்கிறது. அதே நேரத்தில் வைகை கால்வாய்கள் கரைபற்றிப் போடப்பட்டிருந்த திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. மாவட்டத்திற்கும் மாவட்டம் எப்படி இந்த வித்தியாசம் காட்டப்படுகின்றது என்று கேட்க விரும்புகிறேன். அடுத்து நான் தெரிவிக்க விரும்புவது, கட்டுகிற புதிய அணைகட்டுகளினால் அந்த வட்டாரத்தில் உள்ள எல்லா மக்களுக்கும் நல்ல பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்படுவதில்லை. தென்னாற்காட்டில், கோமுகி நதி, மணிமுத்தாறு நதி அணைக்கட்டுகள் கட்டப்படுமானால் விருத்தாசலம் பக்கத்திலுள்ள மேமாத்தூர் ஏரி விருத்தாசலம் அணை மூலம் பாசன வசதி பெறும் நிலங்களில் 12 ஆயிரம் ஏக்கர் நிலம் பாதிக்கப்படக்கூடும் என்று அங்குள்ளவர்கள் கவலை தெரிவிக்கிறார்கள். நான் முன்னால் படித்துக்காட்டிய சீப்-இன்ஜினியர் சுற்றறிக்கையைப் பார்த்தால், தற்போது நிறைவேற்றப் பட்டுள்ள நீர்ப்பாசனத் திட்டங்களால் நீர்த்தட்டு ஏற்படலாம் என்று தெரிகிறது. ஆகவே பாதிக்கப்படுகிற மக்களுக்கு, இன்றைய தினம் பாசனத்துக்கு எவ்வளவு தண்ணீர் கிடைக்கின்றதோ, அந்த அளவுக்குக் குறையாமல் நிச்சயமாகத் தண்ணீர் கிடைக்கும் என்ற உறுதியை அமைச்சர் அவர்கள் அரசாங்க அறிவிப்பு மூலமாக, அரசாங்க (ஜி.ஓ.) ஆணை பிறப்பிக்கவேண்டும், என்று கேட்டுக் கொள்கிறேன்.

நமது அமைச்சர் கக்கன் அவர்கள் நந்தன் பரம்பரையைச் சேர்ந்தவர் என்பதைப் பெருமையுடன் சொல்லிக்கொள்கிறோம். தமிழ் நாட்டில் நந்தன் போால் கோவில் கட்டுவதைவிட அதிக பயன் தரத்தக்கது நந்தன் கால்வாய்த்திட்டம். விழுப்புரத்திற்கு அருகில் நந்தன் கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்றவேண்டும் என்று திரும்ப திரும்ப கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதற்காக இதுவரையிலும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

சென்ற ஆண்டு இதே மானியத்தின்மீது நான் பேசியபோது, சின்னாறு தேக்கத்தில் திட்டமிடப்பட்டதைவிட பணச்செலவு மிகவும் அதிகமாகியது என்றும் அதற்குரியவர்களைக் காரணம் கேட்டு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டேன். அதன் பெயர் சின்னாறு என்றாலும் பிரச்னை சிறியதல்ல; பெருமளவில் பணம் பாழாகியிருக்கிறது. ஆகவே இதைப் பற்றி அமைச்சர் அவர்கள் விசாரித்து இப்பொழுதாவது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். . . .



13th March 1961]

**THE HON. SRI P. KAKKAN:** கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுவது எந்த மாவட்டத்தைப் பற்றி என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன். . .

**SRI K. ANBAZHAGAN:** திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த சின்னாறு திட்டத்தைப் பற்றித்தான் குறிப்பிடுகிறேன். அடுத்து 'டீஸில்டிங் அன்ட் ரிக்ளமேஷன் ஸ்கீம்' தூர் எடுத்து ஆழப் படுத்தும் பணி, இரண்டு மூன்று மாவட்டங்களில் அந்த வேலை நடைபெற்று வருவதாக மூன்று ஆண்டுகளாகவே சொல்லப்படுகிறது. ஆனால் அடியோடு அந்த வேலை நல்ல அளவில் நடைபெற வில்லை. அந்தத் திட்டத்தின்படி ராமநாதபுரம் மாவட்டத்திலும் அந்தத் திட்டத்தைத் தொடங்கியிருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் 1959-லேயே தெரிவித்திருக்கிறார்கள். அப்படி சொல்லப் பட்டிருந்தபோதிலும் இதுவரையில் அங்கு வேலை நடைபெற்றதாகத் தெரியவில்லை. இந்த வேலைக்காக இரண்டு இன்ஜினியரிங் டிவிஷன்கள் அமைக்கப்பட்டு, அப்படி அமைக்கப்பட்ட என்ஜினியரிங் பகுதிகள் பின்னர் நீக்கப்பட்டு விட்டன. ராமநாதபுரம் மாவட்டம் விவசாயத்தில் பின்தங்கி இருப்பதை மாற்ற எந்த வழி வகையும் இதில் செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

இப்போது உணவு இலாகா மூலமாக—ஃபுட் ப்ரொடக்ஷன் இலாகா மூலமாக—மேற்கொள்ளப்படுகிற திட்டங்களில் அதிக தாமதம் ஏற்படுகிறது. நிர்வாக முறையில் இருக்கும் தாமதமோ அல்லது வேறு என்ன குறையோ அதிக காலக்கேடு ஏற்படுகிறது. இயன்றவரை ஒரே இலாகா மூலமாக நீர்ப்பாசனத் திட்டங்களின் வேலையை எல்லாம் கவனிக்கவேண்டும். கலெக்டர் மேற்பார்வையில் ரெவின்யூ இலாகாவில் இருக்கின்ற திட்டங்கள் நேரல் டெவலப்மெண்ட் ஸ்கீமின்கீழ் பஞ்சாயத்து யூனியனிடத்தில் ஒப்படைக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. அப்படியானால் இந்தத் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பு யாரிடத்தில் அளிக் கப்படுகிறது என்றால்—நான் கேள்விப்படுவது—ஹைவேஸ் இலாகா விடத்தில். அப்படி ஹைவேஸ் இலாகாவிடம் ஒப்படைப்பதானால் அவர்கள் ஏரி குளம் வெட்டுவதில் அல்லாமல் ரோடு போட்டுப் பழகியவர்கள் என்பதைக் கருதவேண்டும். அவர்கள் நுண்ணியலில் திறம் படைத்தவர்கள் என்று சொல்லலாம்—இருந்தாலும் அவர் களிடம் இந்தத் துறையை ஒப்படைப்பது சிறந்ததல்ல—அவர் களுக்கு இந்தத் துறையில் போதுமான அனுபவம் இருப்பதற் கில்லை. இதுபற்றிய பொறுப்பு முழுவதையும் நீர்ப்பாசன (இர்ரி கேஷன்) இலாகாவிடம் ஒப்படைக்கவேண்டும். நிர்வாகத்தின் தலைவராக இருக்கின்றவர்களிடத்தில் அதிக சுறுசுறுப்பைத் தூண்டவேண்டும். பிரித்துப் பிரித்து பலரிடத்தில் ஒப்படைத் திருப்பதால்தான் ராமநாதபுரம் மாவடத்தில் வேலை சரியாக நடை பெறவில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

எஸ்.எம்.ஐ.பி.—ஸ்பெஷல் மைனர் இர்ரிகேஷன் ப்ராஜெக்ட்ஸ்— என்ற பெயரால் மத்திய சர்க்காரிடமிருந்து உதவித் தொகையும் கடன் தொகையும் பெற வாய்ப்பு இருக்கிறது. ஆனால் அந்தத்

[Sri. K. Anbazhagan] [13th March 1961

தொகை இதுவரையும் சரிவரப் பெறப்பட்டதாகத் தெரியவில்லை. தமிழ் நாட்டிலே நீர்ப்பாசனம் சம்பந்தப்பட்டமட்டில் செய்ய வேண்டிய காரியங்கள் எவ்வளவோ இருந்தும், இந்தத் துறையில் நாம் எவ்வளவோ பின்தங்கியிருந்தும், மத்திய சர்க்காரிடமிருந்து பெறக் கூடிய முழுப் பணமும் உதவித் தொகையும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பெறப்படவில்லை. கிடைக்கக்கூடிய பணத்தை விட்டுவிடாமல் கனம் அமைச்சர் அவர்கள் இந்த நீர்ப் பாசனப் பணிகள் யாவும் ஒருமுகப்பட்டு செயல்படுமாறு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசிடமிருந்து கிடைக்கக் கூடிய தொகை முழுவதும் கிடைத்தால் இன்னும் நல்ல முறையில் செயல்பட வாய்ப்பு ஏற்படும்.

அடுத்து, அமைச்சர் அவர்களுடைய குறிப்பிலே 9-வது பக்கத்திலே விசேஷ சிறிய நீர்ப்பாசனத் திட்ட வேலைகளில் கன்னியாகுமரி மாவட்டத்தில் விளாத்துறை ஏற்றப்பாசனத் திட்டத்தைக் குறிப்பிட்டு தெரிவித்திருக்கிறார்கள். விளாத்துறை ஏற்றப்பாசனத் திட்டத்தை நான் வரவேற்கிறேன். இந்தத் திட்டம் விசேஷ வேறு நீர்ப்பாசனத் திட்டத்தில் அடங்கியதாகுமா, அல்லது வேறு வகையான பாசனத் திட்டமா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும். இது ஆர்டினரி மைனர் இர்ரிகேஷனில்தான் சேருகிறது என்று நான் கருதுகிறேன். இதை விளக்குவதுடன், இவ்வளவு அதிகமான அளவுக்குத் தொகையைச் செலவு செய்யக் கூடிய ஒரு துறையினை ஒருமுகப்படுத்தித் திறமையாகவும் விரைவாகவும் செயல்பட வைக்கவேண்டும் என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

**SRI N. S. RAMALINGAM:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்துச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

நமது மராமத்து இலாகா நமது ராஜ்யத்தில் மட்டுமல்லாமல் கிழக்குப் பகுதியிலேயே நல்ல நேர்மையாக சிறப்புடன் வேலை செய்து பெயர் பெற்றிருக்கிறது. குறைந்த செலவில் குறைந்த காலத்தில் திட்டங்களை முடிப்பதில் பெயர் பெற்றிருக்கிறது. இந்த முறையில் ஊக்கமாக வேலை செய்யக் கூடிய எல்லோரையும் நான் பாராட்டுகிறேன். இவ்வளவு இருந்தாலும், தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த வரையில் துரதிருஷ்டவசமாக பின்னணியில் நிற்கிறது. உதாரணமாக—எனது பக்கத்தில் மின்சார அமைச்சர் இருக்கிறார்—மின்சாரத் துறையில் சென்னை ராஜ்யம் மற்ற ராஜ்யங்களை விட முன்னேறியிருந்தும், குறிப்பாக நாகை போன்ற கடலோரப் பகுதிகளில் விவசாயத்திற்கு மின்சாரம் இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். கடலில் போய் விழக்கூடிய தண்ணீரை எங்களுக்கு பாசனத்திற்கு வேண்டுமென்று 4—5 ஆண்டுகளாக அமைச்சர்களிடமும் என்ஜினியர்களிடமும் சொல்லிக்கொண்டு வருகிறோம். அமைச்சர் அவர்கள் எங்களுக்கு உறுதி மொழி கொடுத்தார்கள். டெபுடி சீப் என்ஜினியரைப் பார்க்கிறோம். அவர்களும் செய்து



13th March 1961] [Sri N. S. Ramalingam]

என்ன காரணமோ சென்ற
கொடுக்க ஆசைப்படுகிறார்கள். விழுந்தமாவடி,
4 வருஷங்களாக உத்திரவுதான் பிறப்பிக்கவில்லை. பயனடையக் கூடிய
திருப்பூண்டி கிராமங்களில் 1,000 ஏக்கர் போன்ற இடங்களில்
திட்டமும், வேளாங்கண்ணி, பொய்யாறு திட்டமும் இருக்கிறது.
1,000 ஏக்கர் வரையில் பயனடையக் கூடிய அவைகளை ஆரம்பிக்க
இந்த வருஷத்திலாவது உத்திரவு பிறப்பித்து அவர்களைக் கேட்டுக்
ஏற்பாடு செய்யவேண்டுமென்று அமைச்சர்
கொள்கிறேன்.

தஞ்சை ஜில்லாவிலுள்ள பாசன வாய்க்கால்
பல வருஷங்களாக தூர்பட்டு இருக்கிறது. அவைகளை நல்ல
களும் வடிகால்களும் சாகுபடி செய்ய முடியும். சமீப
முறையில் சீர்படுத்தினால்தான் ஃபவுண்டேஷன் நிபுணர்கள்
காலத்தில் அமெரிக்கன் ஃபோர்ட் வயலுக்கும் தனிப்பட்ட
தஞ்சைக்கு வந்தபோது ஒவ்வொரு அதற்காக ஏக்க
முறையில் பாசன வடிகால்கள் இருக்கவேண்டும், அரசாங்கம் தயாராக
ருக்கு 1,000 ரூபாய் செலவு செய்ய மத்திய ஒதுக்கி வைத்திருக்
இருக்கிறார்கள், அதற்காக பல கோடி ரூபாய் திட்டத்தை தஞ்சை
கிறார்கள் என்று சொன்னார்கள். இந்தத் உணவு உற்பத்தி
ஜில்லாவில் உடனடியாகக் கொண்டு வந்து கேட்டுக்கொள்கிறேன்.
அதிகரிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று

நீர்க்கழிவைத் தடுக்க,
அதோடு சென்ற பட்ஜெட் உரையிலே போட்டுக்கொண்டிருப்ப
ஊடுருவிச் செல்லாமல் இருக்க திட்டம் கொண்டுவர ஏற்பாடு
தாகச் சொன்னார்கள். அதையும் சீக்கிரமாகக் எப்போதும் வடிகால்
செய்யவேண்டும். தஞ்சை ஜில்லாவிலே குறிப்பாக டெயில்-
பிரச்னை பெரிய பிரச்னையாக இருக்கிறது. இடங்களுக்குத் தனியாக
எண்ட் பகுதி என்று சொல்லப்படுகிற பிரச்னையைத் தீர்க்க
திட்டங்களைப் போட்டு இந்த வடிகால் இடங்களில் வளவனாறு
வேண்டும். திருத்துறைப்பூண்டி போன்ற இன்னும் நிறைவேற்
திட்டம் என்ற திட்டம் பரிசீலனையில் இருந்து பரிசீலித்து முடிவு
றப்படவில்லை. கூடியசீக்கிரத்தில் இதைப் இப்போது
செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தஞ்சை
என்ஜின்களை வைத்து புதிதாக வடிய வைக்கிறார்கள் மேடான
ஜில்லாவிலே சில பகுதிகளில். பிற இடங்களிலும் வைத்து திருத்துறைப்
இடங்களுக்குப் பாய்ச்சுவதற்கு வசதி இருக்கிறது. முறையைச் செய்
பூண்டி, தலைஞாயர் போன்ற பகுதிகளில் இந்த செய்யவேண்டுமென்று
வதற்கு வசதி இருக்கிறது. அதையும் பட்டுக்கோட்டை,
கேட்டுக்கொள்கிறேன். அதோடு அறந்தாங்கி, போட வசதி
ஒரத்தநாடு போன்ற இடங்களில் குழாய்க் கிணறு ஏற்பாடு செய்ய
இருக்கிறது. அவைகளையும் உடனடியாக குட்டைகளும்
வேண்டும். அதோடு அங்கு பல குளங்களும், அவைகளையும் சீர்
சரியான முறையில் இல்லாமல் இருப்பதால்
படுத்த வேண்டிய ஏற்பாடு செய்யவேண்டும்.

மத்திய அரசாங்கத்திலே ஒரு ஆர்கனை
ட்யூப் வெல் போட இன்னும் நல்ல
ஸேஷன் இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு தஞ்சை ஜில்லா
முறையில் ட்யூப் வெல்ஸ் அமைக்கவேண்டும்.

[Sri N. S. Ramalingam] [13th March 1961

விற்குத் தனியாக பவர் டிரில் வைக்க ஏற்பாடு செய்யவேண்டும். அதன் மூலமாக கிணறுகள் போட்டால் நியாயமான செலவைக் கூட விவசாயிகளிடமிருந்து வசூல் செய்துகொள்ளலாம்.

மற்றும் தஞ்சை ஜில்லா ஆறுகளில் மண் அடித்து திட்டுத் திட்டுக்களாக ஏற்பட்டு பாசனத்திற்குத் தண்ணீர் சரியாக வரவில்லை. ஆறுகளைக் குறுகலாக வைத்து தண்ணீர் சரியாக வருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அதோடு மேட்டூர் கெனாலை சாகுபடிக்குத் திறந்தவுடன் டெயில்-எண்டை எட்டுகிற வரையில் தண்ணீர் சரியாக வருவதற்குப் பார்த்துக்கொள்ளவேண்டும். ஏனென்றால், கடற்கரை ஓரத்தில் பழைய தண்ணீரில் குறுவை விட்டு வைத்து பின்னர் தண்ணீர் சரியாக வரவில்லையென்றால் நாற்று வீணாகப் போகிறது. சரியாக டெயில்-எண்ட் வரையில் தண்ணீர் வரும்படி பார்த்துக்கொள்ளவேண்டும்.

கடைசியாக விழுந்தமாவடி, திருப்பூண்டி, வேளாங்கண்ணி ஸ்கீம்களை எடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த மான்யத்தை ஆதரித்து முடித்துக்கொள்கிறேன்.

* **SRI M. P. PERIASAMI:** கனம் தலைவர் அவர்களே, இந்த மான்யத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்லிக்கொள்ள முன் வந்துள்ளேன். நமது சர்க்கார் நீர்ப்பாசனத்திற்காகப் பல கோடி ரூபாய் செலவுசெய்து,ஜனங்கள் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக உற்பத்தியாகிக் கொண்டு வருகிறார்களோ, அந்த ஜனத் தொகையை அனுசரித்து உணவும் உற்பத்தி செய்ய வேண்டுமென்பதுதான் நம்முடைய அரசாங்கத்தின் திட்டமாகும். அரசாங்கம், எவ்வளவுக் கெவ்வளவு உற்பத்தி செய்யப்படுகிறதோ அதையும், வெளிநாட்டிலிருந்து வரக்கூடியதையும் அனுசரித்து, விவசாயத்தை எப்படி அதிகப்படுத்த வேண்டுமென்பதை உணர்ந்து, அதற்குத் தகுந்த முறையிலே உணவை அபிவிருத்தி செய்யக் கூடிய அளவிற்கு இப்போது நீர்பாசனத் திட்டம் அமைக்கப் பட்டிருக்கிறது.

நமது காவேரி ஆறு தமிழ் நாட்டிலே இருக்கக்கூடிய பெரிய ஆறுகளில் ஒன்று. அந்தக் காவேரி ஆறானது ஒரு சில சமயங்களில் வெள்ளம் பெருகி ஓடிக்கொண்டிருக்கிறது. அந்தச் சமயத்திலே மேட்டூர் அணையில் நீர் தேக்கப்படுகிறது. அப்படி மேட்டூரிலே நீர் அதிகமாகி, தண்ணீர் வழியும்போது, அதிலே ஒரு வாய்க்காலை வெட்டி பொன்னியார், திருமணிமுத்தார் போன்றவைகளில் விட்டு, பல ஆயிரக்கணக்கான ஏக்கர்களுக்கு அது சுலபமாகப் பாய்கிறது. 60, 70 மைல் தூரம் வாய்க்கால் வெட்டாமலேயே போகக்கூடும், அருகிலே உள்ள பெரிய ஏரிகளில் பாய்வதற்கு, தக்க முறையிலே வழி செய்தால், அதனால் திருச்செங்கோடு, நாமக்கல், ராசிபுரம் ஆகிய மூன்று தாலூக்காக்களும் பயனடையும் என்பதை நாம் நிச்சயமாக எதிர்பார்க்க முடியும். இதை கனம் மராமத்து அமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர்கள் எல்லோரும் நேரிலே சென்று அந்த இடத்தைப் பார்த்திருக்கிறார்கள்.

[Sri N. S. Ramalingam] [13th March 1961

விற்குத் தனியாக பவர் டிரில் வைக்க ஏற்பாடு செய்யவேண்டும். அதன் மூலமாக கிணறுகள் போட்டால் நியாயமான செலவைக் கூட விவசாயிகளிடமிருந்து வசூல் செய்துகொள்ளலாம்.

மற்றும் தஞ்சை ஜில்லா ஆறுகளில் மண் அடித்து திட்டுத் திட்டுக்களாக ஏற்பட்டு பாசனத்திற்குத் தண்ணீர் சரியாக வரவில்லை. ஆறுகளைக் குறுகலாக வைத்து தண்ணீர் சரியாக வருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அதோடு மேட்டூர் கெனலை சாகுபடிக்குத் திறந்தவுடன் டெயில்-என்டை எட்டுகிற வரையில் தண்ணீர் சரியாக வருவதற்குப் பார்த்துக்கொள்ளவேண்டும். ஏனென்றால், கடற்கரை ஓரத்தில் பழைய தண்ணீரில் குழுவை விட்டு வைத்து பின்னர் தண்ணீர் சரியாக வரவில்லையென்றால் நாற்று விணாகப் போகிறது. சரியாக டெயில்-எண்ட் வரையில் தண்ணீர் வரும்படி பார்த்துக்கொள்ளவேண்டும்.

கடைசியாக விழுந்தமாவடி, திருப்பூண்டி, வேளாங்கண்ணி ஸ்கிம்களை எடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த மான்யத்தை ஆதரித்து முடித்துக்கொள்கிறேன்.

* **Sri M. P. PERIASAMI:** கனம் தலைவர் அவர்களே, இந்த மான்யத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்லிக்கொள்ள முன் வந்துள்ளேன். நமது சர்க்கார் நீர்ப்பாசனத்திற்காகப் பல கோடி ரூபாய் செலவுசெய்து,ஜனங்கள் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக உற்பத்தியாகிக் கொண்டு வருகிறார்களோ, அந்த ஜனத் தொகையை அனுசரித்து உணவும் உற்பத்தி செய்ய வேண்டுமென் பதுதான் நம்முடைய அரசாங்கத்தின் திட்டமாகும். அரசாங்கம், எவ்வளவுக் கெவ்வளவு உற்பத்தி செய்யப்படுகிறதோ அதையும், வெளிநாட்டிலிருந்து வரக்கூடியதையும் அனுசரித்து, விவசாயத்தை எப்படி அதிகப்படுத்த வேண்டுமென்பதை உணர்ந்து, அதற்குத் தகுந்த முறையிலே உணவை அபிவிருத்தி செய்யக் கூடிய அளவிற்கு இப்போது நீர்பாசனத் திட்டம் அமைக்கப் பட்டிருக்கிறது.

நமது காவேரி ஆறு தமிழ் நாட்டிலே இருக்கக்கூடிய பெரிய ஆறுகளில் ஒன்று. அந்தக் காவேரி ஆறானது ஒரு சில சமயங்களில் வெள்ளம் பெருகி ஓடிக்கொண்டிருக்கிறது. அந்தச் சமயத்திலே மேட்டூர் அணையில் நீர் தேக்கப்படுகிறது. அப்படி மேட்டூரிலே நீர் அதிகமாகி, தண்ணீர் வழியும்போது, அதிலே ஒரு வாய்க்காலை வெட்டி பொன்னியார், திருமணிமுத்தார் போன்றவைகளில் விட்டு, பல ஆயிரக்கணக்கான ஏக்கர்களுக்கு அது சுலபமாகப் பாய்கிறது. 60, 70 மைல் தூரம் வாய்க்கால் வெட்டாமலேயே போகக்கூடும், அருகிலே உள்ள பெரிய ஏரிகளில் பாய்வதற்கு, தக்க முறையிலே வழி செய்தால், அதனால் திருச்செங்கோடு, நாமக்கல், ராசீபுரம் ஆகிய மூன்று தாலூக்காக்களும் பயனடையும் என்பதை நாம் நிச்சயமாக எதிர்பார்க்க முடியும். இதை கனம் மராமத்து அமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர்கள் எல்லோரும் நேரிலே சென்று அந்த இடத்தைப் பார்த்திருக்கிறார்கள்.



13th March 1961] [Sri M. P. Periasami]

அடுத்தபடியாக, ராஜவாய்க்கால் குறுக்கே அணை கட்டி, ஒரு ஸ்லூயிஸ் கட்டப்பட்டு இருக்கிறது. அந்த அணைக்கட்டிலே வரக் கூடிய அவ்வளவு நீரும் அங்குள்ள நிலத்திற்கு மட்டும்தான் பாய் கிறதே தவிர, அதற்கு விரிவடைவதற்கு வழி இல்லாமல் இருக் கிறது. அதையே இன்னும் வாய்க்கால்களாகக் கட்டி, 2 அல்லது 3 மைல்களுக்குக் கொண்டு வந்தால், அதனால் பொய்யேறி முதல் ஊஞ்சீபாளையம் வழியாக வாளவந்திகுளம் வரையிலே கொண்டு வந்தால், இன்னும் அதிகமான நிலங்களுக்கு அதனால் நீர்ப்பாசன வசதி கிடைக்கும். அதையும் மராமத்து அமைச்சர் அவர்கள் பார்வையிட்டருக்கிறார்கள். ஒரு அதிகாரி அது அப்படிப் பாய முடியாது, அது 6 அடி உயர்ந்த நிலையில் இருக்கிறது என்று சொல் கிறார். மற்றொரு அதிகாரி அது பாயலாம் என்று சொல்கின்றார். இது என்ஜினியர்களுடைய சமாச்சாரம். அது நிறைவேறுவதாக இருக்கலாம், அல்லது நிறைவேற முடியாமலும் இருக்கலாம், அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. எப்படியும் செய்ய வேண்டியது அவசியம். ஒரு சில அதிகாரிகள் பொறுப்புடன் வேலை செய்யலாம், நல்ல முறையிலே வேலை செய்யலாம். அவர்கள் இதை மனது வைத்து முடிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்போது அதிகாரிகள் ரொம்ப அக்கறை யுடன் வேகமாக பெரிய அணைக்கட்டுகளையும் பெரிய பெரிய நீரோடைகளையும் கட்டி, அதிலே தண்ணீரைத் தேக்கி ஜனங்கள் பயனடைவதற்கு முடிகிற அளவுக்கு ஒத்துழைத்து வருகிறார் கள். மோகனூர் வாய்க்காலுக்கு குறம்பு சரியான முறையில் இல்லாமல், 2, 3 மைல்கள் காவேரி தண்ணீரை அறுத்து அந்தக் கரைகளை உடைத்திருக்கிறது. அதனால் அங்குள்ளவர் களுக்கு ஒரு கஷ்டமான நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பக்கத்தில் விவசாயம் செய்யக்கூடியவர்கள், அதிலும் வாழை, கரும்பு, கொடிக்கால் பயிர் போன்றவைகளைப் பயிர் செய்யக்கூடிய வர்களின் நிலங்கள் பாதிக்கப்படுமானால் அதனால் பல கோடிக் கணக்கான ரூபாய்கள் சேதமடையும். இதற்காக அங்கே இப்போது குறம்பு கட்டுவதற்குப் பதிலாக கல்லாலே சுவர் ஒன்று கட்டி, அதைத் தடுக்க வேண்டும். இந்த வேலையை உடனடியாகச் செய்யவேண்டும். குறம்புக்குப் பதில் கல்லாலே சுவர் கட்டுவது மிகவும் நல்லது என்பதை இந்த சமயத்தில் கூறிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

அடுத்தபடியாக, நாமக்கல் தாலூகாவில் வடவத்தூர், வரதராஜ புரம், பொட்டிரெட்டிப்பட்டி, புதுபட்டி ஆகிய ஏரிகளில் எல்லாம் அணைக்கட்டுகள் கட்ட வேண்டுமென்று எஸ்டிமேட் போட்டாகி விட்டது. அதையும் அரசாங்கம் உடனடியாகக் கவனித்து, சீக்கிரம் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஜேடர் பாளையத்திலிருந்து ஒரு கால்வாயை வெட்டி விடுவதால் அதனால் அரூர், ஆண்டாபுரம், திருச்சி ஜில்லாவிலே கலத்தூர், நாகை நல்லூர் போன்ற இடங்களுக்குப் பாய்வதற்கு வசதியாக இருக்

[Sri M. P. Periasami] [13th March 1961

கும். இதனால் நாமக்கல் தாலூகாவும், திருச்சி ஜில்லாவில் முசிறி தாலூகாவும் பயனடைய முடியும். இதற்கு பிளான் போடப்பட்டு, கனம் அமைச்சர் அவர்களிடத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இதையும் உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காவேரியானது முன்பு இருந்ததுபோல் இல்லாமல், தென்பகுதியிலும் வடபகுதியிலும் அகண்டு கொண்டுபோய் கரையோரங்களிலுள்ள மரங்களையெல்லாம் பெயர்த்துத் தள்ளி, நிலங்களை அறுத்துக்கொண்டு வருகிறது. அதனால் இப்போது விவசாயமும் பாதிக்கப்படுகிறது. இதைக் கவனிக்க வேண்டுமென்று பல மனுக்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. நானும் இதைப்பற்றிக் கிட்டத்தட்ட 15 வருஷம் சொல்லிக்கொண்டு வருகிறேன். இந்த நிலைமை நீடித்துக்கொண்டே இருக்குமானால், கால்வாளை, பொத்தனூர், எடுவந்தூர் வரை காவேரி நீரினால் பாதிக்கப்படும். ஆகவே இதற்கு இடையில் ஆங்காங்கு கல்வாகனைகளைப் போடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, காவேரி ஆற்றில் பம்பு செட் வைத்திருக்கிறார்கள். இதுபற்றி ஒரு குறை சொல்லப்பட்டு வருகிறது. இந்த பம்பு செட்டுகள் மூலமாக வாழை, கரும்பு முதலிய பயிர்கள் எல்லாம் பயிர் செய்யப்பட்டு வருகிறது. சர்க்கரை ஒரு உணவுப் பொருள் என்று சொல்லி, கரும்புக்கு மட்டும் தண்டத் தீர்வை கிடையாது என்று நீக்கப்பட்டிருக்கிறது. ஆனால் வாழைக்கு மட்டும் தண்டத் தீர்வை போட்டிருக்கிறார்கள். கரும்பிலிருந்து வரக்கூடிய சர்க்கரையை காபியிலோ, டீயிலோ போட்டுக் குடிக்கிறார்கள். ஆனால் பழம் அப்படியல்ல, ஒருவருக்குப் பசி எடுத்தவுடன் உடனே பழத்தை உரித்துச் சாப்பிடக்கூடிய அளவில் இருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட பொருளுக்கு தண்டத் தீர்வை போடுவதைப் பார்த்தால் ஆச்சரியமாகவே இருக்கிறது. ஆகவே இந்த வாழையையும் அந்தத் தண்டத் தீர்வையிலிருந்து நீக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கொத்தமங்கலத்திலிருந்து அந்தக் கால்வாயை நீட்டினால் இன்னும் சுலபமாக இருக்கும். ஏற்கனவே சொல்லப்பட்ட இந்த ஜேடர்பாளையம் வாய்க்காலையும் அதேபோல் நீட்டினால் நாமக்கல் தாலூகாவிலுள்ள பல கிராமங்களுக்குத் தண்ணீர் பாய்வதற்கு வசதியாக இருக்கும். இது ஏற்கனவே சர்வே செய்யப்பட்டதின் மூலம் தெரிவிக்கப்பட்டது. ஆகவே இதையும் உடனடியாகச் செய்யவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

நமது அரசாங்கமானது எவ்வளவோ நல்ல காரியங்களைச் செய்து, பல கோடிக்கணக்கான ரூபாய்களைப் போட்டு, தமிழ் நாட்டிலுள்ள பெரிய பெரிய அணைக்கட்டுகளையெல்லாம் கட்டியாகிவிட்டது. இனிமேல் சிறிய சிறிய குறுகிய ஓடைகளையும், குளங்களையும் தான் எடுத்துக்கொள்ள வேண்டி இருக்கிறது. இந்த ஓடைகளையும் குளங்களையும் அதிகமாகப் பயன்படுத்துவது



13th March 1961] [Sri M. P. Periasami]

எவ்வளவு அவசியம் என்பதைத் சர்க்கார் உணர்ந்து இருக்கிறது. கனம் முதல் அமைச்சர் அவர்களும் மற்ற அமைச்சர்களும் எப்படி ஏழை மக்களுக்கு எல்லாம் உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது என்பதை இது எடுத்துக்காட்டுகிறது. அதற்காக அம்மாதிரியான திட்டங்களுக்கு எல்லாம் தங்கள் ஒத்துழைப்பைத் தந்து கொண்டிருக்கிறார்கள். அதன்மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கும் நம்முடைய அரசாங்கம் ஏற்பாடு செய்துகொண்டு வருகிறது. அதற்குத் தகுந்த முறையிலே இந்த அணைகளையெல்லாம் கட்டுவதிலே சிரத்தை எடுத்துக்கொண்டு இதிலே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் முதலில் சொன்னமாதிரி முதலில் ஒருவர் சொல்லுகிறார். இது சரியாக லெவல் இல்லை, 10 அடி, 20 அடி (1-30 a.m.) வெட்டவேண்டும் என்று சொல்லுகிறார். அடுத்து ஒருவர் கொஞ்சம் சுலபமாகத் தண்ணீர் பாயக்கூடிய வசதி இருக்கும் என்று அபிப்பிராயப்படுகிறார். ஆகையினால் இதையெல்லாம் ஒரே முடிவிலே ஒருமைப்பாடுடன் சம்பந்தப்பட்ட என்ஜினியர்கள் பரிசீலனை செய்து உடனடியாக தகுந்த முறையில் வேலை செய்வார்களேயானால், அரசாங்கத்திற்கும் நல்ல பெயர் வரும், பொது மக்களும் நல்ல பலன் அடைவார்கள்.

மோகனூர் வாய்க்காலில், சென்ற வருஷம் காவேரியில் அதிகமாக தண்ணீர் போய்க்கொண்டிருந்தாலும், அப்படி இருக்கக்கூடிய காலத்தில் கூட சரியாகத் தண்ணீர் பாய்ச்சப்படாமல் லட்சக் கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. இந்த வருஷம் காவேரியில் அவ்வளவு தண்ணீர் இல்லாதபோனாலும், மோகனூர் வாய்க்காலில் நிறையத் தண்ணீர் போய்க்கொண்டிருக்கிறது. காரணம் இப்பொழுது இருக்கக்கூடிய என்ஜினியர்கள் நல்ல முறையிலே ரொம்ப உதவி செய்து தண்ணீரை எவ்வளவு அதிகப்படுத்த வேண்டுமோ அப்படிச் செய்து கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தத் தண்ணீரினால் விவசாயத்திற்குக் கெடுதல் இல்லாமல் இந்த வருஷம் விவசாயம் நடந்துகொண்டிருக்கிறது.

இந்த மான்யத்தை ஆதரித்து என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன்.

**MR. SPEAKER:** மேலும் 9 அங்கத்தினர்கள் பேசவேண்டும் என்று என்னிடம் பெயர் கொடுத்திருக்கிறார்கள். முக்கால் மணி நேரம்தான் இன்னும் பாக்கி இருக்கிறது. கணக்கு சரியாகப் போட்டால், ஒவ்வொரு அங்கத்தினருக்கும் ஐந்து நிமிஷம்தான் பேசுவதற்கு சாவகாசம் அகப்படும். ஆகவே, ஒவ்வொருவரும் 5 நிமிஷங்களுக்குள் தங்கள் பேச்சை முடித்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

*** SRI S. RAMASAMI THEVAR:** கனம் சபாநாயகர் அவர்களே, போட்ட அளவு தொகைக்கு உள்ளாக, குறித்த காலத்திற்கு உள்ளாக நமது திட்டங்களையெல்லாம் நிறைவேற்றக்கூடிய நிபுணர்கள் பொதுத் துறையில் நிறைய இருந்தும், இன்னும் அதற்காக

[Sri S. Ramaswami Thevar] [13th March 1961

அதிகமான தொகை ஒதுக்கவில்லை என்றுதான் வருந்தப்பட வேண்டியிருக்கிறது. நிபுணர்கள் குறித்த பணியை உரிய காலத்திற்குள்ளாக, குறித்த தொகைக்கு உள்ளாக செய்து முடிக்க வல்லவர்களாக இருக்கிறார்கள். அப்படியிருந்தும், இன்னும் எவ்வளவோ திட்டங்கள் இருக்கின்றன, அந்தத் திட்டங்களையெல்லாம் அதிகமாகச் சேர்க்கவில்லை என்று நான் வருந்தப்பட வேண்டியிருக்கிறது.

என்னுடைய பகுதியிலே இன்னும் காட்டு ஆறுகளில் பல அணைகள் கட்டவேண்டியிருக்கிறது. எத்தனையோ அணைகள் கட்ட வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தும், ஒன்றே ஒன்றுதான் பூர்த்தியாகி இருக்கிறது. மற்றவைகளிலெல்லாம் கவனம் செலுத்தப்படவில்லை. வெள்ளாற்றில் வேறு அணை இன்னும் கட்டப்படவில்லை. பாம்பாறு பக்கத்திலேயே போகவில்லை. திருநாளூர் பக்கத்தில் ஒரு அணை கட்டவேண்டும் என்று பல ஆண்டுகளாகச் சொல்லப்பட்டும், அதிலே கவனம் செலுத்தப்படவில்லை. நாரிங்கக் காவேரியை ஆழப்படுத்தவும், அகலப்படுத்தவும் வேண்டும் என்று சொல்லியும், இன்னும் ஒன்றும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. புளி கால்வாய் வேண்டும் என்று மக்கள் எத்தனையோ தடவைகள் மந்திரி அவர்களிடம் சொல்லியும் கூட, இன்னும் அதுவும் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை என்று தெரிகிறது. அமைச்சர் அவர்கள் இதிலெல்லாம் சிறிது கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களைப்பற்றி சொல்ல விரும்புகிறேன். அறந்தாங்கியில் குளங்களெல்லாம் வலைகள் போன்று பின்னப்பட்டிருக்கின்றன. ஒரு சொட்டுத் தண்ணீர் கூட வீண்போகாமல் அடுத்து அடுத்து பின்னப்பட்டிருக்கின்றன. குளங்களில் தூர் எடுக்கப்படவில்லை. சில இடங்களில் இந்த வேலை நடக்கிறது. அந்த வேலையும் சரியாக, செம்மையாக நடைபெறுகிறதா என்றால், இல்லை. தூர் எடுப்பதை காண்டிராக்டர்களிடம் விட்டுவிடுகிறார்கள். காண்டிராக்டர்கள் சொந்த லாபத்தைக் கருதி அதில் நன்றாகக் கவனம் செலுத்துவதில்லை. சர்க்கார் இதில் அதிகமாக கவனம் செலுத்தவேண்டும். கண்காணிப்பு அதிகமாக இருக்கவேண்டும். நல்ல முறையில் இந்த வேலைகள் நடக்கின்றனவா என்று அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக 200 ஏகருக்கு உள்ளாக நீர்ப்பாசனம் உள்ள கண்மாய்களையும் ஏரிகளையும் மராமத்து செய்யும் வேலையைப் பஞ்சாயத்துக்களிடம் விடப்போவதாகக் கேள்விப்படுகிறேன். இதனால் பெரிய பாதகம், ஆபத்து தான் விளையும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த வேலையைப் பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கக்கூடாது, இதையும் சர்க்கார் தான் ஏற்று நடத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.



13th March 1961] [Sri S. Ramasami Thevar]

அடுத்தபடியாக, ஒன்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். 1948-ம் ஆண்டிலே அறந்தாங்கியில் ஒரு அரசியல் மகாநாடு நடந்தது. கனம் முதல் அமைச்சர் அவர்கள் தான் அதில் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். அந்தக் கூட்டத்திற்கு நமது விவசாய அமைச்சர் அவர்கள் தலைமை வகித்தார். "அறந்தாங்கி தாலுகாவிற்கு காவேரித் தண்ணீர் பாயவேண்டும். ஏற்கனவே பாயவேண்டியிருந்தது, புதுக்கோட்டை குறுக்கே நின்ற காரணத்தினால் தடைபட்டுப் போயிருந்தது. இனிமேல் 'ஸி.எம்.பி.' கெனால் தண்ணீர் வேறு எங்கும் விடக்கூடாது. அறந்தாங்கி வழியாகத் தான் வர வேண்டும்" என்று முதல் அமைச்சர் அவர்களே அந்தக் கூட்டத்தில் 1948-ல் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். 1948-லிருந்து இது வரையில், சென்ற 13 ஆண்டுகளாக அதைப்பற்றிச் சிறிதும் சர்க்கார் கவலைப்படவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்தத் தீர்மானம் நமது முதல் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம், விவசாய அமைச்சர் அவர்கள் தலைமை வகித்த கூட்டத்தில். இதைப்பற்றி நான் இரண்டு, மூன்று தடவை ஞாபகப்படுத்தியிருக்கிறேன். அப்படி ஞாபகப்படுத்தியிருந்தும்கூட, அதில் கவனம் செலுத்தப்படவில்லை. அப்படியிருந்தும் வேறு இடங்களுக்கு 'ஸி.எம்.பி.' கெனால் தண்ணீர் போய்க்கொண்டிருக்கிறது. அதைப்பற்றி ஒன்றும் வருத்தப்படவும் இல்லை. ஒன்றும் கேட்கவும் இல்லை, என்னுடைய பகுதிக்குத் தண்ணீர் வரவேண்டுமென்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

என்னுடைய பகுதியில் 'டெயில் எண்டு' பிரதேசங்களில் தண்ணீர் சரியான காலத்தில் வருவதில்லை. ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் தான் விவசாயம் செய்யக்கூடிய நிலையில் தண்ணீர் வந்துசேருகிறது. அமைச்சர் அவர்கள் இதில் கவனம் செலுத்தி, காலாகாலத்தில் அந்தப் பகுதிக்குத் தண்ணீர் வந்து சேருவதற்கு வழி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

***SRI R. SWAMINATHA MERKONDAR:** கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மான்யக் கோரிக்கையை முழு மனதுடன் ஆதரிக்கிறேன். நீர்ப்பாசன இலாகாவிலே அமைச்சர் அவர்களும், அவர்களைச் சார்ந்த அதிகாரிகளும் நல்ல முறையிலே துரிதமாக, சிக்கனமாக திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றுகிறார்கள் என்றால் அது மிகையாகாது. தற்பொழுது நமது நாடு இருக்கக்கூடிய நிலைமையில் எங்கு பார்த்தாலும் உணவு விலை அதிகரிக்கிறது என்ற கூக்குரல் இருக்கிறது. அந்த நிலைமையிலேயே உணவு உற்பத்தி பெருகுவதற்கு முதுகெலும்பு போன்றது இந்த நீர்ப்பாசனத் திட்டங்கள். அதிகமாக திட்டங்கள் நிறைவேற்றவேண்டிய நிலையிலே இவ்வாண்டு சிறிய திட்டங்களுக்கு ரூ. 45,26,800 ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றால், அது குறைவு தான் என்று நான் கருதுகிறேன். தற்பொழுது ஜனப்பெருக்கான சைனா தேசத்தில் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. அடுத்தாற்போல் ரஷ்யா உணவு உற்பத்தியை அதிகரிக்கவேண்டும் என்று

[Sri R. Swaminatha Merkondar] [13th March 1961

சொல்லுகிறார்கள். இந்த நிலையிலே அதேபோன்று நமது இந்திய தேசத்திலும் அதிக உணவு உற்பத்தி ஏற்படவேண்டும். அப்படி ஏற்பட்டால் தான் குழப்பங்கள் ஏற்படாது விலையும் குறையும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். அதற்கான நீர்ப்பாசனத் திட்டங்களை இன்னும் அதிகப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எனது பகுதியிலே கட்டளை வாய்க்கால் திட்டமானது துரிதமாக முடிக்கப்பட்டு, இந்த ஆண்டில் தண்ணீர் விடப்பட்டிருக்கிறது. அப்படித் தண்ணீர் விடப்பட்டபொழுது என்னுடைய தொகுதியிலே 9 வட்டத்திலே 38 கிராமங்களுக்குத் தண்ணீர் தற்பொழுது பற்றாக்குறையாக இருக்கிறது. அதனால் பயிர்கள் சாவியாகப் போய்விடக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அந்தப் பகுதியில் உடனே தண்ணீர் கிடைக்கும்படி விடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, முன்பு பேசிய அங்கத்தினர் ஒருவர் ஏதோ தஞ்சையில் இருந்த ஒரு திட்டத்தைக் கைவிட்டுவிட்டார்கள், மாற்றிவிட்டார்கள் என்று கூட சொன்னார்கள். ஆனால் மதுரையில் வைகையில் ஏற்பட்ட ஒரு பெரிய வெள்ளத்தின் காரணமாக துரிதமாகச் செய்யவேண்டிய திட்டம் என்று அதை எடுத்திருக்கலாம். தஞ்சாவூரில் உள்ள திட்டத்தைக் கைவிட்டிருக்கமாட்டார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தற்பொழுது என்னுடைய பகுதியிலே தஞ்சை, திருச்சி இணைக்கப்பட கொள்ளிடத்திலே ஒரு பாலம் கட்டுவதற்கு திட்டம் போடப்பட்டிருக்கிறது. இது ரூ. 12,50,000 செலவழிக்கப்படுகிற திட்டம். தற்பொழுது ரூ. 10,000 ஆரம்பச் செலவு செய்ய ஏற்பாடாகியிருக்கிறது. இது ஒரு முக்கியமான திட்டம். இதைத் துரிதமாக நடத்திக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, கட்டளை வாய்க்கால் தென் பகுதியிலே சில குளங்கள் காடாரம்பப் பிரதேசத்தில் ஒதுக்கப்பட்டிருக்கின்றன, பாசன வசதி இல்லாது. அக்குளங்களுக்கு கட்டளை வாய்க்காலிலுள்ள உபரி ஜலத்தைக் கொண்டுவந்து லிப்ட் இரிகேஷன், பம்பு இரிகேஷன் திட்டத்தை அங்கே புகுத்தினால் அங்குள்ள மக்கள் நல்ல பலனடைவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். காடாரம்பப் பிரதேசங்களில் பவர் டிரில்லிங் ஸ்கீமை விஸ்தரித்தால் அதுவும் நல்ல பலன் தரும்.

என்னுடைய தொகுதியிலே உள்ள பூதலூர் பிளாக்கு இரண்டு வகையாக இருக்கிறது. வட புறத்திற்குத்தான் பாசன வசதி இருக்கிறது. தென் புறத்தில் பலபகுதிக்குப் பாசன வசதி இல்லை. **Block works**-க்காக 3 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அந்த வட பகுதிக்கு வடிகால் வசதி செய்துகொடுத்தால் உணவு உற்பத்தியில் பலனைக் காண முடியும். தென்பகுதியிலே நீர்ப்பாசன வசதியும் செய்து தரவேண்டும். பவர் டிரில்லிங் பம்ப் திட்டம் கொண்டுவந்தால் நலமாயிருக்குமென்று சொல்லிக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.



13th March 1961] [Sri R. Swaminatha Merkondar]

* **SRI N. R. THIAGARAJAN :** தலைவர் அவர்களே, மதுரைகளுடன் கால் நூற்றாண்டு கைகோர்த்துப் பொதுஜன சேவை செய் ஜில்லா வாசி என்ற முறையிலும், அமைச்சர் திரு. கக்கன் அவர்தவன் என்ற முறையிலும் இந்த நீர்ப்பாசனக் கோரிக்கையை ஆதரித்துப் பேசுங்கால், வேதனையோடு எங்கள் ஜில்லாவுக்கு மராமத்து அமைச்சர் ஒன்றும் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டைச் சாட்டுகிறேன் பகிரங்கமாக (சிரிப்பு). அவர் மதுரை ஜில்லாவிலேயே பிறந்து அங்கேயே வளர்ந்தவர். வைகை அணைக்கட்டை அவர் கொண்டுவரவில்லை. ராமநாதபுரம் ராஜா அவர்கள்தான் கொண்டு வந்தார். எங்கள் பகுதிக்கு ஒன்றும் பயன் இல்லை. என்னுடைய தொகுதியில் தான் அணைக்கட்டு கட்டப்பட்டிருக்கிறது. குங்குமம் சுமந்த கழுதையாக இருக்கிறோம். என்னுடைய பகுதிக்கு ஒரு சொட்டுத் தண்ணீர்கூடக் கிடைப்பதில்லை. கொடுக்கவும் மறுக்கிறார்கள். ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் திட்டம் போட்டும் எங்கள் பகுதியிலுள்ள 18 கண்மாய்களுக்குத் தண்ணீர் கொடுக்கவில்லை. அதையாவது செய்வார் என்று எதிர்பார்த்தேன். சாமி வரம் கொடுத்தும் பூசாரி வரம் கொடுக்கவில்லை என்பது பழமொழி. இந்தப் பழமொழியைப் புது மொழியாக்கிவிட்டார் நமது அமைச்சர் (சிரிப்பு). பூசாரி ஒப்புக்கொண்டுவிட்டார். ஆனால் சாமிதான் ஒப்புக்கொள்ளவில்லை. எங்கள் ஜில்லா கலெக்டர் ஒப்புக்கொண்டார், ரெவின்யூ போர்டு ஒப்புக்கொண்டது, மராமத்து இலாகா எஞ்சினியர்கள் ஒப்புக்கொண்டார்கள், செகரடேரியட் உத்தியோகஸ்தர்கள் ஏற்றுக்கொண்டார்கள். அப்படியிருந்தும் அமைச்சர் அழுத்திக்கொண்டிருக்கிறார். தான் மதுரை ஜில்லாவிலே பிறந்தவன் என்ற காரணத்தால், அந்த ஜில்லாவுக்கு ஏதாவது செய்தால் யாராவது குற்றம் சாட்டுவார்களோ என்று பயந்து ஒன்றுமே செய்வதில்லை. ஆண்டிப்பட்டி முதல் தெப்பம்பட்டி வரை மெடல் ரோடு போடவேண்டுமென்று 6 ஆண்டுகளாகக் கூறி வருகிறோம். மஞ்சளாறுத் திட்டத்தை நிறைவேற்றவேண்டுமென்று 10 ஆண்டுகளாகக் கூறிக்கொண்டு வருகிறோம். பாலாறு-பொருந்தலாறுத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று சென்ற 10 ஆண்டுகளாகச் சொல்லி வருகிறோம். கிருதமால் நதித் திட்டத்தையும் கொண்டு வரவில்லை. இப்படி நான் அடுக்கிக் கொண்டே போகலாம். எத்தனையோ மராமத்து வேலைகளும் செய்யப்படவில்லை. அடுத்த தேர்தலில் கோயம்புத்தூரில் நிற்கப் போகிறாரோ என்னமோ தெரியவில்லை (சிரிப்பு). நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் அந்த ஜில்லாவுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவர் திருச்சி ஜில்லா எம்.எல்.ஏ.-யாக இருந்தபொழுது, புள்ளம்பாடிக் கால்வாய்த் திட்டம், வடது பக்கம் கால்வாய், இடது பக்கம் கால்வாய், இப்படிக் கால்வாய்க்கு மேல் கால்வாயாகப் பல திட்டங்கள் நடைபெற்று வந்தன. ஒரு முறை திருச்சி ஜில்லாவுக்கு எம்.எல்.ஏ.

[Sri N. R. Thiagarajan] [13th March 1961

ஆனதிலே இவ்வளவும் செய்திருக்கிறார்கள். ஆனால் மதுரையிலே பிறந்து, மதுரையிலே வளர்ந்தவர், கால் நூற்றாண்டு நான் அவருடன் பழகி இருக்கிறேன். எங்கள் ஜில்லாவுக்கு ஒன்றுமே செய்யவில்லை. இதை ரிக்கார்டு பூர்வமாக நான் ருஜுப் படுத்த முடியும். நான் இதைப் பற்றி பலமுறை அவரிடம் கேட்டிருக்கிறேன். "ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்" என்று அடிக்கடி என்னிடம் சொல்லுவார். நான் மதுரை ஜில்லாவுக்கும் மந்திரி இல்லை, தமிழகத்திற்கே மந்திரி என்று சொல்லி வருகிறார். நான் அவரைக் கேட்டுக்கொள்வதெல்லாம் என்னுடைய பகுதியிலுள்ள 18 கண்மாய்களுக்குத் தண்ணீர் கொடுக்கவேண்டும். இதனால் ஒரு லட்சம் மக்களின் குடி தண்ணீர் பிரச்னை தீர்ந்துவிடும். என்னுடைய திட்டத்தை அமல் செய்தால் அவர்களுக்கு எல்லாம் குடி தண்ணீர் கிடைக்கும். பாலைவனமாக உள்ள பகுதி சோலைவனமாக மாறும். என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் அசெம்பிளி எப்படியிருக்கிறதோ அதேமாதிரி இருக்கிறது. அமைச்சர்கள் உட்கார்ந்து கொண்டிருக்கும் பகுதி பள்ளமாக இருக்கிறது. ஆனால் அங்கத்தினர்கள் உட்கார்ந்திருக்கும் பகுதி மேடாக இருப்பதுபோல் எங்கள் பகுதி இருக்கிறது. தொல்லாயிரம் ஏக்கருக்கு எங்களுக்குத் தண்ணீர் வசதி கிடைக்கும். ஆகவே இந்தத் திட்டத்தை அமல் செய்ய வேண்டும். மேல் பெரியார் திட்டத்தையும் அவசியம் எடுத்துக் கொள்ளவேண்டும். இதையெல்லாம் செய்தால்தான் எங்கள் பகுதி முன்னுக்கு வரும் என்பதைச் சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

SRI K. G. PALANISWAMY GOUNDER : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, நீர்ப்பாசன இலாகா அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்த மான்யக் கோரிக்கையை நான் முழு மனதுடன் ஆதரிக்கிறேன். இந்த நீர்ப்பாசன இலாகாவிலே செய்யக்கூடிய சேவைகள் எல்லாம் மிகவும் பாராட்டுதற்குரியவை. நம் நாட்டினுடைய முன்னேற்றத்திற்கும், பொருளாதார வளர்ச்சிக்கும், பாமர மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், அவர்கள் நல்வாழ்வு வாழ்வதற்குப் பாடுபட்டுக் கொண்டிருக்கக்கூடிய இந்த இலாகா மிகவும் உற்சாகத்தோடு வேலை செய்து கொண்டிருக்கிறது. 1961-62-வது நிதி நிலை அறிக்கையிலே பரம்பிக்குளத் திட்டத்திற்காக கோடிக்கணக்கான ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்காக நமது அரசாங்கத்திற்கு நமது பாராட்டுதலை தெரிவித்துக் கொள்ளவேண்டும். எங்கள் பகுதியிலே வாழ்கின்ற மக்கள் இந்தத் திட்டத்தை எதிர்பார்க்கக்கூடிய நிலையிலே இருக்கிறார்கள். அப்படியிருக்கிற நிலைமையிலே முதல் அமைச்சர் அவர்களும், மராமத்து இலாகா அமைச்சர் அவர்களும் கருணை கூர்ந்து எங்கள் காங்கேயம் பகுதிக்கு 5,000 ஏக்கருக்குக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். இந்த 5,000 ஏக்கராவுக்குக் கொடுத்திருப்பது மிகவும் குறைவான பாசன வசதி என்று நாங்கள் கருதுகிறோம். காங்கேயம், கொழுங்குழி முதலிய பிராந்தியங்களுக்கு அதிகமாக நீர்வள வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று



13th March 1961] [Sri K. G. Palaniswamy Gounder]

கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பிராந்தியத்திலுள்ள மக்கள், பரம்பிக்குளத் திட்டம் கைவிடப்படுமேயானால், வேறு திட்டத்திலேயும் அவர்கள் வாழ்க்கை வளம்பெற முடியாது என்ற குறிக்கோளோடு இருக்கிறார்கள். சமீபத்திலே 2, 3 தேதிகளில் நமது முதல் அமைச்சர் அவர்கள் எங்கள் தாலூகாவிலே சுற்றுப் பிரயாணம் செய்தார்கள். அந்தச் சமயத்தில் மகா நாடுகள் மூலமாகவும், விண்ணப்பங்கள் மூலமாகவும் மக்கள் அவர்களது கோரிக்கைகளைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே இன்னும் அதிக ஏக்கராவுக்குப் பாசன வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதை அதிகப்படுத்துவதற்கு எனது நண்பர் திரு. பொன்னையா அவர்கள் ஒரு யோசனையைத் தெரிவித்தார்கள். பரம்பிக்குளத் திட்டத்திலே யானைமலை ஆறு, இட்டிலி ஆறு—இட்டிலி ஆறு என்பதை இப்பொழுதுதான் கேள்விப்படுகிறேன்—இந்த இரண்டு ஆறுகளையும் சேர்க்க, கேரள சர்க்காருடன் நடவடிக்கை எடுத்துக் கொண்டால், ஒரு லட்சம் ஏக்கருக்கு மேல் பாசன வசதி கிடைக்கும். எங்கள் பகுதியிலே இன்னும் குறைந்தபட்சம் 40,000 ஏக்கருக்கு அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் தாராபுரம் தாலூகாவிலே இன்று நிவாரண வேலைகள் நடந்து கொண்டு வருகின்றன. சிறுசிறு கிராமங்களில் ஓடக்கூடிய நதிகளைத் தடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு சில ஓடைகளைத் தடுத்துக் கொண்டு வருகிறார்கள். எங்கள் பகுதியிலே 100, அல்லது 150 ஓடைகள் இருக்கும். அந்த ஓடைகளைத் தடுத்து செக் டாம்கள் கட்டுவார்களேயானால், குறைந்த மழை பெய்யும் காலத்திலே கிணறுகளுக்குத் தண்ணீர் கிடைக்கும், உணவு உற்பத்தி பெருக ஏதுவாய் இருக்கும். அதற்காக ஒரு தனி இலாகாவை ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் பொள்ளாச்சியில் ஒரு எஞ்ஜினியர் இருக்கிறார். அங்கே அவரை அணுகி வேலைகள் செய்வது கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே அதற்கென்று ஒரு தனி அதிகாரியை நியமித்து, வேலைகளைச் செய்ய தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டால், பஞ்ச நிவாரண வேலையில், குறைந்த மழை பெய்யும் காலத்தில், தண்ணீரைத் தேக்கி வைத்திருந்து அதை அந்தக் காலத்தில் கொடுக்க உதவியாக இருக்கும். மக்கள் நல்வாழ்வு வாழ அந்த ஏற்பாடு உதவியாக இருக்கும்.

இந்த நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் எங்கள் பிராந்தியத்தில் சில கட்டுப்பாடுகள் இருக்கின்றன. மெயின் கெனாலுக்கு இரண்டு பர்லாங், ப்ராஞ்சு கெனாலுக்கு ஒரு பர்லாங் தூரம் என்றும் பம்பு செட்டுகள் கொடுப்பதில் கட்டுப்பாடு இருக்கிறது. அந்த அளவிற்கு மாத்திரம் எலெக்ட்ரிஸிடி அனுமதிக்கப்படுகிறது. எங்கள் தாலுக்கா லோயர் பவானியின் கடைக் கோடிப் பிராந்தியமாக இருப்பதால், இந்த பர்லாங் கட்டுப்பாடு இல்லாமல், வாய்க்கால்

ஓரத்தில் இருந்தாலும், பம்பு செட்டு கொடுக்க வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்தைக் கொடுத்ததற்காக சபாநாயகர் அவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு முடிக்கிறேன்.

* SRIMATHI KULANDAI AMMAL: கனம் சபா நாயகர் அவர்களே, இன்று நம்முடைய மராமத்து இலாகா அமைச்சர் கொண்டு வந்திருக்கக் கூடிய நீர்ப்பாசன மானியத்தை ஆதரித்துப் பேச விரும்புகிறேன். கோயம்புத்தூர் ஜில்லாவைப் பொருத்த வரை நீர்ப்பாசனத் திட்டங்களிலே பல நல்ல முறையில் நிறைவேற்றப் பட்டிருப்பது குறித்து, பாராட்டத் தக்க முறையிலே வேலை செய்திருப்பதைக் குறித்து இந்த அமைச்சரவையைப் பாராட்டுகிறோம். அவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறோம். பரம்பிக்குள நீர்ப்பாசனத் திட்டத்தினால், உடுமல்பேட்டை, பொள்ளாச்சி முதலிய தாலூக்காக்கள் நல்ல பயன் அடையும். ஆனால், தாராபுரம் பல்லடம் தாலூக்காக்களுக்கு நல்ல பயன் அளிக்க வேண்டும் என்று பலமுறை வற்புறுத்தியிருக்கிறோம். என் தொகுதியான சூலூர் பிர்க்காவிலே குறிப்பாகச் சில கிராமங்கள் அதிக மேடாக இருக்கும் இடங்களுக்கும் வாய்க்கால் வசதி, நீர்ப்பாசன வசதிகளையும் பெருக்கித் தரவேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். கோயம்புத்தூர் ஜில்லாவில் நீர்ப்பாசனத் திட்டங்களால், என் சூலூர் பிர்க்காவானது அதிக நன்மை அடையக்கூடிய நிலையில் இல்லை. அந்த முறையிலே குந்தாக் கழிவு நீரைக் கொடுக்க வேண்டும் என்று பல மாநாடுகள் போட்டுக் கட்டாயம் அந்தக் கழிவு நீரைக் கொடுக்கவேண்டும் என்று அமைச்சர்களிடமும், அதிகாரிகளிடமும் கேட்டிருந்தார்கள்; குந்தாக் கழிவு நீர் இருந்தால் கொடுக்கிறோம் என்றும் சொல்லியிருந்தார்கள். நான் இப்பொழுது கேட்பது அப்படிக் கழிவு நீர் ஏற்படும் வகையில் சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வாய்க்கால்களில் தண்ணீர் கொண்டு வரும்போது அதற்குச் சிமெண்ட் பூசி விட்டால், தண்ணீர் அதிகமாகச் சேதம் ஆகாது. வீணாகாது. அப்படித் தண்ணீரைப் பாதுகாத்துப் பாசன வசதி செய்து கொடுக்க வேண்டும். ஆகையால் இப்பொழுது நடைபெறும் வாய்க்கால் வேலைகளில், சிமெண்ட் பூசும் வேலையைச் செய்யவேண்டும். பரம்பிக்குளத் திட்டத்திலும் அவ்வாறு செய்யலாம்.

எங்கள் பகுதியில் சங்கநீர்பள்ளம் என்ற காட்டாறு அதிக நாளாக மக்களுக்குத் தொல்லையையும் தொந்தரவையும் கொடுத்து வருகிறது. அதைத் தவிர்க்க வேண்டும் என்று இந்தச் சட்ட மன்றத்திலே வற்புறுத்தியிருக்கிறேன். பல வேலைகள் நடந்தாலும், அது வெகு சீக்கிரமாக நடைபெறவேண்டும். கணக்கெடுத்ததில், இம்மாதிரிப் பதினேழு ஆண்டுக்கு ஒரு முறைதான் வருகிறது ஆகையினால் அதற்குச் செலவு செய்வது வீண் என்று சொல்லியிருக்கும் நிலைமைதான் இருக்கிறது. ஆனாலும் அந்த வாய்க்கால் ஓரத்தில் பருத்தி





விளையும் நிலங்கள் இருக்கின்றன. அவர்களுக்குக் கஷ்டத்தோடு நஷ்டமும் ஏற்படுகிறது. விவசாயிகள் தவிர குடி மக்களும் பாதிக்கப் படுகிறார்கள். ஆகவே அந்த ஆற்றுக்கு அணை கட்டி குளங்கள், ஏரிகள் இவைகளில் தண்ணீரைத் தேக்கி வைத்து நீர்ப்பாசன வசதி கொடுக்கும் திட்டத்தை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். அப்படி வசதி செய்ய முடியா விட்டாலும், கிணறுகளில் நல்ல ஊற்று எடுக்க உதவியாக இருக்கும் தண்ணீரைத் தேக்கி வைப்பதால்.

என்னுடைய பிர்க்காவில், சாமக்குளம், சிரனைவனும்பட்டி முதலிய மூன்று குளத் திட்டங்கள் லாபகரமாக இல்லை என்று அறிவித்திருக்கிறார்கள். இங்கேயெல்லாம் வருஷத்தில் 5,000, 8,000 என்று செலவு செய்து கிணறுகள் தோண்டுகிறார்கள். அவர்கள் அதிகம் கஷ்டப் படுகிறார்கள். ஆகவே, சூலூர் தாலூக்காவில் கிணறு வெட்டுவதற்கு அதிக மானியத் தொகையை ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

* SRI K. R. NALLASIVAM: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, காவேரியையும் கங்கையையும் இணைப்பது வெறும் கதையாக, கவிஞனின் கற்பனையாக ஆகிவிடக் கூடாது; அதில் அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். இன்றைக்குப் பிரிவினை மனோபாவம் தோன்றியிருக்கிறது. யதார்த்த பூர்வமாக நிச்சயமாக அனுபவ பூர்வமாக ஜனங்களுக்கு நன்மை பயக்கும் அளவில் கங்கையையும் காவேரியையும் இணைப்பது பயனுள்ளதாக இருக்கும். பிரிவினை மனோபாவத்தை இது குறைக்கும். கீழ்பவானி பிரதேசத்தில் இன்றைக்கு இருக்கும் முறையில் பம்பு செட்டுகளுக்கு வருஷத்தில் 9 மாதத்திற்குத்தான் தண்ணீர் கிடைக்கிறது. குறிப்பாக லோயர் பவானி வாய்க்காலைத் திட்டமிட்டபடி மார்ச்சு 5-ம் தேதி நிறுத்தி விடுவார்கள். அதனால் பல ஏக்கர் நிலங்கள் பாதிக்கப்படும். அதாவது, அணையில் தண்ணீர் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் இதைக் கவனித்து, ஏப்ரல் 15 வரை கீழ் பவானி வாய்க்காலில் தண்ணீர் விட்டால், நெல்லும், கடலையும் காப்பாற்றப்படும். லோயர் பவானியில் கசிவு நீர் மேலக் காலிங்கராயன் வாய்க்கால் வெட்டத் திட்டம் உண்டு; அது நடப்பதாகத் தெரியவில்லை. அது மூன்றாவது திட்டத்திலோ அல்லது நான்காவது திட்டத்திலோ என்று தெளிவாக இல்லை. அதை விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். நீர்க்கசிவுத் திட்டங்களில் 25,000 ரூபாய்க்குக் குறைந்த திட்டங்களை ஜனங்களே எடுத்துச் செய்யத் தயாராக இருக்கிறார்கள். அது சம்பந்தமான திட்டங்கள் சீப் எஞ்ஜினியர் ஆபீசிலிருந்து வந்து சர்க்காரில் ஸாங்க்ஷன் ஆகாமல் இருப்பதாகத் தெரிகிறது. அமைச்சரவர்கள் கவனித்து அவைகளை சாங்க்ஷன் செய்து அனுப்பினால், ரூ. 25,000-க்குக் குறைந்த திட்டங்களை ஜனங்களே செய்து கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே அதற்கு உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்குமேல் செலவாகும் திட்டங்களைச் சர்க்காரே செய்ய வேண்டும். கிணறுகளில் தண்ணீர் எடுத்துக் கொண்

[Sri K. R. Nallasivam] [13th March 1961]

12 noon. வது பற்றி சில சங்கடங்கள் இருக்கின்றன. அதனால் கிணறுகளில் மோட்டார் பம்பு செட்டுகள் வைத்துக் கொள்ள முடியாமல் இருக்கின்றன. கீழ் பவானி ஏரியாவில் இப்படிப்பட்ட விதிகளை வைத்து இருப்பதால் அங்கு பம்பு செட்டுகள் வைத்துக்கொள்ள முடியாமல் இருக்கிறது. சர்க்கார் சொல்லக்கூடிய அடிப்படையில் தண்ணீர் எடுத்துக்கொள்வதற்கு முடியாமல் இருக்கிறது. சுமார் மூன்று மாத காலத்திற்குத் தான் தண்ணீர் கிடைக்கிறது. எங்கு பார்த்தாலும் இப்பொழுது மின்சாரம் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். அந்தத் திட்டங்களுக்கு இரண்டு பர்லாங்குகளுக்குள் பம்பு செட்டுகள் மோட்டார்கள் வைத்துக் கொள்ளக்கூடாது என்று சொல்லுகிறார்கள். அப்படி இல்லாமல் தண்ணீர் கிடைக்காத காலங்களில் அந்த விதியைத் தளர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக காலிங்கராயன் வாய்க்காலில் தண்ணீர் எடுப்பதற்கு முடியாமல் இருக்கிறது. மோட்டார் வைத்துக் கொள்வதற்கு சர்க்கார் பர்மிட் கொடுக்க வேண்டும் என்று அதிகாரிகள் கூறுகின்றனர். இப்படிப்பட்ட ஒரு உத்தரவு இருப்பதாகவும் தெரிய வருகிறது. பர்மிட் இல்லாமல் தண்ணீர் எடுத்துக் கொள்ள முடியவில்லை. ஆகவே மோட்டார் வைத்துக்கொள்வதற்கு அனுமதி கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். காலிங்கராயன் பாசனப் பிரதேசத்தில் இரவை மூலமாக விவசாயம் செய்யக்கூடிய இடங்களுக்கு பர்மிட் கொடுக்கும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக காலிங்கராயன் வாய்க்கால் ரொம்பவும் சீர்கேடான நிலைமையில் இருக்கிறது. பழைய காலத்தில் எப்படி இருந்ததோ அதே நிலைமையில்தான் இப்பொழுதும் இருக்கிறது. அதை நல்ல முறையில் ரிபேர் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஆகவே இந்த முறையில் வெட்டுப் பிரேரேபணையை ஆதரித்து இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

* SRIMATHI A. S. PONNAMMAL: கனம் சபாநாயகர் அவர்களே, நமது கனம் அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்துச் சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். இந்த இலாகாவில் கஷ்டப்பட்டு துரிதமாக வேலை செய்யக்கூடிய கனம் அமைச்சர் இருந்தும் பல அதிகாரிகள் இருந்தும் கூட பல ஸ்கீம்கள் எடுத்துக்கொண்டாலும் அவைகள் சீக்கிரமாக நடைபெறாமல் எங்கு பார்த்தாலும் "டிலே, டிலே, டிலே" என்று சொல்லக்கூடிய அளவில் இருக்கிறது. இந்த நிலைமையை மாற்ற அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

(Deputy Speaker in the Chair)

கலெக்டரிடமிருந்து சீப் இன்ஜினியர் ஆபீசுக்கு ரிப்போர்ட் வருகிறது. அதன் பிறகு சூப்பரிண்டெண்டிங் இஞ்சினியருக்கு வருகிறது, திரும்பவும் கலெக்டருக்கு வருகிறது. மறுபடியும்



13th March 1961] [Srimathi A. S. Ponnammal]

சீப் இன்ஜினியருக்கு வருகிறது, அதன் பிறகு போர்டுக்கு வருகிறது. போர்டிலிருந்து கவர்ன்மெண்டுக்கு வருகிறது. இப்படி ஒவ்வொரு இடத்திற்கும் போய் விட்டு வருவதற்கு நாலைந்து வருஷங்களாகி விடுகின்றது. அதனால் அதிகப்படியான காலதாமதம் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட காலதாமதம் ஆவதைப் போக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது.

இருநூறு ஏக்கருக்குக் கீழ்பட்ட ஆயக்கட்டுகளை பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். அதன் மூலம் பல திட்டங்களை பஞ்சாயத்து யூனியன் நிறைவேற்றலாம்.

கனம் அமைச்சருக்கு நன்றாகத் தெரியும், நிலக்கோட்டை தொகுதியைப்பற்றி. திருமங்கலம் மெயின் சானல் வழியாகத் தண்ணீர் போகிறது. அதனால் சுமார் பத்தாயிரம் ஏக்கருக்குப் பாசனம் கிடைக்கிறது. அப்படிப் போனாலும் கால்வாயின் இருபுறமும் உள்ள மக்கள் தண்ணீர் கிடைக்காமல் வாடி வதங்கிக் கொண்டிருக்கிறார்கள். வெள்ளாமை யிட முடியவில்லை. இப்போது திருமங்கலம் Main சானலில் கான்கிரீட் போடப்போவதாகத் தெரிகின்றது. சிமெண்ட் வாய்க்காலில் போட்டுவிட்டால் இன்னும் 2 அல்லது 3 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்குத் தண்ணீர் கொடுக்கலாம். அம்மாதிரி கிடைக்கும் தண்ணீரை கட்டாயம் என் தொகுதியாகிய மன்னாடி மங்கலம்—குருவித்துறைக்குக் கொடுக்கவேண்டும். அதை மறுத்துவிடக்கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதைச் செய்து கொடுத்தால் அப்பகுதி மக்கள் சார்பாக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக என்னுடைய தொகுதியில் மாவுத்தாறு, ஆலங் சொன்னார்கள். அதைப்போலவே பெரியாறு, சாத்தியாறு திட்டங்கள் இருக்கின்றன. இவைகள் எடுத்து நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. இதைப்பற்றி பல ஆண்டுகளாகச் சொல்லிக் கொண்டு வருகிறோம். அவைகளை இன்னும் நாலைந்து மாதங்களில் எடுத்து நிறைவேற்றிக் கொடுத்தால் நன்றாக இருக்கும். எவ்வளவு துரிதமாக எடுத்து நிறைவேற்றிக் கொடுக்க முடியுமோ அவ்வளவு துரிதமாக எடுத்து நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக என்னுடைய தொகுதியில் மாவுத்தாறு ஆலங்குளம் திட்டங்களை சாங்க்ஷன் செய்திருக்கிறார்கள். அதற்கு கனம் அமைச்சருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதற்கு இன்னும் அதிகாரிகளை நியமிக்கவில்லை என்று கேள்விப்படுகிறேன். ஆகவே கூடிய சீக்கிரத்தில் அதற்கு வேண்டிய அதிகாரிகளை நியமித்து அந்தத் திட்டத்தை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நிலக்கோட்டைத் தாலுகாவில் சில பகுதிகளாகிய தனிச்சியம்—அய்யங்கோட்டை, ஆண்டிப்பட்டி போன்றவைகளில் வைகை நதியில் அணைகட்டி தண்ணீர் தேக்கி வைப்பதற்கு முன்பு

[Srimathi A. S. Ponnammal] [13th March 1961

இருந்தே இருபோக சாகுபடி செய்து வருகின்றார்கள். அரசாங்கமும் இரு போக சாகுபடிக்கு தீர்வையும் வசூல் செய்தும் வருகிறார்கள். அப்படியிருந்தும் அப்பகுதியில் சாகுபடியாகும் நிலங்களை இருபோக சாகுபடி என்று ரிஜிஸ்டர் செய்யப்படவில்லை. மாமூல் கோடையாகவே இருந்து கொண்டிருக்கிறது. இந்நிலையை மாற்றி சட்டபூர்வமாக இருபோக சாகுபடிக்கு அனுமதி தரவேண்டுமாய்க் கேட்டுக் கொள்கின்றேன்.

பெரியாற்றிலிருந்து மின்சாரம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மின்சார இலாகாவினர் அவர்களுக்குச் சௌகரியமானபோது தண்ணீரைத் திறந்து விடுவார்கள்போல் கேள்விப்படுகின்றேன். சுமார் 2 ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்து விட்டால் 10 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்குப் பாயும் தண்ணீர் வீணாகி விடும். மின்சார இலாகாவினர் தண்ணீர் திறந்துவிட வேண்டுமானால் விவசாய காலங்களில் திறப்பதற்கு சர்க்கார் உத்தரவிட வேண்டும். இதைப்பற்றி கலெக்டர் அவர்களிடம் கூறினால் மின்சார இலாகாவினரைத் தண்ணீர் திறந்து விடக் கூடாது என்று தான் கட்டளையிட முடியாது என்றும் கூறி விட்டார். எனவே அமைச்சர் அவர்கள் இதன்மீது தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கின்றேன்.

என் தொகுதியை எடுத்துக் கொண்டால் பல புதிய திட்டங்கள் இருந்து கொண்டிருக்கின்றது. வத்தலக்குண்டு பிர்காவில் குள்ளக் கோம்பைத் திட்டம் பல ஆண்டுகள் நடவடிக்கையில் இருந்து கொண்டிருக்கின்றது. இன்னும் 2, 3 மாதத்திற்குள்ளாவது மேற்படி திட்டத்தை சாங்ஷன் செய்து கொடுக்கும்படியாகக் கேட்டுக் கொள்கின்றேன். ஒரு திட்டம் சாங்ஷன் ஆக வேண்டுமானால் A.E. ஆபீஸ் பின் E.E. ஆபீஸ், கலெக்டர் ஆபீஸ், S.E. ஆபீஸ், C.E. ஆபீஸ், இவ்வளவும் பரிசீலனை முடிந்தபின் போர்டுக்கு வருகின்றது. Board லிருந்து மறுபடியும் கலெக்டருக்குப் போகின்றது. இப்படி வரும்போதுதான், 4 அல்லது 5 ஆண்டுகள் ஆகின்றது. இதை மாற்றியாக வேண்டும். என் தொகுதியில் புதிய திட்டங்கள் தெப்பத்துப்பட்டி அருகில் இரண்டு அருவி ஓடைகள் மலையில் இருந்து தண்ணீர் ஓடிக் கொண்டிருக்கிறது. அங்கு வாழ்ந்துவரும் மக்களின் நிலையை கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் நேரில் வந்து பார்த்து இருக்கின்றார்கள். இன்ஜினியர் அவர்களை நானே அழைத்துப் போய் மேற்படி திட்டத்தைப் பார்வையிட்டு எஸ்டிமேட் போட்டு அனுப்ப ஏற்பாடு செய்தும் இன்னும் ஒன்றும் ஆகவில்லை. இதைப் போலதான் நிலக்கோட்டை பிர்காவில் மேட்டூர் தெப்பம்—கம்புத்துரைக்கோட்டை அருகில் ஓணான் ஊத்து தாலுகா முழுவதும் சுற்றிப் பார்த்து எங்கெங்கு குளங்கள் இருக்கின்றதோ அவைகள் எல்லாம் எழுதியிருந்தும் Executive Engineer, Food Production Engineer அவர்களால் Estimate போட்டு அனுப்பியிருந்தும் விரைவில் காரியம் முடிவதைக் காணோம். இம்மாதிரியான நிலைகளை அவசியம் மாற்ற வேண்டுமென்று தான் கருதுகிறேன்.



13th March 1961] [Srimathi A. S. Ponnammal.

அடுத்தபடியாக பெரியார் வாய்க்கால் கட்டுவதற்கு முன்பிருந்தே ஆற்றின் இருபுறங்களிலும் கிணறுகள் வெட்டித் தண்ணீரை இரைத்து விவசாயம் செய்து வந்திருக்கிறார்கள். இப்போது மோட்டார் வைத்துத் தண்ணீர் இரைப்பதைக் காட்டிலும், பம்ப் செட் தண்ணீர் பாய்ச்சினால் அதிகம் உற்பத்தி ஆகும் என்று அரசாங்கம் மக்களின் மத்தியில் பிரசாரம் செய்து வருகின்றது. அப்படியிருக்க ஆற்றுப் பக்கத்தில் உள்ள கிணற்றிற்குப் பம்ப் செட் வைத்து தண்ணீர் இரைக்க விடாமல் அரசாங்கம் தடுத்தும் வருகின்றது. இந்த நிலை மாகாணம் முழுவதும் இருந்து வருகிறது. பொதுப்படையாக ஒரு பரிசீலனை செய்து பார்த்து எந்தப் பகுதியில் ஆற்று ஓரக் கிணறுகளுக்குப் பம்ப் செட் வைக்க அனுமதி தரலாம் என்பதை நல்லதொரு முடிவை எடுத்து, மக்களுக்கு உதவியளிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன். புதிய திட்டங்களையும் விரைவில் முடித்துக் கொடுக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கின்றேன்.

* SRI G. G. GURUMURTHI : கனம் தலைவர் அவர்களே, இப்பொழுது சபையின் முன் இருக்கிற மானிய கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகளைப் பேச விரும்புகிறேன். கோவை போன்ற பகுதிகளில் பல திட்டங்களை எடுத்து நிறைவேற்றி இருப்பதால் அங்கெல்லாம் விவசாயம் நல்ல முறையில் பயனடைந்திருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதற்கு கனம் அமைச்சருக்கும் அந்த இலாகாவைச் சார்ந்த அதிகாரிகளுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். கனம் தேனி தியாகராஜன் அவர்கள் தன்னுடைய ஜில்லாவிலுள்ள குறைகளைப் பற்றி எடுத்துச் சொன்னார். ஆனால் நான் என்னுடைய தாலுகாவிலுள்ள குறைகளைப்பற்றி எடுத்துச் சொல்லுகிறேன். நீர்ப்பாசனத்திற்கு என்று பல திட்டங்களை எடுத்து நிறைவேற்றுகிறார்கள். அவற்றில் மேல் காலிங்கராயன் திட்டம் ஒன்று. மேல் காலிங்கராயன் திட்டத்தை எடுத்து நிறைவேற்றினால் எனது பகுதிக்கு எந்த விதமும் வசதி ஏற்படுவதாக இல்லை. கீழ்பவானி ஆயக்கட்டு பிரதேசத்திலிருந்து வரும் நீர்க்கசிவை பயன்படுத்தவே மேல் காலிங்கராயன் திட்டம் போடப்பட்டிருக்கிறது. இந் திட்டத்தால் வெளி தாலுக்காவில் உள்ளவர்களுக்குத் தான் வசதி ஏற்படுகிறது. கீழ்பவானி பிரதேசத்தில் புஞ்சை பகுதிகள் எல்லாம் நஞ்சைப் பகுதிகளாக மாறுகின்றன. இதனால் கீழ்பவானி பிரதேசத்திலேயே தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படுகிறது. அத்துடன் நீர்க்கசிவை நிரந்தரமாக வைத்துக் கொள்ளக்கூடாது. எனவே இத் திட்டத்தைப் பரிசீலனை செய்ய வேண்டியதாக இருக்கிறது. அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு எந்த விதத்திலும் அவசியமே இல்லை, அவசரமும் இல்லை. ஏன் அதைச் சீக்கிரத்தில் பரிசீலனை செய்ய வேண்டும்? மேல் காலிங்கராயன் திட்டத்தை எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்பதற்காக பவானி தாலுக்காவில் கீழ்பவானி பிரதேசத்தில் கசிவு நீரை உபயோகிப்பதற்காகப் போடப்பட்டிருக்கும் சில திட்டங்களை

[Sri G. G. Gurumurthi] [13th March 1961

எடுத்துக் கொள்ளப்படாமல் இருக்கிறது. பவானி தாலுக்காவில் குறைந்த செலவில் பல திட்டங்கள் இருக்கின்றன. அவைகளை எடுத்துக் கொண்டு பார்த்தால் அதிகப்படியான நிலங்கள் பாசன வசதி பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. என்ஜினியர்களிடத்திலும் இதைப்பற்றி விளக்கமாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளை உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கோவை, சேலம் ஜில்லாக்களுக்காக S.M.I.P. டிவிஷன் ஏற்படுத்தப்பட்டு 1½ ஆண்டுகளுக்கு மேலாகிறது. ஆனால் இன்னும் எவ்வித வேலையும் அவர்கள் எடுத்துக் கொள்ளவில்லை. யானைக் காடுகளில் எல்லாம் சென்று பலவிதமான கஷ்டங்களுக்கு உள்ளாகி—நானும் அவர்களுடன் சென்றேன்—அவர்கள் பல திட்டங்களுக்கு எஸ்டிமேட் அனுப்பியும், எஸ்டிமேட்டுகள் சாங்ஷன் செய்யப்படவில்லை. கனம் அமைச்சர் அவர்கள் "லாபத்தைக் கருதி மட்டும் பெரிய திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்படவில்லை. பிராந்தியத்தின் பிற்பட்ட நிலைமையைக் கருத்தில் கொண்டு இந்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன" என்று சொன்னார். அதே துறையில் இந்தச் சிறிய பாசனத் திட்டங்களையும் லாபத்தை கருதாமல் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இல்லாவிட்டால் இந்த டிவிஷன் ஏற்படுத்தியது வீண் ஆகும். அப்படி செய்யாவிட்டால் ஒரு திட்டத்தையும் எடுத்துக் கொள்ள முடியாது.

ஏரிகளுக்காக போடப்படும் எஸ்டிமேட்டுகளைப் பெரிய அணைக் கட்டுகளுக்குத் திட்டம் போடுவது போலப் போடுகிறார்கள். அதனால் எஸ்டிமேட் அதிகமாகிறது. அதனால் ஏற்படக்கூடிய பலனை கணக்குப் போடும்போது நேரிடையாகப் பாசனம் பெறக்கூடிய ஏக்கராக்கள் எத்தனை என்று மட்டும்தான் கணக்கெடுக்கிறார்கள். அதனால் செலவு அதிகம்போலவும், வருவாய் குறைவு போலவும் தோன்றுகிறது. ஒரு ஏரி நிரப்பப்பட்டால் சுற்று வட்டாரத்தில் உள்ள கிணறுகள் எல்லாம் பயன் அடைகின்றன. மேலும் அந்த ஏரி வண்டல்களை எல்லாம் வயலுக்கு எருவாக எடுத்துக்கொண்டுபோவதற்கும் எத்தனையோ பேர்கள் தயாராக இருக்கிறார்கள். பர்மிட் கொடுத்தால் போதும். எனவே இவைகளையும் கணக்கெடுத்துக் கொள்ள வேண்டும். எஸ்டிமேட் அதிகமாகிறதே என்பதற்காகத் திட்டங்களைத் தள்ளிவிடக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக பெரிய பாசனத் திட்டங்கள் நிறைவேற்றியிருக்கக்கூடிய இடங்களில் போக்குவரத்து ரோடுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இந்த பெரிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டபொழுது தேவையான அநேக இடங்களில் பாலங்கள் கட்டப்படவில்லை. ரஸ்தாக்களும் செப்பனிடப்படவில்லை. இப்போது அதைப் பற்றிச் சொல்லுகிறபோது ஹைவேஸ் டிபார்ட்மெண்டைக் கேளுங்கள், அல்லது பஞ்சாயத்துக்களிடம் சொல்லுங்கள் என்பது சரியல்ல. இர்ரிகேஷன் நிதியிலேயே இந்தப் பாலங்களையும் கட்டித் தருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.



13th March 1961] [Sri G. G. Gurumurthi]

இன்னும் பழைய வாய்க்கால்களை மராமத்து எடுத்துக் கொள்வது பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்கது. கோபி தாலுக்காவில் அரக்கன்கோட்டை வாய்க்கால் எவ்வளவு தண்ணீர் கொண்டதோ அது இப்போது கொள்வதில்லை. அதைச் செப்பனிடுவதோடு பெருமுகை, அத்தாணி வாய்க்காலையும் செப்பனிடுவதால் 1,800 ஏக்கராவுக்குமேல் பயன்பெறும். இன்றைக்கு ஆயிரம் ஏக்கராதான் அவற்றால் பயன்படுகிறது. 800 ஏக்கருக்குப் பாசன வசதி கிடைக்கவில்லை. அதையும் ஒழுங்கு செய்து, தண்ணீர் விநியோகத்தைச் சீராக்கினால் மிகுந்த பலன் ஏற்படும் என்று சொல்லிக்கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

SRI S. RAMAKRISHNA THEVAR : உதவி சபாநாயகர் அவர்களே, இன்றைக்குச் சபை முன்பு கொண்டு வரப்பட்டிருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல முற்படுகிறேன். பொதுவாக இங்கே கொண்டு வரப்பட்ட மானியங்கள் மீது குறைபாடுகளே சொல்லிக்கொண்டு வருகிறார்கள். நாம் சுதந்திரம் அடைந்த குறுகிய காலத்திற்குள்ளாக பொதுவாகப் பார்க்கப்போனால் இந்த நீர்ப்பாசன இலாகாவினால் பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு நல்ல பலன் அளித்திருக்கிறது. இந்த நிலையில் அவசரப்பட்டு "இது ஆகவில்லை, அது ஆகவில்லை" என்று சொல்லிக் கொண்டே போனால் "அரச மரத்தைச் சுற்றி அடிவயிற்றைத் தொட்டுப் பார்த்துக்கொண்டாளாம்' என்கிற பழமொழியாகத்தான் அமைகிறது.

இப்போது நான் இருக்கக் கூடிய பிர்க்காவைச் சுற்றிப் பார்த்த அளவில் சர்க்கார் என்னமோ இதைச் செய்கிறார்கள், அதைச் செய்கிறார்கள் என்று சொல்கிறார்களே தவிர அங்கு எதுவுமே செய்யவில்லை. ஸ்ரீமதி பொன்னம்மாள் சொன்னமாதிரி அங்கிருந்து எஸ்டிமேட்டுகள் போட்டு அனுப்பினால் அது போவதும், வருவதுமாகத்தான் இருக்கிறதே தவிர திட்டம் எதுவும் சாங்ஷன் ஆவதில்லை. அதுவும் திருவாடானை தாலுக்கா ஜமீன் பிரதேசமாக இருந்ததனால் மிகவும் பின்தங்கியதாக இருக்கிறது. ஸ்பெஷலாக அதிகாரிகளைப் போட்டு அந்தப் பிராந்தியத்தின் அபிவிருத்திக்கு திட்டங்கள் வகுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் என்ன என்னவோ செய்கிறார்களே தவிர கண்கூடாகப் பார்க்கக்கூடிய திட்டம் என் பிரதேசத்தில் உருவாகவில்லை. லிங்காபூரணி, ராசிமங்கலம் கால்வாய்க்காக 45 ஆயிரம் போடுகிறார்கள். பத்தாயிரம் ஏக்கர் பாயக் கூடிய நிலைமை உடையது. ஆனால் காரியத்தில் ஒன்றும் இல்லை. காங்கிரஸ்காரர்கள் சொன்னால் நடக்கிறது என்கிறார்கள். நான் ஒரு பழைய காங்கிரஸ்காரர்தான். அப்படி இருந்தும் என் தொகுதியில் ஐந்து சிறிய திட்டங்கள்கூட நான் சொன்னது வரவில்லை. சுணக்கம் இருப்பதனால்தான் குறைபாடுகள் இருக்கின்றன. பொதுவாக ரோடு வசதி ரொம்பக் குறைச்சல். விவசாயிகளுக்குச் சாகுபடிக்குத் தேவையான பொருள்களைக் கொண்டு செல்வதற்கு அது ஒரு முட்டுக்கட்டையாக இருக்கிறது. ஆனால் மற்றநாட்டில் உள்ளவர்கள் எல்லாம்

[Sri S. Ramakrishna Thevar] [13th March 1961

இங்கே தான் நீர்ப்பாசனம், விவசாயம், சுகாதாரம் எல்லாம் மிக உயர்ந்த நிலையில் இருப்பதாகப் பாராட்டுகிறார்கள். அப்படியிருந்தும் வேலை சுணக்கத்தினால்தான் குறைபாடுகள் இருக்கின்றன என்று சொல்லிக்கொண்டு இவற்றை துரிதமாகச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு முடித்துக் கொள்கிறேன்.

* SRI V. K. RAMASWAMI MUDALIYAR : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இந்த மான்யத்தின் மீது கொண்டுவரப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். 1959-60-ல் சட்டசபை எஸ்டிமேட் கமிட்டி ஒன்று அமைத்து அவர்கள் சுமார் 51 ஐட்டங்களை சிபார்சு செய்திருக்கிறார்கள். ஒரு பொறுப்புள்ள சட்டசபைக் குழு நல்ல உபயோகமுள்ள சிபார்சுகளை செய்திருக்கின்றது. அதில், நானும் அங்கத்தினராகயிருந்திருக்கிறேன். முதன்முதலாக அவைகளை அமைச்சர் அவர்கள் படித்துப் பார்த்தார்களா? அப்படி படித்துப் பார்த்திருந்தால் எத்தனை ஐட்டங்களை, அதாவது எத்தனை சிபார்சுகளை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்? மற்ற சிபார்சுகளை எவ்வளவு மாதங்கள், அல்லது வருடங்களில் ஏற்றுக் கொண்டு அவைகளை அமுலுக்கு கொண்டு வருவார்கள் என்பது பற்றி அவர்கள் பதிலில் திட்டவட்டமாக எடுத்துச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இரண்டொரு சிபார்சுகளை மட்டும் நான் இங்கு படிக்க விரும்புகிறேன.

"The Committee suggests that the Government may review the present position with regard to the provision of funds for maintenance of various irrigation systems taking into consideration the high cost of materials and labour and allot adequate funds every year so that few important irrigation systems in this State may be maintained property to yield the maximum benefit."

"The Committee recommends that, it is the duty of the Government to keep all the ex-zamin tanks in proper condition irrespective of the fact whether it will bridge a gap or not or whether the expenditure incurred on it will be more than Rs. 300 per acre or not. In view of this, the existing yardsticks in respect of ex-zamin and taken-over tanks should be given up and suitable instructions issued for restoring all the tanks in taken-over estates.

இன்று நம் நாட்டில் அநேக குளங்கள், ஏரிகள் இவைகள் ரிப்பேர் செய்யப்படாமல் இருக்கின்றன. ஆகவே, நான் சொல்லிய சிபார்சுகளை ஏற்றுக்கொண்டு, அதற்கு வேண்டிய தொகைகள் ஒதுக்கி, அவைகளை எவ்வளவு சீக்கிரமாகச் சீர்படுத்தமுடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் சீர்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவைகளை கூடிய சீக்கிரத்தில் அமுலுக்கு கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது முக்கியமான பிரச்னை. இதை உடனடியாக எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, இன்டர் ஸ்டேட் வாட்டர்ஸ் கேரளாவிற்கும் நமக்கும் எவ்வளவோ தகராறு இருக்கிறது. அதேபோல் ஆந்திராவிற்கும் நமக்கும். கிருஷ்ணா—பெண்ணாறு திட்டம்,



13th March 1961] [Sri V. K. Ramaswami Mudaliyar]

கேரளா பம்பையாறுத் திட்டம் இவைகள் எல்லாம் இன்னும் வரவில்லையென்று சொன்னார்கள். இதுபற்றி பத்திரிகைகளிலும் படிக்கிறோம். மிகவும் விசனிக்கத்தக்க விஷயம். அகில இந்திய ரீதியில் இவைகளைப் பரிசீலனை செய்யமுடியுமா என்று பார்த்தால் அது கடஷ்மாகயிருக்கிறது. சோனல் கௌன்சில் இதுபற்றி பரிசீலனை செய்து சுமுகமாக இரண்டு பிராந்தியத்திலுள்ளவர்களும் ஒத்துப் போகும்படி யாருக்கும் ஒரு கெடுதியுமின்றி ஏதாவது செய்ய முடியுமா என்று பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். ஜலம் நமக்கு அவர்கள் கொடுத்தால் அவர்களுக்கு மின்சாரம் நாம் கொடுக்கவும், அவர்கள் மின்சாரம் கொடுத்தால் நாம் ஜலவசதி கொடுக்கவும், இப்படியாக இரண்டு ராஜ்யங்களும் இணங்கிப் போகக்கூடிய அளவிற்கு ஏதாவது சோனல் கௌன்சிலில் செய்ய முடியுமா என்று பார்க்க வேண்டும். சோனல் கௌன்சிலில் இது விவாதிக்கப்பட்டது என்று கேள்விப்பட்டேன். சுமுகமாகவும், துரிதமாகவும் இதை எவ்வளவு சீக்கிரம் செய்யமுடியுமோ அவ்வளவு சீக்கிரம் செய்வதற்கு வேண்டிய வழிவகைகள் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, டீஸில்டிங் ரிக்ளமேஷன். காஞ்சிபுரம் தாலுகாவில் இந்த வேலை நடந்து கொண்டிருந்தது. நான் போய் அதைப் பார்ப்பதற்குள்ள சந்தர்ப்பம் ஏற்பட்டது, போய் பார்த்தேன். வேலைகள் நன்கு நடைபெற்றது, மெஷின்ஸ் மூலம். நிறையத் தொகை ஒதுக்கி பெரிய மெஷின்கள் வாங்கி இந்த வேலைகளை எப்படி செய்யமுடியும், எவ்வளவு செய்ய முடியும் என்று பார்க்க வேண்டும். ஒரு வருடத்தில் மூன்று நான்கு மாதங்கள்தான் இந்த மெஷின்களைக் கொண்டு வேலை செய்ய முடியும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நம் ராஜ்யத்தில் அநேக கிராமங்கள் இருக்கின்றன. இதைத் துரிதமாக எல்லா பிராந்தியங்களிலும் செய்யமுடியுமா என்பதுபற்றி யோசித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதனால் சர்க்காருக்கு நஷ்டமே தவிர இது லாபகரமான திட்டம் இல்லை என்பது தான் என் அபிப்பிராயம். நல்ல ஒரு குழு அமைத்து, என்ஜினியர்ஸ், ரிட்டயர்ட் என்ஜினியர்ஸ்யையும் போட்டு இதை நன்கு பரிசீலனை செய்து இதை எப்படி நல்லமுறையில், துரிதமாகச் செய்ய முடியும் என்று பார்த்து அதற்கு வேண்டிய வழிவகைகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் கேள்விப்பட்டதிலிருந்து இந்த மெஷின்களைக் கொண்டு மூன்று நான்கு மாதங்கள் டீஸில்டிங் வேலைகள் செய்து பின்னர் ப்ராஜெக்ட் ஏரியாக்களுக்கு ப்ராஜெக்ட் வேலை செய்ய எடுத்துப் போவதாகக் கேள்விப்பட்டேன். அப்படிச் செய்தால் நமக்கு என்ன ஆதாயம் வரும்? பராஜெக்ட் வேலைகள் முடிந்த பிறகு இந்த மெஷின்களை என்ன செய்யப் போகிறோம் என்பது பற்றி ஆலோசித்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படவேண்டும். ஒவ்வொரு ஏரியும் மண்ணினால் தூர்ந்து போயிருக்கிறது. ஷேலோவாகிப் (shallow) போனதால் அவைகளில் போதுமான ஜலம் பிடிக்கவில்லை. ஆகவே, "புல்டாங்க் லெவலை" F.T.L. தூக்க முயற்சி செய்யவேண்டுமென்று

[Sri V. K. Ramaswami Mudaliyar] [13th March 1961

கேட்டுக் கொள்கிறேன். அதோடு ஏரிகளின் கரைகளையும் தூக்க முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பின்னர், "போர்ஷோர் நிலங்களை" எல்லாம் ஆர்ஜிதம் செய்யாமல், அதனால் விவசாயிகள் பாதிக்கப்படுவதால் அவைகளை யெல்லாம் நிறுத்துவதற்கு வேண்டியது செய்ய வேண்டும். முன்பே சாகுபடி செய்து வந்திருந்தால் அவைகளுக்கு நல்ல கிரயம் கொடுத்து வாங்கி அவர்களுக்கு வேறு இடங்களில் நிலம் கொடுத்து வேண்டிய வசதிகள் செய்தால்,நான் தூர்ந்து போயிருக்கும் பழைய ஏரிகளைச் செப்பனிட்டு அவைகளில் நிறை நீர் நிற்கும்படி செய்ய முடியும். அடுத்தபடியாக, "புட் ப்ரொடக்ஷன் டிப்பார்ட்மெண்ட்." இந்த டிப்பார்ட்மெண்ட் நல்லமுறையில் நன்கு வேலை செய்து கொண்டிருக்கிறது. இதுபற்றியும் கமிட்டி சிபார்சு செய்திருக்கிறார்கள். நடைமுறை வருடத்தில் ஒரு கோடிக்குப் போட்ட திட்டத்திற்கு மேல் வேலை செய்திருக்கிறார்கள். இர்ரிகேஷன் டிப்பார்ட்மெண்டில் கூட அவ்வளவு வேலைகள் துரிதமாக நடைபெறவில்லை. நான் இர்ரிகேஷன் டிப்பார்ட்மெண்டாரைக் குறை சொல்லவில்லை. இந்த "புட் ப்ரொடக்ஷன் டிப்பார்ட்மெண்ட்டாரை" நான் பாராட்டுகிறேன். அதிலும் சில சிக்கலான பிரச்னைகள் இருக்கின்றன. தகுதியான உதியோகஸ்தர்களை டயத்தில் போடாததால் சில வேலைகள் நடப்பது குந்தகப்படுகிறது என்று கேள்விப்பட்டேன். இது பற்றியும் இந்தக் கமிட்டியார் சிபார்சு செய்திருக்கிறார்கள்.

The Committee suggests that the personnel working under the Food Production Circle should be treated as on deputation from the Public Works Department to Food Production Circle and the general administration, viz., posting of staff and dealing with the disciplinary cases that may arise against them should be dealt with by the Board of Revenue.

இதுபற்றியும் அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதைப் பரிசீலனை செய்தார்களா? என்ன முடிவுக்கு வந்தார்கள் என்பது பற்றி பதில் உரையில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு வேண்டிய வசதிகள் எல்லாம் செய்து கொடுக்க வேண்டும். இந்த டிப்பார்ட்மென்டைப் பொறுத்த மட்டில் மக்களுக்குத் திருப்தி ஏற்பட்டிருக்கிறது. இந்த டிப்பார்ட்மெண்ட் எங்கும் நல்ல வேலை செய்யவேண்டுமென்று மக்கள் விரும்புகிறார்கள். இவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று மீண்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அடுத்தபடியாக, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள். அநேக பிராந்தியங்களில் சிறு சிறு கால்வாய்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. ஜமீன்கள் எல்லாம் எடுக்கப்பட்ட பிறகும்,
12-30 p.m. ஜமீன் ஏரியாக்களில் சிறுசிறு நீர்ப்பாசனத் திட்டங்கள் இருக்கின்றன. அவைகள் இன்னும் எடுக்கப்படவில்லை. நம் ராஜ்யத்தில் 33,000 ஏரிகள் இருந்தபோதிலும் பத்து சதவிதம் மட்டில் விசாரணை எல்லாம் செய்து மராமத்து செய்திருக்கிறார்கள். மீதி தொண்ணூறு சதம் அப்படியே இருக்கிறது. இப்படியிருந்தால் உணவு உற்பத்தி நம் ராஜ்யத்தில் எப்படி பெருக முடியும்? ஆகவே, வேண்டிய உத்தியோகஸ்தர்களைப் போட்டு வேண்டிய



13th March 1961] [Sri V. K. Ramaswami Mudaliyar]

தொகைகள் ஒதுக்கி எவ்வளவு சீக்கிரம் அவைகளை மராமத்து 1·
செய்ய முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் அவைகளை மராமத்து p
செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தவிர கிணற்று சப்ஸிடி கொடுப்பதைப்பற்றி இங்கு சொல்லியிருக்கிறேன். கிணறுகளுக்கு போதிய அளவில் சப்ஸிடி கொடுக்கப்படவில்லை என்பதைப்பற்றியும் முன்பு இங்கு சொல்லியிருக்கிறேன். அதை இப்போதும் நான் வற்புறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். எங்களுடைய மாவட்டத்தில் 10 வருட காலமாக உணவு உற்பத்தி மிகவும் குறைந்திருந்ததின் காரணமாக நிறையக் கிணறுகள் வெட்டப்பட்டன. அதற்காக மத்திய சர்க்காரிலிருந்தும், ராஜ்ய சர்க்காரிலிருந்தும் மான்யங்கள் கொடுக்கப்பட்டது. இதன் காரணமாக 10 ஆயிரம் ஏக்கராக்கள் நெல் சாகுபடிக்கு கொண்டுவரப்பட்டது. அதன் மூலமாக அங்குள்ள ஒவ்வொரு தாலுகாவிலுள்ள விவசாயிகளும் உணவு உற்பத்தியைப் பெருக்கினார்கள். அதே மாதிரிதான், இப்போதும் நிறைய சப்ஸிடி, மான்யங்கள் கொடுத்து எங்கள் மாவட்டம், அதே போன்றுதான் சேலம், வடாற்காடு, ராமநாதபுரம் ஜில்லா போன்ற இடங்களில் கிணறுகள் வெட்டுவதற்காக நிறைய மானியம் கொடுத்து அதன் மூலமாக உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். போரிங் செட் விஷயத்திலும் எல்லா இடங்களுக்கும் அதிகமான அளவில் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், கன்சர்வேஷன் ஆப் வாட்டர் (conservation of water) தண்ணீரை தேங்கி வைக்கின்ற விஷயத்திலும் போதிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு, 'கனல்' canal களில் லைனிங் (lining) செய்வதன் மூலமாக எவ்வளவோ தண்ணீரை மிச்சப்படுத்த முடியும். பக்ரா நங்கல் போன்ற இடங்களைப் போய் பார்த்தோம். அங்கு ஆயிரக்கணக்கான மைல்கள் சிமென்ட் லைனிங் கொடுத்திருக்கிறார்கள். இதன் காரணமாக சீப்பேஜ் வாட்டரும், ஊற்றுத் தண்ணீரும் மிச்சமாகிறது. ஆகவே நாமும் இதைப்போன்று லைனிங் செய்வதில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கோதாவரி முதலிய டெல்டா பிரதேசங்களையும் மற்ற இடங்களையும் எடுத்துக் கொண்டால் அங்கு ஒரு 'க்யூபிக் புட்' (cubic foot) தண்ணீரினால் 80 ஏக்கர் பாசனம் செய்யப்படுகிறது. ஆனால் இங்கு காவேரி டெல்டாவில் 40 ஏக்கர்தான் பாசனம் செய்யப்படுகிறது. இது மிகவும் குறைவாக இருக்கிறது. இதை உயர்த்துவதற்கு நமது அதிகாரிகள் எல்லாம் முயற்சிக்க வேண்டும். நமது அதிகாரிகளைப் பொறுத்த வரையில் இர்ரிகேஷன் டிப்பார்ட்மெண்ட் அதிகாரிகள், பி.டப்ள்யூ.டி. அதிகாரிகள் எல்லோரும் நல்ல வேலை செய்கிறார்கள். அவர்களை எல்லாம் நான் பாராட்டுகிறேன். ஒவ்வொரு மாகாணங்களை எடுத்துக்கொண்டாலும் எல்லா மாகாணங்களையும் விட நம்முடைய மாகாணத்திலுள்ள அதிகாரிகள் நல்ல வேலை செய்கிறார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் கேட்கின்ற தொகைகளை உடனுக்குடன் நல்ல டயத்தில் ஒதுக்கிக் கொடுத்து, அவர்கள்

[Sri V. K. Ramaswami Mudaliyar] [13th March 1961

கேட்டுக் கொள்கிறேன். அதோடு ஏரிகளின் கரைகளையும் தூக்க முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பின்னர், "போர்ஷோர் நிலங்களை" எல்லாம் ஆர்ஜிதம் செய்யாமல், அதனால் விவசாயிகள் பாதிக்கப்படுவதால் அவைகளை யெல்லாம் நிறுத்துவதற்கு வேண்டியது செய்ய வேண்டும். முன்பே சாகுபடி செய்து வந்திருந்தால் அவைகளுக்கு நல்ல கிரயம் கொடுத்து வாங்கி அவர்களுக்கு வேறு இடங்களில் நிலம் கொடுத்து வேண்டிய வசதிகள் செய்தால்தான் தூர்ந்து போயிருக்கும் பழைய ஏரிகளைச் செப்பனிட்டு அவைகளில் நிறை நீர் பிடிக்கும்படி செய்ய முடியும். அடுத்தபடியாக, "புட் ப்ரொடக்ஷன் டிப்பார்ட்மெண்ட்." இந்த டிப்பார்ட்மெண்ட் நல்லமுறையில் நன்கு வேலை செய்து கொண்டிருக்கிறது. இதுபற்றியும் கமிட்டி சிபார்சு செய்திருக்கிறார்கள்; நடைமுறை வருடத்தில் ஒரு கோடிக்குப் போட்ட திட்டத்திற்கு மேல் வேலை செய்திருக்கிறார்கள். இர்ரிகேஷன் டிப்பார்ட்மெண்டில் கூட அவ்வளவு வேலைகள் அதிகமாக நடைபெறவில்லை. நான் இர்ரிகேஷன் டிப்பார்ட்மெண்டாரைக் குறை சொல்லவில்லை. இந்த "புட் ப்ரொடக்ஷன் டிப்பார்ட்மெண்ட்டாரை" நான் பாராட்டுகிறேன். அதிலும் சில சிக்கலான பிரச்னைகள் இருக்கின்றன. தகுதியான உதியோகஸ்தர்களை டயத்தில் போடாததால் சில வேலைகள் நடப்பது குந்தகப்படுகிறது என்று கேள்விப்பட்டேன். இது பற்றியும் இந்தக் கமிட்டியார் சிபார்சு செய்திருக்கிறார்கள்.

The Committee suggests that the personnel working under the Food Production Circle should be treated as on deputation from the Public Works Department to Food Production Circle and the general administration, viz., posting of staff and dealing with the disciplinary cases that may arise against them should be dealt with by the Board of Revenue.

இதுபற்றியும் அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதைப் பரிசீலனை செய்தார்களா? என்ன முடிவுக்கு வந்தார்கள் என்பது பற்றி பதில் உரையில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு வேண்டிய வசதிகள் எல்லாம் செய்து கொடுக்க வேண்டும். இந்த டிப்பார்ட்மென்டைப் பொறுத்த மட்டில் மக்களுக்குத் திருப்தி ஏற்பட்டிருக்கிறது. இந்த டிப்பார்ட்மெண்ட் எங்கும் நல்ல வேலை செய்யவேண்டுமென்று மக்கள் விரும்புகிறார்கள். இவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று மீண்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அடுத்தபடியாக, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் அநேக பிராந்தியங்களில் சிறு சிறு கால்வாய்கள் புறக்கணிக்கப்

12-30 p.m. பட்டிருக்கின்றன. ஜமீன்கள் எல்லாம் எடுக்கப்பட்ட பிறகும் ஜமீன் ஏரியாக்களில் சிறுசிறு நீர்ப்பாசனத் திட்டங்கள் இருக்கின்றன. அவைகள் இன்னும் எடுக்கப்படவில்லை. நம் ராஜ்யத்தில் 33,000 ஏரிகள் இருந்தபோதிலும் பத்து சதவிதம் மட்டும் விசாரணை எல்லாம் செய்து மராமத்து செய்திருக்கிறார்கள். மீதி தொண்ணூறு சதம் அப்படியே இருக்கிறது. இப்படியிருந்தால் உணவு உற்பத்தி நம் ராஜ்யத்தில் எப்படி பெருக முடியும் [illegible] வேண்



13th March 1961] [Sri V. K. Ramaswami Mudaliyar]

தொகைகள் ஒதுக்கி எவ்வளவு சீக்கிரம் அவைகளை மராமத்து செய்ய முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் அவைகளை மராமத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தவிர கிணற்று சப்ஸிடி கொடுப்பதைப்பற்றி இங்கு சொல்லியிருக்கிறேன். கிணறுகளுக்கு போதிய அளவில் சப்ஸிடி கொடுக்கப்படவில்லை என்பதைப்பற்றியும் முன்பு இங்கு சொல்லியிருக்கிறேன். அதை இப்போதும் நான் வற்புறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். எங்களுடைய மாவட்டத்தில் 10 வருட காலமாக உணவு உற்பத்தி மிகவும் குறைந்திருந்ததின் காரணமாக நிறையக் கிணறுகள் வெட்டப்பட்டன. அதற்காக மத்திய சர்க்காரிலிருந்தும், ராஜ்ய சர்க்காரிலிருந்தும் மான்யங்கள் கொடுக்கப்பட்டது. இதன் காரணமாக 10 ஆயிரம் ஏக்கராக்கள் நெல் சாகுபடிக்கு கொண்டுவரப்பட்டது. அதன் மூலமாக அங்குள்ள ஒவ்வொரு தாலுகாவிலுள்ள விவசாயிகளும் உணவு உற்பத்தியைப் பெருக்கினார்கள். அதே மாதிரிதான், இப்போதும் நிறைய சப்ஸிடி, மான்யங்கள் கொடுத்து எங்கள் மாவட்டம், அதே போன்றுதான் சேலம், வடாற்காடு, ராமனாதபுரம் ஜில்லா போன்ற இடங்களில் கிணறுகள் வெட்டுவதற்காக நிறைய மான்யம் கொடுத்து அதன் மூலமாக உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். போரிங் செட் விஷயத்திலும் எல்லா இடங்களுக்கும் அதிகமான அளவில் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், கன்சர்வேஷன் ஆப் வாட்டர் (conservation of water) தண்ணீரை தேங்கி வைக்கின்ற விஷயத்திலும் போதிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு, 'கனல்' canal களில் லைனிங் (lin ng) செய்வதன் மூலமாக எவ்வளவோ தண்ணீரை மிச்சப்படுத்த முடியும். பக்ரா நங்கல் போன்ற இடங்களைப் போய் பார்த்தோம். அங்கு ஆயிரக்கணக்கான மைல்கள் சிமெண்ட் லைனிங் கொடுத்திருக்கிறார்கள். இதன் காரணமாக சீப்பேஜ் வாட்டரும், ஊற்றுத் தண்ணீரும் மிச்சமாகிறது. ஆகவே நாமும் இதைப்போன்று லைனிங் செய்வதில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கோதாவரி முதலிய டெல்டா பிரதேசங்களையும் மற்ற இடங்களையும் எடுத்துக் கொண்டால் அங்கு ஒரு 'க்யூபிக் புட்' (cubic foot) தண்ணீரினால் 80 ஏக்கர் பாசனம் செய்யப்படுகிறது. ஆனால் இங்கு காவேரி டெல்டாவில் 40 ஏக்கர்தான் பாசனம் செய்யப்படுகிறது. இது மிகவும் குறைவாக இருக்கிறது. இதை உயர்த்துவதற்கு நமது அதிகாரிகள் எல்லாம் முயற்சிக்க வேண்டும். நமது அதிகாரிகளைப் பொறுத்த வரையில் இர்ரிகேஷன் டிப்பார்ட்மெண்ட் அதிகாரிகள், பி.டப்ள்யூ.டி. அதிகாரிகள் எல்லோரும் நல்ல வேலை செய்கிறார்கள். அவர்களை எல்லாம் நான் பாராட்டுகிறேன். ஒவ்வொரு மாகாணங்களை எடுத்துக்கொண்டாலும் எல்லா மாகாணங்களையும் விட நம்முடைய மாகாணத்திலுள்ள அதிகாரிகள் நல்ல வேலை செய்கிறார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் கேட்கின்ற தொகைகளை உடனுக்குடன் நல்ல டயத்தில் ஒதுக்கிக் கொடுத்து, அவர்கள் 1-30 p.m.

திட்டங்களை நல்ல முறையிலும் உடனடியாகவும் வேலை செய்வதற்கு தகுந்த முறையில் வேலை செய்வதற்கு உதவி செய்ய வேண்டும். அதிகாரிகளும் நல்ல முறையில் ஆக்க வேலைகளில் ஈடுபட்டு, நல்ல பலன் ஏற்படக்கூடிய அளவில் பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

* THE HON. SRI P. KAKKAN: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மதிப்பிற்குரிய அங்கத்தினர்கள் பலர் கூறிய நல்ல யோசனைகளுக்கும் அவர்கள் கூறிய கருத்துக்களுக்கும் நான் எனது நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய அரசாங்கம் செய்கின்ற வேலையையும், குறிப்பாக நீர்ப்பாசனம், பி. டப்ளியு.டி. இலாகாவில் பணிபுரிகின்ற அதிகாரிகளையும், அவர்களுடைய சேவையைப்பற்றியும் பலர் பாராட்டினார்கள். குறிப்பாக எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பாராட்டினார்கள். அதற்காகவும் நான் நன்றி செலுத்துகிறேன். அதற்காக மகிழ்ச்சியும் அடைகிறேன். இந்த இலாகாவானது எவ்வளவு துரிதமாக, குறிப்பாக மக்களுடைய நன்மையை மனதிற்கொண்டு உணவு உற்பத்தியை எவ்வளவு துரிதமாகப் பெருக்க முடியுமோ அந்த அளவுக்குத் திட்டங்களை வகுத்து அந்தத் திட்டங்களை எல்லாம் நல்ல முறையில் நிறைவேற்றி வருவதையும் அதற்காக அதிகாரிகள் செவ்வனே பாடுபட்டு வருவதையும் தமிழகத்திலுள்ள மக்கள் நன்கு அறிவார்கள். தவிரவும், போடப்படுகின்ற திட்டங்களை குறிப்பிட்ட காலத்திற்கு முன்பாகவும், மிச்சத்தோடும் செய்து இருப்பதையும் நாம் பார்த்திருக்கின்றோம். நாம் திட்டங்களை எடுத்துக் கொள்ளும்போது, போடப்படுகின்ற திட்டங்களினால் மற்றவர்களுக்கு எந்தவிதமான கஷ்டமும் ஏற்படக்கூடாது. மற்றவர்களுக்கு எந்தவிதமான தீங்கும் வரக்கூடாது என்பதை நன்கு பரிசீலித்துத்தான் நாம் திட்டங்களை எடுத்துக் கொள்கிறோம். அந்த முறையில் தான் நாம் எல்லாத் திட்டங்களையும் எடுத்து நிறைவேற்றியிருக்கிறோம். தவிரவும், வேறு பல திட்டங்களைப் பற்றியும் கனம் அங்கத்தினர்கள் பலர் இந்தச் சபையில் குறிப்பிட்டார்கள். இம்மாதிரிப் பட்ட சிறிய திட்டங்களைப்பற்றி பரிசீலனை செய்து முடிவு எடுப்பதற்காக ஸ்பெஷல் மைனர் இரிகேஷன் திட்டத்தின்கீழ் பல அதிகாரிகளும் உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் பல அதிகாரிகளும் வேலைகளை எடுத்துக் கொண்டு பகிர்ந்து கொடுத்து அதிலும் குறிப்பாக விவசாய மக்களுக்கு நன்மை ஏற்படும் வகையில் பணியாற்றி வருகிறார்கள் என்பதை இந்தச் சபையில் உள்ள கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள். இந்த மான்யத்தின் மீது வெட்டுப் பிரேரணையைக் கொண்டு வந்திருக்கிறோம். திரு. சசிவர்ணத் தேவர் அவர்கள் அப்பர் பெரியாறு திட்டத்தைப்பற்றி திட்டவட்டமாகத் தெரிவிக்கவேண்டும் என்று சொன்னார்கள். அப்பர் பெரியாறு திட்டத்தை எடுத்துக்கொண்டால் அவர்களும் நாமும் உடனடியாக பேசி முடிக்க வேண்டிய விஷயமல்ல. இந்தத் திட்டத்தைப்பற்றி தென் பிராந்திய சோனல் கவுன்சில் கூட்டத்தில் நன்றாகப் பரிசீலனை செய்யப்பட்டது. அத்துடன் தமிழகத்திலுள்ள மக்களுக்கு நன்மை கிடைக்கக் கூடிய வகையில் எல்லாவித வழி



வகையும் செய்யப்பட்டிருக்கிறது. அதில் இந்தச் சர்க்கார் எந்த விதத்திலும் பின்தங்கவில்லை என்பதை கனம் சசிவர்ணத் தேவர் அவர்களுக்கும் இதைப்பற்றி குறிப்பிட்ட அங்கத்தினர்களுக்கும் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் திட்டத்தின் பேரில் நம்முடைய கோரிக்கையை மத்திய சர்க்கார் மூலம் வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். தற்போது சென்ட்ரல் வாட்டர் பவர் கமிஷனும் இதைப்பற்றி பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. அவர்கள் நம்முடைய அரசாங்கத்தோடு கலந்து பேசி ஒரு முடிவு எடுப்பார்கள். ஆகையால் இந்தத் திட்டத்தை எடுக்காமல் இருப்பது கிழக்கு ராமநாதபுரம் பகுதியிலுள்ள மக்களுக்கு இழைக்கக் கூடிய தீங்காகும் என்ற முறையிலும் அரசியல் காரணங்களுக்காக என்ற முறையில் பேசுவது சுத்த அபத்தம் என்று சொல்ல விரும்புகிறேன். ராமநாதபுரம் பகுதியில் எத்தனையோ திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதை கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள். அது மட்டுமல்ல, அதிக அளவில் பணம் செலவு செய்து அந்த வட்டாரத்தில் எத்தனையோ திட்டங்கள் நிறைவேற்றி வந்திருப்பதையும் அங்கத்தினர்கள் அறிவார்கள். அதோடு வைகை அணைக்கட்டை பூர்த்தி செய்ததின் காரணமாக, காவேரியைப்போன்று எல்லா மாதங்களிலும் இல்லாவிட்டாலும் சில மாதங்களிலாவது வைகையில் காவேரியைப்போன்று காட்சி அளிக்கிறது. இதனால் நல்லெண்ணத்தை யாரும் மறைத்துவிட முடியாது. இந்த வைகை அணைத் திட்டத்தைக் கொண்டு வரும் போதுகூட சிலர் எதிர்க்கத் தான் செய்தார்கள். 'கிழவன் இருந்தும் கெடுத்தான், செத்தும் கெடுத்தான்' என்று சொல்வது போலச் செய்தாலும் குற்றம் செய்யாமல் இருப்பதும் குற்றம் என்று சொல்லிக் கொண்டிருப்பது சரியல்ல. அந்தச் சமயத்தில் ராமநாதபுரம் ராஜா, சேதுபதி அவர்கள் பல முயற்சிகள் செய்து இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அன்றைக்கு எதிர்த்தவர்கள் எல்லாம் இன்று அதை வாழ்த்துகிறார்கள். சமீபத்தில் அங்கு நடந்த மகாநாட்டிலே இதைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப் பார்த்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். அன்று இந்தத் திட்டத்தை எதிர்த்தவர்கள் இன்று வாயாரப் புகழ்கிறார்கள். இந்தத் திட்டத்தின் பலனாக இன்று ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் ஒரு போகத்திற்குப் பதில் இருபோகம் விவசாயம் செய்யக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அதே மாதிரி தான் வைகை நதியிலிருந்து போகின்ற தண்ணீரை, மழை பெய்யும் காலங்களில் நல்ல முறையில் குளங்களுக்குக் கொடுப்பதற்காக வைகை நதியிலிருந்து வலதுகரை சானல், இடது கரை சானல் என்ற இரு சானல்களை ஏற்படுத்துவதற்குப் பரிசீலனை நடந்து கொண்டிருக்கிறது என்பதையும் அந்த வட்டாரத்திலுள்ள மக்களுக்கு இந்தச் சபையின் மூலமாகச் சொல்ல விரும்புகிறேன். இவைகளை எல்லாம் ஒன்றும் பார்க்காமல், கிழக்கு ராமநாதபுரம் பகுதியில் அரசியல் காரணங்களுக்காக ஒன்றுமே செய்வதில்லை என்று சொல்வது மிகவும் வருந்தத்தக்கது, அவ்விதம் இனி மேலாவது சொல்லாமல் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்

[Sri P. Kakkan] [13th March 1961

கிறேன். சிவகங்கை தொகுதி அங்கத்தினர் அவர்கள் ராமநாதபுரம் பகுதியில் நீர்ப்பாசனத் திட்டங்கள் ஒன்றுமே நடக்கவில்லை என்று சொன்னார்கள். அந்த இடத்திலேயே எவ்வளவோ வேலைகள் நடந்திருக்கின்றன. இப்போதுகூட ஏரிகளில் பல வேலைகளில் நடைபெற்றிருக்கின்றன. இப்படியிருக்கும் போது இவ்விதம் சொல்வார்கள் என்றால் அவர்களுக்கு அந்தத் தொகுதியிலுள்ள மக்கள் தான் பதில் சொல்ல வேண்டும். பல இடங்களிலும் நிறைவேற்றப்பட்டு வரும் திட்டங்களினால் மக்கள் நன்மை அடைந்து வருவதை எல்லோரும் பார்க்கிறார்கள். கனம் அங்கத்தினர் அவர்களுக்கும் தெரியும் என்று தான் நான் நினைக்கிறேன். ஆகவே உண்மையைப் பேச வேண்டும், அதை ஒன்றுமே குறிப்பிடாமல், இந்த அரசாங்கம் அந்தப் பகுதியில் ஒன்றுமே செய்யவில்லை என்று சொன்னால் அதை யாரும் நம்பமாட்டார்கள். அந்தப் பகுதியிலுள்ளவர்கள் உண்மை என்னவென்று நன்கு தெரிந்திருக்கிறார்கள். ஆகையால் கனம் அங்கத்தினர் அவர்கள் சபையில் இவ்வாறு பேசுவது நல்லதல்ல. நல்ல காரியங்கள் நடக்கும்போது ஒரு திட்டமும் நடக்கவில்லை என்று சொன்னால் அவர்களே—மக்களே தக்க பதில் கூறுவார்கள் என்று இந்தச் சபையிலேயே எடுத்துக் கூற விரும்புகிறேன். நல்ல முறையில் கண்மாய்கள் செப்பனிடப்பட்டு வருகின்றன. இன்னும் பல திட்டங்கள் பரிசீலனையில் இருக்கின்றன—அதிகாரிகளும் ஆவன செய்ய வேண்டுமென்ற முறையில் வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த வட்டார மக்களுக்கு வைகை அணையைக் கட்டிக் கொடுத்தது போலவே இப்போது வலது கரை இடது கரை கால்வாய்களை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று நம்பிக் கொண்டிருக்கிறோம். அதுவும் செய்யப்படும். அங்கு பின் தங்கிய மக்கள், ஏழைகள், இருக்கிறார்கள். பல்லாண்டு காலமாக கஷ்டப்படுகிறார்கள். அதன் காரணமாகத்தான் சமீபத்தில் அங்கு கிருதுமாநதி ஆயக்கட்டுதாரர்கள் ஒரு மாநாடு நடத்தினார்கள். முதல் அமைச்சர் அவர்கள் அந்த மாநாட்டிலே கலந்து கொண்டார். என்னையும் வரவேண்டுமென்று அழைத்தார்கள், நானும் போயிருந்தேன். அங்குள்ள மக்கள் மிகவும் சந்தோஷகரமாக அரசாங்கம் செய்த வேலைகளை மனதில் வைத்து, மேற்கொண்டு செய்யவேண்டுமென்று மாநாடு நடத்தி ..........திட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அந்தத் திட்டமும் பரிசீலனையில் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆக, அந்த வட்டார மக்களுக்கு ஒன்றும் செய்யவில்லை என்று சொல்வது நல்லதல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அப்பர் பெரியாறு திட்டம் நன்கு பரிசீலனை செய்யப்பட வேண்டிய திட்டம். தென் பிராந்திய ஸோனல் கவுன்ஸில் நடுநாயகமாக இருந்து மக்களின் நன்மையைக் கருதி அதிக ஒத்தாசை செய்து கொண்டிருக்கிறது. அதன் மூலமாக பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தை வெற்றிகரமாக முடித்திருக்கிறோம். அதன் ஒத்துழைப்புடன் நல்வாழ்வு கொடுக்கக் கூடிய அப்பர் பெரியாறு திட்டத்தை வெற்றிகரமாக அமைக்கலாம் என்ற நம்பிக்கையோடு



13th March 1961] [Sri P. Kakkan]

இருக்கிறோம். அதற்காக இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடம் எடுத்துச் சொல்லியிருக்கிறது. அங்கு சட்ட சபையிலே ஒரு அங்கத்தினர் கேட்டார்கள். அதற்குக் கேரள முதல் மந்திரி பட்டம் தாணுப்பிள்ளை அவர்கள் சென்னை அரசாங்கம் கேட்கவில்லை என்று சொல்லியிருக்கிறார். மத்திய சர்க்கார் மூலமாக, வழியாகப் போய்க் கொண்டிருக்கிறோம். அவர்களுக்கு நேரடியாக நாம் எழுதவில்லை. வரப்போகும் ஸோனல் கவுன்ஸிலில் எங்களால் இயன்றமட்டும், எங்களுடைய சக்திக்குத் தகுந்தபடி நாங்கள் பாடுபடுவோம் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

*A.—(a) Statement showing the number of officers selected to selection posts in the Madras Engineering Service every year during the last five years* (1955–1959) *and the posts to which they were selected.*

| | 1955. | 1956. | 1957. | 1958. | 1959. |
|---|---|---|---|---|---|
| *Executive Engineers—* | | | | | |
| Executive Engineers (Ordinary Grade). | 18 | 9 | 11 | 16 | 23 |
| Executive Engineers (Special Grade). | 9 | 2 | .. | .. | .. |
| Superintending Engineers. | 8 | 2 | 2 | 2 | 3 |
| Chief Engineers .. | .. | .. | .. | 2 | .. |



13th March 1961]

*(b) The principle followed in the selection and the body which selects them.*—Appointment to the selection category posts (of Executive Engineers, Superintending Engineers and Chief Engineers) mentioned in paragraph 1 above are made by promotion from the corresponding lower *categories on grounds of merit and ability*, seniority being considered only where merit and ability are approximately equal. The selection for appointment to these posts is made by Government on the basis of the record of service of the officers concerned.

*(c) How far their academic qualification and rank in examination of the officers are taken into consideration in the matter of selection.*—In the case of appointment by promotion to the "selection" category post of Executive Engineers (ordinary Grade), Assistant Engineers who possess higher academic qualifications (B.E. Degree, etc.) are generally to be preferred. Assistant Engineers who possess only lower qualifications (Upper Subordinate or L.C.E., etc., Diploma) must have shown exceptional merit as Subdivisional Officer in order to be eligible for promotion as Executive Engineer.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

**Tuesday, the 14th March 1961.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

### *Local Administration Council (Recommendations)*

801 *Q.*—SRI S. M. ANNAMALAI: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நவம்பர் மாதத்தில் பெங்களூரில் நடந்த தல சுயாட்சி மன்றக் கூட்டத்தில் செய்யப்பட்ட சிபாரிசுகள் சர்க்காருக்குக் கிடைத்தனவா ?

(இ) அப்படியாயின், அதன் விபரமென்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) Yes, Sir.

(*b*) Two copies of the resolutio ns relating to non-panchayat and panchayat items passed at the Sixth Meeting of the Central Council of Local Self-Government held in November 1960 at Bangalore are placed in the Legislature Library for Members' reference

### *Panchayat Election (Thevarappanpatti)*

• 802 *Q.*—SRI M. A. B. ARUMUGHASAMY: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திண்டுக்கல் தாலூகா, ஆத்தூர் தொகுதி அய்யம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த "தேவரப்பன் பட்டி" பஞ்சாயத்து தேர்தலை நிறுத்தி வைக்கும்படி நாமினேஷன் தேதிக்கு முன் தினம் சர்க்கார் தந்தி மூலம் உத்திரவிட்டார்களா ?

(இ) தேர்தலை சீக்கிரம் நடத்த உத்திரவிடுமாறு கனம் முதல் அமைச்சர் அவர்களிடம், மேற்படி பஞ்சாயத்தைச் சேர்ந்த பொது மக்கள் 1960-ம் வருஷம் செப்டம்பர் மீ 27-ம்டெ எழுத்து மூலமாகவும் நேரிலும், விண்ணப்பித்துக் கொண்டார்களா ?

(உ) அவைகளின் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) Yes, Sir.

(*b*) In their petition, dated 7th September 1960, the residents of the Thevarappanpatti Panchayat have requested Government for the early conduct of elections to that panchayat.

(*c*) The elections to Thevarappanpatti Panchayat will be held after a decision is reached on the question of jurisdiction of the above panchayat which is now under consideration separately.

[14th March 1961

Mr. SPEAKER : We shall postpone question No. 803 till the Hon. Minister for Industries comes.

*Electricity charges (Ryots—North Arcot)*

*804 *Q.*—Sri V. K. KOTHANDARAMAN: கனம் மின்சார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விவசாயிகளின் உபயோகத்திற்கான மின்சாரத்திற்கு வருடாந்திரக் குறைந்த கட்டணம் எத்தனை சதவிகிதம் வடஆற்காடு ஜில்லாவில் வசூலாகிறது ?

(இ) குடியாத்தம் தாலூகாவிலுள்ள ஸ்கீம்களுக்கு, ஸ்கீம்வாரியாக எத்தனை சதம் வசூல் செய்யப்படுகிறது ?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) & (*b*) The attention of the Hon. Member is invited to the answer[a] placed on the table of the House.

Sri V. K. KOTHANDARAMAN: பத்து சதவிகிதம் வசூலாகக்கூடிய ஒரு திட்டத்திற்கு டாரிப் கிராண்ட் அடிப்படையிலே வசூலாக வேண்டுமென்ற விதி இருக்கிறதே. அந்த அடிப்படையிலே வசூலிக்கப்படவில்லை என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அதற்காக ஏற்பாடு செய்யப்படுமா ?

The Hon Sri V. RAMAIAH: டாரிப் கிராண்ட் அடிப்படையிலே வசூல் செய்யப்பட்டு விதிவிலக்கு கொடுக்கப்பட்டு அங்கங்கே ஸ்கீம் போட்டு அன்கண்டிட் மினிமம் சார்ஜ் ஏற்பட்டிருக்கிறது.

Sri V. K. KOTHANDARAMAN: குடியாத்தம் தாலூகாவில் சேத்துவண்டை, அட்டணம்பட்டி போன்ற இடங்களில் 10 சத விகிதத்திற்கு வசூலாக்கக்கூடிய நிலைமையில் மேற்படி டாரிப் கிராண்ட் அடிப்படையில் வசூலிக்கப்படுகிறதா ? இது போன்று 10 சத விகிதத்திற்குமேல் வசூலிக்கும் பிரதேசங்களில் டாரிப் கிராண்ட் அடிப்படையில் வசூலிக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

The Hon. Sri V. RAMAIAH: ஒரு ஸ்கீம் பூர்த்தியாகி 10 சத விகிதத்திற்குமேல் வருமானம் எவ்வளவு என்று கவனித்து எடுத்துக்கொள்கிறார்கள். இதைத்தான் வசூல் செய்கிறார்கள். ஒரு கட்டுபடியான நிலைமை ஏற்பட்டால் இந்த அடிப்படையிலே வசூல் செய்கிறார்கள்.

Sri S. M. ANNAMALAI: இப்பொழுது முற்பட்ட பகுதி என்றும், பிற்பட்ட பகுதி என்றும், முற்பட்ட பகுதிக்கு 40 ரூபாய் விகிதமும் பிற்பட்ட பகுதிக்கு 35 ரூபாய் விகிதமும் வசூலிக்கிறார்கள். இந்த ஸ்டேட்மென்டில் பார்க்கும்போது வட ஆற்காடு மாவட்டம் முற்பட்ட பகுதியாக கருதப்பட்டு 40 சத விகிதம் வசூலிக்கிறார்கள். ஆனால் வட ஆற்காடு மாவட்டம் பொருளாதார அடிப்படையிலே மிகவும் பிற்பட்ட பகுதியாக இருக்கிறது. ஆகையால் இதைப் பிற்பட்ட பகுதியாகப் பிரித்து 35 ரூபாய் வசூலிக்கக் கூடாதா ?

The Hon. Sri V. RAMAIAH: பிற்பட்ட பகுதி முற்பட்ட பகுதி என்பது பொறுப்புள்ள குழு ஆராய்ச்சி செய்த பிறகுதான் ஏற்படுத்தப்பட்டது. இரண்டு நாளைக்கு முன்பு கனம் அங்கத்தினர் அவர்கள் பேசும்போது கூட மின்சாரத்தை மனதில் கொண்டு பல பாகங்களில் தண்ணீர் இருப்பதினால் மின்சாரத்தை விஸ்தரிக்க வேண்டுமென்றும், அதற்கு விசேஷ சலுகை காட்டி துரித நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். அப்படியிருக்கும்போது வட ஆற்காடு மாவட்டத்தை பிற்பட்ட பகுதி என்று சொன்னால் நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். அங்கு வளமாக இருப்பதினால்தான் துரிதமாக மின்சாரம் விஸ்தரிக்கப்பட வேண்டுமென்று கனம் அங்கத்தினரே ஒப்புக்கொண்டார். தஞ்சை ஜில்லாவிற்கு அடுத்தபடியாக வட ஆற்காடு உணவு உற்பத்தி செய்கிறது என்று சொன்னார். வட ஆற்காடு பூராவும் முற்போக்கான பகுதி என்றுதான் சொல்லவேண்டும்.

---

a Printed as Appendix I on pages 432-433 infra.



14th March 1961]

Sri V. K. KRISHNAMURTHY: ரெமுனரேஷன் போதிய அளவிற்கு இருந்தாலுங்கூட பல இடங்களில் வஸ்தாரிக்கப்படாமல் இருக்கிற காரணத்தால் ரெமுனரேஷன் இருக்கின்ற பகுதிக்கு மின்சாரம் தனியார் வழங்காமல் இருப்பதால் வரையில் வழங்கும்படியான துரித நடவடிக்கை எடுக்க தனியாருக்கு அரசாங்கம் ஆணையிட முன்வருமா ?

The Hon. Sri V. RAMAIAH : மின்சாரத்தைப் பொறுத்தவரையில் வட ஆற்காடு மாவட்டம் பொருத்தமட்டில் கிராம மின்சார விஸ்தரிப்பு லைசென்ஸ் பகுதியிலே நன்றாக ஆராய்ந்து எங்கெங்கே தாமதம் ஏற்படுகிறதோ அதையெல்லாம் கவனித்து துரித நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு முயற்சிக்கிறோம்.

*Water-supply Scheme (Kanyakumari and Suchindram)*

*805 *Q.*—Sri T. S. RAMASWAMI: Will the Hon. the Minister for Revenue be pleased to state the steps taken to provide water-supply to the Kanyakumari and Suchindram villages?

The Hon. Sri M. A. MANICKAVELU : The Water-supply Scheme in respect of Kanyakumari is in an advanced stage of execution and will be brought into beneficial use by the end of March 1961.

The works connected with the Suchindram Water-supply Scheme have been completed and handed over to the Suchindram Panchayat. This will be brought into beneficial use, shortly.

It may be added that water is being supplied through a few taps in both the above places.

Sri T. S. RAMASWAMI : As early as three years back, the pipes have been laid and the taps have been made all right. But still for the last three years, water has not been let in. Fifty per cent of the contribution has been given by the people themselves. Everything is over. When such is the case, may I know the reasons for the delay? Agreement with regard to rates has also been reached between the panchayat and the municipality? What is the reason for the delay?

The Hon. Sri M. A. MANICKAVELU : I do not know to which the hon. Member is referring whether Cape Comorin or Suchindram?

Sri T. S. RAMASWAMI : Suchindram.

The Hon. Sri M. A. MANICKAVELU : The hon. Member says some amount was paid. I find that the scheme has been taken up under National Water-supply Scheme. That means only 5 per cent is expected from the beneficiaries. If the hon. Member puts a separate question I will give a detailed answer.

Sri T. S. RAMASWAMI : May I know whether Government are afere of the fact that more delay means the more the reputation of Government in general and the department in particular is at stake?

[14th March 1961

THE HON. SRI M. A. MANICKAVELU: Not at all. Even before the full scheme comes into operation, we have allowed some taps to function. Complete functioning of the scheme will take place as early as possible.

*Educated unemployed*

* 803 *Q.*—SRI T. T. DANIEL: Will the Hon. the Minister for Industries be pleased to state the total number of educated unemployed as on 1st April 1960 as registered in the Employment Exchange?

THE HON. SRI R. VENKATARAMAN: 41,576 (forty-one thousand five hundred and seventy-six only).

SRI T. T. DANIEL: May I know, Sir, the total number of persons who were able to get employment in that area and out of this number how many were Graduates and Under-Graduates?

THE HON. SRI R. VENKATARAMAN:

Graduates — 2,570

Under-graduates—18,294.

So far as placement is concerned, I have got a long list. If the hon. Member, Sri T. T. Daniel, puts a separate question, I will place it on the table of the House.

SRI A. A. RASHEED: May I know, Sir, whether the Government have any new scheme to employ the educated unemployed persons?

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, the Plan schemes are intended to increase the employment potential. The highest type of employment is now available. There is dearth of fitters, turners, moulders, etc. Month after month we report the shortage in the Employment Exchange. It is only the unskilled workers who are in abundance in this country and the educated also are unskilled because they do not have any training whatsoever and it is difficult to find them employment.

SRI T. T. DANIEL: May I know, Sir, what was the target of giving employment in the Second Plan and whether we will have the usual training and what is the target in the Third Plan?

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, there will be a Demand for Grant for Labour in the next few days. I have circulated a note on this subject. The hon. Member, Sri T. T. Daniel can take up this matter then.



14th March 1961]

SRI N. MARUDACHALAM: வேலை தேடிக்கொடுக்கும் ஸ்தாபனம், சென்னையிலே ஒரு வேலை காலியாக இருந்தால் கோவையில் உள்ள பத்து பேர்களுக்கு இண்டர்வியுக்கு அனுப்புகிறது. அவர்கள் கோவையிலிருந்து சொந்தச் செலவில் வரவேண்டியிருக்கிறது. அவர்களுக்கு சர்க்கார் போக்கு வரத்துச் செலவு கொடுப்பார்களா?

THE. HON. SRI R. VENKATARAMAN: அந்த மாதிரி செய்ய இயலாது.

SRI P. G. MANICKAM: வேலை இல்லாமல் இருப்பவர்கள் கோவையில் எத்தனைபேர்? அந்த விபரம் கொடுப்பார்களா?

MR. SPEAKER: தனிக் கேள்வித்தான் போட வேண்டும். ஒவ்வொரு ஜில்லாவையும் பற்றித் தனியாக கேள்வி கேட்டு நேரத்தை வீண் செய்யக் கூடாது.

*Missing of a child (Coimbatore Hospital)*

* 806 *Q.*—SRI A. A. RASHEED:
SRI A. VEDARATHNAM:
SRI T. S. RAMASWAMI:
} Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether any new-born child in the Government Head-quarters Hospital, Coimbatore, has been missing for a month;

(*b*) the circumstances under which the child has been missing; and

(*c*) whether the child has been recovered?

THE HON. M. A. MANICKAVELU: (*a*) Yes, Sir.

(*b*) On 2nd September 1960 the child under reference was lying with its mother in a cot in one of the wards of the maternity block of the hospital. At about 4-30 a.m. on that day, the mother gave milk to the child and slept. When she woke up at 4-45 a.m. she found the child missing. The exact circumstances under which the child was missing from his mother have not been established in spite of investigation of the matter by the Police.

(*c*) No, Sir.

SRI A. A. RASHEED: May I know, Sir, whether Government have taken any steps to prevent such incidents taking place in the hospitals?

THE HON. SRI M. A. MANICKAVELU: Yes, Sir. It is a fact that the place is protected with net wiring on all the three sides. Only the entrance side is not fully protected with net wiring. Now this has happened within fifteen minutes. At 4-30 a.m the mother gave milk to the child and at 4-45 a.m. the child was missing—in the early hours of the morning. Unfortunately, that day the staff nurse had to go to another place for nursing. It is reported that a woman with a red saree was carrying a child. Another person who noticed it was some what drowsy. She did not pursue. She did not suspect any foul play.

[14th March 1961

SRI A. VEDARATHNAM: இந்தக் குழந்தையை நாய் தூக்கிக்கொண்டு போய்விட்டதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: அது வேறு சமாசாரம், நீலகிரியில்.

SRI T. S. RAMASWAMI: May I know, Sir, whether the child was handed over to the mother? There was a report that the child was abandoned near Perur, Coimbatore. Was this the same child?

THE HON. SRI M. A. MANICKAVELU: That is a different incident.

SRI A. A. RASHEED: May I know, Sir, whether the mother has been compensated for the loss of the child?

THE HON. SRI M. A. MANICKAVELU: I do not know. The hon. Member, Sri A. A. Rasheed, may suggest the method by which the loss of child could be compensated.

SRI N. MARUDACHALAM: இந்தத் தலைமை மருத்துவ மனையில் குழந்தை காணாமற்போனவுடனேயே அதிகாரிகள் அதைத் தேடுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருந்தால் பக்கத்திலேயே கண்டுபிடித்திருக்க முடியாதா ? எத்தனை நாட்களுக்குப் பின்னர் குழந்தை காணாமற்போனதை அவர்கள் கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள் ?

THE HON. SRI M. A. MANICKAVELU: இதில் ஒன்றும் தாமதம் இல்லையே. விசாரணை முதலிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டார்கள்.

*Ayurvedic Hospitals*

*807 Q.—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) the number of Ayurvedic Hospitals in the State; and

(b) the manner in which the essential herbs and medicines are supplied to these hospitals?

THE HON. SRI M. A. MANICKAVELU: (a) There are two Ayurvedic Hospitals in the State, one at Madras attached to the Government Hospital of Integrated Medicine and another at Devakottai, maintained by the municipality. Besides, there are 133 dispensaries of Ayurvedic Medicine maintained by the State and local bodies.

(b) Medicines for the use of the Hospital of Integrated Medicine, Madras, are prepared in the Pharmacy attached to the hospital. Essential herbs required therefor are secured on contract system.



14th March 1961]

Most of the local bodies get their requirements of Indigenous medicines, herbs, etc., from the Indian Medical Practitioner's Co-operative Pharmacy and Stores, Adayar, Madras. The Thanjavur District Board is having its own Pharmacy for the preparation of Indigenous Medicines. Supply of raw drugs, etc., to this Pharmacy is according to tender system.

Indigenous medicines are also prepared in Salem, Vellore and Dindigul municipal dispensaries for which raw drugs are procured on the basis of tender system.

*Agricultural implements (manufacture)*

*808 Q.—SRI N. R. THIAGARAJAN: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1961-ல் (i) நம் மாநிலத்தில் (ஜில்லா வாரியாக) (ii) மதுரை ஜில்லாவில் பெரியகுளம் தாலூகாவில் இரும்பினால் விவசாயக் கருவிகள் செய்ய எத்தனை லைசென்சுகள் வழங்கப்பட்டன ?

(ஆ) இந்த லைசென்சுதாரர்களுக்கு எந்த அடிப்படையில் இரும்பு சப்ளை செய்யப்படுகிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (b) A paper[a] is placed on the table of the House.

SRI V. K. KOTHANDARAMAN: விவசாயக் கருவிகள் செய்வதற்காக வழங்கப்பட்டிருக்கக்கூடிய இந்த லைசென்சுகளை வைத்துக்கொண்டுள்ளவர்கள் இரும்புக் கோட்டாவை வாங்கினவுடன் விவசாயத்திற்குத் தேவைப்படும் கருவிகளைச் செய்வதற்குப் பதிலாக கள்ளமார்க்கெட்டில் விற்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? இனிமேலாவது விவசாயக் கருவிகளை செய்து கொடுக்கவேண்டுமென்ற முறையில் கவனம் செலுத்தப்படுமா ?

THE HON. SRI M BHAKTAVATSALAM: தவறுகள் நடைபெறுவது அமைச்சர்களுக்குத் தெரியுமா என்றால் நடைபெறவில்லை என்று நான் எப்படிச் சொல்ல முடியும். நடைபெறலாம் என்றும் நான் கேள்விப்படுகிறேன். ஆனால் இம்மாதிரி கேள்வி போடுவதில் பயன் இல்லை. குறிப்பாக அவருடைய மாவட்டத்திலோ அல்லது வேறு எந்த இடத்திலோ இதுமாதிரியாகத் தவறுதல்கள் நடக்கின்றன என்கிற விஷயம் தெரிந்து அதைப்பற்றி அவரும் விசாரித்து எனக்குத் தகவல் கொடுத்தால் உடனடியாகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

SRI T. S. RAMASWAMI: May I know, Sir, why no licence has been issued to Kanyakumari district?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I do not know whether there has been any applicant from Kanyakumari district.

SRI K. R. NALLASIVAM: விவசாயக் கருவிகளைச் செய்யக்கூடிய இந்த ஸ்தாபனங்கள் அந்தக் கருவிகளை கூட்டுறவு சங்கங்களின் மூலமாகத் தான் விற்பனை செய்யவேண்டும் என்பதாக நடவடிக்கை ஏதாவது எடுக்க முடியுமா ?

---

[a] Printed as Appendix II on page 434 infra.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கூட்டுறவு சங்கங்களின் மூலமாகத்தான் விற்பனை செய்யவேண்டுமென்ற நிபந்தனையை விதிப்பது சரியல்ல. விற்பனை செய்ய அவர்கள் முன் வந்தால் தனிச் சலுகை காட்டப்படும்.

SRI S. NAGARAJA MONIGAR: இந்தக் கருவிகளில் டிராக்டர்கள் தவிர விவசாயிகளுக்கு அனுகூலமான இதர கருவிகள் தயார் செய்ய நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இப்போது அதற்கு வேண்டிய உருக்கு, இரும்பு எல்லாம் கொஞ்சம் அபிவிருத்தி அடைந்திருக்கிறது. அந்தந்த விவசாய இலாகாவே அதை எடுத்து விநியோகிப்பது என்ற முறையும் இனி கவனிக்கப்படும். இது எல்லாம் கவனிக்கப்பட்டு வருகிறது.

## Agricultural schemes

*809 Q.—SRI A. VEDARATHNAM: கனம் உணவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விவசாயத் திட்டம் வகுக்கப் பஞ்சாயத்து யூனியன்களுக்கு தாக்கீது பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா?

(இ) அதன் விவரமென்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Yes, Sir.

(b) A copy of G.O. No. 3792, Food and Agriculture, dated 16th November 1960, containing the details is placed on the table of the House.

SRI A. VEDARATHNAM: மேஜைமீது வைக்கப்பட்டிருக்கிற எட்டில் ப்ரோடக்ஷன் ஆப் புட்க்ரெயின்ஸ் (production of foodgrains) 33% அதிகப்படுத்துவது என்றும், பெட்டர் பார்மிங் Better Farming அதிகமாக $12\frac{1}{2}$% என்றும், Further development of the use of Chemical Fertilisers $12\frac{1}{2}$% என்றும், Further development of Irrigation facilities 8% என்றும் எதிர்பார்க்கப்படுவதாகக் கூறப்பட்டிருக்கிறது. முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் நம்முடைய லட்சியம் இருக்கு எவ்வளவாக இருந்தபோதிலும் போதுமான வசதி இல்லாத காரணத்தினால் அதை அடைய முடியவில்லை. இந்த எட்டிலே நான்காவது பக்கத்தில் ஏரிகள், குளங்கள் இதிலிருந்து தண்ணீர் இறைத்துக்கொள்வதற்கு வசதியாக பம்பு செட்டுகள் கூடக் கொடுப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஒவ்வொருவரும் தனித்தனியாக இதைச் செய்வது சாத்தியம் இல்லை. அரசாங்கம் தான் இதைச் செய்ய வேண்டும். அவர்கள் எடுத்துக் கொண்ட திட்டத்தை பூர்த்தி செய்யவில்லை. விவசாய இலாகா எடுத்துக்கொள்ளக்கூடாது என்று சொல்லிவிட்டது. இப்படி இருக்கையில் இந்தத் திட்டத்தை குறிப்பிட்டபடி நிறைவேற்ற முடியும் என்று அரசாங்கம் கருதுகிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் போட்டபடி ஈடேறவில்லை என்று சொல்வது சரியல்ல. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எவ்வளவு தூரம் எதிர்பார்க்கப்படுகிறதோ, அவ்வளவுதூரம் நிறைவேற்ற அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது. இதிலே 8% நீர்ப்பாசன வசதிகளை இன்னும் அதிகப்படுத்துவதனாலே உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கவனம் செலுத்தப்படும். தனித்தனியே விவசாயிகளை ஊக்குவிப்பதற்கு போதுமான முறையில் கவனம் செலுத்தப்படும் என்று கனம் அங்கத்தினர்களுக்குக் கூறிக்கொள்கிறேன்.

* Printed as Appendix III on pages 434-458 infra.



## Marketing Co-operative Societies

*810 Q.—SRI S. RANGANATHA MUDALIAR (on behalf of SRI K. VINAYAKAM): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there are any Marketing Co-operative Societies in the City of Madras;

(b) if so, how many;

(c) whether they deal in food-grains like rice or other food products; and

(d) what are the other price controlled food-grains they deal in?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) Yes, Sir.

(b) One, viz., the Madras State Co-operative Supply and Marketing Society.

(c) & (d) The Madras State Co-operative Supply and Marketing Society does not deal in food-grains, but only food products like sugar and milk powder.

## Scheme for under-developed districts

*811 Q.—SRI S. M. ANNAMALAI: கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் தீட்டுகின்றபோது பிற்பட்ட மாவட்டம் வாரியாக திட்டம் தீட்ட வேண்டுமென்று திட்டக் கமிஷன் ஆலோசனை கூறியுள்ளதா?

(இ) அப்படியாயின் இந்த சர்க்காரின் முடிவென்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM: (a) & (b) No specific instructions have been received from the Planning Commission that schemes should be formulated for the Third Plan on the basis of backwardness of districts. However the Commission has envisaged that special consideration should be given for the development of backward areas in the State Plan. This has been taken into account while formulating the Third Plan proposal of this State.

SRI S. M. ANNAMALAI: அப்படியாயின் நம் மாநிலத்திலுள்ள எந்தெந்த மாவட்டங்களை பிற்பட்ட மாவட்டங்கள் என்று சர்க்கார் கருதுகிறது? அதற்காக என்னென்ன தனி சலுகைகள் தர உத்தேசிக்கப்பட்டுள்ளது?

THE HON. SRI C. SUBRAMANIAM: ஒரு ஜில்லாவில் எல்லா பகுதிகளும் பிற்பட்ட பகுதிகள் என்று எடுத்துக்கொள்ளமுடியாது. சில ஜில்லாக்களில் பல பகுதிகள் பிற்பட்ட பகுதிகளாகயிருக்கின்றன. சில ஜில்லாக்களில் சில சில பகுதிகள் பிற்பட்ட பகுதிகளாகயிருக்கின்றன. இவைகளை எல்லாம் மனதில் வைத்துக்கொண்டுதான திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

[14th March 1961

SRI S. M. ANNAMALAI: ஒவ்வொரு ஜில்லாவிலும் எந்தெந்த தாலுகாக்கள் அல்லது எந்தெந்த பிர்காக்கள் பிற்பட்ட பகுதிகள் என்று சர்க்கார் நிர்ணயித்து விட்டார்களா? அப்படி நிர்ணயித்திருப்பின் அந்த லிஸ்ட்டை மேஜை மீது வைக்கப்படுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: தனி கேள்வி போடவேண்டும்.

DR. (SRIMATHI) T.S. SOUNDARAM RAMACHANDRAN: நீர்ப்பாசன வசதி குறைந்த வரண்ட பிரதேசங்கள் பிற்பட்ட பகுதியில் சேருகிறதா? அதாவது நீர்ப்பாசன வசதி, அல்லது கைத்தொழிலில் பிற்போக்குள்ள பிரதேசங்கள் சேருகிறதா?

THE HON. SRI. C. SUBRAMANIAM: இரண்டையும் கவனிக்க வேண்டியிருக்கிறது. ஒரு இடத்தில் நீர்ப்பாசன வசதியில்லாமல் நல்ல கைத்தொழில் வளம் இருந்தால் அதை பிற்போக்கு பகுதி என்று சொல்ல முடியாது. இரண்டும் இல்லாமலிருந்தால் பிற்போக்கு என்று சொல்லமுடியும்.

SRI J. MATHA GOWDER: நீலகிரி ஜில்லா ஒரு சிறிய மாவட்டம். அது மிகவும் பிற்போக்கான நிலையிலிருக்கிறது என்பதை சர்க்கார் கருத்தில் கொண்டு இதை முதலில் எடுக்க சர்க்கார் வற்புறுத்தியிருக்கிறதா?

THE HON. SRI C. SUBRAMANIAM: நீலகிரி ஜில்லாவை பிற்போக்கான பகுதி என்று சொல்வது தவறு என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*Third Five-Year Plan (Cost)*

* 812 Q.—SRI T. S. RAMASWAMI: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the total cost of the several schemes under the Third Five-Year Plan that were presented to the Planning Commission behalf of our State;

(b) the total cost of the schemes approved by the Commission;

(c) the schemes which were not approved by the Commission; and

(d) whether extension of railway line to the Kanyakumari district has been included in the Third Five-Year Plan by the Commission?

THE HON. SRI C. SUBRAMANIAM: (a) The outlay proposed in the Draft Third Plan of the Madras State is Rs. 398·82 crores.

(b) The total outlay agreed to at the discussions with the Planning Commission is Rs. 290·89 crores.

(c) The ceiling of outlay for the Third Five-year Plan of the State and the various heads of development were settled at the discussions with the Planning Commission. The Planning Commission also made suggestions for revising the Plan so as to conform to the ceilings fixed. The actual schemes to be included in Plan are being finalised. The finalised plan which is proposed to be published shortly will contain the details of all the schemes.



14th March 1961]

(d) The Tirunelveli-Cape Comorin Railway line is one of the schemes recommended by this Government for inclusion in the Central Third Five-Year Plan and the matter is under consideration of the Government of India.

SRI A. V. P. ASAITHAMBI: 100 கோடி குறைக்கப்பட்டு விட்டதால், இதில் விடப்பட்டது கன்னியாகுமரி மாவட்ட ரெயில்வே மட்டுமா? விருதுநகர்-மானாமதுரை ரெயில்வேயும் இதனால் கைவிடப்பட்டதா?

THE HON. SRI C. SUBRAMANIAM: திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்களுக்கு இருக்கக்கூடிய குழப்பம் எப்போதும் நீங்குவதில்லை. 290 கோடி நம் ராஜ்யத் திட்டங்கள். ரெயில்வே, மத்திய சர்க்கார் திட்டத்தைச் சேர்ந்தது. ஆகவே 100 கோடி அளவிற்கும், கன்னியா குமரி ரெயில்வே திட்டத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. ரெயில்வே திட்டங்கள் எல்லாம் மத்திய சர்க்கார் திட்டங்களில் சேரக் கூடியவை.

*Third Five-Year Plan Discussions (Ministers' and Officers' visit)*

* 813 Q.—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of SRI M. KALYANASUNDARAM): Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the number of Ministers and Officers who visited Delhi in November 1960 to meet the Planning Commission to finalize the Third Five-Year Plan; and

(b) the travelling and daily allowances drawn by them.

THE HON. SRI C. SUBRAMANIAM: (a) Three Ministers including the Chief Minister, and twenty-three officers of the Government attended the Third Plan discussions in New Delhi in November 1960; and

(b) Rs. 15,584·18 nP.

SRI A. V. P. ASAITHAMBI: திட்டக்குழுவை சந்திப்பதற்கு இங்கிருந்து புறப்பட்ட அமைச்சர்கள், அவர்களிடம் கேட்டுக்கொண்டபோது, தொகையை குறைக்கக்கூடாது என்பதை வற்புறுத்துவதற்காகத்தானா? அல்லது மேற்கொண்டு ஏதாவது தொகை வேண்டுமென்று வற்புறுத்தவா? இந்த மாதிரி தொகையை குறைப்பதில் எந்தெந்த திட்டங்கள் இந்த சர்க்கார் சொன்னதில் இன்னும் பிரயத்தனம் கைவிடப்படக்கூடிய நிலையிலிருக்கிறது?

THE HON. SRI C. SUBRAMANIAM: திட்டங்கள் எந்த முறையில் மாற்றியமைக்கப்படப்போகிறது என்பதுபற்றி போன கேள்வியில் சொன்னேன். இப்பொழுது கேட்பது யார் யார் போனது என்பதைப் பற்றி. திட்டத்தை எந்த முறையில் அமைக்கவேண்டுமென்பதுபற்றி திட்டக் கமிஷனுடன் விவாதிப்பதற்காக சென்றதல்லாமல் தொகையைக் குறைப்பதற்கோ, கூட்டுவதற்கோ அல்ல. எந்த முறையில் திட்டம் அமைய வேண்டும் என்று தேசிய அடிப்படையில் விவாதிப்பதற்காக.

### *Weavers without looms*

* 814 *Q.*—Sri T. T. DANIEL: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of Industrial Co-operatives for loomless weavers district-war;

(*b*) the nature of the financial aid given by the Government; and

(*c*) whether there is any proposal to start an Industrial Weavers' Co-operative Society at Vilavancode taluk, in the Kanyakumari district?

The Hon. Sri R. VENKATARAMAN: (*a*), (*b*) & (*c*) The information is furnished in the paper [a] placed on the table of the house.

Sri T. T. DANIEL: May I know whether the Government have taken a census of the exact number of loomless weavers in the whole State?

The Hon. Sri R. VENKATARAMAN: It is not possible to take a census of the loomless weavers. If a person does not have looms, it is very difficult to say whether he is a weaver or not.

Sri A. MARIAPPAN: இண்டஸ்ட்ரியல் கோவாப்பரேட்டிவ் சொஸைடிகளை எல்லா ஜில்லாக்களிலும் அதிகப்படுத்த சர்க்காருக்கு உத்தேசம் உண்டா? சேலம் ஜில்லாவில் அதிகமாக தறிகள் இருப்பதால் அங்கு இன்னும் அதிகமாக வைக்க சர்க்காருக்கு உத்தேசமுண்டா என்று அறியவிரும்புகிறேன்.

The Hon. Sri R. VENKATARAMAN: பொதுவாக இந்த இண்டஸ்ட்ரியல் கோவாப்பரேட்டிவ்ஸ் நம் ராஜ்யத்தில் வெற்றிகரமாக இருந்திருக்கிறது. மற்ற ராஜ்யங்களில் அவைகள் வெற்றிகரமாக நடக்கவில்லை என்று அபிப்பிராயம் கூறப்பட்டிருக்கிறது. சேலம் ஜில்லாவில் ஏற்கனவே ஒரு இண்டஸ்ட்ரியல் கோவாப்பரேட்டிவ் வைத்திருக்கிறது. இன்னும் அதிகரிப்பது பற்றி மூன்றாவது திட்ட காலத்தில் யோசனை செய்யலாம்.

Sri M. A. B. ARUMUGHASAMY: மதுரை ஜில்லாவில் இண்டஸ்ட்ரியல் கோவாப்பரேட்டிவ் சொஸைடி ஒன்று ஏற்படுத்தப்பட்டிருப்பதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த சொஸைடி எந்தயிடத்தில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri R. VENKATARAMAN: மதுரை நகரத்தில் இருக்கிறது.

Sri S. NAGARAJA MONIGAR: தறியில்லா நெசவாளிகள் என்பது யாரைக் குறிக்கிறது? அப்பனின் மகன் அத்தொழிலில் ஈடுபட்டிருப்பதால் அவனை நெசவாளி என்பதா அல்லது நெசவுத் தொழிலில் ஈடுபட்டு ஆனால் தறியின்றி தவிப்பவர்களையா?

The Hon. Sri R. VENKATARAMAN: நெசவு வேலை தெரிந்தும், தறிகள் இல்லாத காரணத்தால் அதைப் பயன்படுத்த முடியாதவர்களைக் குறிக்கிறது.

[a] Printed as Appendix IV at page 454 infra.





### *Policemen (Transfer from Kanyakumari)*

* 815 *Q.*—Sri T. S. RAMASWAMI: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of Policemen transferred from Kanyakumari district and the districts to which they were transferred during this financial year;

(*b*) their scales of pay; and

(*c*) whether there is any circular to the effect that low-paid N.G.Os. should not ordinarily be transferred outside their native district?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (*a*) Twenty-six Head constables and 70 Police constables were transferred from Kanyakumari district to Madurai Urban, Madurai North, Ramanathapuram and Tirunelveli districts;

(*b*) The scale of pay of Head constables is Rs. 85—2—105, and that of Police constables is Rs. 65—1—70—2—90.

(*c*) No, Sir.

### *Policemen (Transfer from Andhra Pradesh)*

* 816 *Q.*—Sri S. RANGANATHA MUDALIAR (on behalf of Sri K. VINAYAKAM): Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether it is a fact that the police constables who were transferred from Andhra Pradesh to Madras State under Pataskar Award are paid at the scales of pay that were obtaining in Andhra Pradesh when they were transferred; and

(*b*) when do the Government propose to apply the revised scales of pay to them as recommended by the Madras Pay Commission?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (*a*) Yes, Sir.

(*b*) The Police constables transferred from Andhra Pradesh to this State under Pataskar Award, will be brought over to the Madras revised scale of pay, only after the equation of the posts and the integration of their services are determined by Government.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR: Is there much disparity between the two scales of pay?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: Yes, Sir. There is some difference. This integration will be effected very soon.

[14th March 1961

*Rental Housing Schemes*

*817 *Q.*—SRI T. S. RAMASWAMI (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR): Will the Hon. the Minister for Industries be pleased to state the details of the projects that are under execution under the Rental Housing Schemes of the Government of India.

THE HON. SRI R. VENKATARAMAN: The Rental Housing Scheme is implemented by the City Improvement Trust and the Public Works Department in the city, for the benefit of low-paid State Government employees. The City Improvement Trust has taken up the construction of—

(*a*) Two hundred and sixty apartments (13 blocks of 20 tenements each at an estimated cost of Rs. 16.27 lakhs in the Foreshore Composite Scheme Area, Santhome, Madras, and

(*b*) Ninety-six apartments (16 blocks of 6 tenements each) at an estimated cost of Rs. 11.13 lakhs in the Kilpauk Garden Scheme, Madras.

(*c*) The Public Works Department is constructing 168 apartments at an esimated cost of Rs. 17.68 lakhs in Todhunter Nagar, Madras.

The total will be 524 apartments.

SRI A. A. RASHEED: May I know whether these houses are rented on a 'no-profit-no-loss' basis?

THE HON. SRI R. VENKATARAMAN: Yes, on a 'no-profit-no-loss' basis.

SRI A.V.P. ASAITHAMBI: தலைவர் அவர்களே, இந்த வாடகைத் திட்டத்தை ஓனர்ஷிப்புக்கு மாற்றி இந்த வீடுகளில் குடி வந்தவர்களுக்கே சில வருடங்களுக்குப் பின்னால் வீடுகள் உரிமையாகக்கூடிய அளவுக்கு மத்திய அரசாங்கத்தினரைக் கேட்டு ஒரு திட்டம் வகுக்க அரசாங்கத்திற்கு நோக்கம் உண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN: வீடுகள் கொடுப்பதில் இரண்டு வகை திட்டங்கள் இருக்கின்றன. அரசாங்க ஊழியர்களுக்கு தனியாக பிளாட்டுகளை வாங்கி அதில் வீடுகளை கட்டிக்கொள்வதற்கு பணம் கடனாக கொடுத்து, அதை தவணையாக வருஷா வருஷம் கொடுப்பதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. தவிரவும் அரசாங்க ஊழியர்கள் எல்லோரும் சென்னையிலேயே இருப்பார்கள் என்று நினைப்பதற்கில்லை. அவர்கள் ஓய்வு பெற்ற பிறகு தங்கள் ஊருக்கே திரும்பிப் போகக் கூடும். அவ்வாறு உள்ளவர்களுக்கு ரெண்டல் ஸ்கீம் உதவிகரமாக இருக்கும். அவர்களுக்கு சர்க்கார் வீடுகளைக்கட்டி வாடகைக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறது. இவ்விதம் இரண்டு விதமான திட்டங்கள் இருக்கின்றன. இந்தக் கேள்வி வாடகை வீடுகளைப்பற்றியதுதான்.

SRI. N. MARUDACHALAM: ஸார், இம்மாதிரி வாடகைக்கு வீடுகளை கட்டிக் கொடுக்கும் திட்டங்களை ஒவ்வொரு நகரத்திற்கும் கொண்டு வருவதற்கு அரசாங்கத்திற்கு ஏதாவது உத்தேசம் உண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN: இதை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்துக்கொள்ளலாம் என்ற யோசனை இருக்கிறது.



14th March 1961]

SRI P. G. MANICKAM ஸார், இந்தத் திட்டத்தின்கீழ் சென்னையைத் தவிர வேறு நகரங்களையும் கொண்டுவர சர்க்கார் முயற்சி செய்திருக்கிறதா? அப்படியானால் எந்தெந்த நகரங்களுக்கு என்பதை தெரிவிக்க வேண்டுகிறேன்.

MR. SPEAKER: கனம் மருதாசலம் அவர்கள் கேட்ட கேள்விக்கு கொடுக்கப்பட்ட பதில்தான் உங்கள் கேள்விக்குக்கும் பொருந்தும்.

*Houses for workers (Sivakasi)*

*818 Q.—SRI V. K. KOTHANDARAMAN: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதில் அளிப்பாரா—

(அ) ராமநாதபுரம் ஜில்லா, சிவகாசியில் தொழிலாளர்களுக்காக எத்தனை வீடுகள் கட்டப்பட்டன?

(இ) அதற்கு மத்திய சர்க்கார், ராஜ்ய சர்க்கார் மான்யம் அல்லது கடன் எவ்வளவு?

(உ) மேற்படி வீடுகள் கட்டி முடித்து எவ்வளவு காலம் ஆகிறது?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) 156 houses.

(*b*) Loan from Government of India, Rs. 2,53,500, grant from Government of India, Rs. 2,53,500, assistance from State Government—Nil.

(*c*) Construction work was completed in April 1959, but the provision of amenities was only completed in September 1960. When I say 'construction work' was completed, I mean only 'civil work' was completed.

SRI V. K. KOTHANDARAMAN: ஸார், இந்த வீடுகளைக் கட்டி முடித்து எத்தனையோ மாதங்களுக்குப் பிறகு இந்த வீடுகளில் வாடகைக்கு வந்தார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

THE HON. SRI R. VENKATARAMAN: புதிதாக கட்டப்படும் காலனிகளில் முதல் முதலாக வீடுகள் கட்டப்படுகின்றன. அதன் பின்னால் குழாய்கள், சாக்கடை வசதிகள் முதலியவை செய்து கொடுக்கவேண்டும். வீடுகள் கட்டி முடித்தவுடன் எல்லாமே முடிந்துவிட்டது என்ற அபிப்பிராயம் ஜனங்களிடத்தில் ஏற்பட்டு வருகிறது. இதனால்தான் கட்டிடம் கட்டி முடிந்தும், குடி வைக்கவில்லையே என்று பலர் குறைபடுகிறார்கள். இந்த வசதிகள் எல்லாம் செய்து கொடுக்கப்படவில்லை என்றால் அந்த இடங்கள் அசுத்தமாகிவிடுகின்றன. இந்த கட்டிடங்களைப் பொறுத்தவரை, இவை அக்டோபர் மாதத்தில்தான் கட்டி முடிந்தன.

SRI V. K. KOTHANDARAMAN: ஒரு இலாகாவுக்கும் மற்றொரு இலாகாவுக்கும் இடையே வேலைகளில் ஏற்படுகின்ற தாமதத்தின் காரணமாகவும், மின்சார விளக்குகள் போடுவதில் ஏற்படுகின்ற தாமதத்தின் காரணமாகவும், தண்ணீர் வசதி கொடுப்பதற்கு ஏற்படுகின்ற தாமதத்தின் காரணமாகவும், அதிகமாக வாடகையை நிர்ணயித்திருப்பதின் காரணமாகவும் தான் இம்மாதிரி ஆறு, ஏழு மாதங்களுக்குப் பின்னால் வாடகைக்கு வந்தார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? இனிமேலாவது இவ்வித தாமதங்கள் நீடிக்காதவாறு அரசாங்கம் கவனிக்குமா?

**The Hon. Sri R. VENKATARAMAN** : கனம் அங்கத்தினர் அவர்கள் மந்திரியாக வருகின்ற நேரத்தில் இம்மாதிரியான தாமதங்கள் எல்லாம் சாதாரணமானவைதான் என்பதை ஒப்புக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். இந்தக் காரணங்களினால்தான் தாமதம் ஏற்பட்டது என்று சொல்வது சரியல்ல.

(கனம் கோதண்டராமன் குறுக்கிட்டு பேசிக்கொண்டிருந்தார்)

**Mr. SPEAKER** : (ஸ்ரீ வி. கே. கோதண்டராமன் அவர்களைப்பார்த்து) நீங்கள்தான கேள்வி கேட்டாய்விட்டதே, நான் அடுத்த அங்கத்தினரையும் அழைத்தாய்விட்டது. அதன் பிறகு நீங்கள் உட்கார்ந்துகொண்டே எப்படி பேசிக்கொண்டிருக்கமுடியும் ?

**Sri V. SUBBIAH** : "சிவகாசி (ஃபையர் வொர்க்ஸ்) வாணவெடி" தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு மத்திய அரசாங்கம் விசேஷ மான்யம் ரூபாய் தருகிறதா ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : இந்த வீடுகட்டும் திட்டமே "ஸப்ஸிடைஸ்ட் இண்டஸ்டரியல் ஹௌஸிங் ஸ்கீம்"-மில் தான் நடக்கிறது. இதில் 50 சதவிகிதம் மத்திய அரசாங்கம் மான்யமாக தருகிறது. 50 சதமானம் ராஜ்ய சர்க்காரால் கடனாக கொடுக்கப்படுகிறது.

**Dr. (Srimathi) T. S. SOUNDARAM RAMACHANDRAN** : மத்திய சர்க்கார் கொடுக்கும் மானியத்தைக் கிரான்டாக எடுத்துக்கொண்டு, லோன்-ஆக கொடுக்கும் குறிப்பிட்ட தொகைக்குமட்டும்தான் வாடகை நிர்ணயிக்கப்படுகிறதா ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : ஆம், அப்படித்தான் நிர்ணயிக்கப்படுகிறது.

*Grama Sevaks (duties)*

* 819 Q.—Sri V. K. RAMASWAMY MUDALIAR (on behalf of Sri K. VINAYAKAM) : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether Grama Sevaks in their respective blocks are instructed to explain to the Backward Classes and Harijans the facilities provided for them under the various schemes in their blocks; and

(b) the work done by Grama Sevaks in the matter of uplift of Backward and Scheduled Classes?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : (a) No specific instructions have been issued to the Grama Sevaks in this regard.

(b) In addition to their normal duties the Grama Sevaks will be attending to the work relating to the uplift of Harijan and Backward classes.

**Sri A. V. P. ASAITHAMBI** : அரசாங்க ஊழியர்களான இந்த கிராம சேவக்குகள் அரசாங்க வேலைகளைச் செய்யாமல் காங்கிரஸ் கட்சிக்கு பிரச்சாரம் செய்து வருவதாக அரசாங்கத்திற்கு புகார் வந்திருக்கிறதா ? அப்படியானால் அவ்விதம் செய்யக்கூடாது என்று ஏதாவது தடை விதிக்கப்பட்டிருக்கிறதா, இல்லையென்றால் அவ்விதம் தடை விதிக்க அரசாங்கம் முன் வருமா ?



**The Hon Sri C. SUBRAMANIAM** : சில இடங்களில் கிராம சேவக்குகளை திராவிட முன்னேற்றக் கழக பிரசாரத்திற்காக உபயோகிக்க முயற்சி எடுத்துவருவதாக தெரிகிறது. அவ்விதம் செய்யக்கூடாது என்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

**Sri A. V. P. ASAITHAMBI** : ஸார், பாயிண்ட் ஆப் ஆர்டர், திராவிட முன்னேற்றக் கழகப் பிரச்சாரம் செய்வதற்கு கிராம சேவக்குகளை உபயோகிக்க முயற்சி செய்வதாக அரசாங்கத்திற்கு புகார் வந்திருந்தால், அது எப்போது, எங்கு, என்பதை தேதி வாரியாக விவரங்களை இந்தச் சபையில் கொடுக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா ?

**Mr. SPEAKER** : நீங்கள் கேள்வி கேட்டீர், அதற்கு பதில் சொன்னார், இப்போது நீங்கள் கேட்பது எப்படி பாயிண்ட் ஆப் ஆர்டராகும் ?

*Paddy (Production)*

* 820 Q.—Sri T. T. DANIEL : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the average quantity of paddy produced in the State districtwar during 1960 so far; and

(b) how this statistics is collected?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : (a) & (b) A statement[a] is placed on the table of the House.

**Sri T. T. DANIEL** : May I know whether Tahsildars and Deputy Tahsildars', in preparing forecast reports, are ascertaining the quantity of paddy produced from the landholders?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : The problem involved in crop forecasting on paddy crop consists of two parts : (1) estimating area, and (2) estimating yield per acre. It was on that basis that the estimate was prepared.

**Sri V. K. RAMASWAMY MUDALIYAR** : What is the reason for so much of production so far as the Thanjavur district is concerned?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : It is in terms of paddy.

**Sri T. T. DANIEL** : May I know whether it is a fact that the producers of paddy are not at all consulted in preparing Statistics to find out the average production of paddy per acre in a particular village or taluk?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : A few crop-cutting experiments are made and that is the basis of this assessment. Crop-cutting experiments cannot be made without consulting the agriculturists themselves.

---

a Printed as Appendix V on page 445 infra.

[14th March 1961

SRI V. SUBBIAH : ஸார், மேஜைமீது வைக்கப்பட்டுள்ள பதிலில் குறிப்பாக திருச்சியும் திருநெல்வேலியும் ஒரே அளவு என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஜில்லாவிலும் உட்பட்ட ஏக்கரேஜ் என்ன, ஒவ்வொரு ஜில்லாவிலும் விளைச்சல் எவ்வளவு? அதில் எது கூடுதல் குறைவு என்பதைச் சொல்ல முடியுமா?

THE HON. SRI. M. BHAKTAVATSALAM : எல்லா இடங்களிலும் அந்தந்த இடத்திற்குத் தேவைப்படுகிற பருவ மழை இல்லாமல் சில இடையூறுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே ஒவ்வொரு வருஷத்திலும் சராசரி எவ்வளவு கிடைக்கிறது என்பதை வைத்துக்கொண்டுதான் இந்தக் கணக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

SRI N. R. THIAGARAJAN : ஸார், கிட்டத்தட்ட 50 லட்சம் ஏக்கர் நிலத்தில் சுமார் 57 லட்சம் டன்தான் விளைச்சல் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்திற்கு அடுத்தபடியாக தென்னாற்காடு தான் அதிக விளைச்சல் உள்ளதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் தாரா விட முன்னேற்றமாக ஆங்கத்துவார் தரு. அமைச்சர் பலமுறை அவர்கள் தஞ்சைக்கு அடுத்தபடி இராமநாதபுரம் வட ஆற்காடு டிஸ்ட்ரிக்டில் தான் உற்பத்தி பெருகி இருக்கிறது என்று கூறினார்கள் அதற்குப்பிறகு மதுரைக்கு தேசியமும் தென்னாற்காடு தான் நம்பர் விளைச்சலை காட்டியிருக்கிறது என்று சொல்லுகிறார்கள், உண்மையில் தெற்கு அமைச்சர் மாநிலத்தில் அதிகமான விளைச்சலைப் பெற்றிருக்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : வட ஆற்காடு ஜில்லாவில் இந்த ஆண்டில் பருவ மழை தவறியது. ஆனால் தென்னாற்காடு ஜில்லாவிலும் நல்ல விளைச்சல் ஏற்பட்டிருக்கிறது. கோயம்புத்தூரை எடுத்துக் கொண்டால், அங்கு எவ்வளவு நல்ல சாகுபடி செய்யப்படுகிறது என்பதையும் நாம் பார்க்கவேண்டும். ஆகவே சராசரி கிடைக்கிற விளைச்சலை கணக்கெடுத்துப் பார்த்துதான் இந்தக் கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது.

SRI S. NAGARAJA MONIGAR : May I know how the statistics relating to the production of paddy is collected for issuing prizes?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : This is done on a random sample basis. If the hon. Member is further interested to know how all that is done, I would ask the officers of the Statistics Department to take the hon. Member along with them when they go round and make this assessment.

SRI T. S. RAMASWAMI : May I know the acreage in each district?

THE HON. SRI M. BHAKTAVATSALAM I am sorry I do not have those particulars with me just now.

SRI J. MATHA GOWDER : ஸார், மேஜை மீது வைக்கப்பட்ட குறிப்பிலே நீலகிரியிலே 7,000 டன் விளைச்சல் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அதிகமாக நெல் விளையக்கூடிய சர்க்கார் பூமிகள் இருப்பதால் அந்த பூமிகளை நெல் விளைவிப்பதற்காகக் கொடுக்க அரசாங்கம் முன் வருமா

THE HON SRI. M. BHAKTAVATSALAM : மேலும் நெல் சாகுபடி செய்வதில் கவனம் செலுத்தப்பட்டுத்தான் வருகிறது.



14th March 1961]

*Ex-Servicemen's Co-operative Farming Society (Aranboly)*

* 821 *Q.*—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) what action has been taken against the office bearers of the Ex-Servicemen's Co-operative Farming Society, Aranboly (Kanyakumari district), for the recovery of loans granted by the Government; and

(b) the amount of loan granted and the amount recovered so far?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) There is no Society by name Ex-Servicemen's Co-operative Farming Society at Aranboly in Kanyakumari district. If the hon. Member refers to the Weavers' Society of the same name, details will be furnished.

(b) Does not arise.

*Nylon threads (Supply to fishermen)*

* 822 *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(i) the value of nylon threads supplied to fishermen;

(ii) the centres at which they are supplied; and

(iii) the basis on which they are supplied?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (i) Synthetic fish net twine valued at about Rs. 2.65 lakhs has been supplied to fishermen by the Fisheries Department during the years 1957–58, 1959–60 and up to 31st October 1960 in 1960–61.

(ii) The fishermen obtain their supply from the Fishermen Co-operative Societies and District Federations concerned or direct from the Department.

(iii) That usual subsidy of 33 1/3 per cent of the cost price is allowed on the value of the twine supplied to the Fishermen Co-operative Federations and Societies and groups of fisermen who have been supplied with mechanised boats by the Fisheries Department. The net cost of the material, i.e., the value of the twine sold at 66 2/3 per cent of the cost price, is recoverable in 18 monthly instalments spread over a period of two years, no recovery being effected for three months in a year during the off season.

*Nylon threads (licences for import)*

* 823 *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) the number of licences issued to fishermen during the past two years for importing nylon threads; and

(b) the number granted so far?

செய்யப்படவில்லை. இப்போது கூட்டுறவு ஸ்தாபனங்கள் கொடுப்பன, தனி நபர்களுக்குக் கொடுத்திருந்தோம். கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலமாக இருந்தால் தவறு இருக்காது. ஒன்றிரண்டு தவறுகள் இருந்தாலும் தனிப்பட்ட நபர்களிடத்தில் இருக்கக்கூடிய தவறுகள் இருக்காது என்று இப்போது கூட்டுறவு ஸ்தாபனங்களிடத்தில் கொடுத்திருக்கிறோம். இதனால் தவறுகள் குறைந்தும் இருக்கின்றன.

SRI S. NAGARAJA MONIGAR: இந்த உர விநியோகத்தில் குறைகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. இவைகளை மதிப்பு வாய்ந்த தமிழ் மக்களா செய்கிறார்களா? அல்லது வேறு யாராகிலும் செய்கிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இப்போது விநியோகம் 100-க்கு 70 பங்கு கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலம் நடத்தப்படுகிறது. இதனால் தவறுகள் குறைந்திருக்கின்றன என்றும் சொன்னேன். மற்றும் 30 பங்கு மென்யூர் மிகாமங் பெர்ம் என்ற அவர்களால் விநியோகிக்கப்படுகிறது.

*Drinking water to City from Cauvery*

* 826 Q.—SRI T. S. RAMASWAMI: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) with reference to Question No. 246 answered on 18th August 1960 whether any scheme for the supply of drinking water to the Madras City from Cauvery has been prepared by the Government; and

(b) if so, the details thereof?

THE HON. SRI M. A. MANICKAVELU: (a) The investigation report is awaited.

(b) Does not arise.

SRI T. S. RAMASWAMI: May I know the grade of the officer who is investigating this? The same reply was given on 18th August 1960. May I know the reason why this has taken so long?

THE HON. SRI M. A. MANICKAVELU: A separate division under an Executive Engineer is looking into the matter. I may inform the House that a rough idea was given as to the number of points from which water could be tapped, from as many as five or six points. For instance, if water could be tapped from one point, the cost would come to Rs. 57 crores. From another point the cost would come to Rs. 7 crores. Drawing water from a particular point involves affecting the existing irrigation rights. There is also an idea to supply water to 14 lakhs of people in the way. So the matter requires detailed investigaton and that is being done.

*"Mining" Engineering Diploma*

* 827 Q.—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the "Mining" Engineering Diploma of the Central Polytechnic, Guindy, has been recognised by our Government;



(b) if not, the reasons therefor; and

(c) the names of the approved educational institutions whose Diploma in Mining Engineering has been recognised?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) & (b) The Diploma has been prescribed as a qualification for recruitment to the post of Superintendent, Factory for Crushing Quarts and Limestone, Salem. The question of according general recognition is under the consideration of the Government.

(c) No other Diploma in Mining Engineering has been recognized.

*Block Development Areas and Fisheries Block (Ramanathapuram)*

* 828 Q.—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI K. VINAYAKAM): Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there are Block Development areas in Ramanathapuram district; and

(b) whether there are Fisheries Blocks in Ramanathapuram?

THE HON. SRI C. SUBRAMANIAM: (a) Yes, Sir.

(b) No, Sir.

*Thiruvattar and Alagiamandapam blocks (formation)*

* 829 Q.—SRI T. T. DANIEL: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) when will the Thiruvattar and Alagiamandapam blocks be formed in the Kanyakumari district; and

(b) the reason for the delay?

THE HON. SRI C. SUBRAMANIAM: (a) & (b) There is no block called Alagiamandapam in the Kanyakumari ditrict. Of the nine blocks into which the district has been delimited seven have been taken up already under the Community Development Programme. The two blocks remaining to be taken up are Thuckalay and Thiruvattar. There has been no avoidable delay in taking up these blocks. According to the present policy of Government, these blocks will be taken up before October 1962 (for pre-extension work).

*Working of the Co-operative Societies (foreign countries)*

* 830 Q.—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the number of persons sent or to be sent from the Co-operative Department for studying the working of the Co-operative Societies in foreign countries;

(b) to which foreign countries; and

(c) the basis on which they are selected?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) Two officers of the Co-operative Department were sent to foreign countries for training in Co-operation.

(b) One officer was sent to Canada and the other to U.S.A.

(c) The officers are selected on the basis of qualifications prescribed by the Government of India.

SRI T. S. RAMASWAMI: May I know, Sir, why United Kingdom and Canada were preferred as against Denmark and Sweden?

THE HON. SRI R. VENKATARAMAN: These are the countries which offered facilities and invited candidates.

SRI N. MARUDACHALAM; அப்படி அனுப்பப்பட்டவர்களில் தாழ்த்தப்பட்டவர்கள் எத்தனை பேர்?

THE HON. SRI R. VENKATARAMAN; அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

MR. SPEAKER: Questions are over.

NOTE.—An asterisk(*) at the commencement of a speech indicates revision by the Member.

## II.—LEAVE OF ABSENCE TO A MEMBER

MR. SPEAKER: I have received a notice of motion from Sri P. G. Karuthiruman. He may now move it.

SRI P. G. KARUTHIRUMAN: Sir, I move—

'That under Rule 11 of the Madras Legislative Assembly Rules, leave of absence be granted by this House to Sri A. Y. S. Parisutha Nadar, till the end of June 1961, from the date of his absence.'

The motion was duly seconded.

The motion was put and carried.

## III.-VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1961-62—cont.

### DEMAND XXV—HARIJAN UPLIFT.

* THE HON. SRI P. KAKKAN: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 3,05,73,000 under Demand XXV—Harijan Uplift.'

MR. SPEAKER: Motion moved—

'That the Government be granted a sum not exceeding Rs. 3,05,73,000 under Demand XXV—Harijan Uplift.'



177. *Notifications issued with G.O. No. 83, Public (General-M) dated 20th January 1961 regarding introduction of Tamil in Government offices in certain departments up to the district level. [Laid on the Table of the House under section 6 of the Madras Official Language Act, 1956 (Madras Act XXXIX of 1956).]*

*B.—Reports, Notifications and other papers.*

THE HON. SRI R. VENKATARAMAN: ஒரு ஷுகர் பாக்டரியை வைக்கும் முன்பு அதற்கு ஏறக்குறைய 4,000 ஏக்கர் நிலம் வேண்டியிருக்கிறது. இருக்கிறது என்று சொன்னால் அதைப் பற்றி பரிசீலனை செய்ய மத்திய சர்க்காரிலிருந்து ஷுகர் எக்ஸ்பெர்ட் என்று ஒருவர் வருகிறார். இதையெல்லாம் பார்த்துத்தான் கொடுக்கப்படுகிறது. மக்களிடையே ஒரு தவறான பீதி இருப்பதைத் தவிர்க்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். நிலம் விஸ்தாரமாக இருந்தால்தான் அதிக உற்பத்தி செய்ய முடியுமென்பதல்ல—இண்டென்ஸிவ் கல்ட்டிவேஷன் மூலமாகக் கூட அதிக உற்பத்தி செய்ய முடியும்.

SRI V. K. KOTHANDARAMAN: கரும்பு சாகுபடி அதிகப்படியாக இருக்கக்கூடிய சாத்தனூர் தண்ணீர் பாயக்கூடிய திருவண்ணாமலையில் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை ஆரம்பிக்க வேண்டுமென்று 5 லட்சம் ரூபாய்க்கு ஷேர்கள் சேர்க்கப்பட்டிருப்பது கனம் அமைச்சருக்குத் தெரியுமா? அங்கே ஒரு சர்க்கரை ஆலையை ஏற்படுத்த முயற்சி செய்யப்படுமா?

THE HON. SRI R. VENKATARAMAN: திருவண்ணாமலை மாத்திரமல்ல, எத்தனையோ ஊர்களில் தயாராக இருக்கிறார்கள். ஆனால் நமக்கு எவ்வளவு கிடைக்குமோ அவ்வளவுக்குத்தான் ஏற்படுத்த முடியும்.

SRI N. R. THIAGARAJAN: நமது ராஜ்யத்திற்கு எவ்வளவு சர்க்கரை தேவை இருக்கிறது? எவ்வளவு உற்பத்தி செய்யப் போகிறார்கள்? மிச்சம் உள்ளதை என்ன செய்யலாம் என்று நினைக்கிறார்கள்? மத்திய அமைச்சர் ஒருவர் நமது நாட்டிலிருந்து சர்க்கரையை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் கோடிக்கணக்காக நஷ்டம் ஏற்படுகிறது என்று தெரிவித்திருக்கிறாரே? நமது ராஜ்யத்திற்கு ஏற்படக்கூடிய நஷ்டத்தை எப்படி சரிக்கட்டப்போகிறார்கள்?

THE HON. SRI R. VENKATARAMAN: அக்ரிகல்ச்சர் டிமாண்டின் போது இது பற்றி விரிவாக விவாதம் நடந்து அதற்கு விவசாய அமைச்சர் அவர்கள்கூட பதில் சொல்லியிருக்கிறார்.

SRI C. NATARAJAN: அமைச்சர் அவர்கள் 4,000 ஏக்கர் கரும்பு சாகுபடி இருந்தால் அந்த இடத்தில் சர்க்கரை ஆலை வைக்க முடியும் என்று சொன்னார். சர்க்கரை ஆலையை ஏற்படுத்துவதற்கு வேண்டிய இடம் எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN: 100 ஏக்கர் இருந்தால் போதும்.

SRI S. M. ANNAMALAI : ஸார், திருவண்ணாமலையில் சர்க்கரை ஆலை ஏற்படுத்துவதைப் பற்றிச் சொன்னார்கள். திருவண்ணாமலையில் சர்க்கரை ஆலை ஏற்படுத்தவேண்டுமென்று அங்குள்ள மக்கள் சொன்னார்கள். சர்க்காரும் ஷேர் சேருங்கள் என்று சொன்னார்கள். அதன் பிரகாரம் ஷேர் சேர்ந்தார்கள். அப்படி இருந்தும் ஏன் இது கைவிடப்பட்டிருக்கிறது?

THE HON. SRI R. VENKATARAMAN : இதெல்லாம் கைவிடப் படவில்லை. ஒவ்வொரு சமயத்திலும் அகில இந்திய ரீதியில் சர்க்கரை ஆலைகள் கொடுக்கப்படுகிறது. நமது தேவையை உத் தேசித்து நமக்கு எத்தனை கிடைக்கும் என்று பார்க்கிறோம். பெரிசு செய்கிறபோது ப்ரையாரிட்டி பிரகாரம் செய்கிறோம். இந்த ப்ரையாரிட்டி பின்னால்தான் வரும்.

SRI A. VEDARATHNAM : தம் மாநிலத்தில் இதற்கு முன் லைசென்ஸ் வழங்கப்பட்ட எத்தனை ஆலைகள் வேலை துவங்காமல் இருக்கின்றன? லைசென்ஸ் பெற்றும் துவங்காமல் இருக்கக் காரணம் என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : நான் இப்போது சொன்ன 8 ஆலைகளுக்கும் லைசென்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது, ஆனால் இன்னும் வேலை துவங்கவில்லை.

SRI S. NAGARAJA MONIGAR : நமது ராஜ்யத்தில் சர்க்கரை ஆலை ஏற்கெனவே ஏற்பட்டது போக இப்போது ஏற்படுத்த பல பேர்கள் முன் வருகிறார்கள். லாபம் அதிகமாக இருக்கிறது என்று ஆரம்பிக்க முன் வருகிறார்களா? அல்லது தேசபக்தி காரணமாகவா? லாபம் அதிகமாக வருகிறது என்றால் சர்க்கரையின் விலையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்போது நெல் உற்பத்தி செய்வதைவிட கரும்பு உற்பத்தி செய்தால் அதிகப்படி லாபம் கிடைக்கிறது. அதன் காரணமாக நிறைய உற்பத்தியை செய்ய முன் வருகிறார்கள்.

SRIMATHI KAMALAMBUJA AMMAL : கோவாப்பரேட்டிவ் சொஸைட்டி மூலமாக ஆரம்பிக்கப்படும் ஆலைகளுக்கு உதவி யந்திரங்களாகக் கொடுக்கப்படுகிறதா? அல்லது ரொக்கமாகக் கொடுக்கப்படுகிறதா?

THE HON. SRI R. VENKATARAMAN : நாம் ரொக்கமாகத் தான் கொடுக்கிறோம்—யந்திரங்கள் வாங்குவதற்காகத்தான் கொடுக்கிறோம். அதை வாங்கி வேறு எதற்கும் உபயோகப்படுத்தி விட மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

*Sugar factory workers*

* 852 Q.—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the minimum wage, if any, fixed by the Central Wage Board for the workers in sugar factory; and



(b) how many workers are working in the sugar factories in the State?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) The Wage Board has recommended a minimum wage of Rs. 81 consisting of Rs. 60 basic wage and a dearness allowance of Rs. 21.

(b) Four thousand two hundred and fifty five workers are employed in the Sugar Factories in this State.

SRI T. T. DANIEL : May I know whether this minimum wage is in force in Madras State?

THE HON. SRI R. VENKATARAMAN : The Commissioner of Labour in taking steps to implement the recommendation.

SRI T. KARIA GOUNDER : மத்திய சர்க்கார் இந்த சர்க்கரை ஆலைகளில் வேலை செய்கின்ற ஆட்களுக்கு கூலி நிர்ணயம் செய்திருப்பதை இதுவரை சர்க்கரை ஆலைகளில் அமுலுக்கு கொண்டுவரவில்லை. இதன்மேல் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : ரிப்போர்ட் இப்போது தான் வந்திருக்கிறது. அதைச் சர்க்கார் ஏற்றுக்கொண்டு சில நாட்கள்கூட ஆகவில்லை.

*Price of sugar*

* 853 Q.—SRI A. A. RASHEED : } Will the Hon. the
SRI S. M. ANNAMALAI : }

Minister for Home be pleased to state whether the Government have recommended to the Union Government to reduce the price of sugar of inferior quality?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, sir.

SRI A. A. RASHEED : Sir, is the Hon. Minister aware of the fact that the sugar now supplied is yellowish in tinge and contains more impurities? May I know, Sir, why the public should be asked to pay for the impurities in sugar?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There are impurities in the sugar. If they are not interested in purchasing that sugar referred to by the hon. Member they are not required to purchase it. Whatever sugar is available, it is distributed for sale.

SRI S. M. ANNAMALAI : ஸார், சர்க்கரையின் விலையைக் குறைப்பதற்கு சர்க்கார் உத்தேசித்திருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்போது சர்க்கரை விலையை நிர்ணயிப்பதற்கு உத்தேசமில்லை. அதற்கு ஸ்டாசுடரி பிரைஸ் கண்ட்ரோலும் கிடையாது.

[15th March 1961

### *Agricultural Income-tax*

* 854 *Q*.—SRI T. S. RAMASWAMI: Will the Hon. the Minister for Revenue be pleased to state the amount of Agricultural Income-tax demanded and collected during 1958-59 district-war?

THE HON. SRI M. A. MANICKAVELU: A statement [a] showing the particulars is placed on the table of the House.

SRI T. S. RAMASWAMI: May I know, Sir, why in Kanyakumari district which has a lesser area of paddy fields and which consists of small land-holders, the Agricultural Income-Tax recovered is in far excess of that of Thanjavur district which has got nearly 20 times the area of lands than that of Kanyakumari district? It is seen from the statement placed on the table of the House that the demand is nearly Rs. 7,21,468·63 from Kanyakumari district and with regard to Thanjavur it shows only Rs. 65,859·72. May I know the reason why the agricultural income-tax is so high in Kanyakumari district?

THE HON. SRI M. A. MANICKAVELU: There is no plantation in Thanjavur district. In Kanyakumari district, the income includes the income-tax on plantations also.

* 855 *Q*.—SRI T. S. RAMASWAMI: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the amount of Agricultural Income-tax realized from the Kanyakumari district in the years 1956–57 and 1957–58;

(*b*) whether the Government have received any complaints that the assessment during the last two years are exorbitant and arbitrary; and

(*c*) if so, the action taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) The attention of the Honourable Member is invited to the Administration Reports for the years 1956–57 and 1957–58.

(*b*) No, sir.

(*c*) Does not arise.

SRI T. S. RAMASWAMI: May I know, Sir, why the tax collected in 1957–58 and 1958–59 has increased much beyond that of the previous years?

THE HON. SRI M. A. MANICKAVELU: It has increased. That shows the progress made by the district.

SRI V. SUBBIAH: ஸார், எல்லா ஜில்லாக்களிலும் விவசாய வருமான வரிக்குத் தக்கபடி கலக்ஷனது குறைவாக இருக்கிறது. காம்பவுண்ட் டாக்சுக்கு எத்தனை பேர் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள்?

a Printed as Appendix III on page 578 infra.



15th March 1961]

THE HON. SRI M. A. MANICKAVELU: காம்பவுண்ட் டாக்சில் எத்தனை பேர் என்பதற்கு தனிக் கேள்வி இல்லாமல் பதில் சொல்வதற்கு இல்லை. ஏன் குறைவாக இருக்கிறது என்பதற்கு முன்னாலேயே பதில் சொன்னேன். அதாவது இந்தச் சட்டத்தைக் கொண்டு மற்ற நெல், சோளம் போன்றவைகளுக்கும் வரி விதிக்கலாம் என்று 1958-ல் தான் பாஸ் ஆயிற்று. 1959 பெப்ரவரி, மார்ச்சிலே தான் அமுலுக்கு வந்திருக்கிறது. அதனாலே தான்.

SRI N. R. THIAGARAJAN: இதில் மலைத் தோட்ட விவசாய வருமான வரியும் சேர்க்கப்பட்டிருக்கிறதா? மேஜைமேல் வைக்கப்பட்டுள்ள அறிக்கையைப் பார்த்தால், நீலகிரி, கோயம்முத்தூர், மதுரை போன்ற இடங்களில்தான் வருமானம் அதிகமாக இருக்கிறது. மற்ற இடங்களில் அவ்வளவு அதிகமாக இல்லை. ஆகவே மலைத் தோட்ட வருமானம் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU: மலை வருமானம் என்று சொல்வது பிளான்டேஷன் பற்றிச் சொல்கிறார் என்று கருதுகிறேன், அதையும்தான் சேர்த்திருக்கிறார்கள். ஆகவே அந்தப் பிராந்தியங்களில் அதிகமான வருமானம் வந்திருக்கிறது. அதோடு விவசாய வருமான வரியும் சேர்க்கப்பட்டிருக்கிறது ஆனால் மலை வருமானம்தான் ஜாஸ்தி.

SRI T. S. RAMASWAMI: May I know, Sir, whether the Government is aware of the fact that income derived from the first rate land and the fourth rate land assessed on equal terms and so, will the Government look into it?

THE HON. SRI M. A. MANICKAVELU: Tax that is prevalent in Kanyakumari district is due to their own Act, i.e., Travancore-Cochin Income-tax Act.

SRI S. NAGARAJA MONIGAR: மற்ற ஜில்லாக்களைப் பார்க்கின்றபோது தென் ஆற்காடு ஜில்லாவில் மட்டும் இந்த டிமாண்டில் வசூல் குறைவாக இருக்கிறது. வசூலே இல்லையென்றுகூட சொல்லிவிடலாம். அதற்குக் காரணம் என்ன?

THE HON. SRI M. A. MANICKAVELU: இப்போதுதான் பொதுவாகக் காரணம் சொன்னேன். 1959-லே தான் இந்தச் சட்டம் அமுலுக்கு வந்து, இப்போது வேலை ஜரூராக நடந்து வருகிறது. அந்த வகையிலே கொஞ்சம் தாமதமாகி இருக்கிறது.

### *Instruction on 'sex'*

* 856 *Q*.—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to impart instruction on 'sex' to boys and girls of secondary schools?

THE HON. SRI C. SUBRAMANIAM: No, sir.

[15th March 1961

### *Industries (Guindy)*

MR. SPEAKER : As the hon. Member who gave notice of question No. 857 is not in his seat, the question and answer will be printed in the proceedings.

*857 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state whether it is a fact that the following industries situated in Government Estate, Guindy had to curtail production for want of raw materials—

(i) Easwaran & Sons;

(ii) Indian Cables and Wire Industries;

(iii) Resa Company; and

(iv) A. C. Engineering?

THE HON. SRI R. VENKATARAMAN : (i) to (iv) No representation about the shortage of raw materials has been received from any of these industries.

### *Finance Minister's Foreign Tour*

*858 Q.—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the Finance Minister has submitted any report on his foreign tour to the Cabinet; and

(b) if so, the salient features thereof?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) No.

(b) Does not arise.

SRI N. R. THIAGARAJAN : கனம் நிதி அமைச்சர் அவர்கள் 'ஆனந்த விகட'-னில் தமது வெளிநாட்டுச் சுற்றுப் பிரயாணத்தைப் பற்றி தொடர்ந்து எழுதிக்கொண்டு வருகிருர். அதைப் புஸ்தகமாக அச்சிட்டு இந்தச் சபையின் அங்கத்தினர்களுக்கு கொடுப்பார்களா?

MR. SPEAKER : இது ஒரு சஜெஷன் இல்லையா? கேள்விக்கும், இதற்கும் சம்பந்தமில்லை.

### *Roadside Romeos*

*859 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state whether the Government have received any complaints recently from the parents against 'Roadside Romeos' insulting behaviour against college and school girls in the city of Madras?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No. Sir.

SRI A. A. RASHEED : Sir, has the attention of the Government been drawn to the complaints recently made by the parents against 'Roadside Romeos' and their insulting behaviour which



15th March 1961]

appeared in the English Dailies and if so what action the Government propose to take?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have no information, Sir. If the hon. Member, Sri A. A. Rasheed, is interested and if he had any personal experience, he may convey the same to me. (Laughter.)

### *Pick-pockets (in buses)*

*860 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether it is a fact that pick-pockets in Madras city are more active in running buses;

(b) the steps taken to stop this; and

(c) the number of pick-pocketing committed in the running buses in the last six months?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir.

(b) Policemen in uniform and in mufti are deputed for spotting pick-pockets. Rewards are granted to private individuals and drivers and conductors of buses for good work in spotting pick-pockets and in helping to apprehend them. There has been a sustained drive during the past three years towards preventive work and this has had salutary effect in bringing down the number of cases under all heads of this type of crime.

(c) 43.

SRI A. A. RASHEED : Sir, may I know whether the pick-pocketing is due to the carelessness of the travelling public or is it due to the cleverness of the pick-pockets?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I may tell the hon. Member that there has been a sustained drive during the past three years towards the preventive work and this has had salutary effect in bringing down the number of cases under all heads of crime. The total number of pocket picking offences has gradually decreased from 246 in 1957 and 209 in 1958 to 149 in 1959 and 141 in 1960. The percentage of detection has increased from 25·2 per cent in 1957 to 45.4 per cent in 1960.

SRI A. GOVINDASAMI : பஸ்களிலே 'திருடர்கள் ஜாக்கிரதை' என்று அறிவிக்கப்பட்டிருப்பது, திருடர்களுக்குச் சாதகமாக இருக்கிறது என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவரவர்கள் திறமைக்கு ஏற்றவாறு எந்த நல்ல விஷயத்தையும் உபயோகித்துக் கொள்கிருர்கள். (சிரிப்பு.)

SRI S. NAGARAJA MONIGAR : Sir, may I know how many of the culprits are new entrants to the field?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not have any analysis with me.

SRI S. M. ANNAMALAI : ஸார், கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய புள்ளிவிவரங்களின்படி குற்றங்கள் குறைந்து வருகிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால் சென்னை நகரில் குற்றங்கள் அதிகமாகிக் கொண்டுவருகிறது என்று சென்னை நகர போலீஸ் கமிஷனர் அறிக்கை விட்டிருக்கிறார். அது உண்மையா அல்லது எது உண்மை?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : போலீஸ் கமிஷனர் குற்றங்களைக் குறைக்கவேண்டுமென்பதற்காக கொடுக்கும் அறிக்கை அது. அதை எடுத்துக்கொண்டு ஒப்பிட்டுச் சொல்வதில் பயனில்லை.

SRI A. A. RASHEED : Sir, may I know whether the Government have any information regarding the amount lost by the public due to the pick-pocketing?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I am sorry, Sir, I do not have that information.

MR. SPEAKER : Questions are over.

[Note.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—ANNOUNCEMENT *RE*. NOMINATION OF MEMBERS TO THE COMMITTEE ON SUBORDINATE LEGISLATION FOR 1961-62.

MR. SPEAKER : I have to announce to the House that under Rule 201 (1) of the Madras Legislative Assembly Rules, I have renominated the following members to serve on the Committee on Subordinate Legislation for the year 1961–62 :—

1 Sri T. SAMPATH.
2 Sri S. LAZAR.
3 Sri P. RAMACHANDRAN.
4 Sri V. S. MANICKASUNDARAM.
5 Srimathi A. SUARES.
6 Sri K. VINAYAKAM.
7 Sri M. P. SUBRAMANIAM.
8 Sri Sowdi S. SUNDARA BHARATHI.
9 Sri V. SANKARAN.
10 Sri R. SRINIVASA IYER.

Under Rule 202 of the Madras Legislative Assembly Rules, I nominate Sri K. Vinayakam to be the Chairman of the Committee.



## III.—CALLING ATTENTION TO THE FAILURE OF GOVERNMENT TO GIVE LEASE REMISSION TO THE TENANTS OF NANNILAM TALUK, THANJAVUR DISTRICT.

MR. SPEAKER : I have received notice of a motion from Sri M. C. Muthukumaraswamy calling attention to a matter of urgent public importance under rule 41.

SRI M. C. MUTHUKUMARASWAMY : கனம் சபாநாயகர் அவர்களே, நான் கொண்டுவந்திருக்கும் இந்த பிரேரபணைக்கு தயவுசெய்து கனம் அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

I wish to call the attention of the Hon. the Minister for Revenue to an urgent matter of public importance viz., failure of the Government to give lease remission to the tenants in Nannilam taluk of Thanjavur district, who were affected by the recent heavy rains in November 1960.

MR. SPEAKER : அவ்வளவுதான். கனம் அங்கத்தினர் பேசுவதற்கு இல்லை. மந்திரி அவர்கள் இப்பொழுது பதில் அளிப்பார்கள்.

* THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, grant of lease remission to the tenants is not contemplated under any of the enactments except in respect of the cases coming under section 5 (2) of the Fair Rent Act. According to this section, whenever adverse seasonal conditions result in the reduction of the gross produce from any particular crop to the extent of more than 25 per cent, the landowner shall be bound to remit a proportionate part of the fair rent due to him from his cultivating tenant in respect of that land for that period. The section also provides that before admitting or inquiring into an application made by a cultivating tenant for remission of fair rent under this provision, the Rent Court may impose such conditions as it considers reasonable in the circumstances of the case including conditions as to deposit of admitted rent which has become due. It is therefore up to the tenants to move the Rent Court having jurisdiction over the area for grant of remission if they anticipate a failure of crop or low yield from their leased land. With reference to section 5 (2) of the Fair Rent Act, 13 applications have been filed with the Rent Court, Tiruvarur. These relate to Nannilam taluk and the extent involved in the above applications in 60·94 acres. All these applications are under enquiry by the Rent Court and it is for the Rent Court either to allow or dismiss the applications on merits. Hnce there is no question of failure on the part of the Government to give lease remissions to the tenants.

## IV.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1961-62.

### (1) DEMAND XXIV—LABOUR INCLUDING FACTORIES.

* THE HON. SRI R. VENKATARAMAN : Sir on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 35,79, 800 under Demand XXIV—Labour including Factories."

[Sri R. Venkataraman] [15th March 1961

கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மான்யக் கோரிக்கையைப் பற்றி முதலிலே ஓரிரண்டு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த மாநிலத்தில் இது சம்பந்தமான இலாகா நடத்திவருகிற விவரங்கள் எல்லாவற்றையும் புத்தகரூபமாக அச்சிட்டு அங்கத் தினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இதில் முக்கியமான சில விஷயங்களை அங்கத்தினர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்ப காலத்தில் நம் முடைய ராஜ்யத்தில் 4,200 பாக்டரிகள் இருந்தன. இன்றைக்கு 5,884 பாக்டரிகள் இருக்கின்றன. நாம் தொழில் துறையிலே வளர்ச்சி பெற்றிருக்கிறோம் என்பதற்கு அறிகுறியாக 1,600 பாக்டரிகளுக்கு மேலே இன்றைக்கு நம்முடைய ராஜ்யத்தில் ஏற் படுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன். அதில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுடைய எண் ணிக்கையை பார்ப்பீர்களேயானால், அவ்வளவு அதிகமாக காணப் படாது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்ப காலத்தில் 3 லட்சமாக இருந்தது, இன்றைக்கு 322,449-ஆக இருக்கிறது. இதனால் அதிகமாக வேலை வாய்ப்பு கிடைக்கவில்லை என்று நினைப் பது தவறு. ஏனென்றால் ஏற்கனவே பாக்டரி சட்டத்தின்கீழ் வந்த சில தொழிலாளர்கள் இப்பொழுது பாக்டரி சட்டத்தின்கீழ் வராமல், வேறு சட்டங்களின்கீழ் அவர்கள் கொண்டுவரப்பட் டிருக்கிறார்கள். உதாரணமாக, பீடித் தொழிலாளர்கள், ஹோட் டல் தொழிலாளர்கள் போன்றவர்களெல்லாம் இதற்கு முன்னால் பாக்டரி சட்டத்தின்கீழ் இருந்தவர்கள், தனிச் சட்டங்கள் இயற் றப்பட்டதன் காரணமாக பாக்டரி சட்டத்தின்கீழ் வரவில்லை. அதனால்தான் தொழிலாளர்களுடைய எண்ணிக்கை சற்று குறை வாகக் காணப்படுகிறது. ஆகவே 5,884 பாக்டரிகள் இருந்தாலும், தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது என்று யாரும் நினைக்கத் தேவையில்லை.

அடுத்தபடியாக, நம்முடைய பாக்டரி இன்ஸ்பெக்ஷனை எடுத்துக்கொண்டால், சர்வதேச தொழிலாளர்கள் சம்மேளனத் தில் தெரிவிக்கப்பட்டிருக்கிற ஒரு பெரிய குறிக்கோள், லட்சியம் 150 பாக்டரிகளை ஒரு உத்தியோகஸ்தர் இன்ஸ்பெக்ட் செய்ய வேண்டுமென்பது. அந்த அளவுக்குத்தான் நம்முடைய ராஜ்யத் தில் கூட பாக்டரி இன்ஸ்பெக்ஷனை நாம் அமைத்தோம். அதிகமாக பாக்டரிகள் ஏற்பட்டதன் காரணமாக, இன்றைக்கு ஒரு இன்ஸ்பெக்டர் 168 பாக்டரிகளை இன்ஸ்பெக்ட் செய்யுமாறு ஏற் பாடு செய்யப்பட்டிருக்கிறது. நூற்று அறுபத்தெட்டு பாக்டரிகளை ஒரு பாக்டரி இன்ஸ்பெக்டர் இன்ஸ்பெக்ட் செய்வது என்று சொல்லுவது இந்தியாவிலேயே நம்முடைய ராஜ்யத்தில்தான் அந்த அளவுக்கு ஐ.எல்.ஓ. ஸ்டாண்டர்டுக்கு ஒத்த வகையிலே செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.



15th March 1961] [Sri R. Venkataraman]

மேலும், கடந்த ஆண்டில் நாம் அதிகமாக விபத்துக்கள் நடக் கின்றன என்பதைப்பற்றி கவலையோடு பேசினோம். அதற்கான தீவிரமான முயற்சிகள் எடுத்துக்கொண்டதன் காரணமாக 1959-ல் இறந்தவர்களின் எண்ணிக்கை 'பேடல் ஆக்ஸிடென்ட்ஸ்' 32-ஆக இருந்தது. 1960-ல் 17-ஆகக் குறைந்திருக்கிறது. அதேபோல 'நான்-பேடல் ஆக்ஸிடென்ட்ஸ்' சாதாரணமாக காயம் போன்ற வைகள் 18,000-ஆக இருந்தது, இப்பொழுது 16,000-ஆகக் குறைந் திருக்கிறது. அதிகமாக ஆக்ஸிடென்ட்ஸ் ஏற்படுவதற்கு முக்கிய மான காரணம் தொழில் வேகமாக வளர்கின்றபொழுது சரியான பயிற்சி இல்லாதவர்களை அங்கு வேலைக்கு வைக்கின்ற காரணத்தினுல்தான். அதனுல்தான் ஓரளவு பாக்டரி ஆக்ஸிடென்ட்ஸ் அதிகமாக இருக்கிறது.

அடுத்தபடியாக, ஷாப்களை எடுத்துக்கொண்டால் அதுபோலத் தான் நம்முடைய ராஜ்யத்தில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்ப காலத்தில் எவ்வளவு இருந்தன, இப்பொழுது எவ்வளவு இருக்கிறது என்பதை நாம் எடுத்துக்காட்டியிருக்கிறோம். பிளான் டேஷன் சம்பந்தமாகவும் அதற்கு உகந்த புள்ளிவிவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

நம்முடைய ராஜ்யத்தில் வேலை வாய்ப்பு வசதிகள் எவ்வாறு இருந்திருக்கிறது என்பதை நாம் சற்று ஆராய்ந்து பார்க்கலாம். 1958-ம் வருஷத்தில் நம்முடைய வேலை வாங்கிக்கொடுக்கும் ஸ்தாபனம் மூலமாக 26,700 பேர்களுக்கு வேலை வாங்கிக் கொடுக் கப்பட்டிருக்கிறது. 1960-ம் வருஷத்தில் நம்முடைய ராஜ்யத்தில் 34,778 பேர்களுக்கு வேலை வாய்ப்புகள் அந்த ஸ்தாபனங்களின் மூலமாக அளிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நம்முடைய ராஜ்யத்தில் பப்ளிக் செக்டார் மூலமாக வேலை வாய்ப்புகள் கிடைத்ததற்கு சில புள்ளிவிவரங்கள் கொடுக்க விரும்புகிறேன். 1956-ம் வருஷத்தில் நம்முடைய ராஜ்யத்தில் 420,000 பேர்கள் பப்ளிக் செக்டாரில் வேலை செய்து கொண்டிருந்தார்கள். இன்றைக்கு 1960-ம் ஆண்டு ஜூன் 30-ம் தேதி வரையில் கணக்கெடுத்துப் பார்த்ததில் 5,77,000 பேர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைத்திருக்கின்றன பப்ளிக் செக்டாரைப் பொறுத்த அளவில் மாத்திரம். பிரைவேட் செக்டாரைப் பற்றி நமக்கு கணக்கு கிடையாது. பிரைவேட் செக்டார் சம்பந்தமாக கணக்குகள் தயாரிக்கவேண்டும் என்பதற்குத்தான் இப்பொழுது நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம். அந்த விவரங்களையெல்லாம் நாம் தயாரிக்க முயற்சி எடுத்துக்கொண்டிருப்பது பற்றி நோட் டிலே குறிப்பிட்டிருக்கிறேன். பொதுவாக நம்முடைய ராஜ்யத் தைப் பொறுத்த அளவிலே பப்ளிக் செக்டாரில் ஒரு பங்கு இருந் தால், பிரைவேட் செக்டாரில் குறைந்தபட்சம் நான்கில் ஒரு பங்கு அதிகமாக வேலை கிடைத்திருப்பதாக நமக்குச் சொல்லப்பட்டிருக் கிறது. அந்தவிதமாக பார்க்கிறபொழுது நம்முடைய ராஜ்யத்தில் சற்றேறக்குறைய 7.5 லட்சம் பேர்களுக்கு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் வேலை வாய்ப்பு வசதிகள் கிடைத் திருக்கும் என்று எதிர்பார்க்கிறோம். இது விவசாயத்தை நீக்கிச்

[Sri R. Venkataraman] [15th March 1961

சொல்லுவது. என்னென்றால் விவசாயத்தில் அதிகமாக வேலை வாய்ப்புகள் கிடைப்பதை நாம் அதிகமாக விரும்பவில்லை. விவசாயத்தில் இப்பொழுதே அதிகமாக வேலை செய்துகொண்டிருக்கிறார்கள், அவர்களுக்கு மாற்று வேலை கொடுக்கவேண்டும் என்று நினைக்கிறபொழுது, அதே நேரத்தில் விவசாயத்தில் அதிகமான பேர்கள் வேலை செய்திருக்கிறார்கள் என்று சொன்னால் அது ஒரு பெரிய முற்போக்காக இருக்காது என்பதற்காக அதைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் இதர இடங்களில் இருக்கக்கூடிய முன்னேற்றத்தை மாத்திரம் குறிப்பிட்டேன்.

சாதாரணமாக தொழில் அமைதி நல்ல முறையில் இருக்கிறது என்பதை தெரிந்துகொள்ள எத்தனை வேலை நிறுத்தங்கள் நடந்திருக்கின்றன, அதனால் எத்தனை வேலை நாட்கள் இழக்கப்பட்டிருக்கின்றன என்பதற்கு புள்ளி விவரங்கள் இருக்கின்றன. அதைப் பார்க்கும்பொழுது நம்முடைய ராஜ்யத்தில் 'மான் டேஸ் லாஸ்டு', அதாவது வேலை நாட்கள் நாம் இழந்தது வெகுவாக குறைவாகத்தான் இருக்கிறது. ஏழு லட்சத்து அறுபத்தைந்தாயிரம் நாட்கள் என்று இருக்கிறது. இந்தப் புள்ளி விவரத்திலிருந்து தொழிற்சங்கங்களின் அனுமதி இல்லாமல் திடீர் திடீரென்று சிறிய சிறிய வேலை நிறுத்தங்கள் நடப்பது தெரியவரும். மொத்தம் நம்முடைய ராஜ்யத்தில் நடந்த ஸ்டிரைக் 331, கதவடைப்புகள் 13. 'நெகோஸியேஷன்' செய்து வாபஸ் பெற்றது 26. எந்தவிதமான 'நெகோஸியேஷனும்' இல்லாமல் தாங்களாகவே வேலைக்கு 'ரெஸ்யூம்' செய்தது 215. இது எதை எடுத்துக்காட்டுகிறது என்றால் தொழிற்சங்கங்களின் அனுமதி இல்லாமல் திடீரென்று சிறிய காரணத்திற்காக வேலை நிறுத்தம் செய்ததால், கடைசியாக மீண்டும் தாங்களாகவே வேலைக்குத் திரும்பி வேலை தொடங்கிவிடுகிறார்கள் என்பதைத் தான். இதைக் குறைப்பதற்கு நாம் எல்லோரும் முயற்சி செய்ய வேண்டும். முக்கியமாக தொழிற்சங்கத் தலைவர்கள் இதற்கு ஒரு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். முன்னூற்று முப்பத்தொன்று ஸ்டிரைக்குகளில், அட்ஜூடிகேஷன் மூலம் தீர்க்கப்பட்டது ஒன்றே ஒன்றுதான். மற்றவைகளெல்லாம் நல்ல முறையில் நாம் கன்ஸிலியேஷன் ஆபீஸர் மூலமாக நேரடியான 'நெகோஸியேஷன்' மூலமாகத் தீர்க்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் பெருமையோடு கூறிக்கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக, வீடுகள் கட்டுவதைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய ராஜ்யத்தில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கிய பணம் ஏறக்குறைய ரூ. 70 லட்சம். 1960-ம் வருஷம் டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரையில் ரூ. 77,19,000 செலவழித்திருக்கிறோம். ஆயிரத்துதொண்ணூற்றெட்டு வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன.
9-30 a.m. இன்னும் 170 வீடுகளை பல இடங்களில் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு மேல் நம்முடைய ராஜ்யத்திலே



15th March 1961] [Sri R. Venkataraman]

முதலாளிகள் தனியாக 960 வீடுகள் கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்து சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. இதற்காகும் செலவு **33** லட்சம் ரூபாய் என்று கொடுத்திருக்கிறோம். பொதுவாக நம்முடைய ராஜ்யத்திலே தொழில் அமைதி நிலவி வந்திருப்பதையும், அதற்குக் காரணமாகவுள்ள முதலாளிகளும், தொழிலாளிகளும் பாராட்டுவதற்குரியவர்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுடைய ஒத்துழைப்பின் காரணமாகத்தான் நம்முடைய ராஜ்யத்திலே சிறந்த முறையில் தொழில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொண்டு, இந்த மான்யக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER: Motion moved—

'That the Government be granted a sum not exceeding Rs. 35,79,800 under Demand XXIV—Labour including Factories.'

கனம் அங்கத்தினர் பக்கிரிசாமி பிள்ளை அவர்கள் தன்னுடைய வெட்டுப் பிரேரபணையை பிரேரேபிப்பார் என்று அறிகிறேன். அதைப் பிரேரேபிக்குமாறு அவரைக் கேட்டுக்கொள்கிறேன்.

SRI S. PAKKIRISAMI PILLAI: Mr. Speaker, Sir. I move the cut motion standing in my name, viz.,—

'That the allotment of Rs. 35,79,800 under Demand XXIV —Labour including Factories be reduced by Rs. 100.'

MR. SPEAKER: Cut Motion moved—

'That the allotment of Rs. 35,79,800 under Demand XXIV —Labour including Factories be reduced by Rs. 100.'

Now two hours are available for this Demand. May I know how much time the Hon. Minister will take for his reply?

THE HON. SRI R. VENKATARAMAN: 15 minutes.

MR. SPEAKER: Then we have got one hour and 45 minutes at our disposal. Seven hon. Members have given their names. I allot 15 minutes to the hon. the Mover of the Cut Motion, 15 minutes to the Leader of the Party who is speaking on behalf of the Opposition and 10 minutes each to the other hon. Members.

* **SRI S. PAKKIRISAMI PILLAI:** கனம் தலைவர் அவர்களே, என்னுடைய வெட்டுப் பிரேரணையைக் குறித்து சில வார்த்தைகள் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கனம் தொழில் மந்திரி அவர்கள் சமர்ப்பித்திருக்கிற இந்த அறிக்கையில் அரசாங்கத்தின் தொழில் திட்டக் கொள்கையை அழகாக விளக்கியிருக்கிறார்கள். தொழிலாளிகள் நலனுக்காக முதலாவது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்களில் தொழிலாளிகளுக்கு நியாயமான சம்பளம் கிடைக்கச் செய்வது, சமூகப் பாதுகாப்புக்குண்டான சட்ட விதிகளை அமலுக்குக் கொண்டுவருவதில், தொழிற்சங்க இயக்கங்கள் பக்கபலமாக இருந்து, தொழிலாளிகள் அத்தனை பேருக்கும் நியாயமான சம்பளம் வாங்கித்தர, வெவ்வேறு சம்பளக் குழுக்களை நியமித்து, அவைகளின் சிபாரிசுகளின்படி

இன்றைக்கு அவர்கள் ஊதியம் பெறவும், நம்முடைய நாட்டிலுள்ள அத்தனைபேரும் வேலைவாய்ப்புப் பெற்று பசி, பட்டினியைப் போக்கி வாழ்க்கை வசதிகளை பெறச் செய்தல் முதலியன எனக் கண்டிருக்கிறார்கள். இந்த லட்சியங்கள் சிறந்தவை. ஆனால் அந்த இலட்சியங்களை அடைவதற்கு அவர்கள் பின்பற்றிய வழிகள் என்ன, எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறார்கள், அதிலே வெற்றி கண்டிருக்கிறார்களா என்பதைப் பார்க்கும்பொழுது, உண்மையிலேயே அரசாங்கம் சரியான வழிகளைப் பின்பற்றாமல் மிகவும் பரிதாபகரமான நிலையிலே, தவறியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்க முடிகிறது. இந்த 10 வருஷ காலத்திலே, ஏற்படுத்திக் கொண்ட லட்சியங்களை நாம் அடையவில்லை. சில கொள்கை லட்சியங்கள் கைவிடப்பட்டிருக்கின்றன என்பதையும் பார்க்கமுடிகிறது. உண்மையான சம்பளத் திட்டத்தை எல்லாம் தொழிலாளிகளும் அடைந்திருக்கிறார்களா, நியாயமான சம்பளம் எல்லாத் தொழிலாளிகளுக்கும் கிடைக்கும்படியான வழியிலே என்ன ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கவேண்டும். ஏதோ சில பெரிய பாக்டரிகளிலே கொஞ்சம் பேர்களுக்குக் கிடைக்கலாம். ஆனால் பெரும்பகுதியான தொழிலாளர்கள் பட்டினிச் சம்பளத்தை வாங்கிக்கொண்டுதான் இன்றைக்கு வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இந்த 10 ஆண்டு காலத்திலே சர்க்கார், தாங்கள் எடுத்துக்கொண்ட லட்சியத்தைப் பெரும்பாலும் நிறைவேற்றுவதற்கு வழிகோலவில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மத்திய அரசாங்கத்தார் வெவ்வேறு சம்பளக் குழுக்களை நியமித்து, 15-வது இந்திய தொழிலாளிகள் மகாநாட்டின் மூலமாக நிறைவேற்றிய தீர்மானங்களையொட்டி, இந்த சம்பளக் குழுக்கள் ஒரு "நீட் பேஸ்டு மினிமம்" (need based minimum) கொடுக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதைச் சிபார்சு செய்தார்கள். அந்த நீட் பேஸ்டு மினிமம் எவ்வளவு இருக்கவேண்டுமோ அதைவிட அளவுக்குக் குறைந்திருந்தாலும்கூட, ஏதோ கொஞ்சம் உயர்ந்த சம்பளங்களைக் கொடுக்கும்படியான நிலையில் இந்த சம்பளக் குழுக்கள் தீர்மானித்தும்கூட, அந்தத் தீர்மானத்தையும் நிறைவேற்றக்கூடிய நிலையில் நம்முடைய அரசாங்கம் இல்லை என்பதை வருத்தத்துடன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய ராஜ்ய சர்க்கார் முதலாளிகளையும், தொழிலாளிகளையும் ஒன்றாகச் சேர்த்து, தொழிலாளர்களைப் பயமுறுத்தி, குறைவாகக் கிடைக்கும்படியான ஒரு ஒப்பந்தத்திற்கு அவர்களை ஆளாகும்படிச் செய்திருக்கிறார்கள். பஞ்சாலைத் தொழிலாளிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட சம்பளக் குழுவினுடைய சிபார்சுகளை மொத்தமாக எடுத்துக் கொள்ளாவிட்டாலும், எல்லோரும் ஒத்துக்கொண்ட அளவுக்குக் கூட இன்னும் சில முதலாளிகள் ஒத்துக்கொள்ளவில்லை. அதே மாதிரி செமன்ட் தொழிற்சாலைகளிலுள்ள முதலாளிகளில் ஒருவர் தவறியிருக்கிறார் என்று அறிக்கையில் கண்டிருக்கிறது. ஆகவே இவைகளின்மீது நடவடிக்கைகள் எடுக்க இன்னும் எத்தனை காலம் காத்துக்கொண்டிருக்கவேண்டும் என்பது தெரியவில்லை. நீட் பேஸ்டு மினிமமே குறைவாகத்தான்



கொடுத்திருக்கிறார்கள். நியாயமான அளவுக்குக் கொடுக்கப்படவில்லை. அதற்குக் காரணம், தொழிலாளிகளுக்கு அதிகமாகக் கொடுத்தால் அரசாங்கத்தார் போடுகின்ற லைசென்சுகளுக்கும், வரிகளுக்கும் அவர்களுடைய முதலிலிருந்து பெற முடியாது, அதனால் அவர்களுக்குக் குறைத்துக் கொடுக்கவேண்டுமென்ற எண்ணத்திலே ராஜ்ய அரசாங்கம் சிபார்சு செய்திருக்கிறதோ என்று எண்ணும்படியாக இருக்கிறது.

இப்பொழுது 135 மில் முதலாளிகளில் 126 பேர்கள் அந்த ஒப்பந்தத்திற்கு சம்மதித்திருக்கிறார்கள். அதேமாதிரி 3 செமன்ட் தொழிற்சாலைகளில், இரண்டு தொழிற்சாலைகள் இந்த சிபார்சுகளை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். சர்க்கரை ஆலைகளில் வேலை செய்யும் தொழிலாளிகளுக்கு சம்பளக் குழுவின் சிபார்சுகள் அண்மையிலே வெளிவந்திருக்கிறது. அந்த சிபார்சுகளை அமல் நடத்துவதற்கு இன்னும் ஒரு வருஷம் ஆகுமா, அல்லது சீக்கிரமாக அமல் நடத்துவார்களா என்று தெரியவில்லை. இந்த சர்க்கரை ஆலை முதலாளிகள் ரொம்பக் கடுமையானவர்கள், சுலபமாகச் சம்பளத்தைக் கொடுக்கமாட்டார்கள் என்பது நமக்குத் தெரியும். தேயிலை தோட்டத் தொழிலாளிகளுக்கும் அப்படித்தான். பத்திரிகைத் தொழிலாளிகளுக்கும் சம்பள வசதியளிக்கப்பட்டது; பல முதலாளிகள் அமுலாக்கினாலும் சில முரட்டு முதலாளிகள் இன்னும் அதைக் கொடுக்கவில்லை. அவர்கள் பேரில் தண்டனை கொடுக்க நடவடிக்கை எடுக்கக்கூடிய நிலையில் இல்லை நமது சர்க்கார். பாக்டரி சட்டத்தின்கீழ் சுகாதார வசதிகளை அனுசரித்து தொழிலாளிகளுக்குப் பல வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. திருவொற்றியூர் பகுதியில் சமீப காலத்தில் பல தொழிற்சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. அங்கே பல பாக்டரிகளில் கக்கூஸ், தண்ணீர் வசதிகள் கிடையாது. அவர்களுக்குப் பாதுகாப்பு கிடையாது. சாப்பிடும் இட வசதிக்கு எந்த ஏற்பாடுகளும் செய்துகொடுக்கப்படவில்லை . . . . . . .

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினரவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். பாக்டரி சட்டத்தை யாராவது சரியாகக் கடைபிடிக்கவில்லை என்றால், தொழிற் சங்கங்கள் இருக்கின்றன, அவர்கள் மூலம் கம்ப்ளெயிண்ட் கொடுக்கலாம். யாரோ முதலாளிகள் செய்யவில்லை என்று சட்டசபையில் சொல்வதால் அவ்வளவு பிரயோஜனம் இல்லை என்பதைத்தான் சொல்லுகிறேன். அப்படி கம்ப்ளெயிண்ட் கொடுத்து இலாகாவில் கவனிக்கவில்லை என்றால் அதைச் சொன்னால், கவனிக்க முடியும். முதலாளிகள் செய்கிறதில்லை என்பதை இப்பொழுது சொல்லுவதால் எனக்குப் பிரயோஜனம் இல்லை.

SRI S. PAKKIRISAMI PILLAI : ஏன் சொல்லுகிறேன் என்றால், பாக்டரி இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள்; அவர்கள் இன்ஸ்பெக்ஷன் செய்கிறார்களா, அதன்மூலம் இந்தக் குறைகளை கண்காணிக்கிறார்களா என்றுதான் கேட்கிறேன். அவர்கள் அப்படிச் செய்கிறதில்லை என்றுதான் சொல்லுகிறேன். அதுதான் என் குறைபாடு.

[Sri S. Pakkirisami Pillai] [15th March 1961

கடைச் சிப்பந்திகளுக்காக நம் ராஜ்யத்தில் ஒரு சட்டம் இருக்கிறது. முன்னேற்ற மாறுதல் அவசியம் என்று கருதி தொழிலாளிகள் கிளர்ச்சி செய்தார்கள். அந்தக் கிளர்ச்சி காரணமாக மத்திய சர்க்கார் ஏதோ ஒரு சட்டம் கொண்டுவர இருக்கிறார்கள், ஷாப்ஸ் அண்ட் எஸ்டாப்ளிஷ்மெண்ட் தொழிலாளிகளுக்காக, அது வரை பொறுங்கள் என்றனர். ஆனால் இது வரை ஒரு அறிகுறியும் காணோம். இந்த விஷயத்தை நட்டுக் கழித்து விட்டார்கள். மத்திய சர்க்கார் சட்டம் எப்பொழுது வருமோ தெரியாது.

தொழிலாளிகளுக்கு லீவ் முதலிய வசதிகள் கொடுக்கப்படுகிறதா என்று கண்காணிக்க அநேக லேபர் இன்ஸ்பெக்டர்கள் நியமித்து இருக்கிறார்கள். எவ்வளவு பேர்கள் சரியாகப் பெறுகிறார்கள் என்ற விவரங்கள் கிடையாது. இதில் கண்டிருக்கிற பிராஸிக்யூஷன்கள் செய்யப்பட்டிருக்கிறது என்றால், அதெல்லாம் தொழிற்சங்கங்களின் புகார்பேரில் செய்யப்படுகிறதே தவிர, லேபர் இன்ஸ்பெக்டர்கள் விவரங்கள்பேரில் அல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மெட்ராஸ் பீடி இண்டஸ்ட்ரீஸ் சட்டம் வந்ததன் காரணமாக பல தொழிலாளிகள் வெளியேற்றப் பட்டிருக்கிறார்களே தவிர, அவர்களுக்கு நன்மை ஒன்றும் ஏற்படவில்லை. பீடித் தொழிலாளிகள் பாக்டரி சட்டத்தின்கீழ் இருந்தது. இன்றைக்கு மாறியிருக்கிறது. அவ்வளவுதான். அவர்கள் பலர் நடுத்தெருவில் நிற்கிறார்கள். ஆகவே அந்த சட்டம் பீடி முதலாளிகளுக்கு நன்மையாக இருக்கிறதே ஒழிய தொழிலாளிகளுக்கு நன்மையைச் செய்யவில்லை.

தொழிற்சாலைகளில் கோட் ஆப் டிஸிப்ளின், கட்டுப்பாடுகள் அடங்கிய போஸ்டர்கள் தொங்குவதைப் பார்க்கிறோம். ஆனால், கோட் ஆப் டிஸிப்ளினை முதலாளிகள் அத்து மீறுகிறார்களே தவிர, தொழிலாளிகள் அல்ல. தொழிலாளிகள் அம்மாதிரி கட்டுப்பாட்டின்கீழ் வேலைசெய்ய ஆவலோடு இருக்கிறார்கள். அப்படி அத்து மீறும் முதலாளிகளை தண்டிக்கக்கூடிய நிலையில் இல்லை இந்த அரசாங்கம். அவர்கள்பேரில் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதுதான் என் புகார். உண்மையாகச் சொல்லப்போனால் (மணியடிக்கப்பட்டது) இரண்டு நிமிஷம், ஸார். திருவொற்றியூரில் ராமகிருஷ்ணா, குல்வந்தராய் மில் என்ற ஸ்தாபனம் ஏற்பட்டிருக்கிறது. தொழிலாளிகள் சேர்ந்து தங்கள் முன்னேற்றத்திற்காக வேண்டிய தொழிற் சங்கத்தில் சேர்ந்ததற்கு அவர்களுக்கு எதிராக முதலாளிகள் பஞ்சாபி தொழிலாளிகளைக் கொண்டு வந்து நம் தொழிலாளிகளை அடித்து காயம் உண்டாக்கி, அதில் ஒரு தொழிலாளியும் இறந்துவிட்டார் என்பதைப் பார்க்கிறோம். இதனால் வெகுண்டு எழுந்த தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்தார்கள். போலீசுக்குப் பகார் செய்தும், அதிகாரிகளுக்குப் புகார் செய்தும், எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அந்தப் பகுதி தொழிலாளிகள் அத்தனை பேரும் ஊர்வலத்தை நடத்தி, ஆர்பாட்டம் செய்ததன் காரணமாக, அந்தப் பஞ்சாபித் தொழிலாளிகளை அரெஸ்ட் செய்து



15th March 1961] [Sri S. Pakkirisami Pillai]

முதலாளியை வேலை நிறுத்த காலத்திற்கும் சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்தார்கள். அது எப்பொழுது நடந்தது? ரொம்ப நாட்களுக்குப் பிறகு அதில் அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை . . . .

**Mr. SPEAKER:** கனம் மாதா கௌடர். நீங்கள் பத்து நிமிஷம் பேசலாம்.

**Sri J. MATHA GOWDER:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் தொழில் அமைச்சரவர்கள் தொழில் நல இலாகாவிற்காகக் கொண்டுவந்திருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கனம் தொழில் அமைச்சர் இந்த இலாகாவில் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு தொழிலாளிகளுக்கு, அவர்கள் நலனுக்காக செய்த சேவை பற்றி சொல்வதானால் இப்பொழுது நேரம் இல்லாததால் அதைச் சொல்ல முடியவில்லை என்று மட்டும் சொல்லிக்கொள்ளுகிறேன். தொழிலாளிக்கென்று முதன் முதலாக நம் நாட்டிலேயே, இந்தியாவிலேயே, ஒரு கூட்டுறவுப் பாங்கு ஏற்படுத்திய பெருமை தொழில் அமைச்சரவர்களுக்குச் சேர்ந்திருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன். நீலகிரி ஜில்லாவிலே அண்மையில் ஒரு கூட்டுறவு பாங்கு தேயிலை, காப்பித் தோட்டத் தொழிலாளிகளுக்காக ஏற்படுத்தியிருப்பதற்காக அந்த மாவட்ட மக்கள் சார்பில் இந்த சர்க்காருக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ப்ராவிடெண்ட் பண்ட் சம்மந்தமாகவும், முன்னால் 50 பேருக்கு மேல் இருக்கும் தொழிற்சாலை என்று இருந்ததை, 20 பேருக்குமேல் என்று மாற்றியிருப்பதற்காகவும், அவர்களுக்கும் ப்ராவிடெண்ட் பண்ட் வசதி செய்து கொடுத்திருப்பதற்காகவும் இந்த சர்க்காருக்கு நன்றியைத் தெரிவிக்கிறேன். மூன்றாவதாக இந்த தொழிலாளிகளுக்கு விடுமுறை நாளைக் கழிப்பதற்காக ஒரு தங்கும் இடம் என்று மகாபலிபுரத்தில் ஏற்படுத்தி இருப்பதாகத் தெரிகிறது. அது பட்டணத்தில் இருப்பவர்களுக்கு வசதியாக இருக்கும். ஆனால் மற்ற பகுதிகளில் இருப்பவர்களுக்கு அது உபயோகப்படக்கூடிய வசதி அவர்களுக்கு இருக்காது. இந்த மாநிலத்தின் சுகவாசஸ்தலமாகிய நீலகிரியில் அம்மாதிரிச் செய்யலாம். பல தொழிலாளிகளுக்கு அங்கே செல்ல வசதியிருக்காது என்றாலும், கொஞ்சம் வசதி படைத்தோரும் செல்லக்கூடிய முறையில் குன்னூரில் ஒரு தங்கும் விடுதியை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த மாநிலத்தில் 328 ஸ்ட்ரைக்குகள் நடந்திருக்கின்றன என்பதைப் பார்க்கும்போது வருத்தப்படும் நிலையாக இருக்கிறது. அந்த அளவுக்கு "மேன்பவர்" "மான்-டேய்ஸ்" வேலை செய்யும் நாட்கள் போயிருப்பது ஏழு லட்சம் சொச்சம் நாள்கள் இழந்திருக்கிறோம். அது பெரிய தேசீய நஷ்டம். தொழிற் சங்கத் தலைவர்கள் அம்மாதிரியான தேசீய நஷ்டத்தைப் போக்க முன் வர வேண்டும்.

[Sri J. Matha Gowder] [15th March 1961

தொழிலாளர்களுக்குப் பண்டிகை அலவன்ஸ் கொடுப்பது சம்பந்தமாக நாம் சட்டம் இயற்றினோம். அதில் என்ன குறைபாடு இருக்கிறதென்றால், ஒரு பண்டிகை வருவதற்கு முன்பு முப்பது நாட்கள் தொடர்ச்சியாக வேலை செய்திருந்தவர்களுக்கு மாத்திரம் பண்டிகை லீவு கொடுப்பது என்று இருக்கிறது. பண்டிகை லீவு கொடுப்பதன் நோக்கம் என்ன? குறைந்தது முப்பது நாட்கள் வேலை செய்தவர்களுக்குப் பண்டிகை லீவ் கொடுக்கவேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு சட்டம் இயற்றியிருக்கிறோம். ஆனால், 29 நாட்கள் ஒரு தொழிலாளி வேலை செய்திருந்தாலுங்கூட, முப்பதாவது நாள் அவர் காஷுவல் லீவ் எடுத்திருந்தால், பண்டிகை லீவ் சலுகை கொடுப்பதில்லை முதலாளிகள். இந்தச் சட்டத்தை முதலாளிகள் இப்படி அமுல் நடத்துகின்ற காரணத்தால், சட்டம் இயற்றியும், பத்து சதவிகிதத் தொழிலாளர்கள்கூட பண்டிகை லீவ் சலுகையை அடைய முடியவில்லை. இப்படியெல்லாம் செய்து முதலாளிகள் தப்பித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையை மாற்றியமைக்கவேண்டும். வருஷத்தில் 200 நாட்கள் வேலை செய்தால், 7 நாட்கள் பண்டிகை லீவ் கொடுப்பது என்ற நியதியையாவது ஏற்படுத்திவிட்டால் நலமாக இருக்கும்.

தேயிலை தோட்டத் தொழிலாளர்கள் சம்பந்தமாக வேஜ் போர்டு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. விலைவாசி உயர்வின் காரணமாக தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் மிகவும் கட்டுப்படியாகாத நிலையில் இருக்கிறது. ஆகவே, வேஜ் போர்டு முடிவுகள் வருவதற்குள்ளாக, அவர்களுக்கு இடைக்காலக் கூலி உயர்வு கொடுக்கவேண்டும். முதலாளிகளையும், தொழிலாளர் தலைவர்களையும் கூட்டிவைத்து, இடைக்காலக் கூலி உயர்வு கொடுப்பது சம்பந்தமாக முடிவு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

'கோட் ஆப் டிஸிப்ளின்'-ஐப் பற்றி நான் அடிக்கடி இந்த மன்றத்தில் சொல்லியிருக்கிறேன். தொழிலாளி வேலை நேரத்தில் குறையுடையவனாக நடந்துகொண்டால் அவன் பேரில் நடவடிக்கை எடுத்தால் பரவாயில்லை. ஆனால், வேலை நேரம் கழிந்து, வீட்டுக்குச் சென்ற தொழிலாளி ஏதோ அரசியல் காரணத்தால் சண்டை போட்டாலும்கூட அவன்பேரில் முதலாளிகள் நடவடிக்கை எடுக்கிறார்கள். தொழிலாளி வீட்டில் சண்டை போட்டால் அதைப் பார்த்துக்கொள்வதற்கு போலீஸ் இலாகா இருக்கிறது. ஆனால், முதலாளிகளுக்கு அங்கு என்ன வேலை இருக்க முடியும் என்று எனக்குப் புரியவில்லை தொழிற்சாலைக்கு வெளியே நடக்கக்கூடியதை வைத்துக்கொண்டு, தொழிலாளி பேரில் முதலாளிகள் நடவடிக்கை எடுக்கிறார்கள். ஒரு தொழிலாளி வேறொரு தொழிற் சங்கத்தில் சம்பந்தப்பட்ட தொழிலாளியோடு இருந்துவிட்டால், உடனே அவன்பேரில் சார்ஜ் ஷீட் போட்டு நடவடிக்கை எடுக்கிறார்கள் முதலாளிகள். இதில் சிரமமான காரியம் என்னவென்றால், முதலாளியானவர் ப்ராப்பர் என்க்வையரி செய்துவிட்டார் என்று சொல்லி, தொழிற் கோர்ட்டுக்குப் போகிறார்கள். ஆனால், ப்ராப்பர் என்க்வையரி செய்வதில்லை. தங்களுக்



15th March 1961] [Sri J. Matha Gowder]

குச் சாதகமான தொழிலாளிகளைக் கூப்பிட்டு, அவர்கள் விசாரணை நடத்தி, ஏதேனும் ரிகார்டு தயாரிக்கிறார்கள். பாதிக்கப்பட்ட தொழிலாளி கையெழுத்துபோடும்போது மறுக்கிறார். விசாரணைக்கு வராவிட்டாலுங்கூட, கையெழுத்து போட்ட தொழிலாளி வர மறுத்துவிட்டார் என்று ரிகார்டு செய்துவிட்டால் கோர்ட்டில் தொழிலாளிக்குச் சாதகமாகத் தீர்ப்பு கிடைப்பது அரிதாக இருக்கிறது. கோட் ஆப் டிஸிப்ளின் பிரகாரம் சார்ஜ் ஷீட் கொடுத்து, விசாரணை நடத்தும்போது, தொழிற் சங்கத் தலைவரை வைத்துக்கொண்டு நடத்தவேண்டுமென்று விதி முறைகளை ஏற்படுத்தினால் நலமாக இருக்கும். எதற்கெடுத்தாலும், சிறு காரணத்திற்காகக்கூட, தொழிலாளிகளைப் பழிவாங்கிக்கொண்டிருக்கிறார்கள் முதலாளிகள் என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதைத் தடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாதாரண தொழிலாளி தானே கோர்ட்டுக்குப் போகக்கூடிய நிலைமையைப்பற்றி தொழில் அமைச்சர்கூட சென்ற முறை பதிலளித்திருக்கிறார். தொழிற் சங்க விதிகளின் பிரகாரம் தொழிலாளி நேரடியாகக் கோர்ட்டுக்குப் போக முடியாது என்று இருக்கிறது. தொழிலாளிகள் நேரடியாகக் கோர்ட்டுக்குப் போகக்கூடிய முறையில் விதிகளை ஏற்படுத்தினால் நலமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். இதையும் சர்க்கார் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரியில் தேயிலைத் தொழிற்சாலையில் வேலை செய்யக்கூடிய தொழிலாளியை, முதலாளிக்கு அவர் சாதகமாக இல்லையென்றால், உடனடியாக காட்டு வேலைக்கு போகச் சொல்லிவிடுகிறார்கள். இரண்டு வருஷங்கள், மூன்று வருஷங்கள் தொழிற்சாலையில் வேலை செய்திருந்தாலுங்கூட, அவரை முதலாளிக்குப் பிடிக்காவிட்டால், காட்டு வேலைக்கு அனுப்பிவிடும் நிலை இருக்கிறது. பஞ்சாலைகளிலே வேலை செய்யக்கூடிய தொழிலாளிகளுக்கு இம்மாதிரி நிலை இல்லை. தொழிற்சாலையில் வேலை செய்கிறவரை மில் சொந்தக்காரருக்குச் சொந்தமான பருத்திக் காட்டுக்கு மாற்ற அதிகாரம் இல்லை. ஆனால், தேயிலைத் தொழிற்சாலையில் வேலை செய்யக்கூடிய வாட்ச்மென், தபால் வாங்கிக்கொண்டு வருபவர் முதலியவர்களைக்கூட தேயிலைக் காட்டுக்கு அனுப்பிவிடுகிறார்கள். இது கூடாது. பாக்டரியில் வேலை செய்பவர்கள் பாக்டரியிலேயே வேலை செய்யவேண்டுமேயொழிய, அவர்களை காட்டுக்கு அனுப்பக்கூடாது. முதலாளிகளுக்குப் பிடிக்காதவரைக் காட்டுக்குப் போகச் சொன்னாலும், அவர் போக விரும்பவில்லையென்றால், அவர்மீது டிஸிப்ளினரி ஆக்ஷன் எடுப்பதுமாக இன்றைக்கு இருக்கிறது. இந்த நிலையை மாற்றியமைக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(Deputy Speaker in the Chair.)

தொழிலாளிகளுடைய வீடுகளுக்கு மின்சார வசதி செய்து கொடுப்பதுபற்றி நான் இந்த மன்றத்தில் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். அவர்களாகவே மனமுவந்து மின்சார வசதி செய்து

கொடுப்பார்கள் என்று நினைக்கிறேன். தோட்டங்களில் வேலை செய்யும் சாதாரண குமஸ்தாக்களுடைய வீடுகளுக்குக்கூட மின் சார வசதி செய்து கொடுத்துவிட்டு, பக்கத்தில் இருக்கும் தொழிலாளிகளுடைய வீட்டுக்கு மின்சார வசதி கொடுக்கப்படுவதில்லை என்றால், இதனுடைய நோக்கம் என்ன என்று நான் கேட்கிறேன். தொழிலாளர்களைக் கீழ்த்தரமாக நினைத்திருக்கும் காரணத்தால் தான் அவர்கள் அப்படிச் செய்கிறார்கள் என்று நான் மிக வருத்தத் துடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதில் அமைச்சர் அவர்கள் ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிரசவ அலவன்ஸ் என்ற வகையில் நாம் மொத்தமாக 63 ரூபாய் கொடுத்துவிடுகிறோம். கேரளத்தில் ஒரு பெண் தொழிலாளிக்கு ஊதியத்தில் மூன்றில் இரண்டு பங்கு என்று கணக்கிட்டு, கிட்டத் தட்ட 70 ரூபாய்க்குமேல் கொடுக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் 63 ரூபாய்தான் கொடுக்கப்படுகிறது. ஆக, ஏழு ரூபாய் குறைந்திருக்கிறது. நம்முடைய மாநில பீடித் தொழிலாளர்களுக்காக இயற்றப்பட்ட சட்டப்படி எட்டு பாகத்தில் ஏழு பாகம் என்ற அளவுக்குக் கொடுக்கவேண்டுமென்று இருக்கிறது. அந்த முறையில் மாற்றியமைத்தாலும் பரவாயில்லை. தேயிலைத் தோட்டத் தொழிலாளிக்கு மாத்திரம் 63 ரூபாய்தான் கொடுக்கப் படுகிறது. அவர்களுக்கு அதிகமான உதவிகள் செய்திருக்கிறோம் என்பதை நான் மறுக்கவில்லை என்றாலும், அந்தத் தொகை போதாது இன்றைக்கு இருக்கும் நிலைமையில் என்று தெரிவித்துக் கொள்கிறேன். கேரளாவில் இருப்பதுபோல் மூன்றில் இரண்டு பங்கு என்று அமைத்துவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏதோ தொழிலாளிகளுக்கு அதிகம் சலுகை காட்டிக்கொண்டு போகிறோம் என்று சொன்னாலும், முதலாளிகளுக்கு லாபம் எந்த அளவுக்குக் கிடைத்திருக்கிறது என்பதற்குச் சிறு புள்ளி விவரம் கொடுக்க விரும்புகிறேன். தேயிலை ஏற்றுமதிமூலம் நமக்குக் கிடைத்திருப்பது 1952-ம் வருஷத்திலே 80 கோடி 80 லட்ச ரூபா யாகும். ஆனால், 1958-ம் வருஷத்தில் 136 கோடி 54 லட்ச ரூபாய் நமக்குக் கிடைத்திருக்கிறது. 1952-லிருந்து 1956வரை வெளி நாட்டு வியாபாரத்தின் மூலம் கிடைத்திருப்பது 500 கோடி ரூபாய் ஆகும். தேயிலையின்மூலமாக மட்டும் 200 கோடி ரூபாய் கிடைத் திருக்கிறது. அதிக ஏற்றுமதி செய்திருப்பதால் அதிக லாபம் கிடைத்திருக்கிறது என்பதைக் காட்டுகிறது. அத்துடன், தொழி லாளிகள் குறைவான வேலை செய்யவில்லை, அதிகமான வேலை செய் திருக்கிறார்கள் என்பதையும் காட்டுகிறது. தேயிலைத் தோட்டத்தில் வேலைக் குறைவு இல்லை என்பதை இந்தப் புள்ளி விவரம் நிரூபிக் கிறது. 1950-ல் ஒரு தொழிலாளி 595 பவுண்டு தேயிலை உற்பத்தி செய்திருக்க 1955-ம் ஆண்டு புள்ளிவிவரப்படி 715 பவுண்டு உற்பத்தி செய்திருப்பதைப் பார்க்கிறோம். அந்த அளவுக்கு தொழிலாளிகள் உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறார்கள். ஆனால், கூலி உயர்வு அதிக மாகக் கிடைக்காமல் இருக்கிறது. தொழிலாளி அதிகம் உற்பத்தி செய்து முதலாளிகளுக்கு அதிக லாபம் கிடைத்திருக்கிறது, புள்ளி விவரத்தைப் பார்த்தால் விளைச்சல் குறையவில்லை என்பது தெரிய





வரும். 1939-ம் வருஷத்திலே ஒரு ஏக்கருக்கு 580 பவுண்டு தேயிலை உற்பத்தியாகிக்கொண்டிருந்தது. 1955-ம் வருஷத்தில் 1,081 பவுண்டு அளவுக்கு உற்பத்தி அதிகரித்திருக்கிறது. இப்படி உற்பத்தி அதிகரித்துக்கொண்டே போகும்போது, 'ஏக்ரேஜ்' அதிகம் ஏற்பட்டிருக்கும் என்று சொல்லலாம். அப்படிப் பார்த் தால் ஏக்ரேஜ் அதிகமாகவில்லை. 1938-ம் வருஷத்தில் 77,50,057 ஏக்கர் இருந்தன. அதைவிட இப்பொழுது ஒரு ஏக்கர்கூட அதிக மாகவில்லை. அதே விஸ்தீரணத்தில் முன்னைவிட இப்பொழுது உற்பத்தியை அதிகரித்திருக்கிறோம். மொத்த உற்பத்தி 1938-ல் 44 கோடி 68 லட்சம் பவுண்டு என்று இருந்தது. 1958-ல் 71 கோடி 35 லட்சம் பவுண்டு உற்பத்தி செய்திருக்கிறோம். இப்படி ஒவ்வொரு வகையிலும் அதிகமாக உற்பத்தி செய்யும்போது, தொழிலாளர் களுக்கு மிகக் குறைவான சலுகை காட்டப்பட்டிருக்கிறது. முதலாளிகளுக்கு மனம் இல்லாததுதான் இதற்குக் காரணம். தேயிலை உற்பத்தியில் குறைவு இல்லை. நீலகிரியில் உள்ள தோட்ட முதலாளிகள் போட்ட முதலை ஐந்து வருஷ காலத்திலேயே எடுத்து விடுகிறார்கள் என்றால், அந்த அளவுக்கு அதிலே லாபம் அவர் களுக்கு வருகிறது, அந்த அளவுக்குத் தொழிலாளிகள் உற்பத்தி யைப் பெருக்கியிருக்கிறார்கள். ஆனால், தொழிலாளிகளுக்குச் செய்யக்கூடிய சலுகை அதிகமாகவில்லை, சிறு காரணங்களுக்காக வும்கூட அவர்கள் தண்டிக்கப்படக்கூடிய நிலை இருக்கிறது என்ப தைச் சொல்லிக்கொண்டு, எனக்கு இந்தச் சந்தர்ப்பத்தைத் தந்த தலைவருக்கு நன்றியைத் தெரிவித்து என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**SRI K. PONNIAN:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தொழி லாளர் இலாகா அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் மானியத்தை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் பேச விரும்பு கிறேன். 11-00 a.m.

இன்றைக்கு மில் தொழிலாளர்களுக்கு அவார்டு வந்ததனால் அவர்கள் உயர்ந்துவிட்டார்கள். சிமிண்டு தொழிலாளர்களுக்கு அவார்டு வந்ததனால் அவர்கள் உயர்ந்துவிட்டார்கள் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுக்கு அவார்டு வர இருப்பதனால் இவர்களும் உயர்ந்துவிடுவார்கள். இதில் ஐயம் இல்லை. ஆனால் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய நிலைமைதான் எந்த வகையிலும் உயராமல் இருந்துகொண்டிருக்கிறது. உயர்வதற்கும் வழியில் லாமல் இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதுவும் இந்தத் தோட்டங்களில் வேலை செய்யக்கூடிய அத்தனை தொழி லாளர்களும் ஹரிஜனங்கள்தான். அத்தோட்ட முதலாளிகளோ எவ்விதமான சட்டதிட்டத்திற்கும் உள்பட மறுக்கிறார்கள். பத்துப் பேர்கள் உள்ள இடங்களில்கூட நாம் ப்ராவிடெண்ட் வசதி ஏற்படுத்தவேண்டும் என்று செய்திருக்கிறோம். ஆனால் சிங்கோனா தோட்டத் தொழிலாளர்களில் ஸ்டாப்களுக்கு அந்த வசதியைக் கொண்டுவந்துவிட்டார்கள், அதனால் பீல்டு தொழிலாளர்களுக்கு அத்தகைய வசதி விஸ்தரிக்கப்படவில்லை. அவர்களுக்கும் இவ் வசதியை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் தேசிய தினங்களுக்கு சம்பளத்தோடு விடுமுறை கொடுக்கவேண்டும் என்று நாம் சட்டமியற்றியிருக்கிறோம். ஆனால் ஆகஸ்டு பதினைந்து, ஜனவரி 26 ஆகிய தினங்களுக்கு அளிக்கும் விடுமுறைக்கு கூலி கொடுப்பது இல்லை. விடுமுறைக்கு முந்திய தினங்களிலும் அதிக நேரம் வேலை செய்யவேண்டுமென்று கட்டு திட்டம் செய்கிறார்கள். இதையும் கவனிக்கவேண்டும்.

அடுத்தபடியாக மெடர்னிடி பெனிபிட் என்பது சிக்னஸ் பெனிபிட்டில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது. அப்படியிருக்க சிக்னஸ் பெனிபிட் கொடுப்பதனால் மெடர்னிடி பெனிபிட் என்று வேண்டாம் எனச் செய்யக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். சென்ற வருஷத்திலும் இதைப்பற்றி நான் சொல்லியிருப்பதன் ஞாபகம் இருக்கும்.

அந்த மலைப் பிரதேசங்களில் தோட்ட வேலைகளில் ஈடுபட்டிருக்கிற பெரும்பாலான தொழிலாளர்கள் இன்றைக்கும் ஊற்று நீரைத் தான் சாப்பிட்டு வருகிறார்கள். அவர்களுக்குக் குடி தண்ணீர் வசதி கிடையாது. முதலாளிகளும் அவர்களுக்கு ப்ரொடெக்டெட் வாடர் சப்ளை அளிக்க எவ்வித ஏற்பாடும் செய்ய மறுக்கிறார்கள். ஆகவே அவசியம் அந்தத் தொழிலாளர்களுக்கு ப்ரொடெக்டட் வாடர் சப்ளை அளிக்க தக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நமது ராஜ்யம் மின்சார விஸ்தரிப்புக்குப் பெயர் பெற்றிருக்கிறது. இந்த தொழிலாளர்களுடைய வீடுகளுக்கு அங்கே மின்சார வசதி செய்துகொடுக்காவிட்டாலும் லைன்களுக்கு முன்னாவது விளக்குப் போடவேண்டும். இரவு நேரங்களில் மலஜலம் கழிப்பதற்குக்கூட அவர்கள் வரமுடிவதில்லை. காரணம் அங்கே ஒரே சோலைகள்—இரவு நேரங்களில் காட்டு மிருகங்கள் எல்லாம் வரும். ஆகவே அங்குள்ள மலைத்தோட்டத் தொழிலாளர்களின் லைன்களுக்கு முன்னாவது விளக்குப் போட்டுத்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக மேஸ்திரி முறையை ஒழித்து விட்டோம். அவர்களுக்குப் பதிலாக சூப்ரவைசர்கள் போட்டிருக்கிறோம். ஆனால் இன்னும் இவர்களை தினக்கூலியாகவே வைத்திருக்கிறார்கள். இந்த சூப்ரவைசர்களையும் ஸ்டாப்களைப் போலவே ஆக்கி மாதச் சம்பளம், வீட்டு வசதி, ஸ்டாப் போனஸ் இவற்றுக்கு எல்லாம் தகுதி உடையவர்களாக ஆக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கம்பளி விஷயம் எடுத்துக்கொண்டால் ஒரு சில எஸ்டேட்டுகளில் நல்ல கம்பளி கொடுக்கிறார்கள். ஆனால் மற்றவர்கள் கொடுப்பது தண்ணீர் போட்டால் முடிச்சு முடிச்சாகத் தண்ணீரோடேயே போய்விடும். அவ்வளவு மோசமானவை. இதைப் பற்றி பாக்டரி இன்ஸ்பெக்டருக்குக்கூடத் தெரிவித்திருக்கிறேன். ஆகவே சர்க்கார் தொழிலாளர்களுக்கு நல்ல கம்பளி வழங்கும்படியாக ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





இன்னொன்று. ப்ளான்டேஷன் ரூல்ஸ்களை கொஞ்சம் அமுல் படுத்தினால் தான் காண்டின், லாட்ரின் போன்ற சாதாரண சௌகரியங்களை எல்லாம் கூட தொழிலாளர்கள் பெற முடியும். பூராவாக அமுல் நடத்தாவிட்டாலும் பாதியாவது அமுல் நடத்தினால் வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு—ஆண்களுக்கு ரூ. 1–11–6 கூலியும், பெண்களுக்கு ரூ. 1–5–0 கொடுக்கப்படுகிறது. அதே எல்லையில் பக்கத்தில் வேலை செய்யக்கூடிய காப்பித் தோட்டத் தொழிலாளர்களுக்கு—ஆண்களுக்கு ரூ. 1–9–0-ம், பெண்களுக்கு ரூ. 1–2–0 தான் கொடுக்கப்படுகிறது. சர்க்கார் நடத்துகின்ற சிங்கோனா தோட்டத் தொழிலாளர்களுக்கும் இதே கூலி தான் கொடுக்கப்படுகிறது. எல்லா வகையிலும் வாழ்க்கைச் செலவு அதிகரித்திருக்கக்கூடிய இந்தக் காலத்தில் அந்தக் கூலியைக்கொண்டு அவர்கள் எப்படி வாழ்க்கை நடத்த முடியும் என்பதைக் கவனிக்கவேண்டும். அந்த தொழிலாளர்களுடைய மத்தியில் போவதற்கே எங்களுக்கு வெட்கமாக இருக்கிறது. உடனடியாக அவர்களுடைய குறைகளை எல்லாம் நீக்கி, வாழ்க்கை வசதிகளை பெருக்கித்தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**Sri M. P. SARATHI :** தொழிலாளர் நல இலாகா அமைச்சர் அவர்கள் கோரியிருக்கும் மானியத்தின்பேரில் திரு. பக்கிரிசாமி பிள்ளை அவர்கள் கொடுத்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். தொழிலாளர்களுடைய வேலை வாய்ப்புகள் பெருகியிருக்கிறது. கிட்டத்தட்ட ஐயாயிரத்து மேற்பட்ட பாக்டரிகள் ஏற்பட்டுள்ளது என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் சுதந்திரம் அடைந்து 13 ஆண்டுகளுக்குப் பிறகும் இப்போது வேலையில்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறவர்களுடைய எண்ணிக்கை அதிகம் என்பதை நாமும் பார்த்துக்கொண்டுதான் வருகிறோம். இன்னும் பல தொழிற்சாலைகளில் முன்பு கொடுக்கப்பட்டு வந்த கூலியே இப்போதும் கொடுக்கப்பட்டு வருகிறது. இதைப் பலவிடங்களில் பார்க்கிறோம். குறிப்பாக நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலையில் காயம் (permanent) ஆக்கப்படாமல் பல தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இதைப்பற்றி அங்கே கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நடைபெறும் தொழிலாளர் சங்கம் பலகாலமாக எடுத்துச் சொல்லி வந்திருக்கிற போதிலும் இன்னும் அத்தொழிலாளர்கள் சாஸ்வதமாக்கப்படவில்லை. அத்தொழிலாளர்களுடைய குறைகள் நீக்கப்படவில்லை. யார் சங்கம் வைத்து நடத்துகிறார்கள் என்று பார்க்காமல் தொழிலாளர்களுடைய குறைகள் நீக்கப்படுவதற்குப் பதிலாக அங்கே இளைஞர் காங்கிரஸ் சார்பாக போட்டி யூனியன் ஏற்படுத்தி பலாத்காரம் மூலமாக கைப்பற்றி செயல்படுவது தொழிலாளர்களுடைய நலனுக்கும் உகந்தது அல்ல. ஜனநாயக முறைக்கே உகந்தது அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[Sri M. P. Sarathi] [15th March 1961

பீடித்தொழிலாளர்களுக்கு தனியாகச் சட்டம் ஏற்படுத்தித்தர வேண்டும் என்று கோரி, இப்போது ஏற்படுத்தியிருக்கிறார்கள். உண்மையில் என் பகுதியில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பீடித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஆனால் இன்றையதினம் சர்க்கார் சட்டம் கொண்டுவந்ததன் பலன் என்ன? முன்பு கொண்டுவாமல் இருந்த நிலைமையே நல்லது போல் இருக்கிறது. ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து அதையும் அமுல்படுத்தாமல் தொழிலாளர்களும், முதலாளிகளும் ஒத்துப்போகிறார்கள் என்று சொல்லி விட்டுவைத்திருப்பது தொழிலாளர்களை முதலாளிகள் மறைமுகமாக கொடுமைப்படுத்தக்கூடிய நிலைமைதான் உருவாகிவிட்டது. அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச கூலி கூடக் கொடுக்கப்படவில்லை.

லேபர் ஆபீசருக்கு தெரிவித்தும்கூட தொழிலாளர்களுக்கு வேலை கிடைப்பது ரொம்பவும் கஷ்டமாகப்போய்விடுகிறது. ஆகையால் உடனடியாக பீடித் தொழிலாளர்கள் சட்டத்தை எப்படியும் அமுல் நடத்துவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டும். இதனால்தான் தொழிலாளர்களுக்கு நன்மை ஏற்படுமே தவிர மற்றபடி ஏற்படாது. பீடித்தொழிலாளர்கள் வேலை செய்யும் இடங்களை அமைச்சர் அவர்கள் கவனித்துப்பார்க்கவேண்டும். தெருக்களில் சாக்கடை ஓரங்களில் 10 பேர்கள் வேலைசெய்யக்கூடிய இடத்தில் 20 பேர்கள் வேலைசெய்யும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதனால் க்ஷயரோகம் போன்ற வியாதியினால் பாதிக்கப்பட்டு இறந்திருக்கிறார்கள். ஹோட்டல் தொழிலாளர்களுக்குச் சட்டம் செய்திருக்கிறோம். ஆனால் இதை அமுல் செய்திருக்கிறார்களா என்றால் உண்மையிலேயே இல்லை என்றுதான் சொல்லவேண்டும். ஏதோ சாக்குபோக்கு காட்டி தொழிலாளர்களை பழிவாங்கக்கூடிய நிலையில் இருப்பதை பல இடங்களில் பார்க்கிறோம். எந்தக் காரணத்தைக்கொண்டும் தொழில் கோர்ட்டுக்கு போவதற்கு இடம் இல்லாமல் அவர்கள் பேரில் வீண்பழியைப்போட்டு அவர்களை ஒழித்துக் கட்டிவிடுகிறார்கள் என்ற புகார் சர்க்காரின் கவனத்திற்கு வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தோல் பதனிடும் தொழிலாளர்களுக்கு ஒரு சட்டம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஆயிரக்கணக்கான ஏழை ஹரிஜனங்கள் இன்று வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு தொழிற்சங்கம் ஏற்படுத்தி அவர்களுடைய நலனை கவனித்து வருகிறதே தவிர சர்க்கார் கவனம் செலுத்தவில்லை. ஆகையால் அதற்கு ஒரு சட்டத்தை ஏற்படுத்தி அவர்களிடமிருந்து 8 மணி நேரம்தான் வேலை வாங்கவேண்டும், அவர்களுக்கு லீவ் வசதி கொடுக்கவேண்டும், அவர்களுக்கு தகுந்த சம்பளம் கொடுக்க வேண்டும், ஹோட்டல் தொழிலாளர்களுக்கும் பீடித்தொழிலாளர்களுக்கும் சட்டம் செய்தது போலவே இவர்களுக்கும் சட்டம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



15th March 1961] [Sri M. P. Sarathi]

சிறு கடைகளில் மூன்று பேர் நான்கு பேர் வேலைசெய்யக்கூடிய வர்த்தக ஸ்தாபனங்களில் வேலைசெய்யும் குமாஸ்தாக்கள் 8 மணி நேரத்திற்குத்தான் வேலைவாங்கவேண்டுமென்ற நியதி சட்டப்படி இருக்கிறது. இருந்தாலும் லேபர் இன்ஸ்பெக்டர் ஒவ்வொரு பாக்டரிக்கும் ஒவ்வொரு கடைக்கும் மாதா மாதம் போய் கையெழுத்து போட்டிருக்கிறார்கள் என்றாலும் உண்மையிலேயே சரியாக நடப்பதில்லை. 8 மணி நேரம் வேலை என்பதை வெறும் கண்துடைப்பு வேலையாக இருக்கிறதே தவிர காலை 7 மணியிலிருந்து 9 மணிவரைக்கும் பாக்டரிகளிலும், 4, 5 பேர்கள் வேலைசெய்யும் கடைகளிலும் வர்த்தக குமாஸ்தாக்கள் வேலைசெய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சர்க்கார் இதை கவனித்து 8 மணி நேரம்தான் வேலை செய்யவேண்டும் என்பதைக் கண்காணிக்கவேண்டும். போனஸ், லீவ் சரிவர கிடைக்கிறதா என்பதை தெரிந்துக்கொள்வதற்கு பாக்டரி இன்ஸ்பெக்டர் தொழிலாளர்களிடமிருந்து கையெழுத்து வாங்கி வரவேண்டும். பஸ் தொழிலாளிகளும் இம்மாதிரி பழிவாங்கக்கூடிய நிலையில் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். 10 வருஷங்களாக வேலை செய்து வந்த பஸ் தொழிலாளியாக இருந்தாலும் அவர்களுக்கு லீவ் வசதி போனஸ் வசதி சில இடங்களில் கொடுக்கப்படுகிறதே தவிர பெரும்பாலான இடங்களில் கொடுக்கப்படவில்லை. அவர்களை வெறும் கூலியாகப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதை சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். ஒவ்வொரு பஸ் தொழிலாளிக்கும் இன்ஷூரன்ஸ் திட்டத்தை ஏற்படுத்தவேண்டும் ஒவ்வொரு பஸ் தொழிலாளிக்கும் இன்ஷூரன்ஸ் திட்டத்தில் கண்டிப்பாக செய்யவேண்டும். அதற்கான வசதிகளை முதலாளிகள் செய்யவேண்டுமென்று தொழில் சட்டங்கள் மூலமாக உறுதிப்படுத்தவேண்டும். பாக்டரிகளில் தொழிலாளர்களை வேலைக்கு எடுக்கும்போது வேலைத்தேடித்தரும் ஸ்தாபனத்தின் மூலமாகத்தான் எடுக்கவேண்டுமென்று இல்லாமல் ஏதோ சிலர் சிபார்சு கடிதத்தின் மேல் பல இடங்களில் வேலையில் அமர்த்திக்கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக வேலூரில் சைகிள் சாமான்கள் உற்பத்தி செய்யக்கூடிய பாக்டரியில் ஒரு ஊழியரைக்கூட வேலைத்தேடிக் கொடுக்கும் ஸ்தாபனத்தின் மூலமாக எடுக்கவில்லை. அங்குள்ள ஆளும் கட்சியினர்களைச்சேர்ந்த சில தலைவர்களின் பேச்சைக்கேட்டுக்கொண்டு அவர்கள் சொல்லக்கூடிய ஆட்களைத்தான் இந்த சைகிள் பாக்டரியில் எடுத்துக்கொள்கிறார்கள். ஆகையால் வேலைத் தேடிக்கொடுக்கும் ஸ்தாபனத்தின் மூலமாகத்தான் எல்லா தொழிற்சாலைக்கும் ஆட்களை எடுக்க வேண்டும், அப்பொழுதுதான் எல்லா தொழிலாளர்களுக்கும் பரவலாக வேலை கிடைக்கும் என்று தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **SRI T. P. ELUMALAI**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் தொழிலாளர் மான்யத்தின் மீது நான் பேசுவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். காரணம் என்னவென்றால் இந்தத் துறையில் தலைமைத் தாங்கி நடத்திவருகிற அமைச்சர் அவர்கள் தொழிலாளர்கள் மத்தியிலே வேலைசெய்தவர், தொழிற்சங்கத் தலை

[Sri T. P. Elumalai] [15th March 1961

வராக இருந்து இன்றைக்கு அமைச்சராகவும் இருந்து, அவர்கள் செய்த பல நல்ல காரியங்களை எடுத்துச் சொல்லக் கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. மேலும் அவர்கள் மூலம் இன்னும் பல நல்ல காரியங்கள் செய்துகொடுக்கவேண்டும் என்பதை எடுத்துச்சொல்கிற வாய்ப்பு இன்றைக்கு எனக்கு ஏற்பட்டிருக்கிற காரணத்தினால் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். தொழில் அமைச்சர் அவர்கள் தொழிலாளர்கள் மத்தியிலே வேலைசெய்த அனுபவத்தின் காரணமாக இப்போது தொழிலாளர்களுக்கு வேண்டிய பல நல்ல சட்டங்கள் செய்திருக்கிறார்கள். தொழிலாளர்கள் மான்யம் என்றால் பல தொழிற்சங்கத்தலைவர்கள் இங்கே வார்சாக பேசுவதை இதற்கு முன்னாலே பார்த்திருக்கிறோம். 1952-ம் ஆண்டில் தொழிலாளர் மான்யம் இந்தச் சபை முன் வந்தபோது இங்குள்ள அங்கத்தினருக்கு பேச நேரம் கிடைக்காது. அப்படி இருந்த ஒரு மான்யத்தின்மீது இப்போது பேசுவதற்கு ஆளைத்தேடிப்பிடிக்க வேண்டிய நிலை வந்திருக்கிறதென்றால்—எதிர்க்கட்சியிலும் சரி, ஆளும் கட்சியிலும் சரி—அதற்குக்காரணம், பேசுவதற்கு குறைகள் இல்லாதது தான். நம்முடைய அமைச்சர் அவர்கள் முன்னால் பேசியபோது சொன்னார்கள் தொழில் அமைதி இந்த நாட்டிலே ஏற்பட்டதற்காக தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் இந்த நேரத்திலே நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன் என்று. உண்மையிலே தொழிலாளிகளும் முதலாளிகளும் ஒன்றுபட்ட நிலைமையிலே சேர்ந்து தொழிற்குறைகளை தாங்களாகவே திருத்திக் கொள்ள முன்வந்தார்களானால் பல பிரச்னைகள் சமாதானமாகவே திருத்திக்கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படுமென்று நினைக்கிறேன்.

என்னுடைய பகுதி தொழிலாளர்கள் நிறைந்த பகுதி. நான் வசிக்கின்ற திருவொற்றியூரை எடுத்துக்கொண்டால் அங்கே 38 தொழிற்சாலைகள் இருக்கின்றன. களரகத்தொழிற்சாலைகள் உள்ள, 14 கம்பனிகள் இருக்கின்றன. சிறிய சிறிய தொழிற்சாலைகள் 24 இருக்கின்றன. சென்ற 10 ஆண்டுகளுக்குள்ளாக இந்த முன்னேற்றம் இந்தப்பகுதியிலே ஏற்பட்டிருப்பதை குறித்து நான் பெருமைப்படுகிறேன். நம்முடைய தொழில் அமைச்சர் அவர்களுடைய நல்ல சேவையினால் அப்பேற்பட்ட தொழிற்சாலைகள் அங்கே ஏற்பட்டிருக்கின்றன. இதனால் ஆளும் கட்சியைச் சார்ந்த என்போன்ற ஊழியர்களுக்கு ஒரு பெருமையும், நல்ல செல்வாக்கும் இருக்குமா என்றால் அதுதான் இல்லை. இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஏறக்குறைய 10 ஆண்டுகளில் காங்கிரஸ் ஆட்சி புரிகின்ற இந்தக் காலத்தில்தான் திருவொற்றியூரில் 38 தொழிற்சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. இதனால் ஏறக்குறைய 11 ஆயிரம் தொழிலாளர்கள் வேலைசெய்கிறார்கள் என்று சொன்னால் இது பெருமைக்குரிய விஷயமாகும்.

இருந்தாலும் இந்த விஷயத்தை தொழிலாளர்கள் எந்த முறையில் பார்க்கிறார்கள், முதலாளிகள் எந்த முறையில் பார்க்கிறார்கள், அங்குள்ள குடிமக்கள் எந்தமுறையில் பார்க்கிறார்கள் என்றால் முன்னேற்றமேயில்லையென்றுதான் அவர்கள் நினைக்கிறார்கள்.



15th March 1961] [Sri T. P. Elumalai]

காரணம், அந்தத் தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்பு ஏற்படுவதற்கு முன்னர், கட்டிடம் கட்டுகிறபோது, அப்பகுதிகளிலுள்ள சாதாரண தொழிலாளர்கள் (கூலியாட்கள்) கல் சுமப்பது, சுண்ணாம்பு எடுத்துக் கொடுப்பது போன்ற வேலைகளை மூன்று ஆண்டுகளாக உழைத்து கட்டிடம் முடிந்து தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுகிறபோது அவர்கள் வெளியே வந்து விடுகிறார்கள். பிறகு வெளியூரிலிருந்து வருகிறவர்களுக்குத்தான் வேலை வாய்ப்பு கிடைக்கிறது. அங்குள்ள சாதாரண தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பது கிடையாது. ஆகவே அவர்கள், சர்க்கார் முன்னேற்ற வேலைகள் செய்கிறார்கள் என்று சொல்கிறார்களே, எங்களுக்கு வேலை கிடைக்காத முன்னேற்றம்தானா என்று அவர்கள் கேட்கிறார்கள்.

THE HON. SRI R. VENKATARAMAN : தொழிலாளர்களுக்குத்தான் வேலை வாங்கிக் கொடுக்கப்படுகிறது. இந்தத் தொழிலாளர்களுக்குத்தான் வாங்கிக்கொடுக்க வேண்டும், திருவொற்றியூரில் உள்ள தொழிலாளர்களுக்குத்தான், இன்ன ஊர் தொழிலாளர்களுக்குத்தான் என்று சொல்லவில்லை.

SRI T. P. ELUMALAI : மற்றொரு விஷயம் சொல்ல ஆசைப்படுகிறேன். பத்தாயிரம் தொழிலாளர்கள் அங்கு வேலை செய்கிறார்கள் என்று சொன்னால் அவர்கள் வெளியேயிருந்து வருகிறார்கள். காலையில் 8 மணிக்கு தொழிற்சாலைக்கு வரவேண்டுமென்றால் காலையில் 7 மணிக்கு புறப்பட்டு பஸ்நிலையத்திற்கு வருகிறார்கள். அங்கு வந்து நின்று டயத்தில் பஸ் கிடைக்காததால் அவர்கள், இந்த சர்க்கார் சரியானபடி பஸ் விடுவதில்லை என்று சர்க்காரை குறை கூறுகிறார்கள். கிராமங்களிலுள்ள தொழிலாளர்களும் தொழிற்சாலைகள் ஏற்பட்டும் வேலை வாய்ப்பு கிடைக்கவில்லையே என்று வருத்தப்படுகிறார்கள். வேலை வாய்ப்பு கிடைத்தவர்களும் வேண்டிய வசதிகள் உடனடியாக கிடைப்பதில்லையே என்று அவர்களும் குறை கூறக் கூடிய நிலை இருக்கிறது. ஆகவே முன்னேற்ற வேலைகள் பல செய்தாலும், அங்கு வேலையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு வேண்டிய வசதிகள் உடனடியாக ஏற்படவில்லை என்ற ஒரே ஒரு காரணத்திற்காக சர்க்காரையும், அந்த இலாகாவையும் குறை கூறக்கூடிய நிலை ஏற்படுகிறது. ஆகவே இதையனுசரித்து எந்தெந்தப் பகுதிகளில் தொழிற்சாலைகள் ஏற்படுகிறதோ அந்தப் பகுதிகளிலுள்ள ஏழை மக்களுக்கு அங்கு வேலை வாய்ப்பு வசதி செய்து கொடுப்பதோடு கூட சர்க்கார் அதுபற்றி சட்டம் செய்யாவிட்டாலும், ஆலோசனையாக அவர்கள் தொழிற்சாலைகள் ஆரம்பிப்பவர்களிடம் சொல்லி அந்தப் பகுதியில் உள்ள தொழிலாளர்களுக்கு வேண்டிய வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வீடு கட்டும் விஷயத்தில், திருவொற்றியூர் பகுதியில் இவ்வளவு தொழிலாளர்கள் இருந்தபோதிலும் பாதிக்கு மேல் தொழிலாளர்கள் வெளியிலிருந்து வருகிறார்கள். ஆகவே சர்க்கார், தொழிற்சாலைகளின் பக்கத்தில் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தை அமைச்சர் அவர்கள் முனைந்து செய்து கொண்டு வருகிறார்கள். மேலும் அதில் நல்ல முயற்சி இருக்க வேண்டும். துரித

[Sri T. P. Elumalai] [15th March 1961

மான நடவடிக்கைகளில் ஈடுபட்டு இதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, பஸ் போக்குவரத்து இலாகாவில் வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு சர்வீஸ் பேரில் அவர்களுக்கு பதவி உயர்வு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக நான் சொல்லவிரும்புவது, கண்டக்டர்களாக வேலை செய்பவர்களை டைம் கீப்பர், இன்ஸ்பெக்டர்ஸ் போன்ற வேலைகளுக்கு அவர்கள் சர்வீஸ் பேரில் அந்த உயர்வுகளை கொடுத்து அந்த வேலைகளில் அமர்த்தவேண்டுமென்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக தொழிலாளர் இலாகாவில் இருக்கிற கன்சீலியேஷன் ஆபீஸர், லேபர் கமிஷனர் அவர்களும் எங்கெங்கு தொழில் அமைதிக்கு பங்கம் ஏற்படுகிறதோ அங்கெல்லாம் சென்று உடனடியாக சமரசம் செய்வதை என் பகுதியில் நான் பார்த்திருக்கிறேன். பக்கிரிசாமி பிள்ளை அவர்கள் ராம கிருஷ்ணா முல்வந்த்ராய் தொழிற்சாலையில் ஏற்பட்ட கலகம்பற்றி சொன்னார்கள். பஞ்சாபிலிருந்து வந்திருக்கிற தொழிலாளர்கள் அங்கு வேலை செய்கிறார்கள். அவர்களுக்கும், தமிழ் தொழிலாளர்களுக்கும் அடிக்கடி சச்சரவு ஏற்பட்டு வருகிறது என்பது எனக்குத் தெரியும். இது விஷயத்தில் ஒரு நடவடிக்கை எடுத்து இந்த சச்சரவுக்கு காரணம் என்னவென்று ஆராய்ந்து அங்கு நல்ல நிலையை உண்டாக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த இலாகாவினால் மேற்படி விஷயத்தில் துரிதமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லையென்று அவர்கள் சொன்னார்கள். அத்தகராறு ஏற்பட்ட நேரத்தில் விம்கோ தொழிலாளர்கள் ஒரு ஸ்ட்ரைக்கில் ஈடுபட்டிருந்ததால், லேபர் கமிஷனர் அவர்களும், கன்சீலியேஷன் ஆபீஸர் அவர்களும் அதில் ஈடுபட்டு முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். கன்சீலியேஷன் ஆபீஸர் அவர்களை நான் பார்த்தேன். இது விஷயம் ஆலோசிக்கப்பட்டது. பின்னால் மறுநாள் விடும் கொளுத்தப்பட்டது. இந்த விஷயம் பற்றி கலெக்டர் அவர்களிடம் நான் பேசினேன். பின் அந்த தொழிற்சங்கத் தலைவர்களை வைத்துக்கொண்டு சுமுகமான ஒரு சமரசத்தை ஏற்படுத்தி மறுபடியும் அங்கு வேலை துவங்கி செய்து கொண்டு வருகிறார்கள், என்று கூறிக்கொண்டு நமது தொழில் அமைச்சர் அவர்கள் மேலும் மேலும் தொழிலாளர்களுக்கு எந்தெந்த முறையில் எப்படி எப்படி அவர்களுக்கு சம்பளவசதி, மற்ற வசதிகள் செய்துகொடுக்க முடியுமோ அவைகளை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **Sri V. SUBBIAH** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மான்யத்தின் மீதுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்த தொழில் துறையில் இன்று பல பிரிவுகள் இருக்கின்றன. டெக்ஸ்டைல் வொர்க்கர்ஸ், ரைஸ்மில், ப்ளவர் மில்ஸ், ப்ரெஸிங் மில்ஸ், பின்னர் ஜின்னிங் பாக்டரி, பீடித் தொழில் போன்று பல தொழில்களில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களுக்கு மினிமம் வேஜஸ், வேலை நேரம், சுகாதார வசதி போன்றவைகளில் மிகவும் கவனக் குறைவாக நடந்து கொள்ளப் பட்டு வருகிறது பலயிடங்களிலும். நம்



15th March 1961] [Sri V. Subbiah]

ராஜ்யத்தில் ஸ்டேட் இன்ஷூரன்ஸ் போன்றவைகள் 2 லட்சம் பேர்களுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டு லட்சம் பேர்கள் இந்த ராஜ்யத்தில் அந்த வசதி பெற்றிருக்கையில், மற்ற ஏனைய தொழில்களிலும் இதை கூடுமான வரையில் புகுத்த வேண்டுமென்பது என் போன்றோரின் ஆசை. குறைந்தபட்ச இன்ஷூரன்ஸ் திட்டங்கள் தொழிலாள மக்களுக்கு இருந்தால்தான் அவர்களும், அவர்கள் எதிர்கால சந்ததியினரும் பொருளாதார முன்னேற்றம் அடைய முடியும். தொழில் இன்ஷூரன்ஸ் திட்டம், கோவில்பட்டி, சிவகாசி, தூத்துக்குடி, திண்டுக்கல் போன்றயிடங்களில் புகுத்தியிருப்பதோடு, சிறு தொழில்களில் கூட, 500 பேர்களுக்கு மேற்பட்டு தொழிலாளர்கள் இருக்கும் இடங்களில் இந்த இன்ஷூரன்ஸ் திட்டம் இருக்க வேண்டியது மிகவும் அவசியம். அங்கு இதைப் புகுத்தவேண்டும். பின்னர், இப்பொழுது பாக்டரிகளில் விபத்துக்கள் நான்கு வருடங்களாக மிகவும் குறைந்திருப்பதாக காட்டப் பட்டிருக்கிறது. பாக்டரி இன்ஸ்பெக்டர்கள், லேபர் இன்ஸ்பெக்டர்கள் இவர்கள் செய்திருக்கக்கூடிய வேலை பாராட்டத் தக்கது. மெஷினரிகள் ஓடும் இடங்களில் அவைகள் நல்ல முறையில் "கவரிங்" செய்யப்பட்டிருக்கிறதா என்று கவனிக்க வேண்டும். மட்டேர்னிட்டி பெனிபிட் ஆக்ட் படி, விடுமுறை கொடுப்பது, அப்பொழுது கொடுக்கப்படும் சம்பளம் இவைகளில் பல குறைகள் இருக்கின்றன. அதையும் கவனிக்கவேண்டும். மாட்ச் பாக்டரி, பீடி பாக்டரி இவைகளில் வேலை செய்பவர்களுக்கு நேரமே இருப்பதில்லை. கிராமப் புறங்களிலிருந்து வரக்கூடிய குழந்தைகளிடமிருந்து இரவு 7 மணி வரை வேலை வாங்கப்படுகிறது. பாக்டரி ஆக்ட் இருக்கும் இடங்களில் அவர்களுக்கு பாதுகாப்பளிக்க ஒரு இலாகாவே அமைக்கப்பட்டிருந்தும் கூட இப்படி குழந்தைகளை 7 மணி வரை வேலை வாங்கக்கூடிய நிலை இன்றும் இருக்கிறது.

இதெல்லாம் குற்றச்சாட்டாக இருந்தாலும் இல்லையென்றாலும், 10-1 a.m.
குடிசைத் தொழில் என்ற முறையில் இன்றைக்கு எந்த அளவுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது என்பதை பார்க்கவேண்டும். இன்னும் எங்கள் பகுதியில் காட்டரிங் எஸ்டாபிளிஷ்மென்ட் ஆக்ட் மூலமாக பல விதமான கஷ்டங்கள் ஏற்படுகின்றன. பல சிறிய ஹோட்டல்காரர்கள் எல்லாம் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். உடை விஷயத்தில் அவர்கள் சிப்பந்திகளுக்கு டிரஸிங் அலவன்ஸ் கொடுக்கவேண்டியிருக்கிறது. இதன் மூலமாக சில கண்டிப்புகளை ஏற்படுத்தும்போது பலவிதமான கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஆகவே இந்த விஷயத்தில் அவர்களுக்கு சிறிது விதிவிலக்கு கொடுத்துத்தான் ஆகவேண்டும். இது இல்லாவிட்டால், கொஞ்சமாக மூலதனம் போட்டு ஹோட்டல் நடத்துகின்றவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள், ஆகவே இவர்களுக்கு விதிவிலக்கு அவசியம் என்று விரும்புகிறேன். தொழில் கோர்ட்டுகள் இன்னும் அதிகமாக்கப்படவேண்டும். மினிமம் வேஜஸ் பல தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளை எல்லாம் நடைமுறையில் கொண்டு வர வேண்டுமென்றால் தொழிற் கோர்ட்களில்

[Sri V. Subbiah] [15th March 1961

தான் குறைகளை தெரிவிக்க முடியும். இப்போது ராஜ்யம் பூராவுக்கும் 3 கோர்ட்டுகள்தான் இருக்கின்றன. ஆகவே தொழிற் கோர்ட்டுகளை அதிகப் படுத்த முயற்சி எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் . . . (கனம் ஸ்ரீ ஆர். வெங்கட்ராமன்: இப்போதுள்ள கோர்ட்டுகளிலே வேலையில்லை என்று சொல்லுகிறார்கள்) விவசாயக் கூலிகளுக்கு குறைந்த பட்சம் சம்பளம் 1—4—0 என்றோ அல்லது 1-8-0 என்றோ நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் இன்றைக்கு அவர்களுக்கு என்ன கிடைக்கிறது என்பதையும் நாம் பார்க்கவேண்டும். நிச்சயமாக இன்றைக்கு 12 மணி நேரம் வேலை செய்யக்கூடிய விவசாயக் கூலிகளுக்கு 12 அணாதான் கூலி கிடைக்கிறது. அவர்களுக்கு இந்தக் கூலியை கொடுக்கக்கூடிய நிலைமை இந்த நாட்டில் இருக்கிறதா என்பதையும் நாம் பார்க்கவேண்டும். உற்பத்தி செய்யக்கூடியவர்கள் இந்தக் கூலியை கொடுக்க சக்தியற்றவர்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய பொருளாதார அமைப்பு, அவர்களுக்கு ஏற்படுகின்ற கஷ்ட நஷ்டங்கள் இவைகளை எல்லாம் எடுத்துப் பார்த்தால் உண்மையிலேயே விவசாயக் கூலிகளுக்கு இந்த குறைந்த பட்ச கூலியைக்கூட கொடுக்க சக்தியற்றவர்களாகத்தான் இருக்கிறார்கள் என்பதை நாம் அறிந்துக்கொள்ள முடியும். இதையெல்லாம் அரசாங்கம் நன்றாக யோசித்துப் பார்த்து விவசாயக் கூலிகளுக்கு கூலியை நிர்ணயிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்ஷூரன்ஸ் திட்டத்தைப் பொறுத்த அளவில் கிராமப் பகுதிகளில் இன்றைக்கு குடிசைத் தொழில் போன்று இருக்கக்கூடிய தொழில்களில் பல ஆயிரக்கணக்கான மக்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். பீடித் தொழில், (மாட்ச்) தீப்பெட்டித் தொழில் போன்ற தொழில்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்களுக்கு இன்ஷூரன்ஸ் திட்டம் மிகவும் அவசியம். முக்கியமாக (ஃபைபர் வொர்க்ஸ்) வாணவெடி செய்யக்கூடிய தொழிலாளர்கள் மிகவும் அபாயகரமான வேலையில் ஈடுபடுகிறார்கள். இந்தத் தொழிலை மத்திய அரசாங்கத்திலிருந்து கவனித்து வந்தாலும் சரி, அல்லது ராஜ்ய சர்க்காரிலிருந்து கவனித்து வந்தாலும் சரி, இதில் வருடந்தோறும் பல பேர்கள் இறந்து போகிறார்கள். வெடிவிபத்து அடிக்கடி ஏற்படுவதால் இவர்கள் மிகவும் ஜாக்கிரதையாக வேலை செய்யவேண்டியிருக்கிறது. அவர்களுக்கு இன்ஷூரன்ஸ் திட்டம் மிக மிக அவசியமாய் இருக்கிறது. ஆகவே இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் கவனிப்பார்கள் என்ற எண்ணத்தால், இதை அவர்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன். அவர்களும் இதைப்பற்றி ஞாபகமாக இருப்பார்கள் என்று நம்புகிறேன். இந்த நிலையில் நம்முடைய நாட்டில் போல்ட்நட் செய்வது முதல் வேறு பல கருவிகள் உற்பத்தி செய்யக்கூடிய பாக்டரிகள் இருக்கின்றன. இம்மாதிரி இருக்கக்கூடிய தொழிற்சாலைகளில் இருக்கக்கூடிய தொழிலாளர்களை எல்லாம் ஒன்று படுத்தி அவர்களுடைய க்ஷேம நலத்திற்காக நம்முடைய ராஜ்யத்தில் பல அதிகாரிகள் இருக்கிறார்கள், பல பாக்டரி இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள்—அவர்கள் எல்லாம் தொழிலாளர்களிடத்தில் சங்கங்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவர்களை



15th March 1961] [Sri V. Subbiah]

எல்லாம் ஒன்றாக இணைத்து அவர்களுடைய க்ஷேம நலத்திற்காக பல திட்டங்களை ஏற்படுத்தி வேலை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதோடு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**Sri V. K. KOTHANDARAMAN:** ஸார், கனம் அமைச்சர் அவர்கள் இந்த மான்யத்தைக்கொண்டு வந்து பேசியபோது இந்த ராஜ்யத்திலே தொழிற்சாலைகளை அதிகப்படியாக ஏற்படுத்தியிருக்கிறோம், அதன் மூலமாக எத்தனையோ பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அதே போன்று இவரைக்கு தொழில் தகராறுகள் எல்லாம் கோர்டுகளுக்கு எல்லாம் போகாமல் கன்ஸிலியேஷன் மூலமாக தகராறுகளை எலலாம் நல்ல முறையில் தீர்த்து வைத்திருக்கிறோம் என்று எடுத்துக் கூறினார்கள். வேலையில்லாதவர்களுக்கு வேலை கொடுத்திருக்கிறோம் என்று சொல்லுவதில், முழு நேர வேலை எத்தனை பேர்களுக்கு கிடைத்திருக்கிறது, வேலை செய்யக்கூடியவர்களில் எத்தனை பேர்கள் பகுதி நேர வேலை செய்கிறார்கள், எத்தனை பேர்கள் பகுதி நேரத்திலும் பகுதி நேரம் வேலை செய்கிறார்கள் என்கின்ற புள்ளி விவரங்களை எல்லாம் தந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். இந்த அறிக்கையில் எத்தனை பேர்கள் வேலையில்லாமல் இருந்தால், அவர்களில் இத்தனை பேர்களுக்கு வேலை கொடுத்திருக்கிறோம் என்பதைப்பற்றி இனிமேலாவது தெட்டத் தெளிவாக சொன்னால் நன்றாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மான்யத்தின் பேரில் விவாதம் செய்வதற்கு இரண்டு மணி நேரம் ஒதுக்கியிருப்பது போதாது என்பது தான் என்னுடைய அபிப்பிராயம். இந்த மான்யத்தின் பேரில் பேசுவதற்கு இடம் கொடுத்தால் எத்தனையோ மணி நேரம் சேர்ந்தாற்போல் பேசுவதற்கு அங்கத்தினர்கள் தயாராய் இருக்கிறார்கள். (குறுக்கீடு) அப்படி பேசுவதற்குள்ள அங்கத்தினர்களை வெளியில் தேட வேண்டிய அவசியமில்லை, ஆளும் கட்சியில் இருக்கின்ற தொழிலாளர் தலைவர்கள் இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியில் இருக்கின்ற தொழிலாளர்கள் தலைவராக இருந்தாலும் அவர்களை பேசுவதற்காக வெளியில் போய் தேட வேண்டிய அவசியமில்லை, வேண்டுமென்றால் கனம் ஏழுமலை அவர்களைத்தான் இதில் பேசுவதற்கு வெளியில் போய் தேட வேண்டியிருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இதை எல்லா அங்கத்தினர்களும் உணர வேண்டும்.

மேலும், இன்றைக்கு நம் நாட்டில் தொழிற்சாலைகளை எவ்வளவோ ஆரம்பிக்கிறோம். அதே நேரத்தில் ஒரு பிரச்னை இன்றைக்கு அகில இந்திய பிரச்னையாக இருந்து கொண்டிருக்கிறது. அவைகளில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் நாட்டில் இருக்கின்ற விலைவாசி உயர்வுக்கு ஏற்றவாறு தங்களுக்கு ஊதிய உயர்வு வேண்டும் என்றும் அவர்களுடைய உரிமைக்காகவும் போராடுகிறார்கள். அந்த நேரத்தில் முதலாளிகள் திடீர் திடீரென்று தொழிற்சாலைகளில் கதவடைப்பு நடத்தி விடுகிறார்கள். இதை தடுக்க திட்டவட்டமாக ஒரு சட்டத்தை கொண்டு வர வேண்டும். தொழிலாளர்களுக்காக எவ்வளவோ சட்டங்கள்

கொண்டு வந்தாலும் கூட அவைகளை முதலாளிகளிடத்தில் நல்ல முறையில் கொண்டுவரமுடியாத நிலைமைதான் இருந்து கொண்டிருக்கிறது. உதாரணமாக வாலாஜாபாத் பாலாறு மில் கழிந்த ஆறு மாதங்களாக மூடப்பட்டு இருக்கிறது. இதன் காரணமாக சுமார் 400 குடும்பங்கள் பசியும் பட்டினியுமாக கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அந்த மில்லை ஏற்றெடுத்து நடத்துவதற்கு ஒரு நபர் முன் வந்திருக்கிறார்கள். அதே சமயத்தில் இந்த மில்லை. . . .

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த மாதிரி அந்த மில்லை ஏற்றெடுத்து நடத்துவதற்கு யாராவது முன் வந்தால், அந்த நபரை என்னுடைய ஆபீஸ்-க்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN : இண்டோ கமர்ஷியல் பாங்கில் இந்த மில்லை அடமானத்திற்காக ஈடுபடுத்தி சிக்கலாக்கி வைத்திருக்கிறார்கள். அந்தச் சிக்கலை நீக்கி கொடுப்பதாக இருந்தால் அதை நடத்துவதற்கு ஆள் தயாராக இருந்து கொண்டிருக்கிறார்கள். இதே போன்றுதான் திடீர் திடீரென்று கதவடைப்பு செய்யக் கூடிய முறையை தடுப்பதற்கு உடனடியாக ஒரு சட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அதிகாரம் நமக்கில்லை. மத்திய சர்க்காருக்குத்தான் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்லுவதாக இருந்தாலும் கூட, நமது சர்க்கார் மத்திய சர்க்காரை வற்புறுத்தி இதற்கு என்று ஒரு சட்டம் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவ்விதம் திடீரென்று கதவடைப்பு செய்வதால் தொழிலாளர்கள் மிகவும் கஷ்டப்படவேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் இதை நன்கு கவனித்து இதன் பேரில் தக்க நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்புகிறேன். அதேபோன்று பஞ்சாலை சம்பளக் கமிட்டி தீர்ப்பு ஒன்று வெளிவந்திருக்கிறது. அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றாமல் எத்தனையோ மில் முதலாளிகள் இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கிறார்கள். . . . . . .

THE HON. SRI R. VENKATARAMAN : எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா ?

SRI V. K. KOTHANDARAMAN : எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள், கோயம்புத்தூர், திருநெல்வேலி முதலிய இடங்களில் எல்லாம் இருக்கிறார்கள். திட்டவட்டமாக இத்தனை பேர்கள், இன்னின்ன இடங்களில் என்று வேண்டுமானால் நானைக்கே விவரங்கள் கொடுக்கிறேன். இவர்களில் நாலைந்து பேர்களின் மீதாவது நடவடிக்கை எடுத்து இதை அமல் நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே போன்று பீடித் தொழிலாளர்கள், ஹோட்டல் தொழிலாளர்கள் இவர்களுடைய நன்மைக்காக பல சட்டங்கள் கொண்டு வந்திருக்கிறோம். இவைகளை எல்லாம் அமலுக்கு கொண்டு வந்து அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டும் என்று சொல்லக்கூடிய நேரத்தில், ஹோட்டல் தொழிலாளர்கள் பாதுகாப்புச்சட்டம் போன்றவற்றை கொண்டு





வரும்போது அதிலிருந்து விதிவிலக்குக் கொடுத்துக்கொண்டிருக்கின்ற பயங்கரமான நிலைமைதான் இருந்துகொண்டிருப்பதை நம்மால் பார்க்க முடிகிறது. அப்படி விதி விலக்கு எதற்காகக் கொடுக்கவேண்டும் ? அப்படி விலக்குக் கொடுக்கும் நேரத்தில் ஹோட்டல் தொழிலாளர் சங்கத்தைக் கலந்துவிட்டு, தொழிற் சங்கப் பிரதிநிதிகளைக் கலந்து செய்யப்பட்டதா என்று பார்த்தால் கிடையவே கிடையாது. இன்றைய தினம் ஹோட்டல் முதலாளிகள் சொல்லுகிறார்களென்றால் உடனே விதிவிலக்கு கொடுக்கும் நிலைமை இருக்கிறது. உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால் ஹோட்டல் தொழிலில் இருக்கக்கூடிய கொள்ளை லாபம் வேறு எதிலும் கிடையாது. போன மாதத்திலிருந்ததையும் இந்த மாதத்திலுள்ளதையும் பார்த்தால் விலையானது அன்றாடம் உயர்ந்து போகக் கூடியதாக இருக்கிறது. போன மாதத்தில் சாப்பாடு 10 அணாவாக இருந்தது திடீரென்று 75 நயா பைசாவாக உயர்ந்திருக்கிறது. இது வரையில் 16 நயா பைசாவாக இருந்ததை இன்றைக்கு 18 நயா பைசா என்று போட்டிருக்கிறார்கள். இந்த மாதிரி அவர்கள் அபிப்பிராயம்போல் விலைவாசியை உயர்த்தி கொள்ளையடிக்கும் நிலைமை இருகிறதேயொழிய, அதில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளிகளுக்கு சம்பள உயர்வு கொடுப்பதோ அல்லது எந்த விதமான பாதுகாப்பு கொடுப்பதோ இருக்கிறதா என்றால் இல்லை. ஆகவேதான் இது போன்ற ஒரு நிலைமையைப் போக்க ஹோட்டல் தொழிலாளர்கள் பாதுகாப்புச் சட்டத்தை அமுல்படுத்தவேண்டும்.

அதே போன்று பீடித் தொழிலாளர்கள் சட்டம் வந்ததோ இல்லையோ, இந்தச் சட்டம் வருவதற்கு முன்னால் இருந்த நிலைமையை விட மோசமான நிலைமை இன்றைக்கு இருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். பீடித் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கூலி வேண்டும். ஆனால் இன்றைய தினம் அந்த குறைந்த பட்ச கூலியைக் கொடுக்காமல் பழைய கூலியையே—ரூ. 1-6-0, ரூ. 1-8-0 என்ற அளவுக்குக் கொடுக்கக்கூடிய நிலைமை இருந்தாலும், அமைச்சர் அவர்கள் சொல்லுவார்கள் இதை லேபர் கோர்ட்டுக்கு எழுதிக் கொடுங்கள் என்று. நான் கேட்பேன் இன்றைக்கு அதிகாரிகள் அதை அமுல்படுத்தக்கூடிய அளவுக்கு, குறைந்த பட்சகூலியை கொடுக்கச் செய்யக்கூடிய அளவுக்கு, நடவடிக்கை எடுக்கக்கூடிய நிலைமை இருக்கிறதா என்றால் கிடையவே கிடையாது. இன்றைக்கு பீடித் தொழிலாளர் சட்டத்தில் 2 (ஜி) என்று சொல்லக்கூடிய செக்ஷன் செல்லாது என்று தீர்ப்பு வந்ததன் காரணமாக யார் தொழிலாளி, யார் முதலாளி என்பதிலே இருக்கக்கூடிய கோளாறு காரணமாகத்தான், அவர்களும் தாங்கள் தொழிலாளி, முதலாளிதானே செய்ய வேண்டும் என்று ஊசலாட்டம் இருக்கிறது. பீடித் தொழிலாளர் பாதுகாப்புச் சட்டம் நிறைவேற வேண்டுமானால் புகையிலை லைசென்ஸ் கொடுப்பதானது நம்மிடத்திலே யார் ஃபாக்டரி லைஸென்ஸ் வாங்குகிறார்களோ அவர்களுக்கு—இன்னாருக்கு புகையிலை லைஸென்ஸ் கொடுக்கவேண்டும் என்று ராஜ்ய சர்க்கார் அனுமதியின் பேரில்—மத்திய சர்க்கார் புகையிலை லைஸென்ஸ் கொடுக்க

வேண்டும். அல்லது புகையிலை லைசென்ஸ் கொடுக்கும் அதிகாரம் ராஜ்ய சர்க்கார் கையில் இருக்கவேண்டும். அந்த அளவுக்கு வந்தாலொழிய பீடித் தொழிலாளர் பாதுகாப்புச் சட்டத்தை நம்மால் நடைமுறையில் கொண்டுவர முடியாது என்று இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

அதே போன்று குறைந்த பட்சக் கூலிச் சட்டத்தை பல தொழிலுக்குக் கொண்டுவந்து விட்டோம் என்று சொல்லக்கூடிய அதே நேரத்தில் இன்றைக்கு திடீர் திடீரென்று மேலும் மேலும் விலைவாசி உயரக்கூடிய நேரத்தில் விலை வாசிக்கு ஏற்றவாறு குறைந்தபட்ச கூலி இருக்கிறதா என்று பார்த்தால் கிடையாது. ஆகவே 15-வது முக்கூட்டு மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையிலே—உத்தேசமாக 2 வருஷத்திற்கு ஏறக்குறைய ஆகப் போகிறது என்று நினைக்கிறேன், ஆனால்—இது வரையிலே அந்த குறைந்தபட்ச கூலிகளை அதிகப்படுத்த முயற்சி எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு, உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை ஞாபகப்படுத்த ஆசைப்படுகிறேன்.

அதே போன்று இன்றைக்கு சர்க்கார் துறையிலே பல கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன—தனியார் துறையிலும் அநேக கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இது போன்ற கட்டிடங்களில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் கட்டிடம் விழுந்தோ அல்லது வேறு விதத்திலோ அங்கஹீனர்களாக ஆகிறார்கள், அல்லது உயிரை இழக்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அத்துடன் இல்லாமல் விலைவாசி உயர்வு ஏற்படுகிறது. வீடு கட்டும் தொழிலாளர்களுக்கு விலைவாசிகளுக்கு ஏற்றவாறு குறைந்தபட்ச கூலி கொடுக்கவேண்டும் என்று அடிப்படையில் கூலி நிர்ணயம் இருக்கிறதா என்றால் கிடையாது. ஆகவே அவர்களுக்கும் இந்த குறைந்தபட்ச கூலியைக் கொண்டுவர சர்க்கார் முயற்சி செய்ய வேணடும்.

அதே போன்று இன்றைக்கு இன்ஷூரன்ஸ் பணம் கோடிக்கணக்கில் குவிந்து கிடக்கிறது. இருந்தபோதிலும்கூட இன்றைக்கு தொழிலாளர்கள் பெரும்பாலும் டி.பி. வியாதியால் பாதிக்கப்பட்டவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு தனியாக வார்டுகள் கிடையாது. ஆகவே அவர்களுக்கென்று தனியாக வார்டுகள் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக வட ஆற்காடு ஜில்லாவிலே ராணிப்பேட்டையிலே மாத்திரம் தான் ஸ்டேட் இன்ஸ்யூரன்ஸ் ஸ்கீம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அந்த ஜில்லா பூராவுக்கும் கொண்டுவரவேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு பல தொழிற்சாலைகளில் வெல்ஃபேர் ஆபீஸர்களை நியமிக்கிறார்கள். முதலாளிகள் அவர்களுடைய சம்பளத்தைக் கொடுத்து அவர்களை நியமிக்கும் காரணத்தினால் லேபர் வெல்ஃபேர் ஆபீஸர்—தொழிலாளர்களுக்காக வேண்டி, அவர்களுடைய பாதுகாப்புக்காக இருக்கக் கூடியவர்—ஆனால் முதலாளிகளுடைய



சம்பளத்தை வாங்கும் காரணத்தினால் முதலாளிகளுக்கு சாதகமான நிலையில் இருக்கக் கூடிய நிலைமை இருக்கிறது என்பதை ஞாபகப்படுத்தி, அந்த வெல்ஃபேர் ஆபீஸர்களுக்கு முதலாளிகள் சம்பளம் கொடுத்தாலும், அல்லது சர்க்கார் சம்பளம் கொடுக்கப்பட்டாலும், சர்க்காருடைய கண்காணிப்பின் கீழ் இருக்கக் கூடிய அளவுக்கு நாம் பார்த்துக்கொள்ளவேண்டும் என்பதை இந்த நேரத்திலே ஞாபகப்படுத்தி எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

***SRI K. ANBAZHAGAN**: சட்ட மன்றத்துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களும்-தொழில்களும் என்ற தலைப்பின் கீழ் இன்று வழங்கப்படுகிற மான்யத்தின்மீது தரப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானத்தின் மூலம் தொழிலாளர்களுடைய குறைகள் சிலவற்றை எடுத்துச் சொல்லுகிற வாய்ப்பு கிடைத்ததற்கு நான் மகிழ்கிறேன்.

தொழில் துறை அமைச்சர் அவர்கள் உண்மையாகவே, இன்றையதினம் தொழிலாளர்களிடத்தில் நல்லெண்ணம் கொண்டிருக்கிறார் என்று ஆளுங்கட்சியினரால் பாராட்டப்படுகிற அவருக்கு அவர்கள் தன்னுடைய நல்லெண்ணத்தைக் காட்டிக்கொள்ளுவதற்கு மிகுந்த அளவு முயற்சித்திருக்கிறார் என்று நானும் உணருகிறேன். ஆனால் அவருடைய நல்லெண்ணம் முழுவதும் செயலில் புலப்படவில்லை என்று நான் தெரிவித்துக் கொள்ளவேண்டியது அவசியமாகிறது. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர் கனம் மாதாகௌவுடர் அவர்கள் அமைச்சருடைய தொழில் துறைத் தொண்டைப் பெரிதும் பாராட்ட விரும்புகிறேன், என்றாலும் எனக்கு அதற்குப்போதிய நேரம் இல்லை என்று தொடங்கி தொழிலாளர்களின் குறைகளை யெல்லாம் இங்கு எடுத்துச் சொன்னார். அதுவே உண்மை நிலையைக் காட்டுவதாகும். நான் இப்போது அமைச்சர் அவர்கள் எண்ணிப்பார்க்கவேண்டும் என்று விரும்புவது சென்ற ஆண்டுப் புள்ளிகள் காட்டுவதை விட இந்த ஆண்டு புள்ளிவிவரத்தில் தொழிலாளர்களுக்குச் சில நன்மைகள் பெருகி இருக்கின்றன என்பதை விட, எந்த அளவு தொழிலாளர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று ஒரு லட்சியக் குறிப்பை நாம் அமைத்துக்கொள்ள முடியுமோ அந்த இலட்சியத்தை நெருங்குவதிலே நாம் வெற்றி பெற்றிருக்கிறோமா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்; அதிலும் தொழிலாளர்களிடத்தில் பற்றுடைய அமைச்சர் என்று கருதப்படுவதனால், அந்த வழியில் எண்ணிப்பார்ப்பது வரவேற்கத் தக்கதாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டில் எவ்வளவு பேர் வேலை வாய்ப்பைத் தேடினார்கள், எவ்வளவு பேர்களுக்குத்தொழில் கிடைத்தது என்று புள்ளி விவரத்தைத் தரும் நேரத்தில் " எம்ப்ளாய்மெண்ட் ஆப்பர்சுனிட்டீஸ் " வேலை வாய்ப்பு என்ற தலைப்பில், 1960-ம் ஆண்டிலே 187, 270 பேர்கள் வேலை வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள், அவர்களுள் 34,778 பேர்களுக்கு வேலை தேடிக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற ஒரு புள்ளி விவரத்தைத் தந்து, இது சென்ற ஆண்டு வேலை

[Sri K. Anbazhagan] [15th March 1961

கிடைத்ததைவிட 38·4 சத விகிதம் அளவுக்கு அதிகமாக வேலை தேடித் தரப்பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட்டு மகிழ்ந்திருக்கிறார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், சென்ற ஆண்டு தொழில் வாய்ப்பு கிடைத்ததை விட இந்த ஆண்டு தொழில் வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள் என்பதைத் தெரிவிப்பதைப் போன்று, எவ்வளவு பேர் தொழில் வாய்ப்பைத் தேடித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள், அவர்களுள் எந்த அளவினருக்கு வேலை கொடுத்திருக்கிறார்கள் என்ற அந்த சதவீதத்தைக் கணக்கிட்டுப் பார்த்தால்தான் உண்மை நிலை தெரியும். ஏறத்தாழ 18 சதவீதத்தினருக்குத்தான், விண்ணப்பித்தவர்களுள் வேலை கொடுத்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கூடும் 1958-ல் 196,661 பேர்கள் விண்ணப்பித்துக்கொண்டார்கள், 1959-ல் 204.891 பேர்கள் விண்ணப்பித்துக்கொண்டார்கள், ஆனால் 1960-ம் ஆண்டிலே 187,270 பேர்கள் தான் விண்ணப்பித்துக்கொண்டார்கள், ஆகையால் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தால் விண்ணப்பித்துக்கொண்டவர்களின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது பார்த்தீர்களா என்று கேட்கக் கூடும். நமது அமைச்சர் அவர்களுக்கு நாட்டு மக்களுடைய உள்ளத்தில் இருக்கக் கூடிய உணர்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன்,—விண்ணப்பித்தும் போதுமான அளவுக்கு வேலை கிடைக்கவில்லை என்று அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற அவநம்பிக்கையின் காரணமாகத் தான் விண்ணப்பித்துக் கொண்டவர்களின் எண்ணிக்கை குறைந்திருக்கிறதே தவிர, மற்றவர்களுக்கு எல்லாம் வேலை கிடைத்து விட்டது என்பதன் அடையாளம் அல்ல இது என்பதை.

அதே போன்று இன்றைய தினம் தமிழ்நாட்டிலே உள்ள பெரும்பாலான மக்களுக்கு விவசாயத் துறையிலேதான் வேலை இருக்கிறது. அவர்களுடைய சராசரி வருமானம் எந்த அளவுக்கு இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் எண்ணிப்பார்த்தால், விவசாயத் துறையிலே உள்ளவர்கள் தொழிலாளி என்ற சொல்லுக்கு இலக்காகக்கூட முடியாத அளவுக்கு அவர்கள் நிலைமை இருக்கிறது. ஏறத்தாழ அரசாங்கம் வெளியிட்ட குறைந்த பட்சக் கூலி நிர்ணயக் குறிப்பில் ஒரு நாளைக்கு ரூ. 1–4–0, ரூ. 1–0–0, 85 புதிய காசுகள் என்ற அளவில் அவர்கள் கூலி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

அது குறைந்தபட்சக் கூலி அதாவது மினிமம் வேஜஸ் என்ற பேரால் தீர்மானிக்கப்படுகிறது என்றாலும் அது அவர்கள் கூலியைக் குறைவாக்கவே கூடத் துணையாகிறது என்பதைக் கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். குறைந்த பட்சம் இந்த அளவு கூலி கொடுக்கலாம் என்று அரசாங்கம் சொல்வது உண்மையாகவே அந்த அளவு குறைந்த கூலி கொடுக்க, அந்த அளவு தாழ்ந்த நிலைமை உண்டுபண்ணிவிடக் காரணமாகுமோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது. குறைந்தபட்சக் கூலிப்படி மாத வருமானத்தைக் கணக்கிட்டுப் பார்த்தால் 30 நாளைக்கும் வேலை கிடைத்து வேலை செய்தாலுங்கூட 47, 50 ரூபாய்தான் கூலி



15th March 1961] [Sri K. Anbazhagan]

கிடைக்க முடியும். 30 நாளைக்கும் தொடர்ந்து வேலை கிடைக்குமா என்றும் பார்க்கவேண்டும். விவசாயத்திலே ஈடுபட்டுள்ளவர்களை எடுத்துக்கொண்டால், ஆண்டிலே ஆறுமாதம்தான் அவர்களுக்கு நிச்சயமான வேலை இருக்கிறது. மிச்சம் ஆறு மாதகாலம் அவர்களுக்கு வேலை உறுதி கிடையாது. இதிலே ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நிலைமையை எடுத்துக்கொண்டால், ஆண்டிலே 6 அல்லது 8 மாதங்களுக்கு மட்டும் அதிகபட்சம் மாதம் 50 ரூபாய் கூலி கிடைத்தால் மட்டும், அதை வைத்துக்கொண்டு எப்படி அவர்கள் வாழ்க்கை நடத்த முடியும்? அதை மாற்றுவதற்கோ அல்லது, மினிமம் வேஜஸ், குறைந்த அளவு கூலியை உயர்த்துவதற்கோ அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டார், என்ன முயற்சி எடுத்துக் கொண்டார் என்பதை அறிய விரும்புகிறேன்.

பொதுவாகவே பல்வேறு தொழிலாளர்களுக்கும் இன்றைய தினம் சராசரி மாத வருமானம் 77 ரூபாய் அளவாக இருக்கிறது நான் இதைப்பற்றி குறிப்பிடுவதற்கு காரணம், நாம் மற்ற நாடுகளோடு ஒப்பிட்டு நோக்கினால், மலைக்கும்-மடுவுக்குமான வேற்றுமை தெரியும். இன்றைய விலைவாசி ஏற்றத்தோடு இவர்கள் எப்படி இன்றைக்கு வாழ்க்கை நடத்த முடியும்? இன்றைய நிலையில், குறைந்தது மாதம் 120, 130 ரூபாய் கிடைத்தால்தான் வாழ்க்கையை ஓரளவு திருப்திகரமாக நடத்த முடியும். வருமானம் சராசரி 77 ரூபாய் என்றிருக்கும்போது, விவசாயிகளுக்கு 50 ரூபாய்தான் கிடைக்க முடியுமென்று சொன்னால், அவர்களுக்கு வேண்டிய உணவுப் பண்டங்களையாவது விலை குறைத்து தருவதற்கு ஏதாவது வழி செய்யப்பட்டிருக்கிறதா? ஆலைகளிலோ, பெரிய தொழிற்சாலைகளிலோ அல்லது சர்க்கரை ஆலைகளிலோ வேறு இடங்களிலோ பணியாற்றும் தொழிலாளர்களுக்கு அவர்களுக்கு அவசியமான பண்டங்களை விலை குறைத்துத் தருவதற்கு, சப்சிடி மூலமாக உதவுவதற்கு, அவர்களுடைய வாழ்க்கையில் ஏற்படும் அன்றாடச் சங்கடங்களைத் தீர்ப்பதற்குப் பண்டங்களை மலிவாகக் கொடுப்பதற்கு ஏதாவது வழி செய்திருக்கிறார்களா? என்று அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன். இவை ஒரு பக்கம் இருக்க, ஓய்வு நாட்களில் தொழிலாளர்கள் மகாபலிபுரத்திற்குச் சென்று அங்கு தங்குவதற்கு வசதியாக அவர்களுக்கு ஒரு ரெஸ்ட் அவுஸ் கட்டப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். எனக்கு இதைக் கேட்கும்போது மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது. ஆனால் மகாபலிபுரத்திற்குச் சென்று வருவதற்கு வேண்டிய பொருளாதார வசதி தொழிலாளிகளிடத்திலே எங்கே இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். அரசாங்கத்தின் செலவிலே வேண்டுமானால்; அரசாங்க பஸ்களிலே தொழிலாளர்களை ஏற்றிக்கொண்டு மகாபலிபுரத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் வரலாம். அப்படிக் கொண்டுபோய்வந்தாலும், அவர்கள் அங்காவது மன நிம்மதியுடன் இருக்க வேண்டுமல்லவா? அங்கும் பட்டினி கிடக்காமல், இரவில் இரண்டு இட்டிலிகளையாவது கொடுத்து பசிதணித்து அவர்களை அழைத்துக்கொண்டு வந்துசேர அரசாங்கம் பொறுப்பெடுத்துக்

[Sri K. Anbazhagan] [15th March 1961

கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் மகாபலிபுரம் போயும் மகிழ்ச்சியுடன் இருக்க முடியாது என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இந்த நாட்டிலே மிகப் பெரிய அளவில் இருக்கக் கூடிய தேயிலை, காப்பித் தோட்டங்களிலே உள்ள தொழிலாளர்கள் பலரும் ஏமாற்றப்படுகிறார்கள்; வஞ்சிக்கப்படுகிறார்கள் என்றே சொல்லவேண்டும். கனம் மாதாகவுடர் அவர்கள் சொன்னதைப் போன்றே, இந்தத் தோட்டங்களிலே உள்ள முதலாளிகள் அங்கு பணியாற்றக் கூடிய தொழிலாளர்களின் கணக்கைக்கூட சரியான முறையில் வைத்துக் கொள்ளாமல் ஏமாற்றி வருகிறார்கள் என்று தெரிகிறது. தேயிலை கிள்ளுபவர்கள் குறைந்தபட்சம் ஒரு நாளைக்கு இவ்வளவு தேயிலை கிள்ளவேண்டுமென்றும் அதற்கு இவ்வளவு கூலி என்றும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த அளவுக்குமேல் ஒரு நாளில் தேயிலை கிள்ளியிருந்தாலும், அந்த அதிகப்படி தேயிலையை எல்லாம் மாதக் கணக்கில் சராசரி பார்த்து பின்னரே குறைந்துபோன நாட்களுக்கு நிறைவு செய்துகொண்ட மிச்சத்திற்கு மட்டுமே மிகுதி கூலி தருவதால் தொழிலாளர்கள் ஏமாற்றப்படுகிறார்கள். இதற்கெல்லாம் அரசாங்கம் என்ன செய்திருக்கிறார்கள்? அதேபோன்று இந்தத் தொழிலாளர்களுடைய பல குறைகள் நிவர்த்திக்கப்படவில்லை. இங்கு பேசிய பல நண்பர்களும் எவ்வாறு தோட்டத் தொழிலாளர்கள் சிறுசிறு விஷயங்களிலும் நியாயம் வழங்கப்படுவதில்லை; நசுக்கப்படுகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள்.

ஒரு தேயிலைத் தோட்டத்தில் கணவனும், மனைவியும் தொழிலாளர்களாக இருந்து, கணவன் மனைவியிடையே சண்டை சச்சரவு ஏற்பட்டு, மனைவி தோட்டத்தின் முதலாளியிடமோ நிர்வாகியிடமோ சென்று முறையிட்டுக்கொண்டால், அந்த முறையீட்டை வைத்துக்கொண்டு, சில சமயத்தில் கணவன் பழிவாங்கப்படுகிறான். நான் பெண்களை இழித்துக் கூற வேண்டுமென்பதற்காகவோ ஆண்களிடத்திலே பரிதாபப்பட்டோ இதை நான் சொல்லவில்லை. இம்மாதிரியாக குடும்பத்திலே இருக்கக்கூடிய ஒரு சிக்கலை வைத்துக் கொண்டுகூட அவர்கள் பழிவாங்கப்படுகிறார்கள் என்பதற்காகவே குறிப்பிடுகிறேன். அப்படிப் பழிவாங்கப்படுவதை எதிர்த்து அவர்கள் கோர்டுக்குச் சென்று நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சித்தால், அதற்குள் அவர்களுடைய வேலையும் போய்விடுகிறது. அவர்கள் அங்கு குடியிருப்பதற்குக்கூட வசதியில்லாமல் அப்புறப்படுத்தப்படுகிறார்கள். அப்படி வேலையிலிருந்து நீக்கப்படுகிறவர்களுக்கு வழக்கு முடிந்து நியாயம் கிடைக்கும் வரையில் ஒரு அரை சம்பளமாவது கிடைக்கக்கூடிய நிலை இருக்குமானால், ஒரு நாளைய ஊதியத்தில் அரை நாள் கூலியாவது கிடைக்குமானால், அவர்களுக்குப் பெரும் உதவியாக இருக்கும். கோர்டுமூலம் நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கும் வசதியாக இருக்கும். இப்போதுள்ள நிலைமையில் அவர்கள் முதலாளிகளின் பிடிப்பிலிருந்து தப்ப முடியாத நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. இதைப் மாற்றுவதற்கும் அரசாங்கம் வழி காணவேண்டும்.



15th March 1961] [Sri K. Anbazhagan]

பொதுவாகவே, தொழிலாளர்கள் நியாயமாகப் பெறக்கூடிய விடுமுறைநாட்களைப் பெறுவதற்காவது வசதி செய்துகொடுக்க வேண்டும். இப்போது மாநில ஆய்வுக்குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவினால் இந்த விடுமுறை நாட்களைப் பரிசீலனை செய்யப்படும் என்று அறிக்கையின் முதல் பக்கத்திலே காணப்படுகிறது. அப்படி விடுமுறை நாட்களைப்பற்றி பரிசீலனை செய்கின்றபோது, பண்டிகை நாளாக பெறக்கூடிய விடுமுறை நாட்களையும், சேர்த்து தனி விடுமுறை நாட்களாகப் பெறக்கூடிய அளவுக்கு அவர்களுக்கு வசதியளிக்கவேண்டும். ஏனென்றால் பல்வேறு இடங்களில் பண்டிகை தினங்களில் விடுமுறை அளிக்கப்படவில்லை, சிலருக்குத் தேவைப்படவுமில்லை.

அதேபோல் தொழிற் சங்கங்களை அங்கீகரிப்பதற்கான முறை பற்றி இதுவரையில் சட்டதிட்டங்கள் ஏற்படவில்லை என்றே அறிகிறேன். அமைச்சர் அவர்கள் இதில் நல்ல நோக்கமுடையவராக இருந்தாலும்கூட, இன்றைய தினம் ஆளும் கட்சியினுடைய விருப்பத்தையும் காக்கக் கூடியவராக இருக்கிறார். காங்கிரஸ் சார்புடைய தொழிற் சங்கங்களை எப்படிப் பலப்படுத்துவது என்பதில் தான் பொதுவாக கவனம் செலுத்தப்படுகிறது. ஐ.என்.டி.யு.சி.-யைத்தான் பலப்படுத்திக்கொண்டு வருகிறார்களே தவிர, பிற தொழிற் சங்கங்கள் அங்கீகாரம் வேண்டுமென்று விரும்பினால், அவைகளுக்கு எளிதில் கொடுப்பதில்லை. காங்கிரஸ் தொழிற் சங்கங்கள் எவ்வளவு சிறியதாக இருந்தாலும், அதைப் பலப்படுத்த எல்லாவகையான உதவிகளும் அதற்குக் கொடுக்கப்படுகிறது. அதே நேரத்தில் சிறிதும் பொருட்படுத்தாமல், பிற சங்கங்களுக்கு கண்டிப்பாக அங்கீகாரம் மறுக்கப்படுகிறது. ஆகவே தொழிற் சங்கங்களை அங்கீகரிப்பதைப் பற்றித் திட்டவட்டமான கருத்துக்களை இந்த அரசாங்கம் வெளியிட வேண்டுமென்று விரும்புகிறேன். தேவையான விதிமுறை செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாகத் தொழிலாளர்களுக்கு எந்தவித தீங்குகளும் வராதபடி அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படும் என்று கூறுகின்ற அரசாங்கம், அரசாங்கத்தில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு என்ன பாதுகாப்பு கொடுத்திருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. அவர்கள் தொழிற் சங்கங்களை அமைக்க இந்த அரசாங்கம் அனுமதிக்கவில்லை. இந்த நிலை ஏன் என்று கேட்க விரும்புகிறேன். எங்கு பணியாற்றினாலும் குறைந்த வருமானமுள்ளவர்கள் சங்கங்கள் அமைத்துக் கொள்வதிலேதான் நாம் சலுகைகள் காட்டவேண்டும். ஆனால் அவர்களுக்கே மறுக்கப்படுவதைத்தான் பார்க்கின்றோம். 200 ரூபாய், 250 ரூபாய் சம்பளம் வாங்கக்கூடியவர்கள் அல்லது ஒரு அப்பர் டிவிஷன் கிளார்க் அளவுக்கு மேற்பட்டவர்களுக்கெல்லாம் தொழிற் சங்கங்கள் வேண்டியதில்லை என்பதை நான் ஏற்கிறேன். தாழ்ந்த நிலையிலுள்ளவர்கள் தொழிற் சங்கங்கள் அமைப்பது அவசியம் முடியும். ஆனால் இவர்களுக்குத் தடை இருப்பதினால்; மருத்துவ

மனைகளிலே பணியாற்றக்கூடிய குறைந்த வருமானமுள்ள சிப்பந்தி களும், இதர சர்க்கார் சிப்பந்திகளும் தங்கள் குறைகளை சங்கத்தின் மூலம் எடுத்துச் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் சங்கங்கள் அமைத்துக் கொள்ள அனுமதிப்பது அவசிய மென்று கருதுகிறேன்.

அதேபோல், இன்றைய தினம் சிற்றுண்டிச் சாலைகளில் வேலை செய்யக்கூடிய ஓட்டல் சிப்பந்திகள் நிலவரத்தைப் பார்த்தால் அவர்கள் தொடர்ந்து 6 மாத காலத்திற்குமேல் பணியாற்றினால் தான் அவர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்ற சட்டம் இருக் கிற காரணத்தினால், பல இடங்களிலே அவர்கள் தொடர்ந்து பணி செய்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை என்பது தெரியும். 5 அல்லது 5½ மாதங்கள் ஆனவுடன் அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுகின்றனர். மறுபடியும் சில நாட்கள் அல்லது ஒரு மாத காலம் கழித்து மீண்டும் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப் படுகின்றனர். ஆகவே அவர்களது வேலை உறுதியாக வேண்டு மென்று சொன்னால், அப்படி ஓட்டலில் 6 மாத காலத்திற்குத் தொடர்ந்து பணியாற்றினால்தான், நிரந்தரமாக்கப்படுவார்கள் என்பதற்குப் பதிலாக, ஒரு சிற்றுண்டி நிலையத்தில் பணியாற்றக் கூடியவர்களில் 10 சதவிகிதத்தினர் மட்டுமே உறுதிப்படுத்தப் படாமல் பணியாற்றக் கூடியவர்களாகவும், மீதி 90 சதவிகிதத் தினர் நிர்ந்தரமாக்கப்பட்டவர்களாகவும் இருக்கவேண்டும் என்று விதி செய்யலாம். பத்து பேர்களாக இருந்தாலும், அதில் 9 பேர்கள் நிரந்தரமாக்கப்பட்டவர்களாக இருக்கவேண்டும். அதற்கான முறையிலே அரசாங்கத்தார் சட்டம் செய்யவேண்டும்.

அதேபோல், தொழிற்சாலைகளுக்குச் சென்று பார்வை இடு கின்ற அதிகாரிகள், இந்தத் துறையிலே இருக்கக்கூடிய பாக்டரி இன்ஸ்பெக்டர்கள் இன்னும் சற்று பொறுப்புணர்ச்சியோடு தங்கள் கடமையை ஆற்றவேண்டும்; சுகாதாரத் துறையிலும், குடிதண் ணீர் வழங்குவதிலும், வேறு சில துறைகளிலும் உள்ள குறைகளை யும் அவர்களுக்குத் தொழிற் சங்கங்கள் எடுத்துச் சொல்லித்தான் போக்க வேண்டுமென்ற நிலை இருந்துவருகிறது. ஆகவே இந்த அதிகாரிகள் இவ்விஷயத்தில் குற்றம் குறைகள் இல்லாமல் இருக்க அதிக ஆர்வம் எடுத்துக் கொள்ளவேண்டும்.





தாலும், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். அவர் முதலாளியாக இருந்தாலும்; தொழிலாளியாக இருந்தாலும், அதைப்பற்றிக்கவலைப்படாமல் தக்க நடவடிக்கைகள் எடுப்பதற்கு இந்த அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இனி கடைசியாக ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். இப்படிப் 11 a.m.
பல்வேறு குறைகள் பல்வேறு தொழில்களில் இருந் தாலும், வெவ்வேறு இடங்களில் இருந்தாலும், அதை நிவர்த்திக்க வேண்டும். அமைச்சரின் தொழில் துறை யிலே தொடர்புடையது, மத்திய சர்க்காரால் நிறுவப் பட்டது நெய்வேலித் திட்டம். அந்த நெய்வேலியில் இன்றையதினம் தொழிலாளர்கள் படுகின்ற தொல்லை அதிகமாக இருக்கிறது. அங்கே இருக்கிற தொழிலாளர்கள் பெரும்பாலோர் நிரந்தரமாக்கப்படவில்லை. ஏழைத் தொழிலாளர்கள் வேலை நிரந்தரம் இல்லாமல் வேதனைப்படுகிறார்கள். அவர்கள் 'காஷுவல் லேபரர்களாக நாள் கூலிகளாக இருக்கிற காரணத்தினாலே, அவர்கள் அங்கே திட்டத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற காரணத் தினாலே 'பராஜெக்ட் அலவன்ஸ்' என்று கிடைக்கவேண்டிய அலவன்சும் அவர்களுக்கு இன்றையதினம் கிடைக்கவில்லை. இன்றையதினம் அவர்களுக்கு கிடைக்கவேண்டிய அலவன்ஸ் கிடைக்காத காரணத்தினால் அவர்கள் குறைபடுகிறார்கள்.

அந்தத் தொழிலாளர்களுக்குக் கட்டித் தரப்படுகின்ற வீடு களின் எண்ணிக்கை மிகக் குறைவு, கட்டப்பட்ட வீடுகளின் தரம் மிக மட்டம். மழை பெய்தால் நீர் ஒழுகுகிறது. நெய்வேலியில் மழை பெய்தால் ஒழுகுகின்ற நிலையில்தான் வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள் தொழிலாளர்களுக்கு என்றால், நெய் வேலியைப் பற்றி பெருமையாகப் பேசுகின்ற தமிழ்நாடு அரசாங் கத்திற்கு அது உண்மையிலேயே வருந்தத்தக்க நிகழ்ச்சியாகத் தான் இருக்க முடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

இந்த மான்யத்தைப் பொறுத்தவரையிலே இது வெறும் தொழி லாளர் மான்யம் என்றோ, தொழிற்சாலைகள் மான்யம் என்றோ கருதாமல், தொழிலாளர்களின் முன்னேற்றத்தை ஒட்டிய மான்யம் என்று கருதி, தொழிலாளர் பொது நலத்தையும் உரிமை யையும் பாதுகாக்கவேண்டும் என்று கருதி, தமிழ் நாட்டுத் தொழி லாளர்களின் துன்பங்களை மாற்றுவதற்கும், போக்குவதற்கும் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள முன்வரவேண்டும் என்று அமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொண்டு, அவருடைய நல்லெண்ணத்தையும், ஊக்கத்தைப் பாராட்டி, அவரது செயல் திறமை, நடைமுறையில் வெற்றிபெறவில்லை என்பதற்கு வருத்தம் தெரிவித்து, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

* **SRI M. KALYANASUNDARAM**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மான்யக் கோரிக்கையின்மீது விவாதம் கார சாரமாக இல்லையே என்று ஒரு காங்கிரஸ் நண்பர் ரொம்ப

[Sri M. Kalyanasundaram] [15th March 1961

கவலைப்பட்டார். அது காரசாரமாக இல்லாததற்குக் காரணம், தொழிற் சங்கங்களும், தொழிற் சங்கங்களை நிர்வகிக்கக்கூடிய தொழிலாளர்களும் எவ்வளவு பொறுப்பு உணர்ச்சியுடன் நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு அது அடையாளம் என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். புள்ளி விவரங்களும் அதைத்தான் காட்டுகின்றன. அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய குறிப்பிலே 1960-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி முடிய 9,048 சச்சரவுகள் தோன்றியிருக்கின்றன. இது தொழிலாளர்கள் எடுத்துச் சொன்ன குறைகள். இன்னும் அவர்கள் எடுத்துச்சொல்லாமல் இருந்த குறைகள், சச்சரவுகள் எத்தனையோ இருந்திருக்கலாம். அதோடுகூட இந்த சட்டம் அமுல் நடத்தக்கூடியது ஒரு சில தொழிலாளர்களுக்கு மட்டும். இந்த சட்டத்திற்கு பக்கத்திலேயே வராத எத்தனையோ தொழிலாளிகள் இருக்கிறார்கள். கைத்தறித் தொழிலில் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களெல்லாம் இதை எட்டிப் பார்ப்பதுகூட இல்லை. அவர்கள் இந்த சட்டத்தின் பக்கம் வரவே இல்லை. இந்தச் சட்டம் அமுலில் இருக்கக்கூடிய தொழில்கள் மிகவும் குறைவு. அந்தத் தொழில்களிலிருந்தும் 9,048 சச்சரவுகள்தான் அதிகாரிகள் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. அதிகாரிகள் முயற்சியினால் தீர்க்கப்பட்ட சச்சரவுகள் 864. அட்ஜுடிகேஷனுக்கு விட்டிருப்பது 250. அட்ஜுடிகேஷனுக்கு விடவேமாட்டேன் என்று சர்க்கார் நிராகரித்தது 120. மீதி சச்சரவுகளெல்லாம் தானாகவே ஒன்று தீர்க்கப்பட்டிருக்கலாம். அப்படி தீர்க்கப்படாமல் இருந்தால் தொழிலாளர்கள் வேறு வழி இல்லாமல் அதை ஒப்புக்கொண்டிருந்தால், அவைகள் அப்படியே போய்விடும். நிர்வாகத்தின் குறுக்கீடு குறைவாக இருந்திருக்கிறது. தொழிலாளிகளும், முதலாளிகளும் தாங்களாகவே பல பிரச்னைகளை சுமுகமாக தீர்த்துக்கொண்டிருக்கிறார்கள். வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்கள்கூட அதைத்தான் குறிக்கிறது. பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்க்கப்பட்ட வேலை நிறுத்தங்கள் 26. தாங்களாகவே தொழிலாளர்கள் தீர்த்துக்கொண்ட வேலை நிறுத்தங்கள் 215. சர்க்கார் அதிகாரிகள் குறுக்கிட்டு தீர்த்துவைத்தவை 85 தான். அட்ஜுடிகேஷன் மூலம் தீர்க்கப்பட்டது ஒன்றே ஒன்றுதான். இது எதைக் காட்டுகிறது என்று சொன்னால், தொழிலாளர்கள் தாங்களாகவே அமைதியை விரும்புகிறார்கள், தொழில் அமைதி நிலவுவதற்காக தொழிலாளர்களும் தொழிற்சங்கங்களும் தகுந்த நடவடிக்கை எடுக்கிறார்கள், சர்க்காருக்குக்கூட அதிக தொந்தரவு கொடுப்பதில்லை, சர்க்கார் இலாகாவுக்கு அதிக தொந்தரவு கொடுப்பதில்லை, சர்க்கார் குறுக்கீடு குறைவாக இருக்கிறது என்பதைத்தான். நான், அவர் தொழில் அமைச்சர் என்ற முறையிலேதான் பேசுகிறேன். ஆகையினாலே ஒன்றை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். 'இண்டஸ்டிரியல் ரிலேஷன்ஸ்' என்ற பகுதியில் முதல் பாராவில் போட்டிருக்கிறபடி தயவுசெய்து போடாதீர்கள். அது முதலாளிகளுக்கு லைசென்ஸ் கொடுத்தது மாதிரி ஆகிவிடும்.



15th March 1961] [Sri M. Kalyanasundaram]

"The policy of the Government has always been to try their best to settle the disputes internally to the extent possible" என்று கூறப்பட்டிருக்கிறது. அது வரையிலும் சரி. தொழிலாளர்களுக்கும், முதலாளிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் மூலம் கூடியவரைக்கும் சச்சரவுகளை தீர்த்துக்கொள்ள முயற்சிக்க வேண்டுமென்பது சரி. முதலாளிகளும் நிர்ப்பந்தம் கொடுக்கலாம். தொழிலாளிகளும் நிர்ப்பந்தம் கொடுக்கலாம், பிறகு சமரசம் ஏற்படலாம், அது சரி, அடுத்த வரி '. . . **and to refer cases for adjudication only as a lost resort**', என்று சொல்லியிருப்பது, அந்தக் கொள்கையை வேண்டுமானால் அரசாங்கம் மனதில் வைத்துக்கொள்ளவேண்டுமே தவிர, தயவுசெய்து அதை அப்படியே வெளியில் சொல்லிவிடக்கூடாது. அப்பொழுதுதான முதலாளிகளுக்கு சர்க்கார் குறுக்கிட்டு அட்ஜுடிகேஷனுக்கு விட்டுவிடுவார்கள் என்று பயம் இருக்கும். தொழிலில் அமைதி ஏற்படவேண்டும், தொழிலாளர்களுடன் ஒரு சமரசத்திற்கு வரவேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்படாது. அதேமாதிரி தொழிலாளிகளுக்கும் ஒரு சமரசத்திற்கு வரவேண்டும் என்ற நிர்ப்பந்தம் இருக்காது. இரண்டு பேர்களுக்கும் பயம் போய்விடும். அட்ஜுடிகேஷனுக்கு விடுவது என்பது அரசாங்கத்தின் கையிலுள்ள ஒரு ஆயுதம். அந்த ஆயுதத்தை அரசாங்கம் எப்பொழுதும் பிரயோகிக்கக்கூடும் என்ற பயம் முதலாளிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் இருக்கவேண்டும். சில சமயங்களில் தொழிலாளர்களும் தவறாக நடந்திருக்கலாம். அவர்களுக்கும் அட்ஜுடிகேஷனுக்கு விட்டுவிட்டால் அந்த முடிவு தங்களைக் கட்டுப்படுத்தும் என்ற பயம் இருக்கவேண்டும். அந்த ஆயுதம் சர்க்காரிடம் இருக்கிறது என்று இருந்தால்தான் இரண்டு பேர்களுக்கும் பயம் இருக்கும். இல்லாவிட்டால் அந்த பயம் போய்விடும்.

நம்முடைய நாட்டில் முதலாளிகளும், தொழிலாளிகளும் இன்னும் சம பலம் உள்ளவர்களாக இல்லை. முதலாளிகளுக்கு பலம் அதிகமாக இருக்கிறது. அவர்கள் எண்ணிக்கையில் குறைவாக இருந்தால்கூட, சமுதாயத்தில் அவர்களுக்கு இருக்கக்கூடிய செல்வாக்கு, அரசியலிலே அவர்களுக்கு இருக்கக்கூடிய செல்வாக்கு, பொருளாதாரத்தில் அவர்களுக்கு இருக்கக்கூடிய செல்வாக்கு, குதர்க்க வாதம் செய்யக்கூடிய அறிவுத் திறமை, அவர்களுக்கென்ற பிரத்தியேகமான வக்கீல் வசதி இவைகளெல்லாம் இருக்கின்றன. முதலாளிகளை எதிர்த்து தொழிலாளர்கள் நிற்பது என்று சொன்னால் அது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல, நீதி மன்றத்தில் ஆகட்டும், வேலை நிறுத்தத்தில் ஆகட்டும், கதவடைப்

**(Mr. Speaker in the Chair.)**

பில் ஆகட்டும். தொழிலாளர்களுடைய உரிமைகளை நன்கு பாதுகாக்க வேண்டும், தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்ற கொள்கை அடிப்படையில் இருந்தாலும், அவர்கள் பல உரிமைகளை தியாகம் செய்யவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் உரிமைகளை தியாகம் செய்யவேண்டு

மென்றால், அவர்கள் முன்னேறுகிற அளவு குறையும் என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

லேபர் இலாகா சாதனைகளைப் பற்றி நான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். லேபர் இலாகாவில் உள்ள அதிகாரிகள் சாதாரணமாக நிர்வாக அதிகாரிகள் போன்றவர்கள் அல்ல. அவர்களுக்கு ஒரு தனி திறமை வேண்டும். லேபர் அதிகாரிகளுக்கும் சரி, லேபர் கோர்ட்டிலுள்ளவர்களுக்கும் சரி. மற்ற இலாகாக்களில் சட்டம் இருக்கிறது, விதி இருக்கிறது, சட்டத்தில் இடம் இருக்கிறதா, விதியில் இடம் இருக்கிறதா என்று பார்த்து வேலையைச் செய்யலாம். ஆனால் லேபர் டிபார்ட்மெண்டில் அப்படி அல்ல. தொழில் அமைதியை பாதுகாக்கவேண்டும் என்ற அளவுக்கு அவர்களுக்கு ஒரு லட்சியம் இருக்கவேண்டும். தேசத்திலுள்ள சோஷலிஸ சமுதாய லட்சியத்தை மனதில் வைக்கவேண்டும் என்று நான் சொல்லவில்லை. அது அவர்களுக்கு அப்பாற்பட்ட விஷயம். நாம் எந்த மாதிரி சட்டங்களை இயற்றித் தருகிறோம் என்பதை அது பொறுத்து இருக்கிறது. அவர்கள் அந்த லட்சியத்தை அமுல் நடத்தவேண்டும் என்று நான் கூறவில்லை. தொழிலில் உற்பத்தி நடக்கவேண்டும், உற்பத்திக்கு இடையூறு ஏற்படக்கூடாது, தொழில் அமைதி இருக்கவேண்டும், தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையே தகராறுகள், சச்சரவுகள் ஏற்படும் பொழுது தொழிலாளர்களின் நலனை தியாகம் செய்யாமல் பாதுகாக்கவேண்டும் என்பதுதான் அவர்களுக்கு ஒரு லட்சியமாக இருக்கவேண்டும். சட்டத்தில் இடம் இல்லை, விதியில் இடம் இல்லை, ஸ்டாம்பு போதவில்லை, ஸ்டாம்பு ஒட்டவில்லை என்று பேப்பர்களை திருப்பி அனுப்பிக்கொண்டிருக்கக்கூடாது. சில அதிகாரிகள் 4 அணு ஸ்டாம்பு ஒட்டவில்லை என்று மனுவை திருப்பி அனுப்பி விடுகிறார்கள். அவர்கள் அதிகாரிகளாக இருப்பதற்கு லாயக்கு இல்லை என்றுதான் நான் சொல்லுவேன். அவர்களைக் கேட்டால், விதி இருக்கிறது, சட்டம் இருக்கிறது என்று சொல்லலாம். நான் இதுபற்றி அமைச்சர் அவர்களுக்குக்கூட ரிபோர்ட்டு அனுப்பியிருக்கிறேன். அவர்கள் தலையை ஆட்டுவதில் பிரயோசனம் இல்லை.

**THE HON. SRI R. VENKATARAMAN :** ஸ்டாம்பு இல்லாமல் அனுப்பினால், அல்லது ஸ்டாம்பு குறைவாக இருந்தால் அதைக் குறிப்பிட்டு கடிதம் எழுதுவார்கள். அதுவரையிலும் பெடிஷனை 'பைல்' செய்து வைத்திருப்பார்கள்.

**SRI M. KALYANASUNDARAM :** 'எல்.டி.ஸ்' போட்டு வருகிறது. எனக்கு கொஞ்சம் 'பைலிங்' பற்றி தெரியும்.

**THE HON. SRI R. VENKATARAMAN :** சாதாரணமாக இப்பொழுது எல்லா இலாகாக்களிலும் ஒரு பெடிஷனுக்கு 2 அணு, 4 அணு ஸ்டாம்பு ஒட்டவேண்டுமென்று சொன்னால், அந்தமாதிரி





ஸ்டாம்பு ஒட்டாமல் இருந்தால் அந்த பெடிஷனை திருப்பி அனுப்புகிறார்கள் என்பது இல்லை. அந்த மாதிரி ஸ்டாம்பு அனுப்ப வேண்டும், பணம் கட்டவேண்டும் என்று கடிதம் மூலம் எழுதுவார்கள். ஸ்டாம்பு வந்த உடனே அதை எடுத்துக்கொண்டு பரிசிலனை செய்வார்கள். ஸ்டாம்பு வரவில்லையென்றால், அது அப்படியே இருந்துபோய்விடும்.

**SRI M. KALYANASUNDARAM :** 'எல்.டிஸ்' போடுகிறார்கள், 'லாட்ஜ் டிஸ்போஸல்' போடுகிறார்கள். அதாவது அதற்கு மேலே ரிமைண்டர்கூட அனுப்பவேண்டியதில்லை, அதைப் பிறகு கவனிக்கவே முடியாது. மறுபடியும் அதற்கு புது நம்பர்தான் கொடுக்க வேண்டும். 'லாட்ஜ் டிஸ்போஸல்' என்றால் பழையது அப்படியே போய்விடும். மறுபடியும் ஸ்டாம்பு வந்தால் அது பழைய கேஸாகக் கருதப்படமாட்டாது. மறுபடியும் புது கேஸாகக் கருதப்பட்டு, புது நெம்பர் கொடுக்கப்படும் என்பதுதான் 'பைலிங் முறை' என்று அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இரண்டு அணு, நான்கு அணு ஸ்டாம்புக்காக அதிகாரிகள் இந்த மாதிரி திருப்பி அனுப்பக்கூடாது. நான் அதிகாரிகளுடைய கௌரவத்தைக் குறைக்க வேண்டுமென்பதற்கு இம்மாதிரி சொல்லவில்லை. அவர்களுடைய கௌரவத்தை உயர்த்தவேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கம். அப்பொழுதுதான் அவர்களை முதலாளிகள் மதிப்பார்கள். முதலாளிகள் மதிக்க முடியாத அளவுக்கு அவர்களுடைய அதிகாரத்தை, அல்லது அந்தஸ்தை, கௌரவத்தைக் குறைக்கக்கூடாது. நான் அம்மாதிரி செய்ய விரும்பவில்லை. அதிகாரிகளுக்கு ரொம்ப சக்தி கொடுக்கவேண்டும், அவர்களுடைய கை பாதுகாக்கப்படவேண்டும் என்ற நோக்கம் தான். அவர்களுடைய அந்தஸ்தை, அதிகாரத்தைத் தாக்கினால் அவர்கள் எப்படிப் பணி புரியமுடியும்? முதலாளிகளை எதிர்த்து நிற்க வேண்டிய தைரியம், தெம்பு, மனோபலம் அவர்களுக்கு வேண்டும். முதலாளிகளுடைய ஆசை வார்த்தைகளுக்கும், பயமுறுத்தலுக்கும் பணிந்துவிடக்கூடாது. எல்லா வசதிகளையும் பெற்றிருக்கக்கூடிய முதலாளிகளை எதிர்த்து நிற்பதற்கு இந்த இலாகா பிரத்தியேக கவனம் செலுத்தவேண்டும். போலீஸ் இலாகாவைப் பற்றி நான் பேசுவதென்றால் அந்த முறை வேறு. அவர்கள் குற்றம் செய்வதைக் கொஞ்சம்கூட அனுமதிக்க முடியாது. ஆனால் இந்த இலாகாவில் இருக்கும் உத்தியோகஸ்தர்களுக்கு அந்த அதிகாரம் கிடையாது. முதலாளிகளைக் கூப்பிடவேண்டுமென்றால்கூட, அவர்களை வரும்படி நிர்ப்பந்திக்க இவர்களுக்கு அதிகாரம் இல்லாமல் இருக்கிறது. அப்படி அதிகாரம் இல்லாமல் வேலை செய்யக்கூடிய அதிகாரிகள், தொழிலாளிகள் சம்பந்தப்பட்ட மட்டில் ஸ்டாம்பு ஒட்டவில்லை என்பதற்காக பெடிஷனைத் திருப்பி அனுப்புவது என்பது கூடாது. அம்மாதிரி குறைபாடுகள் ஏற்படாமல் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். அமைச்சர் அவர்களே தொழிற்சங்கத் தலைவராக இருந்தவர். தொழிலாளிகளுடைய உரிமைகளுக்காக எங்களைப்போலவே நீதிமன்றங்களில் வாதாடியவர். அவருக்கு எல்லா அனுபவமும் உண்டு. சில சந்தர்ப்பங்களிலே அவர் எனக்குக்கூட யோசனை சொல்ல முடியும்.

[Sri M. Kalyanasundaram] [15th March 1961

அப்படியிருக்கும்பொழுது, அவர்கள் இந்த லேபர் கோர்ட்டுகள் சமீப காலத்தில் எப்படிப் பணி புரிந்து வருகின்றன என்பதைப் பற்றிப் பரிசீலனை செய்யவேண்டும். லேபர் கோர்ட்டுகள் சட்டங்களை எப்படி அர்த்தம் பண்ணுகிறார்கள், எப்படித் தீர்ப்புகளை எழுதுகிறார்கள் என்பதைப் பொறுத்திருக்கிறது தொழில் அமைதியைப் பாதுகாப்பது. சில லேபர் கோர்ட் அதிகாரிகள் பகிரங்கமாக கோர்ட்டிலேயே தொழிலாளிகளைப் பண்ணைக்காரன் மாதிரி நடத்துகிறார்கள். அவர்கள் அழுக்குத் துணி கட்டியிருக்கிறார்கள் என்ற காரணத்தினால், அவர்கள் சொல்லுவது பொய்யாக இருக்குமென்று சொல்லியிருக்கிறார்கள். இதற்குச் சான்று இருக்கிறது. நானே எழுத்து மூலமாகவும், வாக்கு மூலங்கள் வாங்கியும் அமைச்சர் அவர்களுக்கு அனுப்பியிருக்கிறேன். இப்படிப்பட்டவர்கள் லேபர் கோர்ட்டுகளில் இருந்தால், தொழில் அமைதியைப் பாதுகாப்பார்களா, அல்லது முதலாளிகளைப் பாதுகாத்து, தொழிலாளிகளை உதாசீனப்படுத்தி, தொழில் தகராறுகளை ஏற்படுத்துவதற்கு உதவி செய்வார்களா என்பதை அமைச்சர் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இது சம்பந்தமான இன்டர்நேஷனல் ஆர்கனைசேஷனில் நாம் அங்கத்தினர்களாக இருக்கிறோம். அது சில கொள்கைகளை வகுத்துக் கொடுத்திருக்கிறது. அந்தக் கொள்கைகளையாவது நாம் பின்பற்றவேண்டும். நமது நீதிபதிகள் அவைகளை வழிகாட்டியாக வைத்துக்கொண்டு, பணி புரியவேண்டுமென்று லேபர் கோர்ட்டுகளுக்குச் சொல்ல வேண்டும். முக்கூட்டு மகாநாடுகளிலே பல சந்தர்ப்பங்களிலே பேசப்பட்ட விஷயம் இது. அவசியமானால் இந்த நீதிபதிகளை நியமிக்கக்கூடிய பொறுப்பு அரசாங்கத்தின் கைக்கு வரவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். ஒரு பேனல் வைக்கட்டும். சட்டத்திலே நீதிபதியாக இருக்கவேண்டுமென்று இருக்கிறது. ஜட்ஜுகள் உயர்நீதிமன்றத்தின் மேற்பார்வைக்கு உட்பட்டவர்கள். இந்த சபையின் ஓட்டுப் பெற்றுத்தான் சம்பளம் வாங்குகிறார்கள். நீதி வழங்கும் முறைகளிலே அரசாங்கம் குறுக்கிடக்கூடாதே தவிர, இன்ன வேலைக்கு இன்ன ஆளை வைக்கவேண்டுமென்ற பொறுப்பு அரசாங்கத்துக்கு இருக்கவேண்டும். உயர் நீதி மன்றத்திலிருந்து பேனல் வரட்டும். அதிலிருந்து அவர்களைப் பொறுக்கி எடுத்து நியமிக்க வேண்டுமென்ற கொள்கை உருவானால், லாயக்குடையவர்களை நாம் பொறுக்கி நியமிக்க முடியும். சில நீதிபதிகள் தங்களுடைய சொந்தக் கருத்து, தங்களுடைய சொந்த விருப்பு, வெறுப்பு, அவர்களுக்கு இருக்கக்கூடிய கொள்கை, இவற்றை எல்லாம் வைத்துக்கொண்டு கோர்ட்டுகளிலே பேசுகிறார்கள். சமீபத்திலே ஒரு வருஷ காலத்திலே வந்திருக்கக்கூடிய தீர்ப்புக்களை விசேஷ அதிகாரிகளைப் போட்டு பரிசீலனை செய்தால் இது தெரியவரும். அவர்களுக்கு இருக்கிற எண்ணம், எந்த அடிப்படையிலே எழுதியிருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். எப்படி ஒழுங்கீனமாக நடந்திருக்கிறார்கள் . . . . . . . . . .

**The Hon. Sri R. Venkataraman** : 'ஒழுங்கீனமாக' என்ற வார்த்தையை எடுத்துவிடலாம்.



15th March 1961]

**Sri M. Kalyanasundaram** : ஒழுங்கீனமாக என்ற வார்த்தையை விட்டுவிடுகிறேன். விரும்பத்தகாத என்ற வார்த்தையை வேண்டுமானால் உபயோகப்படுத்துகிறேன். கோர்ட் தீர்ப்பைப்பற்றி அது சரியா அல்லது தப்பா என்று சொல்லுவதற்கு அதிகாரம் இருக்கிறது. ஒழுங்கீனமாக என்ற வார்த்தைக்குப் பதிலாக, தவறாக என்று வேண்டுமானால் சொல்லுகிறேன். ஜட்ஜ்மென்டைப் பற்றித்தான் பேசுகிறேன்.

**The Hon. Sri R. Venkataraman** : ஜட்ஜ்மென்ட் இப்படி இருக்கிறது என்று சொல்லலாம். ஆனால் ஜட்ஜுகளைப் பற்றிச் சொல்லக்கூடாது.

**Sri M. Kalyanasundaram** : நான் எந்த ஒரு குறிப்பிட்ட ஜட்ஜைப் பற்றியும் சொல்லவில்லை. தவறான தீர்ப்புகள் எழுதியிருக்கிறார்கள் என்பதை விசாரணை செய்தால் நாம் புரிந்து கொள்ளமுடியும் என்றுதான் சொன்னேன்.

**Mr. Speaker** : தவறான தீர்ப்பு என்று சொல்லலாமா? சொல்லக்கூடாது.

**Sri M. Kalyanasundaram** : தவறான கொள்கையின் விளைவாக வரக்கூடிய தீர்ப்புகளை எழுதியிருக்கிறார்கள். இந்த நீதிபதிகளுக்கு விசேஷப் பொறுப்பு உண்டு. ஒரு விஷயத்தை மட்டும் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

"For the settlement of collective disputes of this kind—that is industrial disputes—it is not a question of applying and interpreting the existing law, but rather of finding first of all an equitable basis according to which these disputes should be regulated."

இருக்கிற சட்டங்களை அர்த்தப்படுத்துவது மட்டுமல்ல அவர்களுடைய கடமை. இந்த சச்சரவுகளை எப்படி ஒழுங்குபடுத்துவது என்ற நோக்கத்தோடு நாம் சட்டங்களை ஆராய வேண்டும். இது சொத்து தாவாவைப் பொருத்த விஷயமல்ல. தனிப்பட்ட நபர்கள் இருவருக்குள் சொத்து தாவா என்றால், சட்டத்தில் இடமிருக்கிறதா, இல்லையா என்று பார்க்கலாம். தொழிலாளிகளுக்கும், முதலாளிகளுக்கும் ஏற்படக்கூடிய குறைகள் சம்பந்தமான விஷயம். அந்தக் குறைகளைத் தீர்ப்பதற்கு சட்டத்தில் இடமிருக்கிறதா, விதியில் இடம் இருக்கிறதா என்பதை மட்டும் ஆராய்ந்தால் போதாது. இந்த சட்டங்கள் எல்லாம் "பூல் புரூ" பாக இருக்க முடியாது. அவைகளிலே குறைபாடுகள் இருக்கலாம். சட்டத்தினுடைய நோக்கம் என்ன என்பதைப் புரிந்துகொண்டு தீர்ப்புகள் எழுதவேண்டுமென்று நீதிபதிகளுக்குப் பல வழிகாட்டிகள் இருக்கின்றன. லேபர் கோர்ட்டுகள் நடந்துகொள்ளும் முறையைப் பார்த்தால் இந்த லேபர் கோர்ட்டுகளை எதிர்த்து ஸ்டிரைக்குகள்கூட நடக்குமோ என்று பயப்படுகிறேன்.

[15th March 1961

**MR. SPEAKER :** இந்த மான்யக் கோரிக்கைக்கு மொத்தம் இரண்டு மணி நேரம் ஒதுக்கி வைத்திருக்கிறோம். 11-30 மணிக்குள் முடிக்கவேண்டும். கனம் மந்திரி அவர்கட்கு 15 நிமிஷம்கூட கொடுக்காவிட்டால் அவர் எப்படிப் பதில் சொல்ல முடியும்?

**SRI M. KALYANASUNDARAM :** இந்த லேபர் கோர்ட்டுகளைப் புனரமைக்கும் விஷயத்தைக் கவனிக்கவேண்டுமென்று அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். இன்னும் குறைந்தபட்ச சம்பள விகிதத்தை எல்லாத் தொழிலாளிகளுக்கும் ஏற்படுத்தவேண்டும். ஆர்கனைஸ்டு இண்டஸ்டிரிகளில் உள்ள தொழிலாளிகள் பலமாக இருக்கிறவர்கள். ஆனால் "அன்-ஆர்கனைஸ்டு" தொழில்களில் இருக்கக்கூடிய தொழிலாளிகள் கஷ்டப்படுகிறார்கள். நம்முடைய ராஜ்யத்தில் சுரங்கங்கள் வந்துகொண்டிருக்கின்றன. நம்முடைய ராஜ்யத்தில் இருக்கும் சுரங்கங்களுக்கும் மற்ற ராஜ்யங்களில் இருக்கும் சுரங்கங்களுக்கும் வித்தியாசம் இருக்கிறது. செமண்ட், மாக்னஸைட், பாக்ஸைட், இவை எல்லாம் எடுக்கப்படுகின்றன. நெய்வேலி லிக்னைட் சுரங்கம் இருக்கிறது. சுரங்கத் தொழிலாளிகளுக்குக் குறைந்த பட்சச் சம்பளம் எவ்வளவு இருக்கவேண்டும், அவர்களுடைய வாழ்க்கை வசதிகள் எப்படி இருக்கவேண்டுமென்பதைப் பரிசீலனை செய்யவேண்டும். செமண்ட் தொழிலுக்கு வேஜ் போர்டு இருக்கிறது. அதனுடைய சிபார்சுகள் அமல் நடத்தப்பட்டு வருகின்றன. மற்ற தொழில்களுக்கு எந்தவிதமான சிபார்சுகளும் இல்லை. அந்தத் தொழிலாளிகளுக்குக் கஷ்டம் ஏற்படுகிறது, அமைதிக் குலைவு ஏற்படக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படுகிறது என்ற காரணத்தினால் குறைந்தபட்ச சம்பளம் நிர்ணயிக்கப்படாத பல தொழில்களுக்கும் குறைந்தபட்ச சம்பளம் நிர்ணயிக்க வேஜ் போர்டுகளையோ, முக்கூட்டு மகாநாடுகளையோ கூட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய ராஜ்யத்தில் கோடு ஆப் டிஸிப்பிளின் எந்தெந்த முறையில் அமல் நடத்தவேண்டுமென்று தனியாக விவாதிப்பதற்கு, அரசாங்கத் துறையிலும், தனியார் துறையிலும் ஒரு முக்கூட்டு மகாநாட்டையோ, அல்லது லேபர் அட்வைசரி போர்டையோ விரிவான அடிப்படையில் போட்டு அமல் நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசாங்கம் கோடு ஆப் டிஸிப்பிளினை அமல் நடத்துவதாக வாக்களித்து விட்டார்கள். இதுபோன்று நம்முடைய அரசாங்கமும் நடத்தக்கூடிய தொழில்களிலே இந்த மாதிரி ஒப்புக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.



15th March 1961] [Mr. Speaker]

this Demand, till the Hon. Minister finishes his reply. I think the House agrees to my suggestion. All right, the Hon. Minister may now reply to the discussion.

* **THE HON. SRI R. VENKATARAMAN :** கனம் சபாநாயகர் அவர்களே, நான் இந்த மான்யக் கோரிக்கையின்மீது பதில் சொல்லுவதற்கு 15 நிமிஷங்கள் போதுமென்று சொல்லுவதற்குக் காரணம், நல்ல யோசனைகளைச் சொன்னால் அவை எல்லாவற்றையும் நிச்சயமாக எடுத்துக்கொண்டு நடத்தப் போகிறேன் என்ற காரணத்தால், அதற்குப் பதில் சொல்லத் தேவையில்லை என்று நினைத்தேன். ஏதாவது குற்றச்சாட்டுகள் இருக்குமேயானால், அவை இல்லை என்று விளக்கவேண்டுமே என்பதற்காக அந்த அவகாசம் கேட்டேன். எனக்குத் தெரிந்த அளவிலே அவைகள் மிகக் குறைவாக இருந்திற காரணத்தினால், அதிகமாக நேரம் தேவையில்லை என்று தெரிவித்துக்கொண்டேன்.

இந்த இலாகாவை நடத்துகிறபொழுது இதிலே குறைபாடுகளே இல்லை என்று யாரும் சொல்ல முடியாது. எந்த இலாகாவை நடத்தினாலும் ஓரளவுக்குக் குறைபாடுகள் இருக்கும். ஆனால் வேண்டுமென்றே செய்யப்படுகின்றனவா, தவறான கருத்துக்களுடன் செய்யப்படுகின்றனவா, நடைமுறையில் இருக்கக் கூடியவையா என்று பார்த்தால், வேண்டுமென்றே தவறாக நடத்தப் படுகிறது என்ற குற்றச்சாட்டுக்கு இடமில்லை. அதற்காக நான் உண்மையிலேயே இந்த இலாகாவைப் பற்றிப் பெருமைப்படுகிறேன். மற்ற இலாகாக்களைப் போல் அல்லாமல், இந்த இலாகாவைப் பரிபாலனம் செய்கிறவர்களுக்கு ஒரு கஷ்டமான பொறுப்பு இருக்கிறது. அதிகமான பொறுப்பும் இருக்கிறது. அதைக் கனம் அங்கத்தினர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் எடுத்துச் சொன்னார். அந்தப் பொறுப்பை நல்ல முறையில் நிர்வகித்து வந்ததற்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டாவதாக, நம்முடைய ராஜ்யத்திலே தொழில் அமைதியைப் பற்றி நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். அந்த அளவுக்கு நம்முடைய ராஜ்யத்தில் அமைதியைக் காப்பது தொழிற் சங்கங்கள் என்பதை மறுக்க முடியாது. தொழிற் சங்கங்களும் தொழிற்சங்கத் தலைவர்களும் நல்ல முறையில் பொறுப்புடன் நம்முடைய ராஜ்யத்தில் தொழில் அமைதியை வளர்ப்பதற்கு நான் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் சில பிரச்சினைகள் குறிப்பிடப்பட்டன. பீடித் தொழில் சம்பந்தமாக அந்தச் சட்டம் முழுவதும் நிறைவேற்றப் படவில்லை என்று சொன்னார்கள். அப்படி முழுவதும் நிறைவேற்றுவதில் பல கஷ்டங்கள் தெரிவிக்கப்பட்டன. எல்லா ஷரத்துக்களையும் நிறைவேற்றினால், சில முதலாளிகள் பீடித் தொழில் நடத்துவதை மூடிக்கொண்டே போவதாகவோ அல்லது அண்டை ராஜ்யங்களுக்குப் போகும் நிலையோ ஏற்பட்டதால், அதை உடனடியாகச் செய்யாமல் கூலியையாவது உயர்த்த வேண்டும்

[Sri R. Venkataraman] [15th March 1961]

என்று செய்தோம். அப்படி எங்காவது அந்த உயர்ந்த கூலி கொடுக்கப்படவில்லையென்றால், அதை லேபர் கமிஷனருக்கோ அல்லது சம்பந்தப்பட்ட லேபர் ஆபீசருக்கோ தெரியப்படுத்தினால், எங்கெங்கே கொடுக்கப்படவில்லை என்று விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆனால், எல்லா ஷரத்துக்களையும் உடனடியாக நிறைவேற்ற முடியவில்லை.

வெகு சிறுசிறு ஸ்தாபனங்களாக வைத்திருப்பவர்கள், தொழிலாளர்களுக்கான சட்டங்களையும் மற்ற பெரியவர்களோடு செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களையும் நடைமுறையில் கொண்டுவருவதில் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. உதாரணமாக, டெக்ஸ்டைல் வேஜ் போர்ட் சம்பந்தமாக ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டோம். நம் ராஜ்யத்தில் 138 மில்கள் இருக்கின்றன. அவற்றில் 130 அல்லது 131 மில்கள் அந்த ஒப்பந்தப்படி நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். ஆனால் 5 அல்லது 6 மில்கள் மட்டும் நடத்த முடியவில்லை. அவர்களில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தனிப்பட்ட பிரச்சினை இருக்கிறது. ஒருவர் இப்பொழுதுதான் மில் மில்லை மூடிவிட்டுத் திறந்திருக்கிறேன் என்கிறார். மற்றவர் மில் கோர்ட் நிர்வாகத்தில் இருக்கிறது என்கிறார். அப்படி 5, 6 மில் முதலாளிகள் தனிப்பட்ட தன் சொந்தக் கஷ்டங்களை எடுத்துச் சொன்னார்கள். சர்க்கார், "அதைக்கூட கன்சிலியேஷன் மூலம் தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கிறோம், இப்பொழுது செமண்ட் வேஜ் போர்ட் இருக்கிறது, அதிலேகூட ஒரு சிறு தகராறு இருக்கிறது, All-India Cost of Living Index என்று வேஜ் போர்ட் சொல்லியிருக்கிறது, ஆனால் கோயம்புத்தூர் "காஸ்ட் ஆப் லிவிங் இண்டெக்ஸ்" அதிகமாக இருக்கிறது. ஆகையால் முதலாளிகள் அது வேஜ் போர்ட் சிபாரிசு முழுவதையும் அமல் செய்யவேண்டும், அது "ஆல் இண்டியா காஸ்ட் ஆப் லிவிங் இண்டெக்ஸ்" படிதான் இருக்க வேண்டும்" என்கிறார்கள். ஆனால், தொழிலாளிகள், வேஜ் போர்ட் ரெகம்மன்டேஷன்கள் அமுலாக்கப்படவேண்டும், ஆனாலும், பஞ்சப்படி சம்பந்தமாக, கோயம்புத்தூர் லிவிங் இண்டக்ஸ் படிதான் கொடுக்கவேண்டும், அந்தச் சலுகை இவ்வளவு நாட்களாகக் கிடைத்துக்கொண்டிருந்தது, அதை நாங்கள் விட்டுக் கொடுக்க முடியாது என்கிறார்கள். அந்த ஒரு இடத்தைத் தவிர மற்ற இடங்களில் இந்த சிபாரிசுகள் அமுல் நடத்தப்படுகின்றன. அதுவும்கூட, பேச்சு வார்த்தைகள் நடக்கின்றன, சுமுகமான முறையில் தீர்க்கமுடியலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது.



15th March 1961] [Sri R. Venkataraman]

நாஷனல் அண்ட் பெஸ்டிவல் ஹாலிடேஸ் ஆக்ட் செய்தபோது, 30 நாட்கள் வேலை செய்தால் என்று போட்டபோது, 30 நாட்களுக்கு மேல் வேலை செய்திருந்தால் என்ற அர்த்தத்தில் போட்டு, லீவ் கொடுக்கவேண்டும் என்று போட்டோம். அதுதான் நோக்கம். ஆனால், அதை "இண்டர்ப்ரிடேஷன்" செய்யும்போது, ஒவ்வொரு முறையிலும் 30 நாள் வேலை செய்யவேண்டும் என்று ஒரு இண்டர்ப்ரிடேஷன் கொடுத்திருக்கிறார்கள். ஆதலால் அந்த சட்டத்தை மாற்றவேண்டும் என்று ஆகிறது. அதற்கு ஒரு அமெண்ட்மெண்ட் சட்டம் வரும் என்று தெரிவிக்கிறேன்.

"மெடர்னிடி பெனிபிட் ஆக்ட்" பற்றிச் சொன்னார்கள். அதில் குறையிருக்கிறது என்று சொன்னார்கள். அவர்களுக்குக் கொடுக்கும் 12 அணா கட்டவில்லை என்று சொன்னார்கள். இது சம்பந்தமாக மத்திய சர்க்கார் ஒரு சட்டம் கொண்டுவர இருக்கிறார்கள். அதில் அவர்களுக்கு ஆவரேஜ் சம்பளம் எவ்வளவோ அதில் ஒரு பகுதி கிடைக்கும். அம்மாதிரி மத்திய சர்க்கார் சட்டம் வர இருக்கிறது. அது நடைமுறைக்கு வந்தால் இந்தப் பிரச்சினை தீரும்.

"கேடரிங் எஸ்டாப்ளிஷ்மெண்ட்" சம்பந்தமாக சில குறைகள் இருப்பதாகச் சொல்லப்பட்டது. ஒரு சட்டம் வந்தவுடன் அதன் எல்லா ஷரத்துக்களையும் உடனடியாக அமுல் நடத்தவேண்டும் என்று எதிர்பார்ப்பது சரியில்லை. சட்டம் கொண்டு வந்திருக்கிறோம். "என்போர்ஸ்" பண்ணுவதில் நடவடிக்கைகள் எடுக்கிறோம். வேலையாட்களை திடீர் திடீரென்று போகச் சொல்லிவிடுகிறார்கள். சட்டப்படி அவர்களுக்கு அப்பீல் செய்யும் உரிமை வேண்டும் என்று சொல்லப்பட்டது. அதை எப்படித் தவிர்க்க முடியும்? நாலு மாதம் என்று போட்டால், 3 மாதம் 29 நாளில் போகச் சொல்லுவார்கள்; 3 மாதம் என்று போட்டால், 2 மாதம் 29 நாளில் போகச் சொல்லுவார்கள். ஆகவே இதில் சில கஷ்டங்கள் இருப்பதால் . . .

**Sri K. ANBAZHAGAN**: அந்த மாதிரி இருக்கும் நிலையில், permanent number of people and temporary number of people should be on a certain proportion, that is, about 10 per cent.

**The Hon. Sri R. VENKATARAMAN**: தொழில் சட்டத்திலே பர்மனெண்ட் மெம்பராக இருந்தாலும், டெம்பரரி மெம்பராக இருந்தாலும் ஒன்றும் அதிக வித்தியாசம் ஏற்படாது; ரிட்ரெஞ்ச்மெண்ட் என்று வரும்போது, **Last come, First to go** என்றுதான் செய்யப்படும். பர்மெனண்ட், டெம்பரரி என்பது அவர்களுக்குப் பாதுகாப்பாக இருக்காது. நாம் போட்டதில் 6 மாதம் வேலை செய்தவர்களுக்குப் பாதுகாப்பு கிடைக்கும் என்று போட்டோம். ஆனால் அவர்கள் பர்மனெண்டுக்கு ஒரு வருஷம் என்று சொன்னால், இப்பொழுது கொடுத்திருக்கும் சலுகை இல்லாமலே போகும். நாம் கண்காணிப்பாகத்தான் இருக்கவேண்டும். கன்சிலியேஷன் ஆபீசர்கள், கூடுமானவரையில் கன்சிலியேஷனைச் செய்யாவிட்டாலும், சட்டப்படி உரிமை இல்லாவிட்டாலும், சமரசம் செய்யும் அதிகாரி என்ற அளவில் இதைச் செய்யவேண்டும் என்று நம்புகிறேன்.

[Sri R. Venkataraman] [15th March 1961

பாலாறு மில் சம்பந்தமாக ஏன் நடத்த முடியவில்லையென்று கேட்டார்கள். யாரோ ஒருவர் வருவதாகச் சொன்னார்கள். அவர்களை உடனே வந்து பார்க்கச் சொன்னால், சர்க்கார் வேண்டிய உதவிகள் கொடுக்கத் தயாராக இருக்கிறது. மானேஜீரியல் டிபிகல்டீஸ் காரணமாக, பணமுடையினால், அது நடக்கவில்லை என்று எனக்குத் தெரிகிறது. அதை எடுத்து நடத்த யாராவது முன் வந்தால், சர்க்கார் வேண்டிய உதவி செய்யும்.

நம் ராஜ்யத்தில்தான் சர்க்காரின் ஸ்டேட் இன்ஷூரன்ஸ் வசதிகள் அதிகமான அளவில் தொழிலாளிகளுக்குச் செய்திருக்கிறோம். அதிகமான அளவு தொழிலாளிகள் உள்ள எல்லா இடங்களிலும் அது இருக்கவேண்டும் என்று சொன்னதை நம் ராஜ்யத்தில்தான் முழுவதும் நல்ல முறையிலே நடத்தியிருக்கிறோம். வேறு எந்த ராஜ்யத்திலும் அப்படிச் செய்யப்படவில்லை. இந்த இன்ஷூரன்ஸ் திட்டத்தை நல்ல முறையிலே தொழிலாளிகளுக்குப் பயன்படச் செய்யவேண்டும் என்பதுதான் சர்க்காரின் கொள்கை. அதனால்தான் ஆரம்ப காலத்தில் சொன்னேன், அவர்களுக்கு விஸ்தரித்த பிறகு அவர்கள் குடும்பங்களுக்கு விஸ்தரிப்போம் என்று. அன்றைக்கு முதல் வருஷத்தில் சொன்னதை, இந்த ஐந்தாவது வருஷத்தில், அவர்கள் குடும்பங்களுக்கு இந்த ஆகஸ்ட் மாதம் 15-ந் தேதி முதல் சில இடங்களில் விஸ்தரிக்க இருக்கிறோம். அந்த இடங்கள், ராணிப்பேட்டை, காவேரி நகர், திருச்சி, இன்னும் மேட்டூர், ராஜபாளையம், சிவகாசி, டால்மியாபுரம் முதலிய இடங்களில் செய்ய இருக்கிறோம். அதை இந்த வருஷம் ஆகஸ்ட் 15-ந் தேதி முதல் அமுலுக்குக் கொண்டு வரவேண்டும் என்று எல்லா வேலைகளும் நடக்கின்றன. நகரத்தில் உள்ள தொழிலாளிகளுக்கு ஆஸ்பத்திரி வசதிகள் இருக்கின்றன. வேறு ஆஸ்பத்திரிகளே இல்லாத இடங்களில் இதை வைப்பதால் அதிகப் பிரயோஜனம் இல்லை. ஆகவே, ஆஸ்பத்திரி இருக்கும் இடங்களில் முதலில் வெளிப்புறங்களில், பெரிய பெரிய ஏரியாக்களில், அப்படி உள்ள இடங்களில் திட்டத்தை உடனடியாக அமுல் நடத்த இருக்கிறோம்.

கோர்ட் தீர்ப்புகள் பற்றிச் சொன்னார்கள். அது ரொம்ப நாள் பிரச்னை. நான் முதன் முதலில் விவாதம் செய்யும்போதே இருந்தது. சிவில் கோர்ட்டிற்கும் இண்டஸ்டிரியல் கோர்ட்டிற்கும் அடிப்படையில் வித்தியாசம் இருக்கிறது. சிவில் கோர்ட் காண்ட்ராக்ட் என்ன என்று தீர்மானிக்கிறது. They determine what is **a contract** ஆனால் இண்டஸ்டிரியல் கோர்ட் என்ன தீர்மானிக்கிறது என்றால், காண்ட்ராக்ட் எப்படியிருக்கவேண்டும் என்று தீர்மானிக்கிறது, What should be the contract between the worker and the management, என்பதைத் தீர்மானிக்கிறது. வித்தியாசம் அதுதான். இந்த வித்தியாசம் எல்லா இடங்களிலும் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. இன்றைக்கு அப்பீலேட் ஜட்ஜ்மெண்டில் பார்த்தால், அதை அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். சமரசம் செய்வதே தொழில் கோர்ட்டுகளின் அதிகாரம், வேலை. அவர்கள் யாருக்கு என்ன உரிமை இருக்கிறது என்று சிவில் கோர்ட் போல் செய்யவேண்டியதில்லை என்று சொல்லியிருக்



15th March 1961] [Sri R. Venkataraman]

கிறார்கள். அந்த முறையிலே நாம் பார்க்கும்போது, அவ்வாறு 11-30 a.m.
செய்வதால்தான் தொழில் அமைதி நல்ல முறையில் ஏற்படும். அவ்வாறே உயர்நீதி மன்றத்திலிருந்து வருகிற ஜட்ஜ்மெண்டுகளும் இருக்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன். அம்மாதிரி தீர்ப்புகள் வரும்போது எங்களுக்கும் தொழில் தகராறு குறையும்.

கடைசியாக, கனம் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டார்கள். நாங்கள் கடைசி ஆயுதமாக, அட்ஜூடிகேஷனுக்கு விடுவதை வைத்துக்கொண்டிருக்கிறோம். அதுதான் சரி. கடைசி ஆயுதம் என்று சொல்லும்போது, அதற்கு முன்னால், முதலாளிகளையும் தொழிலாளிகளையும் கலந்து பேசச் செய்து, பிரச்னையைச் சமாசமாகத் தீர்த்துக்கொள்ள எந்த அளவு முயற்சி செய்யவேண்டுமோ அந்த அளவு செய்கிறோம். எங்களால் முடியாதபோது, எங்களுடைய கடைசி ஆயுதமாக அட்ஜூடிகேஷனுக்கு விடுவதை வைத்துக்கொள்கிறோமே தவிர, முதலாளிகளைப் பொறுத்தோ, தொழிலாளிகளைப் பொறுத்தோ நாங்கள் சொல்லவில்லை. சர்க்காரைப் பொறுத்தவரையில் அதைக் கடைசி ஆயுதமாக உபயோகப்படுத்துகிறோம் என்று சொல்லியிருக்கிறேன்.

இந்த மான்யக் கோரிக்கையை ஏற்று நிறைவேற்றவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். கனம் அங்கத்தினர்கள் சொன்ன பல கருத்துக்களை எங்களுடைய இலாகா பரிசீலனை செய்து, அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்குமென்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

SRI S. NAGARAJA MONIGAR: கனம் சபாநாயகர் அவர்களே, ஒரு விளக்கம் கோருகிறேன். கனம் அமைச்சர் அவர்கள் பேசும்போது, 'பாலாறு மில்லை நடத்துவதற்கு நமது மாநிலத்தில் யாரும் முன்வரவில்லை' என்று சொன்னார்கள். அதை நடத்துவதற்கு வடவர் வந்தாலும் அதை ஆதரிக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER: கனம் திரு. பக்கிரிசாமி பிள்ளை அவர்கள் தம்முடைய வெட்டுப் பிரேரணையை வற்புறுத்துகிறாரா, வாபஸ் பெற்றுக்கொள்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

SRI S. PAKKIRISAMI PILLAI: Sir, I press my cut motion.

MR. SPEAKER: The question is—

'That the allotment of Rs. 35,79,800 under Demand XXIV—Labour including Factories be reduced by Rs. 100.'

The Cut Motion was put and lost.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 35,79,800 under Demand XXIV—Labour including Factories.'

The Demand was put and carried and the Grant was made.

பாலாறு மில் சம்பந்தமாக யாரும் நடத்த முன்வரவில்லையென்று கேட்டார்கள். யாரோ ஒருவர் வருவதாகச் சொன்னார்கள். அவர்களை உடனே வந்து பார்க்கச் சொன்னால், சர்க்கார் வேண்டிய உதவிகள் கொடுக்கத் தயாராக இருக்கிறது. மெடீரியல் டிபிகல்டீஸ் காரணமாக, பணமுடையினால், அது நடக்கவில்லை என்று எனக்குத் தெரிகிறது. அதை எடுத்து நடத்த யாராவது முன் வந்தால், சர்க்கார் வேண்டிய உதவி செய்யும்.

நம் ராஜ்யத்தில்தான் சர்க்காரின் ஸ்டேட் இன்ஷூரன்ஸ் வசதிகள் அதிகமான பகுதிகளிலிருந்து தொழிலாளிகளுக்குச் செய்திருக்கிறோம். ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் உள்ள எல்லா இடங்களிலும் அது இருக்கவேண்டும் என்று சொன்னதை நம் ராஜ்யத்தில்தான் முழுவதும் நல்ல முறையிலே நடத்தியிருக்கிறோம். வேறு எந்த ராஜ்யத்திலும் அப்படிச் செய்யப்படவில்லை. இந்த இன்ஷூரன்ஸ் திட்டத்தை நல்ல முறையிலே தொழிலாளிகளுக்குப் பயன்படச் செய்யவேண்டும் என்பதுதான் சர்க்காரின் கொள்கை. அதனால்தான் ஆரம்ப காலத்தில் சொன்னேன், அவர்களுக்கு விஸ்தரித்த பிறகு அவர்கள் குடும்பங்களுக்கு விஸ்தரிப்போம் என்று. அன்றைக்கு முதல் வருஷத்தில் சொன்னதை, இந்த ஐந்தாவது வருஷத்தில், அவர்கள் குடும்பங்களுக்கு இந்த ஆகஸ்ட் மாதம் 15-ந் தேதி முதல் சில இடங்களில் விஸ்தரிக்க இருக்கிறோம். அந்த இடங்கள், ராணிப்பேட்டை, காவேரி நகர், திருச்சி, இன்னும் மேட்டூர், ராஜபாளையம், சிவகாசி, டால்மியாபுரம் முதலிய இடங்களில் செய்ய இருக்கிறோம். அதை இந்த வருஷம் ஆகஸ்ட் 15-ந் தேதி முதல் அமுலுக்குக் கொண்டு வரவேண்டும் என்று எல்லா வேலைகளும் நடக்கின்றன. நகரத்திலுள்ள தொழிலாளிகளுக்கு ஆஸ்பத்திரி வசதிகள் இருக்கின்றன. வேறு ஆஸ்பத்திரிகளை இல்லாத பகுதிகளில் இதை வைப்பதால் அதிகப் பிரயோஜனம் இல்லை. ஆகவே, ஆஸ்பத்திரி இருக்கும் இடங்களில் முதலில் வெளிப்புறங்களில், மொபசல் ஏரியாக்களில், அப்படி உள்ள இடங்களில் திட்டத்தை படிப்படியாக அமுல் நடத்த இருக்கிறோம்.

கோர்ட் தீர்ப்புகள் பற்றிச் சொன்னார்கள். அது ரொம்ப நாள் பிரச்சினை. நான் முதல் முதலில் விவாதம் செய்யும்போதே இருந்தது. சிவில் கோர்ட்டுக்கும் இண்டஸ்ட்ரியல் கோர்ட்டுக்கும் அடிப்படையில் வித்தியாசம் இருக்கிறது. சிவில் கோர்ட் காண்ட்ராக்ட் என்ன என்று தீர்மானிக்கிறது. They determine what is a contract ஆனால் இண்டஸ்ட்ரியல் கோர்ட் என்ன தீர்மானிக்கிறது என்றால், காண்ட்ராக்ட் எப்படியிருக்கவேண்டும் என்று தீர்மானிக்கிறது, What should be the contract between the worker and the management, என்பதைத் தீர்மானிக்கிறது. வித்தியாசம் அதுதான். இந்த வித்தியாசம் எல்லா இடங்களிலும் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. இன்றைக்கு அப்பீலேட் ஜட்ஜ்மெண்டில் பார்த்தால், அதை அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். சமரசம் செய்வதே தொழில் கோர்ட்டுகளின் அதிகாரம், வேலை. அவர்கள் யாருக்கு என்ன உரிமை இருக்கிறது என்று சிவில் கோர்ட் போல் செய்யவேண்டியதில்லை என்று சொல்லியிருக்





கிறார்கள். அந்த முறையிலே நாம் பார்க்கும்போது, அவ்வாறு செய்வதால்தான் தொழில் அமைதி நல்ல முறையில் ஏற்படும். அவ்வாறே உயர்நீதி மன்றத்திலிருந்து வருகிற ஜட்ஜ்மெண்டு களும் இருக்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன். அம்மாதிரி தீர்ப்புகள் வரும்போது எங்களுக்கும் தொழில் தகராறு குறையும்.

கடைசியாக, கனம் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டார்கள். நாங்கள் கடைசி ஆயுதமாக, அட்ஜுடிகேஷனுக்கு விடுவதை வைத்துக்கொண்டிருக்கிறோம். அதுதான் சரி. கடைசி ஆயுதம் என்று சொல்லும்போது, அதற்கு முன்னால், முதலாளிகளையும் தொழிலாளிகளையும் கலந்து பேசச் செய்து, பிரச்னையைச் சமாசமாகத் தீர்த்துக்கொள்ள எந்த அளவு முயற்சி செய்யவேண்டுமோ அந்த அளவு செய்கிறோம். எங்களால் முடியாதபோது, எங்களுடைய கடைசி ஆயுதமாக அட்ஜுடிகேஷனுக்கு விடுவதை வைத்துக்கொள்கிறோமே தவிர, முதலாளிகளைப் பொறுத்தோ, தொழிலாளிகளைப் பொறுத்தோ நாங்கள் சொல்லவில்லை. சர்க்காரைப் பொறுத்தவரையில் அதைக் கடைசி ஆயுதமாக உபயோகப்படுத்துகிறோம் என்று சொல்லியிருக்கிறேன்.

இந்த மான்யக் கோரிக்கையை ஏற்று நிறைவேற்றவேண்டு மென்று நான் கேட்டுக்கொள்கிறேன். கனம் அங்கத்தினர்கள் சொன்ன பல கருத்துக்களை எங்களுடைய இலாகா பரிசீலனை செய்து, அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்குமென்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

SRI S. NAGARAJA MONIGAR: கனம் சபாநாயகர் அவர்களே, ஒரு விளக்கம் கோருகிறேன். கனம் அமைச்சர் அவர்கள் பேசும்போது, 'பாலாறு மில்லை நடத்துவதற்கு நமது மாநிலத்தில் யாரும் முன்வரவில்லை' என்று சொன்னார்கள். அதை நடத்து வதற்கு வடவர் வந்தாலும் அதை ஆதரிக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER: கனம் திரு. பக்கிரிசாமி பிள்ளை அவர்கள் தம்முடைய வெட்டுப் பிரேரணையை வற்புறுத்துகிறாரா, வாபஸ் பெற்றுக்கொள்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

SRI S. PAKKIRISAMI PILLAI: Sir, I press my cut motion.

MR. SPEAKER: The question is—

'That the allotment of Rs. 35,79,800 under Demand XXIV—Labour including Factories be reduced by Rs. 100.'

The Cut Motion was put and lost.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 35,79,800 under Demand XXIV—Labour including Factories.'

The Demand was put and carried and the Grant was made.

[15th March 1961

(2) DEMAND XXXV—ROAD TRANSPORT SCHEMES.

(3) DEMAND XLIII—CAPITAL OUTLAY ON ROAD TRANSPORT SCHEMES.

MR. SPEAKER : Next we will take up Demand XXXV—Road Transport Schemes and Demand XLIII—Capital Outlay on Road Transport Schemes. The time allotted for these two Demands is two hours.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 2,58,62,500 under Demand XXXV—Road Transport Schemes.'

Sir, on the recommendation of the Governor I also move—

'That the Government be granted a sum not exceeding Rs. 2,39,64,000 under Demand XLIII—Capital Outlay on Road Transport Schemes.'

MR. SPEAKER : Motions moved—

'That the Government be granted a sum not exceeding Rs. 2,58,62,500 under Demand XXXV—Road Transport Schemes.'

'That the Government be granted a sum not exceeding Rs. 2,39,64,000 under Demand XLIII—Capital Outlay on Road Transport Schemes.'

I understand that the hon. Member, Sri V. K. Kothandaraman, is moving his Cut Motion to Demand XXXV—Road Transport Schemes. He may now move it.

SRI V. K. KOTHANDARAMAN : கனம் சபாநாயகர் அவர்களே, என் பெயரில் வந்திருக்கும் வெட்டுப் பிரேரணையை நான் பிரேரேபிக்கிறேன். அதாவது,

'That the allotment of Rs. 2,58,62,500 under Demand XXXV—Road Transport Schemes be reduced by Rs. 100'

MR. SPEAKER : Cut motion moved—

'That the allotment of Rs. 2,58,62,500 under Demand XXXV—Road Transport Schemes be reduced by Rs. 100.'

I understand that the Hon. Member, Sri K. Sattanatha Karayalar, is moving his Cut Motion to Demand XLIII—Capital Outlay on Road Transport Schemes. He may now move it.

SRI K. SATTANATHA KARAYALAR : Mr. Speaker, Sir. I move the Cut Motion standing in my name, viz. :—

'That the allotment of Rs. 2,39,64,000 under Demand XLIII—Capital Outlay on Road Transport Schemes be reduced by Rs. 100.'

MR. SPEAKER : Cut motion moved—

'That the allotment of Rs. 2,39,64,000 under Demand XLIII—Capital Outlay on Road Transport Schemes be reduced by Rs. 100.'



15th March 1961]

*THE HON. SRI R. VENKATARAMAN : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த தேசீய மயமாக்கப்பட்ட ராஜ்ய சர்க்கார் பஸ் ட்ரான்ஸ்போர்ட் சென்ற ஆண்டிலே ஒரு பெரிய முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். முக்கியமாக 1959-60-ம் வருஷத்தில் நமக்கு 2 கோடி 66 லட்ச ரூபாய் வருமானம் (க்ராஸ் ரெவின்யூ) வந்தது. 1960-61-ல் 3 கோடி 26 லட்ச ரூபாய் வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதுபோல், செலவை எடுத்துக்கொண்டால் கூட, நமக்கு 1959-60-ல் 2 கோடி ஒரு லட்ச ரூபாய் செலவாயிற்று. 1960-61-ல் 2 கோடி 32 லட்ச ரூபாய் செலவாகுமென்று மதிப்பிடப்படுகிறது. நிகர வருமானத்தைப் பார்த்தால், 1956-60-ல் 64 லட்சம் 83 ஆயிரம் ரூபாய் வந்திருக்கிறது. 1960-61-ல் 94 லட்ச ரூபாய் நிகர வருமானம் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதிலே நாம் புதிய முறையில் என்ன என்ன நிதிகள் அமைக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கிறோம். பாஸஞ்சர் அமெனிடீஸ் பண்டு ஏற்படுத்தி, அதிலிருந்து பிரயாணிகளுக்கு என்ன என்ன வசதி கொடுக்கவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறோம். நிகர வருமானத்தில் 5 சதவிகிதம்வரை அதில் போடவேண்டுமென்று சர்க்கார் தீர்மானம் செய்திருக்கிறது. இதற்கு முன்னால் நாம் ஏழு வருஷங்களில் ஒரு பஸ்ஸினுடைய ஆயுள் முடிந்துவிடும் என்று நினைத்து ஏழிலொரு பங்கு டெப்ரிஸியேஷன் போட்டுக் கொண்டிருந்தோம். இனி, ஐந்து வருஷங்களில் அதன் ஆயுள் முடியும் என்று வைத்து, ஐந்திலொரு பங்கு டெப்ரிஸியேஷனுக்குப் போடவேண்டுமென்று நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். இதைத் தவிர, மேற்கொண்டு இன்னும் விஸ்தரிப்புக்காக, பஸ்கள் முதலியவை வாங்குவதற்காக, டெவலப்மெண்ட் பண்டு ஏற்படுத்தியிருக்கிறோம். நிகர வருமானத்தில் மூன்றிலொரு பங்கு டெவலப்மெண்ட் பண்டுக்கு ஒதுக்கி, விஸ்தரிப்புக்காக அது செலவிடப்பட வேண்டும் என்று முடிவு செய்திருக்கிறோம். இந்த மூன்று இனத்திலும் 74 லட்சம் 59 ஆயிரம் ரூபாய் 1960-61-ல் செலவிட ஏற்பாடு செய்திருக்கிறோம். நிகர லாபம் 19 லட்சம் 44 ஆயிரம் ரூபாய் 1960-61-ல் வரும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. டெப்ரிஸியேஷன் பண்டை எடுத்துப் பார்த்தாலுங்கூட, 1959-60-ல் 142 லட்ச ரூபாய் இருந்தது. இந்த வருஷக் கடைசியில் 180 லட்ச ரூபாய் நமக்கு டெப்ரிஸியேஷன் பண்டிலே பணம் இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் நம்முடைய பஸ்களின் எண்ணிக்கையை எடுத்துக் கொண்டால், 1956-57-ல் 521 பஸ்கள் இருந்தன. அவை 362 ரூட்களில் போய்க்கொண்டிருந்தன. 1960-61-ல் 687 பஸ்கள் இருக்கின்றன. அவற்றில் 534 பஸ்கள் தினம் ஓடிக்கொண்டிருக்கின்றன. ஆக, 82 சத விகிதம் fle t o era ion இருக்கிறது. இதற்கு முன்னால் பழைய பஸ்கள் அதிகமாக இருந்தன. அவைகளையெல்லாம் 1959-60-ல் நாம் நீக்கிவிட்டோம். இதற்கு உதாரணமாக,

[Sri R. Venkataraman] [15th March 1961]

சில புள்ளி விவரங்கள் கொடுத்தால் அது நன்ருகத் தெரியும். 1959-60-ல் 114 பழைய பஸ்களை நாங்கள் நீக்கிவிட்டோம். இந்த வருஷத்தில் பழைய பஸ்களை நீக்கவேண்டியது 24 தான். அந்த 24 பஸ்களையும் நீக்கிவிட்டு 133 பஸ்களைப் புதிதாக 1960-61-ல் போட்டிருக்கிறோம். 1961-62-ல் 150 பஸ்கள் சேர்ப்பதாக இருக்கிறது. அப்பொழுது காலம் கடந்த பஸ்கள் ஒன்றுமே இருக்காது, நிகரமாக மொத்த ட்ரான்ஸ்போர்ட்டிக்கு fleet strength அதிகரிக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

காபிடல் அவுட்லே எவ்வளவு இருந்தது என்பதைப் பார்த்தால், 1955-ம் வருஷம் ஏப்ரல் மீ 1-ம் 254 லட்ச ரூபாய்தான் இந்த வகையில் இருந்தது. 1961-ம் வருஷம் ஏப்ரல் மீ 1-ல் 442 லட்ச ரூபாய் நமக்கு இருக்கும்.

நம்முடைய குரோம்பேட்டை தொழிற்சாலையில் 'பாடி' கட்டும் வேலையில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. 1955-56-ல் 45 பாடிகள்தான் கட்டினார்கள். 1960-61-ல் 96 பாடிகள் கட்டிவிடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக தொழிற்சாலையில் தொழிலாளர்களுடைய எண்ணிக்கையை அதிகரித்திருக்கிறோம். மூன்றிலொரு பங்கு தொழிலாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி, நமக்கு இருக்கும் இயந்திரம் எல்லாவற்றையும் முழு நேரமும் நல்ல முறையில் வேலை செய்து அதிகமான எண்ணிக்கையில் 'பாடி'கள் கட்ட ஏற்பாடு செய்திருக்கிறோம். நூற்றுக்கு மேற்பட்ட பாடிகள் இந்த வருஷம் கட்டப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இதைத் தவிர, நல்ல எக்ஸ்பிரஸ் கோச்சுகள் நீண்ட தூர ரூட்களில் ஓடுவதற்காக நல்ல முறையில் கட்டப்பட்டிருக்கின்றன. அவையெல்லாம் நம்முடைய குரோம்பேட்டை தொழிற்சாலையில் கட்டப்பட்டிருக்கின்றன என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பஸ் போக்குவரத்து சம்பந்தமாக முக்கியமான முடிவு எடுக்கப்பட்டது என்னவென்ருல், ராஜ்யத்தில் இருக்கும் நீண்ட தூர பஸ் ரூட்களெல்லாவற்றையும் சர்க்கார் எடுத்து நடத்தவேண்டுமென்பது. அதன்மூலமாக நம் ராஜ்யம் பூராவும் நல்ல முறையிலே தேசிய மயமாக்கப்பட்ட பஸ் ஸர்விஸ் கொடுப்பதென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. நூற்று இருபது மைலுக்கு அப்பாலுள்ள ரூட்களை சர்க்கார் எடுத்து நடத்துவது என்று முடிவு செய்துவிட்டது. அதன்படிதான் அறிக்கையின் நான்காவது பக்கத்தில் 7 பஸ் ரூட்களில் சர்க்கார் பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. மேற்கொண்டு நான்கு அல்லது ஐந்து ரூட்கள் 1961-62-ல் எடுப்பதற்கான முடிவுகள் செய்திருக்கிறோம்.

இந்த நீண்ட தூர பஸ்களைப் பற்றி வந்த அபிப்பிராயங்கள் எல்லாம் மிகவும் நன்ருக இருக்கின்றன. "பஸ்கள் டையத்திற்குப் போகின்றன. அவைகள் பிரயாணிகளுக்கு மிகவும் வசதியாக இருக்கின்றன" என்பனபோன்ற அபிப்பிராயங்கள்தான் வந்து



15th March 1961] [Sri R. Venkataraman]

கொண்டிருக்கின்றன. ஆகவே பஸ்களில் இருக்கக்கூடிய பழைய தொல்லைகள் எல்லாம் மறைந்துவிட்டன. இனி ஒரே ஒரு பிரச்சனை —அதிகமாகப் பெருகிக்கொண்டே போகிற ஜனத்தொகைக்கு ஏற்ப பஸ்களின் எண்ணிக்கையைத்தான் அதிகமாக்கவேண்டும் என்பது. ஐ.எல்.ஓ. எக்ஸ்பர்ட்டுகள் வந்து பார்த்ததில் 497 பஸ்கள் இருந்தால் இங்கே போதும் என்று சொன்னர்கள். ஆனல் இன்றைக்கு 687 பஸ்கள் இருக்கின்றன. (ஸ்ரீ ஏ.கோவிந்தசாமி :—ஓடுகின்றவைகள் எவ்வளவு?) அதைத்தான் முன்பே சொன்னேன். பழைய பஸ்களை எல்லாம் போக்கிவிட்டு எல்லாப் பஸ்களும் புதிதாக ஆக்கப்பட்டிருக்கின்றன என்று. இன்றையதினம் 687 பஸ்கள் இருக்கின்றன என்ருல் அவற்றில் 534 பஸ்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன. ஏதாவது எப்போதாவது தப்புப் பெயர் வந்தால் அதை மறக்கவே மாட்டோம். 1957-ம் வருஷத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் 12 ஓட்டை பஸ்களை வைத்துக் கொண்டிருந்தோம். பிரிவினையில் டப்பாக்களைத்தான் தந்தார் கள். (ஒரு கனம் அங்கத்தினர் : நாம் கொடுத்திருந்தாலும் அப்படித்தான் கொடுத்திருப்போம்) இங்கே நாம் கொடுப்பதற் கில்லை. பாகப் பிரிவினை என்கிறபோது வீட்டைவிட்டு வெளியே போகிறவர்கள்தான் அதை இதை எடுத்துக்கொண்டு போய்விடு வார்கள். அங்கேயே தங்குகிற மூத்தவருக்குத்தான் நஷ்டம் ஏற்படும். இவ்விஷயத்தில் சென்னை ராஜ்யம் மூத்தவராக இருந்தது. (சிரிப்பு.) இப்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் பஸ் சர்வீஸ் எவ்வாறு நடைபெறுகிறது என்பது கனம் அங்கத் தினர்களுக்குத் தெரியும். ஆகவே கனம் அங்கத்தினர்கள் இந்த மானியக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று சொல்லிக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : பின்னல் பதில் அளிப்பதற்கு கனம் அமைச்சர் அவர்களுக்கு எவ்வளவு நேரம் வேண்டும்?

THE HON. SRI R. VENKATARAMAN : பதினைந்து நிமிஷங்கள் போதும்.

MR. SPEAKER : எதிர்கட்சிகள் சார்பாக திரு. வி. கே. இராமஸ்வாமி முதலியார் பேசுவார். அவருக்குப் பதினைந்து நிமிஷமும் மற்ற அங்கத்தினர்கள் ஒவ்வொருவருக்கும் 10 நிமிஷங்களும் கொடுக்கிறேன். முதலாவதாக திரு. கே. சட்டநாத கரையாளர் விவாதத்தைத் துவக்கி வைப்பார்.

* SRI K. SATTANATHA KARAYALAR : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையைச் சமர்ப்பித்த கனம் அமைச்சர் அவர்கள் தேசியமாக்கப்பட்ட மோட்டார் போக்கு வரத்து நடைபெறுவதைப்பற்றிச் சொன்னர்கள். ஓரளவு அவர்கள் சொன்னது உண்மை. இதிலே கழிந்த பல ஆண்டுகளில் கிடைத் துள்ள லாபத்தைப் பார்க்கும்போது இந்த ஆண்டு கணிசமான லாபம் கிடைக்கும் என்று தெரிகிறது. 1956-57, 1957-58, 1958-59-லே 18.8 ; 7.2 ; 5.8 சதமானம் லாபம் கிடைத்திருக்கிறது. 1959-60-ல்

27 லட்சமும், இந்த ஆண்டில் 19 லட்சமும் லாபம் காட்டப்பட்டி
ருக்கிறது. இது பார்ப்பதற்குக் குறைவாகத் தோன்றும். ஆனால்
**Passenger Amenities Fund, Depreciation Reserve Fund** என்று 37.73
லட்சமும், 74.59 லட்சமும் இதிலிருந்து ஒதுக்கியிருப்பதை வர
வேற்கிறேன். இந்த இரண்டு ஆண்டும் இதனால் நிகரலாபம்
குறைந்த பட்சம் சுமார் 6 சதமானமாகலாம். ஆனால் மொத்த
வருமானம் கணிசமாக உள்ளது.

இப்படி நல்ல வருமானம் இருந்திருக்கிறது என்றாலும்கூட இது
எந்த எந்த இனத்திலே இருந்து எவ்வளவு எவ்வளவு கிடைத்
திருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருப்பார்
களானால் மிகவும் பொருத்தமாக இருந்திருக்கும். இன்று சர்க்கார்
டிரான்ஸ்போர்ட் சென்னை நகரத்தில் நடக்கிறது. கன்னியாகுமரி
மாவட்டத்தில் அறுபது, எழுபது பஸ்கள் ஓடுகின்றன.
இவற்றைத் தவிர வருமானம் அதிகம் தரக்கூடிய நீண்டதூர எக்ஸ்
பிரஸ் பஸ்கள் இருக்கின்றன. அவை சராசரி ஒரு பஸ்ஸுக்கு 200
ரூபாய் வருமானம் தருகிறது. குறிப்பாக நாகர்கோயில், கோயம்
பத்தூர் ரூட்டை எடுத்துக்கொண்டால் 300, 400 ரூபாய்கூட
சராசரி ஒரு பஸ்ஸுக்குக் கிடைக்கிறது. பொதுவாக எக்ஸ்பிரஸ்
பஸ்களில் அதிக ஆதாயம் கிடைக்கிறது என்பது வெள்ளிடை
மலை. இந்த இனங்களைப் பிரித்து சென்னை நகரத்தில் என்ன செல
வாகிறது, வருவாய் எவ்வளவு வருகிறது; கன்னியாகுமரி மாவட்
டத்தில் என்ன செலவாகிறது, வருவாய் எவ்வளவு வருகிறது;
எக்ஸ்பிரஸ் பஸ்களினால் என்ன செலவாகிறது, வருவாய் என்ன
வருகிறது என்று தனித்தனியாகக் கணக்குக் கொடுத்திருந்தால்
மிக நன்றாக இருந்திருக்கும்.

THE HON. SRI R. VENKATARAMAN: இந்த விவரங்கள்
எல்லாம் புத்தகத்தில் கொடுத்திருக்கிறோம். அதில் இல்லாததைத்
தான் இங்கே கொடுத்திருக்கிறேன்.

SRI K. SATTANATHA KARAYALAR: அந்த முறையில்
பிரித்துப் பார்க்கும்போது சென்னையில் கிடைக்கின்ற லாபம்—
தொகை—அவ்வளவு கணிசமான அபிவிருத்தி அடையவில்லை
என்று தெரியும். இங்கு ஸ்டாண்டிங் பாசஞ்ஜர்ஸ்களும் உண்டு.
ராணியின் விஜயம் காரணமாக சமீபத்தில் ஏற்பட்ட நெருக்கடி
யான சமயத்தில் நூறு பிரயாணிகள்கூட ஒரு பஸ்ஸில் போய்
இருக்கிறார்கள். பிரயாணிகள் எண்ணிக்கைக்கும் குறைவில்லை.
கூடிக்கொண்டுதான் இருக்கிறது. பிரயாணிகள் பல அசௌகரியங்
களுக்கு உள்ளாயும், வருவாய் கணிசமாக உயராததன் காரணம்
ஆராய்ந்தறிய வேண்டியவை. சென்னை நகரைப் பொறுத்த வரை
யில் பலவிதமான அசௌகர்யங்கள் அனுபவித்து பொதுமக்கள்
நமக்கு இத்தனை வருமானம் தருகிறார்கள் என்பதை மறந்து
விடக் கூடாது. ஐ.எல்.ஓ. எக்ஸ்பர்ட்ஸ் குறிப்பிட்ட பஸ்களின்
எண்ணிக்கையையும்விட அதிகமாக பஸ்கள் விடுகிறோம் என்றாலும்
கூட இன்னும் நெருக்கடி இருக்கிறது என்றால் இன்னும் அதிகமாக





பஸ்கள் விடவேண்டும் என்றுதான் ஏற்படுகிறது. இன்று சென்னை
ஜனத்தொகை அதிகரித்துக்கொண்டே போவதற்கு ஏற்றபடி
நிலைமையைச் சமாளிக்க பஸ்களையும் அதிகரிக்கவேண்டும்.
அதோடு இதிலே திட்டவட்டமான கொள்கையை வைத்துக்
கொண்டு ஸ்டாண்டிங் பாசஞ்ஜர்களையும் ஓரளவு லிமிட் செய்கிற
நோக்கோடு தகுந்த பஸ்களை விடுவதற்குரிய திட்டம் வகுக்கப்
பட்டாக வேண்டும்.

அடுத்தபடியாக சில குறைகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.
டைம் குறிப்பிட்டபடி பஸ்கள் போய் வருவதில்லை. குறைந்தது
முதல் பஸ்ஸும், கடைசி பஸ்ஸுமாவது குறிப்பிட்ட டையத்
திற்குக் கிளம்பவேண்டும். மவுண்டு ரோடு பக்கத்தில் கடைசி
பஸ்ஸை எதிர்பார்த்து வந்தால் அது ஐந்து நிமிஷம், பத்து
நிமிஷம் முன்னதாகவே சென்றுவிடுகிறது. இரவில் வண்டியைக்
கொண்டுபோய் ஷெட்டில் விட்டுவிட்டு வீட்டுக்குப் போவதில்
தொழிலாளர்கள் ஆவலுள்ளவர்களாக இருக்கலாம். இருப்பினும்
இதனால் பிரயாணிகளுக்கு ஏற்படுகிற இடையூறுகளை நினைத்து
குறிப்பிட்ட டையத்தில் குறைந்தபட்சம் முதல் பஸ்ஸும், கடைசி
பஸ்ஸுமாவது புறப்படுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

வண்டிகளைச் சுத்தமாக வைத்துக்கொள்வது மிகவும்
அவசியம். அங்கங்கே டெஸ்டினேஷன் போய்ச் சேர்ந்தவுடன்
வண்டிகளைச் சுத்தம் செய்வதற்கு ஏற்பாடு இருக்கவேண்டும்.
மேலும் கடைசி டிரிப்பில் முதலில் இருந்து முடிவு வரையில்—
லாஸ்ட் பாயின்ட் வந்து சேரும் வரை ஸ்டாப்புகளில் நின்று
போக உத்தரவு பிறப்பித்திருப்பதாகத் தெரிகிறது. ஆனால் அதிக
வேகமாக—பஸ்களில் இடம் இருந்தும்கூட பல ஸ்டாப்புகளில்
நிறுத்தாமல் சில டிரைவர்கள் போய்விடுகிறார்கள். இதையும்
அவசியம் தடுக்கவேண்டும். பஸ்கள் எங்கிருந்து புறப்படுகிறது,
எங்கே போய்ச் சேருகிறது என்ற—ஸ்டார்டிங் ப்ளேஸ்—டெஸ்டி
னேஷன்—இரண்டையும் குறிக்கக்கூடிய போர்டுகள் ஒவ்வொரு
பஸ்ஸிலும் இருக்கவேண்டும்.

அடுத்தபடியாக இன்ன வேகத்தில் தான் வண்டி போகலாம்
என்று குறிப்பிட்டிருந்தாலும் சில வண்டிகள் அதிக வேகமாக
ஓட்டிச் செல்லப்படுகின்றன என்று சொன்னார்கள். இந்தமாதிரி
குறிப்பிட்ட வேகத்திற்கு அதிகமாகப் போகக்கூடியதைத் தடுப்ப
தற்கு டெக்னோமீட்டர்கள் வைக்கலாம். அப்படி வைத்துவிட்டால்
டிரைவர்களுக்குப் பொறுப்பு இருக்கும். அதிகாரிகளும்
எங்கங்கே வண்டி குறிப்பிட்ட வேகத்திற்குமேல் செலுத்தப்பட்
டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளவும் முடியும். நமது
வண்டிகளில் டெக்னோமீட்டர்கள் வைக்கப்படவில்லை. அதை
எல்லா வண்டிகளுக்கும் வைப்பது மிகவும் அவசியம்.

[Sri K. Sattanatha Karayalar] [15th March 1961

விளம்பரத்தைப் பொறுத்த வரையில் வெகுவாக அதை ஊக்குவிக்க வேண்டியது அவசியம். ஆனால் அதை நல்லமுறையில் ஊக்குவிக்க ஏற்பாடு செய்யவில்லை. இந்தத் துறையில் வருவாயைப் பெருக்கவேண்டியது அவசியம் என நான் கருதுகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN: ஆனால் இன்னொரு அபிப்பிராயம்—"விளம்பரம் என்றால் டர்டியாக இருக்கிறது, அது வேண்டாம், வண்டிகளும் பழைய வண்டிகளைப் போல இருக்கிறது" என்று சொல்லப்பட்டது.

SRI K. SATTANATHA KARAYALAR: விளம்பரம் என்பது டர்டியாக இருக்க முடியாது. அதை டர்டியாக நாம் வைத்துக் கொள்ளக்கூடாது. நாம் ஓரளவு வருமானத்தைத்தான் கவனிக்க வேண்டும்.

எக்ஸ்பிரஸ் பஸ்கள் பற்றி ஒரு விஷயம் சொல்ல ஆசைப்படுகிறேன். இன்று அதில் சில இனங்களில் அதிகமாக செலவு செய்யப்படுகிறது. ஒரு உதாரணம் நான் கூற விரும்புகிறேன். நாம் இந்தத் தொழிலை ஏற்று நடத்தும்போது தனிப்பட்ட முதலாளி இதை எப்படி நடத்துவார் என்ற கண்ணோட்டத்தோடு பார்க்கவேண்டும். திருச்சியில் எக்ஸ்பிரஸ் பஸ் போய்ச் சேருகிறது. அங்கு நிற்கக்கூடிய ஒவ்வொரு வண்டியையும் கழுவ பத்து ரூபாய் தினம் ஒன்றுக்கு கொடுக்கப்படுகிறது. இப்படி ஐந்து வண்டிகள் கழுவப்பட்டால் ரூபாய் 50 ஆகிறது, தினந்தோறும். அங்கு மேலும் ஒரு அதிகாரியையும் நியமித்திருக்கிறார்கள். டிராபிக் மானேஜர் அல்லது டிராபிக் இன்ஸ்பெக்டர் என்று ஒரு அதிகாரியிருக்கிறார். அவருக்குள்ள சம்பளமும் கணிசமாகயிருக்கிறது. இதேபோல்தான் சேலத்திலும், தஞ்சையிலும் இருக்கக்கூடுமென்று நான் நினைக்கிறேன். நாலைந்து வண்டிகளைக் கழுவுவதற்கு தினம் 50 ரூபாய் கொடுப்பது என்பது மிகவும் அதிகம். இரண்டு க்ளீனர்களைப் போட்டு மாதம் ஒன்றுக்கு 500 ரூபாய்க்குள்ளாக எஸ்டாபிளிஷ்மென்ட் செலவை நிறுத்திக்கொள்ள வேண்டும். ஆகவே, இந்த செலவைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தனி நபர்கள் இப்படிச் செய்யமாட்டார்கள். செங்கோட்டையில் கேரள சர்க்காரின் ஒரு பஸ் ஸ்டேஷன் இருக்கிறது. இங்கு சுமார் 20 வண்டிகள் வரை வருகின்றன; கொல்லம், திருவனந்தபுரம், கோட்டயம் போன்ற பல இடங்களுக்கு அங்கிருந்து பஸ் போகிறது. அந்த 20 வண்டிகளை மேற்பார்வை பார்ப்பதற்கு ஒரு செக்கிங் இன்ஸ்பெக்டர் தான் இருக்கிறார். அவருக்கு ஒரு லோயர் டிவிஷன் கிளார்க்கின் சம்பளம் தான் கொடுக்கப்படுகிறது. நூற்றைம்பது ரூபாய்க்கு அதிகமில்லாமல் இரண்டு க்ளீனர்களைமட்டும் வைத்துக்கொண்டு சமாளித்துக்கொண்டு வருகிறார்கள். ஆகவே, இந்தச் செலவு அதிகப்படியான செலவு. யாரிடமிருந்து எண்ணெய் (பெட்ரோல்) எடுக்கிறார்களோ அவர்களே இந்தப் பொறுப்பை ஏற்றுக்



15th March 1961] [Sri K. Sattanatha Karayalar]

கொள்கிறார்கள். அவர்களே இலவசமாகச் செய்து கொடுக்கக் கூடிய விஷயம் தான் அது. ஆகவே, இதற்காக இந்த அளவு செலவு செய்வது அதிகப்படியான செலவுதான். பின்னர், நிர்வாக நியமனத்தில் கூட பல உத்தியோகங்கள் இன்னும் காலியாகவே வைக்கப்பட்டிருக்கின்றன. அப்படி உத்தியோகங்கள் (போஸ்ட்ஸ்) காலியாக வைக்கப்படுமானால் அதனால் பலருக்குப் பலவித கிலேசம் ஏற்படுகிறது. இந்தக் குறிப்பிட்ட உத்தியோகங்கள் வேண்டாம் அல்லது இந்த இடங்களை நாங்கள் நிரப்பப் போவதில்லையென்று சொல்லி விடவேண்டும். அதில்லாது இந்த இடங்களைக் காலியாக வைத்துக்கொண்டு காலம் தாழ்த்திக் கொண்டு போவது சரியல்ல. இதனால் உத்தியோகத்தில் உள்ள பலருக்கும் மனஸ்தாபங்கள் ஏற்படும். பின், தொழிலாளர் துறையில்கூட "இம்பர்ஸனேஷன்", வேறு ஒருவருக்காக போய் பரீட்சை எழுதியதற்காக தண்டிக்கப்பட்டவர்களைக்கூட திரும்ப சர்க்கார் வேலையில் வைத்துக் கொண்டிருப்பது, அவர்களுக்கு எந்தவிதமான தண்டனையும்கூட கொடுக்காமல் வேலையில் வைத்துக்கொண்டிருப்பது தவறு. மேலும் "லேடீஸ் ஸ்பெஷல்" என்று சென்னையில், கூட்டம் அதிகமாகயிருக்கும்போது பெண்களுக்கு ஒரு ஸ்பெஷல் சர்வீஸ் விட்டால் நல்லது. செங்கோட்டையையும் ஒரு எல்லையாக வைத்து தூத்துக்குடி, திருச்சி போன்றயிடங்களுக்குச் செல்லும் எக்ஸ்பிரஸ் ரூட்டை அங்கிருந்து ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER: எழுபது நிமிடங்கள் இருக்கின்றன. ஒன்பது அங்கத்தினர்கள் பேசவேண்டுமென்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, ஒவ்வொரு அங்கத்தினரும் எட்டு நிமிடங்கள்தான் பேசவேண்டும்.

* SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அரசாங்கம் பஸ் ரூட்டை தேசிய உடைமையாக்கி 14 ஆண்டுகளாக நடத்தி வருவதில் கடந்த மூன்று, நான்கு ஆண்டுகளில் காட்டியிருக்கக்கூடிய முன்னேற்றம் குறிப்பிடத்தக்கதென்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அரசாங்கமே பஸ் போக்குவரத்தை எடுத்து நடத்தவேண்டும், வரிகளைப் பொதுமக்கள்மீது சுமத்துவதற்குப் பதிலாக வருமானம் தரக்கூடியதாகயிருக்கிறது, இப்படி தேசியமயமாக்குவது, ஆகவே அத்தனை பஸ்களையும் எடுத்து நடத்துவதாகயிருந்தால் வரிகள் குறையும் என்று சொல்லக்கூடிய வாதங்கள் எதிர்த்தரப்பிலிருந்து வருகிறது. அவ்வளவையும் எடுத்து நடத்தினாலும் மக்களுக்கு நல்ல சேவை செய்யக்கூடிய நிலை வராது என்பதைக் கடந்த கால சில நிகழ்ச்சிகளிலிருந்து நாம் அறிகிறோம். முக்கியமாக நான் குறிப்பிட விரும்புவது, தனிப்பட்டவர்கள் பஸ் போக்குவரத்தை நடத்தும்போது அவர்கள் இஷ்டத்

[Srimathi Rajathi Kunchithapatham] [15th March 1961

திற்கு உகந்தவாறு, அதில் நஷ்டம் வந்தால் அதையும் ஏற்றுக்
கொண்டு, அந்த ரிஸ்கை அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலை
இருக்கிறது. அதை அரசாங்கம் நடத்தும்போது, அதிகாரிகளோ
அல்லது அமைச்சர் அவர்களோ, அவர்களுக்கு அந்த ரிஸ்க் இல்லா
மலிருப்பது ஒரு முக்கியமான அம்சம். அதைத்தான் நான் குறிப்
பிட விரும்புகிறேன். கடந்த கால சம்பவங்களில், கண்டக்டர்கள்
நடந்துகொண்ட விதம், பொதுமக்களுக்குள்ள அதிருப்தி போன்ற
வைகள் குறித்து பத்திரிகையில் பார்த்தோம். எல்லோரிடமும்
நிலவி வருகிற அபிப்பிராயத்தைக் கூறுகிறேன். அலுவலகங்
களுக்குப் போகிறவர்களும், கல்லூரிகளுக்குப் போகிறவர்களும்,
பள்ளிக்கூடங்களுக்குச் செல்கிறவர்களும், வியாபார ஸ்தலங்
களுக்குச் செல்கிறவர்களும் பஸ் ஸ்டாண்டுகளில் காத்துக்கொண்டு
நிற்கும்போது, பஸ் வந்தால் சில பஸ்கள் அவர்களைக் கவனிக்காமல்
போய்விடுகிறதென்ற அபிப்பிராயம் இருக்கிறது. இந்தக் குறைப்
பாடு தனிப்பட்ட ஒரு முதலாளி நடத்தும்போது காணமுடியாது.
ஆகவே, அரசாங்கம் பஸ் போக்குவரத்தை நடத்தும்போது, ஒரு
"லிமிட்டட் ஸ்பியரில்" தான் நடத்தவேண்டியிருக்கிறது. குறுகிய
அதிகாரத்தோடு, மக்களுக்கு நல்ல சேவை செய்யும் ஒரு இலாகா,
அதுவும் காலையிலிருந்து மாலை வரை பொதுமக்கள் வாழ்க்கை
யோடு பின்னியிருக்கக்கூடிய ஒரு இலாகா, இந்த இலாகாதான்.
இந்நிலையில் கடந்த நாலைந்து வருடங்கள் நல்லதொரு முன்னேற்
றத்தைக் காட்டியிருக்கிறது இந்த இலாகா. கடந்த ஆண்டு பத்து
பஸ்கள் அதிகமாகப் போட்டிருப்பதாகவும், 1960-61-ல் 131 பஸ்கள்
அதிகமாகப் போட்டிருப்பதாகவும், இன்னும் இந்த ஆண்டும் அதிக
மாக போடப்போவதாகவும் கூறப்பட்டிருக்கிறது. பஸ்கள் அதிக
மாக, அதிகமாக பிரயாணிகள் நடப்பதற்கும் சங்கடம் ஏற்படும்.
அயல் நாடுகளிலிருந்து வருகிறவர்களும், அரசியார் அவர்கள் வந்த
போதும் ஊர்வலமாக சென்றார்கள். அடையாற்றிலிருந்து ஏறி
மவுண்ட் ரோட் போக 30 நிமிடங்களாகிறது; அப்படி ஊர்வல
மாகப் போகக்கூடிய நிலையிருக்கிறது. பஸ்களையும் அதிகரிக்க
வேண்டும், மக்களின் தேவைகளையும் பூர்த்தி செய்யவேண்டும்.
அதோடு தொழிலாளர் இடையே தொழில் அமைதியையும் பாது
காத்து முன்னேற வேண்டிய ஒரு இக்கட்டான நிலையிருக்கிறது.
இந்த இலாகாவில் கடந்த மூன்று, நான்கு, ஆண்டுகளில்
ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைக் கண்டு அமைச்சர் அவர்களைப்
புகழாமல் இருக்க முடியாது. தொழிலாளர்களோடு கூடயிருந்து
வாழ்ந்தவர், தொழிலாளர் தலைவராகயிருந்தவர் தொழிற்சங்கத்
தலைவராக யிருந்து தொழிலாளர்களுக்காக வாதாடி அவர்களுக்
காக உழைத்து அனுபவம் பெற்றவர், நமது தொழில் அமைச்சர்
அவர்கள். அப்படிப்பட்ட தொழில் அமைச்சர் அவர்கள் இருப்
பதால் இந்த இலாகா நல்ல முன்னேற்றம் அடைந்து வருகிறது.
விவசாயத் துறையிலும்; கல்வித் துறையிலும் தமிழ்நாடு நான்
முதன்மையில் நிற்கிறது. அந்த முறையில் அரசாங்கத்தினால்
ஏற்று நடத்தப்படுகிற இந்த இலாகாவிலும் நல்லதொரு
முன்னேற்றம் ஏற்படும் என்று நாம் எதிர்பார்க்க முடியும். பின்,



15th March 1961] [Srimathi Rajathi Kunchithapatham]

தொழிலாளர்களைப்பற்றி ஒருசில வார்த்தைகள். நாலாயிரத்துக்கு
மேல் தொழிலாளர்கள் இருக்கிறார்கள், டெக்னிக்கல் அன்ட்
சூப்பர்வைஸிங் ஸ்டாப் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. வீடு
கள் கட்டிக்கொடுக்கிறார்கள். ஆயிரத்து நானூறுக்கு ஏற்பாடு
செய்திருக்கிறார்கள். ஆனால் இந்த அக்விஸிஷன் காரியத்தினால்
தான் தாமதம் ஏற்படுகிறதென்று நினைக்கிறேன். இவைகளை
யெல்லாம் துரிதப்படுத்தவேண்டும், சலவை செய்யப் பணம்,
தைப்பதற்குக் கூலி, பின்னர், கொசு வலை கூட கொடுக்கப்படுகிற
தென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. சம்பள விஷயத்தில் கண்டக்
டர்கள், வாழ்க்கையில் முன்னேற்றம் அடையத்தக்க விதத்தில்,
கண்டக்டராக முதலில் வேலை செய்ய ஆரம்பித்தாலும், பின்னர்
செக்கிங் இன்ஸ்பெக்டராகப் போய், பின் சூப்பர்வைஸராகப்
போய், இப்படி 600 ரூபாய்க்கு மேல் அவர்கள் சம்பளம் பெறக்
கூடிய அளவிற்குப் போகலாம். ஆனால் ட்ரைவர்களுக்கு அந்த
விதமான வாய்ப்பில்லை. அவர்கள் தொழிலை எடுத்துக்கொண்டால்,
குறுகிய இடங்களில் அவர்கள் ஸ்டியரிங்கை வளைக்கும்போது
அவர்கள் அவர்களது உடம்பைக் கடம்பாக்கிக் கொண்டு வளைக்க
வேண்டியிருக்கிறது. அவர்கள் வேலை மிகவும் கடினமான வேலை
யாகும். அவர்களுக்கு அதிகப்படி சம்பளம் கொடுக்கப்பட
வேண்டும். இருநூறு ரூபாய் வரையிலாவது அவர்களுக்கு
சம்பளம் கொடுக்கவேண்டும். கண்டக்டர்களைப் போன்று ட்ரைவர்
கள் மேலே போக வாய்ப்பில்லை. "ஏணி கோணி அண்ணாவி
வாத்தியார்" என்று சொல்வார்கள். அதேபோல் ட்ரைவர்
ட்ரைவராகவே ரிட்டயராகும் நிலைதான் இன்று இருக்கிறது.
ஆகவே, அவர்களது சம்பளத்தை உயர்த்திக் கொடுக்கவேண்டும்.
பின்னர், பிரயாணிகள் சௌகரியங்கள் பற்றி ஒரு வார்த்தை
சொல்ல விரும்புகிறேன். எங்கள் நெல்லை மாவட்டத்தில் நெல்லை
லாட்ஜ் என்றிருக்கிறது. அங்கு வடக்கு, தெற்கு, மேற்கு, கிழக்கு
எல்லாப் பகுதிகளிலிருந்தும் பிரயாணிகள் வந்து தங்குகிறார்கள்.
நல்ல சென்டர் இடமாகப் பார்த்து ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.
அதில் பாத்ரூம் வசதி, கான்டீன் வசதி இவைகள் எல்லாம் இருக்
கின்றன. அதே நோக்கில் நான் கேட்டுக்கொள்வது என்ன 12 noon.
வென்றால், நெடுந்தூரம் பஸ்களில் பிராயணம் செய்கின்றோம்.
இனிமேல் ஸம்மர் (வெயில் காலம்) வரப்போகிறது. கடுமையான
வெயிலைத் தாங்கிக்கொள்ளவேண்டியிருக்கும். ஆகவே நீண்ட தூரம்
இந்த பஸ்ஸில் போகும்போது மிகவும் கஷ்டமாய் இருக்கும்.
இதை நீக்குகின்ற முறையில் நீண்டதூரம் பிராயணம் செய்கின்ற
பஸ்களில் ஏர்-கண்டிஷன் செய்யவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். இதற்காக இப்போது வசூல் செய்யப்படும்
கட்டணங்களை அதிகமாக்கக்கூடாது. ரயில்வேயை எடுத்துக்
கொண்டால் மூன்றாவது வகுப்புப் பெட்டிகளில் ஃபேன் (விசிறி)
வசதி எல்லாம் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த முறை
யில் நாமும் இந்த நீண்டதூரம் பிரயாணம் செய்கின்ற வண்டிகளில்
ஏர்-கண்டிஷன் செய்து கொடுக்கவேண்டும் என்று மீண்டும்

[Srimathi Rajathi Kunchithapatham] [15th March 1961

கேட்டுக்கொள்கிறேன். அதோடு நம் வண்டிகளில் என்னென்ன வசதிகளை எல்லாம் செய்து கொடுக்கலாம், மேல்நாடுகளில் இம்மாதிரி என்னென்ன வசதிகள் எல்லாம் செய்து கொடுக்கிறார்கள் என்பதைக் கண்டறிவதற்காக இந்த இலாகாவிலிருந்து பயிற்சி பெறுவதற்காக அதிகாரிகளை வெளிநாடுகளுக்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கு என்ன முறைகளில் எல்லாம் பிரயாணிகளுக்கு ஊக்கமும் உற்சாகத்தையும் கொடுக்கிறார்கள், அதற்காக என்னென்னத் திட்டங்கள் எல்லாம் இருக்கின்றன, தொழிலாளர்களுக்கும் பொது மக்களுக்கும் இடையில் என்னென்ன முறைகளில் தொடர்பு இருக்கின்றன, அவைகளில் நாம் எதை ஏற்றுக்கொள்ளலாம் என்பதையெல்லாம் கண்டறிவதற்கு இந்த இலாகாவிலுள்ள அதிகாரிகளை வெளிநாடுகளுக்கு அனுப்பினால் நல்லதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடைசியில், பஸ்களைத் தேசியமயமாக்கவேண்டும் என்கிற விஷயத்தில், இப்போது 120 மைல்களுக்கு அப்பாலுள்ள பஸ்களை எடுத்துக் கொள்ளலாம் என்று அரசாங்கம் செய்திருக்கின்ற முடிவு வரவேற்கக்கூடியதுதான். 120 மைல்களுக்கு உட்பட்ட போக்குவரத்தை சிறிய பஸ் நிர்வாகிகள் (ஸ்மால் ஆபரேட்டர்ஸ்) எடுத்து நடத்தலாம் என்றும் 120 மைல்களுக்கு மேற்பட்ட பஸ் போக்குவரத்தை அரசாங்கம் எடுத்து நடத்தலாம் என்றும் சொல்லியிருப்பது, மிகவும் நல்ல முறையில் பஸ் போக்குவரத்தை நடத்துவதற்கு சௌகரியமாக இருக்கும் என்று நம்புகிறேன். அப்படி எடுப்பதில், அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் நல்ல திறமை இருக்கவேண்டும். அதிலும் இந்த இலாகாவில் வேலை செய்கின்றவர்கள் மற்ற இலாகாக்களில் வேலை செய்பவர்களைப் போல் அல்ல. மக்களோடு தொடர்பு கொண்டு வேலை செய்யவேண்டும், நம்பிக்கையோடு வேலை செய்யவேண்டும். ஆகவே மெள்ள மெள்ளப் போவதுதான் நல்லது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிலைமையில் நம்முடைய முன்னேற்றம் தடைபடாமல் இருக்க வேண்டும். இப்போது இந்த இலாகாவினர் நல்ல லாபத்தை—நிகர லாபத்தைக்—காட்டியிருக்கிறார்கள். பஸ் வசதிகளையும் அதிகமாக்கியிருக்கிறார்கள், ஓட்டை ஒடிசல் பஸ்கள் எல்லாம் இல்லாதவாறு புதிய பஸ்களை—பள பளவென்று ஓடக்கூடிய பஸ்களை—விட்டிருக்கிறார்கள். இந்த நிலைமையில் கண்டக்டர்களுக்கும் பொதுமக்களுக்கும் ஒரு நல்ல நிலைமை ஏற்படுத்தும்படியான ஒரு சூழ்நிலையைக் கொண்டு வர அதிகாரிகள் முயற்சிக்க வேண்டும் என்று சொல்லும்போது பொதுமக்களும் தங்களுக்கு இதில் பொறுப்பு இருக்கிறது என்பதை உணர்ந்து இருசாராரும் அமைதிக்குப் பங்கம் வராத முறையில் நடந்து கொள்வதற்கு முயற்சிக்கவேண்டும், இந்த இலாகாவில் வேலை செய்பவர்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதற்கு நல்ல அம்சங்கள் இதில் இருக்கின்றன என்று கூறி, இந்த மான்யக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.



15th March 1961]

* SRI M. R. KANDASWAMI MUDALIYAR: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த சபை முன் வந்திருக்கும் மான்யத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய அரசாங்கத்தில் எடுத்து நடத்தக்கூடிய பஸ்களில் அமைச்சர் அவர்கள் நல்ல கவனம் செலுத்தி பிரயாணிகளுடைய வசதிக்காகவும் பல வசதிகள் செய்து கொடுத்திருக்கிறார்கள். இவைகளில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பார்த்து நாம் மிகவும் சந்தோஷப்படுகிறோம். அதோடு மாத்திரமல்ல, எல்லாத் தொழில் துறைகளிலும் நல்ல வருமானத்தைக் காட்டியிருந்தாலும், இந்தத் துறையில் நல்ல முன்னேற்றத்தைக் காண்பித்திருக்கிறார்கள். ஏனையத் தொழில்களில் அரசாங்கம் ஈடுபட்டு நடத்தக்கூடிய தொழில்களில் போதிய அளவில் முன்னேற்றம் ஏற்படவில்லை என்று சிற்சில நேரங்களில் புகார்கள் வருவதுண்டு. ஆனால் இந்தத் துறையில் நல்ல முறையில் தொழிலாளர்களுடைய வசதிகளையும், பிரயாணிகளுடைய வசதிகளையும், வருமானத்தையும் போதிய அளவில் பெருக்கியிருக்கிறார்கள் என்பதைப் பார்த்து நாம் இதைப் பாராட்டுகிறோம். மேலும் தொலைதூரத்திற்குப் போகும் பஸ்களை அரசாங்கம் ஏற்றெடுத்து நடத்த வேண்டும் என்று முடிவு செய்திருக்கிறார்கள். அது மிகவும் வரவேற்கக்கூடிய முடிவுதான். அது மிகவும் பாராட்டுதற்குரியதே. அதே சமயத்தில் நெடுந்தூரம் போகக்கூடிய எக்ஸ்பிரஸ் பஸ்களில் நல்ல முறையில் ஊதியம் கிடைக்கிறது. பொதுமக்களுக்கும் நல்ல சௌகரியங்கள் இருக்கின்றன. அதைப் பொதுமக்கள் வரவேற்கிறார்கள். ஆகவே நெடுந்தூரம் செல்லக்கூடிய பஸ்களை சர்க்கார் ஏற்றெடுத்துக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீண்டதூரம் செல்லக்கூடிய பஸ்களில், எனக்கு முன்னால் பேசிய கனம் அம்மையார் அவர்கள் எடுத்துச் சொன்னதுபோல், அந்த வண்டிகளில் குளிர்சாதன வசதி அமைக்கவேண்டும் என்று நானும் கேட்டுக்கொள்கிறேன். சேலத்திற்கும் சென்னைக்கும் இடையில் 200, 250 மைல் பிரயாணம் செய்யவேண்டும். சேலத்திலிருந்து பகல் 12 மணிக்கு புறப்படும் வண்டி சென்னைக்கு இரவு 8½ மணிக்கு வருகிறது. ஆரம்பத்தில் புறப்படுகிற இடத்திலிருந்து நான்கைந்து மணி நேரம் கடுமையான வெயில் இருக்கிறது. ஆகவே இந்த வண்டிகளில் குளிர்சாதன வசதி பொருத்தினால் மிகவும் நன்றாக இருக்கும் என்று பிரயாணிகள் எல்லோரும் கருதுவதால், இதை உடனடியாக அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சில எக்ஸ்பிரஸ் வண்டிகளில் சீட் வசதி மிகவும் குறைவாக இருக்கிறது. ஒரே சீட்டில் மூன்று பிரயாணிகள் இருக்கவேண்டியிருக்கிறது. இந்த சீட்களில் பக்கத்தில் கம்பி பொருத்தப்பட்டிருப்பதால் மூன்று பேர்களை உட்காரவைக்கிறார்கள். . . . . . . .

THE HON. SRI R. VENKATARAMAN: அரசாங்கத்தால் நடத்தப்படும் எக்ஸ்பிரஸ் பஸ்களில் மூன்று பேர்கள் உட்காரக்கூடிய சீட்களே கிடையாது.

**SRI M. R. KANDASWAM MUDALIYAR:** தனிப்பட்டவர்கள் நடத்தும் எக்ஸ்பிரஸ் பஸ்களில் இவ்விதம் இருக்கின்றன. அரசாங்கம் நடத்தக்கூடிய எக்ஸ்பிரஸ் பஸ்களில் இல்லை என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். அரசாங்க எக்ஸ்பிரஸ் பஸ்களில் சாமான்கள் வைப்பதற்கும் போதிய அளவு வசதியில்லாமல்தான் இருக்கிறது. வண்டிகள் பெரிய வண்டியாக இருப்பதால் வளைவாக சாமான்கள் வைத்தால் பிரயாணிகள் தலையில் சாமான்கள் வந்து விழக்கூடிய நிலையில்தான், பஸ்களின் மேல் பக்கத்தில் ஓரமாக வைத்தது. ஆகவே இதற்கு நல்ல வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு இப்போது ஓடுகின்ற எல்லா பஸ்களும் பெரிய பஸ்களாக இருக்கின்ற காரணத்தால் அடிக்கடி ஆபத்துக்கள் ஏற்படுகின்றன. காரணம், ரோடுகளில் 12 அடி தான் தார் போடப்பட்டிருக்கிறது. மழை காலத்தில் பெரிய லாரிகள், கார்கள் இவைகள் எல்லாம் எதிரில் வண்டிகள் வரும் சமயம் ஓரத்தில் ஒதுங்கும்போது மண் ரோட்டில் போவதால் வண்டிக்கு இடையூறு ஏற்படாமல் இருக்கவேண்டும் என்பதற்காக தார் போட்டிருக்கும் இடத்திலேயே போய்க்கொண்டிருக்கிறார்கள். பஸ்களும் அவ்விதமே போய்க்கொண்டிருக்கின்றன. இதன் காரணமாக பல ஆபத்துக்கள் ஏற்படுகின்றன. ஆகவே தார் ரோட்டை விரிவுபடுத்தவேண்டும் என்று சொல்லும்போது இந்தப் பொறுப்பு இந்த இலாகாவினருக்கு இல்லை என்று இருந்தாலும் கூட, அந்த இலாகாவில் இந்த அமைச்சர் அவர்கள் சொல்லி தார் ரோட்டை அகலப்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்கம் இப்போது 12, 13 மைல்களுக்கு உட்பட்ட ரூட்டுகளை புதிதாக அப்ளிகேஷன் போடுபவர்களுக்குக் கொடுப்பது என்று தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது. இவ்விதம் புதிதாக அப்ளிகேஷன் போடுபவர்களுக்குச் சில சலுகைகள் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதாவது புதிதாக அப்ளை செய்பவர்களுக்கு செக்டார் இருக்கவேண்டும், அவர்களுக்கு மார்க் ஸிஸ்டம் இருக்கவேண்டும் என்றெல்லாம் சொல்லப்படுகிறது. இதையெல்லாம் புதிதாக வருபவர்களுக்கு கட்டாயப்படுத்தாமல், அவர்களுக்குச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நல்ல முறையில் வருமானத்தையும் சௌகரியத்தையும் பெருக்கிக்கொண்டு வரும் இந்த இலாகாவினரைப் பாராட்டி இந்த மான்யத்தை ஆதரித்து என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**SRI V. SUBBIAH:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மான்யத்தில் 2 கோடி 39 லட்சம் ரூபாய் கேட்கப்பட்டிருக்கின்றது. இந்த மான்யத்தின் மீது பேசும்போது குறிப்பாக, ஸிட்டி டிரான்ஸ்போர்ட்டை எடுத்துக்கொண்டால், நகரத்தில் பெரும்பாலும் பஸ்கள் காலாகாலத்தில் வருவதில்லை என்கின்ற ஒரு குறையும் பஸ்களில் ஏறி உட்காரும் இடங்களில் சுத்தமாய் இருப்பதில்லை என்றும், புது பஸ்களாக இருந்தால்கூட அதில் அசுத்த-



மாக இருக்கிறது என்றும், உட்கார்ந்தால் பெயின்ட் ஒட்டிக்கொள்கிறது, தூசி ஒட்டிக்கொள்கிறது என்றும் அதில் ஏறிச் செல்பவர்கள் குறை சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, நமது டிரான்ஸ்போர்ட்டில் பஸ்கள் வந்துகொண்டிருக்கின்றன என்றால் எந்த நம்பர் பஸ், எந்த ரூட்டில் வந்துகொண்டிருக்கிறது என்றுகூடப் புரிந்துகொள்ளமுடியாத நிலையில் வந்துகொண்டிருக்கின்றன. எழுதப்பட்டுள்ள எழுத்துக்கள் சரியாக இல்லை. நம்பர் சரியாக இல்லை. மதுரை மாநகரத்தில் போய்ப் பார்த்தால் அங்கே டி.வி.எஸ். பஸ்கள் போய்க்கொண்டிருக்கின்றன. பஸ் ஸ்டாண்டிலிருந்து மங்கம்மாசத்திரம் வந்தால் வந்தவுடனே கண்டக்டர் மங்கம்மாசத்திரம் என்று சொல்லிவிடுவார். பாஸஞ்சர்கள் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டிருந்தால் ஒரு இடத்தில் இறங்க வேண்டியவர் இன்னொரு இடத்தில் இறங்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஒரு பஸ் ஸ்டாப்பிற்கு வந்தவுடன் இந்த இடம் என்று கூறி பாஸஞ்சருக்குத் தெரியும்படி சொல்லவேண்டும். அந்த முறையை ஏற்படுத்தவேண்டும்.

குறிப்பாக மக்களுக்கு உதவியாக இருக்கக்கூடிய நிலையில் பஸ் போக்குவரத்து இருக்கவேண்டும். லாபம் என்பது மட்டும் குறிக்கோளாக இருக்கக்கூடாது. இன்றைய தினம் 500 பஸ்கள் ஓடுகின்றன என்றால் மிக முக்கியமான ஆஸ்பத்திரிகள், தொழிற்சாலைகள், சர்க்கார் அலுவலகங்கள் இருக்கக்கூடிய இடங்களுக்குக் கூடுதலாக பஸ்களை விடத் தயாராக இருக்கவேண்டும். இன்றைய தினம் க்யூ வரிசையில் பர்லாங் அளவுக்கு நிற்கும் நிலைமையைப் பார்க்கிறோம். மதுரை மாநகரில் இருக்கக்கூடிய டி.வி.எஸ். பஸ்களைப் பார்த்தால் ஓவர்லோடுகூட கிடையாது. நகரத்தில் ஓடக்கூடிய ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ்களில் ஏற முடியாத அளவுக்குக் கூட்டம் இருக்கிறது—அதோடு அசுத்தமாகவும் இருக்கிறது. நான் இப்படிச் சொல்லுவதை ஒரு குறை என்று நினைக்கக்கூடாது—நீக்கவேண்டுமென்பதற்காகத்தான் இதை எடுத்துச் சொல்லுகிறேன். டிரைவர்கள், கண்டக்டர்கள் எப்படி இருக்கிறார்கள் என்று நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. ஒரு நாள் நான் ஒரு நண்பரோடு—பஸ்ஸில் ஏறக்கூட இல்லை—நடந்து போய்க்கொண்டிருந்தேன். வெல்லிங்டன் ஸ்டாப்பிற்குச் சமீபத்தில் இருந்துகொண்டு நானும் என்னுடைய நண்பரும் பார்த்தோம்; அங்கே கிராமவாசிகள்—வெளியூர் வாசிகள்—பஸ்ஸில் ஏறிக்கொண்டு இருந்தார்கள். அப்படி ஏறிக்கொண்டு இருக்கும்போது இரண்டு பேர்கள் ஏறி, மூன்றாவது பேர் ஏறுவதற்குள் பஸ் இரண்டு அடி நகர்ந்தது; உடனே அவர் கீழே விழுந்து விட்டார். திரும்ப பஸ் நின்று ஏறியபோதும், இன்னும் ஏறிக்கொண்டிருக்கும்போதே நகர்ந்து போகிறது. டி.வி.எஸ்.-ஸில் அந்த மாதிரி பார்க்க முடியாது. இப்பேற்பட்ட திமிர் பிடித்த டிரைவர்கள் நம் டிரான்ஸ்போர்ட்டில் இருக்கக்கூடாது. இதை நான் கண்கூடாகப் பார்த்தேன்.

எத்தனை இடங்களில் இந்த மாதிரி ஏற்படுகிறதோ என்றால் சொல்லமுடியாது. டிரைவர்களிடத்திலும், கண்டக்டர்களிடத்திலும் இனிமையான வார்த்தைகள் இருக்கவேண்டும்—நல்ல நடத்தை இருக்கவேண்டும். மக்களுக்கு அவர்களிடத்தில் அனுதாபம் ஏற்படக்கூடிய முறையில் நடந்துகொள்ளவேண்டும். டிரான்ஸ்போர்ட் அதிகாரிகள் இதைக் கவனத்தில் வைத்து இந்த மாதிரி நடக்காமல் கண்காணிப்பாக இருக்கவேண்டும், இப்பேற்பட்ட நிகழ்ச்சிகள் நீடிக்கக்கூடாது என்பது எனது வேண்டுகோள்.

டிரான்ஸ்போர்ட்டில் எக்ஸ்பிரஸ் பஸ்களை நீண்ட தூரத்திற்கு விடுகிறார்கள். ஆனால் அதனுடைய சார்ஜஸ் தாங்க முடியாத அளவுக்கு இருக்கிறது. வருமானம் ஒன்று மட்டும் நமது குறிக்கோளாக இருக்கக்கூடாது. சென்ற 1960-61-ம் ஆண்டை விட 1961-62-ல் அதிக லாபம் காட்டுகிறோம் என்ற எண்ணம் இல்லாமல் மக்கள் வசதியைக் கவனிக்கவேண்டும். ஸிட்டி டிரான்ஸ்போர்ட்டில்கூட சார்ஜஸ் ஜாஸ்தி என்று சொல்லுகிறார்கள். அதைப்பற்றி எனக்குத் தெரியாது. எக்ஸ்பிரஸ் பஸ்களைப் பார்த்தால் சாதாரண பஸ்களைவிட, என் ஃபர்ஸ்ட் கிளாஸ் ரயில் சார்ஜை விட கூடுதலாக இருக்கிறது என்று சொன்னால் அது குற்றம் ஆகாது. அம்மாதிரி இருப்பதைக் கூடிய வரையில் குறைத்து, ஜனங்களுடைய சௌகரியம்தான் குறிக்கோளாக இருக்கவேண்டுமே தவிர லாபம் முக்கியமல்ல, அந்த முறையில் சார்ஜஸைக் குறைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாகப் பார்த்தால் நம் பஸ்கள் 40-50 மைல்கள் வேகத்தில் போகிறார்கள். அதனால் சில இடங்களில் விபத்து ஏற்படுகிறது என்பதை மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். டி.வி.எஸ். பஸ்ஸில் எப்போதாவது விபத்து ஏற்படுகிறதா என்றால் அந்த டிரைவர்கள் யாருமே 20 மைல் அல்லது 18 மைல் என்ற குறிப்பிட்ட அளவுக்கு மேல் வேகமாகப் போக முடியாது என்று வைத்திருக்கிறார்கள். அந்த மாதிரி இருக்கவேண்டும். அப்போதுதான் ஜனங்களுக்குச் சௌகரியமாக இருக்க முடியும், அத்துடன் விபத்தும் ஏற்படாமல் இருக்க முடியும்.

நகரத்தைப் பொறுத்த வரையில் நிச்சயமாக குறிப்பிட்ட இடத்திலே குறிப்பிட்ட காலத்திலே பஸ்கள் வரவேண்டும். பஸ்கள் சுத்தமாக இருக்கவேண்டும். ஓவர்லோடை ஓரளவுக்குக் குறைக்கவேண்டும்—இப்போது ஜாஸ்தியாக இருக்கிறது. வருமானம் பெரிதல்ல—மக்களுடைய சௌகரியம்தான் பெரிது, அவர்களுடைய பிரயாணத்திற்கு வசதி இருக்கவேண்டும் என்ற நிலையில் வைத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு உரையை முடித்துக்கொள்கிறேன்.

* SRI S. RANGANATHA MUDALIAR: Deputy Speaker, Sir, there has been a great deal of criticism of the State Transport System in the City of Madras. Responsible dailies like the Hindu





and the Mail have been too full of such criticisms. There is no disguising the fact that the common man, the man in the street, the consumer, for whose benefit this system is intended is thoroughly dissatisfied. It is unfortunate that this is happening in spite of the fact that we have one of the most enlightened and helpful Ministers in charge of the Department. The administration may very well say that efficiency has been its aim. It may point out to us its balance sheet, its dividends, its net income, the huge staff in its employment and several other measures—important from the managerial point of view. But the real test of efficiency in any activity for which Government is responsible is the consumers satisfaction. When that satisfaction is not present, it is time for us to pause and think. I would like to say what is happening with regard to the State Transport System. Because much time is not given to me, I could not enumerate the various defects and various difficulties experienced by the bus passengers. I am one of those humble men who have only this bus transport as the means of conveyance.. I am travelling in the bus every day and every day I am seeing the difficulties are mounting up more and more. I have seen with my own eyes many buses bunching together and going in procession one behind the other on several routes. At one time, the passenger has before him three of four buses, and he has to choose between them 'Ice House', 'Ice House', 'Hamilton Bridge', 'Hamilton Bridge'—like that the bunching is going on. These buses also return in the same fashion. If any passenger misses these buses he has to wait till the procession comes back, the same fashion. This shows that there is no adjustment with regard to timings at the terminus. Such bunching can be avoided if a little more care is taken to fix timings properly at the termini. It is common experience that in railways when one misses a train, he can exactly know when the next train starts. But here if one misses a bus nobody could give the information when the next bus will come. My own experience is when I wanted to reach Fort, I had to stand in the hot sun for over 45 minutes at the A.I.R. bus stop. I think in the other routes also such things are happening. It takes a person half-an-hour to travel from Ice House to Adam Market—half-an-hour—and then another ten minutes to clear Mount Road and afterwards within an incredibly short time, i.e., within five minutes it reaches Parry's Corner. That shows what speed, what uniform speed these buses maintain. The buses stop indefinitely at bus stops to enable the conductors to book tickets. That means delay, particularly during the rush hours in the morning and evening when people have to go to their avocations and return home. We have no means of finding out whether the time taken by the conductor is the normal time or whether there is inordinate long delay and the conducter is taking more time than necessary. There is nobody to check them. Those who have known how the tramways were working know that at every division there used to come supervisory staff—Inspector—for checking the

conductors. But, so far as our Government Transport buses are concerned, our drivers and conductors are all in all and they are the supreme masters of the situation. I am yet to see an Inspector coming at any time to check these buses.

Overcrowding in our buses is awful. Whereas private owners are prosecuted for overloading, there is no help for the passengers travelling in Government transport buses in this regard. They are simply huddled like sheep in every bus. I think it is high time the Hon. Minister takes up this matter and brings about some remedial measures as early as possible to the satisfaction of the public.

Coming to the drivers, they seem to think that they are heaven-born people. Whenever they start a bus, they start it with a jerky motion, and as pointed out by another hon. Member, this results in the people boarding the bus falling, and the passengers standing, knocking each other's head and those sitting in the seats knocking their heads on the front seat. Absolutely no consideration whatsoever is given to the poor passengers. The conductors are too callous and the drivers are still more callous and there is nobody to check them. But, I know no action can be taken against these drivers and conductors and I sympathise with the Government in regard to this matter. Because, the moment the Government take any action against them, they immediately represent to some Labour Organisation and begin to give trouble to the Government. So, in between the Labour Organisation on the one side and the inability of the Government to deal with them firmly on the other side, the poor passengers are nowhere and their interests are adversely affected.

The Government transport staff are exhibiting discourtesy towards the passengers. I myself had occasion to bring a particular case to the notice of the Hon. Minister regarding the conduct of a particular conductor in a particular bus. I have been told that adequate action had been taken in the matter. But, that is not the only solitary instance. It only typifies the kind of men that are employed in our bus service. I have also seen the transport service in Hyderabad. There, the staff are very courteous and they have a sense of humour which they exhibit even under provocative circumstances. Moreover, they are very helpful to the passengers. But, here, people are made to wait for hours and hours in the hot, blazing sun during the summer and in the drizzling rain during the rainy season and little or no sympathy is shown towards them by the staff of the Transport department. They are treated with scant courtesy. I think it is high time that the Government take a very serious view of the situation. Sir, there is a general impression that the Director of Transport is not aware of these things. The impression is that this officer is always in the Clympian heights of the transport office breathing the ambrosial air of his lofty position not knowing what is happening in this poor Plant, the Earth. We have not seen this Director anywhere on the road at any time moving about, to find out the real position. Whereas the





Director of Agriculture is everywhere and is among the ploughmen, the agriculturists and the tenants and peasants, whereas the Director of Animal Husbandry is a cattle-breeder among the cattle-breeders, whereas the Director of Public Instruction is among the villagers and is very keen on organizing the mid-day meals scheme and also the School Improvements scheme, nobody knows who this Director of Transport is. It is only given to the good fortune of the Members of the Public Accounts Committee to see this gentleman. Occasionally, this gentleman makes his gracious appearance before that committee. Even there, he does not value our criticisms. He takes the attitude attributed to Marie Antoinette who said when her attention was drawn to the rabble outside the Place and was told that the mob oustide wanted bread, she put the historic question. 'If they did not get bread, why don't they eat cakes?' That is the attitude of this officer. Therefore, it is no wonder that our Transport system is working so badly. I would therefore submit that on the model of the T.V.S. Co., our Government transport buses must be provided with what is called Tachographs. It is very necessary that our buses should have this device. It carries a chart, in which it is automatically marked when a bus left the starting point, when it reached the destination and what was the time taken for the trip, the number of stops in which the bus was stopped and all those details. It will also be helpful to find out correctly and exactly what amount of diesel oil and what amount of petrol is consumed. At present, there is no check to find out what exactly is happening. We do not known what is happening. Some time back I was travelling in a bus. Somewhere in the Triplicane High Road, I think, the bus suddenly came to a stop. The driver got down from the bus and coolly said, 'Well the bus has stopped due to some disrepair. What are we to do? Take back your tickets and get into some other bus.' But, the other buses that came behind would not take us. Just imagine our plight. It took nearly half an hour for me to come to Government Estate from Pycrofts Road stop. This is the kind of suffering we are pul to. I request the Hon. Minister to kindly bestow his attention on this matter and see that some remedy is found out for the poor ordinary bus passengers. Thank you, Sir.

**SRI T. P. ELUMALAI:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தேசிய பஸ் போக்குவரத்து மான்யத்தை ஆதரித்து சில அபிப்பிராயங்கள் சொல்லப் பிரியப்படுகின்றேன். எனக்கு முன்னாலே பேசிய திரு. ரங்கநாத முதலியார் அவர்கள்தான் மிகவும் அனுபவித்த விஷயங்களை வைத்து விவாதத்தில் பேசினார்கள். நானும் பல மாகாணங்களுக்குச் சென்றிருக்கிறேன். அங்கெல்லாம் பஸ் போக்குவரத்து எப்படி நடக்கிறது என்பதையும் எஸ்டிமேட் கமிட்டியில் இருந்து நான் சென்று பார்த்தேன். உண்மையிலேயே, மற்ற மாகாணங்களைவிட நம்முடைய மாகாணத்திலேதான் சிறந்த முறையிலே போக்குவரத்து இலாகா நடக்கின்றது என்

[Sri T. P. Elumalai] [15th March 1961

பதை நாங்கள் தெரிந்து கொண்டோம். ஆனால் சீக்கிரமாக, துரித மாக பஸ் போகவில்லை என்றும், இடம் கிடைக்கவில்லை என்றும் வருத்தப்படுகிறார்கள் என்று சொன்னால், இங்கே இருக்கின்ற ரோடுகள் இருக்கிறதே, அதைப் பொறுத்திருக்கிறது என்றே நான் சொல்லிக்கொள்ளப் பிரியப்படுகிறேன். அதே சமயத்தில் இங்கே இருக்கின்ற மக்களிடையே பஸ்ஸில் போகக்கூடிய எண்ணிக்கையும் உயர்ந்திருக்கிறது. அதையும் பொருத்துத்தான் இந்த நெருக்கடி யான நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ள பிரியப்படுகிறேன்.

நம்முடைய போக்குவரத்து இலாகாவிலே பணியாற்றும் தொழிலாளர்களை மற்ற மாகாணங்களிலே கொண்டுபோய் விட்டால் மிகவும் சுலபமாக வேலை செய்வார்கள். இங்கே அவர்கள் அதிகப்படியான பேர்களை ஏற்றிக்கொண்டு, சீக்கிரமாக அவர்கள் டிக்கட்டு கொடுக்கிறார்கள் என்பதை அதிலே பிரயாணம் செய்யக் கூடியவர்கள் நன்கு உணர்வார்கள். ஆகவே,, நாம் ரோடுகள் சரி யாக அமைத்துக் கொடுக்க வேண்டும். ஒரு வழி அதாவது ஒரு பக்கம் செல்லக்கூடிய போக்குவரத்து முறையை அனுசரித்து, அந்த முறையிலே இடத்தை அமைத்துக் கொடுத்தால், துரித மாக செல்ல நல்ல முறையிலே இந்த போக்குவரத்து இலாகா பணி யாற்ற முடியுமென்பதை மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இது மட்டுமல்லாமல், இந்த இலாகாவிலே வேலை செய்து கொண்டிருக்கும் அமைச்சர் முதல், தொழிலாளர்கள் வரையில் அவர்கள் தியாகம் செய்கிறார்கள் என்றே நான் நினைக்கிறேன். இதிலே காங்கிரஸ் சர்க்காரும் தியாகம் செய்கின்றது.

2-30 p.m. எங்கேயாவது ஒரு இடத்திலே 10 நிமிஷம் பஸ் நின்று போய் விட்டால் உடனே சர்க்காரைத் திட்டவேண்டியதுதான். இல்லை யென்றால் தொழிலாளர்களை திட்டவேண்டியது. இந்த. பஸ் தொழிலை தேசிய மயமாக்கி சர்க்காரே நடத்துகிறார்கள் என்று சொன்னால், அது நன்றாக நடக்க வேண்டுமென்று நினைக்கும் பொழுது மற்றவர்களும் இதற்கு உதவி செய்யும் முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன். அமைச்சர் அவர்கள் நிறைய லாபம் கிடைத்திருக்கிறது என்று சொன்னார்கள். அந்த லாபத்திலிருந்து ஏழைத் தொழிலாளர் களுக்கு அதிகமான உதவி செய்து தருவதற்கு அமைச்சர் அவர்கள் கூடுமான வரையில் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளு கிறேன். அந்த இலாகா தொழிலாளர்கள் காலையில் 5 மணிக்கு எழுந்திருக்கிறார்கள். அப்பொழுதே அவர்கள் வேலை ஆரம்பிக்கும் இடத்திற்கு வந்துவிட வேண்டும். இரவு நேரங்களிலே ஏறக் குறைய ஒரு மணிக்கு மேலேதான் சாப்பிடவேண்டும் என்ற நிலையிலே அவர்கள் கஷ்டப்பட்டு வேலை செய்கிறார்கள். அந்த இலாகாவில் வேலை செய்பவர்கள் நேரத்தில் சாப்பிடவே முடியாது.



15th March 1961] [Sri T. P. Elumalai]

அந்த வகையிலே கஷ்டப்பட்டு வேலை செய்பவர்களுக்கு மேலும் ஊக்கம் கொடுக்கவேண்டும், ஊதியத்தை உயர்த்தித் தரவேண்டும் என்று மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்கள் குடும்பத்தினர்களுக்கு உத்தியோகம் வழங்குவதில் முதல் சலுகை கொடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

வெளியூர்களுக்கு பஸ் விடுவதைவிட, சென்னையில் போக்கு வரத்தை அதிகமாகக் கவனித்தால் மிக நலமாக இருக்கும். 56-பி ரூட் பஸ் தங்கசாலையிலிருந்து பொன்னேரிக்குப் போகிறது. அங்கே பார்த்தால் மக்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பது தெரியும். ஒரு ரூட்டில் பஸ் போட்டுவிட்டால், அந்த இடத்தில் யாரும் நடக்கிற பழக்கத்தை விட்டுவிடுகிறார்கள். எப்பொழுது பஸ் வரும் என்று காத்துக்கொண்டிருக்கிறார்கள். பஸ்கள் போட்ட பிறகு ஒரு மைல்கூட நடக்கும் பழக்கம் கிராமங்களில்கூட இல்லாமல் போய்விடக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, ஒரு ரூட்டில் பஸ்கள் போட்டுவிட்ட பிறகு மேலும் மேலும் அந்த ரூட்டில் அதிக பஸ்கள் விடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

சென்ற ஆண்டிலிருந்து தங்கசாலையிலிருந்து காட்டூருக்கு பஸ் போடவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஆனால், இது வரையில் அந்த ரூட்டில் சர்க்கார் பஸ் போடவில்லை.

THE HON. SRI R. VENKATARAMAN : அதைத்தான் ஆரம் பத்திலேயே விளக்கமாகச் சொன்னேன். நாங்கள் 120 மைல் களுக்கு குறைவாக இருக்கிற இடங்களுக்கு பஸ்கள் போடப் போவதில்லை என்று சொன்னேன். ஆகவே, அதற்கு தகுந்த இலாகாவிலே மனு கொடுத்துக்கொள்ளலாம்.

SRI T. P. ELUMALAI : சென்னைக்கு அடுத்திருக்கிற கிராமங் களுக்கு இம்மாதிரி பஸ் வசதி செய்து கொடுப்பது மிகவும் அவசியம் என்று நான் நினைக்கிறேன். இந்த நிலைமையில் இந்த விஷயத்தை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும் ரூட் நெம்பர் 56-ல் அதாவது தங்கசாலை-திருவொற்றியூர் மார்க்கத்தில் பஸ் போதாமல் இருக் கிறது. அந்த ரூட்டில் அதிகமாக பஸ்கள் போடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். தொழிற்சாலைகள் அதிகமாக நிறுவப் பட்டிருக்கிற இடங்களிலும் அதிகப்படியான பஸ்கள் போடுவதற்கு அமைச்சர் அவர்கள் உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நம்முடைய பஸ் டிரான்ஸ்போர்ட்டு டைரக்டர் அவர்களும், மற்ற உத்தியோகஸ்தர்களும் பஸ் நிலையங்களுக்கும், போக்கு வரத்து நடக்கின்ற இடங்களுக்கும் அடிக்கடி சென்று பார்வையிட வில்லை என்று சொன்னார்கள். அது பொதுவாகப் பேசப்படுகிறது. ஆனால் ஒரு சில இடங்களுக்கு அவர்கள் போகிறார்கள். இருந் தாலும் மேலும் எங்கு கூட்டம் அதிகமாக இருக்கிறதோ, எந்த

ரூட்டில் பணம் வசூல் அதிகமாகிறதோ, அந்த இடங்களுக்கு அவசியம் சென்று பார்த்து அங்கு மக்கள் கூடியிருக்கிற சமயத்தில் அவர்களுடைய நிலையையும், அவர்களுடைய ஆலோசனைகளையும் கேட்டுத் தெரிந்துகொண்டால் மேலும் வசதி செய்து கொடுப்ப தற்கு ஏதுவாக இருக்கும் என்று கருதுகிறேன். மேலும் நல்ல முறையில் பஸ் டிரான்ஸ்போர்ட்டை நடத்துவதற்கு உதவியாக இருக்கும் என்பதை மிக்க பணிவோடு தெரிவித்துக்கொள்ளு கிறேன். இந்த மான்யத்தைப்பற்றி அதிகமாக அக்கறை செலுத்தும்போதெல்லாம், இந்த இலாகாவில் இருக்கிற தொழி லாளர்களுக்குச் சம்பளம் உயர்த்திக்கொடுக்க வேண்டும், மற்ற வசதிகளையும் அவர்களுக்கு செய்துகொடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, இந்த மான்யக் கோரிக் கையை ஆதரித்து, இத்தோடு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

**SRI A. GOVINDASAMI :** சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, தேசியமயமாக்கப்பட்ட போக்குவரத்து மான்யத்தைக் குறித்து எதிர்க்கட்சியின் சார்பிலே கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரபணையை ஆதரித்து நான் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். காங்கிரஸ் சர்க்கார் தேசியமய மாக்கும் கொள்கையை அவர்களுடைய லட்சியமாக வைத்துக் கொண்டிருந்தாலுங்கூட கடந்த 14 வருஷ காலமாக இந்த பஸ் நிர்வாகத்தை நமது சர்க்கார் ஏற்றுக்கொண்டு திறமையாக நடத்துகிறோம், ஆதாயத்தோடு நடத்துகிறோம் என்று விளக்கி அறிக்கைகள் கொடுத்தாலுங்கூட, இன்னும் தேசியமயமாக்கும் கொள்கையை நிறைவேற்றுவதில் ஆமை வேகத்தைத்தான் கடைப் பிடிக்க வேண்டும் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

இந்த ஆண்டில் 4 புதிய ரூட்டுகளை எடுத்திருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அது போதாது. மேலும், மேலும் படிப்படி யாக எடுக்கிறோம் என்று சொன்னாலுங்கூட, துரிதமாக வேகமாக எடுத்துக்கொண்டால்தான் நாம் எதிர்பார்க்கிற கொள்கையிலே வெற்றி காண முடியும். அந்தக் கொள்கையிலே அவர்களுக்குக் கொஞ்சம் குழப்பம் இருப்பதுபோல்தான், கொஞ்சம் காலதாமதம் காட்டுகிறார்கள் என்று நான் கருதுகிறேன். பம்பாய், டெல்லியில் இருப்பதுபோன்று தேசியமயமாக்க வேண்டும். பம்பாயில் நான் நேரில் பார்த்திருக்கிறேன். அங்கு சர்க்கார் போக்குவரத்து நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. அந்த முறையை இங்கும் கையாள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டில் 30 லட்சம் ரூபாய் வருமானம் அதிகமாகக் கிடைத்திருக்கிறது என்று சொல்லப்படு கிறது. ஆனால் தொழிலாளர்களுக்கு வேண்டிய சம்பள உயர்வு, மற்ற வசதிகள் செய்து கொடுப்பதிலே, சர்க்கார் காலம் தாழ்த்து கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே எடுத்துக்காட்ட





விரும்புகிறேன். மேலும் 3 லட்சம் ரூபாய் பிரயாணிகளுக்கு வசதி செய்து கொடுப்பதற்காக ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லுகிறார் கள். ஒவ்வொரு டெர்மினலிலும் குடிதண்ணீர் வசதி செய்து தர வேண்டும். பிரயாணிகள் தங்குவதற்கு உட்காருவதற்கு நிழலாக இருக்கும்படி இடவசதி செய்துதர வேண்டும். அவர்கள் க்யூ வரிசையில் நீண்ட நேரம் காத்துக்கொண்டிருக்க வேண்டியிருப்ப தால் அதற்கு வேண்டிய வசதி செய்து தரவேண்டும். கூடுமான வரையில் சிற்றுண்டிச்சாலைகள் வைக்க முடிந்தால், அந்த இடங் களில் வைத்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளு கிறேன். இந்த ஆண்டில் 153 புதிய பஸ்கள் போடப்பட்டன. ஆனால் 1959-60-ல் 15,75,56,611 பேர்கள் பிரயாணம் செய்திருக்கிறார் கள். 1960-61-ல் ஜனவரி மாதம் 31-ம் தேதி முடிய 14,64,01,024 பிரயாணிகள் பிரயாணம் செய்திருக்கிறார்கள். இன்னும் இரண்டு மாதம் இருக்கிறது, அதற்குள் இந்த இலக்கை அடைந்துவிடலாம் என்று சொல்லலாம். ஆனால் கூடுதலாக பஸ் போட்டும் குறைவாகப் பிரயாணம் செய்கிறார்கள் என்பதைப் பார்க்கும்பொழுது, 'பிரேக் டவுன்' அதிகமாக இருக்கிறதோ என்ற சந்தேகம் தோன்றுகிறது.

**THE HON. SRI R. VENKATARAMAN :** அந்த எண்ணிக்கை ஜனவரி மாதம் 31-ம் தேதி வரையில் கணக்கிடப்பட்டு கொடுக்கப் பட்டிருக்கிறது.

**SRI A. GOVINDASAMI :** நான் அதை முன்னமே சொன் னேன். 31—1—1961 வரையில்தான் இந்த எண்ணிக்கை. ஆனால் இந்த 2 மாதங்களில் எண்ணிக்கை கூடுமா என்பதுதான் சந்தேகம்.

**THE HON. SRI R. VENKATARAMAN :** ஒரு வாரத்தில் 32,79,727 பிரயாணிகள் சராசரியாக பிரயாணம் செய்கிறார்கள்.

**SRI A. GOVINDASAMI :** 65 பஸ்கள் தனியார் இடத்தில் கட்டப்பட்டது என்று சொல்லப்பட்டது. ஸிம்ஸன் கம்பெனியில் அந்த பஸ்களைக் கட்டக் கொடுத்திருக்கிறார்கள். ஏன் அதை வெளிப்படையாகச் சொல்ல தயங்குகிறார்கள்? ஏன் சர்க்கார் ஒரு தொழிற்சாலையை வைத்துக்கொண்டு ஏன் பஸ்களைக் கட்டுவதற்கு வெளியில் வேறு கம்பெனியிடம் கொடுக்கவேண்டும் சர்க்காரே அவர்கள் வைத்திருக்கிற தொழிற்சாலையை அபிவிருத்தி செய்து அங்கேயே கட்டி யிருக்கலாம். அம்மாதிரி செய்திருந்தால் இன்னும் பல தொழிலாளர்களுக்கு வேலை கிடைத்திருக்கும். நல்ல முறையில் திறமையாக வேலை செய்வதை எதிர்பார்க்க முடியும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், சர்க்கார் பஸ்கள் இப்பொழுது 120 மைல்களுக்கு அப்பால் உள்ள பல இடங்களுக்குச் செல்லுகிறது. அதிலே கூடுத லாக சில பஸ்கள் விடவேண்டும். இப்பொழுது சென்னை யிலிருந்து உளுந்தூர்பேட்டை, தொழுதூர் மார்க்கமாக திருச்சிக்கு ஒரு பஸ் போகிறது. அதே மாதிரி இன்னொரு

பஸ் சென்னையிலிருந்து உளுந்தூர்பேட்டை வழியாக விருத்தாசலம் சென்று பிறகு தொழுதூர் மார்க்கமாக திருச்சிக்கு விடவேண்டும். உளுந்தூர்பேட்டையிலிருந்து விருத்தாசலத்திற்கு 30 மைல்கள்தான் இருக்கிறது. விருத்தாசலத்திற்கு சென்று போனால் பாஸெஞ்சர்களுக்கு எல்லாருக்கும் வசதியாக இருக்கும். அதேமாதிரி சென்னையிலிருந்து திருச்சிக்கு உளுந்தூர்பேட்டை வழியாக, கல்லக்குறிச்சி, வேப்பூர், தொழுதூர் மார்க்கமாக ஒரு பஸ் விடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது நெய்வேலி மார்க்கமாக தஞ்சைக்கு ஒரு பஸ் போகிறது. மேலும் நெய்வேலியிலிருந்து சென்னைக்கு விருத்தாசலம், உளுந்தூர் பேட்டை வழியாக ஒரு பஸ்ஸும், நெய்வேலியிலிருந்து சென்னைக்கு கடலூர், பாண்டிச்சேரி, திண்டிவனம் வழியாக இன்னொரு பஸ்ஸும் விடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சர்க்கார் விடுகிற பஸ்களில் கொஞ்சம் சார்ஜ் கூடுதலாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அதையும் மந்திரி அவர்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். வசதி அதிகமாக இருக்கிறது என்று சொல்லலாம். உட்காரும் ஸீட்டுகள் தேவைக்கு அதிகமாக உயரமாக இருக்கிறது. சாய்வாக உட்காருவதற்கு வசதியாக இல்லை. பஸ்களில் ஜன்னல்கள் இருப்பதால் முதல் ஸீட்டில் உட்கார்ந்திருப்பவர்களுக்குத்தான் காற்று வருகிறது. மத்தியில் உட்கார்ந்திருப்பவர்களுக்கும், கடைகோடியில் உட்கார்ந்திருப்பவர்களுக்கும் காற்று வசதி இல்லை. முடிந்தால் பஸ்களை 'ஏர் கண்டிஷன்' செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சட்டசபை நடக்கும்போதுதான் மவுண்ட் ரோடிலிருந்து செகரடேரியட்டுக்கு பஸ்கள் விடப்படுகின்றன. மற்ற காலங்களிலும் அதாவது எப்பொழுதும் செகரடேரியட்டுக்கும் மவுண்ட் ரோடுக்கும் இடையே பஸ்கள் விடவேண்டும். பாரிஸிலிருந்து சென்டிரலுக்கும், பாரிஸிலிருந்து மவுண்ட் ரோடுக்கும் குறுகிய மார்க்க பஸ்கள் விடவேண்டும். அப்பொழுதுதான் மைலாப்பூர், திருவல்லிக்கேணி போன்ற நீண்ட தூரம் போகும் பஸ் பிரயாணிகளுக்கு வசதியாக இருக்கும். சீஸன் டிக்கட்டுகளை இரண்டு ரூட்டுகளுக்கு மட்டும் வழங்கியிருக்கிறார்கள். மேற்கொண்டு இரண்டு ரூட்டுகளுக்குப் புதிதாகக் கொடுத்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். எல்லா ரூட்டுகளுக்கும் கொடுக்கவேண்டும். மாணவர்களுக்கும் சர்க்கார் ஊழியர்களுக்கும் அதே போல் concession கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். வேலை செய்கிற தொழிலாளிகளுக்குப் பல வசதிகள் செய்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். என்னவென்று பார்த்தால் அவர்களுக்கு ஒரு கப் டீ கொடுக்கிறோம் என்று எழுதியிருக்கிறார்கள். அது போதுமா?

**THE HON. SRI R. VENKATARAMAN:** அப்படிச் சொல்லக் கூடாது. நைட் ஷிப்ட் அலவன்ஸ் கொடுப்பதோடு நாங்கள் டீயும் கொடுக்கிறோம். மற்ற இடங்களில் அதோடு நிறுத்திவிடுகிறார்கள்.



**SRI A. GOVINDASAMI:** வெளியூர்களுக்குப் போகும் பொழுது அவர்களுக்கு 1 ரூபாய் கொடுக்கப்படுகிறது. மேலும் பங்களூர், சேலத்திலே போய்த் தங்கும் தொழிலாளர்களுக்கு கட்டிலும், கொசு வலையும் கொடுக்கிறார்கள். மற்ற கண்டக்டர்களுக்கும் டிரைவர்களுக்கும் இந்த வசதியைச் செய்து தர வேண்டும். தஞ்சை ஜில்லாவில் வேலை செய்யக்கூடிய தொழிலாளிகளுக்கு இந்த வசதி கொடுக்கப்படவில்லை. கும்பகோணத்திலே கொசுக்கள் அதிகம். ஸைறய் நகரிலே வீடு கட்டும் திட்டத்திற்காக 38,000 ரூபாய் முதல் செய்திருக்கிறார்கள். நிலச் சொந்தக்காரருக்கும் அட்வான்ஸ் கொடுத்திருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அந்தப் பணம் என்னவாயிற்று என்று தெரியவில்லை. கோவாப்பரேடிவ் கிரெடிட் சொசைடியிலே 45,000 ரூபாய் பணம் என்னவாயிற்று என்று தெரியவில்லை. ஆடிட் செய்யப்படவில்லை என்று சொல்லுகிறார்கள். இவைகளை விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஸெலக்ஷன் கிரேடிலே ஸீனியாரிடி பார்த்து சம்பள உயர்வு கொடுக்கிறபொழுது 10 சதவிகிதம் வழங்குகிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். அதை 25 சதவிகிதத்திற்கு உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். டிரைவர்களுக்கும் கண்டக்டர்களுக்கும் 1½ ரூபாயிலிருந்து 2 ரூபாயாக உயர்த்தினால் போதாது. 2-½ அல்லது 3 ரூபாய் அளவுக்கு உயர்த்தும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

உத்தியோகங்கள் வழங்குகிற விஷயத்திலே ஒரு புகார் சொல்லப்படுகிறது. ஸ்ரீனிவாசன் என்பவர் பிரேக் இன்ஸ்பெக்டராக இருந்தார். இப்பொழுது அவருக்கு உத்தியோக உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது. இவரைவிடத் திறமைசாலிகள், நீண்ட நாள் வேலை பார்த்து வருகிறவர்கள் இருக்கிறார்கள் என்று தெரிகிறது. இது விஷயமாக அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும், தொழிலாளிகள் இரண்டரை மணி வரையிலும் சாப்பாடு இல்லாமல் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. கண்டக்டர்கள் இன்னும் அரை மணி நேரம் அதிகமாக வேலை செய்ய வேண்டியிருக்கிறது. அவர்களுக்குப் பகல் உணவுக்கு வசதி செய்து தரவேண்டும். இரண்டு நாட்கள் லீவ் எடுத்துவிட்டால்கூட பெயிட் போனஸ் தர மறுக்கிறார்கள். இதையெல்லாம் பார்த்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **SRI M. KALYANASUNDARAM:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மூன்று வருஷங்களுக்கு முன்னால் இந்த மான்யம் சபைக்கு வரும்பொழுது அச்சம் வேண்டியிருந்தது. அதாவது தனியார் துறையே அதைச் செய்யவேண்டிய நிலைமை ஏற்படுமோ என்று அஞ்சவேண்டியிருந்தது. இந்த இலாகாவில் நிர்வாகச்

[Sri M. Kalyanasundaram] [15th March 1961

செலவு, ஸ்பேர் பார்ட்டுகளுக்கு ஆகக்கூடிய செலவு பொது மக்களுடைய அதிருப்தி இவற்றைப் பார்க்கும்பொழுது, சர்க்காரே பின்தங்குவார்களோ, தனியார் துறைக்கு விட்டுவிடுவார்களோ என்று அஞ்சவேண்டியிருந்தது. படிப்படியாக சென்ற மூன்று வருஷங்களாகப் பார்க்கும்பொழுது, நிதி நிலைமை அதிக திருப்திகரமாக இருக்கிறது என்பதைப் பார்க்கும்பொழுது நமக்கு நம்பிக்கை ஊட்டக்கூடியதாக இருக்கிறது. சர்க்காருக்கு இந்த வருஷத்திலே பொது நிதிக்கு 20 லட்சம் ரூபாய் கிடைக்கும். நாம் போட்டிருக்கக்கூடிய மூலதனம் 4 கோடி ரூபாய். இந்த மூலதனம் பெரும்பாலும் வருமானத்திலிருந்தே சேர்க்கப்பட்ட மூலதனம். அதோடு, மூலதனத்துக்கு வட்டியாக கிட்டத்தட்ட 19 லட்சம் ரூபாய் கிடைக்கும் வரி மூலமாக 33 லட்சம் கிடைக்கும். இதை எல்லாம் பார்க்கும்பொழுது, இன்னும் பஸ் போக்குவரத்தைப் பூராவும் அரசாங்கமே எடுத்துக்கொண்டால் என்ன என்றுதான் கேட்கத் தோன்றுகிறது. இதிலே இருக்கக்கூடிய குறைபாடுகளை மட்டும் பார்த்து, அதையே பெரிதுபடுத்திக் கூறுவது சரியாக இருக்காது என்று நான் கருதுகிறேன். இந்த விஷயத்திலே சர்க்கார் கையைப் பலப்படுத்த வேண்டும். சர்க்காரையும், அதிகாரிகளையும், இன்னும் தொழிலாளிகளையும் குறைகூறுவதாக இருந்தாலும்கூட, இந்த அபிவிருத்தியை மனதில் வைத்துக் கொண்டுதான் குறை கூறவேண்டும். மூன்று வருஷ காலத்தில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தியைப் பார்த்து, இதை நல்ல முறையில் நடத்துவதற்கு மேலும் என்ன செய்யவேண்டும் என்று கூறுவதுதான் சரியாக இருக்குமேதவிர, சர்க்காரையும், அதிகாரிகளையும், நாம் அதிகமாகக் கண்டிக்க ஆரம்பித்தால், தனியார் துறைக்கு இதை விட்டுவிடுங்கள் என்று சொல்லுகிறவர்களின் கையைப் பலப்படுத்துவதாகவே இருக்கும் என்பதை நான் இந்த சமயத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இப்பொழுது நிர்வாகம் ரொம்பவும் திறமையாக நடப்பதாக நான் சொல்லவில்லை. இன்னும் அபிவிருத்தி செய்யவேண்டியிருக்கலாம். இந்த மூன்று வருஷ காலத்திலே என்ன அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். தொழிலில் வேலைத் திறமை எப்படி இருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். முன்பு குரோம்பேட்டை வொர்க் ஷாப்பில் எத்தனை வண்டிகள் கட்டி வந்தார்கள், இப்பொழுது எத்தனை வண்டிகள் கட்டி வருகிறார்கள் என்பதையெல்லாம் பார்த்தால், எல்லா வண்டிகளையும் கட்ட முடியுமென்ற நம்பிக்கை வந்திருக்கிறது. அப்படியெல்லாம் பார்க்கும்பொழுது, இதிலே ஏற்பட்டிருக்கக்கூடிய அபிவிருத்தியை நாம் மக்களிடத்தில் சொல்லவேண்டும். நாம் சிறந்த முறையில் இதை ஜனங்களுக்குத் தெரியாதபடி செய்வோமேயானால், பஸ் ஸ்டாண்டுகளிலே கால் கடுக்க நிற்கிறவர்களுக்கு கோபம்தான் வரும். அப்படி அவர்களுக்கும் கோபம் வருகிறபொழுது, அமைச்சரை அவர்கள் கோபிக்கவில்லை. கண்டக்டர்களும், டிரைவர்களும்தான் முதல் பலியாகிறார்கள். அதற்குப் பிறகு அதிகாரிகள். பல ஊழல்



15th March 1961] [Sri M. Kalyanasundaram]

களுக்குக் காரணமாய் இருந்த அதிகாரிகளை எல்லாம் இப்பொழுது மூலை முடுக்குகளிலே உட்கார வைத்துவிட்டார்கள். இனி நிர்வாகம் சீர்படுமென்று நம்ப இடமிருக்கிறது என்பது என் அபிப்பிராயம். தனியார் துறையிலே நிலைமை வேறு; இரண்டு கணக்கு வைக்க முடியும். ஏதோ காண்டிராக்ட் மாதிரி மிச்சத்தை எடுத்துக்கொண்டு ஜனங்களைத்தானே ஏமாற்றுகிறார்கள் என்று விட்டுவிடலாம். ஆனால் பொதுத் துறையிலே ஏமாற்ற முடியாது. சென்ற மூன்று வருஷ காலமாக பொதுத் துறையிலே நடக்கும் நிர்வாகத்தை எல்லாம், பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியும், எஸ்டிமேட்ஸ் கமிட்டியும் துருவிப் பார்த்து, இதிலே அதிருப்தி இருக்கக் கூடிய அம்சங்களை எடுத்துக் காண்பித்தும, சிக்கன முறைகளைக் கையாள வேண்டுமென்று சொல்லியும், அதிகாரிகளைக் கசக்கிக் கொண்டு வருகிறோம். அதிகாரிகளும் இந்த கமிட்டிக் கூட்டங்களுக்கு வரும்பொழுது பயந்துகொண்டுதான் உட்காரவேண்டிய நிலைமை இருக்கிறது. தனியார் துறையிலே இப்படி நாம் பேச முடியுமா? ஆகவே, பொதுத்துறை இந்த அளவுக்கு முன்னேறி இருப்பதை நாம் வரவேற்க வேண்டும். இன்னும் நல்ல முறையில் நடத்துவதற்கான யோசனைகளைச் சொல்லவேண்டும்.

சென்னை நகரைப் பொறுத்தவரையில் மக்களுக்கு அதிருப்தி இருக்கிறது. ஓரளவுக்கு இது பீக் அவர் டிராபிக்கினால் ஏற்பட்டது. நம்முடைய நாட்டை எடுத்துக்கொண்டால் எல்லாக் காரியாலயங்களுக்கும் 10 முதல் 11 மணிக்குள் அங்கே வேலை செய்பவர்கள் போய் ஆகவேண்டும். காலை 7 மணியிலிருந்தே இந்தப் போக்குவரத்து நெருக்கடி ஆரம்பிக்கிறது. அதேமாதிரி வெளியிலிருந்து எக்மோருக்கும், சென்டிரல் ஸ்டேஷனுக்கும் வருகிற ரெயில்கள் எல்லாம் காலை 6½ மணியிலிருந்து 8½ மணிக்குள் வந்து சேருகின்றன. ஆகையினால் ஒரு குறிப்பிட்ட நேரத்திலே அதிகப் போக்குவரத்து ஏற்படுகிறது. இதை எப்படி சமாளிப்பது என்பதுதான் பிரச்னை. இதிலே அதிகக் கவனம் செலுத்தவேண்டும். காரியாலயங்களுக்குப் போகக்கூடிய போக்குவரத்து வசதியை எந்தெந்த நேரத்திலே எப்படி அதிகப்படுத்தவேண்டும், இதிலே ஜனங்களுடைய அபிப்பிராயம் என்ன, தொழிற் சங்கத் தலைவர்களின் அபிப்பிராயம் என்ன என்பதையெல்லாம் கேட்டு யோசனை செய்யவேண்டும்.

அமைச்சர் அவர்கள் மாஸ்கோவிற்கு எல்லாம் போய்விட்டு வந்திருக்கிறார். நானும் சில நாடுகளுக்குச் சென்றிருக்கிறேன். மாஸ்கோவிலும் சரி, மற்ற சோஷலிஸ்ட் நாடுகளிலும் சரி, வேலை நேரத்தை அதற்குத் தகுந்தமாதிரி வைத்திருக்கிறார்கள். சில காரியாலயங்கள் 7 மணிக்குத் தொடங்கும், சில 7½ மணிக்குத் தொடங்கும், சில 8½ மணிக்குத் தொடங்கும். இங்கு பல தொழிற்சாலைகள் 7 மணிக்கு ஆரம்பிப்பதினாலே, ஒரே நேரத்திலே எல்லோரும் போகவேண்டியிருக்கிறது. இதிலே தொழிலாளிகளுக்கு நம்பிக்கை வேண்டும். இதை எவ்வளவு தூரம் அவர்கள்

வரவேற்பார்களோ தெரியாது. ஆனால் இதைத் தணிக்க முடியாது. ஆலோசனை பண்ணிச் செய்யவேண்டும். மற்றும் போக்குவரத்திலே அபிவிருத்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். சென்னை நகரத்தை சமாளிப்பது என்பது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. அதிகாரிகளைக் குறை கூறுவதினால் மட்டும் பிரயோசனம் இல்லை. அங்கே வேலைபார்க்கும் தொழிலாளிகள் கஷ்டப்பட்டுக்கொண்டு வேலை செய்கிறார்கள். எவ்வளவோ பேர்கள் பஸ் ஏறுகிறார்கள். அவர்கள் கொடுக்கக்கூடிய தொந்தரவையும், ஜனங்கள் போடுகிற கேள்வியையும் பார்த்தால், தொழிலாளிகள் எவ்வளவு கஷ்டப்பட்டுக்கொண்டு வேலை செய்கிறார்கள் என்பது தெரியும். ஜனத்தொகை 5 லட்சம், 6 லட்சமாக இருக்கும் பொழுது இந்த சாலைகள் போடப்பட்டன. இப்பொழுது ஜனத்தொகை 17½ லட்சத்திற்கு மேல் போய்விட்டது. இன்னும் சிறிது காலத்தில் 25 லட்சத்திற்கு வந்துவிடும். அதற்குத் தகுந்த மாதிரி சாலைகள் இல்லை. நாலைந்து ரோக்கள் சாலைகள் இருந்தால் வேகப் போக்குவரத்து நடத்த முடியும். அதற்காக இப்பொழுது கட்டிடங்களை எல்லாம் இடிக்க முடியாது. அந்த அளவுக்கு நம் நாட்டிலே விஞ்ஞானம் வளரவில்லை. துரிதமாகப் போக்குவரத்தை நடத்தக்கூடிய ஒரு மாஸ்டர் பிளானைப் போட்டு, போக்குவரத்து நெருக்கடியை சமாளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் மேற்கொண்டு 400 பஸ்களைப் போட்டால் செலவு ஜாஸ்தியாகும், வருமானமும் குறையும்.

தொழிலாளர்களுக்கு இருக்கும் பல குறைகளைப்பற்றி எனக்கு முன்பு பேசியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நேரம் இல்லாத காரணத்தினால் அவைகளை நான் சொல்ல முடியவில்லை. குறிப்பாக தொழிற் சங்கங்களிலே போட்டியை வளர்க்கக்கூடாது. காங்கிரஸ் அங்கத்தினர் திரு. ஏழுமலையைப்பற்றி நான் இங்கே குறிப்பிட வேண்டியிருக்கிறது. இரண்டு தொழிற் சங்கங்களை வைத்துக்கொண்டு தொழிலாளிகளுக்குள்ளே தகராறுகளை வளர்க்கக் கூடாது. நானும் ஒரு சங்கத்திற்கு உப தலைவராக இருந்துகொண்டிருக்கிறேன். தொழிற்சங்க காங்கிரஸுடன் இணைந்திருக்கிற சங்கம். நான் என்ன சொல்லுகிறேன், அவர் என்ன சொல்லுகிறார் என்பதைப் பார்க்கவேண்டும். முக்கியமாக அவர்களுடைய குறைகளைப் போக்குவதற்கு நாம் வழிவகை செய்ய வேண்டும். அவர்கள் தனக்குச் சாதகமாக இருக்க வேண்டுமென்று இல்லாமல், ஒன்றுபட்ட தொழில் சங்கம் இருக்க வேண்டும்; சர்க்கார் போக்குவரத்து வளம்பெறும் முறையிலே சர்க்கார் கொள்கை இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடிக்கிறேன்.

SRI T. S. RAMASWAMI: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தேசியமயமாக்கப்பட்ட இந்த இலாகாவில் இரண்டு வருஷங்களுக்கு முன்னால் ஊழல்கள் இருந்தன. ஆனால் அவை வர வர ஒன்று ஒன்றாகக் குறைந்து, நிச்சயமாக அபிவிருத்தி அடைந்



திருக்கிறது என்பதில் யாருக்கும் சந்தேகமே இல்லை. ஆனால், அதே நேரத்திலே, சென்னை நகரத்தில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. அதிகமாக பஸ்கள் விட்ட போதிலும், கஷ்டங்கள் வளர்ந்துகொண்டே போகிறது என்பதைப் பார்க்கும்போது, எல்லோரும் சேர்ந்து எவ்வளவு தூரம் இத்தகைய கஷ்டங்களைப் பற்றிச் சொல்லி, அதைத் தீர்க்க வேண்டும் என்ற பொறுப்பு இந்த சபைக்கு இருக்கிறது என்பதை உணர்ந்து அதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். முதலில் ப்ரேக் டௌன்கள், பிறகு மிஸ்ட் ட்ரிப்ஸ், ஒர்க்ஷாப்பில் டிலேகள் பொருத்தவரை, அவைகளுக்குக் காரணம் என்ன என்று பார்க்கவேண்டும். இதிலே முக்கியமான காரணம் கண்டக்டர்களும் ட்ரைவர்களும் டெய்லி ஒர்கர்ஸ் என்று இருப்பதுதான் முக்கிய காரணம். பல கண்டக்டர்களும், ட்ரைவர்களும் அவசியம் இருக்கும்போது கிடைப்பதில்லை. அவர்கள் வரும்போது வேலை இருப்பதில்லை. அப்படி இருக்கும் நிலையில் பஸ்களெல்லாம் நிற்கவேண்டியிருக்கிறது. இதை அரசாங்கம் கவனிக்க வேண்டும். இதனால் அரசாங்கத்திற்குச் செலவும் அதிகமாக ஆகிறது. அதை மாற்றியமைத்தால் அரசாங்கத்திற்குச் செலவும் குறையும். மிஸ்ட் ட்ரிப்ஸும் வரமுடியாது.

நாம் வருஷாவருஷம் புதிய பஸ்கள் போட்டுக்கொண்டே இருக்கிறோம். அதை அதிகரித்துக்கொண்டே இருக்கிறோம். ஆனாலும் வருஷாவருஷம் மிஸ்ட் ட்ரிப்ஸும் அதிகரித்துக்கொண்டே போகிறது. ஆகவே, நிச்சயமாக இந்த டெய்லி ஒர்க்கர்ஸ் நிலை மாற வேண்டும். அந்த ஸிஸ்டத்தையே மாற்ற வேண்டும். அம்மாதிரி கேரளாவில் நடக்கிறது; வேறு ஸ்டேட்களில் நடக்கிறது.

THE HON. SRI R. VENKATARAMAN: அவர்கள் எவ்வளவு பர்ஸன்டேஜ் என்று தெரியுமா?

SRI T. S. RAMASWAMI: தெரியாது.

THE HON. SRI R. VENKATARAMAN: ரொம்பக் குறைச்சல்.

SRI T. S. RAMASWAMI: இது சம்பந்தமாக ஆடிட் ரிபோர்ட்டிலும், அக்கௌண்ட்ஸ் கமிட்டியிலும் வந்திருக்கிறது. 1956-57-ல் புதிய பஸ்கள் 53 சதவிகிதம், 1957-58-ல் 64 சதவிகிதம், 1958-59-ல் 71 சதவிகிதம். வருஷாவருஷம் வளர்ந்து கொண்டேயிருக்கிறது. இந்த வருஷத்தில் 82 சதவிகிதம், புதிய வண்டிகள் வர இருக்கின்றன. அப்படியிருந்தும் ஏன் ப்ரேக் டௌன்கள் அதிகமாக இருக்கிறது? மிஸ்ட் ட்ரிப்ஸைப் பார்த்தால், 1956-57-ல் அது 1,59,000 ஆக இருந்தது; 1957-58-ல் அது 82,000 ஆக இருந்தது, இப்பொழுது அது 99 ஆயிரம், கிட்டத்தட்ட ஒரு லட்சம்.

தொழிலாளிகளுக்குக் கொடுக்கும் சலுகைகள் நன்மைகள் பொறுத்தவரை அதிகக் காலதாமதங்கள் ஏற்படுகின்றன. ஒரு சின்ன விஷயத்தைச் சொல்லுகிறேன். தொழில் திறமை வாய்ந்த தொழிலாளர் ஒருவர் 20 வருஷ சர்வீஸுக்குப் பிறகு, வேலை

செய்யும்போது உயிர் நீத்தார்; மற்ற தொழிலாளர்கள் அவரது ஈமச்சடங்குகளை நடத்தியிருக்கிறார்கள். ஒரு அதிகாரியும் போகவில்லை. உண்மையாகவே, தொழிலாளர்கள் வருந்துகிறார்கள். அது தவிர, அந்த தொழிலாளியின் குழந்தைகளுக்குக் கொடுக்கும் க்ராசுடி கேரள சர்க்காரில் இருந்த காலமானால், ஒரு மாதத்திற் குள்ளே வந்துவிடும். அது இலாகாவின் குறையோ அல்லது வேறு யார் குறையோ, வருஷம் மூன்றாகியும் அவர்களுக்கு இன்னும் க்ராசுடி தொகை கிடைக்கவில்லை. இருபது வருஷம் வேலைசெய்த தொழிலாளியின் குடும்பத்திற்கு அதுதானா நாம் செய்யும் உதவி? அந்த நிலையிருந்தால் தொழிலாளி எவ்விதம் உற்சாகமாக வேலை செய்வான்? அந்த நிலையைத் தவிர்க்க வேண்டும் என்று அரசாங் கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஸ்டோர்ஸ் பொறுத்த வரை ஓர்க்ஷாப்பில் டிலே நிறைய இருக் கிறது. அதற்குக் காரணம் ஸ்பேர் பார்ட்ஸ் இல்லை என்று சொல்லு கிறார்கள். குறைவாக இருக்கிறதோ என்று பார்த்தால், அதுவும் இல்லை. எவ்வளவு அவசியமோ அவ்வளவை ஏன் வாங்கி வைத் திருக்கக்கூடாது? நான்-மூவிங் ஸ்பேர் பார்ட்ஸ் என்று ஒரு இனம் இருக்கிறது. அதில் ஏறக்குறைய ஒரு லட்சத்திற்கு பார்ட்டுகள் இருக்கின்றன. அவசியமே இல்லாத கருவிகளை எதற்காக வாங்கி வைக்கவேண்டும்? அதற்கு கண்டின்யூயிங் ஸ்டாக் டேகிங் கிடை யாது. ஸ்பேர் பார்ட்டுகளுக்கு கண்டின்யூயிங் ஸ்டாக் டேகிங் இருக்கவேண்டும். அதைச் செய்தால் ஓர்க் ஷாப்பில் டிலே இல்லாமல் செய்ய முடியும்.

வருமானத்தைப் பொறுத்தவரை மூன்று வருஷமாகக் குறைந்த வருமானமே என்றாலும், சென்ற வருஷத்தில் கொஞ்சம் மேல் ஏறி யிருக்கிறது. சந்தோஷம். இன்னும் அதிகமாக நல்ல ரூட்டுகளை எடுக்கவேண்டும். நாகர் கோவில்-திருநெல்வேலி ரூட் ரொம்ப லாப கரமானது. It is a gold mine என்று அங்கே சொல்லு வார்கள். அந்த ரூட்டினால் உயர்ந்தவர்கள், கோடீச்வரர்கள் ஆன வர்கள் அநேகம் பேர். அதை சர்க்கார் எடுப்பார்கள் என்று நினைத்தோம். ஆனால் சர்க்காரின் கொள்கை மாறியிருக்கிறது. 120 மைலுக்கு மேல் உள்ள எல்லா ரூட்டுகளையும் எடுக்க இருக் கிறார்கள் என்று தெரிகிறது. திருச்சி முதல் நாகர் கோவில் வரை இரண்டு வண்டிகள் விட்டால் போதாது. 10, 20 வண்டிகள் விட வேண்டும். அந்த ரூட் இப்பொழுது மிகப் பாபுலராக இருக் கிறது. ரெயில்வேக்குப் பதிலாக மக்கள் அந்த ரூட்டை உபயோகிக்கிறார்கள். அது சீக்கிரமாக இருக்கிறது. அதையும் கவனிக்க வேண்டும்.

இந்த இலாகாவிலே காலதாமதம் அதிகமாக இருக்கிறது. மிகவும் விரைவாகச் செய்யவேண்டும். இந்த டைரக்டர் வந்த பிறகு அவர்களைப் பொறுத்தவரை எனக்கு முன் பேசிய அங்கத் தினரவர்கள் சொன்னதை முழுக்க முழுக்க ஒப்புக்கொள்ளு கிறேன், அவர்கள் நன்றாகத் திறமையுடன் வேலை செய்கிறார்கள்;



ட்ரைவ் என்று சொல்வார்களே அப்படி ட்ரைவோடு அவர்கள் வேலை செய்து சிறப்பாகச் செய்கிறார்கள். ஆனாலும் அவர் களுடைய வார்த்தைகள் அப்பட்டமாகப் பேசுவார்கள்; அது காரணமாக பிரதிநிதிகள் கொஞ்சம் மனவருத்தம் அடைகிறார்கள். ஆனாலும் நிச்சயமாக நல்ல முறையிலே வேலை நடக்கிறது என் பதைச் சொல்லிப் பாராட்டிக்கொண்டு என் வார்த்தையை முடிக் கிறேன்.

* **Sri K. ANBAZHAGAN**: சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை மாநில அரசாங்க பஸ் போக்குவரத்தை யொட்டி தொழில்களைத் தேசிய மயமாக்க வேண்டும் என்ற கொள் கையைப் பெயரளவில் ஏற்றுக்கொண்டிருக்கிற அரசாங்கத்தார், சென்னை நகரத்தில் பஸ் போக்குவரத்தை நடத்தி, அந்தக் கொள்கை செயலளவில் தோற்றுவிட்டது என்று சொல்லிவிடாமல் மேற்கொள்கிறார்கள் என்பதற்குச் சான்றாக அமைந்திருப்பதனால் அரசாங்கத்தார் இந்த அளவு துறையிலே முன்னேறியிருப்பதை வர வேற்கிறேன். ஆனால், செயலளவில் இதனால் தேசிய மயமாக்கு வதற்கான கொள்கை வலுப்பெற்று வந்தாலும், தேசிய மயமாக்கப் பட்டிருக்கிற சென்னை நகர பஸ் போக்குவரத்தில் பொது மக்கள் முழு அளவு திருப்தி அடையக்கூடிய அளவு இதில் உள்ள குறைகள் போக்கப்படவில்லை என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். 1 p.m.

அண்மையில் சென்னை நகரத்தில் பஸ் கண்டக்டர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையில் ஒரு மனக் கசப்பு ஏற்பட்டதை அமைச்சர் அவர்கள் அறிந்திருப்பார்கள். அப்படி ஏற்பட்ட மனக்கசப்பு, பஸ்ஸில் இந்த அளவுதான் நிற்கும் இடம் இருக்கிறது என்று கருதி கண்டக்டர், "இந்த அளவுக்குமேல் ஏறாதீர்கள்" என்று சொல்லியபோது, அவசியமாகப் போக வேண்டுமென்று கருதிய மாணவர்கள், "இடம் தீர்மானிக்கப்படவில்லை, எனவே ஏறுகிறோம்" என்று வற்புறுத்த, அதனால் தகராறு ஏற்பட்டு போலீஸ் நிலையத்திற்குப் போய் . . .

DEPUTY SPEAKER: I think it is *sub-judice*. I think the matter is pending in Court. So I hope the hon. Member need not touch upon that point.

**Sri K. ANBAZHAGAN**: அந்தப் பிரச்சினையைப்பற்றி பொது வாகத்தான் பேசுகிறேன். அதைப்பற்றி எந்தக் குற்றச் சாட்டும் சொல்லவில்லை. இடத்தைக் குறித்து ஏற்பட்ட மாறு பாட்டினாலே இன்றையதினம் அது நீதி மன்ற அளவிற்குப் போக வேண்டிய கட்டத்தை அடைந்திருக்கிறது. நான் அதிலே குறிப்பிட விரும்புவது, யார் பக்கம் குற்றம் என்பதல்ல. எனக்குத் தெரிந்தவரை, அது சமாதானமாகிவிட்டது என்று கருதுகிறேன். என்றாலும், இந்த அளவுதான் நகர ட்ரான்ஸ்போர்ட் பஸ்களில் நிற்கவேண்டியவர்களை ஏற்றலாம் என்ற எண்ணிக்கை, கூடுமான வரை குறைந்த அளவிற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்க வேண்டும். 10, 12 பேர்களுக்கு மேல் நிற்பவர்களை ஏற்றுவது என்ற நிலைமை

ஏற்பட்டால், கண்டக்டர்களுக்கு உள்ளே ஏறுகிறவர்களை எண்ணிப் பார்க்க முடியாத தொல்லையும், ஏறுகிறவர்களுக்குப் பல தொல்லையும் ஏற்படுகிறது. உடனடியாக இவை தவிர்க்கப்பட்டாக வேண்டும்.

அடுத்து நான் சொல்ல விரும்புவது, கண்டக்டர்களும் டிரைவர்களும் எவ்வளவுதான் நல்ல நோக்கத்துடன் பணியாற்றினாலும், அவர்களுக்கு இருக்கும் பணியின் சிரமம் காரணமாக, தொல்லை காரணமாக, அவர்களையும் அறியாமல் தங்களுடைய கடமையைச் செய்கிறபோது, சில நேரத்தில் எரிச்சலுக்கு ஆளாகி, கடைசியில் தவறான சில சொற்களைச் சொல்ல நேரிடுகிறது. அதுபோல், பொது மக்களும் நீண்ட நேரம் காத்திருக்கும் காரணத்தால், தங்கள் உள்ள எரிச்சலை எதிரிலிருக்கும் கண்டக்டரிடத்தில் காட்டுகிறார்கள். 'இடம் இல்லை' என்றவுடனே அந்த இடத்தில் உள்ளபடியே பலருக்கு ஆத்திரம் வருகிறது.

இந்த நிலைமையில் இப்பொழுதுள்ள கண்டக்டர்களும் ட்ரைவர்களும் இப்பொழுது ஏறத்தாழ ஒன்பது மணி நேரம் பணியாற்ற வேண்டிய அவசியத்தில் இருக்கிறார்கள். அவர்களுடைய வேலை நேரம் 9½, 10 மணி நேரம் ஆகிறது. அவர்களுடைய நிலையிலிருந்து பார்க்கும்போது, எட்டு மணி நேரத்திற்கு மேல் அவர்கள் வேலை செய்யவேண்டிய அவசியம் நிச்சயமாக இருக்கக்கூடாது. காலையில் நான்கு மணியிலிருந்து இரவு பத்து மணி வரையில் பஸ் ட்ரான்ஸ்போர்ட் நடத்தப்பட வேண்டியிருக்கும் காரணத்தால், ஒன்பது மணி நேரமாகப் பங்கிட்டால் வசதியாக இருக்கும் என்று நிர்வாகத் தலைவர் கருதக்கூடும். நான் குறிப்பிட விரும்புகிறேன்— எப்படியாவது பங்கிடும் முறையில் ஒரு மாற்றத்தை உண்டாக்கி, எட்டு மணி நேரத்திற்கு மேல் எந்தக் கண்டக்டரும் எந்த ட்ரை வரும் அந்தப் பணியில் ஒருநாளும் இருக்கவேண்டி இல்லாது செய்யவேண்டும். வேலை நேரத்தைக் குறைப்பதற்கு ஆலோசனை தேவையானால், நான் அதைக்கூட எண்ணிப் பார்த்துக் கொண் டிருப்பதால் தேவைப்படின், அதை அப்பொழுது சொல்ல விரும்பு கிறேன். இவர்கள் அதிகப்படியாக உழைக்கிறார்கள். சட்ட மன்றத்தில் இருக்கும்போதே பசி அதிகமானால் பிரச்சினை மறந்து போய்விடுகிறது. டிரைவர்களும், கண்டக்டர்களும் காலை ஐந்து மணிக்கும் பஸ்ஸில் ஏறி அவர்கள் வேலையை ஆரம்பித்து, பகல் 1½, 2 மணிக்குப் பஸ்ஸைவிட்டு இறங்கவேண்டி இருக்கும் போது, இடையிலே அவர்களையும் அறியாமல் இயற்கை உணர்ச்சி களுக்கு ஆட்படுகிறார்கள். அந்த நிலையை மாற்றவேண்டும்.

சென்னை நகர பஸ்கள் ஓடும் நேரத்தில் ஏற்படும் தாமதம் ஓரளவு களையப்பட்டிருக்கிறது. என்றாலும், மக்கள் திருப்தி அடைவதற்கான முழு வழிவகை இன்னும் காணப்படவில்லை. அதை ஒழுங்குபடுத்த வேண்டும், மேலும் பஸ் புறப்படும் இடத்தில் பொது மக்கள் தங்குவதற்கு நல்ல 'ஷெட்' (கொட்டகை) தேவை.





அவர்கள் அங்கு பருகுவதற்குக் குடிநீர் வசதி செய்வதுடன், அந்த இடத்திற்குப் பக்கத்தில் கண்டக்டர்கள், ட்ரைவர்கள் போன்றவர்கள் சிற்றுண்டி அருந்துவதற்கு வசதி செய்து தருவதும் அவசியம்.

ஓடும் பஸ் ஏதாவது ஒரு 'ஸ்டாப்' பிலே நிறுத்தப்படா விட்டால், அங்கு காத்திருக்கும் மக்கள் தவறாகக் கருதுகிறார்கள். பஸ்ஸில் இடம் இருந்தும்கூட, பஸ்ஸை நிறுத்தவில்லையோ என்று அவர்கள் ஐயுறுகிறார்கள். ஆகவே, பஸ்ஸிலே இடம் இல்லை என்பதைக் காட்டுவதற்கு ஏதாவது ஒரு வண்ண விளக்கை அடையாளமாகப் போடவேண்டும். மக்கள் தூரத்திலே பார்க்கிறபோதே வருகிற பஸ்ஸில் இடம் இல்லை என்று தெரியும் அளவுக்கு, அதிலே ஒருவகை ஒளி விளக்கு முற்பகுதியிலும் பிற்பகுதியிலும் அடையாளமாக அமைக்கப்படவேண்டும்.

பஸ்ரூட் எண்ணானது நன்றாகத் தெரியும்படி போடப்படாத காரணத்தால், 14-ம் எண்ணுள்ள பஸ்ஸில் ஏறவேண்டியவர்கள், 17-ம் எண்ணுள்ள பஸ்ஸில் ஏறிவிடுகிறார்கள். 24-ம் எண்ணுள்ள பஸ் என்று எண்ணி, 34-ம் எண்ணுள்ள பஸ்ஸில் ஏறிவிடுகிறார்கள். இப்படித் தடுமாறாமலிருக்கவேண்டிய அளவுக்கு பஸ் ரூட்டினுடைய எண் தெளிவாகக் காணப்படவேண்டும். ஒரு அளவுக்கு சிறியதாகத்தான் போடப்பட்டிருக்கிறது. ஆகவே, பஸ்ஸினுடைய உச்சியில் நான்கு மூலைகளிலும் எண் பலகை 'ரெக்டாங்குலராக' இரண்டு பக்கங்களிலும் போடப்படுமானால், முன்னும் தெரியும், பக்கத்தில் நிற்கும் போதும் தெரியும், தவறாமல் கவனித்து ஏற வசதியாகவும் இருக்கும்.

பஸ்ஸினுடைய எண், 218, 312 போன்றதாக போடப்படும் அந்த எண் பெரிதாக இருக்கிறது. அது அவசியம் இல்லாதது. அதைப் போடுவதென்றால், அதை உள் பக்கத்திலோ வேறு இடத்திலோ போட்டுக்கொள்ளலாம். விளம்பரம் செய்யும்போது, பஸ்ஸில் பிற்பகுதியில் விளம்பரப் பலகை இருக்கும் காரணத்தால், அதிலே சினிமாப்பட விளம்பரம் இருக்குமானால், அதன் பின்னால் சைக்கிளில் வருகிறவர்கள் அந்த விளம்பரங்களைப் பார்த்துக் கொண்டே போய், பஸ்ஸிலோ வேறு இடத்திலோ மோதிக்கொள்கிறார்கள். இது விபத்துக்களை அதிகப்படுத்தும் சினிமாவைக் கண்டிக்க வேண்டுமென்கிற அமைச்சர்கள், சினிமா விளம்பரத்தைக் காட்டி வருமானத்தைப் பெருக்கவேண்டும் என்பதை விட்டுவிட்டு, விளம்பரங்கள் பஸ்ஸின் பின்புறத்தில் இல்லாமல் செய்ய வேண்டும்.

பஸ்ஸின் உள்புறத்தில் விளம்பரப் பலகைகளை இணைக்கும் போது, பஸ்ஸின் மேல் பலகையை ஒட்டி ஆணிகளை வைத்து முடுக்கப்படுவதால், பஸ்ஸின் மேற்பகுதியில் ஓட்டை விழுந்து, மழையின்போது எவ்வளவு நல்ல பஸ்ஸாக இருந்தாலும், தண்ணீர் கசிகிறது. உள்ளே வைக்கும் விளம்பரப் பலகையின் ஆணிகளை— 'நட்' டை மேலே முடுக்காமல், அதற்கு வேறு முறை கையாளப் பட்டு, மழைத் தண்ணீர் மேலிருந்து ஒழுகாமல் தடுக்கப்பட வேண்டும்.

THE HON. SRI C. SUBRAMANIAM : மொத்தம் 30 என்று சொன்னால் தாலுகாவிற்கு ஒன்று எப்படி வரும்? ஆரம்பத்தில் 30 தான் ஆரம்பிக்கப்படும்—ஒரு ஜில்லாவிற்கு 2, 3 தான் வரும்.

SRI T. T. DANIEL : May I know whether in the schools that are selected for the introduction of the Eleventh Standard, there will be accommodation for that purpose and may I also know whether the introduction of the Eleventh Standard in the High Schools will not affect the attendance in the colleges?

THE HON. SRI C. SUBRAMANIAM : All these matters have been taken into consideration and my plea has also been that this is a matter for reconsideration and that is a different thing. About the present programme, I may state that accommodation and all the other things would be taken into account before starting the Eleventh Standard.

SRI K. VINAYAKAM. In the contemplated course for the Eleventh Standard what would be the subjects to be taught and would it be similar to the Pre-University Course that is obtaining at the University level?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, the idea is that Pre-University standard of knowledge should be reached in the Eleventh Standard.

SRI S. M. ANNAMALAI : ஸார், முதலில் தாலுகா தலைநகரங்களில் உள்ள எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் 11-வது வகுப்பு ஆரம்பிக்கப்படும் என்று சர்க்கார் மூலமாகப் பேசப்பட்டது. அது கைவிடப்பட்டதா? அப்படியானால் அதன் காரணம் என்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM : 11-வது வகுப்பை ஆரம்பிக்க அதற்கு வேண்டிய எல்லாவித வசதிகளும், அதற்கு மேல், ஆசிரியர்கள் எல்லாம் வேண்டியிருக்கிறது. அதை கவனித்துப் பார்க்கும்போது 30 ஆரம்பிப்பதே கஷ்டமாக இருக்கும் என்று தோன்றுகிறது. ஆகவே, இதில் அவசரப்படுவதைவிட கவனித்து எல்லாக் காரியங்களையும் செய்வது நல்லது.

SRI A. A. RASHEED : May I know whether the Eleventh Standard will be under the supervision of the University or the Secondary School Board?

THE HON. SRI C. SUBRAMANIAM : It will form part of Secondary Education and not University Education.



16th March 1961]

*Floods in Mangarai and Marudha rivers*

* 862 Q.—SRI M. A. B. ARUMUGHASAMY : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ம் வருடம் நவம்பர் மீ 11-ம் தேதி திடீரென்று ஏற்பட்ட வெள்ளத்தினால் திண்டுக்கல் தாலுகா, ஆத்தூர் தொகுதியில் மாங்கரை ஆறு, மருதாநதி இவைகளினால் ஏற்பட்ட பெரும் சேதம் பற்றி மதுரை ஜில்லா உணவு உற்பத்தி என்ஜினீயர் அவர்களுக்கு தந்திமூலம் தெரிவிக்கப்பட்டதா?

(இ) அதன்மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

(உ) இவ்விரு ஆறுகளிலும் அடிக்கடி ஏற்படும் பெரும் சேதங்களை நிரந்தரமாகத் தடுத்து நிறுத்த ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) No, Sir.

(இ) The question does not arise.

(உ) Action is being taken by the Executive Engineer, Madurai, to sanction estimate for closing the breaches in Mangarai river permanently and for construction of training wall. As regards Marudhanadhi, detailed investigation has been carried out for strengthening the out-flanked portion as a permanent measure and for carrying out repairs to the sluices which command direct ayacut under the river and the plans and estimates are under preparation.

SRI M. A. B. ARUMUGHASAMY : ஸார், மாங்கரை ஆற்றிலே வந்த வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதம் எவ்வளவு? இதை நிரந்தரமாகத் தடுக்க ஏற்படக்கூடிய செலவு என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சேதம் எவ்வளவு என்ற புள்ளிவிவரம் என்னிடம் இல்லை. அப்போதே தாற்காலிகமாக மேலும் சேதம் ஆகிவிடாமல் தடுக்கப்பட்டது—ப்ரீச்சஸ் எல்லாம் மூடப்பட்டன. இப்போது எவ்வளவு செலவாகும் என்ற விவரமும் என்னிடம் இல்லை. செலவைப் பற்றி கவலை வேண்டாம். நிரந்தரமாக சேதம் ஏற்படாமல் செய்ய என்னென்ன செய்ய வேண்டுமோ அதெல்லாம் நிறைவேற்றப்படுகின்றன.

SRI M. A. B. ARUMUGHASAMY : மருதா நதியில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக விவசாயிகளுக்கு அதிகமாக நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதே. அந்த நஷ்டத்தை ஈடு செய்ய விவசாயிகளுக்கு ஏதாவது கடன் உதவி செய்யப்படுமா? உதவி கோரி விவசாயிகள் மனுச் செய்தார்களா? அப்படியானால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நஷ்டம் ஏற்பட்டால் ஈடு செய்ய கடன் கொடுக்கவேண்டும் என்ற திட்டம் ஒன்றும் இல்லை. கடன் கேட்பவர்களுக்கு பல வழியில் கூட்டுறவு சங்கங்களும் சர்க்காரும் கொடுத்துக்கொண்டுதான் வருகிறார்கள்

[16th March 1961

MR. SPEAKER : We will take up Question Nos. 863, 864 and 865 when the Hon. Minister concerned comes to the House.

*Bus routes (Harijan applicants)*

* 866 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of SRI N. MARUDACHALAM) : கனம் மின்சார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவை ஜில்லாவிலிருந்து கடந்த நான்கு மாதத்தில் பஸ் ரூட்டிற்காக விண்ணப்பித்துள்ள ஹரிஜனங்கள் எத்தனை பேர் ?

(இ) எத்தனை பேருக்கு பர்மிட் வழங்கப்பட்டது ?

THE HON. SRI V. RAMAIAH : (அ) One.

(இ) Nil.

SRI M. K. SOMASUNDARAM : ஸார், கோவை ஜில்லாவிலே இல்லை என்றாலும் மற்ற இடங்களில் ஹரிஜனங்கள் பஸ் ரூட் வேண்டுமென்று ஏதாவது விண்ணப்பம் போட்டிருக்கிறார்களா ? அதைப்பற்றி அரசாங்கம் என்ன பரிசீலனை செய்திருக்கிறது ?

MR. SPEAKER : உப கேள்வி கேட்பதாக இருந்தால் கோயம்புத்தூர் ஜில்லாவை பற்றித்தான் கேட்கவேண்டும். இல்லை என்றால் தனிக்கேள்வி போடவேண்டும்.

SRI K. VINAYAKAM : On what grounds was this applicant disqualified to own a bus route?

THE HON. SRI V. RAMAIAH : He did not fulfil the requirements for the issue of a bus permit.

*G.C.I.M. Examination*

* 867 *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI S. PAKKIRISWAMI PILLAI) : Will the Hon. the Minister for Revenue be pleased to state the number of students who passed the G.C.I.M. examination in Ayurveda, Siddha and Unani in the years 1957 to 1960, and the percentage of those who passed the examinations, from the Government College of Integrated Medicines in Kilpauk, Madras?

THE HON. SRI M. A. MANICKAVELU : A statement* is placed on the table of the House.

SRI M. K. SOMASUNDARAM : ஸார், மேஜைமேல் வைக்கப்பட்டிருக்கிற குறிப்பிலே பர்ஸெண்டேஜ் குறைவாக இருக்கக் காரணம் என்ன ? படிப்பின் தரம் குறைவாக இருக்கிறதா ? அதை திருப்தி பண்ண அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதை மாணவர்கள் தான் திருப்தி பண்ணவேண்டும். நன்றாகப் படித்து திருப்தி செய்யலாம்.

* Printed as Appendix I on page 698 infra.



16th March 1961]

SRI V. K. KOTHANDARAMAN : ஹெல்த் ஆபீஸர்கள், டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபீஸர்கள் ஆகியவர்களை நியமிக்க டாக்டர்கள் கிடைக்கவில்லை என்று சொல்லப்படுகிறதே, அதனால் ஜி.ஸி.ஐ.எம். டாக்டர்களை நியமிக்கும் உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஜி.ஸி.ஐ.எம். மாத்திரம் அல்லாமல் எம்.பி.பி.பிஸ். டாக்டர்களையும் நியமிக்க ஒரு ப்ரபோஸல் இருக்கிறது.

SRI K. VINAYAKAM : There seems to be a large percentage of failures as far as the Siddha system of medicine is concerned. Is it a fact that the students do not rise up to the level expected of them or is the instruction imparted to them not up to the standard which would warrant them to pass?

THE HON. SRI M. A. MANICKAVELU : We cannot attribute it to any one particular reason. There is also the other reason that the difficulty involved in that system will have to be considered.

*Dispensary (Azhagappapuram)*

MR. SPEAKER : As the hon. Member who gave notice of the Question No. 868 is not in his seat, the question and answer will be printed in the proceedings.

* 868 *Q.*—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether any amount has been sanctioned for the staff of the Dispensary in Azhagappapuram, in the Kanyakumari district;

(*b*) if so, when;

(*c*) whether the Government have received any representation from the villagers of Azhagappapuram for starting a full-time dispensary; and

(*d*) the action taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) In March 1959.

(*c*) & (*d*) Yes. The part-time Government Dispensary at Azhagappapuram has started functioning as a full-time dispensary with effect from 1st February 1961.

*English as Medium of Instruction*

* 869 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the attention of the Government has been drawn to the statement of the Director of Public Instruction wherein he has stated that the previous Ministry have been misguided in removing English as medium of instruction?

[16th March 1961

THE HON. SRI C. SUBRAMANIAM : Presumably the hon. Member refers to the reported speech of the Director of Public Instruction at Tiruchirappalli while inaugurating the English Language Teaching Campaign on 6th December 1960.

The Director of Public Instruction has not been correctly reported in the Press.

SRI A. A. RASHEED : May I know the reason for not contradicting the report in the papers?

THE HON. SRI C. SUBRAMANIAM : It is almost impossible to go on contradicting every speech, that is reported in the papers.

*Bus transport in rural areas*

* 870 *Q.*—SRI M. P. SARATHI : கனம் மின்சார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கிராமப்புறங்களில் பஸ் போக்குவரத்தை அதிகரிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

(இ) அதற்கு விசேஷ சலுகை காட்டப்படுகிறதா ?

THE HON. SRI V. RAMAIAH : (அ) & (இ) A Planning and Development Wing has been formed in the Transport Department to conduct traffic surveys to assess the need for additional transport facilities in each district of this State and make recommendations to Government for opening of new routes, introduction of additional buses in existing routes and extension of routes.

There is also a proposal under examination to provide special type 14 seater buses to negotiate narrow roads in village parts with a view to connecting interior villages.

SRI S. M. ANNAMALAI : ஸார், சில கிராமப்புறங்களிலே அதிகமான பஸ்களுக்குத் தேவை இருந்து, அதைப்பற்றி, சில அதிகாரிகள் சிபார்சு செய்தபோதிலுங்கூட, பிளிட் ஓனர்கள் உடனடியாக அப்பீல் செய்து அதைத் தடுத்து விடுகின்றனர். ஆகவே இந்த கிராமப்புறங்களுக்கு தனிச்சலுகை கொடுத்து, அதற்கான முயற்சிகளை இந்த சர்க்கார் எடுக்குமா ?

THE HON. SRI V. RAMAIAH : கிராமப்புறங்களுக்கு அதிகமான பஸ்கள் விடவேண்டுமென்ற எண்ணத்தை நான் ஆதரிக்கின்றேன். அதற்காகவே விசேஷமாக இப்போது டெவலப்மெண்ட் விங் என்ற ஒரு அமைப்பை அமைத்து, அவர்கள் பரிசீலனை செய்து எங்கெங்கே பஸ்கள் விட முடிவு செய்கின்றார்களோ, அந்த இடங்களில் எல்லாம் போக்குவரத்தை ஏற்படுத்த அரசாங்கமே முடிவு செய்திருக்கிறது. ஆகையால், இதில் தனிப்பட்டவர்கள் தலையிட்டு எந்தவிதமான கஷ்டத்தையும் கொடுப்பதற்கில்லை.

SRI M. KALYANASUNDARAM : ஸார், டிரான்ஸ்போர்ட் கமிஷனரின்கீழ் பணிபுரியக்கூடிய விசேஷக் குழுவைத்தான் அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள் என்று நினைக்கிறேன். அப்படியானால், அந்தக் குழு என்ன சிபார்சுகள் செய்திருக்கிறது? அது சபையின் முன் வைக்கப்படுமா ?



16th March 1961]

THE HON. SRI V. RAMAIAH : அதற்குத் தனி கேள்வி போடவேண்டும்.

SRI M. A. B. ARUMUGHASAMY : மதுரை ஜில்லாவில் பஸ்கள் போகாத கிராமங்களிலே பஸ்கள் போவதற்கு ஏதாவது வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, அப்படி பஸ்கள் இதுவரை அப்படிப்பட்ட கிராமங்களுக்கு அனுமதிக்கப் படாததின் காரணம் என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : பஸ்ஸே போகமுடியாத கிராமங்களுக்கு எப்படி பஸ்கள் விட முடியும்? அப்படிப்பட்ட சூழ்நிலை அங்கு இருக்கின்ற காரணத்தால், பஸ்கள் விடுவதற்கில்லை.

SRI V. SUBBIAH : புதிதாக பஸ்களை நீடிக்கவேண்டுமென்று விண்ணப்பித்துக் கொண்டிருப்பவர்களுக்கு வசதியாக, இப்போது இருக்கக்கூடிய 15 மைல் என்று இருப்பதை 25 மைலாக நீடிப்பதற்கு ஏதாவது அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

(பதில் இல்லை.)

SRI A. MARIAPPAN : ஆரம்பத்தில் 15 மைல் என்று பஸ் சொந்தக்காரர்கள் அனுமதி வாங்கிக்கொண்டு, மறுபடியும் அதை அதிக மைல்களாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதால், கிராம மக்களுக்கு கஷ்டங்கள் ஏற்படுகிறது என்பதைச் சர்க்கார் உணருகிறதா ?

MR. SPEAKER : இதிலே எப்படி இந்தக் கேள்வியைக் கேட்க முடியும். இந்தக் கேள்வி கிராமப்புறங்களிலே பஸ் போக்குவரத்தை அதிகரிக்க என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பது. தாங்கள் கேட்பதோ அக்விசிஷனைப் பற்றி. எப்படி இந்தக் கேள்வியைக் கேட்க முடியும் ?

*Maternity training*

* 871 *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of students that are undergoing Maternity training and the places where they are trained;

(*b*) whether there is any proposal to increase the present strength; and

(*c*) if so, the new strength?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) A statement [a] is placed on the table of the House.

(*b*) No, Sir.

(*c*) Does not arise.

[a] Printed as Appendix II on page 690 infra.

[16th March 1961

**SRI M. K. SOMASUNDARAM**: ஸார், மேஜைமேல் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் செங்கல்பட்டு, நாகப்பட்டினம், கடலூர் போன்ற இடங்களில் மிகக் குறைவாக இருக்கிறதே. அதை உயர்த்துவதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது?

**THE HON. SRI M. A. MANICKAVELU**: எங்கெங்கே வசதி இருக்கிறதோ அங்கேயெல்லாம் பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது. 66, 59 என்றும் சில இடங்களில் இருக்கிறதே, அதையும் கவனிக்கவேண்டும்.

*Renovation of temple (Utharakosamangai)*

* 873 *Q.*—SRI K. VINAYAKAM: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to renovate the ancient temple at Utharakosamangai, Ramanathapuram district; and

(*b*) the age of the holy "Elanthai" tree in the temple?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes, Sir.

(*b*) Information is not available.

SRI K. VINAYAKAM: This famous temple has been praised even by Nayanars of the olden days and a very big congregation of Hindus come to the temple. In view of this, will the Government take steps to renovate the temple?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM**: இந்த இலந்தை மரம் உள்ள ஆலயம் மிகப் பழமையானதுதான். இந்த ஆலயத்தைப் பற்றிக் கேட்டார்கள். என்னிடம் இப்போது தகவல் இல்லை. இருந்தாலும் வரலாறு கூறுகிறது இராவணனுக்கு முன்னே ஏற்பட்டது என்று. இந்த ஆலயத்திற்கு இந்த நாட்டிலே இருந்தும், இலங்கையிலே இருந்தும் பல யாத்திரிகர்கள் வருகிறார்கள். ஆகவே இது பழமைவாய்ந்த, ரொம்ப நாட்களாகத் திருப்பணி செய்யாமல் இருந்த கட்டிடம். இதற்குத் திருப்பணி செய்யவேண்டுமென்று ரொம்ப நாட்களாக முயற்சி நடந்துகொண்டிருக்கிறது. தேவஸ்தானம் சார்பாக 2,07,123 ரூபாய் 30 ந.பை. பாங்கில் போட்டிருக்கிறார்கள். அதேமாதிரி இந்தத் திருப்பணியை ஏற்றுக்கொண்டு நடத்த இருக்கும் செட்டியார்களும் 2 லட்சம் ரூபாய் அவர்களுடைய பங்காக போட இருக்கிறார்கள். சீக்கிரத்தில் இந்த வேலை எடுத்துக்கொள்ளப்படும். ஆனால் இதற்கு முன்னால் திருப்பணி வேலை நடந்துகொண்டிருக்கிறது.

**SRI K. VINAYAKAM**: சமீபத்திலே பெய்த பேய்மழையின் காரணமாக தண்ணீரானது கோவிலுக்குள்ளே புகுந்துவிட்டதால் ஒரு மாத காலத்திற்குமேல் பக்தர்கள் கோயிலுக்குள் போக முடியாதபடி ஒரு நிலைமை ஏற்பட்டது என்று சொல்லப்பட்டது. ஆகவே, உடனடியாக ரிப்பேர் செய்வதற்கு முயற்சி எடுத்துக் கொள்வார்களா?



16th March 1961]

**THE HON. SRI C. SUBRAMANIAM**: இயற்கையாக மழை பெய்து, வெள்ளம் வந்தால் அதை எப்படித் தடுக்க முடியும்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: விவரங்கள் எனக்குத் தெரியாது. எல்லாம் இறைவனுடைய திருவருள் ஆகும். கனம் நிதி அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல், இயற்கையைத் தடுக்க முடியாது. வெள்ளம் ஏற்பட்ட சமயத்திலும் மக்கள் கோவிலுக்குப் போய்க்கொண்டுதான் இருக்கிறார்கள்.

SRI S. M. ANNAMALAI: ஸார், இந்தக் கேள்வியிலே 'தெய்விக இலந்தை மரம்' என்று கூறப்பட்டுள்ளது. அப்படியானால், அதற்கு என்ன சக்தி இருக்கிறது? வேறு ஏதாவது மரங்களுக்கு இல்லாத சக்தி இந்த மரத்திற்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் அங்கத்தினர் பல விஷயங்களை நன்கு படித்துத் தெரிந்து கொள்ளக்கூடியவர். ஆகவே, இதுபற்றியும் அவர் அம்மாதிரி தெரிந்து கொள்ளலாம். சில விருக்ஷங்கள் இருக்கின்றன. பார்த்தாலே அவைகளின் பழம்பெருமைகள் தெரியும். ஆழ்வார் திருநகரியிலே புளிய மரம், ஏகாம்பரநாதர் ஆலயத்திலுள்ள மாமரம் அதேபோல் இந்த இலந்தை மரமும் பழமையான சின்னம். நான் முன்பே, இது இராவணன் காலத்திற்கு முந்தியது என்று சொன்னேன். இப்போதும் பழம் காய்க்கிறது, இதுதான் அதன் விசேஷம்.

*Catholic patients (Prayers)*

* 874 *Q.*—SRI T. T. DANIEL: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Catholic Priests are allowed to offer mass for the Catholic patients in the T.B. Hospital, Nagercoil;

(*b*) whether such an arrangement existed before 1st November 1956;

(*c*) if it is discontinued, what is the reason for it;

(*d*) whether there was a place in the hospital given for the Catholic patients to offer prayer; and

(*e*) if so, whether it is converted into a place of worship of non-Christians?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) No.

(*b*) Yes.

(*c*) It was discontinued with reference to the general instructions on this subject that are being followed in all the Government hospitals in the State.

(*d*) No.

[16th March 1961

SRI T. T. DANIEL : May I now whether there is a complaint from the public that such facilities should not be given. In the case of Catholics, when it is certain that the last moments are approaching, a priest should be there to give the last mass to the dying mass. If the patient is not given such a last mass, he must be deemed to be unfortunate. Only because of that, such facilities were given to Catholic patients there. May I know whether the Government will reconsider the matter and in case where the doctor fears that the patient will not survive, to give information to the Catholic priest concerned to give the last mass to them. It is one of the essential things which a Catholic has to perform before he dies.

MR. SPEAKER : The hon. Member is making a speech instead of putting a direct question.

THE HON. SRI M. A. MANICKAVELU : There were complaints. There are not only patients belonging to the Catholic religion but there are patients belonging to different religions. It is alleged that proselytisation propaganda goes on and leaflets are distributed to other patients. There is a chapel where sisters go and have prayer. It is left to them to allow other patients there. Government have nothing to do with that. Also there are complaints that patients, when they are allowed to go, go out of the wards and go shopping and return and give all sorts of troubles.

SRI T. T. DANIEL : May I know who gave that complaint to Government and whether Government made an inquiry about it? May I know whether the allegations were made by any responsible person concerned with the management or by any other member?

MR. SPEAKER : Who gave that information may not be necessary. The second half of the question may be necessary?

THE HON. SRI M. A. MANICKAVELU : The Superintendent was satisfied on the allegations made and he took necessary action.

*Primary Welfare Centre (Nariyambattu)*

* 877 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether there is any proposal to open a Primary Welfare Centre in Nariyambattu Panchayat, North Arcot district; and

(*b*) if so, when?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) The question of opening a Primary Welfare Centre in Nariyambattu Panchayat, North Arcot, will be considered in the next financial year.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that about 15 villages including this particular village have no medical facilities and if so, will the Government consider the question of opening a Primary Health Centre there as early as possible?



16th March 1961]

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir, I am aware of that. I am also aware of the fact that a donation was once forthcoming, but was subsequently withdrawn.

*Dairying and Milk Supply (UNICEF Aid)*

MR. SPEAKER : As the hon. Member who gave notice of Question No. 878 is not in his seat, the question and answer will be printed in the Proceedings.

* 878 *Q.*—K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state the nature of assistance received from UNICEF for Dairying and Milk Supply during the Second Five-Year Plan period?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No assistance from the UNICEF has been received so far.

*Post-Basic Syllabus Committee (Report)*

* 879 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆதார உயர்நிலைப்பள்ளிகள் (போஸ்ட் பேஸிக்) வகுப்புகளுக்குக்கான பாட திட்டங்களை இதற்கென நிறுவிய குழு தயார் செய்து சர்க்காருக்கு அனுப்பிவிட்டதா?

(இ) அதன்பேரில் அரசாங்கம் என்ன முடிவு செய்திருக்கிறது?

(உ) இல்லையானால் கமிட்டியின் முடிவு எப்போது தெரியும்?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) No, Sir.

(இ) & (உ) The syllabus is still under preparation by the Committee who are expected to complete their work shortly.

SRI A. VEDARATHNAM : இப்பொழுது இந்த பாடத் திட்டத்தை தயார் செய்து கொண்டிருக்கிற குழுவில் யுனிவர்ஸிடி பிரதிநிதிகள் இருக்கிறார்களா? யுனிவர்ஸிடியினுடைய ஆலோசனையின் பேரில் அல்லது அவர்களைக் கலந்துகொண்டு இந்த பாட திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறதா? இந்த பாட திட்டம் அங்கீகரிக்கப்பட்டால் போஸ்டு பேஸிக் வகுப்பில் தேறிய மாணவர்கள் கல்லூரியில் சேருவதற்கு இனி தடை இருக்காதா? யுனிவர்ஸிடி அங்கீகாரம் அதற்கு கிடைக்குமா என்பதை தயவு செய்து தெரிவிக்க முடியுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : யுனிவர்ஸிடி அங்கீகாரம் இதற்கு கிடைக்குமா என்பதைப்பற்றி நான் இங்கே உறுதியாகச் சொல்ல முடியாது. அது யுனிவர்ஸிடி தீர்மானம் பண்ண வேண்டிய விஷயம். அந்தக் குழுவில் யுனிவர்ஸிடி பிரதிநிதிகள் இருக்கிறார்களா என்பதைப்பற்றி என்னுடைய கையிலே இப்பொழுது தகவல் இல்லை. அதை அங்கத்தினர் அவர்கள் தெரிந்து கொள்ள விரும்பினால், அவர்கள் தனியாக என்னைக் கேட்டால் தகவல் கொடுப்பதற்கு தயாராக இருக்கிறேன்.

[16th March 1961

SRI K. B. S. MANI : இந்த ஆதார உயர்நிலைப்பள்ளி படிப்பு விஷயம் பிற்கால வாழ்க்கைக்கு மாணவர்களுக்கு ஓரளவு திருப்தி அளிக்காத காரணத்தினாலும், அதனுடைய தரக்குறைவு காரணத்தினாலும் தானே அவர்களை காலேஜில் சேர்க்க மறுக்கிறார்கள்? இந்தத் தரக்குறைவை நீக்கி, அவர்களுக்கு ஹைஸ்கூல் படிப்பு எந்தத்தர அளவுக்கு கொடுக்கிறார்களோ அந்த அளவுக்குக் கொடுப்பதற்கு சர்க்கார் முயற்சிக்குமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : தரக்குறைவு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. சில விஷயங்களிலே சாதாரண பள்ளிக்கூடங்களைவிட இங்கே படிப்பின் தரம் அதிகமாக இருக்கிறது. இருந்தாலும், இது யுனிவர்ஸிடி கவனிக்கவேண்டிய விஷயம்.

*Population and Block Development (Utharakosamangai)*

* 880 Q.—SRI K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the population of the town of Utharakosamangai, Ramanathapuram district; and

(b) whether this place is covered under Block Development?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) The population of the Utharakosamangai town as per the 1951 census is 1,225.

(b) No. Sir. I am unable to understand the interest evinced by the hon. Member in this place 'Utharakosamangai' (Laughter).

SRI K. VINAYAKAM : In my various sojourns in the country, I had come across this place also. Sir, in view of the ancient culture attached to this place and its religious lore and also in view of the fact that it still continues to have a mediæval character of an undeveloped nature, will the Government take steps to bring this town under the Block Development scheme?

THE HON. C. SUBRAMANIAM : The other thing will also have to be considered, whether this atmosphere there would not be spoiled by modernising it.

MR. SPEAKER : Now that the Hon. Minister for Industries has come, we can take up the questions relating to his department.

*Mineral Survey (Kanyakumari district)*

* 863 Q.—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any Mineral Survey was conducted in the Kanyakumari district recently; and

(b) if so, when and the results thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Geological mapping and Mineral Survey in parts of Thovala, Agastheswaram and Kalkulam taluks of Kanyakumari district were conducted during the year 1958–59 covering an area of 320 square miles.



16th March 1961]

(b) The following occurrence of minerals have been recorded :—

(1) Building stone and Road metal.
(2) Graphite.
(3) Small heaps of iron slag.
(4) Tuffaceous limestone and Kaukar.

SRI T. T. DANIEL : May I know whether a similar survey was conducted before the year 1956 and whether in that survey, the existence of some costly minerals was found in that district? May I also know whether the present survey that was conducted was an intensive survey?

THE HON. SRI R. VENKATARAMAN : I have no information as to whether any survey was conducted before 1956. This survey was conducted during 1958–59 and 1959-60. If the hon. Member specifies any particular mineral, I shall have it examined whether it was discovered before.

SRI T. T. DANIEL : May I know whether in the list that the Hon. Minister just now read, the existence of ilmenite and monosite were included? May I also know whether it is a complete list?

THE HON. SRI R. VENKATARAMAN : They are already there. These are the new occurrences which we have recorded.

*Handloom Finance Corporation*

* 864 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) when the Handloom Finance Corporation would start functioning : and

(b) the functions of the Corporation?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) The proposal to set up a Handloom Finance Corporation has been sent to the All-India Handloom Board for approval. The Corporation will be set up after the Board approves the proposal.

(b) The Corporation will finance the production and marketing of handloom cloth by the weavers outside the co-operative fold.

*Textile work (wages)*

* 865 Q.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அகில இந்திய பஞ்சாலை சம்பள நிர்ணய போர்டு சிபாரிசின்படி கொடுக்கும் மாதம் 8 ரூபாய் சம்பளம், சம்பளத்துடன் சேர்க்காமல் தனியாக மில்லில் போடப்படுவது சர்க்காருக்குத் தெரியுமா?

(இ) அதேபோல் பஞ்சப்படியை 75 சதவிகிதம் சம்பளத்தில் சேர்க்கப்படுவதும் தனியாக பில்லில் போடப்படுவதும் தெரியுமா ?

(உ) இதெல்லாம் சேர்த்து அடிப்படைச் சம்பளமா ? அல்லது அடிப்படை சம்பளம் எதெது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) & (இ) Yes, Sir.

(உ) The basic wages represent only the occupational wages of the workmen and do not include these items.

SRI V. K. KOTHANDARAMAN : இந்த ரூ. 8-ம் சம்பள உயர்வு என்றுதானே உயர்த்தப்பட்டது. அதேபோன்று பஞ்சப் படியில் 75 சதவிகிதம் சம்பளத்தில் சேர்க்கவேண்டும் என்ற நோக்கத்தோடுதானே சேர்க்கப்பட்டது ? இந்த இரண்டையும் சம்பளத்தோடு சேர்க்காமல் தனியாக இருக்கிற காரணத்தினுல், தொழிலாளர்கள் போனஸ் வாங்குவதிலும், (earned leave) வாங்குவதிலும், கிரெடிட் சொஸைடி இருந்தால், அதில் கடன் பெறுவதிலும் பலவிதத்தில் பாதிக்கப்படுகிருர்கள் என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? ஆகவே, இதையும் சம்ப ளத்திலே சேர்த்து கொடுக்கும்படி ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : 1960 ஜூன் 30-ம் தேதி ஏற்பட்ட ஒப்பந்தத்தில் இந்த விதமாகத்தான் அந்த சம்பள விகிதத்தைக் காட்டவேண்டும் என்று சொத்து இருக்கிறது. தொழி லாளிகள், முதலாளிகள் செய்துகொண்ட ஒப்பந்தம் இது. ஆகவே, கனம் அங்கத்தினர் சொல்லுவது அந்த எக்ரிமெண்டுக்கு புறம்பாக இருக்கிறது.

SRI S. PAKKIRISAMI PILLAI : இந்த ரூ. 8 சம்பள உயர்வு 'நைட் ஷிப்ட் அலவன்ஸுக்கு' கணக்கு போட்டு சேர்க்க முடியுமா, போனஸ் வாங்குவதற்கு கணக்கு போட்டு சேர்க்க முடியுமா என்ற விவரம் அந்த எக்ரிமெண்டில் கிடையாது. அதற் குப் பிறகு லேபர் கமிஷனர் அவர்கள் தன்னுடைய அபிப்பிரா யத்தைக் கொடுத்திருக்கிருர்கள். அதன் பிரகாரம் இந்த 'நைட் ஷிப்ட் அலவன்ஸுக்கு' இந்த சம்பள உயர்வை கணக்கு எடுக்க முடியுமா, அல்லது போனஸ் வாங்குவதற்கு கணக்கு எடுக்க முடியுமா என்பதை கனம் மந்திரி அவர்கள் சொல்லமுடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த ஒப்பந்தம் சம்பந்தமாக ஏதாவது அபிப்பிராய பேதம் இருக்குமானுல், அதை தொழில் தகராருக எடுத்துக்கொண்டு, அதற்கு வகுத்திருக்கிற முறைப்படிதான் நடவடிக்கை எடுக்கவேண்டும். சர்க்கார் இதில் அபிப்பிராயம் கொடுக்க முடியாது. அதில் ஏதாவது தகராறு ஏற்பட்டால் தொழில் கோர்ட்டுதான் அபிப்பிராயம் கொடுக்க முடியும்.

SRI S. PAKKIRISAMI PILLAI : இந்த ரூ. 8-ஐ தனியாக வைத்துக்கொண்டிருக்கும்படியான நிலைமை எத்தனை வருஷ காலத்திற்கு நீடித்துக்கொண்டு போக முடியும் ?



THE HON. SRI R. VENKATARAMAN : ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கும்பொழுது அதில் போட்டு இருக்கவேண்டும் இதை. இந்த ஒப்பந்தத்தை மாற்றி திருத்தி அமைத்துக் கொள்ளும் வரையில், அது நீடித்து இருக்கும்.

*Teleprinter factory*

* 872 *Q.*—SRI A. VEDARATHNAM : } SRI T. T. DANIEL : } கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில ளிப்பாரா—

(அ) இத்தாலிய நிபுணர் டெலிபிரிண்டர் தொழிற்சாலையை நிறுவ சென்னைதான் உகந்த இடம் எனத் தேர்ந்தெடுக்கிருரா ?

(இ) அப்படியானுல் அத்தொழிற்சாலை எந்த இடத்தில் எவ்வளவு மூலதனத்தில் எப்போது அமைக்கப்படும் ?

(உ) இதற்கு கிடைக்க இருக்கும் (i) வெளிநாட்டு (ii) மத்திய சர்க்கார் உதவி எவ்வளவு ?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ), (இ) & (உ) The Government of India intend to set up a Government owned under-taking for the manufacture of teleprinters and allied equipment with the collaboration and technical assistance of an Italian con-cern. They have decided to locate the factory at Guindy. Work on the construction of the factory will be taken on hand shortly. The factory is likely to go into production by the end of 1961. This Government have no information regarding the cost of the project.

SRI A. VEDARATHNAM : இதனுடைய உற்பத்தி அளவு எவ்வளவு என்று தயவு செய்து அறிவிக்க முடியுமா ? நம்முடைய தேவைக்குப் போதுமான அளவு உற்பத்தி செய்யக்கூடுமா என்ப தையும் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : ஆரம்பத்தில் 176 மெஷின்கள் செய்யப்படும். மூன்று வருஷ காலத்தில், அது 1,326 மெஷின்களாக அதிகரிக்கப்படும்.

THE HON. SRI R. VENKATARAMAN : It is not possible to will be engaged in this industry?

THE HON. SRI R. VENKATARAMAN : It is not possible to say that at present.

*Co-operative Stores, Gudiyatham (Misappropriation)*

* 875 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குடியாத்தம் கூட்டுறவு தானிய ஸ்டோரில் பணம் கையாளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

(இ) எத்தனை பேர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) Yes, Sir.

(இ) Criminal prosecution was launched against the ex-Manager of the Gudiyatham Co-operative Stores and he was convicted and sentenced to undergo rigorous imprisonment for 18 months which, on appeal, was reduced to three months. The Co-operative Stores filed arbitration claims against the ex-President, ex-Vice-President, ex-Manager, ex-Secretary and the Accountant. An order was also issued for the conditional attachment of the properties of the ex-President. He then filed writ petitions in the High Court, Madras. In the meanwhile, the Stores was liquidated. The High Court ordered that the best course was to proceed against the ex-President under Section 49 of the Madras Co-operative Societies Act. Accordingly the liquidator preferred claims under Section 49 of the Madras Co-operative Societies Act. The ex-President again filed a suit against the President and other directors who were in office at the time of liquidation of the Stores and the suit was dismissed. The records and the books of the Stores are now in the Court. The Deputy Registrar, Vellore (North), will proceed further with the claim filed under Section 49 of the Act on receipt of the records from the Court.

**Sri V. K. KOTHANDARAMAN**: இந்த ஊழலிலே சம்பந்தப்பட்ட ஆட்களில் ஒருவர் தூக்குப்போட்டுக்கொண்டு தற்கொலை செய்துகொண்டாரே. இந்தப் பணத்தை வசூலிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது?

**The Hon. Sri R. VENKATARAMAN**: அந்த விவரம் எனக்குத் தெரியாது.

**Sri K. VINAYAKAM**: May I know what is the amount involved in this misappropriation case?

**The Hon. Sri R. VENKATARAMAN**: Rs. 39,229-3-5.

**Sri V. K. KOTHANDARAMAN**: இது 1953-ல் ஏற்பட்ட ஊழல் சம்பந்தப்பட்ட விசாரணை. ஒன்பது வருஷம் ஆகிறது. இதுபோல் வருஷக் கணக்கில் நீடிக்கக்கூடிய நிலைமை இருந்தால் எப்படி இந்த ஊழல்களை எல்லாம் போக்கமுடியும்? கோஆப்பரேடிவ் இயக்கத்தை எப்படி வளர்க்க முடியும்? இதுபோன்ற ஊழலை துரிதமான முறையிலே குறைந்தபட்சம் ஆறு மாதத்திற்குள்ளாக முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

**The Hon. Sri R. VENKATARAMAN**: கனம் அங்கத்தினர் அபிப்பிராயம் சொல்லுகிறார். நான் நீண்ட ஒரு பதில் கொடுத்ததற்குக் காரணம், என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிப்பதற்காகத்தான். எப்படி கிரிமினல் கோர்ட்டுக்குப் போயிற்று, ஹைகோர்ட்டுக்குப் போயிற்று, எப்படி சூட் போட்டு டிஸ்மிஸ் ஆயிற்று என்ற விவரங்களை எல்லாம் கொடுத்தேன்.

We are functioning under the rule of law and we cannot expedite it in the manner in which the hon. Member wants it to be done.



*State Transport Department (income)*

**Mr. SPEAKER**: As the Hon. Member, who gave notice of Question No. 876, is not in his seat, the question and answer will be printed in the proceedings.

* 876 Q.—**Sri T. S. RAMASWAMI**: Will the Hon. the Minister for Industries be pleased to state the income in the Transport Department in the Madras Centre and the Nagercoil district for the year 1959–60?

**The Hon. Sri R. VENKATARAMAN**: The net profits earned by the Madras Centre and the Kanyakumari Branch of the State Transport Department during 1959–60 are as follows:—

| | | RS. |
|---|---|---|
| 1 | Madras Centre ... ... ... | 21,46,245 |
| 2 | Kanyakumari Branch ... ... ... | 4,63,517 |

*(The figures are provisional and unaudited.)*

*Tapioca price*

* 881 Q.—**Sri T. T. DANIEL**: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the price of one pound of tapioca at present;

(b) the causes for the rise in price; and

(c) the steps taken to bring down the price?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM**: (a) Six naye Paise per 1 lb. of green tuber, in Salem and Madras Markets.

(b) The price has been more or less steady during the past twelve months.

(c) No special steps have been taken to bring down the price as the price of tapioca has generally been steady without any large or alarming rise in price.

**Sri T. T. DANIEL**: May I know the total extent of land under tapioca cultivation in our State?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM**: I do not have those particulars with me just now.

* **Sri M. R. KANDASWAMY MUDALIYAR**: இந்த மரவள்ளிக் கிழங்கின் விலையைக் குறைப்பதினால் விவசாயிகளுக்குப் பாதகம் ஏற்படுமென்று அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? விலையைக் குறைக்கக்கூடிய நடவடிக்கையை எடுக்காமல் இருப்பார்களா?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM**: விலையைக் குறைப்பதாக உத்தேசம் இல்லை என்று முன்னமேயே சொல்லிவிட்டேன்.

[16th March 1961

*Hereditary village officers appointment*

* 882 Q.—SRI V. K. KOTHANDARAMAN :
SRI S. M. ANNAMALAI : } கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கிராம முன்சீப் நியமனத்திற்கு ஆதாரமாக இருக்கும் 1895 வருடத்திய சென்னை வம்ச பரம்பரை கிராம உத்தியோகஸ்தர்கள் சட்டத்தின் பிரிவு செல்லாதென்றும், அது அரசியல் சட்டத்திற்கு விரோதமானதென்றும் சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பு செய்திருப்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

(இ) அதன்மீது சர்க்காரின் நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) Yes, Sir.

(இ) The Government are examining the further action to be taken in the matter.

SRI S. M. ANNAMALAI : சுமார் இரண்டு, மூன்று ஆண்டுகளாக இந்த விஷயம் சர்க்கார் பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது. அதன் பிறகு லாண்டு ஸீலிங்ஸ் பில் வந்திருக்கிறது. அவர்களுடைய சர்விஸ் தேவைப்படுமென்று கருதி இந்தப் பரம்பரை முறையை ரத்து செய்வதைக் கைவிடவேண்டுமென்று சர்க்கார் கைவிட்டுவிட்டார்கள். இப்பொழுது ஆந்திரா உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்ததில் பரம்பரை முறை செல்லாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதைக் கூடிய சீக்கிரம் பரிசீலனை செய்து சர்க்கார் ஒரு முடிவுக்கு வருவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இது இரண்டு, மூன்று வருஷங்களாகப் பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லுவது தவறு. சுப்ரீம் கோர்ட், சட்டப்படி இருக்கமுடியாது என்று சொன்ன பிறகுதான், இந்தப் பிரச்னை எழுந்திருக்கிறது. ஆந்திரப் பிரதேசத் தீர்ப்பு ஒரு ரிட் மனுவின் மேல் ஏற்பட்டது. ஜட்ஜ்மெண்ட் காப்பியை வரவழைத்திருக்கிறோம். ஆந்திரப் பிரதேசம் என்ன செய்யப்போகிறது என்று கேட்டிருக்கிறோம். எல்லாவற்றையும் ஆராய்ந்து பார்க்கிறோம்.

*English Daily on Co-operative Basis*

* 883 Q.—SRI A. A. RASHEED (on behalf of SRI T. S. RAMASWAMI) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the nature of special help given to the newly started English Daily on Co-operative Basis in the City; and

(b) the nature of Government advertisement given to it when compared to other dailies in the State?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) The Government have lent to the Madras Co-operative Printing and Publishing



16th March 1961]

Society the services of a Co-operative Sub-Registrar free of cost to assist in the maintenance of accounts and to guide the Society.

(b) Only one advertisement on Plan achievements was released for publication in the Republic Day Supplement of the newly started English Daily.

SRI A. A. RASHEED : May I know whether the Government have invested any money in this Daily?

THE HON. SRI R. VENKATARAMAN : No. Sir.

*Textile Price Control*

* 884 Q.—SRI K. SATTANATHA KARAYALAR :
SRI A. A. RASHED : } Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether this Government were consulted by the Centre for controlling the price of cloth; and

(b) if so, the suggestions given by the Government to the Centre?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) This Government were informally consulted about the measures to be taken to control textile prices.

(b) This Government cannot disclose the suggestions and proposals made at an informal meeting with officials of the Government of India.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that the prices of cloth are still high and if so, will the Government control them so as to bring them within the reach of the middle class people?

THE HON. SRI R. VENKATARAMAN : This is a matter within the competence of the Government of India.

SRI S. M. ANNAMALAI : மத்திய சர்க்கார் நூலின்மீது வரி விதித்திருக்கிறார்கள். அதன் காரணமாக துணிகளின் விலை மேலும் உயர்ந்திருக்கிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? விலையைக் கட்டுப்படுத்துவதற்கு சர்க்கார் என்ன முயற்சி எடுக்கப் போகிறார்கள் ?

THE HON. SRI R. VENKATARAMAN : இது பார்லிமெண்டிலே போடவேண்டிய கேள்வி.

**Compost**

* 885 Q.—SRI A. VEDARATHNAM : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1959-60 வருஷத்தில் கம்போஸ்ட் உரம் தயாரித்ததில் சிறந்தவர்களுக்கு அரசாங்கம் பரிசுகள் வழங்கியிருக்கிறதா ?

(இ) அப்படியானால், அதன் விவரமென்ன?

(உ) பரிசு பெற்றவர்கள் ஒவ்வொருவரும் செய்த உற்பத்தி அளவு என்ன? வழங்கிய பரிசுகள் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) & (இ) The compost production competition among the farmers in Community Development areas was conducted during 1959-60 and the results of the competition have not yet been announced. In the competition for local bodies during 1959-60, the following local bodies were declared as winners :—

| Municipalities. | | Panchayats. |
|---|---|---|
| Madurai | ... | Lalgudi (Tiruchirappalli district). |
| Thanjavur | .. | Melur (Madurai district). |
| Pudukkottai | ... | Alandur (Chingleput district). |
| Cumbum | ... | Dharapadavedu (North Arcot district). |

(உ) The particulars in respect of the competition for farmers in Community Development areas will be available only after the prize winners are declared. The particulars in respect of winners in the local bodies competition are furnished below :—

| Name of the local body (Prize winner) | Production of compost. (in tons). |
|---|---|
| 1 Madurai Municipality ... ... ... | 39,000 |
| 2 Thanjavur Municipality ... ... ... | 10,500 |
| 3 Pudukkottai Municipality ... ... | 3,608 |
| 4 Cumbum Municipality ... ... ... | 3,105 |
| 5 Lalgudi Panchayat ... ... ... | 864 |
| 6 Melur Panchayat ... ... ... | 820 |
| 7 Alandur Panchayat ... ... ... | 1,377 |
| 8 Dharapadavedu Panchayat ... ... | 252 |

The prizes are Senior Rolling Shields for the Municipalities and Junior Rolling Shields for the Panchayats.

SRI A. VEDARATHNAM : இந்தப் பரிசுத் திட்டம் அவர்கள் உற்பத்தி செய்வதைப் பொருத்ததாக இருக்கிறதா? அதிலே தரமும் கவனிக்கப்படுகிறதா? அப்படியானால் இந்தப் பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுப்பது யார்? என்ன முறையில் தேர்வு நடக்கிறது என்று சொல்லமுடியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அளவு கவனிக்கப்படுகிறது. 1,000 ஜனத்தொகை உள்ள யூனிட்டுக்கு அவர்கள் எவ்வளவு உற்பத்தி செய்கிறார்கள் என்று கவனிக்கப்படுகிறது. அதோடு தரமும் கவனிக்கப்படுகிறது. இதற்கு ஒரு கமிட்டி போட்டு நிர்ணயிக்கப்படுகிறது. இந்தக் கமிட்டியைப் பற்றிய விவரங்கள் இப்பொழுது என்னிடத்தில் இல்லை



SRI J. MATHA GOWDER : சில பிளாக்குகளிலே கம்போஸ்டு இன்ஸ்பெக்டர்கள் நியமிக்காத காரணத்தினால், கிராமப்புறங்களிலே இதுபோன்ற கம்போஸ்டு உரங்கள் தயாரிக்க முடியாத நிலையிலிருக்கிறார்கள் என்பது அரசாங்கத்துக்குத் தெரியுமா? அப்படியானால் எல்லா பிளாக்குகளிலும் இந்த கம்போஸ்டு இன்ஸ்பெக்டர்களை நியமிக்க அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எந்த பிளாக்கிலாவது யோசனை சொல்லுவதற்கு இன்ஸ்பெக்டர்கள் இல்லை என்று ஏற்பட்டால் அந்த பிளாக்கிலுள்ளவர்கள் ஜில்லா கலெக்டர் அவர்களுக்குத் தெரிவித்தால் வேண்டிய உதவி அளிக்கப்படும்.

*Government Hospital, Vellore (Improvements)*

* 886 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திரு. கோதண்டராமன், எம்.எல்.ஏ. அவர்கள் 1960-ம் வருடம் டிசம்பர் மீ 7-ம் தேதியில் (Director of Medical Services) அவர்களுக்கு எழுதிய வேலூர் சர்க்கார் ஆஸ்பத்திரி அபிவிருத்தியைப் பற்றிய லெட்டர் வந்து சேர்ந்ததா?

(இ) அதன்மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) Yes, Sir.

(இ) The matter is under the consideration of the head of the Department.

SRI V. K. KOTHANDARAMAN : வேலூரில் தனியார் துறையிலே நடத்தக்கூடிய மிஷன் ஆஸ்பத்திரியில் 3 பேஷண்டுகளுக்கு ஒரு டாக்டர் போட்டிருக்கிறார்கள். இங்கே 30 நோயளிகளுக்கு ஒரு டாக்டர் என்ற நிலைமை இருக்கிற காரணத்தால், சரியான முறையில் அவர்களைக் கவனிக்க முடியாத நிலைமை ஏற்பட்டு, நம்முடைய ஆஸ்பத்திரிகளின் பேரில் தவறான எண்ணங்கள் உண்டாகின்றன. நோயாளிகளுடைய நோயை சரியான முறையில் கவனிப்பதற்கு மேலும் அதிகப்படியான டாக்டர்களைப் போடுவதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்தமாதிரியான எண்ணம் இப்பொழுது மாறிக்கொண்டு வருகிறது. 9 லட்சம் ரூபாய் செலவழிக்கிறோம். இந்த ஆஸ்பத்திரியிலே படுக்கைகள் அதிகம். வேண்டிய ஸ்டாபும் கொடுத்திருக்கிறோம். எந்த அளவுக்குக் கொடுக்கவேண்டுமோ அந்த அளவுக்குக் கொடுக்க முடியவில்லை. அதிகமான நோயாளிகள் வருகிறார்கள். வேண்டாம் என்று அவர்களை அனுப்பிவிட முடியாது. ஆனால் மிஷன் ஆஸ்பத்திரியில் வேண்டாம் என்று அனுப்பிவிடலாம். கனம் அங்கத்தினர் ஆஸ்பத்திரியில் இருந்தார். நானும் போய்ப் பார்த்தேன். எல்லாம் சௌகரியமாகத்தான் நடந்தது. (சிரிப்பு).

**Sri V. K. Kothandaraman :** கனம் அங்கத்தினரை மாத்திரம் கவனிப்பதற்காகக் கேட்கப்படவில்லை. ஏழை மக்கள் கவனிக்கப்படவேண்டும் என்பதுதான் நோக்கம். ஆகவே, அங்கே கண் ஆஸ்பத்திரி இருக்கிறதே. அதில் பணம் கொடுத்தால்தான் சேர்ப்பார்கள் என்பதும். . . . . .

**Mr. Speaker :** தயவுசெய்து மிஷன் ஆஸ்பத்திரியைப் பற்றிக் கேள்வி கேளுங்கள் ?

**Sri V. K. Kothandaraman :** அந்த ஆஸ்பத்திரியில் ஐ டாக்டரோ அல்லது வெனிரியல் டிஸீஸ் டாக்டரோ கிடையாது. ஒரு ஆனரரி டாக்டர்தான் இருக்கிறார் என்ற காரணத்தால், மிஷன் ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. அங்கே பர்மனெண்டாக ஒரு ஐ டாக்டரையும் வெனிரியல் டிஸீஸ் டாக்டரையும் உடனடியாக நியமிக்க முயற்சி எடுக்கப்படுமா ?

**The Hon. Sri M. A. Manickavelu :** வெனிரியல் டிஸீஸ் டாக்டர் அங்கே இருக்கிறார். ஏழைகளுக்கு என்று கேட்க ஆரம்பித்து, தனக்கு இல்லை என்கிறார் அங்கத்தினர். அவர்கள் பணக்காரர்களோ என்னவோ ; அப்படியானால் அவர்கள் எப்பொழுது பணக்காரர் ஆனார், எப்படி ஆனார் என்று தெரியவில்லை. (சிரிப்பு).

*Removal of Sand heaps (Kanyakumari district)*

**Mr. Speaker :** As the hon. Member Sri T. S. Ramaswamy, who gave notice of question No. 887 is not in his seat, the question and answer will be printed in the proceedings.

*887 Q.—**Sri T. S. Ramaswami :** Will the Hon. the Minister for Home be pleased to state the steps taken by the Government to remove the sand-dune heaped in the villages of Puthenthurai and Kovalam in the Kanyakumari district?

**The Hon. Sri M. Bhaktavatsalam :** At Puthenthurai, a major portion of the sand heap has already been cleared by the Public Works Department by utilizing a bulldozer. The Public Works Department has also been allotted sufficient funds to clear the sand heaps at Kovalam by using a bulldozer. In addition to removal of the sand heaps, steps have been taken to raise wind-belts, i.e., belts of trees and shrubs which will bind the sand and reduce the speed of the wind and thus prevent the formation of sand heaps.

*President's awards to teachers*

*888 Q.—**Sri A. Vedarathnam :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நம் மாநிலத்தில் எத்தனை ஆரம்ப உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு என்னென்ன திறமைகளுக்காக ராஷ்டிரபதி விருதுகள் இவ்வாண்டு வழங்கப்பட்டன ?



(இ) இந்தப் பரிசுக்கு உரியவர்களை எந்த அடிப்படையில் யார் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் ?

(உ) ஆதாரக் கல்விப் பள்ளி ஆசிரியர்கள் இத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றனரா ?

(எ) இல்லையானால், அவர்களுக்கும் இதில் இடம் அளிக்கப்படுமா ?

**The Hon. Sri C. Subramaniam :** In recognition of their service to the cause of Education, a Secondary school teacher and three Elementary school teachers of this State have been awarded National Awards for teachers for the year 1960–61.

The teachers applying for the award are first screened by a District Committee of which the District Educational Officer is the Chairman. The District Committees forward their recommendations to the State Committee of which the Director of Public Instruction is the Chairman. This Committee draws up a list of three teachers in the order of preference for each of the awards in Secondary School Education and Elementary School Education and forwards it to the State Government. The State Government forward these names together with their recommendations to the Government of India who finally select the candidates for the award. The selection is thus made on the recommendation of the State Committee which is based on the record of service and standing of the individual teacher.

**Sri A. Vedarathnam :** இந்தப் பரிசு பெற்றவர்கள் பெயர்களை அறிவிக்க முடியுமா ? தனி நபர்களுக்கு பரிசு கொடுப்பதைக் காட்டிலும், மாகாணத்திலேயே நன்றாக நடக்கும் பள்ளிகளுக்கு என்று கொடுத்தால், ஆசிரியர்கள் எல்லோரும் சேர்ந்து சிறந்த முறையில் வேலை செய்ய, டீம் ஸ்பிரிட்டை உண்டாக்க உதவுமே. அந்த முறையை மத்திய சர்க்காருக்குச் சிபாரிசு செய்ய அரசாங்கம் முன்வருமா ?

**The Hon. Sri C. Subramaniam :** 1961-ல் இந்த விருது பெற்றவர்கள் :

(1) ஸ்ரீ எம். அருணாசலம், ஹெட்மாஸ்டர், திருமங்கலம் ;

(2) ஸ்ரீ ஏ. ஷெண்பகநாதன், ஹெட்மாஸ்டர், முனிசிபல் ப்ரைமரி ஸ்கூல், ஆனந்தகிரி, கொடைக்கானல் ;

(3) ஸ்ரீ ஆர். கந்தசாமி, ஹெட் டீச்சர், வரகநேரி, நார்த் முனிசிபல் ஸ்கூல், திருச்சி ;

(4) ஸ்ரீ ஆர். எம். கணபதி, டீச்சர், குலசேகரபட்டணம்.

இதிலே தனிப்பட்டவர்களுக்கும் மரியாதை செய்வது அவசியம். அது மத்திய சர்க்காரால் செய்யப்படுகிறது. அங்கத்தினர் சொல்லும் திட்டத்தை வேறுவிதமாகப் பரிசீலனை செய்ய வேண்டும். இது மத்திய சர்க்கார் ஏற்படுத்தியிருக்கும் திட்டம்.

[16th March 1961

**Sri M. P. SARATHI** : இந்த விருதுகள் ராஷ்டிரபதியால் அளிக்கப்படுவது மற்ற விருதுகள்போல் நம் சர்க்காரின் சிபாரிசின் பேரிலா அல்லது அவர்களே ஒரு சிறந்த முறையை ஏற்படுத்தியிருக்கிறார்களா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : தனிக் கேள்வி போட வேண்டும்.

**Sri A. VEDARATHNAM** : இந்தப் பரிசை மத்திய சர்க்கார் அளித்தாலும், மாகாண அரசாங்கத்திற்கு அது சரி என்று தோன்றினால் அதை சிபாரிசு செய்ய முன்வருவார்களா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : இப்பொழுது தமிழ்நாடு அரசாங்கத்திலும்கூட ரொம்பவும் நன்றாக வேலைசெய்துள்ள மூன்று பேருக்கு பரிசுகள் கொடுக்கப்படுகின்றன; எலிமெண்டரி ஸ்கூல்களில் கம்மி; ஒவ்வொரு கல்வி ஜில்லாவிலும் இரண்டு ஆசிரியர்கள் வீதம் பொருக்கி எடுத்து பரிசுகள் ஏற்படுத்தி, இந்த மாதம் 24-ம் தேதி அப்படி 46 ஆசிரியர்களுக்கு கொடுக்கப்படும். பள்ளிகூடத்தைப்பற்றி தனியாகத்தான் பரிசீலனை செய்ய வேண்டும்.

**Sri K. VINAYAKAM** : May I know whether it is necessary for individual teachers to make applications for the award of prize or would it be better for Government to institute a committee for selecting these teachers? Is the modus operandi that is adopted by the Committee a fool-proof system which is above suspicion and which enables the selection of the best available teacher in our State?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : The procedure is laid down by the Union Government. That procedure is being followed. We have got the best committees possible. We hope the best person would be selected. The State Committee consists of the D.P.I., Dr. A. Lakshmanaswami Mudaliar and the Principal of a Training College.

**Mr. SPEAKER** : I may also make a suggestion that during question-time, questions alone should be asked and suggestions for improvement cannot be made. I followed the question put by Sri K. Vinayakam. The earlier part of the question was a suggestion to Government. It is out of order. I would like hon. Members to put questions only during question-hour and not make suggestions.

**Sri K. VINAYAKAM** : Referring to the earlier part of my question . . .

**Mr. SPEAKER** : Which is out of order.

**Sri K. VINAYAKAM** : Is it necessary for individual teachers to make applications?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : That is the procedure laid down by the Government of India.



16th March 1961]

*Sri Andal idol (Srivilliputhur temple)*

* 889 *Q.*—**Sri T. S. RAMASWAMI** : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether Sri Andal idol of Srivilliputhur temple fell down and was damaged on 1st January 1961;

(*b*) the cause of the accident; and

(*c*) the extent of damage caused?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : (*a*) Yes, Sir.

(*b*) When the deities were stopped before Srinivasar Sannadhi for " Vedavinnappam ", one Ayakkal at the back ' Thandu ' on the right side of the idol slipped and fell on the floor. As a result of this shock of the impact of the ' Thandu ', the upper portion of the idol got separated above the ankles of both the legs due to the heavy weight of the top portion of the idol;

(*c*) A small depression in the ' Muthu Kondai ' of Sri Andal and in the Kreetam of Sri Rengamannar.

**Sri S. RANGANATHA MUDALIAR** : Is there any idea to perform ' Samprokshanam ' in this connection?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : This accident happened during festival and in order to continue the festival, one ' samprokshanam ' was performed under the advice of experts and pandits. It is proposed to do some more repairs and then do a comprehensive ' samprokshanam '.

**Sri V. SUBBIAH** : இந்த ராஜமன்னார் விக்ரகத்திற்கும் ஆண்டாள் விக்ரகத்திற்கும் சேர்ந்து இது ஏற்பட்டு இருக்கிறதா அல்லது ஆண்டாள் விக்ரகத்திற்கு மட்டுமா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : விபத்து ஆண்டாள் விக்ரகத்திற்கு ஏற்பட்டது, ராஜமன்னார் விக்ரகமும் கொஞ்சம் சேதம் அடைந்தது என்று சொன்னேன்.

**Sri S. RANGANATHA MUDALIAR** : Is it likely that the State will give aid towards this ' samprokshanam ' and repair?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : There is no need for the State coming forward to give aid. There are funds for the temple and there are worshippers who will be too anxious to offer liberal funds towards ' samprokshanam ' and other renovation and repair works.

[16th March 1961

*Asthma patients (air-conditioned wards)*

* 890 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஆஸ்த்மா நோயாளிகளுக்கு ஏர்கண்டிஷன் வார்டுகள் கட்டுவதின் மூலம் ஆஸ்த்மா வியாதியை போக்கமுடியும் என்பதைப் பற்றி ஆராய்ச்சி ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா ? அப்படியாயின் விவரமென்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், ஆஸ்த்மா வியாதியஸ்தர்கள் குளிர் காலத்தில் ரொம்பக் கஷ்டப்படுகிறார்கள், பனி பட்டால் ஆகிறதில்லை. ஆகவே, ஏர் கண்டிஷன் அறையை ஏற்படுத்தி, அவர்களுக்கு எவ்வளவு உஷ்ணம் வேண்டுமோ அப்படிச் செய்ய ஆராய்ச்சி செய்து ஏற்பாடு செய்ய சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : முதலிலே கனம் அங்கத்தினர் ஏர் கண்டிஷன் என்றதும் குளிர்ச்சி அறையைத்தான் கேட்கப் போகிறார் என்று பயந்தேன். இப்பொழுது உஷ்ணமான அறை வேண்டும் என்கிறார். அதைப் பற்றி இப்பொழுது ஒன்றும் ஆராய்ச்சி செய்யவில்லை.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

## II. PRIVILEGE MATTER *re* CERTAIN CRITICISM IN " THE MAIL " EDITORIAL DATED 10TH MARCH 1961.

MR. SPEAKER : Hon. Members may remember that a few days ago hon. Member Sri M. Kalyanasundaram raised a matter of privilege and gave me notice of the same as I was coming to the House. I said to him that I would consider it and give my decision. I would like to read the relevant rules from the Madras Legislative Assembly Rules so that it may not create confusion.

Rule 184 of the Assembly Rules says as follows :—

" A member wishing to raise a matter of privilege shall, before the commencement of the sitting of the day on which he proposes to raise the point, leave with the Speaker a written notice of the matter proposed to be raised.'"

Rule 185 of the Assembly Rules says as follows :—

" If the Speaker is of opinion that the matter which the member proposes to raise does involve a question of privilege of the House, he may consent to the matter being raised."

As per the existing rule, the decision of the Speaker so far as this matter is concerned, is final. If the Speaker says that there is no *prima facie* case, it is final. As matters stand at present, that is the position. Of course, the hon. Member is entitled to try to change the rules. As a matter of fact I remember that he tried



16th March 1961] [Mr. Speaker]

to change the rule in this respect, at the Rules Committee meeting held at Ootacamund, but he was convinced that the present procedure was correct.

Thirdly, at this stage, I wish to point out that no appeal lies on the Speaker's ruling to the Business Advisory Committee. I say this because the hon. Member was saying that he would take up this matter with the Business Advisory Committee. I may tell the hon. Member that the Business Advisory Committee is not an appellate authority to sit in judgment over the Speaker's ruling.

Now, according to rule 186, ' a matter of privilege must be raised after the questions and before the list of the business for the day is entered upon.' Rule 187 lays down that ' The right to raise a question of ' privilege ' shall be subject to the following restrictions, viz :—

" (i) The alleged breach of privilege must refer to a matter of recent occurrence;

(ii) A *prima facie* case of a breach of privilege must be made out."

The hon. Member has satisfied rule 184 which I have already read. Rule 186 is being followed now. Under rule 187, I am satisfied that both the conditions laid down there have been fulfilled. Now, we have to follow rule 188 which states—

" When a member has with the consent of the Speaker raised a matter of privilege, the Speaker shall read the matter to the House and decide whether a *prima facie* case of breach of privilege has been made out or not therein."

I wish to announce that the hon. Member has my consent to raise the matter in this House. I shall give my decision later.

* SRI M. KALYANASUNDARAM : Mr. Speaker, Sir, with your permission, in the first instance, I want to explain what the matter of privilege is.. I have with me ' The Mail ', dated 10th March 1961.

MR. SPEAKER : The hon. Member must be brief at this stage.

SRI M. KALYANASUNDARAM : Sir, I wish to draw your kind attention to rule 187 which states . . .' (i) The alleged breach of privilege must refer to a matter of recent occurrence; (ii) A *prima facie* case of a breach of privilege must be made out.' Only when I make out a *prima facie* case of a breach of privilege, you will be able to decide whether a *prima facie* case has been made out or not.

THE HON. SRI C. SUBRAMANIAM : Still, the hon. Member should be brief.

[16th March 1961

SRI M. KALYANASUNDARAM : To the best of my ability, I shall try to be brief.

Sir, The Mail, dated 10th March 1961 has written an editorial under the caption, 'Madras Police.' Before trying to explain how it is a breach of privilege, let me state the facts now. This editorial is a comment on the debate that took place in this House on the 8th and 9th March 1961 on Demand XIV—Police. In more than three or four places in this editorial, reflections are cast on the proceedings of this House as well as on the speeches of some of the hon. Members of this House. Let me now bring some of these instances to the notice of this Honourable House.

In one place, the editorial says :—

"The police are part of the permanent services, carrying out their duties loyally. It is quite probable that there may be among them, as in other walks of life, a few black sheep; but to allege as Mr. Anbazhagan did in the Assembly, that the police have failed to do their duty by the people in general, and the Opposition parties in particular, is trying to malign a force that has done its best . . ."

Now, Sir, hon. Member Sri Anbazhagan's reference to the police and its conduct on the floor of the House is sought to be made in this editorial as 'trying to malign' that force. The author of the editorial views it as maligning the police force. This is a reflection and imputation on the proceedings of this House for which hon. Member Sri Anbazhagan who spoke on the floor of this House, is responsible. That is number one.

Number two is this. The author of the editorial has also stated thus :

"Demoralisation in the police force is caused not by the reasons adduced by Mr. Kalyanasundaram, but by such speeches as those made by him and other Opposition leaders, protected and privileged as they are within the House. Irresponsible generalisations that the Government is, in connivance with unsocial elements, exploiting the police to suppress other political parties, or that the Government is using the police as a tool of the Congress Party, should be avoided."

Sir, it is not only a reflection on the speech made by me on the floor of this House, but it also amounts to a warning that such a speech should be avoided. It amounts to a warning as to what a Member should do and should not do in this House. I could quote instances from May's Parliamentary Practice to show that a comment should not warn a Member as to his conduct on the floor of the House. Here it is both a reflection on my speech and a threat to me that I should not make such a reference. I am not afraid of bullets and rifles, but I am certainly cautious when it relates to pen.

THE HON. SRI C. SUBRAMANIAM : I am afraid all these are beyond the scope of the discussion at this stage.



16th March 1961]

SRI M. KALYANASUNDARAM : Number three is this. It has also been stated in the editorial like this :—

"That political motives have been imported into this mudslinging campaign against the police is obvious and is a development to be deeply regretted."

Sir, this is a most important point. Motive is imported to the speeches made by the hon. Members on the floor of this House. The editorial says that political motives have been imported and it further characterises the reference to the conduct of the police as 'mudslinging campaign against the police.' On top of it, the author of the editorial regrets it. In a similar case, the Corporation of Madras, for having regretted certain speeches made on the floor of this House, was proceeded against by this House. This is the most unfortunate portion of the editorial which has dealt in a general way with the proceedings of this House. . Of course, there are some more points also. I wish to state on this occasion that the whole tempo of the editorial is bad enough. I do not mind the story later if it is a fair comment. But, it has imported motives and tried to reflect on the speeches made and to discredit those speeches. . That is my point.

There are several instances where alleged imputations made to attribute motives have been held as a breach of privilege. Written imputations, affecting a Member of Parliament may amount to breach of privilege without perhaps being libels. Even if it is not a libel under the common law, if it is a written imputation, it amounts to a breach of privilege. Here, in this particular case, we have this written imputation to the effect that we made our speeches with some political malice or motive, with a view to maligning the police force and our speeches are only a mudslinging campaign against police. It is a clear reflection; motive is attributed. I wish to repeat it is a written imputation. What Erskine May says in such cases is that 'written imputation is analagous to molestation of members. Molestation need not be made physically. A written imputation is analagous to molestation of a Member for his conduct on the floor of the House.' Here, it amounts to molestation of members for their conduct on the floor of the House. This is also a serious breach of privilege.

Sir, I wish to draw your attention to page 126 of May's Parliamentary Practice. There, we have a resolution of the House of Commons. It states thus : 'Publishing the names of Members of this House and reflecting upon them and misrepresenting their proceedings in Parliament is a breach of privilege of this House and destructive of the freedom of Parliament.' Here it is a clear distortion of our speeches. Motive is attributed and our speeches are sought to be discredited in the eyes of the public. Certainly, this will affect the freedom of speech on the floor of the House. Members of this House are expected to speak on the floor of this House without fear or favour. If papers start writing editorials

[Sri M. Kalyanasundaram] [16th March 1961

condemning the Members and discrediting them, then where do we have any remedy? There are some instances even in our country where similar instances have been held as breach of privilege.

There was a case taken up in the Delhi Vidhan Sabha where also a newspaper condemned the speech of an hon. Member. You kindly refer to page 9 of 'The Privileges Digest in India' published by the Lok Sabha. There, imputing motives to an hon. Member by a newspaper is held as a breach of privilege.

Then in 1957 in the Madhya Pradesh Vidhan Sabha, publi-
9.30 a.m. cation of a letter in a newspaper making adverse comments on the speech of an hon. Member had been held as a breach of privilege and the matter had been referred to the Committee of Privileges. So, in our country there are ample instances to show that when motives are imputed, it amounts to a breach of privilege and the matter should be referred to the Committee of Privileges.

One more point. I would not mind if it is a slight distortion of our speech during the course of reporting it. Here editorial has got a specific purpose. The author of this editorial is expected to know Parliamentary practices. He has written good English. As an educated and cultured person he is expected to know Parliamentary practices. But he has written it deliberately to discredit the proceedings of . . .

MR. SPEAKER : This point may not be relevant.

SRI M. KALYANASUNDARAM : I shall place it before the Committee.

MR. SPEAKER : What is the breach of privilege involved in regard to this point?

SRI M. KALYANASUNDARAM : I should not be misunderstood that I am trying to curb the freedom of the press in so far as it relates to the proceedings of the House. Certainly the press is entitled to certain freedom.

MR. SPEAKER : The hon. Member need not refer to this point here.

SRI M. KALYANASUNDARAM : As a legislator, I should make my position clear. . . . (Interruption from the Hon. Sri C. Subramaniam) If my party commits such a mistake, it should also be hauled up before this House.

MR. SPEAKER : This portion of the speech of the hon. Member has really no relevancy.

SRI M. KALYANASUNDARAM : Sir, I am trying to point out that it is not a fair comment on the proceedings of the House. It is a deliberate attempt to cast reflection on the proceedings



16th March 1961] [Sri M. Kalyanasundaram]

of the House. That paper has not cared to publish 'irresponsible speeches' according to it, the speeches which contained 'irresponsible generalisations'.

MR. SPEAKER : That is a point in favour of the hon. Member.

SRI M. KALYANASUNDARAM : If they were so much concerned with public interest, they should have reported the speeches in full as spoken by us and then showed how they were irresponsible and mud-slinging and also irresponsible generalisations. Then we could have understood the fairness of the paper.

MR. SPEAKER : Is the hon. Member going to raise the point of privilege or the non-publication of a speech in full?

SRI M. KALYANASUNDARAM : Sir, I do not want the indulgence of any paper.

It is not only a question of reflection on the conduct of the hon. Members on this side of the House but there is also the question of that paper trying to usurp the powers of the Hon. Speaker. Sir, it is also stated that it is the function of the Chair and the Chair alone, to see that these rules are properly observed and it is not the concern of any other authority howsoever powerful it may be, to tell hon. Members what they should do and what they should not do. So what they should do or should not do is the concern of the Hon. Speaker and not that of the paper outside which wants that the hon. Members of this House should not make such allegations. So, in a way they are trying to usurp the functions of the Hon. Speaker. For these reasons I hold that this is a definite case of breach of privilege and that is my view. Further, this is not an accidental thing.

Sir, I have another representation to make to the Hon. Minister-in-charge of . . .

MR. SPEAKER : The hon. Member cannot refer to it at this time when the privilege matter is under discussion.

SRI M. KALYANASUNDARAM : I have some information and as soon as I gather that information, I shall submit it to the Hon. Minister for Home. I want him to enquire whether some responsible officials of the Police Department . . .

MR. SPEAKER : The hon. Member need not refer to it.

SRI M. KALYANASUNDARAM : What is the remedy if the Department goes on canvassing . . .

THE HON. SRI C. SUBRAMANIAM : I am sorry the hon. Member is going beyond his limits. He himself says that he has to gather information. If that is so, can he make insinuations on the floor of this House by taking advantage of his privilege . . .

MR. SPEAKER : I uphold the point raised by the Hon. the Leader of the House. The point raised by the hon. Member is irrelevant, and I cannot allow any discussion on that point. The hon. Member can write to the Hon. Minister privately about it.

[16th March 1961

SRI M. KALYANASUNDARAM: About the department, I have a right to say . . .

MR. SPEAKER: The hon. Member cannot say that. I am sorry if the hon. Member persists, I will have to take other action. Let not the hon. Member refer to what has happened outside this House. The hon. Member has raised the point of privilege and I will give my ruling.

SRI M. KALYANASUNDARAM: At the moment I am only trying to raise a point of privilege with regard to the leader which appeared in that paper.

MR. SPEAKER: Yes, but the hon. Member is trying to raise some other issue.

SRI M. KALYANASUNDARAM: Certainly I have no desire to misuse my privileged position. When I feel justified to refer to a certain matter, I would do it irrespective of the consequences and I do not propose to take shelter under this privileged position.

THE HON. SRI C. SUBRAMANIAM: Is it a threat against the Hon. Speaker? When the Hon. Speaker says that the hon. Member should not refer to it, he still indulges in it.

SRI M. KALYANASUNDARAM: I know that the Hon. the Leader of the House is a clever criminal lawyer.

MR. SPEAKER: The hon. Member should leave it to the Chair to decide it.

SRI M. KALYANASUNDARAM: Further, it is stated that 'let politicians at least refrain from maligning him and his officers engaged in an arduous job.'

MR. SPEAKER: It does not refer to the hon. Member.

SRI M. KALYANASUNDARAM: It refers to politicians. The whole editorial deals with the speeches made on the floor of this House by the politicians who are in this House and not about politicians who are outside this House. Even if they had written something about me for what I had stated outside this House, that would not come under breach of privilege. But this is with reference to the speeches made by me and the hon. Member, Sri Anbazhagan in particular and some of the speeches made by other opposition Members in general. So, it casts reflection, it imputes motives, it distorts our proceedings and it seeks to discredit our speeches. For these four reasons, I hold that there is a definite breach of privilege. Now I request the Chair to give a ruling.

MR. SPEAKER: I will now read further Rules 188 and 189 of the Assembly Rules. Rule 188 says—

'When a member has with the consent of the Speaker raised a matter of privilege, the Speaker shall read the matter to the House and decide whether a *prima facie* case of breach of privilege has been made out or not therein.'



16th March 1961] [Mr. Speaker]

Rule 189 says—

'If the Speaker holds that a *prima facie* case exists, he may allow a motion to be made by any member that the alleged breach of privilege be referred to the Committee of Privileges, or in the alternative, that it be dealt with by the House itself.'

The Hon. the Leader of the House can speak at that stage.

Now the matter raised by the hon. Member, Sri Kalyanasundaram, refers to a matter of recent occurrence. It also involves the question of breach of privilege. I therefore rule that a *prima facie* case of breach of privilege has been made out. Now it is open to any hon. Member of this House to move a motion.

SRI M. KALYANASUNDARAM: Sir, I move—

'That the matter be referred to the Committee of Privileges.'

The motion was duly seconded.

THE HON. SRI C. SUBRAMANIAM: I support the motion. In doing so I would like to say a few words because this is a very important matter concerned with the freedom of the Press and how far the freedom of the Press can be exercised particularly in criticising the speeches of hon. Members including Ministers made on the floor of the Assembly. Certainly in a democratic set up we should have the greatest amount of freedom particularly to the Press so that there may be fair comment on the proceedings of any legislature. But I am in complete agreement with the statement made by the hon. Member who moved this motion, viz., that there should be no unfair criticism. But what is fair or unfair is a very difficult thing to judge. Each case will have to be decided on the facts of that case. I am sure the same attitude will be taken by the hon. Member when Ministers are also criticised for what they speak here. I am glad that the hon. Member has been quite quick when he or some other Opposition member has been criticised. I think he would adopt the same attitude when Ministers are also criticised for the speeches they make here on the floor of the House.

SRI M. KALYANASUNDARAM: I did take up the question on a previous occasion.

THE HON. SRI C. SUBRAMANIAM: I am thankful to the hon. Member for that. That is one thing.

It is for the Committee of Privileges to find out whether it is fair comment or unfair comment, how far the freedom of the press could be allowed to comment on the proceedings of the House and on the speeches made by hon. Members of this House. I am sure the Committee would go into precedents and arrive at a correct decision.

Another thing to which the hon. Member referred to is about attribution of motives. It is not as if attribution of motives is always objectionable. Suppose a paper says that a speech has been made with the best of motives. Even then it is attributing motive. But that cannot be objectionable. We are all political figures, politicians as the hon. Member put it. When reference is made about politicians and when it is said political motive is attributed, it is important to consider whether the motive attributed is a 'bad motive'. Whether attributing political motive is a matter of privilege is a thing which will have to be decided by the Committee. It is a ticklish question. It is said it was done because of political bias or political motive. I do not know how far it will be . . .

SRI M. KALYANASUNDARAM: On a point of Order, Sir. I seek your clarification. The Hon. Leader of the House is canvassing on certain points, when a matter is referred to the Committee of Privileges, I do not know how far it will be fair to canvass these points either for or against on the floor of the House. Is it in order to make such a long speech on the subject?

THE HON. SRI C. SUBRAMANIAM: I am not making a long speech. I am only making the points clear so that the Committee may be able to come to correct conclusions. As Leader of the House I have got a duty not only to place certain matters before the Committee of Privileges but I presume I have got a duty to guide the Committee to take correct decisions. I am not going into ultimate decisions on this point. These are points which will have to be put up for consideration. That is what I am saying. Therefore I am placing certain relevant points which will have to be considered. It is said that political motive has been attributed to a speech by an hon. Member. How far the political motive is a matter of privilege and whether it is objectionable is a matter for the Committee of Privileges to consider. I am stating things in a fair way, as a matter of fact. Therefore I do not know how the hon. Member could object to it. These are the two things which will have to be considered by the Committee of Privileges. I am glad, Sir, that you have held that a *prima facie* case of breach of privilege has been made out. These are complicated matters which could be thrashed out in the Committee. I am sure the Committee of Privileges would come to correct conclusions.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: I have to endorse the opinion of the hon. Member Sri M. Kalyanasundaram. I am also of the opinion that this matter should be referred to the Committee of Privileges.

**SRI K. ANBAZHAGAN:** கனம் தலைவர் அவர்களே, நண்பர் திரு. கல்யாணசுந்திரம் அவர்கள் தீர்மானம் கொண்டுவந்திருந்த போதிலுங்கூட நானும் மற்றொரு தீர்மானத்தை தரவிரும்புகிறேன். இப்பொழுது இருக்கும் தீர்மானம் உரிமைக் குழுவிற்குப்போய் அங்கு நல்ல முறையிலே ஆராய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது.



முக்கியமாக இந்தச் சபையின் அங்கத்தினர்களின் அடிப்படையான உரிமைகளைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகளைக் காண வேண்டுமென்று சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

MR. SPEAKER: Motion moved—

"That the matter be referred to the Committee of Privileges".

There is another point. It can only be referred to the next Committee of Privileges, which will be formed after the 18th instant. Therefore I would like the hon. Member Sri Kalyanasundaram to add the words "to the next Committee of Privileges for the year 1961–62".

SRI M. KALYANASUNDARAM: Sir, I move—

"That the matter be referred to the next Committee of Privileges for the year 1961–62."

The motion was duly seconded.

MR. SPEAKER: The question is—

"That the matter be referred to the next Committee of Privileges for the year 1961–62."

The motion was put and carried.

### III.—GOVERNMENT MOTIONS.

#### (1) CHANGE IN THE ORDER OF TAKING VOTING ON DEMANDS FOR GRANTS.

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, under Rule 21 (3) of the Madras Assembly Rules I move—

"That Demand XXIX—Civil Works—Grants-in-Aid scheduled to be taken up on 23rd March 1961 be taken up on 25th March 1961 and that Demand XXXII—Stationery and Printing scheduled for 25th March 1961 be taken up on 23rd March 1961."

MR. SPEAKER: The question is—

"That Demand XXIX—Civil Works—Grants-in-Aid scheduled to be taken up on 23rd March 1961 be taken up on 25th March 1961 and that Demand XXXII—Stationery and Printing scheduled for 25th March 1961 be taken up on 23rd March 1961."

The motion was put and carried.

#### (2) REPORT OF THE COMMITTEE OF PRIVILEGES ON THE "MADRAS CORPORATION CASE."

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, I move—

"That the Report of the Committee of Privileges (Madras Corporation case) be accepted."

[Sri C. Subramaniam] [16th March 1961

The report of the Privileges Committee on the Madras Corporation Case was presented to the House on 10th March 1961. I do not think any speech is necessary on this. The Committee has submitted its report and it has recommended that the matter be dropped after giving the reasons for arriving at such a conclusion. I hope the House would do well to accept the recommendation of the Committee of Privileges.

**SRI M. KALYANASUNDARAM:** கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் பிரேரேபித்த தீர்மானத்தை நானும் ஆதரிக்கிறேன். ஆரம்பத்தில் இது உரிமைக்குழுவிற்கு விடும்போது இதை ஆட்சேபித்ததில் நானும் ஒருவன். உரிமைக் குழு இதைப் பரிசீலனை செய்த பின்னால் நல்ல முடிவு வந்திருப்பதை நான் வரவேற்கிறேன். இந்த அறிக்கையில் கண்டிருக்கிற சில பிரச்னைகள் சரியல்ல என்று சுட்டிக்காட்டியதை நான் வரவேற்கிறேன். நான் ஆரம்பத்திலே இந்தத் தீர்மானத்தின் மீது பேசும்போது கார்பரேஷனில் உள்ளவர்கள் இந்தச் சபையை உண்மையிலேயே அவமதிக்கவேண்டுமென்ற உள்நோக்கே இல்லை என்பதை அவர்களே குறிப்பிட்டு ரத்து செய்திருப்பதானது பாராட்டத்தக்கது, வரவேற்கத்தக்கது. ஆனால் ஆளும் கட்சியினராலும் சரி, எதிர்க்கட்சியினராலும் சரி இதைக் குறுகிய நோக்கத்தோடு பார்க்கக்கூடாது.

THE HON. SRI C. SUBRAMANIAM : The hon. Member is again imputing motives to speeches made on the floor of the House. He just now pleaded that no motive should be attributed in the Press about speeches made by hon. Members on the floor of the House. I would request him to refrain from doing so. அவவளவு 'தூரம் போகவேண்டியதில்லை.

. . .

**SRI M. KALYANASUNDARAM:** என்னுடைய கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்கள் கார்பரேஷனிலேயும் இருக்கிறார்கள் அவர்களும் இதை ஆதரிக்கிறார்கள் என்றுதான் சொல்கிறேன். கார்பொரேஷன் எடுத்துக்கொண்ட நடவடிக்கையைப் பாராட்டு கிறேன். இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : The question is—

"That the report of the Committee of Privileges (Madras Corporation case) be accepted."

The motion was put and carried.

IV.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1961-62—*cont.*

(1) DEMAND VIII—HEAD OF STATE, MINISTERS AND HEADQUARTERS STAFF.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,28,19,200 under Demand VIII—Head of State, Ministers and Headquarters Staff."



16th March 1961]

MR. SPEAKER : Motion moved—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,28,19,200 under Demand VIII—Head of State, Ministers and Headquarters Staff."

I understand that the hon. Member Sri Anbazhagan is moving his cut motion (No. 230) under this demand. He may move it.

SRI K. ANBAZHAGAN : Sir, I move—

"That the allotment of Rs. 1,28,19,200 under Demand VIII—Head of State, Ministers and Headquarters Staff be reduced by Rs. 100."

MR. SPEAKER : Cut motion moved—

"That the allotment of Rs. 1,28,19,200 under Demand VIII—Head of State, Ministers and Headquarters Staff be reduced by Rs. 100."

(2) DEMAND IX—STATE LEGISLATURE.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 11,85,000 under Demand IX—State Legislature."

MR. SPEAKER : Motion moved—

"That the Government be granted a sum not exceeding Rs. 11,85,000 under Demand IX—State Legislature."

I understand that the hon. Member Sri V K. Kothandaraman is moving his cut motion under this demand. He may move it.

**SRI V. K. KOTHANDARAMAN:** என் பெயரில் வந்திருக்கக் கூடிய 243-வது வெட்டுப் பிரேரணையை பிரேரேபிக்கிறேன்:

"That the allotment of Rs. 11,85,000 under Demand IX—State Legislature be reduced by Rs. 100."

MR. SPEAKER : Motion moved—

"That the allotment of Rs. 11,85. 000 under Demand IX—State Legislature be reduced by Rs. 100."

(3) DEMAND X—ELECTIONS.

THE HON. SRI C. SUBRAMANIAM : On the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 41,67,400 under Demand X—Elections."

MR. SPEAKER : Motion moved—

"That the Government be granted a sum not exceeding Rs. 41,67,400 under Demand X—Elections."

I understand that the hon. Member Sri V. K. Kothandaraman is moving his cut motion under this Demand. He may move it now.

**Sri V. K. KOTHANDARAMAN:** என் பெயரில் வந்திருக்கக் கூடிய 245-வது வெட்டுப் பிரேரணையை பிரேரேபிக்கிறேன்.

" That the allotment of Rs. 41,67,400 under Demand X—Elections be reduced by Rs. 100."

Mr. SPEAKER : Cut motion moved—

" That the allotment of Rs. 41,67,400 under Demand X—Elections be reduced by Rs. 100."

**Sri V. K. KOTHANDARAMAN:** கனம் சபாநாயகர் அவர்களே, இன்று நம் முன்னால் வந்திருக்கக்கூடிய மான்யத்தின் பேரில் நான் ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நமது அரசாங்கத்தின் நிர்வாகம், அமைச்சர்கள் இந்த சட்டசபையிலானாலும் சரி அல்லது வெளியிலே மக்களின் பிரச்னைகளை கவனிப்பதற்காக வேண்டி போகக்கூடிய நேரத்திலும் சரி அவர்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள், எந்த அளவில் பிரச்னைகளை தீர்த்து வைக்கக்கூடிய முறையில் கவனம் செலுத்தி வருகிறார்கள் என்பதைப்பற்றியும் நாம் கவனிப்போமானால் ஏதோ கட்சிப் பிரசாரம் நடத்துவதற்காக வேண்டி இருக்கக்கூடிய நிலையில்தான் இருக்கிறதே தவிர மக்கள் பிரச்னைகளை தீர்த்து வைக்கக்கூடிய தன்மையில், ஒவ்வொரு பிரதேசங்களுக்கும் போகக்கூடிய நேரத்தில், அமைச்சர்களிடம் கொடுக்கப்படுகிற மனுக்களை கவனித்து அவைகளை தீர்த்துவைக்கக்கூடிய தன்மையில் இருக்கிறதா என்றால் உண்மையில் கிடையவே கிடையாது. போகக்கூடிய இடங்களில் அமைச்சர்கள் வருகிறார்கள் என்றால் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள், அமைச்சர்களை மற்றவர்கள் பார்ப்பதற்குக்கூட அனுமதிக்க முடியாத நிலையில்தான் இன்று நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. வேலூரில் அமைச்சர்கள் அடிக்கடி வரும் நேரத்தில் நாங்கள் போகிறோம் என்று சொன்னால் கூட வட ஆற்காடு ஜில்லா காங்கிரஸ் தலைவர் அவர்கள், அமைச்சர் அவர்களை பார்க்க அனுமதிப்பதில் கஷ்டப்படக்கூடிய அளவிற்குத் தான் நிலைமையிருக்கிறது. இப்படிப்பட்ட நிலை என்போன்றோருக்கே ஏற்பட்டிருக்கிறதென்றால் சாதாரண மக்கள், எதிர்க்கட்சிகளைச் சார்ந்தவர்கள் உண்மையில் எப்படி அமைச்சர்களைப் பார்க்க முடியும் என்று நினைத்துப் பார்க்கவேண்டும். உதாரணமாக சொல்வேன், வேலூருக்கு கனம் முதல் அமைச்சர் அவர்கள் வந்திருந்தபோது நான் ஒரு முறை பார்ப்பதற்கு போயிருந்த சமயத்தில் வட ஆற்காடு ஜில்லா காங்கிரஸ் செயலாளர் அவர்கள், இப்பொழுது அவரை பார்க்க முடியாது, அவர் மிகவும் களைப்பாகயிருக்கிறார்கள், இப்பொழுது அவர்கள் வெளியே போகப்போகிறார்கள் என்று சொல்லிக்கொண்டு மற்ற காங்கிரஸ்காரர்களை உள்ளே போக அனுமதித்தார்கள். அப்பொழுது, இந்த இடத்தில் அவர்கள் அமைச்சர் என்ற ஹோதாவில் வந்திருக்கிறார்கள், அவரைக் கேட்டு



அவர் பார்க்க முடியாது என்று வேண்டுமானால் சொல்லட்டும், நான் போகத் தயார், அதில்லாது நீங்களே பார்க்க அனுமதிக்க முடியாது; பார்க்க முடியாது என்று சொன்னால் அது சரியல்ல, அப்படியானால் நானே உள்ளே போய்ப் பார்ப்பேன் என்று சொல்லிய பிறகு அவர் போய் அவரைக் கேட்டு பிறகு அனுமதிக்கக் கூடிய அளவிற்கு ஒரு நிலைமை ஏற்பட்டது. ஆக, இன்றையதினம் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களை ஒருவிதமாகவும், மற்றக் கட்சிக் காரர்களை ஒருவிதமாகவும் பார்க்கக்கூடாது என்ற எண்ணம் அமைச்சர்களுக்கு இருந்தபோதிலும்கூட, இன்று ஆளும் கட்சியைச் சார்ந்த எல்லோரையும் நான் சொல்லத் தயாராயில்லை, அதில் வசதி படைத்த ஒரு சிலர் அவர்கள் சுயநலத்திற்காக வேண்டி இப்படி பயன்படுத்துகிறார்கள். இதை எடுத்துச் சொல்லக் கூடிய நேரத்தில் நிதியமைச்சர் அவர்கள் சொல்லலாம், நாங்கள் எவ்வளவு நல்லது செய்தாலும் உங்கள் பார்வை இப்படியேதான் இருக்கும், நீங்கள் இப்படியேதான் சொல்லிக்கொண்டிருப்பீர்கள், நானும் இப்படியே சொல்லிக்கொண்டிருப்பேன் என்ற தன்மையில் பதில் சொல்லக்கூடும்.

**Mr. SPEAKER:** ஒரு அங்கத்தினர் இன்னொரு அங்கத்தினரைப் பற்றி இழிவாகப் பேசக்கூடாது.

**Sri V. K. KOTHANDARAMAN:** இந்த சபையிலுள்ளவர்களைப்பற்றி, நடக்கிற பிரச்னைகளைப்பற்றி சொல்கிறேனே தவிர, நடக்காததைப்பற்றி சொல்லவில்லையே.

**Mr. SPEAKER:** சட்டசபை அங்கத்தினர்களைப்பற்றி பேசக் கூடாதென்று சொன்னால் நடக்கிறதைச் சொல்கிறேன், நடக்காததைச் சொல்லவில்லை என்கிறீர்களே. அது தவறு. அப்படி சொல்லாதீர்கள்.

**Sri V. K. KOTHANDARAMAN:** அதேபோன்று . . .

**Mr. SPEAKER:** என்ன மறுபடியும் "அதேபோன்று" என்று ஆரம்பிக்கிறீர்கள் (சிரிப்பு.)

**Sri V. K. KOTHANDARAMAN:** சர்க்கார் பல கமிட்டிகளை அமைக்கிறார்கள். ஜில்லா ஹரிஜன கமிட்டி, அல்லது மாகாண ஹரிஜன கமிட்டி, இதுபோன்று பல கமிட்டிகளை அமைக்கிறார்கள். ஜெயில் விஸிட்டேர்ஸ் நியமிக்கப்படுகிறார்கள். இப்படி பல கமிட்டிகள் அமைக்கப்பட்டு, அவைகளில் நியமனம் எப்படி நடக்கிறதென்றால் அமைச்சர்கள் பாகுபாடு படுத்தக்கூடிய முறையில்தான், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களை மட்டும்தான் நியமிக்கக்கூடிய நிலையிலிருக்கிறதே தவிர மற்றபடி எல்லாக் கட்சியினர்களையும், எல்லாக் கட்சியினர்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கக்கூடிய அளவிற்கு கமிட்டிகள் அமைக்கக்கூடிய நிலை அறவே கிடையாது. இவைகளை கேட்கக்கூடிய நேரத்தில் சில சந்தர்ப்பங்களில் நிதியமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், உங்களுக்கு இதன்பேரில் நம்பிக்கை கிடையாதே, அப்படியிருக்க உங்களைப்

[Sri V. K. Kothandaraman] [16th March 1961

போட்டு ஒரு பிரயோஜனமும் இல்லையே என்ற அளவில் பதில் கூறுகிறார்கள். ஹரிஜன முன்னேற்றத்திற்காக வேண்டி எல்லாக் கட்சியினரும் பாடுபடுகிறார்கள். ஆனால் ஹரிஜன முன்னேற்றக் கமிட்டி அமைப்பதில், ஏற்கனவேயிருந்த முறையைக்கூட மாற்றி திருத்தியமைக்கக்கூடிய அளவிற்கு இன்றையதினம் பலவிதங்களில் மாற்றுக்கட்சியினர்களுக்கு இடமேயில்லாத தன்மையில் இன்று நிலை இருந்துகொண்டுவருகிறது. அமைச்சர்கள் சுற்றுப்பிரயாணம் செய்யும்போது—சுற்றுப்பிரயாணம் செய்யக்கூடாதென்று நான் சொல்லவில்லை, தாராளமாக சுற்றுப்பிரயாணம் செய்யலாம், அப்படி சுற்றுப்பிரயாணம் செய்ய வருகிற நேரத்தில்—கலெக்டர் முதற்கொண்டு அத்தனை அதிகாரிகளும் அமைச்சர்களுக்குப் பின்னால் போகக்கூடிய நிலையிருப்பதால், ஏற்கனவே எங்கெங்கு சுற்றுப்பிரயாணம் செய்யவேண்டும் எந்தெந்த காரியங்களை கவனிக்கவேண்டுமென்று ஒரு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது, அந்தத் திட்டங்கள் கைவிடப்பட்டு அமைச்சர்களின் பின்னால் போகக்கூடிய ஒரு நிலைதான் இருக்கிறது. ஒரு சில சந்தர்ப்பங்களில் அப்படி ஏற்படுவதால் தவறில்லை. சமய சந்தர்ப்பங்கள் அப்படி ஏற்படலாம். ஆனால் இப்படி அதிகாரிகள் அமைச்சர்களை பின்தொடர்ந்து செல்வதால் எந்த வேலையும் நடைபெறாத அளவிற்கு அதிகாரிகளின் வேலைகள் பாதிக்கக்கூடிய அளவிற்கு நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. அதன் காரணமாக நிர்வாகம் நல்ல முறையில் நடப்பதில்லை. அமைச்சர்கள் போகக்கூடிய நேரத்தில் கிராமம் கிராமமாக சூறாவளி சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டார்கள் என்று பத்திரிகைகளில் வந்து விட்டால் போதாது. ஜனங்கள் என்ன சொல்கிறார்கள், என்ன மகஜர்கள் கொடுக்கிறார்கள் என்பதைக் கொஞ்சம் காது கொடுத்து கேட்டு அப்பிரச்னைகளை தீர்த்து வைப்பதில் கவனம் செலுத்தக்கூடிய அளவில் நிலைமை இருக்கவேண்டும் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் தெரியப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன். இந்த சந்தர்ப்பத்தில் ஒன்று ஞாபகப் படுத்த விரும்புகிறேன். பல பிரதேசங்களுக்கு ஒரே வாரத்தில் இரண்டு, மூன்று தடவைகள் போகக்கூடிய நிலைமை இருக்கிறது. நான் சொல்வது, குறிப்பிட்ட ஜில்லாவில் அல்லது தாலூகாவில் சுற்றுப்பிரயாணம் செய்வது என்று சொன்னால் போகக்கூடிய நேரத்தில் இரண்டு, மூன்று நாட்கள் ஒரேயடியாக இருந்து எங்கெங்கு சுற்றுப்பிரயாணம் செய்யவேண்டும், எதை எதை கவனிக்கவேண்டும், எதை எதை தீர்க்கவேண்டுமென்பதில் வேண்டிய கவனம் செலுத்தினால் செலவு அதிகமாகாது. ஒரு வாரத்திலேயே, அல்லது இரண்டு வாரத்திற்குள்ளேயே பல முறைகள் திரும்பத் திரும்ப போகும் நிலைமை இருப்பதால் அதிகப்படியாக செலவு ஏற்படக்கூடிய நிலைமையும் இருக்கிறது. அதையும் அமைச்சர்கள் கணக்கிலே எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதையும் ஞாபகப்படுத்த ஆசைப்படுகிறேன்.

10 a.m.

இன்றைக்கு 1,500 ரூபாய் வாங்கக்கூடிய அமைச்சர்களுக்கு இலவச மருத்துவ வசதியெல்லாம் இருக்கிறது. ஆனால் 150 ரூபாய் வாங்கக்கூடிய சட்டசபை உறுப்பினர்களுக்கு இன்றைக்கு



16th March 1961] [Sri V. K. Kothandaraman]

மருத்துவ வசதி மாத்திரமல்ல, இந்த 150 ரூபாயை இன்றைக்கு அலவன்ஸ் என்று சொல்லப்படுகிறது. ஸ்காலர்ஷிப் வாங்குவது என்று சொன்னால் இது ஒரு அலவன்ஸ் என்று உபயோகப்படுத்தப் படுகிறது. ஆனால் இதை மருத்துவ இலாகாவிலே வருமானம் என்ற அடிப்படையில் உபயோகப்படுத்தக்கூடிய நிலைமை இருக்கிறது. ஒரே பிரச்னையில் இரண்டு பாலிஸி இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே எல்லா எம்.எல்.ஏ-க்களுக்கும் இலவச முறையில் மருத்துவ வசதி அளிக்கவேண்டும். இல்லையென்றால் எப்படி அலவன்ஸ் என்று கல்வி சம்பந்தப்பட்ட மட்டில் ஸ்காலர்ஷிப்பிற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறதோ அதேபோன்று இதிலேயும் நாம் பார்ப்பது நல்லது. அந்த முறையில் திட்டம் வகுப்பது நல்லது என்று இந்த நேரத்திலே ஞாபகப்படுத்த ஆசைப்படுகிறேன்.

அமைச்சர்கள் மக்களுடைய பிரச்னைகள் எதுவாக இருந்தாலும், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தபோதிலும் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தபோதிலும் பிரச்னைகள் நியாயமான பிரச்னைகளா என்பதைப் பார்த்து பிரச்னைகளைத் தீர்க்கக்கூடிய தன்மையில் சர்க்கார் கவனம் செலுத்தவேண்டுமென்று ரொம்பவும் வற்புறுத்தி இந்த நேரத்திலே ஞாபகத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

இன்றையதினம் ரைஸ் மில் லைசென்ஸ் இருக்கின்றன. பல ஆண்டுகாலமாக இதற்காக வேண்டி செக்ரடேரியட்டிற்கும் அல்லது கலெக்டர் ஆபீஸுக்கும் தாலூகா ஆபீஸுக்கும் சுற்றி அலையக்கூடிய அளவுக்கு இருக்கிறது. அதில் இருக்கும் பாலிஸியை கூடுமான வரையில் கொஞ்சம் தளர்த்தி உடனுக்குடன் கவனம் செலுத்தி லைசென்ஸ் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் ஞாபகத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். காரணம், இன்று கைக்குத்தல் அரிசியை உபயோகப்படுத்தவேண்டுமென்று இருந்த போதிலும்கூட லைஸென்ஸ் வழங்கும் பிரச்னையில் லாப நஷ்டக் கணக்கு போட்டுப் பார்க்கும் அளவுக்கு சர்க்கார் கண்ணோட்டம் இருக்கிறது என்றால் அது வரவேற்க வேண்டியதுதான். பொது ஜனங்கள் பாதிக்கப்படுவார்களே, வியாபாரிகள் பாதிக்கப்படுவார்களே, வியாபாரம் கெடக்கூடாது, பொது மக்களும் கெடக்கூடாது என்ற அளவுக்கு அடிப்படை பிரச்னையில் அந்த மாதிரி கணக்கிட்டுப் பார்த்தால், அந்த மாதிரி ஒரு கொள்கையை கடைபிடித்தால் அது நல்லதுதான்—அதை ஒருவரும் மறுக்க முடியாது. ஆனால் ரைஸ் மில் லைஸென்ஸ் கொடுக்கும் பிரச்னையில் அவர்கள் கெட்டுப்போவார்கள் என்று லாப நஷ்டக் கணக்கு போட்டுப் பார்ப்பது சரியல்ல, முறையல்ல என்று இந்த நேரத்தில் ஞாபகப் படுத்த ஆசைப்படுகிறேன். எந்த அளவுக்கு அதிகப்படி லைஸென்ஸ் கொடுப்போமோ அதனால் பொது ஜனங்களுக்குத்தான் நன்மை ஏற்படும். ஒரு ரைஸ் மில் இருக்கும் இடத்தில் 4-5 மில்கள் இருந்தால் ஒரு மூட்டை நெல்லுக்கு 1 ரூபாய் என்று இருந்தால் 4 அணு,

8 அணாவில் நடக்கக் கூடிய அளவுக்கு ஆகும். (குறுக்கிடு) தொழிலாளிகளுக்கும் கிடைக்கக் கூடிய நிலைமை இருக்கும். இதனால் ஜனங்கள் பெரிய அளவுக்கு நன்மை அடையக் கூடியதாக இருக்கிறார்கள். இதில் பெரிய முதலாளிகள் ஒன்றும் கிடையாது. நாங்கள் எப்போதும் சாதாரண வசதி படைத்தவர்களை முதலாளி கள் என்று பார்ப்பது கிடையாது. இன்றைய தினம் பெரிய முதலாளிகளுக்கு தாராளமாக லைசென்ஸ் வழங்கக் கூடிய நிலைமை இருக்கிறது. அடித்தட்டில் இருக்கும் மத்திய தர வகுப்பினருக் குத்தான் உடனுக்குடன் கொடுக்கும் நிலைமை இல்லை. மத்திய தர வகுப்பினருக்கு தொல்லை கொடுக்காத அளவுக்கு கவனம் செலுத் தப்படவேண்டும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு எனது பேச்சை முடித்துக் கொள்ளுகின்றேன், வணக்கம்.

* SRI J. MATHA GOWDER: கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த மான்யக் கோரிக் கையை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அமைச்சர்கள் அடிக்கடி ஜில்லாக்களிலே சுற்றுப்பிரயாணம் செய் வதைபற்றி ஏனோ எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் பயந்து கொள்ளு கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது எனக்கு ஒன்றும் புரிய வில்லை. அமைச்சர்கள் ஜில்லாவிற்கு வந்தால் என்ன பயம் இவர் களுக்கு என்றால் காங்கிரஸ் கட்சி பலப்பட்டுவிடும் என்பதுதான். அமைச்சர்கள் வரும்போது காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அங்கத் தினர்கள் மாத்திரம் குறைகளை எடுத்துச் சொல்வதில்லை. எதிர்க் கட்சிகளில் இருக்கும் அங்கத்தினர்களும் அவர்களுக்கு இருக்கும் குறைகளை எடுத்துச் சொல்ல வாய்ப்பு இருக்கிறது. அங்கத்தினர் கள் வருவதற்குக்கூட சில இடைஞ்சல் இருக்கிறது என்று சொல்லு கிறார்கள் எந்த நிலையில் இடைஞ்சல் இருக்கிறது என்று எனக் குப் புரியவில்லை. எந்த அமைச்சரிடத்தில் எந்த அங்கத்தினர் பார்ப்பதற்கு இடைஞ்சல் ஏற்பட்டது என்று அவர்களால் சொல்ல முடியாது—பேச்சுக்கு சொல்லலாம். அமைச்சர்கள் வருவதிலே நமக்கு ஒரு சௌகரியம் இருக்கிறது. நமது தொகுதியில் இருந்து கொண்டு அமைச்சருக்கு ஒரு விண்ணப்பத்தைக் கொடுக்கும் போது—சாதாரணமாக அதிகாரிகளிடத்தில் அனுப்பினால் ஏதா வது ஒரு குறையைச் சொல்லி ரிஜெக்ட் செய்து விடுவார்கள், ஆனால் நேரடியாகக் கொடுக்கும்போது—அமைச்சர்கள் அதிகாரி களைக் கேட்டு அவர்கள் ஏதாவது சொன்னாலும், அதனுடைய அவசியத்தை உணர்ந்து, இப்படி ஏன் போக்கக்கூடாது என்று ஸ்தலத்திலேயே விவாதித்து, நல்ல முடிவு ஏற்படும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். என்னைப் பொறுத்தவரை யில் நான் குறைபட்டுக்கொள்வது எங்கள் ஜில்லாவிற்கு அமைச் சர்கள் வருவதில்லையே என்பதுதான். குறிப்பாக நிதி அமைச்சர் பேரிலும், முதல் அமைச்சர் பேரிலும் எனக்கு ரொம்பவும் வருத்தம். அவர்கள் நீலகிரிக்கு வருவதே கிடையாது. அவர்கள் அடிக்கடி நீலகிரிக்கு சுற்றுப்பிரயாணம் செய்து மக்களுக்கு இருக் கும் குறைகளைப் போக்கவேண்டுமென்று மிகவும் பணிவன்போடு



கேட்டுக்கொள்கிறேன். எல்லா வேலைகளையும் ஹெட்க்வார்ட்டர் ஸில் இருந்து செய்து விட்டால் போதாது என்று நினைக்கிறேன். ஆகவே அமைச்சர்கள் அடிக்கடி ஜில்லாக்களில் சுற்றுப்பிரயாணம் செய்ய வேண்டுமென்று அவர்களைக் கேட்டுக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

அடுத்தபடியாக நீலகிரி ஜில்லாவிலே கோடை காலத்தில் சட்ட சபைக் கூட்டத்தை நடத்தவேண்டுமென்று நான் முதலில் கேட்டேன். கேட்டதற்கு மற்றக் கட்சிகளில் இருக்கிறவர்களும் ஆதரவு கொடுத்து ஒரு வருஷம் நடத்தினோம். அப்படி நடத்தும் போது ஒரு கட்சிக்காரர்கள் மாத்திரம் ஏதோ ஏகப்பட்ட மக்கள் பணம் விரயமாகிவிட்டது என்று கூப்பாடு போட்டுவிட்டார்கள். பிறகு கேள்வி நேரத்தில் அமைச்சர் அவர்கள் என்ன சொல்லி யிருக்கிறார் என்று பார்த்தால் நீலகிரியில் சட்டசபைக் கூட்டத்தை நடத்தியதில், இங்கு நடக்கும்போது என்ன செலவு ஏற்பட்டிருக் குமோ அந்தச் செலவை விட ரூ. 10,000 தான் அதிகமாக ஆகியிருக் கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். ரூ. 10,000 சர்க்கார் பணம் நீலகிரி ஜில்லாவில் செலவானால் அந்தப் பணம் நீலகிரி மக்களுக் குத்தான் போயிருக்கிறது என்பதைப் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். 10,000 ரூபாய் என்று அங்கத்தினர்களுக்கு அதிகமாகக் கொடுத்த படியை வைத்துக்கொண்டு சொன்னாலும் அங்கத்தினர் கள் அவர்களுடைய பணத்தை நீலகிரியிலே செலவழித்திருக்கிறார் கள். அதோடு கூட சட்ட சபை நடந்தபோது பக்கத்திலிருந்து—மைசூரிலிருந்து, கேரளத்திலிருந்து—மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து அவர்களுடைய பணத்தையும் நீலகிரியில் செலவு செய்திருப் பதைப் பார்த்தால் 1 லட்சம் ரூபாய் அளவுக்கு வேறு மாநிலத்தி லிருந்து வந்திருக்கிறது என்பதைப் பார்க்கும்போது 10,000 ரூபாய் செலவு செய்வது பெரிய காரியம் என்று நினைப்பது அவ் வளவு உசிதமாக இருக்காது. அடுத்தபடியாக பார்க்கும்போது அங்கத்தினர்களுக்கு வசதிக் குறைவு ஏற்பட்டு விட்டது என்று கேள்விப்படுகிறேன். வசதிக் குறைவு இல்லாமல் இருக்க வசதி களை ஏற்படுத்தி அடுத்த முறை சட்ட சபைக் கூட்டத்தை நடத்த சர்க்கார் முன்வரவேண்டும்—அதோடு எதிர் கட்சிகளெல்லாம் முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அன்றைக்குத் தான் உருளைக் கிழங்கிற்கு வரி போட்டுவிட்டு ஊட்டிக்கு ஒரு உல்லாசமா என்று கேட்டார்கள். இப்போதுதான் வரியை எடுத்து விட்டா யிற்றே, ஆகையால் ஊட்டிக்கு வாருங்கள். அன்றைக்கு கும்பி எரியுது, குடல் கருகுது, கோலேந்திகளே, உங்களுக்கு குளு குளு வாசமா என்று கேட்டார்கள். இப்போது கும்பி எரிச்சல் அடங்கி இருக்கும் என்று நினைக்கிறேன்.

இப்போது வரிகளை எல்லாம் எடுத்தாய் விட்டது. அந்த மக்க ளுக்கு அநேக வசதிகளை எல்லாம் செய்து கொடுத்திருக்கிறோம் என்ற புள்ளிவிவரங்களை எல்லாம் அமைச்சர் அவர்கள் கொடுத் தார்கள். இப்போது உங்களுடைய கும்பி எரிவது எல்லாம்

நின்று இருக்கும் என்று நம்புகிறேன். இனிமேலாவது நீங்கள் மறுபரிசீலனை செய்து இந்தச்சட்டசபை எங்கள் பகுதியில் கூடுவதற்கு எந்தவிதமான தடங்கலும் ஏற்படுத்தாமல் இருக்க வேண்டும் என்று எதிர்கட்சி நண்பர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே எதிர்க்கட்சிகள் எல்லாம் சர்க்கார் செய்யக்கூடிய காரியங்களுக்கு இடைஞ்சலாக உண்மைக்குப் புறம்பான காரியங்களை மக்களிடத்தில் எடுத்துச்சொல்லி தங்களுடைய கட்சி வளர வேண்டும் என்கின்ற ஒரே நோக்கத்தோடு பிரச்சாரத்தை செய்துகொண்டிருக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே அங்கிருக்கின்ற மக்களுடைய நலனை கருதியாவது சட்டசபை கூட வேண்டும் என்று தீர்மானிக்கும்போது அதற்கு ஆதரவு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சர்க்காரும் மீண்டும் சட்டசபையை ஊட்டியில் நடத்துவதற்கு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது இல்லாவிட்டாலும் இனிமேல் 62-வது வருடத்தில் வரும் புதிய சட்டசபையையாவது அங்கு நடத்துவதற்கு முயற்சிக்கவேண்டும். வரப்போகிற தேர்தலில் காங்கிரஸ் கட்சித்தான் வெற்றி பெறப்போகிறது. காங்கிரஸ் தான் மந்திரிசபை அமைக்கப்போகிறது. எதிர்கட்சி என்பதே அனேகமாக இருக்காது என்று நினைக்கிறேன். அந்த அளவுக்கு இன்றைக்கு நாட்டில் மக்களிடத்தில் எண்ணங்கள் வளர்ந்திருக்கின்றன. இந்த நிலையில் வரக்கூடிய சட்டசபையில் எதிர்கட்சிகள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நீலகிரியில் சட்டசபையை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (ஸ்ரீ ஏ. வி. பி. ஆசைத்தம்பி: அடுத்ததாக, காங்கிரஸ் தான் எதிர்கட்சியாக வரப்போகிறது.) எல்லாமே காங்கிரஸ் கட்சியாகத்தான் இருக்கப்போகிறது.

அடுத்ததாக, தொகுதிகளைப் பிரிக்கின்ற பொறுப்பு மத்திய சர்க்காரைச் சேர்ந்தது என்றிருந்தாலும் கூட, எலெக்ஷன்ஸ் என்ற பிரிவில், மலைப்பிரதேசங்களில் தொகுதிகளைப்பிரிக்கும் போது மிகவும் கவனமாக பிரிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உதாரணமாக என்னுடைய தொகுதியை எடுத்துக்கொண்டால், மலைப் பிரதேசங்களில் வண்டிகள் கூட போகமுடியாத இடங்களை எல்லாம் சேர்த்து, சுமார் 92,000 வோட்டர்கள் கொண்ட ஒரு தொகுதியை ஒரு ஸிங்கிள் மெம்பர் தொகுதியாக பிரித்திருக்கிறார்கள். மக்கள் தொகை மிகவும் கூடுதலாக இருக்கின்ற இம்மாதிரி தொகுதிகளை ஏற்படுத்தக்கூடாது. ஆகவே மக்கள் குறைவாக இருக்கும்படியான அளவில் தொகுதிகளை பிரிக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்களை மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சட்டசபை அங்கத்தினர்களுக்கு இருக்கக் கூடிய வசதிகளைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஹாஸ்டலிலிருந்து இங்கு சட்டசபை நடக்கின்ற இடத்திற்கு பஸ்ஸில் வரும்போது 13 ந.பை. கேட்கிறார்கள். இது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. வேண்டுமென்றால் எங்களுக்குக்





கொடுக்கப்படும் சம்பளத்திலோ அல்லது டி. ஏ. பணத்திலோ இதை வசூலித்துக் கொள்ளலாம். அப்படியில்லாமல் ஒவ்வொரு சமயத்திலும் கண்டக்டர்கள் வந்து 13 ந.பை. கொடுங்கள் என்று கேட்பது எங்களுக்கு மிகவும் வருத்தமாய் இருக்கிறது. வேண்டுமென்றால் ஒரு நாளுக்கு இவ்வளவு என்று பஸ்ஸுக்கு கான்டிராக்ட் என்ற முறையில் கொடுத்துவிடுங்கள், அப்படி செய்தாலும் நல்லது. ஆகவே இதைப் பற்றி ஏதாவது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

டிஸ்ட்ரிக்ட் அட்மினிஸ்ட்ரேஷனைப் பொறுத்தவரையில், இப்போது ஜில்லா போர்டில் இருக்கும் காரியதரிசிகளை எல்லாம், இனிமேல் வரவிருக்கின்ற டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்ஸிலில் நியமித்துவிடலாம், அல்லது கலெக்டர்களின் பி.ஏ. என்ற முறையில் நியமித்து விடலாம். அப்போது தான் ஜில்லா நிர்வாகம் நல்ல முறையில் நடைபெற முடியும், என்பதை தெரிவித்துக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* **SRI V. SUBBIAH:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மான்யத்தின் பேரில் வந்திருக்கக்கூடிய—1 கோடி, 28 ஆயிரத்தி 19 லட்சம் ரூபாய்க்கு கேட்டிருக்கின்ற தீர்மானத்திற்கு எதிராக கொடுத்திருக்கும்—வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். பொதுவாக சில மதிப்பிற்குரிய நண்பர்கள் பேசும்போது, கழிந்த கால சரித்திரத்தை மறந்து விட்டு பேசுகிறார்கள் என்று தான் நான் நினைக்கிறேன். எந்த அரசியல் கட்சி ஆட்சிக்கு வரப்போகிறது என்பது மக்களுடைய கையில் தான் இருக்கிறது. யார் வரப்போகின்றார்கள், யார் வரமாட்டார்கள் என்பதை இப்போதே அறுதியிட்டு கூறுவது, சென்ற கால சரித்திரம் தெரியாமல் கூறுவது என்றுதான் எடுத்துக்கொள்ள முடியும். அமைச்சர்களுக்கு இன்றைக்கு இருக்கக்கூடிய வசதிகள், கார் வசதி, பங்களா வசதி, சம்பளம் இவைகள் எல்லாம் இருக்க வேண்டியது மிகமிக அவசியம். ஆனால் அவர்கள் அடிக்கடி தேர்தல் பிரச்சாரங்களுக்காக சென்று விடுகின்றார்கள் என்ற குறை மக்களிடையே இருந்து கொண்டிருக்கிறது. அமைச்சர்கள் அடிக்கடி சுற்றுப்பிரயாணம் செய்கின்றார்கள் என்று அடிக்கடி மக்களாலும், சட்டமன்ற அங்கத்தினர்களாலும் பேசப்படுகின்றது. இதனால் அதிக பணச்செலவு ஏற்படுகிறது என்பதால் குறைபடவில்லை, ஆனால் நிர்வாகத்தில், இவர்கள் தலைநகரில் இல்லாது இருப்பதால் நிர்வாகத்தில் ஊழல் இருக்கிறது, நிர்வாகத்தில் லஞ்சம் மலிந்து கிடக்கிறது என்றெல்லாம் பேசப்படுகிறது, அவைகளை நல்ல முறையில் கவனிப்பதற்கு வழியில்லாமல் இருக்கிறது என்பதால் தான் இவ்விதம் குறைபடுகிறார்கள். ஜில்லா தலைநகரங்களிலும் சரி, தாலுகா தலைநகரங்களிலும் சரி, ஏதாவது அமைச்சர் வந்து விட்டால், அங்குள்ள கலெக்டர், ஆர். டி. ஓ., தாசில்தார், போலீஸ் இலாகா அதிகாரிகள், இவர்கள் எல்லாம் அமைச்சர் அவர்களின் பின்னால் போக வேண்டி

யிருக்கிறது. இதையாவது உடனடியாக தவிர்க்கவேண்டும்.
இதன் காரணமாக ஜில்லாவில் நிர்வாகம் தடைபடுகிறது, தாலுகா
விலும் நிர்வாகம் தடைபடுகிறது. பல அதிகாரிகளிடம் எங்கள்
ஃபைல் என்னவாயிற்று என்று கேட்கும்போதெல்லாம், அதை
இன்னும் கவனிக்கவில்லை, அடுத்த வாரம் வாருங்கள் என்று
சொல்லுகிறார்கள், ஏன் என்று கேட்டால், அடிக்கடி அமைச்சர்கள்
வருகிறார்கள், அதன் காரணமாக நேரம் கிடைக்கவில்லை, அதனால்
அந்த ஃபைலை பார்க்க முடியவில்லை என்று சொல்லுகிறார்கள்.
இந்த மாதிரியாக ஏன் குறை சொல்லுகிறேன் என்று சொன்னால்
நிர்வாகத்தில் உடனடியாக தவிர்க்கப்பட வேண்டிய சில நிகழ்ச்சி
கள், பல இடங்களில் நடக்கின்றன என்பதை அமைச்சர் மனதில்
வைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அங்கத்தினர்களின் ஹாஸ்டலைப்பற்றி ஒன்றி
ரண்டு வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். நான் உண்மை
யிலே ஒரு கிராம வாசி. நான் காற்றோட்டமான இடத்தில் இருக்
கக்கூடியவன். ஆனால் இப்போது ஹாஸ்டலில் எப்படியிருக்கிறது
என்றால், வெறும் மூட்டையும் ஒலுங்குமாக இருக்கிறது. மின்சார
விசிறியை மட்டும் தான் காற்றுக்காக பயன்படுத்திக்கொள்ள
வேண்டியிருக்கிறது. இதனால் பகலிலும் தாங்க முடியவில்லை,
இரவிலும் தாங்க முடியவில்லை. இந்த முறையில் எங்களது ஹாஸ்ட
லில் வசதிகள் மிகவும் குறைவாக இருக்கின்றன. மைசூர், சண்டி
கார் போன்ற இடங்களிலுள்ள ஹாஸ்டலை எடுத்துக்கொண்டால்
ஒவ்வொரு அறையிலும் பாத் ரூம் வசதிகள் எல்லாம் இருப்பதாக
வும், அறையில் போன் வசதிகள் எல்லாம் இருப்பதாகவும் சொல்லு
கிறார்கள். என்னைப்போன்றவர்கள் அடிக்கடி இரவு காலத்தில்
வெளியில் போகவேண்டுமானால் மிகவும் கஷ்டமாக இருக்கிறது.
முக்கியமாக ஹாஸ்டலில் படுக்கை வசதி மிகவும் குறைவாக இருக்
கிறது. ஹௌஸ் கமிட்டியில் டன்லப்பில்லோ மெத்தைகள்
எல்லாம் வாங்கி போடவேண்டும் என்று கேட்டிருந்தோம். அது
இது வரையிலும் நடைபெற்றதாக தெரியவில்லை. அதுமட்டுமல்ல,
இங்குள்ள அங்கத்தினர்களுக்கு கொடுக்கப்படும் அலவென்ஸ் மற்ற
மாகாணங்களில் கொடுக்கப்படுவதை விட குறைவாக இருக்கிறது.
கேரள ராஜ்யத்தில் அலவன்ஸும் கூட்டிக் கொடுக்கப்படுகிறது,
சம்பளமும் 200 ரூபாய் வரை கொடுக்கப்படுகிறது.
எதிர்க்கட்சித் தலைவராய் இருக்கின்ற அட்லி அவர்கள் சமீபத்தில்
இங்கு வந்திருந்த போது குறிப்பிட்டார்கள், வெளிநாடுகளில்
சென்றவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள், அந்த நாடுகளில் எல்லாம்
பார்லிமென்டிலுள்ள எதிர்கட்சித் தலைவர்களுக்கு வாழ்க்கைவச
திக்கு சம்பளமும் அலவென்ஸும் கொடுக்கப்படுகிறது என்று சொன்
னார்கள். ஒவ்வொரு நாட்டினுடைய நிதி நிலைமைக்குத் தகுந்த
படி கொடுக்கப்படுவதாகவும் குறிப்பிட்டார்கள். இங்கே எப்படி
யிருக்கிறது என்றால் ஹாஸ்டல் ரூம் வாடகைக்காக $2\frac{1}{2}$ ரூபாய்
போக மீதி 10 ரூபாய் அலவன்ஸாக கொடுக்கப்படுகிறது. அதை
வைத்து அங்கத்தினர்கள் என்ன செய்ய முடியும்?



வெளியே செல்வதற்கு எவ்வித வசதியும் இல்லை. டாக்சி இல்லாமல் வெளியே போக முடியாது. சாப்பாடு வசதியும் கிடை யாது. மொத்தத்தில் இந்த ஹாஸ்டலைப் பற்றி சொல்லவேண்டு மானால் இது ஒரு சத்திரத்தைப் போல் தான் இருக்கிறது. காலையில் குளிப்பதற்குப் போனால், எங்களுக்கு முன்னால் மவுண்ட் ரோட்டிலுள்ள டாக்சி டிரைவர்கள் வந்து குளித்து விட்டுப் போய்விடுகிறார்கள். வெந்நீர் போன்ற எவ்வித வசதியும் குளிப்பதற்கு செய்யப்படவில்லை. இங்கு காலையில் $8\frac{1}{2}$ மணிக்கு அசெம்பிளிக்கு வரவேண்டுமென்றால் வர முடிவதில்லை. அங்கு குளிப்பதற்கு க்யூவில் நிற்கத்தான் வேண்டியிருக்கிறது. இதைத் தவிர எங்களுக்கு வேறு எவ்வித சலுகையும் இல்லை. அதோடு வெளியிலே இருந்து வரக்கூடியவர்களுக்கு இங்கு இடமளிப்பதால், நாங்கள் வரும்போது எங்களுக்கு இடமில்லை என்று சொல்லப் பட்டு, வெளியே தங்கவேண்டிய நிலைமையும் சில சமயங்களில் ஏற்படுகிறது. அப்படி யார் யாரோ வெளியே இருந்தெல்லாம் வந்து தங்கக்கூடிய ஒரு பெரிய சத்திரமாக அது இயங்கி வரு கிறதே தவிர, சட்ட மன்ற உறுப்பினர்கள் தங்கக் கூடிய ஒரு நிலை யிலே இல்லாத அளவில்தான் அது இப்போது இயங்கிக் கொண்டு வருகிறது. இதையெல்லாம் நான் கனம் அமைச்சர் அவர்களு டைய கவனத்திற்கு கொண்டு வராமல் இருக்கலாம். ஆனால் நானே அனுபவித்ததை அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்பு கின்றேன்.

அது மட்டுமல்ல. நண்பர்கள் பலர் பேசினார்கள், விரும்புகிறார் கள். இன்றைக்கு மத்திய அரசாங்கத்திலே உள்ள அங்கத்தினர் களுக்கெல்லாம் ரயில்வே பாஸ் கொடுக்கிறார்கள். எங்களுக்கு ராஜ்ய அளவிலாவது கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அதேபோல் ஸ்டேட் டிரான்ஸ்போர்டில் இன்றைக்கு நெடுந்தூரம் செல்லக்கூடிய எக்ஸ்பிரஸ் பஸ்கள் விடப்படுகிறது. அதிலேயும் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு, தூரமாகப் போகக்கூடியவர் களுக்கு 300, 400 மைல்களுக்கு போகக்கூடியவர்களுக்கு பாஸ் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்றும் விரும்புகிறார்கள். இதிலேயும் கனம் அமைச்சர் அவர்கள் மனது வைத்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதனால் அதிகம் ஒன்றும் செலவு ஆகிவிடாது. எத்தனையோ செலவினங்களை சில சவுகரியங்களுக்காக இன்றைக்கு செய்துகொண்டு வருகிறோம். ஆகவே இதிலே கனம் அமைச்சர் அவர்கள் அவசியம் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு இன்னொன்று. எலெக்ஷனைப் பற்றி சில வார்த்தைகள் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எலெக்ஷனுக்கு நகரங்களில் இருக்கின்றதைப் போல் கிராமங்களிலே நல்ல முறையில் வசதிகள் கிடையாது. கிராமங்களிலே உள்ளவர்களை ஓட்டுச் சாவடிக்கு அழைத்து வருவதென்றால் மிகவும் கஷ்டமான ஒரு பிரச்னையாகும். அவர்கள் பல மைல்களுக்கு நடந்து சென்று ஓட்டளிக்கக் கூடிய

அளவில் இன்றைக்கு இருக்கிறார்கள். அவர்கள் வேலைக்குச் செல்லக்கூடியவர்கள். அவர்கள் பயிர்த் தொழிலை நம்பி கிராமங்களிலே வாழ்ந்து கொண்டு வருகிறார்கள். அப்படிப்பட்டவர்களை கொண்டுபோய் ஓட்டுப் போடச் செய்வது என்பது மிகவும் கஷ்டமான ஒரு பிரச்னையாகும். ஆனால் நகரங்களிலோ வார்டுக்கு வார்டு ஓட்டுச் சாவடிகள் போடப்படுகிறது. கிராமங்களை எடுததுக்கொண்டால், 2, 3 மைல்களுக்கு நடந்து சென்று ஓட்டுப் போடக்கூடிய கஷ்டமான பிரச்னையாக இருக்கிறது. ஆகவே அந்தந்த கிராமத்திலே இருக்கக்கூடிய ஜனத்தொகைக்கு தகுந்தவாறு, 500 பேர்கள் இருக்கக்கூடிய ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு ஓட்டுச் சாவடியை அமைத்தால், எல்லோரும சென்று ஓட்டளிக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடும். அப்போதுதான் கிராமங்களிலேயும், நகரங்களைப் போல் நல்ல முறையிலே ஓட்டளிக்க முடியும் சாதாரணமாக, ஓட்டு கணக்கெடுப்பு எடுக்கக்கூடிய காலத்திலே கிராமங்களில் குறைவாக "போல்" ஆவதை யாரும் மறுக்க முடியாது. இதற்கு இதுதான் காரணம். 2, 3 மைல்களுக்கு அப்பால் பெண்களும், வயோதிகர்களும் போய் ஓட்டளிக்க முடியாது. ஆகவே இப்போதுள்ள முறை மிகவும் மோசமானது. எல்லா ரெவின்யூ கிராமங்களிலும் ஓட்டுச் சாவடிகள் ஏற்படுத்தி, அந்தந்த கிராமங்களிலே உள்ள மக்கள் வேலைக்கு போய்விட்டு மாலையில் வந்தாவது ஓட்டளிக்கக்கூடிய வகையிலே வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, பொதுவாக எலெக்ஷனுக்கு அமைச்சர்கள் பிரசாரத்திற்காகப் போகும்போது, உடன் அதிகாரிகளையும், மற்றைய அதிகாரங்களையும் உபயோகிக்காமல், ஒரு நல்ல முறையிலே, ஜனநாயக அமைப்பின்படி அவர்கள் பிரசாரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**MR. SPEAKER:** இன்றைக்கு மூன்று எதிர்க் கட்சித் தலைவர்கள் பேச இருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் 15 நிமிஷங்கள் ஒதுக்கி இருக்கிறேன். கனம் நிதி அமைச்சர் அவர்கள் பேசுவதற்கு முக் கால் மணி நேரம் ஒதுக்கி இருக்கிறேன். ஆகவே இதற்கு 1½ மணி நேரம் தேவைப்படுகிறது. 12 மணிக்கு தலைவர்கள் பேச ஆரம்பிக்க வேண்டும். அதற்கு முன் இப்போது 90, 95 நிமிஷங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு அங்கத்தினருக்கும் 10 நிமிஷம் என்றால், 9 அங்கத்தினர்கள் பேசலாம். இப்போது 9 அங்கத்தினர்களுடைய பெயர்கள் தான் என்னிடம் இருக்கிறது. தலைவர்கள் தயவுசெய்து 15 நிமிஷம் தான் பேசவேண்டும். 13 நிமிஷம் ஆனவுடன் மணி அடிப்பேன். அதற்குப் பிறகு 2 நிமிஷ நேரம் பேசிக்கொண்டு, முடித்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்குமேல் பேசக்கூடாது. அப்படிப் பேசினால், அடுத்த தலைவரின் பெயரைக் கூப்பிடவேண்டியிருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



**SRI A. GOVINDASAMI:** ஒவ்வொரு அங்கத்தினருக்கும் 7 நிமிஷம் வைத்துக் கொள்ளலாம்.

**MR. SPEAKER:** அப்படி மாற்ற முடியாது.

**SRI M. R. KANDASWAMI MUDALIYAR:** சபைத் தலைவர் அவர்களே, சபைமுன் வந்திருக்கக்கூடிய அட்மினிஸ்ட்ரேஷன் மான்யத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். முதல் முதலில் நம்முடைய அமைச்சர்கள் சுற்றுப்பிரயாணம் தேவையா, இல்லையா என்பதைப்பற்றி பல பிரச்னைகளை பல நண்பர்கள் பேசினார்கள். அவசியம் அமைச்சர்கள் சுற்றுப்பிரயாணம் தேவை. அவர்கள் இருக்கின்ற இடத்திலேயே இருப்பார்களானால், முதல் முதலிலே அவர்களுடைய தொகுதியிலே உள்ள மக்கள், அமைச்சர்கள் ஓட்டு வாங்குவதற்கு மட்டும் தொகுதிக்கு வந்தார்கள், இப்போது சும்மா உட்கார்ந்துகொண்டு இருக்கின்றார்களே என்று சொல்வார்கள். ஆகவே தங்கள் தொகுதிக்கு அவர்கள் அவசியம் போகவேண்டும். அதோடுகூட, ஜனங்களுடைய குறைகள் என்ன என்பதைத் தெரிந்து கொள்வதற்காகவும், அவர்களுடைய ஆட்சியின் கீழ் இருக்கக்கூடிய பிரதேசங்களிலே தங்களுடைய திட்டத்தின்கீழ் திட்ட வேலைகள் எல்லாம் சரிவர நடந்து வருகிறதா என்பதையெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டியது அமைச்சர்களுடைய கடமையாகும். அப்படி நடைமுறையில் நடக்கக்கூடிய திட்டங்களிலே என்னென்ன குறைகள் இருக்கின்றன என்பதைக் கண்டு, அதை நிவர்த்தி செய்கின்ற பொறுப்பும் அவர்களைச் சார்ந்தது. அப்படிப் போய் வருகின்ற சமயத்திலே, என்னென்ன வசதிகள் ஜனங்களுக்கு வேண்டுமோ அவைகளை நேரிலே விண்ணப்பங்கள் கொடுத்து தெரிவித்துக் கொள்வதற்கும் முடிகிறது. அப்படித் தரப்படுகின்ற விண்ணப்பங்களினால், இந்த ராஜ்யத்திலே நடைபெறக்கூடிய திட்ட வேலைகள் மேலும் நன்கு நடைபெறுவதற்கு அனுகூலமாகவும், வசதியாகவும் இருக்கிறது. அதை அனுசரித்து அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணம் மிகமிகத் தேவைப்படுகிறது.

அப்படி அவர்கள் சுற்றுப் பிரயாணம் செல்வது கட்சி நலனுக்காக அல்ல. காங்கிரஸ் கட்சி பலம் அடைந்து விடும், அடைய வேண்டும் என்பதற்காக அல்ல. எதிர்க் கட்சிகளை ஒடுக்க வேண்டுமென்பதற்காக மட்டுமல்ல. அப்படி அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணம் செல்வதால், தங்கள் கட்சிக்கு பலவீனம் ஏற்பட்டு விடுகிறது என்ற எண்ணத்தின் பேரில் மட்டும் இப்படிக் கருதக்கூடாது என்றும் நான் கூறுகிறேன். அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணத்தினால், இந்த தேசத்தின் நலன் மட்டும் அல்ல, ஆங்காங்கு நடைபெறுகின்ற வேலைகளும்கூட நல்ல முறையிலே நடப்பதற்கும், அதிகாரிகள் உடன் வருவதால் மக்கள் ஏதாவது குறைகள் சொன்னால் உடனே அவைகளைக் கண்காணிப்பதற்கும் ஒரு நல்ல நிலைமை ஏற்படுத்துகிறது. அதோடு, சம்பந்தப்பட்ட அதிகாரிகள்கூட பயந்து நல்லமுறையிலே தங்கள் வேலைகளை ஒழுங்காகச் செய்வதற்கும், திறமையாகச் செய்வதற்கும் ஒரு சந்தர்ப்பம் ஏற்படுகிறது.

[Sri M. R. Kandaswami Mudaliar] [16th March 1961

ஆகவே இது நாட்டுக்கும் நல்லதாகிறது என்பதை மற்ற எதிர்க்
கட்சி நண்பர்களும் ஓரளவு மனதிலே வைத்துக்கொண்டு, அமைச்
சர்களுடைய சுற்றுப்பிரயாணத்தின் அவசியத்தை எண்ணிப்
பார்த்தால், இப்படியெல்லாம் பேசவேண்டியத் தேவையில்லை.

(Sri V. Subbiah in the Chair.)

அமைச்சர்கள் சுற்றுப்பிரயாணத்தினுல் அதிகமாக வீண் செல
வாகிறது என்று சொல்லப்பட்டது. அப்படிப் பார்த்தால், நாம்
இங்கே உட்கார்ந்து கொண்டு இருப்பதுகூட ஒரு செலவாகத்தான்
ஆகும். இதை யெல்லாம் எதற்காக செலவு செய்கிறோம் என்று
பார்க்க வேண்டும்? தேச நலத்திற்காக, தேசத்திலுள்ள மக்க
ளுடைய நல்வாழ்வுக்காக செய்யக் கூடிய செலவாகும். அப்படிச்
10 30 a.m. செய்யும்போது, செய்யப்படுகின்ற செலவு நல்லமுறையிலே,
செய்யப்படுகின்றதா அல்லது தவருன முறையில் நடக்கின்றதா
என்னென்ன காரியத்திற்காக செய்யப்படுகிறது என்பதையெல்
லாம் கவனிக்க வேண்டும். அவர்கள் செய்யக்கூடிய பணிகளாலே
நாட்டுக்கு நல்ல பயன் ஏற்படுகிறதா என்று பார்க்க வேண்டும்.
ஆகவே அமைச்சர்கள் எல்லா இடங்களுக்கும் சுற்றுப்பிரயாணம்
செய்யவேண்டியது அவசியம்.

சிலர் கட்சியின் நலனுக்காக, காங்கிரஸ் கட்சியைப் பலப்
படுத்துவதற்சாக, காங்கிரஸ்காரர்களுக்கு பலமேற்படுவதற்காக
அமைச்சர்கள் சுற்றுப்பிரயாணம் செய்வதாகக் கூறுகிறுர்கள்.
ஆனுல் நான் கூறுவேன், இப்படி அமைச்சர்கள் வருவதாலே காங்
கிரஸ்காரர்களுக்கு சில இடையூறுகள் ஏற்படுகிறதே தவிர, நன்மை
இல்லை என்று. ஏனென்று சொன்னுல், பல இடங்களில்
சில சம்பவங்கள் அம்மாதிரி நடக்கின்றன. அதனுல் பாத
கம்கூட ஏற்படுகிறது. அப்படி எங்களுக்கு பாதகம் ஏற்படுகின்ற
காரணத்தினுலே, அமைச்சர்களை வரவேண்டாமென்று சொல்ல
வில்லை. நம் நாட்டுக்கு நலன்கள் ஏற்பட வேண்டுமென்றுல்,
நாட்டின் நலனிலே அக்கறையுள்ளவர்களாக இருப்பவர்கள், நாட்
டின் வளர்ச்சியிலே கவனம் செலுத்துபவர்கள். நடுநிலைமை எண்
ணத்தோடு இந்தக் கருத்துக்களைப் பார்த்தால், இதைப் பற்றிக்
குறைகூற மாட்டார்கள். ஆகவே மீண்டும் அமைச்சர்கள் இந்த
நாட்டிலுள்ள எல்லா இடங்களுக்கும் சுற்றுப்பிரயாணம் செல்வது
அவசியமென்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.
அமைச்சர்கள் சுற்றுப்பிரயாணம் வரக்கூடிய காலத்தில் அவர்கள்
பல இடங்களை நேரில் சென்று பார்க்கிறுர்கள். பல ஆண்டுகளாக
விண்ணப்பங்கள் மூலம் எழுதிப்போட்டும் விமோசனம் காணுத
விஷயங்கள்கூட, அமைச்சர்கள் வரக்கூடிய காலத்தில் சம்பந்தப்
பட்ட அதிகாரிகளும் வரக்கூடிய நோத்தில் அந்தந்த கிராமங்களில்
இருக்கக்கூடிய குறைகளையெல்லாம் கேட்டு, அதைப்பற்றி அந்த
அதிகாரிகளைக் கூப்பிட்டு சொல்லக்கூடிய காலத்தில், உடனடியாக
இந்தக் காரியங்களில் விமோசனம் ஏற்படு[illegible]



16th March 1961] [Sri M. R. Kandaswami Mudaliar]

மக்களுக்கு பல நன்மை ஏற்படுகிறது. அதன் காரணமாக அவர்
கள் மகிழ்ச்சி அடைகிறுர்கள் இந்த அரசாங்கத்தைப் பற்றி. நான்
உதாரணத்திற்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். என்னுடைய
தொகுதியில் மின்சார இலாகா மந்திரி அவர்கள் சுற்றுப்பிரயாணம்
செய்தார்கள். ஒரு ஊருக்கு ரோடு வசதி இல்லாமல் இருந்தது.
ஹரிஜனங்கள் வாழக்கூடிய இடம் அது. அந்த இடத்தில் யாரா
வது இறந்து விட்டால் பிரேதத்தைக் கொண்டு வருவதற்குக்
கூட வழி கிடையாது. அன்றைக்கு கடும் வெயில். நடுப்பகல்
ஒரு மணி இருக்கும். அங்கு இருக்கும் ஹரிஜனங்கள் மந்திரி
அவர்கள் அந்த இடத்தை வந்து பார்க்கவேண்டும், ரோடு வசதி
இல்லை என்று சொன்னுர்கள். அந்த சமயத்தில் வெயிலைக்கூட
பொருட்படுத்தாமல் மின்சார அமைச்சர் அவர்கள் அந்த
ஊருக்குச் சென்று பார்த்தார்கள். இரு பக்கங்களிலும் நஞ்சை
நிலங்கள் இருக்கின்றன. நடுவிலே 4 அடி அகலத்திற்குத்தான்
ரோடு இருக்கிறது. அதிலேதான் பிரேதத்தைக் கொண்டு
செல்லவேண்டும். அப்பொழுது பக்கத்தில் இருப்பவர்கள்
சண்டைக்கு வருகிறுர்கள். அதன் காரணமாக எவ்வளவு கஷ்டம்
ஏற்படும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அவர்கள்
பலமுறை இதைப்பற்றி விண்ணப்பித்திருக்கிறுர்கள். ஆனுல்
விமோசனம் கிடைக்கவில்லை. அமைச்சர் அவர்கள் நேரில்
சென்று பார்த்த காலத்தில், அவர் உடனே அதிகாரிகளைக்
கூப்பிட்டு 'மக்கள் விண்ணப்பம் போட்டிருந்தால் ஏன் இதை
கவனிக்கவில்லை இதுவரையில், எப்படி அவர்கள் வாழ்க்கை
நடத்தினுர்கள், எப்படி அவர்கள் பிரேதத்தைக் கொண்டு
போவார்கள்? உடனடியாக இந்த விஷயத்தை கவனிக்கவேண்
டும்' என்று சொன்னுர்கள். அதன் காரணமாக அந்த நிமிஷத்தி
லேயே அங்குள்ள நிலத்தை சர்வே செய்து அவர்களுக்கு
வேண்டிய வசதிகளை செய்துகொடுக்கக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்
திக்கொண்டார்கள். கிராம மக்களுக்கு அது எவ்வளவு பயன்
படக்கூடிய நிலைமையில் இருக்கிறது என்பதைச் சொல்லத் தேவை
யில்லை. நகர்புறங்களிலே எல்லா வசதிகளும் இருக்கின்றன.
அவர்கள் வேண்டுமானுல் அமைச்சர்கள் சுற்றுப்பிரயாணம் செய்ய
வேண்டாம் என்று சொல்லலாம். ஆனுல், அமைச்சர்கள் விஜயம்
கிராம பொது மக்களுக்கு பெரிய பலன் தரக்கூடிய நிலைமையில்
இருக்கிறது. என்னுடைய சக அங்கத்தினர்களை மிகவும் பணி
வோடு கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்கள் தயவுசெய்து இந்த
விஷயத்திலே குற்றம் குறை சொல்லுவதை நிறுத்திக்கொள்ள
வேண்டுமென்று. அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணம் செய்யவில்லை
என்று நிறுத்திவிட்டால் கிராமப் பொது மக்கள் மிகவும் பாதிக்கப்
படுவார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஹாஸ்டலில் உள்ள வசதிகளைப் பற்றி சிலர்
சொன்னுர்கள். எல்லோரும் ஒரே குறிக்கோளாகச் சொன்னுர்
கள். ஹாஸ்டலில் பாத் ரூம் வசதி கிடையாது. போன் செய்வ
தற்கும் தகுந்த வசதி கிடையாது. வெளியில் இருக்கக்கூடிய

[Sri M. R. Kandaswami Mudaliar] [16th March 1961

அத்தனை பேர்களும் அங்கு வந்து போன் செய்கிறார்கள். யாரையும் தடுக்கக்கூட முடியவில்லை. கேட்டால், 'கெஸ்டு, கெஸ்டு' என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நான் 'போன்' செய்ய வேண்டுமென்றால், ½ மணி நேரம் அல்லது 15 நிமிஷம் காத்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. ஆகையால், போன் வசதி செய்து தரவேண்டும் . 'அட்டாச்டு பாத் ரூம்' வசதி செய்து தர வேண்டும்.

அதேமாதிரி 'பாஸ்' வசதி செய்து தருவது முக்கியம் என்று கருதுகிறேன். சொந்தக் காரியங்களுக்கு மட்டுமல்ல, சட்டசபையில் அங்கத்தினராக இருந்துகொண்டு நாம் போட்டிருக்கிற திட்டங்களை, நம்முடைய ராஜ்யத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிற திட்டங்களை, ஏற்படுத்தப்பட்டிருக்கிற தொழிற்சாலைகளை நேரில் போய் பார்ப்பதற்கு வசதி இல்லை. மக்கள் பிரதிநிதியாக இருந்தும், இந்த தேசத்தில் என்ன செய்துகொண்டிருக்கிறோம், என்ன செய்திருக்கிறோம், என்பதை நேரிடையாக காணக்கூடிய வாய்ப்பு ஏற்படாமல் இருக்கக்கூடாது. அதற்கு ரயில்வே பாஸ் வசதி செய்து கொடுக்கவேண்டும். அதனால் பெரிய அளவுக்கு ஒன்றும் நஷ்டம் ஏற்பட்டுவிடாது. அப்படி இருக்கும்பொழுது இந்த வசதியை ஏன் செய்து கொடுக்காமல் இருக்க வேண்டும். இந்த வசதியை செய்துகொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயத்தைச் சொல்லி முடித்துக் கொள்ளுகிறேன். அட்மினிஸ்டிரேஷனில் சில விஷயங்களில் காலதாமதம் ஏற்படுகிறது. இனும் நிலங்கள் இருக்கின்றன. அதை சர்வே செய்து அதற்கு 'ரேட்' நிர்ணயம் செய்யவில்லை. ஹரிஜனங்களுக்கு வீடு கட்டுவதற்கு நிலம் கேட்டு 4, 5 வருஷங்கள் ஆகின்றன. ஹரிஜன நல இலாகா அமைச்சரிடம்கூட இது சம்பந்தமாக தேதிகளெல்லாம் குறிப்பிட்டுக் கொடுத்திருக்கிறேன். இந்த நிலத்தின் விலையை இன்னும் நிர்ணயம் செய்யாமல் இருப்பது, எந்த ரேட்டில் நிலத்தை எடுத்துக்கொள்வது என்பது தெரியாமல் இருப்பதினால், ஹரிஜனங்களுக்கு கிணறு வெட்டிக் கொடுக்க இடம் இல்லாமலும் அவர்களுக்கு குடி தண்ணீருக்கு வழி இல்லாமலும் அவர்கள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். இந்த மாதிரி காலதாமதத்தை தடுக்கவேண்டும், இந்த இனும் நிலத்தை உடனடியாக எடுத்துக்கொள்ளுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

**Sri S. M. ANNAMALAI :** கனம் தலைவர் அவர்களே, இங்கே சட்ட மன்றத்திற்கு முன்னால் கொண்டு வரப்பட்டிருக்கக்கூடிய வெட்டுப் பிரேரேபணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளை சொல்ல விரும்புகிறேன். அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணம் செய்வதை, நாங்கள்—மாற்றுக்கட்சிக்காரர்கள்—தேவையில்லை என்று



16th March 1961] [Sri S. M. Annamalai]

சொல்லவில்லை. 'நான்-அபீஷியல் டூர்' 'அபீஷியல் டூர்' என்று தனித்தனியாக போடுங்கள். அதிகாரபூர்வமாக சுற்றுப்பிரயாணம் செய்கிறபொழுது மக்களுடைய வரிப்பணத்தை நீங்கள் வேண்டுமானால் 'டி. ஏ.' வாகப் பெற்றுக்கொள்ளுங்கள். ஆனால் கட்சிப் பிரசாரம் செய்வதற்கு செல்லுகிறபொழுது மக்களுடைய வரிப்பணத்தைப் பெற்றுக்கொண்டு உங்கள் கட்சியை வளப்படுத்துவீர்களானால், ஜனநாயக நாட்டிற்கு அது பாதுகாப்பாக இருக்காது, பாதகமாகத்தான் இருக்கும். ஆகையினால்தான் நாங்கள் சொல்லுகிறோம், நீங்கள் மாதத்தில் 20 நாட்கள் அதிகார பூர்வமாக சுற்றுப்பிரயாணம் செய்யுங்கள். கட்சியை மேலும் வளப்படுத்தவேண்டும் என்று அவா இருக்கக்கூடிய அமைச்சர்கள் 'நான்-அபிஷியல்' அதாவது அதிகாரப்பூர்வமற்ற சுற்றுப்பிரயாணம் போட்டுக்கொண்டு அவரவர்கள் தொகுதியிலோ அல்லது மாநிலம் பூராவும் சுற்றுப்பிரயாணம் செய்யட்டும் தாராளமாக.

அதுபோலவே அமைச்சர்கள் சுற்றுப்பிரயாணம் செய்கிற பொழுது. அவர்கள் கட்சிக்காரர்களைக் கூப்பிட்டு மாவட்ட கலெக்டர்கள் 'மந்திரி சுற்றுப்பிரயாணம் வரப்போகிறார். எந்த நிகழ்ச்சியில் அவர் கலந்து கொள்ளவேண்டும்' என்று சுற்றறிக்கை அனுப்பிவிட்டு, காங்கிரஸைச் சார்ந்த கட்சிக்காரர்களைக் கூப்பிட்டு 'எந்த இடத்தில் கல்நாட்டு விழா செய்யலாம், எந்த கட்டிடம் பழையதாக இருக்கிறது, அங்கே சுண்ணாம்பு அடித்துவிட்டு அமைச்சரை திறப்பு விழா நடத்தச்சொல்லலாம்' என்று அவர்களுடன் கலந்து ஆலோசித்து சுற்றுப்பிரயாணத்தை நிர்ணயம் செய்கிறார்கள். அமைச்சர்களுடைய சுற்றுப்பிரயாணத்தை நிர்ணயம் செய்வதில் சட்ட மன்ற உறுப்பினர்களை கலந்து கொள்ளுவது கிடையாது. அதன் காரணமாக ஏதோ காங்கிரஸ் கட்சிக்கு வேண்டி மந்திரிகள் சுற்றுப்பிரயாணம் வருகிறார்கள் என்று மக்களிடத்திலே ஒரு அபிப்பிராயம் இருந்துகொண்டு வருகிறது. மாற்றுக்கட்சிக் காரர்களை மதிக்கிறோம் என்று சொன்னால், உண்மையிலேயே எல்லா சட்ட மன்ற உறுப்பினர்களையும் நல்ல முறையில் கலந்து ஆலோசனை செய்து மந்திரிகளின் சுற்றுப் பிரயாணத்தை நிர்ணயம் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதுபோலவே மந்திரிகள் சுற்றுப்பிரயாணம் செய்யும்பொழுது கட்சிக் கூட்டங்கள் நடக்கின்றன. தாலுகா காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம், மாவட்ட காங்கிரஸ் கமிட்டி கூட்டம் என்று கூட்டம் கூடி ரகசியமாக பேசுகிறார்கள். அது உண்மையிலேயே சட்ட மன்ற உறுப்பினர்களை அவமதிப்பதாகும். மாற்றுக் கட்சியினர்கள் அமைச்சர்கள் வருகிறார்களே என்று அவர்களுடன் சுற்றுப்பிரயாணம் செய்கிறபொழுது கட்சிக் கூட்டத்தைப் போட்டுக்கொண்டு ரகசியமாக பேசுவது, நாங்கள் வெளியிலே நிற்பது என்றால், அது நல்லது அல்ல, ஜனநாயக நாட்டிற்கு உகந்தது அல்ல என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

[Sri S. M. Annamalai] [16th March 1961

அதுபோலவேதான், சட்டமன்றம் நடக்கும்பொழுது எனக்குத்
தெரிந்த வரையில் 4 ஆண்டுகளாகப் பார்க்கிறேன், 100-க்கு ஏறத்
தாழ 90 நாட்கள் வரை எல்லா அமைச்சர்களும் சட்டமன்றத்தில்
இருந்தது கிடையாது. 5 அமைச்சர்கள், 4 அமைச்சர்கள், 3
அமைச்சர்கள், இப்படித் தான் சட்டமன்றத்தில் பார்க்க முடி
கிறது. சட்டமன்றம் நடைபெறுகிறபொழுது 8 அமைச்சர்களும்
இந்த சட்ட மன்றத்தில் இருந்தார்களா என்பதற்கு புள்ளி விவரம்
பார்க்கிறபொழுது, 100-க்கு 10 நாட்கள்கூட அந்த மாதிரி இருக்க
முடியாது. கனம் முதல் அமைச்சர் அவர்கள் எப்பொழுதும்
சுற்றுப்பிரயாணத்திலே இருக்கிறார்களே தவிர, சட்டமன்றம்
நடைபெறுகிறபொழுது அந்த சமயத்தில் இந்த இடத்திலே
இருக்கவேண்டுமென்று அவர்கள் இருப்பது கிடையாது. தயவு
செய்து அமைச்சர்களை கேட்டுக்கொள்ளுகிறேன், சட்டமன்றம்
நடைபெறுகிறபொழுது அந்த இடத்தில் எல்லா அமைச்சர்களும்
இருந்து மக்களுடைய குறைகளைக் கேட்டுத் தெரிந்துகொள்ள
வேண்டும், மக்கள் சார்பாக வந்திருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்
பினர்கள் தெரிவிக்கக்கூடிய குறைகளை கேட்பதற்கு தயவுசெய்து
சட்டமன்றம் நடைபெறுகிற பொழுது அந்த இடத்தில் அமைச்சர்
கள் இருங்கள்.

அடுத்தபடியாக, நாங்கள் கேள்விகள் கேட்கிறபொழுது சில
அமைச்சர்களுக்கு கோபம் வருகிறது. நாங்கள் கேள்வி கேட்கிற
பொழுது அதற்குத் தகுந்த பதில் சொல்லவேண்டுமென்று கேட்டுக்
கொள்ளுகிறேன். நாங்கள் சரியான கேள்வி கேட்டால்கூட,
அதற்கு பதில் சொல்ல முடியாவிட்டாலும்கூட, ஒரு விதி இருப்ப
தன் காரணமாக பதில் சொல்லுவதற்கு விருப்பமில்லை என்று
சொல்லி உட்கார்ந்து விடலாம். நிதி அமைச்சர் அவர்களை நான்
நேற்று முன் தினம் ஒரு கேள்வி கேட்டேன். ஸ்தல சுய ஆட்சி
கவுன்சில் ரிபோர்சுகள் சர்க்காருக்கு கிடைத்ததா, அந்த ரிபோர்சு
கள் என்ன என்று கேட்டேன். லைப்ரரியில் ஒரு நகல் இருக்கிறது,
அதைப் பார்த்துக்கொள்ளலாம் என்று பதில் சொன்னார். நான்
லைப்ரரியில் சென்று பார்த்தேன். அந்தப் புத்தகம் இல்லை. பிறகு
கேள்வி பிரிவில் ஒரு நகல் இருந்தது. அதைக்கொண்டு வந்து
கொடுத்து பாருங்கள் என்று சொன்னார்கள். சட்டமன்றத்தில்
கேள்விகள் கேட்பதற்கு உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறது.
வேண்டுமானால் பதில் சொல்ல முடியாது என்று சொல்லுங்கள்.
தவறாக பதில் சொல்லாதீர்கள்.

**The Hon. Sri C. SUBRAMANIAM :** லைப்ரரியில் கிடைக்க
வில்லையா என்று கேட்கிறேன். அது எப்படி தவறு என்று தெரிய
வில்லை.

**Sri S. M. ANNAMALAI:** நான் சென்று லைப்ரரியில் ஏறத்தாழ
2 மணி நேரம் அந்த இடத்தில் உட்கார்ந்து அவர்களைக் கேட்டேன்.
தேடிப் பார்த்தார்கள். இன்னும் வரவில்லை என்று சொன்னார்கள்.
உடனே கேள்வி பிரிவிலிருந் அங்கு இருந்த ஒரே ஒரு நகலைக்



16th March 1961] [Sri S. M. Annamalai]

கொண்டுவந்து கொடுத்தார்கள். இப்போது வேண்டுமானால் அதை கொடுக்கிறேன். தவறான பதிலைச் சொல்லாதீர்கள். அதேமாதிரி ரெவின்யூ அமைச்சர் அவர்கள் கொடுத்த புள்ளி விவரம் வேறு, மராமத்து அமைச்சர் அவர்கள் கொடுத்த புள்ளி விவரம் வேறு என்று நேற்று நான் சட்டமன்றத்தில் சுட்டிக் காண்பித்தேன். சென்ற ஆண்டுகூட நான் ஒரு புத்தம் வெளியிட்டிருக்கிறேன். தவறான பதில் சொல்லுகிறார்கள், தயவுசெய்து சொல்லாதீர்கள் என்று சென்ற ஆண்டிலேயே சொன்னேன். தொடர்ந்து பார்த்து வருகிறேன். இதைப்போல பல நிகழ்ச்சிகளைக் காண்பிக்க முடியும். சட்டமன்ற உறுப்பினர்களை அவமானப்படுத்தக்கூடிய நிலையிலே சில கேள்விகளுக்கு இங்கே பதிலளிக்கப்படுமேயானால், அது உண்மையிலேயே வருந்தத்தக்கது. நாங்கள் மைனாரிட்டியாக இருக்கலாம். எண்ணிக்கையில் குறைந்தவர்களாக இருக்கலாம். ஆனால் எங்களுக்கும் உரிமை இருக்கின்ற காரணத்தினால் கேள்வி களைக் கேட்கிறோம். தயவுசெய்து கேள்விக்கு உண்டான பதிலை அளியுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நிர்வாகத் துறையைப் பற்றி சென்ற ஆண்டே சொன்னேன். மிகவும் மோசமாக இருக்கிறது. ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கல்வி இலாகாவி லிருந்து எனக்கு ஒரு எக்ஸ்பிரஸ் லெட்டர் வந்தது. நான் எப்பொழுதுமே காலையில் தபாலைப் பார்த்து விடுவது வழக்கம். தீவிரமாக வந்திருக்கிறதே என்று அவசரம் அவசரமாகப் பிரித்துப் பார்த்தேன். வெற்றுக் காகிதம்தான் அதிலே இருந்தது.

**The Hon. Sri C. SUBRAMANIAM :** முன்பு ஒரு தடவை சொன்னதையே திருப்பிச் சொல்லுகிறீர்களா? அல்லது இன்னொரு தடவை வந்ததா என்று கேட்கிறேன்.

**Sri S. M. ANNAMALAI :** அந்த சமயத்தில் கல்வி அமைச்சர் அவர்கள் இங்கிலாந்திற்குச் சென்று திரும்பி வந்தார். தேதி 27—10—1960. இங்கிலாந்துக்குச் சென்று திரும்பி வந்திருக்கிறாரே, அவருக்குப் பரிசாக இருக்கட்டுமே என்று அதை ரிஜிஸ்டர் தபாலில் அவருக்கு அனுப்பினேன். "பாருங்கள், உங்கள் இலாகா விலிருந்து வெற்றுக் காகிதத்தை அனுப்பியிருக்கிறார்கள். இது நியாயம் தானா" என்று கேட்டு அனுப்பித்தேன். இதுபோல் பல நிகழ்ச்சிகளை காண்பிக்க முடியும். ஆயிரம் புத்தகங்கள் எழுதி அச்சிட்டு வெளியிட முடியும். ஆகவே நிர்வாகத் துறையைச் சீர் திருத்தவேண்டும், நிர்வாக ஊழல்களை தயவுசெய்து நிவர்த்தியுங் கள் என்று கேட்டுக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கும் ஹாஸ்டல் மிகவும் மோசமாக இருக்கிறது. கொசுக்கள் அதிகமாக இருக்கின்றன. கொசுக்கடியைத் தாங்க முடியவில்லை. கொசுக்கள் இருப்பதினால் ஒரே ஒரு சௌகரியம் இருக்கிறது. இரவில் தூங்காமல் படிக்கக்கூடிய வசதி இருக்கிறது. (சிரிப்பு). அதை வேண்டுமானால் சொல்லலாம். நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு மராமத்து இலாகா அமைச்சர் அவர்கள் ஹாஸ்டலுக்கு

வந்து உங்களுக்கு என்னென்ன குறைகள் இருக்கின்றன என்று கேட்டார்கள். இந்த ஆண்டுதான் வந்திருக்கிறார்கள். சென்ற மூன்று ஆண்டுகளாக வந்ததே கிடையாது.

**THE HON. SRI P. KAKKAN :** நான் ஹாஸ்டலுக்கு வரும் பொழுது எல்லாம் அங்கத்தினர் அங்கே இல்லைபோல் தெரிகிறது. பல தடவைகள் வந்திருக்கிறேன்.

**SRI S. M. ANNAMALAI :** அப்படி வந்தும் குறைகள் நீர்க்கப் படவில்லையே. அமைச்சர் அவர்கள் வந்திருக்கலாம். என்னென்ன குறைகள் இருக்கின்றன, சொல்லுங்கள் என்று கேட்டிருக்கலாம். சாகும்பொழுது சங்கரா, சங்கரா என்று சில வைதிகர்கள் சொல்லு கிறார்களே, அதேபோல் நான்காவது ஆண்டில் வந்திருக்கிறார்கள். நாங்கள் செல்லக்கூடிய நிலையில் இருக்கிறோம். (மணி அடிக்கப் பட்டது). ஆகவே இவைகள் எல்லாவற்றையும் கவனிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

*** SRI A. MARIAPPAN :** கனம் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் மான்யக் கோரிக் கையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சில நண்பர்கள் போலீஸ் இலாகா மான்யத்தை விவாதிக்கும்பொழுதே கூறியிருக்கிறார்கள். தேர்தல் சமயங்களில் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள், குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள். சேலம் நகரத்தைப் பொறுத்த வரையில் மிகவும் மோசமான முறையிலே நடந்துகொண்டு வந்திருக்கிறார் கள். சென்ற ஒரு வருஷ காலமாக பல முறைகள் அவர்கள் மக்களை மிரட்டி, சாதாரணப் பொது மக்களை, ஓட்டுப் போடுபவர்களைக்கூட, கேவலமாகப் பேசி, அவர்கள் வராமல் இருப்பதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். இம்மாதிரிச் செய்பவர்கள் மீது போலீசார் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சென்ற 8 மாதங்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் சேலம் நகரத்தைப் பொறுத்த வரையில் பெரும்பாலான காங்கிரஸ் ஊழியர்களை கண்ட இடங் களில் எல்லாம் தாக்கியிருக்கிறார்கள். அம்மாதிரித் தாக்கினதோடு மட்டுமல்லாமல், முனிசிபல் கவுன்சிலர் ஒருவரை, கவுன்சில் அறையி லிருந்து கூட்டம் முடிந்து வரும்பொழுது தாக்கியிருக்கிறார்கள். காங்கிரஸ் ஊழியர்களைத் தாக்குவது மட்டுமல்லாமல், தங்கள் கொள்கைக்கு விரோதமாக இருக்கக்கூடியவர்களைத் தாக்குவது ஒன்றையே அவர்கள் குறிக்கோளாக வைத்துக்கொண்டிருக்கிறார் கள். போலீஸ்காரரைப் பொறுத்த வரையில் "நீங்கள் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள், கொஞ்சம் நிதானத்துடன் நடக்க வேண்டும், மகாத்மா காந்தி கூறியிருக்கிறார்கள், அகிம்சை மனப் பான்மையுடன் நடக்கவேண்டும்" என்றெல்லாம் உபதேசிக்கப்படு கிறது. இந்த அளவுக்கு நிலைமை மோசமாகப் போவதை சர்க்கார் தடுத்துத்தான் ஆகவேண்டும். சேலம் நகரத்தைப் பொறுத்த வரையில், அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள்—குண்டர்கள் என்று



சொன்னாலும்கூட சரியாக இருக்கும்—சாதாரணமாக ஊழியர்களை எல்லா இடங்களிலும் தாக்கிக்கொண்டு வந்திருக்கிறார்கள். ஆதலால் இதை அமைச்சர் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேமாதிரி பொதுக்கூட்டங்கள் நடக்கிறபொழுதுகூட, பல இடங்களிலே, காங்கிரஸ் ஊழியர்களையும் சட்டசபை அங்கத் தினர்களையும்கூட, எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒரு சில அங்கத்தினர் கள், மிகவும் கேவலமான முறையிலே, சொல்லத்தகாத முறையிலே, பேசி வந்திருக்கிறார்கள். திரு. சின்னதுரை அவர்கள் இப்பொழுது இங்கே இல்லை, அவர்களுக்கு இது நன்றாகத் தெரியும். சேலம் நகருக்கு வந்திருந்தபொழுது, திராவிட முன்னேற்றக் கட்சியைச் சேர்ந்தவர்கள் எப்படி பெண்களை எல்லாம் பற்றி—அதாவது குறிப் பிட்டவர்களையும், அவர்கள் வீட்டுப் பெண்களையும்கூட—தாறு மாறாகப் பேசுகிறார்கள் என்பதைப் பற்றி வருத்தப்பட்டார்கள். இம்மாதிரி மோசமான நிலையிலே திராவிட முன்னேற்றக் கழகம் போய்க்கொண்டிருக்கிறது. நீங்கள் இதை எல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா என்று தனிப்பட்ட முறையில்கூட என்னிடம் கேட்டார்கள். இந்த நிலைமையை நீண்ட நாட்களுக்கு நீடிக்கவிடக்கூடாது என்று சர்க்காருக்குத் தெரிவித்துக்கொள் கிறேன். இந்த அளவுக்குப் போய்க்கொண்டிருந்தால், தடி எடுத்தவன் தண்டல்காரன் என்ற நிலைமைதான் ஏற்படும். சாதாரண நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்கூட ஓட்டுப் போடும் இடங்களுக்குச் செல்லப் பயப்படுகிறார்கள். தவறான பிரசாரம் செய்யப்படுகிறது.

அம்மாபேட்டை நெசவாளர் காலனியில் பூராவும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார். நண்பர் கோவிந்தசாமி வந்திருக்கிறார்கள். (ஸ்ரீ ஏ. கோவிந்தசாமி: நான் வரவில்லையே). நண்பர் பழனிசாமி வந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். முதலிலே நாங்கள் ஒரு வீட்டுக்குச் சென்று பார்க்கும்பொழுது, அங்கே திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களின் படம் இருந்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அங்கத்தினர் எம். பி. சுப்பிர மணியம் அவர்கள் இதிலே பாகுபாடு காட்டப்படுவதாகச் சொன் னார்கள். இந்தமாதிரி தவறான பிரசாரம் செய்வதையே குறிக் கோளாக வைத்திருக்கிறார்களே தவிர, மக்களுக்கு நல்ல காரியங் கள் செய்வதிலே அவர்கள் அக்கறை எடுத்துக்கொள்வதில்லை.

குறிப்பாக மந்திரிகள் சுற்றுப்பிரயாணம் செய்வதைப்பற்றி எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் கூறினார்கள். அப்படிச் சுற்றுப் பிரயாணம் செய்தால், தங்களுடைய கட்சி செல்வாக்கை இழந்து விடுகிறது என்ற காரணத்திற்காக அவ்வாறு குறிப்பிடுகிறார்கள். நண்பர் கந்தசாமி முதலியார் அவர்கள் மந்திரிகள் சுற்றுப்

[Sri A. Mariappan] [16th March 1961

பிரயாணம் செய்வதினால் மக்கள் அடையும் நன்மைகளைப்பற்றிக் கூறினார்கள். சேலம் நகரத்தைச் சுற்றி இருக்கக்கூடிய பல கிராமங்கள், மின்சார வசதி கிடைக்காமல், ரோடு வசதி இல்லாமல், மிகவும் மோசமான நிலையிலே இருந்தன. இதையெல்லாம் கனம் அமைச்சர் ராமையா போன்றவர்களை எல்லாம் நேரில் அழைத்துச் சென்று காண்பித்திருக்கிறோம். இவற்றை எல்லாம் மந்திரிகள் நேரடியாக வரும்பொழுதுதான் தெரிந்துகொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது. நகர்ப்புறத்தில் எல்லா வசதிகளும் இருக்கும்பொழுது அதைச் சுற்றியுள்ள கிராமப்பகுதிகளில் இம்மாதிரி மின்சார வசதி, ரோடு வசதி, பள்ளிக்கூட வசதி இல்லாதது வருந்தப்படக்கூடிய விஷயம். இதை எல்லாம் மந்திரிகள் நேரில் பார்ப்பதற்கு அவர்கள் சுற்றுப்பிரயாணம் செய்வது அவசியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் கட்சிக் கூட்டங்களில் கலந்து கொள்ளக்கூடாது என்று சொல்லுகிறார்கள். சட்டசபை அங்கத்தினர்கள் கமிட்டிக் கூட்டங்களுக்காகச் செல்லும்பொழுது, அதே மாதிரி நடந்துக்கொள்ள வேண்டாமா என்பதைப் பற்றியும் நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நாம் பல கமிட்டிக் கூட்டங்களுக்குப் போகிறோம். நம்முடைய கட்சிக் கூட்டங்களுக்குப் போகிறோம். பொதுக் கூட்டங்களில் ஈடுபடுகிறோம். அமைச்சர்களைப் பொறுத்த வரையில் பொது விவகாரங்களைக் கவனித்த பிறகு அங்கே இருக்கக் கூடிய ஊழியர்களை அழைத்து, கட்சி விவகாரங்களில் கலந்து கொள்கிறார்கள். அம்மாதிரிக் கலந்து கொள்வது தவறு என்று நான் நினைக்கவில்லை. ஜனநாயக நாட்டில் அமைச்சர்கள் தங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் எந்த முறையில் பொது மக்களுக்குச் செயலாற்றுகிறார்கள் என்பதைப் பார்க்க சந்தர்ப்பம் இருக்கவேண்டும்.

அந்த அளவில்தான் அமைச்சர்கள் ஊழியர்களைச் சந்தித்துப் பேசுகிறார்கள். எதிர்க்கட்சி சட்டசபை அங்கத்தினர்கள் வந்தால் பேசுவதற்கு சந்தர்ப்பம் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் அது சரியில்லை. அவர்களுக்கும் நிறைய சந்தர்ப்பங்கள் கொடுக்கப்படுகின்றன. எதிர்க்கட்சி அங்கத்தினர்களுக்கும் தெரிந்துதான் கலெக்டர்கள் அமைச்சர்களின் சுற்றுப் பிரயாண அறிக்கையை ஏற்பாடு செய்கிறார்கள். எதிர்க்கட்சி அங்கத்தினர்களும் மந்திரிகளுடன் சுற்றுப் பிரயாணம் செய்கிறார்கள். அப்படி அவர்கள் மந்திரிகளோடு சுற்றுப் பிரயாணம் செய்கிறார்கள் என்பதைப் பார்த்திருக்கிறேன். அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணத்தினால் தங்கள் கட்சிக்கு செல்வாக்குப் போய்விடும் என்று பயந்துதான் அவர்கள் இப்படிச் சொல்லுகிறார்கள் என்று நினைக்கிறேன். அதனாலேயே அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணத்தை கண்டிக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே அமைச்சர்கள் அடிக்கடி சுற்றுப் பிரயாணம் செய்யவேண்டும், அப்படிச் செய்தால்தான் அவர்கள் அந்தந்தத் தொகுதிகளில், பகுதிகளில் உள்ள நிலைகளைத் தெரிந்து கொள்ள முடியும். எலெக்ட்ரிசிடி போன்ற பிரச்சினைகள் வரும் போது அவர்கள் நேரில் அந்தப் பகுதிகளுக்கு வந்தால்தான்



16th March 1961] [Sri A. Mariappan]

எங்கள் ராசிபுரம் பகுதிகளில் உள்ள நல்லது. அப்படித்தான் நேரில் பார்த்தால்தான் தெரியும். பார்த் ஆழமான கிணறுகளை நேரில் பார்த்தால்தான் தெரியும். பார்த் தாலே பயமாக இருக்கும். சட்ட சபையில் கேட்டால் போதாது. நேரிடையாகச் சென்று பார்த்தால்தான் எல்லா விஷயங்களையும் தெரிந்து கொள்ள முடியும், அந்தப் பகுதி மக்களுக்கு உடனடியாக உதவிகள் செய்ய முடியும். ஆகவே, அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணம் செய்வது மிக அவசியம் என்று கூறிக்கொண்டு, எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் தவறாக நடப்பதையும் அமைச்சர்கள் கண்டிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

*SRI K. R. NALLASIVAM: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நான் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் பேச விரும்பும்போது, வெட்டுப் பிரேரணைகளில் உள்ள தேர்தலுக்கு மூன்று மாதங்களுக்கு முன்னால் அமைச்சரவை ராஜீனாமா செய்யவேண்டும் என்றிருக்கும் பிரேரணையை முக்கியமாக ஆதரித்துப் பேச விரும்புகிறேன். அதைப் பொருத்த வரையில், இங்கே இருக்கும் மந்திரி சபை அதைப்பற்றி நன்கு யோசனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். எதிர்க் கட்சிக்காரர்கள் சொல்லுகிறார்கள் என்பதற்காக அல்ல; அதை ஒரு சோதனையாக ஏன் செய்து பார்க்கக் கூடாது என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதாவது இன்றைக்கு நாம் நான்காவது ஆண்டில் இருக்கிறோம். இன்னும் ஒரு ஆண்டு காலத்தில் தேர்தல் வர இருக்கிறது. இந்த நான்கு ஆண்டுகளாக இந்த அமைச்சர்கள் நடுநிலையில் இருந்து நடந்திருந் தாலும், சில சந்தர்ப்பங்களிலே உணர்ச்சி வசப்பட்டு, நடவடிக்கை களில் ஈடு படுகிறார்கள் அல்லது பேசி விடுகிறார்கள். ஆகவே, மூன்று மாதங்களுக்கு முன்னதாக அதிகாரிகள் கூட வராமல், எதிர்க்கட்சி அங்கத்தினர்களுக்குச் சமமாக தேர்தலில் ஈடுபட் டால் என்ன? சர்க்கார் சாதனைகளை தங்கள் சாதனைகளை எடுத்துச் சொல்ல சம சந்தர்ப்பம் இருக்கும் அல்லவா? வேறு எந்த ராஜ் யத்திலும் அவ்விதம் செய்யாவிட்டாலும்கூட, எல்லாவற்றிலும் முன்னோடியாக இருக்கும் நம் ராஜ்யம் ஏன் இதிலும் வழிகாட்டக் கூடாது என்று கேட்டுக் கொள்ளவிரும்புகிறேன்.

அமைச்சர்கள் ஏராளமாக தொகுதிகளில் சுற்றுப்பிரயாணம் செய்ய வேண்டியது மிகவும் அவசியம். சட்ட சபை வேலைகளோடு, தொகுதி மக்களின் வேண்டுகோள்களை நேரிடையாக அறிய சந்தர்ப்பம் வேண்டும். எதிர்க்கட்சிக்காரர்களும், மக்கள் சார்பில் அவர்கள் பிரச்னைகளுக்கு தீர்வு காண மந்திரிமார்கள் வரும்போது ஏராள விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டால் மந்திரிகள் சுற்றுப் பிரயாணம் குறையும்; அப்படிச் சாத்தியமான முறைகள் இருக் கின்றன. ஆகவே எதிர்க் கட்சிக்காரர்கள் அதைக் கண்டு கண் டிக்க வேண்டாம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[Sri K. R. Nallasivam] [16th March 1961

இன்றைக்கு மந்திரிமார்கள் சுற்றுப் பிரயாணம் செய்யும் போது இரண்டு காரியங்கள் செய்கிறார்கள். ஒன்று கட்சிக் கூட்டங்களில் கலந்து கொள்வது; இரண்டு, பொது விழாக்களில் கலந்து கொள்வது. கட்சிக் கூட்டங்கள் பற்றி ஆட்சேபணையில்லை. கட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்ட பிறகு—எல்லோரும் அப்படிச் செய்கிறார்கள் என்று சொல்லவில்லை. ஒரு சிலர் செய்கிறார்கள்—ஒரு சிலர் பொதுக் கூட்டங்களுக்கு, விழாக்களுக்கு, தண்ணீர் தொட்டியைத் திறப்பதோ அல்லது பள்ளியைத் திறப்பதோ போன்ற விழாக்களில் அறிந்தோ அறியாமலோ கட்சிப் பிரசா ரத்தில் இறங்கிவிடுகிறார்கள், தங்கள் பிரசங்கத்தை கட்சிப் பிரசா ரமாகத் திருப்பி விடுகிறார்கள். பொது விழாக்களுக்கு அமைச் சர்கள் வரும்போது, தொகுதியிலுள்ள எதிர்க் கட்சி அங்கத்தினர் களும் கூடுமான வரையில் போகிறோம். அந்தக் கூட்டங்களில் அமைச்சர்மார்கள் கட்சிப் பிரசாரத்தில் இறங்கும் போது எதிர்க் கட்சி அங்கத்தினர்களுக்கு சிக்கலான சூழ் நிலையை உண்டாக்கி விடுகிறார்கள். அமைச்சர்கள் எதிர் கட்சிகளைத் தாக்குவது பற்றி கவலையில்லை. அவர்கள் ஒரு கூட்டத்தில் அப்படிச் சொன்னால், உடனே இன்னொரு இடத்தில் நாங்கள் ஒரு கூட்டம் போட்டு அவர் களைத் தாக்குகிறோம். ஆனால், பொது விழாக்களில் நாங்கள் இருக்கும் கூட்டங்களில் கட்சிப் பிரசாரம் செய்வதோ, கட்சிகளைத் தாக்குவதோ சரியாக இல்லை. சர்க்காருடைய சாதனைகளை எடுத்துச் சொல்வதிலும் ஆட்சேபணையில்லை. ஆனால், கட்சிப் பிரசாரம் செய்யும்போது, கட்சியின் சாதனைகள், சர்க்காரின் சாதனைகள் என்று சொல்லக் கூடிய விஷயம் நுணுக்கமானது. அந்த விஷயங்களில் பொது மக்கள் முன்னிலையில் சிக்கல்களை உண்டு பண்ண வேண்டாம் என்று கூறிக் கொள்ளுகிறேன். அதே போல எதிர்க் கட்சிகளை தாக்குவதும் பொதுக் கூட்டங்களிலும் இருக்கக் கூடாது. அப்படிச் சொல்லும் போது, நிச்சயமாக நாங் களும், எதிர்க்கட்சிகளும் அம்மாதிரியே நடக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். அது சம்பந்தமாகத் தீர்ப்பு கொடுக்க வேண்டிய வர்கள் பொது மக்கள்.

சட்ட சபை நடவடிக்கைகளைப் பொறுத்த வரையில், தமிழி லேயே எல்லா நடவடிக்கைகளும் இருக்க வேண்டும். 10 ஆண்டு காலத்தில் ஆந்திரமும் கேரளாவும் பிரிந்த பிறகு, இங்கே இருக்கக் கூடிய அங்கத்தின்ர்களிளே, ஆங்கிலத்தில் பட்டம் பெற்றவர்கள், சர்க்கார் வெளியிட்டுள்ள "Who is w'o" புத்தக அடிப்படையிலே பார்க்கும் போது, பட்டம் பெற்றவர்கள் மொத்தத் தொகையில் நாலில் ஒரு பாகம் தான்; ஆங்கிலத்தில் நல்ல பயிற்சி பெற்றவர்கள் பட்டம் பெற்றவர்களாக இருப்பார்கள் என்ற அடிப்படையில் சொல்லுகிறேன். நல்ல அனுபவத்தின் பேரில் மொழிப் பயிற்சி அடைந்திருக்கக் கூடியவர்கள் சுமார் 10 சதவிகிதம் இருப்பார்கள். மீதி உள்ளவர்கள் அவ்வளவு பேரும் தமிழிலே நடவடிக்கைகள் நடந்தால்தான் புரிந்து கொள்ளமுடியும். தமிழ் மக்களுக்காக



16th March 1961] [Sri K. R. Nallasivam]

சட்ட திட்டங்களும் மற்றும் பல காரியங்களும் செய்யப்படும் இந்த சபையில் எல்லாம் தாய் மொழியில் இல்லாமல் இருந்தால் மக்க ளுடைய அங்கத்தினர்கள் புரிந்து கொள்ள முடியாது; மக்களுக் காக வாதாடும் உறுப்பினர்களுக்கு இங்கே அது முட்டுக் கட்டை யாக இருக்கிறது. அலுவலகங்களில் ஆங்கிலத்தில் செய்வதை தமிழிலேயே செய்ய வேண்டும் என்பதில் கஷ்டங்கள் இருக் கின்றன, ஒப்புக்கொள்ளுகிறேன். அதே நேரத்தில் இந்தச் சட்ட சபையில் இன்றைக்குப் பல விஷயங்களைத் தமிழிலேயே நடத்த லாம். கொஞ்ச நேரத்திற்கு முன்பு உரிமை பிரச்னைபற்றி விவா தம் நடைபெற்றது. நுணுக்கமான விஷயங்கள் அவை என்ற எண்ணம் இருக்கிறது. நுணுக்கமான விஷயங்களைத் தமிழிலே பேச முடியாது என்ற பயத்தைக் கொண்டிருந்தால், அதுவே தமிழ் வளர்ச்சிக்குத் தடையாக இருக்குமே என்ற பயம் உண்டா கிறது. ஆகவே, இம்மாதிரி விஷயங்களில், அமைச்சரவர்களும், எதிர்க்கட்சித் தலைவர்களும் தமிழையே கையாள வேண்டும். கேள்விக்குப் பதில், அதுபற்றிய புள்ளி விவரங்கள், கேள்விமீது கொடுக்கப்படும் அறிக்கைகள், மற்ற அறிக்கைகள் எல்லாம் தமிழிலேயே கொடுக்க உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும். நிர்வாக அறிக்கைகள் ஒவ்வொரு இலாகாவிலும் ஆங்கிலத்தில் இருக்கிறது. அவற்றிற்கு மொழி பெயர்ப்பு கிடையாது. அதைக் கொடுக்கவேண்டும்.

இந்த சட்டசபை இலாகாவினர் "Legislature Information" என்ற ஒரு நல்ல பத்திரிகையை ஆங்கிலத்தில் வெளியிடுகிறார்கள். மற்ற ராஜ்யங்களில் நடப்பதையும் மற்றும் அங்கத்தினர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய பல விஷயங்களையும் கொண்ட பத்திரிகை இந்த லெஜிஸ்லேடிவ் இன்பர்மேஷன். பல நுணுக்க மான விஷயங்களைக் கொண்ட இந்தப் பத்திரிகையை தமிழிலேயே வெளியிட்டுக் கொடுக்க முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அங்கத்தினர்களுக்கு ரெயில்வே பாஸ் கொடுக்க வேண்டும் என்று நீண்ட நாட்களாக கோரப்படுகிறது. என்னைப் பொருத்த வரை, ராஜ்யம் பூராவுக்கும் கொடுக்காவிட்டாலும் ஒரு அங்கத் தினர் தன் தொகுதியிலிருந்து, தாலுகா தலைநகருக்கு, ஜில்லா தலை நகருக்கு, இந்த மாநிலத் தலை நகருக்குப் போய்வா ஏதாவது ஒரு வகையில் உதவி செய்ய வேண்டும். ராஜ்யம் பூராவுக்கும் போக இல்லாவிட்டாலும் பாதகமில்லை.

சட்ட சபை அங்கத்தினர்களுக்கு சம்பளத்தைப் பொருத்த வரை ஒரு வார்த்தை. ஒவ்வொரு அங்கத்தினரும் தன் தொகுதி யில் நல்ல வேலை செய்ய வேண்டுமானால், அவர்களுக்கு வேண்டிய பல சௌகரியங்கள் செய்ய வேண்டும்; அவர்களுக்குத் தபால், போக்கு வரத்து, உதவியாளர் போன்றவைகளில் பல கஷ்டங்கள், சங்கடங்கள் இருக்கின்றன. அவைகளை யெல்லாம் போக்க வேண்டும். அவர்கள் சம்பளத்தையாவது உயர்த்த வேண்டும்.

உண்மையிலேயே தொகுதிகளில் வேலை செய்கிறவர்களுக்குத் தினசரி 10 ரூபாயாவது கொடுக்க வேண்டும் ; அப்பொழுதுதான் அவர்கள் ஒழுங்காக வேலைசெய்ய முடியும்.

அங்கத்தினர்களுடைய ஹாஸ்டலைப்பொறுத்த வரை, பெரிய அளவில் பிருமாண்டமாக எல்லா வசதிகளும், பாராளு மன்ற அங்கத்தினர்களுக்கு இருப்பதுபோல் வேண்டும் என்று கேட்க வில்லை; ஆனல், அங்கே கொசுக்கடியாவது இல்லாமல் செய்ய வேண்டும். பெரிய மெத்தை, எல்லா சௌகரியங்களோடும் வேண்டும் என்று சொல்லவில்லை. ஆனல், இந்தக் கொசுக்கடியைப் போக்கி, ஒழிக்க, ஒரு படுக்கை கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடிக்கிறேன்.

11 a.m.

*Sri S. RAMASAMY THEVAR : அவர்களே, இந்த மான்யக் கோரிக்கையைப் தற்காலிகத் தலைவர் அன்பர்கள் பலர், மந்திரிகளுடைய சுற்றுப் பற்றிப் பேசிய பற்றியே அதிகமாகப் பேசினர்கள். மந்திரிகள் சுற்றுப் பிரயாணத்தைப் செய்வதை நான் பெரிதும் வரவேற்கிறேன். மந்திரிகள் சுற்றுப் பிரயாணம் பிரயாணம் வருவதால்தான் பழுது பார்க்கப்படாத ரோடுகள் பழுது பார்க்கப்படுகின்றன ; சீர்படுத்தப்படாத ஆபீஸ்கள் சீர் படுத்தப்படுகின்றன ; ரிகார்டுகள் சரியாக வைக்கப்படாத இடங் களில் எல்லாம் அவை சரியாக வைக்கப்படுகின்றன. மந்திரிகள் வருகிறார்கள் என்ற பயத்தினுல் சிறிது கவனிக்கப்படுகிறது. இல்லையென்றுல், ஒரே தூக்கமாகத்தான் இருக்கும்.

இன்று நாட்டிலே நிர்வாகம் ஓரளவு நல்ல முறையில் இல்லை என்பது எல்லோருக்கும் தெரியும். ஊழல்கள் மலிந்துவிட்டன. எங்கு பார்த்தாலும் லஞ்சம் போன்ற நடவடிக்கைகள் நடந்து வருகின்றன. இவைகளைப் போக்குவதற்கு நமது மந்திரிகள் திடீர் திடீர் என்று சுற்றுப் பிரயாணம் செய்வார்களாயின், நல்ல முறை யில் நிர்வாகம் நடக்கும். மந்திரிகள் எந்த நேரத்தில் வருவார் களோ என்று அங்குள்ளவர்களுக்குப் பயம் இருக்கும். நமது அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணம் வரும்போது, நல்ல முறையில் சுற்றிப் பார்க்கட்டும். மக்களுடைய குறைகளைப் போக்கட்டும். 'உங்களுக்கு என்ன வேண்டும்? குளங்கள் வெட்ட வேண்டுமா? பள்ளிக்கூடம் ஆரம்பிக்க வேண்டுமா?' என்று மக்களிடத்தில் கேட்டு காரியங்களை நிறைவேற்ற வேண்டும். உத்தியோகஸ்தர்கள் நல்ல முறையில் மக்களுடைய கோரிக்கைகளைக் கவனிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அதிகாரிகள் அப்படிச் செய்கிறார்களா என்று மக்களிடம் கேட்டுத் தெரிந்து ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (Mr. Speaker in the Chair) முன் கை நீண்டால்தான் முழங் கை நீளும் என்று அமைச்சர்கள் மக்களிடம் சொல்லாமல், அவர்களுடைய குறைகளை போக்க முன் வந்தால், அதிகாரிகளும் அவர்களைப் பின்பற்றுவார்கள் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.





சட்டசபை அங்கத்தினர்களுக்கு வேண்டிய வசதியைப்பற்றி இங்கு பேசப்பட்டது மிகவும் பொருத்தமானது. அவர்களுக்கு இப்பொழுதிருக்கும் வசதி மிகவும் குறைவானது. கொசுக் கடி உபத்திரவம் இருக்கிறது என்று எல்லோரும் முறையிடுகிறார்கள். இது கவனிக்கப்படவில்லை. சாதாரண மக்களுக்கு உள்ள வசதிகூட சட்டசபை அங்கத்தினர்களுக்கு இல்லை என்பதை நான் வருத்தத் தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அங்கத்தினர்களுக்கு போக்குவரத்து வசதியைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். சட்ட சபைக் கூட்டங்களுக்கு வரும் போதுதான் அவர்களுக்கு ரயில் வசதி அளிக்கப்படுகிறது. மற்ற சமயங்களில் பாஸ் கிடையாது. எனக்கு முன் பேசிய கனம் அங்கத்தினர் சொன்னபடி, அவர்களுடைய ஜில்லாவிலே சுற்றுப் பிரயாணம் செய்யும்போதும், மாநிலத் தலைநகருக்கு வரும் போதும் ரயில்வே பாஸ் வசதி வழங்குவது அவசியம் என்பதை நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

தேர்தல் நேரத்தில் மக்கள் வோட்டுச் சாவடிக்குச் சென்று வோட்டுப் போடக் காத்திருக்கும்போது நிழல் இல்லாததால் அவர்கள் வெயிலில் பல மணி நேரம் இருக்க வேண்டியிருக்கிறது. வோட்டுச் சாவடிக்கு வந்தவர்கள்கூட, 'இது என்ன தொல்லை' என்று நினைத்து வாக்குகளைப் போடாமல் கூட திரும்பிப் போகக் கூடிய சந்தர்ப்பத்தை நான் கண்டிருக்கிறேன். ஆகையால், ஒவ்வொரு வாக்குச் சாவடிக்கும் பக்கத்தில் மக்கள் இருக்கும் அளவுக்கு நிழல் ஏற்படுத்த வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது தேசத்திலே வயது வந்த அத்தனை பேருக்கும் வோட் டுரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அதைக் குறித்து நாம் பெருமைப் படுகிறோம். அப்படியிருந்தும் மக்கள் தங்கள் வாக்குகளை நல்ல முறையில், நியாயமான முறையில், நேர்மையான முறையில் போடக்கூடிய அளவிற்கு நாம் அவர்களைப் பயிற்றுவிக்கிறோமா என்றால் அதுதான் நாட்டில் குறைவாகக் காணப்படுகிறது. 1957-ம் ஆண்டு நடந்த தேர்தலில், எனது தொகுதியில் ஒரு பெரிய விஷயம் நடந்தது. அதாவது 100 வோட்டுச் சீட்டுக்கள் கொண்ட ஒரு கட்டு அப்படியே திருடப்பட்டு, அந்த 100 வோட்டுக்களும் கோஷாப் பெண்களுடைய 'பூத்' தில், அதாவது 90-ம் எண்ணுள்ள பூத்தில் போடப்பட்டது. அவ்வளவு கள்ள வோட்டுக்களும் காங்கிரஸ் பெட்டியில் விழுந்தன என்றால், இது வருந்தத்தக்க விஷயம். நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டு, நாட்டுக்குச் சுதந்திரம் தேடித் தந்த ஒரு கட்சி, மக்களைத் தீய வழியில் பழக்குவது நல்லதல்ல என்று நான் எடுத்துச் சொல்கிறேன். நேர்மையான முறையில் தேர்தல் நடக்கவேண்டும் என்பதை நான் வற்புறுத்திச் சொல்கிறேன். இம் மாதிரி நடந்த ஒரு காரியத்தைக்கூட சர்க்கார் நல்ல முறையில் விசாரிக்காமல் அப்படியே விட்டுவிட்டார்கள். இனிமேலாவது இம்மாதிரி நடக்காமல் இருக்க ஆவன செய்ய வேண்டு மென்று நான் கேட்டுக்கொண்டு இத்துடன் என் உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

*Sri T. KARIA GOWNDER : கனம் சபாநாயகர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சட்டசபை நிர்வாகத்தைப் பற்றிப் பேசினாலும், தமிழ்நாட்டிலே நடக்கும் நிர் வாகத்தைப்பற்றி பேசினாலும், எதிர்க் கட்சியிலிருந்து பேசிய நண்பர்கள், ஏதோ அமைச்சர்களெல்லோரும் சுற்றுப் பிரயாணம் செய்வது கூடாது என்றும், குறிப்பாக மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் சுற்றுப் பிரயாணம் அதிகமாகச் செய் கிறார்கள் என்றும்கூட, குற்றம் சாட்டிச் சொன்னார்கள். ஆனால், மக்களிடத்திலே உண்மைக்கு மாறாக எதிர்க் கட்சி நண்பர்கள் செய்து வரும் பிரசாரத்தைப் போக்க வேண்டுமென்ற எண் ணத்தைக் கொண்டுதான், அமைச்சர் அவர்கள் சுற்றுப் பிரயாணம் செய்கிறார்கள் என்பதை நான் இந்தச் சமயத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய மதிப்பிற்குரிய திரு. கோதண்டராமன் அவர்கள், 'அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணத்தின்போது பார்ப்பது இல்லை' என்று குற்றம் சாட்டிச் சொன்னார்கள். இப்படிப் பேசிவிட்டு வெட்டுப் பிரேரணையைக் கொண்டுவந்து அமைச்சர்களிடத்தில் இந்த மன்றத்திலேயே தங்களுடைய காரியத்தை உடனே சாதித்துக் கொண்டார்கள். தங்களுக்கு வேண்டியதை யெல்லாம் சொல்லி, அமைச்சரவர்களிடத்தில் வாக்கைக்கூட வாங்கி விட்டார்கள்.

எதிர்க் கட்சி உறுப்பினர்களுக்கெல்லாம் அமைச்சர்களுடைய சுற்றுப் பிரயாணத் திட்டங்கள் அனுப்பப்படுவதில்லை என்ற குற்றச் சாட்டு சொல்லப்பட்டது. ஆனால், நிலைமை எப்படியிருக் கிறதென்றால், அமைச்சரவையினர் எங்களுக்கெல்லாம் சமா தானம் சொல்லி அனுப்பிவிடுகிறார்கள். நாங்களெல்லாம் அமைச்ச ருடைய அறைக்கு அதிகமாகப் போவதில்லை. போய்க் கேட்டாலும் 'இன்னும் கொஞ்சம் பொறுங்கள்' என்று சொல்கிறார்கள். சட்ட மன்றம் நடக்கும் காலத்திலேயே எதிர்க் கட்சி நண்பர்கள் அமைச்சர்களிடத்தில் சென்று காரியங்களைச் சாதித்துக் கொண்டும் கூட, உண்மையை மறைக்கிறார்கள். இது வருந்தத் தக்கது. இந்த அமைச்சரவை சாதித்ததை, அவர்களுடைய புகழை உலகமே போற்றுகிறது. அப்படியிருக்க இவர்கள் ஏன் பயப்படுகிறார்கள் என்பது எங்களுக்கு ஆச்சரியமாகத் தான் இருக்கிறது.

நீலகிரியில் சட்ட மன்றக் கூட்டம் நடக்க வேண்டு மென்று நாம் முடிவு செய்திருந்தோம். மதிப்பிற்குரிய நண்பர் திரு அண்ணாதுரை அவர்கள், "தமிழ்நாடு என்று பெயர் வைத்துவிட்டால் சட்டமன்றக் கூட்டம் நீலகிரியில் நடப்பதில் ஆட்சேபணை இல்லை" என்று சொன்னார்கள். நீலகிரிக்குப் போவதற்குள்ளாகவே, கூனூர் சென்ற போதே அங்கு பெரிய சுவரொட்டி விளம்பரங்களைப் பார்த்தேன். "கும்பி எரியுது, குடல் கருகுது, கோலேந்திகளே, உங்களுக்குக்



குளு குளு ஊட்டி ஒரு கேடா!" என்று விளம்பரம் செய்திருந் தார்கள். ரொம்ப அழகான தமிழில். 'கோலேந்திகள்' என்றால் அரசாளுகின்றவர்கள் என்றுதான் அர்த்தம். நாங்கள் எப்பொழு தும் கோலேந்தப் பிறந்திருக்கிறோம் என்று இந்தச் சமயத்தில் நான் அவர்களுக்கு நினைப்பூட்ட விரும்புகிறேன். நாட்டுக்காகத் தியாகம் செய்தோம்; நாட்டுக்குச் சுதந்திரம் வரவேண்டுமென்று அந்தக் காலத்தில் கஷ்டப்பட்டோம்.

Sri A. GOVINDASAMI : கனம் அங்கத்தினர் கஷ்டப் பட்டாரா?

Sri T. KARIA GOWNDER : நாங்கள்தான் கஷ்டப் பட்டோம். அதிலே சந்தேகம் என்ன இருக்கிறது? நாங்களெல் லாம் ஜெயிலுக்குப் போகக்கூடாது, ஜில்லாவிலே இருக்கவேண்டு மென்று சொல்லிவிட்டார்கள். அதனால், நாங்கள் போகவில்லையே தவிர, "நீங்கள் கஷ்டப்பட்டீர்களா?" என்று கேட்கா தீர்கள் என்று நான் அவருக்குச் சொல்கிறேன். 'நீங்கள் கஷ்டப்பட்டீர்களா?' என்று இப்பொழுது எங்களைப் பார்த்துக் கேட்கிறார்களே, அவர்களைச் சார்ந்தவர்கள் எந்த விதத்திலாவது பிரிட்டிஷ் அரசாங்கம் இந்த நாட்டிலே நிலைபெறவேண்டுமென்று சொன்னார்கள் அப்பொழுதும். அதுவும் கூட்டு சேருகிறார்கள். அந்தக் கூட்டைப்பற்றி என்ன என்னவோ சொல்கிறார்கள். பொதுவாக உண்மையை எடுத்து மக்களிடத்தில் சொல்வது இல்லை. திரு. கோதண்டராமன் அவர்கள்கூட முழுக்க முழுக்க ஏமாற்றுகிறார்கள் என்பது என் எண்ணம். உண்மையை மறைத்துச் சொல்கிறார்கள். காரணம் கலெக்டரிடம் வருகிறபோது இருபது, முப்பது ஆட்களைக் கூப்பிட்டுக் கொண்டு வருகிறார். அப்படியே இங்கே மந்திரிகளிடம் போகும்போது—குறிப்பாகத் தொழில் அமைச்சர் அவர்களிடத் தில் பலவித சந்தர்ப்பங்களில் நுழைந்து ரொம்ப சாமர்த்தியமாக, திறனோடு காரியத்தைச் சாதித்துக்கொண்டு வெளிவந்துவிடுகிறார். என்னைவிட அவர் அதிகமான காரியங்களை அமைச்சர்களிடத்தில் சொல்லி சாதித்துக் கொண்டிருக்கிறபோது மக்களிடம் அமைச்சர் கள் ஒன்றுமே செய்வதில்லை என்று பேசுவது முழுப் பூசனிக் காயை சோற்றில் மறைப்பது போலத்தான் இருக்கிறது.

நீலகிரிக்குச் சென்றபோது பார்த்தோம். குந்தாவில் உலகமே போற்றும்படியாகக் காரியம் செய்திருக்கிறோம். 12 கோடி கொடுத் தோம், நன்றாகக் காரியம் செய்திருக்கிறீர்கள், இன்னும் கூடக் கொடுக்கிறோம் என்று உலகத்தவர்கள் பாராட்டக்கூடிய வகையில் செய்திருக்கிறோம். இதையெல்லாம் போய்ப் பார்க்காது கும்பி எரியுதே என்றால் ஏன் எரியாது? இப்போது தமிழ்நாடு என்றும் பெயர் வைத்துவிட்டோம். அவர்கள் தாராளமாக வரலாம். ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களை 'செகண்டு ஸீஸன்' என்று சொல் வார்கள். தமிழ்நாடு என்று பெயர் வைத்ததனால் இந்த செகண்ட் ஸீஸனில் நமது சட்டசபைக் கூட்டத்தை அங்கே நடத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[Sri T. Karia Gownder] [16th March 1961

நீலகிரியை எடுத்துக் கொண்டால் விவசாயத் துறையில்கூட முன்னேறியிருக்கிறது. அங்கே புதிய புதிய தொழில்கள் எல்லாம் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை எல்லாம் நேரில் பார்த்து விட்டால் மக்களிடத்தில் இந்தச் சர்க்கார் ஒன்றுமே செய்யவில்லை என்று எப்படிச் சொல்வது என்கிற எண்ணமோ என்னமோ? இப்பவே அப்படித்தான் சொல்கிறார்கள்.

கடைசியாக இந்தச் சட்டமன்றத்தில் மெம்பர்கள் தங்கியிருக்கிற விடுதியிலே சில மாறுதல்கள் செய்யவேண்டுமென்று நீண்டநாளாகப் பேசப்படுகிறது. அவர்கள் சொல்கின்ற மாறுதல்களை அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

மந்திரிமார்கள் எல்லாம் கிராமாந்திரங்களுக்குச் செல்ல வேண்டும். சென்னை நகரத்தில் இருக்கக்கூடிய உடைந்த ரோடைப் பார்த்து கனம் அங்கத்தினர்கள் பேசுகின்றார்கள் என்று நினைக்கிறேன். எங்கள் பகுதியிலே வந்து பார்த்தால் பள்ளிக்கூடம் இல்லாத ஊரே கிடையாது. எந்த மூலை முடுக்கை எடுத்துக் கொண்டாலும் உயர்நிலைப் பள்ளிகளை ஏற்படுத்தி பலவிதமான முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறோம். ஆகவே ஏதோ குற்றம் சொல்ல வேண்டுமே என்பதற்காக செய்தவைகளை எல்லாம் கூட இல்லையென்று சாதிக்கிற உக்தியைக் கையாளாமல் இருக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். எப்படி இருந்தாலும் மக்கள் முடிவு சொல்லப் போகிறார்கள். முடிவு சொல்ல வேண்டிய பொறுப்பு உடையவர்கள் அவர்கள். உண்மையில் திரு. அண்ணாமலையை எடுத்துக் கொண்டால் எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் பல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். ஆனால் அவர்களே பல கூட்டங்களில் பேசுகின்றபோது ஒரு காரியமும் செய்யப்படவில்லை என்று சொன்னால் அதற்காக வருந்த வேண்டியிருக்கிறது. ஆகவே உண்மைக்கு மாருகப் பேசவேண்டாம் என்பதாக எதிர்க் கட்சி அங்கத்தினர்களைக் கேட்டுக்கொண்டு, தலைவருக்கு என் நன்றியைத் தெரிவிப்பதோடு முடித்துக் கொள்கிறேன்.

**Sri A. V. P. ASAITHAMBI**: கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் அமைச்சர்கள் இந்த நாட்டிலே சுற்றுப் பிரயாணம் செய்வதைப்பற்றி எதிர்த்தும், வரவேற்றும் கருத்துக் கள் இங்கே தெரிவிக்கப்பட்டன. என்னுடைய கட்சி சார்பிலே அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணம் செய்வதை யாருமே எதிர்க்க வில்லை. ஆனால் அமைச்சர்கள் என்கிற முறையிலே, சர்க்கார் காரியமாகச் சுற்றுப் பிரயாணம் செய்கிறபோது, அவர்கள் தங்களுடைய சொந்தக் கட்சி நலனில் ஈடுபடுவது, கட்சிப் பிரசாரத்தில் ஈடுபடுவது என்பது ஜனநாயக முறைக்கு உகந்ததாக இருக்காது என் பதே எங்கள் கட்சியினுடைய கருத்து. நண்பர் திரு. அண்ணாமலை யிருக்கிற விடுதியிலே சில மாறுதல்கள் செய்ய வேண்டுமென்று அவர்கள் கூடச் சொன்னார்கள். அமைச்சர்கள் கட்சிப் பிரசாரம் செய்ய வேண்டுமென்றால் அதற்கென்றே சில நாட்களை ஒதுக்கி அவர்கள் கட்சிப் பிரசாரத்திற்காகவே சுற்றுப் பிரயாணம் செய்ய



16th March 1961] [Sri A. V. P. Asaithambi]

லாம். மற்றப்படி அமைச்சர்கள் அரசாங்க அலுவலாகச் சுற்றுப் பிரயாணம் செய்கிறபோது அவர்களுடைய சொந்தக் கட்சி நலனில் காரியங்கள் செய்யக் கூடாது என்பதைத்தான் எங்கள் கட்சி வற்புறுத்துகிறது.

அதோடு மாத்திரமின்றி அமைச்சர் இங்கிருந்து புறப்பட்டு ஊர்வாரியாக வருவதைவிட மாவட்டவாரியாக மந்திரிகள் சென்று ஆங்காங்கு இருக்கிற நிர்வாகத் துறையினரிடத்தில் உள்ள குறைகள் என்ன? அந்தக் குறைகளை எவ்வாறு களைவது என்று முயற்சி செய்தார்களேயானால், குறைகள் நீக்கப்படும். அதோடு மறு தடவை அங்கே செல்கிறபோது அவர்கள் உத்தரவிட்டபடி காரியங்கள் நடந்திருக்கிறதா என்றும் பார்ப்பார்களானால் பல விஷயங்கள் உடனுக்குடன் தீர்க்கப்பட்டு மக்கள் குறை நிச்சயமாக நீங்குவதற்கு முடியும். இம்மாதிரியான முறைகளை இந்த மந்திரி சபை கவனிக்கவில்லை.

அடுத்தபடியாக எதிர்க்கட்சிகளைப் பற்றி காங்கிரஸ் அங்கத் தினர்கள் பேசுகிறபோது, "எதிர்க்கட்சியினர்கள் காங்கிரஸ்காரர் களைத் தகாத முறையில் பேசுவதாகவும், நடக்கத் தகாத முறையில் நடப்பதாகவும்" குறை சொல்லப்பட்டது. இந்த அமைச்சர் அவைக்குச் சொல்வேன். இன்றையதினம் எதிர்க்கட்சிக்காரர்கள் பேசுகின்ற பேச்சுக்கள் மட்டும்தான் போலீஸ் சுருக்கெழுத்தாளர் களால் எடுக்கப்படுகிறது. அப்படியின்றி அவர்கள் எல்லாக் கூட்டங்களுக்கும் அனுப்பப்பட்டு, எல்லாக் கூட்டங்களிலும் குறிப்பு எடுத்தார்கள் என்றால்—நான் இந்தச் சபைக்குச் சொல்லிக் கொள்வேன்—இன்று அமைச்சராக இருக்கக் கூடிய வர்கள் கூட சட்ட விரோதமாகப் பேசியிருப்பதை பரிசீலனை செய்து பார்க்கிறபோது தெரிந்து கொள்ளலாம். அதை என்னால் நிரூபிக்க முடியும். எதிர்க் கட்சிகளைப் பற்றி அமைச்சர்கள் இந்த இடத்தில் இந்தமாதிரியாக வரம்பு மீறி பேசியிருக்கிறார்களே என்று இன்றையதினம் நாங்கள் எடுத்துச் சொல்கிறபோது "அப்படி நான் பேசவில்லை" என்று சொல்லிவிடுவதைப் பார்க் கிறோம். பத்திரிகையில் வந்திருக்கிறதே என்று எடுத்துக் காட்டு கிற போதுகூட "நான் இந்தமாதிரியாக அல்லவா சொன்னேன்" என்று தப்பிக் கொள்வதையும் பார்க்கிறோம். ஆனால் திராவிடக் கட்சியைப் பொறுத்த வரையில் எழுத்தில் ஆகட்டும், பேச்சில் ஆகட்டும் நல்ல கண்ணியம் இருப்பதை எந்தச் சமயத்திலும் நிரூபிக்க முடியும். ஆனால் காங்கிரஸ்காரர்கள் நடத்துகிற ஒரு நிகழ்ச்சியை எடுத்துக் கொண்டால் அதில் பேச்சிலாகட்டும், எழுத்திலாகட்டும் எத்தனை தரக் குறைவாக இருக்கிறது என்பதை எடுத்துக் காட்ட முடியும். எதிர்க்கட்சிகள் தகாத முறையில் சட்ட விரோதமாகப் பேசி வருகிறார்கள், எழுதி வருகிறார்கள் என்றால் போலீஸ் ஆட்சியையே கையில் வைத்துக் கொண்டு இஷ்டப்படி ஆட்டி வைக்கிற இந்த அமைச்சரவை நிச்சயமாக எதிர்க்கட்சி களை எல்லாம் விட்டு வைத்திருக்கும் என்று சொல்ல முடியாது.

போலீஸ்காரர்கள் நடுநிலைமையில் இருக்கவேண்டும் என்ருல்
இன்றைய தினம் அவர்கள் எந்த அளவுக்கு இருக்கிருர்கள் என்று
பார்த்தால் தெரியும். நான் சிறு உதாரணம் சொல்கிறேன்.

சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் திராவிட முன்
னேற்றக் கட்சி அடிக்கடி கூட்டங்கள் நடத்தி வருவதைக் கட்டுப்
படுத்த வேண்டுமென்ருே என்னவோ ஒவ்வொரு டிவிஷனிலும் ஒரு
நாளையில் ஒரு கூட்டம் தான் போட அனுமதிக்கப்படும் என்று
எல்லாக் கட்சிகளையும் கலந்து ஒரு முடிவு செய்திருப்பதாகச்
சொன்ஞர்கள். திருவல்லிக்கேணி பகுதியில் 'டி' டிவிஷன் என்று
நினைக்கிறேன். திராவிட முன்னேற்றக் கட்சியின் சார்பில் ஒரு
தேதி குறிப்பிட்டு அன்றையதினம் கூட்டம் நடத்த அனுமதி
கோரப்பட்டது. ஏற்கனவே அந்தப் பகுதியில் ஒரு கூட்டத்திற்கு
அனுமதி கொடுத்துவிட்ட காரணத்தினுல் இதற்கு அனுமதி தர
முடியாது என்று போலீஸ் அதிகாரிகள் மறுத்தார்கள். அதற்கப்
புறம் வேறு ஒரு தேதியைக் குறிப்பிட்டு அனுமதி கேட்டார்கள்.
அவர்களும் கொடுத்தார்கள். ஆனுல் அன்றையதினம் திராவிட
முன்னேற்றக் கட்சியின் சார்பில் கூட்டம் நடத்துகின்ற அதே
சமயத்தில் பீச்சிலே மந்திரிகள் பேசுகின்ற ஒரு கூட்டத்திற்கு
போலீசார்கள் அனுமதி கொடுத்திருக்கிருர்கள். இது அவர்கள்
வரையறுத்துக் கொண்டிருக்கிற கொள்கைக்கு விரோதமானது
இல்லையா? எதற்காக அனுமதி கொடுத்தார்கள்? மந்திரிகள்
பேசப் போகிருர்கள் என்ருல் அவர்களுக்கு என்று ஒரு தனி
விதியா? அல்லது அதே பகுதியில் அன்றையதினம் மந்திரிகள்
பேசித்தான் ஆகவேண்டுமென்ற கட்டாயம் உண்டா? இந்த மாதிரி
யான அளவுக்குப் போலீஸ் அதிகாரிகள் அல்லது வேறு இலாகா
வினர்கள் மந்திரிகள் என்பவர்களுக்காக தங்கள் போக்கையே
மாற்றிக் கொள்ளத் தக்க நிலைமை இருப்பதைத்தான் பார்க்
கிருேம்.

அமைச்சர்களின் சுற்றுப்பிரயாணம் கட்சி சார்பற்ற முறை
யிலே இருக்கவேண்டும். நேற்று முன்தினம் கனம் முதல் அமைச்சர்
திரு. நாமராஜ் அவர்கள் கரூரிலே பேசப் போகிறபோது "நான்
போகிறபோது கலெக்டர் அவர்கள் வரவேண்டாம்" என்று
சொன்னதாகப் பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. இம்மாதிரி
யாக இருக்கும் என்று சொன்னுல் நான் பச்சையாகவே கட்சிப்
பிரசாரம் செய்யப் போகிறேன் யாரும் வரத் தேவையில்லை என்று
அவர்கள் சொல்லிவிடுவார்கள் என்று சொன்னுல் அது வரவேற்கத்
தக்கது. இதுமாதிரியான முறையை எல்லா அமைச்சர்களும் கடை
கடைப்பிடிக்கவேண்டும்.

இரண்டாவது, நான் பொதுக் கூட்டங்களைப்பற்றி ஏன் வலி
யுறுத்த விரும்புகிறேன் என்று சொன்னுல், ஜனநாயக நாட்டிலே
நம்முடைய கருத்தை மக்களுக்குத் தெரிவித்தால்தான் அவர்கள்
வாக்குகளை நாம் பெறமுடியும். அந்த அளவிற்கு ரொம்பவும்
எதிர்க்கட்சிக்குப் பேசவும் எழுதவும் உரிமை அதிகம் அளிக்க
வேண்டும். அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும்.





இதைக் கட்டுப்படுத்தக்கூடிய முறையிலே சட்டத்திலே கெடுபிடி
இருக்கக் கூடாது.

சென்னை நகரத்தைப் பொறுத்தவரை ஒரு கூட்டம் போடுவது
என்று சொன்னுல் அந்தக் கூட்டத்தை விளம்பரப்படுத்துவது
இப்போது மிகவும் கஷ்டமான காரியமாக இருக்கிறது. அத்தகைய
சூழ்நிலையை சட்டத்தைக் காட்டி உண்டு பண்ணுகிருர்கள். என்
னுடைய வீட்டுச் சுவரிலே பொதுக் கூட்ட சுவரொட்டியை ஒட்ட
நான் அனுமதித்தாலும் ஒட்ட வருகிறவர்கள் போலீசாரால் கைது
செய்யப்படுகிருர்கள். இப்படிப்பட்டமாதிரியான ஒருசில தொந்திரவுகள்
இருக்கும் காரணத்தால் ஒவ்வொரு காரியமும் தடைப்பட்டு வேகம்
குறைகிறது. எனவே என்னுடைய அனுமதி இருக்கிறபோது
போலீசார் அவர்களைப் பிடிப்பதோ தண்டனைக்குள்ளாக்கு
வதோ நல்லதல்ல. ஆகையால் போலீஸ் இலாகாவினர் இத்
தகைய முறைகளைக் கைவிடும்படி இந்த அமைச்சரவை சொல்ல
வேண்டும்.

சில குறிப்பிட்ட இடங்களில்தான் கூட்டங்கள் நடத்தப்பட
வேண்டுமென்று சென்னையிலே வரையறுக்கப்பட்டிருக்கிறது.
சர்க்கார் கட்சித் தலைவர் கனம் சுப்பிரமணியம் அவர்கள் ஏதோ
ஒரு பகுதியில் நடந்த பொதுக் கூட்டத்தில் பேசிய அந்த இடம்
இக்கட்டான இடமாக இருந்ததின் காரணமாக அவர்கள் அதிகாரி
களைப் பார்த்து இம்மாதிரி இடங்களில் நீங்கள் அனுமதிக்கக்
கூடாது என்று சொன்னதின் பலனுக பொதுவான கொள்கையை
கடைப்பிடிக்கப்படுவதாகக் கேள்விப்படுகிறேன். இது உண்மை
யோ அல்லவோ எனக்குத் தெரியாது. எப்படியிருந்தபோதிலும்
ஜனநாயக நாட்டைப் பொறுத்தவரை நம்முடைய கருத்துக்களை
ஒவ்வொரு வீட்டிலே இருக்கிறவர்களும் கேட்கவேண்டும்.
கடற்கரையில் கூட்டம் போடுவதோ வேறுபல இடங்களில் போடு
வதோ அம்மாதிரியான இடங்களில் எல்லாம் கூட்டம் போட்டால்
அதில் ஆர்வம் உள்ளவர்கள்தான் அங்கே வரமுடியுமே தவிர
வாக்குரிமை வைத்துக்கொண்டு வீட்டிலே அமர்ந்திருக்கிறவர்கள்
காதிலே கேட்க அது வசதி செய்து கொடுக்காது. எனவேதான்
இந்த நிலைமையை முன்னிட்டு சந்துபொந்தாக இருந்தாலும் அந்த
இடத்தில் கூட்டம் போடுவதற்கு அரசியல் கட்சிகளுக்கு அனுமதி
தரப்பட வேண்டும். இதனுல் போக்குவரத்திற்கு இடைஞ்சலாக
இருக்கலாம். ஒரு சில மணி நேரத்திற்கு போக்குவரத்திற்கு
இடைஞ்சல் இருந்தால் அதனுல் ஒன்றும் கெட்டுப் போய்விடாது.
ஆனுல் இரண்டரை மணிநேரம் நடைபெறும் ஒரு பொதுக்
கூட்டத்தில் அங்கு இருக்கிறவர்கள் கேட்கிருர்கள் என்று சொன்
னுல் அப்போதுதான் பாமார நிலைமையிலே இருக்கின்ற நம் நாட்டு
மக்கள் உண்மையை உணருவதற்கு வசதி ஏற்பட முடியும்.
ஆகவே அத்தகைய வசதிகள் குறிப்பாக பிற்போக்காக இருக்கும்
நம் நாட்டிலே நிச்சயமாகச் செய்து கொடுக்கப்படவேண்டும்.
போக்குவரத்துத் தடை என்று சொல்வது சரியான காரணம்

ஆகாது. சமீபத்தில் பிரிட்டிஷ் ராணியார் வந்தார்கள். அப்போது பல பகுதிகளில் போக்குவரத்துத் தடை செய்தார்கள். சில மணி நேரத்திற்கு போக்குவரத்து வசதி நல்லமுறையிலே இருக்க வேண்டுமென்று சொல்வதில் தவறில்லை. மாதாமாதம் ஒரு திருவிழா நம் நாட்டிலே நடைபெறுகிறது. அந்தச் சமயத்தில் போக்குவரத்தும் கட்டுப்படுத்தப்படுகிறது. ஆகையால் கூட்டம் 6 மணிக்கு ஆரம்பமாகி 10 மணிக்கு முடியும் வரை இந்த நான்கு மணி நேரத்தில் எந்தவிதமான போக்குவரத்தாக இருந்தாலும் அதைக் கட்டுப்படுத்தினால் பாதகம் ஒன்றும் ஏற்பட்டுவிடாது. ஆகவே கனம் அமைச்சர் அவர்கள் இதைக் கவனித்து எல்லாப் பகுதிகளிலும் அடுத்த தேர்தல் முடிகிற வரையிலாவது இந்த முறையை ஏற்படுத்த வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து ஒன்று சொல்லி முடித்துக் கொள்ளுகிறேன். ஒலி பெருக்கி கட்டுப்படுத்த வேண்டுமென்று எல்லா நேரத்திலும் இதை வைப்பதில் தொல்லை இருக்கலாம், ஆனால் பொதுக் கூட்டங்களைப் பொறுத்தவரை இரவு 9 மணி, 9½ மணிக்குமேல் ஒலிபெருக்கி வைக்கக் கூடாது என்று சொல்லுகிறார்கள். கூடுமானவரை 10 மணிவரையில் வைக்கலாம் என்ற முறையிருந்தால் அவ்வளவு தொல்லை ஏற்பட்டுவிடாது. எனவே 10 மணிவரையாவது அதை வைக்கலாம் என்று பொதுவான விதியை வகுத்தால் அடுத்து வருகிற தேர்தலில் இன்றைக்கு இருக்கும் ஜனநாயகத்தைவிட நல்ல ஜனநாயகம் வளர்ந்து நல்லவர்கள் மன்றத்திற்கு வரமுடியும். இந்த நாட்டிலே நல்ல ஆட்சியை நிறுவ முடியும் என்ற காரணத்திற்காக இதை கனம் அமைச்சர் அவர்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு உரையை முடிக்கிறேன். வணக்கம்.

SRI P. G. KARUTHIRUMAN : கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது இருக்கக்கூடிய மான்யத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த மான்யத்திலே முக்கியமாக எதிர்க்கட்சிக்காரர்கள், அமைச்சர்கள் எல்லாம் அந்தப் பதவியில் இருந்துக் கொண்டு கட்சிப் பிரசாரம் செய்கிறார்கள், அல்லது பொதுமக்களுடைய வரிப் பணத்தை கட்சியினுடைய ஆதரவு அல்லது பிரசாரத்திற்காகத்தான் செலவிடுகிறார்கள் என்று முக்கியமாகக் குற்றம் சாட்டுகிறார்கள். இன்னும் ஜில்லா காங்கிரஸ் கமிட்டி கூட்டம் கூடும் சமயத்தில் அமைச்சர்கள் எதிர்க் கட்சிக்காரர்களைக் கலந்துகொள்ளவேண்டாம் என்று அனுப்பி விடுவதாக ஒருசில எதிர்க்கட்சிக்காரர்கள் குற்றம் சாட்டினார்கள். நான் அவர்களுக்குச் சொல்லுகிறேன் அதுதான் ஜனநாயகத்தின் அடிப்படைப் பண்பு. என்று கட்சிக் கூட்டத்திற்குப் போகக்கூடிய சமயத்தில் சர்க்கார் அதிகாரிகளையும் எதிர்க்கட்சி அங்கத்தினரையும் கலந்துகொள்ள அழைத்துச் செல்லாமல் அமைச்சர்கள் தங்கள் கட்சி என்ற தனிப்பட்ட முறையிலே கலந்துகொள்வதுதான் முறை. அதுதான் ஜனநாயக தத்துவம். அதிகாரிகளைக் கொண்டு காங்கிரஸ் கட்சியை





வளரச் செய்ய வேண்டும் என்ற அவசியம் இல்லை. காங்கிரஸ் கட்சி சார்பாக அப்படி நினைக்கவும் இல்லை. அப்படி நினைத்திருந்தால் அது எவ்வளவு தூரம் அவர்களுக்கே பிரதிகூலமாக இருக்கும் என்பதை பொதுமக்கள் உணர்வார்கள். அதிகாரிகளை வைத்துத் தான் ஒரு கட்சியை ஆளவேண்டும். அதிகாரிகளின் உதவிகளைக் கொண்டுதான் ஓட்டுக்களைப் பெறவேண்டும் என்று நினைத்திருப் போமானால் பிரிட்டிஷ்காரர்கள் ஆண்ட காலத்தில் அதிகாரிகளை வைத்துக்கொண்டிருந்தார்களே அவர்கள் இன்று ஆளுகிறார்களா என்று கேட்க விரும்புகிறேன். கட்சிப்பிரசாரம் என்று சொல்லும் நிலையில் சாதாரணமாக கார்போரேஷன் மேயர் ஒரு கட்சியின் சார்பாக வந்திருந்தும் அவர்கள் மாகாணத்திலே உள்ள இதர ஜில்லா தலைநகரத்திலும் எந்தவிதமான வேலைகளும் இருப்பதற்கில்லை, உத்தியோகத்தின் காரணமாக அல்லாமல் கட்சி சார்பாக........

(ஸ்ரீ ஏ. கோவிந்தசாமி எழுந்தார்.)

MR. SPEAKER : மேயரைப்பற்றி இந்தச் சபையிலே பேசுவது நல்லதல்ல.

SRI P. G. KARUTHIRUMAN : இப்பொழுது காங்கிரஸ் கட்சியின் அடிப்படை தத்துவத்தை எடுத்துச் சொன்னேன். சட்ட சபையிலே குற்றச்சாட்டுகள் சொல்லுகிற எதிர்க்கட்சிக்காரர்கள் வெளியிலே பேசுவதற்கு தைரியம் இருக்கிறதா என்று கேட்கிறேன். அவர்கள் மேடையிலே ஒரு பேச்சுப் பேசுகிறார்கள். சட்ட சபையிலே ஒரு பேச்சுப் பேசுகிறார்கள். வடநாட்டு கவர்னருக்கு ஒன்பது லட்சம் ரூபாய் சம்பளம் என்று சொல்கிறார்கள்—பத்திரிகையில் அச்சடித்திருக்கிறார்கள். கவர்னருக்கு 9 லட்சம் ரூபாய் சம்பளம் என்று இங்கே சொல்வதற்கு யாருக்காவது தைரியம் இருக்கிறதா ?

SRI A. GOVINDASAMY : Sir, the hon. Member has no right to mention the name of the Mayor in this House.

MR. SPEAKER : உங்களுக்குப் பேச அனுமதி கொடுக்கிறபோது நீங்கள் பேசுங்கள்.

SRI P. G. KARUTHIRUMAN : அப்படிப் பொறுப்பற்ற தன்மையிலே நாட்டிலே பேசுகிறார்களே என்பதற்காகத்தான் சொல்கிறேன். மீண்டும் சொல்கிறேன். சம்பளம் என்றால் சாலரி என்று பொருள், 9 லட்சம் ரூபாய் சம்பளம் என்றால் அது சரி அல்ல. கவர்னருடைய ஆட்களுக்கு, கவர்னர் சிப்பந்திகளுக்கு, பங்களா பராமரிப்பதற்கு என்று சொல்லி மொத்தம் 9 லட்சம் ரூபாய் என்று அச்சடித்த புத்தகத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். மேன்மை தங்கிய கவர்னர் 60 ஆயிரம் ரூபாய் சம்பளமாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அரசியல் நிர்ணயசபைத் தீர்மானம் செய்திருக்கிறது. அப்படியிருக்கும்போது வெளியிலே எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் பேசும்போது வடநாட்டு கவர்னருக்கு 9 லட்சம் ரூபாய் சம்பளம் என்று சொல்லுகிறார்கள் என்றால் அவர்கள் பட்ஜெட்

[Sri P. G. Karuthiruman] [16th March 1961

புத்தகத்திலே இருப்பதைப் புரிந்து கொள்ளமுடியாத, உணர்ந்து கொள்ள முடியாத, தெரிந்துகொள்ள முடியாத நிலையிலே இருக்கிறார்கள் என்றுதான் சொல்லவேண்டும்.

ஒரு ஜில்லாக் கலெக்டருக்கு 75 லட்சம் ரூபாய் சம்பளம் என்று சொன்னால் அது எவ்வளவு பொருத்தமற்றதாகயிருக்குமோ அது போல்தான் இது இருக்கிறது. அந்த ஜில்லாவிலுள்ள கணக்குப்பிள்ளை போன்ற எல்லா சிப்பந்திகளுடைய சம்பளத்தையும் சேர்த்து கொடுக்கப்படுகிறதே தவிர அது கலெக்டரின் சம்பளம் என்று சொன்னால் அதை மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். மக்களுக்கு அது தெரியும். ஆனால் மக்களுக்கு கவர்னரைப் பற்றி பூர்ணமாகத் தெரியாததால், இப்படிப் பொறுப்பற்ற தன்மையில் பேசக்கூடாது. பச்சை தமிழர் மந்திரிசபை என்று வானளாவப் புகழ்கின்றார்கள்.

"கணமலை நல்நாட கண்ணின் றொருவர்
குணனேயும் கூறற்கரிதால்
குற்றம் உடைநின்று கூறும் சிறியவற்கு
அங்கு நின்றதோர் நா"

என்று நாலடியார் சொல்லியிருக்கிறார்கள். குணத்தைப் பற்றிக் கூட பேச நா கூசினால், தாறுமாறாகப் பேசுபவர்களின் நா எதனால் இயற்றப்பட்டதோ, ஆண்டவனே, தெரியவில்லை. ராம ராஜ்யத்திலுள்ள அமைச்சர்களின் தன்மை எப்படியிருக்குமோ அப்படியேயிருக்கிறது நமது அமைச்சரவையின் தன்மை, அமைச்சர்களின் தன்மை, கம்பன் கூறியிருக்கிறான் :

"நல்லவை தீயவை நாடி நாயகருக்கு
எல்லை மறுத்துவில் எல்லையியல்புவர்"

என்று. ஒரு வைத்தியன் ஒரு நோயாளியைப் பார்க்கும்போது, எது நல்லது எது கெட்டது என்று உணர்ந்து, எந்த மருந்தைக் கொடுத்தால் நோய் குணமாகும் என்று அறிந்து கொடுத்தால் தான் நோய் பூர்ணமாக குணமடையும். அப்பேர்பட்ட தன்மையுடையவர்கள்தான் உண்மையில் நல்ல மந்திரிகளாக இருக்க முடியும் என்று கம்பன் கூறியிருக்கிறான். அவர் கூறியிருப்பதற்கிணங்கத்தான் நமது அமைச்சர்கள் இருக்கிறார்கள். நடுநிலைமை தாங்கி மக்களின் நன்மைக்காக, மக்களின் சுபிட்சத்திற்காக பணியாற்றுவதில் நமது அமைச்சர்கள் தலைசிறந்தவர்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. வைத்தியன் என்ற முறையில் வேப்பம்பட்டை கஷாயம் கொடுத்துத்தான் தீரவேண்டும். கொய்னா கொடுத்துத்தான் தீரவேண்டும். அது கசப்பாகயிருக்கலாம். ஆனால் நோய் தீர அதை கொடுத்துத்தான் தீரவேண்டும். எதிர்க்கட்சிக்காரர்கள் வரிபோடுவது பற்றி சொன்னார்கள். கொடுக்கக்கூடிய மருந்தின் பயனை உணர்ந்து அதற்காகப் பயப்படாமல் பணி புரிந்து வருகிறது நமது மந்திரிசபை. அப்படி மக்களுக்கு நல்ல பணி புரிந்து கொண்டு வரும்போது, இதற்காகக் கூடுதல் நிதி ஒதுக்குங்கள் என்று என்று கேட்கிறார்கள். மற்ற ராஜ்ய மந்திரிசபைகளைப் பார்க்கும்



16th March 1961] [Sri P. G. Karuthiruman]

போது, இங்கு நமது மந்திரிகள் குறைவாகத்தான் பெற்றுக் கொண்டு வருகிறார்கள். கேரளாவில் .......

MR. SPEAKER : கேரளா சமாசாரத்தை இங்கு கொண்டு வரவேண்டாம்.

SRI P. G. KARUTHIRUMAN : பாக்கியுள்ள மந்திரிசபைகளிலுள்ள செலவை எடுத்துப் பார்த்தால் சென்னை அமைச்சர்களும் குறைவாகவே வாங்குகிறார்கள். வையும், நமது அமைச்சர்களும் குறைவாகவே வாங்குகிறார்கள் என்றால், இந்தியாவிலேயே, ஏன் உலகத்திலேயே உள்ள நாடுகளை விட நம் நாடுதான் சிறப்பாகயிருக்கிறது. குறைந்த செலவில், நன்கு பணியாற்றும் பொறுப்பை [illegible] அமைச்சர்கள் சம்பந்தப்பட்ட இந்த மான்யத்தை எல்லோரும் பூர்ணமாக ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

SRI K. ANBAZHAGAN : [illegible] இந்த மான்யம் 11-30 a.m.

அவர்களே, இன்று கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த மான்யம் [illegible] இன்றியமையாத [illegible] [illegible] அமைச்சர்கள் உணர்ந்திருப்பார்கள் அவசியமானது என்பதை அமைச்சர்கள் உணர்ந்திருப்பார்கள் [illegible]

[illegible]

அழகானதல்ல. [illegible] அவர்களின் சம்பளத் திற தகுதி பெற்ற நண்பர் அவர்கள் கவர்னர் [illegible] என்று தைப்பற்றிக் குறிப்பிட்டு அதைக் குறைக்க [illegible] வெளியில் மட்டும் இங்கு கேட்பதற்குக்கூடத் தைரியம் இல்லாமல் வெளியில் மட்டும் தி.மு.க. வினர் பேசுவதாகக் கூறினார். ஒன்பது லட்சம் அளவு [illegible] தி.மு.க. வினர் சொன்னதாக கவர்னர் பெறுவதாக [illegible] இந்தச் சட்ட மன்றத்தில் நாங்கள் பேசியிருக்கிற மிக முக்கியமான கருத்து கவர்னரே நமக்குத் தேவையில்லையென்ற கருத்து [illegible] செலவழிப்பது 6 லட்சம்பேர் அல்லது 9 லட்சமோ என்பதைவிட, தேவையில்லாத ஒரு பதவியில் ஒருவரை உட்கார் வைத்துவிட்டு அதற்காக ஐந்தாயிரம் அல்லது ஐம்பது ரூபாய் அளவு செலவழித்தாலும், பொதுமக்கள் வரிப் பணந்தான் பாழாகிறது என்ற குற்றச்சாட்டை இந்த அரசாங்கத்தின் மீது நான் நிச்சயமாக எடுத்துச் சொல்வேன். கவர்னர் பதவி எதற்கு என்று இங்கு கேட்ட நேரத்தில், அமைச்சர் அவர்கள், கட்சிகளிடையே வேறுபாடுகள் ஏற்பட்டுக் குழப்பம் [illegible] நேரத்தில் மத்திய அரசாங்கச் சார்பாக, டில்லி அரசாங்கத்தினுடைய பிரதிநிதியாக அப்படி ஒரு கவர்னர் இருந்தால்தான்

அந்நிலையில் மாகாணத்தைக் கட்டிக் காக்க முடியும் என்ற கருத்தை இச்சட்டமன்றத்தின் முன்னால் தெரிவித்தார்கள். குழப்பம் ஏற்படும் என்று எதிர்பார்த்து அதற்காக ஆண்டு தோறும் கையை விட்டு ஏறத்தாழ 6 லட்சம் ரூபாய் கவர்னர் பேரால் செலவழிக்கப்படுகிறது. இந்த ஆண்டு ஏறத்தாழ ஆறு லட்சம் தரப்பட்டிருக்கிறது. இந்த மானியத்தில் அமைச்சர்களுக்கு நாலு லட்சம் போக மிச்சம் 6 லட்சமும் கவர்னர் சம்பளத்தின் பெயரால் மட்டுமல்ல என்று சொன்னாலும் அவருடைய பதவிக்காக ஏற்படுகிற வேறு செலவுகளான, அவரது சுற்றுப் பயண வசதி, அவர் தருகிற விருந்திற்கான செலவுமாக ஆக எல்லாவற்றிற்கும் சேர்ந்து கொடுக்கப்படுகிறது. சென்ற ஆண்டில்—கவர்னர் பூந்தோட்டத்தை அழகுபடுத்தவும், சீரியல் ஒதுக்கிய வகையில் கட்டிடம் பழுது பார்க்கவும் 60,000 ரூபாய் ஒதுக்கியிருந்தார்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. கவர்னர் மாளிகையையும், அவர்கள் ஏறிச் செல்கிற வாகனத்தையும் பராமரிப்பதற்கு எட்டு அமைச்சர்கள் அக்கறையோடு இந்த நாட்டில் பணியாற்றுகிறார்கள் என்றால் அவர்கள் கவர்னர் வீட்டில் வேலை பார்க்கவேண்டியவர்களே தவிர ஜனநாயகத்தைப் பாதுகாக்கக்கூடியவர்கள் அல்ல.

THE HON. SRI C. SUBRAMANIAM : அடக்கமாக பேசுங்கள். நாங்கள் போகவில்லை. நீங்கள் வேண்டுமானால் போகலாம்.

SRI K. ANBAZHAGAN : அமைச்சர் அவர்கள் அதைத் தவறாக எண்ணிக் கொண்டு மறுப்புப் பேசுகிறார்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM : நீங்கள் இப்படிப் பேசினால், நாங்களும் இப்படித்தான் பேசுவோம்.

SRI K. ANBAZHAGAN : கவர்னருக்கு அரசாங்கம் இவ்வளவு பணம் ஒதுக்கித் தருவதால், அமைச்சர்களே அந்தப் பொறுப்பையும் ஏற்று கவர்னர் நிர்வாக வேலையைச் செய்யலாமே என்று தான் சொல்கிறேனே தவிர, அவர்கள் வீட்டு வேலைக்காரராகவோ சமயற்காரராகவோ அல்ல . . . . . . . .

MR. SPEAKER : சட்டசபையில் பேசும்போது மற்றவர்கள் மனம் புண்படாதபடி பேச வேண்டும், மரியாதையாகவும் பேச வேண்டும்.

SRI K. ANBAZHAGAN : நான் மாற்றுக் கட்சியினரைப் புண்படுத்துவதுபோல் பேசியதாகத் தலைவர் அவர்கள் தெரிவித்ததற்காக வருந்துகிறேன். நான் யாரையும் புண்படுத்த விரும்பவில்லை. கவர்னரை அரசாங்கத்தின் தலைவராக ஏற்றுக் கொண்டிருப்பதால் . . . . . . . . .

THE HON. SRI C. SUBRAMANIAM : அரசியல் சட்டத்தில் அப்படியிருக்கிறது. அதை நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அதை ஏற்றுக்கொண்டுதான் நீங்களும் இங்கு வந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள். அது வேண்டாமென்றால் வெளியே எழுந்து போங்கள்.





SRI A. GOVINDASAMI : Sir, the Hon. Minister has no right and no business to ask us to go out. He must withdraw those words.

(Several hon. Members both sides of the house rose.)

MR. SPEAKER : இது என்ன சப்தம்? இப்படி இருந்தால் எப்படி சபையை நடத்துவது? வெளியே போங்கள் என்று சொன்னால் . . . . . . . . .

THE HON. SRI C. SUBRAMANIAM : அதை ஒப்புக்கொள்ளவில்லையென்றால், வெளியே எழுந்து போகட்டும் என்று சொன்னேனே தவிர, வெளியே போங்கள் என்று சொல்லவில்லை.

(SRI M. P. Sarathi rose.)

MR. SPEAKER : திரு. சாரதி வேண்டுமானால் சபைத் தலைவராக வருவதில் எனக்கு ஆட்சேபணையில்லை. கனம் நிதியமைச்சர் அவர்கள் விளக்கிக் கூறியிருக்கிறார்கள், வெளியே போங்கள் என்று சொல்லவில்லையென்று. அதை நான் ஒப்புக்கொள்கிறேன். எல்லோரும் ஒரேயடியாகக் கோபித்துக் கொண்டால் எப்படி சபையை நடத்துவது? சபாநாயகருக்குக் கொடுத்திருக்கக்கூடிய பொறுப்பை நான்தான் ஏற்று நடத்தவேண்டும். ஆகவே தயவு செய்து யாரையும் யாரும் மனம் புண்படும்படி பேச வேண்டாம்.

SRI K. ANBAZHAGAN : திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பேசுகிற நாங்கள் அமைச்சர் அவர்கள் ஆசைப்படுவது போலவோ அல்லது அவர்கள் விரும்புகிறபடியோ பேச இங்கு வரவில்லை. வெளியே போங்கள் என்று சொல்லிவிட்டால் உடனே வெளியே போய் விடவும் மாட்டோம். பொதுமக்கள் விருப்பப்படி அவர்கள் ஆதரவு பெற்று வந்திருக்கிறோம், அவர்கள் விரும்பினால் வெளியே செல்வோமே தவிர அமைச்சர்களின் விருப்பப்படி நடந்து கொள்ள நாங்கள் தேர்தலில் ஈடுபடவில்லை. அவர்கள் சொல்வதுபோல் செய்ய நாங்கள் இங்கு வந்து அமர்ந்திருக்கவில்லை. ஆனால் அமைச்சர்களின் தகுதியைக் குறைப்பதற்காகவும் நான் அவ்விதம் குறிப்பிடவில்லை.

MR. SPEAKER : அடுத்த பாயின்ட்-க்குப் போங்கள்.

SRI K. ANBAZHAGAN : கவர்னர் பதவியே தேவையில்லை என்று கருதுகிறவர்கள் நாங்கள். கவர்னர் பதவியைக் காப்பாற்ற வேண்டுமென்ற மனப்பான்மையுடையவர்கள் அல்ல நாங்கள். அவர்களுக்காகச் செலவிடப்படுகிற 6 லட்சம் அதிகம், தேவையற்றது என்று நாங்கள் மனப்பூர்வமாகக் கருதுகிறோம். இன்றுங்கூட நண்பர் கோவிந்தசாமி அவர்கள் அந்த ஊதியத்தைக் குறைக்கவேண்டுமென்றும், அவர்கள் பெயரால் ஆகின்ற செலவைக் குறைக்கவேண்டுமென்றும் வெட்டுத் தீர்மானம் தந்திருக்கிறார்கள். கவர்னர் நிர்வாகத்துக்கு ஆகும் இச்செலவு மிகவும் அதிகமானது என்று முன்பே நான் குறிப்பிட்டிருக்கிறேன், அதைத்

[Sri K. Anbazhagan] [16th March 1961

திரும்பத் திரும்பச் சொல்லவேண்டும், புதுக் கருத்துக்களை கூற வேண்டாமென்று ஆட்சியாளர் விரும்புகிறார்கள் போலும். அடுத்து இந்த மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்று பெயர் வைக்கச் சொல்லிக் கேட்டார்கள் மக்கள். அமைச்சர்கள் தமிழ்நாடு என்ற கோரிக்கையை மக்களுக்காக ஒப்புக்கொண்டார்களே தவிர அரசியல் சட்டத்தில் அதை இடம் பெறச் செய்யவில்லை. [illegible] அமைச்சருங்கூட தமிழ்நாடு [illegible] பயன்படுத்துவதில், அரசியல் சட்டத்தில் இடம் [illegible] அதில் என்ன தவறு [illegible] என்றால் புரிந்துகொள்ள முடியவில்லை. [illegible] பொது மக்களுடைய [illegible] விருப்பத்தைக்கூட முழு அளவுக்கு நிறைவேற்றவில்லை. [illegible] ஆட்சியாளர்கள் மக்களை மதித்து நிறைவேற்றுகிறார்கள். இந்த நிலைமையில் அமைச்சர்கள் எந்த அளவுக்கு ஜனநாயகத்தைக் காப்பாற்றப் போகிறார்கள்? இவ்வித நிலை இருந்தால் 'தமிழ் மொழிதான்' எந்த அளவுக்குக் காப்பாற்றப்படும் என்றும் தெரியவில்லை. அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் நாங்கள் தான் தமிழை காப்பாற்றி வருகிறோம் என்று சொல்லுகிறார்கள். அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் 'போலீஸ்' என்பதற்கு [illegible] என்று சொல்வதுகூட எனக்குப் பிடிக்கவில்லை, 'போலீஸ்' என்று சொல்வதுதான் எனக்குப் பிடித்திருக்கிறது. ஆகவே [illegible] என்று சொல்ல வேண்டாம், 'போலீஸ்' என்றே இனி வைத்துக் கொள்ளலாம் என்று இங்கே சொல்லியிருக்கிறார்கள். அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் [illegible] இல்லையோ நான் அறியமாட்டேன். போலீஸ் என்ற சொல்லுக்கு காவலர் என்பது சரியான, சிறப்பான தமிழ்ச்சொல். இதையே ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று சொன்னால் இவர்கள் தமிழை எப்படிக் காப்பாற்றப் போகிறார்கள், வளர்க்கப் போகிறார்கள் என்பதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன். போலீஸ் என்ற சொல்லுக்குக் காவல் என்ற சொல்லைவிட சிறப்பான பொருள் தரக்கூடிய, சிறந்த கருத்துடைய சொல் வேறு கிடையாது. அதுமட்டும் அல்ல, திரு. திருமதி என்னும் மதிப்புக்குரிய அடைமொழிகளையும் இன்னும் இந்த அரசாங்கம் முழு அளவுக்கு வழக்கத்திற்குக் கொண்டு வரவில்லை.

இந்தச் சபையிலேயே கேள்விகள் கேட்கப்படும்போது, முதல் கேள்விக்குத் தரும் பதிலே தமிழில் இருக்க வேண்டும் என்று திரும்பத் திரும்ப உறுப்பினர்கள் இங்கு கேட்டுக்கொண்டிருக்கின்றனர். இப்போதுங்கூட ஆங்கிலத்தில் முதல் கேள்விக்கு விடை தரப்படுகின்ற காரணத்தால், பலர் அதை சரிவரப் புரிந்து கொண்டு, அடுத்த கேள்வியைக் கேட்பதற்கு வழியில்லாதவாறு திகைக்கிறார்கள். இந்த நிலையில் கூடச் சட்டமன்றத்தில் தமிழிலேயே விடையளிப்பதற்குள்ள முயற்சிகளை இந்த ஆட்சியாளர்கள் மேற்கொள்ளவில்லை. இதற்குக் காரணம் மக்களாட்-



16th March 1961] [Sri K. Anbazhagan]

சியில் இருந்து கொண்டிருக்கின்ற இந்த ஆட்சியாளர்கள் மக்களது விருப்பத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ளாமல், அதை மறந்துவிடுவதுதான். ஆட்சியாளர் கருத்துத் தெளிவில்லாமல் எதையெல்லாமோ நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஜனநாயகத்தில் மக்களுடைய கருத்து என்ன என்பதில் நன்றாகத் தெளிவு பெற்றிருக்க வேண்டும். அது மட்டுமல்லாமல், ஜனநாயக நாட்டில் மக்களுக்குப் பிரசார உரிமை இருக்கவேண்டும். பிரசாரம் செய்வதில் [illegible] தவறு செய்திருந்தாலும் அவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்கப் போலீஸ் இலாகா முன் வரவேண்டும். இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களோ அல்லது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களோ எந்த இடத்திலாவது பேசுகிறார்கள் என்றால் அவர்களுடைய பேச்சுக்கள் போலீஸ் இலாகாவின் சுருக்கெழுத்தாளர்களால் குறிப்பு எடுக்கப்பட்டு உரிய இலாகாக்களுக்கு அனுப்பப்பட்டு அதன்பேரில் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அவ்விதம் தவறாகப் பேசப்பட்டிருந்தால் அவர்கள் பேரில் நடவடிக்கை எடுப்பதை நான் வரவேற்கிறேன். ஆனால் இன்றைக்கு காங்கிரஸ்காரர்கள் எப்படிப் பேசினாலும் அவர்கள்பேரில் எந்த விதமான நடவடிக்கையும் எடுப்பதில்லை. காங்கிரஸ்காரர்கள் பேசுவதைச் சுருக்கெழுத்தாளர்கள் குறிப்பெடுப்பதில்லை. தேர்தல் காலங்களிலாவது இந்த ஒழுங்கு முறைகள் [illegible] கொண்டு வரவேண்டும். இந்த ஒழுங்கு முறைகள் [illegible] வேண்டும் என்று அமைச்சர் சொல்வது உண்மையாக இருந்தால், எதிர்க் கட்சித் தலைவர்கள் அல்லது உறுப்பினர்களையும் கொண்ட குழு ஒன்று அமைக்கட்டும். அந்தக் குழுவினிடம், தேர்தல் நேரத்தில் யார் யார், திராவிட முன்னேற்றக் கழகத்தினராக இருந்தாலும், கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களாக இருந்தாலும் சரி, வெறும் காங்கிரஸ்காரர்களாக இருந்தாலும், ஜனநாயக காங்கிரஸ்காரர்களாக இருந்தாலும் சரி, அவர்களுடைய பேச்சுக்கள் எல்லாம் குறிப்பெடுக்கப்பட்டு இந்தக் குழுவினருக்கு அனுப்பி வைக்கப் படட்டும். அதை இந்தக் குழுவினர் பரிசீலிக்கட்டும். இதற்கு அமைச்சர் அவர்கள் முன் வருகிறார்கள் என்றால் உண்மையிலேயே காங்கிரஸ் கட்சியும் ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்கு முன் வருகிறது என்பது பொருள். இல்லாவிட்டால் எதிர்க்கட்சிக்காரர்களை அடக்குவதற்காக மட்டுந்தான் இம்மாதிரியான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்றுதான் எடுத்துக்கொள்ள [illegible] என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இங்கு போலீஸ் இலாகாவைப்பற்றி நான் குறிப்பிட்டது, சில போலீஸ் அதிகாரிகளை ஆட்சியாளர்கள் பயன்படுத்துகிறார்கள் என்பதைப்பற்றித்தான். போலீஸ் இலாகா முழுவதும் என்பது அர்த்தமல்ல. போலீஸ் இலாகாவினரில் சிலர் தவறாகப் பயன்படுத்தப்பட்டார்கள் என்று தான் குறிப்பிட்டேன். போலீஸ் இலாகாவில் சிலர் என்று குறிப்பிடும்போது அவர்கள்

[Sri K. Anbazhagan] [16th March 1961

பேரில் சொல்லப்படும் குற்றம் போலீஸ் இலாகாவைப்பற்றிய
தாகத்தான் அமையும். ஆகவே இதில் நான் சொன்ன குற்றச்
சாட்டை மறுத்துப் பேசுகின்ற வகையில் உண்மையை
விளக்கியோ அல்லது இதைப்பற்றி விசாரணை செய்து முடிவு
எடுக்கிறேன் என்றோ போலீஸ் அமைச்சர் திரு. பக்தவத்சலம்
அவர்கள் பதில் அளிக்கின்ற நேரத்தில் சொல்லியிருந்தால்
உண்மையிலேயே ஜனநாயகப் பண்பு இவர்களிடத்தில் இருக்கிறது
என்று நான் அதை வரவேற்றிருக்க முடியும். இந்தக் குறைகள்
பற்றி விசாரிப்பேன் என்று சொல்ல முன் வரவில்லை. அந்த அள
வுக்கு எதிர்க்கட்சியில் இருக்கின்ற நாங்கள் சொல்லுகின்ற கருத்
துக்களில் அவநம்பிக்கை இருந்திருக்க வேண்டும். ஆனால் இன்
றைய தினம் சேலம் உறுப்பினர் திரு. மாரியப்பன் அவர்கள்
பேசும்போது சேலம் நகரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்
தினர் பல்வேறு தவறான காரியங்களில் ஈடுபடுகிறார்கள் என்றும்,
அவர்கள் காங்கிரஸ்காரர்களைத் தாக்கினார்கள் என்றும் அதன்
பேரில் போலீசாரிடம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்
டுக்கொண்டதற்கு சரியான முறையில் நடவடிக்கை எடுக்கப்பட
வில்லை என்றும் சொன்னார்கள். அப்படி திராவிட முன்னேற்றக்
கழகத்தார் தவறு செய்திருந்தால் அவர்கள் பேரில் நடவடிக்கை
எடுக்கட்டும், ஆனால் நடுத்தெருவில் இழுத்துவந்து அடிக்காதீர்கள்,
அவமானப்படுத்தாதீர்கள். விவரங்களை அறிந்து நடவடிக்கை
எடுங்கள், குற்றங்கள் இருந்தால் வழக்குத் தொடருங்கள் என்று
தான் கூறுகிறேன். உண்மையான ஜனநாயக ஆட்சியாக இருந்
தால் யார் தவறு செய்தாலும் அவர்கள் பேரில் நடவடிக்கை எடுத்
திருக்க வேண்டும். அவ்விதம் வழக்குத் தொடர்ந்து கோர்ட்டில்
திராவிட முன்னேற்றக் கழகத்திலுள்ளவர்கள் 10 பேர்கள் தண்
டிக்கப்பட்டால், காங்கிரஸ் கட்சியில் உள்ளவர்கள் எத்தனை பேர்
கள் தண்டிக்கப்படுவார்கள் என்பதை என் மனசாட்சி அறியும்.
அம்மாதிரி முறையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று
தான் கூறுகிறேனே தவிர திராவிட முன்னேற்றக் கழகத்தினர்
என்றேனும் தண்டிக்கப்படுகிற நேரத்தில் அமைச்சரை நான்
அணுகினதுமில்லை. ஆதரவு கேட்டதில்லை. தனிப்பட்ட எந்த
வேண்டுகோளுக்கும் அமைச்சரிடம் வந்ததில்லை. எனவே முறைப்
படி நடவடிக்கை எடுங்கள், யாரும் வேண்டாமென்று சொல்ல
வில்லை. அதற்குக்கூட ஜனநாயக முறையில் போலீஸ் அமைச்சர்
அவர்கள் முன் வரவில்லை. அப்படியானால் நீங்கள் எந்த அடிப்
படையில் ஜனநாயகத்தைக் காப்பாற்றப் போகிறீர்கள், என்
பதைத்தான் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, சென்னை நகரத்தில் மாற்றுக் கட்சிகள் சம்பந்தப்
பட்ட சுவரொட்டிகள் ஒட்டியதற்காக பலர் மீது எவ்வளவோ
வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. காங்கிரஸ் கட்சியைச்
சேர்ந்த பல சுவரொட்டிகள் பல்வேறு இடங்களில் ஒட்டப்பட்டி
ருந்தும் அதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக்
கொள்ளப்படவில்லை. குறிப்பாக ஓர் இடத்தில் இவ்விதம் சுவ



16th March 1961] [Sri K. Anbazhagan]

ரொட்டி ஒட்டியதற்காக ஒரு காங்கிரஸ் சார்பினரைப் போலீஸ்
காரர் கைது செய்து, அதன் பேரில் வழக்குத் தொடுப்பதற்காக
அதிகாரிகளிடத்தில் போனபோது, சற்று மேல் நிலையில் இருக்
கின்ற அதிகாரி, 'இதுயெல்லாம் வீண் தகராறுகளை விளைவிக்கும்,
ஆகவே விட்டு விடுங்கள்' என்று சொன்னதின் பேரில் அவரை
விட்டுவிட்டார்கள். இதிலிருந்து நான் குறிப்பிடுவது குற்றம்
யார் செய்தாலும் இருந்தாலும் அவர்கள் பேரில் வழக்குப்
போடுங்கள் என்பதுதான். ஒன்பது மணிக்குமேல் கூட்டம்
நடத்தக் கூடாது என்று சொன்னால் எல்லோருக்கும் அது பொது
விதியாக இருக்க வேண்டும். ஆனால் ஆளும் கட்சியினர் மீறிய
போது—அவர்கள்மீது வழக்குப் போடப்படவில்லை. அதற்கும்
மேலாக பஸ் முதலாளிகளிடமிருந்து நிதி வசூல் செய்கிறீர்கள்
கட்சித் தேர்தல் நிதிக்காக என்று சொன்னால்—(மணியடிக்கப்
பட்டது)—நான் பேசிய தொடரைக் கூறி முடித்துவிடுகிறேன்—
அவ்விதம் அமைச்சர்கள் செய்யக்கூடாது என்று சொன்னால்
பொருட்படுத்தவில்லை. மாறாக சோஷலிச முறைப்படி பஸ்
முதலாளிகளுக்காக ஏராளமான வரி போட்டிருக்கிறோம் என்று
கூடச் சொல்லக்கூடும். உண்மையில் முதலாளிகளுக்குப் பஸ்
ஒன்றுக்கு 1,000 ரூபாய் வரி போட்டிருப்பதாகச் சொல்லப்
படுகிறது. அதன் மூலம் இந்த அரசாங்கத்தை நடத்தும் கட்சிக்கு
வருமானம் வருகிறது என்பதால், அதைக் கொண்டு இந்த அரசாங்
கமும் வாழ்க, வாழ்க என்று வாழ்த்தி என் உரையை முடித்துக்
கொள்கிறேன். வணக்கம்.

* SRIMATHI RAJATHI KUNJITHAPATHAM : கனம் தலைவர்
அவர்களே, இந்த மான்யத்தின் மீது ஒருசில வார்த்தைகள் கூற
விரும்புகிறேன். மந்திரிகள் மிகவும் நல்ல முறையில் கட்சி சார்
பற்ற முறையில் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற
கோட்பாட்டுடன் சுற்றுப் பிரயாணம் செய்வதை நான் முழு
மனதுடன் வரவேற்கிறேன். அவ்விதம் சுற்றுப் பிரயாணம் செய்
வதை ஆதரிப்பதுடன் அதை வரவேற்கவும் செய்கிறேன். மந்திரி
கள் ஊர் சுற்றுகிறார்கள், மக்களுடைய வரிப் பணத்திலிருந்து
சுற்றுகிறார்கள், கட்சியை வளர்ப்பதற்காக ஊர் சுற்றுகிறார்கள்
என்று குறிப்பிடுவதை நான் மறுக்க விரும்புகிறேன். என்னைப்
பொறுத்தவரையில் நான் குறிப்பிட்டுக் கொள்வது என்ன
வென்றால், எங்கள் தொகுதிக்கு மந்திரி வரும்போது,
பொதுவாக சில வேலைகளை எடுத்துக் கொள்ளவேண்டும்
என்று காங்கிரஸ்காரர்களாகிய நாங்கள் சொல்லும்போது,
நாம் இதை உடனேயே செய்தால், நாம் நிர்வாகத்தில்
அவசியமில்லாமல் ஈடுபடுவதாக இருக்கும், ஆகவே இதைப்
பற்றிப் பின்னால் பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லி
விடுகிறார்கள். அதோடு நாங்கள் சொல்லுகின்ற கோரிக்கைகளை
எல்லாம் உடனடியாக ஏற்றுக்கொண்டு உத்தரவு போடுவதில்லை,
இந்த முறையில் ஆளும் கட்சியில் இருக்கின்ற நாங்கள் சொல்லு
கின்ற காரியங்களையே அமைச்சர்கள் கவனிப்பதில்லை. அவ்விதம்

ஏதாவது கேட்பதாக இருந்தாலும் கூட, இதனால் ஏதாவது அவதூறுகள் வராமல் இருக்குமா, இதனால் நிர்வாகத்தில் ஏதாவது தகராறுகள் ஏற்படாமல் இருக்குமா என்பதையெல்லாம் யோசித்துப் பார்த்துவிட்டு பின்னால் வாருங்கள் என்று எங்களுக்கே பதில் சொல்லிவிடுகிறார்கள் நமது அமைச்சர்கள் என்பதைத் தாழ்மையாகத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக மந்திரிகள் சுற்றுப் பிரயாணம் செய்வது மிகவும் அவசியம், அவ்வாறு செய்தால்தான் ஒவ்வொரு தொகுதியிலும் வேலைகள் எல்லாம் துரிதமாக நடக்கிறது என்பதை அந்தந்தத் தொகுதி மக்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். ஆகவே அடிக்கடி மந்திரிகள் தொகுதிகளுக்குச் சுற்றுப் பிரயாணம் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு மந்திரிகள் சுற்றுப் பிரயாணம் செய்யும்போது அதிகாரிகளையும்கூட வைத்துக் கொண்டு அவர்களுடைய உதவியினாலும் கட்சியை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. அவ்விதம் அதிகாரிகளுடைய பலத்தினால் கட்சியை வளர்த்துக்கொள்ள முடியும் என்றிருந்தால், அன்றைக்கு அந்நியரின் ஆட்சி இருந்த காலத்தில், இன்றைக்கு எதிர்க்கட்சியில் இருக்கின்ற சில கட்சி அவர்களோடு சேர்ந்திருந்த காலத்திலும் காங்கிரஸ் கட்சி பலத்தோடு நின்று போராடித்தான் இந்நாட்டுக்கு விடுதலை வாங்கிக் கொடுத்தது. அப்படிப்பட்ட காங்கிரஸ் கட்சிக்குப் பலம் தேடுவதற்கு அதிகாரிகளுடைய ஒத்துழைப்பு அவசியமில்லை. ஆகவே அதிகாரிகளை கூட்டிக் கொண்டுபோவதால், கட்சியை வளர்த்துவிட முடியாது, அதே சமயத்தில் குறைகளை அவர்களிடத்தில் எடுத்துச் சொல்ல முடிகிறது. சில குறிப்பிட்ட இடங்களுக்குப் போகும்போது, அந்த இடத்திற்கு வேண்டிய கால வசதி, பாதை வசதி மற்றும் பல வசதிகள் இவைகள் எல்லாம் வேண்டும் என்று கேட்க முடிகிறதே தவிர வேறு ஒன்றுமில்லை.

அடுத்ததாக, கவர்னரைப் பற்றி இவர்கள் எடுத்துச் சொல்லுகின்றபோது மிகவும் வேடிக்கையாக இருக்கிறது. கவர்னர் வந்து உரை நிகழ்த்தும்போது அவர்களுடைய உரையை நாங்கள் கேட்க மாட்டோம் என்று சொல்லி வெளியே சென்றுவிட்டு, பின்னால் இங்கு வந்து அவர்களுடைய சம்பளம் அதிகம், அவர்களுக்கு இத்தனை வசதிகள் எதற்காக என்றெல்லாம் பேசுகிறார்கள். அதே சமயத்தில் இதே கட்சியினர் இருக்கின்ற ஸ்தாபனங்களில் கவர்னரை வரவேற்று, அவரைப் பாராட்டிச் சீராட்டிப் பேசுவதையும் நாம் இரண்டு நாட்களுக்கு முன்பு பத்திரிகையில் பார்த்தோம். இவ்விதம் இங்கு ஒரு பேச்சும், வெளியில் ஒரு பேச்சுமாகப் பேசுகின்ற இவர்களை எப்படி நம்புவது என்றே தெரியவில்லை. கவர்னர் ஆட்சிப் பொறுப்பில் இருக்க வேண்டும் என்று சொல்லும்போது, கவர்னர் இருந்தாக வேண்டும் என்று சொல்லுகின்ற அரசியல் நிர்ணய அமைப்பின்மீது சத்தியம் செய்துகொண்டு இங்கு வந்துவிட்டு பின்னால் இது முறைதானா, இது முறைகேடு அல்லவா என்றெல்லாம் பேசுவது முறையற்றதாக இருக்கிறது என்பது



என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன். அதேசமயத்தில் இந்த மான்யத்
தைப்பற்றி பேசுகின்ற நேரத்தில் அதிகாரிகள் மந்திரிகள்
வரக்கூடாது என்பதைப்பற்றி எல்லாம் பேசப்பட்டது. அதிகாரி
கள் மந்திரிகளுடன் வரும்போது சில இடங்களிலுள்ள
மக்கள் அவர்கள் அனுப்பிய மனு என்னவாயிற்று, அந்த
ஃபைல் எங்கேயிருக்கிறது என்பதுயெல்லாம் தெரியாமல்
இருக்கிறார்கள். இம்மாதிரி மந்திரிகள் வரும்போது அதிகாரி
கள் வந்தால் இதைப்பற்றி அவர்களிடத்தில் எடுத்துச்
சொல்ல முடிகிறது. ஆகவே அதிகாரிகள் மந்திரிகளுடன்
வருவது பொதுமக்களுடைய நன்மைக்காகத் தானே தவிர
கட்சியை வளர்ப்பதற்காக அல்ல. அமைச்சர்களுடைய சுற்றுப்
பிரயாணத்தினால் பலன் அடையக் கூடியவர்கள் பொது
மக்கள்தான்—வேறு யாருமல்ல. அமைச்சர்களுடைய சுற்றுப்
பிரயாணத்தில் கட்டுப்பாடு ஒன்றும் செய்ய முடியாது. அந்த
நிலையில் இந்த மாதிரி அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணம் செய்
வதை நான் வரவேற்கிறேன். அதே போல கவர்னரும்
நாட்டினுடைய தேவையாக இருக்கிறார்—அரசியல் சட்டப்படி
அவர்களும் செயல்படவேண்டியதுதான். அவர்களுக்குக்
கொடுக்கும் சம்பளம் ஒன்றும் அவ்வளவு அதிகமல்ல.
கணக்குப் போட்டுப் பார்த்தால் மாதம் ஒன்றுக்கு
5,000 ரூபாயோ என்னமோதான் வருகிறது. நமது
மந்திரிகளுக்கும் குறைச்சலாகத்தான் கொடுக்கிறோம். நமது
சர்க்காரில் இருக்கக்கூடிய சீஃப் என்ஜினீயருக்கு ஆயிர
மாயிரம் ரூபாய் கொடுக்கும்போது, ஒரு மாநிலத்தின் தலைவராக
செயல்படக்கூடிய கவர்னருக்குக் கொடுக்கக்கூடிய சம்பளம்
ஒன்றும் அதிகமல்ல. அவர்கள் பராமரிக்கக்கூடிய சொத்து
அத்தனையையும் சேர்த்துக் கணக்கிட்டுத்தான் அந்தத் தொகை
கொடுக்கிறோம். இந்த நிலையில் கவர்னர் அவர்களை பாரம் என்று
நினைப்பது நியாயமல்ல. அவர்களுடைய சேவை நமக்குத் தேவை
யாக இருக்கிறது. ஆகையால் அந்த முறையில் பேசுவது நியாயம்
அல்ல என்று கூறி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்
கூடிய மான்யங்களை ஆதரித்து எனது உரையை முடித்துக்
கொள்கிறேன்.

**MR. SPEAKER :** இப்போது கட்சித் தலைவர்கள் பேசுவார்கள். ஒவ்வொரு தலைவரும் 15 நிமிஷங்கள் பேசலாம். 13 நிமிஷம் ஆனதும் மணி அடிக்கிறேன். 15 நிமிஷத்தோடு சரியாக முடித்துக் கொள்ளவேண்டுமென்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

**SRI M. KALYANASUNDARAM :** கனம் சபாநாயர் அவர்
களே, இந்த வெட்டுப் பிரேரணைகளை நான் ஆதரிக்கிறேன். இது
தேர்தல் நெருங்கக்கூடிய வருஷமாக இருப்பதால் சபையிலே
உஷ்ணம் அதிகரிக்கிறது—வெளியிலேயும் உஷ்ணம் அதிகரிக்கிறது.
தேர்தலைப் பற்றி நாங்கள் அதிகம் கவலைப்படவில்லை. ஐந்து

[Sri M. Kalyanasundaram] [16th March 1961

வருஷத்திற்கு ஒரு முறை போகும்—வரும். அது பிரதானமல்ல.
மக்களும் நாடும் தான் பிரதானம். மக்களிடத்தில் எத்தகைய
பண்பாட்டை வளர்க்கிறோம் என்பதைப் பார்க்க வேண்டியிருக்
கிறது—இதிலே அரசியல் கட்சிகளுக்கெல்லாம் ஒரு பொறுப்பு
இருக்கிறது. அதிலும் ஆளும் கட்சிக்குப் பொறுப்பு அதிகம் என்று
நினைக்கிறேன். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களை இழிவுபடுத்தி
தாக்கிப் பேசுவது, எழுதுவதால் இருக்கும் செல்வாக்கை
குறைத்துவிடவேண்டும்—முடியும்—என்று சொல்லும் அளவுக்கு
நாங்கள் விஷயம் தெரியாதவர்கள் அல்ல. அதே போன்று ஆளும்
கட்சியில் இருப்பவர்களும் எதிர்க்கட்சிகளை நடத்தும் முறையில்
கண்ணியமும் கௌரவமும் இருக்கவேண்டும். அரசாங்க வசதி
களைப் பயன்படுத்திக் கொள்வதிலும் ஜாக்கிரதையாக இருக்க
வேண்டும் என்பது எனது அபிப்பிராயம். அமைச்சர்கள் சுற்றுப்
பிரயாணம் செய்வதை ஆட்சேபிக்கவில்லை—சுற்றுப்பிரயாணம்
அவசியம். ஆனால் என்ன நோக்கத்தோடு எப்படிச் சுற்றுப்
பிரயாணங்கள் செய்கிறார்கள் என்பதுதான் முக்கியம். சுற்றுப்
பிரயாணம் செய்கிற நேரத்தில் எதிர்க் கட்சிகளைத் தாக்குவதே
ஒரு கொள்கையாக வைத்துக் கொண்டு எது வேண்டுமானாலும்
பேசித் தாக்கலாம் என்ற போக்கிலே போவதுதான் வருத்தத்தைத்
தரக் கூடியதாக இருக்கிறது. முக்கியமான மான்யம் இன்றைய
தினம் விவாதத்தில் இருக்கும்போது முதல் அமைச்சர் சுற்றுப்
பிரயாணத்தில் இருக்கிறார். சில சமயங்களில் வெள்ளம் வருகிறது,
புயல் அடிக்கிறது என்றால் அந்த சமயத்தில் அவசரமாகச் சுற்றுப்
பிரயாணம் செய்கிறார்கள்—அதை நான் வரவேற்கிறேன்; அது
அவசியமும் கூட. நேரடியாக மக்களுக்கு உதவி செய்யப்
போகிறார்கள். நாங்கள் கூட சில சமயங்களில் வர முடியாமல்
இருக்கலாம்—ஏதாவது கட்சிக் கூட்டத்தில் கலந்து கொள்ள
வேண்டியிருந்தால் வர முடியாமல் இருக்கலாம். அந்த மாதிரி
ஏதாவது கட்சிக் கூட்டம் இருந்தாலும் வராமல் இருக்கட்டும்,
பரவாயில்லை. ஹெட் ஆஃப் ஸ்டேட், ஸாலரீஸ் விவாதத்திலே
இருக்கும்போது என்ன அவ்வளவு மிக முக்கியமான சுற்றுப்
பிரயாணம் என்று எனக்குத் தெரியவில்லை. அதுவும் நமது முதல்
அமைச்சர் அவர்கள் ரோமிங் அம்பாஸடார் என்ற மாதிரி குறிப்
பிட்ட ஒரு பொறுப்பும் இல்லாமல் போகக்கூடிய வசதி இருப்
பதால், நமது முதலமைச்சர் அவர்கள் முதல் தர அரசியல் பிரசார
கராக இருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல—முதலமைச்சராக
இருக்கின்றவர் எல்லா மக்களையும் எல்லாக் கட்சிகளையும் அணைத்
துக்கொண்டு போகக்கூடிய அளவுக்கு இருக்கவேண்டும், அப்படி
யில்லாமல் எதிர் கட்சி என்றால் எதிர்க்க வேண்டியவர்கள் என்ற
முறையில் பணிபுரிவது நாட்டுக்கு நல்லதல்ல என்று எடுத்துக்
காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு முக்கியமான பொது நிகழ்ச்
சிகள் இருக்கின்றன. கட்சிக் கூட்டங்களில் திட்டட்டும்—நான்
வேண்டாமென்று சொல்லவில்லை. சில இளைஞர்களைத் தூக்கி விட்டு
எதிர்க் கட்சியினரைப் பற்றி ஜீவானந்தத்திற்குக் காது செவிடு,



16th March 1961] [Sri M. Kalyanasundaram]

கல்யாணசுந்திரத்திற்கு இருதயம் இல்லை, ராமமூர்த்திக்கு கால்
நொண்டி, அண்ணாதுரை 4½ அடி, அவர் ஜாதி, அது இது எல்லாம்
பேசி விடுவார்கள். அடுத்தபடியாக வரக்கூடிய அமைச்சர்கள்
அதைப் பற்றிப் பேசமாட்டார்கள்—அமைச்சர்கள் திட்டத்தைப்
பற்றியெல்லாம் பேசுவார்கள். திராவிட முன்னேற்ற கழகத்தினர்
பேசுவதை நான் ஆதரிக்கவில்லை. அவர்களும் கிட்டத்தட்ட அதே
மாதிரி மட்டமாகத்தான் பேசுகிறார்கள் என்று எனது கவனத்
திற்கு வந்திருக்கிறது. சேலத்தில் நடப்பதில் எதிர்க் கட்சிகள்
யோக்கியமாக இருக்கிறார்கள் என்று சொல்லவில்லை. இரண்டு
பக்கத்திலும் தவறு இருக்கத்தான் செய்கிறது. இரண்டு சாரார்
களும் இரண்டு அரசியல் கட்சிகளைப் பயன்படுத்திக் கொள்கிறார்
கள் என்பது எனது அபிப்பிராயம். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த
வர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஊழியரைக்
கூட்டத்தில் ஏன் பேசினாய் என்று அடித்து மாரியப்பன் படத்திற்கு
முன் நிறுத்தி 'வணக்கம் செலுத்து; விட்டுவிடுகிறேன்' என்று
சொல்லி. . . .

**The Hon. Sri C. SUBRAMANIAM :** இப்போது சொன்ன
வைகளை உண்மை என்று எடுத்துக் கொள்ளத் தயாராயில்லை.

**Sri M. KALYANASUNDARAM :** இந்த மாதிரி பேசுவது
சரியல்ல. எங்கள் கட்சி அப்படியல்ல. எங்கள் கட்சி சம்பந்தப்
பட்ட மட்டில் அவசரப்பட்டு அதிகாரத்திற்கு வர விரும்பவில்லை.
மந்திரிகளையும் மற்ற கட்சிக்காரர்களையும் இழிவுபடுத்தி அதிகாரத்
திற்கு வர விரும்பவில்லை. ஆனால் நல்ல அரசியல் பண்பாடு வளர
வேண்டும் என்பதுதான் எனது அபிப்பிராயம். உதாரணமாக
ஒரு கட்சியைச் சேர்ந்தவர் எந்த அளவு பேச வேண்டும் என்ற
நியதி வேண்டும்—ஒரு ஒழுங்கு வேண்டும். இதைப் பற்றி நான்
பல முறை வற்புறுத்தியிருக்கிறேன். தேர்தல் வருகிறது. அந்தக்
காலத்தில் மட்டுமல்லாமல் எப்போதும் உஷ்ணத்தைத் தவிர்த்து
பலாத்கார நிகழ்ச்சிகள் நடக்காமல் நடவடிக்கை எடுக்க
வேண்டும். அமைச்சருக்கு எல்லாரும் பேசிய பின் கடைசி
யாகப் பேசும் வசதி இருக்கிறது. எங்களுக்கு ¼ மணி
கிடைத்தால் அவருக்கு ¾ மணி கிடைக்கிறது. எல்லாக்
கட்சித் தலைவர்களும் சேர்ந்து தேர்தல் எப்படி நடப்பது, பிரசாரம்
எப்படி நடத்த வேண்டும் என்பதில் ஒரு வரையறை
இருக்கவேண்டும். தொழிற் சங்கத்தில் இந்த மாதிரி
இருக்கிறது. இதற்கு ஒரு கோட் ஆஃப் டிஸிப்ளின்
ஏற்படுத்தினோம். கோட் ஆஃப் காண்டக்ட் என்பது தொழிற்
சங்கத் தலைவர்கள் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதைப்
பற்றியது. முதலாளிகள் எப்படி நடக்க வேண்டும், சர்க்கார்
எப்படி நடக்க வேண்டும், தொழிலாளர்கள் எப்படி நடக்க
வேண்டும் என்பதில் ஒரு வரையறையை—நியதியை—ஏற்படுத்தி
இருக்கிறார்கள். நம் அரசியல் கட்சிகள் ஒன்று சேர்ந்து ஒரு
கோட் ஆஃப் காண்டக்ட்—ஒழுங்குமுறை விதிகளை ஏற்படுத்திக்

[Sri M. Kalyanasundaram] [16th March 1961

கொண்டு அந்த முறைகளைக் கையாளவேண்டும். இந்த மாதிரி நியதிகளை ஏற்படுத்தி எல்லோரும் அவற்றை கடைபிடித்தோமானல் புகார்களுக்கு இடமிருக்காது. இன்றைய தினம் நான் பல உதாரணங்களைக் கொடுக்க முடியும்—ஆனல் நேரம் இல்லை. இன்றைய தினம் சர்வீஸ் கமிஷனில் எப்போர்ப் பட்டவர்கள் நியமிக்கப்படுகிறர்கள்? சர்வீஸ் கமிஷனில் 5 வருஷத்தில் நியமிக்கப்பட்டவர்கள் மூன்று பேர்கள். அந்த 3 பேர்களில் 2 பேர்கள் பழுத்த காங்கிரஸ்காரர்கள். ஒருவர் பழுத்த காங்கிரஸ்காரர். இன்னெருவர் காங்கிரஸ்காரராகத் தேர்தலில் நின்று தோற்றதற்கு நஷ்ட ஈடாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அரசியல் கருத்தே இல்லாதவர்களைத்தான் நியமிக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. எதிர்க் கட்சியினராக இருந்தால் இந்த மாதிரி கொடுப்பீர்களா? இந்த உத்தியோகஸ்தர்கள் ஒரு க்வாஸி-ஜுடிஷ்யல் ஆபீஸர் என்ற முறையில் எந்தவிதமான விருப்பும் வெறுப்பும் இல்லாமல் பணியாற்ற வேண்டியவர்கள். அந்த முறையில் சிறந்த ஊழியர்களைப் பொறுக்குவதில் கட்சிச் சார்புள்ளவர்களை நியமிப்பது நியாயமல்ல. இதைத் தயவுசெய்து சிந்தித்துப் பதில் தாருங்கள். இன்று மாணவர்களைத் தேர்ந்தெடுக்கப் பல கமிட்டிகளைப் போடுகிறர்கள். ஒரு கட்சி சார்புள்ளவர்களைத்தானே போடுகிறர்கள். அதனல்தானே பல கோளாறுகள் ஏற்படுகின்றன. எதிர்க் கட்சிகளை ஒத்துழைக்க வேண்டுமென்று வேறு கூறுகிறர்கள். எப்படி ஒத்துழைக்க வேண்டுமென்று கூறுகிறர்கள்? நம் நாட்டிலே சோஷலிஸ சமுதாயம் அமைய, ஜனநாயக பண்பாடு வளர எதிர்க் கட்சிகளில் ஒத்துழைப்பு எந்த முறையில் வேண்டுமென்று சொல்லுங்கள்—நாங்கள் தயாராக இருக்கிறேம். நாங்கள் செய்வதைப் பற்றித் துதி பாடவேண்டுமென்று சொன்னல் நாங்கள் எப்படி ஒத்துழைப்பைக் கொடுக்க முடியும்? இன்றைய தினம் அமைச்சர்கள் செய்கிற பிரச்சாரத்தை
12 noon. எடுத்துப் பாருங்கள். முதல் மந்திரி அவர்கள் சுற்றுப்பிரயாணம் செல்லும்போது, எதிர்க் கட்சிப் பஞ்சாயத்து போர்டு தலைவர்களாக இருந்தாலும் வரவேற்பு கொடுக்கிறர்கள். அமைச்சர்கள் யார் வந்தாலும் வரவேற்பு கொடுக்க வேண்டுமென்று கம்யூனிஸ்டுகளாக இருந்தாலும் செய்கிறர்கள். அமைச்சர்களிடத்திலே குறைகளைச் சொல்லுங்கள் என்று கூறுகிறர்கள். அப்படி அமைச்சர்களிடத்திலே தங்கள் குறைகளை வரவேற்பில் எடுத்துச் சொல்லிவிட்டால், "இங்கு கட்சிப் பிரசாரத்தை ஆரம்பித்து விட்டீர்களா, உட்கார்" என்று முதல் மந்திரி சொல்கிறர். இது சரியா? எத்தனை பொதுஜனங்கள் பக்கத்தில் இருக்கிறர்கள்? பொதுஜனங்களைப் பார்த்து "எதிர்க் கட்சியினருக்கு ஓட்டு அளித்தீர்களே, அதனலேதான் ஒன்றும் செய்ய முடியவில்லை" என்று சொல்கிறர்கள். வேறெருு இடத்தில் நிதி மந்திரி அவர்கள் "மல்டி பார்டி" அமைப்புகள் ஏற்படவேண்டும். "மல்டி பார்டி" பல கட்சி அதிகாரத்தில் இருக்கும் சூழ்நிலை உருவாகலாம், அவர்கள் அதிகாரத்தை ஏற்று நடத்த வேண்டுமென்று குறிப்பிட்டார்கள்



16th March 1961] [Sri M. Kalyanasundaram]

என்று நினைக்கிறேன். அதே அடிப்படையில் நடக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். பல ஜில்லாக்களிலே, பல முனிசிபாலிடிகளிலே மாற்றுக் கட்சியினர் ஆட்சி செலுத்தி வருகிறர்கள். மத்திய சர்க்கார் ஒரு கட்சியாக இருக்கலாம். "மல்டி பார்டி" இருப்பதிலே கம்யூனிஸ்ட் கட்சிக்கு எப்போதும் ஒரு உடன்பாடு இருந்து வருகிறது. அதன்படி கம்யூனிஸ்டுகள் ஆட்சிக்கு வருவதாக இருந்தால்கூட இப்படிச் சொல்லமாட்டார்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM: இப்போது சொல்லமாட்டார்கள்தான்.

SRI M. KALYANASUNDARAM: நாங்கள் எப்போதும் நீதியுடன்தான் நடப்போம். எல்லா கட்சிக்கும் சுதந்திரம் கொடுப்போம். மாற்றுக் கட்சிகளாக இருந்தாலுங்கூட அவைகளுக்கும் கட்டாயமாக சுதந்திரத்தைக் கொடுப்போம். இதுதான் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கருத்தும்.

THE HON. SRI C. SUBRAMANIAM: கொடுப்பார்கள், கொடுப்பார்கள் சுதந்திரம்.

SRI M. KALYANASUNDARAM: ஏன், உங்களைக் கவிழ்ப்பதற்கும் சுதந்திரம் கொடுத்தோமே. நீங்கள்தான் எங்களை ஒழிக்க வேண்டுமென்று சொல்கிறீர்கள். அப்படிப்பட்ட ஒரு பண்பாடு வளர்வதற்கு உதவியாக இருக்கவேண்டுமென்பதற்காகத்தான் சொல்கிறேன்.

தவிர, மாற்றுக் கட்சியினர் ஆட்சி செலுத்தக்கூடிய முனிசிபாலிடிகளுக்கு இடையூறு செய்கிறர்கள். கோயம்புத்தூரில் மாற்றுக் கட்சியினர் முனிசிபாலிடி இருக்கிறது. சென்னை நகர சபையைப் பற்றி ஏற்கெனவே இங்கு சொன்னர்கள். அவர்கள் அமைச்சர்கள் முன்னலே சென்று பேசுவதற்குகூட முடியாது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இது கட்சியை ரொம்பவும் பாதிக்கிறது. இந்த மாதிரி காரியங்கள் செய்யக் கூடாது.

சுற்றுப் பிரயாணம் செய்வது நல்ல காரியம்தான், செய்யட்டும். நான் வேண்டாமென்று சொல்லவில்லை. செலவு அதிகம் ஆகிறது என்று சொல்கிறர்கள். அதைப் பற்றியும் நான் குறை கூறவில்லை. ஆனல் அமைச்சர்கள் எளிய வாழ்க்கையை நடத்திக் காட்ட வேண்டும். அதற்காக சம்பளத்தை 300 ரூபாயாகக் குறைக்கலாம் என்றலும், பரவாயில்லை. அப்படி சம்பளத்தை 300 ரூபாயாகக் குறைத்தாலும், அதிலே அதிக மிச்சத்தையும் காட்டிவிட முடியாது. எல்லா மந்திரிகளுக்கும் சம்பளமும், பிரயாணச் செலவும் சேர்ந்து மொத்தம் 10 லட்சம்தான் ஆகிறது. இதை ஒரு பெரிய தொகையாக நான் நினைக்கவில்லை. அவர்களுடைய சுற்றுப் பிரயாணச் செலவைப் பார்த்தால் 3 லட்சம்தான் ஆகிறது. இந்த 3 லட்ச ரூபாயிலே எவ்வளவு மிச்சப்படுத்தினலும், அது ஒரு

[Sri M. Kalyanasundaram] [16th March 1961

பெரிய சிக்கனமாக ஆகிவிடாது. மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டாக தாங்கள் எளிய வாழ்க்கை நடந்து காட்ட வேண்டுமென்றுதான் சொல்கிறேன். அப்போது தான் மற்றவர்களும் சிக்கனமாக நடப்பார்கள். நம்முடைய பட்ஜெட் 90 கோடி வந்திருக்கிறது. இந்த 90 கோடி ரூபாயிலே பல திட்டங்களை நாம் செய்ய இருக்கின்றோம். ஆகவே மேலிடத்தில் சிக்கனமாக இருந்து காட்டினால், பல துறைகளிலே இருக்கக்கூடியவர்களுக்கும் சிக்கனமாக இருக்க ஒருவழி செய்தவர்களாவோம். அதே சமயத்தில் இதிலே சர்க்கார் கட்சி நலனுக்காக எதையும் உபயோகப் படுத்தக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தவிர, அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணம் செல்லக்கூடிய காலத்திலே ஏழைகள் வீட்டுக்கு வந்து உட்காரட்டும். நாங்கள் வரவேற்கிறோம். பெரிய நிலப் பிரபுக்கள், முதலாளிகள் வீட்டிலே தயவு செய்து தங்க வேண்டாம். அவர்கள் கட்டியுள்ள கெஸ்ட் ஹவுசிலும் தங்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். இது கட்சி நலனைக்கூட பாதிக்கும். தவிர, இப்படி அமைச்சர்கள் வந்து முதலாளிகள் வீட்டிலும், நிலப் பிரபுக்கள் வீட்டிலும் தங்கி விட்டுச் சென்ற பிறகு, அவர்கள் தங்களுடைய சுய நலத்திற்காக அதிகாரிகளைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். அதிகாரிகளும் பயந்து, மந்திரியே வந்துவிட்டுப் போயிருக்கிறாரே என்று அவர்கள் சொல்லக்கூடிய காரியத்தைச் செய்யவேண்டியவர்களாக இருக்கிறார்கள். இதற்குப் பல உதாரணங்கள் கொடுக்க முடியும். அதிலும் குறிப்பாக பஸ் முதலாளி இவர்களை நன்கு பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள். இவர்களும் அவர்களை நம்பியிருக்கிறார்கள். அவர்களால்தான் காங்கிரஸ் பலப்படுத்த முடிகிறது என்று நம்பிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிடம் பணம் நிறைய இருந்தாலும், பஸ் முதலாளிகள் கொடுக்கக் கூடியதையும் வாங்கிக் கொள்ளலாம் என்றும், ராஜ்ய சர்க்கார் கஜானாவில் 70 லட்சம் ரூபாய் கொடுத்தாலும், அந்த 70 லட்சம் காங்கிரஸ் கஜானாவுக்கு வர முடியாதே என்று பரஸ்பர ஒப்பந்தமோ, என்னவோ, தெரியாது. அப்படியிருந்தால், நாட்டிலே நல்ல பண்பட்ட அதிகாரவர்க்கத்தின் ஒழுங்கை நிறைவேற்றப் பயன்படாது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பஸ் முதலாளிகள் கதர் சொக்காயை மாட்டிக்கொண்டு, முதல் மந்திரியுடன் பவனி வருகின்றதன் காரணமாக, அங்கிருக்கக்கூடிய அதிகாரிகள் தங்கள் கடமையை நிறைவேற்ற முடியாமல் இருப்பது எனக்குத் தெரியும். அந்த நிலைமைதான் இன்று நாட்டிலே ஏற்பட்டிருக்கிறது. உதாரணம் கொடுக்க விரும்பவில்லை. மந்திரிகள் சுற்றுப்பிரயாணத்தின் போது தங்குவதற்கு வசதி வேண்டுமென்றால், புதுக் கட்டிடங்கள் வேண்டுமானாலும் வசதியாக கட்டிக் கொள்ளட்டும். ஆட்சேபணை இல்லை. கனம் நிதி மந்திரி அவர்கள் டெல்லியிலே ஒரு ரெஸ்ட் அவுஸ் கட்ட வேண்டுமென்று சொன்னபோதுகூட, நான் அதை ஆதரித்துத்தான் பேசியிருக்கிறேன். செலவைத்தான் குறையுங்கள் என்று சொன்னேன். வசதியாக ஏர்கண்டிஷன் கட்டிடங்களை



16th March 1961] [Sri M. Kalyanasundaram]

வேண்டுமானாலும் கட்டிக் கொள்ளட்டும். ஆனால் எல்லாக் கட்சிகளுக்கும் சம சந்தர்ப்பம் கொடுக்க வேண்டுமென்றுதான் நான் கேட்டுக்கொள்கிறேன். எதிர்க் கட்சியினர்கூட ஜீப் காரில் வர வேண்டுமென்று விரும்பினாலும், அவர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுப்பதில்லை. வேண்டுமானால் மேலுக்குப் பேசலாம். அநேகமாக மந்திரிகளைச் சந்திப்பதற்கே சந்தர்ப்பம் இருப்பதில்லை. இருந்தாலும், எதிர்க் கட்சியினருக்கும் சம சந்தர்ப்பம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தேர்தல் வேலைகளில் எல்லாக் கட்சிகளின் ஒத்துழைப்பும் வேண்டுமென்று கூறப்படுகிறது. அப்படிப் பெற வேண்டுமென்று அமைச்சர் அவர்களும் சொல்கிறார்கள். உதாரணத்திற்கு சொல்கிறேன். எனது கட்சியைச் சார்ந்தவர்கள் ஆர்.டி.ஓ.-வுக்கு, "உங்களுக்கு உதவி செய்யக்கூடிய வகையிலே நாங்கள் ஒத்துழைக்கிறோம், நாங்கள் என்னென்ன செய்ய வேண்டுமென்று சொல்லுங்கள்" என்று கேட்டார்கள். எங்களுக்கு ராஜ்ய சர்க்கார் அனுப்பிய கடிதத்தை நம்பி, ஜில்லாவிலே உள்ள கட்சி ஊழியர்களுக்கு நாங்களும் சுற்றறிக்கை அனுப்பினோம். அப்படி நம்பிப் போனவர்களுக்கு என்ன கிடைத்தது?

**The Government of Madras have issued Communication direct to the political parties.**

அங்கே போய்க் கேட்டால், சென்னை அரசாங்கம் அறிவித்துள்ளபடி, கட்சித் தலைவர்களைக் கேட்டுக் கொள்ளுங்கள், இங்கு கேட்க வேண்டியதில்லை என்ற அளவிலே பதில் வந்திருக்கிறது. இப்படி இருந்தால் எப்படி ஒத்துழைப்புக் கிடைக்கும்? எப்படி சரியான முறையிலே எல்லாக் காரியங்களும் நடைபெற முடியும்? இது போல பல நிகழ்ச்சிகள் ஏற்பட்டிருக்கிறது. இது ஜனநாயகத்திற்குப் புறம்பானது என்று சொன்னால், சர்வ கட்சிகளின் ஒத்துழைப்பையும், யோசனையையும் கேட்டுத்தான் காரியங்கள் செய்யப்படுகிறது என்று எப்படிச் சொல்ல முடியும்?

கடைசியாக, ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். முதலாளிகளுக்குப் பரவலாக எல்லா வசதிகளும் செய்யப்படுகிறது. அமைச்சர்கள் சுற்றுப்பிராயணத்திற்கு வரும்போது அதிகாரிகளைத் தங்களுடன் தங்கள் வேலைகளுக்காக அழைத்துக்கொண்டு போதல். அதெல்லாவற்றையும் விட, தேர்தல் காலத்தில் பொறுப் பற்ற முறையில் இதைச் செய்கிறோம், அதைச் செய்கிறோம் என்று சொல்லி ஆங்காங்கே, அஸ்திவாரக் கல் நாட்டி தேர்தலுக்கான நம்பிக்கையைக் கொடுத்துவிட்டு, பின்னால் சும்மா இருந்து விடுதல். இதையெல்லாம் நான் பொறுப்பற்ற முறையில் பேசவில்லையென்று நினைக்கிறேன். தேர்தல் காலங்களில் நடக்கக்கூடியவையைத் தான் எடுத்துச் சொல்கிறேன். இது ஜனநாயகத்திற்கு உகந்ததல்ல. இதையெல்லாம் நிறுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**SRI C. N. ANNADURAI :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே,
இன்றைய விவாதத்தின் இடையில் ஓரளவுக்குக் கருத்து மோதல்
கள் ஏற்பட்டு, காரசாரமாகப் பேச்சு நடைபெற்றதால் நான் ஒரு
பெரிய ஏமாற்றத்திற்கு ஆளானேன். நம்முடைய நிதி அமைச்சர்
அவர்கள் தம்முடைய கோபதாபங்களையெல்லாம் விட்டுவிட்டதாக
நான்கு நாட்களுக்கு முன்னாலேதான் தெரிவித்தார்கள். அவராலே,
அவருடைய சுபாவத்தை அடக்கிக் கொள்ள முடியவில்லை
என்பதை உணர்ந்து நான் உண்மையிலேயே வருத்தப்படுகிறேன்.
ஆனால் அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிற பெரிய பணிக்கு, இப்
படிப்பட்ட கோபதாபங்களை உடனடியாகக் கொள்கிற சுபாவம்
அவருக்குக் குந்தகமாக இருக்கும் என்ற முறையிலேதான் மறு
படியும் இதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மான்யங்களைப்
பற்றிப் பேசுகின்ற நேரத்தில், உள்ள குறைபாடுகளை எடுத்துச்
சொல்கின்ற நேரத்தில், "அரசியல் சட்ட திட்டங்களை ஏற்றுக்
கொண்டு, உள்ளே வந்திருக்கிற நீங்கள் அதன்படி நடக்க இஷ்ட
மில்லையானால் வெளியே போய்விடுங்கள்" என்று பேசுவது, மண்டிக்
கடையிலே உள்ள குமாஸ்தாவைப் பிடிக்காத காரணத்தால்,
மண்டிக் கடை முதலாளி, "நான் சொல்வதைக் கேட்டுக்கொண்டு
இருந்தால் இங்கே இரு, இல்லாவிட்டால் கடையைவிட்டு கீழே
இறங்கி விடு", என்று கூறுகிற பாவனையில் இருக்கிறது இது.
அதே பாவனையில் கீழே இறங்கிப் போகும் குமாஸ்தா சும்மா
இருக்க மாட்டான். நடுவீதியிலே உள்ள மண்ணை எடுத்து வீசி,
"எத்தனை நாளைக்கு இந்த வாழ்வு?" என்று கேட்டுவிட்டுப்
போவான். அப்படிப்பட்ட வகையிலே நம்முடைய அமைச்சர்கள்,
அதிலும் நிதியமைச்சர் அவர்கள் அந்த வகையிலே நடந்து
கொள்ள வேண்டாமென்று நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்
கிறேன்.

சில பேர் உள்ளே இருப்பதால் பெருமை அடைகிறார்கள்; சில
பேர் வெளியே இருப்பதால் பெருமை அடைகிறார்கள். சில பேர்
உள்ளே வந்ததாலே சில கட்டுதிட்டங்களுக்கு அடங்கியிருக்கிறார்
கள். இவைகள் அனைத்தும் நிதி அமைச்சர் அவர்களுக்குத்
தெரியும். தெரிந்தாலும், அவர்கள் திடீரென்று ஆத்திரப்படத்தக்க
வகையிலே அவர்களுக்கு ஒரு எண்ணம் இருப்பதுபற்றி நான்
வருத்தப்படுகிறேன். நண்பர் அன்பழகன் பேசும்போது, "இந்த
அமைச்சர்கள் கவர்னர் வீட்டிலேதான் வேலை செய்ய தகுதியுள்ள
வர்கள்" என்றதும் ஆத்திரம் வந்தது. அதிலிருந்து கவர்னர்
பதவி, கவர்னரிடத்திலே பணியாற்றுவதை எவ்வளவு தாழ்வாகக்
கருதுகிறார்கள் என்பதை அறிந்து நான் பெருமைப்பட்டேன்.
ஆகவே, இதிலே அவர்கள் ஆத்திரப்பட்டு சில வார்த்தைகள்
கடுமையாகப் பேசப்பட்டதால், உண்மையிலேயே ஜனநாயகம்
ஸ்தம்பித்துவிட்டதாக யாரும் கருதுவதற்கில்லை. திராவிட
முன்னேற்றக் கழகம் தவறான பிரசாரத்திலே ஈடுபட்டுள்ளதாக
இழித்துப் பேசினார்கள்; தரக் குறைவாகப் பேசினார்கள். அடிதடி
களும் நடைபெற்றதாக சேலம் வட்டாரத்து உறுப்பினர் ஒருவர்



இங்கே குறிப்பிட்டார்கள். நான் அறிந்திருக்கிற வகையில்,
சேலத்தில் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் பேரில்
போடப்பட்ட எல்லா வழக்குகளிலும் சமீபத்தில் போன வாரத்
தில் கூட வெளிவந்த கோர்ட்டு நடவடிக்கைகளில் திராவிட
முன்னேற்றக் கழகத்தினர் பேரில் அம்மாபேட்டையில் போடப்
பட்ட வழக்குகளில்—அவர்கள் குற்றவாளிகள் அல்ல என்று
நிரூபிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். சேலத்தில்
விக்டோரியா மார்கெட் மைதானத்தில் நடைபெற்ற பொதுக்
கூட்டத்தில் தாறுமாறாகப் பேசினார்கள் என்று போலீஸ் தொடுத்த
வழக்குகளில் இரண்டு தரப்பினர்களிடமும் குற்றம் இருப்பதாகக்
கோர்ட்டில் நிரூபிக்கப்பட்டிருக்கிறதே தவிர, சேலம் தொகுதி
உறுப்பினர் சொன்னதுபோல அல்ல. திராவிட முன்னேற்றக்
கழகத்தினர் அடிக்கிறார்கள், திட்டுகிறார்கள் என்று அவர்கள் பேசி
யிருப்பது, உண்மையிலேயே கோர்ட்டு நடவடிக்கைகளை அவர்கள்
கவனிக்காமல் பேசுகிறார்களா அல்லது யாரும் எடுத்துக் குறிப்பிட
மாட்டார்கள் என்று பேசுகிறார்களா என்று எனக்குப் புரியவில்லை.
ஆகையினால், திராவிட முன்னேற்றக் கழகத்தினரைப் பற்றிப்
பேசும்போது, அவர்கள் தாறுமாறாக நடக்கிறார்கள், பேசுகிறார்
கள் என்று குற்றம் சாட்டியது மட்டுமல்ல. 'இவர்களுக்கெல்லாம்
அமைச்சர்கள் வெளியிலே சுற்றுப் பிரயாணம் செய்வதிலே பயம்
ஏற்பட்டுவிட்டது, ஆகையினால் அமைச்சர்கள் வரவேண்டாம்
என்கிறார்கள்' என்று ஒரு உறுப்பினர் இங்கு குறிப்பிட்டார்கள்.
உண்மையிலேயே எங்களுக்கு அப்படி ஒரு பயம் இருக்கிறது
என்று வாதத்திற்காக வைத்துக் கொள்ளுங்கள். எங்களுக்கு பயம்
இருக்கிறது என்று வாதத்திற்காக வைத்துக் கொள்வீர்களே
யானால், காங்கிரஸ் கட்சி வளர்வதற்கு மந்திரிகளுடைய சுற்றுப்
பிரயாணம் பயன்படுகிறது என்ற ஆசை உங்களுக்கு இருக்கிறது.
அந்த ஆசை உண்மையாக இருக்குமானால், இந்த பயம்
உண்மை என்று ஏற்றுக் கொள்ளலாம். இந்த பயம் உண்மை
என்று வாதித்தால், அந்த ஆசையும் இருக்கிறது என்பதை
நீங்கள் மறுப்பதற்கு இல்லை. ஆகையினால் தான் அமைச்சர்
களுடைய சுற்றுப் பிரயாணத்தைப் பற்றி எடுத்துச் சொல்லுகிற
நேரத்தில், அவர்கள் தங்களுடைய அதிகார வரம்பிற்கு உட்பட்டு
நடத்துகிற காரியங்களையும், கட்சி வரம்புக்கு உட்பட்டு நடத்து
கிற காரியங்களையும், இரண்டையும் அறுதியிட்டுக் காட்டி, பாகு
பாடு படுத்தத்தக்க அளவுக்கு அமைச்சர்களாலும் முடியாது,
பொதுமக்களாலும் முடியாது. அமைச்சர்கள் நாடக மேடையில்
உள்ள நடிகர்கள் அல்ல. வெளியில் இருந்து பேசுகிற நேரத்தில்
அண்ணன், தம்பி, மாமன், மச்சான், காதலன் காதலியாகப் பேசி
விட்டு, உள்ளே போனவுடன் அவர்களுக்கு இருக்கிற இயற்கை
பெயரில் பேசிக் கொண்டிருப்பது போல, மந்திரிகள் காலை 6 மணி
யிலிருந்து 8 மணி வரையில் மந்திரி அலுவல்களை பார்ப்பார்கள்,
8 மணியிலிருந்து 10 மணி வரையில் அவர்கள் கட்சி அலுவல்களைப்
பார்ப்பார்கள் என்று ஒரு கோடிட்டுக் காட்டுவதற்கு முடியாத

[Sri C. N. Annadurai] [16th March 1961

நிலை இருப்பதினால்தான், அமைச்சர்கள் தங்களுடைய சுற்றுப்
பிரயாண காலத்தில் கட்சிப் பிரசாரத்தில் ஈடுபடுகிறார்
கள் என்பதைப்பற்றி இங்கே குற்றம் குறையாக எடுத்துக்காட்டப்
பட்டது. 'ஏதோ பயப்பட்டுக்கொண்டு செய்கிறார்கள்' என்று
நம்முடைய உறுப்பினர்கள் சொல்லியிருப்பது குறித்து, 'அமைச்
சர்கள் பேசினால் காங்கிரஸ் கட்சி வளரும், நீங்களெல்லாம் பேசி
னால் காங்கிரஸ் கட்சி வளராது' என்று நீங்களே உங்களைத்
தாழ்த்திக் கொள்கிறீர்களே என்றுகூட வருத்தப்படுகிறேன்.

நான் இன்னொரு விஷயத்தைப் பற்றி சற்று விரிவாக இங்கே
பேச ஆசைப்படுகிறேன். நமது அமைச்சர் அவர்கள் இதைப்
பற்றி முன்னால் குறிப்பிட்டார்கள். தேர்தலுக்கான செலவினங்
களுக்கு அமைச்சர்கள் அதில் ஈடுபட்டுப் பணத்தை வசூலித்தால்
அது குறை அல்ல, அது குற்றம் அல்ல என்று அவர்கள் சொன்னார்
கள். அவர்கள் சிறந்த கிரிமினல் லாயராக இருந்தவர்கள்.
குற்றம் செய்யவில்லை என்று சொல்லுவதைவிட, செய்ததாகச்
சொல்லி, அது குற்றம் அல்ல என்று வாதாடுவது சாமர்த்தியத்தின்
பால் பட்டது. அந்த வகையில் சில பேர்கள் தாங்கள் வசூல்
செய்யவில்லை என்று நடந்ததை மறுத்திருப்பார்கள்.
அப்படித்தான் நடந்தது. அது எப்படி குற்றம் ஆகும்? 'ஆமாம்,
கட்சிக்காரர்கள் அல்லவா? கட்சித் தலைவர்கள் அல்லவா? நாங்கள்
என்றால் செலவு இல்லையா, செலவுக்குப் பணம் வசூலிக்க
வேண்டாமா? அந்த வசூல் காரியங்களில் மந்திரிகள் ஈடுபட்டால்
என்ன குற்றம்?' என்று அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். தேர்தல்
என்ன குற்றம் இருக்கிறது என்று கேட்டால், மூன்று வகையான
குற்றங்கள் இருக்கின்றன. அதில்

முதலாவதாக, மந்திரிகள் என்றால் பொதுமக்களுடைய
மந்திரிகளே தவிர, காங்கிரஸ் கட்சிக்கு மந்திரிகள் அல்ல. அவர்
களுக்குத் தரப்படுகிற சம்பளங்கள், கொடுக்கப்படுகிற அந்தஸ்து
கள், அவர்கள் பெற்றிருக்கிற அதிகாரங்கள் மொத்தமுமே எல்லா
மக்களுக்கும் சேர்த்துத் தரப்பட்டதே தவிர, காங்கிரஸ் கட்சி
யினுடைய வளர்ச்சிக்காகத் தரப்பட்டது அல்ல. ஆகையினால்,
அவர்கள் மந்திரி பொறுப்பில் இருக்கிற வரையில், எல்லாக் கட்சி
யினருக்கும் உட்பட்டவர்கள் அல்லது மேற்பட்டவர்கள் என்று
கருதலாமே தவிர, கட்சிப் பிரசாரம் செய்வதற்கு, கட்சித் தேர்த
லுக்குப் பணம் திரட்டுவதற்குப் போவது என்பது அமைச்சர்கள்
தங்களுடைய தரத்தை குறைத்துக் கொள்வதாகும். அது
என்னுடைய முதல் காரணம். ஆகவே அமைச்சர்கள் அதிலே
ஈடுபடக்கூடாது என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இரண்டாவது காரணம், "நாங்கள் போய் கேட்காவிட்டால்
பணம் கிடைக்குமா?" என்று நமது அமைச்சர் அவர்கள் வாதாடு
வதைப் போல இங்கே பேசுகிறார்கள். ஒரு கட்சிக்குப் பொது
மக்கள் எதனால் ஆதரவு தருகிறார்கள்? தேர்தல் நிதிக்கு ஏன்
பணம் தருகிறார்கள்? 'அந்தக் கட்சி நமது அபிலாஷைகளை



16th March 1961] [Sri C. N. Annadurai]

நிறைவேற்றுகிற கட்சி, அதன் கொள்கைகள் நம்முடைய
கொள்கைகள், அந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தால் தான் நாம் வாழ
முடியும்' என்ற நம்பிக்கையின் பேரில் பொதுமக்கள் தாங்கள்
விரும்புகிற கட்சிக்குப் பணத்தை தருவார்கள். அது உண்மையாக
இருக்குமானால் ஒவ்வொரு கட்சியும் தேர்தலுக்கான அறிக்கையில்
இதை வெளியிடலாம். 'எங்களுக்குத் தேர்தலுக்கு செலவு இருக்
கிறது, பணம் கொடுங்கள்' என்று வசூலித்துக் கொள்ளுவது மிக
நாகரிக முறையாகும். கனம் நிதி அமைச்சர் அவர்கள் என்னைக்
கேட்க பிரியப்படலாம்—'அப்படியா நீங்கள் செய்கிறீர்கள்?
நீங்கள் ஊர் ஊராகப் போய் பணம் வசூல் செய்யவில்லையா?'
என்று கேட்கக்கூடும். அவர்கள் அப்படி என்னைக் கேட்பது
என்னுடைய வாதத்தை வலுப்படுத்துவதாகும். அறிக்கை மூலம்
பணம் கிடைக்காது என்று தெரிந்து, அமைச்சர்கள் ஊர் ஊராகப்
போய்த் தேர்தலுக்குப் பணம் திரட்டுகிறார்கள் என்றால், 'மந்திரி
களை கேட்டால் பணம் அதிகமாக கொடுப்பார்கள்' என்ற என்னு
டைய வாதத்தை அவர்கள் மறைமுகமாக ஏற்றுக் கொள்கிறார்கள்
ஒப்புக்கொள்கிறார்கள் என்பதுதான் பொருள். மந்திரிப் பதவி
யின் செல்வாக்கை கட்சிக்காகப் பணம் திரட்டுவதற்குப் பயன்
படுத்தக்கூடாது. மந்திரி என்ற காரணத்தினால் சில செல்வாக்கு
ஏற்படுகிறது. சிலருக்குச் செல்வாக்கு இருப்பதினால் மந்திரிகள்
ஆகிறார்கள். சிலர் மந்திரிகள் ஆனதினால் செல்வாக்குப் பெறுகிறார்
கள். எந்த விதத்தில் செல்வாக்கு வந்தாலும், அந்தச் செல்
வாக்கை நாட்டு மக்களுக்குப் பயன்படுத்த வேண்டுமே தவிர,
அந்தச் செல்வாக்கை வைத்து கட்சித் தேர்தல் நிதிக்குப் பணம்
திரட்டுவது மிகமிகத் தரக்குறைவான காரியம். டெல்லியிலுள்ள
அமைச்சர் அவர்கள்—திருமதி தாரகேசுவரி சின்ஹா என்று
கருதுகிறேன்—தன்னுடை செல்வாக்கைப் பயன்படுத்தி வடநாட்
டில் பல நகரங்களுக்குச் சென்று சிறு சேமிப்புத் திட்டத்தின் கீழ்
லட்சக்கணக்கான பணத்தை அங்காடிக்குச் சேர்த்தார்கள்
என்று பத்திரிகையிலே பார்த்தேன். நம்முடைய மந்திரிகளும்
ஒவ்வொரு அங்காடிக்கும் வரட்டும், வீட்டுக்கு வீடு ஏறி இறங்
கட்டும், மாளிகைகளை பார்க்கட்டும், மண்டிக்கடைக்குப் போகட்
டும்—பொதுமக்களுக்கு தேவையான பணத்தை திரட்டுவதற்கு
அந்த வகையில் தங்கள் செல்வாக்கை பயன்படுத்துவார்களே
யானால் அவர்களை உச்சி மேல் வைத்து கொண்டாடும் ஜனநாயக
உலகம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதை
விட்டுவிட்டு, மந்திரிகள் என்ற காரணத்தினால் ஏற்படக்கூடிய
செல்வாக்கை வைத்துக்கொண்டு கட்சி தேர்தல் நிதிக்கு பணம்
திரட்டுகிறது என்பது மிகமிக தரக்குறைவான காரியம் என்பதை
நான் மறுபடியும், மறுபடியும் குறிப்பிட்டு சொல்ல விரும்பு
கிறேன். ஆகையினால், தேர்தல் நிதி திரட்டுவது என்ற காரியத்
திலே இனியாவது நமது அமைச்சர்கள் ஈடுபடாமல் இருப்பார்
களேயானால்தான், அவர்களைப் பற்றி பொதுமக்கள் கொண்டிருக்
கிற சந்தேக உணர்ச்சி குறைக்கப்படுமே தவிர, 'இல்லை, அப்படித்

தான் செய்வோம்' என்று சொன்னால்,—உண்மையிலேயே
அமைச்சர் அவர்கள் எங்களைப் பார்த்துச் சொன்னதுபோல்,—
'அப்படியானால் வெளியிலே போங்கள்' என்று சொன்னதுபோல்
—சொல்லத் தக்க அரசியல் பொறுப்பற்ற தன்மையும் எனக்கு
இல்லை, அப்படிப்பட்ட அதிகாரத்திலும் நான் இல்லை. ஆகையினால்
நான் அப்படிச் சொல்லமாட்டேன்—பொதுமக்கள் பார்த்து
'நீங்கள் வெளியே போங்கள்' என்று சொல்லக்கூடிய காலம்
வெகு விரைவிலே வரும் என்று நிச்சயமாகச் சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன்.

இன்னொன்றும் அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன். வாங்குகிற பணம், காங்கிரஸ் கட்சி தேர்தல் நிதி
யார்யாரிடமிருந்து திரட்டப்படுகிறது என்பதற்கு, பம்பாய்
ஹைகோர்ட்டு, கல்கத்தா ஹைகோர்ட்டு ஆகிய நீதிமன்றங்களில்
தரப்பட்ட தீர்ப்புகளை படிக்கிற நேரத்தில், உண்மையிலே
அரசியல் நாகரிக உணர்ச்சி படைத்த யார்தான் இஷ்டப்படு
வார்கள்? டாடா கம்பெனி—தனிப்பட்ட முதலாளிகள்—'எங்கு
தொழிற்சாலை நிரந்தரமாக இருக்கவேண்டுமானால் இந்தக் கட்சி
ஆட்சிக்கு வந்தால்தான் முடியும் என்று கருதி, காங்கிரஸ் கட்சி
தேர்தல் நிதிக்கு பணம் கொடுக்கிறோம்' என்று [illegible]டார்கள்
சார்பிலே பம்பாய் ஹைகோர்ட்டில் மனு தாக்கல் செய்திருக்
கிறார்களே? காங்கிரஸ் கட்சிக்கு பணம் கொடுக்கிற மக்கள்
யார்? காங்கிரஸ் கட்சியை காப்பாற்றவேண்டும் என்று விரும்பு
கிறவர்கள் யார் என்பது இதிலிருந்து வெட்ட வெளிச்சமாகத்
தெரிகிறது. அவர்களை அண்டுவதற்கும், பேசுவதற்கும் மந்திரிகள்
போனால்தான் முடியும் என்ற காரணத்தினால் அமைச்சர்கள்
போகிறார்களே தவிர, இல்லை என்றால் காங்கிரஸ் கட்சிக்கு
தேர்தல் நிதி திரட்ட தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரால் முடியாதா?
தமிழ் நாடு காங்கிரஸ் தலைவருக்கு உங்களுக்கு இருக்கிற செல்
வாக்கு இல்லை என்று சொல்லுகிறீர்களா? கனம் திரு. சுப்பிர
மணியம் அவர்கள் கேட்டால் ரூ. 1,000 கொடுப்பவர்கள், திரு. அழ
கேசன் அவர்கள் கேட்டால் தரமாட்டார்கள் என்று கருதுகிறீர்
களா? ஏன் என்னுடைய மாவட்டத்திலுள்ள பெரியவரை அவ்
வளவு தரக் குறைவாக, செல்வாக்கற்றவராக நீங்கள் கருதி,
அவரை தமிழ் நாடு காங்கிரஸ் தலைவராக வைத்துக்கொண்டு, இந்த
சாதாரண தேர்தல் நிதி திரட்டும் காரியத்தில்கூட நீங்கள் குறுக்
கிடுகிறீர்கள்? மாவட்டத்தில் இருக்கிற காங்கிரஸ் தலைவர்கள் என்ன
செய்கிறார்கள்? மாவட்டத்தில் இருக்கிற பழம்பெரும் காங்கிரஸ்
தியாகிகள் என்ன செய்கிறார்கள்? உங்கள் 8 பேர்கள் நீங்கலாக
தேர்தல் நிதி திரட்டுவதற்கு ஆள் பஞ்சம் ஏற்பட்டுவிட்டதா?
காங்கிரஸ் என்றால் நீங்கள் 8 பேர்கள் தானா? நீங்கள் 8 பேர்கள்
கேட்டால்தானா காங்கிரஸுக்கு பணம் தருவார்கள்? ஏன் உங்கள்
கட்சியை இப்படி இழிவுபடுத்துகிறீர்கள்? உங்களை உயர்த்திக்
கொள்ள வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. அந்த உயர்ந்த





எண்ணத்திலே இருந்துதான் நிதி அமைச்சர் திரு. சுப்பிரமணியம்
அவர்கள் சொன்னார்கள்: 'இஷ்டம் இருந்தால், இரு, இல்லையானால்
போ' என்று. அந்த உயர்ந்த பண்பு வளரட்டும். ஆனால், தேர்
தலுக்கு நிதி திரட்டுகிற அளவுக்குக்கூட காங்கிரஸ் தலைவர்களுக்கு
செல்வாக்கு இல்லை என்று கருதவேண்டும்? ஆகிய காரணங்
களினால், இந்தத் தேர்தல் நிதி திரட்டுகிற காரியத்தில் அமைச்சர்
கள் ஈடுபடவேண்டாம் என்று நான் பணிவோடு கேட்டுக்
கொள்ளுகிறேன். மற்றும் ஒன்று. தேர்தல் வருவதற்கு 6 திங்க
ளுக்கு முன்னால், 3 திங்களுக்கு முன்னாலாவது அவர்கள் பதவியை
விட்டு விலகவேண்டுமென்ற கருத்து என்னுடைய கழகத்தினாலே
அதிகாரபூர்வமாக எடுத்துச் சொல்லப்படவில்லை என்றாலும்,
நாட்டில் அப்படிப்பட்ட ஒரு கருத்து மிக வேகமாகப் பரவிக்
கொண்டு வருகிறது. இது எந்த ஜனநாயக நாட்டிலும் நடை
பெறுவதில்லை என்ற வாதத்தை நீங்கள் தருவீர்கள் என்றாலும்,
வளர்ச்சி அடையாத ஜனநாயக நாடுகளிலே இருக்கும் ஜனநாய
கத்துக்கும், இந்த நாட்டு ஜனநாயகத்திற்கும் வித்தியாசம் இருக்
கிறது என்ற காரணத்தினாலே, ஜனநாயகத்தின் தூய்மையைக்
காப்பாற்ற, உங்களுடைய நற்பெயரைக் காப்பாற்றிக்கொள்ள
நீங்கள் தேர்தலுக்கு 6 திங்களுக்கு முன்னால் பதவியிலிருந்து விலகு
வதுதான், நாட்டு மக்களுக்கு நீங்கள் எடுத்துக்காட்டக்கூடிய
மிகச்சிறந்த ஜனநாயகப் பண்பு என்பதை நான் உங்களுக்கு
எடுத்துச் சொல்லிக்கொள்கிறேன். கவர்னரைப் பற்றியும், மற்ற
வர்களைப் பற்றியும் பேசியதிலே நாங்கள் ஏதோ வெளியிலே ஒன்று
பேசுகிறோம், உள்ளே ஒன்று பேசுகிறோம் என்று மதிப்பிற்குரிய
காங்கிரஸ் கொரடா எடுத்துச் சொன்னார். கொரடா என்று
சொன்னாலே, எது அகப்படுகிறதோ, அதைப் பிடித்து இழுப்பது
என்பது பொருள். ஏதோ கிடைத்ததை வைத்துக்கொண்டு அவர்
இழுத்திருக்கிறார். அவருக்கு தக்க சமயத்தில், தக்க இடத்தில்
நான் தனியாக பதில் சொல்லிக்கொள்கிறேன். அவருக்குச்
சொல்லுவேன், இந்தத்தடவை கொரடா, இல்லாததைப் பிடித்து
இழுத்து, இழுத்து, கொரடாவும் கைபு[illegible] [illegible] போடுவது
என்ற முறையில், 9 லட்சம் கவர்னருக்காக ஆகின்ற செலவா
என்று குறிப்பிட்டார்கள். ஆனால் அவசரத்திலே நாலடியார்
என்ற தமிழ்ப்புலவர் ஏதோ சொன்னதாகச் சொன்னார். நாலடி
யார் என்ற தமிழ்ப் புலவர் இல்லை. நாலடியார் என்ற புத்தகத்
துக்குப் பெயர் இருக்கிறது. ஆகவே, அவருடைய ஆர்வத்தைப்
பாராட்டி, அவசரத்திற்கு அனுதாபம் தெரிவித்துக்கொண்டு, நான்
என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

*SRI V. K. RAMASWAMY MUDALIYAR: கனம் சபாநாயகர்
அவர்களே, இந்த மான்யத்தின்மீது கொண்டுவரப்பட்ட வெட்டுப்
பிரேரணையை ஆதரித்து நான் சில வார்த்தைகள் சொல்ல
விரும்புகிறேன். அமைச்சர்கள் எங்கு பார்த்தாலும் சுற்றுப்
பிரயாணம் செய்வதைப் பற்றி சில காலமாகவே புகார்கள் கிளம்பி

தான் செய்வோம்’ என்று சொன்னால்,—உண்மையிலேயே அமைச்சர் அவர்கள் எங்களைப் பார்த்துச் சொன்னதுபோல்,—‘அப்படியானால் வெளியிலே போங்கள்’ என்று சொன்னதுபோல்—சொல்லத் தக்க அரசியல் பொறுப்பற்ற தன்மையும் எனக்கு இல்லை, அப்படிப்பட்ட அதிகாரத்திலும் நான் இல்லை. ஆகையினால் நான் அப்படிச் சொல்லமாட்டேன்—பொதுமக்கள் பார்த்து ‘நீங்கள் வெளியே போங்கள்’ என்று சொல்லக்கூடிய காலம் வெகு விரைவிலே வரும் என்று நிச்சயமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றும் அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வாங்குகிற பணம், காங்கிரஸ் கட்சி தேர்தல் நிதி யார்யாரிடமிருந்து திரட்டப்படுகிறது என்பதற்கு, பம்பாய் ஹைகோர்ட்டு, கல்கத்தா ஹைகோர்ட்டு ஆகிய நீதிமன்றங்களில் தரப்பட்ட தீர்ப்புகளை படிக்கிற நேரத்தில், உண்மையிலே அரசியல் நாகரிக உணர்ச்சி படைத்த யார்தான் இஷ்டப்படுவார்கள்? டாடா கம்பெனி—தனிப்பட்ட முதலாளிகள்—‘எங்கு தொழிற்சாலை நிரந்தரமாக இருக்கவேண்டுமானால் இந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தால்தான் முடியும் என்று கருதி, காங்கிரஸ் கட்சி தேர்தல் நிதிக்கு பணம் கொடுக்கிறோம்’ என்று டைரக்டர்கள் சார்பிலே பம்பாய் ஹைகோர்ட்டில் மனு தாக்கல் செய்திருக்கிறார்களே? காங்கிரஸ் கட்சிக்கு பணம் கொடுக்கிற மக்கள் யார்? காங்கிரஸ் கட்சியை காப்பாற்றவேண்டும் என்று விரும்புகிறவர்கள் யார் என்பது இதிலிருந்து வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது. அவர்களை அண்டுவதற்கும், பேசுவதற்கும் மந்திரிகள் போனால்தான் முடியும் என்ற காரணத்தினால் அமைச்சர்கள் போகிறார்களே தவிர, இல்லை என்றால் காங்கிரஸ் கட்சிக்கு தேர்தல் நிதி திரட்ட தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரால் முடியாதா? தமிழ் நாடு காங்கிரஸ் தலைவருக்கு உங்களுக்கு இருக்கிற செல்வாக்கு இல்லை என்று சொல்லுகிறீர்களா? கனம் திரு. சுப்பிரமணியம் அவர்கள் கேட்டால் ரூ. 1,000 கொடுப்பவர்கள், திரு. அழகேசன் அவர்கள் கேட்டால் தரமாட்டார்கள் என்று கருதுகிறீர்களா? ஏன் என்னுடைய மாவட்டத்திலுள்ள பெரியவரை அவ்வளவு தரக் குறைவாக, செல்வாக்கற்றவராக நீங்கள் கருதி அவரை தமிழ் நாடு காங்கிரஸ் தலைவராக வைத்துக்கொண்டு, இந்த சாதாரண தேர்தல் நிதி திரட்டும் காரியத்தில்கூட நீங்கள் குறுக்கிடுகிறீர்கள்? மாவட்டத்தில் இருக்கிற காங்கிரஸ் தலைவர்கள் என்ன செய்கிறார்கள்? மாவட்டத்தில் இருக்கிற பழம்பெரும் காங்கிரஸ் தியாகிகள் என்ன செய்கிறார்கள்? உங்கள் 8 பேர்கள் நீங்கலாக தேர்தல் நிதி திரட்டுவதற்கு ஆள் பஞ்சம் ஏற்பட்டுவிட்டதா? காங்கிரஸ் என்றால் நீங்கள் 8 பேர்கள் தானா? நீங்கள் 8 பேர்கள் கேட்டால்தானா காங்கிரஸுக்கு பணம் தருவார்கள்? ஏன் உங்கள் கட்சியை இப்படி இழிவுபடுத்துகிறீர்கள்? உங்களை உயர்த்திக் கொள்ள வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. அந்த உயர்ந்த



எண்ணத்திலே இருந்துதான் நிதி அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் சொன்னார்கள் : ‘இஷ்டம் இருந்தால், இரு, இல்லையானால் போ’ என்று. அந்த உயர்ந்த பண்பு வளரட்டும். ஆனால், தேர்தலுக்கு நிதி திரட்டுகிற அளவுக்குக்கூட காங்கிரஸ் தலைவர்களுக்கு செல்வாக்கு இல்லை என்று கருதவேண்டும்? ஆகிய காரணங்களினால், இந்தத் தேர்தல் நிதி திரட்டுகிற காரியத்தில் அமைச்சர்கள் ஈடுபடவேண்டாம் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன். மற்றும் ஒன்று. தேர்தல் வருவதற்கு 6 திங்களுக்கு முன்னால், 3 திங்களுக்கு முன்னாலாவது அவர்கள் பதவியை விட்டு விலகவேண்டுமென்ற கருத்து என்னுடைய கழகத்தினாலே அதிகாரபூர்வமாக எடுத்துச் சொல்லப்படவில்லை என்றாலும், நாட்டில் அப்படிப்பட்ட ஒரு கருத்து மிக வேகமாகப் பரவிக்கொண்டு வருகிறது. இது எந்த ஜனநாயக நாட்டிலும் நடைபெறுவதில்லை என்ற வாதத்தை நீங்கள் தருவீர்கள் என்றாலும், வளர்ச்சி அடையாத ஜனநாயக நாடுகளிலே இருக்கும் ஜனநாயகத்துக்கும், இந்த நாட்டு ஜனநாயகத்திற்கும் வித்தியாசம் இருக்கிறது என்ற காரணத்தினாலே, ஜனநாயகத்தின் தூய்மையைக் காப்பாற்ற, உங்களுடைய நற்பெயரைக் காப்பாற்றிக்கொள்ள நீங்கள் தேர்தலுக்கு 6 திங்களுக்கு முன்னால் பதவியிலிருந்து விலகுவதுதான், நாட்டு மக்களுக்கு நீங்கள் எடுத்துக்காட்டக்கூடிய மிகச்சிறந்த ஜனநாயகப் பண்பு என்பதை நான் உங்களுக்கு எடுத்துச் சொல்லிக்கொள்கிறேன். கவர்னரைப் பற்றியும், மற்றவர்களைப் பற்றியும் பேசியதிலே நாங்கள் ஏதோ வெளியிலே ஒன்று பேசுகிறோம், உள்ளே ஒன்று பேசுகிறோம் என்று மதிப்பிற்குரிய காங்கிரஸ் கொரடா எடுத்துச் சொன்னார். கொரடா என்று சொன்னாலே, எது அகப்படுகிறதோ, அதைப் பிடித்து இழுப்பது என்பது பொருள். ஏதோ கிடைத்ததை வைத்துக்கொண்டு அவர் இழுத்திருக்கிறார். அவருக்கு தக்க சமயத்தில், தக்க இடத்தில் நான் தனியாக பதில் சொல்லிக்கொள்கிறேன். அவருக்குச் சொல்லுவேன், இந்தத்தடவை கொரடா, இல்லாததைப் பிடித்து இழுத்து, இழுத்து, கொரடாவும் கையுமாகச் சண்டை போடுவது என்ற முறையில், 9 லட்சம் கவர்னருக்காக ஆகின்ற செலவா என்று குறிப்பிட்டார்கள். ஆனால் அவசரத்திலே நாலடியார் என்ற தமிழ்ப்புலவர் ஏதோ சொன்னதாகச் சொன்னார். நாலடியார் என்ற தமிழ்ப் புலவர் இல்லை. நாலடியார் என்ற புத்தகத்துக்குப் பெயர் இருக்கிறது. ஆகவே, அவருடைய ஆர்வத்தைப் பாராட்டி, அவசரத்திற்கு அனுதாபம் தெரிவித்துக்கொண்டு, நான் என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

*SRI V. K. RAMASWAMY MUDALIYAR : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மான்யத்தின்மீது கொண்டுவரப்பட்ட வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அமைச்சர்கள் எங்கு பார்த்தாலும் சுற்றுப் பிரயாணம் செய்வதைப் பற்றி சில காலமாகவே புகார்கள் கிளம்பி

தான் செய்வோம்' என்று சொன்னால்,—உண்மையிலேயே அமைச்சர் அவர்கள் எங்களைப் பார்த்துச் சொன்னதுபோல்,—'அப்படியானால் வெளியிலே போங்கள்' என்று சொன்னதுபோல்—சொல்லத் தக்க அரசியல் பொறுப்பற்ற தன்மையும் எனக்கு இல்லை, அப்படிப்பட்ட அதிகாரத்திலும் நான் இல்லை. ஆகையினால் நான் அப்படிச் சொல்லமாட்டேன்—பொதுமக்கள் பார்த்து 'நீங்கள் வெளியே போங்கள்' என்று சொல்லக்கூடிய காலம் வெகு விரைவிலே வரும் என்று நிச்சயமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றும் அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வாங்குகிற பணம், காங்கிரஸ் கட்சி தேர்தல் நிதி யார்யாரிடமிருந்து திரட்டப்படுகிறது என்பதற்கு, பம்பாய் ஹைகோர்ட்டு, கல்கத்தா ஹைகோர்ட்டு ஆகிய நீதிமன்றங்களில் தரப்பட்ட தீர்ப்புகளை படிக்கிற நோக்கில், உண்மையிலே அரசியல் நாகரிக உணர்ச்சி படைத்த யார்தான் இஷ்டப்படுவார்கள்? டாடா கம்பெனி—தனிப்பட்ட முதலாளிகள்—'எங்கு தொழிற்சாலை நிரந்தரமாக இருக்கவேண்டுமானால் இந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தால்தான் முடியும் என்று கருதி, காங்கிரஸ் கட்சி தேர்தல் நிதிக்கு பணம் கொடுக்கிறோம்' என்று டைரக்டர்கள் சார்பிலே பம்பாய் ஹைகோர்ட்டில் மனு தாக்கல் செய்திருக்கிறார்களே? காங்கிரஸ் கட்சிக்கு பணம் கொடுக்கிற மக்கள் யார்? காங்கிரஸ் கட்சியை காப்பாற்றவேண்டும் என்று விரும்புகிறவர்கள் யார் என்பது இதிலிருந்து வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது. அவர்களை அண்டுவதற்கும், பேசுவதற்கும் மந்திரிகள் போனால்தான் முடியும் என்ற காரணத்தினால் அமைச்சர்கள் போகிறார்களே தவிர. இல்லை என்றால் காங்கிரஸ் கட்சிக்கு தேர்தல் நிதி திரட்ட தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரால் முடியாதா? தமிழ் நாடு காங்கிரஸ் தலைவருக்கு உங்களுக்கு இருக்கிற செல்வாக்கு இல்லை என்று சொல்லுகிறீர்களா? கனம் திரு. சுப்பிரமணியம் அவர்கள் கேட்டால் ரூ. 1,000 கொடுப்பவர்கள், திரு. அழகேசன் அவர்கள் கேட்டால் தரமாட்டார்கள் என்று கருதுகிறீர்களா? ஏன் என்னுடைய மாவட்டத்திலுள்ள பெரியவரை அவ்வளவு தரக் குறைவாக, செல்வாக்கற்றவராக நீங்கள் கருதி, அவரை தமிழ் நாடு காங்கிரஸ் தலைவராக வைத்துக்கொண்டு, இந்த சாதாரண தேர்தல் நிதி திரட்டும் காரியத்தில்கூட நீங்கள் குறுக்கிடுகிறீர்கள்? மாவட்டத்தில் இருக்கிற காங்கிரஸ் தலைவர்கள் என்ன செய்கிறார்கள்? மாவட்டத்தில் இருக்கிற பழம்பெரும் காங்கிரஸ் தியாகிகள் என்ன செய்கிறார்கள்? உங்கள் 8 பேர்கள் நீங்கலாக தேர்தல் நிதி திரட்டுவதற்கு ஆள் பஞ்சம் ஏற்பட்டுவிட்டதா? காங்கிரஸ் என்றால் நீங்கள் 8 பேர்கள் தானா? நீங்கள் 8 பேர்கள் கேட்டால்தானா காங்கிரஸுக்கு பணம் தருவார்கள்? ஏன் உங்கள் கட்சியை இப்படி இழிவுபடுத்துகிறீர்கள்? உங்களை உயர்த்திக் கொள்ள வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. அந்த உயர்ந்த



எண்ணத்திலே இருந்துதான் நிதி அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் சொன்னார்கள்: 'இஷ்டம் இருந்தால், இரு. இல்லையானால் போ' என்று. அந்த உயர்ந்த பண்பு வளரட்டும். ஆனால், தேர் தலுக்கு நிதி திரட்டுகிற அளவுக்குக்கூட காங்கிரஸ் தலைவர்களுக்கு செல்வாக்கு இல்லை என்று கருதவேண்டும்? ஆகிய காரணங் களினால், இந்தத் தேர்தல் நிதி திரட்டுகிற காரியத்தில் அமைச்சர் கள் ஈடுபடவேண்டாம் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன். மற்றும் ஒன்று. தேர்தல் வருவதற்கு 6 திங்க ளுக்கு முன்னால், 3 திங்களுக்கு முன்னாலாவது அவர்கள் பதவியை விட்டு விலகவேண்டுமென்ற கருத்து என்னுடைய கழகத்தினாலே அதிகாரபூர்வமாக எடுத்துச் சொல்லப்படவில்லை என்றாலும், நாட்டில் அப்படிப்பட்ட ஒரு கருத்து மிக வேகமாகப் பரவிக் கொண்டு வருகிறது. இது எந்த ஜனநாயக நாட்டிலும் நடை பெறுவதில்லை என்ற வாதத்தை நீங்கள் தருவீர்கள் என்றாலும், வளர்ச்சி அடையாத ஜனநாயக நாடுகளிலே இருக்கும் ஜனநாய கத்துக்கும், இந்த நாட்டு ஜனநாயகத்திற்கும் வித்தியாசம் இருக் கிறது என்ற காரணத்தினாலே, ஜனநாயகத்தின் தூய்மையைக் காப்பாற்ற, உங்களுடைய நற்பெயரைக் காப்பாற்றிக்கொள்ள நீங்கள் தேர்தலுக்கு 6 திங்களுக்கு முன்னால் பதவியிலிருந்து விலகு வதுதான், நாட்டு மக்களுக்கு நீங்கள் எடுத்துக்காட்டக்கூடிய மிகச்சிறந்த ஜனநாயகப் பண்பு என்பதை நான் உங்களுக்கு எடுத்துச் சொல்லிக்கொள்கிறேன். கவர்னரைப் பற்றியும், மற்ற வர்களைப் பற்றியும் பேசியதிலே நாங்கள் ஏதோ வெளியிலே ஒன்று பேசுகிறோம், உள்ளே ஒன்று பேசுகிறோம் என்று மதிப்பிற்குரிய காங்கிரஸ் கொறடா எடுத்துச் சொன்னார். கொறடா என்று சொன்னாலே, எது அகப்படுகிறதோ, அதைப் பிடித்து இழுப்பது என்பது பொருள். ஏதோ கிடைத்ததை வைத்துக்கொண்டு அவர் இழுத்திருக்கிறார். அவருக்கு தக்க சமயத்தில், தக்க இடத்தில் நான் தனியாக பதில் சொல்லிக்கொள்கிறேன். அவருக்குச் சொல்லுவேன். இந்தத்தடவை கொறடா, இல்லாததைப் பிடித்து இழுத்து. இழுத்து, கொறடாவும் கையுமாகத் தன்னை போடுவது என்ற முறையில், 9 லட்சம் கவர்னருக்காக ஆகின்ற செலவை என்று குறிப்பிட்டார்கள். ஆனால் அவசரத்திலே நாலடியார் என்ற தமிழ்ப்புலவர் ஏதோ சொன்னதாகச் சொன்னார். நாலடி யார் என்ற தமிழ்ப் புலவர் இல்லை. நாலடியார் என்ற புத்தகத் துக்குப் பெயர் இருக்கிறது. ஆகவே, அவருடைய ஆர்வத்தைப் பாராட்டி, அவசரத்திற்கு அனுதாபம் தெரிவித்துக்கொண்டு, நான் என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

*SRI V. K. RAMASWAMY MUDALIYAR: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மான்யத்தின்மீது கொண்டுவரப்பட்ட வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அமைச்சர்கள் எங்கு பார்த்தாலும் சுற்றுப் பிரயாணம் செய்வதைப் பற்றி சில காலமாகவே புகார்கள் கிளம்பி

16th March 1961] [Sri C. Subramaniam]

பற்றிப் பேச வேண்டுமென்ற ஆவா உள்ளவன் நான். அது மூடி மறைக்க வேண்டிய காரியம் இல்லை. இன்றைக்கு மந்திரிகள் தேர்தல் நிதி திரட்டுகிறார்கள் என்பதை நான் ஒப்புக்கொள்வது மட்டுமின்றி, அதை மறை முகமாகச் செய்யவில்லை என்றும் சொல்லிக்கொள்ளுகிறேன். அப்படித் திரட்டுவது சரியா இல்லையா என்று ஒரு முடிவு கட்டவேண்டும். தரக்குறைவா, பண்பா என்ற முறையில் இல்லாமல் முதலில் அது சரியா இல்லையா என்று முடிவு எடுக்க வேண்டும். இங்கு மட்டுமல்ல, நம் நாட்டிலே எல்லா இடங்களிலும் நடக்கக்கூடிய இதைக் குறித்து ஒரு முடிவு ஏற்பட வேண்டும் என்றே நான் பல இடங்களில் இந்தப் பிரச்னையை கிளப்புகிறேன். இன்றைக்கு மந்திரிகள் என்று சொல்லும்போது, எல்லோருக்கும் பொதுவாக இருப்பவர்கள் என்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் சொன்னார்கள். எனக்குத் தெரிந்தவரை மந்திரிகள் என்று சொல்லும்போது, அவர்கள் எல்லோருக்கும் பொதுவாக பணியாற்ற வேண்டுமென்றே பணியாற்றுகிறோம், பணியாற்ற முயற்சிக்கிறோம்; முயற்சிகளில் தோல்வி அடைந்தால் அது வேறு; அவ்விதம் முயற்சி செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். இந்த கட்சி அடிப்படையில் இயங்கும் ஜனநாயக அரசியல் அமைப்பில் மந்திரிகள் இவ்வாறு எல்லோருக்கும் பொதுவாகப் பணியாற்றுகிறவர்கள் என்பது நிர்வாகத் துறையில் சரியானாலும், அவர்களும் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதை மறக்கக்கூடாது. இன்றைக்கு மந்திரிகள் தமிழ் நாட்டுக்கு மந்திரிகள் ஆனாலும், அவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதை மறக்கக்கூடாது, மறக்க முடியாது. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தினால்தான் இங்கே மந்திரிகளாக இருக்கிறார்கள் என்பதை உணர வேண்டும்.

இன்றைக்கு இருக்கக்கூடிய பிரச்னை, அரசியல் கட்சிகள் தேர்தலுக்கு நிதி திரட்டலாமா வேண்டாமா என்பதுதான். அதை முதலில் முடிவு செய்யவேண்டும். இன்றைக்கு இருக்கும் ஜனநாயக அடிப்படையில், தேர்தல்களுக்கு நிதி அவசியம்; நிதியைத் திரட்ட வேண்டும் என்பதைப்பற்றி யாரும் கருத்து வேறுபாடு கொள்ள முடியாது. காங்கிரஸ்காரர்கள் மந்திரிகளாக இருந்து செய்கிறார்கள் என்பதால் முறைத் தவறு என்று சொல்வது சரியாகாது. முறை சரியா என்று பார்க்க வேண்டும். தரக் குறைவு என்பது இல்லை. மந்திரிகள் தரக் குறைவாக நடக்கமாட்டார்கள், அவர்கள் செய்வதால் தரக் குறைவு ஏற்படாது. ஆனால், அது முறையானதா என்பதைத்தான் நாம் யோசிக்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் நீங்கள் கேட்டுக் கொடுப்பவர்கள், தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் கேட்டால் கொடுக்கமாட்டார்களா என்ற கருத்தை சொன்னார்கள். கட்டாயம் கொடுப்பார்கள். ஆனால், அந்த கட்சிக்காரர்களே மந்திரிகளாக இருக்கும் போது, மந்திரிகள் செய்தால் அதிகம் வசூல் செய்து விடுவார்கள் என்பது எப்படி சரியாகும்? காங்கிரஸ்காரர்களே மந்திரிகளாக இருக்கும் காரணத்தால், மற்றவர்களுக்கும் நிதி கொடுப்பார்கள்;

[Sri C. Subramaniam] [16th March 1961

அவர்கள் "Conception of Indian Ministers and Governors of Independent India", என்பதைப்பற்றி கீழ்க்கண்டவாறு எழுதி யிருக்கிறார்கள் :

"Their personal life should be a model of simplicity. They should perform body labour for at least one hour daily either in the form of spinning or scavenging, growing of food or of vegetables to help the country to make good the food shortage."

"The Ministers should be free from all vices and addictions. They should set an example in plain living and high thinking. They would need no bodyguards. People themselves would provide all the security they might require instead of their having to invoke security measures against people. May be, mine will prove to be a cry in the wilderness, but I cannot remain silent as I do not want to go down as an unprotesting witness of what is taking place around me in the country today."

இப்பொழுது காந்திஜி அவர்கள் உயிரோடு இருந்தால், அவரை
வேறு ஒருவரும் கொன்றிருக்க வேண்டியதில்லை. தானாகவே தற்
கொலை செய்து கொண்டிருப்பார்.

ஆகவே, இவற்றை எல்லாம் கண்ணும் கருத்துமாகக் கவனித்து,
எதிர்க்கட்சியினர் சொல்லுவதையும் மனத்தில் கொண்டு, நிர்
வாகத்தை நல்ல முறையில் நடத்த வேண்டுமென்று கேட்டுக்
கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் துணைத்
12-30 p.m. தலைவர் அவர்களே, முதன் முதலிலே, கோபம் வந்த முறையில்
நான் நடந்து கொண்டதற்கு வருத்தத்தைத் தெரிவிக்கிறேன்.
கோபம் வரக்கூடிய காரணம் இருந்தாலும்கூட, கோபம் வராமல்
இருக்க வேண்டும் என்பதை உணருகிறேன். (குறுக்கீடு) இயற்கை
குணம் அவ்வளவு சுலபமாக விட்டு விடாது. (குறுக்கீடு) அது
தான் சொன்னேன், கோபம் வரக் காரணம் இருந்தாலும், கோபம்
வராமல் இருப்பதுதான் சிறந்தது ; காரணம் இல்லாமல் இருக்கும்
போது யாரும் கோபிக்க மாட்டார்கள். ஆனால் காரணம் இருந்
தாலும்கூட, அது வரக்கூடாது என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன்.
அதை என்னுடைய குறையாக உணர்ந்திருக்கிறேன் என்பதை
மறுபடியும் தெரிவிக்க விரும்புகிறேன். அந்தக் குறையை அங்கத்
தினர்களும் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்
கொள்ளுகிறேன், (குறுக்கீடு) இருக்கிற வரைக்கும் பொறுத்துத்
தான் ஆகவேண்டும். வேண்டாம் என்றால் போகிறேன்.

மந்திரிகள் எல்லோரும் எப்படி எப்படி நடந்துகொள்ள
வேண்டும் என்று பல எதிர்க்கட்சி அங்கத்தினர்கள், பேசினார்கள்.
எங்கள் மதிப்பை உயர்த்த வேண்டும் என்பதற்காகச் சொன்
னார்கள் என்று அதில் பல கருத்துக்களை நான் வரவேற்கிறேன்.
முக்கியமாக, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர், நிதி வசூல்
செய்வதைப்பற்றி மறுபடியும் எடுத்துப் பேசினார்கள். வகைப்



16th March 1961] [Sri C. Subramaniam]

பற்றிப் பேச வேண்டுமென்ற ஆவா உள்ளவன் நான். அது மூடி
மறைக்க வேண்டிய காரியம் இல்லை. இன்றைக்கு மந்திரிகள்
தேர்தல் நிதி திரட்டுகிறார்கள் என்பதை நான் ஒப்புக்கொள்வது
மட்டுமின்றி, அதை மறை முகமாகச் செய்யவில்லை என்றும்
சொல்லிக்கொள்ளுகிறேன். அப்படித் திரட்டுவது சரியா இல்லையா
என்று ஒரு முடிவு கட்டவேண்டும். தரக்குறைவா, பண்பா என்ற
முறையில் இல்லாமல் முதலில் அது சரியா இல்லையா என்று முடிவு
எடுக்க வேண்டும். இங்கு மட்டுமல்ல, நம் நாட்டிலே எல்லா இடங்
களிலும் நடக்கக்கூடிய இதைக் குறித்து ஒரு முடிவு ஏற்பட
வேண்டும் என்றே நான் பல இடங்களில் இந்தப் பிரச்னையை
கிளப்புகிறேன். இன்றைக்கு மந்திரிகள் என்று சொல்லும்போது,
எல்லோருக்கும் பொதுவாக இருப்பவர்கள் என்று திராவிட முன்
னேற்றக் கழகத் தலைவர் சொன்னார்கள். எனக்குத் தெரிந்தவரை
மந்திரிகள் என்று சொல்லும்போது, அவர்கள் எல்லோருக்கும்
பொதுவாக பணியாற்ற வேண்டுமென்றே பணியாற்றுகிறோம், பணி
யாற்ற முயற்சிக்கிறோம்; முயற்சிகளில் தோல்வி அடைந்தால் அது
வேறு; அவ்விதம் முயற்சி செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம்
என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். இந்த கட்சி அடிப்படையில்
இயங்கும் ஜனநாயக அரசியல் அமைப்பில் மந்திரிகள் இவ்வாறு
எல்லோருக்கும் பொதுவாகப் பணியாற்றுகிறவர்கள் என்பது நிர்
வாகத் துறையில் சரியானாலும், அவர்களும் கட்சியைச் சேர்ந்தவர்
கள் என்பதை மறக்கக்கூடாது. இன்றைக்கு மந்திரிகள் தமிழ்
நாட்டுக்கு மந்திரிகள் ஆனாலும், அவர்கள் காங்கிரஸ் கட்சியைச்
சேர்ந்தவர்கள் என்பதை மறக்கக்கூடாது, மறக்க முடியாது.
காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தினால்தான்
இங்கே மந்திரிகளாக இருக்கிறார்கள் என்பதை உணர வேண்டும்.

இன்றைக்கு இருக்கக்கூடிய பிரச்சினை, அரசியல் கட்சிகள்
தேர்தலுக்கு நிதி திரட்டலாமா வேண்டாமா என்பதுதான். அதை
முதலில் முடிவு செய்யவேண்டும். இன்றைக்கு இருக்கும் ஜன
நாயக அடிப்படையில், தேர்தல்களுக்கு நிதி அவசியம்; நிதியைத்
திரட்ட வேண்டும் என்பதைப்பற்றி யாரும் கருத்து வேறுபாடு
கொள்ள முடியாது. காங்கிரஸ்காரர்கள் மந்திரிகளாக இருந்து
செய்கிறார்கள் என்பதால் முறைத் தவறு என்று சொல்வது சரி
யாகாது. முறை சரியா என்று பார்க்க வேண்டும். தரக் குறைவு
என்பது இல்லை. மந்திரிகள் தரக் குறைவாக நடக்கமாட்டார்கள்,
அவர்கள் செய்வதால் தரக் குறைவு ஏற்படாது. ஆனால், அது
முறையானதா என்பதைத்தான் நாம் யோசிக்க வேண்டும்.
திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் நீங்கள் கேட்டுக் கொடுப்
பவர்கள், தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் கேட்டால் கொடுக்கமாட்
டார்களா என்ற கருத்தை சொன்னார்கள். கட்டாயம் கொடுப்
பார்கள். ஆனால், அந்த கட்சிக்காரர்களே மந்திரிகளாக இருக்கும்
போது, மந்திரிகள் செய்தால் அதிகம் வசூல் செய்து விடுவார்கள்
என்பது எப்படி சரியாகும்? காங்கிரஸ்காரர்களே மந்திரிகளாக
இருக்கும் காரணத்தால், மற்றவர்களுக்கும் நிதி கொடுப்பார்கள்

அவர்களுக்கும் தெரியும் கட்சித் தலைவரிடம் கொடுத்தாலும் அவர்கள் கட்சி சார்பில் மந்திரிகளிடம் அப்படிக் கொடுத்தவர்களின் பட்டியலை கொடுத்து, யார் யார் கொடுத்தார்கள் என்று காட்டுவார்கள், அவர்களும் பார்ப்பார்கள். அதில் ஒளிவு மறைவாக வைத்துக்கொள்ளலாம் என்றால் வைத்துக்கொள்ளலாம். அப்படி வைத்துக்கொள்ள முடியாது. ஆகவே, காங்கிரஸ் கட்சிக்காரர் யாராக இருந்தாலும், மந்திரி சபை இருக்கின்ற காரணத்தால் யாரும் கொடுப்பார்கள். அது மந்திரிகளானால் என்ன? கட்சித் தலைவர் ஆனால் என்ன? அப்பொழுதும் மந்திரிசபை இருக்கும் காரணத்தினால் கட்சித் தலைவருக்குக் கொடுக்கிறார்கள் என்று வாதாட முடியும். ஆகவே, அரசியல் கட்சி அதிகாரத்தில் இருக்கும்போது, அது எந்தக் கட்சியானாலும், நிதி திரட்டக் கூடாது என்று முறை வகுப்பதானால், அதைப்பற்றி விவாதிக்கலாம். ஆனால் ஒரு கட்சி நிதி திரட்டலாம். அது முறையானது என்றால், மந்திரி பண்ணினால் அது குற்றம் என்று சொல்லுவது ஏன்? என்று புரியவில்லை. மந்திரிகளானால், அவர்கள் நேரிடையாகச் செய்யலாம். மற்றவர்கள் செய்வதானால், இன்னும் அது மோசமாக இருக்கும். மந்திரிகளுக்கு பொறுப்பு இருக்கிறது; நிதி கொடுக்க முடியுமானால், விரும்பினால்தான் கொடுக்கப் போகிறார்கள். எந்தக் கூட்டத்தில் வேண்டுமானாலும், நாங்கள் சொல்லும் முறைகளை உங்கள் ஸி.ஐ.டி. வைத்துப் பார்த்தாலும்கூட எனக்கு ஆட்சேபமில்லை. கொடுத்துத் தான் ஆகவேண்டும் என்று நிர்ப்பந்தப்படுத்தும் முறையில் மந்திரிகள் செய்கிறார்களா என்று பார்த்துக்கொள்ளலாம். எந்த விதமான தவறும் ஏற்படக்கூடாது, தவறில்லாமல் நடத்தக்கூடியவர்கள்தான் செய்யவேண்டும், அவர்கள்தான் இந்த வேலையை ஏற்றுக்கொள்ள வேண்டும். மற்றவர்கள் இதில் தலையிடக்கூடாது என்று கட்டுப்பாடு செய்கிறோம். அது ஒன்று. இரண்டாவதாக, கட்சிக்குப் பணம் கொடுக்கும் யாருக்கும் நிர்வாகத்தில் ஏதாவது சலுகைகள் கொடுக்கப்படுகிறதா என்றால் கிடையாது. அல்லது கொடுக்கமாட்டேன் என்றவருக்கு ஏதாவது பாதகம் ஏற்படுகிறதா என்றால் அதுவும் கிடையாது. அது இன்னொன்று. அதற்கு மாறாக ஏதாவது நடக்கிறதென்றால், அதைக் கட்டாயம் சுட்டிக் காட்டலாம்; குற்றம் இருந்தால் உண்மையை ஒப்புக்கொள்ளத் தயார். அந்த அடிப்படையில் செய்யப்படுகிறது என்று திட்டவட்டமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்குக் கொள்கை அடிப்படையில் செய்யப்படுகிறது, எல்லோருக்கும் திட்டவட்டமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கொடுக்கும் காரணத்தால் யாருக்கும் எந்த வசதியும் கொடுக்கப்படுவதில்லை. கொடுக்காததால் யாருக்கும் எந்த பாதகமும் செய்யவில்லை என்ற உறுதியை இந்த சபையில் சொல்ல விரும்புகிறேன். இதற்கு மாறாக ஏதாவது நிகழ்ச்சி நடந்தால், எங்கள் பேரில் குற்றம் சாட்ட எந்தக் கட்சிக்கும், ஏன் தனிப்பட்டவர்களுக்கும் உரிமை இருக்கிறது என்றும் சொல்ல விரும்புகிறேன்.





இதிலே மந்திரிகள் கட்சியிலிருந்து மாறுபட்டவர்கள் என்று பேசுவது சரியாகாது. யாரையாவது போடுவதற்குப் பதிலாக, பொறுப்பை உணர்ந்த மந்திரிகளை தவறு ஏற்படாத முறையில் செய்ய வேண்டும் என்கிறோம். கண்டவர்களைப் போட்டு, அவர்களிடம் விட்டு அது வேறு விதமாகப் போவது கூடாது. ஆனால் மந்திரிகள் செய்வதே தவறு என்பதை ஒத்துக்கொள்ள முடியவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் பேசியதையும் கேட்டேன்; மற்றவர்கள் அதைப்பற்றி விவாதிப்பதையும் அதிகமாகக் கவனித்துக்கொண்டு வருகிறேன். அதோடு என்னுடைய மனதிலேயே ஆழ்ந்து சிந்தனை செய்து, தவறு என்றால் அதிகாரத்தில் உள்ள எந்தக் கட்சியும் நிதி திரட்டக்கூடாது; இல்லை வேறு அடிப்படையில் என்றால், மந்திரிகள் போய் இம்மாதிரி நிதி கொடுக்க வேண்டும் என்பதில் தரக் குறைவு எதுவும் நேர்ந்து விடாது, தமிழ் நாட்டு மக்களுக்கு எந்தத் தரக் குறைவும் ஏற்படாது என்று, திரு. அண்ணாதுரை அவர்கள் அதைக் குறிப்பிட்டதால் சொல்லுகிறேன் அவர்களுக்கு. நிதி திரட்டுவது முறையில்லை என்றால் அது வேறு விஷயம்; தரக் குறைவு எதுவும் இல்லை என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு விஷயம். "இம்மாதிரி பணம் கொடுக்கக்கூடியவர்கள் யார்?" என்று கேட்கின்றார்கள். இன்றைக்குத் தனிப்பட்டவர்களிடத்தில் போய், அவர்களுடைய கணக்கில் வைக்காமல் பணம் திரட்டுவது என்றால், அப்படிச் செய்துவிட முடியும். ஆனால், கணக்கு இருக்கக்கூடிய முறையில் தனிப்பட்டவர்களானாலும் சரி, பொதுக் கம்பெனிகளானாலும் சரி, அவர்களிடமிருந்து பணம் திரட்ட வேண்டுமென்று ஏற்பாடு இருப்பதற்குக் காரணம், தனிப்பட்டவர்களுக்கு யாரும் கடமைப்பட்டிருக்கக் கூடாது என்பதுதான்.

டாடா உதாரணத்தைச் சொன்னார்கள். புதிய உருக்குத் தொழிற்சாலைகள் முழுவதும் பொதுத் துறையில் ஏற்படவேண்டுமென்ற முறையை அமைத்திருக்கிறோம். இது காங்கிரஸ் கட்சியினுடைய கொள்கை. இன்றைக்கிருக்கும் நிலைமையில் எந்தக் கட்சி உறுதியான மந்திரி சபையை ஏற்படுத்தி நிர்வாகத்தை நல்ல முறையில் நடத்திச் செல்ல முடியும், இன்றைக்கு இருக்கும் நிலையில் மக்களைப் பொருளாதாரத் துறையில் எந்தக் கட்சி உயர்த்த முடியும் என்பதை ஆராய்ந்து அந்தக் கட்சிக்கு மக்கள் பண உதவி செய்ய முன்வருகிறார்கள். ஏதோ மேல் தளத்தில் இருக்கக்கூடியவர்கள் மட்டுமல்ல, கீழ்த்தளத்தில் இருக்கக்கூடியவர்கள்—ஒரு ரூபாய், ஐந்து ரூபாய், பத்து ரூபாய் கொடுக்கக் கூடியவர்கள்—அதிகமானவர்களாக இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி, சுதந்திரா கட்சியாக இருந்தாலும் சரி, மற்ற கட்சிகளாக இருந்தாலும் சரி, அவர்கள் என்ன சொல்கிறார்கள்? "எங்களுக்கும் மக்களுடைய

[Sri C. Subramaniam] [16th March 1961

ஆதரவு இருக்கிறது, மக்களுடைய ஆதரவைப் பெற்று, நாங்கள் அதிகாரத்திற்கு வரப்போகிறோம், காங்கிரசைத் தோற்கடிக்கப் போகிறோம்" என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட கட்சித் தலைவர்கள் நிதி வசூல் செய்யும்போது "இவர்கள் பின்னால் வரக் கூடிய மந்திரிகள்" என்று நினைத்து பணம் கொடுக்கிறார்கள் என்று நாங்கள் அவர்களைப்பற்றி சொல்லவேண்டுமா? அவர்களும் நிதி திரட்டுகிறார்கள். மந்திரிகளாக வந்தால் நிதி கொடுத்தவர்களுக்குச் சாதகம் செய்துவிடுவார்கள், கொடுக்காதவர்களுக்குப் பாதகம் செய்து விடுவார்கள் என்று வாதிப்பதா? ஆகவே, நான் தெரிவித்துக்கொள்வது இதுதான். மனிதனுடைய நல்ல தன்மையைக் கொஞ்சம் ஒப்புக்கொள்ள வேண்டும். பொறுப்பில் இருக்கிறவர்கள் முறை தவறிப் போவார்களானால் ஜனநாயக ரீதியில் அவர்களைச் சந்தியில் இழுக்க முடியும் என்ற அடிப்படையில்தான் நிர்வாகம் நடக்குமே தவிர, போட்டிருக்கும் துணியையே நம்பாத முறையில் பணியாற்றினால், அப்பொழுது ஜனநாயகம் என்பதே நிலவ முடியாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேர்தல் நிதி திரட்டக்கூடாது என்று அவர்கள் சொல்வதை ஏற்றுக்கொண்டால், பண வசதி படைத்த பல முதலாளிகள், மற்ற தொழில் நடத்தக்கூடியவர்கள், வியாபாரிகள்தான் தேர்தலுக்கு நிற்கலாம், என் போன்றவர்கள், திரு கக்கன் அவர்களைப் போன்றவர்கள் தேர்தலுக்கு நிற்க முடியாது என்ற நிலைதான் ஏற்படும். நடிகர்களாக இருந்து பணம் சம்பாதிப்பவர்கள் வேண்டுமானால் தேர்தலுக்கு நிற்கலாம், சாதாரணமாக இருப்பவர்கள் நிற்க முடியாது என்ற நிலைமை ஏற்படும். ஆகையால் சாதாரணமாக இருக்கக்கூடியவர்களும் மக்களுடைய பிரதிநிதிகளாக வருவதற்கு, அவர்களும் தேர்தலுக்கு நிற்கக்கூடிய நிலைமை ஏற்படுத்த வேண்டுமானால், அதற்கான சூழ்நிலையை ஜனநாயக அடிப்படையில் இயங்குகிற எல்லாக் கட்சிகளும் ஏற்படுத்தித்தான் தீரவேண்டும் என்ற கருத்தை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

ஜனநாயகம் வலிவுற வேண்டும். சாதாரண நிலையிலுள்ள மக்களாக இருந்தாலும்கூட, அதிக பொருள் வசதி இல்லாத மக்களாக இருந்தாலும்கூட, அவர்களுக்கும் இங்கு வரக்கூடிய உரிமை இருக்கிறது. இன்றைக்கு இருக்கும் அரசியல் அமைப்பின்படி அது நிறைவேற வேண்டுமென்றால், முக்கியமாகக் கட்சிதான் தேர்தல் செலவுப் பொறுப்பையெல்லாம் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது, அதைத் தவிர வேறு வழி இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**SRI C. N. ANNADURAI:** 'அமைச்சர்கள் சென்று தேர்தல் நிதி திரட்டுவதற்கும் வேறு தலைவர்கள் திரட்டுவதற்கும் இடையிலே இருக்கும் ஒரே வித்தியாசம்—அமைச்சர்கள் நேரடியாகக் கேட்கிறபோது "இல்லை" என்று சொல்வதற்கும், குறைவாகத் தருவதற்கும் பயம் ஏற்படுகிற அளவுக்குத்தான் ஜனநாயகப் பண்பு நாட்டிலே வளர்ந்திருக்கிறது.



16th March 1961]

**THE HON. SRI C. SUBRAMANIAM:** அமைச்சர்கள் கேட்டும் "கொடுக்க முடியாது" என்று சொல்கிறவர்கள் இருக்கிறார்கள். பயப்படுகிறவர்களானால் "கொடுக்க முடியாது" என்று சொல்லமாட்டார்கள். அந்தகைய பண்பு மக்களிடத்தில் இருக்கிறது. குறைத்துக் கொடுப்பவர்கள் குறைவாகக் கொடுக்கிறார்கள். அதிகமாகக் கொடுப்பவர்கள் அதிகமாகக் கொடுக்கிறார்கள். மந்திரிகள் போய்க் கேட்டால் அள்ளி அள்ளி வாரி வீசி விடுகிறார்கள் என்று நினைப்பது தவறான கருத்தாகும். மந்திரி போனதினாலேயே அதிகமாக நிதி வருகிறது, 'கொடுக்கமாட்டோம்' என்று சொல்லப்பயப்படுகிறார்கள்—என்ற நிலைமையில் இன்றைய மக்கள் இல்லை. ஒரு சமயம் அவர்கள் போய்க் கேட்பார்களானால் அடுத்து வரப்போகிற முதலமைச்சர் என்று பயந்து கொண்டு அவர்களுக்குக் கொடுக்கிறார்களோ என்னவோ, எனக்குத் தெரியாது சுதந்திரா கட்சியை ஆதரிக்கிறவர்கள் இருக்கிறார்கள். காங்கிரசுக்கு நிதி கொடுக்கவில்லையென்றால் அவர்களுக்கு எந்த விதக் குறைவும் ஏற்படுத்திவிடவில்லை. ஒதுங்கி நிற்கிறவர்கள் ஒதுங்கித்தான் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எல்லா அரசியல் கட்சிகளும் தேர்தல் செலவுக்காக நிதி திரட்ட வேண்டும் என்ற நிலைமை ஏற்படும்போது குற்றங்குறை இல்லாமல், குறைகள் வந்து புகுந்து விடாமல் எப்படிப் பாதுகாப்புக்களை ஏற்படுத்திக் கொள்வது என்று சிந்தனை செய்வதுதான் நல்லது. அப்படியில்லாமல் இரகசியமாக, நிதிகளைத் திரட்டிக்கொள்ளுங்கள் என்றால், இப்பொழுது பொதுப்போடு செய்கிற ஒரு முறை இருக்கிறதே அது தவறிப் போய்விடும். இரகசியமான முறையில் யாராவது ஆதரவு கொடுப்பது என்ற நிலைமை ஏற்படுமானால், இப்பொழுது இருக்கும் நல்ல சீரான நிலை மாறி மிகவும் கெட்ட சூழ்நிலை வளர்ந்துவிடும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். அப்பொழுதுதான் பணக்காரர்களுக்கு உண்மையிலே கொண்டாட்டமாக இருக்கும். அதிகாரத்திலுள்ளவர்களுடைய தயவைப் பெற்றால்தான் மற்றவர்கள் முன்னுக்கு வரமுடியும் என்ற நிலையும் ஏற்பட்டுவிடும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். ஆகையால் இரண்டு வித கருத்துக்களையும் ஆர, அமர யோசனை செய்து பார்த்ததற்குப் பிறகு எனக்குத் தோன்றிய கருத்துக்களைச் சொல்கிறேன். என்னைவிடப் பெரியவர்கள், கருத்திலே சிறந்தவர்கள் இருக்கிறார்கள், ஒழுக்கத்திலே சிறந்தவர்கள் இருக்கிறார்கள், வழிகாட்டுவதிலே சிறந்தவர்கள் இருக்கிறார்கள், அவர்களும் இதைச் சிந்தனை செய்து பார்த்து வழிகாட்டக்கூடிய முறையில் நடந்து கொண்டால், அதைப் பின்பற்றுவதற்கு நாங்களும் தயாராக இருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மந்திரிகள் சுற்றுப் பிரயாணம் போகும்போது கட்சிப் பிரசாரம் செய்கிறார்கள் என்று பல கனம் அங்கத்தினர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். இதிலே எது கட்சிப் பிரசாரம்

[Sri C. Subramaniam] [16th March 1961

என்பதைப்பற்றி முன்பு ஒரு தடவை இங்கே விவாதத்திற்கு வந்தது. நாடு ஒன்றாக இருக்க வேண்டும் என்று நாங்கள் சொல்வதே திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்களுக்குக் கட்சிப் பிரசாரமாகத் தோன்றுகிறது.

இன்றைக்கு இருக்கும் நிலைமை என்ன? எதிர்க்கட்சியிலுள்ளவர்கள் அவர்களுடைய பிரசாரங்களில் அரசாங்கத்தில் இருக்கும் குறைகளை மட்டுமல்ல; மந்திரிகளைப்பற்றி பேசுவது, மற்ற நடவடிக்கைகளைப்பற்றி பேசுவது எந்த அடிப்படையில் இருக்கிறது? மந்திரிகள் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும்போது எவ்வாறெல்லாம் எதிர்க்கட்சியினர் குற்றம் குறை கூறியிருக்கிறார்கள் என்று எங்களுடைய காதுக்கு கொண்டுவரப்படும் போது அதற்குப் பதில் சொல்ல வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அப்பொழுது இந்தத் திட்டம் எதற்காக அமைக்கப்படுகிறது, எதற்காக இந்தத் திட்டத்திலுள்ள பணிகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன என்று காங்கிரஸ் அரசாங்கம் அதை எடுத்துச் சொல்லும்போது, உண்மையிலேயே அது கட்சிப் பிரசாரமாகி விடுகிறது.

ஒரு நன்மை காங்கிரஸ் அரசாங்கம் செய்திருக்கிறது என்று சொன்னால், அந்த நன்மையை எடுத்துச் சொல்வதினாலே கட்சிக்கு வலு தேடுகிறார்கள் என்று எங்களைப் பார்த்துச் சொல்வதா என்று கேட்கிறேன். ஒரு பகுதியில் வெள்ளம் வந்து அந்தப் பகுதிக்கு முதலமைச்சர் உடனடியாகப் போய் அங்கேயிருக்கும் காரியங்களையெல்லாம் செய்தார் என்றால், அது வோட்டு பிடிப்பதற்காக என்று சொல்வது? இலவசப் படிப்பு கொடுக்கப்படுகிறதென்றால், இதெல்லாம் வோட்டுக்காக செய்யப்படுகிறது என்று சொல்லிவிடுவது? மக்களுக்குப் பிடித்தமான எந்தக் காரியத்தைச் செய்தாலும், அவர்களுடைய மனதைக் கவரத்தான் என்று சொல்லிவிடுவதா என்று கேட்கிறேன். ஒரு அரசாங்கம் நியாயமாக நடந்து கொள்கிறது என்றால், அது மக்களுக்குப் பிடிக்காததைத் தானா செய்ய வேண்டும்? இப்படிப்பட்ட வாதங்களை நான் பல இடங்களில் கேட்கிறேன். இதைப்பற்றி யோசித்துப் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. மந்திரிகள் பேசும்போது—மற்றவர்களும் பேசினதாகச் சொன்னார்கள். இளைஞர் காங்கிரஸ் கூட்டத்தில் பேசுவது ஒருபுறம் இருக்கட்டும்—அதற்குப் பின்னால் வருகிறேன். மந்திரிகள் பேசக்கூடிய இடங்களில், அவர்கள் நிறைவேற்றும் திட்டங்களை விளக்கி ஏதாவது நிர்வாகக் குறை இருந்தால் அந்தக் குறை உண்மையானதா இல்லையா என்று சொல்லும்போது, அது காங்கிரஸ் மந்திரி சபையாக இருக்கும் காரணத்தால், கட்சிப் பிரசாரம் என்று சொல்லி விடுவோமானால், அப்பொழுது மந்திரிகள் போய்ப் பேசுவது என்பதே முடியாது. மந்திரிகளைப் பற்றி, அவர்களுடைய நிர்வாகத்தைப்பற்றி, குறை சொல்லியிருக்கும்போது, நிர்வாகத் துறை தெரிந்தவர்கள், அதற்கு நேரடியான பதில் சொல்ல பொறுப்பு இருக்கிறவர்கள் மந்திரி சபையில் இருக்கக்கூடியவர்கள்: "நீங்கள் என்ன வேண்டுமானாலும் பேசிக்



16th March 1961] [Sri C. Subramaniam]

கொண்டு போங்கள் நாங்கள் பதில் சொல்லத் தயாராயில்லை"
என்று வேதாந்தங்கள் பேசிவிட்டு வந்து விட வேண்டும் என்று
யாரும் எதிர்பார்க்க முடியாது. மந்திரிகள் பொதுக் கூட்டத்தில்
திட்டத்தைப்பற்றிப் பேசினால், திட்டத்திலேயிருக்கும் நன்மை
களைப் பேசினால், அது தவறு ஒன்றுமில்லை. திட்டங்களில்
இருக்கும் குறைகளை மற்றவர்கள் எடுத்துச் சொல்லியிருந்தால்,
"புள்ளி விவரங்கள் தெரியாத காரணத்தால், விவரம் தெரியாத
காரணத்தால் அவ்வாறு சொல்லியிருக்கிறார்கள், அந்தக் குறை
இல்லை" என்று நாங்கள் எடுத்துச் சொன்னால், உடனடியாக
அதைக் கட்சிப் பிரசாரம் என்று சொல்லி விடுகிறார்கள். இதுதான்
இன்றைக்கு இருக்கும் சங்கடமான நிலைமை.

இந்த இரண்டுக்கும் எல்லைகோடு (**border line**) போடுவது
ரொம்பக் கஷ்டமானது. எந்த இடத்தில் கட்சிப் பிரசாரம்
ஆரம்பிக்கிறது, எந்த இடத்தில் நிர்வாகத்தைப்பற்றி மட்டும் பேசு
கிறோம் என்று வரையறுப்பது ஒரு கஷ்டமான நிலைமைதான். சில
சமயங்களில் எங்களையும் அறியாமல் அந்த எல்லையைத் தாண்டிப்
போன கட்டம் இருந்திருக்கலாம். மந்திரிகள் பொதுக் கூட்டங்
களில் அரசாங்கத்தினுடைய கொள்கையைப்பற்றி, அவர்கள்
சார்ந்திருக்கும் கட்சியினுடைய கொள்கையைப்பற்றி, நிர்வா
கத்தில் இருக்கும் பல்வேறு விஷயங்களைப்பற்றி விளக்கிக்கூறக்
கடமைப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் பொதுக் கூட்டங்களில்
பேசுவதைக் கட்சிப் பிரசாரம் என்று எடுத்துக்கொள்வது சரியல்ல
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக மந்திரிகள் கலந்துகொள்கிற கூட்டத்தில்—
அதுவும் முக்கியமாக இளைஞர்கள்—தவறாகப் பேசுகின்றார்கள்
என்ற கருத்தைச் சொன்னார்கள். ஓரளவு அது உண்மை. ஒப்புக்
கொள்கிறேன். ஆனால் ஏன் அப்படித் தவறாகப் பேசுகிறார்கள்?
அப்படிப் பேசக்கூடிய நிலைமை ஏன் ஏற்பட்டது? முன்பெல்லாம்
இப்படிப் பேசிக்கொண்டிருந்தார்களா? எதிர்க்கட்சிகள் தாறு
மாறாகப் பேசுகின்ற பேச்சைக் கேட்டவுடன் அவர்களுக்கு
உணர்ச்சி வந்துவிடுகிறது. காலையில் எனக்கேகூட உணர்ச்சி
வந்தது. (ஸ்ரீ எம். கல்யாணசுந்தரம்: உங்களை இளைஞர்களில்
சேர்க்கிறதா? அல்லது வயதானவர்களில் சேர்க்கிறதா?) என்னைப்
போன்ற வயதானவர்களுக்கே உணர்ச்சி வந்துவிடுகிறது என்றால்
இளைஞர்களுக்கு ஏன் வராது? எதிர்க்கட்சிகள் வரம்புமீறி பேசு
கின்ற பேச்சைக் கேட்கும்போது அவர்கள் ரத்தம் கொதிக்
கின்றது. நான்கூட சில சமயங்களில் இந்த இளைஞர்களை இப்படிப்
பேசாதீர்கள் என்று சொல்லியிருக்கிறேன். நாங்கள் ஏதாவது
சொன்னால்—அவர்களுக்கு இருக்கக்கூடிய உணர்ச்சியில்
எங்களையே, "நீங்கள் வேண்டுமானால் வெளியே போய்விடுங்கள்.
அவர்கள் பேச்சைக் கேட்டிருந்தால் தெரியும். எங்கள் ரத்தம்
கொதிக்கிறது. நாங்கள் இப்படித்தான் பேசுவோம்" என்கிறார்
கள். பலவிடங்களில் இதை நிரூபிக்க முடியும். அவர்களுக்கு

அத்தனை ஆத்திரம் ஏற்படக்கூடிய முறையில் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் முதலில் பேசியிருக்கிறார்கள். அதன் எதிரொலி தான் எங்கள் கட்சி இளைஞர்கள் சில சமயம் வரம்புமீறி உணர்ச்சி வசப்பட்டு பேசுவதற்குக் காரணம். நான்கூடச் சொல்லியிருக்கிறேன், "நீங்கள் அவர்கள் பேசினார்கள் என்பதற்காக இப்படிப் பேசுகிறீர்கள். இந்தப் பேச்சைக்கேட்டு அவர்கள் திரும்பவும் இன்னும் மோசமாகப் பேசினால் இப்படி ஒருவரை ஒருவர் தாக்கிக்கொண்டு பேசிக்கொண்டே போனால் எங்கே முடிவது? ஆகவே ஒருவரை ஒருவர் மதித்துப் பேசப் பழகவேண்டும்", என்று எல்லா இடங்களிலும் அழுத்தந்திருத்தமாக நான் சொல்லிக் கொண்டு வருகிறேன் என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இதில் ஏதாவது நல்லதொரு முடிவைக் காண வேண்டுமென்றால், எதிர்க்கட்சிகள் எல்லாம், அரசியல் கட்சிகள் எல்லாம் சேர்ந்து ஒரு ஒப்பந்தத்திற்கு வரக்கூடுமானால் அதை நான் வரவேற்கிறேன். இன்றைக்கு கட்சிகள் வளர்வது என்றல்ல. நாடு வளரவேண்டும். நாடு வளர்ந்துகொண்டே போனாலும் ஒருவரை ஒருவர் திட்டிக் கொண்டே போவதனால் நாட்டு மக்களுடைய பண்பு வளராது. இப்படி ஒருவரை ஒருவர் திட்டித் தாக்கிக்கொண்டே போவதனால் கட்சியும் வளராது. மக்கள் பண்பும் குறைந்துவிடும். இதுதான் அரசியல், இதுதான் அரசியல் தலைவர்களுடைய பண்பு என்பது போன்ற கருத்து இளைஞர்களுடைய சமுதாயத்தில் வளர்ந்துவிடுமானால் நாம் எத்தனை திட்டங்களை நிறைவேற்றினாலும், எத்தனை முன்னேற்றத்தைக் கண்டாலும் எந்தவிதமான பயனும் இல்லை, பண்பில் உயராத ஒரு நாடு எந்தவகையிலும் முன்னேற்றம் அடைந்துவிடாது என்பதை அழுத்தந்திருத்தமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு கருத்தும் சொல்லப்பட்டது. எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.க்களை ஜீப்புகளில் உட்கார வைத்துக்கொண்டு போகக் கூடாதா? போனால் உடைந்துபோய் விடுமா? மேடையின் பக்கத்தில் இந்த அமைச்சர்கள் உட்கார வைத்துக்கொள்ளக் கூடாதா என்றெல்லாம் சொல்கிறார்கள். எங்களோடேயே அழைத்துக்கொண்டு போக முயற்சி பண்ணியிருக்கிறோம். அழைத்துக்கொண்டும் போய் இருக்கிறோம். ஆனால் இதில் மந்திரிக்கு மட்டும் சங்கடம் இல்லை. எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.-க்களுக்கே ஒரு சங்கடமான நிலைமை ஏற்படுகிறது. சாதாரணமாக அந்த ஊரிலேயே, பொதுக் கூட்டத்தில் கண்டபடி மந்திரிகளைப்பற்றிப் பேசிவிட்டு நாங்கள் வந்தவுடன் எங்களோடு எங்கள் காரில் நீங்கள் வந்தால் அந்த ஊர் மக்கள்தான் உங்களைப்பற்றி என்ன நினைப்பார்கள்? திரு. அண்ணாதுரை அவர்கள் ஒரு உண்மையைச் சொன்னார்கள், "மந்திரிகள் நடிகர்கள் அல்ல" என்று. அது உண்மை. நீங்கள் ஒரு பக்கத்தில் எங்களை திட்டு திட்டு என்று திட்டிவிட்டு மறுபடியும் எங்களோடேயே வந்தால் "நாங்கள் எல்லாம் ஒன்று" என்று நடிப்பது போல இருக்காதா? இப்படிப் பட்ட தர்மசங்கடமான நிலைமையில் கனம் அங்கத்தினர்களை



வைக்கக் கூடாது என்பதோடு, எங்களையும் சங்கடத்திற்கு
ஆளாக்கிக்கொள்ளாமல் இருக்க அப்படி விட்டுவிட்டுப் போய்
விடுகிறோம். எதிர்க்கட்சி அங்கத்தினர்களை ஒதுக்கி வைக்க
வேண்டுமென்பதற்காக அல்ல. எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் என்
பதற்காக யாரையும் ஒதுக்கி வைப்பதில்லை. யாருடனும் பேசாமல்
இருப்பதும் இல்லை. கோவையில் கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்
தவர் சேர்மனாக இருப்பதனால் அவரோடு நான் பேசுவது
இல்லையா? அவர் கலந்துகொள்கிற கூட்டங்களில் நான் கலந்து
கொள்வதில்லையா? ஆகையால் இது ஏதோ மற்றவர்களை ஒதுக்கி
வைத்துவிடுகிற செயல் என நினைத்துக்கொள்ள வேண்டாம் என்று
தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அடிப்படையில் ஒவ்வொன்றையும் நாம் பார்க்கும்போது
மந்திரிகள் மட்டும் அங்கத்தினர்களுக்கு மதிப்புக் கொடுப்பது
என்று இல்லை. அங்கத்தினர்களும் மந்திரிகளுக்கு மதிப்புக்
கொடுக்க வேண்டும். இந்த மதிப்பு, மரியாதையில் பரஸ்பரம்
இருக்க வேண்டியது. மந்திரிகள் மட்டும் மரியாதை செய்ய
வேண்டுமென்று கனம் அங்கத்தினர்கள் எதிர்பார்ப்பதற்கில்லை.
"திரு. காமராஜ் அவர்கள் முதல் மந்திரியாக இருக்கத் தகுதி
இல்லாதவர்கள்" என்று சிலர் நினைக்கலாம். குறிப்பாக திரு.
அண்ணாதுரை அவர்கள் "திரு. காமராஜர் முதல் மந்திரியாக
இருப்பதற்குத் தகுதி இல்லை" என்று சொன்னால் அது அவருடைய
தனிப்பட்ட கருத்து. அதை அவர் வைத்துக்கொள்ள உரிமை
இருக்கிறது. ஆனால் தகுதி இல்லாத ஒருவரே முதன் மந்திரி
யாக இருக்கிறார் என்று வைத்துக்கொண்டாலும்கூட, அவர்
முதன் மந்திரியாக இருக்கும் வரையில் எல்லாவிதமான மதிப்பை
யும், மரியாதையையும், கௌரவத்தையும் அவருக்கு நாம்
கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

SRI C. N. ANNADURAI: அமைச்சர் அவர்கள் வாதத்திற்காக
திரு. அண்ணாதுரை அவர்கள் சொன்னார் என்று சொல்கிறாரா,
அல்லது நான் சொன்னதாகவே சொல்கிறாரா?

THE HON. SRI C. SUBRAMANIAM: "கக்கனைப்பற்றி மட்டும்
சொல்லவில்லை. காமராஜரையும் சேர்த்துத்தான் சொன்னேன்"
என்பதாக திரு. அண்ணாதுரை அவர்கள் இங்கேயே பேசியதாகக்
கேள்விப்பட்டேன்.

SRI C. N. ANNADURAI: தகுதியில்லாதவர் என்பதற்காக
அப்படிச் சொல்லவில்லை. முதல் தடவையாக எடுத்த எடுப்பிலே
அமைச்சராக வந்தவர்கள்—முன்னைய அனுபவம் இன்றி வந்த
வர்கள் என்பதற்காகச் சொன்னேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: முந்தைய அனுபவம்
இல்லாதவர் என்றோ எடுத்த எடுப்பிலே வந்தவர் என்றோ
சொன்னால் அது சரியானதாகாது. திரு. காமராஜ் அவர்கள்
முன்பு விருதுநகர் முனிசிபல் சேர்மனாக இருந்திருக்கிறார்.
தொடர்ந்து இச்சபை மெம்பராக இருந்திருக்கிறார். பார்லிமெண்டு

அங்கத்தினராக இருக்கிருக்கிறார். அவர் ஒன்றும் எடுத்த எடுப்பிலே வந்துவிடவில்லை. அதைப் போலவே திரு. கக்கன் அவர்களும் சட்டசபை மெம்பராக பணியாற்றியிருக்கிறார். பார்லிமெண்ட் மெம்பராகப் பணியாற்றியிருக்கிறார்.

SRI C. N. ANNADURAI : அமைச்சர் அவர்கள் நான் அன்றைக்குச் சொன்ன கருத்தைத் தவறாகச் சொல்கிறார். நேரடியாக மந்திரியாக வந்தவர்கள் என்பதற்குச் சொன்ன வார்த்தைகளை துண்டாக நடுவில் இழுத்து "திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் திரு. காமராஜ், கக்கன் இவர்களுக்குத் தகுதி இல்லை" என்று சொன்னதாக இழுத்துவிட வேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : என்னைச் சொன்னால் பொருத்தமாக இருந்திருக்கும். நானும் எடுத்த எடுப்பில்தான் மந்திரியாக வந்தவன். சாதாரண சுப்பிரமணியனாக இருந்து, உடனே அமைச்சர் சுப்பிரமணியமாக ஆனேன். இதை வேண்டுமென்றால் அதிருஷ்டம் என்றோ, சான்ஸ் என்றோ, ஆக்ஸிடெண்ட் என்றோ—எப்படி வேண்டுமானாலும் சொல்லலாம். ஆனால் அவர்களைப் பிரித்து வைத்துப் பேசியதில் இருந்தே அத்தகைய கருத்து உங்கள் மனத்தில் இருப்பதனால்தான் அந்த வார்த்தை வெளி வந்ததே தவிர, இல்லாவிட்டால் அப்படி வந்திருக்காது. ஆனால் ஒன்று.

நான் இன்றையதினம் இந்தப் பதவியில் இருப்பதற்குக் கொஞ்சங்கூடத் தகுதி இல்லாதவன் என்று நீங்கள் நினைத்தாலும் கூட இந்தப் பதவியில் இருக்கும்வரையில்—இந்தப் பதவிக்கு உரிய மரியாதை, கௌரவம், மதிப்பு எல்லாம் எனக்கு நீங்கள் அளித்தாகவேண்டும். அதுவும் ஜனநாயக முறையில் பதவிக்கு யார் வேண்டுமானாலும் வரலாம் என்று ஏற்பட்ட பிறகு அதற்கேற்ற முறையில் எல்லா மதிப்பையும் அந்தப் பதவியில் உள்ளவர் எப்படிப்பட்டவராக இருந்தாலும் கொடுக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். இல்லாவிட்டால் நம்மை நாமே இழிவுபடுத்திக் கொள்கிறவர்களாவோம். அதுவும் முக்கியமாக திராவிட முன்னேற்றக் கட்சி பெண் அங்கத்தினருக்கு குறிப்பாக வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

SRIMATHI SATHYAVANIMUTHU : On a point of order, Sir. தலைவர் அவர்களே, நிதி மந்திரி அவர்கள் பேசுகின்ற போது "திராவிட முன்னேற்றக் கட்சி பெண் அங்கத்தினருக்குக் குறிப்பாக வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்" என்று குறிப்பிட்டார்கள். நான் எங்கே எப்போது எப்படித் தவறாகப் பேசினேன் என்பதை அவர் குறிப்பிட்டால் நான் ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக இருக்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அதுவும் என்னுடைய சகோதரி என்ற முறையில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் அப்படி பேசுவது எங்களை இழிவுபடுத்தினதாக ஆகாது.





அது அவர்களுக்கே பெருமை தராது. அவர்கள் எந்த முறையில் பேசி வருகிறார்கள் என்பதுபற்றிய தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறது. சுருக்கமாகச் சொல்லப் போனால் அவர்கள் எந்தக் கூட்டத்தில் எங்கே, எப்பொழுது ஒழுங்காகப் பேசினார்கள் என்பதைக் கண்டு பிடிப்பதுதான் கஷ்டமாக இருக்கும்.

திரு. ஆசைத்தம்பி அவர்கள் கூட்டம் போடுவதைப்பற்றிச் சொன்னார்கள். நம்முடைய அருமையான குரலைத்தான் எல்லோரும் கேட்கட்டுமே என்றார்கள். நம்முடைய குரல் அருமையானது என்று நாம் நினைத்துக்கொள்ளலாம். எல்லோரும் அதைக் கேட்க வேண்டுமென்று ஆசைப்படலாம். ஆனால் சந்து பொந்துகளில் தெரு மூலைகளில்—அதுவும் சாதாரணப் பேச்சல்ல—ஒலிபெருக்கியும் வைத்து—தாறுமாறாக நாம் பேசக்கூடிய பேச்சை அந்தத் தெருவில் உள்ள அத்தனை பேர்களும் கேட்கவேண்டும் என்றால்—நாம் நினைக்கலாம் அவர்கள் கேட்கட்டுமே என்று. ஆனால் அவர்கள் அப்படி நினைக்கவேண்டுமே. அதுவும் இரவு 9 மணி வரையில் கூட அல்ல, பத்துப் பத்தரை மணிக்கு மேலும் கேட்கவேண்டும் என்றால் அதை அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். எப்படி அரசியல் கட்சிகளுக்கு உரிமை இருக்கிறதோ, அப்படியே தனிப்பட்டவர்களுக்கும் அதைவிட அதிக உரிமை இருக்கிறதென்று தெரிவித்துக்கொள்கிறேன். இடுக்குமுடக்கான இடங்களில் ஏதோ எப்போதோ ஒரு கூட்டம் என்றாலும் பரவாயில்லை. தேர்தல் காலம் வந்துவிட்டது, ஆகவே, பிரசாரம் நடந்தாகவேண்டும் என்றால் ஒரு 3 மாதத்திற்கு, 6 மாதத்திற்கு அதைப் புரிந்துகொள்ள முடியும்.

வருடம் பூராவும் இப்படித்தான் பேசிக்கொண்டிருப்போம், அதுவும் ஒலிபெருக்கி வைத்துத்தான் பேசிக்கொண்டிருப்போம், அதை அனுமதிக்க வேண்டுமென்று சொன்னால் என் நாம் சுதந்திரம் பெற்றோம், இதுவா ஜனநாயகம் என்று மக்கள் நினைக்கக் கூடிய நிலைதான் ஏற்படும். தேர்தல் காலத்தில் என்ன செய்ய வேண்டுமென்பதுபற்றி உட்கார்ந்து பேசத் தயார். சென்ற காலத்தில்கூட எங்கெங்கு எந்தெந்தயிடங்களில் கூட்டங்கள் எப்பொழுது எப்பொழுது போடலாம் என்று பேசி அப்படி அதற்கேற்ப செய்யப்பட்டது. பின்னர், தேர்தல் காலத்தில் அதிகாரிகளை கூட்டிச் செல்லக் கூடாது என்று சொல்லப்பட்டது. முன்பு கூட எங்களுக்குள் ஒரு கட்டுப்பாடு செய்து கொண்டிருந்தோம். இந்தத் தடவைகூட தேர்தல் காலத்தில் அந்தக் கட்டுப்பாட்டை எங்களுக்கு நாங்களே விதித்துக்கொள்ள வேண்டுமென்ற அடிப்படையில் அதற்கான யோசனைகள் செய்துகொண்டு வருகிறோம். அதிகாரிகளை வைத்துக்கொண்டு காங்கிரஸ்காரர்கள் வோட்டுப் பெற நினைக்கிறார்கள் என்றால், அதிகாரிகள் சொல்வதைக் கேட்டு அல்லது அவர்களைப் பார்த்து மக்கள் வோட்டு போட்டு விடுவார்கள் என்ற பயம் எதனால் ஏற்பட்டதென்பது எனக்கு புரியவில்லை.

[Sri C. Subramaniam] [16th March 1961

இது உண்மையில் ஏற்பட்ட பயமா அல்லது காங்கிரஸ்காரர்கள்
பெயரில் ஏதாவது குற்றம் சொல்ல வேண்டுமே என்று சொல்கிருர்
களா என்று தெரியவில்லை. பத்து மணி அல்லது இரவு 12 மணி
வரை கூட்டம் போட அனுமதிக்க வேண்டுமென்ருல், ஒரு மணி
வரை கூட வைத்துக்கொள்ள லைசென்ஸ் கொடுத்துவிடச் சொல்
கிறேன், ஆனல் மக்கள் அதைப் பொறுத்துக் கொள்வார்களாளுல்
எனக்கு ஆட்சேபணையில்லை. தேர்தல் காலத்தில் மக்கள் 10 அல்லது
11 மணிக்கு பின்னராவது சிறிது தூங்குவதற்குள்ள நிலையை நாம்
ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். ஆகவே, எப்படி இதை வகுத்
துக்கொள்ள வேண்டுமென்பதுபற்றி பரிசீலனை செய்ய வேண்டு
மென்ருல் அதற்கு நான் தயாராயிருக்கிறேன். எந்த முறையில்
இதை வைத்துக்கொள்ள வேண்டுமென்பதைப்பற்றி பரிசீலனை
செய்ய காங்கிரஸ் கட்சி தயாராயிருக்கிறது. அடுத்தபடியாக, திரு.
ராமஸ்வாமி முதலியார் அவர்கள் பேசுகிறபோது, எங்கு பார்த்
தாலும் லஞ்சம், எங்கும் ஊழல்கள் மலிந்துவிட்டன என்று வற்
புறுத்திக் கூறினர்கள். அவர்கள் நல்ல அனுபவம் உள்ளவர்கள்,
ஆகவே, அப்படிப்பட்டவர் இப்படி பொதுவாக சொல்வார்கள்
என்று நான் எதிர்பார்க்கவில்லை. இதுபற்றி நான் பல தடவை
கூறியிருக்கிறேன். இன்று லஞ்சம் இல்லையென்று நான் கூறவில்லை.
ஊழல்கள் இல்லை என்று நான் கூறவில்லை. ஆனல் பொறுப்புள்ள
எதிர்க்கட்சித் தலைவர்கள், இப்படி லஞ்சம் எங்கு பார்த்தாலும்
இருக்கிறது, ஊழல்கள் இருக்கிறதென்று சொன்னல் ஒரு சமயம்,
லஞ்சம் வாங்காது இருக்கக்கூடியவர்கள், அவர்கள் 10 சதவிகிதம்,
20 சதவிகிதம் அல்லது 70 சதவிகிதம், எவ்வளவு பேர்கள் இருந்
தாலும், அவர்கள் நினைப்பார்கள், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே
சொல்லியிருக்கிருர்களே, எங்கு பார்த்தாலும் எல்லோரும் லஞ்சம்
வாங்குகிருர்கள் என்று, அப்படியிருக்க நான் மட்டும் லஞ்சம்
வாங்காதிருந்தால், நான் முட்டாள் போலிருக்கிறதே என்று
லஞ்சம் வாங்காதிருப்பவர்களும் லஞ்சம் வாங்குவதற்குள்ள சூழ்
நிலையை அது ஏற்படுத்தக் கூடும். ஆகவே, இப்படி பொதுப்
படையாக எங்கு பார்த்தாலும் லஞ்சம் இருக்கிறது, லஞ்சம் இருக்
கிறது என்று சொல்லிக்கொண்டேயிருந்தால் அது லஞ்சத்தை
வளர்க்க பயன்படுமே தவிர அதை ஒழிப்பதற்கு பயன்படாது.
பின்னர், இதில் இரண்டு கட்சியிருக்கிறது, லஞ்சம் கொடுக்கிறவர்
கள், லஞ்சம் வாங்குகிறவர்கள். நாட்டில் எந்தளவு நேர்மை வளர்
கிறதோ அந்த அளவிற்குத்தான் லஞ்சத்தை ஒழிக்க முடியும்.
அதற்குள்ள ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த நாம் முயற்சிக்க
வேண்டும். அப்படி லஞ்சத்தை ஒழிப்பதற்குள்ள ஒரு சூழ்
நிலையை நாம் ஏற்படுத்தாவிட்டால் நம் பிற்கால சந்ததியினரும்,
பின்னர் வருகிற நிர்வாகமும் சீர்குலைந்துதான் போகும். பின்னர்,
நாம் போடுகிற உத்தரவுகள், கட்சி அடிப்படையில் ஒரு கட்சிக்கு
சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ போடக்கூடிய முறையில்,
இந்த உத்தரவை ஏன் போட்டீர்கள், எப்படிப் போட்டீர்கள்
என்று குறிப்பிட்டு சொன்னல் அதைப்பற்றி எடுத்துச் சொல்ல
தயாராயிருக்கிறேன். ஆனல் பொதுவாகச் சொன்னல், உண்மை



16th March 1961] [Sri C. Subramaniam]

ஏற்பட்டிருக்கிறதா? என்பதைப் பார்ப்ப
யில் தவறு ஏதாவது இல்லாது போய்விடுகிறது.
தற்குக்கூட ஒரு சந்தர்ப்பம் குறிப்பிட்டார்கள். அங்கு
சேலத்தில் நடந்த நிகழ்ச்சியைப்பற்றி கட்சியாகயிருந்தாலும் சரி,
நடந்ததைப்பற்றி, அது காங்கிரஸ் சரி, அல்லது ஊர்
திராவிட முன்னேற்றக் கழகமாகயிருந்தாலும் என்று சொல்
இரண்டு பட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம் மீது நட
வார்களே, யாராகயிருந்தாலும் சரி, தவறு செய்தவர்கள் இருந்து
வடிக்கை எடுக்கப்பட்டுக்கொண் வருகிறது இடையில் சாக்கிரிகள்
கொண்டு. ஏதாவது நடக்கும்போது, போக்கிரிகள், செயல்
இவர்கள் இடையில் புகுந்து அதை வளர்க்கும் முறையில் கட்சியைச்
படுகிருர்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆக, எந்தக் கொடியைப் போட்டுக்
சார்ந்தவர்களாக யிருந்தாலும் சரி, எந்தக் விரோத
கொண்டிருந்தாலும் சரி, நியாயத்திற்கு, சட்டத்திற்கு எடுத்துக்
மாக நடந்தால் அவர்கள் பேரில் நடவடிக்கைகள் இந்த சர்க்கார் பணி
கொள்ள வேண்டுமென்ற அடிப்படையில்தான் குற்றமே நடக்கவில்லை
புரிய முயற்சி செய்து வருகிறது. எங்குமே, எடுத்துச் சொல்ல
என்று நான் சொல்லவில்லை. அதை தனியாக முயற்சி
வேண்டும். அவைகளைத் தவிர்ப்பதற்கு எங்களாலான விரும்புகிறேன்.
யைச் செய்கிருேம் என்ற உறுதியை நான் அளிக்க விட்டதென்று
எங்கும் லஞ்சம் இருக்கிறது, ஊழல் எங்கும் மலிந்துவிட்டதென்று
சொல்லிக்கொண்டேயிருந்தால், எப்பொழுதும் அதை பொதுப்
படையாக சொல்லிக்கொண்டிருந்தால், இது எப்பொழுதும் பாடப்
படும் பல்லவி, ஆகவே, இப்பொழுதும் அதை கேட்டுவிட்டு போய்
விடுவோம் என்ற உணர்ச்சிதான் அமைச்சர்கள் மனதில் ஏற்படுமே
தவிர இதை நீக்க வேண்டுமென்ற எண்ணம் ஏற்பட முடியாது.
அதனல் தப்பு இன்னும் அதிகமாகத்தான் ஆகும். இதனல்
பின்னல் வரக்கூடியவர்கள் பாதிக்கப்படுவார்கள். தவறே இல்லை
யென்று சொல்லவில்லை. இருக்கக்கூடிய தவறுகளை குறிப்பிட்டுக்
கூறினல் அதை திருத்த முடியும். ஆக, தவறுகளை திருத்துவதற்கு
முயற்சி செய்து கொண்டு வருகிருேம். எல்லாத் தவறுகளையும்
ஒரேயடியாக நீக்கிவிட வேண்டுமென்று சொன்னல் அது என்
கோபத்தை உடனே விட்டு விட வேண்டுமென்று நான் உறுதி
யெடுப்பதுபோல்தான் இருக்கும். நமது தவறுகளை நீக்குவதற்கு
எதிர்கட்சிகளின் ஒத்துழைப்பு தேவை. ஒன்றுமே சரியாக நடப்ப
தில்லை, லைசென்ஸ் அல்லது பெர்மிட் வழங்குகிற சர்க்கார் இது
என்றெல்லாம் பிரசாரம் செய்து கொண்டு போனல் இப்பொழுது
வேண்டுமானல் மக்களிடையே ஒரு அதிருப்தியை ஏற்படுத்தி
அதை வளர்க்க உதவலாமே தவிர அதனல் பிற்காலம் எப்படி
அமையும் என்று பார்க்க வேண்டும். அதனல் ஒரு சமயம் எல்லாம்
ஊழல் மயமாகவே போய்விடும். என்ற பயம்தான் ஏற்படுகிறது.
அதனல் பிற்காலத்தில் வரக் கூடியவர்கள் பாதிக்கப்படுவார்கள்.
நாட்டின் நலனை மனதில் வைத்துக்கொண்டு குற்றங்களை தைரிய
மாக எடுத்துச் சொல்ல யாரும் தயங்கக் கூடாது. அப்படி
யில்லாது, எங்கு பார்த்தாலும் லஞ்சம், ஊழல் என்று பொதுப்

படையாகச் சொல்லிக் கொண்டிருப்பது நாட்டின் நன்மைக்கு உகந்ததல்ல. கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர், கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்னார்கள், எல்லாக் கட்சிகளுக்கும் சம உரிமைகள், வசதிகள் கொடுக்க வேண்டுமென்பதுபற்றி. அவர் அப்படி பேசியதுபற்றி நான், அதை வரவேற்கிறேன். விவாதத்திற்காக அல்லாது உண்மையில் அவர்கள் இதை கொள்கையாக ஏற்று ஒரு நாட்டில் எல்லாக் கட்சிகளுக்கும் வேண்டிய உரிமை கொடுக்க வேண்டுமென்ற கொள்கையை ஏற்று, அதை உண்மையில் ஏற்றுக் கொள்வார்களேயானால், தற்காலிகமாக அல்லாமல், ஏற்றுக்கொள்வார்களேயானால் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், அவர் கம்யூனிஸ்ட் கட்சியில் இருக்க முடியாது. அவர் ஒரு கம்யூனிஸ்ட்டாக இருக்க முடியாது, அப்பொழுது. கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை, ஒரே ஒரு கட்சி ஆட்சியில் நம்பிக்கை கொண்டது. இல்லையானால் அது கம்யூனிஸ்ட் கொள்கையல்ல. விவாதத்திற்கு வேண்டுமானால், இப்பொழுதிருக்கக்கூடிய நிலையில் வேறு வழியில்லை. ஆகவே, வேறு விதத்தில் பேச வேண்டுமென்று நினைத்தால், அதுவும் கம்யூனிஸ்ட் கட்சியின் தத்துவம்தான். சமயத்திற்கு தகுந்தவாறு, சந்தர்ப்பத்திற்கு தகுந்தவாறு கொள்கைகளை மாற்றிக்கொள்ள வேண்டும், பேச்சுக்களை மாற்றிக்கொள்ள வேண்டும் என்பது கம்யூனிஸ்ட் கட்சியில், அவர்கள் வேதத்தில் சொல்லி வைத்திருப்பது என்பதை நான் அறிவேன். இது எங்கள் கட்சிக் கொள்கை, நாங்கள் மெஜாரிட்டி பெற்றாலும், கேரளத்தில் மெஜாரிட்டி பெற்றால் மட்டுமல்ல, அகில இந்திய ரீதியில் மெஜாரிட்டி பெற்றாலும் மற்ற கட்சிகளை விட்டு வைத்திருப்போம், அவைகளை அப்படியே வைத்திருப்போம் என்று அவர்களோடு கூட்டுச் சேர்ந்தவர்கள் நினைப்பார்களானால் மற்ற நாடுகளில் ஏற்பட்ட கதிதான் அவர்களுக்கும் ஏற்படும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நான் கூட்டுச் சேரவேண்டாமென்று சொல்லவில்லை.

**Sri C. N. ANNADURAI:** அமைச்சர் அவர்கள் நாங்கள் கூட்டுச் சேர்ந்திருக்கிறோம் என்று விவரம் தெரியாமல் பேச வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM:** கூட்டு சேரவில்லை என்றால் சரி, அதை அறிந்துகொள்ளத்தான் நான் விரும்புகிறேன்.

**Sri C. N. ANNADURAI:** விவரங்களை தெரிந்துகொள்ளாமல் எதையாவது பேசுவது சரியல்ல . . .

**The Hon. Sri C. SUBRAMANIAM:** விவரம் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. நான் முன்னால் அவர்களுக்கு பதில் சொல்லவேண்டும் என்று நினைத்தேன் அதை அப்போது சொல்லவில்லை, இப்போது அதைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். கனம் அண்ணாதுரை அவர்கள் அடுத்த வீட்டு ஜன்னலை எட்டிப் பார்க்கக்கூடாது என்றும் பர்தா மறை





இருக்கும் அதையும் பார்க்கக்கூடாது என்றும் அன்று குறிப்பிட்டார்கள். வாஸ்தவம்தான். அவ்விதம் பர்தாவை தூக்கிப் பார்க்கிற பழக்கம் எனக்கு கிடையாது. அவர்கள் வேண்டுமானால் அவ்விதம் பார்த்துக் கொள்ளட்டும். ஆனால் அரசியல் பர்தாவுக்குள் ஏதாவது நடந்தால் அதை கிழித்துப் பார்க்க வேண்டியது மிகவும் அவசியம். அரசியல் கட்சி என்று வெளியில் வந்துவிட்டால், அந்த கட்சிக்குள் என்ன நடக்கிறது என்று பார்ப்பதற்கு வெளியிலுள்ளவர்களுக்கு உரிமையிருக்கிறது. அதைச் சொல்லிக்கொள்வதற்கு எனக்கும் உரிமை யிருக்கிறது. ஆகவே, அவர்களும் அந்த விவரங்களை தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கை திராவிட நாடு பிரிய வேண்டும் என்பது. இப்போது இருக்கின்ற கான்ஸ்டிடியூஷன் இருக்கக்கூடாது, வேறு கான்ஸ்டிடியூஷன் இருக்க வேண்டும் என்பதும் அவர்களுடைய கொள்கை. அந்த அளவுக்கு ஒளிவு மறைவில்லாமல், அதை வெளியில் எடுத்துக் கூறி, இதற்கு மக்களிடத்தில் எங்களுக்கு ஆதரவு இருக்கிறது என்பதை காட்ட வேண்டுமானால், இதைச் சொல்லி தேர்தலில் நிற்க வேண்டும். அதல்லாமல் அதை வெளியில் சொல்லாமல், வேறு எதையெல்லாமோ சொல்லி, மக்களை ஏமாற்றுகின்ற முறையில் சதி செய்ய வேண்டாம் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். உண்மையிலே மற்ற கட்சிகளுடன் சேர்ந்து தேர்தலில் நிற்கிறார்கள் என்றால், இவர்களுடைய நாட்டுப் பிரிவினைக் கொள்கையை கனம் திரு. கல்யாணசுந்தரம் அவர்களின் கட்சி ஒப்புக்கொள்கிறதா, அல்லது சுதந்திரக் கட்சி ஒப்புக்கொள்ளுகிறதா. அல்லது சோஷியலிஸ்ட் கட்சி ஒப்புக் கொள்ளுகிறதா என்று கேட்க விரும்புகிறேன். இவ்விதம் கூட்டுச் சேருகின்ற எந்தக் கட்சியுமே ஒப்புக்கொள்ளாதபோது, எப்படி இவர்களுக்கு நாட்டுப் பிரிவினைக் கொள்கை பொருந்தும் என்று தெரியவில்லை. நாட்டுப் பிரிவினைதான் எங்கள் கட்சியின் கொள்கை என்றால், அதை மட்டும் தனியாக வைத்து தைரியமாக தேர்தலில் போட்டியிட வேண்டும். அவ்விதம் வருவதாக இருந்தால் நாட்டுப் பிரிவினை கொள்கையில் இவர்களுக்கு நம்பிக்கை யிருக்கிறது என்று எடுத்துக்கொள்ள முடியும். அந்த அடிப்படையில் தேர்தலில் நின்று பார்க்கட்டும், மக்கள் அதற்கு எந்த அளவில் ஆதரவு அளிக்கிறார்கள் என்பதை நாம் அறிந்துகொள்ள முடியும். அப்படி யில்லாமல் மற்ற கட்சிகளுடன் கூட்டு என்று சொன்னால், கம்யூனிஸ்ட் கட்சியை எடுத்துக்கொண்டால், அவர்கள் இந்தியா மட்டுமல்ல, உலகமே ஒன்றாக இருக்கவேண்டும் என்னும் அடிப்படையில் போய்க் கொண்டிருக்கிறார்கள். அவர்களோடு இவர்கள் கூட்டு சேருவது என்று சொன்னால்—அதிலும் நாடு ஒன்றாக இருக்க வேண்டும், பெடரல் அமைப்பாக இருக்கக்கூடாது. யூனிட் அமைப்பில் இருக்கவேண்டும் என்று சொல்லுகின்ற கட்சியோடு சேர்ந்து கொண்டு தேர்தலுக்கு வருகிறார்கள் என்றால், இவர்களுடைய பேச்சுக்கள் மக்களை ஏமாற்றுவதற்காகத்தான்

இருக்கும். அதல்லாமல் இந்தவிதமான கூட்டு ஒன்றும் சேராமல்
இவர்களுடைய நாட்டுப் பிரிவினையை மட்டும் தேர்தல் கொள்கை
யாக வைத்து தேர்தலில் போட்டியிட்டால் மக்களிடையே இவர்
களுக்கு இருக்கும் பலத்தை அறிந்துகொள்ள முடியும் . . .

**Sri C. N. ANNADURAI :** அமைச்சர் அவர்கள் அவக்கத்தி
லிருந்தே குழப்பத்தில் இருக்கிறார்கள். நான் சொல்ல விரும்பு
வது, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், கம்யூனிஸ்ட்
கட்சிக்கும், சுதந்திரா கட்சிக்கும் கூட்டு என்பது கிடையாது.
தேர்தல் நோக்கில் செய்து கொள்ளுகின்ற அட்ஜஸ்ட்மெண்ட்
தான். அதல்லாமல் திராவிட முன்னேற்றக் கழகம் எப்போதும்
தன் கொள்கையை விட்டுவிடப் போவதில்லை.

**The Hon. Sri C. SUBRAMANIAM :** கனம் அங்கத்தினர்
அவர்கள் சொன்ன ஆங்கிலத்தை நான் எனக்குத் தெரிந்த தமிழில்
சொன்னேன். அவ்வளவு தான் . . . . . . . (சிரிப்பு.)

**Sri C. N. ANNADURAI :** கூட்டு என்பதற்கும் அட்ஜஸ்ட்
மெண்ட் என்பதற்கும் வித்தியாசம் கிடையாதா? . . . . . .

**The Hon. Sri C. SUBRAMANIAM :** கூட்டுச் சேர்ந்து
அனுபவிப்பதும் கூட்டுதான், ஒன்று சேர்ந்து பங்குப் போட்டுக்
கொள்வதும் கூட்டுதான். அடுத்தபடியாக, சில முக்கியமான
விஷயங்களை சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். சட்டமன்ற
அங்கத்தினர்கள் தங்குகின்ற விடுதியில் (ஆஸ்டல்) வசதிகள்
போதாது, அறைகள் எல்லாம் மிகவும் மோசமாக இருக்கிறது
என்று பல அங்கத்தினர்கள் சொன்னார்கள். அதை நான் முழுக்க
முழுக்க ஒப்புக்கொள்கிறேன். அதைப்பற்றி என்னென்ன நட
வடிக்கைகள் எடுக்க முடியுமோ அவற்றை எல்லாம் எடுத்துக்
கொள்ளலாம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். கனம் திரு.
கோவிந்தசாமி அவர்கள் சொன்னார்கள் என்று நினைக்கிறேன்,
மூன்று அறைகளை மாற்றி இரண்டு அறைகளாக்கி விடலாம் என்று
அபிப்பிராயம் தெரிவித்தார்கள். அப்படி ஒட்டுப்போட்டுக் கொண்
டாலும் இதே கஷ்டம்தான் இருக்கும். ஆகவே, இன்னொரு மாளிகை
கட்ட வேண்டும், மாளிகை என்று சொல்லும்போது, பெரிய
மாளிகை கட்டவேண்டும் என்பதல்ல, போதுமான அளவுக்கு
எல்லா வசதிகள் இருக்கக்கூடிய ஒரு கட்டிடத்தை கட்டுவதற்கு
சர்க்கார் நிச்சயமாக ஆலோசனை செய்யும் என்பதை தெரிவித்துக்
கொள்கிறேன். அது கட்டுவது வரையிலும் இந்த விடுதிலேயே என்
னென்ன வசதிகள் செய்ய முடியும் என்பதைப் பார்த்து அதற்கு
தக்கபடி செய்துகொள்ளலாம். சில சமயங்களில் நாம் கோரு
கின்ற சாமான்கள் கிடைப்பதில்லை, உதாரணமாக மெத்தை வசதி
செய்து கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது,
போதுமான மெத்தைகள் ஒரேயடியாக கிடைக்கவில்லை, இருந்
தாலும் எல்லா வசதிகளையும் செய்துகொடுப்பதற்கு உத்தரவு
போடப்பட்டிருக்கிறது. மேலும் என்னென்ன வசதிகள் உடனடி
யாக செய்து கொடுக்க முடியுமோ அவற்றிற்கு எல்லாம் ஏற்பாடு
செய்யப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். காலையில்



அங்கத்தினர்கள் போய் குளிப்பதற்கு வசதியில்லை, திருவல்லிக்
கேணியிலுள்ளவர்கள் எல்லாம் இங்கேதான் குளிக்கிறார்கள் என்று
எண்ண வேண்டியிருக்கிறது என்று சொல்லப்பட்டது. இதற்கு
எந்தத் தனிப்பட்ட பேர்வழியையும் குற்றஞ் சாட்ட முடியாது.
இதில் கொஞ்சம் கண்டிப்பாக இருக்க வேண்டியிருக்கிறது.
கண்டிப்பு இல்லாமல் இருக்கும்போது வரையறையில்லாமல்
யாரெல்லாமோ வர ஆரம்பித்து விடுகிறார்கள். அவ்விதம் வருகிற
வர்கள் பேரில் ஏதாவது நடவடிக்கை எடுத்தால் அதுவும், அங்கத்
தினர்களுக்கே அது கெடுதியாக முடிகிறது. ஆகவே, நாமே ஓரள
வுக்கு கட்டுப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ள முடியும். அப்போது
தான் வெளியார் அதிகமாக வருவதை தடுக்க முடியும். அறைக்
குள்ளேயே குளிப்பதற்கும் வசதி இருந்து விட்டால் இந்தத் தொந்
தரவுகள் இராது. அதை புதிய கட்டிடம் கட்டும்போது ஏற்படுத்த
லாம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று நான் சொல்ல விரும்புவது, அங்கத்தினர்களுக்கு
இப்போது கொடுக்கப்படும் சம்பளம் போதாது என்கிற கருத்தை
பல அங்கத்தினர்கள் தெரிவித்தார்கள். இதில் சர்க்காருக்கு எந்த
விதமான கருத்தும் கிடையாது. எதிர்கட்சியிலுள்ள தலைவர்கள்
கலந்து ஆலோசித்து இப்போது கொடுக்கக்கூடிய 150 ரூபாய்
போதாது, 300 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று சொல்லுவதாக
இருந்தால் நிச்சயமாக சர்க்கார் அதை பரிசீலனை செய்வதற்கு
தயாராக இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.
வேண்டுமென்றால் காங்கிரஸ் கட்சியிலுள்ள சில அங்கத்தினர்களும்,
மற்ற கட்சி அங்கத்தினர்களில் சிலரும் சேர்ந்து இதைப்பற்றி
ஆலோசித்து இப்போது கொடுக்கப்படும் சம்பளத்தை அதிகரிக்க
வேண்டும் என்ற கருத்தை தெரிவித்தால் அதையும் சர்க்கார்
பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, போக்குவரத்து வசதிகளில், அங்கத்தினர்
களுக்கு ரயிலில் பாஸ் கொடுக்கவேண்டும் என்பதைப்பற்றி கழிந்த
ஏழெட்டு வருடங்களாக வற்புறுத்தப்பட்டு வந்திருக்கிறது. இதை
ஓரிடத்தில் கொண்டுவந்து பார்த்தார்கள். இதனால் பல சங்க
டங்கள் இருக்கின்றன என்று ரயில்வே இலாகாவினர் தெரிவிக்
கிறார்கள். ஒவ்வொரு தடவையும் ரயில்வே இலாகாவோடு இதைப்
பற்றி வற்புறுத்தும்போது, அவர்கள் நாம் சொல்லுவதற்கு
மேலாக வேறு ஏதாவது காரணங்களை சொல்லக்கூடிய நிலைமை
இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இன்றைக்கு இதன் பேரில்
நடவடிக்கை எடுக்க முடியாத நிலைமை இருந்துகொண்டிருக்கிறது.
அதற்கு மேல், எக்ஸ்பிரஸ் பஸ்ஸுக்கு, பாஸ் கொடுத்தால் என்ன
என்று கேட்கப்பட்டது. இப்போது எக்ஸ்பிரஸ் பஸ் எல்லா இடங்
களுக்கும் போகவில்லை. சில இடங்களுக்கு மட்டும்தான் போகிறது.
எல்லா இடங்களுக்கும் எக்ஸ்பிரஸ் பஸ் விட்ட பின்னால் வேண்டு
மென்றால் இதைப்பற்றி ஆலோசனை செய்யலாம். சாதாரணமாக

தூரமான இடங்களுக்கு போவது என்றால், என்னுடைய அனுபவத்தை வைத்துக்கொண்டு சொல்லுகிறேன், எல்லோரும் அப்படித் தான் செய்யவேண்டும் என்று சொல்லவில்லை. மோட்டாரில் போவதைவிட ரயிலில் போவதுதான் சௌகரியமாக இருக்கிறது. பஸ்ஸில் நெடுந்தூரம் போவது என்றால் கஷ்டமாகத்தான் இருக்கும்.

அடுத்தபடியாக, திரு மாதா கவுடர் அவர்கள் உதகமண்டலத்தில் சட்டசபையை நடத்தவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். திரு கரிய கவுண்டர் அவர்களும் கேட்டார்கள். அடுத்த வருடத்திலேயே தேர்தல் வரப்போகிறது. ஆதலால் இனிமேல் வரக்கூடிய சட்டசபை அங்கத்தினர்கள், மந்திரி சபை, இவர்கள் ஆலோசித்து இதைப்பற்றி முடிவு எடுக்கலாம் என்கிற கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனேகமாக எல்லா அங்கத்தினர்கள் சொன்ன கருத்துக் களுக்கும் எனக்குத் தெரிந்த அளவுக்கு பதில் சொல்லியிருக் கிறேன் என்று நினைக்கிறேன். கடைசியாக ஒன்றை மட்டும் சொல்லி என் பேச்சை முடித்துக்கொள்கிறேன். தமிழை உபயோகிப்பதைப்பற்றி இங்கு சொல்லப்பட்டது, குறிப்பாக சனம் நல்லசிவம் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்போது ஆங்கிலத்தில் கொடுக்கப்படும் விடையை தமிழில் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று தெரிவித்தார்கள். அதை நான் முழுக்க முழுக்க ஒப்புக் கொள்கிறேன். எல்லாவற்றையும் தமிழ் ஆக்குவதற்கு இப்போது நம்மிடம் போதிய அளவு வசதியில்லை, புதிய முறையில் தமிழ் டைப் அடிக்கத் தெரிந்தவர்கள், ஏராளமான பேர்கள் இல்லை. ஆங்கிலத் திலே இருப்பதைத் தவறு இல்லாமல் தமிழிலே எழுதுவதற்கு காரியாலயத்திலே இருக்கக்கூடியவர்களுக்கு இன்னும் போதுமான தகுதி ஏற்படவில்லை. இப்போது ஏற்பாடு செய்திருப்பதெல்லாம் ஜில்லா அடிப்படையிலேதான். ஜில்லா அடிப்படையிலே தமிழிலே நிர்வாகம் இருக்க வேண்டுமென்றுதான் இப்போது ஏற்றுக் கொண்டு நடந்து வருகிறது. அதிலும் இங்கே காரியதரிசிகளாக இருந்து உயர்ந்த பதவியை வகிக்கக்கூடியவர்கள் ஆங்கிலத்திலே அதிக தேர்ச்சி பெற்றவர்கள். அவர்களை தமிழிலே விடை எழுத வேண்டுமென்று சொன்னால் அது முடியாத காரியம். அப்படிப் பட்ட விடைகளை, வேறு யாராவது எழுதினாலும், அது அவ்வளவு சரியாக இருக்காது. ஆகவே, அவர்கள் முடிவு செய்யவேண்டிய காரியமாக இருப்பதாலே, ஆங்கிலத்தில்தான் இருக்க வேண்டிய தாக இருக்கிறது. மொழிபெயர்ப்பு செய்வதற்கும் போதுமான சவுகரியமில்லை. கூடிய சீக்கிரத்திலே தமிழில் நடவடிக்கைகள் கிடைப்பதற்காக வேண்டிய ஏற்பாடுகள் எல்லாவகையிலும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டது. அப்படி இருக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய கருத்தும். நான் கூட கேள்விக்கு ஆங்கிலத்தில் பதில் அளிக்கும்போது, அது சபையிலுள்ள எல்லா அங்கத்தினர்களுக்கும், மற்றுமுள்ள



எல்லோருக்கும் புரியக்கூடிய வகையிலே இருக்க வேண்டுமே என்ற எண்ணம் மனதிலே தோன்றுவது உண்டு. அதனால் இந்தக் காரியங்களையெல்லாம் கூடிய சீக்கிரத்தில் அமுலாக் குவதற்கான நடவடிக்கைகள் எல்லாம் எடுத்துக்கொண்டு வருகிறோம் என்று தெரிவித்துக்கொள்ளும்போது, தமிழ் நிர்வாகத் துறையிலேயும் சீக்கிரம் வரவேண்டுமென்பதற்காக ஒரு அதி காரியை அவருக்கு உள்ள முன் அனுபவத்தைக் கொண்டு நியமிக்கப்பட்டு, எவ்வளவு விரைவாக நிறைவேற்ற முடியுமோ, அவ்வளவு விரைவாக செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். அதிலும் முக்கியமாக இந்த சட்டசபையிலேதான் முதலில் வரவேண்டும். இப்படிக் கொண்டு வருவதால், இந்தச் சபையிலே இருக்கக்கூடிய அங்கத்தினர்களும், மற்ற மக்களும் நடக்கக்கூடிய நடவடிக்கைகளையெல்லாம் புரிந்துகொள்ள வசதி யாக இருக்கும். அந்த அடிப்படையிலேதான் இதைச் சொல் கிறேன். அந்த அடிப்படையில் எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்ற உறுதியைத் தெரிவித்துக்கொண்டு, இந்த விவாதத்திலே கலந்துகொண்ட எல்லா அங்கத்தினர்களுக்கும் நன்றி செலுத்திக்கொண்டு எந்தவிதமான குறைகள் இருந்தாலும் கூட, தயவுசெய்து அதைப் பொருட்படுத்தக் கூடாது என்ற முறை யிலும், புண்படக்கூடிய விதத்திலே ஏதாவது பேசியிருந்தால், அதற்கு என் மன்னிப்பையும் கேட்டுக்கொள்கிறேன். விவாதத் திலே ஒருவருடைய கருத்தை மற்றவருக்கு பரிமாறிக் கொள்ளுவது மிகவும் அவசியம். அப்படிக் கருத்தைப் பரிமாறிக் கொள்ளுகின்ற முறையிலே கொஞ்சம் குறைகள் ஏற்பட்டாலும் கூட, அதை மனதிலே வைத்துக்கொள்ளாமல் இருப்பது தமிழ் மக்களுடைய பண்பாடு என்பதையும் தெரிவித்துக்கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்திற்குப் பின்னுவைது, வெட்டுப் பிரேரணையை வலியுறுத்தாமல் இருப்பது நல்லது என்று கருதுகிறேன்.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தேர்தல் நிதி வசூலிப்பதுபற்றி கருத்து வெளியிட்ட நேரத்தில், நேரடியாக இதிலே எந்தவிதமான கம்பல்ஷனும் அதாவது நிர்ப்பந்தமும் இருக்காது என்று தெரிவித்தார்கள். இரண்டு தினங்களுக்கு முன்பு, சென்னை நகர பஸ் முதலாளிகளை ஓரிடத்தில் கூப்பிட்டு, ஒரு அமைச்சரும் இருந்து, 1 பஸ்ஸுக்கு 1,000 ரூபாய் வீதம் தேர்தல் நிதி கொடுக்கவேண்டுமென்று கேட்ட தாகச் சொல்லப்படுகிறது. அது உண்மையா என்பதை விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : தயவுசெய்து யாரோ சொன்னதை நம்பி, இப்படி கேட்கவேண்டாம். இந்த மாதிரி கூப்பிட்டு, கொடுத்துத்தான் தீரவேண்டுமென்று சொன்னார்கள் என்ற அந்த முறையே கிடையாது என்பதை உறுதியாகச் சொல் லிக்கொள்ள விரும்புகிறேன். சில சமயங்களில் உங்களுக்கு இப் படிச் சொன்னால் பிடிக்கும் என்ற முறையிலே வேண்டுமானால்

[Sri C. Subramaniam] [16th March 1961

சொல்லி இருக்கலாம். (சிரிப்பு.) எப்போதும் பஸ் முதலாளிகள்
கூறினார்கள் என்பதை வைத்துக்கொண்டு இப்படி நம்பிவிடக்
கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

SRIMATHI T. N. ANANTHANAYAKI : லேடி எம்.எல்.ஏ
களுக்கு ஒரு போன் ......

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்த வசதியும்
கவனிக்கப்படும்.

SRI A. GOVINDASAMI : அமைச்சர் அவர்கள் பேசுகின்ற
போது, கட்சி அடிப்படையில் நடப்பதாகக் கூறுவதற்கு ஒரு
உதாரணம் கொடுக்க முடியுமா என்று கேட்டார்கள். அந்த அடிப்
படையில் நான் ஒரு உதாரணம் கொடுக்க விரும்புகிறேன்.
அதாவது நீர் புரோகிராம் அனுப்புகின்ற நேரத்தில், அதை ஜில்லா
காங்கிரஸ் கமிட்டிக்கும், மற்றும் அதன் கிளை கமிட்டிகளுக்கும்
அனுப்பப்படுகிறதே, அது கட்சி அடிப்படை இல்லையா என்று
கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : எந்தக் கட்சி புரோ
கிராம் அனுப்ப வேண்டுமென்று கேட்டாலும், அதற்கு அனுப்பி
வைக்கப்படும். இதிலே கட்சி அடிப்படையில் அனுப்பி வைக்க
வேண்டுமென்ற கருத்தே கிடையாது. யார் யார் வேண்டுமென்று
கேட்கிறார்களோ, அவர்களுக்கெல்லாம் அனுப்ப வேண்டுமென்று
தான் சொல்லியிருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகம்
தங்களுக்கும் அனுப்பிவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்
டால், அவர்களுக்கும் அனுப்பி வைக்கப்படும். அப்படி
அனுப்பினாலும், ஜில்லாவிலே உள்ள காங்கிரஸ் கமிட்டிக்குத்தான்
அனுப்புகிறோம். அவர்கள் கிளைக் கமிட்டிகளுக்கு அனுப்பி வைக்
கிறார்கள். அந்த முறையிலே யார் கேட்டுக்கொண்டாலும்,
அனுப்பி வைப்பதிலே எவ்விதத் தடையுமில்லை.

SRI C. N. ANNADURAI : கூட்டங்கள் நடத்துவது பற்றி,
தேர்தல் முடிகின்ற வரையில் இப்போதுள்ள தடைகளை
நீக்கி, இரவு 12 மணி வரையிலும், மைனர் பஞ்சாயத்தாக இருந்
தாலும் இருக்கலாம் என்ற ஒரு ஏற்பாடு செய்துகொண்டால்,
பிரசார வேலைகளுக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்பது என்
னுடைய அபிப்பிராயம். தேர்தல் இல்லாத நேரங்களில் வேண்டு
மானால், இரவு 10 , 11 என்றிருக்கலாம்.

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் முன்னேயே
இதைப்பற்றி ஆலோசனை செய்யலாம் என்று சொன்னேன். அந்த
வகையிலே இதை எப்படிச் செய்வது என்பதைப் பற்றியெல்லாம்,
யோசனை செய்வதில் எவ்விதத் தடையும் இருக்காது.

DEPUTY SPEAKER : Is the hon. Member, Sri Anbazhagan, pressing his cut motion?



16th March 1961]

SRI K. ANBAZHAGAN : Yes, I am pressing my cut motion Sir.

DEPUTY SPEAKER : The question is—

'That the allotment of Rs. 1,28,19,200 under Demand VIII—Head of State, Ministers and Headquarters Staff be reduced by Rs. 100.'

The cut motion was put and lost.

DEPUTY SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 1,28,19,200 under Demand VIII—Head of State, Ministers and Headquarters Staff.'

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER : Is the hon. Member, Sri V. K. Kothandaraman, pressing his cut motion?

SRI V. K. KOTHANDARAMAN : Yes, I am pressing my cut motion, Sir.

DEPUTY SPEAKER : The question is—

'That the allotment of Rs. 11,85,000 under Demand IX—State Legislature be reduced by Rs. 100.'

The cut motion was put and lost.

DEPUTY SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 11,85,000 under Demand IX—State Legislature.'

The Demand was put and carried and the Grant was made.

The cut motion of the hon. Member, Sri V. K. Kothandaraman to Demand X—Elections was, by leave, withdrawn.

DEPUTY SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 41,67,400 under Demand X—Elections.'

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. on Saturday the 18th March 1961.

The House then adjourned.

## APPENDIX I.

[Vide answer to starred question No. 867 asked by Sri S. M. Annamalai (on behalf of Sri S. Pakkiriswami Pillai) at the meeting of the Legislative Assembly held on 16th March 1961, page 584 supra.]

| Final G. C. I. M. Examination (i.e. III G.C.I.M. Examination). | April 1957. | | December 1957. | | April 1958. | | December 1958. | | April 1959. | | December 1959. | | April 1960. | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Number passed. | Percentage. | Number passed. | Percentage. | Number passed. | Percentage. | Number passed. | Percentage. | Number passed. | Percentage. | Number passed. | Percentage. | Number passed. | Percentage. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) |
| Ayurveda .. .. | 25 | 49 | 27 | 33 | 26 | 47 | 33 | 46 | 33 | 46 | 45 | 52 | 40 | 48 |
| Siddha .. .. | 6 | 35 | 11 | 64 | 6 | 50 | 9 | 45 | 3 | 19 | 7 | 30 | 9 | 32 |
| Unani .. .. | 1 | 50 | 1 | 100 | .. | Nil. | 2 | 22 | 4 | 44 | 2 | 33 | 5 | 100 |



## APPENDIX II.

[Vide answer to Starred Question No. 871 asked by Sri S. M. Annamalai (on behalf of Sri K. Sattanatha Karayalar, at the meeting of the Legislative Assembly held on 16th March 1961, page 587 supra.]

| Name of Medical Institution where Maternity Training (Mid wifery Training) is given. | Number of candidates undergoing training. |
|---|---|
| (1) | (2) |
| 1 Government Hospital for Women and Children, Madras. | 109 |
| 2 Government Kasturba Gandhi Hospital for Women and Children, Madras. | 74 |
| 3 Government Raja Sir Ramaswamy Mudaliar Lying-in Hospital, Madras. | 54 |
| 4 Government Headquarters Hospital, Coimbatore. | 50 |
| 5 Government Headquarters Hospital, Salem .. | 29 |
| 6 Government Headquarters Hospital, Vellore .. | 38 |
| 7 Government Erskine Hospital, Madurai .. .. | 66 |
| 8 Government R.M. Headquarters Hospital, Thanjavur. | 59 |
| 9 Government Hospital, Nagapattinam .. .. | 9 |
| 10 Government Headquarters Hospital, Tiruchirappalli. | 40 |
| 11 Government Ranee's Hospital, Pudukkottai . | 10 |
| 12 Government Headquarters Hospital, Chingleput. | 8 |
| 13 Government Headquarters Hospital, Ramanathapuram. | 24 |
| 14 Government Headquarters Hospital, Ootacamund. | 18 |
| 15 Government Hospital, Coonoor .. .. .. | 16 |
| 16 Government Headquarters Hospital, Cuddalore. | 20 |
| 17 Government Women and Children Hospital, Vennarpet. | 26 |
| Total .. | 650 |

# INDEX TO MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

## TENTH SESSION OF THE SECOND LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

**10*th*, 11*th*, 13*th*, 14*th*, 15*th and* 16*th March* 1961.**

### Volume XLI—Nos. 1 to 6.

**A**


| | PAGES |
|---|---|
| **Advertisements—** | |
| Question *re* Drugs and Magic Remedies (Objectionable Advertisements) Act, working of .. .. .. .. .. .. | 18–19 |
| **Agriculture—** | |
| Demand for Grant *re* .. .. .. .. .. .. .. | 135–212 |
| Question *re*— | |
| Agricultural implements, manufacture of .. .. .. .. | 343–344 |
| **Agricultural income-tax—** | |
| Question *re*— | |
| Amount collected as — during 1958-59 .. .. .. .. | 478 |
| Collection of — from Kanyakumari district during 1956-57 and 1957-58 .. .. .. .. .. .. .. | 478–479 |
| **Agricultural Income-Tax (Amendment) Bill, 1961—** | |
| *See* Papers laid on the table of the House. | |
| **Agricultural Production—** | |
| Question *re* instructions issued to panchayat unions *re* preparation of village production plans .. .. .. .. .. .. | 344 |
| **A.I.R. (Tirunelveli)—** | |
| Question *re* allotment of Government lands for a Transmitting Station .. .. .. .. .. .. .. .. | 237–238 |
| **Ammonium sulphate—** | |
| Question *re* Distribution of — .. .. .. .. .. .. | 356–358 |
| **Anandanayaki, Srimathi T. N.—** | |
| Demand for Grant *re*— | |
| Agriculture .. .. .. .. .. .. .. | 185 |
| Animal Husbandry .. .. .. .. .. .. | 185 |
| Capital Outlay on Agriculture .. .. .. .. .. | 185 |
| Capital Outlay on Forests .. .. .. .. .. | 185 |
| Forest Department .. .. .. .. .. .. | 185 |
| Fisheries .. .. .. .. .. .. .. | |
| Harijan Uplift .. .. .. .. .. .. .. | 406–408 |

A—*cont.*

**Anbazhagan, Sri K.**—
- Demand for Grant *re*—
  - Agriculture .. .. } 185–192, 196, 202
  - Animal Husbandry .. .. }
  - Capital Outlay on Agriculture .. .. }
  - Capital Outlay on Forests .. .. }
  - Capital Outlay on Industrial Development and Industries and Cinchona .. .. 38, 85–91
  - Elections—Head of State, Ministers and Headquarters staff—
    - State Legislature .. .. 617, 653–659, 695, 697
  - Forest Department .. .. 185–192, 196, 202
  - Fisheries .. ..
  - Irrigation and Capital Outlay on Irrigation .. .. 279–284, 312, 320, 323
  - Labour including Factories .. .. 509–515, 525
  - Road Transport Schemes and Capital Outlay on Road Transport Schemes .. .. 557–561
- Privilege Matter *re*—"The Mail", Editorial, dated 10th March 1961—certain criticism in .. .. 614–615

**Animal Husbandry**—
- Demand for Grant *re* .. .. 135–212

**Annadurai, Sri C. N.**—
- Demand for Grant *re*—
  - Elections—Head of State, Ministers and Headquarters staff—
    - Legislature .. .. 668–673, 680, 685, 690
  - Harijan Uplift .. .. 410–417

**Annamalai, Sri S. M.**—
- Capital Outlay on Industrial Development and Industries and Cinchona .. .. 28, [illegible] 47, 106
- Demand for Grant *re*—
  - Agriculture .. .. 136
  - Animal Husbandry .. .. 212
  - Capital Outlay on Agriculture .. .. 174–179
  - Capital Outlay on Forests .. ..
  - Forest Department .. ..
  - Fisheries .. ..
  - Elections—Head of State, Ministers and Headquarters staff—State Legislature .. .. 632–636
  - Irrigation and Capital Outlay on Irrigation .. .. 258–261

**Appavu, Sri P.**—
- Demand for Grant *re*—
  - Harijan Uplift .. .. 369–370

**Arasan, Sri P.**—
- Demand for Grant *re* Harijan Uplift .. .. 409–410



A—*cont.*

**Ardhanareeswara Gounder, Sri K. S.**—
- Demand for Grant *re*—
  - Capital Outlay on Industrial Development and Industries and Cinchona .. .. 59–63

**Arecanut cultivation**—
- Demand for Grant *re*—
- Question *re* stepping up of—in Kanyakumari district .. .. 466–467

**Artificial rain**—
- Question *re* experiments for production of— .. .. 17–18

**Arumugbasamy, Sri M. A. B.**—
- Demand for Grant *re* Irrigation and Capital Outlay on Irrigation .. .. 255–258

**Asaithambi, Sri A. V. P.**—
- Demand for Grant *re* Elections—Head of State, Ministers, Headquarters staff—State Legislature .. .. 646–650

**Asthma**—
- Question *re* Air conditioned wards to—patients, provision of .. 606

**Ayurvedic Hospitals**—
- Question *re* number of— .. .. 342–343

B

**Backward areas**—
- Question *re* development of—in Madras State .. .. 471

**Bathing ghats**—
- Question *re* construction of—at Rameswaram, etc., sea shores .. 356

**Beedi Industrial Premises Act**—
- Question *re* amendment of .. .. 24–25

**Bhaktavatsalam, The Hon. Sri M.**—
- Demand for Grant *re*—
  - Agriculture .. .. } 135–139, 197–211
  - Animal Husbandry .. .. }
  - Capital Outlay on Agriculture .. .. }
  - Capital Outlay on Forests .. .. }
  - Forest Department .. ..

**Bhoodan**—
- Question *re*—State—Yagna Board, details *re* .. .. 122–123

**Bigamy**—
- Question *re* Government servants dismissed from service for—, number of .. .. 16–17

**Bills**—
- Indian Stamp (Madras Amendment) Bill, 1961—
  - Announcement *re* .. .. 26
  - Introduced .. .. 27
- Estates (Abolition and Conversion ito Ryotwari) Amendment Bill, 1961—
  - Announcement *re* .. .. 27

A—*cont.*

**Anbazhagan, Sri K.—**
Demand for Grant *re*—
Agriculture .. .. .. .. .. .. .. .. } 185–192
Animal Husbandry .. .. .. .. .. .. .. } 196, 202
Capital Outlay on Agriculture .. .. .. .. .. ..
Capital Outlay on Forests .. .. .. .. .. ..
Capital Outlay on Industrial Development and Industries and Cinchona .. .. .. .. .. .. .. .. 38, 85–91

Elections—Head of State, Ministers and Headquarters staff—
State Legislature .. .. .. .. .. .. .. 617, 653–659, 695, 697

Forest Department .. .. .. .. .. .. .. } 185–192
Fisheries .. .. .. .. .. .. .. .. } 196, 202
Irrigation and Capital Outlay on Irrigation .. .. .. 279–284, 312, 320, 323

Labour including Factories .. .. .. .. .. .. 509–515, 525

Road Transport Schemes and Capital Outlay on Road Transport Schemes .. .. .. .. .. .. .. .. 557–561
Privilege Matter *re*—"The Mail", Editorial, dated 10th March 1961—certain criticism in .. .. .. .. .. .. 614–615

Animal Husbandry—
Demand for Grant *re* .. .. .. .. .. .. .. 135–212

Annadurai, Sri C. N.—
Demand for Grant *re*—
Elections—Head of State, Ministers and Headquarters staff—
Legislature .. .. .. .. .. .. .. .. 668–673, 680, 685, 690

Harijan Uplift .. .. .. .. .. .. .. .. 410–417

Annamalai, Sri S. M.—
Capital Outlay on Industrial Development and Industries and Cinchona .. .. .. .. .. .. .. 28, 42, 47, 106

Demand for Grant *re*—
Agriculture .. .. .. .. .. .. .. .. } 136
Animal Husbandry .. .. .. .. .. .. .. } 212
Capital Outlay on Agriculture .. .. .. .. .. } 174–179
Capital Outlay on Forests .. .. .. .. .. ..
Forest Department .. .. .. .. .. .. ..
Fisheries .. .. .. .. .. .. .. ..

Elections—Head of State, Ministers and Headquarters staff—
State Legislature .. .. .. .. .. .. .. 632–636
Irrigation and Capital Outlay on Irrigation .. .. .. 258–261

Appavu, Sri P.—
Demand for Grant *re*—
Harijan Uplift .. .. .. .. .. .. .. .. 369–370

Arasan, Sri P.—
Demand for Grant *re* Harijan Uplift .. .. .. .. .. 409–410



A—*cont.*

**Ardhanareeswara Gounder, Sri K. S.—**
Demand for Grant *re*—
Capital Outlay on Industrial Development and Industries and Cinchona .. .. .. .. .. .. .. 59–63

**Arecanut cultivation—**
Demand for Grant *re*— .. .. 466–467
Question *re* stepping up of—in Kanyakumari district .. .. 17–18

**Artificial rain—**
Question *re* experiments for production of— .. .. .. ..

Arumughasamy, Sri M. A. B.—
Demand for Grant *re* Irrigation and Capital Outlay on Irrigation .. .. .. .. .. .. .. .. 255–258

Asaithambi, Sri A. V. P.—
Demand for Grant *re* Elections—Head of State, Ministers, Headquarters staff—State Legislature .. .. .. .. .. 646–650

Asthma—
Question *re* Air conditioned wards to—patients, provision of .. 606

Ayurvedic Hospitals—
Question *re* number of— .. .. .. .. .. .. .. 342–343

B

Backward areas—
Question *re* development of—in Madras State .. .. .. 471

Bathing ghats—
Question *re* construction of—at Rameswaram, etc., sea shores .. 356

Beedi Industrial Premises Act—
Question *re* amendment of .. .. .. .. .. .. .. 24–25

Bhaktavatsalam, The Hon. Sri M.—
Demand for Grant *re*—
Agriculture .. .. .. .. .. .. .. } 135–139
Animal Husbandry .. .. .. .. .. .. } 197–211
Capital Outlay on Agriculture .. .. .. .. ..
Capital Outlay on Forests .. .. .. .. ..
Forest Department .. .. .. .. .. ..

Bhoodan—
Question *re* State Yagna Board, details *re* .. .. .. 122–123

Bigamy—
Question *re* Government servants dismissed from service for—, number of .. .. .. .. .. .. .. .. 16–17

Bills—
Indian Stamp (Madras Amendment) Bill, 1961—
Announcement *re* .. .. .. .. .. .. .. 26
Introduced .. .. .. .. .. .. .. .. 27
Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1961—
Announcement *re* .. .. .. .. .. .. .. 27

PAGES

B—cont.


**Bills—cont.**

Estates Land (Reduction of Rent) Amendment Bill, 1961—
Announcement *re* .. .. .. .. .. .. .. 26

Inams (Assessment) Amendment Bill, 1961—Announcement *re* .. 27

Travancore-Cochin Agricultural Income-tax (Madras Amendment) Bill, 1961—Announcement *re* .. .. .. .. .. 27

Block Development—
Question *re*—
Existence of — areas and Fisheries Blocks in Ramanathapuram district .. .. .. .. .. .. .. .. 359
Thiruvattar and Alagiamandapam Blocks, formation of — in Kanyakumari district .. .. .. .. .. .. .. 359

Bridge—
Question *re* construction of — across Cauveri at Pulampatti .. 457-458

Buckingham Canal—
Question *re* use of — and Cooum for city transport .. .. .. 467

Business of the House—
Change in the order of .. .. .. .. .. .. .. 615

Bus routes—
Question *re*—
Harijan applicants for — in Coimbatore, number of .. .. 584

Bus Transport—
Question *re* opening of new routes for — in rural areas .. .. 586-587


C


Capital Outlay on Agriculture—
Demand for Grant *re* .. .. .. .. .. .. .. 135-212

Capital Outlay on Forests—
Demand for Grant *re* .. .. .. .. .. .. .. 135-212

Capital Outlay on Industrial Development and Industries and Cinchona—
Demand for Grant *re* .. .. .. .. .. .. .. 28-106

Capital Outlay on Irrigation—
*See* Papers laid on the table of the House.

Catholic patients—
Question *re* arrangements for offering mass prayer for — in Nagercoil Tuberculosis Hospital .. .. .. .. .. .. 589-590

Chidambara Bharathi, Sri R.—
Demand for Grant *re* Capital Outlay on Industrial Establishment and Industries and Cinchona .. .. .. .. .. .. 80-82

Children—
Question *re* abandoned — in Government Maternity hospitals, number of .. .. .. .. .. .. .. .. 235

Children's Club—
Question *re* starting of — under the Third Plan .. .. .. 233-234




PAGES

C—cont.


Chinnadurai, Sri P. S.—
Demand for Grant *re* Capital Outlay on Industrial Development and Industries and Cinchona .. .. .. .. .. .. 28, 29-35, 38, 106

Chinniah, Sri V.—
Demand for Grant *re* Harijan Uplift .. .. .. .. .. 370-371

Chit Funds Bill, 1961—
*See* Papers laid on the table of the House.

Colleges—
Question *re* Government Arts — appointment of Selection Committees for admission to .. .. .. .. .. .. 116-117

Committee(s)—
Government Assurances —, nomination of members to .. .. 27
Privileges—Motion *re* acceptance of Report (Madras Corporation Case) .. .. .. .. .. .. .. .. 615-616
Privileges—Report presented .. .. .. .. .. 26
*See* Papers laid on the table of the House.
Subordinate legislation—Eleventh report presented .. .. .. 135
Nomination of members to .. .. .. .. .. .. 482
*See* Papers laid on the table of the House.

Compost manure—
Question *re* awarding prizes for manufacture of — .. .. .. 500-501

Co-operative Department—
Question *re* deputation of officers of — to foreign countries for training in Co-operation .. .. .. .. .. .. 359-360

Co-operative Farming—
Question *re*—
Employment of propaganda staff for — .. .. .. .. 227-228
Pilot schemes on —, starting of .. .. .. .. .. 227-228

Co-operative Societies—
Question *re*—
Ex-Servicemen's Co-operative Farming Society, Aranboly, steps taken for the recovery of loans granted to .. .. .. 355
Marketing Co-operative Societies in the City of Madras, details *re* .. .. .. .. .. .. .. .. 345

Co-operative Stores—
Question *re* Gudiyatham — misappropriation in .. .. .. 595-596

Copper, etc. —
Question *re* Allotment of quotas for supply of — .. .. .. 228

Crackers—
Question *re* accidents due to firing of — .. .. .. .. 236-237

Cycle Factory—
Question *re* Production at — Thanjavur .. .. .. .. 469-470

D

Dairy Farm—
Question *re* starting of — under Third Five-Year Plan .. 129

Daniel, Sri T. T.—
Demand for Grant *re*—
Capital Outlay on Industrial Development and Industries and Cinchona .. .. .. .. .. .. .. .. 48–50
Harijan Uplift .. .. .. .. .. .. .. .. 284–386

Demand for Grant *re*—
Agriculture .. .. .. .. .. .. .. .. } 135–212
Animal Husbandry .. .. .. .. .. .. .. }
Capital Outlay on Agriculture .. .. .. .. .. .. }
Capital Outlay on Forests .. .. .. .. .. .. .. }
Capital Outlay on Industrial Development and Industries and Cinchona .. .. .. .. .. .. .. .. 28–106
Elections .. .. .. .. .. .. .. .. .. 616–697
Fisheries .. .. .. .. .. .. .. .. .. 135–212
Forest Department .. .. .. .. .. .. .. .. 135–212
Harijan Uplift .. .. .. .. .. .. .. .. 360–430
Head of State, Ministers and Headquarters staff .. .. .. 616–697
Irrigation and Capital Outlay on Irrigation .. .. .. .. 245–324
Labour including Factories .. .. .. .. .. .. 483–527
Road Transport Schemes and Capital Outlay on Road Transport Schemes .. .. .. .. .. .. .. .. .. 528–569
State Legislature .. .. .. .. .. .. .. .. 616–697

Dispensary—
Question *re* amount sanctioned for staff of — in Azhagappapuram. 585

E

Education—
Question *re*—
Decisions of — Ministers' Conference .. .. .. .. .. 240–241
Post Basic Syllabus Committee, submission of report by .. .. 591–592

Elections—
Demand for Grant *re* .. .. .. .. .. .. .. 616–697

Electricity—
Question *re*—
Collection of electricity charges from ryots in North Arcot district .. .. .. .. .. .. .. .. .. 338–339
Power-supply to Kerala State .. .. .. .. .. .. 125

Electricity Board—
*See* Papers laid on the table of the House.

Elementary Schools—
Question *re* construction of buildings for — .. .. .. .. 329

Ellappan, Sri P. S.—
Demand for Grant *re* Harijan Uplift .. .. .. .. .. 374–375



E—*cont.*

Elumalai, Sri T. P.—
Demand for Grant *re*—
Harijan Uplift .. .. .. .. .. .. .. 400–402
Labour including Factories .. .. .. .. .. .. 499–502
Road Transport Schemes and Capital Outlay on Road Transport Schemes .. .. .. .. .. .. .. 545–548

Employment Exchange—
Question *re* educated unemployed registered in —, number of .. 340–341

English—
Question *re* statement of Director of Public Instruction, *re* — as Medium of Instruction .. .. .. .. .. .. 585–586

Engineering—
Question *re*—
Allotment of seats for — courses .. .. .. .. .. 234
Applicants of Scheduled Castes, etc.—Professional — courses, number of .. .. .. .. .. .. .. 128–129
Government General Purposes — workshops, value of output in past three years in .. .. .. .. .. .. 235

Ex-servicemen—
Question *re* grant of lands to — .. .. .. .. .. .. 6–7

Ex-Servicemen's Co-operative Farming Society, Aranboly—
*See* Co-operative Societies.

F

Factories—
Question *re*—
Chemical —, setting up of .. .. .. .. .. .. 238
Fertilizer —, starting of .. .. .. .. .. 242–243

Famine—
Question *re*—
Famine affected areas in Coimbatore district, details *re* relief measures .. .. .. .. .. .. .. .. 113–114
Tour of Coimbatore Collector for inspection of — areas .. .. 114–115

Film Advisory Board—
Question *re* reconstruction and members of — .. .. .. .. 9–11

Finger-Print Bureau—
Question *re* sparing of services of personnel in — Vellore .. .. 117

Firms—
Question *re*—
Grant of loan of more than Rs. 1 lakh for — during the last five years .. .. .. .. .. .. .. .. .. 472

Fish—
Question *re* provision of cold storage facilities for preservation of — .. .. .. .. .. .. .. .. 115–116

PAGES

F—cont.


Fisheries—
Demand for Grant re .. .. .. .. .. .. .. 135-212

Fisheries Block—
Question re existence of —and Block Development areas in Ramanathapuram district .. .. .. .. .. .. .. 359

Fishermen—
Question re—
Licences issued for import of nylon threads, number of .. .. 355-356
Supply of nylon threads to— .. .. .. .. .. .. 355

Five-Year Plan (Third)—
Question re—
Expenditure incurred on visit of Ministers and Officers to Delhi for finalization of— .. .. .. .. .. .. .. 347
Financial allocation for Madras State under— .. .. .. 126
Outlay proposed in— .. .. .. .. .. .. .. .. 346-347
Special consideration for Backward areas in— .. .. .. 345-346

Floods—
Question re damage caused by—in Attur, Dindigul taluk .. .. 583-584

Forest Department—
Demand for Grant re .. .. .. .. .. .. .. 135-212


G


Government Officers—
Question re Officers drawing over Rs. 1,000 in Madras State, number of .. .. .. .. .. .. .. .. .. 3-4

Govindasami, Sri A.—
Demand for Grant re—
Agriculture .. .. .. .. .. .. .. .. 136
Animal Husbandry .. .. .. .. .. .. .. 143-149
Capital Outlay on Agriculture .. .. .. .. .. .. 161
Capital Outlay on Forests .. .. .. .. .. .. 193
Forest Department .. .. .. .. .. .. .. 210
Fisheries .. .. .. .. .. .. .. .. 211
Capital Outlay on Industrial Development and Industries and Cinchona .. .. .. .. .. .. .. .. 53-59; 102
Harijan Uplift .. .. .. .. .. .. .. .. 379-383
Road Transport Schemes and Capital Outlay on Road Transport Schemes .. .. .. .. .. .. .. .. 548-551

Grama Sevaks—
Question re—
Promotion of—as Deputy Panchayat Officers, etc. .. .. 127-128
Instructions re duties of— .. .. .. .. .. .. .. 352-353

Gurumurthi, Sri G. G.—
Demand for Grant re Irrigation and Capital Outlay on Irrigation .. .. .. .. .. .. .. .. .. 301-305




PAGES

H


Handloom Finance Corporation—
Question re setting up of— .. .. .. .. .. .. 593

Harijan Uplift—
Demand for Grant re .. .. .. .. .. .. .. 360-430

Head of State, Ministers and Headquarters staff—
Demand for Grant re .. .. .. .. .. .. .. 616-697

Health Officers—
Question re—
District—, appointment of .. .. .. .. .. .. 121
Number of—in the State .. .. .. .. .. .. 472-473

Hemalatha Devi, Srimathi S.—
Demand for Grant re—
Harijan Uplift .. .. .. .. .. .. 404-406
Irrigation and Capital Outlay on Irrigation .. .. .. 263-265

Hindi—
Question re grants to Institutions, propagating— .. .. .. 237

Hospital(s)—
Question re—
Ayurvedic—, number of .. .. .. .. .. .. 342-343
Government—Vellore, representation from Sri V. K. Kothandaraman, M.L.A., re development of .. .. .. .. .. 601-602

Hospitals and Dispensaries—
Question re—
Headquarters Hospital, Coimbaotre, missing of a new-born child from .. .. .. .. .. .. .. .. .. 341-342
Local Fund Dispensary at Nilakottai, resolution of District Development Council re shifting of—to Theni .. .. .. 117-118
Purchase of medicines for the use of— .. .. .. .. 4-5
Veterinary—at Aduthurai .. .. .. .. .. .. 466
See Catholic patients.

Hostels—
Question re Girls'—in Gudiyatham, Accommodation for .. .. 225-226

Houses—
Question re number constructed for workers in Sivakasi .. .. 351-352

Housing Scheme—
Question re implementation of rental— .. .. .. .. .. 350-351

Hut-dwellers—
Question re compensation to—affected by rains in November 1960 .. .. .. .. .. .. .. .. .. 462


I


Indian Stamp (Madras Amendment) Bill, 1961—
See Bills.
See Papers laid on the table of the House.

PAGES

K—*cont.*


Kalyanasundaram, Sri M.—*cont.*
Privilege matter *re*—
Procedure in raising of .. .. .. .. .. .. 130–135
"The Mail" Editorial, dated 10th March 1961, certain criticism in .. .. .. .. .. .. .. .. .. 607–615, 609–610, 611, 612, 613, 614, 615

Kakkan, the Hon. Sri P.—
Demand for Grant *re*—
Harijan Uplift .. .. .. .. .. .. .. 360–362, 417–420
Irrigation and Capital Outlay on Irrigation .. .. .. 245, 246, 249, 260, 265, 267, 283, 308–323

Mettur Dam, attention called to closure of—for irrigation and consequent withering of crops .. .. .. .. .. .. 180
